திருவருட்பா

மூலமும்-உரையும்



உரைவேந்தர்

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை

P.G
670

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

திருவருட்பா

மூலமும் உரையும்

ஏழாம் தொகுதி

மூன்றும் திருமுறை
மூன்றும் பகுதித் தொடர்ச்சி,
நான்காந் திருமுறை!
ஐந்தாந்திருமுறைத்
தொடக்கப் பகுதிகள் 2474 - 3159

உரையாசிரியர் :
உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி,
ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை

வெளியீடு :
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

முதற் பதிப்பு : 1987

விலை : ரூபாய் நாற்பது.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

உ
சிவமயம்

முகவுரை

டாக்டர். எம். ஏ. எம். இராமசாமி அவர்கள்
இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

எத்தனை கோடி பணம் இருந்தாலும் வாழ்வில் நிம்மதி வேண்டும். அதனைப் பொருள் கொடுத்துப் பெற இயலாது. அருள் கொண்டு ஆன்மீக நெறிநின்று, தெய்வங்களை வழிபட்டே பெறல் வேண்டும்.

நிம்மதியற்ற வாழ்க்கை ஆதவன் இல்லாத ஆகாயம் போன்றது.

நிலைத்த நிம்மதியை இறைவன் ஒருவனே தரமுடியும். இதற்கு மன ஒருமைப்பாடே, ஏற்ற, இனிய, இன்பம் தரும் நல் நெறியாகும்.

மனம் விரும்பி ஏற்படுகின்ற ஒருமைப்பாட்டின் மூலம், உலகமக்க ளெல்லாம் வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து, ஒற்றுமையாகி ஒரு குடைக் கீழ் வாழ்கின்ற உன்னதமான நிலை ஏற்படமுடியும்.

இதனையே வள்ளல் பெருமான், ஆன்மநேய ஒருமைப்பாடு என்ற புதிய கொள்கையாகக் கண்டார்.

பக்தி என்பது, மனித குலத்திற்கு அருள் வழிப்பட்ட புதிய சக்திகளை வழங்க வேண்டுமே தவிர, அதன் மூலம் மனித குலத்திற்குப் புறம்பான கொள்கைகளோ, மூடநம்பிக்கைகளோ, தோன்றக் கூடாது என்பதில், வள்ளல் பெருமான், மிகத் தீவிரமான நோக்குடையவராக இருந்தார்.

வள்ளல் பெருமானது திருவருட்பாப் பாடல்கள், இறைவனைப் போற்றுகின்ற வாழ்த்துப் பாக்களாக மட்டும் அமையாமல், அவன் நெறிச் செல்லப் புதிய வழிகளைக் காட்டும் ஒளிச்சுடர்களாக விளங்கு கின்றன. வாழ்க்கைத் தத்துவங்களாக மிளிர்கின்றன. தீமைத் திமிங் கிலங்களை அகற்றி, வாய்மை நாவாய்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாகக் காட்சி தருகின்றன. மாட்சி பெறுகின்றன.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்

என்று வள்ளல் பெருமான் பாடும்போது, அஃறிணைப் பொருளான பயிர் வாடுவது கண்டுகூடத் தாங்காத தளிர் உள்ளம் அவர் உள்ளம் என்பது தெளிவாகின்றது.

அதனுடன் பயிர் வாடினுல், பசியால் மக்கள் வாடுவார்களே என்ற எதிர்கால நோக்கும் அதில் அடங்கி இருக்கின்றது என்பதை எண்ணும் போது, வள்ளல் பெருமான், எல்லாப் பொருள்களையும் இனிய தாயுள்ளத் துடன் நோக்கினுர்; அவற்றின் பிணி போக்கி ஊக்கினுர் என்பது தெளிவாகின்றது.

வள்ளல் பெருமானின் உள்ளம், பத்தரை மாற்றுப் பசும்பொன்னினும் மேலானதாக விளங்கி இருக்கின்றது என்பதனைத் திருவருட்பாப் பாடல்கள் எங்கும் நாம் எளிதாகக் காண இயல்கிறது.

தாம், ஒருமையுடன் இறைவனைப் பணிவதோடல்லாமல், தம்மைச் சூழ்ந்தவர்களும் ஒருமையுள்ளம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றே வள்ளல் பெருமான் விரும்பியுள்ளார்.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாது இருக்க வேண்டும்
மதிவேண்டும் வன்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துவளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

இந்த ஒரு பாடல் மூலமே, மனிதன் முழு மனிதனுகும் பெற்றியினை அற்புதமாக அவர் கூறியுள்ளார்.

சிதம்பரத்திற்கு அருகில் அவதரித்துப் பரம் பொருளை, இளமை யிலேயே கண்டு, பாடும் திறம் பெற்ற அந்தப் பெருமானின் திருவருட்பாப் பாடல்களுக்குப் பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய வரலாற்று முறை உரை நூற்பதிப்பு, தில்லையில் ஆடும் இறைவனின் எல்லையில் உள்ள, அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் மூலம் வெளியிடப்பெறுவது எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

திருவருட்பாவிற்கு உரை கண்டு, செயற்கரிய செயல் நிகழக் காரண மான அருட்செல்வர் பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி உரியது.

அவர்கள் தட்டச்சுப் பகுதிகளைக் கொண்டுவந்து என் தந்தையார் செட்டி நாட்டரசர், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களிடம் கொடுத்து மகிழ்ந்த காட்சியினைக் கண்டு மகிழ்ந்தவன் நான். என் தந்தையார் முன்னுள் இணைவேந்தர் டாக்டர் முத்தையவேள் அவர்கள் திருவருட்பாப் பகுதிகள் அச்சாகி வெளிவந்து மக்கள் பயன் பெற வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டு, அவை வெளிவர வழி வகை செய்தார்கள்.

பொன்னுன இந்நூல் தொகுதிகள் அச்சாகி வெளிவர, அறநிலையத் துறை மூலம் வட்டியில்லாக் கடனுக நிதி உதவி புரிந்த, அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கு என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவருட்பா வரலாற்று முறைப் பகுதிகள் அச்சாகி வெளிவர வேண்டும் என்பதில் என் தந்தையார் அவர்களோடு பெரு முயற்சி மேற் கொண்டு வெற்றி கண்டவர்கள் நம் அண்ணுமலைப் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள் ஆவார்கள். தொடர்ந்து இந்த நூலின் தொகுதிகள் வெளி வர அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்துவருகிருர்கள்.

திருவருட்பாப் பதிப்புச் சிறப்பு அலுவலர் புலவர் நாகசண்முகம் அவர்களும் இந்நூல் தொகுதிகளை அச்சியற்றி வரும் மாருதி அச்சகம் திரு. வி. பார்த்திபன் அவர்களும் தம் பணிகளைச் செம்மையாய்ச் செய்து வருகிருர்கள்.

இதுவரை வெளிவந்துள்ள ஐந்து பகுதிகளையும் விரும்பி வாங்கிப் பயன் பெறுதல் போல, வெளிவரும் மற்ற பகுதிகளையும் பொதுமக்களும் மற்றும் பல்துறையினரும் வாங்கிப் பயன் பெற வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றேன்.

அருட் பெருஞ் ஜோதியாய் ஆண்டவனைக் கண்டு, புதியதோர் உலகுக் காக வழிகாட்டிய வள்ளல் பெருமானின் வழிச்சென்று நாம் வாழ்வாங்கு வாழ்வோமாக.

எம். ஏ. எம். இராமசாமி

பேராசிரியர் ராம. சேதுநாராயணன்
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்
நாள் : 5-3-1987

முன்னுரை

உலக உயிர்களுள் மானுடப்பிறவி மிகமிக அருமையுடையது. இதனை யுணர்ந்தே ஔவையாரும்,

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே...'

எனப் பாடிச் சென்றுள்ளார். மக்களாகப் பிறந்தவர்கள் பிறவிப் பயனடையும் நெறியில் உணர்ந்து செல்லுதல் வேண்டும். ஞான பூமியாகிய பாரத நாட்டில் சித்தர்களும், யோகியர்களும், சமய ஞானியர்களும், தத்துவ வித்தகர்களும் பிற அருட்செல்வர்களும் தோன்றி நாட்டின் பெருமையை உலக அரங்கத்தில் உயர்த்தியுள்ளனர். அத்தகைய நல்லோர் வரிசையில் இடங்கொண்டு, உலக ஒருமையுணர்வைப் போதிக்க முற்பட்டவரே வடலூர் இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகளாரை, வள்ளலார் என்றும் வள்ளல்பெருமான் என்றும், திருவருட்பிரகாச வள்ளலார் என்றும் ஆர்வமுடன் அழைத்து மகிழ்கின்றனர். மக்கள் நன்னெறியிற் சென்று வாழ்வாங்கு வாழ்வதற்காகச் சத்திய சன்மார்க்க நெறியை வகுத்தார். 'அருட்பெருஞ்சோதியே தனிப்பெருங்கருணை' யென்று அருள்முழக்கமிட்டார். ஆன்மநேய ஒருமைப்பாட்டினையும் மரணமிலாப் பெருவாழ்வையும் பற்றிப் போதித்ததுடன் தாமும் அவற்றைத் தம் வாழ்வில் செயற்படுத்தினார்.

வள்ளற்பெருமான் உலகமக்களின் நலத்திற்காகவே தம் உள்ளுணர்வால் திருவருட்பாப் பாசுரங்களைப் பாடி வழங்கியவர். அந்தப் பாசுரங்களெல்லாம் தேனினும் இனியவை; தென்றலைப் போன்று மனத்துக்கு இதந்தருபவை; தெய்வநலம் வாய்ந்தவை.

வள்ளலாரின் இளமையில் அவர்தம் உள்ளங்கவர்ந்தவன் திருப்தணிகை முருகப் பெருமான். அந்த முருகனின் ஆறுமுகங்களைத் போலவே திருவருட்பாவும் ஆறுதிருமுறைகளாக விளங்குகின்றன.

அப்பெருமானின் தெய்வநலக் கண்ணொளிபோன்ற பிரகாசமான கருத்துக்கள் உலக அரங்கில் நிலைபெறுமேயானால் உலகெங்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நின்று நிலவும்; உலகமே கடைத்தேறும்.

நாளும் வள்ளற்பெருமானின் நற்கருத்துக்களைப் போற்றி அவரது செந்நெறியில் வாழும் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள். திருவருட்பாவின் அருமையையும் பெருமையையும் நன்குணர்ந்த அவர்கள் அந்த அருள்நூல் பரவுவதற்குச் செயற்கரிய செயல் - திருத்தொண்டு - ஒன்றைச் செய்துள்ளார்கள்.

தமிழுலகம் போற்றும் உரைவேந்தரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய ஆராய்ச்சிப் பேரறிஞருமான ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்களைக் கொண்டு திருவருட்பா முழுவதற்கும் உரையெழுதச் செய்துள்ளார்கள். வள்ளற்பெருமானது வரலாற்றுமுறைப்படி அந்த உரை அமைந்துள்ளது.

தெளிவான உரையுடன் கூடிய திருவருட்பாவினைப் பகுதி பகுதிகளாகப் பிரித்து வெளியிடுவதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகமே ஏற்றது என்று கருதிய அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள், உரைப் பகுதிகள் அனைத்தையும் பல்கலைக்கழக இணைவேந்தரும்பெருவள்ளலுமாக விளங்கிய செட்டிநாட்டரசர் முத்தையவேள் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அரசர் பெருமானும், பெருவிருப்புடன் அந்த நற்பணிக்கு உதவ முற்பட்டமையால் தெளிவான உரையுடன் கூடிய திருவருட்பா - முதல் திருமுறை பல்கலைக்கழகப் பொன்விழாவில் வெளியிடப் பெற்றது. இந்நிலையில் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுக்கும் செட்டிநாட்டரசர் முத்தையவேள் அவர்களுக்கும் தமிழுலகம் என்றும் நன்றிக் கடப்பாடு உடையது.

திருவருட்பாப் பகுதிகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்ற செட்டிநாட்டரசர் அவர்களின் பெருவிருப்பத்தை முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் பெருமைக்குரிய இராம. வீரப்பன் அவர்கள் புரிந்து கொண்டார்கள்; அந்நிலையில் தமிழக அரசின் அறநிலைத்துறை வாயிலாக இந்த நன்முயற்சி நிறைவேறப் போதிய நிதியுதவி கிடைத்திட வழிவகுத்துள்ளார்கள்; அவர்களுக்குப் பல்கலைக்கழக சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் மதிப்பிற்குரிய இராம. வீரப்பன் அவர்களால் 2,3,4,5- ஆம் தொகுதிகள் மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து ஆறுந் தொகுதி வெளிவந்துள்ளது; இப்பொழுது ஏழாந்தொகுதி வெளிவருகின்றது; ஏனைய தொகுதிகளும் உருவாகிவருகின்றன.

இத்தொகுதியில் மூன்றுந்திருமுறையில் பழமலைப் பதிகம் தொடங்கி மங்களம் நிறைவாகப் பதினைந்து பகுதிகளும், நான்காந்திருமுறை முழுதும் (நாற்பத்தொரு பகுதிகள்), ஐந்தாந்திருமுறையில் அன்பு மாலை, அருட்பிரகாசமாலை, ஆகிய இருபகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

இப்பகுதிகள் அனைத்திலுமே தோன்றாத் துணையான இறைவன் வள்ளலாருக்குத் தோன்றுந் துணையாக நின்ற பெற்றியினையும் அம்மை கொண்ட அருட்பாங்கினையும் தெளிவாகக் காணலாம். பொதுவாகப் பாடல்களனைத்திலுமே தில்லைக்கூத்தன் பெரும்புகழ் இனிது பரவப்படு கிறது.

சிறுகுழந்தையும் செய்யமேனிச் சிவனிடம் அருள்வேண்டும் நிலை யிலே வள்ளலார் மட்டும் அதனை வேண்டாதிருப்பாரா? இந்தக் குறிப் பினை வள்ளலார் மிகக் கனிவுடன் புலப்படுத்திக் காட்டுகிறார்; இறைவன் அனைத்தும் ஆனவன் என்பதனை அடுக்கடுக்காய் அழகுற நவில்கின்றார்.

தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தயங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும் மெய்அறிவும்
அனைத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்
ஏயும் எள்ளை வீரக்கம் ஒன்றிலையேல்
என்செய் வேன்இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசையுறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே

பேரொளி விளக்காகப் பரமனைக் கண்ட வள்ளல் பெருமான் அருட்பெருஞ் சோதி என்னும் தனிப்பெரும் சோதியை ஆர்வமுடன் ஏற்றி, அனைவரின் அக இருளையும் நீக்கி நமக்கும் புதுவழிகாட்டிச் சென்றுள்ளார். அப் பெரு மானின் திருவருட்பாப் பாடல்களில் ஒளிரும் தெய்வீகக் கருத்துக்கள் உலகம் எங்கும் பரவவேண்டும் என்பதே பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களின் எண்ணமும் ஆர்வமும் ஆகும்; அவ்விருப்பமே என் விருப்பமும் ஆகும்.

திருவருட்பாத் தொகுதிகள் அனைத்தையும் அனைத்துத் துறையிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் வாங்கிப் பயன் பெற வேண்டும் என்று அன்புடன் விரும்புகின்றேன்.

(ஒப்பம்) ராம. சேதுநாராயணன்

அணிந்துரை

தமிழ் இசைக்காவலர், பத்மபூஷண், டாக்டர்
ராஜா சர். முத்தையா செட்டியார்
முன்னாள் இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ஈடு இணையற்ற உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியும் அதன் சொற்களும் அனைவருக்கும் பொதுவாயினும், கையாள்பவரைப் பொறுத்து மென்மையும், வன்மையும், எழிலும், ஏற்றமும், தெளிவும், திட்பமும் பெற்று விளங்கும் தன்மையைப் பெறுகின்றன. எனவேதான் வள்ளுவர் தமிழ், இளங்கோ தமிழ், கம்பர் தமிழ் என்று நூல்களை ஆக்கியோர்மீது அதனை ஏற்றிச் சொல்லும் நிலைமையைக் காண்கிறோம்.

இதுபோலவே பக்திப் பேருலகில் நால்வர் தமிழ் என்று நானிலமே போற்றும்வண்ணம், அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளரசர்கள் நால்வரும் இறைவனின் பெருமையைப்போற்றி எண்ணற்ற பாக்களை இயற்றித் தமிழகமெங்கும் பக்திமணத்தைப் பெருக்கினார்கள்.

அவர்கள் தமிழ் கேட்டு இறைவனே பலமுறை மகிழ்ச்சி அடைந் திருக்கிறார். சிலமுறை மயங்கிக்கூட இருக்கிறார். எனவேதான் தூய மறைகள் பாடும் வாயை உடைய எம்பெருமான் சுந்தரரைப் பார்த்துச் ‘சொற்றமிழ் பாடுக’ என்று அன்பால் ஆணை பிறப்பித்திருக்கின்றார்.

தண்ணார் தமிழால் சைவநெறி போற்றுகின்ற அப் பெருமக்களுக்குப் பின்னர், அந்நெறி போற்ற. தத்துவமும் வித்தகமும் ஞானமும் சித்தி யும் நிறைந்த, தேனினும் இனிய, தெளிந்த அமுதினும் உயர்ந்த பாடல் களைத் தந்த பட்டினத்தடிகளும் வள்ளல் பெருமானும் தோன்றினார்கள். இந்த இருபெரும் ஞானச்சித்தர்களும் தோன்றிய இடங்கள் வேறுவேறு ஆயினும், பட்டினத்தடிகளால் திருவொற்றியூரும், வள்ளற்பெருமானால் வடலூரும் நிலைத்த பெருமைக்கு நிலைக்களன்களாக விளங்குகின்றன.

உலகத்தார் அனைவரும் ஒருமையுடன் இறைவன் திருவடிகளை வணங்குகின்ற உத்தமர்களாக வேண்டும். பிறிதொன்று எண்ணாத பேருள்ளம் கொண்டவர்களாக அவர்கள் திகழவேண்டும் என்னும் அருள் நோக்கோடு, அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் திருவாய் மலர் களாக மலர்ந்தவையே, அந்த அற்புத அருள்மலர்களின் தொகுதியே, செந்தமிழ் மொழியின் பக்திச் சுரங்கமே திருவருட்பாவாகும்.

திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 5818 ஆகும்.

பாடல்நூல்களுக்கு உரைகாண்பது என்பது அரிய, பெரிய, மிகவும் போற்றத்தக்க ஒப்பற்ற செயலாகும். பல சங்க நூல்களும் காவியங்களும் பக்திப் பெருநூல்களும் இலக்கண நூல்களும் அவற்றின் உரை நலத்தைக் கொண்டே அவற்றை எளிதில் படித்துப் பயன்பெறக் கூடியவையாக இருக்கின்றன என்பதனை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

நல்லார் ஒருவர் உளரேல் எல்லாருக்கும் மழை பெய்வதுபோல நல்லார் ஒருவர் உள்ளத்தில் திருவருட்பாவிற்கு உரை காணவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதால், அது செம்மையான முறையில் செயல் ஆயிற்று. இவ்வுலகிற்குப் பொருளும் அவ்வுலகிற்கு அருளும் இன்றியமையாதன என்று வள்ளுவப்பெருமான் வகுத்தார். ஆனால் இவ்வுலகிலேயே பொருளுடன் அருளையும் பெற்ற புண்ணியப் பெருமகனாக விளங்குகின்ற என் இனிய நண்பர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் பொன்மனத்திலேயே இந்தப் பொன்னான எண்ணம் தோன்றியது. பரம்பரையாகவே அருட்பிரகாச வள்ளல் பெருமானிடம் பேரன்பு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள், உள்ளத்தில் இந்த எண்ணம் தோன்றியதற்குக் காரணம், அந்த வள்ளல் பெருமானின் திருவருள் என்றே எண்ணுகின்றேன்.

எண்ணியவற்றை எண்ணிய வண்ணமே செயலாக்கும் அன்பர் மகாலிங்கம் அவர்கள், சைவநெறியினை உள்ளவாறு உணர்ந்து தெளிந்த திறனுடன், தமிழ்மொழியின்கண் நுட்பமும் உரைகாண்பதில் திட்பமும் கொண்டு பெரும்புகழ் பெற்று விளங்கிய சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களைக் கொண்டு அருட்பாவிற்கு உரை காணச் செய்தார்கள்.

அந்த உரை தட்டெழுத்துப் பிரதியில் எட்டாயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ளதாக உருவாயிற்று. அந்த உருவாக்கம் முழுமைபெற பெருவிருப்பத்தோடு இரண்டு லட்சம் ரூபாய் வரை செலவு செய்து மகாலிங்கம் அவர்கள் அந்த முயற்சியில் முழுவெற்றி பெற்றார்கள்.

கூத்தப்பெருமான் குடிகொண்டு விளங்கும் சிதம்பரத்திற்கு அருகில் மருதூரில் பிறந்து, சற்றுத்தொலைவில் உள்ள வடலூரில் சத்திய ஞான சபையைக் கண்ட வள்ளல்பெருமானின் திருவருட்பாவிற்கு, உரிய உரை நூல், அந்தக் கூத்தப் பெருமானின் ஊர் எல்லையிலேயே விளங்கும் கல்விப் பேராலயமான, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்மூலம் வெளிவரவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அவ்விருப்பத்தை அவர்கள் என்னிடம் வெளியிட்டபோது போற்றத்தக்க பல அரியநூல்களை வெளியிட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மூலம் உரையுடன் கூடிய திருவருட்பா நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமுடையது என்று எண்ணி, மிகுந்த மகிழ்ச்சியோடு அதற்கு நான் ஒப்புக்கொண்டேன். விரைவிலேயே ஒருநாள் அவர்கள் தட்டெழுத்துப் பிரதியில் உள்ள திருவருட்பா உரை முப்பது பகுதிகளையும் எடுத்துக்கொண்டு, அவர்களும், அவர்கள் திருக்குமாரரும் என் இல்லத்திற்கு வந்து

அவற்றை என்னிடம் தந்ததை, வாழ்நாளில் நான் பெற்ற பரிசுகளை யெல்லாம்விட மிகப்பெரிய பரிசாகக் கருதுகிறேன்.

பல்வேறு நூல்களைப் பதிப்பித்தும், உரை கண்டும், தமிழ் இலக்கிய உலகிற்கு ஓர் ஒளிவிளக்காக விளங்கியவர்கள் தமிழ்த் தாத்தா என்று உலகம் புகழும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள். அந்தத் தமிழ்ப் பேரறிஞர் அவர்களை 1920ஆம் ஆண்டு (தமிழ்க் கல்லூரிக்கு) முதல்வராக நியமித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மகிழ்ந்தது. என்றுமே தமிழ் அறிஞர்களைத் தேடிப் போற்றிப் பல்கலைக்கழகத்திற்கு அவர்கள் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டது போலவே, பல ஒப்பற்ற நூல்களையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மிகச் செம்மையான முறையில் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டு வருகின்றது.

அனைத்துப் பாட வேறுபாடுகளோடும் விளக்க உரைகளோடும் ஈடு இணையற்ற பதிப்பாக பதினாறு பகுதிகளாக வெளிவந்த கம்பராமாயணத் தின் முதல்தொகுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா வில் வெளியிடப் பெற்றது.

அப் பதிப்புப் போலவே பத்துப்பகுதிகளாக மிகச் சிறந்த முறையில் வெளிவர இருக்கும் மூலமும் உரையும் கொண்ட திருஅருட்பாவின் முதல் தொகுதி (முதல் திருமுறை), இந்தியப் பெருநாட்டின் ஜனாதிபதி யாக இருந்த மேன்மைதங்கிய சஞ்சீவி ரெட்டி அவர்கள் தலைமை தாங்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்த பொன்விழாவில் வெளியிடப் பெற்றது. அப்பொழுது துணைவேந்தராக விளங்கிய டாக்டர் ஜஸ்டிஸ் பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள், திருவருட்பா நூல் வெளிவருவதில் பேரார்வம் காட்டியதுடன், முதல்தொகுதி பொன் விழாவில் வருவதற்கான தக்க ஏற்பாடுகளையும் செய்தார்கள். அவர் களுக்கு என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிந்தனைத் திறத்தாலும், செயல்வன்மையாலும், தெளிந்த உயர்ந்த நிர்வாக ஆற்றலாலும், எந்தப் பொறுப்பை ஏற்றாலும் அந்தப் பொறுப்பிற் கும் அந்த அமைப்பிற்கும் நிலைத்த பெருமையினைச் சேர்க்கும் நம் மதிப் பிற்குரிய பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள், இப்பொழுது துணை வேந்தராக விளங்குகிறார்கள். அவர்கள் திருவருட்பாவின் பகுதிகள் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதில் காட்டிய ஆர்வமும் அக்கறையும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அளவிட முடியாதன. சென்ற ஆண்டு நிறுவியோர் நினைவு விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலை கழகத்திற்கு வருகைதந்த அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களிடம் திருவருட்பா வெளியீட்டு முயற்சிக்குத் தமிழக அரசு உதவவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வெளி யிட்டார்கள்.

அதனை அன்புடன் கேட்ட அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஒப்புதலோடு, திருவருட்பா வெளியீட்டிற்கு உதவி செய்வதாக அந்த விழாவிலேயே தெரிவித்தார் கள். அங்குத் தெரிவித்தவண்ணமே அறநிலையத்துறைமூலம் வட்டி

இல்லாக் கடனாக நான்கு லட்ச ரூபாய்கள் வழங்கித் திருவருட்பாப்பகுதி கள் சிறந்த முறையில் நூல்களாக வெளிவர உதவினார்கள். இந்த நற்பணிக்கு உதவிய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கும், நற்செயல்கள் அனைத்திற்கும் துணைநின்று நாளும் நல்லன புரியும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கொடுத்த உதவித் தொகையைக்கொண்டு, திருவருட்பா உரைப் பகுதிகள் மிக அழகாகவும் அருமையாகவும் பெருமை கொள்ளத் தக்க வகையிலும் தொடர்ந்து வெளிவரத் திட்டமிட்டுச் செயலாற்றிப் பெருவெற்றி கண்டுள்ள துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்களுக்கும் என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திருவருட்பா உரையுடன் கூடிய பகுதிகளை அனைத்துத் தமிழ் மக்களும் படித்து அருட்பெரும் சோதியான வள்ளல் பெருமானின் அருளைப் பெறவேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

மு.அ. முத்தையா செட்டியார்

அருட்பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

வாழ்க்கை வரலாறு

தமிழ்நாடு செய்த பெரும் தவப்பயனால், பச்சைப் பயிரோடு பக்தி பயிரையும் வளர்க்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில், இறைவன் திருக்கூத்தாடும் தில்லையின் திருநகரை அடுத்து உள்ள மருதூரில், இராமையா பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் மகவாக இராமலிங்கர் தோன்றினார். அவர் பிறந்த நாள் 5-10-1823 ஆகும்.

இவருடன் பிறந்தோர் சபாபதிப்பிள்ளை, பரசுராமப்பிள்ளை என்போர் ஆவர். வாழையடி வாழையாக வந்த அருள் திருக்கூட்ட மரபில் உதித்த இராமலிங்கருக்குச் செந்தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானது திருக்காட்சி இளமையிலேயே கிடைத்தது. மக்கட் பிறவியினரையே குருவாகப் பெறும் மானிடர் உலகில், மறைமுதல்வனின் மகனை முருகப் பெருமானையே குருவாய் ஏற்றதால், இராமலிங்கர் செந்தமிழும் வடமொழியும் ஆகிய இரு பெரும் மொழிகளையும் ஓதி உணரும் பெருஞானம் கைவரப் பெற்றார்.

எனினும் உலகியல் முறைக்கேற்பக் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரையும், சகோதரர் சபாபதிப் பிள்ளையையும் ஆசான்களாகப் பெற்றார். சபாபதிப் பிள்ளையின் அன்பிலும் அவர் மனைவியாரின் அரவணைப்பிலுமே வளர்ந்தார்.

கருவிலே திருவுடையவராக அவர் தோன்றியமையால், இளம்போதிலேயே கவி எழுதும் பேராற்றலைப் பெற்றார். இராமலிங்கர் பல்வேறு ஆற்றல்களின் உறைவிடமாக விளங்கினார்.

அவர் புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, உரைநடை எழுத்தாளராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, ஞானாசிரியராக, போதகாசிரியராக, மருத்துவராக, இவர்களுக்கெல்லாம் மேலாகத் துறவியாக, ஞானியாக, சித்தராகக் காட்சி தந்தார்.

செயற்கரியவற்றையே செய்த இராமலிங்கர், உலகங்கள் எல்லா வற்றையும் இயக்கிவரும் முழுமுதற் பொருள்களான கடவுள், அனைவர் உள்ளங்களிலும் சோதி வடிவாகத் திகழ்கின்றார். அத்தகைய அருட் பெருஞ்சோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணையே உலக உயிர்களை யெல்லாம் வாழவைக்கிறதென்றும் கண்டார்.

இவ்வுண்மையினை மனத்திற் கொண்டு, சாதி மத வேறுபாடின்றி எல்லா உயிர்களிடத்திலும் இரக்கமுடையவராய் வாழும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினை நல்கும் சீவகாருண்ய ஒழுக்கமே உலகில் உயர்ந்தது என அறிந்து தெளிந்தார். இதனால் சமரச சன்மார்க்க நெறியைக் கைக்கொண்டார்.

தம் நெறிதழைக்க இறைவன் கருணைதனைப் பெற்றார். பயிர்கள் வாடுவதையே பார்க்கப் பொறுக்காத இராமலிங்கர், பசியால், வாடும் மக்களின் துயர் துடைக்க முன்வந்தார். வடலூரில் சன்மார்க்க சங்கம்—சத்திய தருமசாலை—சத்தியஞான சபை என்னும் மூன்று அருள் நெறி காக்கும் அமைப்புகளை நிறுவினார். அப் பெருமான் தனிக்கொள்கையை, தனிக்கொடியை, தனிச்சபையை, தனிமார்க்கத்தை, தனி மந்திரத்தை, வழிபாட்டைக் கண்டார்.

பொருளை வாரி வழங்கியவர்கள் பொருள் வள்ளல்கள்; அருளை வாரி வழங்கியோர், அருள் வள்ளல்கள். அருள் வள்ளல்களில் ஒருவராகி, அதேபொழுது தம் தனிப்பண்பாலும் ஒருவராகி, வள்ளல் என்ற தனிப் பெயரையே பெற்றுத் திகழும் பெற்றிபெற்றவர் நம் இராமலிங்கர்.

மரணமில்லாப் பெருவாழ்வு எனச் சாகாக்கலையை உலகிற்கு உணர்த்தியவர் வள்ளலார்; அவர் பொன் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந் தார்.

வள்ளலார் தோன்றிய காலம்தொட்டே பல அதிசயங்களை நிகழ்த்தி உள்ளார்.

அப் பெருமகனார் ஓராண்டுப் பருவத்தினராக இருந்தபோதே தில்லையம்பலநாதர் சந்நிதித் திரைச்சீலை தானே தூக்கப்பெற்று தரிசித் தார். ஒருமுறை திண்ணையிலிருந்து கீழே விழுந்தபோது இறைவி வந்து காப்பாற்றினார். ஒரு நாள் பட்டினியோடு படுத்திருந்தபோது அவர் அண்ணியார் வடிவில் இறைவி காப்பாற்றினார். இளமையில் அண்ணன் சொற்பொழிவுகளுக்கு ஏடு படிக்கத் தொடங்கினார். ஒரு முறை அவர் நோய்வாய்ப் பட்டமையால் தாமே சொற்பொழிவு செய்யத் தொடங்கி நாடறிந்த பெருமகன் ஆனார்.

தண்ணீரில் விளக்கெரியச் செய்தார். ஒரே இரவில் 1596 வரிகளை உடைய அருட்பெருஞ்சோதி அகவலைப் பாடி முடித்தார்.

வள்ளலார் பக்தி நெறி நின்ருலும் உலகவாழ்வில் மக்கள் சிறந்து வாழும் பக்குவநெறியும் கண்டவர். ஏழை பணக்காரன், மேல்சாதி கீழ்சாதி முறைகளை வன்மையாகக் கண்டித்தவர்.

சாதி சமய வேறுபாடுகளைக் கடுமையாய் எதிர்த்தார். மக்கள் வாழப் பயன்படும் நெறியே நன்னெறி எனப் போற்றினர்.

இளமையில் முருகப்பெருமானைக் கடவுளாகவும், திருஞான சம்பந்தரைக் குருவாகவும், திருவாசகத்தை வழிபடும் நூலாகவும் கொண்டார். பின்னர் ஒற்றியூரில் வாழும் இறைவனின் இணையற்ற பக்தராகவும், பின் தில்லையம்பல நாதரின் பக்தராகவும் விளங்கினர். முடிவில் அருட்பெருஞ்சோதி அடியவராகத் திகழ்ந்தார்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஆகிய அனைவரும் ஒருமை உள்ளவராகி உலகில் வாழவேண்டும் என்ற பெருநோக்கோடு வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருப்பாடல்களின் தொகுதியே திருவருட்பா என்னும் கருவூலமாகும்.

அருளாளர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே! ஆனல் 'திரு' சேர்ந்து அப் பெயருடனேயே விளங்கும் அருட்பா, வள்ளல் பெருமான் பாடிய பாடல்களின் தொகுதியே யாகும்.

திருவருட்பா ஆறு திருமுறைப் பகுதிகள் கொண்டு விளங்குகின்றது. 399 பதிகங்களையும் 5818 பாடல்களையும் கொண்டது. எல்லாப் பாடல் களும் இறைவனை முன்னிறுத்திப் பாடப்பெற்றவையே. இது பக்திப்பா உலகில் ஒரு புதுமை; தமிழ்மொழிக்கு மற்ருெரு பெருமை.

ஆண்டவனை அனைவரும் நாள்தோறும் வேண்டிப் போற்றும் நிலையில் உரைநடைவேண்டுகோளாக அமைந்தவை, சுத்த சன்மார்க்கச் சத்தியச் சிறு விண்ணப்பம், சுத்த சன்மார்க்கப் பெரு விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம், சமரச சுத்த சன் மார்க்க சங்க சத்திய ஞான விண்ணப்பம் என்பனவாகும்.

மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்பன வள்ளல் பெருமான் இயற்றிய உரைநடை நூல்கள் ஆகும். அவர் உரை யாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தும் பல அரும்பணிகள் செய்தார்.

இறைநெறியை ஆன்மநேயப் பெருநெறி ஆக்கிய வள்ளல்பெருமான் தைப்பூச நன்னளில் வடலூரில் உள்ள சித்திவிளாகத்தில் ஓர் அறைக் குள் சென்று கதவினை மூடிக்கொண்டு அருட்பெருஞ்சோதி ஆண்ட வரான இறைவனோடு இரண்டறக் கலந்து சோதி வடிவானர். அவர் சித்தி அடைந்த நாள் 30-1-1874 ஆகும்.

வள்ளல் பெருமானின் கொள்கைகள் இன்று உலகெங்கும் பரவி வருகின்றன.

ஆண்டுதோறும் வடலூரில் தைப்பூசத் திருவிழாவில் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள்கூடிக் சோதி வழிபாட்டில் கலந்துகொண்டு வள்ளல் பெருமானின் அருளைப் பெறுகின்றனர்.

வள்ளல் பெருமானின் அருள்திறத்தை, ஆன்மநேய, ஒருமைப்பாட்டின் உயர்வை, அறிந்து தெளிந்து திருவருட்பாக்களை நாளும் ஓதி நல்வாழ்வு பெறுவோமாக.

உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி,
ஔவை சு. துரைசாமிப் பிள்ளை
வாழ்க்கை வரலாறு

தென்னார்க்காடு மாவட்டத்தில் ஔவையார் குப்பம் என்ற கிராமம், அதில் சுந்தரம்பிள்ளை என்ற திருமகனாரும் சந்திரமதி அம்மையார் என்ற திருமகளாரும் மனமொன்றிய தம்பதிகளாக வாழ்ந்து வந்தார்கள்.

சுந்தரம்பிள்ளை ஊர்க்கணக்கராகப் பணியாற்றிவந்தார் என்றாலும் கன்னித் தமிழ்மீது கட்டுக்கடங்கா அன்பு கொண்டவராக விளங்கினார். அன்பு மட்டுமல்லாமல், அம்மொழியில் மிக்க ஆற்றல் பெற்றவராகவும் திகழ்ந்தார். இப் பெருந்தகை மயிலம் முருகன்மீது பல செய்யுள் நூல்கள் இயற்றி உள்ளார்.

இந்த அன்புத் தம்பதிகளுக்கு ஐந்தாம் குழந்தையாக 1902 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆண்மகவு ஒன்று பிறந்தது. அதற்குத் துரைசாமி என்று பெற்றோர்கள் பெயரிட்டார்கள்.

அக் குழந்தை பிற்காலத்தில் தமிழகத்தில் உரை உலகில் ஒரு பொற் காலத்தை உருவாக்கப் பிறந்ததாலோ என்னவோ, இறைவன் ஔவை என்னும் சொல்லை முதலாக உடைய ஊரில் அந்தச் செந்தமிழ்ச் செல்வத்தைப் பிறக்க வைத்தார்.

துரைசாமிப்பிள்ளை, தொடக்கக் கல்வியை உள்ளூரில் கற்றார். பின் திண்டிவனம் அமெரிக்கன் ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை கற்றார்.

அந்த இளமைக் காலத்திலேயே துரைசாமிப் பிள்ளைக்கு இருந்த தமிழ்ப்பற்றால் ஓலைச்சுவடிகளை ஆய்கின்ற பயிற்சியினை மேற்கொண்டார்.

வருவாய் தேடவேண்டிய நிலை வந்ததால், முதலில் துரைசாமிப் பிள்ளை உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளராகவே பொறுப்பேற்றார். என்றாலும், தமிழ்மொழிமேல் அவர் கொண்ட பெரும் பற்றால் இப் பொறுப்பினைச் சிறிது காலத்திலேயே விட்டுவிட்டார்.

தமிழை முறையாகக் கற்க முடிவு செய்தார். நாவலர் ந.மு. வேங்கட சாமியார் அவர்களிடமும், பாவரசு வேங்கடாசலனார் அவர்களிடமும் சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பழுதறக் கற்றார்.

சைவ சமயக் கல்வியை கந்தசாமி தேசிகர், தவத்திரு வாலையானந்த அடிகள் ஆகியோரிடம் கற்றுத் தெளிந்தார். 1930 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டமும் பெற்றார்.

வடார்க்காடு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினை ஒளவை பெற்றார். அம் மாவட்டத்தில் பல பள்ளிகளில் அவர் பணியாற்றினார். அதுசமயம் அவர் நடத்திய திருக்குறள் வகுப்புகள் பேரறிஞர்களையும் கவரும் தன்மைபெற்று விளங்கின.

துரைசாமிப் பிள்ளைக்கு திருமதி உலோகாம்பாள் என்னும் அம்மையாரை மணம் முடித்தனர். துரைசாமிப்பிள்ளையின் இல்லறம் என்றும் நல்லறமாக அமைந்தது.

இப் பெருமக்களின் இல்லற வாழ்வின் பயனாக திருவாளர்கள் ஒளவை நடராசன், ஒளவை திருநாவுக்கரசு, ஒளவை ஞானசம்பந்தன், மெய்கண்டான், நெடுமாறன்; திருமதிகள் பாலகுசம் அம்மையார், மணிமேகலை, திலகவதி அம்மையார், தமிழரசியார் ஆகியோர் அறிவறிந்த நன்மக்களாக வாய்த்தார்கள்.

துரைசாமிப்பிள்ளை தமிழ் கற்றுத் தேர்ந்ததோடு, பிறமொழித் தாக்குதல்களிலிருந்து தமிழைக் காக்கும் பெரும் பணியையும் தொடக்க முதலே மேற்கொண்டார்.

உயர்நிலைப்பள்ளிப் பணியிலிருந்து நீங்கித் திருவேங்கடவன் தமிழ்த் திசைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றார். இதன் பின்னர் துரைசாமிப் பிள்ளையின் தமிழ்ப்பணி மிக ஆக்கபூர்வமாக அமைந்தது.

நாவலர் ந. மு. வேங்கடசாமியார் அவர்கள் மணிமேகலையில் அமைந்துள்ள சமயப் பகுதிகளுக்கும் தருக்கப் பகுதிகளுக்கும் சீரிய உரை காணுமாறு துறைசாமிப் பிள்ளையிடம் பணித்தார். அதற்கு உடன்பட்ட துரைசாமிப்பிள்ளை வடமொழி வல்லவர்கள் பலரின் பெருந்துணையுடன் வடமொழி நூல்களை மிகச் செம்மையாகக் கற்று, மணிமேகலைக்கு மிகச் சிறந்த உரை கண்டார்.

தொல்காப்பியம், திருக்குறள், சிந்தாமணி, இறையனார் களவியல் சிலப்பதிகாரம் முதலிய பெருநூல்களுக்குப் பல உரைகள் பல பெருமக்களால் வரையப்பட்டன. அக்கால எல்லைக்குப்பின் அத்தகைய பெரும் புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க வகையில் உரை எழுதும் வழியில் துரைசாமிப்பிள்ளை தன்னிகரற்றவரானார்; அதனால் அவரைத் தமிழ் உலகம் உரைவேந்தராகக் கண்டது. ஒளவையாகக் கண்டது.

ஔவை துரைசாமிப்பிள்ளை உரை எழுதித் தமிழகத்திற்கு வழங்கியவைகள் பலவாகும்.

யசோதர காவியம் என்ற சமணசமய இலக்கியநூலைச் சுவடியிலிருந்து ஆராய்ந்து உரைகண்டு பதிப்பித்தார்.

தமிழ்ப் பெரும் புலவர்களின் பேராலயமாக விளங்குகின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துரைசாமிபிள்ளையை தமிழ்த்துறையில் சேர்த்துக் கொண்டது. அங்கிருந்தபோதுதான் ஔவை துரைசாமிப் பிள்ளை சைவசமய இலக்கிய வரலாறு என்ற அரிய வரலாற்று நூலை உருவாக்கினர். ஐங்குறுநூறுக்கு உரைகண்டார். இவற்றோடு சைவசமயப் பெருநூலான ஞானமிர்த நூலை ஆராய்ந்து விளக்கம் எழுதினர். இந்நூல்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடுகளாக மலர்ந்தன.

அடுத்து, துரைசாமிப்பிள்ளை செய்த பெரும்பணி புறநானூறுக்கு உரை கண்டதாகும். நற்றிணைக்கும் உரை கண்டார். பெரிதும் முயன்று பதிற்றுப்பத்திற்கும் உரை கண்டார்.

தமிழ்ப்பணி என்ற பெரும்பயணத்தை மேற்கொண்ட துரைசாமிப் பிள்ளை, பின் மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். எண்ணற்ற மாணவர்கள் உரைவேந்தர்பால் தமிழ் கற்று அறிஞர்கள் ஆயினர்.

உரைவேந்தரின் உரைகாணும் பணிகளின் சிகரமாக அவர் திருவருட்பாவிற்கு உரைகண்ட பணி அமைந்தது. அருட்செல்வர் திரு.நா. மகாலிங்கம் அவர்கள் நல் உதவியோடு திருவருட்பா பாடல்கள் அனைத்திற்கும் தெளிவும் திட்பமும் நுட்பமும் மிகுந்த உரைதனைக் கண்டார்.

மதுரைப் பல்கலைக் கழகம், இந்தியப் பல்கலைக் கழகங்களின் ஆய்வுக்கு உரைவேந்தரைப் பேராசிரியராக அமர்த்தியது. அப்போது தமிழ்நாட்டு ஊர்ப்பெயர் வரலாற்றாராய்ச்சி நூல் உரைவேந்தரால் உருவாக்கப்பட்டது.

உரைவேந்தர் நாவேந்தராகவும் விளங்கினர். இலக்கிய சமய மேடைகளில் அவர் சொற்கள் ஆலயமணிகளின் அற்புத ஓசைகளாகவே முழங்கின.

துரைசாமிப் பிள்ளைக்கு உரைவேந்தர் பட்டத்துடன், சித்தாந்த கலாநிதி, பேரவைச் செம்மல் என்ற சிறந்த பட்டங்களையும் உயர்ந்த அமைப்புகள் வழங்கிச் சிறப்பித்தன.

மகேந்திரவர்மப் பல்லவன் வடமொழியில் இயற்றிய நாடகமான மத்த விலாசத்தை உரைவேந்தர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனவும், சைவமும் தமிழும் தழைத் தினிதோங்குக எனவும் முழக்கமிட்டு வாழ்நாள் முழுவதும் திகழ்ந்த தமிழ்ப் பெருமானுரான ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள், 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் இறைவன் திருவடி நீழலை அடைந் தார்.

உரைகாண்பதில் தனி உலகையே அமைத்து வேந்தரான துரை சாமிப்பிள்ளை அவர்களின் பொன்னுன புகழ், உலகுள்ளவும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும். அவர் அரும்பணி வருங்காலங்களுக்குப் பெரும் வழிகாட்டியாகும்.

இதனுள்...

எண்	தலைப்பு	செய்யுள் எண்	பக்க எண்
13.	பழமலைப் பதிகம்	2474-2483	9
14.	பழமலை கிழமலை	2484-2486	12
15	திருவதிகைப் பெரிய நாயகியார் தோத்திரம்	2487-2489	17
16.	திருவண்ணுமலைப் பதிகம்	2490-2499	26
17.	அருணகிரிச் சிவக் கொழுந்து	2500	28
18.	அருட்குரு தோத்திரம்	2501	36
19.	ஞான சிகாமணி திருச்சீர் அட்டகம்	2502-2505	42
20.	திருஞான சம்பந்தர் தோத்திரம்	2506-	44
21.	சிங்கபுரிக் கந்தர் பதிகம்	2507-2517	54
22.	சித்தி விநயகர் பதிகம்	2518-2529	65
23.	வல்லபைக் கணேசர் பிரசாத மாலை	2530-2540	76
24.	சித்தி விநாயகர் திருவருள் மாலை	2541-2550	87
25.	கணேசர் தனித் திருமாலை	2551-2556	93
26.	தெய்வத் தனித்திருமாலை	2557-2563	98
27.	மங்களம்	2564-2570	100

நான்காம் திருமுறை

1.	குஞ்சிதபாதப் பதிகம்	2571-2580	120
2.	போற்றித் திருப்பதிகம்	2581-2590	130
3.	அம்மை திருப்பதிகம்	2591-2600	147
4.	ஆனந்த நடனப் பதிகம்	2601-2610	168
5.	எதிர்கொள் பத்து	2611-2620	182
6.	புறமொழிக் கிரங்கல்	2621-2630	193
7.	திருப்புகழ் பதிகம்	2631-2640	202
8.	சிந்தைத் திருப்பதிகம்	2641-2650	212
9.	உய்கைத் திருப்பதிகம்	2651-2662	222
10.	அபராத விண்ணப்பம்	2663-2684	245
11.	கலி விண்ணப்பம்	2685-2694	255
12.	அடிமைப் பதிகம்	2695-2704	268
13.	சரணப் பதிகம்	2705-2715	277
14.	பொதுத் தனித் திருவெண்பா	2716-2728	287
15.	தனித் திருவிருத்தம்	2729-2785	338

16.	திருக்குறிப்பு நாட்டம்	2786-2789	342
17.	தனித் திருப்புலம்பல்	2790-2793	346
18.	பரமராசியம்	2794-2795	349
19.	திருப் புகழ்ச்சி	2796-2798	353
20.	திருமருந் தருள்நிலை	2799-2800	356
21.	திருவருள் விலாசம்	2801-2802	359
22.	சிவ சிதம்பர சங்கீர்த்தனம்	2803-2807	364
23.	சிவகாமவல்லி துதி	2808-2812	369
24.	சிவ பரம் பொருள்	2813-2816	372
25.	நடராச அலங்காரம்	2817-2819	375
26.	பாங்கிமார் கண்ணி	2820-2846	382
27.	வெண்ணிலாக் கண்ணி	2847-2869	390
28.	முறையீட்டுக் கண்ணி	2870-2938	411
29.	திருவடிக்கண்ணி	2939-2949	415
30.	பேரன்புக் கண்ணி	2950-2963	420
31.	நடேசர் கொம்மி	2964-2970	423
32.	தோழியர் உரையாடல்	2971-2976	425
33.	தெண்டனிட்டேன்	2977-2985	428
34.	இன்னம் தயவு வரவில்லையா	2986-2992	430
35.	வினவிடை	2993-2995	433
36.	நன்றுய் கவன்றது	2996-3004	441
37.	சல்லாப லகரி	3005-3006	444
38.	தலைமகளின் முன்ன முடிபு	3007-3016	458
39.	வேட்கைக் கொத்து	3017-3026	472
40.	அறநிலை விளக்கம்	3027	474
41.	அருள்நிலை விளக்கம்	3028	476

ஐந்தாம் திருமுறை

1.	அன்புமாலை	3029-3059	519
2.	அருட் பிரகாச மாலை	3060-3159	615

உ

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்பிரகாசவள்ளலார்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிய

திருவருட்பா-வரலாற்றுமுறை

உரைவேந்தர் உரை

ஏழாம் தொகுதி

மூன்றும் திருமுறை

மூன்றும் பகுதி

---

13. பழமலைப் பதிகம்

அஃதாவது பழமலையில் எழுந்தருளும் சிவபெருமான் பொருளாகப் பாடிய பாட்டுக்கள் பத்துக் கொண்டது என்பதாம். முதுகுன்றம் எனச் சைவத் திருமுறைகள் குறிக்கும் திருப்பதி பழையமலை எனப் பொருள் படுதலின், பழமலை எனவும் நாட்டு மக்களால் உரைக்கப்படுவதுண்டு. முதுகுன்றப் பெருமானை யதனால் பழமலைநாதர் என்பர். சைவத் திருக்கோயில்கள் வடமொழியின் செல்வாக்கிற்குள்ளாயபோது, முதுகுன்றம் விருத்த அசலம் என மொழி பெயர்க்கப்பட்டது. அது பின்பு விருத்தாசலம் என இயைந்து வழங்குவதாயிற்று. இப்போது விருத்தாசலமே பெருக வழங்குகிறது. சிலர், மலையைக் குறிக்கும் அசலம் என்ற சொற்பொருளில் கிரி என்பதைப் புகுத்தி விருத்தகிரி என்றும், சிவபிரானை விருத்த கிரீசர்-விருத்த கிரிநாதர் எனவும் கூறுவர்.

வடலூர் வள்ளல் விரும்பியுறைந்த கருங்குழிக்கு மேற்கில் இருபது கற்களுக்கு அப்பால், மணி முத்தாற்றின் தென்கரையில் உள்ள இம் முதுகுன்றம் சென்று, அங்கே கோயில் கொண்டுள்ள சிவபெருமானைக் கண்ணாரக் கண்டு, தொழுது வணங்கி மனம் குளிர்ந்து பாடியவை இங்கே வரும் திருப்பாட்டுக்கள்.

திருமுதுகுன்றம் புக்க திருஞானசம்பந்தர் அங்கே சிவஞான யோகியர்களின் பெருநிலையும் பேரொழுக்கமும் ஞான யோக நிலையும் கண்டு மகிழ்ந்து பாடியதுபோல வள்ளற்பெருமானும் சிவபரம்பொருளின் ஞானத் திரளாய் நின்ற நிலையும் சிவயோகக் காட்சியாளரின் ஞான யோகக் காட்சியும் கண்டும் சிந்தித்தும் பாடியருளுகின்றார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2474. **திருமால் கமலத் திருக்கண்மலர்**
திகழு மலர்த்தாட் சிவக்கொழுந்தைக்
கருமா லகற்றுந் தனிமருந்தைக்
கனக சபையிற் கலந்தஒன்றை
அருமா மணியை ஆரமுதை
அன்பை அறிவை அருட்பெருக்கைக்
குருமா மலையைப் பழமலையிற்
குலவி யோங்கக் கண்டேனே.

உரை : திருமாலின் தாமரை போன்ற கண்ணாகிய மலர் கிடந்து விளங்கும் பூப்போன்ற திருவடியையுடைய சிவக்கொழுந்தாகியவனும், பிறவியால் உண்டாகும் மயக்கத்தைப் போக்கியருளும் மருந்தாகுபவனும், தில்லைப் பொற்சபையில் அன்பர் மனம் கலந்து மகிழ ஆடும் ஒரு பரம்பொருளாயவனும், பெறற்கரிய மாமணியும், அரிய அமுது போல்பவனும், அன்பும் அறிவும் அருட் பெருக்குமாய் விளங்கும் குருபரனும் ஆகிய சிவபெருமானை முதுகுன்றில் திருக்கோயில் கொண்டு ஓங்குவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். எ.று.

சக்கரப்படை வேண்டித் திருமால் ஆயிரம் தாமரைகளைக் கொண்டு நாளும் சிவனை யருச்சித்து வருகையில் ஒரு நாள் ஒரு பூக் குறையக் கண்டு வருந்தித் தமது கண்ணும் தாமரை மலர் போறலால், ஒரு கண்ணைப் பறித்தெடுத்து வழிபட்டாரென்ற வரலாறுபற்றி, "திருமால் கமலத் திருக்கண் மலர் திகழும் மலர்த்தாள் சிவக்கொழுந்து" எனப் புகழ்கின்றார். அருளுருவாய சிவத்தின் மென்கண்மையை வியந்து, "சிவக்கொழுந்து" என்று சிறப்பிக்கின்றார். கருமால் - தாய் கருவிற் றோன்றிப் பிறப்பதால் உளதாகும் மயக்கம். "மையல் மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டருள்" (தொண். புரா) என நம்பியாரூரர் கூறுவது காண்க. பிறவி மயக்கத்தை அருள் ஞானமாகிய மருந்தளித்துப் போக்கும் பெருமானாதலால், "கருமால் அகற்றும் தனி மருந்து" எனப் போற்றுகின்றார். கனக சபை - தில்லைப் பொற் சபை. கண்டு பரவுவோருடைய மனத்திற் கலந்து நின்று இன்புறுத்துமாறு தோன்ற, "கனக சபையிற் கலந்த ஒன்று" எனக் கூறுகின்றார். பெறற் கரிய மாணிக்கமணி போல்வதால், சிவனை "அருமாமணி" எனவும், அன்பும் அறிவுமாய் உலகுயிர்களை யுய்விப்பதுபற்றி, "அன்பை யறிவை" எனவும் விளம்புகின்றார். அருட் பெருக்கு - அருட் கடல். சலியாமையும் திண்மையுமுடைய மலைபோல் நின்று சிவஞானம் வழங்கியருளுமாறு புலப்படச் சிவனைக் "குருமாமலை" என்று கூறுகிறார். குருமலை - செம்மை நிறமுடைய மலையென்றுமாம். பழமலையாகிய திருமுதுகுன்றின்கண் கோயில் கொண்டருளுவது விளங்க, "பழமலையிற் குலவியோங்கக் கண்டேன்" என மகிழ்ந்து ஓதுகின்றார்.

இதனால், பழமலைக் கோயிலில் பரமனைக் கண்டு பரவிய திறம் தெரிவித்தவாறும்.

(1)

2475. வான நடுவே வயங்குகின்ற
மவுன மதியை மதிஅமுதைத்
தேனை அளிந்த பழச்சுவையைத்
தெய்வ மணியைச் சிவபதத்தை
ஊனம் அறியார் உளத்தொளிரும்
ஒளியை ஒளிக்கும் ஒருபொருளை
ஞான மலையைப் பழமலைமேல்
நண்ணி விளங்கக் கண்டேனே.

உரை : மவுன ஞான வானத்தில் நடுவே ஒளிர்கின்ற ஞான மதியமாகியவனும், அந்த மதியின்கண் ஊறியொழுகும் அமுதமானவனும், தேன் போன்றவனும், நன்கு கனிந்த கனியிடத்துப் பெறும் சுவையாகியவனும், தெய்வமணியானவனும், சிவமாகிய பதப்பொருளும் குற்றமில்லாத சான்றோர் மனத்தின்கண் விளங்கும் ஒளியானவனும், ஊனமுடையார் காணுவாறு மறைந்து நிற்பவனும், சிவஞான மலையாகியவனுமாகிய பெருமானை, முதுகுன்றத்தையடைந்து அருளொளி விளங்கக் கண்டு மகிழ்ந்தேன். எ.று.

மோன முனிவர்களின் ஞான யோகக் காட்சியிற் றோன்றும் ஞானகாசம் ஈண்டு வானம் என்று குறிக்கப்படுகிறது. ஆங்குத் தோன்றும் ஞான சந்திரனை, "அமுத சந்திரன்" எனவும், அதன்கண் ஊறியொழுகும் தேனை யுண்டு சிவானந்தம் எய்துவர் எனவும் யோக நூலார் கூறுதலால் "வான நடுவே வயங்குகின்ற மவுன மதியை மதியமுதை" என வுரைக்கின்றார். "கையறவிலாது நடுக்கண் புருவப் பூட்டு, கண்டு களி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு" (5258) எனப் பிறுண்டும் வள்ளற்பெருமான் குறிக்கின்றார். சிவ பதத்திற் பெற்று நுகரும் பேரின்பப் பொருளாதலின் "சிவபதம்" என்று கூறுகின்றார். ஊனம் - குற்றம். குற்றமில்லாத சான்றோர் உள்ளத் தொளிர்வது கூறவே, ஊனமுடையார் உள்ளத்தில் தோன்றானென்பது பெறப் படுதலின், "ஒளிக்கும் ஒரு பொருள்" என வுரைக்கின்றார். "ஞானந் திரளாய் நின்ற பெருமான்" (அண்ணு) என ஞானசம்பந்தர் விதத் துரைப்பதால், "ஞானமலை" என்று புகழ்கின்றார்.

இதனால், பழமலைப் பெருமானை மோன ஞான மலையாகக் கண்டு பரவுமாறு காணலாம். (2)

2476. தவள நிறத்து திருநீறுத் தாங்கு
மணித்தோள் தாணுவைநம்
குவளை விழித்தாய் ஒருபுறத்தே
குலவ விளங்கும் குருமணியைக்
கவள மதமா கரியுரிவைக்
களித்த மேனிக் கற்பகத்தைப்
பவள மலையைப் பழமலையிற்
பரவி ஏத்திக் கண்டேனே.

உரை : வெண்மை நிறமுடைய திருநீறு அணிந்த அழகிய தோள் களையுடைய தாணுவும், குவளை மலர் போன்ற கண்களையுடைய உமா

தேவி யாகிய நம் தாய் ஒரு பக்கத்தே இருக்க விளங்கும் குருபரனும், கவள முண்ணும் மதயானையின் தோலைப்போர்த்து மகிழும் திருமேனியை யுடைய கற்பகம் போல்பவனும், செம்மலையை ஒப்பவனுமாகிய சிவ பெருமானை முதுகுன்றத் திருக்கோயிலில் அருளொளி திகழ வீற்றிருப்பது கண்டு இன்புற்றேன். எ.று.

தவள நிறம் - வெண்மை நிறம். ஒளி திகழும் இயல்பிற்றுதலால் வெண்ணீற்றினைத் "தவள நிறத்துத் திருநீறு" எனப் புகழ்கின்றார். மணித்தோள் - அழகிய தோள். தாணு - சிவன் பெயர்களில் ஒன்று. நெருப்புத் தூணாய் ஒருகால் நின்றமைபற்றிச் சிவன் தாணு எனப்படு கின்றான் என்பர். "குவளைக் கண்ணி கூறன்" என மணிவாசகர் முதலியோர் உமாதேவியைப் பரவுபவாதலின், "குவளை விழித்தாய்" எனக் கூறுகின்றார். மாதொரு பாகனாய் இருந்து சான்றோர்க்குத் திருவருள் ஞானம் வழங்குவதுபற்றி, "தாய் ஒருபுறத்தே குலவ விளங்கும் குருமணி" எனப் போற்றுகின்றார். யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டு பொலியும் மாண்புடையனாதலால் "கரியுரிவைக் களித்த மேனிக் கற்பகம்" என இயம்புகின்றார். கற்பகம் - தன்னையடைந்தார்க்கு வேண்டுவது வழங்கும் தேவருலகத்து நன்மரம். கற்பகம் போல்வதால் "கற்பகம்" என்கின்றார். சிவந்த மலை போறலால் "பவளமலை" எனப்படுகின்றார். பழமலை - முதுகுன்றம். (3)

இதனால், இடப்பால் உமையம்மை விளங்க ஞானாசிரியனாய்க் காட்சி நல்கக் கண்டு இன்புற்றது கூறியவாறும்.

2477. **இளைத்த இடத்தில் உதவிஅன்பர்**
இடத்தே இருந்த ஏமவைப்பை
வளைத்த மதில்மூன் றெரித்தருளை
வளர்த்த கருணை வாரிதியைத்
திளைத்த யோகர் உளத்தோங்கித்
திகழுந் துரியா தீதமட்டுங்
கிளைத்த மலையைப் பழமலையிற்
கிளர்ந்து வயங்கக் கண்டேனே.

உரை: வறுமையால் மனம் சோர்ந்தபோது வேண்டுவன வுதவி உண்மையன்பர் கையகத்திருக்கும் சேமநிதியொப்பவனும், சூழ நின்ற மதில் மூன்றையும் எரித்தழித்துத் தனது திருவருளைச் செய்து பெருக்கிய கருணைக் கடலாகியவனும், சிவயோகத்தில் தோய்ந்து மகிழும் சான்றோர் மனத்தின்கண் ஓங்கும் துரியாதீத நிலையில் பெருகித் தோன்றும் மலை போல்பவனும் ஆகிய சிவபெருமானைத் திருமுதுகுன்றத்துத் திருக் கோயிலையடைந்து வீற்றிருந்தருளுவது கண்டு மகிழ்ந்தேன். எ.று.

வறுமையால் மனம் சோருங்கால் மேனியிளைத்துச் சுருங்குவதால், வறுமை நிலையை, "இளைத்த விடம்" எனவும், அந்நிலையில் எய்தும் உதவியே உண்மை யுதவியாகலின், "உதவி" எனவும், உதவும் உள்ள முடையார் இடத்தே யிருந்தாலன்றிப் பயனுடைய செல்வமாகாமையின், "அன்பரிடத்தே யிருந்த ஏமவைப்பு" எனவும் விளக்கிக் கூறுகின்றார். ஏமம் - பொன். ஏமவைப்பு - சேமநிதி. திரிபுரத்தசுரர் தமது நகர்க்குக்

காவலாக நிறுவிய மதில் மூன்றையும் "வளைத்த மதில் மூன்று" எனக் குறிக்கின்றார். உலகுயிர்கட்கு அருள் புரிவது கருதி மதில் மூன்றும் எரிக்கப்பட்டமையின், "மதில் மூன்றெரித்து அருளை வளர்த்த கருணை வாரிதி" எனப் புகழ்கின்றார். வாரிதி - கடல். சிவயோகத்தில் ஊறும் இன்பத்தைத் துய்க்கும் சான்றோர்களை, "திளைத்த யோகர்" எனச் சிறப்பிக்கின்றார். உளம் நிற்கும் சுழுத்தி நிலைக்கு அப்பாலாய துரியத் தாற்கு அப்பால் மூலாதாரத்தை இடமாகக் கொண்ட துரியா தீதத்திற் காட்சி தந்து இன்பம் செய்தல்பற்றி, சிவனை, "உளத்தோங்கித் திகழும் துரியா தீதமட்டும் கிளைத்த மலை" எனக் கூறுகின்றார்.

இதனால், அதீதத்தைப் புரியும் சிவயோகியர் உள்ளத்திற் காட்சி தந்து மகிழ்விக்கும் சிவத்தின் இயல்பு தெரிவித்தவாறும். (4)

2478. **மடந்தை மலையாண் மனமகிழ**
மருவும் பதியைப் பசுபதியை
அடர்ந்த வினையின் தொடக்கைஅறுத்
தருளும் அரசை அலைகடன்மேல்
கிடந்த பச்சைப் பெருமலைக்குக்
கேடில் அருள்தந் தகம்புறமும்
கடந்த மலையைப் பழமலைமேற்
கண்கள் களிக்கக் கண்டேனே.

உரை : மலைமகளாகிய மடந்தையின் மனம் களிக்கக் கூடியுறையும் கணவனும், பசுபதியும், உயிர்களைப் பிணித்து வருத்தும் வினைத் தொடர்பைப் போக்கி யருள் புரியும் அரசனும், அலை பொருந்திய கடலிற் பள்ளிகொள்கின்ற பச்சை மலை போன்ற திருமாலுக்குக் கெடாத திருவருள் செய்து அவர்க்கேயன்றி ஏனை யுயிர்களின் அகமும் புறமும் கடந்து விளங்கும் மலை போல்பவனுமாகிய சிவபெருமானைத் திருமுது குன்றின்கண் காணும் கண் களிக்கக் கண்டு இன்புற்றேன். எ.று.

மடந்தை - ஈண்டுப் பெண்கட்குரிய பருவப் பெயராகாது பெண் ணெனப் பொதுப்பட நின்றது. மலையாள் - மலையரசன் மகளாகிய உமாதேவி. பதி - தலைவன்; கணவன். பசுபதி - சிவபிரான்; பசுக்க ளாகிய ஆன்மாக்களின் தலைவனாதலால் பசுபதியென்று பெயர் கூறப்படு கிறது; பாசுபதரால் வழிபடப் பெறுவதுபற்றிப் பசுபதி எனச் சிவனுக்குப் பெயராயிற்றென்பதுமுண்டு. மிகப்பலவாய் உயிர்களைப் பிணித்துவிடாது தொடர்வனவாதலால், "அடர்ந்த வினை"யென்றும், வினைத்தொடர் பற்றலன்றி உயிர்கட்கு உய்தியின்மை கண்டு ஞானமளித்து அத் தொடர்பை யறுத்தருளும் அருளுடைமை விளங்க, "வினையின் தொடக்கை யறுத்தருளும் அரசு" என்றும் கூறுகின்றார். இக் கருத்துப் பற்றியே மணிவாசகர், சிவனை, "ஞானவாள் ஏந்தும் ஐயர்" (திருவா) எனப் பாராட்டுகின்றனர். அலையுடைமை கடற்கு இயல்பாதலால், பாற் கடலை "அலைகடல் எனக் குறிக்கின்றார். அலைகடல் மேல் கிடந்த பச்சைப் பெருமலை என்பது திருமாலுக்கு வெளிப்படை. ஆன்மாக்களின் அகமும் புறமும் கடந்து இன்ன தன்மையனென அறிய வொண்ணு

திருப்பதுபற்றி, ''அகம் புறமும் கடந்த மலை'' என்று சிவபிரானைப் பரவுகின்றார்.

இதனால், மனம் வாக்குகளைக் கடந்து பொருள்களின் உள்ளும் புறமும் கலந்துயர்ந்து ஓங்கும் சிவனது பெருநிலையை நினைந்தவாறும்.(5)

2479. துனியும் பிறவித் தொடுவழக்குஞ்
சோர்ந்து விடவுந் துரியவெளிக்
கினியும் பருக்குங் கிடையாத
இன்பம் அடைந்தே இருந்திடவும்
பனியுந் திமய மலைப்பச்சைப்
படர்ந்த பவளப் பருப்பதத்தைக்
கனியுஞ் சிலையுங் கலந்தஇடம்
எங்கே அங்கே கண்டேனே

உரை: வெறுப்புப் பொருந்திய பிறப்பின் தொடர் வரவு நீங்கிச் சோர்வு படவும், துரிய நிலைக்கு அப்பாலாய அதீத வெளியில் தேவர்கட்கும் கிடைக்காத பேரின்பத்தில் திளைக்கவும், பனி படர்ந்த இமயமலை மகளான பச்சைநிற உமாதேவி இடப்பாற் பொருந்திய பவளமலை போன்ற சிவபெருமானைப் பழமலைத் திருக்கோயிலிற் கண்டு இன்புற்றேன். எ.று.

துனி - வெறுப்பு. பல காலமாகப் பலவேறு வகையிற் பிறந்து வெறுத்தமை தோன்ற, ''துனியும் பிறவித் தொடு வழக்கு'' எனவும், மேலும் அதன்கட் சிக்கி வருந்தலாகாதென்ற கருத்துப் புலப்பட, ''தொடு வழக்குச் சோர்ந்துவிடவும்'' எனவும் கூறுகின்றார். தொடு வழக்கு - தொடர்ந்து வரும் வரவு. பிறவித் தொடர்பு பற்றுக்கோடின்றித் தானே கெட வேண்டும் என்பது கருத்து. உந்திக்கண் இருந்து நோக்கும் யோகக் காட்சி துரியம் என்றும், அதற்கப்பாலாய ஞானவெளி அதீதமென்றும் கூறப்படுவதால், அங்கே கண்டு பெறும் சிவப்பேரின்பத்தை, ''உம்பருக்கும் கிடையாத இன்ப'' மென்று இயம்புகின்றார். இமயம் என்பது பனிமலைக்குப் பெயராதலால் ''பனியுந்து இமயமலை'' என்றும், இமய வேந்தனுக்கு மகளாகிய உமையம்மையை, ''இமயமலைப் பச்சை'' யென்றும் உரைக்கின்றார். பச்சைநிறமேனியுடைமை பற்றி உமையைப் பச்சை என்று இசைக்கின்றார். உமை தழுவிய கூறு பொருந்திய செம்மேனிப் பெருமானாதலால், ''பச்சை படர்ந்த பவளப் பருப்பதம்'' என்று பராவுகின்றார். பருப்பதம் மலை. கனியும் சிலையும் கலந்த விடம் பழமலை. கனி - பழம். சிலை - மலை.

இதனால், பிறவி நீக்கம் எய்தவும், சிவப்பே றெய்தி இன்புறவும் பழமலையில் சிவபெருமானைக் கண்டமை தெரிவித்தவாறும். (6)

2480. கருணைக் கடலை அக்கடலிற்
கலந்த அமுதை அவ்வமுதத்
தருணச் சுவையை அச்சுவையிற்
சார்ந்த பயனைத் தனிச்சுகத்தை

வருணப் பவளப் பெருமலையை
மலையிற் பச்சை மருந்தொருபால்
பொருணச் சுறவே பழமலையிற்
பொருந்தி யோங்கக் கண்டேனே.

உரை : பேரருட் கடலாகியவனும், அக்கடலிற் பிறக்கும் அமுத மானவனும், அந்தச் சிவாமிர்தத்தின் புதுச்சுவை போல்பவனும், அந்தச் சுவை கண்டவிடத் தெய்தும் பயனாகியவனும், பயனை நுகரப் பிறக்கும் சுகானுபவமானவனும், நிறமுற்ற பவளப் பெருமலை நிகர்ப்பவனும், அம் மலையின்கண் தங்கும் பச்சிலை மருந்து ஒக்கும் பொருளாகிய உமாதேவி விரும்பியுறையும் சிவபெருமானைப் பழமலைக் கோயிலிற் கண்டு மகிழ்ந் தேன். எ.று. (7)

கருணைக்கடல் - அருட்பெருங்கடல். கடலிடத்தே பெறப்படுவது பற்றி, "கடலிற் கலந்த அமுது" என்கின்றார். தருணச்சுவை - கடைந் தெடுத்த காலத்து அப்பொழுதைச் சுவை. சுவை நுகரும்போது மெய்யிலும் மனத்திலும் உண்டாகும் தளிர்ப்புப் பயன் எனப்படுகிறது. அதனால் விளையும் இன்ப அனுபவம் சுகம் என்க. வருணம் - நிறம். மலைகள் பச்சிலை மருந்துகளையுடையவை என்பது கொண்டு, "பவள மலையிற் பச்சை மருந்து" எனக் குறிக்கின்றார். நச்சுறல் - விரும்புதல்.

இதனால் சிவானுபவத்தை விளக்கியவாறும்.

2431. என்னார் உயிரிற் கலந்துகலந்
தினிக்கும் கரும்பின் கட்டிதனைப்
பொன்னார் வேணிக் கொழுங்கனியைப்
புனிதர்உளத்தில் புகுங் களிப்பைக்
கன்னார் உரித்துப் பணிகொண்ட
கருணைப் பெருக்கைக் கலைத்தெளிவைப்
பன்னா கப்பூண் அணிமலையைப்
பழைய மலையிற் கண்டேனே.

உரை : என்னுடைய அரிய உயிரின்கட் கலந்து நின்று இன்புறுத்தும் கரும்பின் கட்டி போல்பவனும், பொன்னிறம் கொண்ட சடையையுடைய கொழுவிய கனி போன்றவனும், தூய சான்றோர் உள்ளத்திற் புகுந்து மகிழ்விப்பவனும், கல்லில் நார் உரிப்பதுபோலப் பணியாத தடிப்புற்ற என்னைப் பணிவித்துத் தொண்டு புரிவித்த அருட் பெருக்காயவனும் கலைகளால் உளதாகும் தெளிந்த ஞானமாகியவனும், விடம் தங்கிய பல்லையுடைய பாம்பைப் பூணாரமாக அணிந்தவனுமாகிய சிவபிரானை முதுகுன்றத் திருக்கோயிலிற் கண்டு மகிழ்ந்தேன். எ.று.

பெறற்கருமைபற்றி "ஆருயிர்" எனவும், உயிரிற் கலந்து உணர்வாய் நின்று இன்பம் தருவது கொண்டு, "கலந்து கலந்து இனிக்கும் கரும்பின் கட்டி" யெனவும் இயம்புகின்றார். கரும்பின் கட்டி - கருப்பஞ் சாற்றைக் காய்ச்சித் திரட்டிய கட்டி. பொன்னிறம் உடைமையால் சிவன் சடையை, "பொன்னார் வேணி" என்று கூறுகின்றார். வேணி - சடை. நன்கு பழுத்துச் சாறு நிறையக் கொண்ட பழம் என்றற்கு,

''கொழுங்கனி'' என்கின்ருர். மனம் தூயராகிய பெரியோர் திருவுள்ளமே கோயிலாகக்கொள்வதனல் ''புனிதர் உளத்திற் புகுங் களிப்பு'' என்று உரைக்கின்ருர். களிப்புத் தருவதைக் களிப்பு எனக் கூறுகின்ருர். ''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னுர்சடைப் புண்ணியன்'' என்ற அருளுரையை இக் கூற்று நினைப்பிப்பது காண்க. நாரில்லாத கல்லில் நார் உரிக்கும் செயலருமை புலப்படக் ''கல்நார் உரித்து'' என இயம்புகிருர். ''கன்னர் உரித்த கனியே போற்றி'' (போற்றி) என மணிவாசகர் பரவுவது நோக்குக. பணி புரிதற் கமையாத மனத்தடிப்புற்றிருந்த என்னைப் பணிவித்துத் தொண்டு செய்பவனுக்கினுய்; இதற்குக் காரணம் என்பாற் கொண்ட பெருங்கருணை என்பாராய், ''பணி கொண்ட கருணைப் பெருக்கு'' எனப் பகர்கின்ருர். கலைஞானத் தெளிவு சிவபோகம் விளைவிப்பதுபற்றி, சிவனை, ''கலைத் தெளிவு'' என்கின்ருர். விடம் தங்கிய பற்களையுடைமையின், விடப் பாம்பை, ''பன்னுகம்'' எனக் கூறுகின்ருர். பழைய மலை - பழமலை.

இதனுல், மலப்பிணியால் தடிப்பேறிச் சிவத்தொண்டு புரியும் பான்மையின்றியிருந்த தம்மைத் தொண்டனுக்கிய அரிய அருட்செயலை வியந்துரைத்தவாறு. (8)

2482. நல்ல மனத்தே தித்திக்க
நண்ணும் கனியை நலம்புரிந்தென்
அல்லல் அகற்றும் பெருவாழ்வை
அன்பால் இயன்ற அருமருந்தைச்
சொல்ல முடியாத் தனிச்சுகத்தைத்
துரிய நடுவே தோன்றுகின்ற
வல்ல மலையைப் பழமலையில்
வயங்கி யோங்கக் கண்டேனே.

உரை : நல்லவர்களின் மனத்தின்கண் இனிமை நல்கும் கனி போல்பவனும், எனக்கு நலம் அளித்துத் துன்பமகற்றிப் பெருவாழ்வு தருபவனும், அன்பைக் கொண்டு செய்யப்பட்ட அரிய மருந்தாகியவனும், வாயாற் சொல்லமுடியாத ஒப்பற்ற சுகப் பொருளாயவனும் துரிய நிலையில் நின்று செய்யும் தியானத்தின் நடுவே புலப்படுகின்ற எல்லாம் வல்ல மலை போல்பவனுமாகிய சிவபெருமானைத் திருமுதுகுன்றத்தில் விளங்கி யோங்கக் கண்டு மகிழ்ந்தேன். எ.று.

நன்னினைவும் நற்செயலுமுடைய நல்லவர்களின் மனம் என்றற்கு ''நல்லமனம்'' எனவும், அவர்களது உள்ளத்தே ஞானவின்பத் தேனைச் சொரிதல்பற்றி, ''நல்ல மனத்தே தித்திக்க நண்ணும் கனி'' எனவும் கூறுகின்ருர். நலம் - சிவஞானம். அல்லல் - மனக்கவலை. கவலையில்லாத வாழ்வினும் பெரிது வேறு இன்மைபற்றி, ''அல்ல லகற்றும் பெரு வாழ்வு'' எனப் புகல்கின்ருர். பெருவாழ்வு தருபவனைப் பெருவாழ்வு என்பது உபசாரம். அன்புருவாய்ப் பிறவி நோய் தீர்க்கும் அரிய பரம் பொருளாதலால், ''அன்பால் இயன்ற அருமருந்து'' என இசைக்கின்ருர். ''வாக்கிறந்த பூரணம்'' என வழங்குவதால், சிவபரம்பொருளைச் ''சொல்ல முடியாத் தனிச்சுகம்'' எனவும், கண் முதலிய புறக்கருவிகளை யடக்கி உந்திக்கண்ணிருந்து செய்யும் தியானம், துரிய தியானமாதலால்,

அதன்கண் இருந்து தியானிக்குமிடத்து ஆங்குக் காட்சிப்படும் சிவப் பேரொளி ஞானப்பெருமலையாய்த் தோன்றுவதால், ''துரிய நடுவே தோன்றுகின்ற வல்ல மலை'' எனவும் இயம்புகின்றார்; உதயகிரி, அத்தகிரி என்பதுபோல.

இதனால் நல்லோரது துரியத் தியானத்தில் தோன்றும் சிவபரம் பொருளை வழிபடும் திறத்தைத் தெரிவித்தவாறு. (9)

2483. **ஆதி நடுவு முடிவுமிலா**
அருளா னந்தப் பெருங்கடலை
ஓதி உணர்தற் கரியசிவ
யோகத் தெழுந்த ஒருசுகத்தைப்
பாதி யாகி ஒன்றாகிப்
படர்ந்த வடிவைப் பரம்பரத்தைச்
சோதி மலையைப் பழமலையிற்
சூழ்ந்து வணங்கிக் கண்டேனே.

உரை : முதலென்றும் நடுவென்றும் ஈறென்றும் காண்டற்கில்லாத பேரருள் இன்பக் கடலாகியவனும், நூல்களால் ஓதியும் உள்ளத்தால் உணர்தற்கும் அரியதாகிய சிவயோகத்தில் நுகரப்படுவதுமாகிய ஒரு தனிப்பட்ட சுகப் பொருளானவனும், பாதியும் முழுதுமாகிய உருக் கொண்டு விளங்கும் மேன் மேலாகிய பரம்பொருளாம் அருட்சோதியாகிய மலைபோல்பவனுமான சிவபிரானைத் திருமுதுகுன்றத்தில் நினைந்து கண்டு வணங்கி இன்புற்றேன். எ.று.

தானல்லாத பிற பொருள் அனைத்துக்கும் ஆதியும் அந்தமுமாய்த் தனக்கு ஒரு முதலும் முடிவுமில்லாத முதற் பொருளாதலால் சிவபெருமானை, ''ஆதியும் நடுவும் முடிவுமிலா'' என்றும், எல்லையில்லாத திருவருளே உருவாய் உயிர்கட்கு வற்றாத இன்பம் நல்குவதுபற்றி, ''அருளானந்தப் பெருங்கடல்'' என்றும் கூறுகின்றார். ''ஆதியந்த மாயினாய் ஆலவாயி லண்ணலே'' (ஆலவாய்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. ஓதி வந்த வாய்மையால் உணர்ந்துரைக்கலாகுமே'' என அவரே அத்திருப்பாட்டில் குறித்துரைப்பதுபற்றி, ''ஓதியுணர்தற் கரிய ஒரு சுகம்'' என வுரைக்கின்றார். கருவி கரணங்களின் நீங்கி அறிவுருவாய் ஒன்றும் சிவயோக மொன்றினாலே நுகரப்படும் நீர்மை புலப்பட ''சிவயோகத் தெழுந்த ஒருசுகம்'' என வுரைக்கின்றார். ''பொறிப் புலன்களைப் போக்கறுத்துள்ளத்தை நெறிப்படுத்த நினைப்பவர் சிந்தையுள் அறிப்புறும் அமுதாயவன்''(ஏகம்பம்) எனத் திருநாவுக்கரசர். சிவயோக நுகர்ச்சியைத் தெரிவிப்பது, ஈண்டு நினைவு கூரத்தக்கது. மாதொரு பாகனாதல்பற்றி, ''பாதி யாகி'' எனவும், அம்மையைத் தனக்குள் ஒடுக்கித் தான் தனிமுதலாய் விளங்குமிடத்து முழுமுதலாய்த் தோன்றுமாறு புலப்பட, ''ஒன்றாகிப் படர்ந்த வடிவு'' எனவும், அது தானும் மேன்மேற் பரந்து ஓங்குதல் தோன்றப் ''பரம்பரம்'' எனவும் பகர்கின்றார். ''சோதி முழுமுதலாய் நின்றான்'' எனச் சான்றோர் கூறுதலால் ''சோதிமலை'' எனத் துதிக்கின்றார்.

இதனால், யோகியர் யோகக் காட்சியில் தோன்றும் சிவபரம்பரத் தைக் கண்டு களித்தமை கூறியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

14. பழமலை கிழமலை

திருமுதுகுன்றம் பழமையும் சிவனுக்கே உரிமையும் உடையததா, யிருக்க உலகவர் பழமலை யெனவும் கிழமலை யெனவும் கூறுவதை வியந்து மகிழ்ந்து பரவுவதாம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2484. ஆதிமலை அனாதிமலை அன்புமலை எங்கும்
ஆனமலை ஞானமலை ஆனந்த மலைவான்
ஜோதிமலை துரியமலை துரியமுடிக் கப்பால்
தோன்றுமலை தோன்றாத சூதான மலைவெண்
பூதிமலை சுத்தஅனு பூதிமலை எல்லாம்
பூத்தமலை வல்லியெனப் புகழுமலை தனையோர்
பாதிமலை முத்தரெலாம் பற்றுமலை என்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே.

உரை : மலைகட்கெல்லாம் ஆதியாய மலை, அனாதிமலை, அன்புமலை எங்கும் பரந்து விளங்கும் மலை, ஞானமாகிய மலை, இன்ப மலை, பெருமை சான்ற சோதி மலை, துரிய நிலையமான மலை, துரிய நிலையின் உச்சிக் கப்பால் விளங்கித் தோன்றும் மலை, கருவிக் கரணங்களாற் காணப்படாத சூது பொருந்திய மலை, திருநீற்றுமலை, சுத்தாவத்தைக் கண்ணின்று பெறும் அனுபவ மலை, எல்லாவற்றையும் படைத்தளிக்கும் மலையரசன் மகளாய கொடியென்று புகழப்படும் மலையைத் திருமேனியிற் பாதியாய வுடைய மலை, முத்தான்மாக்கள் அடையும் மலை எனப்படும் பழமலையை முதுமலையாக உலகினர் கூறுவது ஏனோ? வியப்பாக வுளது. எ.று.

ஆதியென வொன்றுமில்லாதது அனாதி. சிவபரம்பொருளின் உருவாய மலையென்ற கருத்துப்பட மொழிகின்றாராகலின், ''ஆதிமலை அனாதிமலை'' எனவும், சிவமும் அன்பும் ஒன்றாதலால், அன்புமலை யெனவும், சிவம் எங்கும் எல்லாமாய் இருப்பது கொண்டு, ''எங்கும் ஆன மலை'' எனவும், ஞானமாய் இன்பமாய் அருளொளியாய் இருக்கும் இயல்பு பற்றி, ''ஞானமலை ஆனந்தமலை, வான் சோதி மலை'' எனவும் கூறு கின்றார். வான் - பெருமை. துரிய மலை, உடம்பின்கண் உந்தியில் துரியாவத்தையில் ஆன்மா அறிவுருவாய் நின்று தியானிக்கும்போது மிகவும் ஓங்கிக் காட்சிப்படுதலால் சிவத்தைத் ''துரியமலை'' என்றும், துரியத்துக்கு அப்பாலான துரியாதீதத்திலும் தோன்றி யின்புறுத்தலால் ''துரிய முடிக்கப்பால் தோன்றும் மலை'' என்றும், ஏனைச் சாக்கிரம் சொப்பனம் என்ற நிலைகளில் கருவி கரணங்களோடு கூடிக் காணு மிடத்துப் புலப்படாமைபற்றி, ''தோன்றாத சூதான மலை'' என்றும்

இயம்புகின்றார். காட்டலும் காட்டாமையும் உடையதாதல் சூது. வெண்பூதி - வெண்மையான திருநீறு. திருநீறு திருவருட் செல்வத்தின் வடிவமாதல் கொண்டு வடமொழியிற் பூதி எனவும், விபூதி யெனவும் வழங்குகிறது. கேவல சகலங்களிலிருந்து நீங்கிச் சிவானந்தத்தை நுகரும் நிலை "சுத்த அனுபூதி"யாகும். அனுபூதி - அனுபவம். எல்லாம் பூத்த மலைவல்லி - எல்லா உலகங்களையும் படைத்தளிக்கும் உமாதேவியாகிய மலைமகள். மகளிரைக் கொடியெனக் கூறும் மரபுபற்றி, மலைமகளை மலைவல்லி என்று குறிக்கின்றார். வல்லி - கொடி; மலைமகளாதலால் மலை என மகிழ்ந்துரைக்கின்றார். முத்தர் - சிவஞான மிக்க சீவன் முத்தர்கள். முத்திப் பேற்றுக்குச் சமைந்த அப் பெருமக்கள் அதனையல்லது பிறிது நினையாத சான்றோராதல் விளங்க, "முத்தரெலாம் பற்றும் மலை" என்று பரவுகின்றார். இவ்வாற்றால் சிவப் பழம் கனியும் மலையாவது கண்டும், முதுமைப் பொருளும் உரிமைப் பொருளும் தோன்றக் கிழமலை எனக் கிளந்து கூறுவது என்னையோ என வியக்கின்றாராதலால், "பழமலையை உலகு கிழமலையாய்ப் பகருவது என்" எனவுரைக்கின்றார்.

இதனால் முதுகுன்றத்தைப் பழமலை யென்னுமல் கிழமலை யென உலகு கூறுவதை மறுப்பது போன்று பராவியவாறும். (1)

2485. சாக்கியனார் எறிந்தசிலை சகித்தமலை சித்த
சாந்தர் உளஞ் சார்ந்தோங்கித் தனித்தமலை சபையில்
தூக்கியகா லொடுவிளங்கும் தூயமலை வேதம்
சொன்னமலை சொல்லிறந்த துரியநடு மலைவான்
ஆக்கியளித் தழிக்குமலை அழியாத மலைநல்
அன்பருக்கின் பந்தருமோர் அற்புதப்பொன் மலைநற்
பாக்கியங்க ளெல்லாமும் பழுத்தமலை என்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே.

உரை: முன்னாளில் சாக்கிய நாயனார் மலர் எடுக்காமல் அன்பால் மாறாக எறிந்த கல்லையும் மலராக ஏற்று மகிழ்ந்த சிவனாகிய மலை சலிப்பதின்றிச் சாந்தமே குடிகொண்ட மேலோர் திருவுள்ளத்தை யடைந்து விளங்கும் ஒப்பற்ற மலை; அம்பலத்தின்கண் தூக்கிய சேவடியுடன் திகழும் தூயமலை; வேதங்கள் ஓதுகின்ற மலை; சொல்லின் எல்லைக்கு அப்பாலான துரியக் காட்சியில் தோன்றும் மலை; வானுலக முதலாகிய எல்லா வுலகங்களையும் படைத்து அளித்து அழிக்கும் முத்தொழிலையும் செய்யும் மலை; என்றும் அழியாமல் உள்ள மலை; தூய அன்பர்களுக்கு வற்றாத இன்பம் தரும் அற்புதமான பொன் மலை; நற் செல்வ வகையனைத்தும் தன்கண் கொண்ட மலை எனப்படும் பழமலையைக் கிழமலை யென்று உலகோர் கூறுவது ஏனோ? எ.று.

நாளும் சிவலிங்கம் கண்டல்லது உணவு கொள்ளாத சாக்கிய நாயனார், ஒருநாள் ஒருபால் சிவலிங்கம் கண்டு உளம் மகிழ்ந்து உணர் விழந்து எதிரே கிடந்த கல்லையெடுத்து மலரிடும் வழக்கப்படி அதனை யெறிந்து வழிபட்டு அதனையே பின்னும் தொடர்ந்து செய்து உய்தி பெற்றார். அதனை நினைக்கின்ற வள்ளற் பெருமான், சாக்கியர் எறிந்த கல்லையும் ஏற்றருளிய சிவனது அருணலத்தை வியந்து குறிக்கின்றாராதலின், "சாக்கியனார் எறிந்த சிலை சகித்த மலை" என்று கூறுகின்றார்.

சிலை - கல். சகித்தல் - பொறுத்துக்கொள்ளுதல். சித்த சாந்தர் - சாந்தமே குடி கொண்ட மனத்தையுடைய சான்றோர். சாந்தம் - எவர்பாலும் விருப்பு வெறுப்புக்கொள்ளாத மனநிலை. அவர்கள் திருவுள்ளத்தையே கோயிலாகக் கொள்பவன் சிவபெருமானாதலால், ''சித்த சாந்தர் உளம் சார்ந்தோங்கித் தனித்த மலை'' எனப் புகழ்கின்றார். ஒரு காலையூன்றி யொரு காலைத் தூக்கி அம்பலத்தில் சிவன் நடம் புரிவதால், ''சபையில் தூக்கிய காலொடு விளங்கும் தூய மலை'' என வுரைக்கின்றார். துரியத் தானத்தை ஆன்மா அடையும்போது கருவி கரணங்களின் நீங்கித் தூய அறிவுருவாய் நின்று சிவத்தை நோக்குதலால், ''சொல்லிறந்த துரிய நடுமலை'' எனச் சொல்லுகின்றார். மும்மூர்த்தியாய் உலகங்களைப் படைத் தளித்து அழித்தலால், ''வானாக்கி அளித்தழிக்கும் மலை'' என்கின்றார். வான் - மேலுலகம். மேன்மைபற்றி ''வான்'' கூறியதனால், ஏனை நடுவும் கீழுமாகிய மூவுலகும் கொள்ளப்பட்டன. தூய மெய்யன்பர்களின் சிந்தையில் தேனூற நிற்றல்பற்றி, ''நல்லன்பருக்கு இன்பம் தரும் ஓர் அற்புதப் பொன்மலை'' என்று புகழ்கின்றார். பொன்போலும் மேனியன் என்பதுபற்றிப் ''பொன்மலை'' எனப் புகல்கின்றார். ''பொன் செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்'' (முதுகுன்) என நம்பியாரூரர் பழமலைப் பெருமானைப் பாடுதல் காண்க. பாக்கியம் - நன்மைகள்.

இதனாலும் பாக்கியம் பழுத்த பழமலையைக் கிழமலையென்று கருதுமாறு உலகவர் கூறுவது பொருந்தாதென்னும் பொருள்பட வியந்து கூறியவாறும். (2)

நேரிசை வெண்பா

2436. **ஆறு விளங்க அணிகிளர்தேர் ஊர்ந்தஉலாப்**
பேறு விளங்கஉளம் பெற்றதுமன்—கூறுகின்ற
ஒன்றிரண்டு தாறுபுடை ஓங்கும் பழமலையார்
மின்திரண்டு நின்றசடை மேல்.

உரை : ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு நிலத்தாறுகள் பக்கத்தே கொண்டுயர்ந்த முதுகுன்றமுடைய பெருமானது மின்னல் திரண்டு நிற்பதுபோலும் சடைமுடிமேல் கங்கையாறு விளங்க அழகிய தேர்மேல் ஊர்ந்துவரும் திருவுலாக் காட்சி பெறும் இனிய நலத்தை எனது மனக்கண் கண்டு வந்தது, காண். எ.று.

நிலவரையில் படிமேற் படியாய் உயர்ந்திருக்கும் பகுதி ''நிலத்தாறு'' எனப்படும். காய்களை நிரலே கொண்டு மேன்மேற் படிப்படியாய் நிற்கும் வாழைக்குலையைத் தாறு என்பதுபோல என அறிக. இதுபற்றியே நச்சினார்க்கினியரும் நெற்பயிரைத் ''தாறுபடு நெல்'' (சீவக. 53. உரை) என்கின்றனர். வானத்து மின்னற் கொடிகள் தம்மில் திரண்டதுபோல் தோன்றுதலால் சிவன் சடையை ''மின் திரண்டு நின்ற சடை'' எனவும், அதன்மேல் கங்கையாறு விளங்கத் திருவீதியில் உலாப்போந்த காட்சியைக் கண்டு மனம் மகிழ்ந்து பாடுதல் தோன்ற, ''தேரூர்ந்த உலாப் பேறு விளங்க உளம் பெற்றது'' எனவும் ஓதுகின்றார். உலாப் பேறு - திருவுலாக் காணும் பேறு, மன் - அசைநிலை.

இதனால், திருமுதுகுன்றில் பழமலைநாதர் திருவீதியில் திருவுலா வந்த காட்சியைப் புகழ்ந்து மகிழ்ந்தவாறும். (3)

திருச்சிற்றம்பலம்

15. திருவதிகைப் பெரியநாயகியார் தோத்திரம்

திருமுதுகுன்றம் சென்று பழமலைநாதன் திருத்தேர் விழாக் கண்டு மகிழ்ந்து போந்த வள்ளற் பெருமான் தாம் உறையும் கருங்குழிக்கு வடக்கில் கடிலவாற்றின் வடகரையில் உள்ள திருவதிகை யடைந்து அங்கே கோயில் கொண்டருளும் வீரட்டேசுரரை வழிபடுகின்றார். திருவதிகையில் சிவபரம்பொருளின் பங்கி லுறையும் தேவிக்குப் பெரிய நாயகி என்பது திருப்பெயராதல் அறிந்து பெரிதும் உவகை கொண்டு இச் சொன்மாலை தொடுத்துப் பரவுகின்றார்.

இதன்கண் பெரியநாயகியம்மையின் பெருமைகளை இனிய பல புகழ் மொழிகளாற் போற்றி அவளது திருவருளை வேண்டுகின்றார்.

2487. உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டற்கே
பிரிய நாயகி பேரருள் நாயகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம்.

கலிவிருத்தம்

உரை : உலகிற்கு உரிமையுடைய நாயகியும் உயர்ந்த திருவதிகைத் திருக்கோயிலில் எழுந்தருளும் துரிய நாயகியும், தூய்மை யுருவான வீரட்டேசுரருடைய அன்பு நாயகியும், உலகுயிர்கட்குத் திருவருள் வழங்கும் நாயகியுமான பெரிய நாயகியம்மையின் பெருந்தன்மையை எடுத்துரைப்போம். எ.று.

உலகுகள் பலவற்றையும் பெற்றளிக்கும் பெருமாட்டியாதலால், ''உரிய நாயகி'' எனவும், திரிபுரத்தசுரர்களை வென்ற வீரட்டானமாயும், திருநாவுக்கரசரை ஆட்கொண்ட திருப்பதியாயும் புகழ் மிக்கதுபற்றி, ''ஓங்கு அதிகைப் பதி'' எனவும் ஏத்துகின்றார். சிவயோகத்தில் துரிய நிலையில் சிவத்தோடு பிரிவின்றிக் காட்சி வழங்கும் அருமைபற்றித் ''துரிய நாயகி'' என்று புகழ்கின்றார். உலகுயிர் வாழ்க்கைக்கு கலையாய்த் தோன்றித் துன்பம் செய்து திரிந்த திரிபுரத்தசுரரை யழித்துத் தூய்மை விளைத்த செய்தி நினைந்து, சிவபெருமானைத் ''தூய வீரட்டன்'' எனக் குறிக்கின்றார். வீரம் புரிந்த தானம் வீரத்தானமாகிப் பின் வீரட்டனாமென மருவிற்று; வீரட்டானமும் பின்னர் வீரட்டம் எனக் குறுகிற்று. பெரியநாயகியாரைத் தனது திருமேனியின் ஒரு கூறாய்ப் பிரியாவகையிற் கொண்டமை விளங்க, ''வீரட்டற்குப் பிரிய நாயகி'' எனப் புகல்கின்றார். பிரியம் - அன்பு. சிவபிரான் வழங்கும் திருவருள் நலமனைத்துக்கும் அம்மையே உரிமையும் தலைமையுமுடையவளாதலின், ''பேரருள் நாயகி'' என்றும், அவ்வாற்றால் பெருமையனைத்தையும் உடைமை

பற்றிப் ''பெரிய நாயகி'' என்றும் பராவுகின்ருர். இனி வரும் பாட்டுக்களில் அம்மையின் அருட்டன்மையே சொற்ருெறும் துளும்பி நிற்றலால், ''பெற்றியைப் பேசுவோம்'' என்று கூறுகின்ருர்.

இதனுல், நுதலிப் புகுதல் என்னும் உத்திபற்றிப் பெரியநாயகியின் பெருமைகளைச் சுருங்கக் காட்டியவாறும். (1)

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2488. **உலகந் தழைக்க உயிர்தழைக்க**
உணர்வு தழைக்க ஒளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடியே
உள்ளத் தினிக்கும் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே
செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கும் மலைப்பெண் மணியேமா
தேவி இச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியை இன்பம்
வழங்கும் ஆதி பரைஎன்ன
வயங்கும் ஒருபேர் அருளேஎம்
மதியை விளக்கும் மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை
ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண்
அரசே என்னை ஆண்டருளே.

உரை: உலகுயிர்கள் தழைக்கவும், உயிர்கட்கு உணர்வும் உள்ளொளியும் பெருகவும், உருக்கொண்டு உயர்ந்த பசுமையான கொடி போல்பவளும், நினைப்பவர் மனத்தின்கண் இனிமை நல்கும் தெளிந்த அமுது போல்பவளும், திலகமிட்ட நெற்றியை யுடையவளாய் இனிமைப் பண்பால் கரும்பு போன்றவளும், செல்வம் தரும் திருவாயும், கலையறிவு கொடுக்கும் குருவாயும் சிறப்புறும் மலையரசன் மகளாகிய பெண்மணி யவளாளும், மாபெருந் தேவியாய் விளங்குபவளும், இச்சை ஞானம் வலம் தரும் கிரியை என்னும் சத்தியாய் இன்பமருளும் ஆதிபரை என்ற ஒரு திருப்பெயர் கொண்டு விளங்கும் ஒப்பற்ற பேரருளுருவாகியவளும், எங்கள் அறிவு விளங்கச் செய்யும் மணி விளக்காகியவளும், நெல் முதலிய உணவுப் பொருள் பெருக விளையும் திருவதிகையில் எழுந்தருளும் தலைவ ராகிய சிவபெருமான் விரும்பும் உண்மை யுறவானவளுமான அருமை வாய்ந்த பெரியநாயகி யென்னும் பெண்ணரசியே, எளிய என்னை ஆண்டருள்க. எ.று.

அகளமா யின்றிப் பெரியநாயகி யெனச் சகளீகரித்தமையால், உலகங்களும் அவற்றில் வாழும் உயிர்களும் வளமுற்று, உணர்வாலும் ஒழுக்கம் பயக்கும் ஒளியாலும் ஓங்குகின்றன என்றற்கு ''உலகம் தழைக்க உயிர் தழைக்க உணர்வு தழைக்க ஒளி தழைக்க உருவம் தழைத்த பசுங் கொடியே'' எனவுரைக்கின்ருர். நல்லுணர்வால் நினைவு சொற்செயல்கள்

புகழ் பெறுதலால் உணர்வையும் ஒளியையும் இணைத்து மொழிகின்றார். திருமேனி பச்சை நிறமுடைமையால் ''பசுங்கொடி'' யெனப் பகர்கின்றார். நினைப்பவர் நினைக்குந் தோறும் இனிமை தருவது புலப்பட, ''உள்ளத் தினிக்கும் தெள்ளமுதே'' என உரைக்கின்றார். மங்கல மரபு பற்றி, திலக மிட்ட சிறப்பு நோக்கி, ''திலகம் தழைத்த நுதல்'' எனப்படுகிறது. பண்பு பற்றிய உருவக வாய்பாட்டால் ''கரும்பு'' எனக் கூறுகின்றார். செல்வம் நல்கும் திருமகளாகவும், கலை ஞானம் நல்கும் கலைமகளாகவும் உயிர்கட்கு அருளுவதால் ''செல்வத் திருவே கலைக் குருவே சிறக்கும் மலைப்பெண் மணியே'' எனப் புகழ்கின்றார். மாதேவனை மணந்தமையால் ''மாதேவி'' எனப்படுகிறாள். இச்சை ஞானம் கிரியை என்ற மூவகைச் சத்திகளை இறைவற்கும் உயிர்கட்டும் தந்து இன்புறுவிக்கும் பராசக்தி யென்றற்கு, ''இச்சை ஞான மொடு வுலகம் தழைக்க கிரியை யின்பம் வழங்கும் ஆதி பரை யென வழங்கும் ஒரு பேரருள்'' என்று கூறுகின்றார். வலம் - வலகம் என்று வந்தது. வலம் - வெற்றி; வன்மையுமாம். பரை - பரனுக்குப் பெண்பாற்பெயர். தேவர்கட்கும் மக்களுக்கும் இன்றியமையாத சக்திகளை யளிக்கும் அருட் சக்தியாதலால், ஆதிபரை எனவும் ஒரு பேரருள் எனவும் கூறுகின்றார். ஞானப் பேற்றுக்குச் சமைந்த நன் மக்களின் அறிவினுள் அமர்ந்து அருளொளி தந்து ஞானம் பெருக உதவுவது கொண்டு ''மதியை விளக்கும் மணி விளக்கே'' எனக் குறிக் கின்றார். அறிவினுள் திரோதாயி என்னும் சத்தியாய்க் கலந்து மறைத்தும் அருட் சத்தியாய் ஞானம் விளங்குவித்தும் ஒழுகுவது பற்றி இங்ஙனம் உரைக்கின்றார் எனினும் அமையும். அலகு - நெல்வளம். ''அலகுடை நீழலவர்'' (குறள்) எனச் சான்றோர் உரைப்பது காண்க. ஈற்றில் அம்முச் சாரியை பெற்று அலகம் என வந்தது; உலகு உலகம் என வருதல் போல. பிரியா வுற வென்றற்கு மெய்யுறவு என்கின்றார். பெரியநாயகி, பெருமை யெல்லாம் தனக்கே யுடைய உலக முதல்வி. ஆணுலகிற்குச் சிவனைப் போலப் பெண்ணுலகிற் கெல்லாம் அருளரசி என்பது தோன்றப் ''பெரிய நாயகிப் பெண்ணரசே'' எனப் புகழ்கின்றார்.

இதனாற் பெரியநாயகி யம்மையின் பெருமைக் கூறுகள் பலவும் எடுத்தோதிப் பரவியவாறும். (1)

2489. தன்னேர் அறியாப் பரவெளியில்
சத்தாம் சுத்த அநுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்கும்
தாயே எமக்குத் தனித்தாயே
மின்னே மின்னேர் இடைப்பிடியே
விளங்கும் இதய மலர்அனமே
வேதம் புகலும் பசுங்கிளியே
விமலக் குயிலே இளமயிலே
பொன்னே எல்லாம் வல்லதிரி
புரையே பரையே பூரணமே
புனித மான புண்ணியமே
பொற்பே கற்ப கப்பூவே

அன்னே முன்னே என்னேயத்
தமர்ந்த அதிகை அருட்சிவையே
அரிய பெரிய நாயகிப்பெண்
அரசே என்னை ஆண்டருளே.

உரை : தானே தனக்கு நிகரன்றி வேறென்றுமில்லாத பரவெளியில் நிலைத்த சத்தாகிய சுத்த சிவானுபவத்தைப் பெறுகின்ற சான்றோர்க்கெல்லாம் தாயாகுபவளும், சகலராகிய எங்கட்குத் தனி நிலையன்னையாகுபவளும், மின்போல் ஒளிர்பவளும், மின்னற் கொடி போன்ற இடையும் பிடியானை போன்ற நடையும் உடையவளும், அன்புற்று விளங்கும் மனமாகிய தாமரையில் எழுந்தருளும் அன்னம் போன்றவளும், வேதங்களையோதும் கிளி போன்றவளும், நின்மலமான குயில் ஒப்பவளும், சாயலால் இளமயிலை ஒப்பவளும், அருமையால் பொன்னை நிகர்ப்பவளும், எல்லாம் செயல் வல்ல திரிபுரையும், பரையும், நிறைவேயுருவாயவளும், தூயதாகிய புண்ணிய வடிவினளும், அழகேயுருவாகியவளும், கற்பக மரத்தின் மலர் போன்றவளும், உலகுக்கு அன்னையாகுபவளும் இளமையிலே என்னுடைய அன்பில் அமர்ந்த திருவதிகைப் பதியில் எழுந்தருளும் அருட் சத்தியாகியவளும் ஆகிய அருமையையுடைய பெரியநாயகி யெனப்படும் பெண்ணரசியே எளிய என்னை ஆண்டு கொண்டு அருள் புரிக. எ.று.

சுத்த தத்துவத்தின் மத்தகத்துறையும் நாத தத்துவத்துக்கு அப்பால் உளதாய், பரசிவம் திகழும் சிவாகாச மெனப்படுவது பரவெளி; அதனின் வேறென்றும் இன்மைபற்றி, ''தன்னேர் அறியாப் பரவெளி'' எனக் கூறுகின்றார். அது சத்தாய் நித்தமாய் இலங்குவதால் ''சத்தாம்'' என்றும், மலம் அகன்ற சுத்தாவத்தைக் கண் சிவபோகத்தை நுகரும் நிலை, ''சுத்தானுபவம்'' என்றும், அதனைப் பெறுபவர் முத்தான்மாக்களாதலால், அவர்களைச் ''சுத்தானுபவத்தைச் சார்ந்து நின்ற பெரியவர்'' என்றும், அவர்களைச் சுத்த வனுபோகத்தைத் துய்ப்பித்தல்பற்றிப் பெரியநாயகியாகிய சிவசத்தியைப் ''பெரியவர்க்கும் தாயே'' என்றும் பரவுகின்றார். எமக்கு என்றது சகலாவற்றைக் கண் இருக்கும் ஆன்மாக்களாகிய எங்கட்கு என்பதாம். சகலர்க்கு வேண்டிய உடல் கருவி கரணம் உலகு போகங்களாகியவற்றைப் படைத்தளித்தலால், ''எமக்குத் தனித்தாயே'' என்கின்றார். பிறந்திறந்துழலும் சகலர்க்குப் பிறவிதோறும் இவற்றைச் சந்திப்பின்றி நல்குவது கொண்டு ''தனித்தாய்'' எனச் சிறப்பிக்கின்றார். அருள் ஒளியாய் ஒளிர்தல் தோன்ற ''மின்னே'' எனப்படுகின்றாள். ''மின்னேர் இடை'' யென்றமையின் பிடியுவமம் நடைக்காயிற்று. அன்னப் பறவை தாமரை மலரை இடமாகக்கொள்வது போல, பெரிய நாயகியாகிய அன்னம் மனத்தாமரை மலரின்கண் எழுந்தருளுவது என்றற்கு, ''இதய மலரணமே'' எனக் கூறுகின்றார். ஓதுவார் ஓதக் கேட்டு ஓதும் கிளி போலாது வேதத்தைப் பிறர் கேட்டு ஓத ஓதும் உயர்வு தோன்ற ''வேதம் புகலும் பசுங்கிளியே'' என விளம்புகின்றார். ''பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு, வேரிமலி பொழிற் கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும் மிழலையாமே'' (வீழிமிழலை) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. மண்ணகத்துக் கருங்குயிலின் வேறுபடுத்தற்கு ''விமலக் குயில்'' எனச்

சிறப்பிக்கின்ருர். மாரு இளமையுடைமைபற்றி ''இள மயிலே'' என எடுத்தோதுகின்ருர். பொன்னே என்றது அருமை புலப்படுத்தற்கு. திரிபுரம் எரித்த நாயகியாதலால் ''திரிபுரை'' எனக் கூறுகின்ருர். பரை - மேலானவள். பதி புண்ணியத்தைக் குறித்தற்குப் ''புனிதமான புண்ணியமே'' எனவும், பொற்பே யுருவாயவள் என்றற்குப் ''பொற்பே'' எனவும் புகல்கின்ருர். கற்பகம் - தேவருலகத்துப் பூமரம். ''கற்பகத்தின் பூங்கொம்போ'' (தடுத்தாட்) எனச் சேக்கிழாரும் வழங்குவர். இளமைக் காலத்தேயே சிவத்தின்பாற் செறிந்த அன்புற்றவராதலின் ''முன்னே என் நேயத் தமர்ந்த அருட்சிவையே'' எனப் புகழ்கின்ருர். சிவை - சிவனுக்குப் பெண்பாற் பெயர்.

இதனுல் பெரியநாயகி யம்மை திருவருட் சத்தியாய்ச் சுத்தான் மாக்கட்குச் சிவபோகம் துய்ப்பிக்கும் திறம் கூறியவாரும். 3

திருச்சிற்றம்பலம்

16. திருவண்ணுமலைப் பதிகம்

திருவதிகை வீரட்டேசுரரையும் பெரியநாயகியாரையும் வழிபட்டு வந்த வள்ளற் பெருமான் தென்பெண்ணை வடகரை வழியாகத் திருவண்ணுமலை செல்ல விழைகின்ருர். திருவண்ணுமலை யடைதற்கும் அங்கே கோயில் கொண்டருளும் பெருமானது திருவருள் இன்றியமையால் அதனை நினைந்து இத் திருப்பதிகத்தைப் பாடுகின்ருர். பாட்டுத்தோறும் திருவண்ணுமலையடைந்து பெண்ணுகிய பெருமானைக் கண்டு வணங்கும் பேற்றினை அருளுமாறு வேண்டுவதைக் காணலாம்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2490, **வளங்கிளர் சடையும் விளங்கிய இதழி**
மாலையும் மால்அயன் வழுத்தும்
குளங்கிளர் நுதலும் களங்கினர் மணியும்
குலவுதிண் புயமும்அம் புயத்தின்
தளங்கிளர் பதமும் இளங்கதிர் வடிவும்
தழைக்க நீ இருத்தல்கண் டுவத்தல்
உளங்கினர் அமுதே துளங்குநெஞ் சகனேன்
உற்றரு ணையில்பெற அருளே.

உரை : வளம் பொருந்திய சடையும் விளக்கமுடைய கொன்றை மாலையும் திருமாலும் பிரமனும் வணங்கி வாழ்த்தும் கண் பொருந்திய நெற்றியும், கழுத்தின் நீலமணி போன்ற நிறமும், திண்மை பொருந்திய தோளும் தாமரை மலரின் இதழ் போன்ற திருவடியும், இளஞ்சூரியனது ஒளி பொருந்திய மேனியும் சிறந்தோங்க நீ வீற்றிருப்பதைக் கண்டு மகிழ்தற்கு, என் மனத்தின்கண் ஊக்கம் கிளர்விக்கும் அமுது போன்ற பெருமானே, கலங்குகின்ற நெஞ்சினையுடைய யான் திருவண்ணுமலை வருதற்கு அருள் புரிக. எ.று.

கங்கையாறும் பிறைத் திங்களும் தாங்குதலால் சிவபெருமான் சடையை ''விளங்கிளர் சடை'' எனச் சிறப்பிக்கின்ருர். பொன்னிறங் கொண்டு பொலிதலால் ''விளங்கிய இதழி மாலை'' என விளம்புகின்ருர். குளம்-நெற்றி; ஈண்டு ஆகு பெயராய் நெற்றி விழிக் காயிற்று. நஞ்சுண்டு நீலமணியின் நிறமும் ஒளியும் கொண்டு நிகழ்தலால் திருக் கழுத்தை, ''களம் கிளர் மணி'' யெனப் புகழ்கின்ருர். மலையை வில்லாக வளைக்கும் வன்மை பற்றிக் ''குலவு திண்புயம்'' எனக் குறிக்கின்ருர். அம்புயத்தின் தளம், தாமரை மலரின் இதழ். ''இள ஞாயிறின் சோதியன்னுன்'' (ஆலத்) என ஞானசம்பந்தர் முதலியோர் பராவுதலால், ''இளங்கதிர் வடிவு'' என் கின்ருர். ஞானிகளின் திருவுள்ளத்தில் எழுந்தருளி ஞான யோக முயற்சிக்கண் இன்புறுத்தி ஊக்குகின்ற அருட் செயல் பற்றி, ''உளங்கிளர்

அமுதே'' என உரைக்கின்றார். திருவண்ணாமலைக்குச் சென்று சேர்தலின் அருமை நினைந்து அயர்வுறும் நெஞ்சினை யெண்ணி, ''துளங்கும் நெஞ்சகனேன்'' என்றும், துளக்க மின்றிச் சென்றடைதற்கு அருள் செய்தல் வேண்டும் என்ற கருத்தால், ''அருணையில் உற்றுப் பெற அருளே'' என்றும் முறையிடுகின்றார். அண்ணாமலை செம்மண் மலையாய்ச் செந்நிற முடையதாதலால் வடமொழியாளர் அதனை அருணகிரி, அருணாசலம் என்பர். அருணம் - சிவப்பு. அருணகிரி அருணை என மருவுதலுண்டு. அதனை அண்ணாமலை யென்றும், அம்மலை நின்ற நாட்டை அண்ணா நாடு என்றும் முன்னாளைத் தமிழர் வழங்கி வந்துள்ளதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருவண்ணாமலைக்குக் கிழக்கில் கீழண்ணாத்தூர் என்றோர் ஊரிருந்து சான்று பகர்கின்றது.

இதனால் திருவருளை யடைந்து பெருமானைத் தரிசித்து இன்புறுதற்குத் திருவருள் செய்தல் வேண்டுமென விழைந்தவாறும். 1

2491. அன்பர்தம் மனத்தே இன்பமுற் றவைகள்
அளித்தவர் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே
பொய்யனேன் பொய்மைகண் டின்னும்
துன்பமுற் றலையச் செய்திடேல் அருணைத்
தொல்நக ரிடத்துன தெழில்கண்
டென்புளம் உருகத் துதித்திடல் வேண்டும்
இவ்வரம் எனக்கிவண் அருளே.

உரை: மெய்யன்பர்களாயினர் தங்கள் மனத்துக்கு இன்பமானவை என எண்ணி விழைந்தவைகளை எண்ணியவாறே அளித்து அவர்களை மகிழ்விக்கத் திருவுள்ளம் கொள்ளும் பொன் போலும் மேனியை யுடைய கருணைக் கடலே, பொய் யொழுக்கமுடைய எனது பொய்ம்மை யியல்பைக் கண்டு இன்னமும் யான் துன்பமுற்று வருந்த விடாது, திருவண்ணாமலையாகிய பழமையான திருக்கோயிலின்கண் நின்னுடைய பேரெழிற் காட்சி பெற்று எலும்பும் மனமும் நீராய் உருக வாழ்த்தி வழிபட வேண்டுகிறேனாதலால், எளிய எனக்கு இந்த வரத்தைத் தந்தருள்க. எ.று.

''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' (மறைக்காடு) எனச் சான்றோர் கூறுபவாயினும், வேண்டுவார் இப்பெற்றியர் என விளக்குதற்கு ''அன்பர்'' என்றும், அவர்கள் வேண்டுவது இது என விளங்குதற்கு ''மனத்தே இன்புற்றவைகள்'' என்றும், ஈதலின் கருத்தைப் புலப்படுத்தற்கு ''அளித்தவர் களித்திடப் புரிவது'' என்றும் விரித்துரைக்கின்றார். இங்ஙனம் செய்தற்குக் காரணம், பெருமான் அருட் பெருங்கடலாய் இருப்பது என்பார், ''கருணையங் கடலே'' எனவும் அக்கடற்கு உருநலம் கூறுபவர் போன்று, ''பொன்பொலி மேனிக் கருணைக் கடலே'' எனவும் புகல்கின்றார். மெய்யன்பர்க்குக் கருணைக் கடலாய் வேண்டுவதீயும் பெருமான், பொய் யொழுக்க முடையார்க்கு அது செய்யான் என்று தோன்றுவதால், தமது பொய்ம்மை யொழுக்கத்தை எடுத்தோதித் தாம் விரும்புவது அருளாமல் விடுத்தல் கூடா தென்பாராய், ''பொய்யனேன் பொய்ம்மை கண்டு இன்னும் துன்பமுற்றலையச் செய்திடேல்'' என வுரைக்கின்றார். பொய்ய

ணுதலால் பொய்ம்மைக் கேற்பத் துன்பமுற்று இதுகாறும் வருந்தினேன்; இனித் துன்புறுமை யாண்டருள் என்றற்கு ''இன்னும் துன்பமுற்றலையச் செய்திடேல்'' என வேண்டுகிருர். தாம் வேண்டுவது இது என உரைப் பாராய், ''அருணைத் தொன்னகரிடத்து உனது எழில் கண்டு துதித்திடல் வேண்டும்'' எனவும், துதிக்கு மிடத்தும் உடல் எலும்பெலாம் உருக உள்ளுறும் மனமுற்றும் உருக வேண்டும் என்பாராய், ''என்புலாம் உருக்க துதித்திடல் வேண்டும் இவ்வரம் எனக்கு இவண் அருள்'' எனவும் இயம்புகிருர்.

இதனல், திருவண்ணமலையில் பெருமானைக் கண்டு எலும்பும் மனமும் உருகத் துதிக்க வேண்டும் என விழைந்தவாறும். 2

2492. **பூத்திடும் அவனும் காத்திடு பவனும்**
புள்விலங் குருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும்
இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியர் மாலையின் அளவில்
குலவினை என்றுநல் லோர்கள்
சாற்றிடும் அதுகேட் டுவந்தனன் நினது
சந்நிதி உறஎனக் கருளே.

உரை : உலகைப் படைக்கும் பிரமனும், காத்தளிக்கும் திருமாலும் முறையே அன்னப் பறவையாகவும், பன்றியாகவும் உருக்கொண்டு தேடி மெய்யன்பர் வணங்கி வழிபடும் நின்னுடைய திருமுடியையும், திருவம்பலத்தில் ஆடல் புரிகின்ற திருவடியையும் இன்னமும் கண்டிலர் எனவும், அடியராயினுர் தொடுக்கும் சொன்மாலை பூமாலையளவில் இருந் தருள்கின்ருய் எனவும் நல்லன்புடைய சான்ருேர் சொல்வது கேட்டு மகிழ் கின்ற யான் நினது திருமுன் போந்து கண்டு மகிழ அருள் செய்க. எ.று.

பூத்தல் - படைத்தல். புள் - அன்னப்பறவை. விலங்கென்றது பன்றியை. பிரமன் முடியையும் திருமால் திருவடியையும் தேடிக் காண மாட்டாராயினர் என்ற வரலாறுபற்றி, ''இன்னமும் காண்கிலர்'' என்று கூறுகின்ருர். திருமுறையாசிரியர்கள் பலரும் இந்நிகழ்ச்சியை ஓதுவ தொழியாமையின் ''நல்லோர்'' என அவர்மேல் வைத்துக் கூறுகின்ருர். ''கோத்திடும் மாலை'' என்று பொதுப்படவுரைத்தலால், சொன்மாலையும் பூமாலையும் மணிமாலையும் பிறவும் கொள்ளப்படும் என்க. குலவுதல் - விரும்புதல். ''பண்ணெடு பாடல் தன்னைப் பரவுவார் பாங்கர்'' (திருநா. ஆப்பாடி) என்றும், ''பாடுவார்க் கருளும் எந்தை'' (திருஞான. முதுகுன்றம்) என்று கூறுவது கொண்டு ''நல்லோர்கள் சாற்றும் அது கேட்டு'' எனவுரைக்கின்ருர். நானும் அதுபோற் சொன்மாலை தொடுத்து உய்தி பெறலாம் என நினைந்து ஊக்கமுற்றேன் என்பாராய், ''அது கேட்டு உவந்தனன்'' என ஓதுகின்ருர். அடியேனும் சன்னிதி எய்தப் பெற்ருல் பாமாலை பாடி இன்புறுவேன் என்ற கருத்து விளங்க ''நினது சன்னிதியுற எனக்கருளே'' என்று விண்ணப்பிக்கின்ருர்.

இதனல் திருவண்ணமலையில் பெண்ணுகிய பெருமான் திருமுன்பு அடைந்து பாடி மகிழ்வேன் எனத் தெரிவித்தவாறும். 3

2493. அருள்பழுத் தோங்கும் ஆனந்தத் தருவே
அற்புத அமலநித் தியமே
தெருள்பழுத் தோங்கும் சித்தர்தம் உரிமைச்
செல்வமே அருணையந் தேவே
இருள்பழுத் தோங்கும் நெஞ்சினேன் எனினும்
என்பிழை பொறுத்துநின் கோயில்
பொருள்பழுத் தோங்கும் சந்நிதி முன்னர்ப்
போந்துனைப் போற்றுமா றருளே.

உரை : அருளாகிய கனி நிறைந்துயர்ந்த ஆனந்தமாகிய மரமாகியவனே; அற்புதமான தூய நித்தப் பொருளே; ஞானத் தெளிவு பெற்றுயர்ந்த சிந்தையாளர்க்கு உரிமையான திருவருட் செல்வமே; திருவண்ணுமலையில் எழுந்தருளும் தேவ தேவனே, அறியாமையாகிய இருள் நிறைந்த மனமுடையவனுயினும், என் குற்றங்களைப் பொறுத்தருளி நின் திருக்கோயில் பொருள் மிக்கு விளங்கும் திருமுன்பு அடைந்து உன்னைப் போற்றித் துதிக்குமாறு எனக்கு அருள் புரிக. எ.று.

அருளே திருவுருவாய்த் தன்னை யடைந்தார்க்கு இன்ப நீழல் தருவது பற்றி, "அருள் பழுத்தோங்கும் ஆனந்தத் தருவே" எனக் கூறுகின்ருர். "சத்தாகியும் மலத்தோடு கூடிய உயிர் போலாது சத்தாய் மனமில்லதாய் நித்தமாகிய பரம்பொருளாதலின், "அற்புத அமல நித்தியமே" எனப் புகல்கின்ருர். தெருள் - ஞான நிறைவால் உளதாகும் தெளிவு. சித்தர் - சிவ சிந்தனையாளர். நலமே புரியும் செல்வம் என்றற்கு "உரிமைச் செல்வம்" என வுரைக்கின்ருர். அறிதோறும் அறியாமையே காண நிற்றலின், "இருள் பழுத்தோங்கும் நெஞ்சினேன்" எனத் தம்மைக் குறித்துரைக்கின்ருர். இருள் காரணமாகக் குற்றம் புரிதலால், "என் பிழை பொறுத்து" எனவும், திருமுன்பு நிலவும் அருள் ஒளியால் இருள் தருதுன்பம் நீங்குதலின், அதனைப் "பொருள் பழுத்தோங்கும் சன்னிதி" எனப் புகழ்கின்ருர்.

இதனுல், திருவண்ணுமலையிற் பெருமான் சன்னிதி ஞானப்பொருள் நிலவுவதெனத் தெரிவித்தவாறும். 4

2494. மறையும்அம் மறையின் வாய்மையும் ஆகி
மன்னிய வள்ளலே மலர்மேல்
இறையும்மா தவனும் இறையும்இன் னவன்என்
றெய்திடா இறைவனே அடியேன்
பொறையும்நன் னிறையும் அறிவும்நற் செறிவும்
பொருந்திடாப் பொய்யனேன் எனினும்
அறையும்நற் புகழ்சேர் அருணையை விழைந்தேன்
அங்கெனை அடைகுவித் தருளே.

உரை : வேதமும் வேதமோதும் மெய்ப்பொருளுமாய் நிலைபெற்ற வள்ளலே, பூமேல் இருக்கும் பிரமனும் திருமாலும் இந்திரனும் இத் தன்மையன் என்றறிந்து அடைய முடியாத இறைவனே, அடியவனுகிய யான் பொறுமையும் நல்ல நிறையும் நல்லறிவும் நல்ல அடக்கமும்

இல்லாத பொய்யனுயினும், நல்லவர் உரைக்கும் நல்ல புகழ் சேர்ந்த திருவண்ணுமலைக்கு வர விரும்புகிறேன்; அத்தலத்திற்கு யான் வந்தடைதற்கு அருள் புரிக. எ.று.

வேதத்தையே இறைவன் என்பதுபற்றி, "மறையும்" எனவும், வேதங்கூறும் மெய்ப்பொருளும் பரம்பொருளென்பதனுல் "மறையின் வாய்மையுமாகி" எனவும், நித்தப் பொருள் என்பது கொண்டு "மன்னிய வள்ளலே" எனவும் இயம்புகின்ருர். மலர்மேல் இறை - பிரமன். மாதவன் - திருமால். இறையெனப் பொதுப்பட மொழிதலால் இந்திரன் என்பது பெறப்பட்டது. இத்தன்மையன் என்று அறியாமையால் எய்த மாட்டாராயினமை தோன்ற, "இன்னவன் என்று எய்திடா இறைவனே" என்கின்ருர். பொறை - பொறுமை. நிறை - புலன் வழியோடாதவாறு நிறுத்தும் பண்பு; அதனுல் நன்மையே விளைதலின், "நன்னிறை" என்றும், அடக்கம் அமரருள் உய்க்கும் நலம் உடையதாகலின், "நற்செறிவு" என்றும் இசைக்கின்ருர். நிறை செறிவுகளை நல்லவெனச் சிறப்பித்தமையால், இடை நின்ற அறிவும் நல்லறிவாயிற்று. பொறை முதலாகக் கூறிய நற்பண்பின்றிப் பொய்யொழுக்கமுடையேன் என்பார், "பொருந்திடாப் பொய்யனேன்" எனவும், இத்தகைய யான் நினது திருவருளாலன்றித் திருவண்ணுமலையில் நின்னுடைய திருமுன் படைதல் கூடாதென்பார், "அருணையை வீழைந்தேன் அங்கெனையடை குவித்தருள்" எனவும் இயம்புகின்ருர். திருமுறை யாசிரியர்களும் திருப் புகழாசிரியரும் பிறரும் புகழ்ந்தோதும் பெருமையுடையதாகலின், "அறையும் நற்புகழ்சேர் அருணை" என்று பாராட்டுகின்ருர்.

இதனுல் பிரமன் முதல் இந்திரனை யுள்ளிட்ட தேவர்கள் அடைய முடியாத பெருமையுடையது திருவண்ணுமலை என்பது தெரிவித்தவாறும். 5

2495. தேடுவார் தேடும் செல்வமே சிவமே
திருஅரு ணுபுரித் தேவே
ஏடுவார் இதழிக் கண்ணிஎங் கோவே
எந்தையே எம்பெரு மானே
பாடுவார்க் களிக்கும் பரம்பரப் பொருளே
பாவியேன் பொய்யெலாம் பொறுத்து
நாடுவார் புகழும் நின்திருக் கோயில்
நண்ணுமா எனக்கிவண் அருளே.

உரை : சிறந்த செல்வமெனத் தேடும் ஞானச் செல்வர்களின் அருட் செல்வமே, சிவமே, திருவண்ணுமலையில் கோயில் கொண்டருளும் தேவதேவனே, நீண்ட இதழ்களையுடைய கொன்றை மலரைக் கண்ணி யாகச் சூடிய எங்கள் தலைவனே, எந்தையே, எங்கள் பெருமானே, பாடிப் பரவும் தொண்டர்கட்கு அருள் புரியும் பரம்பரப் பொருளாயவனே, பாவியாகிய என்னுடைய பொய் வழுவுமாகிய குற்றங்களைப் பொறுத்தருளி நாடி யடைபவர் பரவியேத்தும் புகழையுடைய நினது திருக்கோயிலை யடையுமாறு திருவருள் புரிக. எ.று.

செல்வ வகை பலவும் தேடிப் பெறும் சிறப்புடையவையாதலால், "தேடுவார் தேடும் செல்வமே" எனப் புகல்கின்ருர். அருணுபுரி -

திருவண்ணுமலை. ஏடு - மலரின் இதழ். சிவபெருமானுக்கு மாலையும் கண்ணியும் கொன்றையாதல்பற்றி, ''இதழிக் கண்ணியங் கோவே'' எனக் கூறுகின்ருர். பாடுவார்க்கருளும் எந்தை'' (முதுகுன்றம்) என்று சான்ருேர் புகழ்தலால், ''பாடுவார்க் களிக்கும் பரம்பரப் பொருளே'' என வுரைக்கின்ருர். பரம்பரம் - மிகவும் மேலானது. பொய் முதலாகிய குற்றங்களைப் ''பொய் யெலாம்'' எனத் தொகுத்துச் சொல்லுகின்ருர். நாடியடைபவர் இன்பமிகுதியால் புகழ்வது விளங்க, ''நாடுவார் புகழும் திருக்கோயில்'' எனச் சிறப்பிக்கின்ருர். நண்ணுமாறு என்பது ஈறு குறைந்தது. ''விளம்புமா விளம்பே'' (திருவிசைப்பா) எனப் பெரியோர் வழங்குவது காண்க.

இதனல் பரம்பரனுகிய சிவபெருமான் தன்னைப் பரவிப்பாடும் தொண்டர்க்கு அருள் புரிபவன் என்பது தெரிவித்தவாரும். 6

2496. உலகுயிர் தொறும்நின் றூட்டுவித் தாட்டும்
ஒருவனே உத்தம னேநின்
இலகுமுக் கண்ணும் காளகண்ட டமும்மெய்
இலக்குவெண் ணீற்றணி எழிலும்
திலகஒள் நுதல்உண் ணுமுலை உமையாள்
சேர்இடப் பாலுங்கண் டடியேன்
கலகஐம் புலன்செய் துயரமும் மற்றைக்
கலக்கமும் நீக்குமா அருளே.

உரை : உலகின்கண் உயிர் தோறும் உடனுய் நின்று அவ்வவ் வுயிரின் வினைப்பயனை நுகர்வித்து இயக்கும் ஒருவனே, உத்தமனே, நின்னிடத்து விளங்கும் கண் மூன்றையும் கரிய கழுத்தையும் மேனியில் ஒளிரும் வெண்மையான திருநீற்றுப் பூச்சழகையும், திலகமிட்ட ஒள்ளிய நெற்றியையுடைய உண்ணு முலையாகிய உமையம்மை சேர்ந்த இடப் பாகத்தையும் கண்களாற் கண்டு கலகம் விளைவிக்கும் ஐம்புலன்களால் உண்டாகும் துன்பமும் பிற கலக்கங்களும் அடியேன் நீக்கி யுய்தி பெற அருள் செய்க. எ.று.

உயிர்கள் செய்யும் வினைப்பயனைத் தாமே யறிந்து கொள்வதும், வினைப்பயன் அறிவில்லாதாகலின் அது தானே சென்று தன்னைச் செய்தவனை யடைவதும் இல்லாமையால், பயனை நுகர்வித்தல் சிவபரம் பொருளின் செயலாதலால், ''உலகுயிர்தொறும் நின்று ஊட்டுவித் தாட்டும் ஒருவனே'' என வுரைக்கின்ருர். ''வள்ளலவன் - செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே போல், செய்வன் செயலணையா சென்று'' எனவும், ''அவ்வினையைப் பேரா ல் ஊட்டும் பிரானின் நுகராரேல், ஆர்தாம் அறிந்தணைப்பா ராங்கு'' எனவும் சிவஞானபோதம் ஓதுவது காண்க. சிவனுக்கு ஒருவன் என்பதே ஒரு பெயர். ''ஒருவன் என்னும் ஒருவ போற்றி'' என மணிவாசகர் உரைப்பது அறிக. ஞாயிறும் திங்களும் நெருப்புமாய் இயல்வதனல், இறைவன் முக்கண்களை ''இலகு முக்கண்'' எனப் புகல்கின்ருர். காள கண்டம் - கரிய கழுத்து. வெண்ணீரணிந்த திருமேனி ஒளி கொண்டு திகழும் அழகை எண்ணி ''இலங்கு வெண்ணீற்றணி யெழில்'' எனச் சிறப்பிக்கின்ருர். மங்கல

மகளிர்க்கு நுதலில் திலகம் பொற்பளித்தலின், உமையம்மையைத் "திலக வொண்ணுதல் உமையாள்" எனவும், அப் பெருமாட்டியை ஞான சம்பந்தர் "உண்ணு முலையுமையாளொடும் உடனாகிய ஒருவன்" (அண்ணாமலை) எனப் போற்றிப் பாடுவது கொண்டு "உண்ணாமுலை யுமையாள் சேர் இடப்பால்" எனவும் இயம்புகிறார். ஐம்புலன்கண் மேற் செல்லும் ஆசை காரணமாக மக்களுயிர்க்குத் துன்பங்கள் உண்டாதலால், அவற்றைக் "கலக வைம்புலன் செய்துயரம்" என்றும், மன மொழி மெய்களால் விளையும் கலக்கங்களை, "மற்றைக் கலக்க" மென்றும் கூறுகின்றார்.

இதனால் திருவண்ணாமலையிற் சிவபெருமான் திருமுன்பு சென்று கண்டு பரவுவது பொறி புலன்களாலும் மன முதலிய கருவிகளாலும் விளையும் துன்பங்கள் நீங்குமெனத் தெரிவித்தவாறும். 7

2497. **அருட்பெருங் கடலே ஆனந்த நறவே**
அடிநடு அந்தமுங் கடந்த
தெருட்பெரு மலையே திருஅணா மலையில்
திகழ்சுயஞ் சோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின் றேன்என
மயக்கெலாம் ஒழிந்துவன் பிறவி
இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற்
கெளியனேன் வரவரம் அருளே.

உரை: அருள் நிறைந்த பெரிய கடல் போன்றவனே, இன்பந் தரும் தேனே, முதலும் இடையும் முடிவு என்ற எல்லை யில்லாத தெளிந்த ஞானமாகிய மலையாயவனே, திருவண்ணாமலையில் எழுந்தருளும் இயற்கை யொளியே, சிவபெருமானே, மருட்சியாகிய பெரிய கடலின்கட் கிடந்து மயங்குகின்ற எனது மயக்க மெல்லாம் நீங்கி வன்மை கொண்ட பிறப்பாகிய பெரிய இருட் கடலினின்றும் கரையேறி யுய்தற் பொருட்டு நின்னுடைய திருக்கோயிலைக் கண்டு வழிபடுவதற்காக எளியனாகிய யான் வருதற்கு அருள் செய்க. எ.று.

எல்லையற்ற பேரருளாளனாவது பற்றிச் சிவபெருமானை, "அருட் பெருங் கடலே" என்றும், அன்பர்க்கு இடையறாத இன்பம் தருதலால், "ஆனந்த நறவே" என்றும் கூறுகின்றார். நறவு-தேன். உலகியற் பொருள் அனைத்தும் முதல் நடு இறுதி யென்ற முக்கூற்று இயல்பினவாதலின், அந்த அளவு கொண்டு காண்பார்க்குத் தெளிந்த ஞான மாமலையாகிய சிவபரம் பொருள் அவ்வளவைகட்கு அடங்காமைபற்றி, "அடி நடு வந்தமும் கடந்த தெருட் பெருமலையே" என்று சிறப்பிக்கின்றார். திருவண்ணாமலையில் தோற்றுவிக்கத் தோன்றாமல் தானே தனி நின்று சுடரும் ஒளி யுருவினனாதலால், "திருவண்ணா மலையில் திகழ் சுயஞ்சோதி" எனவும், "சிவனே" எனவும் போற்றுகின்றார். பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருட்சி யுணர்வே மக்களுலகில் கடல் போற் பெருகி நிலவுதலால், "மருட் பெருங் கடலின் மயங்குகின்றேன்" என்றும் அதனால் தாம் எய்துவது பெருமயக்கமாதலின், அது நீங்கினாலன்றிப் பிறவித் தொடர்பு ஒழியாமை பற்றி, "மயக்கெலாம் ஒழித்து வன்பிறவி

விட்டேற'' என்றும் இயம்புகின்றார். மருட் கடற்கண் வீழ்ந்தார் மயக்கமே யுறுவராதலால், ''மயங்குகின்றேன்'' என்று குறிக்கின்றார். ''மருளானும் மாணுப் பிறப்பு'' (குறள்) எனப் பெரியோர் கூறுதலால், ''வன்பிறவிக் கடல்'' என்கின்றார். பிறவிக்கு ஏதுவும் வினையும் மருள் செய்யும் அறியாமை யிருளாதலால், ''வன்பிறவி இருட் பெருங்கடல்'' என வுரைக்கின்றார். விடாது தொடர்வது பற்றி ''வன்பிறவி'' என்று சிறப்பின்கின்றார்.

இதனால் மயக் கொழிந்து பிறவிக் கடலின் நீங்கிக் கரை யேறற்குத் திருவண்ணாமலைத் திருக்கோயில் திருமுன் படைத்து வழிபடுவது தெரிவித்தவாறும். (8)

2498. **கருணைஅங் கடலே கண்கள்மூன் றுடைய**
கடவுளே கமலன்மால் அறியா
அருணைஎங் கோவே பரசிவா னந்த
அமுதமே அற்புத நிலையே
இருள்நிலம் புகுதா தெனைஎடுத் தாண்ட
இன்பமே அன்பர்தம் அன்பே
பொருள்நலம் பெறநின் சந்நிதிக் கெளியேன்
போந்துனைப் போற்றும்வா றருளே.

உரை : அருட் கடலாய்க் கண்கள் மூன்றுடையதாகிய கடவுளே, பிரமனும் திருமாலும் அறியமாட்டாத திருவண்ணாமலையையுடைய எம்முடைய அரசே, பரசிவமாகிய இன்ப அமுதமே, அற்புத நிலையமே, துன்பச் சூழலாகிய பிறவியிற் புகுந்து உழலாவண்ணம் என்னை ஆண்டருளிய இன்ப வடிவினனே, அன்பர்க்கு அன்புருவே, நன்பொருளாகிய சிவ ஞானப் பேற்றுக்காக எளியேன் வந்து வணங்கி நின்னைப் போற்றுதற்கு அருள் செய்க. எ.று.

கருணை, அருள், கமலன், தாமரையில் இருக்கும் பிரமன். அருணை எம்கோ, திருவண்ணாமலையில் எழுந்தருளும் அருளரசு; எமக்குத் தலைவன் எனினுமாம். பரசிவம் இன்ப வடிவமாதல் பற்றி, ''பரசிவ ஆனந்த அமுதமே'' எனப் பகர்கின்றார். மாயா மண்டலத்துக்கு அப்பால் விளங்கும் சிவம், பரசிவம் எனப்படும். சிவம் - இன்ப மயம். எல்லா வகையான அற்புதங்கட்கும் முதலிடம், அற்புத நிலயம். இருள் நிலம்- துன்ப வுலகம். ''இருள் சேர்ந்த இன்னா வுலகம்'' (குறள்) எனத் திருவள்ளுவர் தெரிவிப்பது காண்க. சிவபிரானால் ஆட்கொள்ளப் பட்டோர் துன்ப வுலகிற் சூழலிற் புகுந்து பிறந் திறந்து வருந்தா ரென்பது பற்றி, ''இருள் நிலம் புகுதாது எனை எடுத்தாண்ட இன்பமே'' என்று இசைக்கின்றார். அன்பும் சிவமும் ஒன்றென்பவாகலின் ''அன்பர்தம் அன்பே'' என்கின்றார். எய்தப்படும் பொருள்களில் நலமாவது ஞானப் பொருள். ''ஊனத்திருள் நீங்கிட வேண்டின் ஞானப் பொருள் கொண்டடி பேணும்'' என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. (9)

இதனால் திருவண்ணாமலையில் சிவனைக் கண்டு வணங்குவது சிவஞானப் பேற்றுக்கு ஏதுவாம் எனத் தெரிவித்தவாறும்.

2499, **ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியும்
என்உயிர்க் கொருபெருந் துணையே
தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச்
செயல்எனக் களித்தஎன் தேவே
வாதுசெய் புலனால் வருந்தல்செய் கின்றேன்
வருந்துறா வண்ணம்எற் கருளித்
தாதுசெய் பவன்ஏத் தருணையங் கோயில்
சந்நிதிக் கியான்வர அருளே.**

உரை: என்ன குற்றம் செய்தாலும் பொறுத்து அருள் செய்யும் எனது உயிர்க்கு ஒரு பெரிய துணையா யிருப்பவனே, தீமைகளைச் செய்யும் மனமுடைய தீயவர்களோடு கூடாத செய்கையை எனக்கு ஈந்த தெய்வமே, அலைத்து வருத்தும் புலன்கள் ஐந்தாலும் வருந்துகின்ற யான் மேலும் வருந்தாவாறு பிரமன் பணிந்து பரவும் திருவண்ணாமலையில் நின் திருமுன்பு அடைந்துய்ய அருளுக. எ.று.

"பொறுத்தருள் புரியும்" என்றதனால், ஏது என்பது குற்றத்தின்மேல் நின்றது. உயிர்க்குத் துணையாதல், உயிரின்கண் அறிவாய் இருந்து அறிவன அறிவித்தல். தமக்கும் பிறர்க்கும் பிற வுயிர்க்கும் தீங்கு நினைக்கும் மனத்தையுடைய கொடியவர். தீயவருடன் கூடுதல் தீச் செயலாதலால், அதன்கண் ஈடுபடாமைக் காத்தல் நல்வினையாகும். அதனால், "தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச் செயல் எனக்கு அளித்த தேவே" என்று பரவுகின்றார். புலனைந்தும் பல்வேறு ஆசைகளைத் தூண்டி யலைப்பதால் "வாது செய் புலன்" என்று கூறுகின்றார்; வருந்துறல் - வருந்துதல். தாது - பல்வகைத் தாதுக்களால் ஆகிய உடம்புக் காதலின், ஆகு பெயர். உடம்பு படைப்பவன் - பிரமன். திருவண்ணாமலையிலுள்ள திருக்கோயிலை, "அருணையங் கோயில்" எனப் புகல்கின்றார்.

இதனால் புலனைந்தும் எய்துவிக்கும் துன்பத்தால் வருந்தாமையைத் திருவண்ணாமலையில் சிவனை வழிபடும் செய்கை நல்குமெனத் தெரிவித்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

17. அருணகிரிச் சிவக்கொழுந்து

திருவண்ணுமலை

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2500. திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்கருண கிரிவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

உரை : அருட்செல்வம் சிறக்கும் சிவயோக சித்திகள் பெருகவும் சிவஞான நிலையும் சிவபோகமும் உயிர்கட்கு உண்டாதற் பொருட்டு அழகிய வீதிகளையுடைய திருத்தில்லை நகர்க்கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் சிவவொளி திகழும் திருவிளக்கே, உடலும் உயிரும் உணர்வும் பெருகி உலகமெல்லாம் சிறப்படையத் திருவருள் நல்கும் பெரிய தாய் போன்றவனே, மணம் கமழும் கூந்தலையுடைய கொடி போன்ற உமாதேவி மகிழ்வுடன் ஒருபால் இனிது விளங்கப் புகழ் மிகும் திருவண்ணுமலை பெருமை மிக வளர்ந்தோங்கும் சிவக்கொழுந்தே, உன் திருவருளை வேண்டுகிறேன். எ.று.

திரு, திருவருட் செல்வமுடைமையால் உளதாகும் பொற்பு. சிவயோக சித்தி - சிவயோகத்தால் விளையும் நலங்கள். சிவஞான நிலை - சிவஞானம் நிறைந்து விளங்கும் நிலைமை. அந்நிலையிற் சிவபோகம் துய்த்தல் சிவானுபவமாகும். தில்லை - சிதம்பரம் என இந்நாளில் வழங்கும் தில்லை நகர். செல்வ நெடுமாடங்கள் பொருந்திய திருவீதியைத் "தெரு" என்று எடுத்தோதுகின்ருர். "செல்வ நெடுமாடம் சென்று சேணேங்கிச் செல்வ மதி தோயச் செல்வமுயர்கின்ற, செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்" என்று திருஞானசம்பந்தர் போற்றிப் புகழ்வது காண்க. சிவஞான வொளியைப் பரப்பி அதன் நடுவே திருக்கூத்துச் சிறந்து தோன்ற விளங்குவதுபற்றி, "திருக்கூத்து விளங்க வொளி சிறந்த திருவிளக்கே" என வுரைக்கின்ருர். உருவில்லாத வுயிர்க்கு உருக் கொடுப்பது உடம்பாதலால், அதனை "உரு" என்றும், உயிர் உணர்வு வடிவினதாதல்பற்றி, "உயிர் விளங்க உணர்ச்சியது விளங்க" என்றும் அடுத்தடுக்கிக் கூறுகின்ருர். உயிரில்லது உலக மாகாமையின், "உலகமெலாம் விளங்க" எனவும், "அவன் அருளாலன்றி இவை யனைத்தும் உளவாதல் இல்லாமை நினைப்பிப்பாராய், "அருளுதவு பெருந்தாயே"

எனவும் இயம்புகின்ருர். தாயாகும் பெருமை சிவனுக்கு மாதொரு கூறனுதலால் சிறத்தலின், ''மருவிளங்கு குழல்வல்லி மகிழ் ந்தொருபால் விளங்க'' என்று கூறுகிருர். மரு - நறுமணம். வல்லி - கொடி; ஆகு பெயராய் உண்ணுமுலே யுமையாளுக்காயிற்று. அருணகிரி - திருவண்ணமலே. குறைவிலா நிறைவாய் விளங்குவது புலப்பட, ''வளர்ந்த'' என இறந்த காலத்தாற் குறிக்கின்ருர். மென்மைப் பண்பு பற்றி, சிவபரம்பொருளைச் ''சிவக்கொழுந்து'' என்று சிறப்பிக்கின்ருர். உன் திருவருளே வேண்டுகிறேன் என்பது குறிப்பெச்சம்.

இதனுல், திருவருளைச் சிவபிரானது திருக்கூத்தின் உண்மை நலம் உரைத்து அவனது திருவருளே வியந்து வேண்டியவாரும். (1)

திருச்சிற்றம்பலம்

18. அருட்குரு தோத்திரம்

திருவோத்தூர்

இதன்கண் அருட்குரு வெனப்படுபவர் திருவோத்தூர்ச் சிவஞான தவர்; அவர் திருஞானசம்பந்தர்பால் மிக்க ஈடுபாடுடையவர். வடலூர் வள்ளற் பெருமான் திருஞானசம்பந்தரை ஞான குருவாகக் கொண்டவர். அவருடைய திருமுறைகளை எழுத்தெண்ணி யோதி யுணர்ந்தவர் என்பதைத் திருவருட்பாவை முறையாகப் படித்துணர்பவர் இனிதறிகுவர்.

திருவண்ணாமலைக்குப் புறப்படுகையிலேயே சிவஞான சிவயோக நிலைகளில் முதிர்ச்சி பெற்ற வள்ளற் பெருமான் பெண்ணாகிய பெருமானை அண்ணாமலையில் கண்டு பரவினவர் காஞ்சியம்பதிக்குத் திருவோத்தூர் வழியாக வருகின்றார். திருவோத்தூர்க்குச் சிறப்பு அங்கே திருஞான சம்பந்தர் ஆண் பனையைப் பெண் பனையாக்கிக் குலையீனச் செய்ததாகும். திருவோத்தூர் வேதநாயகனைத் தரிசித்துப் பராவலுற்ற வள்ளற்பெருமான் அங்கே சிவப்பணி புரிந்தொழுகிய சிவஞான தேவரை இந்த நெடும் பாட்டாற் பாடிப் போற்றுகின்றார். இத் திருப்பாட்டில் வள்ளலார் சித்தாந்த ஞானோபதேசம் சிவஞான தேவர் வழிப்பெற்றதாக நாம் உணருமாறு விரிவாகக் கூறுவதைக் காணலாம்.

நாற்பத் தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2501. **உலகியலின் உறுமயலின் அடைவுபெறும் எனதிதயம்**
ஒளிபெற விளங்குசுடரே
உதயநிறை மதிஅமுத உணவுபெற நிலவுசிவ
யோகநிலை அருளுமலையே
உனதுசெயல் எனதுசெயல் உனதுடைமை எனதுடைமை
உணர்என உணர்த்துநிறைவே
உளஎனவும் இலஎனவும் உரைஉபய வசனம்அற
ஒருமொழியை உதவுநிதியே
ஒன்றுடன் இரண்டெனவி தண்டைஇடும் மிண்டரொடும்
ஒன்றல்அற நின்றநிலையே
உன்னல்அற உன்னுநிலை இன்னதென என்னுடைய
உள்உணர உள்ளுமதியே
உன்நிலையும் என்நிலையும் அன்னியம்இ லைச்சிறிதும்
உற்றறிதி என்றபொருளே
உண்மைநெறி அண்மைதனில் உண்டுளம்ஒ ருங்கில்என
ஓதுமெய்ப் போதநெறியே

உரை : உலகியல் வாழ்வின் மயக்கத்தை முற்றவுமடைந்து தோயும் என்னுடைய மனம் இருள் மயக்கம் நீங்க அருள் ஒளி பெறச் செய்யும் ஞானச்சுடரே, உதய காலத்தில் ஒளி நிறைந்து தோன்றும் முழு மதியமாய் உணர்வின்கண் மதியொழுக்கும் அமுதமாகிய ஞான வுணவு எளியேன் பெற விளங்கும் சிவயோகத்தை எனக்கு அருளிய அருள் மலேயே, யோகக் காட்சியில் தோன்றி உன்னுடைய செயல் யாவும் என் செயல் என்றும், உனது உடைமையனைத்தும் என்னுடைய உடைமையென்றும் உணர்க என அறிவுறுத்திய நிறை ஞான வுருவமே, மயக்கவறிவால் உண்டெனவும் இல்லை யெனவும் பேசுகின்ற இருவகைப் பேச்சுக்கும் இடமின்றாக ஒரு சொல்லால் அறிவைத் தந்தருளிய ஞானச் செல்வமே, பிரமப் பொருள் ஒன்றென்றும் இரண்டென்றும் விதண்டா வாதம் புரியும் தருக்கவாதிகளில் ஒருவராகக் கலவாமல் தனி நின்றுயர்ந்த நிலையை யுடையவனே, நினைப்பற நினைக்கும் நினைவுதான் இன்ன தென்று அடியேன் உள்ளம் உணருமாறு நிலைபெற்ற ஞானப்பொருளே, சுத்த முத்தி நிலையில் உன்னிலைமைக்கும் என்னுடைய நிலைமைக்கும் சிறிதும் வேறுபாடில்லையென்பதைச் சிந்தித்தறிக என அறிவுறுத்த மெய்ப் பொருளே, உண்மை காணும் நெறி உனக்கு அருகிலேயே யுளது; உன் சிந்தை ஒடுங்குமாயின் அதனைப் பெறலாம் என வுரைத்தருளிய உண்மை ஞானப் பயனே. எ.று.

உலகியல் மயக்கம் செய்வதென்பதை "மமையல் செய்து மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினாய்" (துருத்தி) என ஞானசம்பந்தர் ஓதுவ தாலும், "மையல் மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டருள்" (தடுத்தாட்) எனச் சேக்கிழார் நம்பியாரூரர் வாக்காகத் தெரிவிப்பதாலும் அறிக. மயலின் அடைவு பெறல், மயக்கத்தால் முற்றவும் மயங்கி யொழிதல். மயக்கம் இருள் செய்தலின், அதனைப் போக்குவது அறிவொளியாதலால், "ஒளி பெற விளங்கு சுடரே" எனவுரைக்கின்றார். ஞாயிறும் திங்களும் உதய காலத்தில் ஒளி மிக்கிருப்பதுபற்றி, யோகக் காடசியில் காணப்படும் அமுத சந்திரனை, "உதய நிறைமதி" எனக் கூறுகின்றார். இலக்கண நூலோர் மதியென்ற சொற்கு மதுவை யுடையது எனப்பொருள் கூறுவதும் இதுபற்றியே என அறிக. துவாத சாந்தத்தில் விளங்கும் சந்திரனிடத்தொழுகும் அமுதையுண்டு மகிழ்வது யோகியர் இயல்பு என யோக நூலோர் கூறுவர். சிவஞானமிர்தமுண்பது சிவயோகர் செயல் என்பது தோன்ற, "மதியமுத வுணவு பெற நிலவு சிவயோக நிலை" என வள்ளற் பெருமான் உரைக்கின்றார். யோகம் என்னும் சொல் கூடுதல் என்று பொருள்படுதல், ஞானத்தால் கூடிய வழி நீ வேறு நான் வேறு எனும் வேற்றுமைக்கு இடமின்மை இனிது புலப்பட, "உனது செயல் எனது செயல் உனதுடைமை எனதுடைமை உணர் என உணர்த்தும் நிறைவே" என இசைக்கின்றார். "மெய்ப் பரம்பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (கழுமலம்) என ஞானசம்பந்தர் இதனைச் சுருங்கக் கூறுகின்றார். குறைவுள்ளவிடத்தே வேற்றுமை தோன்றுதலால் "நிறைவே" எனக் குறிக்கின்றார். பரமாய பொருள் உண்டோ இல்லையோ என வினவுதலும் விடையிறுத்தலும் உலகியலறிஞரிடம் உண்மையின், "உளவெனவும் இலவெனவும் உரை யுபய வசனம்" எனக் கூறுகின்றார். உபய வசனம் - இருவகை யுரை. ஒரு மொழியாவது, "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்

சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி" (பாசுரம்) என ஞானசம்பந்தர் அறுதியிட்டுரைத்தது. பிரமப் பொருள் பாரமார்த்தத்தில் ஒன்றெனவும், விவகாரத்தில் பரப்பிரமம், சீவப்பிரமம் என இரண்டெனவும் வாதம் புரியும் தார்க்கிகரை, "ஒன்றுடன் இரண்டென விதண்டையிடும் மிண்டர்" என விளம்புகிருர். விதண்டை - விதண்டா வாதம். மிண்டர் - வன்சொல்லும் வன்செயலும் உடையவர்; மிகுவலியுடையவரெனினும் அமையும். அவரொடு கூடலிற் ஞானப் பயன் இன்மையால், "ஒன்றலற நின்ற நிலயே" என்று கூறுகிருர். உன்னலற உன்னும் நிலை, பிற நினைவுகட்கு இடமின்றி நினைத்தற்குரிய தொன்றையே நினைக்கும் நிலை. இருள் நீக்கி அருட் சுடர் விரித்து மனத்தின்கண் பரம்பொருள் நிற்கும் நிலையை, மணிவாசகப் பெருமான் நினைந்த நிலையாம்; "இன்றெனக்கருளி இருள் கடிந்து உள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்" (கோயில்) என அப்பெருமான் உரைப்பது காண்க. அந்நிலையில் சிவனை யல்லது வேறு பொருளில்லை என்றும், பிற யாவும் அவன ன்றும் அவையும் அவனையின்றி இல்லை யென்றும் உள்ளம் உணர்வது விளங்க, "இன்னதென என்னுடைய உள்ளுணர உள்ளும் மதியே" என உரைக்கின்ருர். மதி - ஈண்டுத் திருவருள் ஞானப்பொருள் குறித்து நிற்கிறது. பெத்த நிலயில் சிவத்தின் வேரும் அண்ணியமாக நிற்கும் ஆன்மா முத்திக்குரிய சுத்த நிலயில் ஞானமே யுருவாய் வேறற ஒன்றி நிற்கு மென்ற உண்மை நிலையை, "என் நிலயும் உன் நிலயும் சிறிதும் அன்னியமிலை" எனவும், இறப்பில் தவ வுணர்வால் இனிது அறியப்படும் என்றற்கு "உற்றறிக என்ற பொருளே" எனவும் கூறுகின்ருர். தவத்தால் உணர்த்த "அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே" என்றும், "இருவினை யொப்பில் இறப்பில் தவத்தால் மருவுவனும் ஞானத்தை வந்து" என்றும் சிவஞான போதம் தெரிவிப்பது காண்க. இந்த உண்மை நெறியை யுணர்த்தும் யாம் உன்பால் தன்மையிலும் முன்னிலையிலும் உள்ளோம்; மனத்தின்கண் சிந்தையை ஒரு நெறிப்படுத்தி நோக்குக என ஞான குருவாய் உணர்த்துவதைச் சிவஞானபோதம் விளக்குவதை நினைப்பிப்பாராய், "உண்மை நெறி அண்மைதனில் உண்டுளம் ஒருங்கில் என ஓதும் மெய்ப் போத நெறியே" என மொழிகின்ருர். "அருவாகி நின்ருனை யார் அறிவார் தானே உருவாகித் தோன்ருனேல் உற்று" என்பது சிவஞான போதம். மெய்ப்போத நெறி என்றது சிவஞான போதத்தை நினைப்பிப்பது அறிக. போதம் என்னுது போதநெறியென்றது போதநெறியால் விளையும் பயன் மேற்று.

அலகின்மறை மொழியும்ஒரு பொருளின்முடி பெனஎன
தகந்தெளிய அருள்செய்தெருளே
ஐம்பூதம் ஆதிநீ அல்லைஅத் தத்துவ
அதீதஅறி வென்றஒன்றே
அத்துவா ஆறையும் அகன்றநிலை யாதஃது
அதீதநிலை என்றநன்றே
ஆணவம தாணவமை அன்றிஒன் றில்லைநீ
அறிதிஎன அருளுமுதலே
அன்பெனப தேசிவம் உணர்ந்திடுக எனஎனக்கு
அறிவித்த சுத்தஅறிவே

அத்துவித நிலைதுவித நிலைநின்ற பின்னலது
அடைந்திடா தென்றஇறையே
ஆனந்த மதுசச்சி தானந்த மேஇஃது
அறிந்தடைதீ என்றநலமே
அட்டசித் திகளும்நின தேவல்செயும் தீஅவை
அவாவிஇடல் என்றமணியே

உரை: அளவில்லனவாகிய வேதங்கள் பலவற்றை ஓதினும் முடிந்த பொருள் ஒன்றே என்று என் மனம் இனிதறியத் தெரிவித்த தெளிந்த அறிவுருவே, நில முதலாகிய பூத தத்துவங்கள் நீயல்ல; அவற்றிற்கு மேம்பட்ட அறிவுரு என்று அறிவித்த ஒருவனே; அதீதமாவது அத்துவாக்கள் ஆறினையும் நீங்கிய நிலை யாதோ அது என்று அறிவித்த நன்பொருளே; எமது ஆணையாகச் சொல்லுகிறேன்; சிவமாகிய எம்மையன்றி வேறு ஒன்றும் இல்லையென அறிக என உரைத் தருளும் முதல்வனே; அன்பு எனப்படுவது சிவமே என எனக்கு இயம்பிய தூய அறிவனே; அத்துவித நிலையும் துவித நிலையில் நின்ற பின்னரே எய்துவது எனவுரைத்த இறைவனே; ஆனந்தமென்பது சச்சிதானந்த மாகும், இதனை நீ அடைக என்று இசைத்த நல்லவனே; எண் வகைச் சித்திகளும் நினக்கு ஏவல் செய்வனவாகும். ஆகவே அவற்றைப் பெற விரும்புவதை ஒழிக என்று கூறியருளிய குருமணியே. எ.று.

இருக்கு முதலிய வேதம் நான்கினும் எண்ணிறந்த இருக்குகள் இருப்பதாலும், ஒவ்வொன்றும் வேதம் எனப்படுதலாலும், ''அலகில் மறைமொழி'' என்றும், அவற்றுற் பல்வேறு பொருள் கூறப்படினும் முடிபு ஒன்றே என்றும் தெளிந்தோர் உரைப்பதுபற்றி, ''மறைமொழியும் ஒரு பொருளின் முடிபு'' எனவும், கேட்போர் மனம் கொள்ளுமாறு தெளிவித்தமை புலப்பட, ''எனது அகம் தெளிய அருள் செய்தெருளே'' எனவும் கூறுகின்றார். தெருள் - தெளிவு. தெருண்ட ஆசிரியனைத் தெருள் என்கிறார். குணியைக் குணமாக உரைப்பது ஒருவகைச் செய்யுள் மரபு; உபசார வழக்கு என்றும் கூறுவர். பிற வருமிடங்களிலும் இதனையே கூறிக்கொள்க. நில முதலிய பூதங்களும் தத்துவக் கூறுகளாகும். அதுபற்றியே, 'ஐம்பூத மாதி நீ யல்லை'' என்றவர், தத்துவங்களின் வேருய் அறிவுடைமையால் மேலாவாய் என்றற்கு, ''அத்தத்துவாதீத அறிவு என்ற ஒன்றே'' எனக் குறிக்கின்றார். ஒருமைப் பண்புடைமைபற்றி ''ஒன்றே'' என்கின்றார். வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்ற ஆறும் அத்துவா எனப்படும். இவை யாறும் உயிர்கள் மன மொழி மெய்களைக் கொண்டு செய்யும் வினை வகைகட்கு வழியாதலால் இவை அத்துவா எனப்படுகின்றன. அத்துவா- துவாரம், வழி என்று பொருள்படுவது. வினைகள் தோன்றும் வாயில் என்றற்கு சமய நூலோர் அத்துவா என்கின்றார்கள். ஆன்மா கருவி கரணங்களின் நீங்கித் தனிக்கும் நிலை அதீத நிலை; அதனல் ''அத்துவா ஆறையும் அகன்ற நிலை யாது அஃது அதீதநிலை'' எனவுரைக்கின்றார், நற்பண்புடைய முதல்வனை ''நன்று'' என நவில்கின்றார். ஆணையென்றும் ''நமது ஆணை'' என்றும் கூறுவது வன்புறை. சிவத்தின் வேறே பரம்பொருள் என ஒன்று இல்லாமையால், ''எமையன்றி ஒன்றில்லை'' என இசைக்கின்றார். முதல் - முதல்வன். அன்ப ஞானம் என்றலும்

உண்மையின், "அன்பென்பதே சிவம் உணர்ந்திடுக என எனக்கு அறிவித்த சுத்த அறிவே" என விளம்புகின்ருர். "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார்" (ஞானசம். புரா) எனச் சேக்கிழார் கூறுகின்ருர். திருமூலர் "அன்பே சிவம்" என்பர். சுத்த அறிவு, சிவஞானம். பரம்பொருளும் ஆன்மாக்களும் சிவமும் சீவனுமாய் இருக்கும் நிலை துவித நிலை; சீவன் பசு பாசங்களின் நீங்கிச் சிவமாந் தன்மை யெய்திச் சிவமும் தானுமாய் விளங்கும் நிலை அத்துவித நிலை. சீவன் சீவமாம் தன்மை எய்துங்காறும் துவித நிலையில் இருத்தலால், "அத்துவித நிலை துவிதநிலை நின்ற பின்னலது அடைந்திடாது என்ற இறையே" என்று சொல்லுகிருர். துவிதம் - இரண்டு; அத்துவிதம் இரண்டன்மை. இறை - இறைவன். சச்சிதானந்தம் - சத்தாயும் சித்தாயும் இருந்து சிவபோகம் துய்க்கும் இன்பநிலையாதலால், "ஆனந்தமது சச்சிதானந்தமே" என்றும், அது ஆன்மாக்கள் பலவும் எய்தி நுகர்தற்குரியதாகலின், "இஃது அறிந்து அடைதி என்ற நலமே" என இயம்புகிருர். அடைதி - அடைவாயாக. சிவஞானச் செல்வ மெய்தியவர்க்கு அணிமா, மகிமா முதலாகவுள்ள அட்டசித்திகளும் வேண்டாதவையும், வேண்டுமாயின் எளிதில் இயல்வனவுமாதலால், "அட்டசித்திகளும் நினது ஏவல் செயும்" என்றும், அவற்ருல் சிவஞான நலம் உண்டாகாதாகையால், "நீ அவை அவாவியிடல்" என்றும் உரைக்கின்ருர். அவாவுதல் - விரும்புதல். அவாவியிடல் - விரும்பற்க என வரும் எதிர்மறை வியங்கோள்.

இலகுபரி பூரண விலாசம்அல திலை அண்டம்
எங்கணும் எனச்சொல்பதியே
இரவுபகல் அற்றஇடம் அதுசகல கேவலம்
இரண்டின்நடு என்றபரமே
இச்சைமன மாயையே கண்டன எலாம்அவை
இருந்துகாண் என்றதவமே
யான்பிறர் எனும்பேத நடைவிடுத் தென்னேடு
இருத்திஎன உரைசெய்அரைசே
என்கணிக ணேஎனது கண்ணேஎன் இருகண்
இலங்குமணி யேஎன்உயிரே
என்உயிர்க் குயிரேஎன் அறிவேஎன் அறிவூடு
இருந்தசிவ மேஎன்அன்பே
என்தெய்வ மேஎனது தந்தையே எனைஈன்று
எடுத்ததா யேஎன்உறவே
என்செல்வ மேஎனது வாழ்வேஎன் இன்பமே
என்அருட் குருவடிவமே

உரை : அண்டங்கள் அனைத்திலும் விளங்குகின்ற சிவத்தின் பரிபூரண விலாசமல்லது வேறு யாதும் இல்லையென வுரைக்கின்ற குருபதியே; இரவு பகலற்ற இடம் என்பது ஆன்மாக்கள் எய்தும் கேவலம் சகலம் என்ற நிலைகட்கு இடைப்பட்டது என்று கூறுகின்ற பரம்பொருளே; காணப்படுபவை யாவும் இச்சை வழியோடும் மனம் காட்டும் மாயா

காரியமாம்; அவற்றைத் தனித்திருந்து காண்பாயாக என அறிவுறுத்த தவச் செல்வமே; யான் வேறு, இவர் பிறராவர் என வேறுபடுத் துரைக்கும் உலகநடையைக் கைவிட்டு எல்லோரும் நம்பவரே எனக் கொண்டு என்னினேவோடே இருப்பாயாக என உபதேசித்த அருளரசே; என் துயர் துடைக்கும் களைகணுனவனே, என்னுடைய கண்ணே, இரு கண்களிலும் விளங்கும் மணியே; என்னுடைய உயிரே, எனது அறிவே, என் அறிவின்கண் இருந்தருளும் சிவமே, என்னுடைய அன்பே, எனக்குத் தெய்வமே, என் தந்தையே, என்னைப் பெற்றெடுத்த தாயே; எனக்கு உறவானவனே, எனது செல்வமே, எனக்கு வாழ்வளித்த முதற் பொருளே, யான் பெறும் இன்பமே, எனது அருட் குருவே. எ.று.

மிகப் பலவாகிய அண்டங்கள் எல்லாவற்றினும் எங்கும் எப் பொருளினும் கலந்து பரந்து விளங்குவது சிவபரம்பொருளின் குறைவிலாது நிறைந்த பரப்பல்லது பிறிது யாதுமில்லை என அறிவுறுப்பவன் அவற்றில் ஒன்றுயும் வேருயும் இருக்கும் பதிப்பொரு ளாதலால், "இலகுபரி பூரண விலாசமலது இல்லை அண்டம் எங்கணும் எனச் சொல் பதியே" என்று உரைக்கின்ருர். விலாசம் - பரப்பு. பரிபூரணம் - குறைவில்லாத நிறைவு. ஆன்மா - உடல் கருவி கரணங் களோடு கூடி உலகில் வாழும் நிலை சகலம்; கூடாது மலப்பிணிப்புற்றுத் தனித்துச் செயலின்றிக் கிடப்பது கேவலம். இடம் காலம் கருவி களோடு கூடி ஆன்மா வினை செய்யும் நிலை சகலமாதலின், அதற்குத் தான் இராப் பகல் என்ற காலமுண்டு; "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என்பர் தொல்காப்பியர். கேவலத்தில் ஆன்மாவின் அறிவு செயல்கள் அதன் சிற்சத்தியில் ஒடுங்கிக் கிடப்பதால் கால வியக்கமில்லை. கேவலத்தின் நீங்கிச் சகலத்திற் புகுங்கால் காலம், இடம் பெறுதல்பற்றி, "இரவு பகலற்ற விடமது சகல கேவல மிரண்டின் நடு என்ற பரமே" என்று இயம்புகின்ருர். காலக் கூறு இரவு பகல்களால் உண்டாதலால், காலத்தை "இரவு பகல்" எனவும், சகல கேவல நிலைகளை அவற்றின் வேருய் நின்று காண்பது பரம்பொருள் என்றற்குப் "பரமே" எனப் பகர்கின்ருர். புலன்கள்மேல் உண்டாகும் ஆசை வழி இயங்குவதாகலின் "இச்சை மனம்" எனச் சிறப்பிக்கின்ருர். மனமும் அதனுற் காணப்படும் உலகமும் பொருளும் மாயா காரியமாகலின், "மாயையே கண்டனவெலாம்" என்றும், காட்சி வயமாகாது தனித்துச் சிந்திக்குமிடத்து இவ்வுண்மை புலப்படுவதுபற்றி, "அவை இருந்து காண்" என்றும், இதுவும் தவநெறிக் கண் நிற்பாரால் உணர்ந்து காட்டப்படுவதால் "தவமே" என்றும் கூறு கின்ருர். பேத நடை சமரச நோக்குக்குத் தடையாய்த் தலைவன் வழி நிற்கவிடாதாகலின், "யான் பிறர் எனும் பேத நடை விடுத்து என்னேடு இருத்தி" என்றும், தன் ஆணை வழி நிற்கும் பலரையும் ஒப்ப நோக்குவது அரசாதலால் "அரசே" என்றும் இயம்புகிருர். துன்பம் துடைப்பதுபற்றிக் "களைகணே" என்கின்ருர். உடனிருந்து பொருள்களைக் கண்டும் காட்டி யும் உபசரித்தலால் "கண்ணே" எனவும், "என் இரு கண்மணியே" எனவும் இசைக்கின்ருர். உயிர்பாற் கொண்ட அருளால் அறிவாயும் அறியுமிடத்து அறிவுக்கறிவாயும் செறிந்திருக்கும் சிவத்தின் செயல் நலம் புலப்படுத்தற்கு "என் அறிவே என் அறிவூடு இருந்த சிவமே" எனக் கூறுகிருர். தெய்வமே, தந்தையே, தாயே என்பன முதலாயின சிவன்

பால் உள்ள ஆர்வத்தை விளக்குவன. மேற்கூறிய ஞானப் பொருளை இனிது அறிவித்தமையால், ''என் அருட் குருவடிவமே'' என்று போற்றுகின்றார்.

கலகமனம் உடையஎன் பிழைபொறுத் தாட்கொண்ட
கருணையங் கடல்அமுதே
காழிதனில் அன்றுசுரர் முனிவர்சித் தர்கள்யோகர்
கருதுசம யாதிபர்களும்
கைகுவித் தருகில்நின் றேத்தமூ வாண்டில்
களித்துமெய்ப் போதம்உண்டு
கனிமதுரம் ஒழுகுசெம் பதிகச்செ ழும்சொன்மழை
கண்ணுதல் பவளமலையில்
கண்டுபொழி அருள்முகில் சம்பந்த வள்ளலாங்
கடவுளே ஒத்தூரினில்
கவினுற விளங்குதற் பணிகள் சிவ புண்ணியக்
கதிஉல கறிந்துய்யவே
கரை அற்ற மகிழ்வினொடு செய்தருள் புரிந்திடும்
காட்சியே சிவஞானியாம்
கருதவரும் ஒருதிருப் பெயர்கொள்மணி யேஎமைக்
காப்பதுன் கடன் என்றுமே.

உரை : துன்பம் விளைக்கும் மனத்தையுடைய எளியேனது குற்றங்களைப் பொறுத்து என்னைப் பணிகொண்ட கருணைக் கடலமுதமே, அந்நாளிற் சீர்காழியில் மூன்றுமாண்டில் தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் உயர்வாகக் கருதப்படும் பல்வேறு சமயவாதிகளும் கண்டு கைகளைத் தலைமேற் குவித்து அருகே நின்று போற்றச் சிவஞானப் பாலையுண்டு மகிழ்ந்து, இனிமை கனிந்தொழுகும் திருப்பதிகமாகிய செழித்த சொல் மழையை, கண்ணுதற் பெருமானான சிவந்த பவள மலையைக் கண்களாற் கண்டு பொழிந்த அருள் மேகமான திருஞான சம்பந்த வள்ளலாகிய கடவுளே, திருவோத்தூரில் அழகுமிக இருந்து நல்ல சிவப் பணிகளைச் சிவபுண்ணியம் செய்வார் நற்கதியைப் பெறும் திறத்தை உலகவர் கண்டு அறிந்து உய்தி பெறற் பொருட்டு எல்லையற்ற மகிழ்ச்சியுடன் செய்தும் திருவருள் ஞானத்தை அறிவுறுத்தும் ஞானியே, சிவஞான தேவர் என யாவரும் போற்றும் திருப்பெயர் பூண்ட சிவமணியே, எம்மைக் காப்பது இனி யுன் கடமையாகும். எ.று.

கலகத்தால் விளைவது துன்பமாகலின் அதனை யுண்டு பண்ணும் மனத்தைக் ''கலகமனம்'' என்றும், பிழை செய்தற்குக் காரணம் மனமாதலால், ''கலக மனமுடைய என்பிழை'' என்றும், பிழை கண்டும் பொறுத்து இன்முகத்தோடு வரவேற்று ஆதரவு செய்து இருந்து கேட்டொழுகும் மாணவனாகக் கொண்ட குறிப்பு விளங்க, ''ஆட்கொண்ட கருணையங் கடலமுதமே'' என்றும் புகழ்கின்றார். கடலிடத்தே பிறந்த அமுதம் போல்வதுபற்றிச் சிவஞான தேசிகரை, ''கடலமுதமே'' எனக் குறிக்கின்றார். அவர் திருஞான சம்பந்தப் பெருமானைக் குலகுருவாகப்

பேணி வழிபடுபவராதலால், அப்பரம்பரை ஏதுவாகத் தேசிகரையே ஞானசம்பந்தராகக் கருதி அவர் சீர்காழியில் மூவாண்டில் ஞானப்பால் உண்டு செஞ்சொற் பதிகங்கள் பாடிய வரலாற்றை நினைந்து "சம்பந்த வள்ளலாம் கடவுளே" எனப் போற்றுகின்றார். ஞானப் பாலுண்ட சம்பந்தப் பெருமானை, "தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும், தாவில் தனிச் சிவஞான சம்பந்தராயினார்" (ஞான. புரா) என்று சேக்கிழார் பெருமான் தெரிவிப்பதால், "சுரர் முனிவர் சித்தர்கள் யோகர் கருது சமயாதிபர்களும் கைகுவித் தருகு நின்றேத்த" எனவும், சம்பந்தர் உண்டருளிய பாலடிசில் "எண்ணரிய சிவஞானத் தின்னமுதம்" எனப்படுவதால், வள்ளற் பெருமான், "மெய்ப் போதம்" எனவும் மொழிகின்றார். செம்பவளத் திருமேனியனாகலின் சிவபிரானை, "கண்ணுதற் பவளமலை" என்றும், கருமுகில் மலைகளின்மேல் மழை பொழிவதுபோல் ஞானசம்பந்தர் சிவன்மேல் திருப்பதிகம் பாடிய செய்தியை, "கண்ணுதற் பவளமலையில் கண்டு பொழி அருள் முகில் சம்பந்த வள்ளல்" என்று உரைக்கின்றார். சிவஞான தேசிகர் திருவோத்தூரில் இருந்து திருக்கோயில் திருப்பணி புரிந்தமையின், "ஓத்தூரினில் கவினுற விளங்கு நற்பணிகள் கரையற்ற மகிழ்வினொடு செய்து" எனவும், தம்மையடைந்தவர்க்குச் சித்தாந்த சைவ ஞானநூற் கருத்துக்களை உரைத்தமை புலப்பட, "அருள் புரிந்திடும் காட்சியே" எனவும் எடுத்துரைக்கின்றார். சிவஞான தேசிகர் என்பது அவர் பெயரென்பது பற்றிச் "சிவஞானியாம் கருத வரும் ஒரு திருப்பெயர் கொள் மணியே" எனப் பரவுகின்றார். தமக்குச் சிவஞானக் கருத்துக்களை விளக்கினமையால், "எமைக் காப்பது என்றும் உன் கடன்" என்று வள்ளற்பெருமான் அன்பு கனிய வழுத்துகின்றார்.

இதனால் வடலூர் வள்ளல் திருவோத்தூரில் சிவஞான தேவர்பால் சைவ ஞானக் கருத்துக்கள் பலவற்றிற்கு விளக்கம் பெற்றமை தெரிவித்த வாறும்.

திருச்சிற்றம்பலம்

19. ஞான சிகாமணி திருச்சீர் அட்டகம்

அஃதாவது திருவோத்தூரிற் சிவப்பணிச் செல்வராய் விளங்கிய சிவஞான தேசிகர்க்குரிய ஞான சிகாமணியென்ற திருப்பெயரை வியந்து மேற்கொண்டு அவருரைத்த திருவருள் ஞானத்தை நினைந்துப் பாராட்டிப் பாடிய எட்டுப் பாக்களைக் கொண்ட பாமாலை என்பது. அட்டகம்-எட்டுப் பாக்களையுடையது.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2502 அணிவா யுலகத் தம்புயனும்
அளிக்குந் தொழிற்பொன் அம்புயனும்
அறியா அருமைத் திருவடியை
அடியேஞ்தரிசித் தகங்குளிர
மணிவாய் மலர்ந்தெம் போல்வார்க்கு
மறையுண் முடிபை வகுத்தருள
வயங்குங் கருணை வடிவெடுத்து
வந்து விளங்கு மணிச்சுடரே
பிணிவாய் பிறவிக் கொருமருந்தே
பேரா னந்தப் பெருவிருந்தே
பிறங்கு கதியின் அருளாறே
பெரியோர் மகிழ்விற் பெரும்பேறே
திணிவாய் எயிற்சூழ் திருவோத்தூர்
திகழ அமர்ந்த சிவநெறியே
தேவர் புகழுஞ் சிவஞானத்
தேவே ஞான சிகாமணியே.

உரை : அழகமைய வுலகத்தைப் படைத்த பிரமனும் அவ்வுலகைக் காக்கும் தொழிலைப் புரியும் திருவீற்றிருக்கும் தோள்களையுடைய திருமாலும் அறிய மாட்டாத திருவடியை அடியவர்களாகிய நாங்கள் கண்டு மனம் குளிர்ச்சி பெறவும், எம்மைப் போன்றவர்க்கு வேதமுடிபான மெய்ம்மைப் பொருளைத் திருவாய் மலர்ந்துரைக்கவும், விளங்குகின்ற திருவருளுருக் கொண்டு எழுந்தருளிச் சிறப்புறும் ஞானமணியொளியே, துன்பம் பொருந்திய பிறவிப் பிணிக்கு மருந்தாகியவனே, பேரின்பம் நல்கும் பெருமை கொண்ட புதுமைப் பொருளே, உயர்ந்த கதியை அடைவிக்கும் அருள் நெறிப் பயனே, பெரியவர்கள் மகிழ்ந்து பெறும் பேருகியவனே, வன்மை பொருந்திய மதில் சூழ்ந்த திருவோத்தூர் விளக்கமுற எழுந்தருளிய சிவநெறிச் செல்வனே, தேவர்கள் புகழ்ந்து பரவும் சிவஞானத் தேவனே, நீ சிவஞானிகட்குச் சிகாமணியாவாய். எ.று.

நில முதலாகிய ஐம்பூதங்களால் ஆகிய இவ்வுலகம் காலந்தோறும் இடந்தோறும் வாழும் மக்கட்கு இனிய காட்சி வழங்கி இன்புறுத்தலால் "அணிவாய் உலகம்" என்றும், இதனைப் படைத்த பிரமன் தாமரைப் பூவில் இருப்பவனுதலால் "அம்புயன்" என்றும் புகழ்ந்துரைக்கின்ருர். பொன்னம்புயன், திருமகள் வீற்றிருக்கும் தோள்களையுடையவன். பொன் - திருமகள். திருவடியை மனத்திற் கொண்டவராதலின், அடியார் களால் அதனைக் காண்பது இனிதின் இயல்வதாயிற்றென்பது விளங்க, "திருவடியை அடியேம் தரிசித் தகங்குளிர" எனவும், மறைகள் உரைக்கும் பொருள் முடிபான சித்தாந்த சைவ வுண்மையை எடுத் தோதுவதுபற்றி, "மணிவாய் மலர்ந்து எம்போல்வார்க்கு மறையுள் முடிபை வகுத்தருள" எனவும், ஞானமுணர்த்தும் குருபரனைச் சிவ னென்றே கொண்டு பரவும் மரபினுல், "வயங்கும் கருணை வடிவெடுத்து வந்து விளங்கும் மணிச்சுடரே" எனவும் புகழ்கின்ருர். சிவபரம் பொருளே குருவாய் உருக்கொண்டு வருவன் என்பதைச் சிவஞான போதம், "அருவாகி நின்ருனை யார் அறிவார் தானே உருவாகி வாரானேல் உற்று" என வுரைக்குமாக, "கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி, மண்ணிடையில் மாக்கள் மலமகற்றும்— வெண்ணெய் நல்லூர் மெய்கண்டான்" (இருபா) என அருணந்தி சிவனுர் உரைப்பது காண்க. குரு முதல்வனது திருமேனி அருளுருவம் என்று சைவ நூல்கள் கூறுதலால், "வயங்கும் கருணை வடிவெடுத்து வந்து விளங்கும் மணிச்சுடரே" எனக் கூறுகின்ருர். குருவைச் சிவ மென்று கொள்வதால் மணியென்றது மாணிக்கமணி என அறிக. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" (சிவப்) என உமாபதி சிவனுர் கூறுவதால், சிவஞான தேவர் உரைத்த சைவப் பொருளை, "மறையுள் முடிபு" என வுரைக்கின்ருர். நோயிற்ருேன்றி நோயுற்று முடிதலால், பிறவியைப் "பிணிவாய் பிறவி எனப் பேசுகின்ருர். குரு" முதல்வனது அருளுரை பிறவியைப் போக்கும் மருந்தாவதுபற்றி, "பிறவிக்கு ஒரு மருந்தே" எனவும், நோய் நீங்க எய்துவது இன்ப மாதலால், "பேரானந்தப் பெருவிருந்தே" எனவும் இயம்புகின்ருர். பிறங்குதல் - உயர்தல். எல்லாவற்றினும் உயர்ந்ததாகலின் சிவகதி "பிறங்கு கதி" எனப்படுகிறது. சிவப்பேற்றுக்குரியது அருணெறி யாவதால், "பிறங்கு கதியின் அருளாறே" என்றும், பெரியோர்களால் விரும்பப்படுதலின், "பெரியோர் மகிழ்விற் பெரும் பேறே" என்றும் இசைக்கின்ருர். சேயாற்றின் பெருக்கால் அலைக்கப்படினும் சலியாத் திண்மையுடைமைபற்றித் "திணிவாய் எயில் சூழ் திருவோத்தூர்" என்கின்ருர். கற்றலும் கற்ருங்கு நிற்றலும் நிற்பித்தலும் உடையவராதல் விளங்கச் சிவஞான தேவரை, "ஞான சிகாமணி" என நவில்கின்ருர். சிகாமணி - முடிமணி. சிவஞான தேவர் எனற்பாலது சிவஞானத்தேவர் என வந்தது தமிழ்நூல் முடிபு.

இதனுல், சிவகுரு சிவஞான தேவர் என்பது தெரிவித்தவாறும். (1)

2503. நின்பால் அறிவும் நின்செயலும்
நீயும் பிறிதன் றெமதருளே
நெடிய விகற்ப உணர்ச்சிகொடு
நின்றாய் அதனால் நேர்ந்திலைகாண்
அன்பால் உன்பால் ஒருமொழிதந்
தனம்இம் மொழியால் அறிந்தொருங்கி
அளவா அறிவே உருவாக
அமரென் றுணர்த்தும் அரும்பொருளே
இன்பால் என்பால் தருதாயில்
இனிய கருணை இருங்கடலே
இகத்தும் பரத்தும் துணையாகி
என்னுள் இருந்த வியனிறைவே
தென்பால் விளங்குந் திருவோத்தூர்
திகழும் மதுரச் செழுங்கனியே
தேவர் புகழுஞ் சிவஞானத்
தேவே ஞான சிகாமணியே.

உரை : நின்னிடத்துளவாகிய அறிவும் சத்தியும் செயற் சத்தியும் ஆன்மாவாகிய நீயும் தொழிற்படுதற்குக் காரணம் எமது அருளல்லது வேறில்லை; நெடுங் காலமாக நீ விகற்ப வுணர்வினால் வேறாயினாய்; அதனால் உண்மை ஞானம் எய்தாயாயினாய்; உன்பால் உண்டாகிய அன்பினால் ஓர் உண்மை யுரையை யுரைக்கின்றோம்; அதனைக் கொண்டு உணர்வொன்றி அளவிறந்த ஞானமே யுருவாகக் கருதி அமைக என்று அறிவுறுத்தும் அரும்பொருளே, இன்பமுடன் எனக்கு அருளும் தாய் போல இனிய கருணையைச் செய்யும் பெரிய ஞானக் கடலாகியவனே, இகம்பரம் இரண்டினும் எனக்குத் துணையாய் என்னுடைய உள்ளத்தில் எழுந்தருளும் பெரும் நிறைவே, தென்றிசைக்கண் விளங்குகின்ற திருவோரின்கண் ஒளிரும் இனிமை மிக்க செழுமையான அறிவுக் கனியே, தேவர்கள் புகழ்ந்தேத்தும் சிவஞான தேவனே, நீ சிவஞானி களின் சிகாமணியாவாய். எ.று.

ஆன்மாவுக்கு அறிவு விழைவு செயல் ஆகிய மூன்று சத்திகளும் இயல்பாகவே யுண்மைபற்றி, "நின்பால் அறிவும் நின் செயலும்" என வுரைக்கின்றார். கேவலத்தில் மலப்பிணிப்பால் இயக்கமின்றிக் கிடக்கும் ஆன்மாவைச் சகலத்திற் செலுத்தி யியக்குவது சிவத்தின் சிற்சத்தி யாகிய திருவருளாதலால், "நின்பால் அறிவும் நின் செயலும் நீயும் பிறிதன்று எமதருளே" எனவும், அதனையுணராது நான் என்னும் தற்போத வுணர்வுற்று வேறாய் நின்றாய் என்பாராய், "நெடிய விகற்ப வுணர்ச்சி கொடு நின்றாய்" எனவும், அதனால் திருவருளுண்மையை யுணரா தொழிந்தாய் என்பாராய், "அதனால் நேர்ந்திலை காண்" எனவும், உன்பால் எமக்குண்டாய அன்பினால் சிவாய என்ற ஒரு மொழிப் பொருளுண்மையை யுரைத்தாய் என்றற்கு "அன்பால் உன்பால் ஒரு மொழி தந்தனம்" எனவும், உலகுடல் கருவி கரணங்களின் வேறாய் அருள் ஞானப் பேற்றுக்குரிய அறிவுருவாவது தெளிந்து அறிவாகிய சிவத்தின்கண் ஒன்றுவாயாக என்பாராய், "அளவா அறிவேயுருவாக

அமர்'' எனவும், இவ்வாறு சிவஞான தேவர் உரைத்தமை விளங்க,'' என்று உணர்த்தும் அரும்பொருளே'' எனவும் கூறுகின்றார். ஒரு மொழி, சிவாய, என்பது. சி அறிவேயாகிய சிவத்தையும், வ திருவருளையும், ய ஆன்மாவையும் குறிப்பன; ஆன்மாவாகிய ய சிவசத்தியாகிய திருவருளால் இயங்கிச் சிவவுணர்வுற்றுச் சிவமாந்தன்மை எய்துவது என்பது இம்மொழி யுணர்த்தும் பொருளாகும். அளவா அறிவு - சிவம். சிவஞானமே யுருவாவது சிவோகம் பாவனையால் எய்துவதென்பர். திருநாவுக்கரசர் "நண்ணரிய சிவானந்த ஞானவடிவே'' யாயினர் எனச் சேக்கிழார் பெருமான் உரைத்தருளுவது காண்க. இது சைவ மெய்ந் நூல்கள் உரைக்கும் அரிய வுண்மையாதலால், இதனை அறிவுறுத்தும் சிவஞான தேவரை, "அரும் பொருளே'' எனப் போற்றுகின்றார். இனிய பொருளொன்றை இன்பமாகப் பேசி அன்புடன் அளிக்கும் தாய்போலச் சைவ ஞானச் செம்பொருளைத் தமக்கு வழங்கிய சிவஞான தேவரின் கருணையை வியக்கின்றாராகலின், வள்ளற் பெருமான், "இன்பால் என்பால் தருதாயில் இனிய கருணை யிருங்கடலே'' என இசைக்கின்றார். இகம் - இவ்வுலக வாழ்வு. பரம், மேலுலக வாழ்வு. ஞானப்பொருள் உள்ளத்திருப்பதால் அதனைத் தந்தருளிய ஞானியும் உடனிருக்கும் இயைபுபற்றி "இகத்தும் பரத்தும் துணையாகி என்னுள் இருந்த வியன் நிறைவே'' என்று இயம்புகின்றார். வியல் - பெருமை. நினைவு சொற் செயல்களால் இனிமையுடைமைபற்றி, "மதுரச் செழுங்கனியே'' என்று புகழ்கின்றார்.

இதனால் சிவஞான தேவர் உரைத்தருளிய சைவ ஞானச் செம்மொழிப் பொருளைத் தெரிவித்தவாறும். (2)

2504 அசையும் பரிசாந் தத்துவமன்
றவத்தை அகன்ற அறிவேநீ
ஆகும் அதனை எமதருளால்
அலவாம் என்றே உலவாமல்
இசையும் விகற்ப நிலையைஒழித்
திருந்த படியே இருந்தறிகான்
என்றென் உணர்வைத் தெளித்தநினக்
கென்னே கைம்மா றறியேனே
நசையும் வெறும்பும் தவிர்ந்தவர்பால்
நண்ணும் துணையே நன்னெறியே
நான்தான் என்னல் அறத்திகழ்ந்து
நாளும் ஓங்கு நடுநிலையே
திசையும் புவியும் புகழோத்தூர்ச்
சீர்கொள் மதுரச் செழும்பாகே
தேவர் புகழுஞ் சிவஞானத்
தேவே ஞான சிகாமணியே.

உரை: நிலையாத இயல்பையுடைய தத்துவ வகையைச் சேர்ந்தவனல்லை நீ; அவத்தைகட்கு இடமாகிய உடலின் வேறாகிய அறிவாவாய்;

திருவருளால் அவத்தைகளும் ஆன்மா வல்லவாம் என்று எண்ணி நீக்க மின்றி வந்து பொருந்தும் விகற்ப நிலையைக் கையொழித்து இயல்பாய் இருந்தவாறே இருந்து திருவருள் நெறியை அறிவாயாக என என்னுடைய அறிவைத் தெளிவித்து உனக்கு யான் என்ன கைம்மாறு செய்வதென அறிகிலேன்; விருப்பு வெறுப்புக்களில்லாத சான்றோர்க்குத் துணைவனே, நன்னெறி காட்டுபவனே, நான், நான் எனும் முனைப்பற்று நாளும் உயர்ந்தோங்கும் நீதியுருவே, நிலவுலகும் அதனைச் சூழ விளங்கும் திசைகளுமாகிய எங்குமுள்ளவர் புகழ்ந்தேத்தும் திருவோத்தூர்க்கண் இருந்தருளும் சீர்கொண்ட இனிய செழும் பாகு போன்றவனே, தேவர்கள் புகழும் சிவஞான தேவனாகிய நீ ஞான சிகாமணியாவாய். எ.று.

நிலமுதல் சிவம் ஈருகக் கூறப்படும் தத்துவங்கள் முப்பத்தாறும் மாயையில் தோன்றியொடுங்கும் காரியப் பொருளாதலின், "அசையும் பரிசாம் தத்துவம்" எனவும், ஆன்மா அவற்றுள் ஒன்றன்று என்றற்குத் "தத்துவம் அன்று" எனவும், தத்துவத் தொகுதியாகிய உடற்கண் உயிர் எய்தும் சாக்கிரம் சொப்பன முதலாகிய ஐவகை அவத்தைகளும் ஆன்மா வல்ல என்றற்கு "அவத்தை யகன்ற நீ" எனவும், இவ்விரண்டினும் வேருய் அறிவுருவாயது ஆன்மா என்பாராய், "அறிவே நீ ஆகும்" எனவும், அவ்வுண்மையைத் திருவருள் அறிவு கொண்டு அவத்தைகள் ஆன்மாவின் வேறென்று உணர்க" என்பார், "அதனை எமது அருளால் அலவாம் என்று உணர்க" எனவும், முக்குண வயத்தால் விடாது வந்து பொருந்தும் விகற்ப நிலையை நீக்குதல் வேண்டுதல் என்பாராய், "உலவாமல் இசையும் விகற்ப நிலையை யொழித்து" எனவும், அறியாமை யொடு கூடாமல் அறிவாயிருக்கும் அந்நிலையிலேயே இருந்து திருவருள் இயக்கத்தை அண்ணியறிக என்றற்கு "இருந்தபடியே இருந்து அறி காண்" எனவும், இவ்வாறு உண்மை ஞானத்தை அறிவுறுத்த பலத்தை நினைந்து இதற்குத் தாம் செய்யக் கடவ கைம்மாறு அறியாமை புலப்படுப்பாராய், "என் உணர்வைத் தெளித்த நினக்கு என்னே கைம்மாறு அறியேன்" எனவும் இயம்புகின்றார். வேண்டுதல் வேண்டாமை என்று இரண்டையும் முற்றக் கெடுத்த மேலான ஞானிகட்குச் சிவஞானம் இனிய துணையாவதுபற்றி, "நசையும் வெறுப்பும் தவிர்த்தவர்பால் நண்ணும் துணையே" என்றும், இங்கே கூறிய திருவருள் நெறியை யாவர்க்கும் தெளிவாகக் காட்டுவதுபற்றி "நன்னெறியே" என்றும் கூறுகின்றார். நான் நினைத்தேன், நான் சொன்னேன் நான் செய்தேன் என நிற்கும் தன் முனைப்பைப் பற்றறக் கெடுத்துத் திருவருளே யுருவாய் நிற்பது விளங்க, "நான் நான் என்னல் அறத்திகழ்ந்து நாளும் ஓங்கும் நடுநிலையே" என்கின்றார். நடுநிலை - நீதி. "நீதி பலவும் தன்ன வுருவாம் என மிகுத்தவன்" எனத் திருஞானசம்பந்தர் தெரிவிப்பது காண்க. இனிய பண்புடைமை பற்றிச் சிவஞான தேவரைச் "சீர்கொள் மதுரச் செழும் பாகே" என்று போற்றுகின்றார்.

இதனால் தத்துவ தாத்துவங்களின் வேருய் ஐவகை யவத்தையை உடையதேயன்றி அவத்தை யாவதின்றாய ஆன்மா அறிவுரு என விளக்கியவாறும்.

2505. கண்மூன் றுடையான் எவன்அவனே
கடவுள் அவன்தன் கருணைஒன்றே
கருணை அதனைக் கருதுகின்ற
கருத்தே கருத்தாம் அக்கருத்தை
மண்மூன் றறக்கொண் டிருந்தவரே
வானோர் வணங்கும் அருந்தவராம்
....
....

உரை : மூன்று கண்களை யுடையவன் எவனோ அவனே கடவுளாவான்; அவனது அருளொன்றே திருவருளாகும்; அதனை நினைக்கின்ற நினைவே நன்னினைவாம்; மண்ணாசை முதலிய மூன்று ஆசைகளையும் முற்றவும் கெடுத்து அந்நினைவைக் கொண்டிருப்பவரே தேவர்கள் வணங்கும் அரிய தவமுடையவராவர்... ... ... எ.று. (4)

இப்பாட்டின் எஞ்சிய பகுதியும், பிற பாட்டுக்களும் இறந்தன.

திருச்சிற்றம்பலம்

20. திருஞான சம்பந்தர் தோத்திரம்

திருவோத்தூர் வேதநாதனை வழிபட்டுக்கொண்டு அங்கே சிவப் பணிச் செல்வராய் விளங்கிய சிவஞான தேவர்பால் விடை கொண்டு காஞ்சியம்பதிக்குச் சென்று சேர்ந்த வடலூர் வள்ளற் பெருமான் திருவேகம்பரையும் காமக் கொடியாகிய உமாதேவியையும் வணங்கிப் பரவுகின்றார். திருவேகம்பத்தைப் பணிவுடன் பராவிய வள்ளற் பெருமான், திருவேகம்பரைத் திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதியத்தில் கருத்தைச் செலுத்தி யின்புறுவதுடன் திருஞானசம்பந்தப் பெருமானைப் பின்வரும் ஒரு பாட்டால் போற்றுகின்றார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2506. **திருத்தகுசீர்த் தமிழ்மறைக்கே முதலாய**
வாக்கதனால் திருப்பேர் கொண்டு
கருத்தர்நம தேகம்பக் கடவுளையுட்
புறங்கண்டு களிக்கின் றோய்நின்
உருத்தகுசே வடிக்கடியேன் ஒருகோடி
தெண்டனிட்டே உரைக்கின் றேன்உன்
கருத்தறியேன் எனினு(முனைக்) கொடுமுயல்வேன்(தனை)
யன்பால் காக்க அன்றே.

உரை: அருட் செல்வம் தகவுற நிறைதலால் சிறப்புறும் தமிழ் மறையாகிய திருமுறைக்கு முதலாக விளங்குகின்ற திருப்பெயரை நினைவிற் கொண்டு தலைவராகிய நம்முடைய திருவேகம்பரை அகத்தும் புறத்தும் கண்டு மகிழ்கின்ற பெருமானே, நின்னுடைய அழகிய சிவந்த திருவடிக்கண் ஒரு கோடி வணக்கம் செய்து, உனது திருவுள்ளமறியே னென்றாலும், உன்னையே தலைவனாகக் கொண்டு திருவருட் பேற்றுக்கு முயல்கின்றேனாகலின் என்னைக் காத்தருள்க. எ.று.

திரு - திருவருளாகிய செல்வம். சைவத் திருமுறைகள் அனைத்தையும் தமிழ்மறையென்று சான்றோர் போற்றிப் புகழ்வது கொண்டு, "திருத்தகுசீர்த் தமிழ்மறை" எனச் சிறப்பிக்கின்றார். திருமுறைத் தொகுப்பின்கண் முதல் திருமுறையில் முதல் திருப்பதியத்தின் முதற் றிருப்பாட்டின் முதற் சீரே "தோடுடைய செவியன்" எனத் தொடங்குகிறது; அதனால், "தமிழ் மறைக்கே முதலாய வாக்கு" என அதனைக் குறிக்கின்றார். தோடுடைய செவியன் என்பதையே தலைவனாகிய சிவபெருமான் திருப்பெயராமென ஞானசம்பந்தர் மனங்கொண்டிருந்தார் என்பார், "திருப்பேர் கொண்டு கருத்தர் நமது ஏகம்பக் கடவுளை யுட்புறம் கண்டு களிக்கின்றோய்" என வுரைக்கின்றார். தோடுடைய

செவியன் என்ற தொடரை, "எல்லையிலா மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை மல்லல் நெடுந்தமிழ்" (ஞானசம்ப. புரா) எனச் சேக்கிழார் கூறுவது ஈண்டு நினைவுகூரத் தக்கது. உருத்தகு சேவடி - அழகு பொருந்திய திருவடி. வணக்கங்களின் பன்மை தோன்ற, "ஒரு கோடி தெண்டன்" என்கிறார். தெண்டன் - வணக்கம். தண்டுபோல் வீழ்ந்து வணங்குவது தெண்டனிடல் என வழங்குகிறது. முயலுதல் - திருவருளைப் பெறுதற்கு முயல்வதாகும். முயற்சியில் அயர்வுற்று வழுவாதவாறு என்னைக் காத்தல் வேண்டும் என்றற்கு "முயல்வேன் தனை அன்பால் காக்க" என்று கூறுகின்றார்.

இதனால், திருவருள் ஞானம் பெற முயல்கின்ற தமக்குத் துணை புரிய வேண்டுமெனத் திருஞான சம்பந்தரை வணங்கியவாறும். (1)

திருச்சிற்றம்பலம்

21. சிங்கபுரிக் கந்தர் பதிகம்

சிங்கபுரி என்பது குறிஞ்சிப் பாடி என்னும் ஊர்க்கு அருகில் உளது. இங்கே கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமானை நம் வள்ளற் பெருமான் இப் பதிகம் பாடிப் பரவுகின்றார். தமது சோதரர் சபாபதிப் பிள்ளையின் "ரோக நிவாரணார்த்தம்" வள்ளலார் பாடியதாக ஏட்டுப் பிரதிக் குறிப்பொன்று கூறுவதாகத் திருவருட்பா வரலாற்றுப் பதிப்பாசிரியர் தெரிவிக்கின்றார். இதனை யாக்கிய காலம் 6-5-1864 எனவும் அக் குறிப்பு அறிவிக்கின்றது. இந்நூலின் தொடக்கத்தில் விநாயகர் காப்புச் செய்யுளொன்று காணப்படுவதால் இது தனி நூலாகச் செய்யப்பட்டமை தெரிவிக்கிறது. எடுத்துக் கொண்ட இலக்கியம் இடுக்கணின்றி இனிது முடிதற் பொருட்டுக் காப்புப்பாவது மரபாகும்.

காப்பு—நேரிசை வெண்பா

2507. பொன்மகள் வாழ் சிங்கபுரி போதன் அறு மாமுகன்மேல்
நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாம்உரைக்கச்—சின்மயத்தின்
மெய்வடிவாம் நங்குருதாள் வேழமுகன் தன்னிருதாள்
பொய்யகலப் போற்றுவம்இப் போது.

உரை : திருமகள் வீற்றிருக்கின்ற சிங்கபுரியின்கண் கோயில் கொண்டருளும் ஞானமூர்த்தியாகிய ஆறுமுகக் கடவுள்மேல் நலம் மிக்க செந்தமிழ்ப் பாமாலையை யாம் செய்தற்கு ஞானத்தின் உண்மை வடிவாகிய நமது குருவின் திருவடியும் யானைமுகக் கடவுளின் திருவடியும் பாட்டிடையே பொய் முதலிய குற்றங்கள் புகாதபடி இப்போது போற்றி வணங்குவோமாக. எ.று.

திருமகளைப் பொன் மகள் என்று கூறுகிறார், அப்பெருமாட்டி பொன்னும் பொருளும் அருளுபவள் என்பதுபற்றி, போதன் - ஞானவான் சிவனுக்குப் பிரணவ ஞானத்தை யுரைத்தான் முருகப்பெருமான் என்பது கொண்டு "போதன் அறுமாமுகன்" என வுரைக்கின்றார். "ஈசனொடு ஞான மொழி பேசு முகம் ஒன்று" என்பர் அருணகிரிநாதர். ஓதுபவர்க்கு நலம் மிகவுண்டாம் என்பாராய், "நன்மை மிகு செந்தமிழ்ப்பா" என்று சொல்லுகின்றார். செந்தமிழ்ப்பா என இங்கே குறிப்பது செந்தமிழாற் பாடப்படும் இப் பதிகத்தையாம் என அறிக. சின்மயம் - ஞானம். மெய்ஞ்ஞானமே யுருவாகியவன் தம்முடைய குருபரன் என்றற்கு. "சின்மயத்தின் மெய்வடிவாம் நம் குரு" என்று இசைக்கின்றார், உருவில்லாத ஞானம் உருக்கொண்டு வந்தாற்போல்பவன் குரு என்பது கருத்து. வேழம் - யானை. தன்னையறியாமல் பொய்மையும் பிற

குற்றங்கள் புகலாமென அஞ்சுகின்றமை விளங்க, "பொய்யகலப் போற்றுவம் இப்போது" என்று புகல்கின்றார்.

இதனாற் குருபரன் திருவடியையும் வேழமுகன் சேவடியையும் பாட்டிடையே பொய்யும் வழுவும் புகாமற் காத்துக் கோடற்குப் பரவியவாறும். (1)

நூல்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2503. **சீராரு மறையொழுக்கந் தவிராது**
நான்மரபு சிறக்க வாழும்
ஏராரு நிதிபதிஇந் திரன்புரமும்
மிகநாணும் எழிலின் மிக்க
வாராருங் கொங்கையர்கள் மணவாளர்
உடன்கூடி வாழ்த்த நாளும்
தேராரு நெடுவீதிச் சிங்கபுரி
தனில் அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : சிறப்புப் பொருந்திய வைதிக வொழுக்கம் தவறாத நான்கு சாதியினரும் செம்மையுற்று வாழும் அழகு பொருந்திய செல்வ வேந்தனாகிய இந்திரனது அமராவதியென்னும் நகரம் தானும் மிகவும் நாணும்படிப் பொலிவு கொண்டதும், கச்சணிந்த கொங்கைகளையுடைய மங்கையர்கள் தத்தம் கணவருடன் கூடி நாடோறும் வாழ்த்தி வணங்க வுள்ளதுமான தேரோடும் நெடிய தெருக்களையுடைய சிங்கபுரிக்கண் விரும்பியுறையும் தெய்வ மலை போன்றவனே, அருள் புரிக. எ.று.

மறையென்பது, சாதி முறைகளை வகுத்து ஒவ்வொன்றிற்கும் ஒழுக்கம் உரைத்த மிகுதி நூல். நான்மரபு - அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் மரபு. சிறத்தலாவது, தனித்தனியே ஓங்குவது. ஏர் - அழகு. நிதிபதி - சங்கநிதி பதுமநிதி எனப்படும் நிதிகட்குத் தலைவன். இந்திர வுலகத்துத் தலைநகர் அமராவதி என்பர், வளமும் பொற்பும் கண்டு நிகராகாமை எண்ணி மனம் சுருங்கும் என்பார், "மிக நாணும்" என்று விளம்புகிறார். மனையறம் பேணும் மகளிர் நாளும் வாழ்த்தி வழிபடும் நலம் புலப்பட, "வாராரும் கொங்கையர்கள் மணவாளருடன் கூடி நாளும் வாழ்த்து" என வுரைக்கின்றார். தேர் - நான்கு சக்கரங்களையுடைய வண்டி. செம்மலைபோல் உயர்ந்தோங்கிய தோற்றமுடைமை விளங்க, முருகனைத் "தெய்வக் குன்று" எனப் புகழ்கின்றார். பாட்டுத்தோறும் இது மகுடமாய் நிற்கிறது.

இதனால் சிங்கபுரிக் குடிச்சிறப்பும் ஒழுக்க நலமும் செல்வ வளமும் மக்களின் வழிபாட்டியல்பும் உரைத்தவாறும். (2)

2509 உம்பர்துயர் கயிலைஅரற் கோதிடவே
அப்பொழுதே உவந்து நாதன்
தம்பொருவில் முகமாறு கொண்டுநுதல்
ஈன்றபொறி சரவ ணத்தில்
நம்புமவர் உயவிடுத்து வந்தருளும்
நம்குகனே நலிவு தீர்ப்பாய்
திங்கள் தவழ் மதில்சூழும் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை: தேவர்கள் தாம் உற்ற துன்பத்தைச் சிவபிரானுக்கு முறையிட்ட அக்காலத்தே நாதனாகிய அவனும் ஒப்பில்லாத முகம் ஆறு கொண்டு நுதற் கண்ணில் தோற்றுவித்த தீப்பொறிகள் ஆறினையும் சரவணப் பொய்கையில் விரும்புகின்ற தேவர்கள் உய்யும் பொருட்டு உய்ப்ப, ஆறும் திரண்ட உருவாகிய குகப் பெருமானே, சந்திரன் தவழ்ந்து செல்லுமாறு உயர்ந்த மதில் சூழ்ந்த சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே எமக்குற்ற நோயைத் தீர்த்தருள வேண்டுகிறோம். எ.று,

கயிலை மலையில் இருப்பவனாதலால், சிவனைக் "கயிலை யரன்" என்று சிறப்பிக்கின்றார். தேவர்கள் அசுரரால் தமக்குற்ற துன்பத்தைக் கயிலை மலையை யடைந்து சிவபெருமானுக்குத் தெரிவித்தமை புலப்படக் கயிலை மலையை விதந்து மொழிகின்றார். நாதன் - அவன் என்னும் சுட்டுப் பொருண்மை தோன்ற நின்றது. பொருவில் முகம் - ஒப்பற்ற திருமுகம். நுதற் பொறிகளைச் சரவணப் பொய்கையில் விடுத்தமைக்குக் காரணம் கூறுவார், "நம்புமவர் உய்ய" என்று கூறுகின்றார். நம்புதல் - விரும்புதல், ஆர்வ மிகுதி தோன்ற "நம் குகனே" என்று உரைக்கின்றார். திருக் கோயிலின் மதில் உயர்வு புலப்படத் "திங்கள் தவழ் மதில்" என்று கூறுகின்றார்.

இறைவன் தேவர்களின் உய்திபற்றித் தோன்றியவனாதலால் எமது நலிவு தீர்த்தருள்க என முறையிட்டவாறும். (3)

2150. பொல்லாத சூர்க்கிளையைத் தடிந்தமரர்
படுந்துயரப் புன்மை நீக்கும்
வல்லானே எனதுபிணி நீ நினைந்தால்
ஒருகணத்தில் மாறி டாதோ
கல்லாதேன் எனினும்எனை இகழாதே
நினதடியார் கழகங் கூட்டாய்
செல்லாதார் வலிஅடக்கும் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை: பொல்லாதவர்களாகிய சூரவன்மாவின் கூட்டத்தை யழித்துத் தேவர்கள் பட்ட துன்பத்தால் உண்டாகிய குறையைத் தீர்த்தருளிய வல்லமையுடைய முருகப் பெருமானே, நீ திருவுளம் கொண்டால் எமக்குற்ற நோய் ஒரு கணப்பொழுதில் நீங்கிவிடுமன்றோ;

திருவருளறிவு பெருதவனுயினும் என்னையிகழ்ந்து ஒதுக்காமல் நின்னுடைய அடியார் கூட்டத்தில் சேர்த்தருள்க; பகைவரது வலிமையை ஒடுக்கும் சிங்கபுரியில் எழுந்தருளும் தெய்வக்குன்றமே, எ.று.

தீமையை செய்தமைபற்றிச் சூரவன்மாவையும் அவன் கூட்டத்தை யும் ''பொல்லாத சூர்க்கிளை'' எனக் கூறுகின்ருர். தடிதல் - குறைத்தல்' ஈண்டு அழித்தல் மேற்று, ''சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்'; (முருகு) என்று பெரியோர் உரைப்பர். துன்பத்தால் உளதாகும் மனக் குறை புன்மை விளைவித்தலின், ''படுந்துயரப் புன்மை'' என்கின்ருர். வல்லான் - வல்லமையுடையவன். மாறுதல் - கெடுதல். மனத்தைப் பிணித்துத் தன்னையே நிணைக்கச் செய்தலால், நோய் ''பிணி'' எனப்படு கிறது. கல்லாமை - திருவருள் ஞானமில்லாமை. கழகம் - கூட்டம். கூட்டுதல் -சேர்த்தல். செல்லாதார் - மாறுபட்ட பகைவர். மெய் வலியும் மனவலியும் பிற வலிகளும் அடங்க, வலியெனப் பொதுவாகப் புகல்கின்ருர்.

இதனுல், முருகப்பெருமான் திருவுளம் கொண்டால் பிணியெல்லாம் கணப்பொழுதில் தீர்ந்துவிடும் எனத் தெரிவித்தவாரும். (4)

2511. **பண்டுறுசங் கப்புலவர் அருஞ்சிறையைத்**
தவிர்த்தருளும் பகவ னேஎன்
புண்தருஇந் நோய்தணிக்கப் புரையிலியோய்
யான்செய்யும் புன்மை தானே
தண்டைஎழில் கிண்கிணிசேர் சரணமலர்க்
கனுதினமும் தமியேன் அன்பாய்த்
தெண்டனிடச் செய்தருள்வாய் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, முன்னுளில் வாழ்ந்த சங்கப் புலவரான நக்கீர தேவர் அடைபட்டிருந்த விலக்கரிய சிறையைப் போக்கி அவரது துன்பத்தைத் துடைத்தருளிய பகவனே, மனத்தைப் புண்படுத்தும் எனது நோய் வெம்மையை நீக்கு தற்குத் தடையாவது, ஒப்பில்லாதவனே, யான் செய்த தீவினையோ, அறிகிலேன்; தண்டையும் அழகிய கிண்கிணியும் அணிந்த திருவடிக்கண் தமியனுகிய யான் வணங்கி வழிபட அருள் புரிவாயாக. எ.று.

பண்டு, முன்பு மதுரையில் சங்க மிகுந்த காலம். சங்கத்திலிருந்த புலவர்கட்குத் தலைவராய் விளங்கிய நக்கீரரை, ''சங்கப் புலவர்'' எனப் பொதுப்பட மொழிகின்ருர். அவர் சிவ பூசை தவறிய குற்றத்துக்காக ஒரு பூதத்தால் கற் குகையிற் சிறை வைக்கப்பெற்ற துன்ப நிலையை, ''அருஞ்சிறை'' என்றும், அங்கே அவர் முருகாற்றுப்படையைப் பாடி முருகப் பெருமானுல் சிறைவீடு பெற்று உய்ந்த வரலாற்றை, ''தவிர்த் தருளும் பகவனே'' என்றும் குறிக்கின்ருர். பகவன் - இறைவன். புண் - ஈண்டு மனப்புண் மேற்று. புரையிலி - ஒப்பில்லாதவன். புரையிலாய் என்பது புரையிலியாய் என நின்று ஈற்றயல் ஆகாம் ஓகாரமாயிற்று.

புன்மை, கீழ்மைச் செய்கையான தீவினை மேற்று. சரண மலர் - திருவடித் தாமரை. தெண்டன் - வணக்கம்.

இதனுல் நோக்கித் திருவடியை வணங்கி யுய்ய அருள்க என வேண்டியவாரும். (5)

2512. தாவாத வசியர்குலப் பெண்ணினுக்கோர்
கரமளித்த சதுரன் அன்றே
மூவாத மறைபுகலும் மொழிகேட்டுன்
முண்டகத்தாள் முறையில் தாழ்ந்து
தேவாதி தேவன்எனப் பலராலும்
துதிபுரிந்து சிறப்பின் மிக்க
தீவாய்இப் பிணிதொலைப்பாய் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே

உரை : சிங்கபுரியிற் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, பண்பு கெடாத வணிகர் குலப் பெண்ணெருத்திக்கு வெட்டுண்ட கையை யளித்தருளிய வித்தகன் என்று முதிர்ந்தொழியாத மறைநூல்கள் சொல்லு கின்ற மொழியைக் கேட்டறிந்து உனது தாமரை போலும் திருவடியை முறைப்படி வணங்கித் தேவாதி தேவன் என்று பலரும் துதித்துப் பரவும் சிறப்பால் மேன்மையுற்ற பெருமானே, நெருப்புப் போற் கனலுகின்ற இந்த நோயைத் தீர்த்தருளுக. எ.று.

நற்குண நற்பண்புகளாற் கெடுதல் இல்லாத வணிகரினத்துப் பெண் என்றற்குத் "தாவாத வணிகர் குலப் பெண்" என்று கூறுகின்ருர். வணிகர் குலப் பெண்ணெருத்தி இளமையிலிருந்தே முருகன்பால் பேரன்பு கொண்டு முருகா என்ற திருப்பெயரை ஓதி வாரா நிற்ப மணமான பின் அவள் கணவன் அப்பெயரைக் கூறலாகாது மறுத்தும் ஒரு நாள் அவள் தன்னை மறந்து முருகா வெனக் கைகூப்பி மொழியக் கண்டு கூப்பிய கையை வெட்டி விட்டானுக, அது கண்டும் அவள் முருகப் பெயரைச் சொல்லி அரற்றினுள்; முருகன் திருவருளால் வெட்டுண்ட கை பழைய படியே உருவாயிற் றென்பது வரலாருதலால், அதனை "வசியப் பெண்ணினுக்கு ஓர் கரம் அளித்த சதுரன்" என்றும், அவ்வரலாறு முருகன் புகழ் கூறும் நூல்களில் பண்டிருந்தே வழங்கி வருவது தோன்ற, "மூவாத மறை புகலும் மொழி" யென்றும் மொழிகின்ருர். சதுரன், வித்தகன்; சதுரப் பாடுடையவன் என்றலும் உண்டு. மறைநூல், பழமை யான நூல்கள்; நிலை பெற்று வழங்கி வருவது விளங்க "மூவாத மறை" என்கின்ருர். முண்டகம், தாமரை. வணங்குதற்குரிய முறை பிறழாமல் வணங்குமாறு புலப்பட, "முறையில் தாழ்ந்து" என்று கூறுகின்ருர். தாழ்ந்து துதி புரிந்து என இயையும். தேவாதி தேவன், தேவர்கட்குத் தலையாய தேவன்; தேவ தேவன் என்பதாம். துதி புரிந்து பரவும் என ஒரு சொற் பெய்து கொள்க. சிறப்பால் மிக்க பெருமானே என உரை கூறினும், "சிறப்பின் மிக்க சிங்கபுரி" என இயைத்துக் கொள்க. நெருப்புப் போல் வெதுப்பி வருத்துகின்ற நோய் என்றற்குத் "தீவாயிப் பிணி" எனக் குறிக்கின்ருர். "ஒரு முருகா வென்றுள்ளங் குளிர வுவந்

துடனே, வருமுருகா வென வாய்வெருவா நிற்பக் கை யிங்ஙனே, தருமுருகா வென்றுதான் புலம்பா நிற்கும் தையல் முன்னே, திருமுருகாற்றுப் படையுடனே வரும் சேவகனே" என வரும் தனிப் பாட்டும் வணிகப் பெண்ணின் வரலாற்றை வற்புறுத்துகிறது.

இதனல், வணிகப் பெண்ணுக்குக் கரமளித் தருளிக் குறை நீக்கியது போல எனக்குற்ற தீப்பிணியைப் போக்கி யருளுக என விண்ணப்பித்த வாறும். (6)

2513, வானவர்கோன் மேனளில் தரமறியா
திகழ்ந்துவிட விரைவில் சென்று
மானமதில் வீற்றிருந்தே அவன்புரிந்த
கொடுமைதனே மாற்றும் எங்கள்
தானவர்தம் குலம்அடர்த்த சண்முகனே
இப்பிணியைத் தணிப்பாய் வாசத்
தேனவிழும் பொழில்சூழும் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : மணம் கமழு தேனைச் சொரியும் சோலைகள் சூழ்ந்த சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, "தேவர்கட் கரசனகிய இந்திரன் முருகப் பெருமான் மிக்க சிறுவனுய் விளையாடுவது கண்டு உண்மைத் திறத்தை யுணராமல் இகழ்ந்து படை கலை விடுத்துப் போர் தொடுக்கவே, முருகன் விரைந்து விமானத்தில் இனிது இருந்து கொண்டே அவ்விந்திரன் செய்த போர் வகைகளை யழித்து வெல்லும், அசுரர் கூட்டத்தை வேரோடழித்த எங்கள் சண்முகப் பெருமானே, எனக்குற்ற இந்நோயைப் போக்கி யருள்வாய். எ.று.

வானவர் - வானுலகத்துத் தேவர்கள். கோன், ஈசன்; இங்கே இந்திரன் மேற்று. முருகப் பெருமானது மெய்ம்மை வன்மையை யுணராமல் சிறுவன் என்று இகழ்ந்து போர் தொடுத்தமையின், தரமறியாது இகழ்ந்துவிட" எனக் கூறுகின்ருர். "நொய்தாம் குழவி யெனக் கொள்கிலம் நோன்மை நாடின், வெய்தாம் அவுணக் குழுவோரினும் வெய்யன் யாரும், எய்தாத மாயம் உளனல் இவன் தன்னை வெம்போர், செய்தாடல் கொள்வம் இவண் என்று தேர்ந்து சூழ்ந்தார்" (திருவிளையாட்டு) எனக் கந்தபுராணம் உரைப்பது காண்க. மானம், விமானம். வணங்கி வாழ்த்துவ நேர்மையாக அதனை விடுத்து இந்திரன் போர் தொடுத்தது கொடுமையாதலால், "அவன் புரிந்த கொடுமை" என வள்ளலார் கூறுகின்ருர். போர் வகை யத்தனையும் கெடுத்தமையால், "கொடுமைதனை மாற்றும் எங்கள் சண்முகனே" என்று புகழ்கின்ருர். சண்முகன் - ஆறு முகங்களை யுடையவன். தீயாய் வெதுப்புவது பற்றி "இப்பிணியைத் தணிப்பாய்" என்று சாற்றுகின்ருர். நறுமணம் கமழும் மலர்கள் சொரியும் தேனை, "வாசத் தேன்" எனச் சிறப்பிக்கின்ருர்.

இதனல் பிள்ளைப் பருவத்தேயே இந்திரனை வென்ற பெருமையைக் கூறி நோய் நீங்க வேண்டியவாறும். (7)

2514. மட்டாரும் பொழில்சேரும் பரங்கிரிசெந்
தூர்பழனி மருவு சாமி
நாட்டாரும் பணிபுரியும் ஆறுதலை
மலைமுதலாய் நணுகி எங்கள்
ஒட்டாதார் வலிஅடக்கி அன்பர் துதி
ஏற்றருளும் ஒருவ காவாய்
தெட்டாதார்க் கருள்புரியும் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை: வஞ்சனை முதலிய குற்றமில்லாத நல்லவர்க்கு அருள் செய்யும் சிங்கபுரியிற் கோயில் கொண்டிருக்கும் தெய்வக் குன்றமே, தேன் பொருந்திய சோலைகளை யுடைய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் பழனி முதலிய திருப்பதிகளில் எழுந்தருளும் சாமியே, அன்பராயினோர் திருப்பணிகளைச் செய்யும் ஆறுதலைகளை யுற்று மலை நாட்டுக்கு முதல்வனுய் மேவி, பகைவரது வலிமையை அழித்து, அன்பர்கள் பணிந்து போற்றும் துதிகளை யேற்று வேண்டும் வரங்களை நல்கும் ஒருவனே, எங்களைப் பிணி நீக்கிக் காத்தருள்வாய். எ.று.

மட்டு - தேன். மட்டாரும் பொழில் சேர் என்பதனைச் செந்தூர் பழனியாகியவற்ருேடும் ஒட்டுக. சாமி என்பது முருகனுக்குரிய பெயர்களில் ஒன்று. முருகனுக்குத் தந்தை யென்னும் பொருளில் சிவனைச் "சாமி தாதை" என்று திருமுறை யாசிரியர்கள் கூறுவர். நட்டார், அன்பர். நட்டாரும் பணி புரியும் என்பதை ஆரும் நட்டுப் பணியும் என இயைத்து யாவரும் அன்புற்றுப் பணி புரியும் எனக் கொள்ளினும் அமையும். மலை நிலத்துக்குக் கடவுளாதலால் "மலை முதல்" எனக் கூறுகிருர். "சேயோன் மேய மைவரை யுலகம்" என்பது தொல்காப்பியம். ஒட்டாதார் - பகைவர்; ஒட்டாமைக்கு ஏது வலிமைச் செருக்காதலின், "வலியடக்கி" என்றும், அன்பர் அன்பு செய்தோங்குதற் பொருட்டுத் "துதி யேற்றருளும் ஒருவ" என்றும் இயம்புகின்ருர். "ஒருவன்" என்ற பெயர் சிவனுக் குரியதாயினும், முருகன் சிவத்தின் வேறல்லனுதல் பற்றி "ஒருவ" எனச் சிறப்பிக்கின்ருர். நோய் நீக்கம் குறித்து இப் பதிகம் பாடப்படுதலால், காவாய் என்றதற்குப் பிணி நீக்கிக் காத்தருள் எனப் பொருளுரைக்கப்பட்டது.

இதனுல் பிணிகளின் நீக்கிக் காக்குமாறு வேண்டியவாரும். (8)

2515. முன்செய்த மாதவத்தால் அருணகிரி
நாதர்முன்னே முறையிட் டேத்தும்
புன்செயல்தீர் திருப்புகழை ஏற்றருளும்
மெய்ஞ்ஞான புனிதன் என்றே
என்செயலில் இரவுபகல் ஒழியாமல்
போற்றியிட இரங்கா தென்னே
தென்திசைசேர்ந் தருள்புரியும் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : தென்னுட்டில் அமைந்து அன்பர்கட்கு அருள் வழங்கும் சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, முற்பிறப்பில் செய்த பெரிய தவத்தின் பயனுக அருணகிரி நாதர் முற்காலத்தில் நின் பால் முறையிட்டுப் பரவும் குற்றமில்லாத திருப்புகழை ஏற்று அருள் செய்யும் மெய்ஞ்ஞான புனிதனே என்று எனது செயலாக இரவும் பகலும் நீங்காமல் போற்றி வழிபட்டேனுகவும், நீ எனக்கு மனமிரங்காமல் இருப் பதை என்னென்பது. எ.று.

தென்திசை - தென்னுடு. முன்னுளில் அருணகிரி நாதர் தோன்றித் திருப்புகழைப் பாடித் திருவருள் பெற்றதற்குக் காரணம் முற் பிறவியிற் செய்த நற்றவம் என்பார், "முன் செய்த மாதவத்தால்" என்று மொழி கின்ருர். தாம் பாடிய திருப்புகழில் தாம் செய்துழந்த வினை வகைகளை யெடுத்தோதி முறையிட்டமையின், "முறையிட் டேத்தும் திருப்புகழ்" என்றும், பொது மகளிர் புல்லிய செயல்களை விரியக் கூறித் தமது மனத் தைத் தூய்மை செய்து கொண்டமை தோன்றப் "புன்செயல்தீர் திருப் புகழ்" என்றும் உரைக்கின்ருர். இரங்காதது என்பது இரங்காது என வந்தது, உம்மையை விரித்துக் கொள்க.

இதனுல் அருணகிரி நாதர்க்கு முருகன் அருள் புரிந்த குறிப்புணர்த்தி வழிபட்டவாறும். (9)

2516, **விண்ணவர்க்கோன் அருந்துயர நீங்கிடவும்**
மாதுதவ விளைவும் நல்கும்
கண்ணகன்ற பேரருளின் கருணையினுல்
குஞ்சரியைக் காத லோடு
மண்ணுலகோர் முதல்உயிர்கள் மகிழ்ந்திடவும்
மணம்புரிந்த வள்ள லேஎன்
திண்ணியதீ வினைஒழிப்பாய் சிங்கபுரி
தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, தேவர்கள் வேந்தனுன இந்திரனது பொறுத்தற்கரிய துன்பம் ஒழியவும், அவன் மகளாகிய அமுதவல்லியின் தவத்தின் பயனை விரிந்ததன் பேரருளால் நுகர்விக்கும் கருணையுடன் தேவயானை யென்ற பெயர் கொண்ட மங்கையைக் காதலன்பினுல் மண்ணுலகத்து மக்கள் முதல் பல்லுயிர்களும் கண்டு மகிழ்ச்சி யுறவும் திருமணம் செய்து கொண்ட வள்ளலாகிய முருகப் பெருமானே, திண்ணிதாகிய எனது தீவினையைப் போக்கி யருள்வாயாக. எ.று.

சூரவன்மனைத் தலைவனுகக் கொண்ட அசுரர்கள் இந்திரனுக்கும் ஏனைத் தேவர்கட்கும் செய்த மிக்க துன்பங்களைத் தொகுத்துரைக்கு மாற்ருல் "விண்ணவர்கோன் அருந்துயரம்" என வுரைக்கின்ருர். அருந் துயரம் - போக்குதற் கரிய துன்பம். மாது - ஈண்டு இந்திரன்பால் மகளாக வளர்ந்த தெய்வயானை. திருமால் பெற்ற பெண் மக்களான அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற இருவரும் முருகப் பெருமானை மணந்து கொள்ள

வேண்டித் தவம் கிடப்ப, "இந்திரன் பாங்கர் அண்மி இருமதி அமுத வல்லி" (களவுப்) என முருகன் உரைத்தவண்ணம், அமுதவல்லி செய்த தவப்பயனை, "மாது தவ விளைவு" எனக் குறிக்கின்றார். முருகன் அருட் கடலாதல் தோன்றக் "கண்ணகன்ற பேரருள்" என்கின்றார். யானையைக் குஞ்சாம் என்பவாகலின், "குஞ்சரி" எனத் தெய்வயானையை யுரைக் கின்றார். சுந்தரவல்லியைக் களவு மணம் செய்தமையின், "காதலோடு" எனக் குஞ்சரி மணத்தைச் சிறப்பிக்கின்றார். உயிர்கள் உணர்வு வடிவின எனச் சமயநூல்கள் உரைத்தலால் "மண்ணுலகோர் முதல் உயிர்கள் மகிழ்ந்திட" என்கின்றார். நுகர்ந்து கழிப்பதனாலோ முதல்வன் திருவரு ளாலோ அன்றிப் பிறவாற்றால் தன்னைச் செய்த உயிரை விடாது பிணித்தலால், தீவினையைத் "திண்ணிய தீவினை" எனக் கூறுகின்றார்.

இதனால் இந்திரனுற்ற துயர் நீங்கவும் உயிர் வகைகள் கண்டு மகிழவும் முருகன் தெய்வயானை யம்மையைத் திருமணம் செய்து கொண்ட கருத்தை விளம்பியவாறும். (10)

2517. மாசகன்ற சிவமுனிவர் அருளாலே
மானிடமாய் வந்த மாதின்
ஆசில்தவப் பேறளிக்க வள்ளிமலை
தனைச்சார்ந்தே அங்குக் கூடி
நேசமிகு மணம்புரிந்த நின்மலனே
சிறியேனை நீயே காப்பாய்
தேசுலவு பொழில்சூழும் சிங்கபுரி
தனில் அமர்ந்த தெய்வக் குன்றே.

உரை : ஒளி பொருந்திய சோலை சூழ்ந்த சிங்கபுரியில் கோயில் கொண்டருளும் தெய்வக் குன்றமே, குற்றமில்லாத சிவ முனிவர் அருள் நோக்கால் மான் வயிற்றில் மானுட மகளாய் வந்த பெண்ணாகிய வள்ளி யம்மையார்க்குக் குறையில்லாத தவப் பயனை யளித்தற்கு வள்ளி மலையை யடைந்து அங்கே அவளைக் கூடி அன்பு மிக்க களவு மணம் செய்து கொண்ட தூயவனே, சிறியவனாகிய என்னைக் காத்தருள்வாயாக. எ.று.

மனமாசில்லாத முனிவர் என்றற்கு "மாசகன்ற சிவமுனிவர்" எனவும், அவர் காண எதிரே போந்த அழகிய மானை அவர் நோக்கிய செவ்வி கண்டு அதன் வயிற்றில் மானுடக் குழவியாய்த் தோன்றினாளாகலின், வள்ளிநாயகியை, "சிவமுனிவர் அருளாலே மானிடமாய் வந்த மாது" எனவும் இசைக்கின்றார். முன்பு திருமாலுடைய மகளாய்ச் சுந்தரவல்லி யென்ற பெயருடன் முருகப் பெருமானை மணந்து கோடற்கு அரிய தவம் புரிந்த வரலாறு விளங்க, "ஆசில் தவப் பேறளிக்க" எனக் கூறுகின்றார். ஆசு - குற்றம் வள்ளிமலைச் சாரலில் புனங்கா வல்புரிந்த வள்ளி நாயகியைக் கண்டு களவிற் கூடினமையின். "வள்ளிமலை தனைச் சார்ந்தே அங்குக் கூடி" எனவும், பின்னர்ச் சுற்றம் போற்றத் திருமணம் செய்து கொண்டது பற்றி, "நேசமிகு மணம் புரிந்த நின்மலனே" எனவும் இயம்புகின்றார். திருமணத் தால் அன்பு மிகுவது பற்றி "நேசமிகு மணம்" என்கின்றார். நின்மலன் -

இயல்பாகவே மலமில்லாத தூயவன் பிணியாற் சிறுமை யுற்றமையின், ''சிறியேன்'' என்றும், பிணி நீக்கி யருளல் வேண்டும் என்றற்கு. ''நீயே காப்பாய்'' என்றும் இசைக்கின்ருர். பசுமையால் சோலைகட்கு உளதாகும் ஒளி இங்கே ''தேசு'' எனப்படுகிறது.

இதனுல், முருகப் பெருமான் வள்ளிநாயகியை மணந்தருளிய வரலாறு கூறித் தனக்குற்ற பிணி நீக்கி அருளுக என வேண்டியவாரும், (11)

திருச்சிற்றம்பலம்

22. சித்தி விநாயகர் பதிகம்

வடலூர்க் கணிமையிலுள்ள கருங்குழிக்கண் கோயில் கொண்டருளும் விநாயகப் பெருமானுக்குச் சித்தி விநாயகர் என்று பெயர்; அதனால், அப் பெருமானைப் பாடிய இப்பதிகம் சித்தி விநாயகர் பதிகம் எனப்படுகிறது. தன்னைச் சிந்தித்து வழிபடுவோர் விரும்புவன பலவும் கைவரப் பெறுவிக்கும் நலம் பற்றிச் சித்தி விநாயகர் என்று பெரியோர் பெயர் குறித்துள்ளனர். அன்பர்கட் குண்டாகும் இடையூறு போக்கியருளும் அருட் செல்வன் என்ற பொருளில் விநாயகனை விக்கினேச்சுரன் என்று விளம்புகின்றார்.

நேரிசை வெண்பா

2518. அஞ்சுமுகத் தான்மகன்மால் அஞ்சுமுகத் தான் அருள்வான்
அஞ்சுமுகத் தான்அஞ் சணிகரத்தான்—அஞ்சுமுக
வஞ்சரையான் காணு வகைவதைத்தான் ஓர் அரையோ
டஞ்சரையான் கண்கள் அவை.

உரை: ஈசானம் முதலிய ஐந்து முகங்களையுடைய சிவனுக்கு மகனும், திருமால் சக்கரப் படையை யிழந்து பெற மாட்டாது அஞ்சிய விடத்து அதனைப் பெறுவித்தருளியவனும், புலன் மேற் செல்லும் ஆசையைந்தும் அன்பர்கள்பால் கெடுதற் கருளும் ஐந்தாகிய அழகிய கைகளையுடையவனும், கண்கள் மூன்று உடையவனுமாகிய விநாயகப் பெருமான், அஞ்சத் தக்க இயல்பையுடைய வஞ்சகர்களை யான் கூடிக் கெடாதவாறு போக்கியருளுவான். எ.று.

சிவனுக்கு முகம் ஐந்து என்றும், அவை ஈசானம், தற்புருடம், சத்தியோ சாதம், வாமம், அகோரம் என ஐந்தென்றும் கூறுவர். "திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்பது கந்தபுராணம். மால் அஞ்சு முகத்தான் அருள்வான் என்பது, திருமாலின் சக்கரப் படையை விநாயகரின் கணங்களில் ஒன்று வாயிற் கவ்விக் கொள்ள அதனைப் பெறுமாறறியாது அஞ்சியபோது செய்வகை தெரிவித்து அதனைப் பெறுவித்த காஞ்சிப் புராண விகடச் சக்கர விநாயகர் வரலாற்றை யுட்கொண்டுளது. கண்கள் அவை, "சாத்தனவன் வந்தான்" என்றாற் போல்வது. விநாயகற்கும் கண்கள் மூன்று என்பதை, "கண்கள் மூன்றுடைய செங்கரும்பே" (2530) எனப் பிறிதோரிடத்தும் கூறுவதால் அறிக. இது சொற் பின்வரு நிலை என்னும் அணிவகை. வதைத்தல்-போக்குதல். வதைத்துக் காப்பான் எனற் பாலது வன்புறை குறித்து வதைத்தான் என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. புலன்கள் ஐந்தாம் என அறிக. உகுதல் - ஒழிதல். விநாயகன் ஐந்து கரத்தனனது தன்பால்

அன்பு செய்யும் ஆன்மாக்களின் ஆசைகளைக் கெடுத்தற் பொருட்டு என்க. தணிகைப் புராணமுடையார் இப் பொருண்மை விளங்கப் பாயிரத்துட் கூறுவது காண்க. அஞ்சு முக வஞ்சர், கண்டார் அஞ்சத் தக்க இயல்பு கொண்ட வஞ்சகர். "அகத் தின்னா வஞ்சரை யஞ்சப்படும்" (குறள்) எனச் சான்றோர் உரைப்பதறிக. ஓர் அரையோடு அஞ்சரை, ஆறரையாய் மூன்றாவது காண்க.

இதனால், விநாயகப் பெருமான் வஞ்சரோடு கூடிக் கெடாதவாறு அருளியது வியந்து போற்றியவாறும். (1)

2519. வாதாகா வண்ண மணியேஎம் வல்லபைதன்
நாதாகா வண்ண நலங்கொள்வான்—போதார்
வனங்காத்து நீர் அளித்த வள்ளலே அன்பால்
இனங்காத் தருளாய் எனை.

உரை : எம்முடைய அழகிய மாணிக்க மணி போல் திருமேனியை யுடையவனே; வல்லபையென்னும் தேவிக்குக் கணவனே; சோலைகள் நல்ல வண்ணமும் வளமும் பெறும் பொருட்டுப் பூக்கள் பொருந்திய இந்திரன் அமைத்த நந்தனவனத்தைக் காத்து நீர் பெருகுவித்த வள்ளலே, என்னையும் என்னினத்து அடியாரையும் காத்தருள்க; காலம் தாழ்க்கு மாற்றால் வாது செய்தல் வேண்டா. எ.று.

மாணிக்கமணி போற் சிவந்த திருமேனி யுடையனாதலின் விநாயகப் பெருமானை "வண்ண மணியே" எனக் கூறுகின்றார். "துப்பார் திருமேனித் தும்பிக்கையான்" (வாக்கு) என்பர் ஔவையார். வல்லபை, விநாயகப் பெருமானுக்கு அருட் சத்தி. நாதன், கணவன். வண்ணம் - பசுமை; நலம் - நறுமலரும் இன்கனியும் தண்ணிழலும் பொருந்திய வளம். போதார் வனம், பூக்கள் நிறைந்ததும், இந்திரனால் அமைக்கப் பெற்றதுமான நந்தன வனம். இந்திரன் வேண்ட நீர் வளம் பெறுவித்ததை, "சுர குலாதி பன் தூமலர் நந்தனம் பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்" (பிரபு) என்று துறைமங்கலம் சிவப் பிரகாச அடிகள் உரைப்பது காண்க. வாது - ஈண்டுக் காலம் தாழ்ப்பது குறித்தது. இனம் சூழ வாழ்தல் அறமாகலின், "இனம் காத்தருள்வாய்" என வேண்டுகின்றார்.

இதனால் தன்னையும் தன் இனத்தையும் காத்தருள்க என வேண்டியவாறும். (2)

எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2520. உலகெலாம் தழைப்ப அருள்மத அருவி
ஒழுகுமா முகமும்ஐங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியும் இரண்டோ
டிரண்டென ஓங்குதிண் தோளும்

திலகவாள் நுதலார் சித்திபுத் திகளைச்
சேர்த்தணைத் திடும்இரு மருங்கும்
விலகுறு தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : சித்திகள் பலவும் நல்கி உலகுயிர்கள் யாவும் வளம் பெறற் பொருட்டு அருளாகிய மத நீரை யருவி போலச் சொரியும் யானை முகமும், ஐந்து கைகளும் விளங்குகின்ற சிவந்த திருமேனியின் தோற்றமும் நான்காய் ஓங்கும் திரண்ட தோள்களும் திலகமிட்டு ஒளி திகழும் நெற்றியை யுடைய மகளிரான சித்தியும் புத்தியுமாகிய இருவரை இரு பக்கத்தும் இருத்தி யணைத்து விளங்கும் நின் திருவடி நீழலை நீங்காமல் இருக்க விரும்புகிறேன்; எய்தும் இடையூறுகளை விலக்கி யருளும் விநாயகப் பெருமானே எ.று.

பலவாகிய உலகங்களில் எண்ணிறந்த உயிர்கள் வாழ்தலால் அவைகள் ஆங்காங்கு இனிது வாழ அருளும் முதல்வனுதல் தோன்ற, "உலகெலாம் தழைப்ப அருள் மாமுகம்" என்று சிறப்பிக்கின்றார். மா யானை. யானைக்கு இரு கன்னங்களிலும் மத மொழுகுதல் இயல்பாகலின், யானை முகக் கடவுளிடத்து அருள் மத நீராக ஒழுகுகிற தென்பார், "மத வருவி ஒழுகு மாமுகம்" என்று கூறுகின்றார். சிவநாத திருமேனியின்கண் அருளொளி விளங்குதல் பற்றி, "இலகு செம்மேனிக் காட்சி" எனப் புகல்கின்றார். தோள்களுக்கு உயர்வும் திண்மையும் அழகு தருதலால் "ஓங்கு திண்தோள்" என்கின்றார். திலகம் - மகளிர் நெற்றியில் இடும் மங்கலக் குறிப்பு. சித்தி புத்தி யென்ற மகளிர் இருவரும் கயமுகாசுரன் புதல்விகளாவர் என விநாயக புராணம் கூறுகிறது. இடம் வலமாகிய இரு மருங்கிலும் இரு மகளிரும் இருப்ப, இரு கைகளாலும் அவரை அன்பு மிகுதி தோன்ற அணைத்திருக்கும் அருட்காட்சி திருவடிகளைப் பரவும் அன்பர்க்கு இன்பம் மிகுவித்தலால், "விலகுறு தெளியேன் விழைந்தனன்" எனத் தெரிவிக்கின்றார். அருளுக என்பது குறிப்பெச்சம். சித்தி விநாயகன் - சித்திகள் பலவும் நல்கி யருளும் சிறந்த தலைவன்; விக்கினேச்சுரன் - விக்கினங்களைப் போக்கும் முதல்வன். விக்கினம் - இடையூறு.

இதனால் விநாயகரது திருவுருவ நலம் புகழ்ந்து அக்காட்சி யின்பத்தை நீங்காது இருந்துபெற அருளுக என வேண்டியவாறும். (3)

2521. உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும்
உறுபொருள் யாவும்நின் தனக்கே
கள்ளமும் கரிசும் நினைந்திடா துதவிக்
கழல்இணை நினைந்துநின் கருணை
வெள்ளம்உண் டிரவு பகல்அறி யாத
வீட்டினில் இருந்துநின் னோடும்
விள்ளல்இல் லாமல் கலப்பனோ சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : சித்தி விநாயக விக்கினேச்சுரனே, என்னுடைய உடம்பும் உயிரும் உள்ளமும் உணர்ச்சியும் என்பால் உள்ள பொருள்கள் யாவும் உனக்கே யுரியவாக்கிக் கள்ளமும் குற்றமும் பொருந்திய நினைவுகளைக் கொள்ளாமல், நன்னிலையைத் தந்து, உன்னுடைய திருவடியிரண்டையும் நினைந்து நினது திருவருளாகிய இன்ப வெள்ளத்திற் படிந்து நுகர்ந்து இரவு பகல் இல்லாத வீட்டுலகின்கண் நின்னினின்றும் நீங்குதலற்ற கலப்பெய்தி இன்புறுவேனே எ.று.

உடல், உயிர், பொருள் மூன்றையும் சேர வுரைத்தல் இயல்பாயினும், உயிர்க்குரிய உள்ளமும் உணர்ச்சியும் விரித்துரைக்கின்றார். உணர்ச்சியைத் தூண்டிச் செயற்படுத்துவதும், உணர்ந்தவற்றைத் தெளிவதும் உள்ளமாதலின், உள்ளமும் உணர்ச்சியும் எனக் கூறுகின்றார். முன்னோர்வழி எய்தியனவும் தாந்தாம் ஈட்டியனவும் அடங்க "உறுபொருள்" என்கின்றார். கள்ளம் - கரவுடைச் செயல். கரிசு - குற்றம். நினைக்கும் கருவியாகிய உள்ளம் நேர்பட நினைத்தற்கும் திருவருள் துணை வேண்டுதலின், "கள்ளமும் கரிசும் நினைந்திடாது உதவி" என வுரைக்கின்றார். திருவடிக்கண் ஒன்றிய நினைவு திருவருளை எய்துவித்தலால், "கழலிணை நினைந்து நின் கருணை வெள்ளம் உண்டு" எனவும், திருவருளின்ப நுகர்ச்சி வீட்டின்பத்தின் வேறன்மை தோன்ற, "கருணை வெள்ளம் உண்டு இரவு பகல் அறியாத வீட்டினில் இருந்து" எனவும், வீடு பேறெய்தினோர் அத் துவிதக் கலப்புற்று மீளப் பிறந்திறந்துழலும் பிறவிச் சூழற்கு வாரா ரென்பது பற்றி, "நின்னோடும் விள்ளவில்லாமல் கலப்பனே" எனவும் விளம்புகின்றார். விள்ளல் - நீங்குதல். விள்ளாக் கலப்பு - அத்துவிதக் கலப்பு.

இதனால், திருவடியே நினைந்து அத்துவிதக் கலப்பு எய்துவது விரும்பியவாறும். (4)

2522. நாதமும்கடந்து நிறைந்துநின் மயமே
நான்என அறிந்துநான் தானும்
பேதமும் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ
ஏதமும் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமும் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : குற்றத்தையும் சமயப் போரையும் கைவிட்டுச் சிறந்த நன்மக்கள் மனத்திலும் ஏழையாகிய என் தலையிலும் வேதத்தின் கண்ணும் எழுந்தருளும் திருவடியையுடைய சித்தி விநாயகனே, விக்கினேச்சுரப் பெருமானே, சிவ தத்துவத்தைக் கடந்து அதற்கப்பாலதாகிய தத்துவாதீதப் பெருவெளியில் நிறைந்து விளங்கும் நின்மய சிவஞான வண்ணமே என் வண்ணமென வுணர்ந்து நான் வேறு சிவம் வேறும் என்னும் வேற்றுமை யெல்லையின் நீங்கிய மௌன நிலையை பேதையாகிய யான் பெற்று மகிழ்வது எக்காலமோ, உணர்த்தியருள்க. எ.று.

நாதம் - சுத்த மாயையின் உச்சியின் கண்ணதாகிய சிவ தத்துவம். நில முதல் சிவ மீருகிய தத்துவ முப்பத்தாறும் மாயா காரியமாதலால் அம்மாயா மண்டிலத்துக்கப்பால் உள்ள தத்துவாதீதப் பரவெளியில் குறைவற நிறைந்து விளங்கும் பரசிவத்தை, "நாதமும் கடந்து நிறைந்த நின்மயம்" என்று குறிக்கின்ருர். நின்மல ஞான சிவாகாரம் நின்மயம் எனப்படுகிறது. மக்களின் நீங்கிய சுத்தான்மா சிவானந்த ஞான வடிவுற்றுச் சிவமாம் தன்மை பெறுதலால், "நின்மயமே நான் என அறிந்து" என்றும், அந்த ஞானவின்பநிலை எய்தும் ஆன்மா சிவமயமாதலால், "நான் தானும் பேதமும் கடந்த மௌன ராச்சியம்" என்றும் இயம்புகின்ருர். சுத்தாவத்தையில் பசுத்தன்மையின் நீங்கிப் பதி கரணங்களாகப் பெறுதலால், மாயா காரிய வுலகியல் நினைவும் பேச்சும் செயலும் அகன்றெழிந்து அதீதத்தை யடைந்திருக்கும் நிலைமையை "மௌன ராச்சியம்" எனக் குறித்து அதனைப் "பேதையேன் பிடிப்பது எந்நாளோ" என ஏங்குகின்ருர். மௌனராச்சியப் பேற்றுக்குச் சிவஞானம் இன்றியமையாமையின், "பேதையேன்" எனத் தம்மை வலூடர் வள்ளல் உரைக்கின்ருர். ஏதம் - காமம் குரோதம் முதலாகவுள்ள குற்றங்கள். சமயவாதம் செருக்கும் சினமும் பயந்து சிறுமை விளைவித்தலால், சமய வுண்மை ஒருமைகளையுணர்ந்த சான்ருேர், "ஏதமும் சமயவாதமும் விடுத்தோர்" எனப் புகழ்கின்ருர். "ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள் ஒன்ருேடொன்ருெவ்வாமல் உள பலவும், அவற்றுள், யாது சமயம் பொருள் நூல் யாதிங் கென்னில் இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி, நீதியினுல் இவை யாவும் ஓரிடத்தே காண நின்றது யாதொரு சமயம் அது சமயம்" எனச் சிவஞான சித்தியார் தெரிவிப்பது காண்க. சமய வாதம் விடுத்தோர் திருவுள்ளம் சமரச சன்மார்க்க நினைவுற்று பரம்பொருள் ஒருமையுணர்வால் விளங்குதல் பற்றி, "சமய வாதம் விடுத்தோர் இதயம்" சித்தி விநாயகர்க்கு இடமாதலை எடுத்துரைக்கின்ருர். திருவடி ஞான முடைமையின், "ஏழையேன் சிரம்" எனவும், ஞான நூலாதல் பற்றி "வேதமும் தாங்கும் பாதனே" எனவும் இசைக்கின்ருர்.

இதனுல், தத்துவாதீத சிவானந்த ஞான நிறைவாகிய மௌன நிலையை விளக்கி அதனைப் பெறற்கருளுக என வேண்டியவாரும். (5)

2523. சச்சிதா னந்த வடிவம்நம் வடிவம்
தகும்அதிட் டானமம்மற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை இவற்றைப்
போக்கியாங் கவ்வடி வாகி
அச்சிதா கார போதமும் அதன்மேல்
ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : சித்தி விநாயக விக்கினேச்சுரப் பெருமானே, நமது வடிவம் சச்சிதானந்தமான அகள வடிவம்; ஏனைய அருவுருவும் உருவுமாகிய இரண்டும் அதிட்டானமாகும்; மேலும் பொய்யறிவானுலான ஆபாசக்

கற்பனை வடிவங்களுமாகும்; இவற்றை விலக்கி, அந்த அகள வடிவாய் அந்த அறிவுருவ ஞானமும் அதற்கு மேற்பட்ட இன்ப ஞானமும் விடுத்தலே மெய்ம்மை யுணர்வாம் வீடு பேறு என அறிவுருத்தருளினை; இதனை என்றும் மறவேன். எ.று.

அருவம் - அருவுருவம், உருவம் என்று மூவகைப்படும் திருமேனிகளில் அருவமென ஞானநூல் கூறும் திருமேனி. சத்தும் சித்தும் ஆனந்தமுமாகிய சச்சிதானந்தம்; அருவத்தை யாரும் அறிவறிதாகிய அகளத் திருமேனியென ஆன்றோர் கூறுவர். ஏனை அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி யிரண்டும் பரமனல் அதிட்டிக்கப்படுவனவாதலால் "தரும் அதிட்டானம் மற்றிரண்டும்" என்று இசைக்கின்றுர். இவ்வுருவிரண்டும் பொய்யான மக்களறிவால் ஆபாசமாகக் கற்பனையாற் படைக்கப்படுவனவாதலின் அவை பொருளல்லாதவையென விலக்கற்குரியன என்றற்கு "இரண்டும் பொய்ச் சிதாபாசக் கற்பனை இவற்றைப் போக்கி" எனக் கூறுகின்றுர். பொய்ச்சித் ஆபாசக் கற்பனை - பொய்யறிவு கொண்டு செய்யும் ஞானிகளால் விரும்பப்படாத விபரீதப் படைப்பு. அங்கு - அகளநிலை. அவ்வடிவு - அருவமான சச்சிதானந்த வடிவம். சிதாகரம் - ஞானவடிவம். இதனைத் திருஞானசம்பந்தர், "ஞானத் திரளாய் நின்ற பெருமான்" என்பர். ஞானமே பரம்பொருள் வடிவமென வுணர்வது உண்மை ஞானமெனற்கு "அச்சிதாகார போதம்" எனவும், அதனுல் பெறப்படும் ஞானவின்பத்தை "அதன்மேல் ஆனந்த போதம்" எனவும், இவ்வுணர்வும் இன்ப நுகர்ச்சியும் பசுஞான வெல்லைக்குள் நிற்றலின், இவற்றை விடுத்துப் பதிஞானமான மெய்ஞ்ஞான வின்பத்துள் திளைத்தல் வீடு பேறு என்றற்கு "மெய்ச் சிதாம் வீடு" எனவும் உரைக்கின்றுர்.

இதனுல், அபர ஞானக்காட்சியும் ஆனந்தமும் விடுத்து பரஞான போகப் பேறு வீடு பேறு என விநாயகப் பெருமான் அறிவுறுத்தவாறும். (5)

2524. **ஒன்றல இரண்டும் அலஇரண் டொன்றே**
டுரு அல அருஅல உவட்ட
நன்றல நன்றல் லாதல விந்து
நாதமும் அலஇவை அனைத்தும்
பொன்றல்என் றறிந்துட் புறத்தினும் அகண்ட
பூரண மாம்சிவம் ஒன்றே
வென்றல்என் றறிநீ என்றனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : சித்தி விநாயக விக்கினேச்சுரனே, ஓருருவல்ல; இரண்டுருவல்ல; இரண்டுருவாகிய ஓருருவல்ல; உருவில்லாத அருவமுமல்ல; தெவிட்டி உவட்டத்தக்க நல்லதுமல்ல; இவை யாவும் நிலையின்றி மாய்தல் உடையவை என்று அறிந்து அகத்தும் புறத்தும் அகண்ட பூரணமாகிய சிவம் ஒன்றே யாம் எனப்படுவது என்று நீ அறிவுறுத்தினை; யானை அதனை மறவேன். எ.று.

பரம்பொருள் உருவுடைய ஒன்றன்று, உருவு மருவுமாகிய இரண்டாக அமைவதுமன்று என்பாராய், ''ஒன்றல விரண்டும் அல'' என்றும் ஆணும் பெண்ணும் என இரண்டாய் ஓருருவுடையதுமன்று என்றும் உரைக்கின்றார். ''ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருணல்கிச் சேணின்றவர்க்கின்னும் சிந்தை செய வல்லான்' என ஞான சம்பந்தர் உரைப்பது கொண்டு ''உரு இரண்டென்று கொள்ளற்க என்பது புலப்பட, ''இரண்டு மல'' எனவும், மாதொரு பாகனுதல்பற்றி இரண்டொன்றிய உருவெனக் கொள்ளற்க என்பது விளங்க, ''இரண்டொன்ருேடுருவல'' எனவும் கூறுகின்ரு ரெனினுமமையும். அருவுருவமான சதாசிவ மூர்த்தமுமன்று எனற்கு ''அருவல'' என்கின்றார். சுவை மிக்க நன்பொருளும் மிக்கவிடத்துத் தெவிட்டி யுவட்டுமாதலால், ''உவட்ட நன்றல'' எனவுரைக்கின்றார். விந்து தத்துவத்தில் விளங்கும் சத்தி யுருவுமன்று, நாத தத்துவத்தில் சிறப்புறும் சிவனுருவுமன்று என்றற்கு ''விந்து நாதமுமல'' என இசைக்கின்றார். ஓராற்ருல் காணப்படுவதும் காணப்படாமையும்பற்றி, ''இவையனைத்தும் பொன்றல் என்று அறிந்து கொள்க'' என்கின்றார். பொன்றல் - மறைதல். ''ஒன்றல'' என்பது முதல் ''விந்து நாதமும் அல'' என்பதீருக அண்ணச் சொல்லால் மறுக்கப்பட்ட கருத்துக்கட்குத் தெளிவுணர்த்தும் வகையில் உண்மை நிலை யுரைக்கின்றாராகலின், ''உட்புறத்தினும் அகண்ட பூரணமாம் சிவம் ஒன்றே என்றல்'' எனவும், இதனை விநாயகப்பெருமான் அறிவுறுத்தாரென்பார், ''அறிநீ என்றனை'' எனவும் இயம்புகின்றார். இப்பாட்டிற் காணப்படும் கருத்துக்கள் பலவும் விநாயக புராணத்துள் விரியக் கூறப்படுதலால் ''என்றனை சித்தி விநாயக விக்கினேச்சுரனே'' என்று கூறுகின்றார்.

இதனால், விநாயகப் பெருமான் சிவமொன்றே அகத்தும் புறத்தும் அகண்ட பூரணமாம் என அறிவுறுத்தவாறும். (7)

2525. **சத்லசத் தியல்மற் றறிந்துமெய்ப் போதத்**
தத்துவ நிலைபெற விழைவோர்
சித்தமுற் றகலா தொளித்தநின் கமலச்
சேவடி தொழஎனக் கருள்வாய்
சுத்தசற் குணத்தெள் அமுதெழு கடலே
சுகபரி பூரணப் பொருளே
வித்தக முக்கண் அத்தனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : தூய ஞான குணமாகிய தெளிந்த அமுதம் தோன்றுகின்ற அருட் கடலாகிய பெருமானே, சுக நிலையிற் குறைவற நிறைந்த மெய்ப் பொருளாயவனே, ஞானமே யுருவாயவனே, மூன்று கண்களையுடைய தலைவனே, சித்தி விநாயக விக்கினேச்சுரனே, சத்தும் அசத்துமாகிய பொருள்களின் இயல்புகளையறிந்து அதனால் பெறப்படும் உண்மை ஞானத் தால் தத்துவங்களில் நிலைகளைப் பெற்றுயர விரும்புகிற ஞானிகளின் திருவுள்ளத்தில் எழுந்தருளும் நின் சிவந்த திருவடிகளைத் தொழுதற்கு அருள் செய்க. எ.று.

நிலையுடைமை குணங்கட்கியல்பாதலால் சற்குணமென்றும், தூய குணங்களின் நிலைபேறு ஞான நலந்தருவதுபற்றி, "சுத்த சற்குணத் தெள்ளமுது எழுகடலே" என விநாயகப் பெருமானைப் பரவுகின்றார். சற்குணத்தைக் கடல் என்றமையின், அதனால் எய்தும் ஞான நலத்தைத் "தெள்ளமுது" என்கின்றார். பரிபூரணம் - குறைவிலா நிறைவு. பொருளின் குறைவு சுகம் பயவாமையின் "சுக பரிபூரணப் பொருளே" எனச் சிறப்பிக்கின்றார். வித்தகன் - ஞானவான். சத்துப் பொருள் - அழியாது நிலைக்கும் பொருள். சத்தின் நிலையுடைமையும், அசத்தின் நிலையாமையும் தேர்ந்தறிவது மெய்யுணர்வாதலால் "சத் தசத்து இயல் அறிந்து" எனவும், அதனால் எய்தும் மெய்யுணர்வால் இன்ப ஞான நிலையை யடைதற்கு விருப்புண்டாதல்பற்றி, "மெய் போதத் தத்துவ நிலை பெற விழைவோர்" எனவும் கூறுகின்றார். தத்துவ நிலை - பலவாகிய தத்துவ நிலைகளைக் கண்டு மேற்படும் இன்பநிலை. சித்தம் - மனம். மனத்தைக் கோயிலாகக்கொள்வது விளங்க, "சித்த முற்றகலாது ஒளித்த நின் கமலச் சேவடி" என்று உரைக்கின்றார். திருவடி வணங்கற்கும் திருவருள் வேண்டப்படுதலின், "சேவடி தொழ எனக்கருள்வாய்" என வேண்டுகின்றார்.

இதனால் சத்தசத் தறிந்து உண்மை ஞானம் பெற்ற சான்றோர் உள்ளத்தில் விநாயகப் பெருமான் கோயில் கொண்டருள்வது கூறியவாறும். (8)

2526. **மருள்உறு மனமும் கொடியவெங் குணமும்**
மதித்தறி யாததுன் மதியும்
இருள்உறு நிலையும் நீங்கிநின் அடியை
எந்நாள் அடைகுவன் எளியேன்
அருள்உறும் ஒளியாய் அவ்வொளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரஒளி நிறைவே
வெருள்உறு சமயத் தறியொணுச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை: அருள் நிறைந்த ஒளிப் பொருளாய், அந்த ஒளிக்குள் உறைகின்ற மேலான நிறை ஞானவொளியே யுருவாகிய பெருமானே, வெருண்டசையும் சமய நெறியாளரால் அறியப்படாத சித்தி விநாயக விக்கினேச்சுரனே, மருளுகின்ற மனமும், கொடுமையான குணமும், அறியாமையால் இருண்ட மனநிலையும் நீங்கி, நினது திருவடியை எளியனாகிய யான் அடைவது எப்போது? அருளுவாயாக. எ.று.

திருவருள் ஒளி யுருவினதாகலின், அருளே யுருவாகிய விநாயகப் பெருமானை, "அருளுறும் ஒளியாய்" என்று போற்றுகின்றார். சோதியுட் சோதியெனச் சான்றோர் பரம்பொருளைக் குறிப்பதால், "அவ்வொளிக் குள்ளே யமர்ந்த சிற்பர வொளி" எனவும், அவ்வொளி தானும் குறைவற நிறைந்த தென்றற்கு, "பரவொளி நிறைவே" எனவும் இசைக்கின்றார். நிலை பேறின்றி மாறும் கொள்கைகளையுடைய சமயம், "வெருளுறு சமயம்" எனப்படுகிறது. மனம் முதலிய கருவிகள் மாயா காரியமாதலால், மருளுதல் இயல்பாதலால், "மருளுறு மனம்" என்றும், நேர்மை பிறழ்தற்

கேதுவாகிய தீய குணத்தை, "கொடிய வெங்குணம்" என்றும், பொருளென மதித்து உண்மை காணு தொழியும் புன்மையை, "மதித்தறியாத துன்மதி" என்றும் குறிக்கின்ருர். இவற்ருல் நல்லறிவின்றிக் கெடுதலால், "இருளுறு நிலை" யென அதனைக் கூறுகின்ருர். இக் குறைகள் நீங்கினுலன்றி, நன்னெறி காண்டலும் நல்லொழுக்கம் மேற்கோடலும் அமையாவாகலின், "இருளுறு நிலையும் நீங்கி நின் அடியை எந்த நாள் அடைகுவன்" என வுரைக்கின்ருர்.

இதனுல் மருளும் கொடுமையும் மதியாமையும் பிறவும் இறை வழிபாட்டுக்குத் தடையாம் என்பது உணர்த்தியவாரும். (9)

2527. **கேவல சகல வாதனை அதனுல்**
கீழ்ப்படும் அவக்கடல் மூழ்கி
ஓவற மயங்கி உழலும் இச் சிறியேன் உன்
அருள் அடையும்நாள் உளதோ
பாவலர் உளத்தில் பரவிய நிறைவே
பரமசிற் சுகபரம் பரனே
மேவுறும் அடியார்க் கருளிய சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : பாக்கள் புனைய வல்ல புலவர் மனத்தின்கண் பரந்து நிறைந்து விளங்கும் பூரணப் பொருளாய், மேலான ஞானவின்பத்தை நல்கும் பரம்பொருளாய் விளங்கும் நின்பால் அன்பு செய்யும் மெய்யடியார்க்கு அருள் வழங்கிடும் சித்தி விநாயக விக்கினேச்சுரனே, கேவலம் சகலம் எனப்படும் அவத்தைகளால் கீழ்மை எய்தும் துன்பக் கடலில் அழுந்தி, இடையறவின்றி மயங்கி வருந்தும் சிறியவனுகிய எனக்கு உன்னுடைய திருவருள் எய்தும் காலம் உண்டாகுமோ, அருள் புரிக. எ.று.

பாவலர் - பாட்டுக்கள் பாட வல்ல புலவர். பாடப்படும் பொருள் முற்றும் மனத்தின்கண் நிறைந்தாலன்றிப் பாடல் பிறவாதாகலின், "பாவலருளத்தில் பரவிய நிறைவே" என்கின்ருர். பரவராயினுர் மனத்தின்கண் அன்புடன் பரவிப் பாடப்படும் நிறை பொருளே எனினும் அமையும். உண்மை ஞானத்தால் உண்டாகும் இன்பநிலை மிக்க மேன்மையுடைத்தாகலின், "பரம சிற்சுகம்" என்றும், அதனை நல்குவது யாவர்க்கும் மேலான பரம்பொருளாதலின் "பரம் பரனே" என்றும் இயம்புகின்ருர். மேவுதல் - விரும்புதல். மெய்யடியார் வேண்டுவதை வேண்டியவாறு அருளுதலால், விநாயகப் பெருமானை, "மேவுறும் அடியார்க்கு அருளிய சித்தி விநாயக" என விளம்புகின்ருர். கேவலம், மலப்பிணிப் பொன்றே கொண்டு அறிவு செயலற்றுக் கிடக்கும் நிலை, சகலம் - உடல் கருவி கரணம் உலகம் ஆகியவற்ருேடு கூடி வாழும் நிலை. இரண்டிலும், தூய்மையும் இன்பமும் இன்மையின், "கீழ்ப்படும் அவக் கடல்" என்று கூறுகின்ருர். ஓவற மயங்கல் - தெளிவு சிறிதுமின்று மயக்க முற்றுக் கிடத்தல். இந்நிலையால் சிறுமையே எய்துமாறு பற்றி "சிறியேன்" என்று செப்புகின்ருர்.

இதனுல், கேவல சகல நிலேகளின் அவமாம் தன்மை அறிவித்த வாறும். (10)

2528. **கானல்நீர் விழைந்த மான்என உலகக்**
கட்டினை நட்டுழன் றலேயும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலே யேனே
ஏன்றுகொண் டருளும்நாள் உளதோ
ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
வேல்நவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : குற்றமில்லாத உத்தமர்களாகிய சான்ரேர் மனத்தின்கண் ஓங்குகின்ற சிறப்பையுடைய ஓங்காரத்தின் ஒளியாய்த் திகழ்பவனும், வேல் விளங்கும் கையையுடைய முருகப் பெருமானுக்கு இனியவனுமாகிய சித்தி விநாயக விக்கினேச்சுரக் கடவுளே, கானலிடத்தே தோன்றும் நீரை விரும்புகின்ற மானைப் போல உலகியல் செய்கின்ற கட்டினை விரும்பி யலேயும் இழிந்த வஞ்சம் பொருந்திய நெஞ்சினையுடைய புலேயனுகிய என்னை நீ அன்புடன் ஏற்றருளும் இன்ப நாள் எனக்கு உண்டாகுமோ, கூறியருள்க. எ.று.

ஊனம் - ஞான வொழுக்கங்களில் உண்டாகும் குறைபாடுகளும் குற்றங்களும். ஒன்று, சிறிதும். ஒன்றென்றழிச் சிறப்பும்மை தொக்கது. உத்தமர், "ஊனமிலராகியுயர் நற்றவ மெய் கற்றவை யுணர்ந்த அடியார்" என ஞானசம்பந்தர் உரைக்கும் பெருமக்கள். பிரணவம், ஓங்காரத்தின் உருவாய் ஞானவொளி செய்தலால், விநாயகப் பெருமானை, "ஓங்கு நீர்ப் பிரணவ வொளி" என வுரைக்கின்ருர். "உய்ய வென்னுள் ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யா" (சிவபுரா) என மணிவாசகனுர் கூறுவதறிக. வேலிருந்து விளங்கும் கையனுதலால், முருகனை, "வேல் நவில் கரத்தோர்" எனவும், அவன் வள்ளிநாயகியாரை மணத்தற்கு இனிய உதவி செய்தது பற்றி "இனியவா" எனவும் இயம்புகின்ருர். கானல் நீர் - கானலிடத்தே தோான்றும் நீர். கானல் - வெயிற் காலத்தே வெறு வெளியில் நீர்நிலே போல் தோன்றும் பொய்க் காட்சி. கானல் போல் உளது போலத் தோன்றி மறையும் இயல்பு பற்றி, உலகியற் பிணிப்பை "கானல் நீர் விழைந்த மான் என வுலகக் கட்டு" என்று கூறுகின்ருர். கானலிடத்தே தோன்றும் நீர் நிலேயை மெய்யென எண்ணி மானினம் அதனை நாடி யலேயும் என்பது மரபு. நட்டு - விரும்பி. கானற் காட்சியின் வஞ்ச மறியாது அதன்பின் சென்றலேந்து வருந்தும் மான் போல நெஞ்சம் உலகியற் காட்சிகளிற் பிணித்து வருத்தும் வஞ்சம் அறியாது உழலுவது கொண்டு, "உலகக் கட்டினை நட்டுழன்றலேயும் ஈன வஞ்சக நெஞ்சகப் புலேயனேன்" எனத் தம்மை நொந்து கொள்ளு கின்ருர். வஞ்சம், வஞ்சகம் - என வந்தது. நெஞ்சு தரும் காட்சி வஞ்சமாய் இழிவு செய்தல் விளங்க, "ஈன நெஞ்சகம்" என்றும், அதனை விரும்பி யலேந்து வருந்தும் புன்மை பற்றி, தம்மைப் "புலேய

னேன்'' என இழித்துரைக்கின்ருர். தமது குற்றத்தை நோக்க, விநாயகரது திருவடிப் பேறு பெறலரிதாய்த் தோன்றுதலின், "ஏன்று கொண்டருளும் நாள் உளதோ'' என மொழிகின்ருர்.

இதனுல், நெஞ்சினுல் வஞ்சிக்கப்பட்டுத் தாம் வருந்தும் திறம் கூறியவாறும். (11)

2529. பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவில்
பிறங்கிய ஒருதனிப் பேறே
அரும்பொருள் ஆகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்தபேர் ஆனந்த நிறைவே
தரும்பர போக சித்தியும் சுத்த
தருமமும் முத்தியும் சார்ந்து
விரும்பினேர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

உரை : பெரிதாகிய பரம்பொருட்கு இடமாக விளங்கும் ஓங்கார வடிவில் சிறக்கும் ஓர் ஒப்பற்ற பெருஞ் செல்வமே, அரிய பொருளாய் வேத முடிவின்கண் இருந்தருளும் பேரின்ப நிறைவே, பரபோக சித்தியும், சுத்த தருமமும் முத்தி நிலையும் பொருந்தி நின்று, அன்பால் விரும்பிப் பரவும் அடியவர்க்கு நல்கி யருளும் வள்ளலாகிய சித்தி விநாயக விக்கி னேச்சுரனே, எமக்கு இரங்கி யருள்க. எ.று.

பொருள் எனப்படுவன எல்லாவற்றிற்கும் மேலாயது பரம்பொருளா கலின் அதனை "பெரும் பொருள்'' என்றும், பிரணவத்தின் உட்பொரு ளாவது பற்றி "பெரும் பொருட்கு இடனும் பிரணவம்'' என்றும் கூறுகின்ருர். பிரணவமாகிய ஓங்கார வடிவில் விநாயகப் பெருமான் திருவுரு அமைந்திருப்பதால், "பிரணவ வடிவில் பிறங்கிய ஒரு தனிப் பேறே'' எனப் பகர்கின்ருர். பசு பாச அறிவுகளால் அறிதற்கரிய தென்பது பற்றி, "அரும் பொருளாகி'' என்றும், "வேத முடிவாய் இன்பம் நிறைவாய் விளங்குதலின் மறைமுடிக் கண்ணே அமர்ந்த பேரானந்த நிறைவே'' என்றும் உரைக்கின்ருர். மேலான போகங்களை விரும்பு வோரும், தூய அறம் தரும் இன்பங்களை விழைபவரும், முத்தியை விரும்புபவரும் பல திறத்தராகலின், அவரவர் விரும்புவனவற்றை வரையாது வழங்குவதால், "புரபோக சித்தியும், சுத்த தருமமும், முத்தி யும் சார்ந்து விரும்பினேர்க் களிக்கும் வள்ளலே'' எனப் பராவுகின்ருர். பரபோகம் திருவருளால் தரப்படும் இயல்பினதாதலால், "தரும் பரபோக சித்தி'' என்று சிறப்பிக்கின்ருர்.

இதனுல், பரபோக சித்தியும் முத்தியும் நல்கும் முதல்வன் சித்தி விநாயகன் என்று தெரிவித்தாரும். (12)

திருச்சிற்றம்பலம்

23. வல்லபைக் கணேசர் பிரசாத மாலை

கணேசப் பெருமானுடைய தேவி பெயர் வல்லபை யென்பது. மரீசி முனிவர்க்கும் வேதவல்லிக்கும் பிறந்த மகள் வல்லபை. இவள் அருட் சத்தியாகிய உமையம்மையின் கூறு; இளமையிலே பண்டை நினைவுற்று சிவன்பாற் பிரியா விடப்பாகம் பெறற் பொருட்டுத் தவம் கிடந்து, தன்னை மணக்க வேதிய வுருவிற் போந்த இறைவனை மறுக்க வும், அவர் பின்பு கணேச மூர்த்தியாய்ப் போதரக் கண்டு வழிபட்டு மணந்து கொண்டாள் என்பது விநாயக புராணம் கூறுகிறது. அன்று முதல் விநாயகர், வல்லபை கணேசர் எனப் போற்றப்படுகின்றார். அவரைப் பாடிப் பரவும் இச் சொன்மாலை அப்பெருமானுடைய அருட் செயல்களையும் ஆங்காங்கே எடுத்தோதுதலால், பிரசாத மாலை என வழங்குகிறது.

23. வல்லபைக் கணேசர் பிரசாத மாலை

2530. திருநெடு மால்அன் றால்இடை நினது
சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தனிற்படப் பாம்பின்
பேர்உரு அகன்றமை மறவேன்
கருநெடுங் கடலைக் கடத்து நற் றுணையே
கண்கள்மூன் றுடையசெங் கரும்பே
வருநெடு மருப்பொன் றிலகுவா ரணமே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : பிறவியாகிய நெடிய கடலைக் கடத்தற்கு உதவும் நல்ல துணைவனும், மூன்று கண்களையுடைய செங்கரும்பு போன்றவனும், நீண்ட மருப்பு ஒன்று கொண்ட யானை முகத்தையுடையவனுமாகிய வல்லபை கணேசனாகிய மாணிக்க மணியே, நெடியோனாகிய திருமால் நின்னுடைய திருவடித்தூள், அந்நாளில் ஆலின்கீழ் படமுடைய மலைப் பாம்பின் உருவமுற்றுக் கிடந்தபோது பெரிய தனது உடம்பிற் பட்டதனால் நீங்கியுயர்ந்த அருணலத்தை ஒருகாலும் மறக்க மாட்டேன்; என்னை ஆண்டருள்க. எ.று.

திருமாலை, நெடுமால் என்பது பற்றித் திருநெடுமால் என்று கூறுகின்றார்; திருமகள் கணவனாகிய நெடுமால் எனினும் பொருந்தும். உமையம்மையும் சிவனும் சூதாடியபோது உமாதேவி பெற்ற வெற்றியை மறுத்துத் தனதே வெற்றி யெனச் சிவபிரான் கூறவும், அந்நிலையில் திருமால், சிவன் கூற்றினை யாதரித்துப் பொய்ச் சான்று கூறிய குற்றத்துக் காக உமையம்மை அவரைக் குருட்டு மலைப்பாம்பாகுக எனச் சபித்தா ரெனவும், பின் பொருகால் அப்பாம்பு ஓர் ஆலின் கீழிருந்த கணேச மூர்த்தியின் திருவடித்துகள் பட்டுப் பாம்புரு நீங்கிற்றென்றும் புராணம் கூறுகிறது. கணேசப் பெருமான் திருவடியைச் சிறப்பித்தற்குச் "சேவடித் துணைமலர்" என வுரைக்கின்றார். மலைப்பாம்பின் உடம்பு

பெருத்து நீண்டிருப்பது பற்றிப் "பெருநெடு மேனி" என்று குறிக்கின்றுர். கரு - பிறப்பு. பிறவிப் பெருங் கடலை, "கருநெடுங்கடல்" என்கின்றுர். கணேசர் திருவடி பிறவிக் கடலைக் கடக்கலுறுவார்க்குப் பெரியதொரு புணையாதலால், "கடத்தும் நற்றுணையே" என்று போற்றுகின்றுர். கரும்பின் கணுவையும் கண்ணெண்பது பற்றி, "கண்கள் மூன்றுடைய செங் கரும்பே" என்றும், அசுரரைக் கொல்லற்கு ஒரு மருப்பை ஒடித்துச் செலுத்தின குறிப்புப் புலப்பட, விநாயகரை ஒற்றை மருப்போன் என்ப துண் மையின், "நெடு மருப்பு ஒன்று இலகு வாரணமே" என்றும் போற்று கின்றுர். வாரணம் - யானை; யானையின் முகமுடைமை கருதி வாரணம் என்பது மரபு.

இதனுல், திருமால் மலைப்பாம்பாகி வருந்திய செய்கையும், விநாயகர் திருவடித்துகளால் அவர் பாம்புரு நீங்கிய குறிப்பும் தெரிவித்தவாரும். (1)

2531. நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன்
நண்ணிநின் துணைஅடி வழுத்திக்
களிநலன் உடன்இவ் வுலகெலாம் படைக்கக்
கடைக்கணித் ததைஉளம் மறவேன்
அளிநலன் உறுபேர் ஆனந்தக் கடலே
அருமருந் தேஅருள் அமுதே
வளிநிறை உலகுக் கொருபெருந் துணையே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : அருணலம் மிக்க பெரிய இன்பக் கடலாய், பிறவி நோய்க் குப் பெறற் கரிய மருந்தாய், திருவருளாகிய அமுதமாய், காற்று நிறைந்த உலகுக்கு ஒப்பற்ற பெரிய துணையாய் விளங்கும் வல்லபைக் கணேசனு கிய பெரிய மாணிக்க மணியே, தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் நான்கு முகங்களையுடைய ஒருவனுகிய பிரமன் நின்னுடைய இரண்டாகிய திருவடிகளை வாழ்த்தி, இன்பச் சிறப்புடன் இவ் வுலகங்களைப் படைக்கும் தொழிலை இனிது செய்தற் பொருட்டு அருள் பாலித்த செயலை யான் என்றும் மறவேன். எ.று.

அளி - அருள். திருவருளால் அன்பர்கட்குப் பேரின்பம் பெருகுதலால், அதற்கு முதல்வனுகிய கணேசப் பெருமானை, "அளி நலன் உறுபேர் ஆனந்தக் கடலே" எனவும், பிறவியின்கண் எய்தும் நோய் வகைகள் அனைத்துக்கும் கணேசப் பெருமானது திருவருள் பெறற்கரும் மருந்தா தல் தோன்ற, "அருமருந்தே" எனவும், இனிது வாழ்வார்க்கு இன்பம் நல்கும் ஞானப் பொருளாதலின், "அருளமுதே" எனவும் உரைக்கின்றுர். காற்று முதலிய ஐம்பெரும் பூதங்களால் இவ்வுலகம் ஆகிய தென்பது பற்றி, "வளி நிறை யுலகு" என்றும், இப்பூதங்கள் தமக்குரிய வரம்பு கடவாமல் நின்று வாழும் உயிர்கட்கு வாழ்வளித்தற்குக் கணேசப் பெருமான் காரணமாதல் விளங்க, "உலகுக்கு ஒரு பெருந் துணையே" என்றும் இயம்புகின்றுர். "வளி வழங்குமல்லல் மாஞாலம் கரி" (குறள்) என்று பெரியோர் கூறுவது காண்க. நளினம் - தாமரை. முகம் நான்காத லால் திருமேனியும் நான்காம் போலும் என ஐயுறுமைப் பொருட்டு, "நான்முகத் தொருவன்" என்று கூறுகின்றுர். கணேசப் பெருமான்

தேவர்கள் கண்டு வியக்குமாறு விசுவரூபம் காட்டியபோது பிரமன் நன்கு கண்டு செய்தொழில் தெளிவு பெற்ருன் என்ற புராண வரலாற்றை (விநாயக பு. விசுவரூபம் காட்டிய படலம்) நினைவிற் கொண்டு உரைக்கின்ருராதலின், "நண்ணி நின் துணையடி வழுத்திக் களிநலனுடன் இவ்வுலகெலாம் படைக்கக் கடைக் கணித்ததை மறவேன்" என வுரைக்கின்ருர். விசுவரூபம் கண்டு வாழ்த்தி பெற்ற பெரு மகிழ்ச்சியைக் "களிநலன்" எனவும், பலவேறு வகைய உலகங்களாதலின் "உலகெலாம்" எனவும், கணேசப் பெருமான் அருளிய திறத்தைக் "கடைக் கணித்தது" எனவும் இயம்புகின்ருர். நற்பான்மையாதலின் "மறவேன்" என்கின்ருர்.

இதனுல், கணேசப் பெருமானது விசுவரூபக் காட்சியால் நான்முகன் படைப்புத் தொழில் சீர் பெற்றமை தெரிவித்தவாரும். (2)

2532. **சீர்உருத் திரமூர்த் திகட்குமுத் தொழிலும்**
செய்தருள் இறைமைதந் தருளில்
பேர்உருத் திரங்கொண் டிடச்செயும் நினது
பெருமையை நாள்தொறும் மறவேன்
ஆர்உருத் திடினும் அஞ்சுதல் செய்யா
ஆண்மைஏற் கருளிய அரசே
வார்உருத் திடுபூண் மணிமுகக் கொங்கை
வல்லபைக் கனேசமா மணியே.

உரை: யாவர் போந்து அச்சுறுத்தினும் அஞ்சாத மனத் திண்மையை அடியேனுக்கு அருள் புரிந்த அருளரசே, கச்சணிந்து மேலே மணிமாலை பூண்டுள்ள கொங்கைகளையுடைய வல்லபைக் கணவனுகிய கணேசப் பெருமானே, சிறப்புடைய உருத்திர மூர்த்திகள் மூவர்க்குப் படைத்தல் முதலிய முத்தொழில்களைச் செய்யும் திறமருளி, அவ்வத் தொழிற்குரிய தலைமையும் தந்து, அத் தொழிற்குரிய திருவுருவையும் நிலையுற எய்துவித்த நின்னுடைய பெருமையை நான் எந்நாளும் மறவேன். எ.று.

உருத்தல் - அச்சுறுத்தல். எத்துணை மெய்வலியுடையார் போந்து அச்சமூட்டினும் அஞ்சாத மனத்திண்மையை, "ஆருருத் திடினும் அஞ்சுதல் செய்யா ஆண்மை" என்று எடுத்துரைக்கின்ருர். வார் - மகளிர் மார்பிலணியும் கச்சு. மணிப்பூண் - பூண் மணியென மாறி நின்றது. வல்லபை - வல்லபா தேவி. உருத்திர கணத்துள் மூவர் செய்து கொண்ட வேண்டுகோட்கிசைந்து வக்கிரதுண்ட விநாயக மூர்த்தியாய்த் தோன்றிப் படைத்தல் முதலிய முத்தொழில் செய்யவும், அத் தொழில்கட்கு அவர் தாமே தலைவராகவும் செய்தருளிய திருவருட் செயலை நினைக்கின்ருராகலின், "சீர் உருத்திர மூர்த்திகட்கு முத்தொழிலும் செய்து, அருள் இறைமை தந்தருளி" என்றும், செய்தொழிற் கொத்த திருமேனி தந்தருளிய நலத்தை, "பேருருத்திரம் கொண்டிடச் செயும் நினது பெருமை" என்றும் இசைக்கின்ருர். உரு திரம் கொள்வது, பேருருவம் நிலையுறக்கொள்வது.

இதனுல், வக்கிரதுண்ட விநாயகர் உருத்திரர் மூவர்க்குப் படைப்பு முதலிய முத்தொழிலும் நல்கிய திறம் உரைத்தவாரும். (3)

2533. விண்ணவர் புகழும் மெய்கண்ட நாதன்
வித்தகக் கபிலன்ஆ தியர்க்கே
கண்அருள் செயும்நின் பெருமையை அடியேன்
கனவிலும் நனவிலும் மறவேன்
தண்அருட் கடலே அருட்சிவ போக
சாரமே சராசர நிறைவே
வண்ணமா மேனிப் பரசிவ களிறே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : குளிர்ந்த அருட் கடலாகியவனும், திருவருட் சிவபோகத்தின் சாரமாகியவனும், சராசரங்களில் நிறைந்து நிற்பவனும், அழகிய திருமேனியையுடைய பரசிவத்தின் கூறுகிய களிறுயவனும், வல்லபையம்மையின் கணவனுமாகிய கணேச மாமணியே, ஞான மேன்மையால் தேவர்கள் புகழ்கின்ற மெய்கண்ட தேவர்க்கும் ஞானவானுகிய கபில தேவநாயனுர் முதலியோர்க்கும் ஞான நாட்டம் செய்து திருவருள் புரிந்த நினது பெருமையும் கனவு நனவுகளாகிய இருநிலையினும் மறக்க மாட்டேன். எ.று.

திருவருள் என்பது தன்னியல்பில் தட்பமுடையதாகலின் கணேசப் பெருமானைத் "தண்ணருட் கடலே" என்றும், சிவயோகம் புரிந்த மெய்ஞ்ஞானிகள் பெறுகின்ற சிவபோகத்தின் திருவுருவாய்த் திகழ்தல் பற்றி, "அருட் சிவபோக சாரமே" என்றும் கூறுகின்றுர். தருமை யாதீன குரு முதல்வரான குருஞான சம்பந்தர், "சிவபோக சாரம்" என்றே ஒரு ஞான நூலைச் செய்தருளியுள்ளார். அதனைச் சிறப்பிக்கும் வகையில் வள்ளற் பெருமான் கணேசப்பெருமானை "அருட்சிவபோக சாரமே"என்று உரைக்கின்றுர் போலும். கணேசப்பெருமான் திருக்காட்சி சிவபோகத்தை அவரது திருவுருவில் விளைவித்தல் கண்டு "சிவபோக சாரமே" என்று போற்றுகின்றுர். சரம் - இயங்கு திணை; அசரம் - நிலைத்திணை. சராசரமாகிய இருவகைப் பொருளிலும் நீக்கமற நிறைந்திருப்பதால், "சராசர நிறைவே" என்று புகழ்கின்றுர். மாணிக்க மணிபோலும் செம்மேனியண்ணலாதலின், "வண்ண மாமேனிப் பரசிவக் களிறே" என்று வழுத்துகின்றுர். "தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய சிவஞானத்தை" "மண்ணவர் இனிதறிந்து திருவருட் பேறு எய்துமாறு செந்தமிழில் வழங்குதற்குத் திருவெண்ணெய் நல்லூரில் பொல்லாப் பிள்ளையாராய் எழுந்தருளி மெய்கண்டார்க்கு அருள் புரிந்த வரலாறுபற்றி, "விண்ணவர் புகழும் மெய்கண்டநாதன்" எனச் சிறப்பிக்கின்றுர். வித்தகன் - நால்வகை யுபாயமும் வல்லவன்; வித்தகரைச் சதுரப்பாடுடையவர் என்பர் திருக்குறட்கு உரை கண்ட பரிமேலழகர். ஈண்டு வித்தகம் சிவ ஞானத்தின்மேல் நின்றது. பதினேராந் திருமுறையில் விநாயகப் பெருமானை கபிலதேவர், அதிராவடிகள், நம்பியாண்டர் நம்பியாகிய மூவர் பாடியிருத்தலின், "கபில ஞதியர்" எனக் கூறுகின்றுர். தாம் பாடியருளிய மூத்தநாயனுர் திருவிரட்டை மணிமாலையில் தமது கருத்துக்களைக் காரண காரிய முறையில் உரைப்பதுகொண்டு வடலூர் வள்ளல், "வித்தகக் கபிலன்" எனச் சிறப்பிக்கின்றுர். வித்தகன், என்ற சிறப்பை ஏனையிருவர்க்கும் ஏற்றிக்கொள்க. அதிராவடிகள் பாடியது மூத்த

பிள்ளையார் திருமும்மணிக்கோவை; நம்பியாண்டார் நம்பிகள் பாடியது விநாயகர் திருவிரட்டை மணிமாலை. கபில முனிவரிடமிருந்த சிந்தாமணி யைக் கணராசன் என்பவன் வலிந்து பறித்துக்கொண்டானாக விநாயகப் பெருமான் அவனொடு பொருது வென்று அச் சிந்தாமணியை மீண்டும் அவரிடம் திரும்பத் தந்த வரலாற்றை (விநாயகர். கபிலருக்கு வரம் தந்தது)க் குறிப்பதாகக் கூறுபவரும் உண்டு. கண்ணருள் செய்தலாவது, திருக்கண்களால் அருள் பெருக நோக்குதல். நன்றியுணர்வும் அன்பு மிகுதியும் விளங்க, "கனவிலும் நனவிலும் மறவேன்" என்று கூறு கின்றார்.

இதனால் மெய்கண்டார், கபில தேவர் முதலியோர்கட்கு விநாயகப் பெருமான் திருவருள் செய்த திறம் தெரிவித்தவாறும். (4)

2534. **நாரையூர் நம்பி அமுதுகொண் டூட்ட**
நற்றிரு வாய்மலர்ந் தருளிச்
சீரைமே வுறச்செய் தளித்திடும் நினது
திருஅருள் நாள்தொறும் மறவேன்
தேரைஊர் வாழ்வும் திரம்அல எனும்நற்
றிடம்எனக் கருளிய வாழ்வே
வாரைஊர் முலையாள் மங்கைநா யகிஎம்
வல்லபைக் கணேசமா மணியே.

உரை: தேரூர்ந்து செம்மாந்து செல்லும் செல்வ வாழ்வும் நிலையிலது என்று கருதும் நல்ல மன வன்மையை எளிய எனக்கு அளித்தருளிய என் வாழ் முதலாகிய பெருமானும், கச்சணிந்த கொங்கைகளையுடைய மங்கையர் தலைவியாகிய வல்லபா தேவிக்குக் கணவனுமாகிய கணேச மாமணியே, திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் திருவமுது கொணர்ந்து உண்பிக்கத் திருவாய் மலர்ந்துண்டு சிறப்பித்துய்வித் தருளும் நின்னுடைய திருவருட் பெருமையை நான் ஒருநாளும் மறப்பே னல்லேன். எ.று.

அரசரும் செல்வரும் தம்பால் உள்ள செல்வ மிகுதிபற்றி காலால் நடந்து செல்வதின்றித் தேர்மீதும், யானை குதிரை முதலியவற்றின்மேலும் இவர்ந்து செல்வது இயல்பாதலால், அவர்களது செல்வ வாழ்வை, "தேரையூர் வாழ்வு" எனச் சுருங்கவுரைக்கின்றார். "தேர்" என எடுத்து மொழிந்தமையால் யானையும் குதிரையும் பிறவும் பெய்துரைக்கப்படு கின்றன. "எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே" என்பது தொல் காப்பியம். திரம் - நிலையுடையது. "நெடிய மொழிதலும் கடிய வூர்தலும் செல்வமன்று தம் செய்வினைப் பயன்" (நற். 210) எனச் சான்றோர் கூறுப. மண்ணக வாழ்வு வேண்டுவோர் செல்வத்தின் நிலையாமை நோக்காது அதனைப் பெரிதும் காதலித்தோம்புவதுபற்றி, "திரமல எனும் நற்றிடம் எனக்கருளிய வாழ்வே" என்று பராவுகின்றார். பொதுவகையில் மனத்திண்மையுடையாரும் செல்வம் கண்டவிடத்து அத்திண்மை யிழந்து மெல்லியராவதாதலின், தாழுற்ற மனவன்மையை "நற்றிடம்" எனச் சிறப்பிக்கின்றார். திருவருள் இன்ப வாழ்வுக்கு முதல்வன் என்பதுபற்றி, "வாழ்வே" எனவுரைக்கின்றார். மங்கை நாயகி.

மங்கையர்க்கரசி என்பதுபோல நின்றது. நரரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை புரியச் சென்ற நம்பிகள் கொண்டு சென்ற திருவமுதை உண்ணுமாறு வேண்டினராக, பிள்ளையாரும் அருள் கூர்ந்து உண்டருளிய வரலாற்றைக் குறிக்கின்றாராதலால், "நாரையூர் நம்பி அமுது கொண்டூட்ட நற்றிருவாய் மலர்ந்தருளிச் சீரை மேவுறச் செய்தளித்திடும் நினது திருவருள்" எனக் கூறுகின்றார். கணேசப்பெருமானைத் திருவமுதுண்பித்த நிகழ்ச்சியால் நம்பியாண்டார் நம்பிக்கு நிலைத்த புகழுண்டாயினமையின், "சீரை மேவுறச் செய்தளித்திடும் நினது திருவருள்" என வுரைக்கின்றார்.

இதனால் நம்பியாண்டார் நம்பிகள் நாரையூர் விநாயகப்பெருமானை யுண்பித்த திருவருள் நிகழ்ச்சியை நினைப்பித்தவாறும். (5)

2535. **கும்பமா முனியின் கரகநீர் கவிழ்த்துக்**
குளிர்மலர் நந்தனம் காத்துச்
செம்பொன்னாட் டிறைவற் கருளிய நினது
திருஅருட் பெருமையை மறவேன்
நம்பனார்க் கினிய அருள்மகப் பேறே
நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பறு மலர்த்தார் மழைமுகில் கூந்தல்
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : சிவபெருமானுக்கு இனிய அருளுருவாகிய புதல்வனும், நற்பண்புடையோர் எய்தும் பெருவாழ்வுக்குரிய முதற் பொருளாயவனும், மணம் குன்றாத மாலை யணிந்த குளிர் மேகம் போன்ற கூந்தலையுடைய வல்லபா தேவிக்குக் கணவனுமாகிய கணேசப் பெருமானே, குடமுனிவனாகிய அகத்தியனது கமண்டல நீரைச் சாய்த்து இந்திரன் சமைத்த நந்தனம் வளம் பெறற் பொருட்டு ஆறாகப் பெருகுவித்துப் பொன்னாட்டு வேந்தனாகிய அவ்விந்திரனுக்கு அருள் புரிந்த திருவருள் நலத்தை என்றும் மறவேன். எ.று.

நம்பன் - சிவபெருமான். கணேசப் பெருமான் சிவனால் பெரிதும் விரும்பப்பட்ட புதல்வன் என்றற்கு "நம்பனார்க் கினிய அருள் மகப் பேறே" என்றும், குணங்களால் நன்மை சான்ற பெரியோர் எய்தும் நல்வாழ்வுக்கு முதற் காரணன் என்பார், "நற்குணத்தோர் பெருவாழ்வே" என்றும் கூறுகின்றார். வம்பு - மணம். மழை முகில் - நீர் நிறைந்து நிறம் கரிதாகிய மேகம். மகளிர் கூந்தற்குக் கருமுகிலை உவமம் கூறுவது பற்றி, "மழை முகிற் கூந்தல் வல்லபை" என்று புகல்கின்றார். அகத்திய முனிவர் குடும்பத்தில் பிறந்தவர் எனப் புராணம் கூறுவதால் அவரைக் "கும்ப முனிவன்" என்பது மரபு. கரகம் - கமண்டலம்; இது குண்டிகை எனவும் வழங்கும். இந்திரன் சமைத்த நந்தனம் நீர் வளம் பெறற் பொருட்டுக் கணேசப் பெருமான் காக்கை யுருவிற் சென்று அகத்தியரது குண்டிகை நீரைக் கவிழ்த்தாராக. அந்நீர் பெருகிக் காவிரியாய்ப் போந்து வளம் செய்தது என்பர். இந்நிகழ்ச்சியே இப்பாட்டிற் குறிக்கப் படுகிறது. நந்தனம் - இந்நாளில் நந்தவனம் என்று வழங்குகிறது. செம்பொனாடு - இந்திரன் நாடு. இவ்வருட் செயலின் மறவாப்

பெருமையை யுணர்த்த, திருவருட் பெருமையை மறவேன்'' என வுரைக்கின்றார். ''சுரகுலாதிபன் தூய் மலர் நந்தனம் பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்'' (பிரபு) எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் கூறுவது காண்க.

இதனால், இந்திரன் சமைத்த நந்தனத்துக்காகக் கணேசப் பெருமான் அகத்தியர் கரகம் கவிழ்த்த செய்தியைத் தெரிவித்தவாறும். (6)

2536. அயன்தவத் தீன்ற சித்திபுத் திகள்ஆம்
அம்மையர் இருவரை மணந்தே
இயன்றஅண் டங்கள் வாழ்வுறச் செயும்நின்
எழில்மணக் கோலத்தை மறவேன்
பயன்தரும் கருணைக் கற்பகத் தருவே
பரசிவத் தெழுபரம் பரமே
வயன்தரு நிமல நித்தியப் பொருளே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : எவ்வுயிர்க்கும் நற்பயன் எய்துவிக்கும் கருணையுடைமையால் கற்பக மரம் போன்றவனும், பரசிவத்தில் தோன்றி யருளும் மேலான பரம்பொருளும், வலிமை தரும் தூய நித்தப் பொருளாயவனும், வல்லபைத் தேவிக்குக் கணவனுமாகிய கணேசப் பெருமானே, பிரம தேவன் பெற்ற சித்தியும் புத்தியுமாகிய மகளிர் இருவரையும் மணந்து கொண்டு நிலவுகின்ற அண்டங்கள் பலவும் நல்வாழ்வு பெறச் செய்தருளும் அழகிய நினது திருமணக் கோலத்தை ஒரு போதும் மறக்க மாட்டேன். எ.று.

உயிர்கள் செய்யும் செயல் வகைகள் இடையூறின்றி இனிது நிறைவுற வருளும் பேரருளுடையனாதலால், ''பயன் தரும் கருணைக் கற்பகத் தருவே'' என்றும், சுத்த தத்துவத்துக்கு அப்பால் விளங்கும் சிவத்தைப் பரசிவம் என்றும் கூறுகிறார். பரம்பரம் - மிகவும் மேலான பொருள். வலிமைப் பொருளதாகிய வயவென்னும் உரிச்சொல் வயன் என வந்தது. நிமலம் - தூயது. என்றும் உள்ள பரம்பொருள் என்றற்கு ''நித்தியப் பொருளே'' என இயம்புகின்றார். கணேச மூர்த்திக்கு மனைவியராகிய சித்தி புத்தி என்ற மகளிர் இருவரையும் பிரம புத்திரிகள் எனப் பெரியோர் கூறும் கருத்தை விளக்குவாராய், ''அயன் தவத் தீன்ற சித்தி புத்திகளாம் அம்மையர்'' என்றும், கணேசர் திருமணம் உலகுயிர்கட்கு நலம் செய்தற் பொருட்டு நிகழ்ந்தது என்றற்கு, ''இருவரை மணந்து இயன்ற அண்டங்கள் வாழ்வுறச் செய்யும் நின் எழில் மணக்கோலம்'' என்றும் இயம்புகின்றார். (7)

இதனால் கணேசப் பெருமான் சித்தி புத்திகளை மணந்த அருட் குறிப்புப் புலப்படுத்தவாறும்.

2537. முன்அருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்கள் இனிதுவீ டடைய
இன்அருள் புரியும் நின்அருட் பெருமை
இரவினும் பகலினும் மறவேன்

என்அரும் பொருளே என்உயிர்க் குயிரே
என்அர சேஎன துறவே
மன்அரு நெறியில் மன்னிய அறிவே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : எனக்குப் பெறற்கரும் பொருளாயவனும், எனது உயிர்க் குயிராயவனும், எனக்கு அருளரசனும், எனக்கு உறவும், நிலைத்த அரிய நெறியில் மன்னுகின்ற மெய்யறிவாயவனும், வல்லபைத் தேவிக்குக் கணவனுமாகிய கணேசப் பெருமானே, முன்னாளில் அரிய தவத்தைச் செய்த முற்கலன் முதலிய முனிவர்கள் வீடு பேற்றை இனிது பெற, இனிய திருவருளைச் செய்த நினது அருட் பெருமையை, இரபு பகல் எக்காலத் தும் அடியேன் மறவேன். எ.று.

பெறப்படும் பொருள்களும் எய்துதற் கரியது யாவராலும் பேணிப் பாராட்டப்படுவதாகலின், கணேப் பெருமானை "என்னரும் பொருளே" எனவும், உயிர்க்குயிராய் இருந்து அறிவருளும் சிறப்புப் பற்றி, "உயிர்க் குயிரே" எனவும் போற்றுகின்றார். இடையறவின்றித் திருவருள் பாலித் தலின், "என்னரசே" என்றும், இன்பமும் துன்பமும் எய்தும் காலத்தும் உடனிருந்தருளுதலின், "எனது உறவே" என்றும் ஏத்துகின்றார். நிலை பேறுடைய செந்நெறிக்கண் செல்வார்க்கு இன்றியமையாத ஞான மருளும் பெருமானுதல் விளங்க, "அருநெறியில் மன்னிய அறிவே" எனப் போற்றுகின்றார். முற்கல முனிவர் - முற்பிறவியிலேயே அரிதவங்களைச் செய்து மேன்மை யுற்றவர் எனப் புராணம் கூறுதலால் "முன்னருந் தோன் முற்கலன்" என மொழிகின்றார். முன்னென்பதைத் தனி நிறுத்தி முற்காலத்தில் எனவுரைத்தல் மரபு. இனி, முன்னருந் தவத்தோன் என இயைத்து நினைத்தற்கரிய உயரிய தவம் செய்தவன் என்றலும் ஒன்று. மிக்க பிணியுற்று வருந்திய தக்கன், முற்கலனைத் தலைவனாகக் கொண்ட முனிவர் கூட்டத்தின் காற்றுப் பட்டதனால் பிணி நீங்கி அது தந்த துன்பத்தினின்றும் வீடு பெற்றான் என்பது விநாயக புராணம். முற்கலன் முதலிய முனிவர்கள் கணேசப் பெருமான் திருவருளால் சிவஞானிகளாகி வீடு பெற்ற செய்தியைக் குறித்தற்கு "முற்கலன் முதலா முனிவர் வீடு இனிதடைய இன்னருள் புரியும் நின் அருட் பெருமை" எனப் பராவு கின்றார்.

இதனால் முற்கலன் முனிவர்கள் வீடு பெற்ற திறம் தெரிவித்தவாறும்.

(8)

2538. துதிபெறும் காசி நகரிடத் தனந்தம்
தூயநல் உருவுகொண் டாங்கண்
விதிபெறும் மனைகள் தொறும்விருந் தினனாய்
மேவிய கருணையை மறவேன்
நதிபெறும் சடிலப் பவளநற் குன்றே
நான்மறை நாடரு நலமே
மதிபெறும் உளத்தில் பதிபெறும் சிவமே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : கங்கை தங்கிய சடையையுடைய நல்ல பவளக் குன்றம் போல்பவனும், நான்கு மறைகளும் தேடிக் காண்டற் கரிதாகிய நன் பொருளாயவனும், இயற்கையறிவு நிறைந்த பெருமக்கள் உள்ளத்தில் நிலைபெற வீற்றிருக்கும் சிவமாயவனும், வல்லபைத் தேவியின் கணவனு மாகிய கணேசப் பெருமானே, புகழ் பெற்ற காசி நகர்க்கண் தூய நல்ல மகோட மூர்த்தியாய் எழுந்தருளி, அறம் நிலைபெறும் வீடுகள்தோறும் விருந்தினனாய்த் திருவிளையாடல் புரிந்த நினது திருவருளை யான் மறவேன். எ.று.

விநாயகப் பெருமானுக்கும் சடைமுடியும் முக்கண்ணும் செம்மேனியும் உண்டாதலின், "நதி பெறும் சடிலப் பவள நற்குன்றே" எனப் பரவு கின்றார். வேத ஞானம் பாச ஞானமாதலால், "நான்மறை நாடரும் நலமே" என நவில்கின்றார். மதி - இயற்கையறிவு. நூலறிவு செயற்கை யறிவு எனப்படும். "மதி நுட்பம் நூலோடுடையார்க்கு" (குறள்) எனச் சான்றோர் பிரித்தோதுவது காண்க. இயற்கை யறிவில்லார்க்குச் செயற்கையாய் எய்துகிற ஞானம் செல்லுவ தல்லையாதலின் அதனை விதந்து, "மதி பெறும் உளத்தில் பதி பெறும் நலமே" என்று பகர்கின்றார். பதி பெறல் - நிலைபெறுதல். உண்மை ஞானம் இங்கே சிவம் எனப்படு கிறது. துதி - புகழ். காசி நகரம் தன்கட் போந்து இறந்தார்க்கு முத்தி நல்குவது என்ற புகழ் பெற்றமைபற்றி, "துதி பெறும் காசி நகர்" என வுரைக்கின்றார். காசி நகர வேந்தன் அரண்மனையில் மகோற்கட விநாயகர் விருந்தினராய் இருந்தபோது நகர மாந்தர் அனைவரும் தத்தம் மனைக்கு விருந்தாக வரல் வேண்டுமென வேண்டினராக, அவரவர் வேண்டிய உருவிற் போந்து விருந்துண்டு அவர்களை மகிழ்வித்த திருவிளையாடலைக் குறித்தற்கு, "காசி நகரிடத்து அனந்தம் தூய நல் உருவு கொண்டு ஆங்கண் விதி பெறும் மனைகள்தொறும் விருந்தினனாய் மேவிய கருணையை மறவேன்" என்று கூறுகின்றார்.

இதனால் காசி நகர்க்கண் மகோற்கட விநாயகராய்த் திருவிளையாடல் புரிந்தமையை எடுத்தோதியவாறும். (9)

2539. **தடக்கைமா முகமும் முக்கணும் பவளச்**
சடிலமும் சதுர்ப்புயங் களும்கை
இடக்கைஅங் குசமும் பாசமும் பதமும்
இறைப்பொழு தேனும் யான் மறவேன்
விடக்களம் உடைய வித்தகப் பெருமான்
மிகமகிழ்ந் திடஅருட் பேறே
மடக்கொடி நங்கை மங்கைநா யகிஎம்
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : விடம் தங்கிய கழுத்தையுடைய ஞானப் பெருமானாகிய சிவன் மிகவும் மகிழ்கின்ற திருவருட் செல்வப் புதல்வனாயும், இளமை பொருந்திய கொடி போன்ற நங்கையும் மகளிர்க்கு அரசியாகவும் உள்ள வல்லபை யம்மைக்குக் கணவனாகிய கணேசப் பெருமானே, பெரிய துதிக்கையும் மூன்றாகிய கண்களும் பவளம் போன்ற நிறத்தையுடைய

சடையும், நான்காகிய தோள்களும் இடக்கையில் ஏந்திய அங்குசமும், பாசமும் திருவடியும் சிறிது போதினும் யான் மறக்க மாட்டேன். எ.று.

களம் - கழுத்து. வித்தகப் பெருமான், ஞானமே திருவுருவாக அமைந்த சிவபெருமான். அருட்பேறு - திருவருளுருவாகிய செல்வப் புதல்வன். மடக்கொடி - இளமையான கொடி. மங்கை நாயகி- மங்கைய ரினத்துக்குத் தலைவி. தடக்கை மாமுகம் - பெரிய துதிக்கையையுடைய யானையது முகம். பவளச் சடிலம் - பவளத்தின் நிறமும் ஒளியுமுடைய சடை. சதுர்ப்புயம் - நான்காகிய தோள்கள் இடக்கையில் அங்குசமும் வலக்கையில் பாசமும் ஏந்துதல் தோன்ற "இடக்கை யங்குசமும் பாசமும்" எனக் கூறுகிருர். பதம் - திருவடி.

இதனுல் விநாயகப் பெருமானது திருவுரு அமைதியைத் தெரிவித்த வாறும். (10)

2540. **பெருவயல் ஆறு முகன் நகல் அமர்ந்துன்**
பெருமைகள் பேசிடத் தினமும்
திருவளர் மேன்மைத் திறமுறச் சூழும்
திருஅருட் பெருமையை மறவேன்
மருவளர் தெய்வக் கற்பக மலரே
மனமொழி கடந்தவான் பொருளே
வருமலை வல்லிக் கொருமுதற் பேறே
வல்லபைக் கணேசமா மணியே.

உரை : மணமிகும் தேவருலகத்துக் கற்பக மரத்தின் மலர் போன்ற வனும், உரையுணர்வுகளின் எல்லையைக் கடந்த பெரும் பொருளாய்த் திகழ்பவனும், மலையரசன் மகளாய் வந்த உமாதேவிக்கு ஒப்பற்ற முதல் மகனுகியவனும், வல்லபை யம்மைக்குக் கணவனுமாகிய கணேசப் பெருமானே, பெருவயல் என்னும் ஊரவனுன ஆறுமுகன் என்ற பெயர் கொண்ட செல்வன் விளையாட்டு வகையில் உன்னுடைய பெருமைகளை எடுத்தோதினுனுக. அவற்குத் திருவருள் நலமும் பெருமையும் நாடோறும் உண்டாகத் திருவுளம் கொண்ட உனது சிறப்பை ஒருநாளும் மறக்க மாட்டேன். எ.று.

தேவருலகத்துக் கற்பக மரமாதலின், அதன் பூவினுடைய நறுமணத் தைச் சிறப்பித்து "மருவளர் தெய்வக் கற்பக மலரே" என்று புகழ்கின்ருர். மலர் போல்வதுபற்றி "மலரே" என்று கூறுகிருர். "வாக்கு மனம் கழிய நின்ற பரம்பொருளாதல் தோன்ற, "மனமொழி கடந்த வான் பொருளே" எனவுரைக்கின்ருர். வான் பொருள் - பரம்பொருள். மலைவல்லி - மலை யரசன் மகளாகிய உமாதேவி. உமாதேவிக்கு முதல் மகனுதலால், விநாயகரை, "மலைவல்லிக்கு ஒரு முதற் பேறே" என மொழிகின்ருர். பெருவயல் - தென்னுர்க்காடு மாவட்டத்து ஊர்களில் ஒன்று. இவ்வூரில் வாழ்ந்த வேளாண் குடிகளிற் செல்வமும் கல்வியும் பெற்று விளங்கிய வன் ஆறுமுகன்; வடலூர் வள்ளல் அவனேடு உசாவியிருந்து அவனுடைய குணஞ்செயல்களை யறிந்தவராதலின், "பெருவயல் ஆறுமுகன்" எனவும், விளையாட்டு வகையில் உரையாடும்போதும்

விநாயகப் பெருமான் சிறப்பையே கூறுவது வழக்கமாதலைக் கண்டிருந்தமையின், "நகல் அமர்ந்து உன் பெருமைகள் தினமும் பேசித் திருவளர் மேன்மைத் திறமுறச் சூழும் திருவருட் பெருமை" எனவும் இயம்புகின்றார். நகல் - விளையாட்டு. "தினமும் பேசிட" என இயையும். திருவளர் மேன்மை - திருவருளால் உண்டாகும் பெருமை. கணேசப் பெருமான் தமது திருவுள்ளத்தில் பெருவயல் ஆறுமுகனார்க்குத் திருவருளும் செல்வ வளமும் பெருகுமாறு நினைந்தருளுகிறார் என்பது கருத்து.

இதனால் பெருவயல் ஆறுமுகனுக்குக் கணேசப் பெருமானது திருவருள் பெருகும் திறம் கூறியவாறும். (11)

திருச்சிற்றம்பலம்

24. சித்தி விநாயகர் திருவருள் மாலை

அஃதாவது சித்தி விநாயகப் பெருமான் திருவருளை வேண்டுகின்ற பாமாலையென்பது. கருங்குழியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானுக்குச் சித்தி விநாயகர் என்பது பெயர். இதனை, "கருங்குழி யென்னுமூர் மேவியன்பர்க்கருள் கணநாதனே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே" இச் சொன்மாலையின் இறுதித் திருப்பாட்டில் குறிப்பதனுல் அறிகின்றோம். சித்தி விநாயகர் என்ற திருப்பெயரை ஓதும் ஆசைப் பெருக்கால் பாட்டுத்தோறும் "சித்தி விநாயக வள்ளலே" என்பதை மகுடமாக வைத்து வள்ளற் பெருமான் பாடியிருக்கின்றார். இத் திருப்பதிகத்தைக் கணேசர் திருவருள் மாலை எனவும் கூறுகின்றார். இதன் கண் அச்சம் நீங்குதல், அன்பர் பணி செய்தல், அடியனுதல், திருவருள் வேண்டல் முதலிய அரும்பண்புகளை நல்குக எனக் கணேசப் பெருமானை வேண்டுகின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2541. **திருவும் கல்வியும் சீரும்சி றப்பும்உன்**
திருவ டிப்புகழ் பாடுந்தி றமும்நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தழ்வுரு
உணர்வும் தந்தென துள்ளத்த மர்ந்தவா
குருவும் தெய்வமும் ஆகிஅன் பாளர்தம்
குறைத விர்க்கும்கு ணப்பெருங் குன்றமே
வெருவும் சிந்தைவி லகக்க ஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : சிந்தையின்கண் அஞ்சும் இயல்பு நீங்குமாறு யானை முகத்தோடு விளங்கும் சித்தி விநாயகனென்னும் வள்ளற் பெருமானே, செல்வமும் கல்வியும் சீரும் சிறப்பும் நின்னுடைய திருவடியே புகழ்ந்து பாடும் திறமையும், நல்ல உடம்பும் ஒழுக்கமும் உள்ளத்தில் ஊக்கமும் குற்றப்படாத உணர்வும் தந்து எளிய என் மனத்தின்கண் எழுந்தருளிய வனே, நின்பால் அன்புடையார்க்கு உண்டாகும் குறைகளைப் போக்கி யருளும் பெரிய குணக் குன்றமாகியவனே, எனக்கு அருள் புரிக. எ.று.

திரு - யாவரும் விரும்பும் செல்வம். சீர் - செல்வத்தால் உண்டாகும் நன் மதிப்பு. திருவடிப் புகழை உரைப்பதினும் பாட்டாற் பாடுவது அருமையென்பது பற்றி, "திருவடிப் புகழ் பாடும் திறம்" எனத் தெரித் துரைக்கின்றார். உருவமைந்த உடம்பு பெறுதலும் சிறப்பாதலின், "நல்லுரு" என நவில்கின்றார். "உருவின் மிக்கதோர் உடம்பது பெறுத லும் அரிதே" (சீவக) என்பர் திருத்தக்க தேவர். சீலம்- ஒழுக்கம். குற்றம்

புரியும் உணர்வு தாழ்வு உண்டாக்குதலால், ''தாழ்வு உணர்வு'' என்று சிறப்பிக்கின்றார். ''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'' (திருமந்தி) என்று பெரியோர் கூறுதலால், ''உள்ளத் தமர்ந்தவா'' என வுரைக்கின்றார். குரு - அறியும் அறிவு தருபவன். தெய்வம் - வேண்டும் துணையாகி வரம் தருவது. இரு வகையாய் நின்று அன்பாளர்க்கு எய்தும் குறைகளைப் போக்கி யருளுவதால், ''குருவும் தெய்வமுமாகி அன்பாளர்தம் குறை தவிர்க்கும் குணப் பெருங் குன்றமே'' எனப் புகழ்கின்றார். நெஞ்சில் உண்டாகும் அச்சம் கீழ்மை யுறுவித்தலால், ''வெருவும் சிந்தை விலக'' என விளம்புகின்றார். கசானனம் - யானை முகம். வள்ளலார் மாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் காலத்தில் வட வெழுத்துப் புதிது புகுத்தப்பட்டமையால் கசானனம் கஜானனம் என எழுதப் பட்டதென அறிக.

இதனால், விநாயகப் பெருமான் அன்பர் சிந்தைக்கண் அமர்ந்து அச்ச வுணர்வு தோன்றாது கெடுமாறு அருளும் திறம் தெரிவித்தவாறும். (1)

2542. **சீத நாள்மலர்ச் செல்வனும் மாமலர்ச்**
செல்வி மார்பகச் செல்வனும் காண்கிலாப்
பாதம் நாடொறும் பற்றறப் பற்றுவோர்
பாதம் நாடப் பரிந்தருள் பாலிப்பாய்
நாதம் நாடிய அந்தத்தில் ஓங்கும்மெய்ஞ்
ஞான நாடக நாயக நான்கெனும்
வேதம் நாடிய மெய்ப்பொருளே அருள்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : நாத தத்துவத்தின் உச்சியின்கண் விளங்குகின்ற மெய்ம்மை ஞானமாய் இயங்கும் தலைவனும், நான்காகிய வேதங்கள் தேடுகின்ற உண்மைப் பொருளுமாய்த் திருவருளுருக் கொண்டு விளங்கும் சித்தி விநாயகனாகிய வள்ளலே, குளிர்ந்த நாட் காலையில் மலரும் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும், அழகிய செந்தாமரையில் எழுந்தருளும் திருமகளை மார்பிலே கொண்ட செல்வனாகிய திருமாலும் காணவியலாத சிவத்தின் திருவடியை இருவகைப் பற்றும் கெடல் வேண்டிப் பற்றுகின்ற அடியார்களின் திருவடிக் கன்பு செய்ய எனக்குத் திருவருள் செய்வாயாக. எ.று.

நாதம் நாடிய அந்தம், தத்துவாதீதம். ஆங்கு விளங்கும் பரசிவத்தை ''அந்தத்தில் ஓங்கும் ஞான நாடக நாயகன்'' என்று குறிக்கின்றார். கேவலத்திற் கிடக்கும் உயிர் ஞானப் பேற்றால் உறுதி பெறும் பொருட்டு மாயையைக் கலக்கித் தத்துவங்களைத் தோற்றுவித்து இயக்குதல் பற்றி, பரசிவத்தை ''ஞான நாடக நாயகன்'' எனக் கூறுகின்றார். இருக்கு முதலிய மறை நான்கையும் ''நான்கெனும் வேதம்'' எனவும். மெய்ம்மைப் பொருளை நாடி நிற்கும் இயல்பு பற்றி, ''வேதம் நாடிய மெய்ப் பொருளே'' எனவும் விளம்புகின்றார். நீர்ப் பூவாதலின் தாமரையைச் ''சீத நாண் மலர்'' எனத் தெரிவிக்கின்றார் நாண்மலர் - நாட்காலையில் மலரும் புதுமலர். திருமகட்கு திருமாலின் வலமார்பும் இடமாகலின், ''மாமலர்ச் செல்வி மார்பகச் செல்வன்'' எனத் திருமாலைக் குறிக்

கின்றார். பசுபாச ஞானங்களால் அறியலாகாத சிவபரம் பொருளின் திருவடி பதி ஞானம் ஒன்றினலே யுணரப்படுவதால், பசு பாசப் பற்றற விரும்புவோர் மெய்யன்பரால் விளங்குதல் கண்டு, "பாதம் நாடப் பற்றறப் பற்றுவோர்" என்று கூறுகின்றார். மெய்யன்பரைச் சிவமெனவே கருதி வழிபடுவோர் உய்தி பெறுபவராதலின், பற்றறப் பற்றுவோர், "பாதம் நாடப் பரிந்தருள் பாலிப்பாய்" என வேண்டுகின்றார். பரமன் திருவடி பரவுதற்கும் அவனது திருவருள் இன்றியமையாமையின், "அருள் பாலிப்பாய்" என இறைஞ்சுகின்றார்.

இதனல் மெய்யன்பர்களின் திருவடித் தொண்டு புரிதற் கருளுமாறு வேண்டியவாறும். (2)

2543. என்னை வேண்டிஎ னக்கருள் செய்தியேல்
இன் னல் நீங்கும்நல் இன்பமும் ஓங்கும்நின்
தன்னை வேண்டிச்ச ரண்புகுந் தேன்என்னைத்
தாங்கிக் கொள்ளும்ச ரண்பிறி தில்லைகாண்
அன்னை வேண்டிஅ ழும்மகப் போல்கின்றேன்
அறிகி லேன்நின்தி ருவுளம் ஐயனே
மின்னை வேண்டி செஞ்சடை யாளனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை: விளங்குகின்ற சித்தி விநாயகனகிய வள்ளலே, மின்னல் போன்று ஒளிரும் சிவந்த சடையையுடையவனே, தாயின் அருளை விரும்பியழுகின்ற குழவி போன்றுள்ள யான் திருவுள்ளக் கருத்தையறியாமல் வருந்துகின்றேன்; என்னை விரும்பி எனக்கு நீ அருள்வாயாயின், எனக்குள்ள துன்பங்கள் நீங்கிப் போம்; கெடாத இன்பங்களும் என்பால் பெருகிச் சிறக்கும்; நின்னையே வேண்டி நின்னுடைய திருவடியை யடைந்தேன்; என்னைத் தாங்கி யாதரிக்கும் நற்றுளும் எனக்கு வேறேயில்லை. எ.று.

விநாயகப் பெருமானுடைய திருமுடிச் சடைமுடியும் மின் போல் ஒளி செய்வது என்பவாகலின் "மின்னை வேண்டிய செஞ்சடையாளனே" என விளம்புகின்றார். பிற சான்றோரும், "மின்னெறி சடாமுடி விநாயகன்" (நன்னெறி) என்பது காண்க. செஞ்சடை - பொன் போற் சிவந்த சடை. மெய்யாற் கண்டு சென்றடையும் திறமின்மையின் தாயின் ஆதரவு வேண்டிய மகவு அழுதலன்றி வேறு செய்ய மாட்டாதவாறு போல மெய்யுணர்வு கொண்டு மெய்ந்நெறி நின்றியல மாட்டாமையால் புலம்புகின்றேன் என்பார், "அன்னை வேண்டி யழும் மகப் போல்கின்றேன்" எனவும், அழும் மகவின் குரல் கேட்டதும் விரைந்தோடி வரும் தாய் போல நினது திருவருள் வந்து எய்தாமையின் நின் கருத்தையறிகின்றிலேன் என்பார், "அறிகிலேன் நின் திருவுளம் ஐயனே" எனவும் இயம்புகின்றார். என்பால் அருள்கூர்ந்து நினது திருவருளை நல்குவாயாயின், என்னைப் பற்றி வருத்தும் துன்பமனைத்தும் ஒழிந்து விடும் என்பார், "என்னை வேண்டி எனக்கு அருள் செய்தியேல் இன்னல் நீங்கும்" என்றும், துன்பம் நீங்கிய விடத்து உளதாய்ச் சிறப்பது பேரின்பம்

என்றற்கு "நல்லின்பம் ஓங்கும்" என்றும் கூறுகின்ருர். நினது திருவருளையே நயந்து நின் திருவடியைப் புகலடைந்தேன் என்பாராய், "நின் தன்னை வேண்டிச் சரண் புகுந்தேன்" எனவும், சரண் புகுந்தாரைத் தாங்கிக் கொள்ளும் அழகும் ஆற்றலு முடையது நின் திருவடி யாதலால் பிறிது யாதும் வேண்டிற்றில்லேன் என்பாராய், "தாங்கிக் கொள்ளும் சரண் பிறிதில்லை காண்" எனவும் இசைக்கின்ருர். "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்ருள்" (முருகு) என நக்கீரர் கூறுவது காண்க.

இதனுல் விநாயகப் பெருமானது திருவடியல்லது புகல் வேறில்லை யென்பது தெரிவித்தவாரும். (3)

2544. நீண்ட மால்அர வாகிக்கி டந்துநின்
நேயத் தால்கலி நீங்கிய ஆறுகேட்
டாண்ட வாநின்அ டைக்கலம் ஆயினேன்
அடிய னேன்பிழை ஆயிர மும்பொறுத்
தீண்ட வாவின்ப டிகொடுத் தென்னைநீ
ஏன்று கொள்வதற் கெண்ணுதி யாவரும்
வேண்டு வாழ்வுத ரும்பெருந் தெய்வமே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : யாவராலும் விரும்பப்படுகின்ற வாழ்வு நல்கும் பெரிய தெய்வமாகிய சித்தி விநாயக வள்ளற் பெருமானே, நெடுமால் மலைப்பாம்பாகிக் கிடந்து நின்பால் கொண்ட பேரன்பால் நினது அருள் நலத்தால் அத் துன்பம் நீங்கிய செய்தியறிந்து நின்னையே அடைக்கலமாக அடைந்தேன்; ஆண்டவனே, நினக்கு அடியவனுகிய யான் செய்த பிழை ஆயிரமாயினும் பொறுத்தருளி என் மனத்தில் எழும் விருப்பப்படி நினது திருவருளை நல்கி என்னையும் நின் அடியாருள் ஒருவனுகக் கொள்ளுதற்குத் திருவுள்ளம் செய்தருள்க. எ.று.

துன்பமின்றி இன்பமே நிறைந்த வாழ்வையே யாவரும் விரும்புவராதலின், அதனை "யாவரும் வேண்டு வாழ்வு" என்றும், வேண்டுவார்க்கு அதனை யளித்தாளும் பெருமானுதலின், விநாயகப்பெருமானை, "வாழ்வு தரும் பெருந் தெய்வமே" என்றும் எடுத்துரைக்கின்ருர். விநாயகர் தோற்றமே வழிபடுவோர் துயர் கெடுத்தருளும் குறிப்புடைய தென்பதை, "தனது அடி வழிபடுமவர் இடர் கடி கணபதி வர அருளினன்" (வலிவலம்) எனச் சான்ருேர் உரைப்பது காண்க. திருமாலை நெடுமால் எனவும் வழங்கப்படுவது பற்றி, "நீண்டமால்" என்றும், சிவனும் பார்வதியும் சூதாடிய போது பொய்ச் சான்று கூறிய குற்றத்துக்காகக் குருட்டு மலைப் பாம்பாயினுர் என்ற விநாயகபுராணம் கூறுவதால், "அரவாகிக் கிடந்து" என்றும், அந்நிலையில் திருமால் விநாயகப் பெருமானை நினைந்து அன்பு, செய்தமையை விதந்து "நின் நேயத்தால்" என்றும், விநாயகப்பெருமான் திருவருளால் திருமால் அப் பாம்புரு நீங்கி இன்புற்ற செய்தி இனிது விளங்க, "கலி நீங்கியவாறு கேட்டு" என்றும், நினது திருவருள் நல முணர்ந்து யான் நினது திருவடியை விரும்பியடைந்தேன் என்பாராய், "ஆண்டவா நின் அடைக்கல மாயினேன்" என்றும் கூறுகின்ருர். பிழை

செய்வதும் அதனால் வருத்த முறுவதும் மக்கட் கியல்பாதலின், "அடியனேன் பிழை ஆயிரமும் பொறுத்து" எனவும், பிழைநீங்கினோர்க்கு இன்ப விழைவு தானே எய்துமாகலின், அதனை நல்குக என வேண்டுத லின், "ஈண்டு அவாவின்படி கொடுத்து என்னை நீ ஏன்று கொள்ளுதற்கு எண்ணுதி" எனவும் உரைக்கின்றார். பிழை பொறுக்கப் பட்டார் இன்பு மெய்துபவாயினும், பொறுத்தவர் உள்ளம் அவரைக் காணும்தோறும் பிழையை நினைக்குமாதலின், அதனைத் தவிர்த்து அடியாருள் ஒருவனாக ஏற்றருளல் வேண்டுமெனப் பரவுகின்றாராதலின், "என்னை நீ ஏன்று கொள்ளுதற் கெண்ணுதி" என்று வேண்டுகின்றார். எண்ணுதி என்பது ஈண்டு வியங்கோட் பொருளில் வந்தது. ஆயிரம், மிகுதி குறித்தது. (4)

இதனால் பிழையாயிரம் பொறுத்து அடியருள் ஒருவனாக ஏற்றருள்க என வேண்டிவாறும்.

2545. **தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தைநீ**
தானும் இந்தச்ச கத்தவர் போலவே
வஞ்சம் எண்ணிஇ ருந்திடில் என்செய்வேன்
வஞ்சம் அற்றம னத்துறை அண்ணலே
பஞ்ச பாதகம் தீர்த்தனை என்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்அருள் வேண்டித்த ருதியோ
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே

உரை : விளக்கமுறும் சித்திவிநாயகப் பெருமானே, வஞ்சனை முதலிய குற்ற நினைவுகள் இல்லாத மனத்தின்கண் எழுந்தருளும் அண்ணலே, ஐவகைப் பாதகங்களைப் புரிந்தவர்கட்கும் அவற்றைப் போக்கி நின் திருவருளை நல்கினாய் என்று பண்டையோர் கூறுவதால், பாவியாகிய யான் என் பாவம் கெடல் வேண்டி நின் திருவடித் தாமரை யைப் பற்றி வழிபடுகின்றேன்; நினது நல்லருளை மிகவும் தருவாயோ? அருள் பெறல் எளிதென்று எண்ணி, எந்தையே உன் திருவடியை அடைந்துள்ளேன்; நீயும் இந்த உலகினர் போன்று வஞ்சனையுற்று வாளா இருப்பாயேல் யான் யாது செய்வேன். எ.று.

தஞ்சம் - எளிமை. பேரருளாளனுதலால் விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பெறுவது எளிது என்று கருதி உனது திருமுன்பு அடைந்தேன் என் பாராய், "தஞ்சம் என்று உனைச் சார்ந்தனன்" எனவும், திருவருட் பேறு அருமையுடைத் த ந்து வருத்தம் மேவிய மனத்தராய்ப் பேசு கின்றமை புலப்பட, "நீ தானும் இந்தச் சகத்தினர் போலவே வஞ்சம் எண்ணியிருந்திடில்" எனவும் இயம்புகின்றார். மனம் வேறு சொற் செயல் வேறுபட்டொழுகுதல் வஞ்சனை; மண்ணியல் மாந்தர்க்கு வஞ்சனை புரிவது இயல்பாதலால், "இந்தச் சகத்தினர் போலவே" என்று கூறுகின்றார். சகம்-நிலவுலகம். வஞ்சம் எண்ணியிருத்தலாவது, செய்வ தாகச் சொல்லிச் செய்யாதொழிதல். எல்லாம் வல்ல நீயே இது செய் குவதாயின், சிற்றறிவும் சிறு செயலுமுடைய எளியனாகிய யான் ஒன்றும் செய்யவல்லேன் என விளம்பலுற்று, "என் செய்வேன்" எனக் கையறவு படுகின்றார். கர்வும் வஞ்சமும் பொருந்தியவர் மனத்தில் இறைவன்

தங்குவதிலன் என்பது பற்றி, "வஞ்சமற்ற மனத்துறை யண்ணலே" என வழுத்துகின்றார். "கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்டருத்தியோடு உள்ள மொன்றியுள்குவார் உளத்துளான்" (ஆரூர்) எனத் திருஞான சம்பந்தர் தெரிவிக்கின்றார். அண்ணல் - தன்னை அடைந்தாரை யருளும் தலைவன். பஞ்சபாதகம் - பொய், கொலை, களவு, கள், காமம் என்ற ஐவகைப் பெரும் குற்றம். மாபாதகம் புரிந்தாரும் குற்ற முணர்ந்து வருந்தி வருவாராயின், திருவருள் வழங்கி அவரை யுய்விக்கும் பெருங் கருணை யாளன் எனப் பெரியோர் புகழ்வது கொண்டு "பஞ்ச பாதகம் தீர்த்தனை" என்று கூறுகின்றார். என்று - என்று புராணிகராகிய முன்னோர் கூறுவதால், மதுரையிற் சொக்கநாதன் புரிந்த திருவிளையாடல்களில் மாபாதகம் தீர்த்ததும் ஒன்று பரஞ்சோதி முனிவர் முதலிய புராணிகர் உரைப்பது எண்ணுக. பாத பங்கயம் - திருவடிகளாகிய தாமரை மலர். நல்லருள் வேண்டி விஞ்சத் தருதி என இயைக்க. வேண்டுதல் - விரும்புதல்.

இதனால், மாபாதகங்களைத் தீர்த்த பெருமான் எனப் புராணிகர் கூறுவது காட்டித் தமக்கும் அதுபோல் திருவருளை மிக நல்குதல் வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (5)

2546. கள்ள நெஞ்சகன் ஆயினும் ஐயநான்
கள்ளம் இன்றிக்க ழறுகின் றேன்என
துள்ளம் நின்திரு உள்ளம் அறியுமே
ஓது கின்றதென் போதுக ழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப்பெ ரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும் பேறவ ழங்குவாய்
வெள்ள வேணிப் பெருத்தகை யேஅருள்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : கங்கை தங்கிய சடையையுடைய பெருந்தகைப் பெருமானாகிய அருளொளி திகழும் சித்தி விநாயக வள்ளலே, கள்ளம் நிறைந்த நெஞ்சை யுடையனாயினும், இப்போது கள்ளப் பண்பின்றி யுரைக்கின்றேன்; எளியேனது உள்ளம் நின் திருவுள்ளத்துக்கு நன்கு தெரிந்ததாகும்; இனியும் நான் வேறு கூறுவதென்னை? காலத்தை வீணிற் போக்குதல் வேண்டா; கிண்ணம் போன்ற அழகிய தாமரை மலர் போன்ற நின் திருவடிப் புகழை யான் நாத்தழும்பேற ஓதி வாழ்த்துதற்கு அருள் புரிவாயாக. எ.று.

வெள்ள வேணி - கங்கையாறு தங்குகின்ற சடை. "வெள்ள வேணிப் பெருந்தகை" என வரும் இத்தொடர், பிரபு லிங்க லீலையில் காணப்படுகிறது. பெருந்தகை - பெரிய தகைமை. பெருந்தகைமையாற் பிறங்குவோனைப் பெருந்தகையென உபசரிக்கின்றார். தகை - அழகுமாம். நெஞ்சன் - நெஞ்சகன் என வந்தது; வஞ்சன் - வஞ்சகன் என வருதல் போல. ஐயன் - தலைவன். கள்ளம் கவடு முதலிய குற்ற உணர்வுகள் பொருந்துமிடமாகலின், "கள்ள நெஞ்சகன்" எனக் கூறுகின்றார். அவ்வியல்பால் தான் கூறுவனவற்றுள் கள்ளமும் பொய்யும் விரவியிருக்கலாம் என ஆராய்ந்து தெளிந்து உரைப்பாராய், "கள்ளமின்றிக்

கழறுகின்றேன்'' எனவுரைக்கின்ருர். கழறுதல் - ஈண்டு வாளா உரைத்தல் மேற்று. என் கள்ளம் புலப்படாவாறு சொல்லுவேனுயின், என்னுடைய உள்ளத்தின் உண்மையை நின் திருவுள்ளம் இனிதறியு மென்பார், ''எனது உள்ளம் நின் திருவுள்ளம் அறியும்'' என மொழி கின்ருர். எனது உள்ளும் புறமும் நன்கறிந்த பெருமானுதலின், நின்பால் வாயாற் பல சொல்லுவது மிகையாதலால் ''ஓதுகின்றதென்'' என வுரைக்கின்ருர். இனி எனக்குத் திருவருளை நல்காமற் காலம் கடத்தல் கூடாதென முறையிடுவாராய், ''போது கழித்திடேல்'' எனப் புகல் கின்ருர். தாமரைப் பூ வள்ளம் போலும் வடிவினதாகலின், வள்சி மாமலர்'' எனப் புனைகின்ருர். மென்மைப் பண்பும் செம்மை நிறமும் பற்றி' விநாயகப் பெருமான் திருவடியை, ''மாமலர்ப் பாதம்'' எனவும் திருவடிப் பெருமையையே அன்பர் பன்முறையும் போற்றிப் புகழ்வது இயல்பாதல் விளங்க, ''பாதப்பெரும் புகழ் நாத்தழும்பேற வாழ்த்த வழங்குவாய்'' எனவும் இயம்புகின்ருர். பன்முறையும் வாழ்த்துதல் நாத்தழும்பேற அருள் வழங்குக எனக் கூறுகின்ருர் எனினும் அமையும்.

இதனுல், விநாயகப் பெருமான் திருவடிப் புகழை நாத்தழும்பேற வாழ்த்தி வழிபடற்குரிய திருவருள் நல்குமாறு வேண்டியவாரும். (6)

2547. மண்ணில் ஆசைம யக்கற வேண்டிய
மாத வர்க்கும்ம திப்பரி யாய்உனை
எண்ணி லாச்சிறி யேனையும் முன்னின்றே
ஏன்று கொண்டனை இன்றுவி டுத்தியோ
உண்ணி லாவிய நின்திரு உள்ளமும்
உவகை யோடுவர்ப் பும்கொள ஒண்ணுமோ
வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடியுள்ள முடியை யுடைய புண்ணிய வுருக்கொண்டு விளங்கும் சித்தி விநாயக வள்ளற் பெருமானே, மண்ணக வாழ்வில் உளவாகும் ஆசையும் மயக்கமும் பற்ருமல் நீங்குதல் வேண்டி தவ முனிவர்களுக்கும் அறிவரிய வனுகியவனே, உன்னை மனத்தால் நினைக்காத சிறுமையுடையனுகிய என்னையும் பொருளாகக் கொண்டு, முன்னம் இளமைக் காலத்தே ஏற்றுக் கொண்டு இந்நாளில் என்னைக் கைவிடுதல் செய்குவையோ? உனக்குள் அமைந்திருக்கும் திருவுள்ளமும் உவத்தலும் காய்தலும் கொள்ள வல்ல தாமோ? ஆகாதன்றே. எ.று.

விநாயகப் பெருமானும் சிவத்தின் ஒரு மூர்த்தமாதலால், அவர்க்கும் சிவன்போலக் கங்கையும் திங்களும் தங்கிய சடைமுடி யுண்டாதலால், ''வெண்ணிலா முடிப் புண்ணிய மூர்த்தியே'' என்று இசைக்கின்ருர். வெண்ணிலா - வெண்மை நிறச் சந்திரன். மண்ணிற் பிறப்பார்க்கு உடல் பொருள் உயிர் என்ற மூன்றின்மேல் இயல்பிலேயே ஆசையும் பற்றும் தோன்றி அவற்றினடியாக எண்ணிறந்த ஆசைகள் தோன்றிச் சூழ்ந்து கொள்வதோடு, ''வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்'' (புறம்) என்ற மயக்கமும், உளதாகலின், பிறப்பற வேண்டும் தவயோகிகளும்

முனிவர்களும் பெருந்தவம் புரிபவாதலால், அவர்களை, ''மண்ணில் ஆசை மயக்கற வேண்டிய மாதவர்'' என்று கூறுகின்றார். தவஞானிகளும் காண்பதற்கரிய அருமையும் பெருமையும் உடையன் விநாயகப் பெருமான் என்பது விளங்க, ''மாதவர்க்கும் மதிப்பரியாய்'' என வுரைக்கின்றார். மதித்தல்- ஈண்டு அறிவால் அறிதல் மேற்று. இத்தகைய பெருமானது உண்மையுணர்ந்தும் சிந்தைக்கண் நினைந்து போற்றிப் பரவாதொழிந்த சிறுமை புலப்படுத்தற்குத் தம்மை 'உனை எண்ணிலாச் சிறியேன்'' என இயம்புகின்றார். உன்னை நெஞ்சின், கண் நினைந்து பரவும் நெறிக்கண் நில்லாத சிறுமையேன் எனப் பொருள் கூறுவதும் பொருந்தும். இளமைப்போதில் விநாயகனை நினைந்து போற்றிப் பரவினமை தோன்ற, ''சிறியேனையும் முன்னின்று ஏன்று கொண்டனை'' என இசைக்கின்றார். அன்று ஏலா தொழிந்திருப்பின், தமக்கு வழிபாடு கைகூடியிரா தென்ற துணிவு பற்றி, ''முன் நின்று ஏன்று கொண்டனை'' என மொழிகின்றார். நின்று - சிந்தைக்கண் நின்று என்க. இந்நாளில் அப்பெருமான் திருவருள் தமக்கு எய்தவில்லையெனக் கருதுமாறு விளங்க ''இன்று விடுத்தியோ'' என வினவுகின்றார். முன்பு ஏற்றலும் இன்று விடுத்தலும் வேண்டுதல் வேண்டாமைகளால் உளவாவனவாதலால், அச்செயற் பண்புகள் நின் திருவுள்ளத்தில் இடம் பெறுமோ என வியந்து கேட்பவர் போல, ''உண்ணிலாவிய நின் திருவுள்ளமும் உவகையோடு உவர்ப்பும் கொள ஒண்ணுமோ'' எனக் கேட்கின்றார். உவகை - வேண்டுதல்; உவர்ப்பு - வேண்டாமை.

இதனல், வேண்டுதல் வேண்டாமையில்லாத, நின் திருவுள்ளம் இவ்விரண்டையும் கொள்வது கூடாதென மொழிந்தவாறும். (7)

2548. **ஆணி லேஅன்றி ஆருயிர்ப் பெண்ணிலே**
அலியி லேஇவ்வ டியனைப் போலவே
காணி லேன்ஒரு பாவியை இப்பெருங்
கள்ள நெஞ்சக்க டையனை மாயையாம்
ஏணி லேஇடர் எய்தவி டுத்தியேல்
என்செய் கேன்இனி இவ்வுல கத்திலே
வீணி லேஉழைப் பேன்அருள் ஐயனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை: புகழால் விளக்கமுறும் சித்தி விநாயக வள்ளற் பெருமானே, அரிய மக்களுயிர்களுள் ஆண்களிலோ அன்றிப் பெண்களிலோ அன்றி அலியினத்திலோ இந்தஅடியவனாகிய என்னைப் போலும் ஒரு பாவியைக் கண்டிலேன்; இந்தப் பெரிய கள்ளம் பொருந்திய நெஞ்சினையுடைய கடையனாகிய என்னை மானுடமாயையென்னும் வலிய எல்லையில் துன்புற விடுகின்றாயென்னில், யான் யாது செய்ய வல்லேன்; இப்பொழுது இவ்வுலகத்தில் வீணாகவுழைத்து மெலிகின்றேனாதலால் எனக்கு உன் திருவருளை நல்குவாயாக. எ.று.

ஆருயிர் - நடுநிலை விளக்கு. ஆருயிர் ஆணிலே, ஆருயிர்ப் பெண்ணிலே, ஆருயிர் அலியிலே என இயையும். ஒருபாவி - ஒப்பாரும் மிக்காருமில்லாத பாவி. விநாயகப் பெருமான் திருவடியை நினைந்து

கூறுதலால் தம்மை "அடியன்" என்று குறிக்கின்றார். காணிலேன்-காண்பதில்லேன். கள்ள நினைவுகளின் மிகுதி விளங்கப் "பெருங் கள்ள நெஞ்சகக் கடையன்" எனவும், கள்ளம் நிறைந்த நெஞ்சத்தால் கடைப் படுவது தோன்றக் "கடையன்" எனவும் உரைக்கின்றார். மக்கட் பிறப் பால் உளதாகும் மாயை மயக்கத்தை "மாயையாம் ஏண்" எனக் குறிக் கின்றார். மக்கட் பிறப்பை யுள்ளடக்கி யிருத்தலால், "மாயையாம் ஏண்" எனச் சுட்டுகின்றார். "மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள்" (தடுத்தாட்) எனச் சேக்கிழார் பெருமான் தெரிவிப்பது காண்க. உலகம் உடல் கருவி கரணம் நுகர்வு அனைத்தும் மாயா காரிய மாய்ச் சகல நிலை யுயிர்களை மயக்கி வாழச் செய்வனவாதலால், மாயை யென்றே ஒழியாமல் "மாயையாம் ஏண்" என்கின்றார். ஏண் - எல்லை; கடக்கலாகாத வலிய எல்லை என்றுமாம். மயக்கம் செய்தலால் உயிர்கள் குற்றம் செய்து இடரும் தளர்வுமுற்றுத் துன்புறுவது இயல்பாதலால், "இடரெய்த விடுத்தியேல்" எனவும், நினது ஆணை பெருவலியுடையதாக லின், "என் செய்வேன்" எனவும் இயம்புகின்றார். இவ்வுலகில் நினைந்தும் மொழிந்தும் செய்வன செய்தும் உழைக்கும் உழைப்பு மாயை யுதறி வல்வினையைச் சுட்டு மலத்தைக் கெடுத்து உய்தி பெறற்கு உதவுகின்ற தில்லை என்பார், "இவ்வுலகத்திலே வீணிலே யுழைப்பேன்" என்று கூறு கின்றார். நின்திருவருளால்தான் என் உழைப்புப் பயன் தருவதாகலின் அதனை யருள்க என்பது குறிப்பெச்சம்.

இதனால், திருவருளின்றி உலகில் மக்களுழைப்பு வீணுமென்பது தெரிவித்தவாறும். (8)

2549. **வாளி லேவிழி மங்கையர் கொங்கையாம்**
மலையி லேமுக மாயத்தி லேஅவர்
தோளி லேஇடைச் சூழலி லேஉந்திச்
சுழியி லேநிதம் சுற்றும்என் நெஞ்சம்நின்
தாளி லேநின்த ளித்தபு கழிலே
தங்கும் வண்ணம் தரஉளம் செய்தியோ
வேளி லேஅழ கானசெவ் வேளின்முன்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே

உரை : விடலைப் பருவத்து அழகுருவான செவ்வேட்கு முன்னவ னாய் விளங்கும் சித்தி விநாயகனான வள்ளற் பெருமானே, ஒளி பொருந் திய கண்களையுடைய மகளிர் கொங்கையாகிய மலையிலும், அவர்களின் முகம் செய்யும் மயக்கத்திலும், தோளிலும், இடைச் சுற்றிலும், உந்தியின் சுழித்த வுருவிலும், நாடோறும் சுழன்று திரியும் என்னுடைய நெஞ்சம் நினது திருவடியிலும், ஒப்பற்ற புகழிலும் தோய்ந்து நின்று வழிபடுமாறு திருவுள்ளம் செய்தருளுவாயாக. எ.று.

இளமகளிரின் கண்களில் ஒளிரும் ஒளி காமக் குறிப்புணர்த்தும் பொற் புடையதாகலின் ஆடவர் உள்ளம் அவ்விழியொளில் மயங்கும் இயல்பு தோன்ற, "வாளிலே விழி" என எடுத்து மொழிகின்றார். இதனை "மங்கையர் விழி வாளிலே" என இயைக்க. அடி பரந்து செம்மாந்து நுனி குவிந்து நிற்பது பற்றி, மகளிர் கொங்கைக்கு மலையை யுவமம் செய்வது

மரபு. முகத்தினது ஒளி திகழும் மலர்ச்சியில் விளங்கும் வனப்பு காண்பார் கருத்தைக் காமக் களிப்பை யெழுப்புவது கொண்டு "முக மாயத்திலே" எனவும், மூங்கில் போல் வளைந்து தோன்றும் தோளும், கொடி போல் திவளும் இடையும், நீர்ச்சுழி போலும் உந்தியும் இளமைக்கு வளமும் அழகும் மிகுவித்தலின், "தோளிலே இடைச் சூழலிலே உந்திச் சுழியிலே" எனவும், இவற்றைக் காணும் இளைஞர் மனம் காம நினைவுகளில் அழுந்தி அலமருவதனால் "நிதம் சுற்றும் என் நெஞ்சம்" எனவும் இசைக்கின்றார். இந் நினைவுகளும் நெஞ்சச் சுழற்சி யும் பிறப்பிணிக்கே மக்களை இரையாக்குவதை யுணர்ந்து, அந்நெறியை மாற்றி இறைவன் திருவடியிலும் திருவருளிலும் படிதல் வேண்டும் என்றற்கு "நின் தாளிலே நின் தனித்த புகழிலே தங்கும்வண்ணம்" என்றும், அதுவும் இறைவன் திருவருளால் நிகழ வல்லதாகலின் "உளம் செய்தியோ" என்றும் இயம்புகின்றார்.

இதனால் மகளிர் உருவில் மயங்கிச் சுழலும் மனத்தை மாற்றி விநாயகப் பெருமான் திருவடியிலும் அருளிலும் செலுத்தற்கு அருள் புரிக என வேண்டியவாறும். (9)

2550. நாவி னால்உனை நாள்தொறும் பாடுவார்
நாடு வார்தமை நண்ணிப்பு கழவும்
ஓவி லாதுனைப் பாடவும் துன்பெலாம்
ஓட வும்மகிழ் ஓங்கவும் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்
கடவு ளேநற்க ருங்குழி என்னும்ஊர்
மேவி அன்பர்க்க ருள்கண நாதனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

உரை : நீல மலரின் நிறத்தையுடைய கழுத்தையுடைய சிவபெருமான் கண்டு மகிழும் ஐந்து கைகளையுடைய விநாயகக் கடவுளும் நலமமைந்த கருங்குழியென்னுமூரில் எழுந்தருளி அன்பர் களுக்கு அருள் புரியும் கணநாதனும் புகழ் விளங்கும் சித்தி விநாயகனு மாகிய வள்ளலே, உன்னை நாடோறும் நாவினாற் பாடிப் பரவுபவரையும், எண்ணித் துதிப்பவரையும், அடைந்து அவரொடு கூடி உன்னைப் புகழ வும், இடையறாது உன்னைப் பாடவும், துன்பத்திலிருந்து நீங்கவும் இன்பம் பெறவும் செய்தருளுவாயாக. எ.று.

காவி - நீல நிறம் பொருந்திய இதழ்களையுடைய நீர்ப்பூ. களத்தான், கழுத்தையுடையவன். சிவன் நீலகண்டனாதலால், "காவி நேர் களத் தான்" என்று கூறுகின்றார். ஐந்து கைகளையுடைய தெய்வமாதல் தோன்ற, "ஐங்கரக் கடவுள்" என்கின்றார். கடவுள் என்பது எல்லாம் வல்ல பரம்பொருட்கேயுரிய சிறப்புப் பெயராயினும், பிற்காலத்தார் சொற் பொருளை நோக்கி, உலகியலறிவெல்லையையும் பற்று நுகர்வுகளையும் கடந்த மேலோர்களையும் கடவுள் என்பாராயினர். விநாயகர் கடவுட் கூறாகலின், "ஐங்கரக் கடவுளே" என்று சிறப்பிக்கின்றார். வளங்களால் நலம் அமைந்த தென்றற்கு "நற்கருங்குழி என்னுமூர்" எனவுரைக் கின்றார். அங்கே அன்பர்கள் எடுத்த திருக்கோயிலில் எழுந்தருளுவ

தால், "அன்பர்க்கு அருள் கணநாதன்" என இயம்புகிறார். சிவகணங்கட்குத் தலைவன் - கணநாதன்; "கணபதியென்னும் களிறு" எனச் சான்றோர் வழங்குவதுண்டு. உனை நாவினாற் பாடுவார் என இயை யும். நாவினாற் பாடுவார் என்பது தாமே சொன்மாலை தொடுத்துப் பாடும் அன்பரென்பதுணர நின்றது. நாடுவார் - அன்பால் மனத்தின்கண் நினைந்து போற்றுபவர். இருதிறத் தன்பர்களையும் அடைந்த வழி இனப் பண்பால் - நினைவு சொல் செயல் மூன்றும் அன்பு நெறிக்கண் இயங்கு மாதலின், "நண்ணிப் புகழவும் பாடவும்" எனக் கூறுகின்றார். புகழ்தல், புகழை யுரைத்தல். ஓவுதல் - இடையறவு படுதல். புகழ்உரைத்தலும் பாடுதலும் உற்ற துன்பங்களை மறப்பித்தலின், "துன்பெலாம் ஓடவும் மகிழ் ஓங்கவும்" என்றும், இந் நலமெல்லாம் விநாயகப் பெருமான் திருவருளால் எய்துவது பற்றி, "செய்குவாய்" என்றும் வேண்டுகின்றார்.

இதனால் அன்பரொடு கூடி இறைவன் புகழையுரைக்கவும் பாடவும் இவ்வாற்றால் துன்பமின்றி இன்ப முறவும் திருவருள் புரிக என முறையிட்டவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

25. கணேசர் தனித் திருமாலை

அஃதாவது ஓரொரு காலத்தில் முன்பின் தொடர்பின்றித் தனித் தனியே பாடிய பாடல்களை முறைப்படுத்திக் கூறுதலின் இது தனித், திருமாலை எனப்படுகிறது. இவை கணேசப் பெருமானைப் புகழ்வதால் கணேசர் தனித் திருமாலையாயின. தனி என்பதற்கொப்பப் பாட்டுக் களும் வேறு வேறு யாப்பியல் கொண்டுள்ளமை காண்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

2551. திங்கள் அம் கொழுந்து வேய்ந்த
செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கைவல் லபைக்கு வாய்த்த
மகிழ்நநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண்
அருட்சிவ களிறே போற்றி
கங்கையை மகிழும் செல்வக்
கணேசநின் கழல்கள் போற்றி.

உரை : பிறைச் சந்திரனை யணிந்த சிவந்த சடையையுடையனுய், இளமை யோடுள்ள பெருமானே, போற்றுகின்றேன்; மங்கையாகிய வல்லபைக்கு ஏற்ற கண நாதனே உனது மலர் போன்ற திருவடிகட்கு வணக்கம்; ஐந்து கைகளும் தொங்குகின்ற வாயும் மூன்று கண்களு முடைய அருளுருவாய்ச் சிவன் பயந்த யானைக் கன்றே, உன்னைப் போற்றுகின்றேன்; கங்கையாற்றைச் சடையில் ஏற்று மகிழும் செல்வக் கணேசப் பெருமானே நின்னுடைய கழலணிந்த திருவடியை போற்று கின்றேன். எ.று.

திங்களங் கொழுந்து - இளம்பிறைச் சந்திரன்; அம் - சாரியை வேய்தல் - ஈண்டு அழகுற அணிதல் மேற்று. சடைக் கொழுந்து என்ற விடத்துக் கொழுந்து இளமை குறித்து நின்றது. போற்றி - வணக்கமும் வழிபாடும் எண்ணி வரும் வியங்கோள்; காப்புக் குறித்துப் போற்றி யென்றல் மரபு என அடியார்க்கு நல்லாரும், பாதுகாத்தற் பொருளதென நச்சினார்க்கினியரும் கூறுவர். மங்கை என்பது பருவம் குறியாது பெண் ணென்ற பொதுப் பொருள் தோன்ற வந்தது. மகிழ்நன் - கணவன். யானைக்கு வாயின் கீழிதழ் தொங்குவதால், அதனை நால்வாய் என்பது பெயராயிற்று. கணேசப் பெருமான் யானை முகத்தனுதல் பற்றி ''நால்வாய்'' என்று இயம்புகின்றார். சிவனும் உமையும் யானை யுருக் கொண்டு பெற்ற மகனுதலால், ''சிவக் களிறே'' என்று சிறப்பிக்கின்றார்.

"பிடியதன் உரு உமைகொள மிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர் கடிகணபதி வர அருளினன்" (வலிவலம்) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க. விநாயகரும் கங்கை தங்கிய சடையுடையராதலின், "கங்கையை மகிழும் செல்வக் கணேச" எனப் பரவுகின்றார்.

இதனால் விநாயகப் பெருமானைப் போற்றித் தமக்கு அருட் காப்பு நல்க வேண்டியவாறும். (1)

வண்ணக் கலித்துறை

2552. **உலகம் பரவும் பொருள்என்**
கோஎன் உறவென்கோ
கலகம் பெறும்ஐம் புலன்வென்
றுயரும் கதிஎன்கோ
திலகம் பெறுநெய் எனநின்
றிலகும் சிவம்என்கோ
இலகைங் கரஅம் பரநின்
தனைஎன் என்கேனே

உரை : விளங்குகின்ற ஐந்து கைகளையுடைய பரம்பொருளே, உலகில் வாழ்வோர் அனைவரும் வழிபடும் மெய்ப்பொருள் என்பேனா? எனக்கு உறவானவன் என்பேனோ? துன்பம் விளைவிக்கும் ஐம்புல வாசைகளை அறுத்து மேம்படுவார் எய்தும் இன்பநிலையம் என்பேனா? எள்ளில் உறையும் எண்ணெய் போன்று உலகுயிர்களிற் கலந்துறையும் சிவம் என்பேனா? நின்னை யான் என்னென்று கூறுவேன். எ.று.

"பொருளிலார்க்கு இவ்வுலகு இல்லை" (குறள்) என்றலின், பொருள் நோக்கி வாழ்வார்க்குப் பொருளாய் உறுதி நல்குவது பற்றி விநாயகப் பெருமானை, "உலகம் பரவும் பொருளென்கோ" எனவும், பொருளுடையாரை யாவரும் உறவு கொள்பவாகலின், "என் உறவென்கோ" எனவும் இயம்புகின்றார். இனி, உலகம் என்றது உலகிற் பெருமை யுற்ற சான்றோரைக் குறிப்பதாகக் கொண்டு, அச் சான்றோர் நாளும் பராவி வழிபடும் பரம்பொருள் என்பேனா என்கின்றார் என்றலும் உண்டு. பொய்ப் பொருள் போற்றப் படாதாகலின், பரம்பொருள் மெய்ப்பொருள் எனப் பட்டது. மெய்ப்பொருள் - மெய்யான உறுதி பயக்கும் பொருள் என்க. புலன்கள் மேற் செல்லும் ஆசை யைந்தும் துன்பமே யுறுவித்தலால், "கலகம் பெறும் ஐம்புலன்" எனக் கூறுகின்றார். புலன்களை வென்றுயர்ந்தவர் பேரின்ப நிலையாகிய சிவகதியைப் பெறுதலால், "புலன் வென்றுயரும் கதி யென்கோ" எனப் புகல்கின்றார். திலகம் - எள். சிவபிரான் உலகில் எள்ளும் எண்ணெயும் போன்றுளன் என்பதனால், திலகம் பெறு நெய்யென நின்றிலகும் சிவம் என்கோ" என வுரைக்கின்றார். "நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும், எள்ளும் எண்ணெயும் போனின்ற எந்தையே"(சதகம்) என்பது திருவாசகம். பரன் - பர என அண்மைவிளியேற்றது; பரம்பொருள் என்பதாம் என்கு - குற்றுகர வீற்றுத் தன்மை வினை.

இதனால் விநாயக மூர்த்தம் பரம்பொருள் என்பது உணர்த்தியவாறும். (2)

2553. அடியார் உள்ளம் தித்தித்
தூறும் அமுதென்கோ
கடியார் கொன்றைச் செஞ்சடை
யானைக் கன்றென்கோ
பொடியார் மேனிப் புண்ணியர்
புகழும் பொருள்என்கோ
அடிகேள் சித்தி விநாயக
என்னென் றறைகேனே.

உரை : சித்தி விநாயகப் பெருமானே, அடியவர் மனத்தில் இனிக்கச் சுரக்கும் அமுதமே என்பேனு, மணம் கமழும் கொன்றை மலர் மாலையணிந்த சிவந்த சடையையுடைய சிவனுகிய யானை யீன்ற கன்றே என்பேனு? திருநீறணிந்த மேனியையுடைய புண்ணியவான்களாகிய பெரியோர் புகழ்ந்தேத்தும் பரம்பொருளே என்பேனு, அடிகளாகிய உன்னை என்னேன்று சொல்லுவேன். எ.று.

அன்பாற் சிந்திக்குந் தோறும் தேனூற நின்றருளும் செம்பொருளாதலின், விநாயகப் பெருமானை, "அடியார் உள்ளம் தித்தித் தூறும் அமுதென்கோ" எனக் கூறுகின்ருர். கடி - நறுமணம். விநாயகரும் செஞ்சடை யுடையராதலின் சிவனைக் குறித்தற்குக் "கொன்றைச் செஞ்சடையான்" எனவும், இளமையும் யானை முகமும் உடைமையால் "கன்று" எனவும் மொழிகின்ருர். பொடி - திருநீறு. திருநீறணியும் சிவநெறித் திருவினரைப் "புண்ணியர்" என்றும், அவர்கள் சிவமே பரம்பொருளென்பவாகலின், "புண்ணியர் புகழும் பொருள்" என்றும் உரைக்கின்ருர். "பொடியணி மேனியர் என்று புண்ணியர் போற்றிசைப்ப" (திருப்பல்லாண்டு) எனச் சான்ருேர் கூறுவது காண்க.

இதனுல் திருநீற்றுப் பொடியணியும் பெரியோராற் போற்றப்படும் பெருமை சான்றவர் விநாயகப் பெருமான் என்பதாம். (3)

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2554. கமலமலர் அயன்நயனன் முதல்அமரர் இதயம்உறு
கரிசகல அருள்செய்பசு பதியாம்
நிமலநிறை மதியின்ஒளிர் நிரதிசய பரமசுக
நிலையைஅருள் புரியும்அதி பதியாம்
விமலபிர ணவவடிவ விகடதட கடகரட
விபுலகய முகசுகுண பதியாம்
அமலபர சிவஒளியின் உதயசய விசயசய
அபயஎனும் எமதுகண பதியே.

உரை : எமது கணபதியாகிய சித்தி விநாயகப் பெருமான், தாமரைப் பூவிலிருக்கும் பிரமன், அந்த மலர் போலும் கண்களையுடைய திருமால் முதலாக வுள்ள தேவர்களின் மனத்திற் படியும் மலக் குற்றம் நீங்குமாறு திருவருள் புரியும் பசுபதியாவான்; தூய்மையே நிறைந்த ஞானத்தில் விளங்கும் அதிசய எல்லை கடந்த பரம சுகமாகிய சிவானந்த

நிலையை யருளும் அதிபதியாவான்; மலமில்லாத பிரணவ வடிவமும் விகட நடமும் பெரிய மத வெறியுமுடைய ஞான மூர்த்தமுடைய யானை முகத்து நற்குணம் பொருந்திய தலைவன்; தூய பரசிவத்தின் அருளொளியின்கண் தோன்றியவன்; அச்சம் போக்குபவன்; அவனுக்கு வெற்றி மிக்க வெற்றியுண்டாகுக. எ.று.

கமல மலர் என்பதை நயனன் என்பதனோடும் கூட்டுக. திருமாலைத் தாமரைக் கண்ணன் என்பது மரபு. தேவர்களாயினும் மலமுடையராதலின், அதனை "இதயமுது கரிசு" என்று கூறுகின்றார். கரிசு - குற்றம். மலத்தொடர்பாற் பசுவாகிய உயிர்கட்கு அதனை நீக்கவல்ல பரசிவத்தைப் "பசுபதி" என்பது வழக்கம். மலபாசத்தாற் கட்டப்படுதலால் உயிர்கள் பசு எனப்படுகின்றன. கட்டறுத்து வீடருளுதலாற் சிவன் பசுபதியாயினான் என்க. நிமலம் - விமலம் என்பன மலமின்மையைக் குறிப்பன. அஞ்ஞான விருளகன்ற ஞானநிலை "நிமல நிறைமதி" என்று உரைக்கின்றார். பசுபாச ஞானங்கட்கு வேறாய் மேலாயுள்ள பரஞான ஒளி திகழும் இன்பநிலையை, "நிமல நிறை மதியினொளிர் மதியின் பரம சுக நிலை" எனவும், அந்நிலை நல்கும் சுகம் உலகியற் சுகம் போல நுகர்வார்க்கு அதிசயம் விளைப்ப தின்மையின், "நிரதிசய சுகம்" எனவும், அந்தச் சுகம், ஆன்மாக்கள் பெறுகின்ற சுகங்கள் அனைத்திற்கும் மேலான தென்றற்குப் "பரமசுக நிலை" எனவும் பகர்கின்றார். இது பற்றியே முத்தியின்பத்தைப் பெரியோர் "நிரதிசய ஆனந்தம்" என்று வழங்குகின்றார்கள். மதி - ஈண்டுச் சிவஞானத்தின் மேற்று; யோகக் காட்சியில் துவாத சாந்தத்தில் விளங்கும் அமுத சந்திரன் என்பதுமுண்டு. சித்தாந்தச் செந்நெறியின்கண் நின்று பத்தி பண்ணுவோர்க்கும் யோக நெறியில் நின்று துவாத சாந்தக் காட்சி முயல்வோர்க்கும் முதல்வனாதலின், "பரமசுக நிலையை அருள் புரியும் அதிபதியாம்" என்று கணேசப் பெருமானைப் புகழ்கின்றார். பிரணவம், ஓம் எனப்படும் ஓங்காரம். பிரணவ வடிவம் கணேச மூர்த்தம் என்று சான்றோர் கூறுதலால், "விமல பிரணவ வடிவ" என்று குறிக்கின்றார். "அகரமென வுருவாகி யுலக மெல்லாம், அமர்ந்து அகர வுகர மகரங்கள் தம்மாற் பகருமொரு வடிவாகி" (விநாயகபு) என்பர் கச்சியப்ப முனிவர். திருமால் இழந்த சக்கரப் படையைப் பெறுவித்தற் பொருட்டு விநாயகப் பெருமான் தமது கணங்களின் எதிரே விகட நடனம் புரிந்தது பற்றி "விகட விநாயகர்" என்று பெயர் கொண்டாரெனக் காஞ்சிப் புராணம் ஓதுகிறது. அதனால், "விகட தட கட கரட கயமுக" என்று சிறப்பிக்கின்றார். தட - பெருமை. கடகரடு - மதவெறி. கட கரட கயம் என இயைக்க. விபுலம், சிறந்த ஞானம்; சிவஞானம். விபுலம் என்பது பெருமையையும் குறித்தலால், பெருமை மிக்க யானை எனினும் பொருந்தும். கணேசப் பெருமானுக்கு யானை முகமாதலால், "கயமுக சுகுணபதி" என்கின்றார். கஜம் - கயம், கயம் எனத் தமிழாயிற்று. முகம் யானையது போன்றதாயினும், மங்கல நற்குணமே யுடையவன் என்றற்குச் "சுகுணபதி" என்று விசேடிக்கின்றார். பரசிவத்தின் பரஞானப் பரவொளியின் திருர்மூர்த்தமாதலால், கணேசப் பெருமானை, "விமல பரசிவ வொளியின் உதய" என உரைக்கின்றார். அடியடைந்தார்க்கு அபய மளித் தாதரிக்கும் அருளாளன் என்றற்கு "அபய" என்கின்றார். மக்கட்காயின் அபயன்

என்பது அச்சமில்லாதவன் என்று பொருள்படும் என அறிக. சய விசய சய என்பது வெற்றி வாழ்ந்து.

இதனுற் கணேசப் பெருமானுடைய பரஞான குண நலன்களை யுணர்த்தியவாறும். (4)

கட்டளைக் கலித்துறை

2555. அம்பொன்று செஞ்சடை அப்பரைப்
போல்தான் அடியர்தம்துக்
கம்பொன்றும் வண்ணம் கருணைசெய்
தாளும் கருதுமினே
வம்பொன்று பூங்குழல் வல்லபை
யோடு வயங்கியவெண்
கொம்பொன்று கொண்டெமை ஆட்கொண்
டருளிய குஞ்சரமே.

உரை : மணம் பொருந்திய பூக்களை யணிந்த கூந்தலையுடைய வல்லபை யம்மையொடு கூடி விளங்குகின்ற வெண்மையான கொம்பு ஒன்றை யுடையனுய் எங்களை ஆண்டருள் புரியும் யானையாகிய கணேசப் பெருமான், கங்கை நீர் தங்கிய சிவந்த சடையையுடைய சிவபெருமானைப் போலத் தன்பால் அன்புடையார்க் கெய்தும் துன்பங்கள் நீங்குமாறு திருவருள் புரிகுவன் என்று நினைவிற் கொள்வீராக. எ.று.

வம்பு - நறுமணம். நறிய மணமுடைய பூக்களை மகளிர்தம் கூந்தளிற் சூடிக் கொள்ளும் இயல்பினராதலின், வல்லபைத் தேவியை, "வம்பொன்று பூங்குழல் வல்லபை" என்று சிறப்பிக்கின்ருர். ஒரு கொம்பையொடித்துக் கயாசுரனைக் கொன்றொழித்தாராதலின், எஞ்சிய ஒரு கொம்பேயுடையனுதல் பற்றி, விநாயகரை "ஒற்றைக் கொம்பன்" என்று பெரியோர் பாராட்டுகின்றனர். அதனுல், வயங்கிய வெண்கொம் பொன்று கொண்டு எமை ஆட்கொண்டருளிய குஞ்சரமே" எனக் கூறுகின்ருர். யானையின் கொம்பு வெண்மை நிறமும் ஒளியும் கொண்டதாகலின், "வயங்கிய வெண்கொம்பு ஒன்று" எனப் புகழ்கின்ருர். அருட்பேறு பற்றி, "எமை, ஆட்கொண்டு அருளிய குஞ்சம்" என்கின்ருர். குஞ்சரம் - யானை. அம்பு - நீர்; ஈண்டுக் கங்கையாற்றின் மேற்று. அப்பர் - அம்மையப்பனுகிய சிவபெருமான். துக்கம் - துன்பம். பொன்றுதல் - கெட்டொழிதல். இருளற்றம் பார்க்கும் ஒளி போலத் துன்பத்தின் நீக்கம் நோக்குவது இன்பமாதலால், துன்ப நீக்கத்தையே விதந்து, "துக்கம் பொன்றும்வண்ணம் கருணை செய்தாளும்" என்றும், அன்பு செய்யும் அடியவர்க்குத் துக்க நீக்கத்தின் வேறு ஊதியமில்லையாதலின், அதனை வள்ளற் பெருமான் எடுத்தும் மொழிகின்ருர். மறத்தலாகாமை வற்புறுத்தற்குக் கருதுமினே" என வுரைக்கின்ருர்.

இதனுல், விநாயகப் பெருமானது திருவருட் செயலுண்மை யோதி நம்மனோர் மனத்தில் இருத்தியவாறும். (5)

2556. திருமால் வணங்கத் திசைமுகன்
போற்றச் சிவமுணர்ந்த
இருமா தவர்தொழ மன்றகத்
தாடு மிறைவடிவாக்
குருமா மலர்ப்பிறை வேணியு
முக்கணுங் கூறுமைந்து
வருமா முகமுங்கொள் வல்லபை
பாகனை வாழ்த்துதுமே.

உரை : திருமால் வணங்கவும் பிரமன் போற்றவும், சிவஞான முணர்ந்த பெரிய தவத்தோராகிய வியாக்கிர பாதர் பதஞ்சலியென்ற முனிவர் இருவரும் கைதொழுதேத்தப் பொற் சபையின்கண் நின்றுடும் சிவனுகிய இறைவன் குறிகளாகிய நிறமுடைய கொன்றை மலரும், பிறைத் திங்களும் சடையும் முக்கண்ணும், வலிமை மிக்க யானை முகமும் கொண்ட வல்லபை கணவனுகிய கணேசப் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக. எ.று.

திருமால் கிடந்தும் பிரமன் நின்று வேதமோதியும் பரவினமையின், ''திருமால் வணங்கத் திசைமுகன் போற்ற'' என்றும், சிவபேறுடைய பெருமக்களைச் சிவமுணர்ந்தாரென்பது பற்றி, முனிவர் இருவரையும் ''சிவமுணர்ந்த இருமாதவர்'' என்றும் கூறுகின்றுர். வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் சிவனது திருநடம் காண்டல் வேண்டித் தவம் கிடந்தன ரெனக் கோயிற் புராணம் கூறுவதுபற்றி, அவர்களைச் ''சிவமுணர்ந்த இருமாதவர்'' எனப் புகல்கின்றுர். சிவத் திருமேனியிற் காணப்படும் மலரும் பிறையும் பிறவும் விநாயகர் திருவருள் உருவினும் காணப்படு தலால், ''இறை வடிவாக் குருமா மலர்ப்பிறை வேணியும் முக்கண்ணும்'' எனவுரைக்கின்றுர். சிவன் வடிவை - இறை வடிவு என்கின்றுர், குரு - நிறம். ஈண்டுப் பொன்னிறம். வேணி - சடை. கூறுதல் - புகழ்ந் தோதுதல். மைந்துவரும் மா - வலி மிக்க யானை. வல்லபை பாகன் - வல்லபைக்குக் கணவன்.

இதனுல், வல்லபை கணேசமூர்த்தியை வணங்கி வாழ்த்துக் கூறிய வாறும். (6)

திருச்சிற்றம்பலம்

26. தெய்வத் தனித்திருமாலை

அஃதாவது கணபதி, முருகன், சிவன், உமையாகிய தெய்வங்கள் பொருளாக ஓரொருகால் தனித் தனியாகப் பாடிய சொன்மாலை என்பதாம். எல்லாவற்றிற்கும் மேலாய் அகளமாய் விளங்கும் பரம்பொருள் சிவன், கணபதி, முருகன் முதலிய சகளத் திருமேனி கொள்ளுமிடத்துத் தெய்வம் எனப்படும். பரம்பொருட் கூறுயவற்றைப் பெருந் தெய்வ மென்றும், வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமாகிய மக்களைச் சிறு தெய்வ மெனவும் பெரியோர் வேறுபடுத்துவர். இங்கே பெருந் தெய்வங்களே பரவப்படுதல் அறிக.

வஞ்சித் துறை

2557. **ஐங்கரன் அடிமலர்**
இங்குற நினைதிநின்
பொங்குறு துயரறும்
மங்கலின் மனனே.

உரை : தாழ்தலில்லாத மனமே, ஐந்து கைகளையுடைய விநாயகன் திருவடித் தாமரை இங்கே நமக்கெய்துமாறு நினைவாயாக; அதனுல் மிக்குறும் துன்பங்கள் அற்றொழியுமாகலான். எ.று.

மங்குதல் - தாழ்தல். இருள் கலந்த ஒளியை மங்கிய வொளி என்ற வழக்கு நோக்குக. பெருகிவரும் இயல்பினவாதலால், துன்பங்களை, "பொங்குறு துயரம்" என்றும், தொடர்பறக் கெடும் என்றற்கு "அறும்" என்றும் கூறுகின்றார். துயரறுதற்குக் காரணமாவது விநாயகன் திருவடி நினைவு என்றற்கு "ஐங்கரன் அடிமலர் நினைதி" எனவும், துயர் மிகும் இவ்விடத்து இப்பொழுது நினைக; நினைந்தபோது அத்திருவடி போந்து துயரறுவிக்கும் என வற்புறுத்தற்கு "இங்குற நினைதி" எனவும் இயம்பு கின்றார். மலர் எனப் பொதுப்படவுரைத்தலால் தாமரையாயிற்று. "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்பர் திருநாவுக்கரசர்.

இதனல் விநாயகர் திருவடியை நினைப்பவர் துயரற் றின்புறுவர் எனத் தெரிவித்தவாறும். (1)

குறள் வெண்செந்துறை

2558. **திருமால் அறியாச் சேவடி யாலென்**
கருமால் அறுக்குங் கணபதி சரணம்.

உரை : திருமால் முதலிய தேவர்களும் அறிந்தடைய முடியாத சிவந்த திருவடியால் பிறவி மயக்கத்தைப் போக்கும் கணபதியாகிய விநாயகர் திருவடி நமக்குக் காப்பாகும். எ.று.

திருமால் முதலிய தேவர்கள் குறைவிலா நிறைவின்மையாற் செத்துப் பிறக்கும் சிறுமையுடையராதலால், "திருமால் அறியாச் சேவடி" என்றும், விநாயகப் பெருமானது திருவடி ஞானம் பிறப்பறுக்கும் பெருமையுடைய தென்றற்கு, "சேவடியால்", "என் கருமால் அறுக்கும் கணபதி" என்றும் இசைக்கின்ருர். கரு - பிறப்பு. மால் - மயக்கம். புகலடைந்தார்க்கு அரணுய் நின்று காத்தலை செய்யும் என்றற்குச் "சரணம்" என்கின்ருர்.

இதனுல் விநாயகன் திருவடி, பிறவி மயக்கறுக்கும் பெருமையுடைய தென்றவாரும். (2)

கலி விருத்தம்

2559. துதிபெறு கணபதி இணையடி மலரும்
பதிதரு சரவண பவன்மல ரடியுங்
கதிதரு பரசிவன் இயலணி கழலும்
மதியுற மனனிடை மருவுது மிகவே.

உரை : யாவருடைய துதியையும் பெறுகின்ற கணபதியாகிய விநாயகனுடைய இரண்டாகிய திருவடித் தாமரைகளையும், இடமாகிய சரவணப் பொய்கையிற் பிறந்தவனுகிய முருகனுடைய மலர்போன்ற திருவடிகளையும், பிறவா நிலையாகிய சிவகதி நல்கும் பரசிவத்தின் இயற்கையழகமைந்த திருவடியையும் அறிவொளி பொருந்த மனத்தின்கண் மிகவும் நினைப்போமாக. எ.று.

துதி - துதித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். யாவராலும் துதிக்கப் படும் பெருமானுதலின், "துதி பெறு கணபதி" என்று புகழ்கின்ருர். பதிதரு சரவணம், சரவணப் பொய்கையாகிய இடம். பவன் - பிறந்தவன்; பவம் - பிறப்பு. பரசிவன் - மேலான சிவபெருமான்; "பிறவா வாழ்க்கைப் பெரியோ" (சிலப்) னுதலின், அவன் திருவடி நல்கும் சிவகதி பிறப்பறுக்கும் பெருமையுடைய தென்க. இயலணி - இயற்கையழகு. கழல் - வீரர்கள் காலில் அணியும் தண்டை; ஈண்டுக் கழல் கிடந்தழகு செய்யும் திருவடிமேற்று. மூவர் திருவடியும் சிவஞான வொளி நல்குவனவாதலால் "மதியுற மனனிடை மிகவும் மருவுதும்". மருவுதல் - ஈண்டு நினைத்தல் என்னும் பொருளதாகும்.

இதனுல் மனத்தில் சிவஞான வொளி பரவுதற்கு மிகவும் நினைந்து போற்றுதல் வேண்டு மென்பதாம். (3)

2560. அருளூறுங் கயமுகத் தண்ணல் பாதமும்
பொருளூறு சண்முகப் புனிதன் தாள்களும்
தெருளூறு சிவபிரான் செம்பொற் கஞ்சமும்
மருளற நாடொறும் வணங்கி வாழ்த்துவாம்.

உரை : அருள் மிக்க யானை முகத்தையுடைய அண்ணலாகிய விநாயகர் திருவடியையும், ஞானப் பொருளாகிய ஆறுமுகங்களையுடைய தூயவன் திருவடியையும், தெளிவுமிக்க சிவபெருமானுடைய சிவந்த பொற்றாமரை போன்ற திருவடிகளையும் மருட்சி நீங்கற் பொருட்டு நாள்தோறும் வணங்கி வாழ்த்துவோமாக. எ.று.

விநாயகர் பேரருளாளராதலால், "அருளும் கணபதி" என்றும், ஞான முதல்வனுதலால் அறுமுகப் பெருமானை, "பொருளூறு சண்முகப் புனிதன்" என்றும், ஞானத் திரளாய் நின்ற பெருமானுதலால், "தெருளுரு சிவபிரான்" என்றும் கூறுகின்ருர். பொற்கஞ்சம் - பொற்றாமரை. தாமரை போற் சிவந்த சேவடி எனற்குச் "செம்பொற் கஞ்சம்" எனச் சிறப்பிக்கின்ருர். மருட்சி மயக்கும் சகச மலத்தை, "மருள்" என உரைக்கின்ருர். வணக்கம் - மெய்க்கும்; வாழ்த்துதல் மன மொழிகட்கும் உரியன என்க.

இதனுல், விநாயகர், முருகன், சிவபிரானுகிய மூவரையும் மனத்தால் நினைந்தும் வாயால் வாழ்த்தியும் மெய்யால் வணங்கியும் வழிபட்ட வாரும். (4)

2561. அற்புதக் கணபதி அமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற் போற்றியே.

உரை : கடவுளாகிய கணபதி யென்னும் தூயவனே போற்றி, தற்பரமான ஆறுமுகனும் சாமியே போற்றி, ஞானவுருவாய பரசிவமாம் மகாதேவனே போற்றி, அழகு பொருந்திய கௌரியே நின்னைப் போற்று கின்றேன். எ.று.

அற்புதன் - கடவுள். கணபதி - சிவகணங்கட்குப் பதியென்பது விளங்க நின்றது. அமலன் - மலமில்லாதவன்; மலரகிதன் என வடமொழியாற் கூறுப. தற்பரன் - தனக்குத் தானே பரமாயவன். சண்முகம் - ஆறுமுகங்களையுடையவன். சாமி, முருகனுக்குரிய பெயர் களில் ஒன்று. இதனுற் சிவனைச் "சாமி தாதை" எனச் சமய குரவர்கள் புகழ்கின்ருர்கள். பரசிவம் - ஞான மயமாதலால், "சிற்பர சிவ" மெனவும், சிவமூர்த்தியாகியபோது "மகா தேவ" னெனவும் பெரியோர் கூறுகின் றனர். பொற்பு - அழகு. கௌரி, பார்வதிக்குரிய பெயர்களில் ஒன்று; இதன் சொற்பொருள் இளமை யுடையவள், பொன்னிறமுடையவள் என வரும்; ஆனுல் பார்வதி நீலமுடையவள் என அறிக.

இதனுல் விநாயகர், முருகன், மகாதேவர், கௌரி ஆகிய தெய்வங்கள் போற்றப்பட்டவாரும். (5)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2563. மாதங்க முகத்தோன்நங் கணபதிதன்
செங்கமல மலர்த்தாள் போற்றி
ஏதங்கள் அறுத்தருளுங் குமரகுரு
பரன்பாத இணைகள் போற்றி
தாதங்க மலர்க்கொன்றைச் சடையுடைய
சிவபெருமான் சரணம் போற்றி
சீதங்கொள் மளர்க்குழலாள் சிவகாம
சவுந்தரியின் திருத்தாள் போற்றி

உரை : யானை முகத்தையுடையனாகிய நமது கணபதியின் சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகள் போற்றி; துன்பங்களின் தொடர்பு நீக்கித் திருவருள் புரியும் குமர குருபரனாகிய முருகனுடைய இரண்டாகிய திருவடிகள் போற்றி; வலியுடைய பொன்னிறம் கொண்ட கொன்றை மலர் சூடும் சடையையுடைய சிவபெருமான் திருவடிகள் போற்றி; குளிர்ச்சி பொருந்திய பூக்களை யணிந்த கூந்தலையுடைய தேவியாகிய சிவகாம சுந்தரியின் திருவடிகள் போற்றி. எ.று.

மாதங்கள் - யானை. செங்கமல மலர் - செந்தாமரைப் பூ. மலர் போலும் தாள் - மலர்த்தாள் என வந்தது. தாள் - திருவடி. ஏதம் - துன்பம். துன்பத்துக்கு ஏதுவாகிய அஞ்ஞானத்தைப் போக்கி இன்பத்துக்கேதுவாகிய ஞானம் நல்குவது பற்றி முருகனை, "ஏதங்கள் அறுத்து அருளும் குருபரன்" என்கின்றார். குருபரன் - மேலாய ஞான ஆசிரியன்; இளமையான ஞானாசிரியன் என்றற்குக் குமரகுருபரன் என்று வழங்குகின்றனர். இளமைப் பருவத்தே சிவனுக்குப் பிரணவ ஞானத்தைச் சொன்ன வரலாற்றை இச் சொற்றொடர் நினைப்பிக்கின்றது. தா - வலி. தங்க மலர் - பொன்னிறம் கொண்டமலர். "பொன் திகழ் கொன்றை மாலை பொருந்திய நெடுந் தண்மார்பர்" (கச்சி யேகம்பம்) எனத் திருநாவுக்கரசர் கூறுவது காண்க. சீதம் - குளிர்ச்சி. சுந்தரி - சவுந்தரியென வந்தது.

இதனால் கணபதி, முருகன், சிவன், பார்வதியாகிய தெய்வங்கள் போற்றப் பட்டவாறும்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2563. கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிவமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறும் ஒருபரை சரணஞ் சரணம்
உமைசிவை அம்பிகை சரணஞ் சரணம்.

உரை : கலைகள் யாவும் நிறைந்த கணபதியே நின் திருவடி; யானை முகத்தையுடைய உயர் குணத் தலைவனே, நின் திருவடி; உலகுக் கெல்லாம் தலைவனே இரண்டாகிய நின் திருவடி; சரவணப் பொய்கையிற் பிறந்த குகப் பெருமானே, நின் திருவடி; வில்லாக மலையை யுடையவனே, நின் திருவடி; சிவனே நின் திருவடி; கெடுத லில்லாத ஒப்பற்ற பரையாகிய அருட் சத்தியே, நின் திருவடி; உமையாகிய சிவையே நின் திருவடி எமக்குக் காப்பாகும். எ.று.

இயற்கையும் செயற்கையுமாகிய செயல்வகை யனைத்தும் கலையாதலின், செயற் சத்தி முற்றவும் நிறைந்த பெருமானாதலால், "கலைநிறை கணபதி" என்று கூறுகிறார். உயர் குணங்கள் யாவும் நிறைந்து அவற்றையுடைய தலைவனாதல் விளங்கக் "கயமுகக் குணபதி" என வுரைக்கின்றார். முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் தோன்றியது வரலாறாதலால் "சரவணபவ" என்றும், அன்பர்களின் மனமாகிய குகையில் தங்குதலால் "குகன்" என்றும் சான்றோரால் போற்றப்படுகின்றார். சிவன் மேருமலையை வில்லாக வளைத்தார் என்பது பற்றி, "சிலைமலை யுடையவ" என்றும், சிவன் என்ற திருப்பெயரைத் தனக்கே யுரிமையாக வுடையவனாதலால் சிவ சிவ என்றும் ஓதுகின்றார். சிவ என்பது சிவத்தையும் திருவருளையும் குறிக்கும் எழுத்துக்களாய்க் "காரண பஞ்சாக்கரம்" என்று மந்திரமாக ஓதப்படுவது கொண்டு "சிவ சிவ சிவசிவ" என உரைக்கின்றார். உலைதல் - கெடுதல். பரன் என்னும் ஆண்பாற் பெயர்க்குப் பெண்பாற் பெயர் பரை என்பது; இது இறைவனது அருட் சத்தியைக் குறிப்பது. அத் திருவருட் சத்தியை உமை எனவும் சிவை எனவும் வழங்குப. சிவனுக்குப் பெண்பாற் பெயர் சிவை என்பது முன்னையோராகிய இளங்கோவடிகள் திருநாவுக்கரசர் முதலியோர் இறைவணக்கத்தில் திருவடியே புகலும் காப்புமாதல் பற்றி "நின்னடி" எனவும், திருவடி எனவும் போற்றினாராக, பிற் காலத்தார், திருவடியைக் குறிக்கும் வடசொல்லாகிய சரணம் என்பதையும் மேற்கொண்டு சரணம் என்றனர். அதனைத் தழுவியே, "சரணம் சரணம்" என வடலூர் வள்ளலும் உரைக்கின்றார்.

இதனால், கணபதி முருகன் சிவன் பார்வதி ஆகியோர் திருவடிகளை எடுத்தோதி புகலடைந்தவாரும்.

திருச்சிற்றம்பலம்

27. மங்களம்

சிந்து

மங்களம் என்பது நலம் வேண்டி யுரைக்கும் வாழ்த்துரை; இது மங்கலம் எனவும் வழங்கும். தெய்வங்கள் மங்கள வுருவினவாயினும், பரவுவோர் அம் மங்களம் பெறுவது குறித்து உரைப்பதாகும். வானவர் இறைவனை வாழ்த்துவதும் தாம் வாழ்வு பெறுவது குறித்த தென மணிவாசகப் பெருமானுர் கூறுவர்; அதனுல் மக்களாகிய நாம் மங்கள நலம் பெறுவது கருதி இம்மங்களம் பாடப்படுகிற தெனக் கொள்க.

**2564. புங்கவர் புகழுமா தங்கமு கந்திகழ்
எங்கள் கணேசராந் துங்கற்கு—மங்களம்.**

உரை : உயர்ந்தோர் போற்றிப் புகழும் யானை முகத்தால் ஒளிர்கின்ற கணேசப் பெருமானுகிய மேலோனுக்கு மங்களம் உண்டாகுக. எ.று.

புங்கவர் - உயர்ந்தவர். மாதங்கம், யானை. துங்கன், மேலோன். தெய்வங்களில் முதன்மையாக வைத்துப் போற்றப்படுபவ ராதலின், "கணேசராம் துங்கன்" என்று கூறுகின்ருர்.

**2565. போதந் திகழ்பர நாதந் தனினின்ற
நீதராஞ் சண்முக நாதற்கு—மங்களம்**

உரை : ஞானம் ஒளிர்கின்ற பரநாத தத்துவத்தில் நிலை பெறுகின்ற நீதிமானுகிய அறுமுகப் பெருமானுக்கு மங்கள முண்டாகுக. எ.று.

போதம் - ஞானம்; இதனை ஞானுகாசம் என்று கூறுவர். பரநாதம்- மாயா மண்டலத்துக்கு உச்சியிலுள்ள, நாத தத்துவத்துக்கு மேல் மாயா மண்டலம் கடந்து அப்பால் உள்ள பரசிவ தத்துவம் பரநாதம் எனப்படுகிறது. மாயா மண்டலத்தில் ஒன்ருய் உடனுய் நிற்கும் சிவம், அதனின் வேருய்ப் பரநாதத்தில் நிலைபெறுவதால் "பரநாதம் தனில் நின்ற நீதர்" என வுரைக்கின்ருர். நீதர் - நீதிமான். சிவமே முருகப் பெருமானுதலால், "நீதராம் சண்முக நாதன்" என்கின்ருர்.

**2566. பூசைசெய் வாருளம் ஆசைசெய் வார்தில்லை
ஈசர் எமதுநட ராஜற்கு—மங்களம்**

உரை : நாளும் பூசனை புரியும் மெய்யன்பர் மனத்தின்கண் அன்புடன் எழுந்தருளும் ஈசனுகிய நடராசப் பெருமானுக்கு மங்கள முண்டாகுக. எ.று.

பூசை - பூசனை; சிறப்பொடு பூசனை செல்லாது" (குறள்) எனச் சான்ருேர் வழங்குவது காண்க. பூவும் நீரும் கொண்டு வழிபடுவது பூசையாதலால், இது தமிழ்ச் சொல் லென்பர் சொல்லாராய்ச்சியாளர்.

2567. பூமி புகழ்குரு சாமி தனையீன்ற
வாமி எனுஞ்சிவ காமிக்கு—மங்களம்.

உரை : பூவுலகில் உள்ளவர் புகழ்ந்து பரவும் குருபரனாகிய முருகப் பெருமானைப் பெற்ற அழகியாகிய சிவகாமி யம்மைக்கு மங்கள முண்டாகுக. எ.று.

பூமி - பூமியிலுள்ள மக்களைக் குறித்தலால் ஆகு பெயர். குரு ஞானாசிரியன். சாமி - முருகன். குருசாமி, குருவாகிய சாமி என விரிவும். வாமம், அழகு. அழகுடையவளை வாமி என்கிறார். தில்லையில் அம்பிகைக்குச் சிவகாமி என்பது பெயர்.

2568. புங்கமி குஞ்செல்வந் துங்கமு றத்தரும்
செங்க மலத்திரு மங்கைக்கு—மங்களம்.

உரை : உயர்வு நல்கும் செல்வங்களை மிகுதியாக எய்த, அருளும் செந்தாமரையில் மேவும் திருமகளுக்கு மங்கள முண்டாகுக. எ.று.

புங்கம், உயர்வு. செல்வ முடையார்க்கு யாவரும் சிறப்புச் செய்தலால், "புங்கமிகும் செல்வம்" என்று புகல்கின்றார். துங்கம்-ஈண்டு மிகுதிப் பொருளில் வந்தது. திருமங்கை - இலக்குமி; திருமாலுக்கு அருட் சத்தியாயவள்.

2569. பூணி லங்குந்தன வாணி பரம்பர
வாணி கலைஞர்கொள் வாணிக்கு—மங்களம்.

உரை : பூணாரம் அணிந்து விளங்கும் செல்வ வாணியும், மேன் மேலான ஞான வாணியும், கலைவாணர் மேற்கொண்ட கலைவாணியு மாகிய வாணி தேவிக்கு மங்கள முண்டாகுக. எ.று.

பூணாரம், பொன்னினும் மணியினும் ஆகிய அணிவகைகள். இவை செல்வ மகளிர் பூண்பனவாதலால், "தனவாணி" என்றும், மேன்மேல் உயரும் இயல்பினது ஞானமாகலின், ஞான வாணியைப் "பரம்பர வாணி" யென்றும் கூறுகின்றார். இசை - கூத்து. ஓவியம் முதலிய கலை வல்லுநர் வழிபடும் தெய்வமாதலால், "கலைஞர் கொள் வாணி" எனச் சிறப்பிக் கின்றார். கலைவாணியைப் பிரமனுக்கு அருட் சக்தி என்பர்.

2570. புண்ணிய ராகிய கண்ணிய ராய்த்தவம்
பண்ணிய பத்தர்க்கு முத்தர்க்கு—மங்கனம்,

உரை : நல்வினைகளைச் செய்தோராய் மேன்மை பெற்றவராய்த் தவம் புரியும் பத்திமான்களுக்கும் முத்திப் பேற்றுக் கமைந்த ஞானவான் களுக்கும் மங்கள முண்டாகுக. எ.று.

புண்ணியர் - நல்வினைகளாகிய புண்ணியங்களைச் செய்பவர். கண்ணியம், மேன்மை. புண்ணியமும் கண்ணியமு முடையவர் தவம் புரியும் தக்கோராதலின், தவம் பண்ணிய "பத்தர்" எனவும், தவத்தால் ஞானப் பேறு எய்துதலால் "முத்தர்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், தவம் பண்ணிய பத்தரும் முத்தரும் மங்களம் பெறுக என வாழ்த்திய வாறும்.

மூன்றும் திருமுறை முடிந்தது.
உரைவேந்தர் உரை.

அருட்பிரகாச வள்ளலார்

திருவருட்பா-வரலாற்றுமுறை

உரைவேந்தர் உரை

நான்காம் திருமுறை

உ

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்பிரகாசவள்ளலார்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிய

திருவருட்பா-வரலாற்றுமுறை

உரைவேந்தர் உரை

நான்காம் திருமுறை

1. குஞ்சிதபாதப் பதிகம்

அஃதாவது கூத்தப் பெருமான் தில்லையம்பலத்தில் ஒரு காலை யெடுத்து வளைத்தாடுதலால், வளைந்த அவரது திருவடி, குஞ்சித பாதம் எனப்படுகிறது. அத் திருவடி உலகுயிர்களை வாழ்விக்கும் சிறப்பமைந்த தென்பது கொண்டு அதனை இப்பதிகத்தாற் பாடுகின்றார். "தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம் ஆட எடுத்திட்ட பாதமன்றே நம்மை யாட் கொண்டதே" (கோயில்) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க.

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2571. திருவண்ண நதியும்வளை ஒருவண்ண மதியும்வளர்
செவ்வண்ணம் நண்ணுசடையும்
தெருள் வண்ண நுதல்விழியும் அருள் வண்ண வதனமும்
திகழ்வண்ண வெண்ணகையும் ஓர்
மருவண்ண மணிகுவளை மலர்வண்ண மிடறும்மலை
மகள் வண்ண மருவும் இடமும்
மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண அடிமலரும்
மாணிக்க வண்ணவடிவம்
இருவண்ண மாம்என்மன தொருவண்ணம் ஆகியே
இடையரு தென்னும் வண்ணம்
எவ்வண்ணம் அவ்வண்ணம் இவ்வண்ணம் என்றிவன்
இயம்பல் உன் கருணைவண்ணம்
கருவண்ணம் அறஉளம் பெருவண்ணம் உறநின்று
கடல்வண்ணன் எண்ணும் அமுதே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே

உரை : பிறவித் துயர் நீங்கவும், மனம் பெருமை யெய்தவும் கடல் நிறமுடைய திருமால் நிலை நின்று சிந்திக்கும் அமுதாயவனே, பொன்னம் பல நாதனே, கருணை பொழியும் கண்களை யுடையவனே, ஞான வுருவான தாமரை போன்ற குஞ்சித்தத் திருவடியை யுடையவனே, திருவுடைய கங்கை நதியும், சங்கின் ஒப்பற்ற நிறத்தையுடைய பிறைத் திங்களும் பெருகுகின்ற செம்மை நிறம் பொருந்திய சடையும், தெளிந்த இயல்பையுடைய நெற்றிக் கண்ணும் அருள் நிறைந்தொழுகும் முகமும், ஒளி விளங்கும் வெண்மையான பற்களும் மணம் கமழும் மணி நிறமுடைய குவளை மலர் போன்ற கழுத்தும், மலை மகளான உமையம்மை பொருந்திய இடப்பாகமும், பெருமை மிக்க இரண்டாகிய பொன்னிறத் திருவடித் தாமரையும், மாணிக்க மணி நிறம் கொண்ட திருமேனியும், இரண்டு பட்டலையும் என் மனம் ஒருமை மனதாகி இடையருமல் எண்ணுமாறு எவ் வண்ணமோ அவ்வண்ணம் இவ்வாறு என்று அறிவித்தருளுவது திருவருட் செயலாகும். எ.று.

இச்சொன்மாலைக்கு மங்கல மொழி வேண்டுதலின், "திருவண்ண நதி" என்று தொடங்குகின்ருர். கங்கையும் மங்கல மகளாய் இறைவன் திருமுடிச் சடையில் தங்கும் சிறப்புப் பற்றி, இங்ஙனம் கூறுகிருர் எனினு மமையும். பிறைத் திங்களின் வெண்மை விளக்குதற்கு 'வளை வண்ணமதி' என்று சொல்லுகிருர். மதி, ஈண்டுப் பிறைமதி. இறைவன் செஞ்சடை செந்நிறக் கதிர் பரப்பி ஒளிர்தலால், "வளர் செவ்வண்ணம் நண்ணுசடை" என்று கூறுகின்ருர். ஒளி மிக்க நுதலில் பொருந்திய திருக்கண் ஞானத் தெளிவுடைய தென்றற்குத் "தெருள்வண்ண நுதல் விழி" என்றும், திருமுகம் எவ்வுயிர்க்கும் அருள் செய்தல் பற்றி, "அருள் வண்ண வதனம்" என்றும் இயம்புகின்ருர். இறைவனது சிரித்த வாயிற் ருேன்றும் பற்கள் வெள்ளிய ஒளி பரப்புதல் விளங்க, "திகழ்வண்ண வெண்ணகை" என்கின்ருர். மரு - நறுமணம். மணிக் குவளை - நீலமணி யின் நிறமுடைய இதழ்களையுடைய குவளை; "மாயிதழ்க் குவளை" எனச் சான்ருேர் கூறுவர். மணிக்குவளை யெனற் பாலது சந்தம் நோக்கி இயல்பாயிற்று. இறைவனது விடக்கறை படிந்த மிடறு குவளை மலர் போலும் நிறமுடைய தெனப் புலப்படுப்பாராய், "குவளை மலர் வண்ண மிடறு" என விளம்புகின்ருர். மிடறு - கழுத்து. மலைமகளாகிய உமை நங்கையைத் தன் மேனியில் இடப்பாகத்துக் கொண்டவனுதலால், "மலைமகள் வண்ண மருவும் இடம்" என வுரைக்கின்ருர். உற்ருரைத் தாங்கும் பெருமையும் பொன்னிறமும் மன்னிய திருவடி யென்றற்கு, "மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண அடிமலர்" எனப் புகழ்கின்ருர். மாணிக்கமலை போலும் தோற்ற முடையன் எனச் சான்ருேர் பரவுதலால், "மாணிக்க வண்ண வடிவு" எனக் கூறுகின்ருர். "மாணிக்கத்தின் மலை போல வருவார் விடை யேறி" (கடவூர்) என நம்பியாரூரர் கூறுவது காண்க. பலதலைப்பட்டு விரிந்தலையும் இயல்புடைமை பற்றி, "இரு வண்ணமாம் மனது" என்றும், ஒருமை மனமே உயர் வுடைத்தாய்க் கருதும் கருத்து முற்றப் பெறும் என அறிஞர் உரைப்பதால் "என் மனம் ஒருவண்ண மாகியே இடையரு தெண்ணும் வண்ணம்" என்றும் இயம்பு கின்ருர். நதியும், மதியும், சடையும், நுதல் விழியும், வதனமும், வெண்ணகையும், மிடறும், மலை மகள் மருவும் இடப்பாகமும், அடி மலரும், மாணிக்க வடிவும் இடையறவின்றி எண்ணுவது வேண்டத்

தக்க செயலாம் என்றற்கு "இடையறுது எண்ணும் வண்ணம்" என விரும்புகின்றார். இடையறவு தோன்றின் மன வொருமை கெடும் என்பது கருத்து. இடையறுத ஒருமை நிலை எய்த வேண்டி இறைவன் திருவருளை வேண்டுகின்றாராதலின், "இடையறுது எண்ணும் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் இவ்வண்ணம் என்று இயம்பல் உன் கருணை வண்ணம்" என்று சொல்லுகின்றார். இடையறவின்றி யெண்ணும் முறை இம்முறை யென அறிவுறுத்தருளுவது நினது அருட்கடன் என்பாராய், "இவ் வண்ணம் என்று இயம்பல் உன் கருணை வண்ணம்" என்கின்றார். "ஒன்றி யிருந்து நினைமின்கள்" என்றும், "இரண்டுற மனம் வையே" லென்றும் கூறுத லுண்டே யன்றி, ஒன்றும் திறம் தெரியேன்; அதனை இவ்விடத்தே இப்பொழுதே அருளல் வேண்டும் என்பார், "இவண் இயம்பல் உன் கருணை வண்ணம்" எனக் கூறுகின்றார். இடையறுது எண்ணும் ஒருமை நிலைக்கு எடுத்துக் காட்டுத் தருவார் போலத் திருமால் எண்ணி இன்புறும் நலத்தை, "நின்று கடல்வண்ணன் எண்ணும் அமுதே" என இயம்புகின்றார். கடல் போலும் நீல மேனியனுதலால் திருமாலைக் "கடல் வண்ணன்" என்கின்றார். "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக் கடல்வண்ணன் பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே" (சிலப்) என இளங்கோவடிகள் இசைப்பது காண்க. இறைவன் திருவுரு நலங்களை ஒருமை மனத்தால் எண்ணுவதால் விளையும் பயன் கூறு வாராய், "கருவண்ணம் அற உளம் பெருவண்ணமுற" என்று கூறு கின்றார். கருவண்ணம், பிறவித் தொடர்பு. உள்ளம் பெருவண்ணம் உறுதலாவது, மனம் திருவருட் பேரொளி நிலவும் பெருமை யுறுவதாம். இடையறுது எண்ணுமிடத்து இறைவன் பெறற்கரும் பேரமுதாய் ஞானப் பேரின்பம் நல்குவன் என்பது தோன்ற, "அமுதே" என்கின்றார். பொன் வேய்ந் துள்ளமையால் பொன்னம்பலத்தைக் "கனக அம்பலம்" எனவும், அதன்கண் ஒப்பாரு மிக்காருமின்றித் தான் ஒருவனே திருக்கூத்தாடு தலால் "அம்பல நாத" எனவும், அருள் பெருகி யொழுகும் அழகிய கண் களை யுடையனுதலால், "கருணையங்கண்" எனவும் எடுத்துரைக்கின்றார். கண்ணன், கண்ண என அண்மை விளியேற்று இடை குறைந்து நின்றது. ஆன்மாக்களை ஆண்டருள எடுத்த திருவடியைப் புகழ்ந்து பாடுமாறு விளங்க, "கமல குஞ்சித பாதனே" என மகுட மிட்டுரைக் கின்றார். போத கமலம், ஞான மணம் கமழும் தாமரை.

இதனுல், சிவபிரானது திருவுரு நலத்தை இடையறுது எண்ணும் திறம் அருளுமாறு வேண்டியவாறும். (1)

2572. எண்ணுறுவி ருப்பாதி வல்விலங் கினமெலாம்
இடைவிடா துழலஒளிஓர்
எள் அளவும் இன்றிஅஞ் ஞானஇருள் மூடிட
இருண்டுயிர் மருண்டுமாழ்க
நண்ணுமன மாயையாம் காட்டைக் கடந்துநின்
ஞான அருள் நாட்டைஅடையும்
நாள்எந்த நாள் அந்த நாள் இந்த நாள்என்று
நாயினேற் கருள் செய்கண்டாய்
விண்ணுறுசு டர்க்கெலாம் சுடர்அளித் தொருபெரு
வெளிக்குள்வளர் கின்றசுடரே

வித்தொன்றும் இன்றியே விளைவெலாம் தருகின்ற
விஞ்ஞான மழைசெய்முகிலே
கண்ணுறுநு தற்பெருங் கடவுளே மன்றினில்
கருணை நடம் இடுதெய்வமே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : வானத்திற் காணப்படும் ஒளிப் பொருள்கள் அனைத்திற்கும் ஒளி தந்து பராகாச மென்னும் பெருவெளியில் நின்று, பெருகுகின்ற பேரொளிப் பரம்பொருளே, வித்தின்றியே எல்லாம் விளைக்கின்ற சிறந்த ஞானமாகிய மழையைப் பொழிகின்ற மேகமே, கண் பொருந்திய நெற்றியையுடைய பெரிய கடவுளே, சிற்சபையில் அருட் கூத்தாடும் தெய்வமே, பொன்னம்பலத்தில் மேவும் தலைவனே, கருணை பொழியும் கண்களையுடைய ஞான மயமான கமலம் போன்ற குஞ்சித பாதனே, எண்ணப்படுகின்ற விருப்பு வெறுப்பு முதலிய குற்றங்களாகிய வலி மிக்க விலங்கு வகை பலவும் இடைவிடாது திரிந்துலவ, எள்ளளவேனும் ஒளி யின்றி அஞ்ஞானமாகிய இருள் மண்டுதலால் இருண்டு, உயிரறிவு மருண்டு, மயங்கி வருந்த, பொருந்துகின்ற மனம் செய்யும் மாயை யென்னும் காட்டைக் கடந்து நின்னுடைய திருவருட் பேரொளி நிலவும் திருநாட்டை யான் சென்றடையும் நன்னுள் எந்த நாளோ, அந்த நாள் இந்நாள் என்று நாயினேனுக்கு விளங்க உரைத்தருளுவாயாக. எ.று.

வானத்தில் நமது கண்ணைக் கொண்டும் கருவிகளைக் கொண்டும் காண்கின்ற எண்ணிறந்த ஒளிப் பொருள்கட் கெல்லாம் ஒளி தந்து ஒளிரச் செய்யும் சூரியன் போல, சூரியர் பலர்க்கும் வேண்டும் மூலவொளியைத் தருவது பரஞ்சுடராகிய பரம்பொருள் என்பாராய், "விண்ணுறு சுடர்க் கெலாம் சுடரளித்து ஒரு பெரு வெளிக்குள் வளர்கின்ற சுடரே" எனவுரைக்கின்ருர். "பாதி பெண்ணுருவாகிப் பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதியே" (சித்தத்தொகை) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. காணப்படும் ஒளிப் பொருட்குரிய சூரியன், இருந்தொளிரும் ஆகாயம் போலச் சூரியர் அனைவரையும் உள்ளடக்கிய பேராகாயத்துக்கு மேலாய் பரம்பொருள் நின்று பரஞ்சுடரை நல்கும் ஆகாயம் பராகாயமாம்; அது, "பெருவெளி" யென ஈண்டுக் குறிக்கப்படுவதால்; ஆண்டு நின்று திகழும் சிவபரம் பொருளை "ஒரு பெரு வெளிக்குள் வளர்கின்ற சுடரே" எனப் புகல்கின்ருர். காரணமின்றி காரியமில்லை என்பது உலகியலாக, பரம்பொருட்கு அந்நியதியில்லை என்பது புலப்பட "வித்தொன்றுமின்றியே விளைவெலாம் தருகின்ற விஞ்ஞான மழை செய் முகிலே" என விளம்புகிருர். வித்து-காரணப் பொருட்டு. விளைவு - காரியம். "விச்சின்றி நாறு செய்வான்" (ஆரூர்) என நாவுக்கரசரும், "விச்ச தின்றியேவிளைவு செய்குவாய் விண்ணு மண்ணக முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" (சதகம்) என மணிவாசகரும் கூறுகின்றனர். விஞ்ஞானம், சிறந்த ஞானம் அஃதாவது சிவஞானம். ஞானத்தின் இன்ப வியல்பை; மழை என்றமையின், அதனைத் தருகின்ற பரசிவத்தை "முகிலே" என மொழிகின்ருர். கண்ணுதற் கடவுள் என்பது சிவனுக்குரிய பெயர்களில் ஒன்று. தேவர்

முனிவர்களையும் கடவுள் என்பவாகலின், அவர்களின் வேறுபடுத்தற்குப் "பெருங் கடவுளே" என்றும், உயிர்கட்கு அருள் புரிவது குறித்துத் திருக்கூத்து மன்றில் ஆடப்படுவ தென்றற்கு, "மன்றினிற் கருணை நடமிடு தெய்வமே" என்றும் கூறுகின்றார். விருப்பு வெறுப்பு முதலிய எண்ணங்கள் துன்ப வேதுவாய்க் காத்து விலக்குதற் கரிய வன்மை யுடையவாய் நிலவுதலால், எண்ணுறு விருப்பாதி வல்விலங்கினம்" எனவும், எப்போதும் நெஞ்சின்கண் தோன்றி வருத்துமாறு புலப்பட, "இடைவிடா துழல" எனவும் கூறுகின்றார். மலம் சூழ்ந்து நல்ல அறிவொளி புகாதவாறு இருள் செய்யும் இயல்பு குறித்து, "ஒளி ஓர் எள்ளளவுமின்றி அஞ்ஞான இருள் மூடிட இருண்டு" என்றும், அதனால் உயிர்கள் பொய்யும் வழுவுமாகிய குற்றம் புரிந்து மயங்குமாறு விளங்க, உயிர் மருண்டு மாழ்க என்றும், மலமாயை கன்மங்களின் செயலியக்கம் மனத்தின் வாயிலாக நிகழ்வதுபற்றி, மன மயக்கத்தை, "நண்ணும் மனமாயையாம் காடு" என்றும், இருள் மண்டி வல்விலங்குகள் உலவும் காடுவழிச் செல்வார்க்குத் தீது செய்வதுபோல மனமாயையாம் அஞ்ஞானவிருள் திணிநது விருப்பு வெறுப்பாகிய உணர்வுகள் நிலவும் வாழ்வைக் கடந்து சிவஞான இன்பவொளி நிலவும் நின் திருவருட் பெறுவாழ்வு பெறும் காலம் எனக்கு எப்பொழுது எய்துமென எனக்கு உணர்த்தியருள்க என வேண்டுவார், "நின் ஞானவருள் நாட்டையடை யும் நாள் எந்த நாள் அந்த நாள் இந்த நாள் என்று நாயினேற்கு அருள்செய்" என்றும் விண்ணப்பிக்கின்றார். கண்டாய் - முன்னிலையசை. திருவருள் செய்யும் நலத்தை என்றும் மறவேன் என்பார்," நாயினேன்" என நவில்கின்றார். நன்றி மறவா நல்லியல்பு நாய்க்குண்டு என அறிக.

இதனால், மனமாயை கொண்டு நிகழும் மண்ணக வாழ்வைக் கடந்து, திருவருள் இன்ப நாடாகிய நின் திருவடி நீழல் பெறும் காலம் எப்போதெனஎனக்கு உணர்த்துக என முறையிட்டவாறும். (2)

2573. பூதநெறி யாதிவரு நாதநெறி வரையுமாப்
புகலுமு வுலகுநீத்துப்
புரையுற்ற மூடம்எனும் இருள் நிலம்அ கன்றுமேல்
போய்அருள்ஒ ளித்துணையினல்
வேதநெறி புகல்சகல கேவலம்இ லாதாபர
வெளிகண்டு கொண்டுகண்ட
வினைவின்றி நான் இன்றி வெளிஇன்றி வெளியாய்
விளங்குநாள் என்றருளுவாய்
வாதநெறி நடவாத போதநெறி யாளர் நின்று
மதிநெறிஉ லாவும்மதியே
மணிமிடற் றரசேஎம் வாழ்வின்முத லேஅரு
மருந்தெபெ ருந்தெய்வமே
காதநெறி மணம்வீசு களிதருபொ ழிற்குலவு
கடிமதிற் றில்லைநகர் வாழ்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : தருக்கவாத நெறிகளை விரும்பாமல் ஞான நெறியினருடைய அறிவு நெறியில் விளங்கும் ஞான மதியமே, நீலமணிக் கழுத்தையுடைய அருளரசே, எமது வாழ் முதலாயவனே, பெறற்கரும் மருந்து போல்ப வனே, பெரிய தெய்வமே, காத தூரம் நறுமணம் கமழும் இனிய கனிகளை யுடைய சோலைகளும், காவலமைந்த மதிலும் சூழ்ந்ததில்லை நகர்க்கண் மேவும் பொன்னம்பல நாதனே, கருணையங் கண்ணனே, போத கமல குஞ்சித பாதனே, பூதநெறி முதலாக நாத நெறி வரையுமாகச் சொல்லப் படுகின்ற மூவகையுலகங்களையும் கடந்து, குற்றம் பொருந்திய மூடம் எனப்படும் இருளுலகத்தைத் துறந்து, மேலே சென்று, ஆங்கு நிலவும் திருவருளொளியின் துணை கொண்டு, ஆகம நெறியுரைக்கும் சகல கேவல நிலைகளில்லாத பரவெளியைக் கண்டு ஆங்கு விளையும் பரபோகத்தையும் அதனை நுகரும் தன்னையும் விளைநிலமாகிய பரவெளி யையும் மறந்து பரவெளியேயாய் விளங்கும் நன்னாள் எனக்கு எந்நாள் எய்துமெனத் தெரிவித்தருள வேண்டுகிறேன். எ.று.

தருக்கவாத முறைகள் சிவஞானப் பேற்றுக் குதவாவாகலின்,'' வாத நெறி நடவாத'' என்றும், ஞான நெறியன்றிப் பற்றலாவது வேறன்று என வுணர்ந்து அதனையே மேற்கொண் டொழுகும் ஞானவான்களைப் "போத நெறியாளர்'' என்றும், அவர்களது குறைவின்றி நிறைந்த ஞான நெறிக் காட்சியில் குளிர்ந்த ஒளி செய்யும் சிவஞான மதியமாய் விளங்குவது தோன்ற, "நிறைமதி நெறி யுலாவும் மதியே'' என்றும் இனிது விளக்கிக் கூறுகின்றார். யோக நிலையில் நின்றுதுவாத சாந்த வெளியில் திகழும் அமுதசத்திரனன்று என விலக்குதற்குப் "போத நெறியையும் நிறைமதி நெறியையும்'' விதந்துரைக்கின்றார். வாழ்வார்க்கு வேண்டும் உடல் கருவி கரண நுகர்வுகளை நல்கும் முதல் என்றற்கு, "எம் வாழ்வின் முதலே'' என இசைக்கின்றார். அடியேன் தன்னைத் தாங்குநர் இல்லை என் வாழ் முதலே'' (நீத்தல்) என மணிவாசகப் பெருமான் குறிப்பது காண்க. தேவர்கள் போலக் கடல் கடைந்தும் பெறலாகாமையின், "அருமருந்தே'' என்கின்றார். தேவதேவ ரெல்லாம் தொழுதேத்தும் தெய்வமாகலின், சிவனை, "பெருந் தெய்வம்'' என்று பேசுகின்றார். தொழப்படுந் தேவர் தொழப்படுவான்'' (தனி) என நாவுக்கரசர் கூறுவ தறிக. பொழில்கள் பூக்களாலும் கனிகளாலும் மணம் கமழ்வனவாகலின், "காத நெறி மணம் வீசு கனிதரு பொழில்'' எனப் புனைந்துரைக்கின்றார். சிற்றம்பலம், சிதம்பரமாய்த் திரிவதற்கு முன், தில்லைநகர் என்றே சான்றோர் வழங்கினமை பற்றி, "கடிமதில் தில்லைநகர்'' என்று கூறுகின்றார். பிரகிருதி தத்துவ வுலகு, வித்தியா தத்துவ வுலகு, சுத்தமெனப்படும் நாத தத்துவ வுலகென மூவகைத் தாதல் விளங்க, "பூத நெறியாதி வருநாத நெறி வரையுமாப் புகலு மூவுலகு'' என உரைக்கின்றார். பிரகிருதி தத்துவம் நில முதலிய பூத பௌதிகங்களோடு கூடிய நெறியாவது பற்றிப் "பூத நெறி'' எனவும், சிவஞான, சிவசத்திகளோடும் இயங்கும் நெறியாதல் பற்றி, அதனை நாத நெறியென்றும், சுத்தா சுத்தமாகிய வித்தியா தத்துவம் இடைப்படுவது பற்றி மிசிர நெறியென்றும் சான்றோர் கூறுவரென அறிக. இம் மூன்றும் மாயா மண்டலத்துக்குள்ளிருப்பனவாதலால், "மூவுலகும் நீத்து'' என்று இயம்புகின்றார். காலாக்கினி முதல் அனுசிருதை யீருகவுள்ள புவனங்கள்,

இருநூற்று இருபத்து நான்கும் நிவர்த்தி முதலிய கலையைந் திடத்தவாய்ச் சுத்தம், சுத்தா சுத்தம், அசுத்தமென்ற மூவகை மாயை யினும் அடங்குதலின் "மூவுலகு" என மொழிகின்றார். மூடம் ஒன்றிற் பற்று வைத்து, அதன்கண்ணே முந்திப் பிறவற்றை, யறியா தொழிதல் இதனை லோக மூடம், பாசண்டி மூடம், வேதா மூடம் என மூன்றாக வுரைப்பர் நீலகேசியுரைகாரர். இவற்றாற் குற்றமே யுண்டாதலால், "புரையுற்ற மூடம் எனும் இருணிலம்" எனப் புகன்றுரைக்கின்றார். மாயா வுலக மயக்கமும் மூடமாகிய இருள் நிலமும் கடக்க முயல்வார்க்குத் திருவருள் ஞானம் ஒளி செய்து துணை புரியும் என்பதால் "அருளொளித் துணையினால்" எனக் கூறுகின்றார். வேத நெறியெனப் பொதுவாக வுரைப்பினும், வேதாந்தத் தெளிவாம் சிறப்புடைய ஆகம நெறியெனக் கொள்ளப்படும். சிவாகமம் ஆன்மாவின் நிலையை, சகலம் கேவலம் சுத்தம் என்று மூன்றாகவுரைப்பது; அதனால், "வேத நெறி புகல் சகல கேவலமிலாத பரவெளி கண்டு" எனவும், அதனைக் காணுமிடத்து எய்தும் இன்ப நுகர்வையும் நுகரும் தன்னையும் நுகரும் இடத்தையும் மறந்து அதுவதுவாய் இயைந்து,ஒன்றாய்விடுமாறு உணர்த்த, "கொண்டு கண்ட விளைவின்றி நானின்றி வெளியின்றி வெளியாய் விளங்கு நாள்" எனவும் இயம்புகின்றார். வெளியென்பது, சுத்தநிலை. சுத்தநிலை எய்திய ஆன்மா சிவபோக நுகர்வில் சிவமாய்விடுது பற்றி, "வெளியின்றி வெளியாய் விளங்கு நாள்" என்கின்றார். வெளி யின்றி வெளியாதலாவது, வெளி வேறு, தான் வேறு எனற்கின்றி ஒன்றாதல். இச் சிவபோகத்தை யான் எய்துங்காலம் எப்போது, என விண்ணப்பிக்கின்றாராகலின், "வெளியாய் விளங்கும் நாள் என்று அருளுவாய்" என வுரைக்கின்றார்.

இதனால் சிவதரிசனம் பெற்றுச் சிவயோக முற்றுச் சிவபோகச் சிவமாகும் காலம் எனக்கு எய்துங் காலம் எப்போது என வேண்டிக் கொண்டவாறும். (3)

2574 **கூர்கொண்ட வாள்கொண்டு கொலைகொண்ட வேட்டுவக்**
குடிகொண்ட சேரிநடுவில்
குலைகொண்ட ஒருசெல்வன் அருமைகொண் டின்றிடு
குலங்கொண்ட சிறுவன்ஒருவன்
நேர்கொண்டு சென்றவர்கள் கைகொண் டுறக்கண்கள்
நீர்கொண்டு வாடல்எனவே
நிலைகொண்ட நீஅருட் கலைகொண் டளித்தயான்
நெறிகொண்ட குறிதவறியே
போர்கொண்ட பொறிமுதல் புலைகொண்ட தத்துவப்
புரை கொண்ட மறவர் குடியாம்
பொய்கொண்ட மெய்என்னும் மைகொண்ட சேரியில்
போந்து நின் றவர் அலைக்கக்
கார்கொண்ட இடிஒலிக் கண்கொண்ட பார்ப்பில்
கலங்கினேன் அருள்புரிகுவாய்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : கூரிய வாட்படையேந்திக் கொலை புரியும் தொழில் மேற்கொண்ட வேட்டுவர் குடியமைந்து வாழும் சேரியின் நடுவில், திரண்ட செல்வமுடைய ஒரு செல்வன், அருமையாகப் பெற்ற குலமகன் நேர்படச் சென்றுஞக, வேட்டுவர்கள் அவனைக் கைப்பற்றிக்கொள்ளவும் கண்களில் நீர் சொரிந்து அச்சிறுவன் வருந்தி வாடுவதுபோல, நித்தப் பொருளாகிய நின்னுல் அளிக்கப்பட்ட யான் செந்நெறி காட்டும் குறி தவறிய பொருதலைச் செய்யும் கண் முதலிய பொறிகட்கு இடமாகிய புலைத்தன்மை பொருந்திய தத்துவங்களாகிய குற்றக் குடில்களில் உறையும் மறவர் குடியினர் பொய்த் தன்மையை யுள்ளீடாகக் கொண்ட மெய்யென்னும் சேரியிற் புகுந்து அலைக்க, கார் காலத்து இடி மின்னலிற்பட்ட பறவைக் குஞ்சுபோல் மனம் கலங்குகின்றேனுதலால், எனக்கு உன் திருவருளை நல்குவாயாக. எ.று.

நாளும் உயிர்க்கொலை புரியும் வேட்டுவர்க்கு வாளும் வேலுமாகிய கருவிகள் செம்மையா யிருத்தல் வேண்டுமாதலின், "கூர்கொண்ட வாள் கொண்டு கொலை கண்ட வேட்டுவர்" எனவும், அவர்கள் வாழும் பகுதி ஊரையும் காட்டையும் சேர இருப்பது தோன்ற, "குடிகொண்ட சேரி" எனவும் இயம்புகிருர். திரண்ட செல்வமுடையவனுக்கு நெடுநாள் மகற்பேறின்மையான் வருந்தினமை விளங்க, "குவை கொண்ட ஒரு செல்வன் அருமை கொண்டு ஈன்றிடும் குலம் கொண்ட சிறுவன்" என வுரைக்கின்ருர். தமது சேரிக்குள் தனித்தெய்தக் கண்ட வேட்டுவர் வளைத்துச் சிறை செய்து கொண்டமையின் சிறுவன் மருண்டு, கண் கலங்கி வருந்தினமை தோன்ற, "நேர் கொண்டு சென்று அவர்கள் கைக்கொண்டுறக் கண்கள் நீர் கொண்டு வாடல் எனவே" என்று கூறுகின்ருர். இந்த உவமையைக் கொண்டு உடம்பின்கண் உறையும் ஆன்மாவின் நிலையை யுணர்த்துகின்ருராதலின், பொறி புலன் முதலிய தத்துவத் தொகுதியை, "போர் கொண்ட பொறிமுதல் புலைகொண்ட தத்துவப் புரைகொண்ட மறவர்" எனவும், உடம்பை "மறவர் குடியாம் பொய்கொண்ட மெய்யெனும் மைகொண்ட சேரி" எனவும் காட்டுகின்ருர். போர்த் துன்பத்தைச் செய்தலாற் பொறி முதலியவற்றைப் "போர் கொண்ட பொறி முதல் புலைகாண்ட பொறி" என்றும், தீமை செய்யும் இயல்புபற்றி, "புலை கொண்ட தத்துவம்" என்றும் கூறுகிருர். உரை-குற்றம். உடம்பின் நிலையாமை தோன்ற, "பொய்கொண்ட மெய். யனும் மை கொண்ட சேரி" எனக் குறிக்கின்ருர். மை - குற்றம் உடம்பி னுட் புகுந்த ஆன்மாவைப் பொறி புலன்களாகிய தத்துவத் தொகுதிகள் தனித்தும் கூடியும் வருத்துமாறு விளங்க, "அவர் போந்து நின்று அலைக்க" என்கின்ருர். அலைத்தல் - வருத்துதல். கார் மழையால் நனைந்து குளிருற்று வருந்தும் பறவைக்குஞ்சு, முகிலின் இடிக் குரல் கேட்டு நடுங்குவதுபோல உயிருணர்வு இடர்ப்படும் திறம் இனிது புலப்பட "கார் கொண்ட இடியொலிக்கண் கொண்ட பார்ப்பெனக் கலங்கினேன்" எனவும், அந்நிலைமையின் நீங்குதற்குத் திருவருள் ஞானம் அருளுக என வேண்டுவாராய், "அருள் புரிகுவாய்" எனவும் உரைக்கின்ருர். உணர்வுருவாய உயிராதலின், "கண்கொண்ட பார்ப்பு" எனக் குறிக்கின்ருர். பார்ப்பின் என்புழி இன்னுருபு உவமப் பொருட்டு. புள்ளினத்து இளங்குஞ்சு பார்பு எனப்படும். உயிரைப் புள்ளிற்கு ஒப்புக்

கூறுவது மரபு. "குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு, குறள்" எனச் சான்றோர் கூறுவது காண்க.

இதனால், உடம்பிடை யுயிர்க்குளதாகிய தொடர்பும் அதனால் உயிர் எய்தும் துன்ப நிலையும் சுட்டி யுரைத்தவாறும். (4)

2575 **படமெடுத் தாடுமெரு பாம்பாக என்மனம்**
பாம்பாட்டி யாகமாயைப்
பார்த்துக் களித்துதவு பரிசுடைய விடயம்
படர்ந்தபிர பஞ்சமாகத்
திடமடுத் துறுபாம்பின் ஆட்டமது கண்டஞ்சு
சிறுவன்யா னாகநின்றேன்
தீரத்து ரந்தந்த அச்சந்த விர்த்திடு
திறத்தன் நீ ஆகல்வேண்டும்
விடமடுத் தணிகொண்ட மணிகண்ட னேவிமல
விஞ்ஞான மாம் அகண்ட
வீடளித் தருள்கருணை வெற்பனே அற்புத
விராட்டுருவ வேதார்த்தனே
கடமாடுத் திடுகளிற் றுரிகொண்ட ணிந்தமெய்க்
கடவுளே சடைகொள் அரசே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : விடம் பொருந்திய கறையால் அழகுற்ற நீலமணி போன்ற கழுத்தையுடைய பெருமானே, தூய மெய்ஞ்ஞானமாகிய அகண்டமுத்தி வீடளித்து ஆன்மாக்கட் கருள் புரியும் கருணையாகிய மலையை யுடையவனே, அற்புதமான விராட்டு சொரூபத்தையுடைய வேதப் பொருளாயவனே, மதம் பொழியும் யானையின் தோலைப் போர்த்து, அழகு கொண்ட திருமேனியை யுடைய கடவுளே, திருமுடியிற் சடை கொண்ட அருளரசே, பொன்னம்பல நாதனே, கருணை பொழியும் கண்களை யுடையவனே, ஞானமயமான குஞ்சித பாதனே, எளியேனுடைய மனம் படம் விரித்தாடுகின்ற பாம்பு போல்வதாக, உலக மாயை அப்பாம்பை ஆட்டுவிக்கும் பாப்பாட்டியாக, விரிந்த பிரபஞ்சம், அதன் ஆட்டத்தைப் பார்த்துப் பரிசளிப்போர் தரும் பரிசாக, வன்மையான அப்பாம்பினுடைய ஆட்டத்தைக் கண்டு அஞ்சுகின்ற சிறுவன்போல யான் உள்ளேன்; முற்றவும் நீக்கி அந்த அச்சத்தைப் போக்கும் கூறுபாடுடையனாக நீ விளங்குதல் வேண்டும்! இந்த நலத்தை அருளுக. எ.று.

விடத்தை யுண்டதனால் கறைபடிந்த தாயினும் அழகுறுதல்பற்றி, "விட மடுத்தணி கொண்ட கண்டனே" எனவும், அது தானும் நீலமணி போலும் நிறமும் ஒளியும் பெறுவதால், "மணிகண்டனே" எனவும் கூறுகின்றார். விமலம் - மலமின்மை; விஞ்ஞானம், சிறந்த மெய்ம்மை ஞானம். ஞானத்தால் வீடு பேறு எய்துமென்பதுபற்றி, "விமல விஞ்ஞான மாம் அகண்ட வீடளித்து" என்றும், வீடடைந்தார் நுகர்வது பேரின்பம் என்றற்கு, "வீடளித்து அருள் கருணை வெற்பனே" என்றும் உரைக்

கின்றார். கருணை யுருவால் மலைபோல்வதுபற்றி "கருணை வெற்பன்" எனச் சிறப்பிக்கின்றார். விராட்டுருவம், அண்டங்களையும் அவற்றுள் அடங்கிய உலகுயிர்களையும் தன்கண் அடங்கக் கொண்ட பேருருவம். முத்திவீடு அளப்பரி தென்பது கொண்டு "அகண்ட வீடு" எனவுரைக்கின்றார். வேதம் கூறும் மெய்ப்பொருளாதலின், இறைவனை "வேதார்த்தன்" என விளம்புகின்றார். தோற் போர்வையை மேனியிற் கொண்ட கடவுள், சிவன். சடையில் கங்கை நீரைத் தாங்கி உலகை அருளால் அளிப் பதனால், "சடைகொள் அரசே" என்று பாராட்டுகின்றார். விரிதலும் குவிதலும் உடையதாதலால், மனத்தைப் "படமெடுத்தாடும் ஒரு பாம்பு" எனவும், உலகியல் வாழ்வு தரும் ஆசை மயக்கம் பல தலையாக மனத்தை யீர்த்து, அலைப்பதுபற்றி, "மாயை பாம்பாட்டியாக" எனவும் இயம்புகிறார். பிரபஞ்சம் என்பதன் சொற்பொருள் விரிந்தது என்பதாகலின், அதனைப் "படர்ந்த பிரபஞ்சம்" என்றும், மனமாகிய பாம்பின் ஆட்டத்தைப் பார்த்து மகிழ்வது பொறிபுலன்களாகவும், அவற்றால் எய்துவது பிரபஞ்ச போகமாகவும் இருப்பது நினைந்து, "பார்த்துக் களித்துதவு பரிசுடையர் விடயம் படர்ந்த பிரபஞ்சமாக" என்றும் உரைக்கின்றார். திடம், வன்மை. அறிவாற் சிறுமையுடையவன், சிறுவன். தீரத் துறத்தலாவது, மீளவும் தோன்றி வருத்தாதபடி கெடுத்தல். "தலைப்பட்டார் தீரத்துறந்தார்" (குறள்) எனச் சான்றோர் வழங்குவது காண்க. பாம்பைக் கண்டாலே அஞ்சுவது மக்களியல்பு; படம் விரிந்த பாம்பு கண்டாரை அஞ்சி நடுங்கச் செய்யுமாதலின், "பாம்பின் ஆட்டமது கண்டு அஞ்சும் சிறுவன் யானாக நின்றேன்" எனக் கூறுகிறார். மனத்தின் ஆட்டம் கண்டு அஞ்சுகின்ற சிறுமை யுடையவனாதலால், அச்சமின்றி அதனை அடக்கி ஒரு நெறிக்கண் செலுத்திப் பயன்கொள்ளும் பெரியோனாதல் வேண்டுமென்றும், அதற்கு அருட்டுணை புரிதல் வேண்டுமென்பார், "தீரத் துறந்தந்த அச்சம் தவிர்த்திடு திறத்தல் நீயாகல் வேண்டும்" என வேண்டுகின்றார்.

இதனால், மனத்தை நெறிப்படுத்திப் பயன் கொள்ளுபவனாக, எனக்கு அருட் குரவனாகுக என முறையிட்டவாறும். (5)

2576 எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்திகினும்
எய்துகபி றப்பில் இனிநான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக இருமையினும்
இன்பம்எய் தினும்எய்துக
வழுவகைத் துன்மமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும்வருக
வருமைவரு கினும்வருக மதிவரினும் வருகஅவ
மதிவரினும் வருகஉயர்வோ
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகஅல
தெதுபோ கினும்போகநின்
இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே

கழிவகைப் பவரோக நீக்கும்நல் அருள் எனும்
கதிமருந்து தவுநிதியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே

உரை : போக்கத் தக்க பிறவி நோயை, நீக்குகின்ற நினது நல்லருட்குரிய கதியை யளிக்கும் ஞானமாகிய மருந்தைத் தரும் அருள் நிதியாகியவனே, கனக அம்பல நாதனே, கருணையங் கணனே, போத கமல குஞ்சித பாதனே, ஏழ் வகைப்பட்ட பிறப்புக்களில், எப்பிறப்பு வருவதாயினும் எனக்கு வருக; இனி எனக்குப் பிறப்பே இல்லையாயினும் இல்லா தொழிக; இம்மை மறுமையாகிய இரண்டிலும் இன்பமே யுறுவதா யினும் உறுக; அன்றி, குற்றங்கள் ஏதுவாக வரும் துன்பங்களே எய்தினும் எய்துக; அல்லது இன்பம் மிக்க நல்வாழ்வு வரினும் வருக; அல்லது வறுமையே யுறினும் உறுக; நன்மதிப்பு உண்டாயினும் உண்டாகுக; அதற்கு மாறுக அவமதிப்பு உண்டாயினும் உண்டாகுக; உயர்வும் தாழ்வுமாகிய இருவேறு வகையையுடைய உலகத்தில், எனக்கு எது வந்தாலும் வருக; அல்லது எது போனாலும் போகட்டும்; நின்னு டைய இரண்டாகிய திருவடிகளை மறவாமல் நினைக்கும் மனம் ஒன்றுதான் எனக்கு வேண்டுவது. எ.று.

கொள்ளுவதும் தள்ளுவதுமாகிய இரண்டினுள், ஒழிக்கத் தக்கது பிறவித் துன்பமாகலின், அதனைக் "கழிவகைப் பவரோகம்" என்றும், அதனைப் போக்கும் மருந்தாவது திருவடி ஞானமாகிய திருவருளுணர்வு என்பார், "நல்லருள் எனும் கதி மருந்து" என்றும், அதனை அயர்வும் இடையறவு மின்றி நல்குபவனென்றற்குக் "கதி மருந்துதவும் நிதியே" என்றும் இயம்புகின்றார். கதி, அயரா வின்பப் பேற்றுக்குரிய சிவகதி. "செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையு மன்றே" (தனி. நேரிசை) எனப் பெரியோர் கூறுவ தறிக. பிறப்பை, நோய் என்றமையின், பிறவாச் சிவகதியை, "கதி மருந்து" என வுரைக்கின்றார். எழுவகைப் பிறப்புக்களாவன: ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர் வாழ்வன, தாவரம், மானுடர், தேவர் என்பனவாம். "ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம், நீர் பறவை நாற்காலோர் பப்பத்து - சீரிய பந்தமாம் தேவர் பதினு லயன் படைத்த, அந்தமில் சீர்த்தாவரம் நாலைந்து" எனப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகிறார். பிறந்தவர் இறந்தால் இப்பிறப்பு வகை ஏழனுள் ஒன்றை எய்துவர் எனப் பண்டையோர் கூறினமையின் "எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும் எய்துக" எனவும், பிறந்தே தீர்தல் வேண்டுமென்பது உறுதி யன்மையின், "பிறப்பில் இனி நான் எய்தாமை எய்துகினும் எய்திடுக" எனவும்கூறுகின்றார். இம்மை மறுமை யிரண்டும் இருமை எனப்படும். பிறந்த வுயிரனைத்தும் இன்பமே நாடுவன வாதலால், "இருமையினும் இன்பம் எய்தினும் எய்துக" என்றும், குற்றங்கள் வாயிலாகவே துன்பங்கள் வருதலின், "வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக" என்றும், துன்பங்களை மிகுவிப்பதில் வறுமை தலையாயதாகலின், "வறுமை வருகினும் வருக" என்றும் இயம்பு கின்றார். இன்பத்துக் கேதுவாகிய குணமே யுடையவரும், துன்பத்துக் கேதுவாகிய குற்றமே யுடையவரும் இல்லாமல், குணமும் குற்றமும் கலந்தவர்களே உலகில் வாழ்தலால், இருவகைகளையும் விரவிக் கூறு

சின்ருர். அறிவு செயல்களால் யாவரும் உலக வாழ்க்கையில் நன்மதிப்பும் அவமதிப்பும் எய்துவது இயற்கையாதலால், "மதி வரினும் வருக அவமதி வரினும் வருக" என்றும், நன்மதியால் உயர்வும், அவமதியால் தாழ்வும் உண்டாதலால், "உயர்வோடு இழிவகைத் துலகின் மற்று எது வரினும் வருக அலது எது போகினும் போக" என இசைக்கிருர். இவ்வாறு உலகிற் பெறப்படுவனவற்றைப் புறக்கணிப்பவர், தாம் வேண்டுவ திஃது என்பார், "நின் இணையடிகள் மறவாத மனம் எனக்கு அடைதல் வேண்டும்" என்றும், தம்மை யுள்ளிட்ட வுலகுயிர்களை அருளுருவாய்ப் புரந்தருளும் வேந்தனுகலின், சிவனை, "அரசே" என்றும் கூறுகின்ருர்.

இதனல், இறைவன் திருவடி யிரண்டையும் மறவாமல் நினைக்கும் மனம் அருள வேண்டியவாறும். (6)

2577. பற்றுவது பந்தம்அப் பற்றறுதல் வீடிஃது
பரமவே தார்த்தம்எனவே
பண்புளோர் நண்பினெடு பகருவது கேட்டும்என்
பாவிமனம் விடயநடையே
எற்றுவது செய்யாமல் எழுவதொடு விழுவதும்
இறங்குவதும் ஏறுவதும்வீண்
எண்ணுவதும் நண்ணுவதும் இப்புவன போகங்கள்
யாவினும் சென்றுசென்றே
சுற்றுவதும் ஆகிஓர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய்குவேன்
தூயநின் திருவருளின் அன்றிஇவ் வேழைஅச்
சுழல்மனம்அ டக்கவருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுள்மணியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை: கற்றறிந்த தூயவர் மனத்தில் எழுந்தருளும் தலைவனே, கண் பொருந்திய நெற்றியையுடைய கடவுளாகிய மாணிக்க மணியே, கனக அம்பல நாதனே, கருணையங்கணனே, போத கமல குஞ்சித பாதனே, பற்றுக்கொள்வது பந்தமென்றும், அப்பற்றை அறுப்பது வீடு என்றும், இதுவே மேலான வேதப்பொருள் என்றும் உணர்பண்புடைய மேலோர் அன்புடன் அறிவுறுத்துவது கேள்வியுற்றும் பாவியாகிய என் மனம், ஐம்புல வழியே மேற்கொண்டு அவற்றின்கண் வீழ்ந்து தள்ளுவது செய்யாமல் ஆசைக்கடற்குள் மூழ்கி எழுவதும், மீள வீழ்வதும், மேலும் இறங்குவதும், ஏறுவதும், வீணன எண்ணங்களை எண்ணுவதும், ஆசை வழியை மேன்மேலும் பொருந்துவதும், உலகியற் போகங்கள் அனைத்தினும் சென்று சென்று சுழன்றும் அறிவு சிறிதுமின்றி அலமருவதும் செய்கின்றது; அதனை நெறிப்படுத்த மாட்டேனுய்ச் செய்வ

தறியாது வருந்துகிறேன்; தூய்மையே வடிவாகிய நினது திருவருளின் துணையின்றி ஏழையாகிய எனக்கு ஆசை வழிச்சென்று சுழல்கின்ற அந்த மனத்தையடக்க இயலுமோ? இயலாது, காண். எ.று.

கசடறக் கற்பது கல்வியாகலின், கற்றவர்களைக் "கற்று வழுவற்றவர் கள்" என்றும், அவர் மனம் தூய தெய்வ நிலையமாதலால், அதன்கண் இறைவன் கோயில் கொண்டருளுகிறுன் என்பது பற்றி, "கருத்தமர் கருத்தனே" என்றும் கூறுகின்ருர். கண்ணுதற் கடவுள்-சிவபெருமான். மாணிக்கமணி போலும் திருமேனி யுடையனுதலால் "மணியே" என்று பாராட்டுகின்ருர். "பற்றிவிடாஅ இடும்பைகள் பற்றினைப் பற்றி விடாத வர்க்கு" (குறள்) எனச் சான்ருேர் உரைத்தலால் "பற்றுவது பந்தம்" எனவும், பற்றற்ற வழிப் பிறவித் தொடர்பு அற்ருெழியும் என்று அறிவுறுத்துபவாகலின் "அப்பற்றறுதல் வீடு" எனவும், இவ்வுண்மையை யாப்புறுத்தற்கு வேதத்தின் மேல் வைத்து, இஃது பரம வேதார்த்தம் எனவே பண்புளோர் நண்பினெடு பகருவது கேட்டும்" எனவும் உரைக் கின்ருர். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" (திருவாய். 2 : 5) என்று நம்மாழ்வார் கூறுவதுகாண்க. பந்தம் - கட்டு; வீடு - விடுதல். "பந்தமும் வீடுமாய பத பதார்த்தங்களல்லான்" (சிவசித்தி) என அருணந்தி சிவனுர் ஓதுவதறிக. பண்பெனப் பொதுப்பட மொழிதலின், உயர் பண்புடையோர் எனக் கொள்கின்ரும். எவ்வுயிர்பாலும் நண்பும் நயனும் உடையராதல் உயர் பண்புடையார் செயலாதல் பற்றி, "பண்புளோர் நண்பினெடு பகருவது" எனக் கூறுகின்ருர். பந்தத்தால் துன்புறு வோரைக் காணும்போதெல்லாம் பரிவும் அன்பும் கொள்வராதலின் "நண்பினெடு பகருவது" என்கின்ருர் என்றுமாம். விடய நடை - புலன்களின்மேற் செல்லும் ஆசை வழியியலும் உலக நடை. துன்ப வேது அறிந்து விலக்காமல் உலக நடையாகிய துன்பக் கடலில் வீழ்ந் தெழுவது விளங்க, "எற்றுவது செய்யாமல் எழுவதொடு விழுவது" என்று இயம்புகிருர். உலகியல் துன்பத்தால் சுடப்பட்டுத் தெளிவுற்றுச் சிறிது உவர்ப்பதும், பின்னர் மயங்கி மீண்டு அதன்கண் வீழ்ந்து துயர்வதும் ஆகிய செயல்களைச் செய்வது குறித்து "இறங்குவதும் ஏறுவதும்" எனக் கூறுகின்ருர். உலகியற் செயல்களிலே தோய்கிற போது மனம் வீணுன எண்ணங்களை நினைப்பதும், வீண் பொருள்களின் மேல் ஆசை வைப்பதும் நிகழ்தலின், "வீண் எண்ணுவதும் நண்ணு வதும்" என்று உரைக்கின்ருர். புவன போகங்கள் - உலகியல் நுகர்ச்சி கள். ஆசை மிகுதியால் நுகர்ச்சிவகை அனைத்திலும் சென்று அலமருவது பற்றி, "இப்புவன போகங்கள் யாவினும் சென்று சுற்றுவதுமாகி சுழல்கின்ற" தென்றும், நுகர்வு வாயிலாக அறிவெய்தப் பெற்றும் தெளிவுருமை தோன்ற, "சற்றும் அறிவில்லாது சுழல்கின்றது" என்றும், அதனை நெறிப்படுத்தும் திண்மை யின்மை கூறுவார், "என் செய்குவேன்" என்றும் இசைக்கின்ருர். இறைவன் திருவருட்டுணை யுண்டாயின் எல்லாம் செயல்கூடும் என்று சான்ருேரும் வலியுறுத்துத லால் "தூய நின் திருவருளினன்றி இவ்வேழை அச்சுழல் மனம் அடக்க வருமோ" என உரைக்கின்ருர்.

இதனல், மனத்தின் இயல்பு கூறி, அதனை யடக்குதற்குத் துணை புரியத் திருவருளை நல்க வேண்டியவாரும். (7)

2578. எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ
எழுகடலி னும்பெரியவே
என்செய்கேன் என்செய்கேன் இனிஆயி னும்செயா
தெந்தைநின ஏத்தஎன்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால்
மயங்குகின் றேன்அடியனேன்
மனம்எனது வசமாக நினதுவசம் நானுக
வந்தறிவு தந்தருளுவாய்
ஒளியின்ஒளி யேநாத வெளியின் வெளியேவிடய
உருவின்உரு வேஉருவினும்
உயிரின்உயி ரேஉயர்கொள் உணர்வின்உணர்
வேஉணர்வின்
உறவினுற வேஎம்இறையே
களியின்நிறை வேஅளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டஎண் தோள்கடவுளே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை: ஒளிகட்கெல்லாம் காரண வெளியும் நாத தத்துவ வெளிக்கு வெளியுமாகியவனே, மாயா காரிய விடயங்களின் உருவுக் குருவாகியவனே, விடயமாகிய உருவுடைய உயிர்க்குயிராயவனே, உயிரிடத்து உயர்ந்ததாகிய உணர்வுக் குணர்வாகியவனே, உணர்வோ டியையும் உறவாய், எமக்கு இறையாகியவனே, மகிழ்ச்சியின் நிறைவே, அளித்தலைச் செய்யும் கருணை நிதியே, நீலமணி போன்ற கழுத்தை யுடையவனே, எட்டுத் தோள்களையுடைய கடவுளே, கனக அம்பல நாதனே, கருணை பொழியும் அங்கணனே, போத கமல குஞ்சித பாதனே, எளியவனாகிய யான் அறிவின் சிறுமையால் செய்த குற்றங்கள் சிறியவல்ல; கடல்களேழினும் பெரியனவாகும்; இவற்றிற்கு நான் என்ன செய்குவேன்; எந்தையே, இனியாகினும் நான் இப் பிழைகளைச் செய்யாமைப் பொருட்டு நின்னைப் பரவிக் காத்துக் கொள்ளலாமென்றால், காற்றிடைப்பட்டு வானிற் பறந்து சுழல்கின்ற பஞ்சுபோல நெஞ்சு வருந்துதலால் மயங்குகின்றேன்; நினக்கு அடியனாகிய எனது மனம் உன் வசமாகவும், யான் நின் திருவசமாகவும் என் முன் வந்து அருள் புரிய வேண்டுகிறேன். எ.று.

உலகிலுள்ள ஒளிப் பொருளனைத்துக்கும் மூல வெளியாய் விளங்கும் பரஞ்சோதியாதலால், "ஒளியின் ஒளியே" என வுரைக்கின்றார். நாத வெளி, சுத்த மாயா தத்துவம் இருந்தொளிரும் வெளியாகும்; இதனைச் சிவதத்துவம் என்றலுமுண்டு. சுத்த மாயா மண்டலத்துக்கு உள்ளும் புறமுமாகிய ஒள்ளிய வெளியாய் விளங்குமாறு புலப்பட, "நாதவெளியின் வெளியே" என விளம்புகிறார். பரநாதம், அபர நாதமாகிய இரண்டு மடங்கு நாதமெனப் பொதுப்பட மொழிகின்றார் என்றலும் உண்டு. சுத்த மாயையின் கீழுள்ள புவன போகங்கள் விடய வகைகளாகும்; இவற்றிற்கு உருவு நல்கும் நுண்ணுருவாவது பரம்பொருளாதலின்,

"விடய வுருவின் உருவே" என்று போற்றுகிருர். விடயவுருக்களில் உயிரும் ஒன்றுதலால் "உருவினும் உயிரின் உயிரே" என்றும், உயிருக்கு உயர்வு தருவது அதன் உணரும் தன்மையாவது பற்றி உயர்கொள் உணர்வு" என்றும் உணர்வுக்கு உணர்வாய் விளங்கும் இறைவனை "உணர்வின் உணர்வே" என்றும், உணர்வு தளரும்போது உணர்வொளி தந்து ஊக்குவதால் "உணர்வின் உறவின் உறவே" என்றும், இவ்வாற்ருல் எமக்கு நீ இறைவனுகிருய் என்பார், "எம் இறையே" என்றும் இயம்புகின்ருர். களி - மகிழ்ச்சி; இன்பமுமாம். குறைவிலா நிறைவுற்ற இன்ப வடிவினனுதலால், சிவனைக் "களியின் நிறைவே" எனவும், நினைவோடொழியாது உயிர்கட்கு அருள் வழங்கிய வண்ணம் இருக்குமாறு தோன்ற. "அளிகொள் கருணை நிதியே" எனவும் எடுத்துரைக்கின்ருர். மணிகண்டமும் எட்டுத்தோளும் கொண்ட திருவுருவுடையினுயினும், உருவெலாம் கடந்த கடவுள் என்றற்குக் "கடவுளே" எனக் கூறுகின்ருர். அறிவின் சிறுமையால் எளிமையுற்ற யான் எண்ணிறந்த குற்றங்களைச் செய்தேன், செய்கின்றேன் என்பார், எளியனேன் சிறியன் யான் செய்பிழைகள் சிறியவோ எழுகடலினும் பெரியவே" எனப் பாரிக்கின்ருர். சிறுமை - சின்மை குறித்தன. பெருமை - பன்மை மேற்று. குற்றத்தின் பெருமையையும் தனது எளிமை சிறுமைகளையும் நோக்கி மலைக்கின்ருராதலால், "என்செய்கேன் என்செய்கேன்" என்று இரட்டித்துக் கூறுகின்ருர், குற்றம் புரியாமைக்கு வழி காண்பவர், இறைவனை யேத்துவதன்றி வேறென்றும் இன்மையுணர்கின்ருர்; அதற்கு நெஞ்சின் துணையது இன்றியமையாமையை எண்ணுகின்ருர்; நெஞ்சம் ஆசை வயப்பட்டு அலைதலையும் அறிகின்ருராதலால், "இனியாயினும் செயாது நினை ஏத்த வென்ருல் வளியின் வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால் மயங்குகின்றேன்" எனவுரைக்கின்ருர். வினைத் தீர்வு வேண்டுவோர் ஒன்றிய மனத்துடன் திருவருள் வழி நிற்றல் வேண்டும்; அதற்கும் இறைவன் திருவருள் துணையாதல் வேண்டுமாதலின், "மனம் எனது வசமாக நினது வசம் நானுக வந்தறிவு தந்தருளுவாய்" எனப் பராவுகின்ருர்.

இதனல் மனவொருமையுடன் திருவருள் வழி நிற்க அருளுமாறு வேண்டியதாம். (8)

2579. சந்ததம்எ னக்குமகிழ் தந்தைநீ உண்டுநின்
தன்னிடத் தேமவல்லி
தாயுண்டு நின்அடியர் என்னும்நல் தமர்உண்டு
சாந்தம்எனும் நேயர்உண்டு
புந்திகொள்நி ராசையாம் மனைவிஉண் டறிவெனும்
புதல்வன்உண் டிரவுபகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டாலந்த
போகபோக் கியமும்உண்டு
வந்தனைசெய் நீறெனும் கவசம்உண் டக்கமா
மணியும்உண் டஞ்செழுத்தாம்
மந்திரப் படைஉண்டு சிவகதிஎ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வும்உண்டோ

கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணைமலையே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : நறுமணம் கமழும் கொன்றையும் கங்கையாறும் பொருந்திய சிவந்த சடையை முடியிலே யுடைய கடவுளே, கருணை யாகிய மலையே, கனக அம்பல நாதனே, கருணை நிறைந்த அங்கணனே, போத கமல குஞ்சித பாதனே, எனக்கு எப்பொழுதும் இன்பம் நல்கும் நீ தந்தையாகவும், நின்னிடப்பாகத் துறையும் பொன்மலை வல்லியாகிய உமாதேவியார் தாயாகவும், நின்னுடைய மெய்யடியார்கள் நல்ல சுற்றத்தாராகவும் உள்ளனர்; சாந்தப்பண்பு என்ற நண்பரும், மனத்தில் ஆசையின்மையாகிய மனைவியும், அறிவு எனப்படும் புதல்வனும் எனக்கு உண்டு. இராப் பகலற்ற ஞான பூமியும், ஆண்டுப் பெறற்குரிய திருவருளாகிய செம்பொருளும், நுகரக் கடவிய போக போக்கியங்களும் உள்ளன; வழிபாடு செய்து பூசப்படும் திருநீருகிய காப்பும், அதனேடியைந்த அக்கமணி மாலையும், திருவைந்தெழுத்தென்னும் மந்திரப் படையும், சிவகதியாகிய நல்வாழ்வும் எனக்கு அமைந்திருக்கை யில் எனக்குத் தாழ்வுண்டாகாதன்றே? எ.று.

சந்ததம் - எப்போதும். உண்மையறிவு தந்து சான்ருேனுக்கும் தகைமையுடையவன் தந்தையாதலால், "மகிழ் தந்தை" என்று சிறப்பிக் கின்ருர். ஏம வல்லித்தாய், பொன்மலையரசன் மகளாய்ப் பசுங்கொடி போல்பவளாகிய உமாதேவி. உலகருளும் தாயாய் இறைவன் இடப் பாகத்திற் பிரிவின்றி யிருத்தல்பற்றி, "நின்றன் விடத்து ஏமவல்லித்தாய்" என்று புகழ்கின்ருர். ஏமம் - பொன். தம்போல் அன்பொழுக்க முடையராய்த் தம்மைச் சார்ந்தாரை நன்னெறி வழுவாமற் காக்கும் இயல்பினராயவரென்றற்கு அடியார்களை "நற்றமர்" என்றும், நல்லறிவு தந்து உய்விக்கும் நண்பர்போலச் சாந்தப் பண்பு உய்தியும் உறுதியும் நல்குதலால், "சாந்தமெனும் நேயர்" என்றும் இயம்புகின்ருர். ஆசைக்கும் ஆசையின்மைக்கும் இடம் மனமாதலால், "புந்திகொள் நிராசை" என்றும், துன்பமும் இன்பமும் பயப்பனவாதல்பற்றி "மனைவி" யென்றும் கூறுகின்ருர். நிராசையுடையார் மெய்யறிவு பெற்று, மேன்மை யுறுதலால் "அறிவெனும் புதல்வன்" என்கின்ருர். திருவருள் ஞானவின்ப நுகர்ச்சிக்குரிய ஞானபூமி, மாயா காரிய வுலகுபோல இரவு பகற் கால வேறுபாடுடைய தன்மையால், "இரவு பகல் போனவிடமுண்டு அருட் பொருளுமுண்டு" எனவும், நுகர் பொருளும் லுகர்வும் பேரின்பமாதலின், "ஆனந்த போக போக்கியம்" எனவும் கூறுகின்ருர். சிவாய நம என, வாயாற் சொல்லி அணியப்படும் சிறப்பினுல், "வந்தனை செய் நீறு" என்றும், உயிர்க்குக் காப்பாக உடம்பிலணியப்படுவதால், "நீறெனும் கவசம்" என்றும் உரைக்கின்ருர். அக்கமணி - உருத்திராக்கமணி. திருவைந்தெழுத்தை, மந்திரமென்றலின். "அஞ்செழுத்தாம் மந்திரப் படை" எனக் கூறுகின்ருர். சிவபோகம் துய்க்கும் வாழ்வாவது சிவ கதியாம் என்றற்கு "சிவகதி யெனும் பெரிய வாழ்வு" என்கின்ருர்.

இதனல் சிவஞான வொழுக்கமுடையவர் வாழ்வு பெறுதலன்றித் தாழ்வு பெறுதல் இல்லையென உணர்த்தியவாரும். (9)

2580. நான்முகனும் மாலும்அடி முடியும்அறி வரியபர
நாதமிசை ஓங்குமலையே
ஞானமய மானஒரு வானநடு ஆனந்த
நடனமிடு கின்றஒளியே
மான்முகம்வி டாதுழலும் எனையும்உயர் நெறிமருவ
வைத்தவண்வ ளர்த்தபதியே
மறைமுடிவில் நிறைபரப் பிரமமே ஆகம
மதிக்கும்முடி வுற்றசிவமே
ஊன்முகச் செயல்விடுத் துண்முகப் பார்வையின்
உறுந்தவர்பெ றுஞ்செல்வமே
ஒழியாத உவகையே அழியாத இன்பமே
ஒன்றிரண் டற்றநிலையே
கான்முகக் கடகளிற் றுரிகொண்ட கடவுளே
கண்கொண்ட நுதல்அண்ணலே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.

உரை : வேதாந்த மென்ற உச்சியில் நிறைந்துள்ள பரப்பிரம்மப் பொருளே, ஆகமங்களின் முடிவில் உணரப்படும் சிவபரம்பொருளே, ஊன்கண் பொருந்திப் பார்க்கும் செயலை விடுத்து அகக் கண்ணிற் காண்டலும் தவமுடையோர் பெறுகின்ற ஞானச் செல்வமே, சலியாத உவகையாய், குன்ருத இன்பமாய், ஏகம் துவிதம் என்ற இருவகையு மில்லாத அத்துவித நிலையானவனே. காட்டில் உலவும் மத யானையின் தோலைப் போர்வையாகவுடைய கடவுளே. கண் பொருந்திய நெற்றியை யுடைய அண்ணலே, கனக அம்பல நாதனே, கருணையங் கண்ணனே, போத கமல குஞ்சித பாதனே, பிரமனும் திருமாலும் முறையே முடியும் அடியும் அறிவரிதாகிய பரநாத தத்துவத்தின்கண் விளங்கித் தோன்றும் மலை போல்பவனே, ஞான மயமான சிதாகாசத்தின் நடுவில் ஆனந்தக் கூத்தாடும் ஒளிப்பொருளே, மாயா மயக்கத்தினின்றும் நீங்காமற் கிடந்து அலையும் எளியேனையும், சிவமாகிய உயர்ந்த நெறியைப் பொருந்தி யொழுகப் பண்ணி, அதன்கண் வளரச் செய்த பதிப்பொருளாதலின், உன்னைப் போற்றுகின்றேன். எ.று.

வேத வேதாந்த ஞானத்தின் முடிவாக நிறைந்து விளங்குவது பரப்பிரமம் என்பதால், "மறை முடிவில் நிறை பரப்பிரமமே" எனக் கூறுகின்ருர். மறைமுடிவு, வேத வேதாந்த ஞான முடிவு. ஆகமங்கள் ஆய்ந்துரைக்கும் முடிபு ஆகமாந்தம் எனவும், அதன்கண் சிறந் தோங்குவது சிவபரம்பொருளாதலால், "ஆகமம் மதிக்கும் முடிவு உற்ற சிவமே" எனவும் இயம்புகின்ருர். வேதாந்த ஞானத்தைப் பிரமஞான மென்றும், ஆகமாந்த ஞானத்தைச் சிவஞானமென்றும் கூறுப. முகத்தி லுள்ள ஊனக் கண்களாற் காண்பதை "ஊன்முகச் செயல்" என்றும், அகக்கண்களாற் சிந்திப்பதை, "அகக்கண் கொண்டு காண்பது"

என்றும், தவஞானிகள் அகக்கண்ணுற் கண்டு இன்புறுவர் என்றும் அறிஞர் உரைப்பர். "முகத்திற் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள், அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" (திருமந்தி) எனத் திருமூலர் கூறுவர். தவஞானிகள் பெறுவது சிவானந்தமாதலால், "உறுந்தவர் பெருஞ்செல்வமே" என்கின்ருர். இன்பம் நுகர்வும் உவகை மெய்ப்பாடுமாதலின், இரு திறமும் விளங்க, "ஒழியாத உவகையே அழியாத இன்பமே" என வுரைக்கின்ருர். பிரமமும் ஆன்மாவும் ஏக மெனவும், துவிதமெனவும், இரண்டுமன்றி அத்துவிதமெனவும் கூறுதல் பற்றி, "ஒன்றிரண்டற்ற நிலையே" எனவும் இசைக்கின்ருர். கான்முகக் கட களிறு என்றது சாதியடை எனப்படும். நான்முகனுகிய பிரமன் சிவபிரான் முடியையும், திருமால் திருவடியையும் காண முயன்று மாட்டாராயினமையின், "நான்முகனும் மாலும் அடிமுடியு மறிவறிய" என்றும், மாயா மண்டலத்துக்கு அப்பாலுள்ள பரவெளியில் ஒளி மலை யாய்ச் சிவம் ஒளிர்கின்றமை புலப்பட, "பரநாதமிசை ஓங்கும் மலையே" என்றும் கூறுகின்ருர். ஞான மயமான ஒரு வானமென்பது ஞானகாசம், அந்தச் சிதாகாசத்தில் நடுவில் இன்பத் திருக்கூத்தாடுவது ஒளியுரு வாகிய சிவத்தின் இயல்மென்பதுபற்றி, "ஒருவான நடு ஆனந்த நடன மிடுகின்ற ஒளியே" என உரைக்கின்ருர். மான்முகம் மாயா காரிய வுலகு தரும் மயக்கம். மாயையின் மயக்கத்துக் கிரையாகாது விலகிச் செல்லும் திருவரு ணெறியிற் புகுத்தித் தம்மை யுயர்த்திய நலத்தை வடலூர் வள்ளல், "மான்முடும் விடாதுழலும் எனையும் உயர் நெறி மருவ வைத்து அவண் வளர்த்த பதியே" என்று கூறுகின்ருர்.

இதனுல், உலகியல் மயக்கத்தின் நீங்கித் திருவருள் நெறியில் தன்னைப் புகுத்தி வளர்த்த பெருநலத்தை எடுத்தோதியவாரும். (10)

திருச்சிற்றம்பலம்

2. போற்றித் திருப்பதிகம்

அஃதாவது போற்றி என்ற சொல்லைப் பன்முறையும் சொன் முடிவிலும் சொற்றொடர் முடிவிலும் ஓதும் நலம் பற்றிப் பாடிய பதிகம், என்பதாம். திருநாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் போற்றிப் பாடியுள்ள, திருப்பாடல்கள் இதற்கு வழி காட்டுகின்றன. இதன்கண் சிவஞான வொழுக்கங்களும், திருவருள் விழைவும் மருள் நீங்கித் தெருள் வேண்டும் சிறப்பும் பிறவும் வேண்டப்படுகின்றன.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2581. அருள்தரல் வேண்டும் போற்றிஎன் அரசே
அடியனேன் மனத்தகத் தெழுந்த
இருள்கெடல் வேண்டும் போற்றிஎந் தாயே
ஏழையேன் நின்றனைப் பாடும்
தெருள்உறல் வேண்டும் போற்றிஎன் அறிவே
சிந்தைநைந் துலகிடை மயங்கும்
மருள்அறல் வேண்டும் போற்றிஎன் குருவே
மதிநதி வளர்சடை மணியே.

உரை : பிறைத்திங்களும் கங்கையாறும் இருந்துவரும் சடையையுடைய மாணிக்க மணி போல்பவனே, எனக்கு அருளரசே, போற்றுகின்றேன்; எனக்கு நினது திருவருள் ஞானத்தை, நல்குதல் வேண்டும்; எமக்குத் தாயாகியவனே, போற்றி; நினக்கு அடியவனுகிய எனது மனத்தின்கண் உளதாகிய மலவிருள் தொலைதல் வேண்டும்; எனக்கு அறிவாகியவனே, போற்றி; ஏழையாகிய யான் நின்னைப் பாடற்குரிய தெளிவினையளிக்க வேண்டுகிறேன்; எனது குருவே, போற்றி; உலகியலில் மனம் மெலிந்து வருந்துதற் கேதுவாகிய மருட்சி நீங்குதல் வேண்டும். எ.று.

போற்றுகின்றேன் என்பது, போற்றி என இகர வீற்று வியங்கோளுருவில் வந்தது. போற்றி என்னும் வினை, காப்பாற்றுக என்ற பொருளில் பெரிதும் வழங்குவது. வளர் சடை மணியே, என் அரசே போற்றி; எந்தாயே போற்றி; என் அறிவே போற்றி; என் குருவே போற்றி என இயையும். திருவருள் ஞானத்தாலன்றி மலவிருள் கெடாதாகலின், "அருள் தரல் வேண்டும்" எனவும், "அடியனேன் மனத்தகத் தெழுந்த இருள் கெடல் வேண்டும்" எனவும் இசைக்கின்றார். அறிவின்கண் தெளிவும் மனத்தின்கண் உவகையும் இருந்தால் இனிய பாடல்கள் எழுமாதலால், "ஏழையேன் நின்றனைப் பாடும் தெருளுறல் வேண்டும்" என வுரைக்கின்றார். தெளிந்த அறிவின்மை ஏழைமையாகும் என அறிக.

தெருள் - தெளிவு. தெளிவு எய்திய வழி உவகை தானே உளத்தில் எய்தி விளங்குமாதலால், அதனை உய்த்துணர்ந்து பெய்து கொள்ள வைக்கின்றார். "துளங்கிளம் பிறைச் செனித் துருத்தியாய் திருந்தடி உளங் குளிர்ந்த போதெலாம் உவந்துவந் துரைப்பனே" (துருத்தி) என ஞானசம்பந்த ருரைப்பது காண்க. அருள் கூர்ந்து உயிரறிவில் அறிவாய் இறைவன் அமர்ந்தாலன்றி, தெள்ளிய நல்லறிவு வாயாதாகலின், "என் அறிவே" எனப் போற்றுகின்றார். உலகியல் மயக்கம் மனத்தை மாழ்குவித்து உயிருணர்வை மருளச் செய்தல் பற்றி, "சிந்தை நைந்து உலகிடை மயங்கும் மருளறல் வேண்டும்" என வேண்டுகின்றார். அறிவிற் படியும் இருளையும் மனத்திற் படியும் மருளையும் போக்குவதால் இறைவனை "என் குருவே" என்று போற்றுகின்றார்.

இதனால், திருவருளால் இருள் கடிந்து தெருள் கொண்டு மருளறல் வேண்டுமெனப் போற்றியவாறும். (1)

2532. மணிமிடற் றமுதே போற்றிஎன் தன்னை
வாழ்விக்க வேண்டுவல் போற்றி
அணிமதி முடியோய் போற்றிஇவ் வேழைக்
கருளமு தருளுக போற்றி
பணிஅணி புயத்தோய் போற்றிநின் சீரே
பாடுதல் வேண்டுநான் போற்றி
தணிவில்பேர் ஒளியே போற்றிஎன் தன்னைத்
தாங்குக போற்றிநின் பதமே.

உரை : நீலமணி போலும் கழுத்தையுடைய அமுது போல்பவனே, போற்றி; என்னை இனிது வாழ்விக்க வேண்டுகிறேன்; அழகிய சந்திரனைத் தாங்கும் திருமுடியை யுடையவனே, போற்றி; ஏழையாகிய எனக்கு நின் அருளாகிய அமுதத்தை நல்கி யருள்வாயாக; பாம்பணிந்த தோளை யுடையவனே, போற்றி; நான் உன் சீர்களையே பாடுதல் வேண்டும்; குறையாத பேரொளிப் பேரருளே, போற்றி; என்னைத் தாங்கி யருளுக; நின் திருவடி போற்றி. எ.று.

கடல் விடத்தை யுண்டமையால் கழுத்து கரிதாய் நீலமணி போல் ஒளிர்தலின், "மணி மிடற்று அமுதே" என்று போற்றுகின்றார். தான் விடமுண்டு தன்னை வேண்டிய தேவர்கட்கு அமுதளித்த அருட் செயல் கருதி, "அமுதே" எனச் சிறப்பிக்கின்றார். உடல் கருவி கரண முதலியவற்றை யளித்து, உலகில் வாழச் செய்தானாயினும் உலக வாழ்வு மயக்கமும் துன்பமு மளிப்பது கண்டு, அவ்வாறன்றி அயரா இன்ப வாழ்வே எனக்கு வேண்டு மென்பாராய், "என் தன்னை வாழ்விக்க வேண்டுவல்" என விண்ணப்பிக்கின்றார். முடியில் தங்குகிற பிறைத் திங்கள் அணியாய்த் திகழ்தலால், "அணிமதி முடியோய்" என வுரைக்கின்றார். திருவருள் ஞானமிர்தமாய் இன்பம் பயக்கும் இயல்பினதாகலின், "இவ் வேழைக்கு அருளமு தருளுக" என வேண்டுகின்றார். பணி - பாம்பு, தோளிலும் மார்பிலும் மாலை போற் கிடந்து விளங்குவது பற்றி, "பணியணி புயத்தோய்" எனப் புகழ்கின்றார். உலகியற் பொருள் வாழ்வு வேண்டிப பலரைப் பாடிச் சீர் குலையாமல், நின் திருவருள் வாழ்வு பெறற்கு நின்

பொருள் சேர் புகழே பாடுதற்கமை வுடைத் தென்றற்கு, "நின் சீரே நான் பாடுதல் வேண்டும்" எனக் கூறுகின்றார். தணிதல், ஈண்டுக் குறைதல் மேற்று. சோதி முழு முதலாய் நிற்பது விளங்கத் "தணிவில் பேரொளியே" எனச் சாற்றுகின்றார். தாங்குவது திருவடி என்னும் பொருண்மை புலப்பட, "என் தன்னைத் தாங்குக" என்றவர், "நின் பதம் போற்றி" என்று கூறுகின்றார்.

இதனால், அருளமு தளித்துத் திருவடியில் தாங்குக என வேண்டிய வாறும். (2)

2583. நின்பதம் பாடல் வேண்டுநான் போற்றி
நீறுபூத் தொளிர்குளிர் நெருப்பே
நின்புகழ் கேட்டல் வேண்டும்நான் போற்றி
நெற்றியங் கண்கொளும் நிறைவே
நின்வச மாதல் வேண்டும்நான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலையே
நின்பணி புரிதல் வேண்டும்நான் போற்றி
நெடுஞ்சடை முடித்தயா நிதியே.

உரை : நீறணிந்து, ஒளி திகழும் குளிர்ந்த தீயின் நிறமுடைய பெருமானே, போற்றி; நான் உன் திருவடிப் புகழ்களையே பாடவேண்டும்; நெற்றியிற் கண் கொண்ட நிறை பரம்பொருளே, போற்றி; நின் புகழ் களைப் பிறர் எடுத்தோத நான் கேட்க வேண்டும்; நெடிய திருமால் புகழ்ந்து பரவும் தனிநிலைப் பெருமானே, போற்றி; எளியனாகிய யான் நின் திருவருள் வசமே நிற்க வேண்டும்; நீண்ட சடை பொருந்திய திருமுடியையுடைய அருட் செல்வமே. போற்றி; யான் நினக்குரிய பணி களையே செய்தல் வேண்டும். எ.று.

திருமேனி நிறமும் அதன் மேற் பூசப்பட்டிருக்கும் திருநீறும் நீறு பூத்த நெருப்புப் போல் இருப்பினும், நெருப்பிற் காணப்படும் வெப்ப மின்றித் திருவருள் தட்பமே நிலவுதல் பற்றி, "நீறுபூத் தொளிர் குளிர் நெருப்பே" என வுரைக்கின்றார். பாடல் வன்மை எல்லார்க்கும் அமைவ தின்மையின், "நின் பதம் பாடல் வேண்டும் நான்" என வேண்டு கின்றார். பாடலினும் வல்லவர் பாடக் கேட்டல் மனத்தை மகிழ்வித்தலின், "நின் புகழ் கேட்டல் வேண்டும் நான்" என்று கூறுகின்றார். திருமாலை நெடியவன் என்று போற்றுவது கொண்டு, "நெடிய மால்" எனவும், பரமாந் தன்மையால் ஒப்பற்றவனாதலின், சிவபெருமானை "தனிநிலை" எனவும் இசைக்கின்றார். உலகியல் வசப் படாமல் இறைவன் அருள் வசம் நிற்றல் சிவப் பேற்றுக்கு ஏதுவாதலால், "நின் வசமாதல்வேண்டும் நான்" எனவும் பராவுகின்றார். திருவருளே உயர்பெருஞ் செல்வமாய், சிவபெருமான் அதுவே திருவுருவானவனாதல் பற்றி, "தயாநிதியே" என்றும், இறை பணி செய்தல் உய்தி நல்கும் உறுதியுடைய தென்பத னால், "நின் பணி புரிதல் வேண்டும் நான்" என்றும் உரைக்கின்றார்.

இதனால் இறைவன் புகழைப் பாடுதல், பாடக் கேட்டல், பணி செய்தல் ஆகியவற்றைச் செய்ய அருள் புரிய வேண்டியவாறும். (3)

2584. நிதிதரு நிறைவே போற்றிஎன் உயிர்க்கோர்
நெறிதரு நிமலமே போற்றி
மதிமுடிக் கனியே போற்றிஎன் தன்னை
வாழ்வித்த வள்ளலே போற்றி
விதிமுதற் கிறையே போற்றிமெய்ஞ் ஞான
வியன்நெறி விளக்கமே போற்றி
பதிபசு பதியே போற்றி நின்பாதம்
பாடஎற் கருளுக போற்றி.

உரை : திருவருளாகிய நிதியைத் தந்து உய்விக்கும் நிறைபொருளாகிய சிவனே, போற்றி; உயிர்கட்கெல்லாம் உறுதி பயக்கும் நெறியருளுகின்ற தூய்மையனே, போற்றி; பிறைச்சந்திரனை முடியில் கொண்டுள்ள கனி போன்றவனே, போற்றி; என்னை யுலகிற் பிறந்து வாழச் செய்த வள்ளலே, போற்றி; படைப்போனாகிய பிரமனுக்கும் இறைவனே, போற்றி; உண்மை ஞானமாகிய பெரிய நெறியை விளக்கி யருள்பவனே, போற்றி; பதிப் பொருளாகிய பசுபதியே போற்றி; நின்னுடைய திருவடிகளைப் பாடிப் பரவுதற்கு அருள் செய்க. எ.று.

நிதி யென்றது திருவருளாகிய நிதியை; "அருணிதி தர வரும் ஆனந்த மலையே" (திருப்பள்ளி) எனத் திருவாசகம் ஓதுவதறிக. குறைவிலா நிறை எனப் புகழப்படுதலால் "நிறைவே" என்று கூறுகின்றார். உணரும் தன்மை யுடையவை யாயினும் இறைவன் உணர்த்த உணர்தலன்றித் தானே நலமறிந்து சென்னெறி கண்டு அடையும் திறமில்லாமையால் "என்னுயிர்க்கோர் நெறி தரு நிலமே" என்று இசைக்கின்றார். நிமிலம் - தூய்மை. உயிர்கள் அனாதி மலத்தொடர்பால் தூய்மையில்லாதவை என அறிக; இறைவன் மலரகிதன் என்று மெய்யுணர்ந்தோர் உரைப்பது பற்றி "நிமலமே" என்று இயம்புகிறார். மதி - பிறைமதி. சிவந்த திருமேனியுடையனாதலால் "கனியே" எனப் புகழ்கின்றார். உயிர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மலம் நீங்கி ஞானப் பேற்றால் இன்ப வீடு எய்துதல் வேண்டி உடல் கருவியுலகு முதலியவற்றைப் படைத்தளித்திருக்கும் பெருநலத்தை நினைவிற் கொண்டு "என்றன்னை வாழ்வித்த வள்ளலே" என்று போற்றுகின்றார். விதி - படைத்தலைச் செய்யும் பிரமதேவன். படைத்தல் முத்தொழில்களைச் செய்யும் தேவர் மூவர்கட்குத் தலைவனாதல் பற்றி, "விதி முதற் கிறையே" என்று புகழ்கின்றார். மெய்ஞ்ஞானம் - மெய்ம்மை காட்டும் சிவஞானம். "இலகு மெய்ந்நெறி சிவநெறி" (ஞானசம். பு) எனச் சேக்கிழார் உரைக்கின்றார். சிவஞானத்திலும், அது காட்டும் நெறியினும் மிக்கது வேறின்மை கண்டு தெரிவித்தலால், "மெய்ஞ்ஞான வியனெறி விளக்கமே" என விளம்புகிறார். சிவநெறியைச் சிறப்பித்தல் வேண்டி "வியனெறி" என்கின்றார். சிவ குருவாய் விளக்குபவனை, "விளக்கமே" என்று கூறுகின்றார். பசுபதி - சிவனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. பசுபதியாகிய சிவனே எல்லா வுலகுக்கும் பதியாவது தோன்ற, "பதி பசுபதி" என்று பகர்கின்றார். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" (திருவாச) வழிபடல் இயலுவதாகலின், "நின் பாதம் பாடற் கருளுக" என வேண்டுகின்றார். பாடுதல், ஈண்டுப் பாட்டுக்களைப்

புணைந்து பராவுதல். "பாடுவாருக் கருளும் எந்தை" (முதுகுன்று) என்று திருஞானசம்பந்தர் உரைப்பது காண்க.

இதனால் திருவருளையும் சிவஞானத்தையும் சிறப்பித்தோதிப் பாடற் கருளுமாறு வேண்டியதாம். (24)

2585. போற்றிஎன் உயிர்க்கோர் இன்பமே அன்பர்
புரிதவக் காட்சியே போற்றி
போற்றிஎன் அன்பாம் தெய்வமே சைவம்
புகல்சிவ போகமே போற்றி
போற்றிஎன் பெரிதாஞ் செல்வமே கருணைப்
பூரண வெள்ளமே போற்றி
போற்றிஎன் வாழ்வுக் கொருபெரு முதலே
போற்றிநின் சேவடிப் போதே.

உரை : என்னுடைய உயிர்க்கு இன்பம் தரும் பொருளே, போற்றி; அன்பராயினார் செய்யும் தவத்தின்கண் தோன்றும் ஞானக் காட்சி யானவனே, போற்றி; என் அன்புக்குரிய தெய்வமே போற்றி; சைவ நூல்கள் உரைக்கும் சிவபோகமே போற்றி; எனக்குப் பெரியதோர் செல்வமாகிய ஈசனே போற்றி; கருணையாகிய நிறைந்த கடலே போற்றி; மண்ணில் எனக்கு வாழ்வளித்த பெரிய முதற் பொருளே, போற்றி; நின்னுடைய திருவடி போற்றி. எ.று.

உணர்வுருவாகிய உயிர் வேண்டுவதெல்லாம் நிறைந்த இன்பமா தலின், அதனைப் பெரிதும் நல்குவது பற்றிச் சிவபெருமானைப் பெரியதோர் "இன்பமே" என்று கூறுகிறார். மணிவாசகரும், "குணங்கள்தாம் இல்லா இன்பமே" (கோயில்) என்று புகல்கின்றமை காண்க. சிவன்பால் உளதாகும் அன்பே ஞானமாதலின், தவஞானிகட்கு எய்தும் ஞானக் காட்சியும் சிவமாதல் கொண்டு, "அன்பர் புரிதவக் காட்சியே" என்று போற்றுகின்றார். சிவரூப சிவ தரிசன சிவயோகங்களால் படி முறையில் ஆன்மா பெறுவது உண்மை நெறி விளக்க முதலிய சைவ நூல்கள் உரைப்பதால், சைவம் புகல் சிவபோகமே போற்றி" எனக் குறிக்கின்றார். மனநிறைவும் இன்பமும் சுரப்பது பற்றிச் சிவத்தை "என் பெரிதாம் செல்வமே" என்கின்றார். "செல்வ மென்பது சிந்தையின் நிறைவே" என்பர் குமரகுருபரர். குறைவின்றி நிறைந்த கருணைக் கடல் என்று பெரியோர் கூறுதலால், "கருணைப் பூரண வெள்ளமே" எனப் பாராட்டு கின்றார். மலவிருளின் நீங்கி ஞானப் பேற்றால் சிவத்தன்மை யெய்தற் குரிய ஆன்மாவுக்கு, உடல் கருவி கரணங்களைப் படைத்தளித் துவக்கும் பரம்பொருள் என்று பெரியோர் அறிவுறுத்தலால் "என் வாழ்வுக்கு ஒரு முதலே" என்று உரைக்கின்றார்.

இதனால் சிவன் திருவடியைப் போற்றற் கெழுந்த ஆர்வத்தால் இன்பமே தவக் காட்சியே என்பன முதலாகப் பாராட்டியவாறும். (5)

2536. போதஆ னந்த போகமே என்னைப்
புறம்பிட நினைத்திடேல் போற்றி
சீதவான் பிறைசேர் செஞ்சடை யாய்என்
சிறுமைதீர்த் தருளுக போற்றி
பேதம்ஒன் றில்லா அருட்கட லேஎன்
பிழைஎலாம் பொறுத்தருள் போற்றி
வேதமெய்ப் பொருளே போற்றிநின் அல்லால்
வேறெனக் கிலைஅருள் போற்றி.

உரை : ஞானவின்பத்தை நல்கும் சிவபோகப் பொருளே போற்றி; என்னைப் புறத்தே போக்குதற்கு நினைத்தல் வேண்டா; குளிர்ந்த வெண்பிறை தங்குகின்ற சிவந்த சடையையுடையவனே, போற்றி; என்பாலுள்ள சிறுமைத் தன்மையைப் போக்கி யருளுக; யாவர்பாலும் வேற்றுமை யெண்ணாத அருட் கடலே போற்றி; யான் செய்துள்ள பிழை யனைத்தையும் பொருத்தருளல் வேண்டும்; வேத நூல் கூறும் மெய்ப் பொருளே, போற்றி; உன்னைத் தவிர ஆதரவு செய்பவர் வேறே எனக்கு ஒருவரும் இல்லை, காண்க. எ.று.

ஞான வின்ப அனுபூதி வடிவினன் சிவபெருமானாதல் பற்றி, "போத வானந்த போகமே" எனப் போற்றுகின்றார். சிவனருட் குழற்குப் புறமாகத் தள்ளி விடலாகாது என வேண்டுகின்றமையின், என்னைப் புறம்பிட நினைத்திடேல்" என வுரைக்கின்றார். வான்பிறை - வெண்மை யான பிறைச்சந்திரன். சீதம் - குளிர்ச்சி. இயற்கை மலப்பிணியால் ஆன்ம வறிவு சுருங்கினமையால், அதனை நீக்கி விரியும் ஞானத்தால் சிவத்தைக் காண்டல் வேண்டுமெனும் வேட்கை புலப்பட, "என் சிறுமை தீர்த்தருளுக போற்றி" என்று கூறுகின்றார். இன்னார் இனியார், பகைவர் நண்பரென்ற வேறுபாடின்றி யாவர்க்கும் அருள் வழங்கும் தன்மையுடை யனாதலால், சிவனை "பேத மொன்றில்லா அருட் கடலே" எனப் பரவு கின்றார். உற்று வருந்தும் துன்பங்கட்கெல்லாம் மன மொழி மெய்களால் உளவாகும் பிழைகளாதலால் "என் பிழை யெலாம் பொறுத்தருள் போற்றி" என்று இயம்புகிறார். "பரவுவாரையும் உடையார் பழித் தகழ்வாரையும் உடையார்" (வாழ்கொளி) என ஞானசம்பந்தரும், "போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்; பிழைத்தவை பொறுக்கை யெலாம் பெரியவர் கடமை போற்றி" (சதகம்) என மணிவாசகரும் ஓதுவன காண்க. வேதங்கள் ஓதும் பொருள் பலவற்றினும் உண்மைப் பொருள் சிவமாதல்பற்றி, "வேத மெய்ப் பொருளே" என்றும், சிவத்தின் வேறே அருளுருவாய பரம்பொருளில்லா மையால், "வேறெனக் கிலை யருள் போற்றி" என்றும் உரைக்கின்றார்.

இதனால் சிவத்தின் வேறு பரம்பொருளின்மையும் அதுவே வேதம் கூறும் மெய்ப் பொருளெனவும் வற்புறுத்தியவாறும். (6)

2537. போற்றுவார் உள்ளம் புகுந்தொளிர் ஒளியே
போற்றிநின் பூம்பதம் போற்றி
ஆற்றுவார் சடைஎன் அப்பனே போற்றி
அமலநின் அடிமலர் போற்றி

ஏற்றுவார் கொடிகொள் எந்தையே போற்றி
இறைவநின் இருங்கழல் போற்றி
சாற்றுமா றரிய பெருமையே போற்றி
தலைவநின் தாட்டுணை போற்றி.

உரை : அன்பால் போற்றி வழிபடுபவர் மனத்தின்கண் புகுந்து, எழுந்தருளும் ஞானவொளியே, போற்றி; பூப்போன்ற நின் திருவடி போற்றி; கங்கையாறு தங்கிய சடையையுடைய என்னுடைய அப்பனே, போற்றி; தூயவனே, நினது திருவடியாகிய தாமரை போற்றி; எருதெழுதிய நீண்ட கொடியை யுடையவனே, போற்றி; இறைவனே, நின்னுடைய கழலணிந்த பெரிய திருவடி போற்றி; சொல்லிப் புகழ்தற் கரிய பெருமையுடையவனே, போற்றி; தலைவனே, நின்னுடைய இரண்டாகிய திருவடிகள் போற்றி. எ.று.

உண்மை யன்புடன் நினைப்பவர் மனத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவதுபற்றி, "போற்றுவார் உள்ளம் புகுந் தொளிர் ஒளியே" என்று கூறுகின்றார். "பனைக்கை மும்மத வேதம் உரித்தவன், நினைப்பவர் மனம் கோயிலாகக்கொள்பவன்" எனத் திருநாவுக்காசர் உரைப்பர். ஆதியந்தமில்லாத அருட்பேரொளி யுருவினன் எனப் படுதலால், "ஒளிர் ஒளியே" என்றும், சிந்தையின்கண் நோக்குவார்க்குச் சிவஞானச் செஞ்சுடராய் விளங்குதலால், "உள்ளம் புகுந்தொளிர் ஒளியே" என்றும் எடுத்துரைக்கின்றார். "பொய்யா நாவதனால் புகழ் வார்கள் மனத்தினுள்ளே மெய்யேநின் றெரியும் விளக்கேயொத்தபிரான்" (கழிப்பாலை) என நம்பியாரூரர் நவில்வது காண்க. பூம்பதம், பூப்போன்ற அழகிய திருவடி; மென்மையான திருவடி என்றுமாம். ஆறுவார் சடை யெனற்பாலது எதுகை நோக்கி, ஆற்றுவார் சடை என வந்தது. ஆறு - கங்கையாறு, அப்பன் - தந்தை. அமலன் - மலமில்லாத தூயவன். ஏறெழுதிய கொடி சிவனுக்குரியதாகலின், "ஏற்றுவார் கொடி கொள் எந்தையே" என்று பராவுகின்றார். "ஏறுலாவிய கொடியினன்" (கீழ் வேளூர்) என ஞானசம்பந்தர் பாராட்டுவர். இருங்கழல் என்றவிடத்து இருமை பெருமையாய்க் கழலணிந்த திருவடிக்காயிற்று; உலகனைத்தும் விரிந்தொடுங்கும் திருவடியாதலால் "இருங்கழல்" என ஏத்துகின்றார். "இருதாள் நிழற் கீழ் மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" (ஐங்) எனப் பெரியோர் கூறுவதறிக. சிந்தையும் மொழியும் செல்லாத எல்லையில் உள்ள பெருமானுதலால், "சாற்றுமா றரிய பெருமையே" எனப் புகழ் கின்றார். பெருமையுடையவனைப் "பெருமையே" எனக் குணமாய்க் கூறுகின்றார். "பணியுமாம் என்றும் பெருமை" (குறள்) என்று சான்றோர் உரைப்பது காண்க.

இதனால், சிவன் போற்றுவா ருள்ளம் புகுந்தருளுவான் என்றும் சாற்றற்கரிய பெருமையுடையவ னென்றும் விளம்பியவாறும்.

2588. துணைமுலை மடந்தை எம்பெரு மாட்டி
துணைவநின் துணையடி போற்றி
புணைஎன இடரின் கடலினின் றேற்றும்
புனிதநின் பொன்னடி போற்றி

இணையில்பேர் இன்ப அமுதருள் கருணை
இறைவநின் இணையடி போற்றி
கணைஎனக் கண்ணன் தனைக்கொளும் ஒருமுக்
கண்ணநின் கழலடி போற்றி.

உரை : இரண்டாகிய கொங்கைகளையுடைய மடந்தையாகிய எங்கள் பெருமாட்டியான உமாதேவி கணவனே, நின்னுடைய இரண்டு திருவடிகள் போற்றி; தெப்பம் போலத் துன்பக் கடலினின்றும் கரை யேற்றும் தூயவனாகிய நின்னுடைய அழகிய திருவடி போற்றி; ஒப்பில்லாத பேரின்பம் தரும் ஞானமுதம் நல்கும் அருளிறைவனே, உன்னுடைய திருவடியிரண்டும் போற்றி; திருமாலை அம்பாகக் கொண்டு திரிபுரத் தசுரரை எரித்தருளும் மூன்று கண்களையுடையவனே, கழலணிந்த திருவடிகள் போற்றி. எ.று.

துணை - இரண்டு. மடந்தை - பெண். பெருமானுக்குப் பெண்பாற் பெயர் பெருமாட்டியென்பது. உமையம்மைக்குக் கணவனாதல்பற்றி "எம்பெருமாட்டி துணைவ" எனக் கூறுகின்றார். துன்பக் கடலிற் கிடந்து வருந்தும் உயிர்கட்குக் கரையேற்றும் தெப்பமாய் உதவுமாறு நினைந்து, "புணையென இடரின் கடலினின் றேற்றும் புனித நின் பொன்னடி போற்றி" எனப் புகல்கின்றார். "இடர்க் கடலுட் சுழிக்கப்பட்டு இளைக்கின்றேற் கக்கரைக்கே ஏற வாங்கும் தோணி" (ஆவடுதண். தாண்டகம்) என்று சான்றோர் உரைப்பது காண்க. மெய்யன் பர்க்கு முத்தியின்பம் தரும் முதல்வனாதலால் "சிவனே இணையில் பேரின்ப அமுதருள் கருணை இறைவ" என இயம்புகின்றார். "வீடுதனை மெய்யடியார்க் கருள் செய்வாரும் வேலைவிடமுண்டிருண்ட கண்டத் தாரும்" (வெண்ணியூர்) எனப் பெரியோர் வழுத்துவது காண்க. திரிபுர மெரித்த காலத்தில் திருமாலையம்பாகவும் மேருமலையை வில்லாகவும் கொண்டாரெனப் புராணம் கூறுவதுபற்றி, "கணையெனக் கண்ணன் தனைக்கொளும் ஒரு முக்கண்ண" என மொழிகின்றார். திருமால் கரிய திருமேனியுடையனாதலால் கண்ணன் என்று குறிக்கின்றார். திருமாலைச் சிவன் அம்பாகக் கொண்ட செய்தியை, "குன்றவார் சிலை நாண் அரவு அரி வாளி கூரெரி காற்றின் மும்மதில் வென்ற வாறெங்ஙனே" (ஆமாத் தூர்) எனத் திருஞானசம்பந்தரும், "நிலையிலா வூர் மூன்றொன்ற நெருப்பு அரி காற்றம்பாகச் சிலையும் நாணதுவும் நாகம் கொண்டவர்" (வீழிமிழலை) என நாவுக்கரசரும் உரைப்பது காண்க.

இதனால் துன்பக் கடலினின்றும் உயிர்களைக் கரையேற்றிப் பேரின்ப மருளும் சிவன் சேவடி போற்றியவாறும். (8)

2539. அடியனேன் பிழைகள் பொறுத்தருள் போற்றி
அயல்எனை விட்டிடேல் போற்றி
கொடியனேற் கின்பந் தந்தருள் போற்றி
குணப்பெருங் குன்றமே போற்றி

நெடியஎன் துன்பந் துடைத்தருள் போற்றி
நினைஅலால் பிறிதிலேன் போற்றி
படிமிசைப் பிறர்பால் செலுத்திடேல் எங்கள்
பரமநின் அடைக்கலம் நானே.

உரை : அடியவனாகிய என் பிழை பொறுத்தருள்க; போற்றி; என்னை அயல் நெறியில் வீழ்ந்தொழியவிடலாகாது; கொடியவனாகிய எனக்கு இன்பம் தந்தருள வேண்டும்; குணமாகிய பெருங்குன்ற மாகியவனே, போற்றி; நெடிது பெருகிய என் துன்பத்தைப் போக்கிட வேண்டும்; நின்னையொழிய எனக்கு வேறு பற்றுக்கோடு இல்லை, போற்றி; மண்ணுலகில் பிற மக்கள்பால் என்னைப் போக்குதல் வேண்டா; பரமனே, யான் நினது அடைக்கலமாயினேன். எ.று.

சிற்றறிவும் சிறுதொழிலும் உடையனாதலால் பிழைகள் பலவும் செய்வது எனக்கு இயல்பாகலின், யான் செய்யும் பிழை மிகுதி கண்டு பொறுத்தல் வேண்டும் என முறையிடுவாராய், "அடியனேன் பிழைகள் பொறுத்தருள் போற்றி" என்றும், தமது உரிமை தோன்ற "அடியனேன்" என்றும் கூறுகின்றார். செய்பிழை மிகுதல் காண்பார்க்குச் செய்தார்மேல் வெறுப்புத் தோன்றிப் புறத்தே விலக்கற்கு எண்ணமுண்டாமாதலின், "அயல் எனை விட்டிடேல் போற்றி" என வேண்டுகின்றார். பிழையும் கொடுமையும் மிக்க விடத்தும், சலிப்பும் வெறுப்புமின்றித் தண்ணிய அருள் புரியும் குணப் பெருமைக்கு எல்லையாய் இலகுவதால் சிவ பெருமானைக் "குணப் பெருங்குன்றமே போற்றி" எனவும், கொடுமைச் செயல்களே துன்பமுறற்குரியவாயினும் எனக்கு நின் குண மாண்புகளால் இன்பம் அருளுகிறாய் என்பாராய், "கொடியனேற்கின்பம் தந்தருள் போற்றி" எனவும் இயம்புகின்றார். தமக்குறும் துன்பங்கள் மலையினும் கடலினும் பெருகித் தோன்றுவதுபற்றி, "நெடிய என் துன்பம் துடைத் தருள் போற்றி" என்றும், பெருங்குன்றமாதலால் எனக்கு நின்னைத் தவிரப் பற்றுவார் பிறர் யாரும் இல்லையென்பாராய், "நினையலாற் பிறிதிலேன்" என்றும் கூறுகிறார். எனது துன்பத்துக்குத் துணையும் மருந்துமாவது நினது திருவருள் ஒன்றேயொழிய வேறு யாதும் இல்லை என்றற்கு "பிறிது" இலேன் என எடுத்துரைக்கின்றார். படி - நிலவுலகு. பிறர் படும் துன்பம் கண்டு துடைத்துதவும் மக்கள் உளராயினும், அவர் முழு நிறைவுடையரன்மையின் அவர்பால் என்னை ஒதுக்க வேண்டா; நான் பரமனாகிய உனக்கே அடைக்கலமாயினேன் என்று முறையிடு வாராய், "பிறர்பாற் செலுத்திடேல், எங்கள் பரம. நின் அடைக்கலம் நானே" எனவுரைக்கின்றார்.

இதனால், நினக்கே அடைக்கலமாயின என்னைப் பிறர் ஆதரவு பெறக் கைவிடலாகாது என முறையிட்டவாறும். (9)

2590. நான்செயும் பிழைகள் பலவும்நீ பொறுத்து
நலந்தரல் வேண்டுவன் போற்றி
ஏன்செய்தாய் என்பார் இல்லைமற் றெனக்குன்
இன்னருள் நோக்கஞ்செய் போற்றி

**ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத் தெளியேன்
ஓதநீ உவந்தருள் போற்றி
மான்செயும் நெடுங்கண் மலைமகள் இடங்கொள்
வள்ளலே போற்றிநின் அருளே.**

உரை : பிணை மான்போல, நெடிய கண்களையுடைய மலைமகளாகிய உமாதேவியை, இடப்பாகத்தில் உடைய வள்ளலாகிய சிவபெருமானே, நின் திருவருள் போற்றி; நான் செய்யும் பிழைகள் மிகப் பலவேயாயினும் நீ அவற்றைப் பொறுத்து, நலம் செய்தருள வேண்டும், போற்றி; இப் பிழைகளை ஏன் செய்தாய் என்று கேட்பவர் இல்லை; எனக்கு உன்னுடைய இனிய திருவருள் நோக்கத்தைச் செய்தருள்க; ஊனாலாகிய எனது நாவால் உன்னுடைய திருவைந்தெழுத்தை எளிய யான் ஓதி யுய்ய நீ திருவுளம் செய்தருள்க, போற்றி. எ.று.

துன்பங்கள் கடலலைபோல் மிகப் பலவாய் வந்து வருத்துவதற்குக் காரணம் தாம் செய்த பிழைகளெனத் தெரிதலால், "நான் செயும் பிழைகள் பலவும் நீ பொறுத்து நலந்தரல் வேண்டுவல் போற்றி" எனக் கூறுகின்றார். துன்புறுதல் கண்டு ஏன் என்பார் உளராயின், செய் பிழைகள் தவிர்க்கப்படுமாகலின், "ஏன் செய்தாய் என்பார் இல்லை மற்று எனக்கு" என்றும், நினது திருவருள் ஞான நாட்டம் பதியுமாயின், அறிவு தெளிவுற்றுத் துன்பத்துக்குள்ளாதல் இல்லையாம் என்பார், "உன் இன்னருள் நோக்கம் செய் போற்றி" என்றும் இயம்புகின்றார். திருவருள் நினைவு உளதாதற்கும் திருவருள் நாட்டம் பெறுதற்கும் திருவைந் தெழுத்து அரிய துணையாதலால், "நாவல் உன் ஐந்தெழுந்து எளியேன் ஓத நீ உவந்தருள் போற்றி" என வுரைக்கின்றார். திருவைந்தெழுத் தைச் சிந்தித்தற்கும் ஓதுதற்கும் திருவருள் இன்றியமையாமையின், "ஓத வுவந்தருள்" எனக் கூறுகிறார். (நின் நாமத்திருவெழுத் தஞ்சும் தோன்ற அருளும் ஐயாறரே" (ஐயாறு) என நாவுக்கரசர் நவில்வது காண்க.

இதனாற், செய்பிழைகளைத் தவிர்க்கும் திருவைந்தெழுத்தை நாவால் ஓதி யுய்தற்கு அருள் செய்க என வேண்டியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

3. அம்மை திருப்பதிகம்

அஃதாவது, உமாதேவியாகிய சிவகாமியைச் சிவானந்தவல்லி பெயரால் மகுடமிட்டுப் பாடுவது.

பதினுன்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2591. உலகின்உயிர் வகைஉவகை உறஇனிய அருளமுதம்
உதவும்ஆ னந்த சிவையே
உவமைசொல அரியஒரு பெரியசிவ நெறிதனை
உணர்த்துபேர் இன்ப நிதியே
இலகுபர அபரநிலை இசையும்அவ ரவர்பருவம்
இயலுற உளங்கொள் பரையே
இருமைநெறி ஒருமையுற அருமைபெறு பெருமைதனை
ஈந்தெனை அளித்த அறிவே
கலகமுறு சகசமல இருளகல வெளியான
காட்சியே கருணை நிறைவே
கடகரட விமலகய முகஅமுதும் அறுமுகக்
கநஅமுதும் உதவு கடலே
அலகில்வளம் நிறையும்ஒரு தில்லையம் பதிமேவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை : உலகின்கண் வாழும் உயிரினம் பலவும் இன்ப மெய்தல் வேண்டித் திருவருளாகிய அமுதத்தை நல்கும் ஆனந்த மயமான சிவையே, ஒப்புக் கூற முடியாத ஒரு பெரிய சிவநெறியை உயிர்கட்குணர்த்தி யருளும் பேரின்பப் பெருஞ்செல்வமே, விளங்குகின்ற பரம் அபரம் என்ற இருவகை நிலைகளைப் பொருந்தும் அவரவருடைய பருவம் பக்குவமடையுமாறு திருவுளம் கொள்ளும் பறையே, துறக்கமும் வீடுமாகிய இருவகை நெறியும் ஒருமைக்கண் எய்தும் அரிய பெருமையைத் தந்து என்னை ஆண்டருளிய அறிவுருவே, வருத்தமுறுவிக்கும் இயற்கை மலம் செய்யும் இருள் நீங்குமாறு ஒளி நிலவும் ஞானகாயத்தில் தோன்றும் காட்சிப் பொருளே, அருள் நிறைவே, மத நீர் பெருகினும் தூயதாய யானையின் முகத்தையுடைய அமுதமாகிய விநாயகப் பெருமானையும் ஆறுமுகங்களையுடைய பெருமை சான்ற அமுதமாகிய முருகப்பெருமானையும் பயந்தருளிய கடல் போன்றவளே. அளவற்ற வளம் நிறைந்த ஒப்பற்ற தில்லைப்பதியில் எழுந்தருளும் தலைவராகிய சிவபெருமான்

மகிழும் மரகத மணி போன்றவளே, அண்டங்களனைத்தையும் அவற்றுள் உறையும் சராசரங்களையும் ஈன்றருளும் தாயாகிய பரசிவானந்த வல்லி யாகிய உமையம்மையே, எமக்கு அருள் புரிக. எ.று.

ஓரறிவுடையது முதல் உயிர்கள் எண்ணிறந்தனவாய் இன்பம் வேண்டுதலும் துன்பத்தை விலக்குதலும் இயல்பாக வுடையவையாய் இருப்பனவாதலால், "உலகின் உயிர்வகை யுவகையுற" எனவும், திருவருட் சத்தியாய் உயிர்களின் அறிவு செயல்களாகிய சத்திகளை யெழுப்பி இன்ப மெய்துவிக்கும் ஏற்ற முடைமை பற்றி, "இனிய அருளமுதம் உதவும் ஆனந்த சிவையே" எனவும் உமையம்மையைப் போற்றுகின்றார். "உரை சேரும் எண்பத்துநான்கு நூறுயிரமாம் யோனி பேதம்" (வீழிமிழலை) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. உலகில் இன்பப் பேற்றுக்கு வாயில் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாதலால் அதற்கின்றியமையாத அருளை வழங்கும் சிவசத்தியை, இனிய அருளமுதம் உதவும் ஆனந்த சிவையே" என்று கூறுகின்றார். சிவனுக்குப் பெண்பாற் பெயர் சிவை. சிவம் இன்ப மயமாதலால் தேவியை "ஆனந்த சிவை" எனக் குறிக்கின்றார். சிவநெறியின் தனிப் பெருமையைப் புலப்படுத்தற்கு "உவமை சொலவரிய ஒரு பெரிய சிவநெறி" எனவும், திருவருள் ஞானமும் ஒழுக்கமும் திருவருட் சத்தியால் உளவாதலால் "சிவநெறிதனை யுணர்த்து பேரின்ப நிதி" எனவும் இயம்புகிறார். உலகில் மக்களுயிரின் மேனிலையும் கீழ்நிலையு மாகிய நிலைகட்கேற்பக் காலமறிந்து பக்குவம் உறுவிக்கும் பராசக்தி என்பது பற்றி, "இலகுபரநிலை அபரநிலை யிசையும் அவரவர் பருவம் இயலுற உளங்கொள் பரையே" என்று போற்றுகின்றார். பரன் என்பதன் பெண்பால் பரை. சிவசத்தியைப் பரை என்பது வழக்கு. துறக்கப் பேற்றுக்கு வாயிலாக இல்லற நெறியும், வீடு பேற்றுக்கு ஏதுவாகும் ஞானமாகிய துறவு நெறியும் "இருமை நெறி" எனப்படுகின்றன. வடலூர் அடிகட்கு இருநெறியும் ஒருங்கு வாய்த்தமை நினைந்து, "இருமை நெறி ஒருமையுற அருமை பெறு பெருமைதனை ஈந்தெனை யளித்த நெறியே" என்று இசைக்கின்றார். இன்னெறிக் கமைந்த திருமணம் நிகழ்ந்ததும், அதன்கண் அழுந்தாகல் அடிகளார் உள்ளத் துறவு பூண்டு வாழ்ந்ததும் ஈண்டு நினைக்கற் பாலனவாம். செய்வினை யால் ஒருவர்க்கெய்தும் பெருமையில் வடலூரடிகள் பெற்றது அரியதாக லின், "அருமை பெறு பெருமை" எனச் சிறப்பிக்கப்படுகிறது. இருவகை நெறிகளின் பயன்தூக்கி மேற்கோடற்கேற்கும் அறிவருளுவது அருட் சக்தியாதலால், "அளித்த அறிவே" எனக் கூறுகின்றார். இருள் நீக்கத்துக்கு ஒளி போல மலவிருளைக் கடிதற்குச் சிவஞான அருளொளி நல்குதல் விளங்க, "கலக முறு சகசமல விருளகல வெளியான காட்சியே" எனவும், அருளே அம்மையின் திருவுருவாதல் பற்றி, "கருணை நிறைவே" எனவும் இயம்புகிறார். இயற்கையைச் சகச மென்றும், செயற்கையை ஆகந்துகம் என்றும் வழங்கும் மரபினால், ஆணவ மலம் "சகச மலம்" எனவும், அறிவை மறைப்பது பற்றி, "மலவிருள்" எனவும் கூறப்படுகிறது. மூல மலத்தைப் போக்குதற்கு ஏனை மாயா மலமும் கன்மமலமும் பற்றுத லால் அவை ஆகந்துக மலம் எனக் கூறப்படும். மலவிருளகற்றும் ஞானவொளி திகழும் இடம் ஞானகாயமாதலின், ஆண்டுத் தோன்றும் திருவருட் காட்சியை, "வெளியான காட்சியே" என்றுசிறப்பிக்கின்றார்.

தண்ணிய குறைவிலா நிறைவுடைய தாகலின், பரைக் காட்சியை, "கருணை நிறைவே" எனப் பகர்கின்றார். பிடியானை யுருக்கொண்டு சிவக் களிற்றைக் கூடிப் பயந்தமையின், விநாயகரை, "கடகரட விமல கயமுக வமுது" என்றும், சரவணப் பொய்கையில் ஆறு குழவிகளாய் இருப்ப, அந்த ஆறையும் சேரக் கூட்டி ஆறு முகங்களையுடைய ஒரு திருமேனியாக உருவாக்கியது விளங்க, "அறுமுகக் கணவமுது" என்றும், அமுதை யுதவியது கடலானது கொண்டு, "உதவு கடலே" என்றும் அம்மையைத் துதிக்கின்றார். கணம் - பெருமை. மத மொழுக்குவது யானைக் கியல்பாதலால், "கரடகட கயமுகன்" என்றும், மதமொழுக்கும் யானை முகமுடையனாயினும், தூய்மை கெடாதவன் எனற்கு "விமல கயமுகன்" என்று கூறுகின்றார். தில்லையம்பதி மருவும் அண்ணலார், கூத்தப் பெருமான். உமையம்மை பச்சைநிற முடையவளாதலின், மணியென்றது, மரகத மணிக்காயிற்று. அண்டங்கள் எண்ணிறந்தவை யென்றாபாயினும், அவை யனைத்தையும் அவற்றுள் வாழும் இயங்குதிணை நிலையத்திணை ஆகிய இருவகை யுயிர்களையும் படைத்தளிக்கும் பெருமாட்டியாதலால், உமையம்மையை, "அகிலாண்டமும் சராசரமும் ஈன்றருள் பரசிவானந்தவல்லி" என வுரைக்கின்றார். பரசிவத்தோடு ஒன்றி இன்ப மருளும் பராசத்தியாதலால், "பரசிவானந்த வல்லி" எனவும், கொடியிடைப் பெண்ணாவது பற்றி, "வல்லி" எனவும் இயம்புகின்றார்.

இதன்கண் உமாதேவியை சிவை யெனவும், பரை யெனவும், அறிவெனவும் மலவிரு ளகற்றும் பரவெளிக் காட்சியெனவும், கருணை நிறை வெனவும் உலகருள் தாயெனவும் போற்றிப் பராவியவாறும். (1)

2592. கற்பவைஎ லாங்கற்றுள் உணர்பவைஎ லாமனக்
கரிசற உணர்ந்து கேட்டுக்
காண்பவைஎ லாங்கண்டு செய்பவைஎ லாஞ்செய்து
கருநெறி அகன்ற பெரியோர்
பொற்பவைஎ லாஞ்சென்று புகல்பவைஎ லாங்கொண்டு
புரிபவை எலாம்பு ரிந்துன்
புகழவைஎ லாம்புகழ்ந் துறுமவைஎ லாம்உறும்
போதவை எலாம்அ ருளுவாய்
நிற்பவைஎ லாம்நிற்ப அசைபவைஎ லாம்அசைய
நிறைபவை எலாஞ்செய் நிலையே
நினைபவைஎ லாம்நெகிழ நெறிஅவைஎ லாம்ஓங்கும்
நித்தியா னந்த வடிவே
அற்புடைய அடியர்புகழ் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை: நிற்பன யாவும் நின் றாங்கு நிற்கவும் அசையும் பொருள்களனைத்தும் அசையவும், நிறையும் செயலுடையவை யாவும்

நிறையவும் செய்கின்ற நிலைப் பொருளாகியவளும், நெஞ்சால் நினைப்பவை யனைத்தும் நிகழாமல் நெகிழ்ந்தொழிய நெறிப்பட்டவை உயர்ந்தோங்கவும் நிலைத்த இன்ப வடிவாகியவளும், அன்பு மிக்க அடியவர்கள் புகழ்கின்ற தில்லைப் பதியில் எழுந்தருளும் அண்ணலாகிய கூத்தப்பெருமான் மகிழும் மரகத மணி போல்பவளும் அனைத்தண்டங் களையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் ஈன்றருள்பவளும் பரசிவானந்த வல்லியுமாகிய உமையம்மையே, கற்றற்குரியவை யெல்லாவற்றையும் கற்று உணரத் தகுவனவனைத்தையும் குற்றமற மனத்தால் உணர்ந்து, கேட்டற்குரிய வனைத்தையும் கேட்டு, காண்டற்குரியன அனைத்தையும் கண்டு, செய்தற்குரியவை அனைத்தையும் செய்து, பிறப்புக்கேதுவாகிய நெறியினின்றும் நீங்கிய பெரியோர் கூடிய அழகிய அவைகட்குச் சென்று ஆங்கு அவர்கள் உரைப்பவை யெல்லாம் கருத்திற் கொண்டு, நான் செய்தற்குரியவற்றை யெல்லாம் செய்து, உன்னுடைய புகழ்கள் எல்லாம் சொல்லிப் புகழ்ந்து, அதனால் எய்துவன யாவும் எய்தும்போது அவை எஞ்சாமல் எய்துமாறு அருள் செய்வாயாக. எ.று.

கற்பவை - கற்றற்குரிய நூல்கள். கற்பன யாவையினும் வேண்டு வனவே நன்கு உணர்தற்குரியவாய் மனமாசு போக்கும் மாண்புடையவா மாதலின், "உணர்பவை யெலாம் மனக்கரிசற வுணர்ந்து" என்றும், அவ்வாறே கேட்பன கேட்டுக் கரிசற வேண்டும் என்றற்குக் "கேட்டு" என்றும் கூறுகின்றார். கற்றலிற் கேட்டல் மனக் கரிசு துடைத்தற்கு வாய்ப்பு மிக வுடைய தென அறிக. நுண்ணுணர்வுக்குச் செவியாற் கேட்டலேயன்றிக் கண்ணாற் காண்டலும் இன்றியமையாமையின் "காண்பன வெலாம் கண்டு" என்று உரைக்கின்றார். "கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர்" மெய்ப்பா) என்று தொல்காப்பியர் கூறுவது காண்க. வாயாற் கற்றலும் செவியாற் கேட்டலும், கண்ணாற் காண்டலும் போல மெய்யாற் செய்வன செய்தலும் நல்லறிவுக்கு வாயிலாதலின், "செய்பவை யெலாம் செய்து" எனக் கூறுகின்றார். இவ்வாற்றால் நல்லறிவு பெற்றவர் பொருள்களின் உண்மையுணர்ந்து பிறவாப் பெருநெறி நின்று பெருமை எய்துவராகலின், அவர்களைக் கற்றும் கேட்டும் உணர்ந்தும் கண்டும் செய்தும் மனக் கரி சகன்று "கருநெறி யகன்ற பெரியோர்" என மொழிகின்றார். கருநெறி - பிறவிக்குரிய நெறி. பெரியோர் கூடும் பேரவை ஞானமும் ஒழுக்கமும் நிறைந்து பொலிதலால், அதனைப் பெரியோர் பொற்பவை" என்று புகழ் கின்றார். அவரது அவைக்கண் ஞானமும் விழுப்பமும் பயப்பனவே பேசப்படுதல் தோன்ற, பொற்பவை யெலாம் சென்று புகல்பவையெலாம் கொண்டு" எனச் சொல்லுகின்றார். பொற்பவைப் பெரியோர் கூறும் விரதமும் அறமும் புரிதல் பெற்ற ஞானத்தைப் பேணுதற்குக் காப்பாய் உதவு மென்றற்குப் "புரிபவையெலாம் புரிந்து" எனப் புகல்கின்றார். பெரியோர் பேரவையில் இறைவனுடைய பொருள் நிறைந்த புகழ்கள் பலவும் பேசப்படுமாகலின், அவற்றைக் கேட்டு ஓதி யுணர்தல் நற்பயன் பலவும் உறுவிக்கும் என்றலின் "புகழவை யெலாம் புகழ்ந்து உறுபவை யெலாம் யுறும்போது" எனவும், தன்னாலும் பிறவுயிர்களாலும் தெய்வத் தாலும் இடையூறுகள் போதருமாதலால், அவற்றால் தடையுறாமல் எல்லாம் குறைவின்றி எய்தத் திருவருள் துணை செய்யவேண்டும் என்பாராய், "உறும்போது அவையெலாம் அருளுவாய்" எனவும் உமா

தேவியை வேண்டுகின்றார். நிற்பவை நிலையாய் நிற்பதும் நில்லாது அசையும் பொருள் அசைவதும், பள்ளம் நோக்கி நிறையும் நீர் நிறைவதும் காற்று அங்ஙனமே சென்று நிறைவதும் இயல்பாயினும் அவ்வியல்பு தானும் முட்டின்றி நிகழ்தற்கும் நிலைத்த சிவ சத்தி காரணம் என்பது பற்றி "நிற்பவை யெலாம் நிற்ப அசைபவை யெலாம் அசைய நிறைபவை யெலாம் செய் நிலையே" எனக் கூறுகின்றார். இவ்வாறே உலகனைத்தும் உள்ள பொருள்கள் தத்தமக்குரிய பணிகளைத் தாந்தாமே முறையே செய்தற்கு அச்சத்தியே காரணம் என்பது விளங்கவே, "எலாம் செய் நிலையே" என்று நினைப்பிக்கின்றார். நெஞ்சின்கண் நிகழும் நல்லனவும் தீயனவுமாகிய நினைவுகள் நினைந்தவாறே நிகழுமாயின் உலகியல் வாழ்வு சீர்குலைந்து கெடும் என்பது கருதியே யாவும் நினைந்தாங்கு நிகழாமல் வேறுபட்டு நிகழ்வதும் நிகழா தொழிவதுமாக உள்ளனவாதற்கும் காரணம் அந்த அருட்சத்தியே ஏதுவாம்; அன்றியும் உலகிற்கு வேண்டுவனவும் வேண்டாதனவுமாகிய நெறிகளில் வேண்டுவன ஓங்கி நின்று இன்பப் பயன் நல்குதற்கும் அருட்சத்தி காரணமாதலை யுணர்த்தற்கு நினைபவை யெலா நெகிழ நெறியவை யெலாம் ஓங்கும் நித்தியானந்த வடிவே" என வுரைக்குன்றார். நெகிழ்தல் - வேறுபட்டொழிதல். தானும் உடன் கலந்து ஒழுகுவது பற்றி "ஓங்குவிக்கும்" எனப் பிற வினையாற் கூறாமல் "ஓங்கும்" என்று தன் வினையாற் கூறுகின்றார். அருட்சத்தி இன்பமயமாதலின், "நித்தியானந்த வடிவே" எனப்படுகிறது. அன்புடைய அடிய ரென்பது எதுகை நயம் பற்றி, "அற்புடைய" என வந்தது. இறைவன்பாலும் அவனுறையும் இடத்தின்பாலும் உள்ள காதலால், "அன்புடைய அடியவர் புகழ் தில்லையம்பதி" என வுரைக்கின்றார்.

இதனால் எல்லா வுலகங்களும் தத்தம் ஒழுங்கும் முறையும் செயலும் திரியாமல் நின்று நிகழ்தற்கு அருட்சத்தி காரணம் என்பது அறிவிக்கப் பட்டவாறும், (2)

2593. இக்கணம்இ ருந்தஇம் மெய்என்ற பொய்க்கூரை
இனிவரு கணப்போ திலே
இடியாதி ருக்குமோ இடியுமோ என்செய்கோம்
என்செய்கோம் இடியும் எனில்யாம்
தெக்கணம் நடக்கவரும் அக்கணம் பொல்லாத
தீக்கணம் இருப்ப தென்றே
சிந்தைநைந் தயராத வண்ணம்நல் அருள்தந்த
திகழ் பரம சிவசத்தியே
எக்கணமும் ஏத்தும்ஒரு முக்கணி பரம்பரை
இமாசல குமாரி விமலை
இறைவிபை ரவிஅமலை எனமறைகள் ஏத்திட
இருந்த ருள்தருந் தேவியே
அக்கணுதல் எம்பிரான் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை : மக்கள் கணம், தேவகணம், முனிவர்கணமெனப்படும் பல்வகைக் கூட்டத்தாரும் பராவுகின்ற ஒப்பற்ற முக்கண்களையுடைய மேலான பராசக்தியே, இமயமலை வேந்தன் மகளே, விமலையே, எந்நாட்டவர்க்கும் இறைவியே, பைரவியே, மலமில்லாதவளே என்று வேதங்கள் ஓதித் துதிக்க வீற்றிருந்தருளும் தேவியே; அந்தக் கண்ணுதற் கடவுளாகிய எம்பெருமானும் தில்லைப்பதியில் இருக்கும் தலைவனுமாகிய சிவபெருமான் மகிழ்கின்ற மரகத மணியே, எல்லா அண்டங்களையும் அவற்றுள் இருக்கும் சராசரங்களையும் ஈன்றளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமையம்மையே, இந்தக் கணத்தில் இருக்கின்ற உடம்பெனப்படும் பொய்வீடு இனிவரும் மறுகணத்தில் நிலைகுலைந் தழியாமல் இருக்குமோ, அழிந்துபடுமோ, இது நினைக்கின் என்ன செய்வதெனத் தெரியாமல் வருந்துகின்றேம்; அழிவதாயின் யாம் தென் திசைக்குச் செல்லும் அக்காலம் தீவாய் நரகிற் குட்புகும் பொல்லாத காலம் என மனம் நைந்து வருந்தாவாறு திருவருள் புரிந்து விளங்கும் பரம சிவசத்தியே, வணங்குகிறேன். எ.று.

மக்கள் முனிவர் தேவர் எனப் பலரும் கூட்டம் கூட்டமாய் வந்து வணங்கும் முக்கண்களையுடைய பெருமாட்டியாதலால், "எக்கணமும் ஏத்தும் ஒரு முக்கனி பரம்பரை" எனப் புகழ்கின்றார். பரை - அருட் சத்தி. இமாசல குமாரி - இமயமலை வேந்தன் மகள். விமலை; அமலை என்பன உயிர்கள் போல மலத்தொடர்பு இல்லாதவள் எனப் பொருள்படும் வடசொற்கள். பைரவி-வைரவக் கடவுளாகிய சிவனுக்குத் தேவி. இருந்து அருள்தரும் தேவி - நிலையாக இருந்து உயிர்கட்கு அருள் செய்பவளான தேவி. கண்ணுதல் - சிவன். அகரம் - உலகறி சுட்டு. அண்ணலார்-தலைவர். மணி-ஈண்டு மரகத மணி மேற்று. மெய்யென்ற பொய்க் கூரை, உடம்பெனப்படும் நிலையின்றிக் கெடும் தோலாகிய கூரை வேய்ந்த வீடு. கெடுதல் - சாதல். உடம்பைக் கூரையென்றதற் கொப்ப, சாதலை, இடிதல் என்று கூறுகிறார். தெக்கணம் - எமன் வீற்றிருக்கும் தென்னாடு. ஒரு காலத்தில் தென் தமிழ்நாடு கடல் கோளால் ஒருங்கு அழிந்தமையின், அதற்குக் காரணம் தென்னாட்டுறையும் எமனெனப் புராணிகர் கருதினர்; அக்கருத்தால் இறக்கும் உயிர்கள் எமன் கைப்பட்டு எரிவாய் நரகத் திடப்படுகின்றனர் என்பாராயினமையின், "தெக்கணம் நடக்க வரும் அக்கணம் பொல்லாத தீக்கணம் இருப்பது" எனவுரைக்கின்றார். இதனைக் கேட்கும் மக்கள் உள்ளம் நரகத் தீவேதனையை நினைந்து அச்சம் உறுதல்பற்றி, "சிந்தை நைந்து அயராதவண்ணம்" எனவும், அயர்ச்சி தானும் சிவத்தின் திருவருளாலல்லது நீங்காமை தேர்ந்து, "நல்லருள் தந்த திகழ் பரம சிவசத்தியே" எனவும் இயம்புகின்றார். சிவசத்தி ஞானவொளியாதலால், "திகழ் பரம சிவசத்தி" எனக் கூறுகின்றார்.

இதனால் உடம்பின் நிலையாமையும் தீநரக வேதனையும் உரைத்து இவற்றால் மனம் தளராமை தந்தருள்க என வேண்டிக் கொண்டவாறும். (3)

2594. பொய்யாத மொழியும்மயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதளராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்நினை
என்றும்மற வாத நெறியும்
இறவாத தகவும்மேற் பிறவாத கழியும்இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐயான னம்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை: பறிக்கப்படுவதின்றி இதழ் குவிதலுமின்றி வாடுதலும் இல்லாமல் நறுமணம் கமழும் அழகிய தெய்வ மலர் போன்றவளே, கோக்கப்படாத முத்தே, தேய்தலில்லாத முழுமதியே, கோணுதலில்லாத மணி விளக்கே, முகம் ஐந்துகொண்டு தில்லைப்பதியின்கண் எழுந்தருளும் அண்ணலாகிய கூத்தப் பெருமான் மகிழும் மரகத மணி போன்றவளே, அண்டங்கள் அனைத்தையும் அவற்றுள் வாழும் சராசரங்களையும் படைத்தளிக்கும் பரசிவ ஆனந்தவல்லியாகிய உமையம்மையே, பொய் சொல்லாத வாயும், மயக்கம் விளைவிக்காத செய்கையும் பயனின்றிக் கழியாத வாழ்நாளும், புலன்கள் மேற்செல்லாத நன் மனமும், உள்ளத்தினின்றும் நீங்காத சாந்தப் பண்பும்; மனம் சோராத நிலைமையும், வறுமையால் தளர்வுறாத வாழ்க்கையும் இன்மைத் துன்பத்தால் குறைகளை நினைந்து வேறு வேறு நினைவுகளைக் கொள்ளாத மன நிறைவும், என்னை எந்நாளும் மறத்தலில்லாத செந்நெறியும் இறத்தலும் பிறத்தலும் இல்லாத சிவகதியும் ஏழையாகிய எனக்கு அருள் செய்வாயாக. எ.று.

பொய் மொழிதல் தன்னை யறியாமல் நிகழ்தலுண்மையின், "பொய்யாத மொழி" வேண்டுகிறார். நாளும் மெய்யே பேசும் நல்லோர், புரை தீர்ந்த நன்மை வேண்டி பொய் பேசும் இடமும் உண்டாதலின் அதுவும் வேண்டா எனற்கு இது வேண்டுகிறார் எனினும் அமையும். வினையும் பயன் மேற் செல்லும் விருப்பு மிகுதியால், வினையுணர்வும் தானும் வேற்றத் கலந் தொன்றிச் செய்யும் மயக்க நிலை வேறு வினைகட்கு வித்தாதல் பற்றி, "மயல் செய்யாத செயல்" வேண்டும் என விளம்புகின்றார். செய்வன செய்யுமிடத்து முக்குண வயத்தால் முறை திறம்பிக் காலம் வீண் போதலையெண்ணி, "வீண் போகாத நாள்" வேண்டும் என விண்ணப்பிக்கின்றார். வீணே கழியும் நாளை, "வீழ் நாள்" என்பர் திருவள்ளுவர். உரன் இல்லாவிடத்து நெஞ்சு புலன்கள் மேற்சென்று ஆசை பிறப்பித்துத் துன்பம் செய்தலால், "விடயம் புரியாத மனம்"

வேண்டுமென வுரைக்கின்றார். பிறர் போற்றிய வழி மகிழ்ச்சியும், தூற்றிய வழித் துயருற்று வருந்து தலும் கொள்ளுதல் யாவர்க்கும் இயல்பாதலால், அவ்வாறின்றிப் போற்றுதல் தூற்றுதல் என்ற இரண்டினையும் ஒப்புக் கொண்டு நெஞ்சு நெகிழாத தன்மை "சாந்தம்" எனப்படும். "செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலைமை" என இதனை விளக்குவர் பேராசியர். (தொல். பொ மெய்) இதனை நடுநிலை யென்றலும் உண்டு. திடமிக்க நெஞ்சுடையார்க்கே இந்தச் சாந்தமாகிய நிலை கை வருவதாகலின், "உட்பிரியாத சாந்தம்" எனவும், திண்மை யுறுவதினும் மெலிந்து கெடல் மனத்துக்கு இயற்கையாதலால் "புந்தி தளராத நிலை" எனவும் சிறப்பித்து வேண்டுகின்றார். வறுமை எய்துமிடத்து மனத்தளர்ச்சியும் செய்வினைச் சோர்வும் தோன்றி மனத்தைக் கீழ் நிலையிற் செலுத்து மென அஞ்சுதல் தோன்ற. "எய்யாத வாழ்வு" வேண்டுமெனவிரும்புகிறார். குறையுற்ற மனம் அதனை நிரப்புதல் வேண்டித் தீய எண்ணங்களையும் செயல்களையும் நினைந்து தீமைக்கிரையாகுமாதலல், அதனை விலக்குதல் வேண்டி, "வேறு எண்ணாத நிறைவு" வேண்டுமென விழைகின்றார். கொய்த மலர் விரைவில் வாடிக் கெடுதலால் கொய்யாமை மலர்க்குச் சிறப்பு. தேனும் மணமும் குன்றும் போது மலரிதழ் கூம்பும் என வுணர்க. குமைதல், வாடிக் கெடுதல். மலர்ந்த வண்ணமும் பொலிவும் குன்றுமை யுணர்த்தற்குக் "குமையாது மணம் வீசு மலர்" எனக் குறிக்கின்றார். கோமளம், அழகு. தெய்வமாய் மலர் போல ஞானமணம் கமழ்வது குறித்து, தேவியை, "தெய்வமலரே" என்று புகழ்கின்றார். கோத்த முத்தம் துளை படுதலாலும், மதியம் கலை தேயுமிடத்து இருள் படிதலாலும் "கோவாத முத்தமே குறையாத மதியமே" எனப் பரவுகின்றார். குற்றமில்லாத மணியைக் "கோடாத மணி" எனக் கூறுகின்றார். ஐயானனம். ஐந்தாகிய முகம்; அவை, ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம். சக்தியோ சாதம் என்பன. சிவனுக்குத் திருமுகம் ஐந்து என்பர். ஐந்து முகம் கொண்ட சிவவடிவத்தை மந்திர தேகம் என்றலு முண்டு.

இதனால் மனம் மொழி செயல்களும் சாந்தப் பண்பும் பிறப்பிறப் பில்லாத சிவகதியும் பிறவும் நல்குமாறு தேவியை வேண்டியவாறும். (4)

2595. பவமான எழுகடல் கடந்துமேற் கதியான
பதிநிலை அணைந்து வாழப்
பகலான சகலமுடன் இரவான கேவலப்
பகையுந் தடாத படிஓர்
தவமான கலனில்அருள் மீகாம னால்அலது
தமியேன் நடத்த வருமோ
தானு நடக்குமோ என்செய்கேன் நின்திருச்
சரணமே சரணம் அருள்வாய்
உவமான மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்தர் உறவே
உருவான அருவான ஒருவான ஞானமே
உயிரான ஒளியின் உணர்வே

அவமான நீக்கிஅருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை:- ஒப்பில்லாத பரசிவமாகிய தூயவெளியிற் கலந்து உறவாடுகின்ற முத்தான்மாக்களுக்கு உறவாகியவளே, உருவும் அருவு மாகிய ஒரு தனிப்பெருமை கொண்ட ஞானம்பிகையே, உயிர்கட் குயிராய் ஒளி யுருவாகிய உணர்வானவளே, குற்றமாகிய அவமானத்தை நீக்கி அருள் புரியும் தில்லைப்பதியுள் எழுந்தருளும் அண்ணலாகிய சிவன் மகிழ்கின்ற மரகதமணியே, அண்டங்களனைத்தையும் சரசாரங்களையும் படைத் தளிக்கும் பரசிவ ஆனந்த வல்லியாகிய உமையம்மையே, எழுவகை பிறவிகளமிய கடலைக் கடந்து மேற் கதியாகிய சிவகதியை அடைந்துவாழ்ந்தற்குப் பகல் போல் ஒளி நிலவும் சகலாவத்தையுடன் இருள் சூழ்ந்த கேவலாவத்தை யாகிய பகைமைச் சூழ்நிலையால் தடையுறாத வண்ணம் தவமாகிய ஒரு மரக்கல மேறி திருவருளாகிய மாலுமியா லன்றி எளியனுகிய யான் அக்கடலைக் கடக்க இயலாது; தானுகவும் கடத்தலாகாது; யான் யாது செய்வேன்; திருவடியால் துணை புரிவாயாக எ. று.

பிறப்பு வகை ஏழாய் ஆழ்கடல் போல் நீந்தல் அரிதாய் உள்ளமையின், ''பவமான எழுகடல்'' எனவுரைக்கின்ருர் பிறவாப் பெருவாழ்வுக் கிடமாவது சிவகதியாகலின், அதனை ''மேற்கதி·யான பதிநிலை'' எனக்கூறுகின்ருர். அதனைச் சுத்த நிலையெனச் வைசநூல்கள் உரைகின்றன. அதனைப் பெறுதற்குரிய ஆன்மாக்கள் ஆணவ விருள் சூழ்ந்து இருட்டறையிற் கிடக்கும் குருட்டுக் குழவி போல் செயலற்றுக் கிடந்து திருவருளால் ஒளியுடைய மாயா காரியமான உலகுகளில்உடல் கருவி காரணங்களோடு கூடி மனமொழி மெய்களைக் கொண்டு நற்றவம் புரிந்து அடைவது பற்றி ''பகலானசக முடஇரவான கேவலப் பகையும் தடாதபடி'' எனவுரைக்கின்ருர். ஆணவ விருளிற் கிடப்பது கேவலம் எனவும்,உலகுடல் கரணங்களோடு கூடுவது சகலம் எனவும் வழங்கும். சகலநிலையும் உலகுடல்கள் தரும் போகத்திற் படிந்து உயிர் கள் சுத்தநிலை பெருது பிறப்புச் சூழலிற் சிக்கி அலமருதற் கேதுவாகலின் ''பகை'' யென இசைக்கின்ருர். சகலத்தில் உயிர் உல்குடல்களுடன் கூடியுணர்வு விளங்கப் பெறுதலால், ''பகலான சகலம்'' என்கின்ருர். சுத்த நிலை பெறுங் காறும் கேவல சகலங்களிற் புகுந்து தடுமாறுவது பற்றி, இரண்டினையும் பகை யெனவும் இரவு பகல் எனவும் விளம்புகிருர். சிவப் பேறு குறித்துச் செய்யும் தவமன்றி வேறு செய்வகை யில்லாமை யால், ''தவமான கலன்'' எனவும், சகலத்திற் புகுந்த உயிர் பிறவியாகிய கடலைக் கடந்தாலன்றிச் சுத்த நிலையாகிய சிவகதியை யடைதல் கூடாமையால், கடத்தற் கமைந்த மரக்கலம் தவமாதல் விளங்கத் ''தவமான கலன்'' எனவும், அக்கலத்தை இனிது செலுத்துவது திருவருள் என்பார், ''அருள் மீகாமனல் அலது'' எனவும் இயம்புகின்ருர். திருவருள் ஞானமின்றி உயிரறிவாகிய பசுபாச ஞானங்கள் துணையாகாமை பற்றி, ''தமியேன்நடத்த வருமோ தானு நடக்குமோ என்செய்கேன்'' என எண்ணி வருந்துகின்ருர். திருவடி ஞானமே திருவருள் ஞானமாவது

கொண்டு "நின் திருச் சரணமே சரணம் அருள்வாய்" என வேண்டு கின்றார். "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை யற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்" (ஞானசம்) எனச் சேக்கிழாரடிகள் தெரிவிப்பது காண்க. கேவல சகலம் கடந்த சுத்தாவத்தை யெய்தியவர் முத்தான்மாக்களாதலின், அவரோடு உறவாடுவது தோன்ற, "உவமான மற்ற பரசிவமான சுத்தவெளி யுறவான முத்தர் உறவே" என உரைக்கின்றார். சிவத்துக்கு ஒப்பதும் உயர்ந்ததும் இல்லாமையினால், "உவமான மற்ற பரசிவம்" என்றும், சுத்த மாயையிலுள்ள சிவதத்துவத்துக்கு மேலே மாயா மண்டலத்துக்கு அப்புறத்தே மேலேயுள்ள சிவத்தைப் "பரசிவம்" என்றும், அது திகழும் நிலை "பரசிவ வெளி" யென்றும், சுத்தாவத்தை யுறும் தூய ஆன்மாக்கட் குரியதாகலின், "சுத்த வெளியுறவான முத்தர் உறவே" என்றும் விளக்குகின்றார். அருவம் உருவம் அருவுருவமாகும் அருட்சத்தி ஞானமேயாதலால், "உருவான அருவான ஞானமே" எனவும், அதனின் மிக்க ஞான மின்மை பற்றி "ஒருவான ஞானமே" எனவும் இசைக்கின்றார். வான் - பெருமை. உயிர்க்குயிராய் உணர்வு வடிவில் ஒளி நல்குவதால் திருவருட் சத்தியாகிய உமையம்மையை, "உயிரான ஒளியி னுணர்வே" எனக் கூறுகின்றார். "அவமானம், குற்ற வகையுள் ஒன்றான மானம் கீழ்மை எய்துவித்தலால், அதனை அவமானம்" எனக் குறிக்கின்றார்.

இதனால், சுத்தாவத்தை யுற்றுச் சிவகதி பெறுதற்கு அருள் நல்குக என உமாதேவியை வேண்டியவாறும். (5)

2596. சூரிட்ட நடையில்என் போரிட்ட மனதைநான்
சொல்லிட்ட முடன்அ ணைத்துத்
துன்றிட்ட மோனம்எனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி என்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மலர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்
கறங்கெ னச்சுழல் கின்றதே
தாரிட்ட நீஅருள் சீரிட்டி டாய்எனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
தமிய னேன்என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை: ஆத்திமாலை யணிந்த சடையையுடையவரும் தில்லைப் பதியில் எழுந்தருளும் அண்ணலுமாகிய கூத்தப் பெருமான் மகிழும் மரகத மணியே, அண்டங்களனைத்தையும் அவற்றிலுள்ள சராசரங்களை

யும் படைத்தளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமையம்மையே, பேயின் இயல்பு கொண்டு என்னோடு போர் தொடுத்து அலைக்கும் மனத்தை இன்சொற்களால் விருப்புடன் தழுவி நன்மை பொருந்திய மோனம் எனப்படும் நல்ல அமுதை யுண்டு சும்மா இரு என்று சொன்னால், கேளாமல் இருள்பட்டுக் கணநேரமும் நில்லாமல் பொல்லாததாய் உலகியலிற் காற்றாடி போலச் சுழல்கிறது; இதற்கு முன் யாவர் கொடுத்த சாபத்தால் விளைந்ததோ, அறியேன்; கொன்றை மாலையை மார்பிலணிந்த நினது திருவருளாகிய சிறப்பை நல்காயாயின், அம் மனம் கீழான பிறவிகளில் தன்னை வீழ்த்திக் கொள்வதன்றி என்னையும் வீழ்த்து வருத்துமாதலால் அருட் டுணையின்றித் தனித்த யான் யாது செய்வேன். எ.று.

ஆர் - ஆத்திமலர். ஆரும் கொன்றையும் சிவனுக்கு உகந்த மலர் வகையாகும். சூர் - பேய். சூர் - நடை, ஈண்டுப் பேய்த் தன்மை மேற்று. போரிட்ட மனது - போராடுகின்ற மனம். மனசென்னும் வடசொல் மனதென வந்தது. இட்டம் - இஷ்டம். துன்றுதல் - செறிதல். நன்றிட்ட அமுது - நல்ல அமுது. அமுதுண்ட வழி அமைதி தோன்றுவது பற்றி, "நன்றிட்ட அமுதுண்டு சும்மா இருத்தி" என வுரைக்கின்றார். கார், இருள் - மடமை. சும்மா இரு என்றால் இராமல் அலைந்தவண்ணமிருப்பதால், "காரிட்டு" எனவும்; "ஓர் கணமும் நில்லாது கறங்கெனச் சுழல்கின்றதே" எனவும் கூறுகின்றார். தன்னியல் பில் இனிதிருக்க வேண்டிய மனம் சுழன்றுழல்வதற்குக் காரணம் அறியாமையால், "இதற்குமுன் யார் இட்ட சாபமோ" என வுரைக்கின்றார். ஆற்றாமை மிகுதி பற்றி "அம்மம்ம" என்கிறார். இமைப்போதும் நிலையின்றி அலைவதும் தீங்கு வருவிப்பதும் நோக்கி, "பொல்லாது" என மொழிகின்றார். கறங்கு - காற்றாடி. தார் - அடையாள மாலை; சிவனுக்குக் கொன்றை மாலை - அடையாளம். திருவருள் எல்லாச் சிறப்புகட்கும் முதலாதலால் "அருட்சீர்" எனக் குறிக்கின்றார். திருவருள் அறிவு விளக்கமும் நற்செயற் பண்பும் நல்கி உயர் பிறப் பெய்துவித்த லால், அருட்சீர் இட்டிடாயெனில் தாழ் பிறவி தன்னில் வீழ்த்தும்" என விளம்புகிறார். திருவருள் நிறைவும் சாந்தமும் இல்லாவிடில் தீவினைகள் தோன்றிச் செய்விக்கும் மனத்தையும் அதனையுடைய என்னையும் கீழ்மைப் பிறவிகளில் தள்ளி வருத்தும் என்பாராய்; "அதுதான் தன்னை வீழ்த்துவதன்றி என்னையும் வீழ்த்தும்" எனச் சொல்லுகின்றார். தமித்தல் - திருவருள் துணையின்றித் தனித்திருத்தல். திருவருள் துணையின்றி எதனையும் செய்ய மாட்டாமை பற்றி "என் செய்குவேன்" என இயம்புகின்றார்.

இதனால், நிலையின்றிக் கறங்கெனச் சுழலும் மனத்தின் கொடுமையைக் கூறித் திருவருளை வேண்டியவாறும். (6)

2597. மாயைஎனும் இரவில்என் மனையகத் தேவிடய
வாதனைஎ னுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையை எழுப்பிஅவ னைத்தமது
வசமாக உளவு கண்டு

மேயமதி எனும்ஒரு விளக்கினை அவித்தெனது
மெய்ந்நிலைச் சாளிகை எலாம்
வேறுற உடைத்துள்ள பொருள்எலாம் கொள்ளைகொள
மிகநடுக் குற்று நினையே
நேயம்உற ஓவாது கூவுகின் றேன்சற்றும்
நின்செவிக் கேற இலையோ
நீதிஇலை யோதரும நெறியும்இலை யோஅருளின்
நிறைவும்இலை யோஎன் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை : நுண்பொருளுரைக்கும் வேத நூல்களின் முடிவில் விளங்குகின்ற தில்லைப் பதியில் எழுந்தருளும் அண்ணலாகிய சிவபெருமான் கூடி மகிழும் மரகத மணியே, அண்டங்கள் அனைத்தையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் படைத்தளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமா தேவியே, உலக மாயை எனப்படும் இரவுப்போதில் என் மனையாகிய உள்ளத்திற் புகுந்து, விடய வாதனை யென்ற கள்வர்கள் என் மனமாகிய அடிமையை எழுப்பிப் பற்றித் தமது வசப்படுத்தி என்னுடைய உணர்வெனும் பொற்பையை யடைதற்குரிய உளவறிந்து; என்பாற் பொருந்திய இயற்கையறிவாகிய விளக்கை அவித்துவிட்டு, மெய்ம்மை நிலைபெற்றுள்ள ஞானமாகிய பொற்றிரனை அஃது இருந்த பை வேருக வுடைத்தெறிந்து கொள்ளை கொண்டு செல்ல, அது கண்டு யான் மிகவும் அஞ்சி நடுக்கமுற்று, நின்னையே அன்புடன் நினைந்து இடையருது கூவி முறையிடுகின்றேன்; நின் செவிக்கு அது சிறிதும் ஏறவில்லையோ? கேளாமை உனக்கு நீதியாகுமோ? அது தரும நெறியன்றோ? நின்பால் அருள் நிறைவில்லையோ? நீ செவியேற் றருளாயாயின், யான் என்ன செய்வேன். எ.று.

வறுமை, பிணி, மூப்பு, நிலையாமை, சாக்காடு முதலிய தீமைகளையுடைய தாயினும் தன்கண் வாழ்வாரைத் தன்னையே விரும்பி வாழ்தல் வேண்டுமென மயக்கும் இயல்பிற்றுகலின், உலகியலை "மாயையெனும் இரவு" என்றும், உயிர் இருந்து வாழுமிடமாதலால் உடம்பை "மனை" என்றும் கூறுகின்றார். விடயவாதனை - சுவை ஒளி முதலிய ஐம்புலன்கள் மேற் செல்லும் ஆசை. உயிர்க்கு வேண்டும் விருப்பு வெறுப்புக்குரிய நினைவுகளை எழுப்பிப் பிற கரணங்களை இயக்கும் கருவியாதல்பற்றி, "மனத்தை அடிமை" என வுரைக்கின்றார். ஆசை வகைகள் மனத்தைத் தம் வசமாகப் பொய்யின்பம் தந்து மயக்கிக் கோடலால், "தமது வசமாக வுளவு கண்டு" எனவும், உயிர்ப் பண்பாகிய இயற்கை யறிவைக் கெடுத்துச் செயலறுவித்தலின், "மேயமதி யெனும் விளக்கினை யவித்து" எனவும் இயம்புகிறார். மெய்ந்நிலைச் சாளிகை - மெய்யுணர்வு நிறைந்த பொற் பேழை; பையுமாம். பொற் பேழையை யுடைத்து ஞானப் பொருள்களாகிய பொற்காசுகளை விடயவாதனைக் கள்வர்கள் மதை அடிமைப் படுத்திக் கவர்ந்து கொண்டனரென்பார், "மெய்ந்நிலைச்

சாளிகை யெலாம் உடைத்து உள்ள பொருளெலாம் கொள்ளை கொள'' என வுரைக்கின்றார். பொருளை யிழந்தவன் நல்லோரைக் கூவி யழைத்துத் தனது இழப்பைச் சொல்லிப் புலம்புவது போல, நின்பாற் கூவிச் சொல்லிப் புலம்புகிறேன் என்பாராய், "மிக நடுக்குற்று நினையே நேயமுற ஓவாது கூவுகின்றேன்'' எனச் சொல்லி வருந்துகின்றார். நேயமுற என்பதற்கு நினக்கு என்பால் அன்பும் இரக்கமும் உண்டாக எனவும், ஓவாது கூவுகின்றேன் என்பதற்குப் பன்முறையும் இடை விடாது நின் திருவுள்ளத்தே அருள் சுரந்து பெருகுதல் அருள் வேண்டிப் புலம்புகின்றேன் எனவும் இசைக்கின்றார். அருளொளி விரைந்து தோன்றுமை புலப்பட, "சற்றும் நின் செவிக்கேறவிலையோ'' என்றும், அழுது அரற்றுவார்க்கு விரைந்து அருள் செய்தல் நீதி எனற்கு "நீதி யிலையோ'' என்றும்; உலகியல் அறநெறியும் அதுவாம் என்பார், "தரும நெறியும் இலையோ'' என்றும், பிறர்க்குதவுவார் தம்பால் பொருள் நிறைா, வேண்டுதல் போல, அருள் நிறைவு நோக்குகின்றாயோ என்பவர் "அருளின் நிறைவும் இலையோ'' என்றும் உரைக்கின்றார். முடிவில் தமது கையறவு புலப்பட, "என்செய்கேன்'' என்கின்றார்.

இதனால், விடயவாதனைகளால் ஞானமிழந்து கையறவு படுதல் தெரிவித்தவாறும். (7)

2598. வெவ்வினைக் கீடான காயம்இது மாயம்என
வேத முதல்ஆ கமம்எலாம்
மிகுபறைஅ றைந்தும்இது வெயில் மஞ்சள் நிறம்எனும்
விவேகர் சொற்கேட் டறிந்தும்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை ஒத்தவர்
கணத்திடை இறத்தல் பலகால்
கண்ணுறக் கண்டும்இப் புலைஉடலின் மானம்ஓர்
கடுஅளவும் விடுவ தறியேன்
எவவம்உறு சிறியனேன் ஏழைமதி என்னமதி
இன்னமதி என்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டுநான் எந்தவகை அழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம்அ கற்றிஅருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை : அவ்வியமாகிய குற்றம் போக்கி யருளும் *தில்லைப் பதியில்* அருளும் அண்ணலாகிய கூத்தப் பெருமான் கூடி மகிழும் மரகத மணியே, அண்டங்களனைத்தையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் படைத்தளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமையம்மையே, வெவ்வினைப் பயனுய்த் தோன்றும் இவ்வுடம்பு மாய்ந்து கெடுவதென வேதங்களும் ஆகமங்களும் பிற நூல்களுமெல்லாம் மிகவும் பறை யறைவது போல எடுத்து விளம்பினும் இவ்வுடல் வாழ்க்கை மாலை

மஞ்சள் வெயில் போல்வது எனக் கூறும் மெய்யறிஞர் சொற்களைக் கேட்டறிந்தும் முழங்குதலையுடைய கடல் சூழ்ந்த வுலகில் வைரமலை போன்ற வலியவர்களும் கணப் பொழுதில் இறந்து போவதைப் பலகாறும் கண்டும் புலால் நாறும் இவ்வுடம்பின் மேல் உள்ள பற்று கடுகளவும் குறையாமலுள்ளேன்; குற்றத்தால் சிறுமை புடையவனாகிய எனது சிற்றறிவு எத்தகையதாம்? இத்தன்மையது என என்னால் அறியமுடிய வில்லை. இந்தக் குறையறிவைக் கொண்டு நிலைத்த இன்பநிலையை எவ்வகையிற் கண்டு மகிழ்வேன். எ.று.

அவ்வியம் - பொறாமை; பொறாமைச் செயலுடையவர் இம்மையிற் செல்வமிழந்து வறுமையுற்று மறுமையில் தீவாய் நரகம் எய்துவரெனச் சான்றோர் கூறுவர்; எனவே, அவ்விய மகன்றா லன்றி அருள் வாழ்வு பெறலரிதாகலின், "அவ்விய மகற்றி யருள் அண்ணல்" என்று கூறுகின்றார். வினையின் வந்தது வினைக்கு வினையாவது, புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது மக்கள் யாக்கை" (மணிமே) என்று பெரியோர் கூறுவர். அதனால், வினைக் கீடான காயம்" என்றும், இவ்வுடம்பு மாய்ந்து கெடும் இயல்புடையதாதலால், "இது மாயம்" என்றும், இக்கருத்து வேதாகமங்கள் முதல் எல்லா நூற்களாலும் உரைக்கப்படுவது பற்றி, "வேத முதல் ஆகமமெலாம் மிகுபறை யறைந்தும்" என்றும் இயம்புகின்றார். அந்தி மாலை வெயில் மஞ்சள் நிறமுற்றுச் சிறிது போதில் இரவிருளால் விழுங்கப்படுவ தாகலின் யாக்கையின் நிலையாமைக்கு அதனை உவமம் கூறுகின்றார். விவேகர் மெய்யுணர்ந்தோர். கவ்வை - முழக்கம். வயிரமலை - மிக்க வன்மை யுடைய மலை. புலால் நாறும் இயல்பிற்றாதலால் உடம்பைப் புலையுடல் என்று கூறுகின்றார். உடலின் மானம் - உடல் மேலுள்ள ஆசை. எவ்வமுறு சிறியனேன் - குற்றமுடைமையால் சிறுமை யுடையனாகிய யான். ஏழைமதி - குறைபறிவு. என்னமதி - எத்தகைய அறிவு. ஞானத்தால் வீடு பேறு எய்துவது இயல்பாதலால் - "எந்தவகை யழியாத இன்பநிலை கண்டு மகிழ்வேன்" என வருந்துகின்றார்.

இதனால் தமது அறிவின் குறைபாடு கூறி, இன்பநிலை பெறுந் திறம் இல்லாமையெண்ணி வருந்தியவாறும். (8)

2599. ஒளிமருவும் உனதுதிரு அருள்அணுத் துணையேனும்
உற்றிடில் சிறுது ரும்பும்
உலகம் படைத்தல்முதல் முத்தொழில் இயற்றும்என
உயர்மறைகள் ஓர்அ னந்தம்
தெளிவுறமு ழக்கஅது கேட்டுநின் திருவடித்
தியானம் இல்லா மல்அவமே
சிறுதெய்வ நெறிசெல்லும் மானிடப் பேய்கள்பால்
சேராமை எற்க ருளுவாய்
களிமருவும் இமயவரை அரையன்மகள் எனவரு
கருணைதரு கலாப மயிலே
கருதும்அடி யவர்இதய கமலமலர் மிசைஅருட்
கலைகி ளரவளர் அன்னமே

அளிநறைகொள் இதழிவனே தில்லேஅம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உரை : இன்பம் பொருந்திய இமயமலைக் கரசன் மகளாய் எழுந்தருளும் உமையம்மையாகிய அருள் வழங்கும் தோகை மயில் போன்றவளே, நினைந்து போற்றும் அடியார்களின் மனமாகிய தாமரை மலரின் கண், உலகில் அருட் கலை சிறந்தோங்க வீற்றிருந்தருளும் அன்னமே, வண்டினம் படிந்து தேனுண்ணும் கொன்றை மாலையணியும் தில்லைப்பதியில் உள்ள, அண்ணலாகிய சிவனோடிருந்தருளும் மரகத மணி போல்பவளே, அண்டங்களனைத்தையும் அவற்றிலுள்ள சராசரங்களனைத்தையும் படைத்தளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமாதேவியே, ஒளி பொருந்திய நினது திருவருளின் ஓர் அணுவளவு தோயினும் சிறு துரும்பும் உலகங்களைப் படைத்தல் முதலிய முத்தொழில்களையும் செய்ய வல்லதாம் என உயர்ந்த வேதங்கள் அனைத்தும் யாவரும் தெளியும்படி, எடுத்துரைப்பதால் அதனைக் கேட்டும் நினது திருவடியை எண்ணுமல் வீணுகச் சிறு தெய்வங்களின் சிறு நெறிக்கண் நிற்கும் மக்களினத்துப் பேய்களொடு கூடாமல் விலகியொழுகுமாறு எனக்கு அருள் செய்வாயாக. எ.று.

களி - இன்பக் களிப்பு. இன்ப வடிவினளான உமாதேவியிருப்பதால் எவ்வுயிரும் இன்புறும் தூய விடமாதல் கண்டே, "களி மருவும் இமய வரை அரையன் மகள்'' என்று புகழ்கின்ருர். மயில்கட்கு மலை உறைவிடமாதலால், இமயமலையிடத்து வாழும் "கலாப மயிலே'' எனவும், ஏனை மயில்களின் வேறுபடுத்தற்குக் "கருணைதரு கலாப மயிலே'' எனவும் உரைக்கின்ருர். கலாபம் - தோகை. உமையம்மை திருவருட் சத்தியாதலால் அடியவர்கள் அவளைத் தம் மனத்தின்கண் வைத்துத் தியானிக்கும் இயல்புடையராதலால், "கருதும் அடியவர் இதய கமல மலர் மிசை வளர் அன்னமே'' என்றும், அன்னப் புள் தாமரை மலரில் இருப்பது என்பவாகலின் "இதய கமல மலர் மிசை வளர் அன்னமே'' என்றும், அங்ஙனம் எழுந்தருளுவதால் விளையும் பயன் இது வென்பார், "அருட் கலை கிளர வளரன்னமே'' என்றும் இயம்புகின்ருர். அளி - நறை, தேன். இதழி - கொன்றை மலர். இறைவன் திருவருள் ஞானவொளிமயம் எனச் சான்றோர் கூறுவது கொண்டு, "ஒளி மருவும் உனது திருவருள்'' என வுரைக்கின்ருர். திருவருளாவது பெறலரும் பேரருஞ் சிவசத்தியாகலின், அதன் ஆற்றலை யுணர்த்தற்கு "அருள் அணுத் துணையேனும் உற்றிடில் சிறு துரும்பும் உலகம் படைத்தல் முதல் முத்தொழில் இயற்றும்'' என்று கூறுகின்ருர். படைத்தல், காத்தல் அழித்தலாகிய முத்தொழிலையும் மும்மூர்த்திகளாய் நின்று செய்வதாகலின், சிவத்தின் சத்தி "ஓர் அணுவளவு பதியின்'' எனவும், பெறலருமை தோன்ற, "உற்றிடில்'' எனவும், செயலற்ற அசத்தாகிய சிறு துரும்பும் காந்த சத்தி பெற்ற சிறு இரும்புத் துண்டும் பிற இரும்புத் துகளைத் தன்பால் ஈர்த்துக் கோடல் போலப் பெருஞ் செயல் புரிய வல்லதாம் என்பார், சிறு துரும்பும் உலகம் படைத்தல் முதல் முத்தொழில் வல்லதாம் என்பாராய், "சிறு துரும்பும் உலகம் படைத்தல் முதல் முத்தொழில் இயற்றும்

எனவும் கூறுகின்றார். முற்றும்மை தொக்கது. சிறு துரும்பும் இத்துணைப் பேராற்றல்களைப் பெறும் என்பதனால், மக்களுயிர் பெறக் கடவ ஆற்றல் அளப்பரிதாம் என்பது குறிப்பு. வேதங்கள் நான்கென வகுக்கப்படுமுன் எண்ணிறந்தனவாய் இருந்தன என்பவாகலின், உயர்மறைகள் ஓர் அனந்தம்'' என்றும், அவையனைத்தும் திருவருளின் ஆற்றல் நலத்தை எடுத்தோதுகின்றன என்பாராய், ''தெளிவுற முழக்க'' என்றும், அது கேட்டும் மனம் தெளிந்திலர் என்றற்குக் ''கேட்டும்'' என்றும் இயம்புகிறார். உம்மை - எதிர்மறைப் பொருட்டு. தெளிவின்மையால் சிறு தெய்வங்களை நினைந்தொழுகும் கீழ்மக்களை இகழ்ந்து, ''அவமே சிறு தெய்வ நெறி செல்லும் மானிடப் பேய்கள்'' என்று பழிக்கின்றார். மேற் கொள்ளத் தக்கது பரசிவானந்த உமையம்மை வழிபாடு என்றற்கு ''நின் திருவடித் தியானம்'' எனக் கூறுகின்றார். சிறு தெய்வ வழிபாடு கூடாதென்று விண்ணப்பிக்கின்றாராகலின், ''சிறு தெய்வ நெறி சேராமை ஏற்கருளுவாய்'' எனவுரைக்கின்றார்.

இதனால் சிவசத்தியை வழிபடும் பெருநெறியன்றிச் சிறு தெய்வ வழிபாட்டுச் சிறு நெறி தமக்கு எய்தலாகாது என வேண்டியவாறும். (9)

2600. நீறணிந் தொளிர்அக்க மணிதரித் துயர்சைவ
நெறிநின்று னக்கு ரியஓர்
நிமலமுறும் ஐந்தெழுத் துள்நிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து
வீறணிந் தென்றும்ஒரு தன்மைபெறு சிவஞான
வித்தகர்ப தம்பர வும்ஓர்
மெய்ச்செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை யேன்இது
விரைந்தருள வேண்டும் அமுதே
பேறணிந் தயன்மாலும் இந்திரனும் அறிவரிய
பெருமையை அணிந்த அமுதே
பிரசமலர் மகள்கலைசொல் மகள்விசய மகள்முதல்
பெண்கள்சிரம் மேவும் மணியே
ஆறணிந் திடுசடையர் தில்லைஅம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்டமும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வாநந்த வல்லி உமையே.

உரை : அமுத மயமானவளே, நற்பேறுகள் பலவுமுடைய பிரமனும் திருமாலும் இந்திரனும் அளந்தறிய மாட்டாத பெருமையையுடைய அமுதாம்பிகையே, தாமரை மலரில் எழுந்தருளும் திருமகளும், கலை பலவும் சொல்கின்ற கலைமகளும், வெற்றித் திருமகளும் பிறரும் தெய்வ மகளிர்க் கெல்லாம் முடிமணியானவளே, கங்கையாற்றைத் தாங்கிய சடையையுடைய பெருமானும் தில்லைப் பதியில் எழுந்தருள் பவருமாகிய சிவபிரான் மகிழும் மரகத மணி போல்பவளே, அண்டங்கள் அனைத்தையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் படைத்தளிக்கும் பரசிவானந்த வல்லியாகிய உமாதேவியே, திருநீறணிந்து அக்கமணி

பூண்டு உயர்வுடைய சைவ நெறிக்கண் நின்று, நினக்குரிய ஒப்பற்ற நின்மல நிலையை நல்கும் திருவைந் தெழுத்தை நினைவின்கண் நிலைபெறக் கொண்டு, நினது திருவடிக்குப் பூசை செய்து, தனிச் சிறப்பெய்தி, என்றும் ஒரு தன்மை பெற்ற சிவஞானச் செல்வர்களின் திருவடிகளைப் பூசிக்கும் மெய்ம்மைச் செல்வ வாழ்வைப் பெறும் விருப்ப முடையேனு தலின், அதனை எனக்கு விரைந்தருள வேண்டுகிறேன். எ.று.

சைவ மந்திர மாதலால், சிவாய நம என்று அணியும் திருநீற்றை "நீறணிந்து" என எடுத்துரைக்கின்றார். சிவ வேடமாய்ச் சிவத்தை நினைப்பிக்கும் சிறப்புடைமை பற்றி, "ஒளிர் அக்கமணி தரித்து" என்று கூறுகின்றார். எல்லாச் சமய நன்பொருள்களைத் தன்கண் கொண்டிருப்பது சைவ நெறியாகலின், "உயர் சைவ நெறி" என இயம்புகின்றார். "ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள் ஒன்றோ டொன் றெவ்வாமல் உள பலவும் இவற்றுள், யாது சமயம் பொருள் நூல் யாதிங் கென்னில் இது வாகும் அதுவல்ல தெனும் பிணக்கதின்றி நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண நின்றது யாதொரு சமயம் அது சமயம் பொருணூல் ஆதலினால் இவையெல்லாம் அருமறை யாகமத்தே அடங்கியிடும் அவை யிரண்டும் அரனடிக் கீழ் அடங்கும்" (சிவ.சித்தி. 8 : 13) என அருணந்தி சிவனார் கூறுவது காண்க. சிந்திப்பார் சிந்தையைத் தூய்மை செய்வ தென்பதனால் "நிமல முறும் ஐந்தெழுத்து" என்றும், நெஞ்சின்கண் நிலையாக நினைக்கப்படும் நீர்மையாதாகலின் "நிலையுறக் கொண்டு" என்றும் இயம்புகின்றார். சிவபூசை செய்வார்க்குரிய நியமங் களாதலின், நீறணிதல் முதலியவற்றை முறையாக மொழிகின்றார். சிவ பூசையால் மனம் பழுத்த பெருமக்கள் மிக்க சிறப்பும் தூய ஞான நலமும் எய்தி மேன்மை யுறுவது கண்டு, "என்றும் ஒருதன்மை பெறு சிவஞான வித்தகர்" எனச் சிறப்பிக்கின்றார். சிவஞான வித்தகர் சிவமெனவே கருதி வழிபடப் பெறும் செம்மை யுடையராதலால், அவரது வழிபாடு திருவருட் செல்வம் தருவது மெய்ம்மையாதலால் "பதம் பரவுமோர் மெய்ச் செல்வ வாழ்க்கையில் விருப்ப முடையேன்" எனவும், முக்குண வயத் தால் அவ்விருப்பம் மாறுமைப் பொருட்டு "விரைந்தருள வேண்டும்" எனவும் எடுத்துரைக்கின்றார். நிலைத்த இன்பநிலை பெற்றவர்களாதலால் திருமால் முதலிய தேவர்களைப் "பேறணிந்தயன் மாலும் இந்திரனும்" என்றும், அவர்கள் மக்களறிவினும் பெரிது அறிவுடையவராயினும், அதனால் அளத்தற் கரிய பெருமை உமாதேவிக் குண்மை தோன்ற "அறிவரிய பெருமையை அணிந்த அமுதே" என்றும் புகழ்கின்றார். பிரசம் - தேன். தேன் மிகவுடைமை பற்றித் தாமரை, "பிரச மலர்" எனப்படுகிறது. கலை பலவற்றையும் ஓதியும் ஓதுவித்தும் உயர்ந் தோங்கும் தேவியாதலால், கலைமகளைக் "கலைசொல் மகள்" எனப் போற்று கின்றார். விசய மகள் - வெற்றித் திருமகள். சிரம் மேவும் மணி, முடிமேற் கொண்டணியும் மணி; சிரோமணி என்பதாம். ஆறணிந்திடு சடையர் - கங்கை யாற்றைச் சடை முடியில் தாங்கும் சிவமூர்த்தி.

இதன்கண் சிவபூசை செய்யும் வித்தகர்களின் திருவடியை வணங்கும் விருப்பம் நிறைவுற வேண்டு மென விண்ணப்பித்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

4. ஆனந்த நடனப் பதிகம்

தில்லையம்பலத்தில் கூத்தப் பெருமான் புரியும் திருநடனத்தை, நினைந்துப் பன்னிரண்டு சீர் கொண்ட விருத்தப் பாக்களால் பாடிப் பரவும் பதிகமாதலால் இஃது ஆனந்த நடனப் பதிகம் எனப்படுகிறது. உலகியல் நடனக் காட்சி நடம் புரிவோர்க்கும் அதனைக் காண்போர்க்கும் இன்பம் செய்வது; தில்லைக் கூத்தன் இன்ப வுருவினனாதலால், அவனது திருநடனம் கண்டு மகிழும் ஆன்மாக்கட்கே இன்பம் செய்வதாகும். "அகளத்தில் ஆனந்தத் தானந்தி" எனத் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் பரசிவத்தின் இன்ப நிலையைக் குறிப்பர். அகளத்து ஆனந்தம் சகளத்தும் நீங்காமையின், கூத்தப் பிரானாகச் சகளத் திருமேனி கொண்டு சிவபெருமான் தில்லையிலாடும் திருக்கூத்து இன்ப வுருவும் காண்பார்க்கு இன்பப் பேறு எய்துவிக்கும் அருணிலை யுமுடைய தாம் ஆவது பற்றி, திருக்கூத்தாடும் பெருமானை "ஆனந்த நடன மணியே" என வள்ளற் பெருமான் பாராட்டிப் போற்றுகின்றார்.

இப்பதிகத்தின்கண், வேதங்களாலும் உணரப்படாத சிவத்தின் அருமையும், பல்வகையாகப் புனைந்து பரவுதலும், சிவஞான சிவபோகங் களைப் பெற விழைதலும், திருவடிக் காட்சி ஞானமும் வீடு பேறும் தரு மென்பதும், சுத்தான்மாக்கள் பெறும் சிவ போகானுபவமும், சிவனது ஆட்டத்தில் அணிந்த மாலை முதல் சிவ குமரர் ஈறாக ஆடும் திறமும் திருவடிக் குரியனாக்குமாறு வேண்டுதலும், வேதாந்தம் கூறும் பரமார்த் தத்தை விளங்குவிக்க வேண்டுதலும் பரசிவ நிலை முதல் சிவமூர்த்தங் காறும் எடுத்தோதலும் பிறவும் காணப்படுகின்றன.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2601. பரசிவா னந்தபரி பூரண சதானந்த
பாவனா தீதமுக்த
பரமகை வலயசை தன்யநிஷ் களபூத
பௌதிகா தார யுக்த
சர்வமங் களசச்சி தானந்த சௌபாக்ய
சாம்பவ விநாசரகித
சாஸ்வத புராதர நிராதர அபேதவா
சாமகோ சரநிரூபா
துருவகரு ணாகர நிரந்தர துரந்தர
சுகோதய பதித்வநிமல
சுத்தநித் தியபரோ க்ஷாநுபவ அபரோக்ஷ
சோமசே கரசொரூபா

அரஹர சிவாயநம என்றுமறை ஓலமிட்
டணுவளவும் அறிகிலாத
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : பரசிவமாகிய இன்பமே; குறைவற நிறைந்த நிலையான இன்பமே; பாவனைக்கு அப்பாலாகிய முத்தனே, மேலாய்க் கைவரப் பெறும் ஞானப் பொருளே; நிட்கள வடிவுடையவனே; பூதங்களையும் அவற்றுலான பொருள்களையுமுறைப்பட இயக்குபவனே; பொருத்தமான எல்லா வகையான மங்கள குண வடிவினை யுடையவனே; சத்தும் சித்தும் ஆனந்தமுமாகிய உருவுடையவனே; நற்செல்வ முடைய சிவசாம்ப மூர்த்தியே; கேடில்லாதவனே; நிலைத்த தேகிகட்கு அன்பனே; தனக்கோர் ஆதார மில்லாதவனே; பொருள்களில் வேறறக் கலந்து வாக்கிற் கெட்டாமலிருப்பவனே; ஓருருவு மில்லாதவனே; நிலையான கருணைக்கு இடமானவனே; என்றும் உள்ளவனே; எப்பொருளையும் தாங்கு பவனே; இன்பம் அருளும் தலைமையையுடைய நின்மலனே; தூய நித்தியமான காண்பதற்கரிய அனுபவப் பொருளே; கீழாய் யாவரும் அனுபவிக்கத்தக்க ஞான வடிவனே; சந்திரனை முடியிற் கொண்ட திருமேனியைக் கொண்டவனே; அரனே, சிவாய நம என்றெல்லாம் வேதங்கள் முறையிட்டோதியும் அணுத்துணையும் தன்மை சிறிதும் அறிய மாட்டாத அற்புதனே, சிதாகாச மெனப்படும் ஞானத் திருவம்பலத்தில் இன்பத் திருக்கூத்தாடும் மாணிக்க மணி போல்பவனே, வணக்கம். எ. று.

தத்துவத் தொகுதிகட்கு அப்பாலதாய் இன்ப மயமாய் இலங்குவது பற்றி மேலான சிவபரம் பொருளை, "பரசிவானந்த" எனவும், சிவானந்தம் குறைவற நிறைந்திருப்பது விளங்கப் "பரிபூரண சதானந்தம்" எனவும் வேதங்கள் ஓதுகின்றன. சதானந்தம் - நிலையின்றிக் கெடும் இன்பம் போலாது எய்தியது என்றும் குன்றுத இயல்பினதாகலின், "சதானந்தம்" எனச் சிறப்பிக்கின்றன. பாவனு தீதம் - பாவனை யெல்லைக்கு அப்பாற் பட்டது. பாவனை - மனத்தால் எண்ணுதல். முத்தன் - முத்திக்குரிய ஞானவின்ப வுருவாய் முத்திப் பேற்றுக்குரிய ஆன்மாக்கட்கு அதனை நல்குபவன். "முத்தா முத்தி தரவல்ல முகிழ் மென்முலையா ளுமைபங்கா" (ஆலங்) என நம்பியாரூரரும், "முத்தனே முதல்வா" (அருட்) என மணிவாசகரும் ஓதுவது காண்க; இதனை வடமொழியில் முக்தி யென்றலின், முத்தி முதல்வனை "முக்த" என்றலும் உண்டு. கைவரப் பெறுவது கைவல்யம் என வழங்கும். பெறற்கு அரிதாய பொருளெனற்குப் "பரம கைவல்யம்" எனவும், அறிவுருவாயதனை வடமொழி சைதன்யம் என்றலால், சிவனை, "சைதன்ய" எனவும் கூறுகிருர். நிட்களம் - தேக மில்லாதது; உருவில்லாத தென்றுமாம். நிலம் நீர் என வழங்கும் ஐந்தும் பூதம் எனப்படுதலால், அவற்ருல் ஆகியும் அவற்றின் தொடர்புமுடைய அனைத்தையும் "பௌதிகம்" என்பர். பூதங்கட்கும் பௌதிகங்கட்கும் ஆதாரமாய் முறைப்படி இயங்கச் செய்யும் தலைவனுதலால் "பூதபௌதி காதார" எனப் புகழ்கின்றது வேதம். இங்கு வேத மென்பது பல தெய்வக் கோட்பாடுடைய இருக்கு முதலிய வேதங்களன்று; ஞான நூல் என்று

பொருள் கொள்ளல் வேண்டும். யுக்தம் - பொருத்தமானது; அறிவுக்கு ஒப்பது. மணவாழ்வுக்குரிய மாண்புகள் பலவும் மங்கலமாதல் உலகுயிர் வாழ்க்கைக் குரிய ஞான நலமனைத்தும் திரண்ட உருவாய்ச் சிவம் அமைந் திருப்பதுபற்றிச் சான்றோர் "யுக்த சர்வ மங்கள" என்று உரைக்கின்றனர். தோற்றக் கேடின்றிச் சத்தாயும், மறப்பு மறைப்பற்ற அறிவாதலால் சித்தாயும், குன்றலும் பொன்றலுமில்லாத இன்ப வுருவாதலால் ஆனந்த மாயும் இருப்பது பற்றி, "சச்சிதானந்த" என வேதம் பரவுகிறது. சுபசௌக்கியம் - சௌபாக்கியம். சிவசம்பந்தமாகியது சாம்பவம். சிவ சம்பந்தமான மூர்த்தமனைத்தும் அடங்க, "சாம்பவ" எனக் கூறுகிறது. விநாசம் - பற்றறக் கெடுதல். ஒரு காலத்தும் ஒரு சிறிதும் அழிதலில்லாத வனுதலால், சிவனை, "விநாசரகித" எனவுரைக்கின்ருர். ரகிதன் - இல்லாதவன். புரம் - தேகம். அருவம் உருவம் அருவுருவம் என்ற மூவகையையும் என்றும் உடையனுதலால் "சாஸ்வத புராதர" என வேதம் புகல்கின்றது. தன்னை ஒழிந்தவை யனைத்துக்கும் தான் ஆதாரமாவ தன்றி தனக்கு ஓர் ஆதாரமு மில்லாதவன் என்பது கொண்டு "நிராதர" எனவும், தன்னின் வேருய உலகுயிர்களோடு ஒன்ருயும் உடனுயும் கலந்து நிற்பதால், "அபேத" எனவும் வேதங்கள் போற்று கின்றன. வாசா மகோ சரம் - சொல்லும் எல்லைக்கு அப்பாற் பட்டது. தனக்கெனத் தனி யுருவம் இல்லாமை விளங்க, "நிருபா" எனக் குறிக் கின்ருர். துருவம் - உயர்வு; அசை வின்மையுமாம். நிரந்தரன் - என்றும் உள்ளவன். துரந்தரன் - காப்பவன். சுகம் எனப்படும் அனைத்தும் தோன்று மிடமாவது பற்றி இறைவனைச் "சுகோதயம்" என்கின்ருர். பதித் துவம் - பதியாம் தன்மை. பரோட்சானுபவம் - கண்கண்ட அனுபவம். அபரோட்சானுபவம் - பொறி புலன்களால் கண்டறியப் படாத அனுபவம். சந்திரசேகர மூர்த்தியைச் சோமசேகர சொரூபம் என்று கூறுகின்றன. பரசிவானந்த என்பது முதல் சிவாய நம என்பது ஈருக உரைப்பன மறை யுரைக்கும் மொழிகள் என்றற்கு மறை "ஓலமிட்டு" எனவும், மறை வல்ல வராலும் சிறிதும் அறியப்படாமை விளங்க, "அணுவளவும் அறிகிலாத அற்புத" எனவும் இயம்புகின்ருர். ஞாஞகாசம் என்ற பொருளில் சிற்றம் பலத்தைச் சிதாகாசம் என்பர். தில்லையம்பலத்தில் கூத்தப் பெருமான் ஞான நாடகம் புரிகின்ருன் என்பது பற்றி, "ஞான அம்பலம்" என்றும், அத் திருக்கூத்தே ஆன்மாக்கள் பெறும் ஆனந்த மனைத்துக்கும் மூல காரணமாதலால் சிவபெருமானை "ஆனந்த நடன மணியே" என்றும் இயம்புகின்ருர். மாணிக்க மணியின் நிற முடைமையால், கூத்தப் பெருமானை "நடன மணியே" என்று நவில்கின்ருர்.

இதனுல், வேதங்கள் பலபல வோதினும், அவற்ருல் உணரப்படாத சிவனது அருமை யுரைத்தவாரும். (1)

2602\. ஜோதிமணி யேஅகண் டானந்த சைதன்ய
சுத்தமணியே அரியநல்
துரியமணி யேதுரிய முங்கடந் தப்பால்
துலங்குமணி யேஉயர்ந்த
ஜாதிமணி யேசைவ சமயமணி யேசச்சி
தானந்த மானமணியே

சகஜநிலை காட்டிவினை யோட்டிஅருள் நீட்டிஉயர்
சமரச சுபாவமணியே
நீதிமணி யேநிரு விகற்பமணி யேஅன்பர்
நினைவிலமர் கடவுண்மணியே
நின்மல சுயம்பிர காசங்குலவும் அத்வைத
நித்யஆ னந்தமணியே
ஆதிமணி யேஎழில் அநாதிமணி யேஎனக்
கன்புதவும் இன்பமணியே
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : ஞானவொளி திகழும் மணியானவனே; அளப்பரிய இன்ப ஞானப் பொருளாகிய தூய மணியானவனே; பெறுதற் கருமை வாய்ந்து துரியத்தானத்தில் தோன்றும் மணியே; துரியத்துக் கப்பாலான அதீதத்தில் விளங்கும் மணியே; மணிவகை பலவற்றினும் உயர்ந்த இனத்து மாணிக்க மணியே; சைவ சமயத்தவர் முடிமேற் கொண்டு புகழும் மணியே; நித்திய ஞான இன்பம் நல்கும் மணியே; ஆன்மாவின் இயற்கை நிலையைக் காட்டி அதனைச் சூழ்ந்துள்ள வினையையும் போக்கித் திருவருளின் இன்பவியலைத் தந்து எவ்வுயிரையும் சமநிலையில் வைத்துப் பேணும் இயல்பையுடைய மணியே; நீதி யுருவாகிய மணியே; திரிபேதும் இல்லாத மணியே, மெய்யன்பர்களின் நெஞ்சின்கண் எழுந்தருளும் கடவுளாகிய மணியே, மலவிருளில்லாத தன்னியல்பான சிவவொளி திகழும் அத்துவித நித்திய ஆனந்த மயமான மணியானவனே; எப்பொருட்கும் ஆதி முதலான மணியே, அழகிய அனாதி மணியே; எனது உள்ளத்தில் அன்பு நிறைந்து இன்பம் உண்டாக்கும் மணியே; அற்புத மான ஞானகாசமாகிய தில்லையில் ஞான மன்றில் இன்ப நடம் புரியும் மணியே, வணக்கம். எ.று.

திருவருட் பெருஞ் சோதி முதல்வனாதலால், "சோதி மணி" என்று சொல்லுகின்றார். தூய சிவஞானப் பெரிய மாணிக்க மணியாய் ஆன்ம சைதனியத்தால் அளக்கலாகாத இன்ப மயமான சிவ மென்பார், "அகண்ட ஆனந்த சைதன்ய சுத்தமணி" எனக் கூறுகின்றார். சைதன்யம் - ஞானம் - துரியம் - உந்தித் தானம். யோக நெறியில் சிந்தைக்கப்பாலான உந்தித் தானத்தே காண்டற் கரிதாய் நலம் விளைவிப்பதாய் இலங்குவது பற்றி, "அரியநல் துரிய மணியே" என்று போற்றுகின்றார். துரியத்துக்கப்பால் உறுவது மூலாதாரம்: அவ்விடத்து, ஞானக் காட்சிக்குப் புலனாகி ஒளிர்வது பற்றி வியப்புற்று, "துரியமும் கடந்து அப்பால் துலங்கும் மணியே" என்று துதிக்கின்றார். மாணிக்க மணி வகையில் உயர்வற வுயர்ந்த மணி போல்வது விளங்க, "உயர்ந்த சாதி மணியே" எனவுரைக்கின்றார். மாணிக்கத்தியல் வகுக்குங்காலைச், சமனொளி சூழ்ந்த வொருநான்கிடமும், நால்வகை வருணமும் நவின்றவி பெயரும், பன்னிரு குணமும் பதினெறு குற்றமும், இருபத்தெண் வகை யிலங்கிய நிறனும், மருவிய விலையும் பத்தி பாய்தலும், இவையென மொழிப வியல் புணர்ந்தோரே" என்று அடியார்க்கு நல்லார் (சிலப். 2 : 14:186-7) உரைப்பதனுல் மாணிக்க மணிக்குச் சாதி வகுப்பு உண்மை

யறிக. சைவ சமயத்துள்ளும் அகம் ஆறு கூறலின், உயர்ந்ததன் உயர்வு தோன்ற, "சைவ சமய மணியே" எனச் சாற்றுகின்றார். ஏனை மணி வகைகள் போலச் சுவையுற்ற உள்ளக முடையதன்று; சத்தாயும் சித்தா யும் இன்பச் சுவையாயு முள்ளது என விளக்குதற்குச் "சச்சிதானந்த மான மணியே" எனப் புகல்கின்றார். மலவிருள் கலந்து அது காரணமாக் வினை பல புரிந்து அருளொளி விழைந்து உயரும் ஆன்மாக்கள் போலின்றி, தன்னியல்பில் இயற்கைத் தூய்மையும் யாவையும் தாயென வொப்ப நோக்கும் தனிப்பண்பும் பொருந்திய சிவமாகிய மணி எனற்கு, "சகச நிலை காட்டி வினை யோட்டி அருள் நீட்டி யுயர் சமரச சுபாவ மணியே" என இசைக்கின்றார். ஆன்மாக்கள் தன்னியல்பில் சுத்த சைதன்யப் பொருளாம் தன்மையை ஞானத்தாற் காண்பித்தலும், அவற்றைப் பற்றி வருத்தும் வினையிருளைப் போக்குதலும், திருவருள் இன்ப வொளியை நல்குதலும் சிவத்தின் சமநோக்குடைமையும் இயல் பாக இருத்தலால் இங்ஙனம் இயம்புகின்றா ரென்றலும் ஒன்று. நீதி பலவும் தன்னுருவாக வுடையவன் என்றற்கு "நீதி மணியே" என்றும், ஒருகாலைக் கொருகாலை வேறுபடுதலும் மாறுபடுதலும் இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத் தாதல் தோன்ற "நிருவிகற்ப மணியே" என்றும், மெய்யன்பர்களின் மனத்தின் மணியுருவாய் மானத விலிங்கமாக எழுந்தருளும் தெய்வத் தன்மை விளங்க, "அன்பர் நினைவிலமர் கடவுள் மணியே" என்றும் உரைக்கின்றார். "வாய்மையே தூய்மையாக மன மணியிலிங்கமாக" (தனி : நேரிசை) என்று திருநாவுக்கரசர் கூறுவது காண்க. சிவவொளி, இருட் கலப்பின்றிப் பிறி தெவற்றிற்கு மில்லாத ஞான வொளியாதலின், "நின்மல சுயம் பிரகாசம் குலவும்" எனவும், இரண்டறக் கலந்து நிலைத்த ஞான வின்பம் நல்குவதால், "அத்வைத நித்ய ஆனந்த மணி" எனவும் பாராட்டிக் குறிக்கின்றார். "அத்விதீயம் பிரமம்" எனச் சாந்தோக்கியமும் உரைப்பது காண்க. உருவும் அருவு மாகிய பொருளனைத்துக்கும் முதலாதல்பற்றி, "ஆதி மணி" என்றும், தன் தோற்றத்துக்கு ஒரு முதல் இல்லாதவன், என்பார், "எழில் அனாதி மணி" என்றும், அவன்பால் அன்பு செய்தற்கும் அவனது பேரன்பு இன்றியமை யாதலால், "எனக்கு அன்பு உதவும் இன்பமணி" யென்றும், அன்பிலார்க்கு இன்ப நுகர்ச்சியின்மையின், "இன்ப மணி" என்றும் இயம்புகின்றார். தில்லைச் சிற்றம்பலமே ஞான ஆகாசமும் அம்பலமு மாதலால், "சிதாகாச ஞான வம்பலம்" எனச் சிறப்பிக்கின்றார்.

இதனால், சிவபரம் பொருளைப் பல்வகை மணியாகப் புனைந்து பரவிய வாறும். (2)

2603. தேனமர் பசுங்கொன்றை மாலையா டக்கவின்
செய்யுமதி வேணியாட
செய்யுமுப் புரிநூலு மாடநடு வரியுரி
சிறந்தாட வேகரத்தில்
மானிமிர்ந் தாடஒளிர் மழுவெழுந் தாடமக
வானுதி தேவராட
மாமுனிவர் உரகர்கின் னரர்விஞ்சை யருமாட
மால்பிரம ருடஉண்மை

ஞானஅறி வமளர்தின மாடஉல கன்னையாம்
நங்கைசிவ காமியாட
நாகமுடன் ஊகமன நாடிஒரு புறமாட
நந்திமறை யோர்களாட
ஆனைமுக னுடமயி லேறிவிளை யாடுமுயர்
ஆறுமுக னுடமகிழ்வாய்
அற்புத சிதாகார முானஅம் பலபாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : தேன் நிறைந்த, பசும் பொன்னின் நிறமுடைய, கொன்றை மாலை யாடவும், காண்பார் மனத்தைக் கவரும் அழகிய பிறைமதி தங்கிய சடைகள் நாற்றிசையும் ஆடவும், முறுக்கப்பட்ட முப்புரி நூல் மார்பிற் கிடந்து ஆடவும், இடையில் வரிகளையுடைய தோலாடை மிக்குற்று ஆடவும், கையில் ஏந்தப்படுகின்ற மான் தலை நிமிர்ந்து ஆடவும், ஒரு கையில் மழுப்படை யுயர்ந்து ஆடவும், இந்திரன் முதலிய தேவர்கள் கண்டு களி கூர்ந்தாடவும், பெரிய முனிவர்களும், நாகர்களும், கின்னரர் விஞ்சையர் முதலியோர்களும் ஒருபால் ஆட, ஒருபால் திருமாலும் பிரமனும் பிறரும் ஆடவும், உண்மை ஞான நெறி நிற்கும் மெய்யுணர்ந் தோர் நாளும் ஆடவும், உலகிற்குத் தாயாகிய நங்கை சிவகாமி ஆடவும்; குரங்களோடு முசுக்கலையை யொக்கும் மனமும் ஒரு பக்கம் ஆடல் நயந்து ஒருபால் ஆடவும், நந்தியம் பெருமானும் வேதமோதும் வேதி யரும் ஒரு மருங்கில் ஆடவும், ஓரிடத்தே யானைமுகப் பெருமான் ஆட, பிறிதோரிடத்தே மயிலூர்ந்து விளையாடும் முருகப் பெருமான் ஆடக் கண்டு, அற்புத சிதாகாச ஞான அம்பலத்திலாடும் ஆனந்த நடன மணியாகிய நீ மகிழ்வாய். எ.று.

தேன் பொருந்தி யிருப்பதால் பசுமை குன்றுமை பற்றிப் பசுங் கொன்றையென்றாரேனும், மலரிதழ் பசும் பொன்னின் நிறம் உடைமை புலப்படப் பசுங்கொன்றையளன்றார் என்பது கருத்தாகக் கொள்க. “கார் விரி கொன்றைப் பொன்னேர் புது மலர்” (அகம். கட) எனச் சான்றோர் உரைப்பது காண்க. கவின், காண்பார் கண் கவரும் அழகு. சிவன் ஆடு மிடத்து அவன் சடையில் அணிந்த பிறைமதியும் உடனுடல் தோன்றக் “கவின் செய்யும் மதியாட” என்று கூறுகின்றார். வேணி - சடை. நாற்றி சையும் பரந்தாடல் விளங்க, “வேணியாட” எனப் பொதுப்படவுரைக் கின்றார். முப்புரிநூல் கையால் திரிக்கப்பறிவதாகலின், “செய்யும் முப்புரி நூல்” எனப்படுகிறது. இதனை “ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞான்” (முருகு) என நக்கீரர் நவில்வர். நடு, இடை. புலித்தோலை இடையில் உடுத்தலின் “நடுவரி - யுரி சிறந்தாட” எனப் புகழ்கின்றார். வரியுரி, வரிகளையுடைய புலித்தோல். கையுல் இருந்து முழங்கும் மானை “கரத்தில் மான் நிமிர்ந்தாட” எனக் கூறுகிறார். மழு - கோடரி, வாளென்றலு முண்டு. “ஒளி மழுவாள் அங்கைக் கூத்தீர்” (ஒத்தூர்) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க. மகவான், இந்திரன். இந்திரன் முதலாய தேவர்களை மகவானுதி தேவர் என்பது வடநூன் மரபு. உரகர் - நாகர்; நாகத்தை வழிபடும் இனத்தவர்; நாக நாட்டினர் எனக் கருது பவரும் உண்டு. கீழேழு புவனங்களில் நாக புவனத்தவர் என்று

புராணிகர் உரைப்பர். விஞ்சையர் - வித்நியாதரர், விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலுள்ளது வித்தியாதர ருலகு; அவர்கள் வானத்திற் பறந்தேகும் இயல்பினர் என்பர். புத்தர் முதலியோர் வேறு கூறுவர். ஞான அறிவாளர், ஞான நூல்களைப் பயின்று அவற்றின் நெறி நிற்கும் மெய்யறிஞர். எந்நாளும் தம்முடைய மனத்தின்கண் இறைவனுடும் ஞான நாடகத்தைக் கண்டு மகிழ்பவ ரென்பது பற்றி, "உண்மை ஞான வறிவாளர் தினமாட" எனக் கூறுகிருர். பாரத வருடம், பரதக் கண்டம் என்பன போல கின்னர வருடம், கிம்புருட வருடம் எனப் பல வருடங்கள் ஆகமங்களிலும் புராணங்களிலும் கூறப்படுதலால் ஆங்காங்கு வாழ் வாரைக் கின்னரர். கிம்புருடர் எனக் கிளந்து கூறுவர். நங்கை சிவகாமி, பெண்களிற் சிறந்தவளான சிவகாமி; தில்லைச் சிவபெருமானுக்குத் தேவி. நாகம் - குரங்கு - ஊகம், கருங்குரங்கு; இது முசுக்கலை எனவும் வழங்கும். "மாமுக முசுக்கலை" (முருகு) என நக்கீரர் குறிப்பது காண்க. குரங்கும் முசுவும் போல்வ தென்றற்கு, "நாகமுடன் ஊகமனம்" என வுரைக்கின்ருர். நந்தி, நந்தி யெம்பெருமானுகிய சிவகணத் தலைவர். மறையோர் - வேதமோதும் கணநாதர். சிவலோகத்திலிருந்து இருக்கு முதலிய வேதங்களில் கீழ்மைப் படுத்தும் மண்டில மந்திரங்களை யோதிப் பல தெய்வக் கோட்பாடும் பேராசையும் உற்று மண்ணுலகில் செல்வ முடைய அரசர் வணிகர் முதலியோர்க்கு தூதரும் புரோகிதருமாய்ச் சுமார்த்த ராயினர் எனப் புராணிகர் உரைக்கின்றனர்.

இதனுல், தன் திருமேனியிலுள்ள மாலை முதலியன ஆடுவதையும் புறத்தே சிவ கணங்களும் தேவர்களும் யானைமுகன், அறுமுகன் என்ற சிவகுமரர்களும் ஆடுவதையும் கண்டு கூத்தப் பெருமான் மகிழும் திறம் கூறியவாரும். (3)

2604. பொய்யான வாள்க்கையினை மெய்யாக நம்பிவீண்
போக்கிநின் ஞானமடவார்
போகமே பெரிதெனக் கொண்டறி வழிந்துநின்
பொன்னடிக் கானமணியைச்
செய்யாத பாவியேன் என்னைநீ கைவிடில்
செய்வதறி யேன்ஏழையேன்
சேய்செய்த பிழையெல்லாம் தாய்பொறுப் பதுபோல்
சிந்தையில் எண்ணிடாயோ
மெய்ய ன நிலைபெறக் கையா லணைத்தருள
வேண்டுமறை யாகமத்தின்
மேலான சுத்தசன் மார்க்கஅனு பவசாந்
மேதையர்கள் பரவிவாழ்த்தும்
ஐயான னங்கொண்ட தெய்வமே கங்கைஅர
வம்புலியு மாடமுடிமேல்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்படும் மெய்ப் பொருள் களில் மேன்மை யுடையதாகப் போற்றப்படும் சுத்த சன்மார்க்க நெறி யினின்று பெறும் அனுபவம் நிறைந்த சாந்த ஞானிகள் துதித்துப் போற்றுகின்ற சத்தியோ சாத முதலிய முகம் ஐந்து கொண்ட சிவனாகிய தெய்வமே, கங்கையும் பாம்பும் பிறைமதியும் முடியின்கண் ஆட அற்புத சிதாகாச ஞான மன்றில் ஆடுகின்ற ஆனந்த நடன மணியே, பொய்யாய் மறைந்தொழியும் உலகியல் வாழ்க்கையை மெய்யாய் நிலையாயது தென எண்ணி வீணாக நன்கு புரியும் நாட்களைப் போக்கி, மகளிர் தரும் சிற்றின்பமே பெரிதென்று விழைந்து உண்மையறிவை இழந்து நின்னுடைய பொன் போன்றழகிய திருவடிக்குரிய பணிகளைச் செய்யாமல் ஒழிந்த பாவியாகியவன் யான்; என்னை நீ கை விடுவாயாயின், செய்யத் தக்கது இதுவென அறிய மாட்டாத அறிவிலியாவேன்; பெற்ற குழந்தை யின் பிழையனைத்தையும் தாய் அன்பாற் பொறுத்தாள்வது போல நின் திருவுள்ளத்தில் என்னையும் ஆண்டருள வேண்டுகிறேன்; மெய்ம்மை சான்ற சிவஞான நிலையினை யான் பெறுதற்கு நின் திருவருளாகிய கையால் எடுத்தணைத்து அருள் புரிய வேண்டுகிறேன். எ.று.

சன்மார்க்கம் - சத்தாகிய பொருளைப் பெறற்கு முயன் றொழுகும் நெறி. சித்மயம் சின்மயம் என வருதல் போலச் சத்மார்க்கம் சன்மார்க்கம் என வந்தது. நிலையில்லாத பொருளறிவும், அதனைப் பெற முயலும் நெறியும் சன்மார்க்கத்துக்கு மாறாய மார்க்கமாகும். மார்க்கம் - வழி; நெறியுமாம். நிலையாய பொருள் சிவமென்ற ஒன்றே யென்றுணர்ந்து அது பரந்து உலகுயிர் முழுதும் நிறைந்து ஒன்றின்பாலும் வேற்றுமை யின்றி ஒருமை யுற நிற்பதறிந்து உள்ளத்திற் கொண்டு எப்பொருள்பாலும் எவ்வுயிர் பாலும் அன்பு செய்தொழுகுவது சன்மார்க்கம். "கருணை யொன்றே வடிவாகி எவ்வுயிரும் தம்முயிர் போற் கண்டு ஞானத் தெருள் நெறியில் சுத்த சிவ சன்மார்க்கப் பெருநீதி செலுத்தா நின்ற பொருள் நெறி; சற்குண சாந்தப் புண்ணியர்தம் திருவாயால் புகன்ற வார்த்தை, அருணெறி வேதாகமத்தின் அடி முடி சொல் வார்த்தைகளென்றறை வாராலோ" (5298) என வள்ளற் பெருமான் பிறிதோரிடத்திற் பிறங்க வுரைக்கின்றார்; மற்றோரிடத்தே, "ஒன்றே சிவமென்றுணர்ந்திவ் வுலக மெலாம், நன்றே ஒருமையுற்று நண்ணியே - மன்றே, நடம் புரியும் பாத நளினமலர்க் குள்ளம், இடம் புரிக வாழ்க இசைந்து" (5615) எனச் சன்மார்க்கம் இதுவென இனிது விளக்குகின்றார். இது சைவ சன்மார்க் கத்தின் உயிர்ப் பொருளாதலை வற்புறுத்தவே திருமூலர் திருமந்திரமும் திருநாவுக்கரசரின் திருவருட் பாட்டுக்களும் முன்னமே தோன்றின; இச் சன்மார்க்க நெறியை வடித் துரைக்கலுற்ற அருணந்தி சிவனார், "சன்மார்க்கம் சகல கலை புராண வேத, சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவு முணர்ந்து, பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம், பதி பசு பாசம் தெரித்துப் பரசிவனைக் காட்டும்" (சிவ. சித்தி. 8:22) என வுரைக் கின்றார். சன்மார்க்கத்துக்கு இடையூறுகக் கேடு செய்வது சமய வெறி யாதலின், அதனைப் பழிக்க லுற்று "எத்திசையில் உள்ளவரும் வந்தே உவகை யுறுக மதத்துள்ளல் ஒழிக தொலைத்து" (5614) என்று கூறுகின்றார். உண்மைச் சமய வேத ஆகமங்களனைத்துக்கும் ஒப்ப முடிந்த தொன்றாதலின், "மறை யாகமத்தின் மேலான சுத்த சன் மார்க்கம்" எனவும், சமயக் காழ்ப்பின்றி அன்புள்ளத்துடன் உண்மை

கண்டு ஒளியும் இன்பமும் பெறும் மனநிலை "சுத்த சன்மார்க்க அனுபவம்" எனவும், அந்த அனுபவம் தெளிவுடைய ஞானிகளின் சிந்தைக்குச் சாந்தம் வழங்குதலின், "அனுபவ சாந்த மேதையர்கள்" எனவும், அவர்கள் எல்லாவற்றுக்கும் பொதுவாய் ஒன்றுய் நிலை பேறுடையதாய் விளங்குவது சிவமாதலைத் தேர்ந்து செயற்பாலது வழிபாடெனக் கொள்ளுதல் பற்றி, "மேதையர்கள் பரவி வாழ்த்தும் ஐயானனம் கொண்ட தெய்வமே" எனவும் விரித்துரைக்கின்றுர். சத்தியோ சாதம், தற்புருடம், அகோரம், ஈசானம், வாமம் என முகம் ஐந்தாதலால், "ஐயானனம் கொண்ட தெய்வமே" எனக் கூறுகின்றுர். முகம் கை கால் முதலிய வுறுப்புக் கூற நிற்பதால் சிவத்தைத் "தெய்வமே" எனக் குறிக்கின்றுர். ஒருநாளைக் கிருப்பது மறுநாள் கெட்டு மறைதல் பற்றி, "பொய்யான வாழ்க்கை" என்றும், இதனுல் மெய்யெனக் கருத இடமில்லா தொழிதலின், "மெய்யாக நம்பி" என்றும், இவ்வாறே நாள்தோறும் நலம் இன்றிக் கழிதலைக் கண்டு உற்ற வெறுப்பினுல், "வீண் போக்கி" என்றும், வீண் போக்குவது நாள் அன்மையால் "நன்னுள்" என்றும் நவில்கின்றுர். வீண் போக்குவது எங்ஙனம் என்பதை விளக்கற்கு, "மடவார் போகமே பெரிதெனக் கொண்டு அறிவழிந்து" என இயம்புகின்றுர். வீணே கழியும் நாளை நன்னுளாக்கும் திறம் இது வென்றற்குப் "பொன்னடிக் கானபணி" என்றும், அது செய்யாமை பாவம் எனக் காட்டற்குப் "பணியைச் செய் யாத பாவியேன்" என்றும், பாவத்தால் அறிவு மறைப்புண்டமையால், நீ அருளாற் கைகொடுத்தா லன்றிச் செய்யத் தக்கது அறியேன் என்பாராய், "என்னை நீ கைவிடில் செய்வ தறியேன்" என்றும், "ஏழையேன்" என்றும் எடுத்துரைக்கின்றுர். ஏழை - போதிய அறிவில்லாதவன். சேயின் பிழை யைத் தாய் பொறுப்பது போல் என்னையும் சேயாக எண்ணித் தாயன்பு செய்தருள்க என்பார், "சேய் செய்த பிழை யெலாம் தாய் பொறுப்பது போலச் சிந்தைதனில் எண்ணிடாயோ" என வுரைக்கின்றுர். மெய்யான நிலை, அந்தமில் இன்பத்து மெய்ஞ்ஞான போக நிலை. அன்புடையார் அன்பால் அணைப்பது போல் அருளாதரவு நல்க வேண்டும் என்பாராய், "மெய்யான நிலை பெறக் கையால் அணைத்தருள வேண்டும்" என்று முறையிடுகின்றுர்.

இதனுல் அழிவில்லாத சிவஞான போகநிலையை யான் பெறற்கு அருளுக என வேண்டியவாறும். (4)

2605. போதாரு நான்முகப் புத்தேளி னுற்பெரிய
பூமிவிடை வந்துநமனுற்
போகுமுயிர் கள்விணையை ஒழிமின்என் றேகுரவர்
போதிக்கும் உண்மைமொழியைக்
காதார வேபல தரங்கேட்கும் நூற்களிற்
கற்றும்அறி வற்றிரண்டு
கண்கெட்ட குண்டையென வீணே யலைந்திடும்
கடையனேன் உய்வதெந்நாள்
மாதாவு மாய்ஞான வுருவுமாய் அருள்செயும்
வள்ளலே உள்ளமுதலே

மாலாதி தேவர்முனி வோர்பரவி யேதொழுது
வங்வத்திமுடி தாழ்த்துமுன்றன்
ஆதார மானஅம் போருகத் தைக்காட்டி
யாண்டருள வேண்டும்அணிசீர்
அற்புத சிதாகாச ஞானஅப் பலமாடும்
ஆனந்த நட்னமணியே.

உரை : அழகிய சீர்த்தியும் அற்புதமும் பொருந்திய சிதாகாசமாகிய ஞான சபையில் ஆடுகின்ற ஆனந்த நடன மணியாகிய கூத்தப் பெருமானே, தாமரைப் பூவில் வீற்றிருக்கும் நான்கு முகத் தேவனுகிய பிரமனுல் பெருமை தங்கிய பூவுலகில் வந்து பிறந்து, பின் நமனுற் கவர்ந்து கொள்ளப்படுகின்ற உயிர்களே, செய்யப்படும் தீவினைகளை விட்டொழிமின் என்று ஞானசிரியர்கள் அறிவுறுத்தும் உண்மை யுரைகளைக் காது கொடுத்துப் பன்முறையும் கேட்டும், மெய்ந்நூல்கள் வாயிலாகப் படித் துணர்ந்தும், உண்மை யறிவின்றி இரு கண்களும் கெட்டொழிந்த குள்ள மான எருது போல வீணே யலைந்து வருந்தும் கடையனுகிய யான் உய்தி பெறுவது எக்காலமோ? தாயுமாய் ஞானத் திருவுருவினனுய் அருள்புரியும் வள்ளற் பெருமானே, என் உள்ளத்தில் எழுந்தருளும் முழு முதற் பொருளே, திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களும் நாளும் போற்றித் தம் கைகளால் தொழுது, வாயால் வாழ்த்தித் தலைகுனிந்து வணங்கும் உன்னுடைய, எப்பொருட்கும் ஆதாரமாகிய தாமரை போன்ற திருவடியை அடியேனுக்கும் காட்டி ஆண்டருள வேண்டுகிறேன். எ.று

பலகாலும் பலரும் எடுத்தோதப்படும் அழகும் புகழு முடைமை பற்றி, "அணி சீர் அற்புத சிதாகாசம்" எனப் புகழ்கின்றுர். சிதாகாசம் - பரஞான வெளி யெனவும் குறிக்கப்படுவது. நல்லுயிர்க்கு ஞான வின்பம் தோற்று வித்தல் பற்றி, கூத்தப் பெருமானுடைய திருநடனம், "ஆனந்த நடனம்" எனப்படுகிறது. "அம்பலஞ் சேர் ஆனந்த வெள்ளத் தறை கழலோன்" (கோவை. 367) எனத் திருவாதவூரர் தெரிவிப்பது காண்க. போது - பூ: பூவிற் சிறந்தது தாமரையாதலால், வெறிதே "போது" எனப் புகல் கின்றுர். உயர்ந்ததன் உயர்வுக்கு வேறோர் அடை வேண்டா என்பது மரபு. தேவருள் ஒருவனுதலால் நான்முகப் பிரமனை, "நான்முகப் புத்தேள்" எனக் கூறுகின்றுர். புத்தேள் - தேவன். பிரமன் பிறப்பிக்கப் பிறக்கும் உயிர்கள் செய்வினை செய்து உய்தி பெறற்கு உதவும் பெருமை யுடைமையால், பூவுலகு "பெரிய பூமி" எனப் போற்றப்படுகிறது; இது பற்றியே "கரும பூமி" என்கின்றனர் நூலோர். பெரிய பூமி யென்பதன் பெருமையை அறிய விரும்புவோர் சிவஞானமா பாடியத்து இரண்டாஞ் சூத்திர மூன்றுமதி கரண வுரையைக் காண்க. நமன் - கூற்றுவன். உயிர்களை உடம்பினின்றும் கூறுபடுத்தி, உடம்பைப் பூவுலகிற் பூதங்கட் கிரையாக்கி, தீவினை மிக்க வுயிர்களைப் "பாவிகள் சென்றடையும் இடமாகிய நரக லோகங்கள் ஒன்றன்மே லொன்றுக ஒரோ வொன்று தொண்ணூறிலக்கம் யோசனை யளவுடைய முப்பத்து மூன்று தளங்களும் தனித்தனி நூறுயிரம் யோசனை யளவுடைய முப்பத் திரண்டு இடைவெளி யுடையவாய்" "நரகம், மாநரகம், இராசநரகம், இராசராசேச்சுர நரகம்" என நால்வகைப்பட்டு, (சிவஞான. பாடி:2:3) இரௌவம் துலாந்தம் முதலாக வகைக் கெட்டாக முப்பத்திரண்டு விரிந்

துள்ள நரக லோகத்திற் கண்ணறச் செலுத்தி வருத்துவது கொண்டு, அவன் கைப்படுவது உயிர்கட்குக் கீழ்மை பயத்தலால், "நமனுற் போகு முயிர்கள்" என இழிவு தோன்றப் பேசுகின்றுர். திருநாவுக்கரசரும், "கற்றுக் கொள்வன வாயுள நரவுள, இட்டுக் கொள்வன பூவுள நீருள, கற்றைச் செஞ்சடையானுளன் நாமுளோம், எற்றுக்கோ நமனல் முனி வுண்பதே" (குறுந். தனி) என்பது காண்க. நல்வினையின்றிப் பொல்லாத வினைகளைப் புரிந்தால் நமனுற் பிணிப்புண்டு நரகம் புகுவது உறுதி யென்பாராய், பல கூருமல், "உயிர்கள் வினையை ஒழிமின்" எனச் சான்றேர் உரைக்கின்றுர்கள். அச் சான்றேர்களை ஞான குரவன்மார் என்றற்குக் "குரவர்" எனவும், அவர் கூறுவன அனைத்தும் மெய்ம்மை யுரைகள் என்றற்குக் "குரவர் போதிக்கும் உண்மை மொழி" எனவும், அம்மொழிகளை அவர் தாமே நேரிற் கூறக் கேட்டும், அவர் எழுதிய நூல் களைப் பன்முறையும் படித்துணர்ந்தும் அறிவு தெளிவுருது கெடுகின்ற கொடுமைக்கு மனம் நொந்து, "உண்மை மொழியைக் காதரவே பலதரம் கேட்டும் நூல்களிற் கற்றும் அறிவற்று வீணே யலைந்திடும் கடையனேன்" எனவும் இயம்புகின்றுர். தரம் - முறை. கற்றலிற் கேட்டல் நன்றுதல் நோக்கி, "பலதரம் கேட்டும் நூல்களிற் கற்றும்" எனக் கூறுகின்றுர். இக் கேள்விகளாலும் கல்வியாலும் அறிவு தெளிவெய்தாமை புலப்பட, "அறிவற்று" என்றும், அறிவற்றமையால் பயனில் செயல் களையே செய்து வருந்தினமை தோன்ற, "வீணே யலைந்திடும் கடையனேன்" என்றும் இசைக்கின்றுர். குண்டை - உயரம் குறுகியுடல் பருத்திருக்கும் எருது. அதுதானும் இருகண்ணும் கெட்டதாயின் செய்யும் சேட்டையும் அதனுற் படும் துன்பமும் மிகுதியாம் என விளக்குதற்கு "இரண்டு கண் கெட்ட குண்டை என" என்று உவமத்தாற் காட்டு கின்றுர். இரண்டு என்றவிடத்து முற்றும்மை தொக்கது. அறிவின்மை யுடன் சேட்டையும் துன்பமும் கீழ்மைப் படுத்தலாற் "கடையனேன்" என நொந்து கொள்கிறுர். நரகத்தி லிடர்ப்படுதலும் துறக்கத்தில் இன்புறுதலும் பின்னர் மாறிப் பிறந்திறந்து எய்த்தலும் முடிவில் உய்தி பெறற் காதலின், "உய்வ தெந்நாள்" எனக் கேட்டு அவலிக்கின்றுர். "தாயவன் உலகுக்குத் தன்னெப்பில்லாத் தூயவன், தூமதி சூடி" (வல்லம்) என்று ஞானசம்பந்தர் முதலியோர் பரவுவதால், "மாதாவுமாய்" என்கின்றுர். தந்தையும் கல்வியும் ஞானமும் பெறுவிப்பவனுதலால் அவனையும் உளப்படுத்தற்கு, ஞான குருவுமாய் என்னுமல், "ஞான வுருவுமாய்" என வுரைக்கின்றுர். திருவருளை வரையாமல் வழங்குமாறு புலப்பட "அருள் செயும் வள்ளலே" எனப் புகழ்கின்றுர். மனத்தின் எழுந்தருளும் முதல்வனுதலின், "உள்ள முதலே" எனக் கூறுகிறுர். உள்ள முதல் என்பதற்கு என்றும் உள்ளதாய் உலகுயிர்கட் கெல்லாம் முழு முதலாய் உள்ளவன் எனக் கூறுவதும் உண்டு. திருமால் முதலிய தேவர் கட்கும் முனிவர்கட்கும் ஆதார முதல்வனுதலால், "மாலாதி தேவர் முனிவோர் பரவியே தொழுது வாழ்த்தி முடி தாழ்த்தும் உன்றன் ஆதார மான அம்போருகத்தை" எனவும், திருவடிக் காட்சி ஞானமாயும் தீமை யெல்லாம் போக்குவதாயும் விளங்குவது தோன்ற, "அம்போருகத்தைக் காட்டி ஆண்டருள வேண்டும்" எனவும் போற்றுகின்றுர். அம்போருகம் - தாமரை; ஈண்டு ஆகுபெயராய் இறைவன் திருவடிக் காயிற்று. "தாமரை புரையும் காமர் சேவடி" (குறுந்.) எனப் பெரியோர் கூறுவது காண்க.

இதனால் இறைவன் திருவடிக் காட்சியே ஞானமும் வீடு பேறும் நல்குவ தென விளக்கியவாறும். (5)

2606. பண்ணாரு மூவர்செயற் பாவேறு கேளவியிற்
பண்படா ஏழையின்சொற்
பாவையும் இகழ்ந்திடா தேற்றுமை முடிவான
பரமரர்த்த ஞான நிலையை
கண்ணாரை நெல்லியங் கனியெனக் காட்டிநற்
கருணைசெய் தாளாவிடில்
கடையனேன் ஈடேறும் வகை எந்த நாள்அருட்
கடவுளே கருணைசெய்வாய்
தண்ணா ரிளம்பிறை தங்குடி மேன்மேனி
தந்தஒரு சுந்தரியையும்
தக்கவா மத்தினிடை பச்சையி லாம்அரிய
சத்தியையும் வைத்துமகிழ்என்
அண்ணாஎன் அப்பாஎன் அறிவேஎன் அன்பேஎன்
றன்பர் எட் பெரழுதும்)வாழ்த்தும்
அற்யுத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை: அருளுருவாகிய கடவுளே, குளிர்ந்த இளம்பிறை தங்கும் திருமுடி மேல் பெண்ணுருக்கொண்டு விளங்கும் சுந்தரியாகிய கங்கையை யும், தகுதி யமைந்த இடப்பாகத்தே பச்சை மயில் போன்ற அருட்சத்தி யாகிய உமையையும் வைத்து மகிழ்கின்ற எனக்கு, அப்பனும் அண்ணனு மாய், என்னுடைய அறிவும் அன்புமாகியவனே என்று சொல்லி மெய் யன்பர்கள் எப்போதும் வாழ்த்துகின்ற, அற்புத சிதாகாச ஞான அம்பலத் தில் ஆடல் புரிகின்ற ஆனந்த நடனமணியே, பண்ணிசை நிறைந்த திருஞான சம்பந்தர் முதலிய மூவருடைய பாக்களைக் கேட்டுவக்கும் நினது திருச்செவியில் செம்மை யறிவில்லாத ஏழையாகிய எனது சொல் மாலையையும் இகழாமல் ஏற்று, வேதங்களின் முடிபொருளான பரமார்த்த ஞானப் பொருளைக் கண்ணிற் காண அங்கையில் கொண்ட நெல்லிக் கனி போலக் காட்டி, நினது நல்லருளைச் செய்து என்னை ஆளாயாயின், கடைய வனுகிய யான் ஞானத்தால் மேம்படும் திறம் எனக்கு எப்போது வாய்க் கும்; எனக்கு அதனைத் தெரிவித்தருள வேண்டுகிறேன். எ.று.

அருளே திருமேனியாக வுடையவன் என்று ஞான நூல்கள் ஓதுவது பற்றி, "அருட் கடவுளே" என வுரைக்கின்றார். திருமுடியிற் சூடும் திங்கள் இளம்பிறையாயினும் குளிர்ச்சி மிக்குடைய தென்றற்கு, "தண்ணார் இளம்பிறை" எனவும், மிதந்து யாண்டும் ஓடாமல் நின்று திகழ்கின்றமை தோன்ற, "தங்கும் முடி" எனவும் இசைக்கின்றார். அத் திருமுடியின்கண், நீர் பெருகும் ஆறுகிய கங்கையை அழகிய பெண் ணுருவிற் கொண்டிருப்பது பற்றி "முடிமேல் மேனி தந்த ஒரு சுந்தரி" என்றும், மக்கள் மேனியில் இடப்பாகம் மென்மை யுடைமை பற்றி அதுவே அருட் சத்தியாகிய உமையம்மைக்கு உற்ற பாகமாதல் கருதி, "தக்கவா மத்தினிடைப் பச்சை மயிலாம் அரிய சத்தியையும் வைத்து"

என்றும் இயம்புகின்றார். சுந்தரி - அழகி. பச்சை நிற மேனியும் மயிலின் சாயலும் உடையவளாதலால் உமாதேவியைப் "பச்சை மயி" லெனவும், அவள் சிவனது அருட் சத்தியாவதால் "அரிய சத்தி" எனவும் எடுத்துரைக்கின்றார். அண்ணன், பெரியவன். அண்ணு அப்பா என்பனவாக மெய்யன்பர் வாழ்த்தும் திறத்தை எடுத்தோதுவாராய், "என் அண்ணு என் அப்பா என் அறிவே என் அன்பே என்று அன்பர் எப்பொழுதும் வாழ்த்தும்" என இயம்புகின்றார். இசைப் புலமையாற் பலவேறு பண்களால் இறைவன் அருணலத்தைப் பாட்டில் அமைத்துப் பாடல் வல்லவராதலால் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் நம்பியாரூரர் ஆகிய மூவரையும் "பண்ணுரும் மூவர்" என்கின்றார். அவர்களும் தம்முடைய பண் சுமந்த பாடல்களைப்" "பண்ணுர் இன்தமிழ்" எனவே பெயர் கொடுத்துரைப்பர்' மூவர் பாட்டுக்களையும் சிவன் பெரிதும் விரும்புவது தோன்றப் "பண்ணுரு மூவர் சொற் பாவேறு கேள்வி" எனப்புகன்று மொழிகின்றார். பண்படுதல் - செம்மை யுறுதல். சொற்பா - சொற்களாலாகிய பாமாலை. மறை முடிவு - வேதாந்தம். பரமார்த்த ஞானம் - மேலான பரம் பொருளை உணரும் உணர்வு. பிரமப் பொருளைக் காண்பது பரமார்த்தம் என்றும், உலகியலோடு ஒப்பவுரைப்பது விவகாரார்த்தம் என்றும் வேதாந்திகள் கூறலின், "மறைமுடிவான பரமார்த்த ஞான நிலை" எனவுரைக்கின்றார். பரமார்த்தம் கூறுவோர், தருக்க வாதமும் சொற்பொருள் வாதமும் செய்து பொருள் விளங்காதபடி குழப்புவது பற்றி, "கண்ணுர நெல்லியங்கனியெனக் காட்டி" என வேண்டுகின்றார். பாரமார்த்திகம் எனப்படும் பிரம ஞானத்தை அறிவுக் கண்ணுக்கு விளங்கக் காட்டுவதே அருட் செயலாதல் கண்டு, "நற்கருணை செய்தாளாவிடில்" எனவும், பரமார்த்தம் பேசுவோர் பலரும் உண்மை யுணர்ந்து உரைக்கும் திறமின்றிக் காலம் கடத்துவதால், "கடையனேன் ஈடேறும் வகை எந்த நாள்" எனவும் வருந்துகிறார். வடலூர் வள்ளற் பெருமான் காலத்தில் பரமார்த்தமான பிரம ஞானப் பொருளைப் பேசுவோர் வடமொழியையோ தமிழ் மொழியையோ முற்றவறிந்துரைக்கும் தெளிவில்லாதவராய் இருந்தமையால், "அருட் கடவுளே கருணை செய்வாய்" என ஓலமிடுகின்றார். இந்நாளிலும் புரியாத நிலையில், வடசொற்களும் சொற்றொடர்களும் மிகப் புணர்த்து மக்கள் இனிதுணரும் தமிழ் மொழியால் தெளிவாகவுரைப்போர் இல்லா திருப்பது வருந்தத் தக்கது; சங்கரர் உரைப்பதையே உரைத்து மருட்டியும் இயற்கையறிவுக்கு ஒப்பவுரையாது குழறியும் திரிவோரே எங்கும் காணப்படுகின்றனர்.

இதனால், வேதாந்தம் கூறும் பாரமார்த்திகப் பொருளை இனிது விளங்கிக் கொள்ளத் திருவருள் செய்யுமாறு விண்ணம்பித்தவாறும். (6)

?.607. பவமான எழுவகைம் பரபபான வேலையிற்
பகவான பாவி இன்னும்
பற்றுன குற்றமதை உற்றலை துரும்பெனப்
படராது மறையனைத்தும்
உவமான முரைசெய்ய அரிதான சிவநிலையை
உற்றதனை யொன்றிவாழும்

உளவான வழியீ தெனக்காட்டி அருள்செய்யில்
உய்குவேன் முடிவானநல்
தவமான நெறிபற்றி ரண்டற்ற சுகவாரி
தன்னில்நினை நாடியெல்லாம்
தானான சுத்தசன் மார்க்கஅனு பவசாந்த
தற்பரர்க ளகநிறைந்தே
அவமான கருணைப்பிர காசநின் னருள்தனை
அடியேனுக் கருள்செய்குவாய்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : அற்புத சிதாகாசமான ஞான மன்றில் திருக்கூத்தாடும் ஆனந்த நடன மணியாகிய சிவனே, பிறவியாகிய எழுவகைப்பட்ட பரந்த கடலிற் பசுத்தன்மையையுடைய, பாவியாகிய யான் இப்பொழுதும் இருவகைப் பற்றுக்களைக் கொண்டு அலைகின்ற சிறு துரும்பு போல அவற்றின் வழிச் செல்லாமல் வேதங்கள் யாவற்றாலும் ஒப்புரைக்க மாட்டாத சிவமாந் தன்மையை எய்தி, அதன்கண் ஒன்றி வாழும் உபாயமான நெறியிதுவாகும் என்று காண்பித்துத் திருவருள் செய்குவாயாயின் யான் உய்தி பெறுவேன்; எல்லா நெறிகளிலும் முடிந்த நெறியாகிய தவநெறி பற்றி இரண்டறக் கூடி நுகரும் இன்பக் கடலில் நின்னையே எல்லாமாய் நினைந்து, தானே சிவமாகிய சுத்த சன்மார்க்க அனுபவமுற்றுச் சாந்த சீலர்களாகிய தற்பரர்களின் மனத்தின்கண் குறைவற நிறைந்து, தன்னையொழிந்த பிற நலமெல்லாம் அவமாம் என்று கருத விளங்கும் திருவருள் இன்ப வொளியையுடைய பெருமானே, நின்னுடைய அந்தத் திருவருளை அடியவனாகிய எனக்கு அருள வேண்டுகிறேன். எ.று.

பவம் - பிறப்பு. எழுவகையாவன : ''ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம், நீர் பறவை நாற்கால் ஓர் பப்பத்து - சீரிய, பந்தமாம் தேவர் பதினாலயன் படைத்த, அந்தமில் சீர்த்தாவரம் நாலைந்து'' எனப் பழைய பாட்டொன்று கூறுவது காண்க. பரப்பான வேலை - அளவிறந்த பரப்பை யுடைய கடல். பசுவாதல் - இயற்கையும் செயற்கையுமாகிய மூவகை மலங்களாற் பிணிக்கப்படுதல். பசு நீகாரம் எனப்படும் ஆணவ மலத்தால் இயற்கையாகக் கட்டுண்பது பற்றி ஆன்மா பசுவாம் தன்மை யுறுகிற தெனச் சிவாகமங்கள் ஓதுவதால், ''பசுவான பாவி'' என்று குறிக்கின்றார். மலம் காரணமாக ஏனைக் கன்மமும் மாயையுமாகிய இரண்டும் உண்டாவதால் அவை செயற்கை மலம் எனப்படுகின்றன. ''செழுநவை யறுவை சாணி யுவர் செறிவித்தழுக்கை முழுவதும் கழிப்பன் மாயை கொடுமலம் ஒழிப்பன் முன்னோன்'' (சிவ. சித்தி; 1:52) என்று சான்றோர் உரைப்பது காண்க. இருவகைப் பற்று : யான் எனது எனப்படுவன; இவற்றை அகப்பற்று, புறப்பற்றென இரண்டாக வுரைத்தலு முண்டு. இவற்றை வடநூலார் அகங்காரம் மமகாரம் என்பர். ஆன்மாக்கள் எய்தும் துன்பம் இன்பம் ஆகிய இரண்டும் இப்பற்றுக்களால் உண்டாவனவாதலால், ''பசுவான யான் இன்னும் பற்றான குற்றமதை யுற்று'' என்று கூறுகின்றார். பற்று உற்றதால் விளைந்த பயன் இது

வென்பார், "அலை துரும்பென" எனக் காட்டுகின்றார். ஞான நூல்களில் தலைமையும் தொன்மையுமுடைய வேதங்களாலும் எடுத்துக் காட்டுக்களால் விளக்க முடியாதது சிவமாம் தன்மையுறும் சிவநிலை" என்பாராய், "மறையனைத்தும் உவமானம் உரை செய்ய அரிதான சிவநிலை" எனவுரைக்கின்றார். சிவநிலையில் ஆன்மா ஒன்றியும் உடனிருந்தும் சிவபோகத்தை நுகர்வதாகலின், "ஒன்றி வாழும் உளவான வழி இது" எனவும், அது தானும் காட்டக் காணப்படுவ தன்றி, செலுத்தி நுகர்வித்த லன்று மெனற்குக் "காட்டியருள் செய்யின் உய்குவேன்" எனவும் இயம்புகிறார். உய்தி - பிறவாப் பேரின்ப நிலையைப் பெறுதல். சன்மார்க்க நெறிகளின் முடிவான பொருள் சிவத்தோடு இரண்டறக் கலந்து பெறும் சிவபோக மாகலின் அதனைப் பெறும் தலையாய நெறி என்றற்கு, "முடிவான நல்தவமான நெறி" என்றும், உணர்வால் இரண்டாதலின்றி ஒன்றாகிச் சிவபோகம் நுகரப்படுதலால், அச்சிவயோக போகிகளை, "இரண்டற்ற சுகவாரி தன்னில் நினை நாடி எல்லாம் தானான சுத்த சன்மார்க்க அனுபவ சாந்த தற்பரர்கள்" என்றும், போகப் பொருளாகிய சிவத்தை நோக்கப் போக நுகரும் தற்பரர்களான சுத்தான்மாக்கள் பெரிதும் சிறுமையுடையராதல், சிவபோகம் அவரது அகம் நிறைந்து அடங்காது பெருகிப் பேரொளியாய்ப் பிறங்குதல் பற்றி, "அகம் நிறைந்து பெருகும் கருணைப் பிரகாச" என்றும் இயம்புகின்றார். நன்னெறியாகிய ஞானத்தை நல்குவதால், சரியை கிரியை யோகங்களாகிய தவநெறி, "நல்தவமான நெறி" எனப்படுகிறது. இரண்டற்ற சுகவாரி, நுகர்வோனும் நுகரப்படும் பொருளும் என இரண்டாகாது ஒன்றாய் உணர்வொன்றி நுகரும் இன்பக் கடல். சுக நுகர்ச்சியில் சிவமே நினைந் தொன்றுதலைச் "சுகவாரி தன்னில் நினை நாடி" எனவும், சுகானுபவத்தில் சுத்த சன்மார்க்கமே அனுபவமாய் உணர்வின்கண் அசைவின்றித் தானே தனக்குத் தலைவனும் பரனுமாய் விளங்கும் சுத்தான்மாக்களை "எல்லாம் தானான சுத்த சன்மார்க்க அனுபவ சாந்த தற்பரர்" எனவும் கூறுகின்றார். எல்லாம் தானாதல், பசுகரண மனைத்தும் பதிகரணமாதல். அவமான கருணைப் பிரகாசம், அருளொளியன்றிப் பிற பொருளொளியும் விருப்பும் பிறவும் வீண் எனக் கருதுவிக்கும் சிறப்புடைய திருவருள் ஞானவொளி அவமானம் என்பதற்கு அளவு கடந்த என்பதும் ஒன்று. மானம் - அளவு; அவமாகிய அளவென்பதாய், அளக்குமெல்லை கடந்தது எனக் கோடலும் உண்டு. மானம் குற்றமெனக் கொண்டு, அவமான மானது குற்றமின்மை என்பாரு முண்டு.

இதனால், சிவநிலையைப் பெறும் உளவை நல்குக என வேண்டி, சுத்தான்மாக்கள் பெறும் சிவபோகானுபவமும் தெரிவித்தவாறும். (7)

2608. சந்ததமும் அழியாமல் ஒருபடித் தாயிலகு
சாமிசிவ காமியிடமார்
சம்புவா மென்னுமறைஆகமத் துணிவான
சத்யமொழி தன்னைநம்பி
எந்தையே என்றறிஞர் யாவரும் நின்புகழை
ஏத்திவினை தனைமாற்றியே
இன்பமய மாயினிது வாழ்ந்திடப் புவியினிடை
ஏழையேன் ஒருவன் அந்தோ

சிந்தையா னதுகலக் கங்கொண்டு வாடலென்
செப்புவாய் வேதனுதி
தேவர்முனி வர்கருடர் காந்தருவர் விஞ்சையர்
சித்தர்களும் ஏவல்புரிய
அந்தணர்கள் பலகோடி முகமனு டப்பிறங்
கருண்முக விலாசத்துடன்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : பிரமன் முதலிய தேவர்களும் முனிவர்களும் கருடர்களும் காந்தருவரும் விஞ்சையரும் சித்தர்களும் பிறரும் சூழ விருந்து பணி புரியவும், அந்தணர் பலர் பல கோடி மந்திரங்களைச் சொல்லி முகமன் உரைக்கவும் உயர்ந்த அருளொளி பரப்பும் முகமலர்ச்சியுடன் அற்புதமான சிதாகாசமாகிய ஞான சபையில் ஆனந்த நடம் புரியும் மணியே, எப்பொழுதும் அழிவில்லாமல் ஒருதன்மையாய் விளங்கும் சுவாமியாவார், சிவகாமியம்மையை இடப்பாகத்தே கொண்ட சம்புவாகும் என்று வேதாகமங்களின் துணிவான மெய்ம்மை மொழியை, நம்பி எந்தை யென்று அறிவுடையோர் யாவரும் நின்னுடைய புகழைத் துதித்துத் தாம் செய்யும் வினைகளைப் பதி வினையாக மாற்றி, இன்பமுடன் இனிது வாழ்கின்றார்களாக, நிலவுலகில் ஏழையாகிய நான் ஒருவன், ஐயோ, மனக்கலக்கம் மிகவும் உற்று வாடுகிறேன்; இஃது என்னையோ? தெரிவித் தருள்க. எ.று.

தேவர் - தேவருலகில் வாழ்பவர்; முனிவர்களும் சித்தர்களும் எல்லா உலகங்கட்கும் சென்று வருபவர். கருடர்; காந்தருவர் விஞ்சையர் ஆகியோர், வானத்திலுள்ள தத்தமக்குரிய உலகங்களில் வாழ்பவர். கருடர் வாழும் நாட்டைக் காருடன் எனவும், விஞ்சையரை வித்தியா தரர் எனவும் புராணிகர் கூறுவர். சிவன் திருமுன் இவர்கள் பலரும் நின்று அப்பெருமானுடைய குறிப்பறிந்து பணி புரிபவர்களாதலால் "ஏவல் புரிய" எனக் கூறுகின்றார். வேள்வி தலைப்பட்டு வேத மந்திரங்களைக் கோடிக் கணக்கில் ஓதி வழிபடுவது மரபாதலால், "அந்தணர்கள் பல கோடி முகமனுட" என மொழிகின்றார். கோடி - இருபது கொண்டது என்பர்; நூறாயிரத்துக்கு மேற்பட்டது கோடி எனப்படுவதும் உண்டு. முகமனுடல் - முக மலர்ச்சியுடன் அகமலர்ந்து மொழிவது. அருள் முக விலாசம் - அருளொளி திகழும் முகப் பொழிவு. சந்ததம் - எப்பொழுதும். காலந்தோறும் மாறுபடும் உலகியற் பொருள் போலாது சிவபரம் பொருள் எஞ்ஞான்றும் ஒருதன்மைத் தாதல் விளங்க, "சந்ததம் அழியாமல் ஒருபடித்தாய் இலகும் சாமி" என வேதாகமங்கள் குறிக்கின்றனவாம். உமாதேவிக்கு சிவகாமி என்பதும் ஒரு பெயர். சம்பு - சிவன் பெயர்களில் ஒன்று. சாமி சம்புவாம் என இயையும். சம்பு - சுகத்தைச் செய்பவன். திருமால் பிரமன் ஆகிய தேவர்க்கும் இப்பெயர் பொதுவாயினும். சிவனுக்கே யுரித்தாக வுரைப்பது சான்றோர் மரபு. வேதமும் ஆகமங் களும் துணிந்து கூறினும், மெய்ம்மை விளங்குதல் குறித்து, "சத்ய மொழி" என நிறுவுகின்றார். நம்புதல் - விரும்புதல். சம்புவாய் ஆன்மாக் கட்கு அறிவும் இன்ப வாழ்வும் நல்குதலின் மெய்யறிஞர், எந்தையெனப்

போற்றுகின்றனர் என்றற்கு, "எந்தையே என்றறிஞர் யாவரும் நின் புகழை ஏத்தி" வழிபடுகிறார்கள் என்று உரைக்கின்றார். மெய்யுணர்வுடைய மேலோராதலால், பிறவிக் கேதுவாகிய வினைகளைப் புரியும் மன முதலிய பசுகரணங்களைப் பதிகரணங்களாக்கிப் பிறவி வேரறுக்கும் பெருமானுக்குரிய வினைகளைச் செய்தே இன்ப வாழ்வு பெறுகின்ற திறம் புலப்பட, "வினைதனை மாற்றியே இன்பமாய் இனிது வாழ்ந்திட" என மொழிகின்றார். கரணங்கள் மாறினாலன்றி, அவற்றாற் செய்யப்படும் வினைகள் மாறுமையின், "வினை தனை மாற்றியே" என எடுத்து மொழிகின்றார். "காணும் கரணங்களெல்லாம் பேரின்பமெனப், பேணுமடியார் பிறப்பகலக் காணும் பெருமான்" (பண்டாய) என் மணிவாசகப் பெருமானும், "பசு கரணங்க ளெல்லாம் பதிகரணங்களாக வசி பெறும் அடியார்" (தணிகை பு.) எனக் கச்சியப்ப முனிவரும் உரைப்பன காண்க. மலப் பிணிப்பால் உளவாகும் மறைப்புக்களும் பிறவி மயக்கமும் காரணமாக மனத்தின்கண் கலக்கமும் தெளிவின்மையும் உண்டாகின்றன என்பது உலகறிந்த உண்மையாதலால், அவற்றைக் கிளந்து கூறாமல், "அந்தோ சிந்தை யானது கலக்கங் கொண்டு வாடல் என் செப்புவாய்" என வேண்டுகின்றார்.

இதனாற் சிந்தை கலக்கமுற்று வாழ்க்கையைத் துன்ப மயமாக்குவதேன் என விண்ணப்பித்தவாறும். (8)

2609 நீறணிந் தொளிர்அக்க மணிபூண்டு சன்மார்க்க
நெறிநிற்கும் அன்பர்மனமாம்
நிலமீது வளர்தேவ தாருவே நிலையான
நிறைவே மெய் யருட்சத்தியாம்
வீறணிந் தழியாத நிதியமே ஒழியாத
விண்ணே அகண்டசுத்த
வெளியே விளங்குபர ஒளியே வரைந்திடா
வேதமே வேதமுடிவே
தூறணிந் தலைகின்ற பாவியேன் நின்திருத்
துணைமலர்த் தாட்குரியனாய்த்
துயர்தீர்ந் திளைப்பாறும் இன்பஅம் போதியில்
தோயஅருள் புரிதிகண்டாய்
ஆறணிந் திடுவேணி அண்ணலே அணிகுலவும்
அம்மைசிவ காமியுடனே
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : கங்கையாற்றைச் சடை முடியில் தாங்கிக் கொண்டிருக்கின்ற தலைவனே, பல்வேறு அணிகள் பூண்டு விளங்கும் அம்மையாகிய சிவகாமியுடன் அற்புத சிதாகாசகாகிய ஞான சபையின்கண் ஆடல் புரியும் ஆனந்த நடன மணியே, மேனியெல்லாம் திருநீற்றைப் பூசியும் விளங்குகின்ற அக்கமணி மாலைகளை முடியிலும் தோளிலும் மார்பிலும் அணிந்து கொண்டு சன்மார்க்கத்தில் நின்றொழுகும் மெய்யன்பர்களின் மனமாகிய நிலத்தின் மேல் வளர்கின்ற தேவதாருவே, குறைதலில்லாத

நிறை பரம்பொருளே, மெய்ம்மை சான்ற திருவருட் சத்தியாய வீறு தங்கிய குன்றாத செல்வமே, ஒடுங்குதலில்லாத ஆகாயமே, அளவிடப் படாத சுத்த பரவெளியே, அவ்வெளியிற் பரவித் திகழும் பரவொளியே, எழுதப் படாத வேதப் பொருளாயவனே, வேதத்தின் முடிபொருளே, குற்றம் நிறைந்து நிலையின்றி அலையும் பாவியாகிய யான் நின்னுடைய திருமிக்க இரண்டாகிய பாதங்கட்கு உரியவனாய்த் துன்பம் நீங்கி, இளைப் பாறுமாறு நினது இன்பக் கடலிற் குளிக்கும்படி அருள் புரிதல் வேண்டும். எ.று.

ஆறு என்றது கங்கையாறு; அதனைச் சடையில் தாங்குதல் பற்றி "ஆறணிந்திடு வேணி அண்ணலே" எனச் சிவனைப் பராவுகின்றார். அம்மை சிவகாமி என்று பெண்மை வடிவிற் கூறுவதால், அணி யென்பது பொன்னாலும் மணியாலும் ஆகிய அணிகலன்களைக் குறிப்பதாயிற்று. நீறணிதலும் அக்கமணிகளை மேனியிற் பூணுதலும் சிவவேடமாய்ச் சிவ நெறியாளர்க் கின்றியமையாதனவாகலின், "நீறணிந் தொளிர் அக்கமணி பூண்டு சன்மார்க்க நெறி நிற்கும் அன்பர்" எனக் குறிக்கின்றார். சிவநெறிக் குரிய பதி பசு பாசம் என்ற மூன்றும் சத்துப் பொருள்களாதலால், அந்நெறி சன்மார்க்க மாயிற்று. சன்மார்க்கமாகிய சிவநெறிக்கண் நின்று சிவன்பால் அன்பு செய்யும் அடியார்களைச் "சன்மார்க்க நெறி நிற்கும் அன்பர்" என்று சிறப்பிக்கின்றார். அப்பெருமக்கள் மனத்தின் கண் நின்று தளிர்த்து அருணிழல் செய்வதால், "அன்பர் மனமாம் நிலமீது வளர் தேவதாருவே" எனப் புனைகின்றார். தேவதாரு - தேவதரு என்னும் ஒரு வகை மரம்; கற்பக மரம் என்றலு முண்டு. குறைவுடைய நிலைகொள்ளாதாகலின், குறைவிலாத நிறைவை "நிலையான நிறைவே" என்று கூறுகின்றார். அருட் சத்தியே சிவனுக்குத் திருமேனி யாதலால், அச்சிறப்புப் பிறிது எப்பொருட்கும் இல்லாமை பற்றி "மெய்யருட் சத்தியாம் வீறணிந்து" என விளம்புகிறார். "நீடுபராசத்தி நிகழ் இச்சா ஞானநிறைகிரியை தர அதனை நிமலன் மேவி நாடரிய கருணை திருவுருவ மாகி" (சிவப். 14) என்று உமாபதி சிவம் உரைப்ப தறிக. ஏனைச் செல்வங் கள் போல அருட் செல்வம் அழிவ தின்மையின், "அழியாத நிதியமே" என்கின்றார். விண் - ஆகாசம். அணு முதல் அண்ட மனைத்திலும் உள்ளும் புறமும் நீக்கமறக் கலந்திருப்ப தெனத் தத்துவ நூல்கள் கூறுவ தால், "ஒழியாத விண்ணே" என விளம்புகிறார். ஆகாசத்துக்கு இடமா வது பிறிதேதும் கலவாத சுத்த வெளியாதலால், "அகண்ட சுத்த வெளி" எனவும், அது பரம்பொருளுருவாய்த் தன்கண் பரசிவத்தின் ஞானவொளி நிலவ விளங்குவது கொண்டு "விளங்கு பரவொளியே" எனவும் இசைக் கின்றார். உலகிலும் உலகுகளைத் தன்கட் கொண்ட அளவிறந்த அண்டங் களிலும் உள்ள ஒளிகட் கெல்லாம் ஒளி நல்கும் உயர்ந்த ஒளியாதலால் "பரவொளி" எனச் சிறப்பிக்கின்றார். வேதங்களை எழுதாக் கிளவி என நூலோர் கூறுவதால், "வரைந்திடா வேதமே" என்கின்றார். இப்போது வேதமென வழங்குவன இருக்கு யசுர் சாமம் அதருவம் என நான்காக வரையப்பட்டிருத்தலின், அவற்றிற் கெல்லாம் முதலான வேதத்தை "வரைந்திடா வேதமே" என்கின்றார் எனினும் பொருந்தும். வேத நூல் களின் கருத்துப் பரம்பொருளுண்மை யுணர்த்துவதாகலின், "வேத முடிவே" என மொழிகின்றார். தூறு- குற்றம். மலமாயை கன்மங்களின் மறைப்பாலும் மயக்கத்தாலும் குற்றம் நிறைதலாலும் அவற்றால்

உளவாகும் துன்பங்களை யாற்ருது அலைதலாலும், ''தூறணிந் தலைகின்ற பாவியேன்'' எனத் தம்மை பேசுகின்ருர். துணை, இரண்டு. மலர்த்தாள் தாமரை மலர் போலும் திருவடிக் குரிமை திருவருள் ஞானத்தால் உளதாவ தாகலின், முதற்கண் அதன் இன்றியமையாமை தோன்றத் ''துணை மலர்த் தாட்குரியனுய்'' என்றும், திருவடி உயிர்களின் துயர் துடைக்கும் மருந்தா மென்பதனுல், ''துயர் தீர்ந்து'' என்றும், பல் பிறவிகளிலும் துயருறுவதே தொழிலாகி இளைத்தமை புலப்பட, ''இளைப்பாறும்'' என்றும், அவ்விடத்துப் பெருகும் இன்பம் கடல் போறலின், ''இன்ப அம்போதியில் தோய அருள் புரிதி கண்டாய்'' என்றும் இசைக்கின்ருர். அம்போதி - கடல். கண்டாய் - முன்னிலையசை.

இதனுல் திருவடிக்குரியனுக்கி இன்பக் கடலில் மூழ்கி மகிழ அருள் செய்க என வேண்டிக் கொண்டவாரும். (9)

2610 மணிகொண்ட நெடியஉல காய்அதில் தங்கும்ஆன்
மாக்களாய் ஆன்மாக்களின்
மலமொழித் தறியாத பெருவாழ் விளைத்தரும்
வள்ளலாய் மாருமிகத்
திணிகொண்ட முப்புரா திகளெரிய நகைகொண்ட
தேவாய் அகண்டஞானச்
செல்வமாய் வேலேந்து சேயாய் கஜானனச்
செம்மலாய் அணையாகவெம்
பணிகொண்ட கடவுளாய்க் கடவுள ரெலாம்தொழும்
பரமபதி யாய்எங்கள் தம்
பரமேட்டி யாய்ப்பரம போதமாய் நாதமாய்
பரமமோ க்ஷாதிக்கமாய்
அணிகொண்ட சுத்தஅனு பூதியாய்ச் சோதியாய்
ஆர்ந்துமங் களவடிவமாய்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

உரை : எண்ணிறந்த வகையினவான மணிகளையுடைய இவ் வுலகமாயும், இதன் கண் எண்ணற்காகாமல் உறையும் ஆன்மாக்களாயும், அவ்வான்மாக்களை இயல்பாய்ப் பற்றியிருக்கும் மலவிருளைப் போக்கி, அழியாத பெருவாழ்வை நல்கும் வள்ளன்மை யுடையனுய்; தன்ளுேடு மாறுபட்ட மிகவும் வலியரான திரிபுர வசுரர்கள் எரிந்து கெடுமாறு நகைத்தழித்த தேவனுய்; அளத்தற்கரிய பெருஞானமாகிய செல்வமாய்; வேற்படையைக் கையிலேந்துகிற முருகனுய்; யானை முகத்தையுடைய தலைவனுய்; படுக்கையாகக் கொடிய பாம்பைக் கொண்ட கடவுளாகிய திருமாலாய்; ஏனைத் தேவர் எல்லாரும் தொழுதேத்தும் பரமபதியாய்; எங்கட்கெல்லாம் பரமேட்டியாய்; பரம ஞானமாய்; நாத தத்துவமாய்; மேலான மோட்சத்துக்குத் தலைமையாய்; அழகிய சுத்த நிலையிற் பெறும் அனுபவமாய்; அருட்சோதியாய் நிறைந்து மங்கல வுருவில் அற்புதமான சிதாகாசமாகிய ஞானசபையின்கண் கூத்தாடுகிற ஆனந்த

நடனத்தைப் புரியும் சிவமாகிய மாணிக்க மணியே, வணக்கம். எ. று.

உலகில் காணப்படும் மணிவகைகள் மிகப் பலவாதல் தோன்ற, "மணி கொண்ட நெடிய வுலகு" எனப் பொதுப்பட மொழிகின்றார். மணி கொண்ட வுலகமெனப் புகழ்ந்தோதியது, தன்கண் வாழும் அறிவுடைய ஆன்மாக்களை மணிகளாலான செல்வ மயக்கம் தந்து விரும்பச் செய்தற்கென அறிக. ஆன்மாக்களின் வேருயினும் "அவையேயாய்"க் கலந்து நின்று வாழ்வித்தல் பற்றிப் பரமனை, "அதில் தங்கும் ஆன்மாக்க ளாய்" எனவும், அக் கலப்பால் ஆன்மாக்கள் செய்வன செய்து மலவிருளின் நீங்கி "அந்தமில் இன்பத்து அழிவில் வீடு" பெறவருளும் சிறப்பு விளங்க, "ஆன்மாக்களின் மலமொழித்து அழியாத பெரு வாழ்வினைத் தரும் வள்ளாய்" எனவும் கூறுகின்றார். சிவனருட் பேற்றுக்குரிய நெறி கொள்ளாது மாருய நெறி மேற்கொண்டு உலகுயிர்கட்குத் தீங்கு செய்தும் பிறரால் வெல்லுதற்கரிய வலிமை யுற்றும், பொன் வெள்ளி இரும்பாகிய மூன்ருலும் மூன்று மதில் சூழ்ந்த நகரமைத்துச் செருக்கியும் வானத்தே திரிந்தவர்களாதலால், திரிபுரத் தசுரர்களை, "மாறும் மிகத் திணிகொண்ட முப்புராதிகள்" என்றும், அவர்களுடைய மதில் சூழ்ந்த முப்புரத்தையும் அவர்களின் படை வகை வலிமைகளையும் தனது முறுவல் நகைப்பிற் பிறந்த தீயால் எரித்து நீறுபடுத்திய திப்பியத் திறத்தை "முப்புராதிகள் எரிய நகை கொண்ட தேவாய்" என்றும் இயம்புகின்ருர். "விண்ணிலார் இமையவர் மெய்ம் மகிழ்ந் தேத்தவே, எண்ணிலார் முப்புரம் எரியுண நகை செய்தார்" (மழபாடி) என ஞானசம்பந்தர் கூறுதல் காண்க. முருகப்பெருமானை ஞானமூர்த்தி என்பதுபற்றி, "அகண்ட ஞானச் செல்வமாய்" எனவும் அருட்சத்தியை வேற்படையாகக் கையில் ஏந்துதலால், "வேலேந்து சேயாய்" எனவும் புகல்கின்ருர். சிவனே முருகனுய் விளங்கும் திறம் கூறியவாறும். அகண்டம் - அளப்பரியது. கயம் - யானை; அதனுல் ஆனை முகப் பெருமானைக் "கயானைச் செம்மலாய்" என வுரைக்கின்ருர். "செம்மலாய்" என்றது ஆயவன் சிவன் என்றற்கு. பாம்பைப் படுக்கை யாகக் கொண்ட கடவுள், திருமால். கடவுள், தெய்வம் என்னும் பொருளில் வந்தது. தேவரெல்லாம் தொழ நின்ற தேவதேவனுதலால், சிவனைக் "கடவுளரெலாம் தொழும் பரமபதியாய்" என்கின்ருர். பரமபதி - மேலான தலைவர். "தொழப்படும் தேவர் தொழப்படுவான்" (தனி) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. மானிட வுருவில் பரமகுருவாய்த் தோன்றித் தீக்கையும் ஞானமும் நல்குதலால், "எங்கள் தம் பரமேட்டியாய்" என்றும், அவனருளும் பரஞானமும் பரம்பொருளும் அவனே என்றற்குப் "பரம போதமாய்" என்றும், நாதம் - நாத தத்துவர்; அது ஞான மயமாய்ச் சிவனெனப் படுதலின், "நாதமாய்" என்றும் உரைக்கின்ருர். பரம இஷ்டன் என்பது பரமேஷ்டியாகித் தமிழிற் பரமேட்டியாயிற்று. சிவன் முதலிய மூவரையும் தனித்தனியே பரமேட்டி என்பது வழக்கு. போதம் - ஞானம். நாத தத்துவம் - சுத்த மாயையின் உச்சியிலுள்ள சிவதத்துவம்; இங்கே சிவம் ஞானமயமாய்த் தோய்தலின் இவ்வாறு குறிக்கப்படுகிறது. "ஞானமேயானபோது சிவன்" (சிவ. சித்தி: 1:65) என்பது காண்க, முத்தி யுலகிற்கு முதல்வனுதலால், "பரமமோட் சாதிக்கமாய்" எனக் கூறுகிறுர்.

ஆதிக்கம் - அதிகாரம்; தலைமையுமாம். சுத்தாவத்தையுற்ற ஆன்மா பெறும் சிவானந்தானுபவம் "சுத்த அனுபூதி" எனவும், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாதலால், ''சோதியாய்'' எனவும் இயம்புகிறார். ஆர்தல் - நிறைதல். மங்கள வடிவம் - சிவ மூர்த்தம். "சிவனுய மூர்த்தி அவனும் நமக்கோர் சரணே" (தசபுரா) என்று திருநாவுக்கரசர் தெரிவிப்பது அறிக:

இதனால் பரசிவத்தின் பரமாம் தன்மை முதல் சிவமூர்த்த வியப் பீருகக் கூறியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

5. எதிர்கொள் பத்து

கைக்கிளைத் திணையில் ஆடவனொருவன் நங்கையொருத்தியின் கவின் கண்டு கருத்திழந்து பேசுவதும், நங்கையொருத்தி காட்சி நலமுடைய கட்டழக னொருவனைக் கண்டு காதலுறுவதும் பேசப்படும். காதலிக்கப்பட்டார் கருத்தறியாமல் காதலர் உள்ளத்தில் தோன்றும் காதல் ஒருதலைக் காதலாகும். இருவரும் ஒருவரையொருவர் கருத்தறியாமல் காதல் வேட்கையுற்று வருந்துவது இதன்கண் நிகழும் செயலாகும். சிவபெருமானைக் கண்ட நங்கை காதலன்பு மீதூர்ந்து அவனையே பலபட நினைந்து நினைந்து வருந்துகிறாள். நினைவு மிக்கவள் பெண்மைத் தன்மையால் அவன்பால் நேரிற் சென்று காண்டலும் உரையாடலும் கூடாமையால் வருத்தம் மிகுகின்றாள். இளமைப் பருவம் துடிப்பு மிகுந்து அவளை அலைக்கின்றது. காட்சி யாசையால் கையறவு கொள்கிறாள். இரவின்கண் கனவு தோன்றி அவட்குக் கலக்கம் விளைவிக்கின்றது. பல்வகைக் காட்சிகளாலும் சொல்லாட்டுக்களாலும் செயல்வகைகளாலும் மறந்தொழியும் மனம் இரவின்கண் தனித்துறும் நிலையால் காதல் நினைவு மிகுந்து கனவுக் காட்சிகளைக் காட்டுகிறது. காதலனை மெய்போலக் காட்டி அவனை மெய்யுறத் தீண்டுவது போலவும் உரையாடுவதுபோலவும் பூவும் பிறவு மாகிய இன்பப் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதுபோலவும் காட்சிகள் தோன்றி அவளது உறக்கத்தைக் கெடுக்கின்றன. கனவிற் காதலனைக் கண்டபோது புலவி மேற்கொண்டு தான் அவனோடு பிணங்குவது, கூடற்கண் கையகன்று கண் விழிப்புறுவதும் கனவு நிலைகளாகின்றன. நனவில்கனவிடை நிகழ்ந்ததை நினைந்து இனிப் பிணங்குவதின்றிக் கூடற்கண் செயல்படுவது நன்றெனத் துணிந்து இன்றிரவு கனவின்கண் கண்ணுதற் பெருமான் நேற்று முன் தினங்களிற் போந்ததுபோல வருவான்; வரக்கண்டதும் புலத்தலைக்கொள்ளாமல் இன்ப அன்பு நெறி மேற்கொண்டு வணங்கி வரவேற்பேன் எனத் தனக்குட் சொல்லிக் கொள்கிறாள். இப்பத்தில் வரும் பாட்டுக்கள் இதுவே கருத்துடையவை யாகையால், எதிர்கொள் பத்து எனப்படுகின்றன.

பத்தி நெறிக் காதலுறவு, சிவபெருமானொடு மேவுவதால், அப் பெருமானுடைய குணநலங்கள் இப் பத்தின்கண் ஓதப்படுகின்றன. சிவன் மோன நெறி முதல்வன்; அன்பு செய்யத் தலையளிப்பதும் அருள் புரிவதுமுடையன்; பொருள்கட்கு ஆதியாதலும், தனக்கு ஆதியந்த மின்மையும் உடையவன்; தொண்டர்க்குத் தூதாம் எளிமையும், உயிர் கட்குத் துன்ப நீக்கிச் சுகம் தருவதும், எல்லார்க்கும் நல்லவனாவதும், வினையிருள் போக்கி ஞானமருள்வதும், பார் முதல் அண்டங்களைப் படைத்தளித்தலும் இயல்பாகவுடையவன்; உணர்வார் உணர்ந்து பரவும்

உண்மையன் என்பனவாகிய கருத்துக்கள் சிறப்பாக வுரைத்துப் போற்றப் படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2611. ஆனந்தக் கூத்தனை அம்பலத் தானை
அற்புதத் தேனைஎம் ஆதிப்பி ரானைத்
தேனந்தக் கொன்றைஅம் செஞ்சடை யானைச்
செங்கண்வி டையனை எங்கண்ம ணியை
மோனந்தத் தார்பெறும் தாளந்தத் தானை
முத்தனை முத்தியின் வித்தனை முத்தை
ஈனந்தக் காதெனை ஏன்றுகொண் டானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை: ஆனந்தக் கூத்தாடுபவனும், தில்லையம்பலத்தையுடையவனும், அற்புதமான தேன் போன்றவனும் எங்கள் ஆதி முதல்வனும், தேன் மிக்குறும் கொன்றை மலர்மாலை சூடிய சிவந்த சடையை யுடையவனும், சிவந்த கண்களையுடைய எருதை யூர்தியாகவுடையவனும் எமக்குக் கண்மணி போன்றவனும், மவுன யோகத்தின் முடிவு கண்ட பெரியோர்கள் பெறுகின்ற பதமுத்தியின் அந்தமாகிய முத்தியை யுடையவனும், முத்தி நல்குபவனும், முத்திப் பேற்றுக்குக் காரணமானவனும்: முத்துப் போல்பவனும், என்பாற் குற்றம் பொருந்தாதவாறு என்னைத் தன்பால் ஏற்றுக்கொண்டவனுமாகிய சிவபெருமானை இன்றிரவு கனவிற் கண்டு எதிர்கொள்ளாதொழியேன். எ.று.

நங்கையொருத்தி சிவபெருமான்மீது ஆராக் காதலுற்று வருந்துகிறாள். பகல் முழுதும் அவனை நினைந்து நினைந்து உருகுகிறாள். பகற்போதில் யான் அப்பெருமானைக் காணவில்லையெனினும் இரவிலேனும் கனவிற் கண்டு எதிர் கொண்டு இன்புறுவேன் எனத் தன் தோழிக்கு உரைக்கின்றாள். தில்லையம்பலத்தில் அப்பெருமானைக் கூத்தாடும் நிலையிற் கண்களாற் கண்டுளா ளாதலின் "ஆனந்தக் கூத்தன்" என்றும், "அம்பலத்தான்" என்றும் எடுத்த எடுப்பிலே இயம்புகின்றாள். காண்கின்ற கண்ணும் கருதும் மனமும் இன்பம் நிறையத் தோன்றலின், இறைவனது திருக்கூத்தை, "ஆனந்தக் கூத்து" என்றும், அக்கூத்தை யாடும் அரங்கமும் அவனதாகலின், அதுவும் அவனைக் கண்டாற் போல இன்பம் தருதலால், "அம்பலத்தான்" என்றும் கூறுகின்றாள். கூத்தும் அம்பலமும் இடத்து நிகழ்வும் இடமுமாய் இயைந்து தரும் இன்பம் உலகிற் காணப்படாத தேனினும் மிக்கிருத்தல் விளங்க, "அற்புதத் தேன்" என அறிவிக்கின்றாள். பிரான் - தலைவன். ஆதி முதல்வன் என்பது கருதி "ஆதிப் பிரான்" என இசைக்கின்றாள். தேனந்தக் கொன்றை, தேன் நந்து அக் கொன்றை எனப் பிரிந்து, தேன் மிக்குப் பெருகும் அந்தக் கொன்றை மலர் என வரும். சிவனுடைய செஞ்சடையிற் சூடிய கொன்றை மலர் மாலை அப்பெற்றியதாய் உளது என்பாளாய், "தேனந்தக் கொன்றையஞ் செஞ்சடையான்" என்று சிறப்பிக்கின்றாள். சிவன் ஊரும் எருது திருமால் என்பவாகலினாலும், திருமாலின் கண்கள் இயல்

பாகவே சிவந்தவையாதலாலும், "செங்கண் விடையான்" எனவும், அவன்பால் உளதாகிய காதலன்பின் பெருக்கத்தாற் பிறக்கும் பெருமிதம் பற்றி, என் கண்மணி போல்பவன் என்னுமல், "எம் கண்மணி" எனவும் இசைக்கின்ருள். மோன அந்தத்தார் என்பது மோனந்தத்தார் என்று வந்தது. மௌனம் மோன் மெனவும், மௌனி - மோனியெனவும் வழங்கும். "மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம் புரியும் முதுகுன்றமே" என ஞானசம்பந்தர் உரைப்பர். மோன யோக மேற்கொண்டு முற்றி அதன் முடிவிலிருக்கும் முனிவரரை, "மோனந்தத்தார்" என்றும், அவர் பெறற்குரிய சாரூப பதத்தின் முடிவிடத்தே சிவன் எழுந்தருளுதலால், "மோனந்தத்தார் பெறும் தானந்தத்தான்" என்றும் கூறுகின்ருள். தான அந்தத்தார், தானந்தத்தார் என வந்தது. தானம் - பதம். முத்தி முதல்வனை "முத்தன்" என்பது மரபு. முத்திப் பேற்றுக்கு ஏதுவாகிய சிவஞானம் நல்குவதால் சிவனை "முத்தியின் வித்தன்" என மொழிகின்ருள். வித்தாகியவன் வித்தன் எனப்படுவ தாயிற்று. முத்து - ஆகு பெயர். ஈனம் - குற்றம். ஞானத்திலும் ஒழுக்கத்திலும் குற்றம் குறைவு உண்டாகாமல் காத்தாண்டமை புலப்பட, ஈனம் தக்காது எனை ஏன்று கொண்டான்" எனவும், நனவின்கண் என்பால் வாரானுயினும் கனவின்கட் போதருவனுதலால் இன்று இரவு கனவின்கண் அவனைக் கண்டு காதல் வெம்மை குளிர எதிர் கொண்டு ஏற்று மகிழ்வேன் என்பாளாய், "இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே" எனவும் சொல்லுகின்ருள்.

இக்கருத்தே பொருளாக இப்பத்திலுள்ள பாட்டனைத்தும் அடுக்கி நிற்பதலால், ஒருபொருள் மேல் பத்தடுக்கி வந்த பத்து என அறிக. வாழாப் பத்து, அருட் பத்து என மணிவாசகர் பாடியிருப்பது காண்க. (1)

2612. அடுத்தவர்க் கெல்லாம்அ ருள்புரி வானை
அம்பலக் கூத்தனை எம்பெரு மானைத்
தடுத்தெமை ஆண்டுகொண் டன்பளித் தானைச்
சங்கரன் தன்னைஎன் தந்தையைத் தாயைக்
கடுத்ததும் பும்மணி கண்டத்தி னுனைக்
கண்ணுத லானைஎம் கண்ணாக லானை
எடுத்தெனைத் துன்பம்விட் டேறவைத் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை: தன்னுடைய திருவருளை நயந்து அடியடைபவர்க் கெல்லாம் அருள் நலம் தருபவனும், அம்பலத்தில் ஆடல் புரியும் கூத்துப் பிரானும், எங்கட்குப் பெருமானும், நில்லாப் பொருள் மேற்செல்லும் எமது கருத்தைத் தடுத்து நிலேத்த தன் அருட் செல்வம் பெறுமாறும் ஆண்டு தன்பால் செய்தற்குரிய அன்பை அளித்தவனும், சங்கரனும், எனக்குத் தந்தையும் தாயுமானவனும், விடம் தங்கித் தோன்றும் நீல மணி போலும் கழுத்தை யுடையவனும், கண் பொருந்திய நெற்றியை யுடையவனும், என் கண்களினின்றும் நீங்காதவனும், துன்பக் குழியினின்றும் விடுவித்து எடுத்து இன்பக் கரையிடத்தே வைத்தவனு

மாகிய சிவபெருமானை இன்று இரவு கனவிற் கண்டு அன்புடன் எதிர் கொண்டு மகிழ்வேன். எ.று.

தன்னுடைய திருவருள் ஞான வின்பத்தைப் பெற விரும்பி அன்புடன் அடைந்தவர்க்கு அவர் விரும்பியவண்ணம் நல்கும் சிவனது அருண லத்தை "அடுத்தவர்க் கெல்லாம் அருள் புரிவான்" என்றும், உலகியல் இன்பம் நிலையின்றி மாறுமியல்பிற்றுதலை யுணராது அதன் மேற் செல்லும் செலவைத் தடுத்து மெய்யறிவு தந்து தன்னை நினைவித்து ஆன்மாக்களை யுய்யக் கொள்ளும் இயல்பினனுதலை, "தடுத்தெமை ஆண்டுகொண்டு அன்பளித்தான்" என்றும் உரைக்கின்றுள். இன்ப நினைவைத் தடுத்தமைக்கு வெகுளும் உள்ளத்தில் வெறுப்புண்டாகாவாறு தடுத் தாண்ட தன்பால் அன்பு தோன்றுவித்தமை பற்றி "அன்பளித்தான்" என விளக்குகின்றுள். அவன் அருளினு லன்றி ஆன்மாக்கட்கு அவன் பால் தோன்றுதலும் சிறத்தலும் இல்லையாம் என்பதாயிற்று. இவ்வண்ணம் அன்பளித்த தலைவன், இன்பத்துக்கு மறுதலையான துன்பத்தில் தோய்ந்த ஆன்மாக்களை அத்துன்பப் படுகுழியினின்றும் கரையேற்றி இன்ப வாழ் வில் உய்ப்பது புலனுமாறு, "எடுத்தெனைத் துன்பம் விட்டு ஏற வைத் தான்" என இயம்புகின்றுள். சங்கரன் - சுகத்தைச் செய்பவன். கடு - விடம். ததும்புதல் - மிக்கு விளங்குதல். மணிகண்டம் - நீலமணி போலும் நிறமும் ஒளியுமுடைய கழுத்து. கண்ணுதல் - கண் பொருந்திய நெற்றி. கண்ணகலான் - கண்ணினின்றும் நீங்காதவன்.

இதனுல், அருள் புரிபவனும் அன்பு அளிப்பவனும் துன்பத்தினின்றும் கரையேற்றி உய்விப்பவனும் ஆகிய சங்கரனைக் கனவிற் கண்டு எதிர் கொண்டு மகிழ்வேன் என்று சொல்லியவாறும். (2)

2613. மாலயன் தேடியும் காணுமலையை
வந்தனை செய்பவர் கண்டமருந்தை
ஆலம்அமுதின்அருந்தல்செய் தானை
ஆதியை ஆதியோ டந்தமி லானைக்
காலன்வருந்திவி ழவுதைத் தானைக்
கருணைக்க டலைஎன் கண்ணனை யானை
ஏலமணிகுழ லாள்இடத் தானை
இன்றைறிரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை: திருமாலும் பிரமனும் தேடி வருந்தியும் காணப்படாத திருவடியும் திருமுடியுமுடைய மலை போன்றவனும், வழிபடுவோர் துன்ப நீக்கற்குக் கைகண்ட மருந்து போல்பவனும், கடல் விடத்தை அமுது போல வுண்டவனும், ஆதி முதல்வனும், தனக்கு ஆதியும் முடிவுமில்லாத வனும் உயிர்களை வருத்தும் நமனும் வருந்தி வீழுமாறு உதைத்தவனும் கருணையிற் கடல் போன்றவனும், என் கண்களையொப்பவனும், ஏல மணிந்து மணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியை இடப்பாகத்தில் உடையவனுமாகிய சிவபெருமானை இன்றிரவு கனவிற் கண்டு எதிர் கொண்டு மகிழ்வேன். எ.று.

பசுபாச ஞானங்களாற் பார்த்தற் கரியவன் என்ற உண்மையைப் புலப்படுத்தற்குப் பசுத் தன்மையின் உருவாய்த் திருமாலும், பாச ஞான மாகிய நூலறிவின் உருவாய்ப் பிரமனும் முறையே சிவத்தின் திருவடியும் திருமுடியும் காண முயன்று அரிதிற்றேடியும் மாட்டா தொழிந்த மாண்பைக் கூறுவாளாய், "மாலயன் தேடியும் காணுமலே" எனக் கூறு கின்ருள். செம்மலையைப் போலச் சிறப்புடன் நின்ருனயினும் இருவரும் கண்டிலர் என்றற்கு "மலே" என வுரைக்கின்ருள். உடல் கருவி கரணங் கள் நோயுற்று வருந்துவோர் மருந்து மந்திரங்களால் தீராமை காண்பவர், சிவனே வழிபடுவதே மருந்தாகக் கொண்டு வழிபட்டுப் பயன் பெறுவது இயல்பாதலால், "வந்தனே செய்பவர் கண்ட மருந்து" என மொழி கின்ருள். தலைமுறை தலைமுறையாக வுண்டு பயின்று பலன் கண்டது என்பாள், "கண்ட மருந்து" என்று இயம்புகின்ருள். ஆலம், ஈண்டு அமரர் கடல் கடைந்த போது தோன்றிய கொடியவிடம். அமுதுண்ட தேவர் சாகவும், தான் அவ்விடத்தை யுண்டு சாகா நிலை பெற்றது பற்றி, "ஆலம் அமுதின் அருந்தல் செய்தான்" என அறிவிக்கின்ருள். "தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே" (புகலூர்) எனத் திருநாவுக்கரசர் செப்புவது காண்க. பல்வேறு உலகங்கள் பொருட்களாக அனைத்தின் தோற்றத்துக்கும் ஆதியானவன் என்பது பற்றி "ஆதி" எனவும், தனக்கொரு தோற்றமும் முடிவுமில்லாதவன் என்றற்கு "ஆதியோடு அந்தமிலான்" எனவும் மொழிகின்ருள். கால மறிந்து உயிர்களை அவ்வவ் வுடம்பினின்றும் நீக்கும் முதல்வன் யான் எனச் செருக்கிய நமனைத் திருவடியால் உதைத்து வீழ்த்து மேம் பட்டதைக் குறித்தற்குக் "காலன் வருந்தி வீழ வுதைத்தான்" என்று கூறு கிருள். எனவே, சிவ வழிபாடு சாவச்சம் போக்கும் தகைத்து என வற்புறுத்திஞளாயிற்று. பேரருளாளன் என்பது கொண்டு, "கருணைக் கடல்" என்றும், காண்டற் கரிய பரமநிலையைக் காணச் செய்தலின், "கண்ணனையான்" என்றும் எடுத்துரைக்கின்ருள். "சடை மிசைப் பிறை நிறைவித்த பேரளாளனர்" (கழுமலம்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. ஏலம் - மகளிர் கூந்தற் கிடும் நறுமணப் பொருள். "ஏல மேலும் நற்குழலி பங்கனே" (சதக. 98) எனத் திருவாசகம் குறிப்ப தறிக. இடத்தான் - இடப்பாகத்தில் உடையவன். இரவுப் போதில் தோன்றும் கனவு பயன் விளைவிக்கும் என்ற கருத்திஞல், "இன்றை யிரவில்" என எடுத்து மொழிகின்ருள்.

இதனல், இறைவன் ஆல முண்டருள் புரிந்ததும் ஆதியாதலும் ஆதியந்த மிலனுதலும் கூறி அப்பெற்றியானை இரவிற் கனவில் எதிர் கொண்டேற்று மகிழ்வேன் என்கிருளாம். (3)

2614. சுந்தரர்க் காகமுன் தூதுசென் ருனைத்
தூயனை யாவரும் சொல்லரி யானைப்
பந்தம்அ றுக்கும்ப ராபரன் தன்னைப்
பத்தர்உ ளங்கொள்ப ரஞ்சுட ரானை
மந்தர வெற்பின்ம கிழ்ந்தமர்ந் தானை
வானவர் எல்லாம்வ ணங்கநின் ருனை
எந்தமை ஆண்டுநல் இன்பளித் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை : சுந்தர மூர்த்தியாகிய தொண்டர் பெருந்தகையின் பொருட்டுத் திருவாரூரில் பரவையார் மாளிகைக்குத் தூது சென்றவனும், தூய்மையே யுருவாயவனும், மெய்யுணர்வு படைத்த யாவராலும் இத்தன்மைய னென்று சொல்ல வொண்ணுதவனும், பிறவித் தொடர் பறுக்கும் பராபரனும், மெய்யன்பர் திருவுள்ளத்தில் எழுந்தருளும் பரஞ் சுடரானவனும், மந்தர மலையில் விருப்புடன் வீற்றிருப்பவனும், தேவ ரெல்லாம் தொழுது வணங்குபவனும், எம்போல்வாரை ஆட்கொண்டு சிவானந்தம் நல்குபவனுமாகிய சிவபிரானை இன்றிரவு கனவின்கண் எதிர்கொண்டேற்று இன்புறுவேன். எ.று.

திருவாரூரிற் பரவையார் கொண்ட புலவியைத் தீர்க்குமாறு வேண்டிக் கொண்ட நம்பியாரூரர் பொருட்டுத் திருவாரூர் இறைவன் தூது சென்று பிணக்கு நீக்கிக் கூடி மகிழ்வித்த அருட் செயல் கனவிலேனும் கண்டு எதிர்கொண்டு கூடி யின்புற விழையும் நங்கை நினைவில் எழுவதால், "சுந்தரர்க்காக முன் தூது சென்ருன்" எனச் சிவபெருமானைச் சிந்திக்கின்ருள். நம்பியாரூரரைச் சுந்தரர் என்றும் சுந்தரமூர்த்தி யென்றும் வழங்குவ துண்மையின், "சுந்தரர்க்காக" என்று சொல்லுகின்ருள். கூறியது கூறுவோர், தான் வகுத்துக் கூறுவோர் எனத் தூதுவர் இருவகையினர் உண்டெனினும், தான் வகுத்துக கூறும் தூதராகச் சிறப்புறச் சென்றமை பற்றி, "தூது" எனப் பொதுப்பட மொழி கின்ருள். இதனல் இறைவனது எளிமைத் திறம் எடுத்துக் காட்டப் படுகிறது. மகளிர் மணக்குத் தூது போவது தூய தன்ருயினும், மெய் யன்பர் பொருட்டு உண்மைப் பணி புரிவது தூயதாதல் பற்றி, சிவனை, "தூயன்" என்றும், தூய்மையின் உண்மை யுருவாகிய இறைவனது இறைமைத் தன்மை, எல்லாம் உணர்ந்து உரைக்க வல்லார்க்கும் இயலாத செயலாதலால், "யாவரும் சொல்லரியான்" என்றும் இசைக் கின்ருள். யாவரும் என்பதன்கண் மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது. தூது போயது சுந்தரர்க்கும் பரவையார்க்கும் இன்பத் தொடர்பு தோற்று விக்கும் உலகியற் பந்தம் போல்வதாயினும், சிவனது திருவருள் பந்தத்தின் பயன் நுகர்விக்கு மாற்றுல் தொடர்பறுக்கும் நற்செயலாதல் விளங்க, "பந்தம் அறுக்கும் பராபரன்" எனப் பகர்கின்ருள். பரன் - மேலாயவன்; அபரன் - கீழாயவன்; பராபரன், மேலோனுய் முத்தியின்பம் நல்குபவன் கீழோனுய், உலகிய லின்பம் வழங்குகிருன் என்ற குறிப்புத் தோன்ற, "பராபரன்" எனக் கூறுகின்ருள். பத்தர், பத்தியுடையவர்; மெய்யன்பர் என்பது கருத்து. அன்பர்களின் மனமாகிய கோயிற்கண் எழுந்தருளி, அவர் கருத்தறிந்து முடிக்கும் இயல்பினனுதலால், "பத்தர் உளங்கொள் பரஞ்சுடரான்" என இசைக்கின்ருள். பரஞ்சுடர், நுண்ணுணர்வாகிய ஒளி. உள்ளிருந்து உயரிய உணர்வொளி நல்கு பவனைப் "பரஞ்சுடரான்" என வுரைக்கின்ருள். "நெதிய மொன்னுள போகமற் றென்னுள நிலமிசை சலமாய, கதிய மென்னுள கருதிய பொருள் கூடின்" (அம்பர். மாகாளம்) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க. மந்தரமலை - குலமலைகள் ஏழனுள் ஒன்று; மேருமலையையும் மந்தர மென்பதுண்டு. கயிலாயத்தையும் இப்பெயராற் குறிப்பர் புராணிகர். "கயிலாயம் தம்மிடமாக் கொண்டார் போலும்" (ஆக்கூர்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது நோக்குக. இன்பமும் துன்பமும் நுகரும் மக்களை நோக்கிப் போகமே நுகரும் வானவர் பரவுவது ஏற்ற

மாதலால், "வானவ ரெல்லாம் வணங்க நின்றான்" எனப் புகழ்கின்றாள். "பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மான்" (புள்ளிருக்கு) என்று பெரியோர் புகன்று கூறுவர். எம்மைப் போலும் எளியவ ருள்ளத்திலும் அன்பு தோன்றப் பண்ணி வணங்கி வாழ்த்தி இன்புறுவிக்கின்றான் என்பாளாய், "எந்தமை யாண்டு நல்லின்பளித்தான்" என நயம்பட மொழிகின்றாள். நாளை பின்னை என்னாமல் இன்றை யிரவே என் கனவில் வருவார் என்று களிக்குமாறு புலப்பட, "இன்றை யிரவில் எதிர்ந்து கொள்வேனே" என இயம்புகின்றாள்.

இதனால், தொண்டர்க்குத் தூதராம் எளிமையுடைய இறைவன் என் உள்ளத்திருந்து கனவிற் காட்சி தரக் கண்டு எதிர் கொண்டு இன்புறுவேன் என்றதாம். (4)

2615. அன்பர்கள் வேண்டும்அ வைஅளிப் பானை
அம்பலத் தேநடம் ஆடுகின் றானை
வன்பர்கள் நெஞ்சில்ம ருவல்இல் லானை
வானவர் கோனைஎம் வாழ்முத லானைத்
துன்பம்த விர்த்துச்சு கங்கொடுப் பானைச்
சோதியைச் சோதியுள் சோதியை நாளும்
என்பணி கொண்டெனை ஏன்றுகொண் டானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை: அன்பராயினார் வேண்டுவன அனைத்தையும் தருபவனும், அம்பலத்தின்கண் ஆடல் புரிபவனும், அன்புக்கு மாறான வன்கண்மை யுடையவர் மனத்தின்கண் நில்லா தொழிபவனும், வானவர்க்குத் தலைவனும், எமக்கெல்லாம் வாழ்முதலாகியவனும், யாவர்க்கும் துன்பம் போக்கி இன்பம் நல்குபவனும், உலகிற்குச் சோதியாகுபவனும், சோதிக்குட் சோதியாய்த் திகழ்பவனும், நாடோறும் என்னுடைய சிறு பணியையும் ஏற்றருள்பவனுமாகிய சிவபெருமானை இன்றை இரவுப் போதில் கனவிற் கண்டு எதிரேற்று மகிழ்வேன். எ.று.

வாழ்வார்க்கு வேண்டுவனவற்றை முன்னறிந்து நல்குவது வாழ்விப்பார்க்குக் கடனாயினும், அளவின் மிகுதியும் குறைவும் அன்பு காரணமாய் நிகழ்வனவாதலின், "அன்பர்கள் வேண்டுமவை அளிப்பான்" எனவுரைக்கின்றாள். அன்பு செய்வார்க்கு மிகுதியாயும் இல்லார்க்குக் குறைவாகவும் அளிக்கப்படுவது உலகியல் நெறி. வாழ்வாரை வாழ்வித்தலும், உணர்வாரை யுணர்வித்தலும் முறையேயாகிய ஊன் நாடகமும் ஞான நாடகமு மாதலின், அவை இரண்டினையும் இடையற வின்றிப் புரிவது பற்றி, "அம்பலத்தே நடமாடுகின்றான்" என அறிவிக்கின்றாள். அம்பலம் - உலகும் உயிர்களின் உணர்வுமாகும். வன்பர் - உள்ளத்தே அன்பின்றி, நினைவு சொற் செயல்களில் வன்கண்மை யுடையவர். அவற்றால் மன மாசு நிறைதலால், அதன்கண் அவன் தோன்றாமையால், "வன்பர்கள் நெஞ்சில் மருவல் இல்லான்" என்று கூறுகின்றாள். அன்புடையார் யாவர் மனத்தும் நிறைந்து நிற்றல் போல, வன்புடையார்பால் அறவே விளங்கி நில்லாமை இயல்பாதலின், "மருவ கில்லான்" என்னாமல், "மருவல்

இல்லான்'' என்கிருள். கருமம் செய்தலின்றிப் போக நுகர்ச்சி யொன்றே யுடையராகலின், காத்தல் வேண்டி வானவர்கட்குத் தலைமை பூண்பது கொண்டு ''வானவர் கோன்'' என்றும், மண்ணில் வாழ்வார்க்கு உடல் கருவி கரணங்களையும் அவற்றை இயக்கும் உணர்வு செயல்களையும் நல்கும் முதல்வனுதலால், ''எம் வாழ்முதலான்'' என்றும் இயம்புகிருள். முதலான் - முதன்மை யுடையவன். காட்டக் காண்டலும், உணர்த்த வுணர்தலும் உயிர்கட் கியல்பாதலால், முதற்கண் அவற்றைச் செயற் படுத்தலின், ''முதல்'' எனல் வேண்டப்படுகிறது. துன்பக் காலத்தில் தெளிவின்மையும், இன்பக் காலத்தில் தெளிவும் உளவாதலின், தெளிவின் கண் உயிர்கள் நலம் பெறும் பொருட்டுத் துன்பம் பயக்கும் இருட் படலத்தை நீக்கும் இறைவனுடைய அருட் செயலை, ''துன்பம் தவிர்த்துச் சுகம் கொடுப்பான்'' என வுரைக்கின்ருள். இன்பத்தினும் துன்பம் சிறிதாயினும் பெருகித் தோன்றி உணர்வை மறைப்பதனுல், ''துன்பம் தவிர்த்தலை'' முற்பட மொழிகின்ருள். உயிரும் உணர்வுருவாய ஒளிப் பொருளாயினும் மலவிருள் கலந்திருத்தலால், சிவனைச் ''சோதி'' என்றும், ஏனைய ஒளிப்பொருள்களினின்றும் வேறுபடுத்தற்குச் ''சோதியுட் சோதி'' என்றும் சொல்லுகின்ருள். ''சோதியுட் சோதியான்'' எனப் பெரியோரும் கூறுவர். எல்லாம் கெட்ட விடத்தும் தான் கெடுதலின்மை விளங்க சிவன் என்பு மாலை யணிந்து தோன்றுதலால், ''என் பணி கொண்டு'' எனவும், தான் கண்டு மகிழ நிற்றலின், ''ஏன்று கொண்டான்'' எனவும் கூறுகின்ருள். எதிர் கோடல் - அன்பு மிகுதியால் முன்னுறச் சென்று வரவேற்றல்.

இதனுல், அன்பர்கட்கு வேண்டுவன அளித்தும் துன்ப நீக்கிச் சுகம் கொடுத்தும் இறைவன் உயிர்களைப் பேணும் திறம் எடுத்தோதியவாறும். (5)

2616. கண்ணுத லானைஎன் கண்ணமர்ந் தானைக்
கருணைநி தியைக்க றைமிடற் றானை
ஒண்ணுத லாள்உமை வாழ்இடத் தானை
ஒருவனை ஒப்பிலா உத்தமன் தன்னை
நண்ணுதல் யார்க்கும்அ ருமையி னானை
நாதனை எல்லார்க்கும் நல்லவன் தன்னை
எண்ணுதல் செய்தெனக் கின்பளித் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை : கண் பொருந்திய நெற்றியை யுடையவனும், என் கண்ணையே தனக்கு இடமாகக் கொண்டவனும், திருவருட் செல்வமே யாயவனும், கடல் விடத்தின் கறை படிந்த கழுத்தை யுடையவனும்; ஒளி திகழும் நெற்றியையுடைய உமையம்மையாகிய தேவி பொருந்திய இடப்பாகத்தை யுடையவனும், ஒருவன் எனப்படுபவனும், ஒப்பாக ஒருவருமில்லாத உத்தமனும், யாவர்க்கும் நெருங்க முடியாதவனும் நாதனுகியவனும்; எத்தகையோர்க்கும் நலமே செய்யும் நல்லவனும், என்னையும் ஒரு பொருளாக எண்ணி இன்பம் தருபவனுமாகிய சிவபெருமானை இன்றிரவு கனவிற் கண்டு எதிரேற்று இன்புறுவேன். எ.று.

கண்ணுதலான் - கண் பொருந்திய நெற்றியையுடைய கடவுள். என்கண் அமர்ந்தான் - என்னுடைய கண்கள் இடமாக இருப்பவன்; என்னிடத்தே விரும்பி யுறைவன் என்றும் சொல்வதுண்டு. கருணாநிதி - கருணையாகிய நிதியானவன்; கருணை - அருள். நிதி - செல்வம். கறை மிடற்றன் - விடக்கறை பொருந்திய கழுத்தை யுடையவன்; ஒண்ணுதலாள் உமை - ஒள்ளிய நெற்றியையுடைய உமாதேவி. உமைவாழ் இடத்தான், உமாதேவி இருந்தருளும் இடப்பாகத்தை யுடையவன் என வுரைப்பினும் அமையும். ஒருவன், தன்னின் வேறொரு நிகர் இல்லாதவன்; ஒருவன் என்று சான்றோரால் புகழப் படுபவன்; ''ஒருவனென்னும் ஒருவன் காண்க'' (அண்டப்) என்று திருவாசகம் ஓதுகிறது. ஒப்பிலா உத்தமன் - ஒப்புக் கூறலாவதொரு பொருளும் இல்லாமல் உயர்ந்தவன். ''தன்னொப்பார் இல்லாதான்'' (ஆவடு) எனத் திருநாவுக்கரசர் கூறுவர். காண்டற்குரிய எல்லைக்கண் இருந்தாலன்றி நண்ணுவதென்பது யாவர்க்கும் அரிதாகலான், ''நண்ணுதல் யார்க்கும் அருமையினான்'' என வுரைக்கின்றாள். ''காணுமா றரிய பெருமான்'' (வீழி) என்று ஞானசம்பந்தர் கூறுவது காண்க. நாதன் - தலைவன்; நாதமாய் விளங்குபவன் எனலுமாம். ''நாதனை நாத மிகுத்து ஓசையதானவனை'' (கானப்பேர்) என்பர் நம்பியாரூரர் எல்லார்க்கும் இடமளிப்பது கொண்டு, ''எல்லார்க்கும் நல்லவன்'' என்று புகழ்கின்றார். ''நல்லார்க்கெல்லாம் நல்லவன் நீ'' (571) என்று பிறாண்டும் முன்னிலைப்படுத்து மொழிகின்றார். எளியனாகிய என்னையும் பொருளாகக் கருதி இன்பம் தருகிறான் என்பாளாய், ''எண்ணுதல் செய்தெமக்கு இன்பளித்தான்'' என வுரைக்கின்றாள். ''உண்ணின்றுருக உவகை தருவார்'' (பரகூர்) என ஞானசம்பந்தர் நவில்வர்.

இதனால் இறைவன் எல்லார்க்கும் நல்லவனாய் யாவரையும் நன்கெண்ணி இன்பளிப்பவனாய் விளங்கும் திறம் தெரிவித்தவாறும். (6)

2617. வெள்விடை மேல்வரும் வீறுடை யானை
வேதமு டிவினில் வீற்றிருந் தானைக்
கள்விரை யார்மலர்க் கொன்றையி னானைக்
கற்பகந் தன்னைமுக் கண்கொள்க ரும்பை
உள்வினை நீக்கிஎன் உள்ளமர்ந் தானை
உலகுடை யானைஎன் உற்றது ணையை
எள்வினை ஒன்றும்இ லாதவன் தன்னை
இன்றிறைஇ ரவில்எ திரிந்துகொள் வேனே.

உரை : வெள்ளை நிற எருதேறும் தனிச்சிறப்புடையவனும், வேத நூல் முடிவின்கண் எழுந்தருள்பவனும், தேன் மணம் கமழும் கொன்றை மலர் மாலையை யுடையவனும், கற்பக மரம் போல்பவனும், மூன்று கண்களையுடைய கரும்பு போல்பவனும், நினைக்கப்படுகின்ற வினைகளைப் போக்கி, உள்ளத்தின்கண் இருந்தருள்பவனும், உலகனைத்தையும் தனது உடைமையாக வுடையவனும், எனக்கமைந்த துணைவனும், இகழ்ந்து விலக்குதற்குரிய செயல்வகை யாதும் இல்லாதவனும் ஆகிய சிவபெருமானை இன்றிரவில் கனவில் வர எதிர்கொண்டேற்று இன்புறுவேன். எ-று.

சிவனுக்கு ஊர்தியாகும் எருது வெள்ளை நிறமுடையதென்பதுபற்றி, "வெள்விடை மேல் வரும் வீறுடையான்" என விளம்புகிறார். "நரை வெள்ளேறு ஒன்றுடையான்" (சிராப்பள்ளி) எனத் திருஞானசம்பந்தர் தெரிவிக்கின்றமை காண்க. வேத புராண இதிகாசங்களைக் கற்றுணரத் தோன்றும் ஞான முடிவில் தெளியப்படும் பரம்பொருளாதலால், "வேத முடிவில் வீற்றிருந்தான்" எனவும், சிவனாகிய சகளத் திருமேனியில் முடியிலும் தோளிலும் மார்பிலும் கொன்றை மலர் மாலை யணிதலால், "கள்விரையார் மலர்க் கொன்றையினான்" எனவும் கூறுகின்றார். கள் - தேன். தென்னை, பனை, ஈந்து ஆகிய மரங்களில் இறக்கிப் புளிக்க வைத்துண்ணும் முறை ஆயிரத்தைஞ்ஞூறுண்டுக்கு முன் தமிழரால் கண்டறிந்துண்ணப்படாமையின், கள்ளென்பது தேனையே குறிப்பதாயிற்று. திருவள்ளுவரை உள்ளிட்ட சான்றோர் கள்ளென் றுரைப்பது மலர்த்தேனையும் அரிசிச் சோற்றினின்றெடுத்த புளிங்காடியுமாம். வரலா றறியாமையின், தென்னை பனை முதலியவற்றின் கள்ளே முன்னாளில் உண்ணப்பட்டனவென உரைத்து மகிழ்கின்றனர். வரலாறு காணும் திறமும் தெளிவும் இந்நாளைக் கல்விப் பெருமையே இத்தகைய இழுக்குணர்வுக்குக் காரணம் என அறிக. கற்பகம் - வேண்டுவார் வேண்டிய தளிக்கும் தேவருலகத்து மரம். கணு மூன்றுடைய செங்கரும்பு போல்வது விளங்க "முக்கண் கொள் கரும்பு" என மொழிகின்றார். உள்வினை, மன மொழி மெய்களாற் செய்யப்படும் வினை. செய்யும்போது உணரப்படாமல், பயனை நுகரும்போது நினைக்கப்படுவது பற்றி, "உள்வினை" என்றும், இறைவன் திருவருள் ஞானத்தாலன்றி வேறே எவ்வாற்றாலும் ஒழிக்கப்படாத வன்மையுடைமையால், "உள் வினை நீக்கி" என்றும், வினைநீக்கத்தால் மாசு நீங்கி அருளொளி கொண்டு மனம் சிவத்துக்கிடமாதல் உணரப்படுதல் தோன்ற, "உள்வினை நீக்கி யென்னுள் அமர்ந்தானை" என்றும் இயம்புகின்றார். "வினையா லசத்து விளைதலால் ஞானம் வினை தீரினன்றி விளையாவாம்" (சி. ஞா.போ) என்று மெய்கண்டார் தெளிவிப்பது காண்க. உயிர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து உய்தி பெறற்குத் துணையாகும் உலகு உடல் கருவிகரணங்களைப் படைத்தளித்தலின், சிவனை "உலகுடையான்" என்றும், வாழுமிடத்து கருவி கரணங்கள் அறிவயர் காலை நல்லுணர்வு காட்டிஉண்மை தெரியச் செய்தலால்," என் உற்ற துணை" என்றும், இவ்வாறு அருள் வினையல்லது வேறு குறை கூறத்தக்க செயல் யாதும் இல்லாதவனென்றற்கு, "எள்வினை யொன்றும் இல்லாதவன்" என்றும் எடுத்தோதுகின்றார்.

இதனால், சிவன் வினைகளைப் போக்கி ஞானவொளி நல்கி மனத்தின் கண் வீற்றிருந்தருளும் திறம் விளக்கியவாறாம். (7)

2618. பெண்ணமர் பாகனைப் பேர்அரு ளோனைப்
பெரியவர் கெல்லாம்பெ ரியவன் தன்னைக்
கண்ணமர் நெற்றிக் கடவுள்பி ரானைக்
கண்ணனை ஆண்டமுக் கண்ணனை எங்கள்
பண்ணமர் பாடல்ப ரிசளித் தானை
பார்முதல் அண்டம்ப டைத்தளிப் பானை
எண்அம ராதன ழிலுடை யானை
இன்றறிஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை : உமாதேவியாகிய பெண் விரும்பி யுறையும் இடப்பாகத்தை யுடையவனும், பேரருள் செய்பவனும், பெரியராயினர்க்கெல்லாத பெரியவனுகியவனும், கண் பொருந்திய நெற்றியையுடைய கடவுளாகிய தலைவனும், கரிய திருமாலை ஆண்டருளும் முக்கண்ணனும், யாங்கள் பாடுகிற இசை பொருந்திய பாடல்களை, யேற்று வரமருள்பவனும், நில முதல் அண்டங்க ளனைத்தையும் படைத்து உயிர் வாழச் செய்பவனும், எண்ணத்தின் எல்லைக்கடங்காத அழகுடையவனுமாகிய சிவபெருமானை இன்றிரவு கனவிற் கண்டு எதிரேற்று இன்புறுவேன். எ.று.

பெண்மைக்கு இலக்கும் எடுத்துக்காட்டுமாய் விளங்குபவளாதலால், உமையம்மையைச் சுட்டிப் "பெண்ணமர் பாகன்" எனப் பேசுகின்ருள். "பெண்ணமர் மேனியினர்" (பாண்டிக்) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. அருளே யுருவா யமைந்தவனுதலால், "பேரருளோன்" எனக் குறிக்கின்ருள். பெரியவர், பலராலும் தொழப்படும் பெருமை கொண்ட தேவர். அப்பெரிய தேவர்களாலும் தொழப்படும் பெருமையுடைய வனுதலால் சிவனைப் "பெரியவர்க் கெல்லாம் பெரியவன்" என்று புகழ் கின்ருள். "தேவர் தலை வணங்கும் தேவர்க்கும் தேவன்" (ஆமாத்தூர்) என ஞானசம்பந்தர் குறித்தருளுவது காண்க. பெண்ணமர் மேனியும் கண்ணமர் நெற்றியும் சிவனுக்குச் சிறப்பாக வுரியவையாதலால், "கண்ணமர் நெற்றிக் கடவுள் பிரான்" என்று கனிந்து கூறுகிருள். கண்ணன் - கரிய நிறமுடைய திருமால். "கண்ணும் திருவடி கையும் திருவாயும் செய்ய கரியவன்" (சிலப்) என இளங்கோவடிகள் பராவுவது காண்க. கண்ண பிரானுக்குச் சக்கரப் படை தந்து ஆட்கொண்ட வரலாறுபற்றிக் "கண்ணனை யாட்கொண்ட முக்கண்ணன்" என மொழி கின்ருள். நீற்றினை நிறைப் பூசி நித்தலாயிரம் பூக்கொண்டு ஏற்றுழி யொருநாளொன்று குறையக் கண்ணிறைவிட்ட ஆற்றலுக் காழி நல்கியவன்" (வீழி) என்பர் ஞானசம்பந்தர். பண் - இசை. பாட்டுக்கு இசை யுயர்வு தருவதாகலின், "பண்ணமர் பாட" லொன்றும், இனிய பண்ணமைந்த பாட்டைப் பாடுவார்க்குப் பரிசளிப்பது உலகியல்; அதுபோல் இறைவனும் தனது திருவருளை நல்குகிரு னென்பது பற்றி, "பாடல் பரிசளித்தான்" என்றும் பகர்கின்ருள். "பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும் பெண் சுமந்த பாகத்தன் பெம்மான்" (அம்மானை) என்பர் மணிவாசகப் பெருமான். உயிர்கள் வாழ்ந்து உய்தி பெறுமாறு உலகனைத்தையும் படைத்தான் என்று சிவாகமங்கள் ஓதுதலின், "பார் முதல் அண்டம் படைத்தளிப்பான்" என்று பகர்கின்ருள். "பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே" (கோயிற் றிருப்) என்று திருவாசகம் சிவனைச் சிறப்பிப்பது காண்க. ஒளி திகழும் எழில் எண்ணும் சிந்தையின் எல்லைக்குள் அடங்காது பெருகுதலால், "எண்ணமராத எழிலுடையான்" என இயம்புகிருள். "எழில் கொள் சோதியெம் ஈசன் எம்பிரான்" (சென்னி) என்று கூறுவர் திருவாதவூரர்.

இதனுல், பார் முதல் அண்டங்களைப் படைத்தளித்து, உயிர்களை உய்வித் தருளும் சிவனது பரமாம் தன்மை குறித்தவாரும். (8)

2619. வளங்கொளும் தில்லைப்பொன் மன்றுடை யானை
வானவர் சென்னியின் மாணிக்கம் தன்னைக்
களங்கம்இ லாதக ருத்துடை யானைக்
கற்பனை முற்றும்க டந்துநின் றானை
உளங்கொளும் என்தன்உ யிர்த்துணை யானை
உண்மையை எல்லாம்உ டையவன் தன்னை
இளம்பிறை சூடிய செஞ்சடை யானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை : வளம் பொருந்திய தில்லையிலுள்ள பொன்னம்பலத்தைச் சிறப்பாகவுடையவனும், தேவர்கள் முடியின்கண் அமைந்த மணி போல்பவனும், குற்றமில்லாக் கருத்துக்களை விரும்புபவனும், கற்பனையெல்லைக்கு அப்பாற் பட்டவனும், மனத்திற் கொண்டும் பரவும் எனக்கு உயிர்த் துணையாகுபவனும், உண்மையே யுருவாக நிற்பவனும், உலகெலாம் தனதாகவுடையவனும், பிறைமதியை யணிந்த சிவந்த சடையை யுடையவனுமாகிய சிவபெருமானை, இன்றிரவு கனவிற் கண்டு நேரே எதிர் கொண்டு போற்றி மகிழ்வேன். எ.று.

பொருள் வளமும் ஞான வளமும் ஒப்ப வுடைமை பற்றி, "வளம் கொளும் தில்லை" எனப் பொதுப்பட மொழிந்து, அம்பலவாணனும் சிறப்புடைமையின், "பொன் மன்றுடையான்" என வுரைக்கின்றாள். தேவர்கள் மணிமுடி யுடையராதலின், "வானவர் சென்னியின் மாணிக்கம் தன்னை" எனப் பராவுகின்றாள். தேவர்கள் மணிமுடி யணிபவரென்பதை, "விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்" (பாவை) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. குற்றமில்லாத நினைவுகளையுடைய மனத்தின் கண் தங்கும் நலமுடையனாய் அருள் புரியும் வள்ளலாதலால், "களங்க மில்லாத கருத்துடையான்" என்று கூறுகிறாள். களங்கம்-குற்றம். சிவனைப் பாவனாதீதன் எனச் சிவாகமங்கள் ஓதுதலால், "கற்பனை முற்றும் கடந்து நின்றான்" என்கிறாள். சிவனது சகளத் திருமேனி போல அகளவடிவம் கற்பனைக்கு அடங்குவ தன்றாகலின் "கற்பனை முற்றும் கடந்து நின்றான்" என விளக்குகிறாள் என்றலும் ஒன்று. இறைவனை நெஞ்சின்கண் வைத்து உள்ளத்தால் வழிபடுவது மரபாதலால், "உளங்கொளும் என்றன் உயிர்" என்றும், நெஞ்சிடமாக இருந்து உயிர்க்கு உணர்வுத் துணை புரிவது புலப்பட "உயிர்த் துணையான்" என்றும் உரைக்கின்றாள். "என்னெஞ்சில் ஈசனைக் கண்டது என் உள்ளமே" எனவும், "நெஞ்சினுள் நிறைவாய் நின்ற ஈசனைக் கண்டு கொண்டது என் உள்ளமே" (உள்ளக் குறுந்.) எனவும் திருநாவுக்கரசர் ஓதுவது காண்க. உளதாய் நிற்கும் உண்மைத் தன்மையில் உள்பொருளனைத்தினும் ஒப்புயர் வில்லாதவனாதலால், இறைவனை "உண்மை" யென்றே இயம்புகின்றாள். உலகனைத்தும் அவனது படைப்பாய் உடைமையுமாகும் எனப்படுதலின், "எல்லாம் உடையவன்" எனல் பொருத்தமாகிறது. எல்லாம் என்ற சொல் எஞ்சாப் பொருள தென்பர் சேனாவரையர். பிறைமதியின் சிறுமை மிகுதி விளங்க "இளம் பிறை" என்றும், தேய்வின்றி அதனை வளர்ந்து நிறைவிக்கும் செம்மை பற்றி, "இளம் பிறை சூடிய செஞ்சடையான்" என்றும் சிறப்பிக்கின்றாள். "பின்னிய சடை மிசைப் பிறை நிறைவித்த

பேரருளாளனுர்'' (கழுமலம்) என ஞானசம்பந்தர் எடுத்தினிது புகல்வது காண்க.

இதனுல் நெஞ்சின்கண் காட்சி தந்து உள்ளம் உணர்ந்து பரவ, உண்மையாய் இறைவன் நிற்கும் திறம் உரைத்தவாறும். (9)

2620. குற்றமெல் லாம்குண மாகக்கொள் வானைக்
கூத்துடை யானைப்பெண் கூறுடை யானை
மற்றவர் யார்க்கும்அ ரியவன் தன்னை
வந்திப்ப வர்க்குமி களிளி யானைப்
பெற்றம தேறும்பெ ரியபி ரானைப்
பிறைமுடி யோனைப்பெம் மானைஎம் மானை
எற்றிஎன் துன்பம்எ லாம்ஒழித் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.

உரை : அன்பராயினுர் செய்யும் குற்றங்களை யெல்லாம் குணமாகக் கொண்டு பொறுப்பவனும், அம்பலத்திற் கூத்தாடுபவனும், உமாதேவி யாகிய பெண்ணைத் தன் மேனியில் இடப்பாகத்தே கொண்டவனும், அன்பிலாராகிய பிறர் அனைவருக்கும் பெறற் கரியவனும், அன்புடன் வழிபடுவோர்க்கு மிகவும் எளியனுய் அருள் செய்பவனும், எருதேறும் பெருமையையுடைய தலைவனும், பிறைமதி தங்குகிற முடியை யுடைய வனும், பெருமானும், எம்மையுடையவனும், என் துன்பங்களைப் போக்கி இனித் தாக்காவாறு ஒழித்தவனுமாகிய சிவபெருமானை இன்றைய இரவில் கண்டு எதிர்கொண்டு வரவேற்று மகிழ்வேன். எ.று.

உயிர்கள் செய்யும் குற்றங்கட் கெல்லாம் காரணம் மலமாயை கன்மங் களின் மயக்க மென்பதை இறைவன் நன்கறிந்தவனுதலின், குழந்தை செய்யும் குற்றத்தைத் தாய் பொறுப்பது போலப் பொறுத்தாள்கின்ரு னென்பாளாய், "குற்ற மெல்லாம் குணமாக்கொள்வான்" எனக் கூறு கின்ருள். மல முதலியவற்றின் புணர்ப்பால் உளவாகிய குணமென நினைத்தல், குணமாக் கொள்ளுதல் என அறிக. உயிர்கட் குரிய உலகியல் வாழ்வு நடத்தற் பொருட்டே இறைவன் திருக்கூத்து இடையற வின்றி நடப்பது பற்றி, "கூத்துடையான்" என்று உரைக்கின்ருள். "மாயைதனை யுதறி, வல்வினையைச் சுட்டு மலம், சாய வமுக்கி யருள் தானெடுத்து - நேயத்தால், ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல் தான் எந்தையார் பரதம் தான்" (உண். விளக். 37) எனச் சான்ருேர் உரைப்பது காண்க. திருக்கூத்தை நினைக்குமிடத்து, உமையம்மை யதனைக் கண்டு தன் காட்சியினுல் பயன் விளைக்கின்ற திறம் உடன் நினைக்கப்படுமாறு விளங்க, "பெண் கூறுடையான்" எனப் புகல்கின்ருள். "கூடிய இலயம் சதி பிழையாமைக் கொடியிடையுமையவள் காண ஆடிய அழகா" (வடதிருமுல்லை) என்று நம்பியூரர் நவில்கின்றமை ஈண்டு நினைவு கூரற் பாலது. அன்புடைமை சிவஞான மாதலின், அஃது இல்லார்க்குச் சிவனருட் காட்சி எய்தாதாகலின், "மற்றவர் யார்க்கும் அரியவன்" என்கின்ருள். "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞான முண்டார்" (ஞானசம். புரா) எனச் சேக்கிழார் தெரிவிப்பர்.

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்" என்பதனுல், "வந்திப்பவர்க்கு மிக எளியன்" எனவுரைக்கின்ருள். "அருமையன் எளிமையன் அழல் விட மிடறினன்" (இடைமருது) என்பர் ஞானசம்பந்தர். "பெற்ற மூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மான்" (பிரமபு) எனப் பெரியோர் புகழ்தலின், "பெற்றம தூரும் பெரிய பிரான்" எனப் பரவுகின்ருள். பெற்றம் - எருது - "பெரும் பெருமான்" என்றெல்லாம் சான்ருேர் போற்றுவ துண்மையின், "பெரிய பிரான்" என்பது இயல்பாயிற்று. பெருமான், பெம்மான் என வரும். "பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்" (அம்மா) என்பது திருவாசகம். எம்மான் - எம்மையுடையவன்; "இன்ன தன்மையன் என்றறி யொண்ணு எம்மான்" (ஆரூர்) என்று நம்பியாரூரர் புகல்வது காண்க. துன்பத்தை வேரொடு களையுமாறு தோன்ற "என் துன்பமெல்லாம் சாலால் எற்றி ஒழித்தான்" எனவுரைக்கின்ருர். எற்றுதல் - தள்ளிப் போகச்செய்தல். "தொழுவார் தங்கள் உறுநோய்கள் தள்ளிப் போக அருளும் தலைவன்" (வெண்காடு) என ஞானசம்பந்தர் வழங்குவர். மணிவாசகர், சிவனைப் "பாச வேரறுக்கும் பழம்பொருள்" (பிடித்த) எனத் திருவாசகம் உள்ளம் உருக வுரைப்பது அறிக.

இதனுல் அம்பலவாணருடைய பெருமை எளிமை இயல்பும் திருக் கூத்தின் நோக்கமும் இயக்கமும் தெரிந் துரைத்தவாரும். (10)

திருச்சிற்றம்பலம்

6. புறமொழிக் கிரங்கல்

முன்னின்று மொழியாமல் பின்னின்று பேசப்படுவது புறமொழி; ஒளி காணுமிடத்து இருளைக் காண்பது போல நலம் காணுமிடத்துத் தீங்கு காண்பது உலகவர் இயல்பு. நலம் பேசுவோர் உளரெனின் தீங்கெடுத்துரைப்பவரும் உளராவர். அத்தீங்குரையே புறமொழியாம். இதனை, அகம் மாறுபட்டு முகத் தெதிர் பேசப்படாமையோடு, பொருளாக மதிக்கப் படாமையும் புலப்பட, "புற மொழி" எனச் சான்றோர் வழங்குகின்றனர். காதலிக்கப்பட்டார் பொருளாகப் பிறர் சிறிது பழி கூறினும், காதலரின் காதலுள்ளம் பொறுதாகலின், அதனை நினைந்து தொல்காப்பியர், புற மொழியை, "புறஞ்சொல் மாணுக் கிளவி" எனக் குறிக்கின்றார். காதலனாகிய சிவபெருமான்பால், புறனுரை யுண்டாதல் கூடாதே யென வருந்தும் நங்கை, கூறுவது பொருளாக வரும் பாட்டுக்களின் தொகுதி யாகலின், இது புறமொழிக் கிரங்கல் எனப்படுகிறது.

இதன்கண், இறைவன் திருவருள் செய்யாவிடில் தன்னைப் பற்றிய வகையில் அன்பும் சொல்லும் செயலும் வேடிக்கையாகும்; விரத ஞானம் பயனிலவாம்; அயலவர் சிவவிரதத்தைக் கேலி செய்வர் என்றும், உண்ணு நோன்பு மேற்கொண்டு முயல்வோர் பொய்யராவர்; சிவவிரதம் பொய்யாம்; சிவநெறிக் கொள்கைகள் பழிக்கப்படும்; சிவவேடத்தையும் மக்கள் இகழ்வர்; சிவவிரதம் விருத்த மெனக் கைதட்டி நகைப்பர்; அருட் பேறில்லையாயின் ஈன்ற தாயும் புறக்கணித் திகழ்வாள்; உலகர், விரதிகளை நோக்கி எது பெற்றனை, சொல்லென வாதிப்பர்; யானும் மக்கள் குறை கூறுவது பொறேன் என்றும் வருந்தி மொழிகின்றார்.

கட்டளைக் கலித்துறை

2621. கேளனந் தான் ஒரு போதுன்
டனைமனக் கேதம்அற
நீளனம் தேடு முடியான்
எதுநினக் கீந்ததென்றே
வேளனம் போல்நடை மின்னாரும்
மைந்தரும் வேடிக்கையாய்
ஏளனம் செய்குவர் நீஅரு
ளாவிடில் என்அப்பனே.

உரை : எனக்கு அப்பனாகிய பெருமானே, நெடிய அன்னப் பறவை யின் உருக்கொண்டு தேடியும் காணாத திருமுடியையுடைய சிவபெருமான் தனக்குக் காதலியாம் நலத்தை உனக்குத் தந்தானே யன்றி, உன் மன

நோய் நீங்குமாறு எதனை நினக்குத் தந்தான் என்று அன்னம் போன்ற நடையும் மின்னற் கொடி போன்ற இடையுமுடைய மகளிரும் ஏனை ஆடவரும் நீ அருளா தொழிகுவையேல் வேடிக்கையாக என்னை ஏளனம் செய்வார்களே, என் செய்வேன். எ.று.

கேள் அனம், கேளாகிய அன்னம் என விரிந்த காதற் கேண்மை யாகிய நலம் எனப் பொருள் தருகிறது. அன்னம், உண்பொருளாய் நன்மைப் பொருள் மேலதாயிற்று. நலம் பெற்ருய் என்பது அன்னம் உண்டனை எனக் குறிப்பு மொழியாயிற்று. "தானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்"என வருதல் போல. கேதம் - காதல் வேட்கை; காம நோயுமாம். "கேதமற நினக்கு ஈந்தது" என இயையும். சிவனது நெடுமுடி காணும் முயற்சிக்கு வேண்டிய ஆற்றலும் வன்மையும் கொண்ட அன்ன வுருவாயது விளங்க, பிரமனை "நீளனம்" என்கின்ருள். ஒருபோது - ஒருகால். ஒருகாலத்தே நீ சிவபெருமான் அன்பளிக்கப் பெற்ருயே யல்லது, அவனது சிவானந்தத்தைப் பெறவில்லையே என்பது குறித்தற்கு "எது நினக்கு ஈந்தது" எனவும், நீ ஏமாற்றமே எய்தினை என இகழ்வர் என்பாள் "என்று ஏளனம் செய்குவர்" எனவும், இயம்புகிருள். வேடிக்கை, விநோதம், காம நுகர்ச்சியைச் சோறுண்பதாகப் பேசுவது காமுகர் கூட்டத்துக் குறிப்பு மொழி. வேள் அனம் - விரும்பப்படும் அன்னப் பறவை; வேள் - விருப்பம். கண்டாரால் விரும்பப்படும் அழகுடைமை நோக்கி, "வேளனம்" என்றும், அன்னத்தின் நடை இளமகளிர் நடைக்கு உவமம் செய்யும் மரபு பற்றி, "வேளனம் போல் நடை" யென்றும், இடைக்கு மின்னற் கொடியை ஒப்புக் கூறுவது பற்றி, "மின்னுர்" என்றும் கூறுகிருள். மைந்தர், இளமை கனியும் ஆடவர். காமச் செவ்வியுடைய பெண்களையும் ஆடவர்களையும் குறித்து, "மின்னுரும் மைந்தரும்" எனவும், அப்பருவத்தினர்க்கும் காமச்சுவை கதுவிய சொல்லும் செயலும் இயல்பாதலால், இருபாலாரும் "வேடிக்கை யாய் ஏளனம் செய்குவர்" எனவும் இசைக்கின்ருள். விநோத நிகழ்ச்சியை வேடிக்கை என்பது உலக வழக்கு.

இதனுல், நீ அருள் செய்யாயாயின், என் அன்பும் மொழியும் செயலும் வேடிக்கையாகி மக்களால் இகழப்படும் என்ருளாம். (1)

2622. அப்பாநின் பொன்அருள் என்மேல்
தயைசெய் தளித்திலையேல்
துப்பா னவும்ஒரு போதுதுவ்
வாது சுழன்றனையே
இப்பாரில் ஈசன் திருவருள்
நீபெற்ற தெங்ஙனமோ
செப்பாய் எனவரிப் பார்சிரிப்
பார் இச் செகத்தவரே.

உரை : அப்பனுகிய சிவபிரானே, நின்னுடைய பொன் போன்ற திருவருளை அன்புடன் எனக்கு அளிக்காயாயின், உண்டற் குரியவற்றை யும் ஒருகாலும் உண்பதின்றி மனம் கலங்குகிருயே; இவ்வுலகில் சிவனது

திருவருளைப் பெற்றது எவ்வாறு, மெய்யோ பொய்யோ சொல்லுக என நாட்டவர் என்னை நச்சரித்து இகழ்ந்து நகையாடுவரே. எ.று.

அப்பன், ஈண்டு உயர்ந்தவன் என்னும் பொருளில் வந்தது. எய்துதற் கருமை பற்றித் திருவருள் "பொன்னருள்" எனப்படுகிறது. அளித்தல் மிக்க அன்பு செய்வதாதலால், "தயைசெய்து அளித்திலையேல்" என வுரைக்கின்றாள். தயை, இரக்கமுமாம். துப்பு, உண்பொருள். "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉமழை" (குறள்) என்பது காண்க. ஒருபோது என்னுமிடத்துச் சிறப்பும்மை தொக்கது. துவ்வாமை, உண்ணாமை. சுழலுதல். கலங்குதல் அறிவு கறங்குதலுமாம். எங்ஙனமோ, எவ்வாறு, மெய்யோ, பொய்யோ என ஐயம் பிறப்பிக்கின்றது என்பதாம். நீ ஈசன் அருளைப் பெற்றேன் என்பது மெய்யா? பெற்ற வழியாது எனப் பன்முறையும் விடாது தொடர்ந்து கேட்பது நச்சரித்தல் என மக்களிடை வழங்குவதால், "அரிப்பார்" எனவும், விளங்கவுரைக்க மாட்டாது விழிக்குமிடத்து இகழ்வது நாட்டவர் இயல்பர்தல் கொண்டு, "சிரிப்பார்" எனவும் இயம்புகின்றாள். பச்சைப் புழு இளந்தளிரை யுண்ணும் செயல் அரித்தல் என்பர். பச்சிலையைக் கீடம் மணம்பற்றி அரிப்பது போல் அச்சமுற வாங்கல் அகம்" (நீதி) என்று பெரியோர் உரைப்பது காண்க. செகம், உலகம்; பொதுவகையில் "பார்" என்றமையின், ஈண்டு நாட்டின் மேல தாயிற்று.

இதனால், நீ அருளாமையால் யான் பசியட நிற்பது கண்டு நாட்டவர் அருள் பெற்றது பொய்யோ மெய்யோ என இகழ்ந்து சிரிப்பர் என வருந்தியவாறும். (2)

2623. தீதுசெய் தேற்கருள் செய்வான் நின்
சித்தம் திரும்பிலையேல்
தாதுசெய் தேகத்து ணொரு
போது தவிர்ந்தநினைக்
கேதுசெய் தான்சிவன் என்றே
உலகர் இழிவுரைத்தால்
யாதுசெய் வேன்தெய்வ மேஎளி
யேன் உயிர்க் கின்னமுதே

உரை: தெய்வமே, எளியவளாகிய எனது உயிர்க்கு அமுதானவனே, தீமை செய்தவளாகிய எனக்குத் திருவருள் வழங்க மனம் கொள்ளாயாயின், தோல் தசை முதலிய தாதுக்களாலாகிய உடம்புக்கு ஒரு காலை யுணவை விரதமாக நீக்கினதால், சிவபெருமான் என்ன நலம் செய்தான் என்று உலகத்தார் பழித்து இகழ்வாராயின், யான்யாது செய்வேன்; என் நெஞ்சம் வருந்துகிறது, காண். எ.று.

தோல், தசை நரம்பு என எழுவகையாகக் கூறப்படும் உடற்கூறுகள் தாது எனப்படும்; "பல்வகைத் தாதுவின் உடற்கு" (நன்னூல்) என்பர் பவணந்தி முனிவர். தாதுக்களால் இயன்றமையின், "தாது செய் தேகம்" என்று கூறுகிறாள். தீது - தீவினை. தீவினையுடைமை நோக்கி

எனக்கு நீ அருள் செய்யாயாயினும், திருவுள்ளத்தில் அருள் கொள்வா யானல், எனக்கு அருள் புரியலாம் என்பாள், "தீது செய்வேற்கு அருள் செய்வான் நின் சித்தம் திரும்புவையேல்" எனச் செப்புகின்ருள். சித்தம் திரும்பிலே என்றவிடத்துச் சினை வினை முதன்மேல் நிற்கிறது. அருட்பேற்றுக்கு விரதமும் ஞானமும் வேண்டுமென்பார் உளராதலால், ஒருபொழுது உணவு மறுக்கும் விரதம் மேற்கொண்டமை தோன்ற, "தேகத் துணை ஒருபோது தவிர்ந்த நினக்கு" என்றும், விரதத்தால் அருள் பெருமை கண்டு தாயர் முதலாயினர் இகழ்ந்து பேசுவதற்கு அஞ்சுகின்றேன் என்பாள், "ஏது செய்தான் சிவன் என்றே உலகர் இழிவுரைத்தால்" என்றும், இழிவுரை பிறவாமை நோக்கி நீ எனக்கு அருளல் வேண்டும்; அருளாதொழியின் யான் செய்யலாவது ஒன்று மில்லை எனத் தன் கையறவு தெரிவிப்பாளாய், "யாது செய்வேன் தெய்வமே" என்றும் வருந்துகின்ருள். உடற்கு உணவு போல உயிர்க்கு இறையருள் இலங்குதல் தோன்ற, "உயிர்க்கு இன்னமுதே" என் இசைக்கின்ருள். "உரித்தன் றுனக்கிவ்வுடலின் தன்மை, உண்மை யுரைத்தேன் விரதமெல்லாம் தவமுயன்றும் வாழா நெஞ்சே" (நெய்த்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. (3)

இதனல், விரதம் தரித்தும் திருவருள் எய்தாமை நினைந்து வருந்திய வாறும்;

2624. தெரியாமை யால்சிறி யேன்செய்குற்
　　　றத்தைநின் சித்தமதில்
　　பிரியாமை வைத்தருள் செய்திலை
　　　யேல்எனைப் பெற்றவளும்
　　பெரியாசை கொண்டபிள் ளாய்அரன்
　　　என்தரப் பெற்றதென்றே
　　பரியாசை செய்குவ ளால்அய
　　　லார்என் பகருவதே.

உரை : பெருமானே, சிற்றறிவுடைய யான் நன்று தீது தெரியாமை யால் செய்த குற்றத்தை நின் திருவுள்ளத்தில் நிலைபெறக் கொண்டு எனக்கு அருள் செய்யாயாயின், என்னைப் பெற்ற தாயும் பேராசை கொண்ட பெண் மகளே, சிவன் நினக்குத் தந்தது இதுதானே என்று பரியாசம் செய்கின்ருளெனின், அயலார் யாது தான் கூறுர்; அருள் செய்க. எ.று.

அறிவின் சிறுமையால் நன்று தீது தெரியும் திறமிலனுயினேன் என்பாள், "சிறியேன் தெரியாமையாற் செய்குற்றத்தை" எனவும், பொறுத்தாற்றும் அளவின் மிக்கமையால் மனத்தின்கண் நினைந்த வண்ணம் இருக்கின்ருய் என்பாள், "நின் சித்தமதில் பிரியாமை வைத்து" எனவும், அதனல் எனக்கு அருளாயாயினை என்பாள், "அருள் செய்திலை" எனவும் சொல்லி வருந்துகின்ருள். இனி அருள் செய்யாயின், பொருளில்லாளைப் பெற்ற தாயும் இகழ்ந்து நோக்குவதுபோல அருட் பேறு இல்லாத என்னை ஈன்ற நற்ருயும் இகழ்வாள் என்பாளாய், "பெற்றவளும் அரன் தரப்பெற்றது என் என்று பரியாசை செய்குவள்"

எனப் பதறுகின்ருள். பெண்மகளையும் பெண்பிள்ளை யெனுன்ம் வழக்குப் பற்றிப் ''பிள்ளாய்'' எனக் கூறுகின்ருள். சிவன் திருவருளினும் பெரிய தொன்று இல்லாமையால், அதன்மேல் வைத்த வேட்கையைப் ''பெரிய ஆசை'' எனக் குறித்து, ''பெரியாசை கொண்ட பிள்ளாய்'' என்று கூறுகிருள். பெரிய ஆசை - பெரியாசை எனப் பெயரெச்சத் தகரம் குறைந்தது; புகழ் புரிந்த இல் எனறபாலது ''புகழ் புரிந்தில்'' (குறள்) என்ருற்போல. 'அருளிற் பெரியது அகிலத்து இல்'' (31) எனத் திருவருட் பயன் கூறுவது காண்க. பெரிய ஆசை வயப்பட்ட பெண்ணே, உன் ஆசை தீரச் சிவன் தந்தது என்னே என இகழ்ந்து ஏசுவாள் என்பாளாய், ''பரியாசை செய்குவள்'' என்றும், பெற்ற தாயே எள்ள நகையாடுவ ளாயின், அயலாரும் பிறரும் யாது கூறுர் என்றற்கு ''அயலார் என் பகருவதே'' என்றும் சொல்லிக் கண் கலுழ்கின்ருள். ஆசை நீங்கப் பேசுவது பரியாசை; இது பரியாசம் எனவும் வழங்கும். ''யார் சொலும் பரியாசமே'' (மீனு. குறம்) என்று குமரகுருபரர் வழங்குவது காண்க. பரிகாசம் என்பது உலக வழக்கு.

இதனுல், திருவருளைப் பெருதொழியின், பெற்ற தாயே இகழ்வா ளெனின், பிறர் இகழ்வது சொல்ல வேண்டா என முறையிட்டவாரும். (4)

2625. எண்ணுமல் நாயடி யேன்செய்த
குற்றங்கள் யாவும்எண்ணி
அண்ணுநின் சித்தம் இரங்காய்
எனில்இங் கயலவர்தாம்
பெண்ஆர் இடத்தவன் பேரருள்
சற்றும் பெருதநினக்
கொண்ணுதிவ் வண்மை விரதம்என்
ருல்என் உரைப்பதுவே.

உரை: அண்ணலே, விளைவைக் கருதாமல் நாயடியேனுகிய யான் செய்த குற்றங்கள் யாவற்றையும் மனத்திற் கொண்டு, நினது திருவுள்ளம் இரங்காயாயின், இவ்வுலகில் அயலாய மக்கள், பெண்ணுகிய உமையம்மை பொருந்திய இடப்பாகத்தையுடைய சிவபெருமானுடைய பேரருளைச் சிறிதளவும் பெருத நினக்கு இந்த வளமான விரதம் பொருந்தாது காண் எனப் புகல்வாராயின், யான் யாது கூறுவேன். எ.று.

அண்ணல் - அண்ணுல் என விளியேற்றது. நாயடியேன் - நாய் போற் கீழ்மைப்பட்ட அடியேன். ''நாயடியேற் கூராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை'' (பொன்னூ) என மணிவாசகர் வழங்குவது காண்க. பின் விளைவது கருதாமற் செய்த குற்றங்களை மனத்திற் கொள்ளலாகாது என்ற குறிப்புப் புலப்பட, ''எண்ணுமல் நாயடியேன் செய்த குற்றங்கள் யாவும் எண்ணி'' எனவும், எண்ணுதலால் நின் திருவுள்ளம் இரங்குகின்ற தில்லை என்பாளாய், ''நின் சித்தம் இரங்காய்'' எனவும் இயம்புகின்ருள். பெண்ணுரிடத்தவன் என்பது அயலவர் கூற்று. பெண்மைக்கிரங்கி உமையம்மையாகிய பெண்ணுக்கருள் மிகுந்து தன்

மேனியில் இடம் தந்த பெருமான் என்ற குறிப்பு விளங்கப் "பெண்ணு ரிடத்தவன்" என்று பேசுகிறுர்கள். பேரருளுடையவனுதலால், நினக்குச் சிறிது அருளுவதால் குறையுருனுகவும், அவனது அருள் பெருமை வருந்தத் தக்கதாகலின், நீ அவனது அருட்பேறு கருதி வளமிக்க விரத மிருப்பது பொருந்தாது என்பராயின் யான் யாது சொல்வேன் எனப் பரிவப்படுகிருளாதலால், "அயலவர் தாம் பெண்ணுரிடத்தவன் பேரருள் சற்றும் பெருத நினக்கு ஒண்ணுது இவ்வன்மை விரதம் என்ருல் என் உரைப்பது" என மொழிகின்ருள். வன்மை விரதம் - பல்வேறு நலங்களை எய்துவிக்கும் விரதம்.

இதனுல், நீ அருளாயாயின் அயலவர் எனது விரதத்தையும் நின் பேரருளையும் குறை கூறுவராயின் யான் பொறேன் என்று புகன்றவாரும். (5)

2626. பொய்யான வஞ்சக னேன்பிழை
யாவும் பொறுத்துனருள்
செய்யாய் எனில்எது செய்குவன்
யான்இச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற்
ருய்என் றிகழ்வர்கண்டாய்
அய்யாஎன் இன்அமு தேஅர
சேஎன தாண்டவனே.

உரை : ஐயனே, எனக்கு இனிய அமுதமே, என்னை ஆண்டருள் பவனே, பொய்ம்மையும் வஞ்சகமும் நிறைந்த என் பிழைகள் யாவையும் பொறுத்து அருள் புரியாயாயின், யான் என்ன செய்குவேன்; இந்த நாட்டிலுள்ளவர் என்னை நோக்கிப் பயனில்லாத விரதத்தை மேற் கொண்டு என்ன பயனை அடைந்தாய்; விட்டொழிக எனவுரைத்து இகழ்வார்களே, அது குறித்தேனும் அருள் செய்க. எ.று.

ஐயா எனற்பாலது எதுகை நோக்கி அய்யா என வந்தது. ஐயன் என்பது ஐயா என விளியேற்றது. தன்னை யுண்டாரை நெடுநாள் வாழச் செய்யும் அமுதம்போல. சிவனருளாகிய அமுதம் உண்பவர் இன்ப வுலகில் நீடு வாழ்வார் என்பதுகொண்டு, "என் இன்னமுதே" எனவும், உடல் பொருள் உயிர்களை ஆண்டருளும் நலம் பற்றி "எனது ஆண்டவனே" எனவும் கூறுகின்ருள். வஞ்சம் புரிதலும் பொய் யுரையும் பொய்த் தோற்றமும் பொய்ச் செய்கையும் கலந்திருத்தலாற் "பொய்யான வஞ்சகனேன்" என்றும், வஞ்சனையே தீவினையாய்க் குற்றமாதலால், "பிழை" என்றும், பொறுக்கும் அளவினது பிழை யாகவும், ஒறுக்கும் அளவினது தீது செய்தலாகவும் கருதப்படுவதால், என் குற்றம் பிழை வகையாய்ப் பொறுத்தாற்றி அருளப்படும் பான்மைய என்றற்குப் "பிழை யாவும் பொறுத்து உன் அருள் செய்யா யெனில் என்றும் உரைக்கின்ருள். திருவருள் செய்யாதொழியின் வரும் விளைவு இஃது என்பாளாய், நாட்டவர் நான் மேற்கொண்டொழுகும் கொள்கை பயனில் செயலாமென என்னை இகழ்வர் என்பது விளங்க, "எய்யா விரதத்தில் யாது பெற்ருய்" எனவும், "இகழ்வர் கண்டாய்" என்றும்.

இயம்புகிருள். பயனறியப்படாது வீண்படும் விரதம், "எய்யா விரதம்" எனப்படுகிறது. எய்யாமை - அறியாமை. பயன்படாத தொழிலைச் செய்தவர், வினைவு அறியப்படாதாயிற்று என்னும் வழக்கு நோக்கி இவ்வாறு கூறுகின்ருள். கண்டாய் - முன்னிலை யசை.

இதனுற் சிவ வழிபாடாகிய விரதம் எய்யா விரதம் என இகழப்படு வது கூறி வருந்தியவாரும். (6)

2627, உன்உள்ளம் கொண்டேற் கருளாய்
எனில் இவ் உலகர்பொய்யாம்
எண்உள்ளம் கொண்ட களவறி
யாதுநின் றேடவிங்தே
நின்உள்ளம் கொள்விர தப்பயன்
யாது நிகழ்த்தெனகே
முன்உள்ளம் கொண்டு மொழிவர்கண்
டாய்எம் முதலவனே.

உரை: உலகுக் கெல்லாம் முதற் பொருளாகியவனே, உனது திருவுள்ளத்தை மனதிற் கொண்ட எனக்கு உன்னுடைய அருளைச் செய்யா தொழிகுவையாயின், பொய்யாக என் சிந்தையிற் கொண்ட கள்ளச் செய்கையை அறியாமல், இவ்வுலகத்தவர் என்னை நோக்கி, ஏடா, இங்கே நின் மனத்திற் கொண்ட விரதத்தால் யாது பயனும், சொல்லுக என்று முந்துகிற உள்ளத்தோடு வினுவி என்னை இகழ்வர் காண். எ.று.

முதலவன் - முதலாகியவன்; அனைத்துக்கும் முதற் பொருள் என்பது கருத்து; மூலகாரணன் எனினும் பொருந்தும். உன் மேல் அன்பு கொண்டு உனது திருவருள் உள்ளத்தைப் பெற்ற அடியவள் என்றற்கு, "உன்னுள்ளம் கொண்டேன்" என வுரைக்கின்ருர். உன்னுள்ளம் என்பதை உன்னும் உள்ளம் எனக் கொண்டு நினைவன நினைக்கும் மன முடைய யான் என்றும் கூறுவர் நீ திருவருளை நல்காவிடில் என்பார், உயர் மொழிக் கிளவியாக "அருளா யெனில்" என்கின்ருர். யானும் என்னுள்ளமும் பொய் செய்தொழுகும் கள்ளத்தால் அருட் பேறு எனக்கு எய்தாமை யறியாமல், நீ அருளுவ தில்லையென நினைக்கின்றனர் என்பா ராய், "பொய்யாம் என்னுள்ளம் கொண்ட களவு அறியாது" என்று கூறுகிருர். "யானே பொய் யென்னெஞ்சும் பொய்யென் அன்பும்" (சதக) என மணிவாசகர் உரைப்பது காண்க. கண்ணின்று கண்ணறப் பேசு கிருர்கள் எனற்கு "நின்று" என்றும், ஒருவரைத் தாழ்வாகப் பேசு மிடத்து விளப்பது "ஏட" என்னும் பழந்தமிழ்ச் சொல். ஆண்மகனை ஏட என்றும், பெண்ணை ஏடி யென்றும் அழைப்பர். தஞ்சை மாவட்டத்தவர், பணிப் பெண்களை "ஏட்டி" என இன்றும் வழங்குப. உன் மனத்திற் கொண்ட கொள்கை யாது; அது பயன்படுவதாக இல்லையே என இகழ் வாராய், "ஏட இங்கே நின் உள்ளம் விரதப் பயன் யாது; நிகழ்த்தென மொழிவர் கண்டாய்" என இசைக்கின்ருர். இதுகாறும் பெண்மையுள்ள

முற்றுப் பேசிய வடலூரடிகள், உலகியல் நினைவு போந்து தாக்கவும், ஆண்மைத் தன்மை எய்தி, "ஏட" எனவுலகவர் பக்கல் திருப்பி விடுகிறார். இகழ்ந்து வலி யழிக்கும் கருத்து முற்பட்டு நிற்றல் தோன்ற, நிகழ்த் தெனவே முன்னுள்ளம் கொண்டு மொழிவர் காண்" என மொழிகின்றார். உள்ளம் - கருத்து. முன்னுதல் - முற்படுதல்; நினைத்தலுமாம். முந்துறச் செல்வோரை, முன்னியோர் என்பர். "வேய் பயி லழுவம் முன்னி யோரே" (குறுந்.7) என வருவது காண்க.

இதனால், நீ அருளாவிடில் எனது திருநெறிக் கொள்கை உலகவரால் பழித் தொதுக்கப்படுமே என இரங்கியவாறும். (7)

2623. முந்தோகை கொண்டுநின் தண்ணருள்
வாரியின் மூழ்குதற்கிங்
கந்தோஎன் துன்பம் துடைத்தரு
ளாய்எனில் ஆங்குலர்
வந்தோ சிவவிர தாஎது
பெற்றனை வாய்திறஎன்
றிந்தோர் தருசடை யாய்விடை
யாய்என்னை ஏசுவரே

உரை : பிறைமதி தவழும் சடையை யுடையவனே, எருதேறு பவனே, மிக்கமும் மகிழ்ச்சியுடன் உனது தண்ணிய திருவருளாகிய கடலில் மூழ்கி இன்புறுதற்குத் தடையாகும் துன்பத்தைப் போக்கி யருளாயாயின், ஐயோ, அந்நிலையில் உலகத்தார் என்பால் வந்து, ஓ சிவ விரதியே, இதனால் நீ பெற்ற பயன் யாது? சொல்லுக என என்னை எள்ளி இகழ்ந்து பேசுவர், காண். எ.று.

இந்து, பிறைத் திங்கள். ஏர்தரு சடை - தவழும் சடைமுடி. விடை - எருது; எருதை வூர்தியாக வுடைமை பற்றி "விடையாய்" என்று உரைக்கின்றார். சிவ சிந்தனைக்கண் உண்ணின் றூறும் அருளின்பப் பெருக்குப் பாயுங்கால் குறைபாடுடைமையால் ஆன்ம எல்லையைக் கடந்து வழியு மிடத்து உள்ளத்தில் இன்ப மயக்கம் முகிற் படலம் போல் பரந்து ஆன்ம வுணர்வை மறைக்கிறது என்பர் ஆல்ட்ஸ் அக்சிலி (The Cloud of Unkhowing) என்பர். பொங்கிப் பெருகும் திருவருள் இன்ப மயக்கத்தை வடலூர் வள்ளல் "முந்து ஓகை" என மொழிகின்றார். அவ்வின்ப நுகர்ச்சிக்கண் உடற் சேர்க்கையும் உலகியல் வாழ்வும் பயக்கும் துன்பப் படலம் எழுஞாயிற்றை மறைக்கும் கருமுகிற் படலம் போல் மறைத்து இடர் செய்தலை, "நின் தண்ணருள் வாரியில் மூழ்குதற்கு அந்தோ என் துன்பம் துடைத் தருளாய்" என முறையிடுகின்றார். அருள் வாரி-அருளின்பமாகிய கடல். அருட் கடலைக் கண்டு அதனுள் மூழ்கி மகிழத் துடிக்கும் ஆன்ம வுள்ளத்தை, வாழ்க்கை யிடர்களும் தளர்வு களும் ஒருபாற் படர்ந்து தடுத்தலை எண்ணி "அந்தோ" எனக் கதறு கின்றார். துன்பத் தளையை ஒழிக்கா விடத்து அருளனுபவம் சிதைதலால், இருள் நீக்கமும் ஒளி விளக்கமும் போல உடனிகழ்ச்சியாகும் உலகியல் துன்பம் படர்ந்து தாக்குவதை, "அருளா யெனில் ஆங்குலகர்

வந்து எது பெற்றனை வாய்திற என்று என்னை ஏசுவரே'' என வுரைக்கின்றார். உலகியல் துன்பத்தை ''உலகர்'' என மக்கள் மேல் ஏற்றிக் கூறுகிறார். சிவவிரதன் என்பது ''சிவவிரதா'' என விளியேற்றது. சிவ விரதன் - சிவ சிந்தனை மேற்கொண் டொழுகும் சிவநெறிச் செல்வன். அருளொளி மறைவதால் சிந்தனை அலமரல் உறுவதும் வாய் திறந்து பேசா நிலை மேம்படுதலும் நோக்காமல், பேசு என்பார், ''வாய் திற'' என உலகம் உரைக்கின்றது; வேதனைச் சொற்களை எறிகிறது; இதனை வாய் திறவென்று என்னை ஏசுவரே'' எனப் புலம்புகிறார். பிறைக்கு உன் சடை யாதாரமானாற் போல ஊரும் உனக்கு விடை ஆதாரமாவது போல எனக்கு உன் திருவருள் ஆதாரமாம் என்று குறிப்புத் தோன்ற, ''இந்து ஏர்தரு சடையாய் விடையாய்'' என்ற சொற்கள் நிற்கின்றன.

இதனால், அருளனுபவப் பேற்றுக்கு உலகம் தடை செய்து இகழ்வது எடுத்தோதப்படுகிறது. (8)

2629. ஆசும் படியில் அகங்கா ரமும்உடை
யான்என்றெண்ணிப்
பேசும் படியில் எனக்கு
அருளாய்எனில் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேடன்
என்றதை எண்ணிஎண்ணிக்
கூசும் படிவரு மேஎன்செய்
கேன்என் குலதெய்வமே.

உரை : என் குலதெய்வமே, குற்றமும் ஒப்பற்ற அகங்காரமும் உடையவன் என்று கருதிக் கண்டோர் தம்மிற் பேசிக்கொள்ளும் நிலையில் நீ எனக்கு உனது அருளனுபவத்தை நல்காயாயின், பெரிய இவ் வுலகத்தவர், என்னை ஏசியிகழும் பான்மை எனக்கு எய்துமே, பொய் வேடம் புனைபவன் என்று உரைப்பதப் பன்முறையும் நினைந்து நாணும் நிலைமை வந்து விடுமே; இதற்கு என்ன செய்வேன். எ.று.

ஒரு திரளாக வின்றி இனம் இனமாகப் பிரிந்து வாழ்தலால், இனத்தைக் குலமென்றும், இனத்தவர் வழிபடும் தெய்வத்தைக் குல தெய்வமென்றும் கூறுவது இயல்பாதலால், சைவ இனத்தார் பரவும் சிவமூர்த்தத்தைக் ''குல தெய்வமே'' எனக் குறிக்கின்றார். திருவருள் தனக்கு எய்தாவிடின் வரும் ஏதங்களை நினைந்து வருந்துகின்ற வடலூ ரடிகள், அருளை நினையாமல், பிறர் குற்றம் கண்டும், அவர் முன் அஞ்சாது தலை நிமிர்ந்து செல்லும் பிறரது திறம் கண்டும், இவன் குற்றம் மிக்கவன், இவன் அகங்காரி என்றும் பேசுவது மக்களுலகியல். அதனை ''ஆசும்படியில் அகங்காரமும் உடையான் என்று எண்ணிப் பேசும்படி'' எனக் கூறுகின்றார். படியிரண்டனுள் முன்னது ஒப்பு, பின்னது மக்களுலகம். மக்களுலகம் ஒருவன் வாழ்ந்தாலும் பொருது வீழ்ந்தாலும் பொருது என்பதற் கொப்ப, பிறரை நோக்காது தம் கருமம் செய் தொழுகும் பெரியோரைக் காணினும், குற்றம் மிக்கவனுதலால் நம் கூட்டத்தை நாடுகிறானில்லை; அகங்கொண்டவனுதலால், பிறரை

மதிக்கின்றானில்லை என மனத்திற் கொண்டு பேசுவது இயற்கையா யிருத்தலால், "ஆசும் அகங்காரமும் உடையா னென்றெண்ணிப் பேசும்படி" என வுரைக்கின்றார். இது பொருளியல் வாழ்வு; இவ்வாழ்வி னின்றும் நீங்கி அருளியல் வாழ்வை எனக்கருளுக என்று வேண்டுகிற வடலூரடிகள், அருளா தொழியின் வரும் நிலைமையை விளக்குவாராய்; "எனக்கு அருளாயெனில்" எனவும், முன்னே சொன்னபடி உலகினர் என்னைக் கண்டு ஏசுவர் என்பார், "பேருலகோர் ஏசும்படி வரும்" எனவும் இயம்புகிறார். இங்கே படி, நிலைமை குறித்தது. மக்களின் எண்ணிக்கை பெரிதாதலால், "பேருலகோர்" என்கின்றார். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும்" (சிவ. ஞா. போ.) பொய் மிக்க வுலக வர்க்குப் பொய் வேடமாகவும், அதனையுடையோர் பலராகவுமிருத்தலைக் காண்பார்க்குப் பெய் வேடமாகவும் தோன்றுதலால், "பேருலகோர் பொய் வேடன்" என்று புகல்கின்றார்கள். அதனைச் செவியுறக் கேட்டு மனம் புண்படும் வடலூர் அடிகள், "பொய் வேடன் என்றதை யெண்ணி யெண்ணிக் கூசும்படி வருமே" என வருந்துகிறார். தாம் பூண்ட வேடமும் அவ்வாறு எண்ணிக் கூசுவது புலப்பட, என்பதை எண்ணி யென்னாமல் "என்றதை எண்ணி" என இறந்த காலத்தால் எடுத் தோதுகின்றார். உலைவாயை மூடினும் ஊர்வாயை மூடலாகாது என்பது பற்றி, "என் செய்குவேன்" குலதெய்வமே" என்று உள்ளம் குமுறுகின்றார்.

இதனால், அருள் வாழ்வு எய்தாவிடின் வரும் துன்பம் எடுத்துரைத்த வாறும். (9)

2630. ஐதட் டிடும்நெஞ் சகத்தேன்
பிழைகளை ஆய்ந்துவெறும்
பொய்தட் டிகல்உடை யேற்குன்
கருணை புரிந்திலையேல்
வெய்தட்டி உண்ட விரதாநின்
நோன்பு விருத்தம்என்றே
கைதட்டி வெண்ணகை செய்வர்கண்
டாய்அருட் கற்பகமே.

உரை : அருட் செல்வம் வழங்கும் கற்பகமே, சிலேத்துமம் மிக்கு உயிரிழக்கும் உடம்புடையவனும் செய்பிழைகளை யுணர்ந்து பொய்யால் மறைக்கும் மாறுபட்ட செயலுடையவனுமாகிய யான் உனது திருவருளைச் செய்யாயாயின், உலகினர் என்னை நோக்கிச் சுடுசோறே யுண்ணும் விரதத்தையுடையவனே, உன்னுடைய கொள்கை வீணும் என்று சொல்லிக் கைகளைக் கொட்டி இகழ்ச்சி நகை செய்வரே, இதற்கு என் செய்வேன். எ.று.

வேண்டுவார் வேண்டும் பொருளையும் தேவருலகக் கற்பகம் போலாது வேண்டுவார்க்கு அருளே வழங்கும் பேரருளாளனுதலின் "அருட் கற்பகமே" எனப் புகழ்கின்றார். ஐ - சிலேத்துமம், வாதபித்த சிலேத்துமமாகிய மூன்றனுள் ஒன்று "மிகினும் குறையினும் நோய் செய்யு" (குறள்) மாதலின், "ஐதட்டிடும் நெஞ்சகத்தேன்" என்று

கூறுகின்றார். தட்டுதல் - மிக்குத் தடுத்தல். சிலேத்துமம் மிக்கபோது மூச்சுத் தடைப்பட்டு, உணர்விழந்து, உயிர் உடலினின்றும் நீங்குதல்பற்றி "ஐதட்டிடும்" எனவும், நெஞ்சமாகிய கருவியை அகத்தேயுடைய உடம்புடையேன் என்றற்கு, நெஞ்சகத்தேன் எனவும் இயம்புகிறார் ஐ மேலிட்ட வழிப்பொறி புலன்கள் நெறி மாறி, உணர்வு மயங்கி அலமருதலை, "புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி, அறிவழிந்திட்டு ஐ மேலுந்தி அலமந்த போதாக அஞ்சேல் என்றருள் செய்வான்" (ஐயாறு) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. செய்பிழைகள் பிறர் அறிந்தபோது, மானக்கேடு விளைத்தற்கஞ்சி மறைக்க முயல்வது மக்கட் கியல்பாயினும், அதனைப் பொய்களால் மறைப்பது விளங்க, "பிழைகளை யாய்ந்து பொய் தட்டு இகலுடையேன்" எனப் புகல்கின்றார். தட்டுதல் - ஈண்டு மறைத்தல் குறித்தது. இகல் - மாறுபடுதல்; பிழை கண்டுரைப் பாரைச் சினந்து முரணுதலுமாம். இஃது உயிர்க் குற்றமாதலின், பொறுத்தாற்றி அருளுக என வேண்டுவார், அருள் செய்க; அருளா யாயின், உலகினர் பழிப்பர் என்பாராய், "இகலுடையேற்கு உன் கருணை புரிந்திலையேல் கைதட்டி வெண்ணகை செய்வார்கள்" என விளம்பு கின்றார். கருணை - திருவருள். உலகினர் என்ற எழுவாய் வருவிக்கப் பட்டது; வெளிப்படத் தோன்றுமையும் எழுவாய் வேற்றுமைக்கு இயல்பு. பழைய துண்ணுமையும், வேக வைத்தெடுத்த புதிதுண்டலும் உணவுக் கொள்கையாதலால், "வெய் தட்டி யுண்ட வீரதா" என இகழ் கின்றார்கள். வெய்து - தீயில் வெந்தமைந்த உணவு. நோன்பு- விரதம். விருத்தம் - பயனில்லாதது. கை தட்டுதல் - இகழ்ச்சிச் செயல் வெண்ணகை, எள்ளல் மெய்ப்படுத்தும் நகைப்பு; வெடிச் சிரிப்பென்பர் நச்சினார்க்கினியர் (சீவக. 258).

இதனால், திருவருள் பெருவிடில் வெந்ததே யுண்டுலவும் விரதம் விருத்தமென உலகம் இகழும் என வருந்தியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

7. திருப்புகற் பதிகம்

திருவருள் ஞானம் கொண்டு அதன் இன்பத்தை நுகர்ந்து அவ்வருள் நினைவில் வாழ்வது அருள் வாழ்வு; அந்த அருள் நிலையமே உயிர்கட்குப் புகலிடமாகும்; அதனை வற்புறுத்துவது இப்பதிகம் என்பதாம்.

இதன்கண், அருண் ஞானப் பேற்றுக்குத் தகுதி யுண்டு பண்ணுவது நமச்சிவாயம் என்ற திருப்பெயரின் நலமறிந்து ஓதி யொழுகுவதாகும் அதனை யருள்பவன் நீயே; அருள் தான் பெரிய பொருள்; அதனைப் பெருவிடில் உலகவர் இகழ்வர்; ஆதரிப்பவரும் காப்பாற்றுவோரும் இலராவர். எனது நிலையைக் கண்டு இரங்குபவர் நீயல்ல தில்லை; அருள் வாழ்வு தருபவரும் நீயன்றி யில்லை; அருட் பேற்றுக்குச் செய்பிழையை நினைந்து வருந்தி, நின்னருளை நோக்கி மனம் திரும்பி வேண்டுகிறேன் என்ற கருத்துக்கள் எடுத் துரைக்கப்படுகின்றன.

கொச்சகக் கலிப்பா

2631. வேகமுறு நெஞ்ச மெலிவும் எளியேன்றன்
தேம மெலிவும் தெரிந்தும் இரங்காயேல்
மாக நதியும் மதியும் வளர்சடைஎம்
ஏக இனிமற் றெனச்கார் இரங்குவரே.

உரை : கங்கையாறும் பிறைத் திங்களும் பொருந்திய சடையையுடைய ஒருவனே, வேக மிக்க நெஞ்சுற்ற மெலிவையும், எளியவனுகிய என் உடம்புற்ற மெலிவையும் தெரிந்திருந்தும், நீ இப்பொழுது திருவுள்ளமிரங்கி எனக்கு 'அருள் புரியாவிடில், வேறே யாவர் அவ்வருளைச் செய்வார், சொல்லுக. எ.று.

நினைவுகளால் விரைவுடன் சுழலுவது பற்றி, "வேகம் உறும் நெஞ்சம்" எனவுரைக்கின்றார். மெலிதல், வன்மை குறைதல். மன மெலியுமாயின அதனின் வேருயினும் அதன் வழி நிற்கும் இயல்பினதாகையால் உடம்பும் மெலிவுற்ற தென்பார், "எளியேன்றன் தேக மெலிவு" எனத் தெரிவிக்கிறார். அருள் பெருமையால் சோர்ந்தமை தோன்ற "எளியே'னென்கிறார். மாகநதி, ஆகாய கங்கை. மதி, ஈண்டுப் பிறைச்சந்திரன் நதிக்குப் பெருக்கும் மதிக்குக் கலைவளர்ச்சியும் இயல்பாதலின் "மாக நதியும் மதியும் வளர்சடை" என மொழிகின்றார். ஏகன், ஒருவன்; "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" (சிவபுரா) எனத் திருவாசகம் உரைப்பது காண்க. இனி, இப்பொழுது. உன்னை யொழிய வேறு

எவரையும் உணர்தல் இல்லேனுதலால் "எனக்கு ஆர் இரங்குவர்" எனக் கூறுகின்றார். "உன்னையன்றி மற்றொன்று உண்டென உணர்கிலேன் யானே" எனச் சேந்தனார் (இசைப்பா) கூறுவது காண்க.

இதனால் அருள்பவர் நீயல்ல தில்லை என முறையிட்டவாறும். (1)

2632. கள்ள மனத்துக் கடையோர்பால் நாணுறும்என்
உள்ள மெலிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
எள்ளின் அளவும் இரங்கி அருளாயேல்
எள்ளும் உலகில் எனக்கார் இரங்குவரே.

உரை : கள்ளம் பொருந்திய மனத்தையுடைய கீழ்மக்கள்பாற் சென்று நாணத்தாற் சுருங்கும் என் மனமெலிவையும் தேக மெலிவையும் பார்த்திருந்தும், திருவுள்ளம் இரங்கி எவ்வளவு அருளும் செய்யாயானால் கண்டாரை இகழும இயல்பினரான உலக மக்களிடையே என்பால் இரக்கப்படுவோர் யாவர்? ஒருவரும் இல்லையாம். எ.று.

நெஞ்சிற் கள்ள நினைவும் சொற்களில் வேறு தன்மையும் உடையவர் கீழ்மக்களாதலால், "கள்ள மனத்துக் கடையோர்" எனப்படுவர். நெஞ்சிற் கள்ளமுடையார் கருத்து வஞ்சனை யுடையதாகலின் கீழோரா தற்குக் காரணம் என்க. "கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்டு அருத்தியோடு உள்ளமொன்றி யுள்குவார்" (ஆரூர்) என ஞானசம்பந்தர் மெய்யன்பரைக் குறித்துரைப்பதால் இவ்வுண்மை தெளியப்படும். தன்மையன்றி பிறர் எவர் வரினும் இகழ்வது இயல்பாகலின், அறியாது செல்பவர் உள்ளம் சுருங்கி உடல் சுருங்கி வருந்துவாராதலால், "கடையோர்பால் நாணுறும் என் உள்ள மெலிவும் உடல் மெலிவும்" எனவும், இந்நிலையில் காண்கின்றவரனைவரும் இரச்கமுடையவராகவும், நின்னிடத்தே சிறிது இரக்கமும் தோன்றவில்லையே என்பாராய், "கண்டிருந்தும் எள்ளினளவும் இரங்கி யருளாய்" எனவும், நீ அருளாவிடில், என்னைக் கண்டு இரங்குவார் ஒருவரும் இலராவர் என்பார், "உலகில் எனக்கோர் இரங்குவரே" எனவும் இயம்புகின்றார். எள், சிறுமைக்கு எல்லையாகக் காட்டப்படுகிறது. "எள்ளிருக்கின்றதற் கேனும் சிறிதிட மின்றி" (2230) என அடிகளார் பிறிதோரிடத்திற் காட்டுவது காண்க. யாரையும் எள்ளி யிகழும் கீழ்மக்கள் பெருகியது உலக மாதலால், "எள்ளும் உலகு" என எடுத்தோதுகின்றார்.

இதனால், நீ சிறிது இரங்காதொழியினும் என்னைக் கண்டு உலகில் எவரும் இரங்க மாட்டார்கள் என முறையிட்டவாறும். (2)

2633. பொன்னை வளர்ப்பாரைப் போற்றாமல் எம்பெருமான்
உன்னைமதித் துன்னுறும்என் உள்ளம் அறிந்திருந்தும்
அன்னையினும் சால அருள்வோய் அருளாயேல்
என்னை முகம்பார்த் தெனக்கார் இரங்குவரே.

உரை : எம்பெருமானே, பெற்ற தாயினும் பேரருள் செய்பவன்; பொன்னைப் பெரிதாகக் கருதிப் பேணும் பெருக்கும் செல்வர்களை எண்ணுமல், உன்னையே சிறப்பாக நினைந்து நினைந்துறையும் என் மனப்பாங்கை அறிந்திருந்தும், நீ எனக்கு அருள் செய்யாயாயின், என்னுடைய முகத்தைப் பார்த்து இரங்கியருள்பவர் யாவர் உளர், கூறுக எ.று.

பொன்னை வளர்த்தலாவது, பொன்னை உயிரினும் சிறந்ததாகப் பேணி ஒன்று பத்தாகப் பத்து நூருகப் பெருக்குதல். தானுக வளர்வ தன்மையின், பொன் பெருக்கும் செல்வரைப் "பொன் வளர்ப்பார்" எனப் புகல்கின்ருர். பொன்னுடையார் யார்க்கும் சிறிதும் ஈயாராயினும் உலகவர் அவர்களைப் போற்றிச் சிறப்புச் செய்வர்; யான் அது செய்திலேன் என்பார், "பொன் வளர்ப்பாரைப் போற்ருமல்" என்று உரைக்கின்ருர். "மெய்ம்மையே, தன்னுவார் இல்லாத் தகைமையாள்— எந்நாளும், இல்லாரை யெல்லாரும் எள்குவார் செல்வரை, எல்லாரும் செய்வர் சிறப்பென்னும் சொல்லாலே, அல்குற்கு மேகலையைச் சூழ்ந் தாள்" (ஞானவுலா) எனச் சேரமான் பெருமாள் கூறுவது காண்க, உலகியற்கு மாருக எங்கள் பெருமானே, உன்னையே நினைந்து உனது அருளையே பெரும் பொருளாக எண்ணி யுருகுவது என் நெஞ்சம்; இதனை நீ நன்கறிவாய் என்பார், "எம்பெருமான் உன்னை மதித்து உன்னுறும் என் உள்ளம் அறிந்திருந்தும்" எனக் கூறுகின்ருர். தாயினும் சாலப் பரிந்து அருள் செய்பவன் எனச் சான்ருேர் பாராட்டுதல்பற்றி, "அன்னை யினும் சால அருள்வோய்" எனச் சாற்றுகின்ருர். "தாயிற் பெரிதும் தயாவுடைய தம் பெருமான்" (பூவல்லி) என மணிவாசகர் உரைப்பது காண்க, சேய் முகம் நோக்கியதும் தாயுள்ளம் இரங்குவதுபோல நீ யுள்ளம் இரங்குகிருயில்லை; நீ அருளாயாயின், இவ்வுலகில் என்னை நோக்கி இரக்கம் உறுவோர் ஒருவரும் இல்லையாம் என்பார், "அருளாயேல் என்னை முகம் பார்த்து எனக்கார் இரங்குவரே" என வுரைக்கின்ருர்.

இதனல், பொன்னினும் பெரும் பொருளாகத் திருவருளை யெண்ணி முறையிட்டவாரும். (3)

2634. துன்னுடைய வியாக்கிரமத் தோலுடையான் தானிருக்கப்
பொன்னுடையார் பக்கம் புகுவானேன் என்றிருப்பேன்
தன்னுடைய துன்பம் தவிர்த்திங் கருளாயேல்
என்னுடையாய் மற்றிங் கெனக்கார் இரங்குவரே.

உரை : என்னையுடைய பெருமானே, தைக்கப்பட்ட புலித்தோலை யுடையாகக் கொண்டவனுகிய நீ யிருக்கும்போது, உலகிற் பொன்னை யுடைய செல்வர்கள் பக்கல் போவது ஏன் என்றிருப்பவன் யான்; அற்ருக, என்னுடைய துன்பங்களைப் போக்கி அருளாயாயின், என்பால் இரக்கங் கொண்டு அருளாதரவு செய்வோர் வேறு யாவர்? ஒருவரும் இல்லை. எ. று.

துன் - துன்னுதல். முதனிலைத் தொழிற் பெயர்; தைத்தல் என்பது பொருள். வியாக்கிரம் - புலி. வியாக்கிரத்தோல் எனற்பாலது அகரச் சாரியைப் பெற்று வியாக்கிரமத் தோல் என வந்தது. சிவனுக்குப் புலித் தோல் உடையதாதலின் "வியாக்கிரமத் தோல் உடையான்" எனக் கூறுகின்றார். பனி மூடிய கயிலாய மலையில் இருத்தலை விரும்புபவனுவலால் தோலாடையும் யானைத் தோற் போர்வையும் வேண்டப்படுகின்றன. "உருத்திகழ் எயிற் கயிலை வெற்பி லுறைதற்கே விருப்புடைய வற்புதர்'' (ஐயா) என ஞானசம்பந்தர் கூறுகிறார். பொன்னுடையார் - பொன்னும் பொருளும் மிகவுடைய செல்வர். அரிதின் முயன்று ஈட்டுவார்க்கன்றிப் பெறப்படாமையின், இன்மையால் பிறர்பால் இரத்தற்கஞ்சித் தொகுக்கப்படுதலால், பொன்னுடையார்க்கு ஈகையுள்ளம் எளிதில் அமையாமைபற்றி, பொன்னுடையார்பால் போதலை விரும்பேன் என்பாராய், "பொன்னுடையார் பக்கம் புகுவானேன் என்றிருப்பேன்" எனவும், பொன்னுடையார் பொன்னைப் பேணுதல் போல நீ என்னையும் ஆதரிப்பவன் என்றற்கு, "என்னுடையாய்" எனவும் உரைக்கின்றார். துன்பம் துடைத்து இன்பமருளுபவனாதலால், என் துன்பம் துடைத்தருள்க என வேண்டுவாராய், "துன்பம் துடைத்து இன்பமருளுபவனாதலால், என் துன்பம் துடைத்தருள்க என வேண்டுவாராய், "துன்பம் தவிர்த் திங்கருளாயேல்" என்று முறையிடுகிறார். "துன்பம் அழித்து அருளாக்கிய இன்பான்" (சீகாழி) என்று ஞான சம்பந்தர் கூறுவது காண்க, இவ்வண்ணம் இறைவன் துன்பம் போக்குபவனாதலால், பிறரை நாடுதல் பேதமையாதலால், "அருளாயேல் இங்கு எனக்கார் இரங்குவரே" என வுரைக்கின்றார்.

இதனால், நீ இரங்காயெனில் என்னை யாதரிப்பார் வேறு எவரும் இல்லை என்று முறையிட்டவாறும். (4)

2635. **வன்கண்ணர் தம்மை மதியாதுன் பொன்னடியின்**
தண்கண் அடியேன்தன் சஞ்சலவன் நெஞ்சகத்தின்
புன்கண் உழல்வைப் புகல்கின்றேன் காத்திலையேல்
என்கண் அனையாய் எனக்கார் இரங்குவரே.

உரை : என்னுடைய கண் போன்றவனே, வன்கன்மையுடையவரை நினைக்காமல் உனது பொன்னடிக் கண்ணே யுறையும் அடியவனாகிய யான், துன்பத்தால் வலிதாகிய என் மனத்துயரில் ஆழ்ந்து வருந்துவதை எடுத்துரைத்தேனாக, நீ என்னைக் காத்தருளாயாயின், என்னை நோக்கி இரங்குபவர் உலகில் யாவர் உள்ளனர்? கூறுக. எ.று.

வன்கண்மை யுடையவரை வன்கண்ணரெனக் குறிக்கின்றார். வன்கண்மை - கற்போற் வலிதாம் தன்மை. அவரைச் சார்வதாற் பயனின்மை நோக்கி நீங்கினமை தோன்ற, "வன்கண்ணர் தம்மை மதியாது" என்று கூறுகின்றார். பொன்னடி - அழகிய திருவடி. ஒருவரது அருளாதரவு பெற்று வாழ்பவரை, அடிக்கீழ் உறைபவர், அடியுறை என்பது சான்றோர் வழக்கு. "அளிநசைக் கிரங்கி நின்அடி

நிழற் பழகிய அடியுறை'' (புறம். 198) என வருவது காண்க. இக் கருத்தே விளங்க, ''பொன்னடியின் தன்கண் அடியேன்'' என வுரைக் கின்றார். சஞ்சலம் - துன்பம். இளகும் இயல்பிற்றாகிய நெஞ்சம் துன்பம் சுடச்சுடத் தாக்குதலால் இறுகி வலிதானமை புலப்படச் ''சஞ்சல வன்னெஞ்சகம்'' எனக் கூறுகின்றார். நெஞ்சம் - நெஞ்சகம் என வந்தது. புன்கண் உழல்வு - துன்பத்திற் கிடந்து வருந்துதல். உழல்வு - உழல்வாயிற்று. புகல் - புகல்வு என வருவது போல; ''முனை புகல் புகல்வின் மாறு மைந்தர்'' (பதிற். 84) என வருதல் காண்க. யான் உரைப்பதைக் கேட்டுத் துன்பத்தினின்றும் காவா தொழிவாயாயின், என்னைக் காப்பார் பிறர் இல்லையாவதை நினைந்தருள்க என முறையிடு மாறு தோன்ற, ''காத்திலையேல் எனக்கார் இரங்குவரே'' என விளம்பு கிறார். ஒருவரும் இல்லையென்பது குறிப்பெச்சம்.

இதனால், நீ யல்லது என்னைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லையென முறையிட்டவாறும். (5)

2636. **தோன்றுவதும் மாய்வதும்ஆம் சூழ்ச்சியிடைப் பட்டலைந்து**
மான்றுகொளும் தேவர் மரபை மதியாமே
சான்றுகொளும் நின்னைச் சரணடைந்தேன் நாயேனை
ஏன்றுக்கொளாய் என்னில் எனக்கார் இரங்குவரே.

உரை: பிறப்பதும் இறப்பதுமாகிய சுழலின்கண் அகப்பட்டு வருந்தி மயங்குறும் தேவர்களின் இனத்தை நினைக்காமல் அருள் நிறைந் துள்ள நின்பாற் புகலடைந்தேன்; அடைந்த நாயேனை ஏற்றருள்வா யில்லையாயின், என்பால் இரக்கப்படுவார் ஒருவரும் இல்லையாம். எ.று.

தோன்றுதல் - பிறத்தல். மாய்தல் - இறத்தல். பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் மாறி மாறிச் சுழன்று வருவதுபற்றி, ''தோன்று வதும் மாய்வதுமாம் சூழ்ச்சி'' எனக் கூறுகின்றார். சூழ்ச்சி - சுழலுதல். ''கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி'' (மெய்ப். 12) என்ற தொல்காப்பியத்துப் பேராசிரியர் உரை காண்க; சுழற்சி சூழ்ச்சியென வந்ததாம். மால் - மயக்கம். மாலென்னும் சொல்லடியாக வருவதோர் வினைச்சொல், ''மான்று'' என்பது. இவ்வாறே நிறைதற் பொருளைத் தரும் சால் என்னும் சொல்லடியாகச் ''சான்று'' என வருகிறது. மயக்கமுறும் தேவர் என்பது ''மான்று கொளும் தேவர்'' என வருகிறது. ''மையல் செய்து இம்மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்'' (துருத்தி) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. பிறப்பிறப்புடைமைபற்றித் தேவர் களைச் ''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள்'' (முத்து) எனக் குமரகுருபரர் இகழ்கின்றார். இதனால் வடலூரடிகள், ''தோன்றுவதும் மாய்வதுமாம் சூழ்ச்சி யிடைப்பட்டு அலைந்து மான்று கொளும் தேவர்'' எனக் கூறு கின்றார். மரபு - இனம். திருவருளே நிறைந்த திருவுருவினனாதலால் சிவனை, ''சான்று கொளும் நின்னை'' என மொழிகின்றார். சரண் - புகலிடம். ஏன்றுகொளல் - வரவேற்று அருள் புரிதல். ''ஈசன் தானெனை ஏன்று கொள்ளுங்கொலோ'' (ஆரூர்) என நவில்வர் ஞானசம்பந்தர்.

இதனுல், திருவருள் சான்ற நீ ஏன்று கொள்ளாயெனில் இரங்குபவர் வேறில்லே யென முறையிட்டவாறும்.

2637. தீதுமுற்றும் நாளும் செயினும் பொறுத்தருளும்
சாதுமுற்றும் சூழ்ந்த தயாநிதிநீ என்றடைந்தேன்
கோதுமுற்றும் தீரக் குறியாயேல் நன்மைஎன்ப
தேதும்அற்ற பாவிக் கெவர்தான் இரங்குவரே.

உரை : நாள் முழுதும் தீமையே செய்தாலும் பொறுத்தாற்றும் சாந்தப் பண்பனைத்தும் நிறைந்த அருட்செல்வன் நீயாவாய் என்று உன் திருவடியை நினைந்தடைந்த எனது குற்றமெல்லாம் ஒழியத் திருவுள்ளம் கொள்ளாயாயின், நலம் என்பது சிறிதும் இல்லாத பாவியாகிய எனக்கு இரங்கி யருள் செய்பவர் வேறே யார் இருக்கின்றுர்கள். எ.று.

தீது - தீவினே. நாள் முழுதும் தீவினேயே செய்வதென்பது, நாளெல்லாம் தீதே நினைந்து தீதே மொழிந்து தீதே செய்தொழுகுதல்; மறந்தும் எவ்வுயிர்க்கும் நலம் புரியாமை எனலுமாம். செயினும், முற்றவும் செய்யாமை யுணர நின்றது. தீமையே முற்றிலும் செய்யும் குற்றவுருவினரும், நன்மையே முற்றவும் செய்யும் குணவுருவினர்க்கு இவ்வுலகம் இடமாவதில்லே; குணமே யுருவாயினுர் தேவருலகிலும், குற்றமே யுருவாயினுர் நரகத்தும் இருப்பவர். குணமும் குற்றமும் கலந்தவர்க்கே நிலவுலகம் வாழிடம் என்பர்: அதனுல், "தீது முற்றும் நாளும் செயினும்" எனக் கூறுகின்றுர். சாது - சாந்த குணமுடையவர். சூழ்தல், ஈண்டு உருவாய் நிறைவதை யுணர்த்துகிறது. தயாநிதி - தயையாகிய செல்வ முடையவன். தயை - அருள். "தயாவான தத்துவன்" (திருவாசகம்) என்று சான்றேர் சொல்லக் கேட்டு உன் திருவடியை நினைந்து சேர்ந்தேன் என்பாராய், "என்று அடைந்தேன்" என வுரைக்கின்றுர். கோது - குற்றம். விலக்கத் தக்கதாதல் பற்றிக் குற்றம் கோதெனப்படுகிறது. தீர்தல் - நீங்குதல். குறித்தல் ஈண்டு மனத்திற் கொள்ளுதல் மேற்று. நலம் சிறிதும் இல்லாத பாவி யெனத் தம்மை இகழ்ந்துரைத்தலால், "நன்மை யென்பது ஏதுமற்ற பாவி" எனத் தம்மையே இகழ்கின்றுர்.

இதனுல், நன்மை யேதுமில்லாத பாவியாகிய எனக்கு நீயல்லது இரக்கம் கொள்பவர் யாருமில்லே யென முறையிட்டவாறும். (7)

2638. துன்றியமா பாதகத்தோன் சூழ்வினேயை ஓர்கணத்தில்
அன்றுதவிர்த் தாண்ட அருட்கடல்நீ என்றடுத்தேன்
கன்றுறும்என் கண்கலக்கம் கண்டும் இரங்காயேல்
என்றும்உளாய் மற்றிங் கெவர்தான் இரங்குவரே.

உரை : எக்காலத்தும் உள்பொருளாகிய பெருமானே, மிக்கதாகிய மாபாதகம் புரிந்தவனேச் சூழ்ந்து பற்றி யிருந்த பாவத்தை ஒரு கணப் பொழுதில் அந்நாளில் போக்கி யருள் செய்த அருட் கடலாயினுய் நீ

என்று நினைந்து நின் திருவருளை வேண்டித் திருவடியை அடைந்தேனாக, செய்த வினையை நினைந்து மனம் நொந்து கண்ணீர் சொரியும் என்னைக் கண்களாற் பார்த்தும் அருள் செய்யாயாயின் உலகில் யாவர் என்பால் இரக்கம் கொள்வார்கள்? ஒருவரும் இல்லை. எ.று.

என்றும் உளாய், எக்காலத்தவராலும் உள்பொருள் எனப் போற்றப் படுபவனே. "பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே" (திருப்பல்லாண்டு) எனச் சேந்தனார் செப்புவ தறிக. பாதக மெனப்படும் குற்றங்கள் அனைத்தும் கொண்டவன் மாபாதகன். பாதகங்கள் அனைத்தினும் தாயைப் பெண்டாளல் முதலியன மாபாதகம் எனச் சொல்லப்படும். அதனைப் புரிந்தவன் என்றற்குத் "துன்றிய மாபாதகத்தோன்" என்று கூறுகிறார். பத்தென்னும் எண்ணினுள் ஒன்று முதல் ஒன்பதற்கு மேலும் துன்றுதல் போல, இந்த மாபாதகம் ஏனைப் பாதகங்களைத் தன்கண் கொண்டிருத்தலால், "துன்றிய மாபாதகன்" என்று சொல்லுகின்றார். சூழ்வினை - தாய்க்கொலை புரிந்த பிரமகத்தி என்னும் தீவினை. அத்தீவினை, தன்னைச் செய்பவன் எத்துணைப் பிறப்பு மாறி மாறி எடுப்பினும் அவன் "உயிரின்கட் கிடந்து புக்குழிப் புகுதலின்" சூழ்வினை எனப்படுகிறது. அதனையும் மதுரைச், சொக்கநாதன் இமைப்பொழுதில் தொடர் பறுத் தொழித்த வரலாறு பற்றி "ஓர்கணத்தில் அன்று தவிர்த்தாண்ட அருட் கடல் நீ" எனப் புகழ் கின்றார். அன்று - மதுரையில் திருவிளையாடல் பல புரிந்த அப்போது. அருட் கடல் - அருளாகிய கடல். கன்றுதல் - ஈண்டு பன்முறையும் நினைந்து வருந்துதல். கன்றுதல், செய்வினைப் பயிற்சியால் தன்மை மாறுதல். செய்பிழையை நினைந்து வருந்தி மனம் மாறுவார்க்கு அருளல் நல்லறமாதலால், "கன்றுறும் என் கலக்கம்" என்று கூறுகின்றார். இரங்குதல் பேரறம் என்பது குறிப்பு.

இதனால், செய்பிழையை மறந்து மனம் திரும்பும் என்னை அருளுதல் அறமென்பதாம். (8)

2639. **கோடாமே பன்றிதரும் குட்டிகட்குத் தாயாகி**
வாடா முலைகொடுத்த வள்ளலென நான் அடுத்தேன்
வாடாஎன் றுன்அருளில் வாழ்வான் அருளிலையேல்
ஈடாரும் இல்லாய் எனக்கார் இரங்குவரே.

உரை : ஒப்பொருவரும் இல்லாத பெருமானே, பன்றி யொன்று பதினாறென்ற முறை மாறாமல் ஈன்ற குட்டிகள் பலவற்றிற்கும் தாய்ப்பன்றி யாய்த் தோன்றி முலையாற் பாலுணவு தந்த வள்ளல் நீ யாவாய் என்று எண்ணி உன் திருவருளை நாடுகின்றேன்; அத் தன்மையனாகிய என்னை நோக்கி இங்கே "வாடா" என்று கூவி யழைத்து உன் அருளில் வாழ்தற்கு நீ அருளா தொழிகுவையானால், இவ்வுலகில் வேறே என்னை யாவர் ஆதரித் தருள்வார்கள், கூறுக. எ.று.

ஒப்பாரும் மிக்காருமில்லாத தனித் தலைமைப் பெருமானாதலின், "ஈடாருமில்லாய்" என இசைக்கின்றார். "தன்னானைத் தன்னொப்பா ரில்லாதானை" (ஆவடு) என்று நாவுக்கரசர் பன்முறையும் கூறுவர். பன்றி கோடாமை தரும் குட்டி என இயையும். கோடுதலாவது - முறை திறம்புதல். பன்றி பதினாறு குட்டி யீனும் என்றலின், அவ்வாறே இயலுவது தோன்றக் "கோடாமை தரும் குட்டி" என்று உரைக்கின்றார். பன்றியின் குட்டிகள் எனப் புறக்கணிக்காமல், தாயிறந்தமை நோக்கித் தானே தாய்ப் பன்றியாய் உருக்கொண்டு பால் கொடுத்த செய்தி திருவிளையாடலிற் கூறப்படுவதால், "வாடா முலை கொடுத்த வள்ளல்" எனப் பரவுகின்றார். பால் வற்றாத முலை என்பார், "வாடா முலை" என்கின்றார். பன்றிக் குட்டிகள்பால் அருள் கொண்டு பால் தந்த வள்ளல் மக்களினத்து, எனக்கும் அருள்வன் என்று கருதி உன் திருவடியை உள்ளி வந்துள்ளேன் என்பார்,"வள்ளலென நான் அடுத்தேன்" என்றும், அடுத்து நின்ற என்னை நோக்கி, "வாடா என்று உன்னருளில் வாழ்வான் அருள்கிலை" என்றும் சொல்லி வருந்துகிறார். வாடா என்பது தன்னின் தாழ்ந்தான் ஒருவனை அழைக்கும் வழக்குச் சொல். "வா அடா" என்பது வாடா என மருவியது. இதற்குப் பெண்பால் "வாடி" என வரும். "வருவார் அழைத்து வாடி" (4482) எனப் பிறிதோரிடத்திற் கூறுவது காண்க. வாடா என்று அழைத்து உன் திருவடி நீழலில் வாழச் செய்க என்பது கருத்து. நீ அவ்வாறு அழைத்து அருள் செய்கின்றிலை; அருளா விடில் எனக்கு இரங்கி அருள் செய்பவர் ஒருவருமில்லை என்பாராய், "அருளில் வாழ்வான் அருள்கிலையேல் எனக்கார் இரங்குவரே" எனச் சொல்லிப் புலம்புகின்றார். அருளில் வாழ்தலாவது, திருவருள் ஞான வின்பம் பெற்று நுகர்ந்திருத்தல்; "நண்ணரிய சிவானந்த ஞான வடிவே யாகிய அன்னலார் சேவடிக் கீழ்" அமர்ந்திருத்தல்.

இதனால், அருளில் வாழும் பேறு அருளாயாயின், வேறு யாவர் அதனை எனக்கு நல்குவார் என முறையிட்டவாறும். (9)

2640. கல்லா நடையேன் கருணையிலேன் ஆனாலும்
நல்லார் புகழும் நமச்சிவா யப்பெயரே
அல்லாது பற்றொன் றறியேன் அருளாயேல்
எல்லாம் உடையாய் எனக்கார் இரங்குவரே.

உரை: எல்லாம் உடைய பெருமானே, யான் கல்லாதவர்பால் காணப்படும் ஒழுக்கமே யுடையேன்; நெஞ்சில் இரக்கப் பண்பு இல்லா தவன்; ஆயினும், நல்லவர் போற்றிப் புகழும் நமச்சிவாய என்னும் திருப் பெயரே பற்றுக் கோடாகக் கொண்டுள்ளவனே யன்றி வேறொரு பற்றும் இல்லாதவன்; இத் தன்மையனாகிய எனக்கு உன் திருவருள் எய்தா தாயின், என்பால் இரக்கமுற்று அருள் செய்பவர் யாவர் உள்ளனர், கூறுக. எ.று.

உடல் பொருள்களை யுடைமையாகவும் உயிர்களை அடிமையாகவும் உடையனாகலின் இறைவனை "எல்லாம் உடையாய்" எனப் போற்று கின்றார். நடை - ஒழுக்கம். கல்லாதார்பாற் காணப்படும் தீயொழுக்கம் என்பால் உள தென்பார், "கல்லா நடையேன்" என்கின்றார். கற்ற

வரிடத்து மறவா நிலையில் இருக்கும் அறிவு போல நல்லொழுக்கம் இல்லா தொழிவதும், தீயொழுக்கம் அமைவதும் உண்மையால், ஓரளவு கற்றுளே னுயினும் கல்லாமை பயக்கும் தீயொழுக்கம் என்னிடம் உளது எனற்கு இவ்வாறு கூறுகின்றூர். கல்லா வொழுக்கத்தில் தலையாயது இரக்க மில்லாமையாதலின், அதனை விதந்து "கருணையிலேன்" எனக் கூறுகின்றூர். கற்றவர் பெருகிய இக்காலத்தும் கல்லா நடையாகிய இரக்க மில்லாமை எங்கும் பரந்து நிற்றலே நன்ஞான நல்வாழ்வுக்கு அமைந்த மண்ணியல் வாழ்வும் துன்ப விருள் சூழ்ந்து கிடத்தற்கு ஏதுவென அறிதல் வேண்டும். கல்லா நடை யுடைமையால் கருணை யிலேனுயினும், நமச்சிவாய என்ற திருப்பெயரைப் பற்றுக் கோடாகக் கொண்டு, உய்தி பெற விழைகின்றேன் என்பார், "நமச்சிவாயப் பெயரே அல்லாது பற்றொன்று அறியேன்" என வுரைக்கின்றூர். நமச்சிவாயப் பெயர், உயிர்கள்மலத்தால் மறைப்புண்பதையும், திருவருள் அதனை நீக்கி அறிவொளி நல்குவதையும் கண்டு, நல்லவர் அதனைப் புகழ்ந்தோதிய வண்ணமிருத்தலின், "நல்லார் புகழும் நமச்சிவாயப் பெயர்" என நவில் கின்றூர். நமச்சிவாய என்னும் பெயர் ஐந்தெழுத்துக்களை யுடைய தாகலின், அதனை ஐநதெழுத் தென்றும் அஞ்செழுந்தென்றும் சான்றேர் புகன்றுரைப்பர். நமச்சிவாய என்பது சிவனது திருப்பெயர்; "எந்தையார் திருநாமம் நமச்சிவாய" (பல) எனத் திருநாவுக்கரசர் தெரிவிக்கின்றூர். சிவாயநம என்னும் பெயர் வேறு; ஐந்தெழுத்து வேறு என மருள லாகா தென்பதற்காக, "நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும் சாமன்றுரைக்கத் தருதி கண்டாய்" (நாகைக்கா) என்று திருநாவுக்கரசர் விளக்குகின்றூர். நமச்சிவாய என்பது நமச்சிவாயம் எனவும் வழங்குவதுண்டு. "சீரார் நமச்சிவாயம் சொல்ல வல்லோம் நாவால்" (மறுமாற்றத்) என நாவுக்கரசர் வழங்குவது காண்க. "நக்கன் எம்பிரான் அருள் திருப் பெயராம் நமச்சிவாயத்தை நான் மறவேனே" (819) என்று வடலூர் வள்ளலும் உரைக்கின்றூர். நமச்சிவாயத் திருப்பெயரே உயிர்கட்குப் பற்றுக் கோடாகலின் "நமச்சிவாயப் பெயரல்லாது பற்று ஒன்றறியேன்" என வோதுகின்றூர். இது போலவே நம்பியாரூரர், "மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன், நற்றவா வுனை நான் மறக் கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" (பாண்டிக்) என வுரைத்தாராக, மணிவாசகர், "என்னே உய்யுமாறு என்றெண்ணி அஞ்செழுத்தின் புனை பிடித்துக் கிடக்கின்றேன்" (சத) எனக் கூறுகின்றூர். வடலூர் வள்ளல், "நம்மை யாளுடை நாதன்றன் நாமம் நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே" (990) என நவில்கின்றூர்.

இதனுல், நமச்சிவாயப் பெயரல்லது பற்றுவது வேறில்லை யென அறிவேனுதலின் எனக்கு அருள் செய்க; அருள்பவர் வேறில்லை என விண்ணப்பித்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

8. சிந்தைத் திருப்பதிகம்

கொச்சகக் கலிப்பா

அஃதாவது மனத்தின்கண் திருவருளை நினைந்து, அதனை நினைக்கப் பண்ணும் துன்ப நிலைகளை நினைந்து, திருவருள் முதல்வனாகிய சிவனை நினைந்து பாடும் பாட்டுக்கள் பத்துக் கொண்டிருப்பது. சிந்தை, சிந்தித்தல் என்னும் பொருளது; நிந்தித்தல் நிந்தை என வருவது போலச் சிந்தித்தல் சிந்தை என வந்துளது. துன்பக் காலம் இன்பக் காலம் என்ற இரண்டனுள் துன்பம் சுடச் சுடத் தாக்கும் காலத்தில்தான் மனம் பொருளுலகத்தை நினையாமல் இறைவன் திருவருளை நினைப்பது வழக்கம். இன்பத்தில் களிப்பு மயக்கமும், துன்பத்தில் ஒளிரும் விளக்கமும் மன வுணர்வைக் கவ்விக் கொள்ளும்; துன்பத்துக்கு ஏதுவாவனவற்றை எண்ணி அச்செயல்களை நினைந்து வருந்தும்; இப்பதிகத்தில் துன்பக் காரணங்கள் நினைக்கப்படுவதும் தீர்வு வேண்டிச் சிவனருளை நாடுவதும் காணலாம். இதனைத் தொல்காப்பியம் துன்பத்துப் புலம்பல் எனக் கூறுகிறது.

இதன்கண், ஈயாத புல்லர்க்குச் செல்வம் எய்துவிப்பதும் அருட்டுணை நாடாமல் வேறுய துணைகளை நாடுவோரைப் புறக்கணிப்பதும், கல்லாமையும் புலை யொழுக்கங்களும் அருட் பேற்றுக்குத் தடையாதலும், கல்லாரொடு கூடிச் செய்த குற்றங்களை நினைந்து வருந்துவதும், செய்யப்படும் வினைகட்கு நிமித்த காரணம் திருவருளாதலும் பிறவும் சிந்திக்கப்படுகின்றன. திருப்பெயரான் சிறப்பும் திருவைந்தெழுத்தின் நலமும் எண்ணுவதும், இறைவன் திருப்பெயரே பொறியார் பெயர் என்பதும் வள்ளலார் நினைவில் எழுகின்றன.

2641. விடைஆர்க்கும் கொடிஉடைய வித்தகஎன் றுன்அடியின்
இடைஆர்த்து நின்றழும்இவ் ஏழைமுகம் பாராமே
நடைஆர்க்கும் வாழ்க்கையிலே நல்குரவோர்க் கீயாத
உடையார்க்கோ என்னை உடையாய் உதவுவதே.

உரை: விடை யெழுதிய கொடியை உயர்த்தும் வித்தகனே, என்னை முழுதும் அடிமையாக வுடையவனே, உனது திருவடிக் கீழிருந்து அன்பாற் பிணிப்புண்டு வருந்தும் ஏழையாகிய என் முகத்தைப் பார்க்காமல் உலகியல் நடைக் கமைந்த உடல் வாழ்விலே, பொருளில்லாத வறியவர்க்கு ஈதல் இல்லாத செல்வர்களாகிய உடையார்க்கே அதனை மேலும் நல்குவது என்னையோ, கூறுக. எ.று.

விடை - எருது எழுதிய கொடி; அதனை உயர்த்திக் காட்டும் இயல்பினால், "விடையார்க்கும் கொடியுடைய வித்தக" என விளம்புகின்றார். வித்தகன் - அறிவன அறிந்து செய்யும் அறிஞன். அடியினிடை ஆர்த்து

நிற்றலாவது, திருவடியை நினைந்து அதன்கண் அன்பாற் பிணிப்புண்டிருத்தல். நினைப்பவர் நினைவைத் திருவடியின் நீங்காதவாறு பிணிப்பது மெய்யன்பாகலின், "திருவடியின் இடை ஆர்ந்து நின்றம் இவ்வேழை" எனக் குறித்துரைக்கின்றார். ஆர்ந்து, ஆர்த் தென வலித்தது. இடை- இடம். இடை நின்று ஆர்த்து அழும் என இயைத்து திருவடிக் கீழ் நின்று ஓல மிட்டழும் என வுரைப்பதுமுண்டு. ஏழைக்கு இரண்டும் ஒத்தவாம். அறிவில்லார்க்கே யுரிய ஏழை யென்னும் சொல், பொருளீட்டும் அறிவும் ஆற்றலுமில்லாத வறியவர்க்கும் வழங்குவ தியல்பாதலால், பொருளில்லாமை தோன்ற, "இவ்வேழை" என்று கூறுகின்றார். இல்லாத ஏழைகட்கு ஈதலே அறம்; "வறியார்க் கொன்று ஈவதே ஈகை" (குறள்) என்பர் திருவள்ளுவர். அங்ஙனமாக, அன்பால் நினைந்தழும் ஏழைக்கு உதவுகிறுயில்லை என்பார், "நின்றழும் இவ்வேழை முகம் பாராமே உடையார்க்கோ உதவுவதே" என்று கேட்கின்றார், முகம் பார்த்த வழி. இரக்கம் தோன்றி ஈதற்கண் உள்ளத்தைச் செலுத்துமாகலின், "முகம் பாராமே" என மொழிகின்றார். ஈகைக்கண் செல்லும் உள்ளத்தைப் பொருளாசை இடை நின்று தடுக்குமாக, அதனை உடைத் தெறிந்து விட்டு ஈதலைச் செய்வது வன்மை யுடையார்க்கே இயல்வதாதலைக் கண்டு சான்றோர், செல்வன் சிறப்பைக் கூறுமிடத்து, "இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க வல்லான் போல்வதோர் வண்மையும் உடையன்" (கலி. 47) எனப் புகழ்வது காண்க. உலகியற்கு ஒத்த ஒழுக்கம் பொருந்தியது உடல் வாழ்க்கையாதலால் "நடையார்க்கும் வாழ்க்கை', என விளம்புகிறார். நடை - ஒழுக்கம். "உலகத்தோடு ஒட்டு ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்பது அறநூல் (குறள்). நல்குரவோர்- வறியவர். உடையார்- செல்வ முடையவர். "உடையார் முன் இல்லார் போல்" (குறள்) என்பது காண்க. வறியவர்க்கு ஒன்று ஈயாத செல்வர்களை, "நல்குரவோர்க் கீயாத உடையோர்" என வுரைக்கின்றார். "ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்" (குறுந். 63) என்றலின் இரண்டும் உடையவரே "உடையார்" ஆவர்; அவருள் ஈதல் இல்லாத உடையார் என்பார், "நல்குரவோர்க்கு ஈயாத உடையோர்" என்கிறார் என்பதும் ஒன்று. இது வெளிப்படை என்னும் அணி, செல்வ முடையார் பலர்க்கு ஈயும் செயல் உண்டாகாமைக்கு ஏது, பொருட் பற்றை மிகுவிக்கும் ஆணவமலத் தடிப்பாகும்; உடையிற் பற்றிய அழுக்கைப் போக்குதற்கு மேலும் பல அழுக்குப் பொருள்களைக் கலப்பதுபோலச் செல்வரிடையே மேன்மேலும் செல்வ வகைகள் சேர்க்கப்படுவதாகும். மலத்தடிப்புக்கு இரையாகாதவர் திருவருட் செல்வராகின்றனர்; இரையாகுவோர் செருக்குற்று உலகு பழிக்கும் நிலையை எய்துகின்றனர்; இக்கருத்து வெளிப்படுதற் பொருட்டே, "ஈயாத உடையார்க்கு உதவுவது என்னை" என வினவுகின்றார்.

இதனால், உலகில் ஈகைப் பண்பில்லாத செல்வர்க்கு மேலும் செல்வம் சேரச் செய்யும் காரணம் ஆராய்ந்தவாறும். (1)

2642. **கற்றே அறியாக் கடைப்புலையேன் ஆனாலும்**
உற்றேநின் தன்னைநினைந் தோதுகின்றேன் அல்லாமே
மற்றேதும் தேறேன்என் வன்துயர்தீர்ந் துள்குளிரச்
சற்றே இரங்கித் தயவுசெய்தால் ஆகாதோ.

உரை : கல்வியறிவு இல்லாமல் கீழ்ப்பட்ட தன்மை யுடையவ ஞயினும் நின் திருவருட் சூழலை யடைந்து உன்னையே நினைந்து உன் திருப்பெயரை நாளும் ஓதுவதன்றி, வேறே யாதும் தெளிந்து செய்வ தில்லேனுகலின், எனது கொடுந் துன்பத்தினீங்கி உள்ளம் குளிருமாறு நீ சிறிது மனமிரங்கி அருள் செய்தால், அது நன்ருகாதோ? எ.று.

கல்வி கேள்விகளால் உளதாகும் அறிவும், நற்குண நற்செயல்களு மில்லாமையால் கடைப்பட்டுப் புலைத்தன்மை யுடையனுயினேன் என்பாராய், "கற்றறியாக் கடைப்புலையேன்" என்றும், எனினும் யான் கற்றவர் விரும்பும் திருவருட் குழாத்தை யடைந்து உன் திருப்பெயரை எண்ணுவதும் ஓதுவதும் செய்கின்றேன் என்பார், "நின்றன்னை யுற்று நினைந்து ஓதுகின்றேன்" என்றும் உரைக்கின்ருர். "கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்" (தனி. இருக்கு) எனப் பெரியோர் கூறுதலால், கல்வி யறிவை முற்பட வைத்து, "கற்றறியா" என மொழிகின்ருர். நல்ல கல்வி, கற்றவனை நன்றே நினைந்தொழுகும் நல்லொழுக்க முடையனுக்குவதாக, யான் அஃதன்றிக் கீழ்மை எய்துவிக்கும் பண்பும் புலைத்தொழிலும் உடைய னென்பது விளங்க, "கடைப்பட்ட புலையேன்" என்று இசைக் கின்ருர். புலைய ரினத்தைச் சேர்ந்தவரல்ல ராயினும், புலை முதலிய குற்ற வினத்தைச் சேர்ந்த பொய் களவு ஆகிய குற்றங்கள் அப்புலை யினத்திற் செலுத்துவதால், புலையேன் எனத் தம்மைப் பழித்துரைப்பது பொருத்தமேயாகும். பொய், களவு, கள், காமம், புலை என்ற ஐந்தையும் பெருங்குற்றம் என்று அறிஞர் தொகுத்து ஐம்பெரும் பாதகம் என்பர். கல்லா தொழியினும் ஒருவன் கற்றவர் சூழலை விரும்பி யிருப்பானுயின் ஆங்கு அவர் உரைப்பன கேட்டு நன்ஞான நல்லொழுக்கமுடைய ஞானியாகலாமாகலின், "நின்னை உற்று" எனவும், சிவன் திருப்பெய ராகிய திருவைந்தெழுத்தை மனத்தால் எண்ணி வாயால் ஓதும் ஞான நெறி கைவருதல்பற்றி, "நின்றுன்னை யோதுகின்றேன்" எனவும், அடியார் கூட்டமும் அஞ்செழுத் தோதலுமாகிய இரண்டுமன்றி வேறுள்ள வற்றைப் பொருளாக யான் மதிப்பதில்லை யென்பாராய், "மற்றேதும் தேறேன்" எனவும் இசைக்கின்ருர். எய்தி வருத்தும் துன்பத்தை வேறு எவ்வகையிலும் போக்க மாட்டாமையின் நின் திருவருள் இன்றி யமையாது என்ற கருத்துத் தோன்ற, "வன்துயர் தீர்ந்து" என்றும், துன்பத்தால் வெதும்பும் உள்ளம் தீர்ந்த வழிக் குளிர்ந்து இன்புறுதல் ஒருதலையாதலால், "உள் குளிர" என்றும் இயம்புகிருர். உள் - உள்ளம். தயவு - திருவருள். அருணெறியை நாவுக்கரசர் தயாமூல தன்மம் என்பதும் இக்கருத்தே பற்றி என அறிக. "தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி" (நள்ளாறு) என்பது காண்க. "கல்லாதான் ஒட்பம் கழிய நன்ருயினும் கொள்ளார் அறிவுடையார்" (குறள்) என்பது பற்றி எனக்கு அருள்வது கூடாதெனக் கொள்கின்ருய் போலும் என்பாராய், "தயவு செய்தால் ஆகாதோ" எனக் கூறுகின்ருர்.

இதனுல், கல்லாமை புலை யொழுக்கங்கள் ஆகியன அருட் பேற்றுக்குத் தடையாதல் சிந்திக்கப்பட்டவாறும். (2)

2643. **கல்லா ரொடும்திரிந்தென் கண்ணேநின் தாள்வழுத்தும்**
நல்லார் தமைக்காண நாணுகின்றேன் ஆனாலும்
வல்லாய்நின் தன்னைஅன்றி மற்றொன் றறியேன்நான்
எல்லாம் அறிவாய்க் கிதனைஇயம் பல்என்னே.

உரை: எனக்குக் கண் போன்றவனே, எல்லாம் வல்லவனே, கல்லாத மக்களொடு கூடிப் பன்னாள் திரிந்தேனாதலால், நின் திருவடியைத் தொழுதேத்தும் நல்லவர்களைக் காண்பதற்கு இப்பொழுது நாணமடைகின்றேன்; ஆயினும், நின் திருவடியை யன்றிக் கொள்ளத் தக்கது வேறு யாதும் இல்லை என்பதறிந்து கொண்டேன்; எல்லாம் அறியும் பெருமானாகிய உனக்கு இதனை யான் எடுத்துரைப்பது மிகையாம். எ. று.

வயிறு வளர்த்தற்குரிய தொழி லறியா தொழிந்தவரையும் கல்லார் என்பவாகலின், கற்றற்குரிய மெய்ந்நூல்களைக் கல்லாதவர்களைக் கல்லாரென்கின்றார் எனக் கொள்க. அவர்களோடு கூடித் திரிந்து பெறற்குரிய மெய்யுணர்வைப் பெறாது நெகிழ்ந்தமை, மெய்ஞ்ஞானிகளைக் காணும் போது நினைவில் தோன்றி வருத்துதலால், "கல்லாரொடும் திரிந்து நின் தாள் வழுத்தும் நல்லார்தமைக் காண நாணுகின்றேன்" என நவில்கின்றார். நல்லார் - நன்மை விளைவிக்கும் ஞானமும் ஒழுக்கமும் உடைய பெரியோர். நாணுதல் - மனம் சுருங்குதல். நல்லாரோடு கூடி, நன்ஞான நல்லொழுக்கங்களைப் பெற்றேனாயினும், நல்லா ரெல்லாரினும் வல்லவனாகிய நின் திருவடி ஞானமல்லது உயிர்க்கு இன்றியமையாத பெரும்பொருள் வேறொன்றும் இல்லை என்றும், அதுவே பெறத் தக்க ஒன்று என்றும் அறிந்து கொண்டேன் என்பார், "நின் தன்னையன்றி மற்றொன் றறியேன்" என்றும் எடுத்துரைக்கின்றார்; "நின்னையன்றி" என்பதற்கு பரம்பொருளாம் நின்னையன்றி என வுரைப்பினும் பொருந்துவதாம். என்னுள் நிலவும் இதனை நீ நன்கறிவாய் என்றற்கு, "எல்லாம் அறிவாய்" எனவும், இதனை நினைந்து வாயாற் சொல்வது, அறிந்தார்க்கு அறிந்த பொருளை அறிவிக்கும் சிறு செயல் போல்வதாம் என்பாராய், "நான் இதனை இயம்பல் என்னே" எனவும் சொல்லுகின்றார்.

இதனால், தொடக்கத்திற் கல்லாரொடு கூடித் திரிந்ததும் பின்னர் நல்லாரைக் காண நாணியதும் நினைந்து வருந்தியவாறும். (3)

2644. **கள்ளநெறி கொள்ளும் கடைநாயேன் என்னினும்நின்**
வள்ளல் மலர்த்தாளே வழுத்துகின்றேன் என்னுடைய
உள்ள மெலிவோ டுடல்மெலிவும் கண்டும்அந்தோ
எள்ளளவும் எந்தாய் இரங்கா திருந்தனையே

உரை: எந்தையே, கள்ளச் செயல் புரியும் நெறியில் இயலுகின்ற கடைப்பட்ட நாய் போன்றவனாயினும் உன்னுடைய வளமான பூப் போன்ற திருவடிகளையேவாழ்த்தி வணங்குகின்றவன் யான்; என்னுடைய மன மெலிவையும் உடல் மெலிவையும் பார்த்தும், ஐயோ, எள்ளத் தனையேனும் இரக்கம் கொள்ளாமல் இருக்கின்றாயே, இது முறை யாகாதே. எ.று.

கள்ள நெறி - பிறரை வஞ்சித் தொழுகும் வழி முறைகள். கள்ள நெறியை மேற்கொள்வது கீழ்மை நிலையாதலால், புல்லிய நாயினும் கடையவனுயினேன் என்பார், ''கடை நாயேன்'' எனக் கூறுகின்ருர். இவ்வண்ணம் கள்ளமான குணமும் செயலும் கொண்டு நாய் போற் கீழ்நிலை யடைந்தேனுயினும், அருள் வளம் கொழிக்கும் உன் திருவடிகளை வாழ்த்தி வழிபடுவதைக் கைவிட்டிலேன் என்றற்கு ''வள்ளல் மலர்த் தாளே வழுத்துகின்றேன்'' என இசைக்கின்ருர். வள்ளல், இங்கு வளமுடைமை மேலாதாம்; ''வள்ளற் பெரும் பசுக்கள்'' (திருப்பாவை) என ஆண்டாள் உரைப்பது காண்க. வழுத்துதல் - வாழ்த்துதல். கருதும் நற்பயன் எய்தாமையால் மனம் ஊக்க மிழந்து வலி குன்றுதல் புலப்பட, ''உள்ள மெலி'' வென்றும், உடல் வளர்ச்சிக்கு உள்ளம் காரணமாதலால், உள்ள மெலிவு உடல் மெலிவைச் செய்யும் என்பது பற்றி ''என்னுடைய வுள்ள மெலிவோடு உடல் மெலிவு கண்டும்'' எனக் கூறுகின்ருர். உலகினர் போலின்றி, உடல் மெலிவையும் உள்ள மெலிவையும் ஒரோப்பக் காண்பவனுகிய நீ கண்டிருந்தும் காணுதான் போல அருள் செய்யாது ஒழிவது நினக்குப் பொருந்தாது என்பாராய், ''மெலிவு கண்டு அந்தோ எள்ளளவும் இரங்கா திருந்தனையே'' என்று வருத்துகின்ருர். எள்ளத்தனை - சிறிதளவு. எந்தாய் என்பது முறையீட்டுக் குறிப்பு. அந்தோ - இரக்கக் குறிப்பு.

இதனுல் தமது கள்ள நினைவு செயல்களைப் புரியும் குற்றத்தை யுணர்ந்து எடுத்தோதித் திருவருளை நல்குக என வேண்டியவாறும். (4)

2645. சீர்துணையார் தேடும் சிவனேநின் தன்னையன்றி
ஓர்துணையும் இல்லேன்நின் ஒண்பொற் பதம்அறிய
கார்துணையா நாடும் கலாபிஎன நாடுகின்றேன்
ஆர்துணைஎன் றையா அகல இருந்தனையே.

உரை : சிறப்புடைய துணைவர்களான பிரமனும் திருமாலும் காணத் தேடும் அருமையையுடைய சிவபெருமானே, உன்னையன்றி வேறே ஒரு துணையும் இல்லாதவன் யான்; இது உனது அழகிய ஒள்ளிய திருவடி யறிந்த வுண்மை; கரிய மழை முகிலைக் காணக் களிக்கும் மயில் போல உன் திருவருளைப் பெற விரும்புகிறேன்; இங்ஙன மிருக்க, ஐயனே, எனக்குத் துணை புரிபவர் யாவருளர் என்று எண்ணி நீ அருளாமல் இருக்கின்ருய், சொல்லுக. எ.று.

சீர், சிறப்பு; புகழுமாம். படைத்தற் றெழிலாற் பிரமனும் காத்தலில் திருமாலும் சிறப்பும் புகழும் பெற்றுச் சிவனுடைய முத்தொழிற்குத் துணை செய்பவர் என நூலோர் கூறுவதால், ''சீர் துணைவர்'' என்றும், அவர் களும் முறையே பசுபாச ஞானங்களின் உருவாய்ச் சிவஞானத் திருவுருவாகிய சிவத்தை தேடுகின்றனர் எனச் சைவ புராணங்கள் ஓதுதலால், ''துணைவர் தேடும் சிவனே'' என்றும் கூறுகின்ருர். ''அங்கமலத் தயனெடுமால் ஆகிமற்று மதற்கப்பால் ஒன்ருகி யறிய வொண்ணுச் செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை'' (ஆரூர்) என அப்பரடிகள் அறிவுறுப்பது காண்க. அருந்துணை யெனவும் பெருந்துணை யெனவும் பெரியோர் பாராட்டுதலால் உன்னையே துணையாகக்

கொண்டுள்ளேன் என்பதை நீயே நன்கறிவாய், வேறு சான்று வேண்டா என்றற்கு, "நின் ஒண்பொற்பதம் அறிய நின்னையன்றி ஓர் துணையும் இல்லேன்" எனக் கூறுகின்றார். ஞான வொளியும் பொன்னிற அழகும் உடைமை பற்றிச் சிவன் திருவடியை, "நின் ஒன் பொற்பதம்" என்று சிறப்பிக்கின்றார். கார்முகில் கண்டு கலாபம் விரித்தாடுவது மயிற் கியல்பாதலின், "கார் துணையா நாடும் கலாபி யென" உரைக்கின்றார். கலாபம் தோகையாதலால், தோகை மயிலைக் கலாபி எனக் காட்டு கின்றார். மனத்தில் நிறைந்துள்ள அன்புத் துடிப்பைத் தெரிவித்தற்குக் "கலாபி யென நாடுகின்றேன்" எனக் கனிந்துரைக்கின்றார். அருளின்பம் தாராமை தோன்ற, "ஆர் துணை யென்று அகல இருந்தனை" என்று முறையிடுகின்றார்.

இதனால், நின் திருவடி யறிய யான் வேறு துணை நாடாதவ னென்ப தறிந்தும் அருள் புரியாமல் விலகி யிருக்கின்றது பொருந்தாது என முறை யிட்டவாறும். (5)

2646. பேய்அனையா ரோடும் பிழைபுரிந்தேன் ஆனாலும்
நாய்அனையேன் நின்னுடைய நாமம் நவிற்றுகின்றேன்
தீஅனைய துன்பில் திகைக்கின்றேன் கண்டிருந்தும்
தாய்அனையாய் சற்றும் தயவு புரிந்திலையே.

உரை: தாயொப்பவனே, பேயின் குணஞ் செய்கைகளை யுடையவ ரோடு கூடிப் பிழைகள் பல புரிந்துளேனாயினும் நாய் போன்றவனாகிய யான் நின் திருப்பெயரை அன்புடன் [ஓதுகின்றேன்; நெருப்புச் சுடுவது போல் தாக்கி வருத்தும் துன்பங்களால்] நான் அறிவு மயக்கி விடுவதைக் கண்டிருந்தும் சிறிதும் அருள் புரிகின்று யில்லையே, என்ன செய்வேன் எ.று.

பேய்க் குணமும் பேய்ச் செய்கையுமுடைய மக்களை மக்களுருவில் இருப்பதால் "பேயனையார்" என்றும், அவர்கள் பிழையாவன வல்லது செய்வ திலையாதலின், "பேயனையா ரோடும் பிழை புரிந்தேன்" என்றும் எடுத்து உரைக்கின்றார். நன்றி மறவாமை குறித்தற்கு "நாயனையேன்" என்கின்றார். சிவன் திருப்பெயரை எப்போதும் ஓதுவது சிவநெறியாளர் கொள்கை; கடலும் திரையும் போல மக்களிடையே முக்குணங்களும் கணந்தோறும் மாறி மாறி எழுந்தடங்குவதால் மறத்தலும் நினைத்தலும் தோன்றி யலைத்தவண்ண மிருத்தலின், சிவன் திருப்பெயரை ஓதிய வண்ணமிருப்பர். அதனால் "நின்னுடைய நாமம் நவிற்றுகின்றேன்" என வுரைக்கின்றார். "நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன் நாமம் என் னாவில் மறந்தறியேன்" (அதிகை. வீரட்) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது நோக்குக. துன்பம் நெருப்புப் போற் சுடு மென்பதும் இன்பம் தண்ணீர் போற் குளிர்விக்கும் என்பதும் வழக்கு. துன்பத்தால் தாக்குண்டு அறிவு மயங்குமாறு கூறுவார், "தீயனைய துன்பில் திகைக் கின்றேன்" என்று கூறுகின்றார். துன்பம் - துன்பு என வந்தது. "துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு" (குறள்) என்று சான்றோர் உரைப்பது காண்க. திகைத்தல், மருளுதல். இறைவனது பேரன்பை விளக்குதற்குத்

"தாயனையாய்" என்கின்றார். தயவு - அருள்; மிக்க அன்பு எனினும் அமையும்.

இதனால், பேயனையவரோடு கூடிப் பிழை புரியினும், நாமத்தை மறத்தலில்லாமை கூறி அருள்புரிக என வேண்டிக் கொண்டவாறும். (6)

2647. வெள்ள மருவும் விரிசடையாய் என்னுடைய
உள்ள விரிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
தள்ளரிய நின்னருள்ஓர் சற்றும் புரியாமே
கள்ளவினைக் கென்உளத்தைக் கைகாட்டி நின்றனையே.

உரை : கங்கையாறு தங்கும் விரிந்த சடையையுடைய பெருமானே, உள்ளத்தின் விரிந்தோடும் இயல்பையும் உடலின் மெலிவையும் கண்டிருந்தும் நீக்குதற் கரிதாகும் நின்னுடைய திருவருளை ஒருசிறிதும் செய்யாமல், கள்ளத் தன்மை கொண்ட வினைக்கு என் மனத்தைக் காட்டி, இரையாக்கி விட்டாய்; என் செய்வேன் எ.று.

மண்ணுலகு நோக்கி வந்த கங்கைப் பெருக்கைத் தன் சடையை விரித்துத் தாங்கிக் கொண்டமையின், "வெள்ளம் மருவும் விரிசடையாய்" என விளம்புகிறார். விரிசடையிற் கொண்டு கங்கையின் வேகம் கெடுத் தாண்டமையின் மணிவாசகப் பெருமான் சிவனை "வெள்ளம் தாழ் விரிசடையாய்" (சதகம்) எனக் கூறுகிறார். நினைக்கப்படும் பொருட்கண் ஒன்றி ஒருமை யுறுது பல தலையாய் விரிந்தோடுவதற்கு வருந்துவாராய், "உள்ள விரிவும்" எனவும், உடல்வலி குன்றுதல் தோன்ற, "உடல் மெலிவும்" என்றும் உரைக்கின்றார். உள்ளத்தின் வழி யுடம்பும், உடம்பின் வழி உள்ளமும் இயங்கும் இயல்பினவாதலால் இரண்டையும் சேரக் கூறுகின்றார். உள்ளம் உரனுடையதாயின் உடல் ஆக்கம் பெறுதலின், உள்ளத்துக்கு முதலிடம் தந்து மொழிகின்றார். விரிதல், பல பொருள்களின் மேல் பன்னெறி மேற் கொண்டு ஒன்றிலும் ஒன்றாது அலைதல். திருவருளின் பெறற் கருமையும் எல்லாவற்றிலும் மேலாம் பெருமையும் உடையதாதல் கண்டு "தள்ளரிய நின்னருள்" எனவும், அது சிறிது எய்தின் பெறும் நலம் பெரிது என்பாராய், "ஓர் சற்றும் புரியாமே" எனவும், பிறவிக் கேதுவாகிய வினைகளைச் செய்தற்கு உள்ளத்தை ஊக்கி விடுகிறாய் என்பார், "கள்ள வினைக் கென்னுளத்தைக் கைகாட்டி நின்றனையே" எனவும் இயம்புகிறார். தன்னைச் செய்யும் வினை முதலுக்கு என் விளைவு நின் பிறவிக்கு ஏதுவாம் என்பதை முன்னுறக் காட்டா தொழிவதால் "கள்ள வினை" என்றும், வினை மேற் செல்ல விடாமல் தடுத்து ஒழிந்தமை பற்றி, "உளத்தைக் கைகாட்டி விட்டனை" என்றும் கூறுகின்றார். வினையைச் செய்யும் கருவிகளாம் உள்ளம், வாய், மெய் ஆகிய மூன்றனுள் உள்ளம் ஏனை யிரண்டிற்கும் முதலாதலால், வினைக்கு உள்ளத்தைக் காட்டினை என வுரைக்கின்றார். "உள்ளத்தின் அசைவும் அசைவின்மையும் வினையாம்" (இருபா) என்பர் அருணந்தி சிவனார்.

இதனால், உயிர்கள் வினை செய்தற்கு நிமித்த காரணம் திருவருள் என்பது விளக்கியவாறும். (7)

2648. **என்னுரிமைத் தாய்க்கும் இனியாய்நின் ஐந்தெழுத்தை
உன்னுநிலைக் கென்னை உரித்தாக்க வேண்டுதியேல்
மன்னுலகில் பொன்னுடையார் வாயில்தனைக் காத்தயர்ந்தேன்
தன்னுடைய எண்ணந் தனைமுடிக்க வேண்டுவதே.**

உரை : என்னைப் பெற்ற உரிமை கொண்ட தாயினும் இனிமை யானவனே, நினக்குரிய திருவைந்தெழுத்தை எண்ணி வழிபடும் நிலைமைக்கு என் வாழ்வை உரியதாக்கத் திருவுள்ளம் கொள்வாயாயின், நில கொண்ட இவ்வுலகில் பொன்னும் பொருளுமுடைய செல்வர்களின் மனைவாயிலிற் காத்திருந்து மனமயர்ந் துளேனுதலின், என் எண்ணங்கள் நிறைவேற வேண்டுகின்றேன். எ.று.

பெற்ற தாய்க்குத் தான் பெற்ற பிள்ளைபால் உள்ளது நீங்காத உரிமையாதலால், பெற்ற தாய் என்னுது "உரிமைத் தாய்" என்று சிறப்பிக்கின்றார். உடலை யளித்த தாயினும், உடலோடு கருவி கரணங் களையும் உலக வாழ்க்கையையும் அளித்த இறைவன் பெரிய தாயாதல் பற்றி, "உரிமைத் தாயினும் இனியாய்" என இறைவனைப் பரவுகின்றார். நமசிவாய என்ற சிவனது திருப்பெயரில் மொழிக்கு முதலாம் தன்மை வாய்ந்த எழுத்தைந்து உள்ளமையால், அப்பெயரை ஐந்தெழுத்தெனக் கூறுவது சைவ மரபாதலின், "நின் ஐந்தெழுத்து" எனக் கூறுகின்றார். மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் நின்றும் கலந்தும் இயங்கும் உயிர் மெய் யெழுத்து வகையில் வல்லினத்துள் ஒன்றும் மெல்லினத்துள்ளும் இடையினத்துள்ளும் இவ்விரண்டாக நான்கும் பொருந்தியது நவசிவாய என்ற பெயர் என அறிக. மொழிக்கு முதன்மை பெறும் உயிர் மெய்யினத்து ட்க ச த ந ப ம வ ய ஞ என்பவற்றுள், சிவய நம என்ற ஐந்தும் நிற்பது தனிச் சிறப்பாம். ஒருவன் தவப் பயனாக ஞானசிரியன் பெறும் சிவஞானத்தை மறவாது ஓதி உறுதி பெறுதற்குச் சிவாய நம என்ற ஐந்தெழுத்தும் பற்றுக் கோடாதலால், "நின் ஐந்தெழுத்தை உன்னும் நிலை" என வுரைக்கின்றார். உயிரை அத்தவ நிலக்கு உரியதாக்குவது இறைவன் திருவருட் குறிப்பாதலால் "என்னை உரித்தாக்க வேண்டுதியேல்" என்று கூறுகின்றார். என்னை - என் ஐ எனப் பிரித்து, என்னுடலை இயக்கும் தலைமைப் பொருளாகிய உயிரை எனக் கொள்க. உரியனுக்க என்னுமல் உரித்தாக்க என்பதனுல் உயிரெனப் பிரித் துரைக்கப்பட்டது. மன்னுலகு - நில கொண்ட வுலகம். மன்னுதல் - நிலைத்தல். பொருளுடையார் மனைவாயிலில், இல்லாதவர் அப்பொருட் கொடை நயந்து காத்துக் கிடத்தல் உலகியல் வழக்கா தலால், "பொன்னுடையார் வாயில்தனைக் காத்தயர்ந்தேன்" எனவும்; பொருள் கருதிய என் எண்ணத்தைப் பொருள் தந்து நிறைவு செய்ய வேண்டும் என்பார், "எண்ணம் தனை முடிக்க வேண்டுவதே" எனவும் இயம்புகிறார். வேண்டும் என்பது வேண்டுவ தென வந்தது; வரவிடல் வேண்டும் என்பது, "மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே" (திருமுகப்) என வருதல் போல.

இதனுல், திருவைந்தெழுத்தை யோதும் நிலையினை நல்கிப் பொன் வேண்டும் என் எண்ணத்தையும் முடித்தருள்க என மொழிந்தவாரும். (8)

2649. குற்றம்எலாம் நல்ல குணமாகக் கொண்டருளும்
உற்றதுணை நீயேமற் றோர்துணையும் இல்லைஎன்றே
நற்றலைமை யாம்உனது நாமம் நவில்கின்றேன்
கற்றவனே என்றனைநீ கைவிடில்என் செய்வேனே.

உரை : கற்கப்படும் கல்வியே யுருவாயவனே, எம் போல்வார் செய்யும் குற்றம் யாவையும் குணமாகக் கருதிப் பொறுத்தருளும் நெருங்கிய துணைவனாகுபவன் நீயேயன்றி வேறொருவரும் இல்லை யென்ற எண்ணத்தால் நல்ல தலைவனாகிய உனது திருப்பெயரையே நாளும் ஓதுகின்றேன்; அத்தகைய என்னை நீ இனிக் கைவிடுவாயாயின் யான் என்ன செய்குவேன், கூறுக. எ.று.

கல்வி நல்கும் ஞானமும் இன்பமும் யாவும் மெய்ப்பொருளாகிய சிவனையே யடையச் செய்தலால், "கற்றவனே" எனப் புகழ்கின்றார்; "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" எனச் சான்றோர் உரைப்பது காண்க. நன்னூல்களைக் கற்றுப் பெறும் அறிவு, செய்யப்படும் குற்றங்களின் முதற் காரணத்தைக் காட்டி மனத்தில் அருளையும் பொறுமையாகிய பண்பையும் நிலவுவித்தலால், "குற்றமெலாம் நல்ல குணமாகக் கொண்டருளும் நற்றுணையே" என்று கூறுகின்றார். குற்றத்தைக் கண்டு காரண வறிவாற் குணம் காணு விடத்துத் துணை புரியும் செயற் பண்பு சிறவாமை பற்றி, "அருளும் நற்றுணையே" என நவில்கின்றார். உற்ற துணை - இன்றியமையாப் போதில் செய்யப்படும் துணை. இத்தகைய பண்புடையார் இறைவனை யன்றி வேறே ஒருவரும் இன்மை பற்றி, "நீ யன்றி மற்று ஓர் துணையும் இல்லை" என வுரைக்கின்றார். துணைவனது துணைமை நலம் காண்பவன் அவனை நாளும் தொழுதேத்துதல் இயல்பாதலால், "உனது நாமம் நவில்கின்றேன்" எனவும், துணையாவதுடன் நன்னெறிக்கண் செலுத்து வதும் ஊக்குவதும் செய்தலால் "நற்றலைமையாம் உனது" என்றும் பரவுகின்றார். தலைமை - ஆகு பெயரால் தலைவன் என்னும் பொருள்பட நின்றது, "பணியுமாம் என்றும் பெருமை" (குறள்) என்றாற் போல. துணைவரையும் தலைவரையும் நன்றி யறிவோடு நாளும் பாராட்டுவ தென்பது அவர்களின் பெயரை அன்புடன் சொல்லிப் புகழ்வதாகும்; ஆதலால், "நினது நாமம் நவில்கின்றேன்" எனக் கூறுகிறார். நாமம், நமச்சிவாய என்னும் திருப்பெயர். "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" (திருவாச) என மணிவாசகரும், "உன் நாமம் என்னாவில் மறந்தறியேன்" (அதிகை வீரட்) என நாவரசரும் சொல்லுவது காண்க. குண நலங்களை நினைந்து புகழ் பாடும் பெயரை நாளும் ஓதி வந்தால், ஓதுபவர் ஒருநாளும் கெட விடப்படார் என்ற வுண்மை பற்றி, "என்றனை நீ கைவிடில் என்செய்வேன்" என்கின்றார். "என் செய்வேன்" என்பது, எனக்கு உற்ற செயல் இதனின் வேறு ஒன்றுமில்லை என்று உணர்த்தி நின்றது.

இதனால், தலைமை யறிந்து நாமம் பயின்றேனாதலால் என்னைக் கைவிடலாகாது என முறையிட்டவாறும். (9)

2650. **அறியாப் பருவத் தறிவுறுத்தி ஆட்கொண்ட**
நெறியானே நின்ஆணை நின்ஆணை நின்ஆணை
பொறியார்நின் நாமம் புகலுவதே அன்றிமற்றை
வெறியார்வன் நாமமொன்றும் வேண்டேன்நான் வேண்டேனே.

உரை : அறிவறியாப் பருவத்திற் போந்து மெய்யறிவு தந்து அடியவனுகிய என்னை ஆண்டருள் புரியும் செந்நெறியை யுடையவனே, நினது திருவடி ஆணையாக முக்காலும் சொல்லுகிறேன்; திருநிறைந்த நின் திருப்பெயரை நாளும் எண்ணி ஓதுவது தவிர திருவில்லாதவருடைய வன்மையான பெயர்களைச் சிறிதும் நான் விரும்ப மாட்டேன், காண். எ.று.

அறியாப் பருவம் வேறு; அறிவறியாப் பருவம் வேறு. பொறி புலன்களின் வாயிலாகப் பெறலாகும் உலகியற் பொருளறிவு பெருத இளமைப் பருவம், அறியாப் பருவம்; மனத்தாற் பொருள் நலங்களைத் தெரிந்தாய்ந்து பெறும் உண்மை யறிவு எய்தாத பருவம், அறிவறியாப் பருவம். அதனையே பரம்பொருளோடு உரையாடும் வடலூர் வள்ளல், "அறியாப் பருவம்" என இளமைக் காலத்து இயற்கை யறிவு நிலையைக் குறிக்கின்ருர். அந்தக் காலத்தேயே அறிவறிவு தந்து உண்மை யுணர்வித்து ஆண்டருளும் திருவருள் நெறியை, "அறிவுறுத்தி ஆட்கொண்ட நெறியானே" என வுரைக்கின்ருர். ஆட்கொள்ளும் நெறி என்று சொல்லாமல், "ஆட் கொண்ட" என இறந்த காலத்தாற் சொல்லியது, வழி வழியாக வந்து கொண்டிருப்பது இறைவனது இவ்வருள் நெறி என்பது வற்புறுத்தற் பொருட்டு. இது கால விடங்களால் மாரு வியல்பிற்ருகலின், "நின்னுணை நின்னுணை நின்னுணை" என வலியுறுக்கின்ருர். இத் திருவருள் ஞானம் பொருளாக நிலவும் செந்நெறிக்கும் முதல்வனுதலை யுணர்பவர், அந்நெறியும் பொருளும் நமச்சிவாய என்னும் திருப்பெயர்க்கண் உள்ள எழுத்தைந்தும் இனிதுணர்வார்க்கு நன்கு புலனுதலால், பொருணிறைந்த அப்பெயரைப் "பொறியார் நின் நாமம்" என்று புகழ்கின்ருர். "பொறி திரு. பூவெனப் படுவது பொறி வாழ் பூவே" என்பது காண்க. இப்பொருண்மை விளங்கவே, திருநாவுக்கரசர் "எந்தையார் திருநாமம்" என்று இயம்புகின்ருர். இது போல்வன, நோக்கியே "சொற் குறுதிக்கு அப்பர் எனச் சொல்" என்று பெரியோர் இசைக்கின்ருர்கள். மற்றவர் பெயர்களில் எழுத்தொவ்வொன்றும் பொருளுடையதாக இல்லாமை பற்றியே "மற்றை வெறியார் வன்னுமம்" என இகழ்கின்ருர். பெயர்கள் வல்லலோசையும் பொருளில்லாத எழுத்தும் கொண்டமை தோன்ற "வன்னுமம்" என்கின்ருர். அவ்வன்னுமங்களை யோதுவதால் ஞானப் பயன் இல்லாமையால் யான் ஒருகாலும் விரும்புவதில்லை எனத் தெளிவு படுத்தற்கு, "ஒன்றும் வேண்டேன் நான் வேண்டேன் என வுரைக்கின்ருர். ஒன்றும், சிறிதும், பிறர் அப் பெயர்களை ஓதின் ஓதுக; யான் ஓதமாட்டேன் என்பாராய், "நான் வேண்டேன்" என்று எடுத்துரைக்கின்ருர்.

இதனுல், செந்நெறி முதல்வனுகிய நினது பொறியார் பெயரை யல்லது பிறரது பயனில்லாப் பெயரை ஓத மாட்டேன் என வுரைத்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

9. உய்கைத் திருப்பதிகம்

அஃதாவது, உய்யும் நெறி கருதிச் சிவபெருமானைப் பரவும் பாடல் பத்துக் கொண்ட தொகுதி.

இதன்கண், சிவபிரானுடைய திருப்பெயரும் திருவடியும் திருவருளும் உயிர்கட்கு உய்தி தருவன; அருள் சிறிது நல்கினும் பெரும் பயன் தருவதாம்; திருவடியல்லது பிற தெய்வம் நினையாமை உய்தி வகையுள் ஒன்று; நீயே என்னை நாடி வந்து திருவருளை நல்குதல் உய்திக் கேதுவாம்; காமத்தால் வருந்துவோர்க்கு மங்கை பங்கனாகிய நீ யல்லது உய்தி நல்குவோர் பிறரில்லை; உன்னைப் பாடிப் பரவுவது உய்திப் பேற்றுக்கு நன்னெறியாம்; உன்னைப் போற்றித் தியானிக்கும் பத்தி நெறியும் உயர் நெறியாம் என்பன முதலிய கருத்துக்கள் ஓதப்படுகின்றன.

கலி விருத்தம்

2651. திருவும் சீரும்சி றப்பும்தி றலும்சற்
குருவும் கல்வியும் குற்றமில் கேள்வியும்
பொருவில் அன்னையும் போக்கது தந்தையும்
தரும வெள்விடைச் சாமிநின் நாமமே.

உரை : செல்வமும் புகழும் சிறப்பும் ஆற்றலும் சற்குருவும், கல்வியும், குற்றமில்லாத கேள்வியும், ஒப்பில்லாத தாயும் குற்றம் நீக்கும் தந்தையும், அற வுருவாகிய வெள்ளெரு தேறும் சிவசாமியாகிய நினது திருப்பெயராகும். எ.று.

திரு, செல்வ முடைமையா லுளதாகும். பொற்பு-சீர், மெய்ந் நலம் விளைவிக்கும் அழகு. சிறப்பு - நல்லறிவு நற்செயல்களால் உண்டாகும் மேன்மை. ஆற்றல், செய்வினை நலம். சற்குரு, மெய்யுணர்வு நல்கும் ஆசிரியன். தீ நெறிக்கண் செலுத்தாத கேள்வியறிவு, "குற்றமில் கேள்வி" எனப்படுகிறது. ஒப்பில்லாத தூய அன்புடைமையால், "பொருவில் அன்னை" என்றும், தீ நெறி விலக்கிச் சான்றாண்மை பெறுவிப்பதால் "போக்கறு தந்தை" யென்றும் கூறுகின்றார். சிவபெருமான் ஊரும் எருது வெள்ளை நிறமும் அறவுருவும் உடைய தென்பவாகலின் "தரும வெள்விடை" எனப் புகழ்கின்றார். சாமி - தலைவன். திருப்பெயர் - நமச்சிவாய என்பது.

இதனால், திருவும் சீரும் முதல் தாயும் தந்தையு மீறாக வுள்ள நலமனைத்தும் சிவபெருமான் திருப்பெயராகும் என வுரைத்தவாறும். (1)

2652. பொய்ய னேன்பிழை யாவும்பொ றுத்தருள்
செய்ய வேண்டும்நின் செம்பொற்ப தமலா்
அய்ய னேமுக்க ணாஇவ் அடியனேற்
குய்ய வேறுபு கல்இலை உண்மையே.

உரை: தலைவனே, மூன்று கண்களை யுடையவனே, பொய் மொழியும் பொய்ச் செய்கையுமுடைய பொய்யனாகிய என்னுடைய பிழைகள் யாவையும் பொறுத்து எனக்கு அருள் புரிய வேண்டும். அடியவனாகிய எனக்கு உன்னுடைய செம்பொன் போன்ற திருவடி யல்லது உய்தி பெறற்குரிய புகலிடம் வேறில்லை; இஃது உண்மை எ.று.

நினைவிலும் சொல்லிலும் செயலிலும் பொய் நிறைந்தவன் பொய்யன்; யான் பொய்யனாதலால் என்னுடைய குற்றங்கள் மிகப் பலவாயினும் அவற்றை யெல்லாம் பொறுத்து எனக்கு நின்னுடைய திருவருளை நல்க வேண்டுகிறேன் என்பார், "பிழை யாவும் பொறுத்து அருள் செய்ய வேண்டும்" என்று கூறுகிறார். பிழைகளில் ஒன்றேனும் எஞ்சுமாயின் விளைவு பெருந் தீதாமாதலால் அறவே பொறுத்தருள்க என்பாராய், "யாவும்" எனக் குறிக்கின்றார். செம்பொன்னின் நிறமும் ஒளியுள் அழகும் உடையவை யாதலால், "செம்பொற்பதம்" என்று புகழ்கின்றார். பதம் - ஈண்டுத் திருவடி மேற்று. ஐயன், தலைவன், அடியனேன் எனத் தம்மைச் சுட்டிக் கூறுதலின் "இவ்வடியனேன்" எனச் சொல்லுகின்றார். திருவரு ளென்பது திருவடி நீழல்; ஆகு பெயரால், "பதமலர்" என்கிறார். செல்வர் அருள் பெற்று வாழ்பவரைத் "தாணிழல் வாழ்நர்" (புற. 161) என்றும், வாழ்வைத் "தாணிழல் வாழ்க்கை" (புறம். 379) என்றும் சான்றோர் உரைப்பது மரபு. நினது திருவடி நீழலே எனக்கு அழியாப் பேரின்ப வாழ்வளிக்கும் புகலிட மென்பாராய். "உய்ய பேறு புகல் இலை" எனப் புகல்கின்றார். புகல் - பாதுகாப்பாய இடம். உய்தல் உயிர் வாழ்தல். பொய்யனாகலின் எனது இவ் வேண்டுகோள் பொய்யன் றென்றற்கு, "உண்மை" என வுரைக்கின்றார்.

இதனால், பொய்யனாயினும் எனக்குப் புகலாவது உனது திருவடியே எனத் தெரிவித்தவாறும். (2)

2653. கள்ள நெஞ்சக னேனும்க டையனேன்
வள்ளல் நின்மலர் வார்கழற் பாதமே
உள்ளு வேன்மற்றை ஓர்தெய்வ நேயமும்
கொள்ள லேன்என்கு றிப்பறிந் தாள்கவே.

உரை: கள்ள நினைவுடைய நெஞ்சினை யுடையனாய் மக்களிற் கீழ்ப்பட்டவனாயினேன்; ஆயினும் திருவருள் வள்ளலாகிய நின்னுடைய நீண்ட கழலணிந்த திருவடியை உள்ளத்திற் கொண்டிருப்பேன்; அன்றியும் உன்னை யொழிய வேறு தெய்வங்கள்பால் பற்று வைப்ப தில்லேனாதலால், என் கருத்தறிந்து அருள் புரிக. எ.று.

தீய நினைவுகளைக் கொண்டு மொழியாலோ மெய்ப்பாட்டாலோ புலப்படுத்தாது மறைக்கும் நெஞ்சு, "கள்ள நெஞ்சம்" எனப்படும்; அதனை யுடையவன் எனத் தம்மைக் குறிக்கின்றாராதலால், "கள்ள நெஞ்சக னேன்" என்றும், அதனாற் கீழ்மை யுற்றவன் என்பாராய்க் "கடைய னேன்" என்னும் கூறுகின்றார். நெஞ்சகனேனும் கடையனேன் என்பதை, நெஞ்சனாயினும் நும் கடையனேன் எனக் கொண்டு, நெஞ்சு டையனானாலும் உமது கடைவாயிலில் காப்பவன் என வுரை நயம் கூறுவதுண்டு. திருவருளாகிய செல்வத்தை யாவர்க்கும் வரையாது வழங்குவது பற்றி "வள்ளல்" என்கிறார். "பரவுவாரையும் உடையார் பழித்து இகழ்வாரையும் உடையார்" (வாழ்கொழி) எனத் திருஞான சம்பந்தர் பாடுவது காண்க. மலர்ப்பாதம்; வார்கழற் பாதம் என இயையும். மலர் போன்ற பாதம், மலர்ப்பாதம்; நீண்ட கழலணிந்த பாதம், வார்கழற் பாதம், கழல் - வீரர் அணியும் காலணி, பாதமே யுள்ளு வேன் என்றவிடத்து ஏகாரம், தேற்றம். உள்ளுதல் - மறவாது நினைத்தல். "உள்ளுவன் மன்யான் மறப்பறியேன்" (குறள்) என்றாற் போல. வேறு தெய்வங்கள்பால் மதிப்பு வைப்பதில்லை என்பார், "மற்றை யோர் தெய்வ நேயமும் கொள்ளலேன்" என வுரைக்கின்றார். நேயம் - ஈண்டு நன் மதிப்புப் பொருளது; நேச மென்றோ அன்பென்றோ இதற்கு உரை கூறலாகாது; கூறின், வெறுப்பே னெனப் பொருள்பட்டு வள்ளற் பெருமான் சமரசக் கொள்கைக்கு மாறும்; சிவநெறிக்குப் பொருந்தாத தாம், "உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" (சதக) என மணிவாசகர் கூறுவது காண்க.

இதனால் நின் மலர்ப்பாதமே யுள்ளுவேனே யன்றி வேறோர் தெய்வம் மனத்திற் கொள்ளே னெனக் கூறியவாறும். (3)

2654. வஞ்ச மாதர்ம யக்கம்க னவினும்
எஞ்சு றுதிதற் கென்செய்கு வேன்என்றன்
நெஞ்சம் அம்மயல் நீங்கிட வந்தெனைத்
தஞ்சம் என்றுன்ச ரண்தந்து காக்கவே.

உரை : வஞ்சிக்கும் மகளிர் மேற் செல்லும் காம மயக்கம் நின்று கனவுக் காலத்தும் கெடாமல் வருத்துகின்றதாகலின், இதற்கு யான் என்ன செய்வேன்; என்னுடைய நெஞ்சத்திலிருந்து அம்மயக்கம் ஒழியு மாறு போந்து உனது திருவடியைத் தஞ்சமாகத் தந்து என்னைக் காத் தருள்வாயாக. எ.று.

மனத்தி லொன்றும் வாயி லொன்றும் செய்கையி லொன்றுமாக நினைந்தும் பேசியும் செய்து மொழுகும் மகளிர்களை "வஞ்ச மாதர்" என்றும், அவர்பால் உளதாகும் காம வேட்கை மக்களை மயக்கும் இயல் பிற்றாதலின் "மாதர் மயக்க" மென்றும் கூறுகின்றார். காமமாவது, உடலா லும் உள்ளத்தாலும் வேறாகிய ஆண் பெண்ணினத்தை இனப் பெருக்கம் குறித்துப் புணர்த்தற்குப் படைப்போன் படைத்த சூழ்ச்சி. அறிவையும் மனத்தையும் மயக்கும் செயல் புரிதல் நோக்கி அதனைக் காம மயக்கம் என்றும், அளவின் மிக்கது குற்ற மென்றும் சான்றோர் வகுத்துள்ளனர்.

உயிர் உடம்பொடு தோன்று நாள் தொட்டு இறக்குங்காறும் நீங்கா திருத்தலின் அதனை "நோய்" என்று பெரியோர் கூறுப. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்" (குறள்) என்பது காண்க. காமச் செவ்வி அரும்பி மலரும் பருவ முதல் உள்ளத்தில் இடம் பெற்று நனவிலும் கனவிலும் வேட்கையை எழுப்பி உயிரறிவை மயக்கு தலின் "கனவினும் எஞ்சுருது" எனவும், ஐம்புல வாசைகளையடக்கியொழு கும் தவச் செல்வர்களையும் அலைத்து வருத்தும் குற்றமாதலால், "இதற்கு என் செய்குவேன்" என்றும் இயம்புகிறார்; இறைவன் திருவருளாலன்றி மாறாத் தன்மையதாதல் நோக்கிப் பரம் பொருளிடத்தே முறையிடு கின்றார். இதனைத் தமிழ்ச் சான்றோர், "முற்றவும் கடியலாகாக் குற்றம்" என்று உரைக்கின்றார்கள். காமம் நல்கும் இன்பத்தினும் துன்பம் பெரிதாதலை எண்ணி, "என் நெஞ்சம் அம்மயல் நீங்கிட" எனவும், சிவபரம் பொருளின் திருவடி ஞானவொளி அறிவிலும் மனத்திலும் பரவிய வழி மயக்கவிருள் யாவும் நீங்கி உய்தி பெறலா மென்னும் கருத்து விளங்க, "தஞ்ச மென்று உன் சரண் தந்து காக்க" என்றும் முறையிடுகின்றார். சரண் - திருவடி ஞானம்.

இதனாற் காமக் குற்றத்தினின்றும் நீங்குதற்கும் உன் திருவடி நீழல் உய்தி தருவ தென்பதாம். (4)

2655. பற்று நெஞ்சகப் பாதக னேன்செயும்
குற்றம் யாவுங்கு ணம்எனக் கொண்டருள்
உற்ற எள்துணை யேனும்உ தவுவாய்
கற்ற நற்றவர் ஏத்தும்முக் கண்ணனே.

உரை: கற்றவரும் தவச்செல்வரும் பரவும் கண் மூன்றுடைய பெருமானே, பல்வகைப் பற்றுக்கள் நிறைந்த நெஞ்சினைக் கொண்ட பாதகனாகிய யான் செய்யும் குற்றங்களனைத்தையும் பொருட்குணம் எனக் கொண்டு, மிகுதியாக வுள்ள உன் திருவருளை எள்ளளவேனும் உதவுதல் வேண்டும். எ.று.

கற்றவர் கற்றற் குரியவும் அரியவுமாகிய நூல்களை முற்றக் கற்றவர்; கற்றதன் பயன் இறைவன் நற்றாளைத் தொழுவதாகலின், கற்றவரைக் கூறுகின்றார். நற்றவர் - நல்ல தவத்தைச் செய்தவர். நற்பயன் தரும் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று செயல்களையும் நன்கு செய்த வர்கள் என்பதாம். எத்தகைய நற்செயல்களையும் எய்தும் இடையூறு கட்கும் இடுக்கண்களுக்கும் அஞ்சாமல் அயராமல் கடை போகச் செய்து முடிப்பது தவம்; அத்தவநெறிக்கண் நிற்பவர், நற்றவராவர். கற்ற நற்றவர், உம்மைத் தொகை. கல்வியும் தவமுமாகிய இரண்டாலும் நல்ல இன்பம் நுகர்பவராதலின், அது பெருகுதல் விரும்பி, கண்ணுதற் கடவுளே எனக் கைதொழுது பராவுகின்றார்களாதலால், "கற்ற நற்றவர் ஏத்தும் முக்கண்ணனே" எனப் போற்றுகின்றார். இனி இதற்குக் கற்பன முற்றக் கற்ற நற்றவர் எனப் பொருள் கூறுவதுமுண்டு. பற்று - நான் என்னும் அகப்பற்று, எனதென்னும் புறப்பற்று என்ற இரண்டு. அகப் பற்றைத் தன்முனைப்பு, தற்போதம், பசுபோதம், என்றெல்லாம் குறிப்பர்.

புறப்பற்று, எனது என்று தனக்குரிய பொருள் மேற் செல்லும் விருப்பு குணநலம் குறியாமல் எப்பொருள் மேலும் பெருக்கம் குறித்துச் செல்வது பற்றி இதனை மமகாரம் என வடமொழியிற் கூறுவர். நான் என முனையும் அகப்பற்றி, தீச் செயற்கும் வினை முதலாதலால், அகங்காரம் எனப்படுவ துண்டு. அகம் - பாவம். இதனால், நான் எனது இரு பற்றுக்களையும் முறையே அகங்கார மமகாரங்கள் என நூலோர் வழங்குகிறார். இப் பற்றுக்களே நிறைந்த மக்கள் வாழும் உலகில் வினை செய்தற்கும் செயப்படு பொருளின் பயனை நுகர்தற்கும் இன்றியமையாதனவாயினும், ஒருவர் மேல் ஒருவர் வெறுப்புற்றுப் பகைத்துத் துன்பம் செய்து கெடுதற்கும் காரணமாதலின், நல்லோர் ஆகாதனவென வுரைக் கின்றார்கள். நலம் சிறிதும் தீங்கு பெரிதும் விளைத்தலால் இவை ஆகாதவை எனப்படுகின்றன. நான் எனதென்னும் இவ்விரண்டுமில்லை யெனின் நிலவுலகில் மக்கட்கு வாழ்வில்லை என்பது கருதியே இறைவன் இவ்வுணர்வுகளைப் படைத்து இயக்குகிறான் என்பாராய் மணிவாசகர் "யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாய்" (சதக) என்று சிவபிரானைப் போற்றுகின்றார். பற்று மிகுதியே பல பாதகச் செயல்கட்குக் காரணமாதலின், "பற்று நெஞ்சகப் பாதகனேன்" எனத் தம்மைக் குறிக்கின்றார். எடுத்த உடம்பு இனிது நெடிது வாழ்தல் வேண்டிக் கணந்தோறும் மாறும் இயல்பினையுடைய குணங்களின் மாற்றத்தால் குற்றங்கள் உளவாதலை நினைந்தே, "குற்றம் யாவும் குணமெனக் கொண்டு அருள்க" என்று இயம்புகிறார். உனது திருவருளறிவு சிறிது எய்தினும் குற்றங்கள் பெரிதும் நீங்கி உய்தி பெறு வேன் என்பாராய், "உற்ற அருள் எள் துணையேனும் உதவுவாய்" என வுரைக்கின்றார். உற்ற அருள் என மாறுக. மிகுதிப் பொருளதாகிய உறு என்னும் உரிச்சொல் உற்ற எனப் பெயரெச்சமாயிற்று. உற்ற எள் என இயைத்து, சிறுமை மிகுதியாகப் பொருந்திய எள்ளென்றலும் பொருந்தும். எள்ளத்தனைச் சிறிதாயினும் தீப் பெருகிப் பேரொளி செய்தல்போல, திருவருள் ஞானம் சிறிது நல்கிடின், பெருகி மனவிருள் முற்றவும் போக்க வல்லதாம் என்பது குறிப்பு.

இதனால் நீ நல்கும் அருள் சிறிதாயினும் நலம் பெரிது தந்து என்னை உய்விக்கும் எனத் தெரிவித்தவாறும். (5)

2656. மதியும் கல்வியும் வாய்மையும் வண்மையும்
பதியும் ஈந்தெம்ப சுபதி மெய்ந்நெறிக்
கதியின் வைப்பது நின்கடன் வன்கடல்
வதியும் நஞ்சம்அ ணிமணி கண்டனே.

உரை : வலிய கடலிடத்துள்ள நஞ்சினைக் கழுத்திற் கொண்ட நீலமணி போலும் கண்டத்தையுடைய பெருமானே, பசுபதியே, மதியும் கல்வியும் வாய்மையும் வன்மையும் இடமும் அளித்து மெய்ந்நெறியின் முடிவாகிய சிவகதியில் எம்மை உய்ப்பது நினக்குக் கடனாகும். எ.று.

வாசுகி நாகத்தைக் கயிறாகவும் வடவரையை மத்தாகவும் பெரிது முயன்று அரிது கடைய விடத்தைத் தந்தமையின், "வன்கடல் வதியும் நஞ்சம்" என்றும், அதனை யுண்டொழிக்காமல் கழுத்தில் மணியணி

போலக் கொண்டமையின், "நஞ்சம் அணிமணி கண்டனே" என்றும் புகழ்கின்ருர். வதிதல் - தங்குதல். பசுபதி - சிவனுக்குரிய பெயர்களில் ஒன்று; பசுவாகிய ஆன்மாக்களுக்குத் தலைவன் என்பது பொருள். மதி- இயற்கையறிவு. "மதி நுட்பம் நூலோடுடையார்" (குறள்) என வருவதன் உரை காண்க. கல்வி - ஈண்டுக் கல்வியாற் பெறலாகும் செயற்கையறிவின் மேற்று. வாய்மை - "யாதொன்றும் தீமை யிலாத சொலல்" (குறள்) எனப்படுவது காண்க. வண்மை - வரையாது கொடுக்கும் பண்பு; வளமை என்றுமாம். பதி - வாழிடம். மெய்ந்நெறி - சிவநெறி "இலகு மெய்ந்நெறி சிவநெறி என்பது (ஞானசம்) என்பர் சேக்கிழார். சிவநெறி மேற்கொண்டார் பெறுவது சிவகதியாதலால் "மெய்ந்நெறிக் கதி" என்றும், நினது அருளாலன்றி யாரும் எய்தலா காதது என்பாராய் "கதியின் உய்ப்பது நின் கடன்" என்றும் இசைக் கின்ருர். கடனுகாத வழி, உடல் உலகுகளைப் படைத்து உயிர்களை வாழச் செய்வது பயனில் செயலாகும் என்பது குறிப்பு. "தன்கடன் அடி யேனையும் தாங்குதல்" (கடம்பூர்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பதன் கருத்து இதுவாதலை எண்ணுக.

இதனுல், உலகளித்து வாழ்வித்த உனக்குச் சிவகதி தந்து வாழ் விப்பது கடன் எனக் கூறியவாறும். (6)

2657. நீடு வாழ்க்கை நெறிவரு துன்பினுல்
வாடும் என்னைவ ருந்தல்என் றுன்பதம்
பாடும் வண்ணம்நற் பாங்கருள் வாய்மன்றுள்
ஆடும் முக்கண்அ ருட்பெரு வெள்ளமே.

உரை : சபையின்கண் ஆடல் புரிகின்ற முக்கண் மூர்த்தியாகிய திருவருள் பெருவெள்ளம் போன்ற சிவபெருமானே, நீண்ட வாழ்வில் மிக்குற்ற வருத்தம் தரும் துன்பங்களால் வாடுகின்ற என்னை, இனி வருந்துதல் ஒழிக என்று சொல்லி உனது திருவடியைப் புகழ்ந்து பாடும் நல்ல பாங்கினை எனக்கு அருளுதல் வேண்டும். எ.று.

மன்று- தில்லையிலுள்ள பொற் சபை. கூத்தப் பிரானது திருமேனி மூன்று கண்களை யுடையதாகலின், "மன்றுகளாடும் முக்கண்". என்றும், அத் திருமேனி, பெருகும் வெள்ளத் தளவினதாகிய திருவரு ளுருவாதல் விளங்க, "அருட் பெருவெள்ளமே" என்றும் கூறுகின்ருர். வாழ்வு நீடுதலால் வினை பெருகித் துன்பம் விளைவிப்பது கண்டு, "நீடு வாழ்க்கை நெறிதரு துன்பினுல் வாடுமென்னை" என வுரைக்கின்ருர். நெறி தருதல்- மிகவும் பெருகுதல். நாள்தோறும் நினைவாலும் சொற்களாலும் செயல் களாலும் வினை பெருகித் துன்பம் செய்தலால், 'நெறிதரு துன்பு" எனத் தெரிவிக்கின்ருர். துன்பம்- துன்பு என வந்தது; இன்பம் இன்பு என வருதல் போல. வருந்தல், வருந்தாதே; வியங்கோள் வினை. திருவடியைப் புகழ்ந்து பாடுவதன் கருத்து வினைத் துன்பத்தில் நீக்கம் குறித்ததாதலால், "வருந்தல் என்று உள்பதம் பாடும் வண்ணம்" என இசைக்கின்ருர். பாங்கு - ஈண்டு மன நிலை சூழ் நிலையுமாம். அருள்வாய் - தருவாய்.

இதனால், வினை நீக்கம் முண்டாகப் பாடும் சூழ்நிலையை எனக்கு அமைத்துத் தருக என வேண்டியவாரும். (7)

2653. சிந்தை நொந்திச்சி றியஅ டியனேன்
எந்தை என்றுனை எண்ணிநிற் கின்றனன்
இந்து சேகர னேஉன்றன் இன் அருள்
தந்து கரப்பதுன் தன்கடன் ஆகுமே

உரை :— பிறைத் திங்களை முடியில் உடையவனே; சிறுமை யுற்ற அடியவனாகிய யான் மனநோயுற்று உன்னை எந்தையே என்று நினைந்து கொண்டிருக்கின்றேன், என்பால் இரக்கம் கொண்டு உனது இனிய திருவருளை யளித்து என்னைக் காப்பது உனக்குக் கடனாகும். எ.று.

இந்து - சந்திரன்; பிறைச் சந்திரனைக் குறிக்கிறது. "ஆவடுதண் டுறைத் தருணேந்து சேகரன் என்னுமே" (திருவிசைப்பா) எனச் சேந்தனர் பாடுவது காண்க. தருணம் - இளமை. தம்மை நோக்கிய வடலூர் வள்ளல் தமது சிறுமைப் பண்பைக் கண்டு வருந்துமாறு புலப்பட "இச்சிறிய அடியனேன்" எனக் கூறுகின்றார். துன்பங்களின் மிகுதியால் மனம் நொந்தமை தோன்ற, "சிந்தை நொந்து" எனவும், நோயுற்ற மகன் அம்மா அப்பா என்பது போலச் சிவனை எந்தையே என்று எண்ணிப் புலம்பினமையின், "எந்தை யென்றுனை எண்ணி நிற்கின்றேன்" எனவும் உரைக்கின்றார். எந்தை ஈசன் எம்பெருமான் என்று சிந்தை செய்வர்க் கன்றித் திருவருள் கைகூறுவதன்று அரத்துறை) எனத் திருஞானசம்பந்தர் தெரிவிப்பது காண்க. பிறைத் திங்களின் தேய்வுத் துன்பங் கண்டு திருமுடியிற் சூடி ஆதரித்த வள்ளளாதலின், எனக்கு உன்னுடைய திருவருளை நல்குதல் முறையென முறையிடுவாராய்; "இந்து சேகரனே யுன்றன் இன்னருள் தந்து காப்பது உன்றன் கடன்" என வேண்டுகின்றார்.

இதனால் இந்து சேகரனாதலின், இன்னருள் தந்து காப்பது கடன் என வேண்டியவாரும். (8)

2659. உன்னை நாடும்என் உள்ளம் பிறரிடைப்
பொன்னை நாடும்பு துமைஇ தென்கொலோ
மின்னை நாடும்நல் வேணிப்பி ரான்இங்கே
என்னை நாடிஎ னக்கருள் செய்கவே.

உரை :— மின்னற் கொடி போல் ஒளி செய்யும் நல்ல சடையை யுடைய பெருமானே, உன்னையே விரும்பி யொழுகும் என்னுடைய மனம், உலகியற் பொன்னை நயந்து அதனை யுடைய பிறரிடம் சென்று கேட்க நினைப்பது எனக்குப் புதுமையாக வுளது; இங்கே நீ என்னை நாடி வந்து எனக்கு உன் திருவருளை நல்க வேண்டும். எ.று.

"பொலிந் திலங்கும் மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்வீழ் சடை" (பொன்வண்ணத்) எனச் சேரமான் முதலியோர் கூறுதலால் "மின்னைநாடுமி நல்வேணிப் பிரான்" எனச் சிவனைப் பராவுகின்றார். பொன்னிறத் திருமேனியையுடைய உன்னையே நாளும் நயந்து நினைந்து

கொண்டிருக்கும் எனது உள்ளம் உலகிற் பொருளுடைய பிறரிடம் பொன் பெறவிழைவது பொருத்த மாகாதே; அவ்வாறு பிறரிடம் அடைந்து பொன் பெற முயன்ற வரலாறே சிவத் தொண்டர்பாற் கிடையாது; என் மனம் நாடுவது நீ அருளாமையைக் காட்டி மருட்டுகின்றது என்பார், "உள்ளம் பிறரிடம் பொன்னை நாடும் புதுமை இது எக்கொலோ" என உரையாடு கின்றார். புதுமை, மருட்கைக்கு ஏது எனத் தொல்காப்பியர் (மெய்ப்) கூறுவது காண்க. இதனைப் போக்கி, என் மனம் திருந்த நீயே என்பால் வந்து நின் அருளைத் தருக என்பார், "என்னை நாடி எனக்கருள் செய்கவே" என்று இயம்புகிறார். வடலூர் வள்ளலார் புதுமை காண்பது போல மேலை நாட்டில் கி.பி. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த அருள் நெறியாளர் (Mystic Wtiter) ஆன்மப் பொருளை ஆராய்ந்து அதன்கண் உணர்வுகளே யன்றிப் பல தலையாய்ச் சிதறும் இயல்புகளும் (Distraction) உண்டென்றும், அவைகள் காற்றிற் பறக்கும் தூசிப் படலம் போல்வன. ஈக் கூட்டம் போல்வன தேள் கதுவப்பட்ட குரங்காட்டம் போல்வன என்றும் (The cloud of un knowing by Aldous Haxley) உரைக் கின்றார்கள்.

இதனால், என் மனம் உலகியற் பொருள்களை நாடா வண்ணம் என்னை நாடி வந்து அருள் தருக என வேண்டியவாறும். (9)

2660. இழைபொ றுத்தமு லையவர்க் கேற்றஎன்
பிழைபொ றுப்பதுன் பேர்அருட் கேதகும்
மழைபொ றுக்கும்வ டிவுடை யோன்புகழ்
தழைபொ றுக்கும்ச டைமுடித் தந்தையே.

உரை :— மழை மேகத்தின் நிலத்தை யுடையவனுகிய, திருமால் புகழ்ந்து பரவி யருச்சிக்கும் பச்சிலைகளையும் பூக்களையும் ஏற்றருளும் சடைபொருந்திய முடியையுடைய தந்தையாகிய சிவபெருமானே, சிறந்த நகைகளாகிய மணிமாலைகளைச் சுமக்கும் கொங்கைகளையுடைய மகளி ரோடு கூடி யொழுகும் என்னுடைய குற்றங்களைப் பொறுப்பது மிக்க அருளுடைய உனக்குப் பொருத்தமாகும். எ.று.

மழை பொறுக்கும் வடிவு, மழை பொழியும் கரிய மேகத்தின் நிறம் பொருந்திய திருமேனி. அஃது அருளாளனுகிய திருமாலுக்கு வடிவ மகாலின், "மழை பொறுக்கும் வடிவுடையோன்" என வுரைக்கின்றார். தழை - பச்சிலை. பச்சிலைகளையும் பூக்களையும் கொண்டு தொண்டர் சிவனை அருச்சிப்பது மரபாதலின், "தழை பொறுக்கும் சடைமுடித் தந்தையே" எனவும், வாயாற் புகழ்களை யோதுவதும், கையால் தழை முதலிய வற்றைச் சொரிதலும் வழிபாட்டு முறையாதல் பற்றி, புகழ் தழை பொறுக்கும் சடை" எனவும், கூறுகின்றார். திருவடியிலும் அடியவர் பூ முதலியவற்றை இடுவராயினும், சடை பொருந்திய முடியிலிடுவதும் பலரும் அறிய விளங்குதலின், சடை முடியை விதந்து கூறுகிறார். "பத்தி யடியவர் பச்சிலை யிடினும், முத்தி கொடுத்து முன்னின் றருளி" (இடை. மருது மும்மணிக) என்று பட்டினத்துப் பிள்ளையார் உரைக்கின்றமை காண்க. இழை, பொன்னாலும் மணிகளாலும் முத்துக்களாலுமாகிய மாலை யணிகள் அணிகள் கிடந்து அசையும் மார்பையுடைய இளமகளி

ரை "இழை பொறுத்த முலையவல்" என்று மொழிகின்ருர். இளமகளிரொடு கூடிச் செய்த குற்றங்களையும் நீ பொறுத்தருளுதல் வேண்டும்; மிக்குற்ற திருவருளுருவாகிய உனக்கு இயல்பாயினும், என் போன்ருரை அருளுதல் கடனுகும் என்பார், "உன் பேரருட்குத் தகும்" என்று முறையிடுகின்ருர். தகுதி, முடியிற் கங்கையையும், இடப்பாகத்தில் உமைநயங்கையையும் உடைமை.

இதனுல், மகளிரொடு கூடிச் செய்த என் பிழைகளை மகளிரைப் பிரியாது உடன் கொண்டு திகழும் பெருமானுகிய உனக்குத் தக்கதேயாம் என உரைத்தவாறும். (10)

2661. மூட னேன்பிழை முற்றும் பொறுத்துனைப்
பாட வேஅருட் பாங்கெனக் கீதியேல்
நாட வேறும னையிடை நண்ணிநான்
வாட வேண்டுவ தென்னைஎம் வள்ளலே.

உரை :— அருள் வள்ளலாகிய சிவபெருமானே, மூடனுயினும் என் குற்றங்களைப் பொறுத்தாற்றி உன்னையே பாடிப் புகழ்தற்குரிய திருவருணலத்தை எனக்கு நல்குக்; நல்குவாயாயின், வேற்றவர் வீடுகட்குச் சென்று அவர் ஒன்றும் ஈயாமை கண்டு வருந்துவது இல்லையாம். எ.று.

மூடன், மலவிருளால் அறிவு மறைக்கப்பட்டவன்; எல்லா மக்களும் மலவிருள் மறைப்புக் குள்ளானவ ரெனினும், மறைப்புத் தன் சொற் செயல்களால் விளங்க நிற்றவனை மூடன் என வுலகம் வழங்குகிறது. பொருள் வேண்டி மான வுணர்வின்றிப் பிறருடைய வீடுகட்குச் செல்லும் செயலால் யான் ஓர் மூடனுயினும், இரத்தலும் என் போன்ருர்க்குத் தொழிலாதல் கண்டு என்னைப் பொறுத்தல் வேண்டும் என்பார், "பிழை முற்றும் பொறுத்து" என்றும், உன்னைப் பாடுதற் கேற்ற பாவன்மையே எனக்கு அருளுவாயாயின், பாட்டிசைக்குப் பாம்பும் இரங்குதலால் யான் வீடு தோறும் சென்று இரந்தலைய வேண்டாமை யுண்டாகும் என்பாராய், "பாடும் அருட் பாங்கு எனக் கீதியேல் நான் வேறு மனையிடை நண்ணி வாட வேண்டுவது என்னை" என்றும் இயம்புகின்ருர். பிழைகளைப் பொறுப்பவர் சிலவற்றை விடுவித்துச் செய்வ தின்மையின், "முற்றும் பொறுத்து" எனவும், திருவரு ளில்லையாயின், கேட்டார்ப் பிணிக்கும் இனிய பாட்டுக்களைப் பாடலாக தென்றற்கு "அருட் பாங்கு எனக்கு ஈதியேல்" எனவும், சிறந்த திருவருளை இரத்தலின். "ஈதியேல்" எனவும், இனிய பாட்டிசைப்பாரைப் பிறர் நாடி வந்து மகிழ்த லுண்டே, யன்றி, அவர் பிறரை நாடி யிரந்து பெருது வருந்துகின்ற தில்லையாதலால், "வேறு மனையிடை நான் நண்ணி வாட வேண்டுவ தென்னையாம்" எனவும், சொற்ருெறும் நயம் தோன்றக் கூறுகின்ருர். என்னை யென்பது இல்லை யென்னும் பொருள் தோன்ற நிற்கிறது; "கற்றதனு லாய பயன் என் கொல்" (குறள்) என்ருற் போல.

இதனுல், இனிய பாட்டுக்களைப் பாடி யுய்யும் அருட் பாங்கினை அருளுக என வேண்டியவாறும். (11)

2662. மின்னெப் பாகி விளங்கும்வி ரிசடை
என்னப் பாஎனக் கின்அருள் ஈந்துநின்
பொன்னெப் பாந்துணைப் பூம்பதம் போற்றியே
உன்னப் பாங்கின்உ யர்நெறி உய்க்கவே.

உரை :— வான மின்னைப் போன்று ஒளிரும் விரிந்த சடையை யுடைய அப்பனே, எனக்கு உனது திருவருளை நல்கி, உன்னுடைய பொன் போன்றனவாகிய இரண்டு அழகிய திருவடிகளைப் போற்றி நினைக்கும் அவ்வியல்புடைய உயரிய ஒழுக்க நெறியில் என்னைச் செலுத்தி யருள்வாயாக. எ.று.

சிவ பெருமானுடைய திருமுடிச் சடை, வானத்தில் தோன்றும் மின்னற் கொடி போல் ஒளி செய்வ தெனச் சான்றோர் கூறுதலால் "மின்னெப்பாகி விளங்கும் விரி சடை" என விளம்புகின்றார். திரட்டி முடிக்காமல் விரிந்தே கிடத்தலின், சிவன் முடியிலுள்ள சடை "விரிசடை" எனக் குறிக்கப்படுகிறது. அப்பன்- தந்தை; தலைவனுமாம். திருவருள் இனிமைப் பண்பின் உருவாதலால், "இன்னருள்" என்கிறார். 'பொன்னின் நிறமும் பொற்பும் பூவின் மென்மையும் தோன்ற, 'பொன்னெப்பாம் துணைப் பூம்பதம்" என்று புகழ்கின்றார். "அவன், அருளாலே அவன் தாள்" வணங்க வேண்டுதலின், "இன்னரு ளீந்து போற்றி யுன் அப்பாங்கு" என இயைய வுரைக்கின்றார். உன் அப்பாங்கு - உன்னுகின்ற அத்தன்மை. பாங்கு - தன்மை. உயர்நெறி - உயர்ந்த வொழுக்கமாகிய பத்தி நெறி. உன்னுதல், நினைத்தல்; தியானித்தல் எனினும் அமையும். போற்றுதலும் தியானித்தலும் வழிபாட்டு முறை யென அறிக. உய்த்தல் - செலுத்துதல்.

இதனால், உன்னருளாலே உன் திருவடியைப் போற்றித் தியானிக்கும் உயர் நெறிக்கண் உய்த்தருள்க என வேண்டிக் கொண்ட வாறும். (12)

திருச்சிற்றம்பலம்

10. அபராத விண்ணப்பம்

அஃதாவது தன்பாலுள்ள குற்றங் குறைகளை எடுத்தோதிப் பொறுத்தாற்றி அருள் செய்யுமாறு சிவபெருமானிடம் முறையிடுவது. எனினு இறைவன் அருள் நலம் புகழ்ந்து வேண்டலும், தமது நிலைமையைக் கூறலும், தமக்கு அருளாவிடின் வரும் குறைகளும் பேசப்படுகின்றன. அவற்றுள், கலகம் நிறைந்த நினைவுகளையுடைய மனத்தனாதல், தாயும் பொறுத குற்ற முடையனாதல், தற்கொலை புரிந்து கொள்ள நினைத்தல், மனநலிவுற்றுச் சான்றோர் உறவு நாடாமை, துன்பம் சுமக்கும் தூணாதல் முதலிய அபசார வகையில் காணப்படுகின்றன; திருவருள் பெறலாமென ஏமாற்ற மெய்துவதும், மனம் போக்கிற் போவது, குற்ற முணராது அருள் பெற விழைதல், இறைவனையே நினையாமை, பலர் கண்டிகழ வருந்துதல் முதலியன அபராத மெனப் படுகின்றன; விண்ணப்ப வகையில் நடம் காண விழைதலும், ஊழ்வினை பிறவிக் கேது வாதலும், திருவடியே துணையாதல் சொல்லுவதும், நன்னெறியாளர் நலம் கண்டு பரவுவதும், வினைப் பிணிப்பு நீங்கல் வேண்டு மென்பதும் பிறவும் உரைக்கப்படுகின்றன. இவ்விண்ணப்பம் பாராயணத்துக் குரியதாதல் பற்றி அந்தாதித் தொடையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2663. உலகம் பரவும் பொருளேஎன்
உறவே என்றன் உயிர்க்குயிரே
இலகம் பரத்தே பரம்பரமாய்
இன்ப நடஞ்செய் எம்இறையே
கலகம் பரவும் மனத்தேனைக்
கைவிட் டிடநீ கருதுதியோ
திலகம் பரவும் நுதற்பாகன்
என்ப தருளின் திறத்தன்றே.

உரை :— உலகனைத்தும் பரந்து நிற்கின்ற பரம் பொருளும் எனக்கு உறவும், என் உயிர்க் குயிரும், விளங்குகின்ற ஞானகாசத்தில் மேலும் கீழுமாய் நிறைந்து இன்பத் திருக்கூத்தாடும் அரசுமாகிய சிவ பெருமானே, கலக நினைவுகள் நிறைந்த மனத்தை யுடையனாகிய என்னைக் கைவிட்டொழியக் கருதுகின்றாயோ? கருத வேண்டா; திலக மணிந்த நெற்றியை யுடைய உமாதேவியைப் பாகமாக வுடையவன், என்று உன்னைச் சொல்வது அருளாளன் என்ற கூறுபாட்டாலன்றோ? எ.று.

உலகங்கள் அனைத்திலும் அணுப் புதைக்கவும் இடமின்றிப் பரந்திருக்கின்றான் இறைவன் என்பது கொண்டு, "உலகம் பரவும் பொருளே"

என்று போற்றுகின்றார். "பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே" (வாழாப்) என மாணிவாசகர் உரைப்பது காண்க. பரவும் பொருள் என்றதற்குப் போற்றித் துதிக்கும் பரம்பொருளே என்றலுமுண்டு "அம்மையே அப்பா" என சிவனோடு உறவு கொண்டுரைப்பதால் "உன் உறவே" எனவும், உயிருணர்விற் கலந்து உணர்வன உணரச் செய். லால் "உயிர்குயிரே" எனவும் இயம்புகின்றார். இலகுதம், விளங்குதல். அம்பரம் - ஆகாசம் ஈண்டுச் சிதாகாசமாகிய ஞானகாயத்தின் மேற்று. ஞான வானத்தில்மேல் இது கீழ் இது என்றற் கின்மை பற்றிப் "பரம்பரமாய்" என்றும், உயிர்கட்கு இன்ப மெய்துதற் பொருட்டுத் திருக் கூத்து இயற்றுவது பற்றி, "இன்ப நடம்செய் எம் இறையே" என்றும் கூறுகின்றார். மனத்தின்கண் விருப்பு வெறுப்புணர்வுகளே யன்றி மாறு பட்ட எண்ணங்களும் எழுவதால், "கலகம் பரவும் மனத்தேன்" எனவும், அந்த மனமுடைமை துன்பத்துக்குக் காரணமாதல் கண்டு என்னைப் புறம்பாகத் தள்ளலாகாது என்பார், "கைவிட்டிடக் கருதுதியோ" எனவும் உரைக்கின்றார். அருட் சத்தியாகலின், உமையொருபாகனாய் இருப்பது திருவருள் புரியும் திருமூர்த்தம் என்பது பற்றியே "திலகம் பரவும் நுதற்பாகன் என்பதருளின் திறத்தன்றே" என இயம்புகின்றார். திலகம் பரவும் நுதல் என்பது அடை யடுத்த ஆகு பெயராய் உமையம்மைக் காயிற்று.

இதனால், கலக நினைவு நிறைந்த மனத்தனாகிய குற்றம் பற்றி என்னைக் கைவிட லாகாது விண்ணப்பித்தவாறும். (1)

2664. அன்றோர் பொருளாய் அடியேனை
 ஆட்கொண் டருளி அறிவளித்தாய்
இன்றோ சிறியேன் பிழைகருதி
 இரங்கா தகற்ற எண்ணுதியோ
குன்றோர் அனைய குறைசெயினும்
 கொண்டு குலம்பே சுதல்எந்தாய்
நன்றோ கருணைப் பெருங்கடலே
 ஆளாய் இந்த நாயினையே.

உரை :— பேரருட் கடலாகிய சிவபெருமானே, அந்த நாளில் அடியவனாகிய என்னை ஒரு பொருளாகக் கருதி ஆண்டருளி அறிவும் நல்கினாய்; இந்நாளில் சிறுமையுற்ற என் குற்றங்களை யெண்ணி இரக்க மின்றி என்னை நினைவிலிருந்து நீக்கக் கருதுகின்றாய் போலும்; மலை யளவாய்க் குறைகள் இருந்தாலும், நாயனைய என்னை ஆண்டருள்க. ஏனெனில், கொண்ட பின் குலம் பேசுவது நற்செயலாகாது, காண்; எ.று.

இறைவனது பேரருள் கடல் போல் அளப்பரிய பொருமையும் அகலமும் ஆழமுமுடைய தென்பது விளங்க, "கருணைப் பெருங் கடலே" என்று புகல்கின்றார். அந்நாள், கேவலத்து மலவிருளில் அறிவு செயலின்றிக் கிடந்த நாள். உலகுடல் கருவி கரணங்களைப் படைத்தளித்துச் சகலத்திற் புகுத்தி வாழச் செய்தது பற்றி, "ஓர் பொரு ளாய் அடியேனை ஆட்கொண்டு அருளி அறிவளித்தாய்" என

வுரைக்கின்ருர். அறிவு செயலற்ற நிலைமை கண்டு, அவை யினிது செயல்பட உலக வாழ்வு தந்தமையால், தான் அப்பெருமானுக்கு அடித் தொண்டு செய்யும் கடமை யுடையனுதலால், ''அடியேன்'' என்றும், வாழ் வளித்தமைக்குக் காரணம் பேரருளல்லது காரணம் வேறின்மை யுணர்ந்து, ''ஒரு பொருளாய் ஆண்டருளினை'' யென்றும் உரைக்கின்ருர். அறிவன அறிந்து செய்வன செய்யுங்கால், பிழைகள் பல உண்டாகிவிடுகின்றன; அதனை யெண்ணி, என்னை மறுத்துப் புறத்தே ஒதுக்குகின்ருயே என வருந்துகின்றமையின், ''இன்ருே சிறியேன் பிழை கருதி இரங்காது அகற்ற என்னுதியோ'' எனக் கூறுகின்ருர். இன்று, மண்ணில் வாழ்கின்ற இப் போது; திருவருளின் இருப்பையும் அது செய்யும் உதவியை மறந்து குற்றம் புரிந்து சிறுமை யுற்றமை தோன்றச் ''சிறியேன்'' எனவும், துன்பத்தால் தாக்கப்படுவதால், ''இரங்கா தகற்ற எண்ணுதியோ'' எனவும் இயம்பு கின்ருர். ஓகாரம், ஐயப் பொருட்டு. என் குற்றங்கள் மலைபோற் பெருகித் தோன்றுமாயினும் நினது திருவருட்கண்களுக்கு மிகவும் புல்லி யவாகும்; ஒன்றைக் கொள்ளுதற்கு முன்பு அதன் குணநலங்களைத் தெரிந்து பின்பு கொள்வதுண்டே யன்றி கொண்ட பின் தெரிந்து பேசுவது நல்லறமன்று; உலகவரும் ''கொண்டு குலம் பேசலாகாது'' என மொழி கின்ருர்கள். அதனுல், ''குன்ருே ரனைய குறை செயினும் கொண்டு குலம் பேசுதல் நன்ருே'' என்று சொல்லுகின்ருர். இறைவன் திருவுள்ளம் மாருமை வேண்டி ''எந்தாய்'' என்றும், நீயு மென்னை ஆளாய்க் கொண் டருளினுய், நானும் ஆளாய் விட்டேன் என்பது வற்புறுத்தற்கு ''ஆளாய் இந்த நாயினையே'' என்றும் இசைக்கின்ருர்.

இதனுல், என்னை ஆளாகக் கொள்ள ஆளாகிய என்னைக் கொண்டு குலம் பேசுதல் நன்ருகாது என விண்ணப்பித்தவாரும். (2)

2665. நாய்க்குங் கடையேன் பிழைஅனைத்தும்
நாடில் தவத்தால் நல்கியநல்
தாய்க்கும் கோபம் உறும்என்னில்
யாரே யென்பால் சலியாதார்
வாய்க்கும் கருணைக் கடல்உடையாய்
உன்பால் அடுத்தேன் வலிந்தெளிய
பேய்க்கும் தயவு புரிகின்ருேய்
ஆள வேண்டும் பேதையையே.

தவருமற் பயன் விளைவிக்கும் அருட் செல்வத்தாற் கடல் போன்ற பெருமானே, எளிமை மிக்க பேய்க்கும் வலியச் சென்று அருள் செய்பவன் நீ; யானே நாயினும் கீழானவன்; என் பிழைகளை யெண்ணினுல் தவம் செய்து பெற்ற தாய்க்கும் மனத்தின்கண் வெகுளி யுண்டாகுமென்ருல், யாவர்தாம் என்னைப் பொருமல் வெருமல் இருப்பார்கள்; உன்னை யடுத்துப் பராவுகின்றேனுதலால் பேதையாகிய என்னை ஆண்டருளல் வேண்டும். எ.று.

செய்யும் அருள் ஒன்று பலவாய் நலம் பயப்ப தென்பதற்கு ''வாய்க்கும் கருணை'' எனச் சிறப்பிக்கின்ருர். நாயின்பாற் காணப்படும்

நன்றி யுணர்வும் தன்பால் இல்லை என்பார், "நாய்க்கும் கடையேன்" என்றும், குற்றமே காண்பவர் சிலரன்றிப் பலரன்மையின், "பிழை யனைத்தும் நாடின்" என்றும், நெடுநாள் மகப் பேறின்றித் தவம் செய்து பெற்ற தாய் தன் மகன்பால் அன்புருவாய் நின்று அவன் யாது பிழை செய்யினும் பாரா தொழிகுவள் என்பாராய், "தவத்தால் நல்கி நல் தாய்க்கும் பிழை யனைத்தும் நாடின் கோபம் உறும்" என்றும் உரைக்கின்றார். நாடின் என்பது நாடுதலில்லாமை தோன்ற நின்றது. அவள் கொள்ளாளாயினும், கோபம் பொங்கித் தானே மிக்கு வெளிப்படும் என்றற்குக் "கோபம் உறும்" எனக் கூறுகிறார். பெற்ற தாய்க்கும் கோபம் பெரிதாம் எனில் மற்றவர் சிறிதும் பொறுக்க மாட்டார்கள் என்பாராய், "யாரே என்பாற் சலியாதார்" எனவிளம்புகிறார். ஆதலாற்றான் கருணைக் கடலாகிய உன்னை யடைந்து வேண்டுகிறேன் என்பார், "உன்பால் அடுத்தேன்" என வுரைக்கின்றார். திருவடி நீழலன்றி வேறு யாதும் வேண்டாத காரைக்காற் பேயாரை நினைப்பிப்பாராய், "எளிய பேய்க்கும் வலியத் தயவு புரிகின்றோய்" எனக் கிளந்து கூறுகிறார்.

இதனால், பெற்ற தாயும் பொறாத பெருங்குற்ற முடைமை கூறி அருள் புரிக என விண்ணப்பித்தவாறும். (3)

2666. **பேதைப் பருவத் தெனைவலியப்**
பிடித்தாட் கொண்ட பெருமானே
போதைக் கழிப்பான் வீண்புரியும்
புலையேன் பிழையைப் பொறுக்கிலையேல்
வாதைப் படும்என் உயிரைஉன்றன்
மலர்த்தாள் முன்னர் மடிவித்தே
ஓதைக் கடல் சூழ் உலகத்தே
பழிசூழ் விப்பேன் உரைத்தேனே.

உரை: மிக்க இளம் பருவத்திலேயே வலிய வந்து என்னுணர்வைப்பற்றிக் கொண்ட பெருமானே, பொழுதைப்போக்கு முகத்தால் வீண் படுத்திய புலையனாகிய என்னுடைய குற்றங்களைப் பொறுத்தாற்றி அருள் புரியவில்லையென்றால், அவற்றால் இப்போது துன்பப்படும் எனது உயிரை உனது மலர் போன்ற திருவடி முன்பு சாகப்பண்ணி, முழக்கத்தை யுடைய கடல் சூழ்ந்த நிலவுலகில் உனக்குப் பழியுண்டாக்குவேன்; முன் கூட்டியே உரைக்கின்றேன். எ.று.

பேதைப் பருவம் - முதல் ஏழு வயது வரையுள்ள பருவம்; அறியாப் பருவம் என்பதுமுண்டு. அறிவறியாப் பருவத்திலேயே தமக்குச் சிவன்பால் பற்று உண்டானமை தெரிவிப்பாராய், "பேதைப் பருவத் தெனை வலியப் பிடித்து ஆட்கொண்ட பெருமானே" எனக் கூறுகின்றார். இது சிவபரம்பொருள்; இதனை வழிபடுக எனப் பிறர் அறிவியாமலே தமக்குப் பற்றுண்டானதற்குக் காரணம் காண்பவர், சிவனே பற்று உண்டாக்கியிருத்தல் வேண்டுமென நினைக்கின்றாராகலின், "வலியப் பிடித்து ஆட்கொண்ட பெருமானே" என வுரைக்கின்றார். பொழுது - போது என வந்தது. பயனுள்ள வேலையின்றி வெறிதே வீண் பொழுது போக்கினமையின், "போதைக் கழிப்பான் வீண்புரியும் புலையேன்" என்று தெரிவிக்

கின்றார். வீண் - பயனில்லாமை. காலத்தை வீண் போக்குவது, காலக் கொலையாதலின், அது செய்யும் தம்மைப் "புலையேன்" என்கின்றார். பிழை - குற்றம்; தீய செய்தல். அறியாப் பருவத்தில் வலிய ஆட்கொள்ளப்பட்ட வுரிமையால் யான் செய்பிழை பொறுத்தற்கு உரிய வாகும் என்பார், "புலையேன் பிழையைப் பொறுக்கிலையேல்" என்று புகல் கின்றார். வாதை - துன்பம். பிழை வினைகளின் பயனாகத் தாக்குண்டு வருந்துவதை, "வாதைப்படும் என்னுயிரை" எனவும், அவ்வாதையி னின்று நீங்குதற்கு வாயில் உயிரை மாய்த்துக்கொள்வதாகக் கருதுத லால், "என்னுயிரை மடிவித்து" எனவும், இத் தற்கொலையை யுன் திருமுன்பு செய்து கொள்வேன் என்றற்கு, "உன்றன் மலர்த்தாள் முன்னர் மடிவித்து" எனவும், அதனால் உனக்குப் பழி வருவிப்பேன் என்பார், "உலகத்தே பழி சூழ்விப்பேன்" எனவும் இயம்புகின்றார். கடலின் முழக்கை யுடையதாயினும், உலகில் என் செயலால் உண்டாகும் பழிப்புரை பெரிதாம் என்றற்கு "ஓதைக் கடல் சூழ் உலகம்" என்று உரைக்கின்றார். அத்தகையபடி எய்தாமற் காத்துக்கொள்க என்பாராய், "உரைத்தேனே" என்கின்றார். ஓதை - ஓசை; முழக்கம். இவ்வாறே மணிவாசகப் பெருமான் சிவன் திருமுன்னர் நின்று, "விடுதி கண்டாய்; விடின் வேலை நஞ்சுண் மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய் மதியன், பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே" (நீத்தல்) என்பது காண்க.

இதனால், குற்றம் பொறுத்தருளா யெனின் திருமுன் உயிர் கொடுத்துப் பழி வருவிப்பேன் என முறையிட்டவாறும். (4)

2667. **உரைத்தார் சிலர்சின் னாள்கழிய**
உறுவேம் என்ன உரைத்தவரே
நரைத்தார் இறந்தார் அவர்தம்மை
நான்கண் டிருந்தும் நாணிலனே
விரைத்தாள் மலரைப் பெறலாம்என்
றெண்ணி வீணே இளைக்கின்றேன்
திரைத்தாழ் கடலிற் பெரும்பிழையே
செய்தேன் என்ன செய்வேனே.

உரை: சிலர் சிலநாள் கழிந்தால் திருவருளைப் பெறலாமென வுரைத்தனர்; உரைத்த அவர்கள் நாள் கழியக் கழிய, மூத்து நரைத்து இறந்தொழிந்தார்கள்; நான் அவர்களைக் கண்டிருந்தும் நாணம் சிறிது மின்றி உன்னுடைய தெய்வ மணம் கமழும் திருவடியாகிய மலர்களை யடையலாம் என நினைந்து, வீணாக உடம்பும் உள்ளமும் மெலிகின்றேன்; அலையெழுந்து வீழ்கின்ற கடலளவாய குற்றங்களைச் செய்துளேனாகலின், யான் என்ன செய்வேன். எ.று.

இன்று இல்லையாயினும் சிலநாள் கழியுமாயின் திருவடி ஞானத்தை எய்தலாம் என எனக்குச் சிலர் சொல்லித் தேற்றினர் என்பாராய், "உரைத்தார் சிலர் சின்னாள் கழிய உறுவேம் என்ன" என்றும், உரைத்த அறிஞர் பலரும் என் கண் காண மூத்துத் தளர்ந்து இறந்து மறைந்தனர்

என்பார், "உரைத்தவரே நரைத்தார் இறந்தார்" என்றும் கூறுகின்றார். சொன்ன அவர்களையும், அவர்கள் மூத்து நரைத்து இறந்ததையும் நான் நேரிற் கண்டிருந்தேன்; திருவடி ஞானம் எய்தவில்லை; அதனை நம்பி யிருந்த நானும் அவ்வுரை பொய்த்தமைக்குச் சிறிதும் நாணினேனில்லை என்பாராய், "அவர் தம்மை நான் கண்டிருந்தும் நாணுமே" என நவில்கின்றார். நம் எண்ணமும் பொய்த்துப் போகலாம் என்று நினையாமல், திருவடி ஞானம் தெய்வ மணம் கமழ்ந்து கொண்டு எய்தப் பெறலாம் என்று நினைந்து, பற்பல நாட்களை வீண் போக்கிக் கெட்டேன் என்று சொல்லுவாராய், "விரைத்தாள் மலரைப் பெறலாம் என்று எண்ணி வீணே இளைக்கின்றேன்" என்று கூறுகின்றார். தாம் செய்த பிழை கடலினும் பெரிதாய் நீந்தலரிது எனற்குத் "திரைத்தாழ் கடல்" உவமம் செய்யப்படுகிறது. தமது மாட்டாமை தோன்ற "என்ன செய்வேன்" என இரங்குகிறார்.

இதனால், பிழை மிகுதியால் திருவடிப் பேறு சின்னாள் கழியின் எயதலா மென நம்பி ஏமாந்து செயலற்றமை தெரிவித்தவாறும். (5)

2668. **செய்வேன் தீமை நலம்ஒன்றும்**
தெரியேன் தெரிந்து தெளிந்தோரை
வைவேன் அன்றி வாழ்ந்தேன்என்
வண்ணம் இந்த வண்ணம்எனில்
உய்வேன் என்ப தெவ்வாறென்
உடையாய் உய்வேன் உய்வித்தால்
நைவேன் அலதிங் கென்செய்வேன்
அந்தோ எண்ணி நலிவேனே.

உரை :— என்னையுடைய பெருமானே, தீயவை எல்லாவற்றையும் செய்பவனும், நல்லது சிறிதும் தெரியாதவனும், யாவையும் தெளியத் தெரிந்த பெரியோர்களை வைது பேசுவதன்றி, வாழ்த்தத் தெரியாதவனும் யானே யாவன்; என்னுடைய குணமும் செயலும் இதுவாகும்; இந்நிலையில் யான் உய்தி பெறுவே னென்பது எவ்வாறு? நீ உய்வித்தாலன்றி யான் உய்தி பெறேனாதலால், வீணே மெலிவ தல்லது வேறே என்ன செய்வேன்; ஐயோ, இவற்றை எண்ணி வருந்துகிறேன். எ.று.

எல்லாம் உடையவனும் எல்லாம் அறிந்தவனும் இறைவனாகிய நீயாதலால், உன்பால் முறையிட்டுக் கொள்வதன்றி வேறு வகை யொன்றும் இல்லாதவன் என்பாராய், "என் உடையாய்" எனச் சிவனைப் போற்றுகின்றார். துன்பத்தால் வருந்தும் மனமுடையார் அறிவுக் கண்ணுக்குத் தாம் செய்த தீச் செயல்களும் நினைவுகளுமே புலனாகுமாதலால், "தீமை செய்வேன், நலமொன்றும் தெரியேன்" என்றும், தெளிவுடைய நல்லோர்களை அவமதித்து இகழ்வதன்றி, மதித்துப் பேணுவதன்றி வாழ்த்தி மகிழ்வது கிடையாது என்றற்குத் "தெரிந்து தெளிந்தோரை வைவேனன்றி வாழ்த்தேன்" என்றும், எல்லா மறிந்த பரம்பொருளாகிய உன்பால் பலசொல்லுவது என்னும் என்பாராய், "என் வண்ணம் இந்த வண்ணம்" என்றும் உரைக்கின்றார் "குலம் பொல்லேன் குணம் பொல்லேன்

குறியும் பொல்லேன் குற்றமே பெரிதுடையேன், கோலமாய நலம் பொல்லேன் நான் பொல்லேன் ஞானி யல்லேன் நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன் வெறுப் பனவும் மிகப் பெரிதும் பேச வல்லேன், இலம் பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன் என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே'' (தனி-தாண்ட) எனத் திருநாவுக்கரசர் முறையிடுவது காண்க. இத்தகைய பண்பும் தொழிலுமுடைய யான் அருள் ஞானம் பெற்று உன் அடி யடைந்து, உய்வே னென்றற்கு ஏது சிறிதும் இல்லை என்பாராய், ''உய்வேன் என்பது எவ்வாறு'' எனக் கேட்கின்றார். இனி, என் மன மொழி செயல்களை உன்பால் வைத்து நினைப்பித்தால் நினைவதும், மொழிவித்தால் மொழிவ தும், செய்வித்தால் செய்வதும் தவிர என்னால் செய்யலாவது ஒன்றுமில்லை என்றற்கு ''உய்வித்தால் உய்வேன் நைவேனல்லது இங்கு என் செய்வேன்'' என்றும், இவ்வடைக் கலத்தை முன்பே செய்யாமல் பன்னாளை வீண் போக்கினேமே என எண்ணி வருந்துகின்றே னென் பாராய், ''அந்தோ எண்ணி நலிவேனே'' என்றும் சொல்லிப் புலம்புகிறார்.

இதனால், செய்த குற்றம் நினைந்து எடுத்துரைத்து உய்தி நல்குக எனச் சிவன்பால் முறையிட்டவாறும். (6)

2669. எண்ணி நலிவேன் நின்பாதம்
எந்நாள் அடைவோம் எனஎன்பால்
நண்ணி நலிவைத் தவிராயேல்
என்செய் திடுவேன் நாயகனே
கண்ணி நலியப் படும்பறவைக்
கால்போல் மனக்கால் கட்டுண்ணப்
பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம்
புகுத எனினும் பரிந்தருளே.

உரை :— தலைவனே, நின் திருவடியை அடையும் நாள் எந்த நாள் என நினைந்து, வருந்துகின்றேன்; எனது வருத்தத்தை என்பாற் போந்து போக்கா விடின், என்னால் யாது செய்ய முடியும்; வலை பிணிப் பதால் நோயுறும் ஒரு பறவையின் கால்களைப் போல, என் மனமாகிய காலைப் பிணித்து, நற்பண்பமைந்த நின்னுடைய அடியாரது திருக் கூட்டத்திற் புகுவிப்பது திருக்குறிப்பாயினும் எனக்கு அதனை அன்புடன் அருளுக. எ.று.

நினது திருவடி ஞானம் பெறுவது எப்போ தென நாளும் நினைந்து நினைந்து மனநலிவுற்று வருந்துகிறேன் என்பாராய், ''நின் பாதம் எப்போதடைவோம் என எண்ணி நலிவேன்'' என உரைக்கின்றார். திருவடி ஞானம், ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'' (ஞானசம்.) எனச் சேக்கிழார் பெருமான் தெரிவிப்பது காண்க. திரு வடிப் பேறு எய்துவது எப்போது என்ற நினைவு பன்னாளும் 'நினைந்துருகு வார்க்கு உளதாவதாகலின், வடலூர் வள்ளலார் திருவடியையே பெரிதும் நாடியிருக்கின்றமை தெரிகிறது. அதனை இடங் கண்டு சென்றடையும் இயல்பு மண்ணவர்க்கு இல்லையாகலின், சிவன் தானே வந்து காட்டி

யருளல் வேண்டுமாதலின், ''என்பால் நண்ணித் தவிராயேல்'' எனவும், தனது மாட்டமை விளங்க, ''என் செய்திடுவேன்'' எனவும் கூறுகின்றார். கண்ணி - பறவை வேட்டுவன் பரப்பும் வலை. உண்மையறியாமல் பறவைகள் உட்காருமிடத்து அவற்றின் கால்கள் சிக்கிப் பிணிப்புண்பது பற்றிக் ''கண்ணி நலியப்படும் பறவைக் கால் போல்'' எனக் காட்டு கின்றார். மனக்கால் - மன நினைவு. மனக்காலைக் கட்டுதலாவது - ஈண்டு மனத்தை ஒருமைப்படுத்தல். மனமாகிய கரணமும் நினைத்தல் முதலிய செயலைச் செய்வது திருவரு ளாணையாதலால், மனத்தை ஒருமைப்படுத்துவதையும் நீயே செய்தல் வேண்டும் என்பார், ''கட்டுண்ணப்பண்ணி'' என்றும், திருவடி ஞானத்தை எய்துவித்து மனத் தின்கண் நிலைபெற வைப்பது அடியவர் திருக்கூட்ட மாதலின், ''நலம் சேர் திருக்கூட்டம் புகுத வெனினும் புரிந்தருள்'' என்றும் புகன்றுரைக் கின்றார். திருவடிப் பேறு எய்துவிக்கும் இயல்புடைமை கண்டே ''நலஞ்சேர் திருக்கூட்டம்'' எனச் சிறப்பிக்கின்றார். பரிதல் - அன்பு செய்தல்; பரிந்து பேசுகின்றான் என்பது போல.

இதனால், மன நலிவைப் போக்கி, அடியார் திருக்கூட்டத்திற் சேர்த் தருள்க என வேண்டியவாறும். (7)

2670. பரியும் மனத்தால் கருணைநடம்
பரவுந் தொண்டர் பதப்பணியே
புரியும் இனத்தா ரொடுங்கூடிப்
புனித னாக வேண்டும்எனத்
திரியும் அடிமைச் சிறியேனுக்
கிரங்கா திருந்தால் சின்னாட்பின்
எரியுங் கொடுவாய் நரகத்துக்
கென்செய் வேன்என் செய்வனே.

உரை :— நினது அருட் டிருக்கூத்தைக் கண்டு, அன்பு புரியும் மனத்துடன் போற்றித் துதிக்கும் தொண்டர்களின் திருவடிக்குப் பணி செய்யும் அடியார் கூட்டத்தோடு கூடித் தூயனாக வேண்டுமென்று அலையும் அடிமைச் செயலுடைய சிறியவனாகிய எனக்கு, அருளாம லிருப்பாயேல், சின்னாட்களில் எரி கக்குகின்ற கொடிய இடமாகிய நரகம் புக வேண்டி வருமே, இதற்கு என்ன செய்வேன். எ.று.

சிவபெருமானது கூத்தாடும் கோலத்தில் ஐந்தொழிற் குறிப்புக்கள் உள்ளனவெனச் சான்றோர் கூறுதலால், அதனைக் ''கருணை நடம்'' எனக் கூறுகின்றார். அன்புள்ளத்துடன் பணிந்தேத்தும் சிவத்தொண்டர்களைப் ''பரியும் மனத்தால் கருணை நடம் பரவும் தொண்டர்'' எனப் பாராட்டு கின்றார். அப்பெருமக்களைச் சிவ மென்றே கருதி வழிபடுவதும், சிவப்பணி யாம் எனப் பெரியோர் அறிவுறுத்தலால், ''தொண்டர் பதப் பணி'' என்று உரைக்கின்றார். ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே'' (சிவ. ஞா. போ) என மெய்கண்டார் அறிவுறுப் பது காண்க. தொண்டர் பதப்பணி செய்யும் அடியவர் கூட்டம் சிவ நினைவும் திருவடித் தொண்டும் கொண்டுள்ளதால் அதனைச் சேர்ந்தவரும்

அவற்றையே செய்து வினை மாசு நீங்கித் தூயராய்ச் சிவபோகத்துக் குரியராதலால், "பதப் பணியே புரியும் இனத்தாரொடுங் கூடிப் புனிதனாக வேண்டுமெனத் திரியும் அடிமை" எனத் தம்மைக் குறிக் கின்றார். விண்டொழிந்தன நம்முடை வல்வினை......வலஞ்சுழி யிடமாகக் கொண்ட நாதன் மெய்த்தொழில் புரிதொண்டரோடு இனிதிருந்தமை யாலே" (வலஞ்) எனத் திருஞானசம்பந்தர் உரைப்பது காண்க. பதப் பணி - திருவடி வழிபாடு. மெய்த்தொண்டரைக் கண்டு பரவுவது எளிய செயலன்மையின், "திரியும் அடிமைச் சிறியேன்" எனவும், அதனைச் சிறிதே புரிகின்றமை தோன்றச் "சிறியேன்" எனவும், புரிதற்கேற்ற வாய்ப்பு எய்தாவிடின் பாவவிருள் சூழ்ந்து கொடிய நரகத்தில் வீழ்த்து மென அஞ்சுகின்றாராகலின், "இரங்கா திருந்தால் சின்னாட் பின் எரியும் கொடுவாய் நரகத்துக் கென்செய்வேன் என்செய்வேனே" எனவும் இயம்புகின்றார். வாழ்வு நெடுநாள் நிலவுவ தன்மை பற்றி, "சின்னாள்" என்றும், நரகத்தின் கொடுமை காட்டற்கு "எரியும் கொடுவாய் நரகம்" என்றும், விலக்கருமை நினைந்து "என் செய்வேன் என் செய்வேன்" என்றும் உரைக்கின்றார்.

இதனால் தொண்டரொடு கூடித் தொண்டாற்றுவது சிவ போகத்துக் குரிய மனத் தூய்மையைச் செய்யுமென விளம்பியவாறும். (8)

2671. **என்செய் திடுவேன் புலைநாயேன்**
இயற்றும் பிழைகள் எல்லாம்நின்
பொன்செய் மலர்த்தாள் துணைஅந்தோ
பொறுத்துக் கருணை புரியாதேல்
புன்செய் விளவிப் பயனிலியாய்ப்
புறத்திற் கிடத்தி எனஅடியார்
வன்செய் உரையில் சிரிப்பார்மற்
றதுகண் டெங்ஙன் வாழ்வேனே.

உரை :— புலைத் தன்மையையுடைய நாயின் இயல்பினேனாகிய யான் செய்யும் பிழைகள், எல்லாவற்றையும் நினது அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகள் பொறுத்தாற்றி அருள் செய்யாவிடின், புன்செய் நிலத்தை யுழுது பயனின்றிக் கெட்ட உழவனைப் புறத்தே நில்லென ஒதுக்குவது போல, வன்சொற்களைப் பேசி நின்னடியார்கள் என்னை இகழ்ந்து நகைப்பார்களாயின், அது கண்டு நான் எவ்வாறு வாழ்வேன்; என்ன செய்வேன். எ.று.

புலைநாய் - புலைத்தன்மை பொருந்திய நாய். புலை இயல்புடைய நாய் புலைப் பொருளை யுண்டு புலைநாறிக் கண்டாரால் வெறுக்கப்படுவது போலும் நிலையிலுள்ளவனாதலின், என் செயல் பலவும் குற்றமே யுடையவையாம் என்பது கருத்து. வேறு எவராலும் பொறுக்கப் படாதவையாதலின் திருவருளே அதனைச் செய்தல் வேண்டு மென்பார், "மலர்த்தாள் துணை பொறுத்துக் கருணை புரியாதேல்" எனப் புகல்கின்றார். பொன் - அழகு; நிறமுமாம். தாள் துணை - இரண்டாகிய திருவடி. இறைவன் செயலை அவன் திருவடி மேல் ஏற்றிக் கூறுவதால், "தாள் பொறுத்துக் கருணை

புரியாதேல்'' என்று கூறுகிருர். திருவருளைக் கருணை என்கிருர். பொறுத்தற் குரியதும் பொறுப்பதுமாகிய திருவடி பொறுத்துக் கொள்ளாமல் ஒழியாது; பொருதாயின் என்ற நினைவு தோன்றியதும் உள்ளம் கலக்கமுற்றுத் துன்பத்தால் துடிக்கின்றமை புலப்பட ''அந்தோ'' எனக் கதறுகின்ருர். அருட் செல்வர்களாகிய அடியவர் களால் புறக்கணித்து ஒதுக்கப்படுவோமே என்று அஞ்சுகிருர். புறக் கணிக்கப்படும் நிலைமையை மனக்கண்ணுல் நோக்குபவர், ''புன் செய் விளைவிப் பயனிலியாய்'' எனப் பகர்கின்ருர். விளவுதல், உழுதல். இக் கருத்தையே, ''பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்கு (குலாப்) என மணிவாசகர் கூறுவது காண்க. விளாவுதல் விளா எனவும் வழங்கும். ''நுகமின்றி விளாக் கைத்து'' (அதிசயம்) என்று திருவாசகம் ஓதுவது காண்க. வன்செய்யுரை - வன்சொற் சொல்லுதல்; கேட்டார் மனம் புண்படும் சொல்லாம். மென்மையான மனமுடையவனுதலால், அவர் சொற்களைக் கேட்கவும் சிரிப்பைக் காணவும் பொருமல் இறந்து படுவேன் என்பார், ''வன் செய் யுரையில் சிரிப்பார்மற் றெங்ஙன் வாழ் வேன்'' என்று வருந்துகிருர்.

இதனுல், நீ அருளாயாயின் அடியார் இகழ்ந்து சிரிப்பர்; அது காணப் பொருது இறந்துபடுவே னென விண்ணப்பித்தவாரும். (9)

2672. வாழா மனத்தின் வழிசென்று
வாளா நாளைக் கழிக்கின்ற
பாழாம் உலகச் சிறுநடையில்
பாவி யேனைப் பதிவித்தாய்
ஊழாம் எனில்எம் பெருமானே
இன்னும் வினையால் ஓதிஅனையேன்
ஏழாம் நரகுக் காளாவேன்
அல்லால் புகல்என் எளியேற்கே.

உரை :— எம்பெருமானே, நெறிக்கண் நின்று வாழ்தலில்லாத மனத்தின் வழிச் சென்று வீணிற் கழிக்கின்ற, பாழ்த்த உலகியற் சிறுநடை யுடைய, மண்ணுலகில் வாழ்ந் தொழியுமாறு என்னை நிறுத்தி விட்டாய்; இதற்குக் காரணம் எனது ஊழ்வினையாயின், இன்னமும் பெருகவிருக்கும் வினைகளால் எளியனுகிய யான் ஏழாம் நரகுக்கு ஆளாவதல்லது ஓதி மரம் போன்ற எனக்கு வேறு புகலிடம் இல்லையாம். எ.று.

அற நெறிக்கண் நின்று வாழாமை கண்டு ''வாழா மனம்'' எனக் கூறுகின்ருர். ''வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே'' (சதக) என்பது திருவாசகம். மனம் போன போக்கில் நாட்கள் பயன்படாமல் வினை பெருகுதற்கே இடமாமாறு உலகியல் வாழ்வு கொண்டு செலுத்துவதை நினைந்து, ''மனத்தின் வழிச் சென்று வாளா நாளைக் கழிக்கின்ற பாழாம் உலகச் சிறுநடை'' என வுரைக்கின்ருர். நன்னெறி பற்றி வாழ மாட்டாத மனம் தான் இயலும் வழிச் செல்ல உலகியல் நடையும் இன்ப நெறி நோக்காமல் துன்ப நிலைக்கே உய்ப்பது பற்றிப் ''பாழாம் உலக

நடை'' எனவும், வற்று இன்பப் பெருமை நல்காமல் சிறுமையே எய்துவிக்கும் இயல்பு பற்றிச் ''சிறு நடை'' யெனவும் சிறப்பிக்கின்ருர். மனத்தை நெறிக்கண் ணிறுத்தும் வன்மை யின்றி, உலக நடையின் சிறுமை நோக்காமல் வினைகளையே ஈட்டுவதால் தம்மைப் ''பாவியேன்'' என்றும், பிறப் பிறப்புக்களைச் செய்து உலகிலே உழலுவதாக எண்ணிப் ''பதிவித்தாய்'' என மொழிகின்ருர். பதிவித்தல் - நிலைப்பித்தல். இதற்குக் காரணம் முன்னமே செய்யப் பெற்றுப் பயன் ஊழ்த்து நிற்கும், வினை என அறிவு நூல் தெரிவித்தலின், ''ஊழாம் எனில்'' எனவும், ஊழ்வினையையும், வினை செய்தே நுகர வேண்டுமாதலால் வினையே பெருக்கி நரகம் புகும் நிலைமைய ளுவேனேயன்றி வேறு கதியில்லை யாகுமே என வருந்துகின்றமை தோன்ற, ''இன்னும் வினையால் ஏழாம் நரகுக் காளாவேனல்லால் புகல் என்'' எனச் சொல்லுகின்ருர். ஏழாம் நரகம், ஆபாசம், பாதாளம், நிதலம், கபத்திமான், மாதலம், இராசாங்கம், பாதலம் என்பனவாம். ஓதியனையேன் - உள்ளீடு வலியில்லாத ஒதி மரம் போல்பவன்.

இதனுல் ஊழ்வினையும் வினை பெருக்கி நுகரப்படுவதாய் நரகத்துக்கு உய்ப்பதென முறையிட்டவாரும். (*10*)

2673. எளியேன் கருணைத் திருநடஞ்செய்
இணைத்தாள் மலர்கண் டிதயமெலாம்
களியேன் கருங்கற் பாறைஎனக்
கிடக்கின் றேன்இக் கடையேனை
அளியே பெருக ஆளுதியோ
ஆள்கி லாயோ யாதொன்றும்
தெளியேன் அந்தோ அந்தோஎன்
செய்வேன் விலங்கிற் சிறியேனே.

உரை :— பெருமானே, எளியவனுகிய யான் திருவருட் கூத்தினைப் புரியும் மலர் போலும் உன்னுடைய இரண்டாகிய திருவடிகளைக் கண்டு, மனமெல்லாம் மகிழ்வதின்றிக் கருங் கற்பாறை போல் உலகிற் கிடக்கின்றேனுதலால், கடைப்பட்ட எனக்கு அருள்நலம் மிகுமாறு என்னை ஆள்வாயோ, மாட்டாயோ, ஒன்றும் தெளிவாகத் தெரியாமல், விலங்கினும் அறிவிற் சிறியனுதலால்யான். யாது செய்வேன். எ.று.

எளியேன் - எளிமைப் பண்புடைய யான். அருள் நெறிக் கூத்து எனற்குக் ''கருணைத் திருநடம்'' எனக் கூறுகின்ருர். மண்ணுலக வாழ்வின் நற்பயன் இறைவன் திருநடம் கண்டு இன்புறுவ தென்பவாகலின், ''திருநடம்செய் இணைத்தாள் மலர் கண்டு இதயமெலாம் களியேன்'' என்று சொல்லுகின்ருர். இதயம் - மனம். களித்தல் - இன்புறுதல். ''எடுத்த பொற்பாதம் காணப் பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' (திருவிருத்தம். கோயில்) என்பது காண்க. ''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று பணிந்தார்'' (தடுத். 107) என்பதும் காண்க. உணர்வும் இளகும் பண்பும் இல்லாமையில் ''கருங்கற் பாறையெனக் கிடக்கின்றே'' னெனவும்,

அதனல் மக்களிற் கடையாயினவ ஞயினே என்றற்குக் "கடையேன்" எனவும் இயம்புகிருர். அளி, அருள் நலம். அருள் செய்து ஆளப் படாவிடில் எய்தும் துன்பத்தை நினைந்து வருந்துகின்ருராதலால் "அந்தோ அந்தோ என்செய்வேன்" எனப் புலம்புகின்ருர்.

இதனல் திருநடம் கண்டு களிக்கும் பேறு பெற என்னை ஆண்டருள்க என முறையிட்டவாரும். பாறை போற் கிடப்பது அபராதம். (11)

2674. சிறியேன் பிழையைத் திருஉளத்தே
தேர்ந்திங் கென்னைச் சீறுதியோ
எறியேம் எனக்கொன் டிரங்குதியோ
இவ்வா றவ்வா றெனஒன்றும்
அறியேன் அவலக் கடல்அழுந்தி
அந்தோ அழுங்கி அயர்கின்றேன்
பிறியேன் என்னைப் பிரிக்கினும்பின்
துணையும் காணேன் பெருமானே.

உரை: சிவபெருமானே, சிறுமை யுடையவனுகிய என்னுடைய பிழைகளை மனத்திற் கொண்டு, ஆராய்ந்து என்னை வெறுக்கின்ருயோ; விலக்குதல் கூடா தென இரக்கம் கொள்கின்ருயோ; இப்படி அப்படி என்றும் ஒன்றும் விளங்காதவனுய் வருத்தமாகிய கடலில் மூழ்கி, ஐயோ, பெரிதும் அழுங்கித் துயர்கின்றேன்; எனினும் உன்னைவிட்டு நீங்க மாட்டேன்; நீக்கினுலும் போக மாட்டேன்; வேறு துணை யாவரும் எனக் கில்லை. எ.று.

பிழைகளை யெடுத் துரைக்கின்ருராதலால், அவற்றிற் கேதுவாகிய சிறுமைக் குணஞ் செயல்களையுடையவன் என்றற்குச் "சிறியேன்" என்று தம்மைக் குறிக்கின்ருர். பிழை மிகுதி கண்டு மனத்தால் ஆராய்ந்து இவன் கொள்ளத் தகாதவனெனத் துணிந்து சினமுற்று வெறுத்து ஒதுக்கிவிட நினைக்கிருயோ, அல்லது பொறுக்கத் தக்கவையென்று கொண்டு என்னை அடியவனுகக் கொண்டருள எண்ணுகின்ருயோ என நினைந்து, "பிழையைத் திருவுளத்தே தேர்ந்து என்னைச் சீறுதியோ எறியேம் எனக் கொண்டு இரங்குதியோ" என்றும், ஒருதலையாகத் துணிந்து கொள்ள மாட்டாமை புலப்பட "இவ்வாறு அவ்வாறு ஒன்றும் அறியேன்" என்றும் சொல்லுகிருர். இவ்வாறு, குணங்கள் இத்தன்மை யனவாதலால் கொள்ளத் தக்கவன்; அவ்வாறு, அல்லாதவன். எறிதல் - விலக்குதல், ஒருதலையாகத் தெளிய மாட்டாமையால் நெஞ்சு கலங்கி யலமருமாறு விளங்க, "அவலக் கடல் அழுங்கி" யெனவும், இதனல் மனம் புண்ணுற்று மெலிவது புலப்பட, "அந்தோ அழுங்கி யயர்கின்றேன்" எனவுமுரைக்கின்ருர். அடிமையாகுக எனக்கொள்ளாமல் நீக்கினும் யான் நீங்க மாட்டேன் என்பார், "பிறியேன் என்னைப் பிரிக்கினும்" என்றும், பிரிக்கப் பிரிவது முறையாயினும், வேறு துணையில்லாமை காரணம் என்றற்குப் "பின் துணையும் காணேன்" என்றும் கூறுகின்ருர். எதுகை நோக்கி இடையினம் வல்லினமாயிற்று. அவலக் கடல் - துன்பமாகிய

கடல். ''அவலக் கடலாய வெள்ளம்'' என்பது திருவாசகம். அழுங்குதல் - வருந்துதல்.

இதனுல், பிழை நோக்கி என்னை வெறுத்து நோக்கிப் புறம் போகத்தள்ளினும் போக மாட்டே னென விண்ணப்பித்தவாறும். (12)

2675. காணேன் நினது திருஅருளைக்
கண்டார் தமது கழல்தலைமேல்
பூணேன் உலகச் சிறுநடையில்
போந்து பொய்யே புகன்றந்தோ
வீணே சுழன்று மெலிகின்றேன்
என்னே இன்னல் மிகச்சுமக்கும்
தூணே எனஇங் கெனைவிதித்தாய்
எந்தாய் யாது சூழ்வேனே.

உரை: எந்தையே, நின்னுடைய திருவருள் கைவரப் பெற்ற பெருமக்களைக் கண்டிலேனுதலால் அவர்களுடைய திருவடிகளை என் தலை கொள்ளுமாறு வணங்கிற்றில்லேன்; உலகியல் வாழ்வாகிய சிற்றெழுக்கத்திற் புகுந்து பொய்களையே மொழிந்து வீணேயலைந்து மெலிகின்றேன்; துன்பச் சுமைகளைத் தாங்கும் தூண் போலாக என்னை இவ்வுலகில் இருப்பித்தாய்; இதனை என்னென்பது? எதனை நினைப்பேன். எ.று.

திருவருளைக் காண்பதென்பது, திருவருளை நிறையப் பெற்ற பெருமக்களைக் கண்டு இன்புறுவதாகும்; அவர்களை இதுவரையும் தேடிக் கண்டிலேன் என்பார், ''நினது திருவருளைக் கண்டார்'' எனவுரைக்கின்ருர். திருவருள் ஞானிகளைக் கண்டாலும் இப்பெற்றிய ரெனத் தெளியாமல், அவர் திருவடிகளைத் தலையால் வணங்கி வழிபடா தொழிந்தேன் என்பாராய், ''கண்டார் தமது கழல் தலைமேற் பூணேன்'' என்று கூறுகின்ருர். கழல் - திருவடி; ஆகு பெயர். சிறுநடை - சிறுமை பயக்கும் பொய்யொழுக்கம். உலகில் வயிறு வளர்த்தலொன்றையே குறியாகக் கொண்டொழுகும் திறமும் ''உலகச் சிறுநடை'' எனப்படும். சிறுநடை - சிற்றெழுக்கம். சிறுமை இன்னதென்பது விளங்குதற் கென்றே, ''பொய்யே புகன்று வீணே சுழன்று மெலிகின்றேன்'' என விளிம்புகிருர். சுழலுதல் - அலைந்து வருந்துதல். வாழ்வில் துன்பமே நிறைந்திருத்தலால், ''இன்னல் மிகச் சுமக்கும் தூணே'' எனத் தம்மை நினைக்கின்ருர். இத்தகைய தோர் நிலை உளதானமையை யெண்ணி வியந்து, ''என்னே'' எனவும், துன்பம் உழத்தல் வேண்டுமெனக் கருதியே என்னைப் படைத்து இருக்கச் செய்கின்ருய் போலும் என மனநோய் உறுகின்றது தோன்ற, ''எனை விதித்தாய்'' எனவும், இத் துன்பத்தினின்றும் உய்தற்கு வேறே வழியறிய மாட்டேனுயினேன் என்றற்கு ''யாது சூழ்வேன்'' எனவும் உரைக்கின்ருர். சூழ்தல் - எண்ணுதல்.

இதனுல், உலக வாழ்வில் துன்பம் சுமக்கும் தூணுக நிற்பதல்லது உய்தி காண்பவனுக என்னைக் கருத முடியவில்லை எனத் தெரிவித்தவாறும். (13)

2676. சூழ்வேன் நினது கருணைநடம்
சூழும் பெரியார் தமைச்சூழ்ந்து
வாழ்வேன் எளியேன் குறிப்பிந்த
வண்ணம் எனது மனக்குரங்கோ
தாழ்வேன் நினையும் தாழ்விப்பேன்
அவலக் கடலில் சலியாமே
வீழ்வேன் என்றால் எம்பெருமான்
இதற்கென் செய்கேன் வினையேனே.

உரை : எங்கள் பெருமானே, நின்னுடைய அருட் கூத்தையே நினைப்பவனாகிய யான், அத்திருக்கூத்தையே நினைந்தொழுகும் பெரியோர் கூட்டத்தையே சார்ந்து வாழ்வேன்; எளியனாகிய யான் கருது மாறே என் மனக்குரங்கு நினைந் தொழுகுவதை விடுத்து, என்னைத் தாழ் விப்பதையே நினைத்துக் கொண்டு, "உன்னைத் துன்பக் கடலில் மூழ்கு விப்பதோடு சலிப்புறாமல் யானும் அதனுள் வீழ்ந்தொழிவேன்" என்று சொல்லுமாயின், இதற்கு யான் என்ன செய்வேன், அருள் புரிக. எ.று.

எடுத்த எடுப்பில் தமது உட்கோளைக் கூறலுறும் வடலூர் வள்ளல், யான் நின்னுடைய திருவருட் கூத்தையே நினைந்தொழுகும் செயலுடைய வன் என்பார், "சூழ்வேன் நினது கருணைநடம்" என்றும், இவ்வாறே நினையும் பெரியோர்களின் திருக்கூட்டத்தையே சேர்ந்து இருப்பவன் என்பார், "சூழும் பெரியார்தமைச் சூழ்ந்து வாழ்வேன்" என்றும் உரைக் கின்றார். சூழ்தல் - நினைத்தல். ஆன்மாக்கள் மலவிருளிலிருந்து நீங்குதற் பொருட்டு ஞான சபையில் திருக்கூத்து நிகழ்கின்ற நலம் பற்றி அதனைக் "கருணைநடம்" எனக் குறிக்கின்றார். "மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலம் சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால், ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல், தான் எந்தையார் பரதம்தான்" (உண். விளக்) எனத் திருவதிகை மனவாசகம் கடந்தார் உரைப்பது காண்க. தம்மைப் போலவே இறைவன் திருக்கூத்தை நினைந்து பராவு வோர் தமக்கு இனமாதலின், அவர் கூட்டத்தையே சார்ந்தொழுகுவது முறையாதல் விளங்க, "சூழும் பெரியோர்தமைச் சூழ்ந்து வாழ்வேன்" என இசைக்கின்றார். எனினும், யான் மனத்தை யடக்கி யாளும் வலியில் லேன் என்பாராய் "எளியேன்" எனக் கூறுகிறார். குரங்கின் இயல்புடைய தாதலால் மனத்தை "மனக்குரங்கு" என்கிறார். அவ்வியல்பினால், கீழ்மை யுறுவிக்கும் எண்ணங்களையே கொண்டு கீழ்மைப்படுவேன்; என்னைப் போலவே நின்னையும் கீழ்மையுறுவிப்பேன் என வுரைக்கின்ற தென்பார், "தாழ்வேன்; நினையும் தாழ்விப்பேன்" என்று கூறுவதுடன், கீழ்மைச் செயல் துன்பத்தில் ஆழ்த்துமே யெனின் கேளாமல், அதற்குச் சலிப் புறாமல் துன்பக் கடலில் வீழ்வே னெனப் பிடிவாதம் செய்கிற தென்பாராய், "சலியாமே அவலக் கடலில் வீழ்வேன் என்றால்" எனக் கூறுகின்றார். எளிமைத் தன்மையால் மனக்குரங்கை அடக்க வியலாத யான் என்செய்வேன் எனக் கையறவு படுமாறு விளங்க, "இதற்கு என் செய்வேன்" எனவும், முன்னை வினைப்பயன் என்னை எளிமையனாக்கி விட்ட தென்பார். "வினையேன்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், திருவருட் கூத்தை யான் நயப்பேனாயினும் மனம் என் வழி நிற்காமைக்கு என்ன செய்வேன் என முறையிட்டவாறும். (14)

2677. வினையே பெருக்கிக் கடைநாயேன்
விடயச் செருக்கால் மிகநீண்ட
பனையே எனநின் றுலர்கின்றேன்
பாவி யேனுக் கருளுதியோ
நினையே நினையாப் பிழைகருதி
நெகிழ விடவே நினைதியோ
அனையே அனையாய் திருக்குறிப்பை
அறியேன் ஈதென் றடியேனே.

உரை : தாய் போன்ற பெருமானே, வினைகளை மிகவும் செய்து புலன்களின் ஆசை மயக்கத்தால், கடைப்பட்ட நாய் போன்ற யான் மிகவும் உயர்ந்த பனை மரம் போல வளர்ந்து கெடுகின்றேன்; பாவியாகிய எனக்கு அருள் செய்வாயோ, உன்னையே நினையா தொழிந்த குற்றம் பற்றி என்னைக் கைவிடுவாயோ, உனது திருவுள்ளம் இதுவாம் என்று அறிகிலேன். எ. று.

எவ்வுயிர்க்கும் இன்னருள் புரிவதில் தாய் போன்றவ னென்பது உணர்ந்து பரவுதலால், "அனையே அனையாய்" என்று கூறுகிருர். "அன்னையையும் அத்தனையும் போல அன்பாய் அடைந்தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக் கொண்ட தென்னெறும்பியூர் மலைமேல் மாணிக்கம்" என நாவுக்கரசரும், "அன்னை யொப்பாய் எனக் கத்த னொப்பாய் என்னரும் பொருளே" (நீத்தல்) என மணிவாசகரும் ஓதுவ தறிக. கடை நாயேன் - கீழ்மை யுற்ற நாயின் தன்மையுடைய யான். திருவருட் பேற்றுக் குரிய நலமுடையனுதலின்றித் துன்பத்துக் கேது வாகிய வினைவகைகளையே மிகவும் செய்துள்ளே னென்றற்கு, "வினையே பெருக்கி" என்றும், புலன்கள் ஐந்தின் மேற் செல்லும் ஆசைகள் விளைவிக் கும் மயக்கத்தில் வீழ்ந்து நெடிய பனை மரம் போல் நின்று கெடுகிறேன் என்பாராய், "விடயச் செருக்கால் மிக நீண்ட பனையே என நின்று உலர் கின்றேன்" என்றும் இயம்புகிருர். உலர்தல் - ஈரமற்றுக் கெடுதல் - விடயம் - புலன்கள் மேற்செல்லும் ஆசை. செருக்கு - ஈண்டு மயக்கத்தின் மேற்று. மிக்க வினை பாவமெனப்படுதலால் அதனை யுடைமை பற்றித் தம் மைப் "பாவியேன்" என்கின்ருர். பாவம் செய்தவரை எவரும் கண்டு இரக்கப் படாராதலால், "பாவியேனுக் கருளுதியோ" என உரைக்கின்ருர். நின் திருவருட் பேற்றுக்கு உரியவர், நின்னையன்றிப் பிறர் எத்தேவரையும் பொருளாக எண்ணி மனத்தால் நினையாதவர்; யான் அத்தகைய ஒருமைப் பண்பும் செயலு முடையவ னல்லனுதலால், எனக்கு அருளுவது தகவாகாது எனக் கைவிட்டு விடுவாயோ என்பார், "நினையே நினையாப் பிழை கருதி நெகிழ விடுவா யோ" என்றும், நினது திருவுள்ளக் கருத்து இன்னதென உணரவல்ல வனல்லன் என்பாராய், "அறியேன் திருக்குறிப்பை ஈது என்று அடியேனே" என்றும் இசைக்கின்ருர்.

இதனுல், நினையே நினையாப் பிழையால் நின் திருக்குறிப்பை அடியேன் அறியகில்லேன் என முறையிட்டவாறும். (15)

2678. அடியேன் முடுகிச் செயும்பிழைகள்
அனந்தம் அவற்றை அந்தோஇக்
கொடியேன் நினைக்குந் தொறும் உள்ளம்
குமைந்து நடுங்கிக் குலைகின்றேன்
செடியேன் மனமோ வினையோநின்
செயலோ செய்கை தெரியேன்வெண்
பொடியே திகழும் வடிவுடையாய்
யாது புரிவேன் புலையேனே.

உரை : வெண்ணிறத் திருநீறு விளங்கும் திருமேனியையுடைய சிவபரம்பொருளே, புலைத் தன்மையை யுடைய அடியவனாகிய யான் முற்பட்டுச் செய்த குற்றங்கள் முடிவில்லாதவை யாதலின் அவற்றை மனத்தின்கண் நினைக்கும் தோறும் குழைந்து உடல் நடுங்கி வருந்து கின்றேன்; குற்றமும் கொடுமையும் உடைய என் மனமோ, எனது தீவினையோ, நின்னுடைய அருட்செயலோ, காரணம் அறிகிலேன்; இதற்கு யான் யாது செய்வது. எ.று.

வடலூர் வள்ளல் தம்மை நோக்கும் போதெல்லாம் தாம் செய்துள்ள குற்றங்கள் நினைவில் தோன்றி வருத்துவதாலும், குற்றங்களின் மிகுதியும் கொடுமையும் மிகப் பெரியவாய் மனக்கண்ணிற் புலனாவதாலும் தம்மைக் "கொடியேன்", "செடியேன்", "புலையேன்" என இழித் துரைக்கின்றார். செடி - குற்றம் - குற்றங்கள் கீழ்மைப் படுத்துவதால் "புலையேன்" என்று புகல்கின்றார். குற்றங்கள் சிறியவும் பெரியவுமாய் மிகப் பலவாய் அளவுக் கடங்காமற் பெருகித் தோன்றுவது பற்றியும் அவற்றை விரைந்து எழுச்சியுடனும் செய்தமை எண்ணி, "முடுகிச் செயும் பிழைகள் அனந்தம்" எனவும், தெள்ளிய அறிவுடைய பெருமானாதலால், அவற்றைச் செய்தற்குக் காரணம் காண முற்பட்டு, அது மனமாகலாமோ, முன்னை வினைப்பயனாகுமோ, திருவருள் தானோ என ஆராய்கின்றமை விளங்க, "மனமோ வினையோ நின் செயலோ செய்கை தெரியேன்" என்று செப்பு கின்றார். செய்கை - செய்தற்குக் காரணம். யாதானும் காரணம் பற்றியே வினையும் குற்றமும் செய்யப்படுவதால், இவ்வாறு ஆராய்கின்றார். மனம் மொழி மெய் யென்ற கரணங்களும், கண் முதலிய கருவிகளும் திருவருளின் இயக்கம் காரணமாகச் செயல் புரிகின்றன என மெய்ந் நூல்கள் ஓதுவதால், "நின் செயலோ" என எண்ணுகிறார். செயல் - ஈண்டுத் திருவருள் மேற்று. இந்நினைவுகளால் கையறவு படுவது விளங்க, "யாது புரிவேன் புலையேனே" எனப் புலம்புகிறார்.

இதனால், எய்தி வருந்தும் துன்பங்கட்குக் காரணம் தெரியாது கையறவு படுவது தெரிவித்தவாறும். (16)

2679. புலையே புரியும் மனம்போன
போக்கே அல்லால் புண்ணியநல்
நிலையே அறியேன் சிறியேனுக்
கருளல் அழகோ நிறைந்தகுண

மலையே மணியே மருந்தேஎன்
வாழ்வே எல்லாம் வல்லோனே
கலையே கருதும் கழலுடையாய்
அருளா மையும்நின் கடன்அன்றே.

உரை : குணமே நிறைந்த குன்று போல்பவனே, மணியே, மருந்தாய் நலம் செய்பவனே, எனக்கு வாழ்வானவனே, எல்லாம் வல்லவனே, கலையின் உருவே, யாவரும் நினைந்து மகிழும் திருவடிகளை யுடையவனே, புலைச் செயல்களைச் செய்யும் மனம் போன போக்கிற் போவதன்றி, புண்ணிய நன்னெறி நிற்கும் இயல்பறியாத சிறுமையுடைய எனக்கு அருள் செய்வது நினக்கு அழகாகாதோ? அருள் புரியாமை நினக்குக் கடன் அன்றன்றே. எ.று.

நற்குணங்களே நிறைந்த செம்மலை போல் விளங்குவது பற்றிச் சிவனை "நிறைந்த குணமலை" என்றும், மலையிடத்தே பெறப்படும் மாணிக்கமணி போல்வதால், "மணியே" என்றும், பிணி கெடுக்கும் மருந்து போலப் பிறவி நோயைப் போக்கும் ஞானமருந் தென்றற்கு "மருந்தே" என்றும் புகழ்கின்றார். இனிது வாழ்தற் கின்றியமையாத நல்லறிவும் ஒழுக்க நெறியும் நல்குவதால், "என் வாழ்வே" எனவும், வரம்பிலாற்றலுடையவன் என மெய்ந்நூல்கள் விளம்புவது பற்றி, "எல்லாம் வல்லோனே" எனவும், கலைகளும் மறைகளுமாகிய யாவையும் அவனுருவே யெனப் பெரியோர் மொழிதலால், "கலையே" எனவும் கட்டுரைக்கின்றார். "கலையவன் மறையவன் காற்றொடு தீ மலையவன்" (சிரபுரம்) என ஞான சம்பந்தர் நவில்வது காண்க. கல்லாரும் கற்றவரும் வல்லாரும் மாட்டாரும் ஆகிய எல்லாரும் பணிந்து பரவுவதால், "கருதும் கழலுடையாய்" எனக் கூறுகின்றார். புலாலுண்ணுதல், அதற்கேற்ப உயிர்களைக் கொல்லுதல் முதலிய நினைவும் செய்கையும் "புலை" எனப் பொதுப்படக் குறிக்கப்படுகின்றன. புலைச் செயற்குரிய நினைவுகளையேயுடைய தென்றற்கு மனத்தை, "புலையே புரியும் மனம்" எனவும், அது பாவமெனக் கருதாமல் அது செல்லும் நெறியிலேயே தன்னையுடையவனைக் கொண்டுய்த்தல் பற்றி, "மனம்போன போக்கே யல்லால்" எனவும் இயம்புகின்றார். அந்த மனத்தை அடக்கி நன்னெறிப் படுத்தி நல்வினைக் கண் செலுத்தி நிற்கும் நற்பண்பை, "புண்ணிய நன்னிலை" என்று குறிப்பிட்டு அந்நிலையில் அறிவுற்று நில்லாமல் சென்றலைந்து சிறுமையுற்றேன் என்பாராய், "நன்னிலையே யறியேன் சிறியேன்" என வுரைக்கின்றார். இத்தகைய எனக்கு நீ அருள் புரிவது, மறை முகத்தால் பாவ வினைகளை யூக்கி வளர்ப்பது போறலின், அழகாகாது என்றற்குச் "சிறியேனுக்கு அருளல் அழகோ" என்றும், அருளே உருவாகிய உனக்கு அருளாமை கடமையாகாது என்பார், "அருளாமையும் கடனன்று" என்றும் இசைக்கின்றார்.

இதனால், மனம் போன போக்கிற் செல்லும் எனக்கு அருளுதலும், அருளாமையும் முறைமை யல்ல வென விண்ணப்பித்தவாறும். (17)

2680. கடந்தாழ் கயம்போல் செருக்கிமயற்
கடலில் அழுத்திக் கடுவினையேன்
மடந்தாழ் மனததோ டுலைகின்றேன்
கரைகண் டேறும் வகைஅறியேன்

தொடர்ந்தார் எடுப்பார் எனையெடுக்கும்
துணைநின் மலர்த்தாள் துணைகண்டாய்
அடர்ந்தார் தமக்கும் அருள்கின்றோய்
ஆனை ஆனை அடியேனே.

உரை : பகைத்து மேல் வந்தோர்க்கு அருள் புரிகின்ற பரமசிவனே மதம் பொழியும் யானை போற் செருக்கிமயக்கமாகிய கடலில் ஆழ்ந்து வருந்தும் தீவினையையுடைய யான், அறியாமை நிறைந்த மனத்துடன் வருந்துகின்றேன்; துன்பக் கடலிலிருந்து கரையேறும் துறையாறியாமல் உள்ளேன்; என்னைப் பின் தொடர்ந்து வந்து கரையேற்றுவர் யாவருளர்; நின்னுடைய இரண்டாகிய மலர் போன்ற திருவடிகளே எனக்குத் துணையாகும். எ.று.

கடம் - மதம். கயம் - யானை. தாம் எய்தி வருந்தும் துன்பத்துக்குக் காரணம், செருக்கு, வெகுளி முதலிய குற்றங்களால் உண்டாகும் தீவினை கள் என்பாராய், "செருக்கி மயற் கடலில் அழுந்து இக்கடுவினையேன்" எனக் கூறுகின்றார். அழுந்து - அழுத்தென வலித்தது. இக் கடுவினையேன் என்ற சுட்டு, தம்மையே குறிக்கிறது. கடுவினை - மிக்கத் தீவினை. செருக்கினை மதம் என்பதும் உண்டு. செருக்கு முதலிய குற்றங்களைத் திருவள்ளுவர், செருக்கு - சினம், சிறுமை, இவறல், மானம், உவகை (431—2) என்பர். செருக்கு ஒன்றையே கூறினாராயினும் இனம் பற்றி ஏனையவும் எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லாத் தீவினைகட்கும் இவை காரணமாதலால், செருக்கி மயற் கடலில் அழுந்தும் இக்கொடியேன் என்று தம்மை எடுத்துரைக்கின்றார். இக் குற்றங்கள் மேற்படும்போது அறிவு மயங்கி வினை வகைகளில் தோய்ந்து தம்மை மறந்து கரை காணாத் துன்பத்தில் ஆழும் திறத்தை விளக்கு தற்குக் "கடம்தாழ் கயம் போல்" என்றும், "மடம்தாழ் மனத்தோடு உலை கின்றேனென்றும் கூறுகின்றார். உலைதல் - வருந்துதல். மயக்கத்தைக் கடல் என்றமையால், தெளிந்து நலம் பெறும் நிலையைக் கரையேறுதலாக வுரைக்க லுற்றுக் "கரையேறும் வகையறியேன்" என இசைக்கின்றார். என்பால் அன்பு கொண்டு என் பின்னே போந்து எடுத்தாள்பவர் எவரும் இல்லை; என்னைப் போல் துன்பத்தில் ஆழ்கின்றார்கள். என்றற் காகத் "தொடர்ந்து ஆர் எடுப்பார்" என இன்மை விளங்க இயம்புகிறார். துன்பக் கடலில் வீழ்ந்தார்க்குத் துணை புரிந்து உய்விப்பது உன் திருவடி களாகிய தெப்ப மல்லது வேறில்லை என்பாராய், "துணை நின் மலர்த்தாள் துணை கண்டாய்" எனச் சொல்லுகின்றார். துணை இரண்டனுள் முன்னது தெப்பம்; பின்னது இரண்டு என்று கொள்க.

இதனால் தீவினையால் துன்புறும் எனக்கு உன் திருவடிகளே துணை செய்வன என முறையிட்டவாறும். (18)

2681. அடியார் இன்பம் அடைகின்றார்
அடியேன் ஒருவன் அயர்கின்றேன்
படியார் பலரும் பலபேசிச்
சிரியா நின்றார் பரந்திரவும்

விடியா நின்ற தென்புரிவேன்
இன்னுங் கருணை விளைத்திலையே
கொடியார் பிழையும் குணமாகக்
கொண்டு மகிழும் குணக்குன்றே.

உரை :— கொடுமைப் பண்புடையார் செய்யும் குற்றங்களையும் குணமாகக் கொண்டருளும் குணமே யுருவாகிய குன்றம் போல்பவனே, உனக்கு அடியாராயினர் பலரும் இன்பம் நுகர்கின்றார்களாக, அடியவனான நான் ஒருவன் துன்பத்தால் வருந்துகிறேன்; நிலத்தவர் பலரும் பலவற்றைச் சொல்லி, நிலமெங்கும் பரவலாக நின்று, நகைக்கின்றார்கள்; இரவு முற்றும் இவற்றைக் கேட்குமாற்றால் எனக்குப் பொழுது விடிகிறது; நீ இன்னும் எனக்குக் கருணை செய்கிறா யில்லை; யான் யாது செய்வேன். எ.று.

அடியார் - சிவன் திருவடிகளைச் சிந்தையிலே எப்போதும் நினைந்து கொண்டிருப்பவர். யானும் நின் திருவடிகளை நினைக்கும் அடியனாயினும், நான் ஒருவனே துன்பத்திற் கிடந்து வருந்துகின்றேன் என்பாராய், "அடியார் இன்பம் அடைகின்றார்; அடியேன் ஒருவன் அயர்கின்றேன்" என வுரைக்கின்றார். யான் ஒருவன் எனவே, இன்புறும் அடியார் பலராம் - படியார். நிலவுலகத்து மக்கள். நான் இன்பமின்றிச் சோர்வது கண்டு, உலகினர் பலரும் ஆங்காங்கே பரந்து நின்று தம் மனத்தில் தோன்றியவற்றைப் பேசி, எள்ளி நகைக்கின்றார்கள் என்பாராய், "படியார் பலரும் பரந்து பல பேசிச் சிரியா நின்றார்" எனக் கூறுகிறார். பகற் போதில் பலரும் தத்தம் தொழில் மேற் செல்லுதலால், சிலரே பேசுகின்றா ரென்றாலும், இரவுப் போதில் எல்லோரும் பேசி நகைக்கின்றார்கள். யான் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே உறக்க மின்றி இரவைக் கழிக்கின்றேன் என்பார், "இரவும் விடியா நின்றது" எனக் குறைபடுகின்றார். ஒளி நிறைந்த பகற்கு இருள் திணிந்த இரவு மாறுபடினும் நாட் கூறு எனக் கருதி வெறுக்கப்படாதவாறு போல, துன்ப வியல்பினதாகிய குற்றத்தையும் குணக் கூறாகக் கொண்டு ஆள்கின்றாய்; யான் அவ்வாறின்றி வருந்துகிறேன் எனக் கூற "கொடியார் பிழையும் குணமாகக் கொண்டு மகிழும் குணக்குன்று" என்று போற்றி யுரைக்கின்றார். கொடுமைப் பண்பும் கோடிய செய்கையும் உடையவர், கொடியர். நல்லோர் குற்றங்களைக் குணமாகக் கொள்வது நினது இயல்பாயினும். தீயவர் குற்றங்களையும் குணமாகக் கொள்கின்றாய்; என்பால் அதனைச் செய்கின்றா யில்லையே என வருந்துகின்றாராதலால், கொடியார் பிழையும் எனக் கிளந்து மொழிகின்றார்; "இன்னும் கருணை விளைத்திலையே" என விளம்புகின்றார். விளைத்திலை, செயலால் இன்பம் தருகின்றாயில்லை. இந் நிலையில் யான் செய்வது ஒன்றும் இல்லை எனற்கு "என் புரிவேன்" என இயம்புகின்றார். புரிதல் - ஈண்டுச் செய்தற் பொருளது. "எவரும் மத்த மனத்தொடு மாலிவன் என்ன மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல் லிடவும், ஊரூர் திரிந்து எவரும் தத்தம் மனத்தன பேசவும், உடையான் அடியே நினைந்துருகி யான் சாவது எஞ்ஞான்று கொல்" (சதக) என்றும் பொருள்பட மணிவாசகர் உரைப்பது இங்கு நினைவில் தோன்றுவது காண்க. (19)

இதனால், நான் ஒருவனே பலரும் கண்டு இகழ்ந்து பேசத் துன்புறு கின்றேன்; அருள் செய்க என விண்ணப்பித்தவாறும். (19)

2682. குன்றா நிலைநின் றருள்அடைந்தார்
அன்பர் எல்லாம் கொடியேன்நான்
நன்றும் நெறிசென் றறியாதே
மனஞ்செல் வழியே நடக்கிறேன்
பொன்றா மணியே அவர்க்கருளி
என்னை விடுத்தல் புகன்றே
என்றால் எனக்கே நகைதோன்றும்
எந்தாய் உளத்துக் கொன்னுமே.

உரை:— கெடாத மாணிக்க மணி போன்ற சிவபரம் பொருளே, எந்தையே, குறையாத ஒழுக்க நெறியில் நின்று அன்பர் பலரும் உன் திருவருளைப் பெற்றார்கள்; கோடிய நெறி மேற்கொண்ட யான், நன்னெறிக் கண் செல்லாமல் மனம் போன நெறியிற் செல்கின்றேன்; அன்பரான ஞானிகட்குத் திருவருளைச் செய்து என்னைப் புறக்கணித்து விட்டது; அது நினக்குப் புகழாகாது என்பேனாயின், அப்படிச் சொல்வது எனக்கே சிரிப்பை யுண்டு பண்ணுகிற தெனின், உன் திருவுளத்துக்கு எப்படி யிருக்கும். எ.று.

பொன்றுதல்- கெடுதல். மணி- சிவந்த மாணிக்க மணி. நிறத்தாலும் ஒளியாலும் சிவன் திருமேனி மாணிக்க மணி போன்றதாயினும், நிலத்து மாணிக்கம் கெடும் இயல்பினதாகலின் அதனை விலக்கற்குப் "பொன்றா மணி" என்று புகல்கின்றார். அன்பு நெறி நின்று உயர்ந்த சிவபோகம் பெறும் நிலையைக் "குன்றா நிலை" எனக் குறிக்கின்றார். மேன்மே லுயர் வதன்றிக் குறைவ தில்லாமையால் சிவப் பேற்றைப் பெற்ற பெருமக்களை, "குன்றா நிலை நின்றார்" எனப் புகழ்ந்துரைக்கின்றார். "எல்லையில்லாப் புண்ணியம் தோன்றி மேன்மேல் வளர்வது" (கண்ணப்) என்று சேக் கிழார் உரைப்பர். அருள் - சிவஞானம் நல்கும் சிவபோகம். அன்பு நெறிக்கண் நின்றார் பெறுவ தென வலியுறுத்தற்கு "அன்ப ரெல்லாம்" என்கின்றார். "அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" (திருமந்தி) எனப் பெரியோர் உரைப்பது காண்க. கொடியேன்- நேர்மை யின்றிக் கோடிய நெறியிற் செல்லும் யான். கொடியவர்க்கு அமைவது அன்பும் அறமும் இல்லாத தீ நெறியாதலால், அதனை மேற் கொள்ளாமை விளங்க, "நன்றும் நெறி சென்று அறியாது" என்றும், அத் தீ நெறி இன்னது என்றற்கு "மனஞ் செல்வழி" என்றும் இயம்புகின்றார். அன்புடைய ஞானிகட்குச் செய்த சிவஞானத் திருவருளை எனக்குச் செய்யா தொழிதல் உனக்குப் புகழாகாது; என் போன்றார்க்குச் செய்வது புகழைக் கொடுக்கும் என்று சொல்லுவேனாயின், அச்சொல் முழுத்த பேதைமை யைக் காட்டுதலின், "அவர்க் கருளி என்னை விடுத்தல் புகழன்று என்றால் எனக்கே நகை தோன்றும்" என்று கூறுகின்றார். பேதைமை பொரு ளாக நகை தோன்றும் என்பர் தொல்காப்பியர். எனது இப்பேதைமைச் சொல், உன் திருவுளத்தில் வெறுப்பை விளைக்குமோ என்று அஞ்சுகிறேன் என்பாராய், "எந்தாய் உளத்துக்கு என்னுமோ" எனப் புகன்றுரைக் கின்றார்.

இதனால், மேற்கொண்டிருக்கும் கொடுமை நெறியை நினையாமல், நன்னெறி நின்றார் பெறும் நலம் கண்டு பொறுது, நகை மொழி பேசுகிறேன் என விண்ணப்பித்தவாறும். (20)

2683. என் ஆ ருயிருக் குயிர்அனையாய்
என்னைப் பொருளாய் எண்ணி மகிழ்ந்
தந்நாள் அடிமை கொண்டளித்தாய்
யார்க்கோ வந்த விருந்தெனவே
இந்நாள் இரங்கா திருக்கின்றாய்
எங்கே புகுவேன் என்புரிவேன்.
நின்னால் அன்றிப் பிறர்தம்மால்
வேண்டேன் என்றும் நின்மலனே.

உரை :— நின்மலனே, என் அரிய வுயிர்க்கு உயிர் போன்றவனே, அன்று என்னை அருட் பேற்றுக் குரியவனாகக் கருதி மனமகிழ்ச்சியுடன் என்னை ஆட்கொண் டருளினாயாயினும், இக் காலத்தில் யார்க்கோ வந்த விருந்தினன் போல எண்ணி என்பால் இரக்கங் காட்டி அருள்கின்றாயில்லை; யான் அருட் கொடை வேண்டி வேறே யாவரிடம் செல்வேன்; என்ன செய்வேன்; பிறரிடத்தே கிடைக்குமாயின் நின்னிடத்தே பெறலாவ தொன்றை யன்றி விரும்பேன், காண். எ.று.

தான் மலவிருளோடு கூடியதனால் மறைப்புண்டிருத்தல் பற்றி, இயல்பிலேயே அம்மலத் தொடர்பு இல்லாமை விளங்கச் சிவபரம் பொருளை "நின்மலனே" என்று போற்றுகிறார். உயிர்க்குள் உணர் வுருவாய்க் கலந்து நின்று உணர்த்தும் திருவருட் செயலினனாதலால், "உயிர்க் குயிரனையாய்" என்று பரவுகின்றார். உணர்வால் நிறைந்த உயிர்ப் பேறு எளிதில் பெறற் கரிதாகலின், "என் ஆருயிர்" எனச் சிறப்பிக்கின்றார். மலவிருளில் அழுந்திச் செயலற்றுக் கிடந்த மருட் கேவல நிலையை "அந்நாள்" எனவும், எண்ணிறந்தவற்றுள் ஒன்றாய்க் கிடந்த எனதுயிரைத் தேர்ந்து உலகுடல் கருவி கரணங்களிற் சேர்த் தமைக்குக் காரணம் யாதென்று ஆராய்ந்து, தன்னை ஒரு பொருளாக இறைவன் திருவுள்ளத்திற் கொண்டு தனது இன்னருள் செய்தருளினான் எனத் தெளிந்தமை புலப்பட, "என்னைப் பொருளாக யெண்ணி மகிழ்ந்து" எனவும் இயம்புகிறார். இருளில் கிடப்பார்க்கு ஒளி விளக்குப் போல உலகுடல் முதலியன ஒளியாய் உதவுதலின், "அடிமை கொண்டு" என்றும், மயங்குமிடத்து உணர்வு தருதலால் "அளித்தாய்" என்றும் இசைக்கின்றார். இந்நாள் என்றது சகலாவத்தையில் இருக்கும் கருவி கரணங்களுடன் கலந்திருக்கும் காலம். மலம் விளைவிக்கும் மறப்பு, மறைப்புகளால் தடுமாறுகின்ற பொழுது துன்புற விட்டு அருள் நல்கக் காலந் தாழ்க்கின்றமையால், 'யார்க்கோ வந்த விருந்தெனவே இரங்கா திருக்கின்றாய்" என்று கூறுகின்றார். யார்க்கோ வந்த விருந்தென விருத்தலாவது நமக்கென்ன வென்று பராமுகமாக விருத்தல். விருந்து-புதியராய் வருபவர்; புதியராய் வந்த ஒருவர் கருதிய இடம் பொருள் அறியாது அலமுறுவது கண்டும் என்னெனக் கேளாதும் உதவாதும் வாளா விருத்தல் போல எனது உணர்வு தடுமாற்றம் அறிந்தும் மயங்குவ தறிந்தும் அருள் ஞானம் நல்கா திருக்கின்றாய் என்பது குறிப்பு.

உண்மை உணர்வு தந்து நன்னெறிக்கண் உய்ப்பது நின் திருவடியன்றி வேறில்லை என்றற்கு "எங்கே புகுவேன்" எனவும், நின்னருளால் அன்றிச் செய்வகை யாதுமில்லை யன்றோ என்பாராய், "என் புரிவேன்" எனவும் இசைக்கின்றார். வேறு பிற தெய்வங்கள் அருளத் தகுவன உள வெனினும் நீ நல்கும் திருவருளே யன்றிப் பிறவற்றின்பால் பரவிப் பெறலாகா தென்றும் துணிவினேன் என்பதும் திருவுள்ளம் அறிந்தது என்று பகரலுற்று, "நின்னாலன்றிப் பிறர் தம்மால் வேண்டேன் ஒன்றும்" என்று அறுதியிட்டுரைக்கின்றார்.

இதனால் பராமுகமாக இருந்தருளாது என்னுட்கோளை மதித்து அருளொளி நல்குக என இறைஞ்சியவாறும். (21

2684. நின்பால் அடைந்தார் அன்பாலே
அடியார் எல்லாம் நெடுவினையேன்
வன்பால் மனப்பேய் தன்பாலே
வருந்திச் சுழன்று மயர்கின்றேன்
தென்பால் நோக்கி இன்பநடம்
செய்யும் இறைவா சிறுவனுக்கா
முன்பால் அமுதக் கடல்அளிந்த
முதல்வா என்னை முன்னுதியே.

உரை :— தென்திசை நோக்கி இன்பத் திருக்கூத்தாடுகின்ற இறைவனே, பால் வேண்டி யழுத முனிச் சிறுவன் பொருட்டு முன் பொருகால் அமுதந் தரும் பாற் கடலை யளித்தருளிய முதல்வனே, அடியராயினர் எல்லாரும் மெய்யன்பு செய்து நின் திருவடி ஞானப் பேறு பெற்றார்கள். நெடிய வினைகளால் பிணிப்புண்டிருக்கும் யான், வன் கண்மை பொருந்திய மனப் பேயால் வருந்தி உலகியல் வாழ்வில் சுழன்று, மயங்குகிறேனாதலால், எளியேனை நின்னருள் உள்ளத்தில் நினைந்தருள்க. எ.று.

தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண், தென் திசை நோக்கிச் சிவ பெருமான் திருக்கூத் தியற்றுதலால் "தென்பால் நோக்கி இன்ப நடம் செய்யும் இறைவா" என்றும், சிறு குழவிப் பருவத்தே பால் வேண்டி யழுத உபமன்யுவுக்குப் பாற்கடலை இறைவன் அருளினான் என்ற வரலாற்றை நினைவு கொண்டு "சிறுவனுக்கா முன் பால் அமுதக் கடலளித்த முதல்வா" என்றும் பராவுகின்றார். தென் திசை நோக்கி நின்று இறைவன் ஆடுஞ் சிறப்பைத் "தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம் பலவன்" (சாழல்) என்று திருவாசகம் கூறுவது காண்க. திருநடனம் ஆன்மாக்களின் மலம் நீக்கிச் சிவப் பேற்றின்பத்தை வழங்கும் நாட்ட முடைய தென்று பெரியோர்கள் நவில்வதால் அதனை "இன்ப நடனம்" என்று சிறப்பிக்கின்றார். "பால் அமுதக் கடல்" என்பதை 'அமுதப் பாற்கடல்" என இயைத்துக் கொள்க. கடைந்த தேவர்கட்கு அமுத மளித்த பெருமை பற்றி "அமுதக் கடல்" எனப் புகழ்கின்றார். சிறு குழவியாயினும் கடலின் சிறப்பையும், குழவியின் ஆற்றலையும் உலகறிதல் வேண்டிச் "சிறுவனுக்கா அமுதப் பாற் கடல் அளித்தான்" என்கின்றார்.

பாலுக்குப் "பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" (பல்லாண்டு) என்று சேந்தனுர் எடுத்தோதுவது க்காண்க. குழவியின் சிறுமையும் கடலின் பெருமையும் நோக்காது பால் கொடுத்தது வியப்புக் குரியதாயினும், தவக் குழவியின் ஆற்றல் கடலினும் பெரிது என்பதை முற்ற உணர்ந்தவன் என்பதற்கு "முதல்வா" என்பதனுல் புலப்படுத்து கின்ருர். அடியார்கள் சிவனடியே சிந்திக்கும் திருவுடையோர்கள். சிவன்பால் அன்பே அவர்கட்கு உண்மை ஞானம். அதனுல், அவர்கள் "திருவடிப் பேறு" எய்துகின்ருர்கள். "நின்பாலடைந்தார் அன்பால் அடியா ரெல்லாம்" என்றும், யான் அது பெருது வருந்துகின்றேன் என்பாராய், "நெடுவினையேன் வன்பால் மனப்பேய் தன்னுலே வருந்திச் சுழன்று மயர்கின்றேன்" என்றும் முறையிடுகின்ருர். முன்னைப் பிறவி பலவற்றுள் செய்யப்பட்டுப் பயன் நுகரப் படாது தொடர்கின்ற வினைத் திரளை யுடையேன் என்றற்கு "நெடுவினையேன்" என்றும், அதனுல் எனது அகக்கருவியாகிய மனம் வன்கண்மையும் அன்பின்மையும் உடையதாய் பேய்போல் என்னை அலை கின்றமையே காரணம் எனத் தெரிவித்தற்கு "வன்பால் மனப்பேய்" என்றும் உரைக்கின்ருர். மயர்தல் - மயக்குறுதல். முன்னுதல் - நினைத்தல்.

இதனுல், வினையால் மனம் வன்மையுற்று, மயக்குறுகின்ற தெனக் குறிப்பிட்டு, வினைப் பிடிப்பையும் மயக்கத்தையும் போக்கி அருள் ஞானம் வழங்குதல் வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (22)

திருச்சிற்றம்பலம்

11. கலி விண்ணப்பம்

அஃதாவது உலகியலில் தாம் எய்தி வருந்தும் துன்பங்களை இறைவன்பாற் சொல்லித் திருவருள் நல்குக என வேண்டுதலாம். கலி யென்னும் சொல் துன்பத்தைக் குறிப்பது.

இதன்கண் அருட் செயல் இடையறவு படுதற்கும், செய்வன பிழை, யாய் வருத்துதற்கும் கல்லா மனநினைவுகட்கும், மனநல மின்மைக்கும்ழ அன்பு நெறியில் நிற்க மாட்டாமைக்கும், வடலூர் வள்ளல் பெரிதும் துன்புறுகிருர். செல்வரொடு கூடிக் கழிதலைப் பெருந் துன்பமாகக் கருது கிருர். இடையிடையே திருவருள் முறையை வியந்தும், சிவஞானத்தைச் சிறப்பித்தும், உள்ளத்தின் உண்மையை நினைந்தும் பாடுகின்ருர்.

கட்டளைக் கலித்துறை

2685. செறியாத நெஞ்சக வஞ்சக னேன்இச் சிறுதலத்தே
அறியா தறிந்தவன் போற்சில செய்திடல் ஐயநின்தாள்
குறியா தரித்தல தாணைமற் றில்லைஎங் கொற்றவனே
முறியா தருள்செய்தி யோதெரி யேன்எந்தை முன்னியதே.

உரை: எங்கட்குத் தலைவனுகிய பெருமானே, செறிவின்றி வஞ்சக நினைவுகளை நெஞ்சில் கொண்டவனுகிய யான், சிறுமை மிக்க இவ் வுலகில் பிறர் அறியாததை நன்கறிந்தவன் போலச் சில அரிய செயல் களைச் செய்வது, நினது திருவடி ஞானத்தைப் பொருளாக உள்ளத்தில் கொண்டுள்ளமையேயாகும். வேறில்லை; ஆகவே எந்தையே, எளியே னுகிய யான் நினது திருக்கருத்தை மறுக்காமல் அருள் புரிய வேண்டு கிறேன். எ.று.

ஆணை யென்றது வற்புறுத்தற்கு. வினையால் விளையும் அஞ்ஞான மயக்கத்தைப் போக்குதலின், தலைவனுகிய சிவபெருமானைக் "கொற்ற வனே" என்று புகழ்கின்ருர். செறிவு - அடக்கம். சீலத்தாலும் நோன்பு களாலும் உளதாகின்ற மெய்யடக்கம் புலனடக்கம் வாயடக்கம் முதலிய நற்பண்புகளில்லாமல் மாருய நினைவுகளை மனத்தில் மறைத்தொழுகும் வஞ்சகன் என்று தம்மைக் குறிக்க லுற்ற வடலூர் வள்ளல், "செறியாத நெஞ்சக வஞ்சகனேன்" என்று கூறுகின்ருர். "சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி அறிவின்றித் தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேன்" (ஆனந்த) என மணிவாசகனுர் உரைப்பது காண்க. இப்பண்புகள் அறிவாற் சிறுமையுற்றவர் கூட்டத்தில் காணப்படுவனவா தலால் அவர்களைச் "சிறு தலம்" என எடுத்தோதுகின்ருர். தலம் - ஈண்டுக்

கூட்டத்தின் மேற்று; சிற்றினத்தோர் திரளைச் சிற்றுலகு எனவும், சிறு தலம் எனவும் குறிப்பது புலமை மரபு. மக்களின் பசிப் பிணி நீக்குவது, ஒழுக்க முரைப்பது, நூற் பொருளுரைப்பது, நுண் பொருளை விளக்குவது போன்ற பெருஞ் செயல்களைப் புரிகின்றேன்; அறிவாற் சிறியராகிய மக்கட்கு இஃது அரிய செயலாகத் தோன்றுகிற தென்பார், "அறியா தறிந்தவன் போல் சில செய்திடல்" என்றும், இதனை யான் செய்வது நின்னுடைய திருவருளைப் பெறுவது கருதியாகும் என்றும் தெரிவித்தற்கு "ஐயா நின்தாள் குறியா தரித்தல் அல்லது மற்றில்லை" எனவுரைத்து, மேலும் இஃது உண்மையென வற்புறுத்தற்கு "ஆணை" என்று உரைக்கின்றார். குறியா தரித்தல் என்பது, குறி ஆதரித்தல் எனவும், குறியாகத் தரித்தல் (மேற் கொள்ளல்) எனவும் பிரிந்து பொருள் தருவதாகும்; குறி-நோக்கம். ஒழுக்கம்; கருத்துமாம். உடல் பற்றிய பசி நோய் நீக்கமும், உயிர் பற்றிய அறியாமை நீக்கமும் இறைவன் திருவருள் நோக்கமாகும். (இவற்றை, Healing, Teaching and preaching என அருள் நெறித் தொண்டர் கூறுப.) அவற்றைச் செயற் படுத்துதல் திருவருள் நோக்கத்தைத் தரித்தலாகும். இவற்றைத் தொடர்ந்து செய்வதோ, இடையில் விட்டொழிப்பதோ நினது திருவுள்ளக் கருத்தாகும்; யான் அறியேன், என் செயலன்று என்பாராய், "முறியாது அருள் செய்தியோ தெரியேன் எந்தை முன்னியது தெரியேன்" எனத் தெரிவிக்கின்றார். கொற்றம் - வெற்றி. எண்ணி மேற் கொண்ட செயலைக் கடைபோகச் செய்து நற்பயன் காண்பது வேண்டி, "கொற்றவனே" எனக் கூறுகின்றார். (1)

இதனால், திருவருட் பேறு கருதி மேற் கொண்ட என் செயல் இடைமுறியாது நடை பெறுதற்கு அருள் புரிக என வேண்டியவாறும்.

2686. தீதொன்று மேகண் டறிந்ததல் லால்பலன் சேரநலம்
யாதொன்றும் நான்கண் டறியேன் அறிந்தவன் என்னஇங்கே,
போதொன்று போக்குகின் றேன்பிழை யாவும் பொறுத்தருள்வாய்
மாதொன்று பாகத் துணைஅன்றி நற்றுணை மற்றிலையே.

உரை: உமைநங்கையைப் பாகத்திற் கொண்ட பெருமானே, எல்லாம் அறிந்தவன் போல இந்நிலத்தில் ஒவ்வொரு பொழுதையும் கழிக்கின்றேன்; செய்யும் செயல்களில் தீமையைக் காண்கின்றேனே யன்றி நற்பயன் சிறிதும் பெற்றிலேன்; என் பிழைகள் யாவற்றையும் பொறுத்தருளுக; நினது திருவடித் துணையன்றி நல்ல துணையாவது வேறில்லை காண். எ.று.

"பண்ணினேர் மொழியாள் பங்க நீ யல்லாற் பற்று நான் மற்றிலேன்" (வாழாப்) என மணிவாசகர் முதலிய நன்மக்கள் உரைத்தலால், துணை வேண்டும் வள்ளற் பெருமான், "மாதொன்று பாக"எனப் போற்றுகின்றார். நான் செய்வேன் செய்கிறேன் எனச் செய்யப்படும் செயல்கள் பலவும் துன்பமே பெரிதும் விளைப்பதை நேரில் அறிகின்றமை தோன்ற, "தீதொன்றுமோ கண்டறிந்த தல்லால்" என்றும், இதனை யாப்புறுத்தற்குப் "பலன் சேர நலம் யாதொன்றும் நான் கண்டறியேன்" என்றும் இசைக்கின்றார். தீது கண்டு செய்தலை ஒழியாது மேன்மேலும் செய்

கின்றமைக்குக் காரணம், எல்லாம் அறிந்துள்ளோம் என்ற செருக்குற்று, எல்லாம் அறிந்தவன்போலக் கருதி, வீணிற் பொழுதைக் கழிக்கின்றேன் என்பாராய், "அறித்தவனென்ன இங்கே போதொன்று போக்குகின்றேன்" எனவும், செய்கைக் குரியவற்றை இருள் தீர என்ணுது செய்வதால் பிழைகளே செய்யப்படுகின்றன; அவற்றைப் பொறுத்தருள வேண்டும் என்பார், "பிழை யாவும் பொறுத்தருள்வாய்" எனவும் வேண்டுகிருர். "மாதொரு பாக" என்றது, அம்மை யப்பனுய் விளங்கும் மூர்த்தம் அருள் நிறைந்த திருவுரு நிலையைக் குறித்தற்காக. படைப்பின் நோக்கமும் உயிர் வாழ்க்கையின் பயனும் கெடும் என்பதும் தோன்றப் "பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர் விண் பாலி யோகெய்தி வீடுவர் காண்" (காழல்) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. பிறர் துணை யெல்லாம் கடைபோக நில்லாமல் இடையில் கெட்டொழியுமாகலின், உமைபாகன் "துணையன்றி நற்றுணை மற்றிலை" என நவில்கின்ருர்.

இதனுல் செய்வன யாவும் பிழையாய்த் துன்பம் பயத்தலால், இறைவன் துணையல்லது நற்றுணை வேறில்லை எனத் தெளிந்துரைத்த வாறும். (2)

2687. எல்லாம் தெரிந்த இறைவாநின் தண்ணருள் எய்துகிலாப்
பொல்லாத பாவிப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்வாய்
கல்லா மனக்கடை யாலே கடைவைத்துக் கண்டதுதுன்
பல்லால் அணுத்துணை யும்அறி யேன்இன்பம் ஆவதுவே.

உரை :— முற்றறிவுடைய முதல்வனே, நினது தண்ணிய திருவருளைப் பெற்றிலாமையாற் பாவம் நிறைந்த புலைத்தன்மை யுடைய யான் செய்துள்ள பிழைகளைப் பொறுத்து அருள் செய்ய வேண்டும்; ஏனெனில், அருட் கல்வியை நாடாத மனத்தால் உளதாய கீழ்மையால் பல செய்து கண்டது துன்பமல்லது அணுவளவேனும் இன்பமில்லை யாதலால். எ.று.

எல்லாவற்றையும் எஞ்சாமல் அறிவும் பேரறிவுருவினனுதல் கொண்டு, "எல்லாம் தெரிந்த இறைவா" என வுரைக்கின்ருர். இறைவன்- எங்கும் தங்குபவன். அணுப் புதைக்கவும் இடமின்றி எவ்விடத்தும் எப் பொருளினும் தங்குபவனுதலால் "எல்லாம் தெரிந்த இறைவா" எனல் பொருத்தமாகிறது. நினது திருவருள் ஞானம் இல்லாமையாற் பொல்லாங்கு செய்து பாவம் மிகுந்து புலைத்தன்மை யுள்ளவனுனேன் என்பாராய், "நின் தண்ணருள் எய்துகிலாப் பொல்லாத பாவிப் புலையேன்" என்று புகல்கின்ருர். இக் குறைபாட்டால் செய்வன அனைத்தும் குற்றமாய் முடிதலால், ஒறுப்பதால் பயனின்மை கண்டு என்னைப் பொறுத்து, இல்லாத திருவருளை வழங்குதல் வேண்டும் எனக் கேட்பாராய், "பிழையைப் பொறுத்தருள்வாய்" என்று சொல்லுகிருர். தன்பாற் பாவமும் புலைத்தன்மையும் இரு தலைக் கண்டறிந்தமை விளம்பலுற்று, "கடை வைத்துக் கண்டது துன்பல்லால் அணுத்துணையும் அறியேன் இன்பமாவது" என இசைக்கின்ருர். கடை வைத்தலாவது பலரறியப் பலவேறு சொல்லும் செயலும் புரிந்தொழுகுதல். இதற்குக் காரணம் இவற்றை யியப்பிக்கும் மனத்தின் கீழ்மைத் தன்மை என்று குறித்தற்குக்

கல்லா மனக் கடையாலே'' எனக் கூறுகின்றார். இன்பம் பயக்கும் பண்புடைய நினைவுகளை நினைக்கப் பழகாத மனம், "கல்லா மனம்" என்க. "கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேன்" (அம்மானை) என்பது திருவாசகம். ''வைத்தொரு கல்வி மனப் பழக்கம்'' என ஔவையார் அறிவுறுத்துவர். நற்பழக்க மில்லாமையால் மன நினைவு கெட, அதனால் இயங்கும் சொல்லும் செயலும் பிழைபடத் துன்பமே விளைந்தது என்பாராய், ''கல்லா மனக்கடையாலே கடை வைத்து கண்டது துன்பல்லால் அணுத்துணையும் அறியேன் இன்பமாவது'' என வருந்துகிறார். துன்பம் - துன்பு என நின்றது.

இதனால் தமது பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்றற்குக் காரணம் விளக்கியவாறும். (3)

2683. மண்ணுடை யாரியை வாளா மனஞ்செல வைத்ததலால்
எண்ணுடை யாரிடை எய்திநின் தாண்மலர் ஏத்துகிலேன்
புண்ணுடை யாரிற் புலம்புகின் றேனைப் பொறுத்தருள்முக்
கண்ணுடைய யாய்கழற் காலுடை யாய்மணி கண்டத்தனே.

உரை :— மூன்றாகிய கண்களையுடைய பெருமானே, கழலணிந்த திருவடியை யுடையவனே, நீல மணியின் நிறமும் ஒளியுமுடைய கழுத்தை யுடையவனே, நில புலங்களையுடைய செல்வர்பால் வெறிதே போவதற்கு என் மனத்தைச் செலுத்தியதுண்டே யன்றி, நின்னுடைய திருவடியை எண்ணுகிற பெரியோர் பக்கல் அடைந்து அத் திருவடியை நினைந்து பராவுதலொழிந்தேன்; அப்பிழையை எண்ணிப் புண்பட்டவர் போலத் துயரப்படுகின்றேன்; என் பிழையைப் பொறுத்தருள வேண்டும். எ.று.

ஞாயிறு, திங்கள், தீ என்ற மூன்றுக்கும் முழுமுதலாவான் இறைவனென பராதலால், "முக்கண்ணுடையாய்" எனவும், ஆன்மாக்களின் வினைப் பிணிப்பைக் கழற்றி வீடு பேறு நல்கும் வீறுடைய தென்பது பற்றிக் "கழற் காலுடையாய்'' எனவும், உலகுயிர்கள் உய்தற் பொருட்டு நஞ்சுண்டருளிய அருட் குறிப்பைப் புலப்படுத்தலின், "மணிகண்டத்தனே'' எனவும் சிவபிரானைப் புகழ்கின்றார். "சோதி முழு முதலாய் நின்றான்" (முதுகுன்) என்றும், ''கழலா வினைகள் கழற்றுவ காலவனம் கடந்த அழலார் ஒளியன காண்க ஐயாற னடித்தலமே" (ஐயா) எனவும், "வேலையுள் நஞ்சம் விருப்பாக உண்ணவனைத் தேவர்க் கமுதீந்து எல்வுலகிற்கும் கண்ணவனை" (கண்ணார்) எனவும் சான்றோர் எடுத்துரைப்பது காண்க. மிக்கு விரிந்த நிலபுலங்களையுடைய வேளாண் செல்வர்களை "மண்ணுடையார்'' எனக் கூறுகிறார். அவரிடம் சென்றால் மண்ணின் விளைவு நலம் பற்றிய பேச்சாற் காலம் கழிவதன்றி மண்ணக வாழ்வளித்த பெருமான் திருப்புகழ் பற்றிய பேச்சிலாமை கண்டு, "வாளா மனம் செல வைத்தது'' என்று இயம்புகிறார். பயனிலாமல் வீண் பொழுது கழிந்தமை நினைந்து, பெரிதும் வருந்துவது விளங்க வடலூர் வள்ளல், "புண்ணுடையாரிற் புலம்புகின்றேன்'' எனவும், இறைவன் திருவருளை நினைந்தும் பாடியும் நன்கு செலவிடுதற் குரிய காலத்தின் அருமை நோக்காமல் வீணே கழித்த பிழை கருதி, "பொறுத்தருள்'' எனவும்

வேண்டுகின்றார். ஒரு கால் பேராசிரியர் வெள்ளை வாரணரும் யானும் வடலூரிலிருந்து கண்ணுடியென்ற ஊர்க்குச் சென்று, மிராசுதார் ஒருவர் வீட்டில் விருந்துண்டிருந்த போது, பெரியவ ரொருவர், இராமலிங்க சுவாமிகளை எங்கள் தந்தையும், தீர்த்த நகரி மிராசுதார் ஒருவரும், குறிஞ்சிப்பாடி ரெட்டியார் ஒருவரும் வருவித்து, நெடு நேரம் பேசிக் கொண்டிருப்பது வழக்கம் என்று சொன்னார். இதுதான் சுவாமிகள் "மண்ணுடையார்" என்ற தொடரிற் குறிக்கப்படுகிறதென நினைக்கின்றேன்.

இதனாற் பெருநிலச் செல்வர்பாற் சென்று, காலத்தை வீணிற் கழித்த பிழை பொறுத்தருளுக என முறையிட்டவாறும். (4)

2689. **தாழாத துன்பச் சமுத்திரத் தேஇத் தனி அடியேன்**
வீழாத வண்ணம் கருணைசெய் வாய்என்னை வேண்டிஅந்நாள்
ஊழாம் வினைதவிர்த் தாண்டனை யேஎன் உடையவனே
வாழா வகைஎனை இந்நாள் விடுத்தல் வழக்கலவே.

உரை :— எளிய என்னை விரும்பி என்னுடைய இளம் பருவத்திலே எனக்குள் திருவடி ஞானமாகிய அன்பைத் தோற்றுவித்து, ஊழ்வினை என்னைத் தொடராதவாறு நீ ஆட்கொண்டாயாக, உலகியல் வாழ்க்கைத் துன்பமாகிய குன்றாத கடலின்கண் தளியவனாக அடியேன் வீழந்து கெடாமல் உய்யுமாறு, அருள் புரிவாயாக; அந்த அன்பு நெறியில் வாழாதபடி இந்நாளில் விட்டொழிவது, உனது திருவருட்குச் செயன் முறையாகாதே. எ.று.

உலக நடையில் ஈடுபட்டுச் செய்வன தவிர்வன தெரிந்து வாழ்வாங்கு வாழ்தற்கு ஏற்ற ஆற்றலும் அறிவும் பெறற்குரியது இளமைப் பருவம்; "இளமையிற் சிறந்த வளமையும் இல்லை; இளமை கழிந்த பின்றை வளமை காமம் தருதலும் இன்றே" (நற். 126) எனச் சான்றோர் கூறுவர். காமம் - அருள் மேலும் பொருள் மேலும் உளதாகும் ஆசை. இதனைத் திருவுளத்திற் கொண்டு இளமையிலேயே என்பால் அருள் கொண்டு எனக்குள் நின் திருவடிக் கன்பு தோற்றுவித்தாய்; இன்று செய்வினை யினும் முன்பு செய்து ஊழ்த்து நிற்கும் ஊழ்வினை முறுகி, மிக்க வன்மை யுடையதாதலைக் கண்டு அதுதானும் உருத்து வந்து என்னை உலகியல் துன்பச் சூழலில் செலுத்தாவண்ணம் என்னை இளமையில் ஆண்டருளினாய் என விளம்புவாராய், "என்னை வேண்டி அந்நாள் ஊழ்வினை தவிர்த்து ஆண்டனை" என்று கூறுகிறார். தவிர்த்தல், நீக்குதல். ஊழ்வினை பெருவலி யுடையதாயினும், இறைவன் திருவருள் முன் ஒளி முன் இருள் போல நில்லாது என உயர்ந்தோர் உரைக்கின்றார். "எரியுறு நிற இறைவனதடி இரவொடு பகல் பரவுவர்தம், தெரியுறு வினை செறி கதிர் முனை இருள் கெட நனி நினை வெய்துமதே" (கழுமலம்) என்பது திருஞானசம்பந்தர் திருமுறை. தாழ்தல்- குன்றுதல். வினைப் பயனை வினை செய்தே நுகர வேண்டி யிருத்தலால் காரண காரியத் தொடர்ச்சியாய் வினைகள் பெருகித் துன்பங்கள் என்றும், வற்றாமல் இருப்பது பற்றி வாழ்க்கைத் துன்பத்தைத் "தாழாத துன்பச் சமுத்திரம்"

என்று கூறுகிருர். ''சம்சாரம் சாகரம் துக்கம்'' என்பது வடநூல். திருவருள் துணையின்மை புலப்படுத்தற்குத் தம்மைத் "தனியடியே" னென்கின்ருர். இளமையில் என்னை அன்பு நினைவு தந்து ஆட் கொண்டது இத் துன்பக் கடலில் வீழ்ந்து ஆழாமற் காத்தற் கன்ருே? இப்போதும் என்னை அவ்வாறு ஆண்டருள்க என வேண்டுவாராய், ''துன்பச் சமுத்திரத்தே வீழாதவண்ணம் கருணை செய்வாய்'' என்று பராவுகின்ருர். அன்பு வாழ்வில் வாழ்க என அன்று ஆண்டு கொண்ட நீ இன்று கைவிடுவது நீதி முறையாகாது எனத் தெரிவிப்பாராய், "வாழா வகையெனை இந்நாள் விடுத்தல் வழக்கல்லவே" என வுரைக்கின்ருர். வழக்கு - நீதி; செயல் முறையுமாம். வாழ்வெனச் சிறப்பிக்கப்படுவது திருவருட் செல்வ வாழ்வாதலால், அதனின் நீங்குவது வாழ்வாகாமை பற்றி, ''வாழா வகை'' என எடுத்தோதுகின்ருர். "வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே'' (சதக) என மணிவாசகர் உரைப்பது காண்க. உலகுகளையும் உயிர்கள் வாழ்தற்கு வேண்டும் உடல் கருவி முதலிய வற்றையும் படைத் தளித்தவனுதலால் ''உடையவன்'' என்றும், தம்மை ஆட்கொண்ட போது தம்முடைய உடல் பொருள் உயிரனைத்தையும் கொண்டு உடையனுயினமை பற்றி, ''என் உடையவனே'' எனவும் இயம்புகின்ருர்.

இதனுல், அன்பு நெறியின்கண் நிலைத்து வாழ்தலை விரும்பி விண்ண பிக்கின்றவாரும். (5)

2690. **ஊன்செய்த வெம்புலைக் கூட்டின் பொருட்டிங் குனைமறந்து**
நான்செய்த தீமையை நானே நினைக்க நடுங்குகின்றேன்
ஏன்செய் தனைஎனக் கேளாது மேலும் இரங்குகின்ருய்
வான்செய்த நாதநின் தண்ணருள் வண்ணம்என்
வாழ்த்துவனே.

உரை: பெருமை பெற்ற தலைவனே, ஊனுலாகிய உடம்பின் பொருட்டு உன்னை மறந்து நான் செய்துள்ள குற்றங்களை நானே நினைந்து மனமும் உடம்பும் ஒக்க நடுங்குவேனுக, ஏன் இவற்றைச் செய் கின்ருய் என்று ஒரு சொல்லும் சொல்லாமல் மேன்மேலும் இரங்கி அருள் புரிகின்ருயாகலின், நினது தண்ணிய திருவருள் நலத்தை எவ்வகையில் எண்ணி வாழ்த்திப் போற்றுவேன்? ஒன்றும் தெரியவில்லை. எ.று.

வான் - பெருமை. எத்தகைய பெருமைக்கு மெல்லையாயவனுதலால், சிவபெருமானை ''வான் செய்த நாத'' என முன்னிலைப் படுத்துகின்ருர். ஊனுலாகியது பற்றி, ''ஊன் செய்த வுடம்பு'' எனக் கூறுகிருர். உடம்பு உயிர் நின்று உணர்வன உணர்தற்கும், உளுற்றுவன உளுற்றுதற்கும் இடமும் கருவியுமாய் இன்றியமையாது போற்றிப் பேணப்படும் சிறப் புடையதாதலால், உடம்பின் பொருட்டு என்பவர், ''வெம்புலைக் கூட்டின் பொருட்டு'' எனப் புகல்கின்ருர். இத்தகைய சிறப்புடையதாயினும், புலையரும் விரும்பாத புலால் நாறும் கூடாகக் காட்சியளிப்பது ''பற்றி வெம் புலைக் கூடு'' என விளம்புகிருர். உயிர் நிற்குங் காறும் ஒள்ளிய கருவியும் இடமுமாகும் இவ்வுடம்பு அவ்வுயிர் நீங்கியதும் வெவ்விய புலாற் கூடாகத்

தன்மை மாறுதலால் இவ்வாறு வெறுப்புடன் கூறுகின்றாரெனக் கொள்ளல் வேண்டும். உடலைநோக்கிப் பேணும் போது மனம் அதனையருளிய பரம்பொருள் நினைவு எழாதபடி மறப்பித்தலின், "உனை மறந்து" என்றும், யாதும் செய்யத் துணிதலின், "நான் செய்த தீமை நானே நினைக்க நடுங்குகின்றேன்" என்றும் கூறுகின்றார். தீமையின் கொடுமையைப் புலப்படுத்தற்கு "நானே நினைக்க நடுங்குகின்றேன்" என்கின்றார். பிறர் அறிந்து கேளாதபடி இத் தீமையைச் செய்வேனாயினும், நீ நன்கறிய நிகழ்வதால், நீயாயினும் ஏன் செய்தாய் என்று கேட்கலாம்; அதனைச் செய்வதின்றி மேன் மேலும் வெற்றி தருமுகத்தால் இரங்கி யருள் செய்கின்றாய் என்பாராய், "ஏன் செய்தனை யெனக் கேளாது மேலும் இரங்குகின்றாய்" என இயம்புகிறார். இரக்கம் - ஈன்டருளுதல் மேற்று. தீமை செய்வாரை ஒறுத்தல் முறையாக நீ நினது தண்ணிய பேரருளைச் செய்வது என்னறிவை மருட்டுவதால் எங்ஙனம் வியந்து வாழ்த்தி மகிழ்வேன் என்பாராய், "நின் தண்ணருள் வண்ணம் என் வாழ்த்துவனே" என வுரைக்கின்றார்.

இதனால் சிவனது திருவருள் முறையை வியந்து பரவியவாறும். (6)

2691. ஆயாது நான்செயும் குற்றங் களைக்கண் டறியில்பெற்ற
தாயாயி னும்பொறுப் பாளல ஆங்கவை சற்றலவே
ஓயாது செய்யுந் தொறும்பொறுத் தாளும் உனைஎளியேன்
வாயால் உரைக்கவும் மாட்டேன்அந் தோஎன்ன வன்மைஇதே.

உரை : பெருமானே, ஆராய்தலின்றி நான் செய்துள்ள குற்றங்களைக் கண்டறிவாளாயின், பெற்ற தாயும் பொறுக்க மாட்டாளாக, அவை ஒருபால் இருக்க, அப்பிழைகளையே ஓயாமல் நான் செய்யுந்தோறும் பொறுத் தருளுகின்ற உன்னை, எளியனாகிய யான் உன் திருப்பெயரை மனத்தால் நினைக்கவோ, வாயால் உரைக்கவோ செய்கிறேனில்லை; ஐயோ, என் மனவன்மையை என்னென்பது? எ.று.

எதனைச் செய்யினும் இடம், காலம், கருவி, பயன் ஆகியவற்றை ஆராய்ந்து செய்வது வினையாளர் இயல்பு; அதற்கு மாறாக வினை மேற்கொண்டு செய்வது பிழையாய் முடிவது இயற்கையாதலால், "ஆயாது நான் செயும் குற்றங்கள்" என்றும், எத்தகைய குற்றம் செய்யினும் அன்பாற் பொறுக்கும் தன்மையுடையவளான தாயும் என் குற்றங்களின் கொடுமையைக் காண்பாளாயின் வெறுத் தொதுக்குவா ளென்பார், "கண்டறியின் பெற்ற தாயாயினும் பொறுப்பாளலள்" என்றும் இயம்பி, அத்தகைய குற்றங்களில் நான் செய்தவை சில வல்ல, பல என்பார், "ஆங்கு அவை சற்றலவே" என்றும் கூறுகின்றார். சற்று - சில என்னும் குறிப்பு மொழி. இன்ன பல குற்றங்களை ஒரொருகா லன்றி எப்போதும் இடையறவின்றிச் செய்கின்றேனாக, வெறுப்பு ஒரு சிறிதுமின்றி, வேண்டு மருளைச் செய்கின்றாய் என்பார், "ஓயாது செய்யுந் தோறும் பொறுத்தாளும் உன்னை" எனவும், உனது அருள் வன்மையைச் சிறிதும் உணராது, மனத்தால் நினைப்பதோ, வாயால் உரைப்பதோ செய்யாமல் இருக்கிறேன் என்றற்கு "எளியேன் வாயால் உரைக்கவும் மாட்டேன்" எனவும் இசைக்கின்றார். மனம் நினையா விடினும் பழக்கத்தால் நா

வுரைக்கும் என்பது தோன்ற "வாயால்" என வேண்டாது கூறுகிறார். "நற்றவா வுனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" (பாண்டிக்) எனச் சான்றோர் உரைப்பது காண்க. இதனை யறியிற் கற்போல் வலிய மனமுடையவரும் உருகி உரைப்ப தொழியாராக, என் மனம் கல்லினும் வலிது என்பாராய், "என்ன வன்மையிதே" என இசைக்கின்றார்.

இதனால், தமது மனத்தின் நல்வலம் இல்லாமை கூறி வருந்திய வாறும். (7)

2692. ஒன்றுந் தெரிந்திட மாட்டாப் பருவத் துணர்வுதந்தாய்
இன்றுந் தருதற் கிறைவா நின்உள்ளம் இயைதிகொலோ
கன்றுங் கருத்தொடு மாழ்குகின் றேன்உன் கழல்அடிக்கே
துன்றுங் கருத்தறி யேன்சிறி யேன்என் துணிவதுவே.

உரை: இறைவனே, நன்று தீது ஒன்றும் தெரிய மாட்டாத இளமைப் பருவத்தே எனக்கு நல்லுணர்வு தந்தருளி றை யன்றோ; அதனை இப்பொழுது தருதற்குத் திருவுள்ளம் கொள்ள மாட்டாயோ; பலகாலும் எண்ணும் மனத்தோடு மயங்குகின்றேனாதலால், உன் திருவடியையே அடையும் நெறி அறிகிலேன்; உணர்வாற் சிறியனாகிய யான், கொண்டுள்ள துணிவும் இதுவேயாகும். எ.று.

பொறி புலன்களின் வாயிலாக வளர்வது இந்திரியக் காட்சியும், மானதக் காட்சியுமாகலின் அவை வளராத பருவம் என்றற்கு, "ஒன்றும் தெரிந்திட மாட்டாப்பருவம்" என்றும், அக்காலத்தே மக்கட்குரிய பகுத்தறிவ நிறைவுருமை நோக்கித் தெரியாப் பருவமென்னாது "தெரிய மாட்டாப் பருவம்" என்றும் விதந்து கூறுகின்றார். அந்நாளில் திருவருளுணர்வு எய்தப் பெற்றுச் சிவனடியே சிந்திக்கும் திரு அடையப் பெற்றமை புலப்பட, "உணர்வு தந்தாய்" என்று உரைக்கின்றார். அத்திரு மேலும் பெருகுதல் வேண்டுமாயின் அன்று தந்த திருவருள் ஞானம் மிக வேண்டுவது கொண்டு, "இன்றும் தருதற்கு நின்னுள்ளம் இயைதி கொல்லோ" என இயம்புகின்றார். உள்ளமும் ஒருவகையிற் கிளையாதலின் அதன் வினை முதன் மேனின்றது; அவன் கண்ணெனுந்தான் என்றாற் போல. கன்றுதல் - பலகாலும் பயிலுதல். பன்முறை நினைந்தமையின், "கன்றும் கருத்தொடு" எனவும், தெளி வெய்தாமை விளங்க, "மாழ்குகின்றேன்" எனவும் இசைக்கின்றார். இவ்வாறு திருவருளுணர்விற் சிறுமையுடையேன் என்றற்குச் "சிறியேன்" என்றும் திருவடியே சிந்திக்கும் சிவஞானம் பெறும் திறம் இன்னும் அறிந்திலேன் என்பாராய், "கழலடிக்கே துன்றும் கருத்தறியேன்" என்றும், அதனைப் பெறுவதே உறுதியென்னும் எண்ண முடையேன் என்பார், "வேறு துணிவது என்" என்றும் கூறுகின்றார்.

இதனால், சிவனடி எய்தும் சிவஞானம் ஒன்றே பெறற்பால தெனத் தெரிவித்தவாறும். (8)

2693. ஆவா எனஎனை ஆட்கொள வேண்டும் அடிமைகொண்ட
தேவா என் குற்றம் திருவுளத் தெண்ணில்என் செய்திடுவேன்
வாவா என அழைப் பார்பிறர் இல்லை மறந்தும்என்றன்
நாவால் உரைக்கவும் மாட்டேன் சிறுதெய்வ நாமங்களே.

உரை : என்னை யடிமை கொண்ட தேவதேவனே, ஆ ஆ எனச் சொல்லி என்னை ஆண்டருள வேண்டுகிறேன்; என் குற்றங்களைத் திருவுள்ளத்திற் கொண்டு மறுப்பாயேல் யான் யாது செய்குவேன்; என்னை இனிது நோக்கி வா வா என முகமனுரைத்து வரவேற்பவர் வேறு எவருமில்லை; யானும் பிற சிறு தெய்வங்களின் பெயரைத் தானும் மறந்தும் எனது மனத்தால் நினைக்கவும் நாவால் சொல்லவும் மாட்டேன். எ.று.

ஆ ஆ என்பது பரிவு தோற்றுவிக்கும் குறிப்பு மொழி; "ஆவா விருவர் அறியா அடி" (திருக்கோவை. 72) என வருதல் காண்க. நின் திருவருளுணர்வு பெற்றுத் திருவடி சேர்ந்தேனுதலின், என்னை யேற்றருள வேண்டும் என்பது மேற்கோள்; "என் குற்றம் திருவுளத்தெண்ணில் என் செய்திடுவேன்" என்பது எதிர்மறை வாய்பாட்டால் மேற் கோளை வற்புறுத்துவது. "வா வா என அழைப்பார் பிறர் இல்லை" என்பது ஏது; பிறர் என்றது பிற சிறு தெய்வங்களை. அழையாமைக்குக் காரணம் அவர் பெயர்களை மனத்தால் நினைத்தலும் நாவாற் சொல்லுதலும் இல்லாதவன் என்பாராய், "மறந்தும் என்றன் நாவால் உரைக்கவும் மாட்டேன் சிறுதெய்வ நாமங்களே" என்று கூறுகின்றார். நாவால் உரைக் கவும் மாட்டேனென்றவிடத்து உம்மை, மனத்தால் நினையாமையைச் சுட்டுகிறது.

இதனால், தம்மை யாட்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தருக்க நெறியில் வலியுறுத்தி வேண்டியவாறும். (9)

2694. பள்ளத்தி லேசெலும் நீர்போல்என் உள்ளம் பரப்பதலால்
எள்ளத்தி லேசிறி தாயினும் நான்செல்வ தில்லைஎந்தாய்
கள்ளத்தி லேசொல்லு கின்றேன் அலநின் கழலிணைஎன்
உள்ளத்தி லேநின்ற ஆங்கவை காண்க உடையவனே.

உரை : எல்லாம் உடைய பெருமானே, பள்ளம் நோக்கி விரைந் தோடும் நீரைப் போல என்னுடைய உள்ளமும் உன் திருவருளை நோக்கிப் பதைத்து ஓடுவதன்றி, எள்ளியிகழும் செயற்கண் என் மனமே யன்றி அதனையுடைய நானும் செல்லுவதில்லை; இதனை நெஞ்சிற் கள்ளம் வைத்துச் சொல்லுகின்றேனில்லை; என் மனத்தின்கண் நின்னுடைய கழ லணிந்த திருவடிகள் நிற்கின்றன; அவ்விடத்தே அவற்றை நீயே கண்டருள்க. எ.று.

உலகும் பொருளும் உயிர் நின்ற உடல் கருவி கரணங்களும் இறைவன் உடைமையென்பது உலகறிந்த செய்தியாதலால், வாளா "உடையவனே" என்று பராவுகின்றார். பள்ளம் நோக்கி விரைந்தோடு

வது நீர்க்கு இயல்பாதலின், திருவருளை நோக்கி உள்ளம் ஓடுதற்கு அதனை உவமம் செய்கின்றார். பள்ளத்திற் பெரிது கடலாதல் போலத் திருவருளும் கடல் போறலால், உள்ளம் பரந்தோடுகிற தென வுரைக் கின்றார். பரப்பது - ஈண்டுப் பதைத் தோடுவதன் மேற்று. எள்ளல் - எள்ளம் என அம்மீறு பெற்றது. சிறிதாயினும் என்றது வன்புறை. எந்தாய் - எந்தையே; அருள் நிறைந்த தந்தை என்பதாம். கள்ளமாவது மனத்தின் உண்மையைச் சொல்லாலும் செயலாலும் மறைக்கும் தொழிற் பண்பு. அலன் என்ற அன்மைச்சொல் மறுத்தற் பொருட்டு. நின்ற, அன்பெறாத அஃறிணைப் பன்மை வினைமுற்று.

இதனால் உள்ளத்தின் உண்மை கூறி ஏற்றருள் என இரந்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

12. அடிமைப் பதிகம்

அஃதாவது இறைவனது உடையனும் தன்மையையும் தமது அடிமைத் தன்மையும் உண்மையறிவால் உணர்ந்து, நல்லடிமையாய்ச் சிறக்க அருள் புரிக என வேண்டிக் கொள்வதாம்.

இதன்கண் சொன்னது செய்ய மாட்டாத தடிப்பினை யோதி இனி யேனும் வீணாள் படாமை ஆண்டருள வேண்டுவதும், ஆண்டு மூவாறில் அருளறிவு பெற்றதும், அடிமைத் திறத்தில் மேம்பட வேணடு மென்பதும், இளமைக் கண் அருளியது போல இனியும் அருளல் வேண்டு மென்பதும், எவ்வாறு நினைப்பினும் நல்லோர் சென்ற நன்னெறியறியாத அடிமையாள் என்பதும் பிறவும் ஓதப்படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2695. ஆள்வினையால் பயன்உறுவார் அசதி ஆட
அந்தோஇப் புலைநாயேன் அன்பால் நின்பால்
வேள்விசெயும் பெருந்தவர்க்கே வேள்வி செய்ய
வேண்டும்இதற் கெம்பெருமான் கருணைசெய்யும்
நாள்வினவில் சின்னாளே இதுதான் உண்மை
நம்புமென நவின்றனையே நம்பி நின்றேன்
கேள்வியிலாத் துரைத் தனமோ அலது நாயேன்
கிளக்குமுறை கிளக்கிலனோ கேட்டி லாயே.

உரை : எங்கள் பெருமானே, தன் முயற்சியால் பயன் பெறுபவர் கண்டு இகழ்ந் துரைக்கும்வண்ணம், அந்தோ, புலைநாய் போன்ற யான், அன்பினால் நின்னிடத்து வேள்வி செய்யும் பெரிய தாபதர்க்கு விருந்து செய்தல் வேண்டும்; இதற்கு அருள் செய்க; நாள் என்று எனில் சின்னாட்களில் நடத்த வேண்டும்; இஃது உண்மை எனச் சொல்லி விட்டு உன்னையே நம்பி யிருந்தேன்; கேட்பார் இல்லாத ஆட்சியோ, அன்றி நாயினேன் கேட்கு முறைப்படி கேட்டேனில்லையோ? நீ என் சொல்லைக் கேளாயாயினை. எ.று.

நாளும் அக்கினி காரியம் செய்யும் தவவேதிய ரொருவர்க்கு விருந்து செய்ய விழைந்து இறைவனிடம் விண்ணப்பித்து விட்டு அவரிடமும் கேட்டுக் கொண்டார்; இதனை "வேள்வி செய்யும் பெருந்தவர்க்கு வேள்வி செய்ய வேண்டும் இதற்கு எம்பெருமான் கருணை செய்யும்" என்றதாக வுரைக்கின்றார். அது கேட்ட தாபதர் அந்த நாள் எப்போது எனக் கேட்க, சில நாட்களில் நடக்கும் என்று இறைவனை யெண்ணிச் சொல்ல, நீர் சொல்வது உண்மை யென நம்பலாமா? என அவர் கேட்க, "நம்பும்" என அடிகளார் கூறினார்; இதனை "நாள் வினவில் சின்னாளே; இதுதான் உண்மை நம்பும் என நவின்று" என்றும், அதற்கேற்ற பொருட்காக

இறைவனைத் துதித்தாராக, அதனை "நம்பு மென நவின்றுனையே நம்பி நின்றேன்" என்றும் கூறுகின்றார். எதிர் பார்த்தவாறு பொருள் எய்தாமற் போகவே மனம் வருந்தி, சிவனே, உனது அருளரசு கேட்பாரிலாத ஆட்சியோ என வினவுவாராய், "கேள்வி யிலாத் துரைத்தனமோ" எனவும், தாம் கேட்பதில் முறை தவறு இருக்கலா மெனக் கருதி "நாயேன் கிளக்கு முறைக் கிலனோ" எனவும், நீ என் சொல்லைக் கேளா தொழிந்தாய் என்பார், "கேட்டிலாயே" எனவும் உரைக்கின்றார். முயற்சி வீணாயது கண்ட ஆள்வினையாளர் ஒருவர், அவ் விருந்தைச் செய்து அடிகளாரைப் பார்த்து இகழ்ந்து நகையாடியது விளங்க, "ஆள்வினையாற் பயனுறுவர் அசதி யாட" எனப் புகல்கின்றார். அசதியாடக் கேட்டிலாய் என இயையும். அசதி, இகழ்ந்து உரையாடல். ஆள்வினை, முயற்சி. புலை நாயேன் என்றது, தமது மாட்டாமை பற்றி நொந்து கூறும் கூற்று. வேள்வி, முன்னது ஆகவனீயம், காருக பத்தியம், தக்கிணுக்கினியம் என்ற அக்கினி காரியம்; பின்னது, விருந்து. கிளத்தல், சொல்லுதல், "நாள்வினைவில்" என்றும் பாடம்.

இதனாற் சொல்லுவது செய்ய மாட்டாத தமது அடிமைப் பண்பின் திறம் கூறியவாறும். (1)

2696. கேட்டிலாய் அடியேன்செய் முறையை அந்தோ
கேடிலாக் குணத்தவர்பால் கிட்டு கின்றோய்
ஏட்டில்ஆ யிரங்கோடி எனினும் சற்றும்
எழுதமுடி யாக்குறைகொண் டிளைக்கின் றேன் நான்
சேட்டியா விடினுமெனச் சேட்டித் தீர்க்கும்
சிறுமனத்தால் செற்பிழையைத் தேர்தி ஆயில்
நாட்டிலார் காக்கவல்லார் என்னை யெந்தாய்
நாள்கழியா வண்ணம்இனி நல்கல் வேண்டும்.

உரை: கெடாத குணங்களை யுடையாரிடத்தே செல்பவனே, அடியேன் செய்கின்ற முறையீட்டைக் கேளா தொழிகின்றாய்; ஆயிரங் கோடி ஏடுகள் உளவெனினும் எழுத வியலாத குறையினால் மனம் மெலிகின்றேன்; செயல் படாவிடினும் செயலுட் படுத்தி இழுக்கும் சிறுமைத் தன்மையையுடைய என் மனத்தால் செய்யப்படும் பிழைகளை அறிவாயாயின், இந்நாட்டில் என்னைக் காக்க வல்லவர் யாவர்? நாட்கள் கழியுமுன் எனக்கு நீ அருள் நல்க வேண்டுகிறேன். எ.று.

முக்குண வயத்தராதலின், மக்களிற் குண மாறுபா டில்லாத பெரு மக்களைக் "கேடிலாக் குணத்தவ" ரென்றும், அவர் நினைந்த பொழுதே நினைந்த வடிவில் தோன்றி நலம் புரியும் இயல்பினனாதலிற் சிவபெருமானை, "கேடிலாக் குணத்தவர்பாற் கிட்டுகின்றோய்" என்றும் புகழ்கின்றார். கிட்டுதல் - அடைதல். முறை, - முறையிடுதல், அது முறையீடு எனவும் வழங்கும். எழுது கருவியாகிய ஏடுகள் மிகப்பல எளிதிற் கிடைப்பது விளங்க, "ஏட்டில் ஆயிரங் கோடி எனினும்" எனவும், உள்ள குறைகளின் மிகுதியை நோக்க, ஏடுகள் குறைபடும் என்றற்கு "எழுத முடியாக் குறை கொண்டு இளைக்கின்றேன்" எனவும் இயம்புகிறார். இளைத்தல் - மனம் சோர்தல். எச்செயலிலும் ஈடுபடா திருப்

பினும் யாதானும் ஒன்றை யெண்ணிச் செயலிற் படுத்துவது மனத்தின் இயல்பாதலால், "சேட்டியா விடினும் எனைச் சேட்டித் தீர்க்கும் சிறு மனம்" என்று செப்புகின்றார். செயற் குற்றங்களாற் சிறுமை யுறுதல் பற்றி, "சிறுமனம்" எனக் கூறுகிறார். மனச் சிறுமையால் செய்வன பலவும் பிழையாய்த் துன்பம் விளைவித்தல் கொண்டு, "செய்பிழையைத் தேர்தியாயின்" என வுரைக்கின்றார். பிழை யுள்ளன பொறுக்கும் இயல் பினனாதலால் "தேர்தியாயின்" என்றும், தேர்ந்தறிந்து பொறுத்தல் செய்யாவிடில், என்னைக் காப்பவர் உலகத் தொருவரும் இல்லை என்பா ராய், "நாட்டில் என்னை ஆர் காக்க வல்லார்" என்றும் எடுத்து ரைக்கின்றார். காலம் தாழ்க்கின், நாட் கெட் டொழிவேனாதலால் இப்பொழுதே நின் திருவருளைச் செய்க என வேண்டுவாராய், "நாள், கழியா வண்ணம் இனி நல்கல் வேண்டு" மென இசைக்கின்றார். இனி - இப் பொழுது. நாள் - வாழ் நாள். கழிதல், வீணாதல்.

இதனால், என் குறைகள் பலவாயினும் பொறுத்தருளி, வாணாள் வெறிது கழியாதவாறு திருவருள் ஞானத்தை வழங்குக என முறை யிட்டவாறும். (2)

2697. வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை
வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்
தூண்டாத மணிவிளக்கே பொதுவி லாடும்
சுடர்க் கொழுந்தே என்னுயிர்க்குத் துணையே என்னை
ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட
அருட்கடலே என்உள்ளத் தமர்ந்த தேவே
ஈண்டாவ எனச்சிறிய அடியேன் உள்ளத்
தெண்ணம்அறிந் தருளாயேல் என்செய் கேனே.

உரை: வேண்டாமையை வேண்டுகிற ஞானிகள், ஒருபாலாக வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றை விரும்புகின்ற மக்கட்கு வேண்டிய வற்றை நல்குகின்ற, தூண்டுதல் இல்லாத மணி விளக்காகத் திகழ்கின்ற பெருமானே, அம்பலத்தில் ஆடல் புரிகின்ற சுடர்க் கொழுந்தே, என் உயிர்க்குத் துணைவனே, என்னை என் பதினெட்டா மாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே, எனது உள்ளத்தில் எழுந்தருளுகிற தேவ தேவனே, இங்கு இவற்கு ஆவன எனச் சிறிய அடியவனாகிய, என்னு டைய த்னம தெழும் எண்ணங்களை அறிந்தருள வேண்டும்; அருளா யேல் யான் யாது செய்வேன். எ.று.

"வேண்டாமை யன்ன விழுச் செல்வம்" (குறள்) இல்லையாகலின், மெய்யுணர்ந்து அவா வறுத்த ஞானவான்கள், அதனை விரும்புவாராதலால் அவர்களை "வேண்டாமை வேண்டுகின்றோர்" எனவும், அவர் மிகவும் சிலராகலின் "நிற்க" எனவும் உரைக்கின்றார். "நோற்பார் சிலர் பலர் நோவாதவர்" (குறள்) என்று திருவள்ளுவர் கூறுவது காண்க. அவாவுக் கிரையாகி உலகில் வாழ்வாங்கு வாழும் நன்மக்கள் அதற்குரிய வற்றை வேண்டுவதும், வேண்டுவார்க்குவேண்டுவன வழங்குவதும் திரு வருளின் செயலாதலின், "வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்

மணி விளக்கேஎன்று ஏத்துகின்ருர்.'' இயல்பாகவே ஒளி கொண்டு திக ழும் மாணிக்க மணி போல நிறமும் ஞான வருளொளியு முடையனுதல் விளங்கத் ''தூண்டாத மணி விளக்கே'' என்று சொல்லுகிருர். தீச் சுடரின் நுண்ணிய நுனிக்கண் திகழும் ஒளி சுடர்க் கொழுந்தாகும்; அதன் ஒளியும் அழகும் சிவபரம் பொருளை நினைப்பித்தலால் ''சுடர்க் கொழுந்தே'' எனவும், திருச்சிற்றம்பலமாகி பொது விடத்தே தகளியில் நின் றெரியும் சுடர் போற் செம்மேனிப் பெருமானுய் நின்ருடுதலால், ''பொதுவிலாடும் சுடர்க் கொழுந்தே'' எனவும் சிறப்பிக்கின்ருர். உயிரின்கண் ஒன்ருயும் உடனுயும் உணர்வு தந்தருளுவது பற்றி, ''என்னு யிர்க்குத் துணையே'' என்று ஓதுகின்ருர். இவ்வாறு சிவத்தை மனக் கண்ணிற் கண்டு மகிழ்கையில் தனக்கும் சிவனுக்கு மூண்டாய தொடர் பை நினைக்கும் வடலூர் வள்ளலார்க்கு அஃது உண்டாகிய காலம் நினை வில் எழுதலின், ''என்னை ஆண்டாறு மூன்ருண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே'' என வுரைக்கின்ருர். ஆண்டாறு மூன்றில் ஆட்கொண்ட பரம்பொருள் இன்றும் எழுந்தருளுமிடம் தமது உள்ளம் என்பது தோன்ற ''என் உள்ளத்தமர்ந்த தேவே'' என்று கூறுகின்ருர். தாம் உள்ளத்திலே யுடைய திருவடியின் பெருமையை நோக்கத் தமது சிறுமை விளங்கக் கண்டு ''சிறிய அடியேன்'' எனவும், சிறுமைக்குத் தகுவன எண்ணுத லால், அவை முட்டின்றிக் கைகூடுமாறு திருவருள் செய்க என வேண்டு வாராய், ''அடியேன் உள்ளத்து எண்ணும் ஆவ என அறிந்து'' அருளுக எனவும், அருளாவிடில் நின் திருவுள்ளம் அது வெனக் கொண்டு அமைவதன்றி வேறே என்னுற் செய்யலாவ தொன்றும் இல்லை என்பா ராய், ''என் செய்கேனே'' எனவும் இயம்புகின்ருர்.

இதனுல் மூவாருண்டில் ஆண்டருளிய நீ சிறிய அடியவனுகிய எனக்கு ஆவன அறிந்து அருளுக என வேண்டியவாரும். (3)

2698. என்னை அறி யாப்பருவத் தாண்டு கொண்ட
என்குருவே எனக்குரிய இன்ப மேஎன்
தன்னை இன்று விடத்துணிந்தாய் போலும் அந்தோ
தகுமோநின் பெருங்கருணைத் தகவுக் கெந்தாய்
உன்னை அலா தொருவர்தம்பால் செல்லேன்என்னை
உடையானே என்னுள்ளத் துள்ளே நின்று
முன்னைவினைப் பயன்ஊட்ட நினைப்பிக் கின்ருய்
முடிப்பிக்கத் துணிந்திலையேல் மொழிவ தொன்னே.

உரை : எனது ஆன்ம வியல்பை, யான் அறியாத காலத்தே போந்து அருளுணர்வு தந்து ஆண்டு கொண்ட என் குருபரனே, எனக்கே யுரிய அறிவின்பப் பொருளே, இன்று என்னைக் கைவிட எண்ணினுய் போலும்; ஐயோ, பெருங் கருணை யுருவாகிய நினக்கு இது தகுதியாகாதே; எந்தையே, உன்னையன்றி வேறு ஒருவர் பக்கலும் செல்லுவதில்லேன்; என்னையுடையவன் நீயே; என் மனத்தின்கண் என்னுடைய முன்னை வினை தனது பயனை நுகர்வித்தற் கேற்ப நினைவன நினைக்கச் செய்கின்ருய்; நினைவை யெழுப்புகின்ற நீ அதனை முடித் தற்கு நினைந்தருளுகின்ருயில்லை; இதற்கு என்ன சொல்லுவது. எ.று.

ஒவ்வொருவனும் தனது ஆன்மா உண்மை யுணரும் சித்துப் பொருள் என்பதை யுணர்வது முதற் கடனாகும்; "தன்னையறிவது அறிவு பின்னை யறிவது பேயறி வாமே" (திருமந்) என்று பெரியோர் கூறுவர்; அதனை யறியாக் காலத்தே என்னுட் போந்து "நீ, உள்ளதன் உண்மையை உள்ளவாறறியும் அறிவுப் பொருள். உன்னையறிந்தால் என்னையும் அறிவாய்" என ஞான மருளியதை நினைந்து, "என்னை யறியாப் பருவத்தாண்டு கொண்ட என் குருவே" என வுரைக்கின்றார். "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" எனச் சிவஞான போதம் தெரிவிப்பதும், "தன்னாலே தனையறிந்தால் தன்னையும் தானே காணும்" எனச் சிவப்பிரகாச முரைப்பதும் அறிக. தூய இன்பப் பேற்றுக்கே ஆன்மா உரிய தென்பதைத் தொல்காப்பிய முதலிய தொன்னூல்கள் உரைத்தலால், "எனக்குரிய இன்பமே" என்று கூறுகிறா "எல்லா வுயிர்க்கும் இன்பமென்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" என்பர் தொல்காப்பியர். அதனையறியாது கிடக்கும் உயிர்க்கு நுகர்தற் பாலது இன்பம். நீக்கற் பாலது துன்பம் என உயிர்க்குரியிராய் நின்று உணர்த்துவது திருவருள்; துன்ப மெய்துமாயின் திருவருளுணர்த்தாமை காரணமெனக் கொண்டு, "என்றன்னை இன்று விடத் துணிந்தாய் போலும்" எனவுரைத்து "அந்தோ" என இரங்குகின்றார். தந்த தெய்வம் தரும் என்பதற்கு மாறாக ஆண்டருளிய நீ ஆளாது விடுதல் முறையன்றே என்பாராய், "தகுமோ நின் பெருங்கருணைக்கு" என்றும், இதனைச் சொல்ல வேண்டிய நிலைமைக்கு வருந்தி, "எந்தாய்" என்றும் சொல்லுகின்றார். கருணையே யுருவாயவன் சிவபெருமானாதல் பற்றி "பெருங்கருணைத் தகவு" எனக் குறிக்கின்றார். "என்னை நாடிய நீ பிறரையும் நாடுகின்றாய்; அவர்பாலே செல்லுக" என்னும் உலகநடை பற்றிக் கைவிடுகின்றாய் போலும் எனவுரைப்பாராய், "உன்னையல்லாது ஒருவர்பாற் செல்லேன்" எனவும், என்னையுடையவன் நீயாதலால் என்று ஏதுக் காட்டற்கு "என்னை யுடையானே" எனவும் இயம்புகிறார். "தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர் துணையென நினைவனோ சொல்லாய்" (வாழாப்) எனத் திருவாசகம் உரைப்பது காண்க. செய்வினை யசத்தாதலின், செய்பவனை அது தானே சென்று அடைய மாட்டாமையின், அதனை அடைவிப்பவன் முதல்வன் என்பதனால், "என்னுள்ளத் துள்ளே நின்று முன்னை வினைப்பயன் ஊட்ட நினைப்பிக் கின்றாய்" என்று கூறுகின்றார். "அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல், ஆர் தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" (சிவ. போ.) என்பது அறிவு நூல். வினைப் பயனை ஊட்டற்கு நினைப்பித்த நீ, அதனை யுண்டு கழித்தற்கு உதவாது ஒதுங்கி நீங்குதல் கூடா தென்பார், "முடிப்பிக்கத் துணிந்திலையேல்" என்றும், வேறு கூறுதற் கின்மையின், "மொழிவது என்னே" என்றும் மொழிகின்றார். "வினையாயின தீர்த்து அருளே புரியும் விகிர்தன்" (ஈங்கோய்) என இறைவன் இயல்பை ஞானசம்பந்தர் உரைப்பதறிக.

இதனால், இறைவன் ஆன்மாக்களை அடிமை கொண்டு ஆளும் திறம் கூறியவாறும். (4)

2699. என்நாணை அறிந்தும்என்னை அந்தோ அந்தோ
இவ்வகைசெய் திடத்துணிந்தாய் என்னே எந்தாய்
நின்ஆணை நின்னையலா தொன்றும் வேண்டேன்
நீஇதனை அருந்திலையோ நினைப்பிக் கின்ற
மன்னுஎன் ஆருயிர்க்கு வாழ்வே என்கண்
மணியேஎன் குருவேஎன் மருந்தே இன்னும்
உன்னுல்இங் குயிர்தரித்து வாழ்கின் றேன்என்
உள்ளம்அறிந் துதவுதியோ உணர்கி லேனே

உரை : நினைவன நினைப்பிக்கின்ற வேந்தனே, எனது அரிய வுயிர்க்கு வாழ்வளிப்பவனே, என் கண்மணியே, எனக்குக் குருவே, பிறவி நோய்க்கு மருந்தே. ஐயோ, நாணம் மிகப் பொருந்திய எனது தன்மையை அறிந்திருந்தும், என்னை இவ்வாறு செய்யத் துணிந்து விட்டாய்; இதனை என்னென்பது? எந்தையே, நின் மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். எனக்கு உன்னைத் தவிர வேறு யாதும் வேண்டா; இதனை நீ அறிய வில்லையா? யாவரையும் நினைப்பிக்கும் பெருமான் நீ; இப்பொழுதும் யான் உன்னுல்தான் இவ்வுலகில் எனது உயிரைத்தாங்கிக் கொண்டு வாழ்கின்றேன்; என் மனநினை வறிந்து உன் திருவருளைத் தந்து உதவுவாயா? என்னுல் சிறிதும் முன்னுறவுணர முடியவில்லையே. எ.று.

முந்துற்றுக் காண்பதற்கும் மொழிதற்கும் உள்ளம் சுருங்குவது நாணம் என்னும் பண்பு. இதனைச் சான்றுண்மையைத் தாங்கும் தூண் என்பர் திருவள்ளுவர். தகாதவற்றை நினைத்தற்கும் செய்தற்கும் மொழி வதற்கும் ஒருப்படாதபடி உள்ளத்தை ஒடுக்குவது இந்நாணத்தின் செயற் பண்பாகும். இதனை மிகக் கொண்ட எளியனுகிய என்னை நாண் வேலிக் குள்ளிருந்தே நினதருளைப் பெருதவாறு செய்கின்ருயே என்பா ராய், "என் நாணை யறிந்தும் என்னை அந்தோ அந்தோ இவ்வகை செய்திடத் துணிந்தாய்" எனக் கூறுகின்ருர். தமது உள்ளத்தே கொண்டிருக்கும் அடிமைப் பணி வேட்கை வெளிப்படப் பாடல்களை ஆக்கியும் பாடியும் எழுதியும் வேண்டுமாறு செய்து விட்டாய் என்பது குறிப்பு. நின் மேல் ஆணையாகச் சொல்லுகின்றேன் என்பது உலகவர் வற்புறுத்தற்கு வழங்கும் வழக்கு மொழி; அதனுல் "நின் ஆணை" என் கின்ருர். ஆணை யென்ருல் மறுக்கவோ புறக்கணிக்கவோ கூடாது என்பர். "அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" (கோளறு) என ஞானசம்பந்தர் வழங்குவது காண்க. இதனை அவர் முதன் முதலாக எடுத்தாண்டது கொண்டே நம்பியாண்டார் நம்பிகள், "திருவடியை அத்திக்கும் பத்தரெதிர் ஆணை நமதென்ன வலான்" (ஆளு.தொகை) என்று புகழ்கின்ருர். யான் வேண்டத் தக்கதும் வேண்டுவதும் நீயே என்பார், "நின்னை யலாது ஒன்றும் வேண்டேன்" என்றும், என் உள்ளத் தமர்ந்த தேவராதலால் நீ அறிந்திருக்க வேண்டுமே என வினவுவாராய், "நீ இதனை அறிந்திலையோ" என்றும், என்னை இவ்வாறு நினைக்கப் பண்ணுபவனும் நீ தானே என்பார், "நினைப்பிக்கின்ற மன்னு" என்றும் ஓதுகின்ருர். உயிர்களை உலகில் வாழச் செய்பவனுதலால், "என்னுருயிர்க்கு வாழ்வே" என்றும், கண்ணிற் கருமணி போன்று வாழும் உயிர்க்குள் உணர்வொளியாய்த் திகழ்வது பற்றி, "என்

கண்மணியே" என்றும், மயங்குமிடத்துச் சிந்தைக்குள் தெளிவு நல்கு தலின், "என் குருவே" என்றும், நோயுற்ற பொழுது பொறுக்கும் ஆற்றலை நல்கித் தன்னை நினைப்பித்தலின், "மருந்தே" என்றும் இசைக் கின்ருர். நீ வாழ்விப்பதால் நான் வாழ்கின்றேன் என்ற கருத்தால், "இன்னும் உன்னுல் இங்கு உயிர் தரித்து வாழ்கின்றேன்" எனவும், இத்தகைய எனது விழைவை நிறைவு செய்க என வேண்டலுற்று. "உள்ள மறிந்து உதவுதியோ உணர்கிலேனே" எனவும், உரைக்கின்ருர்.

இதனுல், அடிமைத் திறத்தில் தமக்குள்ள ஆர்வத்தை வடலூர் வள்ளல் தெளியப் புலப்படுத்தியவாறும். (5)

2700. உள்ளமறிந் துதவுவன்நம் உடையான் எல்லாம்
உடையான்மற் றொருகுறைஇங் குண்டோ என்னக்
கள்ளமனத் தேன்அந்தோ களித்தி ருந்தேன்
கைவிடுவார் போல்இருந்தாய் கருணைக் குன்றே
எள்ளல்உறப் படுவேன்இங் கேது செய்வேன்
எங்கெழுகேன் யார்க்குரைப்பேன் இன்னும் உன்றன்
வள்ளல் அருள் திறநோக்கி நிற்கின் றேன்என்
மனத்துயர் போம் வகைஅருள மதித்து டாயே.

உரை : கருணையே குன்றுருக் கொண்டாற் போல்பவனே, அன்பர் மனமறிந்து நம்மை யுடையவனுதலின் திருவருளை யுதவுவான்; அவன் எல்லாம் உடையானுதலால் நமக்கு ஒரு குறையும் உண்டாகாது என்று கள்ளம் பொருந்திய என் மனத்திற் கொண்டு மகிழ்வு கொண்டேன்; ஐயோ, கைவிடுபவர் போற் இருந்தருளுகின்ருய்; இதனுல் யான் உலக வரால் இகழப்படுவேன்; அதைத் தவிர்க்க யான் யாது செய்ய வல்லேன்; எவ்விடம் போவேன்; யாவர்க்கு எடுத்துச் சொல்வேன்; இப்பொழுதும் உனது அருட் கூற்றையே எதிர்பார்த்துள்ளேன்; என் மனத்துள்ள துயரம் நீங்குமாறு அருள் புரியும் வகையை நினைந்தருளுக. எ.று.

உருவில்லாத கருணைக்கு உருக் கொடுப்பார் போல் "கருணைக் குன்றே" எனச் சிவபெருமானை உருவகம் செய்கின்ருர். நம்மை ஆளாக வுடையவனுதலின், நம்முடைய கருத்தறிந்து வேண்டுவன உதவுவதில் தவருன் என்று நினைத்திருந்தேன் என்பாராய், "உள்ளம் அறிந்து உதவுவன் நம்முடையான்" என்றும், அப்பெருமான் எல்லா வுலகுகளையும் தனக்கு உடைமையாகக் கொண்டவனுதலால் நமக்குக் குறை யொன்றும் உண்டாகாதவாறு அளித் தருளுவான் என எண்ணி இறுமாந்திருந்தமை விளங்க, "எல்லாம் உடையான் மற்றொரு குறை இங்கு உண்டோ என்னக் களித்திருந்தேன்" என்றும் இசைக்கின்ருர். உள்ளக் களிப்புப் புறத்தே வெளிப்பட வில்லையே யெனின், கள்ளம் நிறைந்தது என் மனமாதலின் உவகை மெய்ப்பட வில்லை என்றற்குக் "கள்ள மனத்தேன்" எனக் கூறு கின்ருர். தலைவனுகிய சிவபெருமானுடைய குறிப்பறிந்து கொள்ள வேண்டாவோ என்னில், உவகை மிகுதியால் களிப்பு மிகுந்து ஒரேனு யினேன் என வருந்துவாராய், "அந்தோ களித்திருந்தேன்" என்றும், திருவருளின்ப வுதவி எய்தாமை நோக்கி, "கை விடுவார் போல்

இருந்தாய்'' என்றும், இஃது அருளர்க்குப் பொருந்துவ தன்று என்றற்குக் "கருணைக் குன்றே'' என்று இயம்புகின்றார். இருக்கின்றாய் எனற்பாலது வன்புறையில் இறந்த காலத்தில் வந்தது. அருளாவிடில் வரும் ஏதப்பாடு கூறலுறுவார், உலகவர் என்னை எள்ளி இகழ்வர் என்றற்கு "எள்ளலுறப்படுவேன்" என்கிறார். வேறு பிறரை நாடலா மெனின், சிவனோடு ஒப்பாரும் மிக்காரும் யாண்டும் இலரே என்பாராய், "எங்கெழுகேன் யார்க்குரைப்பேன்'' எனவும், வேறு செயலின்றிக் கையறவு படுவது தோன்ற, "இங்கு ஏது செய்வேன்'' எனவும் வாய் வெருவுகிறார். இவ்வாற்றால் நின் திருவருளை எதிர் நோக்கும் ஆர்வம் தவிர்ந்திலேன் என்பாராய், "இன்னும் உன்றன் வள்ளலருள் திறம் நோக்கி நிற்கின்றேன் என்றும், அருளை நோக்கற்கு ஏதுவாகிய மனக்கவலை நீங்கும் திறம் ஒன்றைத் திருவுள்ளத்திற் கொண்டு அருள் புரிக என வேண்டுவாராய், "என் மனத்துயர் போம் வகை அருள மதித்திடாயே'' என்றும் உரைக்கின்றார். வள்ளலருள் - வளமையான திருவருள். மதித்தல்- நினைத்தல்.

இதனால், அடிமையாகிய மனக்கவலையை மாற்றற் பொருட்டு அருள் நினைவு கொள்க என வேண்டியவாறும். (6)

2701. வகை அறியேன் சிறியேன்சன் மார்க்க மேவும்
மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும்
தகைஅறியேன் நலம்ஒன்றும் அறியேன் பொய்ம்மை
தான்அறிவேன் நல்லோரைச் சலஞ்செய் கின்ற
மிகைஅறிவேன் தீங்கென்ப எல்லாம் இங்கே
மிகஅறிவேன் எனினும்எனை விடுதி ஆயில்
பகைஅறிவேன் நின்மீதில் பழிவைத் திந்தப்
பாவிஉயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே.

உரை : பெருமானே, திருவருளைப் பெறுதற்குரிய வழி வகைகளை அறிவிற் சிறுமை யுடையவனாதலால் அறிந்திலேன்; சன்மார்க்க மென்னும் ஞான நெறியை மேற்கொண்ட மாண்பு மிக்க தாபதர்கள் கண்டு மகிழும் படியான பெருநெறியும் அறிந்திலேன்; அதனாற் பெறலாகும் நன்மைகளை அறியேன்; பொய் யுரைத்துத் திரியத் தெரிவேன், குணம் செயல்களில் நல்லவர்களை வஞ்சிக்கும் மிக்க செயல்களை நன்கு அறிவேன்; இவ்வுலகில் தீயவை யெனப்படும் எல்லாச் செயல்களையும் மிகவும் அறிந்துள்ளேன்; இப்படிப் பட்டவ னென்றாலும், என்னைக் கைவிடுவாயாயின் நின்மேற் பகைமை கொண்டு நினக்குப் பழி யுண்டாகுமாறு பாவியாகிய யான் எனது உயிரை விடுதற் கேற்ற தொன்றைத் துணிவுடன் செய்வேன்; எனது உட்கோளையும் இப்போது சொல்லி விட்டேன்; தக்கது செய்தருள்க. எ.று.

குறிப்பிட்ட ஓர் ஊரை யடைதற்குப் பல வழிகள் இருப்பது போலத் திருவருளைப் பெறுதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், நேச மார்க்ககம், ஞான மார்க்கம் எனவும் பல கூறுவராயினும், யான் யாதும் அறியேன் என்பாராய், "வகை யறியேன்'' என்றும், அறியாமைக்குக் காரணம் எனது அறிவின்

சிறுமை என்றற்குச் "சிறியேன்" என்றும் கூறுகின்ருர். சத்தாகிய சிவத்தை யடையும் நன்னெறி சன்மார்க்கம் எனப்படும். சத்மார்க்கம் - சன்மார்க்கம் என வருகிறது; சித் முத்திரை,சின்முத்திரை - என வருவது போல. சன்மார்க்கத்தின் மாண்பு சிவஞான சிவபோகங்களைப் பெறுவ தாய், பெறும் முயற்சி உயர்ந்த தவமாய் விளங்குவது பற்றிச் "சன்மார்க் கம் மேவும் மாண்புடைய பெருந் தவத்தோர்" என்று புகழ்கின்ருர். மாண்புடைய பெரியோர்கள் கண்டு பாராட்டி மகிழ வாழ்வதுதான் வாழ்க்கைக் கழகு தருவதாக, யான் அது தானும் அறியேனென்பார்' "பெருந் தவத்தோர் மகிழ வாழும் தகை அறியேன்" எனவுரைக்கின்ருர். தகை, அழகு; மேன்மையுமாம். நலம், நல்வாழ்க்கையால் உளதாகும் நன்மைகள். நலமறியேனுதலால் "வாழும் தகை யறியேன்" என இயையும். தாம் மேற்கொண்டிருக்கும் வாழ்க்கை நிலை கூறலுற்று, "பொய்ம்மை யறிவேன் நல்லோரைச் சலம் செய்கின்ற மிகையறிவேன், தீங்கென்ப எல்லாம் இங்கே மிக அறிவேன்" என வுரைக்கின்ருர். பொய்ம்மை, பொய் பேசித் திரியும் செயல். நல்லோர், நற்குண நற்செய் கைகளையுடையவர்கள். சலம், வஞ்சனை; "சலம் பற்றிச் சால்பில செய் யார்" (குறள்) என வருதல் காண்க. மிகை, குற்றம்; அறமோ பொருளோ எதனையும் மிகைபடச் செய்வது குற்றமாய் விளைதலின், குற்றம்மிகை யெனப்படுகிறது. தீங்கு, தீவினை. அறிவும் அறியாமையும் எவரிடத்தும் உண்டாதலால், முதற்கண் அறியாதன கூறிய வடலூர் வள்ளல் அறிவன எனப்பொய்ம்மை முதலியவற்றைக் கூறுகின்ருர். அறியப் படாத நலங் களிலும் அறிந்துள்ள குற்றங்கள் பலவாதல் பற்றி, என்னைக் கைவிட லாகாது என்பாராய், "எனினும் எனை விடுதியாயின்" எனவும், விடுவா யாயின், யான் நின்பால் பகை கொண்டு தற்கொலை புரிந்து நீ இரக்க மில்லாதவன் என உலகோர் பழிக்கச் செய்வேன் என்பாராய், "பகை யறிவேன் நின் மீதில் பழி வைத்து இந்தப் பாவி உயிர் விடத் துணிவேன் என்று பேசுகின்ருர். பாவ வினை மிக்கிருத்தலால் தமது உயிரை "இந்த பாவியுயிர்" என்றும், துணிந்தால் துணிந்ததைச் செய்தே தீர்வேன். அதனையும் இப்போதே சொல்லி விடுகிறேன் என்றற்கு "உயிர் விடத் துணிவேன் பகர்ந்திட்டேன்" என்றும் உரைக்கின்ருர்.

இதனல் அறியாதனவும் அறிந்தனவும் கூறி நல்லடிமைத் திறம் வேண்டியவாரும். (7)

2702. இட்டவகை வாழ்கின்றேன் எந்தாய் நானே
எண்ணுகிலேன் எண்ணுவித்தால் என்செய் வேன்நின்
மட்டலர்சே வடிஆணை நினைத்த வண்ணம்
வாழ்விக்க வேண்டும்இந்த வண்ணம் அல்லால்
துட்டன்என விடத்துணிதி யாயில் அந்தோ
சூறையுறு துரும்பெனவும் சுழன்று வானில்
விட்டசிலை எனப்பவத்தில் விழுவேன் அன்றி
வேறெதுசெய் வேன்இந்த விழல னேனே.

உரை: எந்தையே, இவ்வுலகில் என் விருப்பப்படி வாழ்க்கையை நடத்துகின்றேனே யன்றி வேறே யாதும் எண்ணுவதில்லை; எண்ணுமாறு

செய்விப்பாயாயின், யான் என்ன் செய்வேன்; தேன் பொருந்திய மலர் போன்ற நின் சிவந்த திருவடி யாணையாகச் சொல்லுகிறேன்; யான் நினைக்குமாறே வாழ்தற்கு அருள் புரிய வேண்டுகிறேன்; இவ்வாறன்றி இவன் ஒரு துட்டனென்று கருதிக் கைவிட நினைப்பாயாயின், சூறைக் காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அலைந்து, வானத்தில் எறியப்பட்ட கல் சுழன்றுகொண்டே நிலத்தில் வீழ்வதுபோலப் பிறவியாகிய கடற்குள் வீழ்வேனேயன்றி, வீணனாகிய யான் வேறு என்ன செய்வேன். எ.று.

இட்டவகை - இஷ்டம்போற் செல்லுவது; இட்ட வகை வாழ்வதாவது மன நினைவுக்கேற்ப வாழ்வது; மனம் போன போக்கில் செல்வதாம். விதி எனக்கென வகுத்தபடி வாழ்கிறேன் என்பதுமுண்டு; "வகுத்தான் வகுத்த வகை யல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" (குறள்) என்பர் திருவள்ளுவர். இவ்வாறு வாழ்ந்தால் வரும் விளைவு இதுவாம் என யான் எண்ணினதில்லை என்பாராய், "நானே எண்ணுகிலேன்" என்று கூறுகின்றார். எண்ணிலேன் என்னுமல் எண்ணுகிலேன் என்றது எண்ணமாட்டாமை புலப்படுத்துகிறது. எண்ணுதற் கமைந்த கருவி கரணங்களை நோக்கினால், நினது அருட்சத்தி இயக்கினா லன்றி இயங்குவனவாக இல்லை; ஆகவே, நினது அருள் என் வாழ்வு பொருளாக என்னை எணைப்பிக்குமாயின் என் வாழ்வின் உளவாய குற்றங்கள் பல என் நினைவில் தோன்றும் அவற்றைப் போக்கித் தூய்மை செய்து கோடற் கேற்ற ஆற்றலும் எனக்கில்லையாதலால் யான் என்ன செய்வேன் என்று சொல்லலுற்றவர், "எண்ணுவித்தால் என்செய்வேன்" என்று இயம்புகின்றார். தான் கூறுவதன் உண்மையை வலியுறுத்தற்கு நின் திருவடி யாணையென்பவர், "மட்டலர் சேவடி ஆணை" என்கின்றார். மட்டு - தேன். அலர் - மலர். சேவடி - சிவந்த திருவடி. நினது திருவருள் விளக்கத்தால் நல்ல நினைவுகளும் செயல் நெறிகளும் தோன்றுமாயின் அவ்வழியே நான் வாழ வேண்டும்; அதற்கு அருள் செய்க என்பார். "நினைத்த வண்ணம் வாழ்விக்க வேண்டும்" என வேண்டுகிறார், அருளாது கைவிடலாகாது என்றற்கு "இந்த வண்ணமல்லால் துட்டன் எனத் துணிதியாயின்" எனவும், துணிந்து கைவிட்டவிடத்துத் தமக் கெய்தும் தீங்கினைக் கூறலுற்று, இம்மையில் இவ்வுலகில் சூறைக் காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அலைந்து கெடுவேன் என வருந்துவாராய், "அந்தோ சூறையுறு துரும் பெனவும்" எனவும், வானத் தெறிந்த கல் தன்னிற் சுழன்றுகொண்டு நிலத்தில் வீழ்ந்து மேலெழுதலின்றி அழுந்துதல் போலப் பிறவிக் கடலில் வீழ்ந்து ஆழ்வேன் என்றற்கு, "சுழன்று வானில் விட்ட சிலையெனப் பவத்தில் விழுவேன்" என்றும் உரைக்கின்றார். சூறை - சூறுவளி; இது சூறைக் காற்றெனவும் வழங்கும். சிலையென என்றவிடத்து எண்ணும்மை தொக்கது. சுழன்று பவத்தில் விழுவேன் என இயைக்க. இக் கல்லுவமையை, "வல்லானொருவன் கைம்முயன் றெறியினும், மாட்டா வொருவன் வாளா எறியினும், நிலத்தின் வழா அக் கல்லே போல, நலத்தின் வழாஅர் நின்னும நவின்றோரே" (திருவிடைமும்மணி) எனப் பட்டினத்தடிகள் வழங்குவது காண்க. துரும்பு போல் அலைத்தலும் பவக் கடலில் வீழ்தலுமன்றி வேறு எனக்குச் செயல் இல்லையாம் என யாப்புறுத்தற்கு, "வேறு எது செய்வேன் விழலனேன்" எனக் கூறுகின்றார். விழலன் - புல்லாய்ப் பயன் படாத வீணன்.

இதனால், திருவருளால் நினைப்பிக்குமாறு யான் வாழ்தல் வேண்டு மென்ற விருப்பம் தெரிவித்தவாறும். (8)

2703. விழற்கிறைத்து மெலிகின்ற வீண னேன்இவ்
வியன்உலகில் விளைத்திட்ட மிகைகள் எல்லாம்
அழற்கிறைத்த பஞ்செனவே ஆக்கி நீயே
ஆட்கொண்டால் தடுப்பவரிங் காரே ஐயா
கழற்கடிமை எனஉலகம் அறிய ஒன்றும்
கருதறியாச் சிறுபருவத் தென்னை ஆண்டு
நிழற்கருணை அளித்தாய இந்நாள் நீகை
நெகிழவிட்டால் என்செய்வேன் நிலையிலேனே.

உரை : ஐயனே, பயனில்லாத விழலுக்கு நீர் இறைத்து கெட்ட வீணனாகிய நான், இந்த அகன்ற உலகில் இதுகாறும் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் நெருப்பிலிட்ட பஞ்சு போலப் போக்கி, நீ தானே என்னை ஆண்டருளுவாயானால் வேண்டா என்று உன்னை விலக்குபவர் யார் இருக்கின்றார்கள்; நலம், தீங்கு ஒன்றும் அறிய மாட்டாத இளம் பருவத்தில் உலகத்துச் சான்றோர் அறியும்படி உனது திருவடிக்கு அடிமை யென்று என்னை ஆட்கொண்டாய்... அங்ஙனம் என்னையாண்டு உனது திருவருள் நிழலில் என்னை இருக்க வைத்தாயன்றோ? இப்பொழுது என்னை அருளாது கைவிடுவாயாயின் ஒரு நிலையிலும் நில்லாமல் அலைகின்ற யான் யாது செய்வேன், அருளுக. எ.று.

விழல்- வன்மையான புல்லினத்துள் ஒன்று. இவை தொண்டை நாட்டவர் வீடுகட்கு கூரையாக வேய்வரே யன்றி ஆடுமாடுகட்கு இரையாக பயன்படுத்துவது இல்லை; அவையும் இவற்றை மேயவிரும்புவ தில்லையாதலின் இவற்றிற்கு நீர் பாய்ச்சுவது வீண் செயலெனக் கருதுப வாதலின் பயனில் செயல்களைப் புரிந்து வழி யிழந்து வருந்தும் தம்மை "விழற் கிறைத்து மெலிகின்ற வீணனேன்" என்று கூறுகின்றார். மிகை, என்பது நலந் தீங்குகளை அளவிறப்பச் செய்வது. நல்லவற்றையும் மிகைபடச் செய்தவிடத்து குற்றமாய் முடிதலின் மிகை என்று உரைக் கின்றார். நல்லவும் தீயவு மானவற்றை மிகைப்படச் செய்தமை புலப்பட, "உலகில் விளைத்திட்ட மிகைக ளெல்லாம்" என்று விளம்புகின்றார். நல் வினைகளை அளவோடு செய்து நலம் பெறுதற்கு அமைந்தது இவ்வகன்ற நிலவுலகமாக, நான் மிகைபல செய்து கெட்டேன் என்பது புலப்பட, "இவ்வியனுலகம்" என்று விதந்து கூறப்படுகிறது. தீயால் அழிக்கப் பட்ட பொருள் மீள நலமுறுதவாறு போல என்பால் அழிக்கப்பட்ட மிகை கள் மீளத் தலை எடாதவாறு போக்கின என்பார், அழற் கிறைத்த பஞ்சனவே ஆக்கி" என்று சொல்லுகிறார். நலம் காணினும் குறை சொல்லித் தடுக்கும் மக்கள் உலகில் பலராதலின், குணமே உருவாகிய நின்பாற் போன்று தடுப்பவரிலராதலின் நீ அது நினைந்து எனக்கு அருள் செய்க என்பாராய், "தடுப்பவரிங்கு ஆரே ஐயா" என்று இயம்புகிறார். கழல் - ஆகு பெயராய்த் திருவடியைக் குறிப்பதாயிற்று. உலகியலின் உண்மை உணரும் திறம் இல்லாத இளம் பருவத்தே "சிவனடியே சிந்திக்கும்" திருவருள் ஞானத்தை தாம் பெற்றமை

புலப்பட "ஒன்றும் கருதறியாச் சிறுபருவத் தென்னை யாண்டு, நிழற் கருணையளித்தாயே" என்று உரைக்கின்றார். இறைவன் திருவடி நிழல் அருளுருவினதாகலின் "நிழற் கருணை" என்று சிறப்பிக்கின்றார். இறைவன் தமக்குத் திருவருள் ஞானம் நல்கியதைச் சான்றோர் பலர் அறிந்தது கண்டு வியத்தமையின் "உலக மறிய" என்று சொல்லுகிறார். உலகம் - அறிவுடைய சான்றோர் சூழல். அருள் ஞானத்தை அந்நாள் வழங்கிய பெருமானாகிய நீ இந்நாளில் கைவிட் டொழிவது அறம் அன்று என்று இறைஞ்சுவார் "இந்நாள் நீ கை நெகிழ விட்டால் என் செய்கேன்" என்று கூறுகின்றார்.

இதனால், இளம் பருவத்தே அருள் ஞானம் வழங்கி, ஆதரித்ததை நினைந்து அதனைத் தொடர்ந்து அருள்புரிய வேண்டுமென முறையிட்டவாறும். (9)

2704. நிலைஅறியேன் நிலைஅறிந்து பெற்ற நல்லோர்
நெறிஅறியேன் எனினும்உன்றன் நேச மன்றி
இலைஅறியேன் மற்றவரைக் கனவி லேனும்
எட்டுணைஓர் துணைஎனவும் எண்ணு றேன்நல்
கலைஅறியேன் கருத்திலிருந் தறிவித் தாய்நான்
கண்டறிந்தேன் எனினும்அவை காட்ட வேண்டும்
அலைஅறியா அருட்கடலே அமுதே தேனே
அம்பலத்தென் குருவேநான் அடிமை ஆளே.

உரை: அலைகளால் அலைக்கப்படாத திருவருட் கடலாகிய பெருமானே, அமுதமும் தேனும் போல்பவனே, தில்லையம்பலத்தில் எழுந்தருளும் என்னுடைய ஞான குருவே, நன்னிலை யொன்றும் நான் அறியேன்; நன்னிலைக்கண் நின்று ஞான நலம் பெற்ற பெருமக்கள் மேற்கொண் டொழுகும் நெறியைத் தானும் அறிகிலேன் என்றாலும், உன்னுடைய நட்பையன்றி வேறு எனக்கு உடைமையில்லை; உடைமை யாவதும் வேறு ஒன்றும் அறியேன்; பிற மக்களையோ தேவர்களையோ துணையா மென்று கனவிலும் எள்ளத் தனையும் எண்ணுவதில்லேன்; நல்ல கல்வியைக் கற்றிலேனாயினும்: என்னுடைய மனத்தில் எழுந்தருளி அறிவன அறிவித்தருளினாய்; அதனால் யான் சிலவற்றைக் கண்டுணர்ந்தேன்; என்றாலும் நீயே அவற்றைக் காட்டி யருள வேண்டும்; நான் உனக்கு அடிமையாள், அன்றோ. எ.று.

கடல்கள் யாவும் அலைகளால் அலைக்கப்படும் இயல்பினவாகலின், அவற்றினின்றும் வேறுபடுத்தற்கு "அலையறியா அருட்கடலே" எனச் சிவபரம் பொருளைப் புகழ்கின்றார் அருட் கடல், அருளுருவாகிய கடல். உள்ளத்தாற் கொள்ளப் படுதலால், "அமுதே" எனவும், நாவால் திருப் பெயரை ஓதுந் தோறும் இன்பத் தேன் சுரந்து மகிழ்வித்தில் பற்றித் "தேனே" எனவும் பாராட்டுகின்றார். தில்லையம்பலத்தின்கண் தனது திருநடனத்தால் காண்பார்க்கு ஞானம் எய்துவித்தலால் "அம்பலத்து என் குருவே" எனவுரைக்கின்றார். நிலை நல்லொழுக்க நல்லற நெறிகளால் எய்தும் உயர்நிலை. நன்னிலைகளைப் பெறும் திறம் அறியேன்

என்பாராய், ''நிலையறியேன்'' என்றும், அறியா விடினும் நிலை நின்று யர்ந்த சான்றோரைக் கண்டு அறிந்து கொள்ளலாமெனின் அந்த வாய்ப்பு பெற்றிலேன் என்றற்கு, ''நிலை யறிந்து பெற்ற நல்லோர் நெறி யறியேன்'' என்றும் கூறுகின்றார். நன்னிலையையும் அதனை யடையும் நெறியும் அறியேனாயினும், எனக்கு உன்பால் அசையாத அன்புண்டே யன்றி வேறில்லை என்பாராய், ''எனினும் உன்றன் நேச மன்றி இலை'' என்றும், இவ்வன்பினும் சீர்த்த உறுதிப் பொருள் வேறு உண்டோ என்று கண்டறியேன் என்பார், ''அறியேன்'' என்றும் கூறுகின்றார். இத்தகைய அன்புடையனாதலால், எனக்குத் துணையாவர், மக்களிலோ தேவர்களிலோ ஒருவரையும் சிறிதளவும் நான் நினைப்பதில்லை என்றற்கு, ''மற்றவரைக் கனவிலேனும் எட்டுணையும் ஓர் துணை எனவும் எண்ணுகிறேன்'' என்கின்றார். நனவில் நெஞ்சின்கண் நினையாதனவும் கனவின்கண் எய்துவ துண்மையின் ''கனவிலேனும்'' எனவும், கனவுக் காட்சி சிறிது போதில் இடையறவுபடுவது பற்றி, ''எட்டுணையும்'' என்று சிறப்பிக்கின்றார். எட்டுணையும் என்னும் சிறப்பும்மை தொக்கது. எண்ணுதல் இல்லேன் என்பதை வலியுறுத்தற்கு ''எண்ணுறேன்'' என்று குறிக்கின்றார். எண்ணுதல் உறேன் - எண்ணுறேன் என வந்தது. கலை. கற்றற்குரிய கல்வி; பல்வேறு நூல்களைக் கற்றறியாமை புலப்படுத்தற்குக் ''கலை யறியேன்'' எனவும், கல்லாவிடத்தும் கலைஞானம் தமக்குக் கைவரப் பெற்றமை புணர்ந்து அதற்குக் காரணம் திருவருள் உள்ளிருந்து உணர்த்தும் திறம் என்பார், ''கருத்திலிருந்து அறிவித்தாய்'' எனவும் இயம்புகிறார். கண்முதலிய இந்திரியங்களால் கண்டறிவதும் மெய்யறிவுப் பேற்றுக்கு வாயிலாதலைத் தழீஇக் கோடற்கு, ''நான் கண்டறிந்தே னெனினும்'' என்றும், கண் முதலிய கருவிகள் நின் திருவருள் காட்டக் காணும் இயல்பின என்பது பற்றி, ''எனினும் அவை காட்ட வேண்டும்'' என்று உரைக்கின்றார். ''காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே'' என திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. காட்டக் காண்பதும், செய்விக்கச் செய்வதும், நினைப்பிக்க நினைத்தலும் உடையனாதல் என்னை நினக்கு அடிமைப் படுத்து தலால், ''நான் அடிமை யாளே'' என எடுத்தோதுகின்றார்.

இதனால், தான் இறைவற்கு அடிமையாள் என வடலூர் வள்ளல் வற்புறுத்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

13. சரணப் பதிகம்

அஃதாவது இறைவன் திருவடியே தனக்குப் புகலாம் எனத் தெரிவித்துக் கொள்வது. இக் கருத்து ஒன்றையே பொருளாகக் கொண்டு இப்பதிகம் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

இதன்கண் துன்பக் காலத்திலும் இன்பக் காலத்திலும் தமது நெஞ்சம் சிவபரம் பொருளை மறவாமையும், தமக்குத் துன்பம் வருவிக்கும் ஏதுவாவது தம்பாலுள்ள சிறுமை என்றும், அதற்குக் காரணம் மனத்தின் கண் படிந்துள்ள மாயை என்றும் தெரிவித்து, குற்றங்களைப் போக்குதற்குத் திருவருள் ஞானம் அருள வேண்டுமெனவும், திருவருளல்லது தமக்குக் களைகண் வேறு ஒன்றுமில்லையாதலால் அதனை விளங்க அருளுக எனவும் வேண்டுகிறார். மேலும் திருவருள் ஞானமென்பது திருவடி ஞானமெனவும் வழங்குதலின், தமக்குத் திருவடிப்பேறு வேண்டுமெனவும், அதனையல்லது வேறு எதனையும் சாரமாட்டாமை சொல்லி இரவும்பகலும் அதனையே நினைந்தொழுக வேண்டுமெனவும், அதனையும் இறைவன் தானே உவந்து அருள வேண்டும் எனவும் விண்ணப்பித்துத் தனக்கு முடிந்த முடிபாகத் திருவடியே புகலிடமாம் எனப் புகன்று மொழிகின்றார்.

கலிநிலைத்துறை

2705. மதிவார் சடைமா மணியே அருள்வள் ளலேநன்
நிதியே திருஅம் பலத்தா டல்செய்நித் தனேநன்
துதியேன் எனினும் உனைஅன் றித்துணையி லேன்என்
பதியே எனதெண் ணம்ப லிக்கும்படிக் கருளே.

உரை : பிறைத் திங்கள் தங்கிய சடையை யுடைய பெரிய மணியாகிய பெருமானே, அருள் வழங்கும் வள்ளலே, நல்ல நிதியே, திருச்சிற்றம்பலத்தில் ஆடல் புரிகிற நித்தனாகிய சிவனே, நின்னைத் துதியாதவனாயினும் உன்னையன்றி எனக்குத் துணையாக வேறு ஒருவரையும் கொண்டிலேனாதலால் என்னுடைய மனத்திலுள்ள எண்ணம் நிறைவேறும்படி எனக்குத் தலைவனாகிய நீ அருள்புரிய வேண்டுகிறேன். எ.று.

மதி - பிறைச்சந்திரன். மணி - கண்டுச் சிவந்த மாணிக்காயிற்று. உயிர்களின் திணை வேறுபாடும் மக்களுயிரின் நிலை வேறுபாடும் நோக்காமல் அருள் செய்தலால், "அருள் வள்ளலே" என்று கூறுகிறார். நலம் பயக்கும் செல்வம் என்றற்கு "நன்னிதியே" என்று சிறப்பிக்கின்றார். நித்தன் - என்றும் இருப்பவன். துணை செய்பவரைக் கண்டவிடத்து அன்பு செய்வதும், காணா விடத்துப் பாராட்டி மகிழ்வதும் மக்கள் இயல்பாயினும் யான் அது செய்வதிலேனாயினும், உன்னை யொழிய வேறு ஒரு

வரையும் துணையாக யான் மதிப்பதில்லை என்பார், "நின்னைத் துதியே னெனினும் உனையன்றித் துணையிலேன்" என வுரைக்கின்றார். பதி - தலைவன். திருவருள் ஞானம் பெற விழையும் என் கருத்து நிறைவுறும் படி அருளுக என வேண்டுகின்றாராகலின், "என தெண்ணம் பலிக்கும் படிக் கருளே" என்று கூறுகின்றார். பலித்தல் - பயன் தருதல்.

இதனால், திருவருள் ஞானம் எனக்கு எய்துமாறு அருள் புரிக என வேண்டியவாறும். (1)

2706. படிமேல் அடியேன் உனைஅன் றிஓர்பற்றி லேன்என்
முடிமேல் அடிவைத் தருள்செய் திடமுன்னு கண்டாய்
கொடிமேல் விடைநாட் டியஎண்கு ணக்குன் றமே
பொடிமேல் விளங்குந் திருமே னிஎம்புண் ணியனே.

உரை : கொடியின் மேல் எருது உருவெழுதிய குணம் எட்டுடைய குன்று போலும் பெருமானே, திருநீறு அணிந்து விளங்கும் திருமேனியை யுடைய புண்ணிய மூர்த்தியே, இவ்வுலகில் அடியவனாகிய எனக்கு உன்னைத் தவிரப் பற்றுக்கோடு இல்லையாதலால் எனது தலையின் மேல் உன்னுடைய திருவடியை வைத்து ஞானம் எய்துவிக்கத் திருவுள்ளம் செய்தருள்க. எ.று.

இடபக் கொடி யுடையவன் என்பது பற்றிச் சிவபெருமானைக் "கொடி மேல் விடை நாட்டிய குணக்குன்றமே" என்றும் தன்வயத்தனாதல், முற்றறிவுடைமை முதலிய குணம் எட்டுடையவ னெனச் சிவாகமங்கள் ஓதுதலின் "எண் குணக் குன்றமே" என்றும் கூறுகின்றார். "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" (குறள்) எனத் திருவள்ளுவர் உரைப்பது காண்க. மேனி முற்றும் வெண்ணீறு சண்ணித் திருத்தலால் "பொடி மேல் விளங்கும் திருமேனிப் புண்ணியன்" எனவும், அவன்பால் தமக்குள்ள தொடர்பு விளங்க, "என் புண்ணியனே" எனவும் புகழ்கின்றார். படி - நிலவுலகம். கணந்தோறும் மாறும் இயல்புடைய உலகியலில் நிலைத்த பற்றுக்கோடு ஒன்று வேண்டி யிருத்தலின், "படி மேல் அடியேன் உனையன்றி யோர் பற்றிலேன்" என்றும், அதற்கு இறைவன் திருவடி ஞானம் இன்றியமையாமை விளங்க, தமது தலைமேல் சிவன் சேவடி பொருந்த வேண்டுமென விழை கின்றாராதலால், "என் முடிமேல் அடி வைத்தருள் செய்திட முன்னு கண்டாய்" என்றும் இயம்புகின்றார். முன்னுதல் - மனத்தால் நினைத்தல். கண்டாய் - முன்னிலை அசை. "எம்மான் திருவடி என் தலை மேல் வைத்திடும் என்னும் ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்" (திருவதிகை) என நம்பியாரூரர் உரைப்பது காண்க.

இதனால் திருவடிப் பேறு வேண்டுகின்றமை காணலாம். (2)

2707. புண்ணும் மனம்சஞ் சலித்துள் ளம்புலர்ந்து நின்றேன்
அண்ணு எனைஆட் கொளவேண் டும்அகற்று வாயேல்
கண்ணுர் களைகண் பிறிதொன் றிலைகள்ள னேனே
எண்ணு வினைஎன் செயுமோ இதற்கென்செய் வேனே.

உரை : அண்ணலே, மனம் சஞ்சலித்தலால் புண்பட்டு உள்ளம் வாழ வருந்தா நிற்கின்றேன்; ஆதலால் என்னை நீ ஆதரித்து ஆட் கொள்ள வேண்டுகிறேன்; கைவிடுவாயாயின் கண்ணிறந்த ஆதரவு உன்னையன்றி வேறு யாதும் எனக்கில்லை; கள்ள நினைவுகளுடைய வனுகிய என்னைக் குறிக்கொண்டு என் வினைகள் என்ன துன்பங்களைச் செய்யுமோ; யான் என் செய்வேன். எ.று.

துயர நினைவுகளால் பலப்படப் பலகாலும் நினைவுற்றிருப்பார்க்கு மன நோய் மிகுவது பற்றி "மனம் சஞ்சலித்துப் புண்ணும்" எனவும், அதனுல் நெஞ்சில் இரக்கப் பண்பு குன்றுதலின், "உள்ளம் புலர்ந்து நின்றேன்" எனவும் புகழ்கின்றுர். இறைவன் திருவருள் உண்டாகிய வழி மன நோய் நீங்கி நன்னினைவுகளால் தெளிவு பெறுதலால் எனை ஆட்கொள வேண்டும் என்று கூறுகின்றுர். அருள் வடிவினனுதலால், இறைவனைக் "கண்ணுர் களைகண்" என உரைக்கின்றுர். "உள்ளேன் பிற தெய்வம் உன்னை யல்லாது உத்தமனே! "என்னும் கருத்தினராதலின் "களைகண் பிறிதொன்றிலை" என உரைக்கின்றுர். கள்ள நினைவுகளை உள்ளத்திற் கொண்டு புறத்தே தோன்றுதபடி மறைத் தொழுகுபவன் என்றற்கு, "கள்ளனேன்" எனத் தம்மைப் பழித்துரைக்கின்றுர். கள்ள நினைவு கொண்டு சொல்லுதலும் செய்தலும் தீவினையாய் வினை முதலைத் துன்புறுத் துவனுதலின், "கள்ளனேன் வினை யென்னு என் செய்யுமோ" எனவும், இறைவனருளா லல்லது வினை நீக்கம் உண்டாகாமை பற்றி, "இதற்கு என் செய்வேனே" என்று கையறவு படுகின்றுர். வினையென்னு என் செய்யுமோ என இயைக்க.

இதனுல், வினைக் கஞ்சித் திருவருளல்லது களைகணுவது பிறி தொன்றும் இல்லை என உரைத்தவாறும். (3)

2708. செய்வேன் அவம்அன் றித்தவம் ஒன்றும்செய் தறியேன்
நைவேன் பிழையா வும்பொறுத் தருள்நல்கு வாயேல்
உய்வேன் அலதுய் வகைஇன் றுமன்றோங்கு கின்றுய்
வைவேன் துதிப்பேன் உனைஎன் றும்மறந்தி லேனே.

உரை : தில்லையம்பலத்தில் உயர்ந்து விளங்குகின்ற பெருமானே, வீண் செயல்களைச் செய்வதன்றி பயன்படும் தவ வினைகளை ஒருசிறிதும் நான் செய்ததில்லை; அதனுல் வருந்துகிறேன். நான் செய்துள்ள குற்றங் களைப் பொறுத்து நல்லருள் புரிகுவாயாயின் உய்தி பெறுவேனே யன்றி, வேறு உய்யுமாறும் எனக்கில்லை. வருத்தம் வந்தவிடத்து வைவதும், நலம் எய்திய விடத்து உன்னை துதித்துப் புகழ்வதும் செய்வேனுயினும், உன்னை எப்பொழுதும் மறப்பதில்லை. எ.று.

தில்லையம்பலத்தின் கண் ஞான நடம் புரிந்து உயிர்த்தொகை யனைத்தும் புகழ்ந்து பரவ மேம்படுவது விளங்கக் கூத்தப் பெருமானை, "மன்று ஓங்குகின்றாய்" என்று பராவுகின்றார். அவம் - வீண் செயல். தவம் படும் செயல் பயனுள்ள வினைகளைச் செய்யாது அல்லாதவற்றைச் செய்ப வன் அவலமுறுவர் என்பதுபற்றி, "நைவேன்" என்று கூறுகின்றார். ஒருவர் செய்த பிழையைப் பொறுத்தாலன்றி அருள் செய்வதற்கு உள்ளம் செல்லா தாகலின், "பிழை யாவும் பொறுத்தருள் நல்குவாயேல்" எனவும், அருட் பேற்றாலன்றி ஒருவர்க்கு உய்திப் பேறு இல்லை என்பதை வற்புறுத்தற்கு, "உய்வேனலது உய்வகை இன்று" எனவும் உரைக்கின்றார். துன்ப முற்றவிடத்து இறைவனை வைதுரைப்பதும், இன்ப மெய்திய விடத்துப் பாராட்டிப் புகழ்வதும் இறைவன்பால் உண்மை யன்புடையார் செயலாதலால், "வைவேன் துதிப்பேன்" என்று இயம்புகின்றார். வையும்போதும் துதிக்கும்போதும் இறைவனுடைய நினைவு நெஞ்சின் கண் நிலவுமாறு புலப்பட, "உன்னை யென்றும் மறந்திலேன்" என உரைக்கின்றார்.

இதனால், துன்பயின்பங்கள் எய்துமிடத்தும் சிவபரம் பொருளைத் தாம் நெஞ்சின் கண் மறவாமை உரைத்தவாறும். (4)

2709. மறவா துனைவாழ்த் துமெய்அன் பரைமாநி லத்தே
இறவா வகைஆட் கொண்டரு ளியஈச னேமெய்
உறவா கியநின் பதம்அன் றிஒன் றோர்கி லேன்நான்
பிறவா நெறிதந் தருள்என் பதென் பேசி டாயே.

உரை : மறப்பதின்றி என்றும் வாழ்த்தி வணங்கும் உண்மை யன்புடைய பெருமக்களைப் பெரிய இந்நிலவுலகத்தில் இறந்து கொடாத படி ஆட்கொண் டருளுகின்ற சிவபெருமானே, நிலைத்த உறவாகிய நினது திருவடியன்றி வேறு ஒன்றையும் நான் பொருளாக எண்ணுவ தில்லையாதலால் எனக்குப் பிறவாப் பெருவாழ்வு அருளுக என வேண்டுவது மிகை யன்றோ, சொல்லுக. எ.று.

சிவன்பால் உண்மை யன்புடையவர்கள் அல்லும் பகலும் அவனையே நினைந்தொழுகுவது பற்றி, "மறவாது உனை வாழ்த்தும் மெய்யன்பர்" எனச் சிறப்பிக்கின்றார். மெய்யன்பர்கள் பிறப்பிறப்பில்லாத பெருவாழ்வு எய்துவதைப் பெருநூல்கள் எடுத்தோதுதலால், மெய்யன்பரை "மாநிலத்தே இறைவா வகை ஆட்கொண் டருளிய ஈசனே" எனப் போற்று கின்றார். "பிறவா வாழ்க்கைப் பெரியோன்" எனச் சான்றோரால் சிறப்பித் துரைக்கப்படுவதால், சிவபெருமான் தனது அடியவரை இறவா வகை ஆட்கொண்டருளுகின்றான். இறவா வகை ஆட்கொளப்பட்ட மார்க் கண்டன் வாழ்வு இங்கே நினைக்கப்படுகிறது. இறைவன் திருவடிக்குச் செய்யும் அன்பு நிலைபேறு கொண்டதாதலின், அதனை "மெய்யுறவாகிய நின்பதம்" என்று சிறப்பிக்கின்றார். அதனினும் சிறந்த பற்றுக்கோடா வது பிறிதொன்று மில்லையாதலால், "நின்பதமன்றி ஒன்று ஓர்கிலேன்" என்று உரைக்கின்றார். இறைவன் திருவடியைப் பற்றாக உடையார் பிறவாப் பேரின்ப வாழ்வு பெறுவது உலகறிந்த உண்மையாதலின்,

அதனை எடுத்தோதுவது வேண்டாக் கூறலாய் முடிதலின், "நான் பிறவா நெறி தந்தருள் என்பது என் பேசிடாய்" என்று இயம்புகிறார்.

இதனால் திருவடியன்றி வேறு பற்றுக்கோடு இல்லாமையால் எனக்குப் பிறவாப் பெருவாழ்வு தருக என விண்ணப்பித்தவாறும். (5)

2710. என்னே இனும்நின் அருள்எய் திலன்ஏழை யேனை
முன்னே வலிந்தாட் கொண்டதின் றுமுனிந்த தேயோ
பொன்னேர் அணி அம் பலத்தா டியபுண்ணி யாஎன்
அன்னே அரசே அமுதே அருள் ஆண்ட வனே.

உரை : பொன்னால் அழகுற்ற தில்லையம்பலத்தில் ஆடுகின்ற புண்ணியப் பொருளாகியவனே, எனக்கு அன்னையே, அரசே, அமுதமே, அருளுருவாகிய ஆண்டவனே, ஏழையாகிய என்னை முன்பு வலிய வந்து ஆட்கொண்டதற்கு ஏதுவாகிய உனது அருள், இப்பொழுது வெறுத்து விட்டதா? என்னென்பது? இன்னும் எனது திருவருள் இன்பத்தை பெற்றிலேன். எ.று.

பசும்பொன்னினால் வேயப்பட்ட தில்லையம்பலத்தை "பொன்னேர் அணியம்பலம்" என்று புகழ்கின்றார். சிவ புண்ணியப் பொருளாய் விளங்குவது பற்றிப் "புண்ணியா" என்று புகழ்கின்றார். அருளே திருமேனி உடையவனாதலின் இறைவனை "அருள் ஆண்டவனே" என வுரைக்கின்றார். உலகியலறிவு வந்து படிவதற்கு முன் இளமையில் இறைவன் திருவருளுணர்வு தந்து ஆண்டமை நினைப்பித்தற்கு "ஏழையேனை முன்னே வலிந்தாட் கொண்டது" என்றும், பின்னும் அத்திருவருள் ஞானம் உள்ளத்தில் நின்று நிலவுதல் வேண்டி "இன்று முனிந்ததேயோ" என்றும் உரைக்கின்றார். முனிவு தோற்றுவித்தற்கு ஏற்ற தவறு ஒன்றும் தாம் செய்திலாமை யெண்ணிக் கூறுதலால் "என்னே" என்றும், இளமை கழிந்த இக்காலத்தும் திருவருள் ஞானம் எய்தாமை நினைந்து "இன்னும் நின்னருள் எய்திலன்" என்றும் இயம்புகிறார். முனிவு - வெறுப்பு.

இதனால் திருவருள் ஞானம் விளங்க எய்தாமைக்கு முறையிட்டவாறும். (6)

2711. ஆண்டாய் எனைஏழ் பிறப்பும் உனைஅன்றி ஒன்றும்
தீண்டா தெனதுள் ளம்என்றால் என்சிறுமை தீர்க்க
வேண்டா தயலார் எனக்காண் பதென்மெய்ய னேபொன்
ஆண்டான் திருஎய் தநஞ்சைக் களம்நாட்டி னேயே.

உரை : மெய்மை உருவாயவனே, பொன்னுலகத்தை ஆள்கின்ற இந்திரன் முதலிய தேவர்களை சாவா நலம் பெறக்கடல் விடத்தை உண்டு நெஞ்சில் நிறம் திகழ அமைத்துக் கொண்டவனே. எழு பிறப்பும் அடிமையென என்னை நீ ஆண்டு கொண்டாய்; உன் திருவருளை யன்றி வேறு எதனையும் என் மனம் நினைத்தல் செய்யாது; அங்ஙனமிருக்க, எனக்

குண்டாய துன்பத்தைப் போக்க நினைந்தருளாது, அயலவன் போலப் புறக்கணித்து நோக்குவது முறையாகாது. .எ.று

பொன் ஞண்டான் - பொன்னுலகம் எனப்படும் தேவருலகத்தை ஆள்கின்ற இந்திரன். தலைமை பற்றி இந்திரனைக் கூறுகின்றாராதலின் ஏனைத் தேவர்களும் கொள்ளப்பட்டனர். கடல் கடைந்து சாவா மருந்தாகிய அமுதம் பெற்றமையின் தேவர்கள் திருவெய்த எனவும், அக்கடலில் தோன்றிய விடத்தை உண்டு கழுத்துக் கரியதானது பற்றி "நஞ்சைக் களம் காட்டினேய்" எனவும் கூறுகின்றார். உயிர் வகைகள் அனைத்தும் உலகில் தோன்றியபோது இறைவனுக்கு அடிமையான தாலும் அவற்றின் பிறப்பு வகை ஏழாதலாலும், "எனை ஏழ் பிறப்பும் ஆண்டாய்" என வுரைக்கின்றார். பெருமானது திருவருளைப் பெறு தலிலேயே ஒன்றி யிருப்பது தோன்ற "உனையன்றி ஒன்றும் தீண்டாது எனதுள்ளம்" என்று இயம்புகின்றார். அறிவைச் சிறுமைப் படுத்துவது பற்றித் துன்பத்தைச் "சிறுமை" என்கிறார். வேண்டுதல் - விரும்புதல். திருவருள் ஞானம் எய்தாமை பற்றி, "அயலா னெனக் காண்பது என்" எனச் சொல்லுகிறார். என்றும் உள்ள பொருளாதலின், சிவபரம் பொருளை "மெய்யனே" என்று பரவுகின்றார். நித்தன் என்பதும் இப்பொருள் படுவதாகும்.

இதனால் தமது சிறுமையை விரைந்து தீர்த்தருள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டவாறும். **(7)**

2712. **நாட்டார் நகைசெய் வர்என்றே அருள் நல்கி லாய்நீ**
வீட்டார் நினைஎன் னினைப்பார் எனைமேவி லாயேல்
தாட்டா மரைஅன் றித்துணை ஒன்றும்சார்ந் திலேன்என்
மாட்டா மைஅறிந் தருள்வாய் மணிமன்று ளானே.

உரை : மணிகள் இழைத்த பொன்னம்பலத்திலுள்ள பெருமானே, நாட்டிலுள்ளவர்கள் கண்டு எள்ளி நகையாடுவர் என்று கருதியோ நீ எனக்குத் திருவருள் நல்காதொழிகின்றாய்; என்பால் அருள் கொள்ளா யாயின் முத்தி வீட்டிலுள்ள பெருமக்கள் நினது செயல் நோக்கித் தமக்குள் என்னை நினைப்பார்கள்? உனது திருவடித் தாமரைகள் அன்றி வேறு ஒன்றையும் நின் உயிர்த் துணையாக நான் கருதுவதில்லை; எனது இந்த மாட்டாமை யறிந்து திருவருள் வழங்குவாயாக. எ.று.

அழகுறுத்தற் பொருட்டு, இடையிடையே மணிகள் பதித்த பொற் சபையாதலால் சிவபிரான் நின்று ஆளுகின்ற திருச்சிற்றம்பலத்தை "மணி மன்று" என்று குறிக்கின்றார். வந்து வழிபடுவார்க்கு மன்றிலாடும் பெருமானகக் காட்சி தருதலின, "மன்றுள்ளானே" என்கின்றார். எனது எளிமையும் புன்மையும் ஒருபாலும், உனது அருமையும் பெருமையும் ஒருபாலும் நோக்குவோர் எனக்கு நீ திருவருள் வழங்குதல் கண்டு இகழ்வர் என்று எண்ணி எனக்கு அருள் செய்யாதிருக்கின்றாய் போலும் என்பாராய், "நாட்டார் நகை செய்வர் என்றே நீ அருள நல்கிலாய்" எனவும், பேரருளாளனாகிய பெருமான் தன்னைச் சரண் அடையும் ஆன்மாவின் சிறுமைகளை நோக்கி அருளாமையும் உண்டு போலும் என

நினைப்பாரன்றே என்பார், "எனை மேவிலாயேல் வீட்டார் நினை என் நினைப்பர்" எனவும் இயம்புகின்றார். வீட்டார் - வீடு பேறு பெற்ற முத்தான்மாக்கள். மேவுதல் - விரும்பதல். தாட் டாமரை - திருவடி களாகிய தாமரை மலர். மலர் போலும் திருவடி யென்பது பொருள். நின் திருவடியன்றி எனக்குப் பற்றுக் கோடாகும் சார்பு வேறில்லை என வற்புறுத்துவார், "துணை யொன்றும் சார்ந்திலேன்" என்றும், அதற்குக் காரணம் எனது சார மாட்டாமை என்றற்கு "மாட்டாமை அறிந்தருள்வாய்" என்று உரைக்கின்றார். மாட்டாமை - இயலாமை. இப்பாட்டு, "தாட் டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி நாட்டார் நகை செய்ய நாம் வேலை வீடெய்த ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங் காண் அம்மானாய்" என்ற திருவாசகத்தை நினைப்பிப்பது காண்க.

இதனால் திருவடி யன்றிப் பிறிது ஒன்றையும் தேர்ந்து அறிந்து சார மாட்டாமை தெரிவித்தவாறும். (8)

2713. மன்று டியமா மணியே தனிவான வாஓர்
மின்றாழ் சடைவே தியனே நினைவேண்டு கின்றேன்
பொன்று தமெய்அன் பருக்கன் புளம்பூண்டு நின்று
நன்றாய் இரவும் பகலும் உனைநாடும் ஆறே.

உரை : தில்லையம்பலத்தில் ஆடல் புரிகின்ற பெரிய மாணிக்க மணி போன்ற பெருமானே, ஒப்பற்ற தேவனே, மின் போல் ஒளிரும் சடையை முடியிலே யுடைய வேத முதல்வனே, நின்பால் கெடாத மெய்யன்புடைய அடியவர்க்கு மனத்தால் அன்பு செய்து அவர் வழி நின்று இரவும் பகலும் நன்றாக உன்னையே நினைந்தொழுகும் திறத்தினை எனக்கு அருளுமாறு உன்னை வேண்டுகின்றேன். எ.று.

மணி மன்றில் நின்றாடும் கூத்தப் பெருமானையே நினைந்து பாடுதலின் "மன்றாடிய மாமணியே" எனவும், தேவர்களுக்கே அறியாத தேவனாதல் பற்றி, "ஓர் தனிவானவர்" எனவும், வானத்தின் மின்னல் கொடி போல விளங்குதலால் சிவனது திருமுடிச் சடையை "மின்தாழ் சடை" எனவும், வேத முதல்வனாதலால், "வேதியனே" எனவும் புகழ்கின்றார். பொன்று தல் - கெடுதல். மெய்யுணர்வால் பேரன்பு செலுத்தும் திருத்தொண்டர்களை "மெய்யன்பர்" என்று குறிக்கின்றார். முத்தியிலும் சிவத்தோடு ஒன்றி உடனாயிருத்தல் பற்றித் தொண்டர் பெருமக்களை, "பொன்றாத மெய்யன்பர்" என்பது பொருத்தமாக உளது. சிவத்தொண்டரையும் சிவ மெனவே தேறி வழிபடுதல் சிவஞானச் செந்நெறியாதலால் மெய்யன் பருக்கு "அன்பு பூண்டு நின்று" என்று முற்பட மொழிகின்றார். அல்லும் பகலும் இடையறவின்றிச் சிவனை நினைந்தொழுகுவது மெய்த்தொண்டர் இயல்பாதலால் அவரோடு ஒப்ப யானும் அது செய்தலை விரும்புகின்றேன். அதற்குரிய நன்ஞான நல்லொழுக்கம் தனக்கு அடைய வேண்டுமென விழைகின்றமை புலப்படுத்தற்கு "நன்றாய் இரவும் பகலும் உனை நாடு மாறு நினை வேண்டுகின்றேன்" என உரைக்கின்றார்.

இதனால், இரவும் பகலும் இடையறவின்றி இறைவனை நினைந் தொழுகும் திறம் அருளுமாறு முறையிட்டவாறும். (9)

2714. மாறு மனமா யையினால் மதிமாழ்கி மாழ்கி
ஏறு மல்இறங் குகின்றேன் இதற்கென் செய்வேன்
தேறு வுளத்தேன் றனைஏ றிடச்செய்தி கண்டாய்
பேறு மணிஅம் பலமே வியபெற்றி யானே.

உரை : பெருஞ் செல்வமாகிய மணி மன்றத்தில் கூத்தாடல் விரும்பிய தன்மையையுடைய பெருமானே, மாறுதலில்லாத மனமயக்கத்தினால் அறிவு மயங்கி மயங்கித் தெளிவாகிய கரையேற மாட்டாமல் மேன் மேலும் மயக்கத்தில் ஆழ்கின்றேனாதலால் இன்னது செய்வதென்றறியாமல் வருந்துகின்றேன்; இவ்வாறு தெளிவு பெறாத மனத்தையுடைய என்னைத் திருவருள் ஞானமாகிய கரையேற அருளுக. எ.று.

அருட் செல்வமாகிய பொன்னம்பலம் என்றற்கு "பேறு மணியம் பலம்" என்று சிறப்பிக்கின்றார். அம்பலத்தில் என்று விருப்புடன் ஞான நடனம் புரிதல் பற்றி, "அம்பலம் மேவிய பெற்றியானே" எனவுரைக் கின்றார். பெற்றி - தன்மை. மனமாகிய கருவி மாயா காரியமாதலால் அதனிடத்து உளதாகும் மயக்கத்தில் மனமாயை, கணந்தோறும் மாறும் இயல்புடைய குணங்களால் தெளிவும், கலக்கமும், மயக்கமும் எய்துவது பற்றி "மாறு மனமாயை" என்று சொல்லுகின்றார். மயக்கத் தன்மை பெரிதாதல் பற்றி "மாழ்கி மாழ்கி" என அடுக்கி உரைக்கின்றார். அறிவை ஆழ்த்துவது மயக்கத்திற்கும், உயர்த்துவது தெளிவு நிலைக்கும் இயல் பாதலும் பற்றி "ஏறுமல் இறங்குகின்றேன்" என்கிறார். மயக்கமும் தெளிவு மாகிய இயல்புகளை மாற்றும் வன்மை மக்களிடம் இல்லாமை நோக்கி, "இதற்கு என்செய்வேன்" எனக் கையறவு படுகின்றார். இக் கலக்க மயக்கங்களால் தெளிவுறாமை தோன்றத் தம்மைத் "தேறு வுளத்தேன்" எனவும், இஃது இறைவனது திருவருளாலன்றி எய்தாமை பற்றி "ஏறிடச் செய்தி கண்டாய்" எனவும் இயம்புகின்றார்.

இதனால் மனமாயை நீங்கித் திருவருள் ஞானக் கரையேறுதற்கு அருள் செய்க என வேண்டிக் கொண்டவாறும். (10)

2715. ஆனே றிவந்தன் பரை ஆட் கொளும்ஐய னேஎம்
மானே மணிமன் றில்நடம் புரிவள்ள லேசெங்
தேனே அமுதே முதலா கியதெய்வ மேநீ
தானே எனைஆண் டருள்வாய் நின்சரண் சரணே.

உரை : எருதின் மேல் இவர்ந்து வந்து, அன்பராயினாரை ஆண்டருளும் தலைவனே, எங்கள் பெருமானே, மணி பதித்த பொன்னம் பலத்தில் கூத்தியற்றும் அருள் வள்ளலே, செந்தேனும் தேவாமுதும் பிறவுமாகிய தெய்வமே, அருள் கொண்டு நீயே எழுந்தருளி என்னை ஆட் கொள்க; நின் திருவடியே எனக்குப் புகலிடமாகும். எ.று.

தில்லையம்பலத்துக் கூத்தப்பெருமானை நோக்கித் திருவருள் புரிய வேண்டி முறையிடுகின்றாராதலால் "மணி மன்றில் நடம்புரி வள்ளலே" என்றும், சிவபெருமான்பால் தமக்குள்ள ஆர்வ மிகுதி புலப்பட, "எம்மானே, செந்தேனே அமுதே முதலாகிய தெய்வமே" என்றும் பாராட்டுகின்றார். தன்னிடத்து மெய்யன்புடையராகிய அடியார்களை யருளுதற்கு அறவுருவாகிய எருதின் மேல் இவர்ந்து போந்து அருள் செய்யும் இயல்பு குறித்து, "ஆனேறு இவர்ந் தன்பரை ஆட்கொளும் ஐயனே" எனவும், அவ்வியல்பினால் அடியேனையும் நீயே வந்து திருவருள் வழங்குதல் வேண்டும் என்பாராய், "நீ தானே எனை ஆண்டருள்வாய்" எனவும் வேண்டுகின்றார். சிவனைத் தவிர தனக்குப் புகலாவது வேறொன்றுமில்லை என வற்புறுத்தற்கு "நின் சரண் சரணே" என்று கூறுகின்றார்.

இதனால், இறைவன் தானே உவந்தருளித் திருவருள் ஞானம் நல்க வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (11)

திருச்சிற்றம்பலம்

14. பொதுத் தனித் திருவெண்பா

அஃதாவது பொது வகையில் பல கருத்துக்களைத் தனித்தனி பாடித் தொகுக்கப்பட்ட வெண்பாத் தொகுதி.

இதன்கண் பாசப் பிணிப் பியல்பும், திருவருள் நோக்கச் சிறப்பும், திருவருள் ஞானத்தின் இன்றியமையாமையும், சிவனை அறுகு கொண்டருச்சிப்பதன் நலமும், இறைவன் புகழை யோதுவ தொன்றே எல்லாப் பேற்றுக்கும் வாயிலாம் திறமும், சிவனடி சேரும் செந்நெறி மாண்பும் பிறவும் ஒருபாலாக, வாட்டம் கண்டு வாளா இருத்தல் அருள் நெறியாகா தென்பதும், செய்பிழையினும் அருட் பெருமை பெரிதென்பதும், பிறவித் துன்பம் பொறுக்க மாட்டா தென்பதும், திருவருட் பேற்றுக்குத் தவம் புரியாமை நினைந்து வருந்துவதும் சிவனை வணங்கக்கல்லாமைக்கு வருந்துவதும், துன்பத்தின் நீங்கி அமைதி பெற ஒரு மந்திரம் நல்குக என்பதும் பிறவும் தனித்தனியாகப் பாடப்படுகின்றன.

நேரிசை வெண்பா

2716. வந்திக்கும் மெய்யடியார் மாலற்ற ஓர்மனத்தில்
சந்திக்கும் எங்கள் சயம்புவே—பந்திக்கும்
வன்மலக்கட் டெல்லாம் வலிகெட் டறநினது
நின்மலக்கண் தண்ணருள்தான் நேர்.

உரை: எப்போதும் வழிபடுகின்ற மெய்ம்மை யமைந்த அடியார்களின் மயக்கற்ற சிந்தையின்கண் எழுந்தருளும் தான்தோன்றியாகிய சிவபெருமானே, உயிரறிவைப் பிணிக்கின்ற வலிய மலம் காரணமாக எய்தியபாசப் பிணிப்பனைத்தும் வலியழிந்து கெடுமாறு நினது தூய கண்களிடத் தொழுகும் தண்ணிய திருவருளைச் செய்தருள்க. எ.று.

உண்மை ஞானம் நிறைந்து மெய்ம்மை யொழுக்கத்தால் மேம்படும் சிவத் தொண்டர்கள் எக்காலமும் சிவ வழிபாட்டில் தோய்ந்திருக்கும் இயல்பினராதலால், அவர்களை "வந்திக்கும் மெய்யடியார்" எனச் சிறப்பிக்கின்றார். வந்தித்தல் - வந்தனம் என்ற வடசொல் லடியாக வந்த வினைச்சொல். மொழி வேறுபாடு கண்டும் காய்தல் உவத்தலின்றி யாவரும் வழங்கத் தக்க செம்மொழி யென்ற சான்றாண்மை நிலவிய காலத்தவராதலின், வடசொற்களை வள்ளற் பெருமான் இனிது பெருக வழங்குகின்றார். பிற்காலத்தே தோன்றிய பார்ப்பனர் சிலர் தமிழ் தனி மொழியன்று; வடமொழியின் வழித் தோன்றியது எனப் பொய் வழக்கிட்டுக் கற்றவர் மனத்தைப் புண்படுத்தினமையின், வடமொழியை விலக்கும் மனப்பான்மை தோன்றித் தமிழறிஞரிடத்தே வலி பெறுவதா

யிற்று. "வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு பந்தித் திருந்த பாவம் தீர்க்கும் பரமன்" (அண்ணு) என ஞானசம்பந்தர் வழங்குதல் காண்க. மால் - மயக்கம். அஃதாவது பாசக் கலப்பால் மனத்தின்கண் உளதாவது. வந்தனை - வழிபாடுகள். பதிஞான நல் வினைகளாய் மால் விளைவிக்கும் பசுபாச வினைகளைப் போக்கும் மருந்தாக லின், "வந்திருக்கும் மெய்யடியார் மாலற்ற மனம்" என வுரைக்கின்றார். அப் பெருமக்களை மெய்கண்டாரும், "மாலற நேயம் மலிந்தவர்" (சிவ. போ. 12) என்று குறிப்பது அறிக. கலக்க முருத ஒருமை மனம் என்றற்கு "ஓர் மனம்" என்கின்றார். சந்தித்தல், நேர்படுதல். மெய்யடியார் திருவுள்ளத்தில் எழுந்தருளி அருட்காட்சி நல்குவதுபற்றி, சிவனை, "மனத் தில் சந்திக்கும் எங்கள் சயம்புவே" எனப் பேற்றுகின்றார். சயப்பு - பிறர் தோற்றுவிப்பதின்றித் தானே தோன்றிய மெய்ப்பொருள். "மெய்ந்நெறிக் கேதக்கிருந்தார் ஆக்கூரில்தான் தோன்றி மாடம்" என வருவது காண்க. பந்திக்கும் வன்மலக்கட்டு - பிணித்திருக்கும் வன்மையான மலமாயை கன்மங்களான பாசக் கட்டு, இவற்றுள் மலபந்தம் அனுதியாய் நீக்கற் கரிதாய இயற்கைப் பிணிப்பு என்றும், அது காரணமாக மாயை கன்மங் களின் தொடர்பும் பிணிப்பும் ஏற்பட்டமையின் அவற்றைச் செயற்கைப் பிணிப்பு என்றும் அறிவு நூல்கள் கூறுகின்றன. அவற்றின் வன்மை கெட்ட வழி, உயிர்றிவைச் சுருக்கி மறைக்கும் செயலறுதலால், "வன்மலக் கட்டெல்லாம் வலி கெட்டற" என வுரைக்கின்றார். நோன்மையால் மல முதலியவற்றின் எத்தகைய தொடர்பும் இல்லாத தூயனுதலால் இறைவனது திருவருள் நோக்கத்தை "நினது நின்மலக் கண்ணின் அருள்" எனவும், தண்ணிய ஞானவெளி செய்வது பற்றித் "தண்ணருள்" எனவும், சிறப்பித்து, மல நீக்கமும் திருவருள் ஞானப் பேறும் எனக்கு உண்டாகத் திருவுள்ளம் பற்றுக என்பார், "நேர்" என்று கூறுகின்றார்.

இதனால், பாசப் பிணிப்பின் இயல்பும் அதனை நீக்க வல்ல திருவருள் நோக்கத்தின் இயல்பும் செயலும் தெரிவித்தவாறும். (1)

2717. சங்கரா முக்கட் சயம்புவே தாழ்சடைமேல்
பொங்கராத் திங்கள் பொலிந்தோனே—வெங்கரா
வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க்
காய்நின்று சந்துரைத்த தார்.

உரை: சங்கரனே மூன்று கண்களையுடைய சயம்பு மூர்த்தியே, முதுகிடத்தே தாழ்ந்த சடை முடிக்கண் படம் விரிந்த பாம்பையும் பிறைத்திங்களையும் அழகு விளங்க வைத்துள்ளவனே, வெவ்விய முதலை யின் வாயிலிருந்து சிறுவனை வருமாறு பாடிய வன்றொண்டர் பொருட்டுத் தூது சென்று பேசியது நீதானே, வேறு யாவர் காண். எ.று.

சங்கரன் - சுகத்தையே செய்யும் இயல்பினனுன சிவன். சயம்பு - தோற்றுவிக்கத் தோன்றுமல் தானே தோன்றிய தான்றோன்றிப் பெரு மான். படம் விரிந்து நிற்கும் பாம்பு என்றற்குப் "பொங்கரா" என்று கூறுகிறார். திங்கள் - பிறைச் சந்திரன். திங்களைக் கலை தேய்ந்து கெடாவாறு விளங்கச் செய்தது பற்றி, "திங்கள் பொலிந்தோன்" என வுரைக்கின்றார். பிற வினைப் பொருளில் வந்ததன்வினை. நீராடிய

சிறுவனை இரக்கமின்றி யுண்டமையால் முதலையை "வெங்கரா" என்கின்றார். கொண்டது விடாத கொடுமை யுடையதாகலின், முதலை, வெங்கரா எனப்படுகிற தென்றுமாம். கரா - முதலை. கொங்கு நாட்டுத் திருப்புக்கொளியூர் மடுவில் வாழ்ந்த முதலை; புக்கொளியூர் இப்போது அவினுசி என வழங்குகிறது. அவினுசி யப்பரை வேண்டி, "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என நம்பியாரூரர் பாடியதும் முதலை கொணர்ந்து சிறுவனைத் தந்தமையால், "வெங்கரா வாய் நின்று பிள்ளை வரப்பாடும் வன்றொண்டர்" எனப் புகழ்கின்றார். இறைவனிடம் வன்மை புரிந்தமையால் நம்பியாரூரர்க்கு வன்றொண்டர். என்ற பெய ருண்டாயிற்று; "தன்மையினு லடியேனைத் தாமாட்கொண்ட நாள் சபை முன் வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்" (நாவ) என்று அவரே கூறுவது காண்க. வன்றொண்டரது அருட் பண்பு கண்டு முதலை வாய்ப் பிள்ளை வரச் செய்ததும், காதற் பண்பு கண்டு பரவையார் மனைக்குத் தூது சென்றதும் ஈண்டுக் கூறியது, தொண்டர் பொருட்டு யாதும் செய்யும் இயல்புடைய நீ என் பொருட்டு நல்லருள் செய்க என்னும் கருத்துப் பற்றி என்க.

இதனால், எனக்கு உயர் செய்கையாகிய திருவருள் ஞானம் வழங்குக என வேண்டியவாறும். (2)

2718. **நீலக் களங்கொண்ட நீடொளியே நீள்கங்கை**
கோலச் சடைக்கணிந்த கோமளமே—ஞாலத்தில்
அந்தோ சிறியேன் அருளின்றி வாடுவது
சந்தோட மோநின் றனக்கு.

உரை: கரிய கழுத்தையுடைய நெடிய ஒளிப் பிழம்பாகிய சிவபிரானே, நீண்ட கங்கை யாற்றை அழகிய சடையில் தாங்கிக் கொண்ட அழகனே, நிலவுகில், ஐயோ, சிறுமையுடையவனுகிய யான் நினது திருவருளறிவு பெருமல் வாடுவது நினக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதோ? கூறுக. எ.று.

நீலம் - விடத்தால் உளதாகிய கருமை நிறம். சுடர் விட்டொளிரும் சோதியுருவினனுதலால், சிவனை, "நீடொளியே" எனப் பராவுகின்றார். "சோதியே சுடரே சூழொளி விளக்கே" (அருட்) என்பது திருவாசகம். நெடிய வானத்தினின்றும் போந்தமையால், கங்கை யாற்றை, "நீள் கங்கை" என்று கூறுகின்றார். நீண்டு பெருகிப் போந்த கங்கையை மேற் செல்லாவாறு சடைக்கண் தாங்கி யடக்கிக் கொண்டமையால், "கோலச் சடைக் கணிந்த கோமளமே" என்று உரைக்கின்றார். கோமளம் - அழகு. சிறியேன் - அறிவாற் சிறுமையுடையேன். திருவருள் ஞானமுள் வழி எங்கும் யாவும் சிவமாய்க் காட்சி தந்து இன்புறுத்துமாகலின், "அருளின்று வாடுவது" என அறைகின்றார். இரக்க முறுவதை விடுத்து வாளா இருப்பதாக எண்ணுகின்றமை புலப்பட, "சந்தோடமோ நின்றனக்கு" எனச் சாற்றுகின்றார். சந்தோஷம் - சந்தோடம் என வந்தது; வடசொற்றிரிபு.

இதனல், நிலவுலகுக்கு எய்தும் இடர் கண்டு கங்கையைத் தாங்கிய அருளாளனுகிய நீ, என் வாட்டம் கண்டு வாளா விருப்பது அருள் நெறி யாகாதென முறையிட்டவாரும். (3)

2719. நான்சிறியேன் என்னினும்இந் நானிலத்தில் நான்செய்பிழை
தான்சிறிதோ அன்றுலகில் தான்பெரிதே—மான்கரத்தோய்
அங்ஙனமே னும்உன்அருட்பெருமைக் கிப்பெருமை
எங்ஙனம்என் றுள்ளம் எழும்.

உரை: மானைக் கையில் ஏந்துகின்ற பெருமானே, நானில வளம் பெற்ற உலகில் நான் சிறியவனுயினும், செய்துள்ள பிழைகளை எண்ணினுல், அவற்றின் தொகை சிறிதன்று; மிகவும் பெரிதாகும்; அற்றுயினும், உனது திருவருட் செயற் பெருமை நோக்குமிடத்து மிக மிகச் சிறிதாமென்று கருதப்படும். எ.று.

சிவபெருமானைச் சான்ருேர் "சிறுமான் ஏந்தி" (தலையங்க) எனச் செப்புவது பற்றி, "மான்கரத்தோய்" என்று கூறுகிருர். அறிவாற்றல் களிற் சிறுமையுடையவன் என்றற்குச் "சிறியேன்" எனக் குறிக்கின்ருர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்குமே வளமுடையவை; பாலைப் பகுதி அன்ன தன்மையால், அதனை விலக்கி ஏனைய நான்கையும் சிறப்பாகக் கொண்டு "நானிலம்" என்பது மரபு. அதனுல் "இந்நானிலத்தில்" என்று உரைக்கின்ருர். நான் செய்துள்ள பிழைகளை எண்ணினுல் அவற்றின் தொகை உலகில் மிகப் பெரிதாகும் என்றற்குச் "செய்பிழை தான் சிறிதோ அன்று, உலகிற் பெரிது" என்று கூறுகின்ருர். திருவருள் விளைவிக்கும் நலங்களையெண்ணுமிடத்து, அவை எண்ணற் கடங்காத தலைமைத் தன்மையும் மிகுதியுமுடையவாய்ப் பெருமையால் உயர்ந் தோங்குகின்றன என்பாராய், "உன் அருட்பெருமைக்கு" எனவும், என் செய்பிழைகளின் பெருமை மிகவும் புல்லிதாம் என்பாராய், "அருட் பெருமைக்கு இப்பெருமை எங்ஙன மென்று உள்ளம் எழும்" எனவும் இயம்புகின்ருர். மிகுதிபற்றியும் தலைமை பற்றியும் பெருமை காணப் படும்; செய்பிழைப் பெருமை மிகுதி பற்றியது; அருட் பெருமை - மிகுதி பற்றியும் தலைமை பற்றியும் தன்மை பற்றியும் காண நிற்பது.

இதனுல், அருட் பெருமையை எண்ணுமிடத்து என் பிழை மிகுதி எளிதிற் பொறுத்தாற்றும் சிறுமை யுடையது எனப் புகன்றவாரும். (4)

2720. ஆவித் துணையேஎன் ஆரமுதே நின்வடிவைப்
பாவித்துள் நையேன்இப் பாவியேன்—சேவித்து
வாழ்த்தேன்நின் பொன்னடியில் வந்தென் தலைகுனித்துத்
தாழ்த்தேன்என் செய்தேன் தவம்.

உரை: என் உயிர்த் துணையே, யான் பெறற்கரிய அமுத மானவனே, நின் தெய்வவுருவை மனத்தின்கண் சிந்தித்து மெலி கின்றேன்; பாவியாகிய யான் ஞானத் தெளிவு பெறுதற்கு எத்தவமும்

செய்தேனில்லை; நின்னை வணங்கி வாழ்த்தினேனில்லை; நின் அழகிய திருவடித் திருமுன் வந்து தலைவணங்கி வழிபடுவதும் செய்தேனில்லை. எ.று.

உயிர்க்குயிராய் அறிவின்கண் அருளுடன் அமர்வது பற்றிச் சிவபரம் பொருளை, 'ஆவித் துணையே'' என்றும், நினைக்குந்தோறும் நினைவில் தேனூற நிற்பதால், "என் ஆரமுதே" என்றும் இயம்புகின்றார். சிவமூர்த்தத்தை "நின் வடிவு'' என்று குறிக்கின்றார். அதனைச் சிந்தையில் வைத்துத் தியானிப்பது பாவனையாகும். சிவ வடிவைச் சிந்தையிற் கொண்டு நினைந்து நினைந்து உள்ளம் உருகுவது திருவருட் டவமாகும்; அதனை யான் செய்யவில்லை யென்பாராய், "நின் வடிவைப் பாவித்து உள் நையேன்'' என வுரைக்கின்றார். இதனைச் செய்யாது வெறும் பாவமே செய்தேன் என்பார், "பாவியேன்'' என்று தம்மை நொந்து கொள்ளுகிறார். சிவ வருட் பாவனை செய்யா தொழியினும், சிவனது திருமுன் பணிந்து சேவித்து வாயால் வாழ்த்துவதும், திருவடியில் தலை குனிந்து அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்குவதும் செய்தேனில்லை எனப் புலம்புவாராய், "சேவித்து வாழ்த்தேன், நின் பொன்னடியில் வந்து என் தலைகுனித்துத் தாழ்த்தேன்'' என்றும், சிவஞானப் பேற்றுக்குரிய இத் தவங்களைச் செய்யாமை தோன்ற, "தவம் என் செய்தேன்'' என்றும் இரங்குகின்றார்.

இதனாற் சிவ வழிபாடாகிய திருவருள் ஞானத் தவம் செய்யாமை நினைந்து வருந்தியவாறும். (5)

2721. **உன்னைநினைந் திங்கே உலாவுகின்றேன் அன்றிளந்தாய்**
பின்னை நினைப்பொன்றும் பெற்றிலேன்—என்னை
விடாதேநின் பொன்னடியை மேவார்சேர் துன்பம்
கொடாதே எனைஏன்று கொள்.

உரை : எந்தையே, இவ்வுலகில் உன்னையே நினைந்து கொண்டு வாழ்கின்றேனேயன்றி, வேறே நினைப் பொன்றும் கொண்டுள்ளேனில்லை; ஆதலால் என்னைக் கைவிடாதே; நின்னுடைய அழகிய திருவடியை விரும்பாதவர்கள் அடையும் துன்பத்தை யான் அடையாதவாறு என்னை ஏற்றருள்வாயாக. எ.று.

சிவனையே எண்ணுவதும், அவனது திருவருள் ஞானத்தையே சிந்திப்பதுமே தொழிலாகக் கொண்டு வாழ்கின்றேன் என வுரைக்கின்றாராதலால், "உன்னை நினைத்திங்கே யுலாவுகின்றேன்'' எனக் கூறுகின்றார். "இங்கே'' என்பதன் ஈற்றேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. திருவருளையன்றி உலகியல் வாழ்க்கைக்குரிய பொருள் வகைகளை எண்ணுமை தோன்ற, "பின்னை நினைப்பொன்றும் பெற்றிலேன்" எனப் பேசுகின்றார். விடுதல் - கைவிடுதல். இறைவன் திருவடியை விரும்பாதவர் பல்வேறு மனக்கவலைகட் கிரையாகித் துன்பம் அடைவது பற்றி, "பொன்னடியை மேவார் சேர் துன்பம்'' எனவும், அத்தகைய துன்பம் தனக்கு எய்தலாகாது என்பாராய், "துன்பம்கொடாதே எனை

ஏன்று கொள்'' எனவும் எடுத்துரைக்கின்றார். ஏற்றுக் கொள் என்பது ஏன்று கொள் என வந்தது.

இதனால், இறைவனை நினையாது வேறு பொருள்களை நினைந்து துன்ப மடைதலாகாது எனத் தெரிவித்தவாறும். (6)

2722. என்னரசே நின்னடிக்கீழ் என்னிடரை நீக்கெனநான்
சொன்னதலால் தாயுடனும் சொன்னேனோ—இன்னும்இந்தத்
துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்னால்
அன்பர்க் கருள்வோய் அருள்.

உரை: என்னுடைய அரசனே, நினது திருவடிக் கீழே நின்று எனக்குள்ள துன்பங்களைப் போக்கி யருள்க என்று நான் சொல்லிக் கொண்டதுண்டே யன்றி என்னைப் பெற்ற தாயிடத்தும் சொன்னதில்லை; இனியும் இந்தத் துன்பமாகிய சுமையை என்னால் சுமக்க முடியா தென் பேனாயின், அன்பராயினார்க்கு அருள் வழங்கும் நீ எனக்கும் அருளுதல் வேண்டும். எ.று.

செய்வினை கண்டு முறை செய்யும் அருள் இறைவனாதலால் சிவனை, ''என்னரசே'' என்று போற்றுகின்றார். மண்ணிற் பிறந்து வாழ்வார்க்கு உளதாகும் பிறவித் துன்பம் இங்கே ''இடர்'' எனப்படுகிறது. உற்ற துன்பத்தைப் பெற்ற தாயிடம் சொல்வது பிள்ளைகளின் இயல்பாதலின், ''தாயுடனும் சொன்னேனோ'' என வுரைக்கின்றார். துன்ப மிகுதி தோன்ற, ''இன்னும் இந்தச் சுமையைச் சுமக்க முடியாது'' என்று கூறுகின்றார். சிவபெருமான் தன்னுடைய அன்பர்க்கு அருள் வழங்குவது உலகறிந்த செய்தியாதலால், ''அன்பர்க் கருள்வோய்'' என்கின்றார். யானும் அன்பனாதலால் எனக்கும் அருள் செய்க என்பது குறிப்பு.

இதனால், பிறவித் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமை கூறி அருள் வேண்டியவாறும். (7)

2723. அன்னேஎன் அப்பாஎன் ஆருயிர்க்கோர் ஆதரவே
என்னேநின் உள்ளம் இரங்கிலையே—பொன்னே
உடையா ரிடைஎன் உளநொந்து வாடிக்
கடையேன் படுந்துயரைக் கண்டு.

உரை: என் அன்னையே, அப்பனே, என்னுடைய அரிய உயிர்க்கு ஆதரவானவனே, கடையவனாகிய யான் பொன்னும் பொருளு முடைய செல்வரிடம் சென்று மனம் நொந்து வாடி வருந்துகிற துன்ப நிலையைக் கண்டும் இன்னும் திருவுள்ளம் இரங்குகின்றாயில்லையே; இதனை என்னென்பது. எ.று.

உடலோடு கூடிய உயிர்க்கு அம்மையப்பனாகியும், உடலின் நீங்கிய ஆன்மாவாகிய உயிர்க்குப் புகலிடமாயும் விளங்குமாறு, புலப்பட ''அன்னே

என் அப்பா என் ஆருயிர்க்கோர் ஆதரவே" என்று பரவுகின்றார். "புக்கில மைந் தின்று கொல்லோவுடம்பினுள் துச்சில் இருந்த வுயிர்க்கு" (குறள்) என்பது காண்க. குணம் செயல்களாற் கீழ்ப்பட்டவன் எனத் தம்மைக் குறித்தற்குக் "கடையேன்" எனக் கூறுகின்றார். பொன்னுடையார், பொன்னும் பொருளும் உடைய செல்வர். பொன் மேலன்றிப் பிற மக்கள் பால் அன்பிலாராதலால், அவர்பாற் சென்று ஒருதவியும் பெருது வருந்தினமை புலப்பட, "உடையாரிடை என் உளம் நொந்து வாடி" என்றும், "படுந்துய" ரென்றும் விரித்துரைக்கின்றார். உதவி யொன்றும் எய்தாமையின், "நின்னுள்ளம் இரங்கிலை" எனவும், அருளாளனாகிய உனது அருளுதவி எய்தாமை வியப்பைத் தருகிறது என்பார், "என்னே" எனவும் இயம்புகின்றார்.

இதனால், அருளாமை வியப்பாக இருக்கிற தென முறையிட்டவாறும். (8)

2724. பகுதி தகுதி விகுதிஎனும் பாட்டில்
இகலில் இடையை இரட்டித்—தகவின்
அருச்சித்தால் முன்னும் அதுகடையாம் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து.

உரை : பகுதி தகுதி விகுதி என வரும் இப்பாட்டில் சொற்களை மாற்றாமல், இவற்றின் இடையிலுள்ள மூன்று குக்களையும் இரட்டினல் வரும் அறுகு கொண்டு முறையாகத் திருவுடைய சிற்சபையில் நடம் புரியும் பெரிமானை அருச்சித்தால் இவற்றின் முதலெழுத்துக்கள் கூட வரும் பதவி கடையெழுத்துக்களாகிய தி மூன்றும் கூட வரும் முத்தியாம். எ.று.

இப்பாட்டில் என இகரச்சுட்டு வருவித்துக் கொள்க. இகலுதல் - ஈண்டு பகுதி முதலிய மூன்றும் நிலைமாறுதல். மாறிய வழிப் பதவி என்ற சொல் எய்தாது. இரட்டுதல், மூன்று கு அறுகு ஆதற்கு என அறிக. அருச்சனைக்கு முன் நீராடித் திருநீறணிந்து தூய மனத்தராய் நிற்றல் வேண்டுதலால், "தகவின் அருச்சித்தால்" என வுரைக்கின்றார். முன்னும் அது. முன்னே யுள்ள எழுத்து; பதவி என்பவை. கடையாம் அது, தி; தகவுடன் அறுகு கொண்டு அருச்சித்தால் பெறும் பதவி முத்தி என்க. பதவி - இடம் - சிற்சபை. ஞானசபை. ஞான சபையாதலால், கண்டார் விரும்பும் பொற்புடைமை தோன்றத் "திருச்சிற்சபை" எனச் சிறப்பிக்கின்றார்.

இதனால், கூத்தப் பெருமானை எண்ணி அறுகு கொண்டு அருச்சனை செய்தால் முத்தி பெறலாம் எனத் தெரிவித்தவாறும்.

2725. தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாம்
தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம்—போதாதா
நந்தா மணியே நமச்சிவா யாப்பொருளே
எந்தாய் எனப்புகழவே.

உரை : நெஞ்சமே, பிரமன் நமது தலையில் எழுதாது விட்ட குறைக்கு நாம் யாது செய்யலாம்; உதவி நாடி உலகிற் செல்வர்களை யடைந்து தரும தாதாவே தருக எனப் புகழ்ந் தலைந்தோம்; என்ன பயன்? கெடாத மாணிக்க மணியே, நமசிவாய என்ற பெயர்ப் பொருளாகிய சிவபெருமானே, எந்தையே என்று போற்றுவ தொன்றே போது மல்லவா? எ. று.

தா என வரும் எழுத்து ஏழையும் கூட்ட வரும் சொல் எழுதா; அது குறை யென்பதனோடு சேர வுளதாவது எழுதாக் குறை. எழுதாக் குறை என்பது பிறவிக் காலத்தில் படைப்புத் தெய்வமாகிய பிரமன் செல்வ வாழ்வு பெறுக எனத் தலையில் எழுதா தொழிந்தது. "முன்னம் பங்கயத் தோன், எழுதாப்படி வருமோ சலியாதிரு என் ஏழை நெஞ்சே" எனப் பட்டினத்தார் கூறுவது காண்க. தாதா - கொடை வள்ளல். பெறு வதைக் கொடாது தொகுத்துத் தொகை கண்டு அதன் மிகுதிக்கண் ஆசையுற்று உள்ள மிழந்தோர் யார்க்கும் யாதும் ஈயாராக, அவர்களைக் "கொடை வள்ளலே சிறிது தா" என இல்லாதவர் இரப்பதும், ஈயாச் செல்வர் மறுப்பதும் உலகியலாதலின், "தாதா தா என்று உலகில் தான் அலைந்தோம்" என்று உரைக்கின்றார். இல்லாதவர் இல்லாதவராதற்குக் காரணம் சிவனது திருவருட் கிலக்காகாமை; சிவபெருமானை மனத்தால் நினைந்து, அவன் பொருள்சேர் புகழ்களை வாயால் மொழிந்து, அவன் திருவடியை மெய்யால் வணங்குதல் இல்லாமையால் அப்பெருமான் திருவருட் பேற்றுக்கு விலக்காயினர் என அறிக. உள்ளன்புடன், சிவ பரம் பொருளை நினைந்து வணங்கி, "நந்தா மணியே நமச்சிவாயப் பொருளே, எந்தாய் எனப் புகழவே போதாதா" என்று புகன்று மொழி கின்றார். நந்துதல் - கெடுதல்; குற்றப்படுதல். நமச்சிவாயப் பொருள் - நமச்சிவாய என்ற பெயர்க்குரிய பொருள். பெயரெல்லாம் பொருள் மேல் நிற்பன வாதலால், நமசிவாய என்ற பெயர் குறிக்கும் பரம்பொருளே என்பார், "நமச்சிவாயப் பொருளே" என இயம்புகின்றார். "எந்தையார் திருநாமம் நமச்சிவாய" என்று திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் உரைப்பது காண்க. என்னை உலகிற் பிறப்பித்த தந்தையே என வேண்டுக என்பாராய், "எந்தாய்" என இறுதிக்கண் வைத்து இசைக் கின்றார். நல்ல தந்தை தான் பெற்ற மகன் விரும்புவனவற்றை விரைந்து தருவன் என்ற குறிப்புப் பற்றி, "எந்தாய்" எனப் புகழ்ந் தோதுவது ஒன்றே போதும்; தருக என்று கேட்பதும் மிகை என்றற்கு, "புகழவே போதாதா" என அறிவுறுத்துகின்றார். ஞானசம்பந்தர் முதலிய தொண்டர் வரலாறுகள், "இது தருக" என வேண்டியதாக உரைத்ததில்லை.

இதனால் இறைவன் பொருள்சேர் புகழை யோதுக; எல்லாம் பெறலாம் என அறிவுறுத்தவாறும். (10)

2726. பொய்கண்டாய் காமப் புதுமயக்கிற் போய்உழலக்
கைகண்டாய் என்னபலன் கண்டாயே—மெய்கண்ட
பொன்னே அனையார்பால் போய்வணங்கக் கற்றிலையோ
என்னேநின் தன்மைமன மே.

உரை : மனமே, காம வின்பம் பொய் படுவதை நன்கறிந்தாய்; அது நல்கும் புதுமை மயக்கத்திற் புக்கழுந்தி வருத்த முறுவதையும் தெளிய அறிந்தாய்; நிலையாய பயன் யாது கண்டாய்; மெய் முழுதும் பொன்னே போன்ற சிவபெருமான் பக்கல் சென்று வணங்கி வழிபடும் திறத்தைக் கல்லாது ஒழிந்தாயே; நின்னுடைய தன்மையை என்னென்று சொல்லுவது. எ.று.

துய்த்த அக்கணத்தேயே நிலையின்றிக் கெடுவது பற்றிக் காம வின்பத்தைப் "பொய் கண்டாய்" எனவும் காமக்கூட்டம் நிகழுந் தோறும் புத்தின்பம் தந்து அறிவை மயக்குவதனுல், "காமப் புதுமயக்கு" எனவும், பன்னுளும் பலகாலும் கூடி வருந்திப் பயின்றுய் என்பாராய், "புது மயக்கிற் போயுழலக் கைகண்டாய்" எனவும் எடுத்துரைக்கின்ருர். "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய் வளர்கின்றது" (9) எனத் திருக்கோவையார் கூறுவது காண்க. கைகாண்டல் - பன்னுள் பல்காற் பயிலும் அனுபவம். பொன்னிறத் திருமேனியுடையவன் சிவனுதலால், "மெய்கண்ட பொன்னே யணையார்" எனக் கூறுகிருர். "பொன் செய்த மேனியினீர்" (முதுகுன்) என்று சுந்தரர் பாடுவது காண்க. நெஞ்சார நினைந்து வாயாரப் போற்றி மெய்யார வணங்குதல் முறையாகவும், அதனைச் செய்யாமை புலப்பட, "வணங்கக் கற்றிலையோ" என்றும், கற்றற் குரியதைக் கல்லாமை குற்றமாதலின், "என்னே நின் தன்மை" என்றும் இயம்புகிருர்.

இதனுல், காம மயக்கில் ஆழ்ந்து பயின்றது போலச் சிவனை வணங்கக் கல்லாமைக்கு இரங்கியவாரும். (11)

2727. இவ்வழியில் செல்லாதே என்னுடையான் தன்னடிசேர்
அவ்வழியில் செல்என் றடிக்கடிக்குச்—செவ்வழியில்
சொன்னுலும் கேட்கிலைநீ துட்டமன மேஉனக்கிங்
கென்னுல் உறவே தினி.

உரை : துட்டத் தன்மையுடைய மனமே, துன்பம் தருவதாதலால் இவ்வழியிற் போகாதே; என்னை யுடையவனுகிய சிவபெருமான் திருவடிக்கண் கொண்டு சேர்க்கும் அந்த நல்வழியைப் பற்றிச் செல்வாயாக என அடிக்கடி நன்முறையிற் சொல்லிய போதும், நீ கேளா தொழிகின்ருய்; இனி, உனக்கு என்னேடு உறவில்லை, காண். எ.று.

துட்டத் தன்மை- தீது செய்து குற்றப்படும் தன்மை; வடமொழியில் துஷ்டத்தனம் என்பர். தீ நெறியின் தீமையைக் காட்டி விலக்கும் குறிப்பால், "இவ்வழியிற் செல்லாதே" என்று கூறுகிருர். என்னுடைய உடல் பொருள் உயிர் மூன்றையும் உடையவன் என இறைவனுக்கும் தனக்குமுள்ள தொடர்புணர்த்தற்கு, "என்னுடையான்" என இயம்புகின்ருர். உடையவன் திருவடியை யடைவது உடைமையாயினர் கடனுதல் விளங்க, "உடையான் தன்னடி சேர் அவ்வழியிற் செல்" என்றும், வழுவாமைப் பொருட்டு அடிக்கடி வற்புறுத்தினமை தோன்ற, "அடிக்கடிக்குச் சொன்னுலும்" என்றும் இயம்புகிருர். கடுத்துச்

சொன்னால் கேட்பவர் உள்ளம் வெறுப்புற்றுப் புறக்கணிக்குமாதலின், இன்னுரையால் மனம் கொள்ளக் கூறல் இன்றியமையாமையால், "செவ் வழியிற் சொன்னாலும்" எனவும், துட்டத் தன்மையால் கேளாமை கூறுவார், "கேட்கிலை நீ" எனவும், என் சொற் கேட்டு என் வழிச் செல்லாத உன்னோடு உறவு கொள்ளுதல் நலம் பயவா தென்பார், "உனக்கு இங்கு என்னால் உறவு ஏது" எனவும் இசைக்கின்றார் ஆலுருபு ஒடுவின் பொருளது. உறவு- உறுதற் கமைந்த தொடர்பு.

இதனால், சிவனடியே சேரும் செந்நெறி வற்புறுத்தப் பட்டவாறும். (12)

2728. கால்வாங் கியஉட் கதவம் கொளும் அகத்தின்
பால்வாங் கியகால் பரம்பரனே—மால்வாங்
கரிதாரம் ஊணாதி யாம்மயல்கொண் டேழைப்
பெரிதார ஓர்மொழியைப் பேசு.

உரை : வாயிற் கால்கட்கு உட்புறமிருந்து இயங்கும் கதவைக் கொண்ட வீட்டைப் போல, ஒருபால் தடை யுண்ணும் மனத்தின்கண் செல்லாத திருவடிகளையுடைய பரம்பரனாகிய சிவனே, பெரியவாகிய பொன்னும் பொருளும் உணவும் பிறவுமாகியவற்றால் மயங்குதலுடைய ஏழையாகிய யான் மிகவும் அமைதி யுறுதற்கு ஒருசொல் சொல்லு வாயாக. எ.று.

வாயிற் காலுக்கு உட்புறம் நின்று மூடவும், திறக்கவும் அமைந்த கதவையுடைய வீடு கதவு திறக்கப் பட்டா லொழியப் புக முடியாத நிலைமைத்தாம்; அதுபோல் உட்கதவாக வுள்ளத்தை யுடைய மனத்தின் கண் உள்ளம் திறவா விடத்துச் செல்லாத திருவடியை யுடையவன் சிவபெருமான் என்பது கருத்து. இனி, உயிர்க் காற்று உள்ளும் புறமும் சென்று வருவதும் உள்ளமாகிய கதவை யுடையதுமாகிய மனத்தின்கண் செல்லாத திருவடியையுடைய பரம்பரன் என்று இதற்குப் பொருள் கூறுவதும் உண்டு. தியானத்துக்குத் திறவாமல் வெறும் உலகியல் நினைவுகள் போக்கு வரவு புரிதற்கும் அவற்றுக் கேற்ப மூச்சுக் காற்றுப் போக்கு வரவு புரிதற்குமாகிய உடம்பின்பால் உள்ள மனத்தினுட் புகாத திருவடியை யுடையவன் சிவபெருமான் என இதற்கு விளக்கம் விளம்புவர். மால் வாங்கு அரி - பெரிதாகிய பொன். தாரம் - பொருள்; மனைவி மக்களுமாம். ஊணாதி உண்பொருள் முதலியன பொன்னும் பொருளும் பிறவுமாகிய ஆசையை யுண்டு பண்ணி நல்லறிவை மயக்குத லால் சிறுமையுற்றுத் துன்புறுபவன் என்றற்கு, "மயல் கொண்ட ஏழை" எனக் கூறுகிறார். கொண்ட ஏழை என்பது கொண்டேழை என வந்தது. துன்பமின்றி மிகவும் மனவமைதி பெற ஒரு மந்திரம் உப தேசித் தருள்க என்பாராய், "ஏழை பெரிதார ஓர் மொழியைப் பேசு" என வேண்டுகிறார்.

இதனால், பொருள் மயக்கத்தால் புண்ணுற்று வருந்தும் ஏழையாகிய என் வருத்தம் நீங்கி அமைதி பெற நிறைமொழி யொன்று அறிவுறுத்த வேண்டியவாறும். (13)

திருச்சிற்றம்பலம்

15. தனித் திருவிருத்தம்

கட்டளைக் கலித்துறை

2729. நீர்பூத்த வேணியும் ஆனந்தம் பூத்து நிறைமதியின்
சீர்பூத் தமுத இளநகை பூத்த திருமுகமும்
பார்பூத்த பச்சைப் பசுங்கொடி பூத்தசெம் பாகமும்ஓர்
கார்பூத்த கண்டமும் கண்பூத்த காலும்என் கண்விருந்தே.

உரை : கங்கை தங்கிய சடை முடியும், இன்பம் நிறைந்து, முழு மதியின் அழகு பொருந்தி, அமுதம் பொழியும் குறுநகை விளங்கத் திகழும் முகமும், உலகங்களைப் படைத்த பச்சைப் பசுங்கொடி போன்ற உமாதேவி தங்கும் இடப்பாகமும், கருமையான கழுத்தும், திருமாலின் கண் கிடந்து பொலியும் திருவடியும் என் கண்ணுக்குக் காட்சிவிருந்து செய்கின்றன. எ.று.

நீர் - கங்கையாறு. வேணி - சடை. ஆனந்தம் - இன்பம். சிவம் ஆனந்தமாகலின், "ஆனந்தம் பூத்த திருமுகம்" என்று புகழ்கின்றார். நிறைமதியின் சீர்- கலை நிறைந்த முழுமதியின் அழகு. இளநகை- முறுவற் சிறப்பு; குறுநகை நகையின் மாண்பு. இதனைக் "குமிண் சிரிப்பு" என்பார் திருநாவுக்கரசர். பார் முதல் அண்டங்கள் அனைத்தையும் பெற்ற பெருமாட்டியாதல் தோன்ற, "பார் பூத்த பச்சைப் பசுங்கொடி" என உமையம்மையைப் பராவுகின்றார். பசுமை நிற மிகுதியும் இளமைத் தன்மையும் இனிது விளங்கப் "பச்சைப் பசுங்கொடி" எனப் பகர்கின்றார். கொடி - ஆகு பெயரால் உமையம்மைக் காயிற்று. இடப்பாகம் திருமேனி யின் செம்பாகமாதலால், "செம்பாகம்" என்று குறிக்கின்றார். விடமுண்டு கரிதாகிய கழுத்தைக் "கார் பூத்த கண்டம்" என உரைக்கின்றார். சக்கரம் வேண்டித் திருமால் ஆயிரம் பூக் கொண்டு சிவனை யருச்சிக்க ஒன்று குறையவே தன் கண்ணில் ஒன்றைப் பறித்துத் திருவடியில் இட்ட புராணச் செய்தி புலப்பட, "கண் பூத்த கால்" எனக் கூறுகின்றார். திருமுடி முதல் திருவடி காறும் கண்ணாரக் கண்டு இன்புற்றமையின், "என் கண் விருந்து" எனக் கட்டுரைக்கின்றார்.

இதனால், சிவபெருமான் திருமுடி முதல் திருவடி வரையில் கண்ணாரக் கண்டு இன்புற்றமை கூறியவாறும்.

2730. வீழாக ஞான்றசெவ் வேணிப் பிரான்என் வினைஇரண்டும்
கீழாக நான்அதன் மேலாக நெஞ்சக் கிலேசமெல்லாம்
பாழாக இன்பம் பயிராக வாய்க்கில்அப் பாற்பிறவி
ஏழாக அன்றிமற் றெட்டாக இங்கென்னை என்செயுமே.

உரை : வீழ்து போல் தொங்குகின்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான் என்னுடைய வினை வகை யிரண்டும் கீழ்மையுற்றுக் கெடவும், நான் அவ்வினைச் சுழற்கு எட்டாத மேனிலை எய்தவும், அது காரணமாக என் நெஞ்சை வருத்தும் துன்பமனைத்தும் தீர்ந் தொழியவும் பேரின்பம் விளையவும் திருவருள் செய்வானுயின், அதன் பின்பு எடுக்கக் கடவ பிறப்புக்கள் ஏழாயினும் ஆகுக எட்டாயினு மாகுக; அவை என்னை என்ன செய்ய வல்லனவாம்; ஒன்றும் என்னைத் தொடராது. எ.று.

வீழ் - வீழ்து. ஆக உவமப் பொருளது. ஞாலுதல் - தொங்குதல். மின் போற் சிவந்தவையாதலின், "செவ்வேணி" என்று சிறப்பிக்கின்ருர். நாவுக்கரசர், "கற்றைச் செஞ்சடையான்" (தனிக்) என்பது காண்க. பிரான் - தலைவன். கீழாதல், பயனின்றி யழிதல். கிலேசம் - துன்பம். பயிராதல் - விளைதல். பற்றுக் கோடாகிய வினை முதலுயிர் - பற்றற்கெட் டாத மேனிலை எய்திய வழி, வினை பற்றுக்கோடின்றிக் கெடும் என அறிக. நான் என்றது, வினை செய்த முதலாகிய உயிர் மேல் நின்றது. ஆதார மாகிய வினை கெடும் போது, அதன் பயனுகும் துன்பம் அழிந்து படுத லால் "நெஞ்சக் கிலேச மெல்லாம் பாழாக" என்கின்ருர். இருள் நீக்கமும் ஒளி விளக்கமும் போலத் துன்ப நீக்கமும் இன்பத் தோற்றமும் உடனி கழ்ச்சியாதலால், "இன்பம் பயிராக" என இசைக்கின்ருர். வினைக்கேடு முதல் இன்பப் பேறு ஈருகவுள்ளவை சிவபிரான் திருவருள் வாய்க்கி னல்லது இல்லாமையால், "வாய்க்கில்" என அதன் அருமை தோன்றக் கூறுகின்ருர். திருவருள் வாய்த்த போது தூலப் பயனுகிய பிறவிகள் ஏழ் என்பன எட்டாயினும் பயனிலவாம் என்பார், "பிறவி ஏழாக அன்றி மற் றெட்டாக இங்கென்னை என்செய்யும்" என இறுமாக்கின்ருர்.

இதனுல் திருவருள் வாய்க்கப்பெற்ருர்க்குப் பிறவிகள் ஏழும் எட்டாயினும் அக்கரையில்லை எனத் தெரிவித்தவாரும். (2)

2731. ஆயிரங் கார்முகில் நீர்விழி நீர்தர ஐயநின்பால்
சேயிரங் கார்எனக் கென்றேநின் பொற்பதம் சிந்திக்கின்றேன்
நீஇரங் காய்எனில் என்செய்கு வேன்இந் நிலத்திற்பெற்ற
தாய்இரங் காள்என்ப துண்டோதன் பிள்ளை தளர்ச்சிகண்டே

உரை : ஐயனே, பல்லாயிரமாகத் திரண்ட மழை மேகங்களின் நீரை, என் கண்கள் சொரியச் சேய்மையில் இருத்தலால் எனக்கு இரங்க மாட்டார் சிவபிரானுர் என்று நினது அழகிய திருவடிகளைச் சிந்தித்த வண்ண மிருக்கின்றேனுக, நீ அதனைக் கண்டும் திருவுள்ளத்தில் அருள் புரியாயாயின், யான் யாது செய்வேன்; இந்நிலவுலகில் தான் பெற்ற பிள்ளையின் தளர்ச்சி கண்டு தாய் மனம் இரங்க மாட்டாள் என்றற்கு இட முண்டோ? கூறுக. எ.று.

ஆயிரம் - மிகுதி யுணர்த்தும் குறிப்பு மொழி. கார் முகில் - மழை மேகம். நின்பால் - நினது அருள் பெறும் பொருட்டு. சேய் - சேணிடம்; "பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்" (கோவை) எனச் சான்ருேர் வழங்குவது காண்க. மிக்க சேணிடத் திருத்தலால் எங்ஙனம் கண்டு

இரங்கியருளப் போகின்றார் எனக் கருதி நாளும் நின் திருவடிகளை நினைந்த வண்ணமிருக்கின்றேன் என்பார், "சேய் இரங்கார் எனக்கென்று நின் பொற்பதம் சிந்திக்கின்றேன்" எனவுரைக்கின்றார். அருளே யுருவாகிய நீ அருளாயின், வேறே யாரும் இல்லையாதலால் யானும் கையறவுற்று வருந்துகிறேன் என்றற்கு "என் செய்குவேன்" என்று கூறி, அருளா திருத்தல் அறமாகாது என வற்புறுத்தலுற்று, பிள்ளை வருத்தங் கண்டு மன முருகி இரக்கம் கொள்ளாத பெற்ற தாய் இல்லை என்ற உலகியல் முறையை, "இந்நிலத்திற் பெற்ற தாய் இரங்காள் என்பதுண்டோ தன் பிள்ளை தளர்ச்சி கண்டே" என விளம்புகின்றார்.

இதனால் திருவருள் பெறும் பொருட்டுக் கண்ணீர் சொரியும் எனக்கு அருளாமை முறையாகாது என விளம்பியவாறும். (3)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2732. செம்பவளத் தனிக்குன்றே அருளா னந்தச்
செழுங்கனியே முக்கணுடைத் தேவே மூவா
அம்புவிநீர் அனல்வளிவான் ஆதி யாய
அரசேஎன் ஆருயிர்க்கோர் அரண மாகும்
சம்புசிவ சயம்புவே சங்க ராவெண்
சைலம்வளர் தெய்வதவான் தருவே மிக்க
வம்பவிழ்மென் குழல் ஒருபால் விளங்க ஓங்கும்
மழவிடைமேல் வருங்காட்சி வழங்கு வாயே.

உரை : சிவந்த பவள நிறம் கொண்ட தனிக்குன்று போல்கின்ற பெருமானே, திருவருள் இன்பச் சுவை நிறைந்த செழுமையான பழமாய் இலங்குபவனே, கண்கள் மூன்றுடைய தேவனே, முத்து விளிதலில்லாத நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் முதலியவற்றுக்கு ஆதி முதலாகிய அருளரசே, எனது அரிய உயிர்க்கு ஒப்பற்ற பாதுகாப்பாகிய சம்பு மூர்த்தியே, சிவமாகிய சயம்புவே, சங்கரனே, வெண்ணிறக் கயிலை மலையில் வளரும் தெய்வத் தன்மை கொண்ட பெரிய தேவதாருவே, மிக்க மணம் கமழ்கின்ற மெல்லிய கூந்தலையுடைய உமையம்மை ஒருபால் அமர்ந்திருக்க உயர்ந்த இளமை கொண்ட விடை மேல் இவர்ந்து வரும் இனிய காட்சியை எனக்கு அருள்வாயாக. எ.று.

பவளம் செந்நிறத்த தாகவும், செம்பவள மென்றது இயற்கையடை. பவளக் குன்று போல் உயர்ந்து ஓங்கிய சிறப்பு பிறர் எவருக்கும் எங்கும் இல்லாமையால் "தனிக்குன்றே" எனக் கூறுகின்றார். அருள் நிறைந்து இன்பச் சுவை கனிந்துள்ளமை புலப்பட, "அருளானந்தச் செழுங் கனியே" எனச் சிறப்பிக்கின்றார். மூவாமை - மூத்து முதிர்ந்து கெடாமை. ஐம்பெரும் பூதங்கட்கும் ஆதியாய முதல்வனாதலால் "அம்புவி நீர் அனல் வளி வான் ஆதியாய அரசே" என அறிவிக்கின்றார். பூதங்களனைத்தையும் எல்லை கடவாவாறு ஆட்சி புரிவது பற்றி, "அரசே" எனல் வேண்டிற்று. உயிர்கள் உணர்வுருவினவாயினும் உணர்த்த உணரும் சிறுமை யுடையவாதலால், "ஆருயிர்க்கோர் அரணமாகும்

சம்பு'' என ஓதுகின்ருர். சம்பு - சிவனுக்குரிய பெயர்களில் ஒன்று. சிவமூர்த்தம் சயம்புவாதலால் ''சிவ சயம்புவே'' என வுரைக்கின்ருர், சங்கரன் - சுகமே செய்பவன். வெண்பனி முடிய மலையாதல் பற்றிக். கயிலை ''வெண் சயிலம்'' எனப்படுகிறது. இமயச் சாரற் காட்டில் தேவ தாரு மரங்கள் வளர்தலின் ''வெண் சயிலம் வளர் தெய்வ வான் தருவே'' என்பது இயற்கைக்குப் பொருத்தமாக வுளது. தெய்வம் - தெய்வதமென வந்தது. வம்பு - நறுமணம். உமையம்மையின் கூந்தல் இயல்பாகவே ஞான மணம் கமழ்வதாகலின், பொதுவாக ''வம்பவிழ் மென்குழல்'' எனவும், குழலையுடையாளைக் குழல் என்னும் வழக்குப் பற்றி ''மென்குழல்'' எனவும் இயம்புகின்ருர். ஒருபால் என்பது ஈண்டு இடப்பாகத்தின் மேற்று. சிவபெருமானுடைய ஊர்தி என்றும் இளமை மாருத எருதாகலின், ''மழவிடை'' எனப் புகழ்கின்ருர். விடையை அறமாகவும், உமையம் மையை அருளாகவும், சிவத்தை ஞானமாகவும் கருதுபவாதலின், விடை மேல் உமை யமர்ந்து தோன்றும் சிவக்காட்சி காண்பார்க்கு ஞான வின்பம் தருதலால், ''விடை மேல் வரும் காட்சி வழங்குவாய்'' என வேண்டுகின்ருர்.

இதனுல் இடப வாகனக் காட்சி விழைந்தவாரும். (4)

அறுசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2733. நீடுகின்ற மாமறையும் நெடுமாலும்
திசைமுகனும் நிமல வாழ்க்கை
நாடுகின்ற முனிவரரும் உருத்திரரும்
தேடஅருள் நாட்டங் கொண்டு
பாடுகின்ற மெய்யடியர் உளம்விரும்பி
ஆநந்தப் படிவ மாகி
ஆடுகின்ற மாமணியை ஆரமுதை
நினைந்துநினைந் தன்பு செய்வாம்.

உரை : ஓதுந்தோறும் நீண்டு செல்கின்ற பெரிய வேதங்களும் நெடிய திருமாலும் நான்முகனும், தூய ஞான வாழ்வை நோக்குகின்ற முனிபுங்கவர்களும் உருத்திர கணத்தாரும் சிவத்தைத் தேடுவாராக, திருவருள் நாட்டம் பெற்றுப் பாடியே வழிபடுகின்ற உண்மை ஞான அடியவர் பலரும் உள்ளன்போடு விரும்பி இன்ப வடிவினராகி துதிக்கத் திருவம்பலத்தில் ஆடல் புரிகின்ற பெரிய மாணிக்க மணியும் கண்ணாரக் கண்டு பருகும் ஆரமுதுமாகிய சிவபெருமானை நாளும் பன்முறையும் நினைந்து அன்பு செய்வோமாக. எ.று.

பன்னூறு ஆண்டுகளாக வழிவழி ஓதப்பட்டு வருதலால், வேதம் வல்ல வேதியர்களை ''நீடுகின்ற மாமறை'' என வுரைக்கின்ருர். மறையவர் செயலை மறை மேலேற்றி, ''மாமறை தேட'' என்று கூறுகின்ருர். நெடுமால்- காக்கும் தெய்வமான நாராயணன்; திசைமுகன், படைத்தற் றெய்வமான பிரமன்; இவனுக்கு முகம் நான்காதலால் ''திசைமுகன்'' எனப்படுகின்ருன். தூய ஞானவாழ்வு, பிறவாப் பேரின்பத்துக்கு

வாயிலாதலின் முனிபுங்கவர்களை "நிமல வாழ்க்கை நாடுகின்ற முனிவரர்" என்று உரைக்கின்றார். உருத்திரர், திருக்கோயில்களில் கூட்டமாய் நின்று சீருத்திரம் ஓதுபவர். இப்பெருமக்கள் திருவருட் காட்சி வேண்டிச் சிவத்தைத் தேடுகின்றன ரென்பாராய், மறை முதல் உருத்திரர் ஈருகப் பலரும் "தேட" என்கின்றார். திருவருள் நாட்டம், திருவருளே கண்ணாக எப்பொருளையும் எவரையும் காண்பது. பாடுவதே அருச்சனையாகலின், "பாடுகின்ற மெய்யடியர்" எனப் புகழ்கின்றார். உண்மை ஞானத்தால் இறைவன் திருவடியே புகலென உணர்ந் தொழுகும் பெருமக்கள், "மெய்யடியர்" எனவும், அம்பலத்தில் கூத்தப் பெருமானுடைய ஆடல் எடுத்த பாதம் கண்டு இன்ப மயமாய்த் துதிக்கின்றாராதலின், "உளம் விரும்பி ஆனந்தப் படிவமாகி" எனவும், கூறுகின்றார். ஆக எனற்பாலது ஆகி யென வந்தது. "ஆனந்தப் படிவமாகி ஆடுகின்ற" என இயைப்பினும் அமையும்; அந்நிலையில் ஆடுகின்ற என்பதற்கு ஆடுதற்கு ஏதுவாகின்ற மாமணி என ஏதுப் பொருளில் வந்த பெயரெஞ்சு கிளவியாகப் பொருள் கொள்க. மாமணி, பெரிய மாணிக்க மணி. நினைக்குந் தோறும் மெய்யன்பு ஊறிப் பெருகுதலால், "நினைந்து நினைந்து அன்பு செய்வாம்" என இயம்பு கின்றார்.

இதனால், மெய்யடியார் விரும்பி ஆனந்த பரவசராகும் கூத்தப் பெருமானை நினைந்து அன்பு செய்தல் வேண்டுமென விளம்பியவாறும். (5)

2734. மறைமுடி விளக்கே போற்றி
மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்ட போற்றி
கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண் டோங்கும்
மேரருட் குன்றே போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட
சிவசிவ போற்றி போற்றி.

உரை: வேத நூல்களின் முடிவாகத் திகழும் சிவஞான விளக்கமே; மாணிக்க மணியாலாகிய மலை போல்கின்ற சிவனே; நீலமணி போலும் கழுத்தையுடைய பெருமானே; கண் பொருந்திய நெற்றியையுடைய கரும்பு போல்பவனே; பிறைத் திங்கள் தங்கிய சடையை முடியிற் கொண்டு விளங்கும் பெரிய அருட் குன்று போல்பவனே, மனைவாழ்க்கை யாகிய சிறையிலிருந்து எனை விடுவித்து ஆட்கொண் டருளிய சிவனே உன்னைப் போற்றுகின்றேன். எ.று,

வேதங்களும் அவற்றின் அந்த மெனப்படும் உபநிடத நூல்களும் கூறும் முடிபொருளாக விளங்கும் சிவஞானப் பொருளாதல் பற்றி, சிவனை "மறைமுடி விளக்கே" என்று சொல்லிப் போற்றுகின்றார். சிவஞான விளக்கமாகும் நிலை அகளநிலை என அறிக. அது ஞானத்தாலன்றி அறிவரிதாகலின், யாவரும் எய்திற் கண்டு வழிபட விளங்கும் சகள வுருவை ஏனை மூன்றடிகளிலும் வைத்துப் போற்றுகின்றார். கறை-

கடலிடத் தெழுந்த விட முண்டதனுல் உளதாகிய நீல நிறம். சிவனுடைய பொன் மேனிக்கு அது கறையாயினும் நீலமணி போல் நிறமும் ஒளியும் கொண்டு ஒளிர்வதால், "கறைமணிகண்ட போற்றி" என வுரைக்கின்ருர். நெற்றியிற் கண்ணும், சிந்திக்குந் தோறும் சிந்தையில் தேனூறும் தம்மையும் பற்றி, "கண்ணுதற் செங்கரும்பே போற்றி" எனப் புகல்கின்ருர். மெல்லுந் தோறும் சாறூறுதல் போலச் சிந்திக்குந் தோறும் சிவானந்தத் தேனூறுதலால் செங்கரும்பு உவமமாயிற்று. பிறைச் சடைமுடி கொண்டோங்கும் என மாறுக. பிறை சடையிலும், சடைமுடியிலும் உள்ளது என உணர்க. சலியாத் தன்மை தோன்ற, "அருட் குன்றே" எனக் கூறுகிருர். உலகியற் பொருநின்ப வுணர்வுகளால் அறிவைப் பிணித்து ஓடி யுய்தி பெருவாறு மனைவாழ்வில் சிறைத்தலால், அதனைச் சிறை எனக் குறிக்கின்ருர். "ஓடி யுய்தலும் கூடுமன், ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" (புறம். 193) எனச் சான்ருேர் உரைப்பது காண்க. வடலூர் வள்ளற் பெருமான் மனைவாழ்விற் பிணிக்கப்பட்டும் அதனுள் அகப்படாது நீங்கினதற்குக் காரணம் சிவபெருமான் தம்மை யாட்கொண்டதென இதனுல் தெரிவிக்கின்ருராதலின், "சிறை தவிர்த் தெனை யாட்கொண்ட சிவசிவ போற்றி போற்றி" என வுரைத்தருள்கின்ருர்.

இதனுற் சிவனுடைய அகள சகள நிலைகளை நினைந்து போற்றுதல் செய்தவாரும். (6)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2735. செய்வகை அறியேன் மன்றுண்மா மணிநின்
திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை அறியேன் உணர்விலேன் அந்தோ
உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்
மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்
வினையனேன் என்செய விரைகேன்
பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுகேன்
புலையனேன் புனல்அறி யேனே.

உரை : அம்பலத்தின்கண் காட்சி தரும் மாணிக்க மணி போல்பவனே, உலகியற் சூழலினின்றும் உய்ந்து போக்கறியும் உணர்விலேனுதலால், செய்யத் தக்கது அறியாமல், நின் திருவுள்ளக் கருத்தையும் தெரிந்து கொள்ளாமல், மேலும் துன்பங்கள் வருமென மனம் வருந்துகின்றமை ஒருபால் இருக்க, வினை பல வுடையனுகலின், உண்மை நெறியைக் கண்டடைய மாட்டேனுய், வேறே எவர்க்கும் சொல்லுவதின்றி பொய்ந்நெறி மேற்கொண்டு அதற்குரியனவே செய்ய விரைந்து செல்கின்றேன்; இவ்வாற்ருல் புலைத்தன்மை பெற்ற யான், புகலிடம் அறியாது புழுங்குகின்றேன்; அறிந்தோர் அறிவிப்பினும் அதன்கண் எவ்வாறு புகுவேன். எ.று.

குறையுற்றவர் அம்பலத்தில் எழுந்தருளும் பெருமானிடம் முறையிடுவது இயல்பாதலால், சபாநாயகனை சிவனை, "மன்றுள் மாமணி" என்று பரவுகின்றார். உலகியல் வாழ்வில் துன்பங்கள் மேன் மேலும் வந்து தாக்குதலால் உணர்வின்கண் தெளிவிழந்து உய்வகை யறியாமல் துயர்கின்றமை விளங்க, உணர்விலேன் அந்தோ உய்வகையறியேன்" எனப் பொதுப்பட மொழிகின்றார். தாக்கும் துன்பங்கட்கு இரையாகாமல் தகுவன செய்யமாட்டாமை பற்றிச் "செய்வகை யறியேன்" எனவும், செய்விக்கும் திருவருளை நினையாமை புலப்பட, "திருவுளக் குறிப்பையும் தெரியேன்" எனவும், அறியாமையும் தெரியாமையும் துன்பமே எண்ணியஞ்சி வருந்தச் செய்கின்றன என்பாராய், "உறுகண் மேல் உறுங்கொல் என்று உலைந்தேன்" எனவும் எடுத்தோதுகின்றார். இத்துன்பங்கட் கெல்லாம் காரணம் கண்ட வள்ளற் பெருமான், மெய்ந்நெறி தேர்ந்துணர்ந்தடையாமல் பொய்ந்நெறி மேற்கொண்டு வினை பல செய்துடையனாயினேன் என்பாராய், "மெய்வகை யடையேன் பொய்வகை யுடையேன் வினையனேன்" என விளம்புகின்றார். பொய்ந்நெறிப் பொய்ச் செயல்களைப் பிறர்க்கு உரைத்தலாகாமையின், "வேறெவர்க் குரைப்பேன்" என்றும், பொய்ம்மைக் குரிய செயல்களையே செய் தொழுகினமையின், "என்செய விரைகேன்" என்றும் இசைக்கின்றார். பொய்வகை புலைத்தன்மையையுண்டு. பண்ணுவதுகொண்டு, "புலையனேன்" எனத்தம்மைப் பழிக்கின்றார். பொய்ந் நெறி புலைத்தன்மை விளைவித்தமைகண்டு நீங்கி மெய்வகையாளர் அடையும் புகலிடம் அறியாது கலங்குவது புலப்பட, "புகல் அறியேன்" என்றும், அறிந்தோர் அறிவிப்பினும் புகுந் திறம் அறிகிலேன் என்றற்கு "எங்ஙனம் புகுவேன்" என்றும் இசைக்கின்றார்.

இதனால், உய்வகை யறிவும் திருவுளக் குறிப்பும் தெரியாமல் மெய்வகை கைவிட்டுப் பொய்வகை மேற்கொண்டு வருந்தும் திறம் முறையிட்டவாறும். (7)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2736. நிதியைநினைந் துனைமறந்த மதியைநினைந்
தழுகேனோ நிமலா னந்தக்
கதியைஇகழ்ந் திருள்விழைந்த விதியைநினைந்
தழுகேனோ கண்போல் வாய்ந்த
பதியைஉனைப் பாடாத பாட்டைநினைந்
தழுகேனோ படிற்று நெஞ்சச்
சதியைநினைந் தழுகேனோ யாதுகுறித்
தழுகேன்இத் தமிய னேனே.

உரை: தனித் துறைபவனாகிய யான், செல்வத்தின் மேல் வைத்த ஆசையால் உனது திருவருளை மறந்தொழிந்த அறிவுக்காக அழுவேனா? தூய இன்பப் பேற்றைக் கைவிட்டு இருள் செய்யும் தீநெறியை விரும்புதற் கேதுவாகிய விதியின் பொருட்டு அழுவேனா? கண்ணுக்குக் கண்ணாய் அமர்ந்த தலைவனாகிய உன்னைப் பாடாமல் உலகவரைப் பாடிய பாட்டுக்களின் பொருட்டு அழுவேனா? இவற்றிற் கெல்லாம் துணையாய் இருந்த

வஞ்சம் பொருந்திய நெஞ்சை நினைத்து அழுவேனு? எது குறித்து அழுதொழிவேன். எ.று.

நிலைத்த உனது திருவருட் செல்வத்தை எண்ணுமல் நிலையாத பொருட் செல்வத்தை எண்ணியது குற்றமாதலின், அது குறித்து அழுதால் மனநோய் தீரும் என்பாராய், "நிதியை நினைந்து உனை மறந்த மதியை நினைந்தழுகேனே" என்று கூறுகின்ருர். நிலையினவும் நிலையாதனவும் அறிந்துரைக்கும் அறிவு அது செய்யாமையால் "மதியை நினைந்தழுகேனே" என எடுத்தோதுகின்ருர். நிமலானந்தம் - தூயவீடு பேற்றின்பம். கதி - சிவகதி. சிவகதிக் குரிய ஞானத்தில் உய்க்காது பிறப் பிறப்புக்களை விளைவிக்கும் அஞ்ஞான இருள் நெறிக்கண் செலுத்தினமை யுணர்ந்து "விதியை நினைந்தழுகேனே" என விளம்புகின்ருர். பாடுவார் பாடுமிடத்துப் பாட்டின் பொருள் மனத்தினும் வாயினும் எழுதும் கையினும் ஒன்றி நெடிது நிற்றலின், சிவனைப் பாடிச் சிந்தை யொன்றி இன்புறுதலை விடுத்து உலகவரைப் பாடி யவலமெய்துவது பற்றி, "பதியை நினைப் பாடாத பாட்டை நினைந்தழுகேனே" எனப் பரிபவப்படுகின்ருர். படிறு - வஞ்சம். சதி - தீச்செயல்.

இதனுல் சிவனையும் அவன் திருவருளையும் நினையாது ஒழிந்தமைக்கு வருந்துவது தெரிவித்தவாரும். (8)

2737. தாய்தடை என்றேன் பின்னர்த்
தாரமே தடைஎன் றேன்நான்
சேய்தடை என்றேன் இந்தச்
சிறுதடை எல்லாந் தீர்ந்தும்
தோய்தடைச் சிறியேன் இன்னுந்
துறந்திலேன் எனைத் தடுக்க
ஏய்தடை யாதோ எந்தாய்
என்செய்கேன் என்செய் கேனே.

உரை: எந்தையே, எதைச் செய்ய நினைக்கினும் தடையாவன வற்றை யெண்ணிச் சிறுமை யுறுபவனுகிய யான், துறவு மேற் கொள்ளும் முன் பெற்ற தாய் தடை செய்வள் என்றும், பின்பு மனைவி தடுப்பளென்றும், பின்பு பிள்ளைகள் தடையாகுமென்றும் நினைந்தொழிந்தேன்; இச் சிறுதடைகளெல்லாம் இல்லா தொழிந்த பின்னும் துறவு மேற் கொள்ளேனுயினேன்; இதற்கு ஏற்றதடையாயாவது யாதோ அறிகிலேன்; என்ன செய்வேன். எ.று.

எதனைச் செய்ய நினைக்கினும் அதற்குத் தடையான கருத்துக்களை நினைந்து தயங்குவது சிலர்க்கு இயல்பாதலின், அவ்வியல்புடையனைப் பயனுடைய செய்யாது தாழ்த்துச் சிறுமை யுற்றவனெனத் தம்மியல்பு கூறுகின்ருராகலின், "தோய் தடைச் சிறியேன்" என்று உரைக்கின்ருர். குடும்பத் தொல்லைகளைக் கண்டு துறப்பது நன்றென எண்ணியபோது, பேணற் கமைந்த தாயன்பு தடை செய்வது கண்டு கைவிட்டேன் என்பாராய், முதற்கண் "தாய் தடை என்றேன்" என்றும், திருமணம்

செய்து கொண்ட போது தமது துறவு வேட்கைக்கு மனைவி யுறவும் பின்பு மக்களுறவும் துறக்கும் உள்ளத்தை மாற்றுமே யென அஞ்சினேன் என்பாராய், "பின்னர் நான் தாரமே தடையென்றேன் சேய் தடை என்றேன்" என்றும் கூறுகின்றார். மனத்திட்பம் உடையார்க்கு இத் தடைகள் ஒரு பொருளாக எதிர் நில்லாமை யுணர்ந்தமை புலப்பட, "இந்தச் சிறுதடை எல்லாம் தீர்ந்தும்" எனவும், உலகிய லின்பத் தொடர்பு தடுத்தமையின், துறவை மேற் கொண்டிலேன் என்பார், "இன்னும் துறந்திலேன்" "எனவும் இசைக்கின்றார். உலகியல் தொடர்பு ஏனையோர் தொடர்புகளை நோக்க மிகவும் வலி யில்லதெனக் கண்டும் துறவாமைக்குக் காரணமொன்று உளதாக வேண்டும், அது திருவருள் துணையாகாமையோ யாதோ தெரியவில்லை என்று கூறலுற்று, "எனைத் தடுக்க ஏய்தடை யாதோ" என்றும், "என்செய்கேன் என் செய்கேன்" என்றும் நினைந்து வருந்துகின்றார்.

இதனால், துறவு மேற் கொள்ளாமைக்குக் காரணம் ஆராய்ந்தமை தெரிவித்தவாறும். (9)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2738. எண்கடந்த உயிர்கள்தொறும் ஒளியாய் மேவி
இருந்தருளும் பெருவாழ்வே இறையே நின்றன்
விண்கடந்த பெரும்பதத்தை விரும்பேன் தூய்மை
விரும்புகிலேன் நின் அருளை விழைந்தி லேன்நான்
பெண்கடந்த மயல்எனும்ஓர் முருட்டுப் பேயாற்
பிடிஉண்டேன் அடிஉண்ட பிஞ்சு போன்றேன்
கண்கடந்த குருட்டூமர் கதைபோல் நின்சீர்
கண்டுரைப்பல் என்கேனோ கடைய னேனே.

உரை : எண்ணில்லாத உயிர்கள் எல்லாவற்றிலும் உள்ளொளி யாய்ப் பொருந்த எழுந்தருளும் பெருவாழ்வையுடைய பெருமானே, இறைவனே, விண்ணுலகுகள் அத்தனைக்கும் மேலாக வுள்ள நின்னு டைய பெரிய சிவ பதத்தையோ, சுத்த நிலையையோ, திருவருள் நலத்தையோ விரும்பாமல் பெண்களிடத்தே பெறும் காமமயக்க மென்னும் ஒரு முருட்டுத் தன்மை கொண்ட பேயால் பற்றப் பட்டு அலைப்புண்டு அடிபட்ட பிஞ்சு போன்று உள்ளேன்; கடையனாகிய யான் கண்ணிழந்த குருட்டுத் தன்மையும் வாயில்லாத ஊமைத் தன்மையும் உடைய சிலர் யானை கண்டுரைத்த கதை போல் நினது அருட் புகழைக் கண்டு உரைப்பேன் என மொழிவேனா, என்னென்பேன். எ.று.

ஒன்றி னொன்று வேற்றுமையுடைய உயிர்களின் தொகை இத் துணை யென எண்ணுதற்காகாமை பற்றி, "எண் கடந்த உயிர்கள்" எனவும், உயிர் தோறும் உள்ளுணர்வாய் நின்று இறைவன் ஒளி செய்தலால், "ஒளியாய் மேவி இருந்தருளும் பெருவாழ்வே" எனவும், உயிர்களே யன்றி உயிரில் பொருள்களிலும் இருத்தல் விளங்க, "இறையே" எனவும் இயம்பு

கின்றுர். எவ்வுயிரிலும் எப்பொருளிலும் எங்கும் கலந்து நிற்கும் இறைவனுக்குத் தனக்கென ஒரு தனியிடம் உண்டோ என்பார்க்கு, "உண்டு அது சிவபதம்" என்பார் போல, "நின்றன் விண் கடந்த பெரும் பதத்தை விரும்பேன்" என மொழிகின்றுர். விண்ணின் மேல் ஏழுலகம் உண்டெனப் புராணம் கூறுதலால், அவற்றிற் கெல்லாம் மேலேயுள்ள சிவபதத்தை, "விண் கடந்த பெரும்பதம்" என்றும், அது கடவுளாகிய சிவபெருமானுக்கே யுரிய தென்றற்கு "நின்றன் பெரும்பதம்" என்றும் எடுத்துரைக்கின்றுர். கேவலம் - சகலம், சுத்தம் என்ற உயிர்கட்குரிய நிலை மூன்றனுள், மலப் பிணிப்பினின்றும் நீங்கி உயிர்கள் ஞான வடிவுற்றுச் சிவானந்தப் பெரும் போக நுகரும் நிலையாகிய சுத்தத்தையும் விரும்பினேனில்லை யென்றற்குத் "தூய்மை விரும்புகிலேன்" எனவும், சிவனது திருவருளே உயிர்கள் அறிவு விழைவு செயல் வகைகளைத் தொழிற் படுத்திப் பயன் நுகர்விக்கும் அரும் பொருளாகவும் நான் அதனையும் விரும்பிற்றிலேன் என்பார், "நின்னருளை விழைந்திலேன்" எனவும் கூறுகின்றுர். விரும்பாமைக்குக் காரணம் பெண் மயக்கத்தால் அலைப்புண்டு வருந்தி மெலிந்தமையே என்பாராய், "பெண்கள் தந்த மயல் எனும் ஓர் முருட்டுப்பேயாற்பிடியுண்டேன் அடியுண்ட பிஞ்சு போன்றேன்" எனப் புலம்புகிருர். பெண்ணுருவில் தோன்றி ஆடவர் மனத்தைத் தாக்கிக் காம மயக்கத்தை விளைவித்தலால், "பெண்கள் தந்த மயல் எனும் ஓர் முருட்டுப் பேய்" என வுரைக்கின்றுர். திருந்த மாட்டாத பேய் என்றற்கு "முருட்டுப் பேய்" என்று சொல்லுகிருர். திருத்த வியலாத மரக்கட்டையை "முருட்டுக் கட்டை" என்பர். கல்லாலும் கொம்பாலும் அடிபட்ட பிஞ்சு காய்த்துக் கனியாதலின்றிக் கெட்டொழிதல்பற்றி, அஃது உவம மாயிற்று; ஆகவே, தெளிவுற்று ஞானப்பேறு எய்தேன் என்பது கருத்து. காணுமையே யன்றி வாயாற் சொல்லவும் மாட்டாமையால், "கண் கடந்த குருட்டு ஊமர் கதை" என எடுத்துக் காட்டுகின்றுர். இக் குறைபாடுகளால், மக்களினத்திற் கீழ் மகனுயினேன் என்பாராய், "கடையனேன்" என்று கூறுகிருர்.

இதனுல், உயிர்க்கு உறுதி நோக்காது பெண் மயலால் அறிவொழுக்க மிழந்தமை சொல்லி முறையிட்டவாறும். (10)

2739. மின்னைப் போல்இடை மெல்இய லார் என்றே
விடத்தைப் போல்வரும் வெம்மனப் பேய்களைப்
பொன்னைப் போல்மிகப் போற்றி இடைநடுப்
புழையி லேவிரல் போதப்பு குத்திசுத்
தன்னைப் போல்முடை நாற்றச்ச லத்தையே
சந்த னச்சலந் தான்எனக் கொள்கின்றேன்
என்னைப் போல்வது நாய்க்குலம் தன்னிலும்
இல்லை அல்ல தெவற்றினும் இல்லையே.

உரை : மின்னுக் கொடி போன்ற இடையும் மென்மை சான்ற இயல்பு முடையவர் என்று சான்றோர் புகழ விளங்கி விடம் போலும் பண்புற்று வரும் வெவ்விய மனத்தையுடைய பேய் போன்ற பெண்களைப் பெறற்கரும் பொன் போலப் பேணி அவர்களின் இடை நடுவிலுள்ள

துவாரமாகிய உந்தியிலே கைவிரலை நுழைத்து அங்கே கசியும் முடை நாறும் நீரை ஈயைப் போல நுகர்ந்து, சந்தன நீர் போலக் கருதுகின்றேன்; இச்செயலால், என்னைப்போலும் ஒரு விலங்கு நாயினத்திலும் இல்லை; வேறு எவற்றிலுமே இல்லை, காண். எ.று.

மின்னற் கொடி போலும் இடையும் மென்மையான இயல்பு முடையராதலின், மகளிர் பொன் போற் பேணற் குரியர் என்பது சான்றோர் கருத்து. "பேணுதகு சிறப்பின் பெண்ணியல்பாயினும் என்னொடு புரையுந ளல்லள்" (பதிற். நச்சி.மேற்) என வருவது காண்க. தம்மைக் கொள்பவன்பால் அன்பு வையாது அவனது பொருள் மேல் மனம் வைக்கும் பெண்டிரை, "விடத்தைப் போல் வரும் வெம்மனப் பேய்கள்" என வெறுத் துரைக்கின்றார். இடைநடுப் புழை, இடையின் நடுவிடமாகிய உந்தி. உந்தியில் கைவிரலை நுழைத்துக் காம வேட்கையை மிகுவித்தல் கலவி வகைகளில் ஒன்று. உந்தியின்கண் அழுக்கும் நீரும் கசித லுண்மையின் அதனை "முடை நாற்றச் சலம்" என்கின்றார். சலம்-நீர்.

இதனால், மகளிர் கலவி வகையின் புன்மை கண்டு அருவருத் தொதுக்கும் திறம் தெரிவித்தவாறும். (11)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2740. கள் உருகும் மலர்மணம்போல் கலந்தெங்கும்
நிறைந்தோய்நின் கருணைக் கந்தோ
முள்உருகும் வலியபராய் முருடுருகும்
உருகாத முறைசேர் கல்லும்
வள்உருகும் மலைஉருகும் மண்உருகும்
மரம்உருகும் மதியி லேன்றன்
உள்உருகும் வகையிலைஎன் செய்கேன்நான்
ஏன்பிறந்தேன் ஒதிய னேனே.

உரை : தேனூறுகின்ற மலரின்கண் மணம் போற் கலந்து எங்கும் நிறைந்திருக்கும் சிவபரம் பொருளே, நினது அருளைப் பெறற்குச் சிறு முள்ளும் வன்மையையுடைய பராய் மரத்தின் முருட்டுக் கட்டையும் உருகும்; உருகும் தன்மை யில்லாத வளவிய கருங் கல்லும், கற்கள் நிறைந்த மலையும், மண்ணும், மண் மேல் நிற்கும் மரமும் உருகாநிற்குமாக, அறிவில்லாத எனது உள்ளம் உருகும் வகை சிறிதும் இல்லையே; இதற்கு யான் என்ன செய்வேன்; ஒதி மரம் போன்ற நான் ஏன் பிறந்தேனோ, அறியேன். எ.று.

இறைவன் உலகுயிர்களில் கலந்து நிறைந்திருக்கும் திறத்தை மலர் மணம் போன்ற தெனச் சான்றோர் கூறுதலால், "மலர் மணம் போல் கலந்தெங்கும் நிறைந்தோய்" எனக் கூறுகின்றார். "நறுமலர் எழுதரு நாற்றம் போற் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" (அதிசயப்); என மணிவாசகர் உரைப்பது காண்க. தேன் சுரந்து

நிறையும் மலரைக் "கள்ளுருகும் மலர்" எனச் சிறப்பிக்கின்றார். பராய் - வன்மை மிக்க மர வகையுள் ஒன்று. "பைந்தன் மாதவி சூழ்ந்த பராய்த் துறை" (பராய்) என ஞானசம்பந்தர் பாடுவர். முருடு - முருட்டுக் கட்டை. கல்லுக்கு உருகும் தன்மையில்லையென்பது கொண்டு, "உருகாத முறைசேர் கல்" லென வுரைக்கின்றார். கல் வள்ளுருகலாவது, வலிமையால் வளமுற்ற கருங்கல் வன்மை குன்றி நீராய் உருகுதல். உருகும் தன்மை யில்லாதன ஒருகால் உருகும் இயல்பினவாகவும் என் உள்ளம் உருகுகிறதில்லை என வருந்துகிறார். "உருகி நினைவார் பெருகி வாழ்வார்" (முதுகுன்) எனப் பெரியோர் கூறுவதால், உருகா மனத்தோடு வாழ்தல் பயன்படாமை பற்றி, "உருகும் வகையிலை என்செய்வேன்" என்றும், திருவருள் பெறாத பிறப்பு வீண் பிறப்பாதலை நினைந்து "ஏன் பிறந்தேன்" என்றும் சொல்லி வருந்துகிறார். ஒதி மரம் - உள்வலியில்லாத ஒரு வகை மரம்.

இதனாற் சிவனருள் வேண்டி உருகாத பிறப்பும் வாழ்வும் பயனில்லாதன என விளக்கியவாறும். (12)

2741. மன்உயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வம்
உறவுமுதல் மற்றும் நீயே
பின்உயிர்க்கோர் துணைவேறு பிறிதிலைஎன்
றியான்அறிந்த பின்பொய் யான
மின்உடற்குத் தாய்தந்தை ஆதியரை
மதித்தேனோ விரும்பி னேனோ
என்உயிர்க்குத் துணைவாநின் ஆணைஒன்றும்
அறியேன் நான் இரங்கி டாயே.

உரை: எனது உயிர்க்குத் துணைவனே, நிலை பெற்ற உயிர்த் தொகைகட்குத் தாயும் தந்தையும் குருவும் தெய்வமும் பிற வுறவுகளும் எல்லாம் நீயே என்று அறிந்த பின்பு உயிர்கட்குத் துணையாவது வேறே பிறிதில்லை எனத் தெளிந்தேனாதலால், பொய்யாய் மறைந்து மின்னற் போற் கெடும் உடம்புக்குத் தாயும் தந்தையும் பிறவுமாகியோரை நான் பொருளாக மதித்ததில்லை; நினது ஆணை யாதோ அறியேன்; என் பொருட்டு இரங்கி அருள் ஞானம் நல்குக. எ.று.

உயிரோடு உடனிருந்து உணர்வொளி செய்தலால் சிவனை "என்னுயிர்க்குத் துணைவா" என்று இயம்புகின்றார். உயிராவது அனாதி நித்த சித்துப் பொருள் என அறிவு நூல்கள் உரைத்தலால், "மன்னுயிர்" என்றும், உயிர்க்குரிய தந்தையும் தாயும் குருவும் தெய்வமும் பிறவும் சிவமேயாதலால், "மன்னுயிர்க்குத் தாய் தந்தை குருதெய்வம் உறவு முதல் மற்று நீயே" என்றும் இசைக்கின்றார். சிவனுக்குப் பின் உயிர்கட்குத் துணையாவது தெய்வ நிலையிலோ மக்கள் நிலையிலோ ஒன்றும் இல்லை யென வற்புறுத்தற்குப் "பின்னுயிர்க்கு ஓர் துணை வேறு பிறிதிலை" என்றும், இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்து கொண்டேன் என்பார், "என்று யான் அறிந்த பின்" என்றும் கூறுகின்றார். உடம்பு, நிலையா இயல்பின தென்றற்குப் "பொய்யான மின்னுடல்" என வுரைக்கின்றார்.

"பொய்யினுல் மிடைந்த போர்வை" (அதிகை.வீரட்) என நாவுக்கரசரும், "பொய்த் தன்மைத்தாய மாயப் போர்வை" (ஆரூர்) என நம்பியாரூரும் உரைப்பன காண்க. பிறந்தவுடம்புக்குத் தாய் தந்தை குரு முதலியோர் வேறு வேறு உளராயினும் அவரும் பொய்யுடல் தாங்கும் பொய்யராதலால் அவர்களைப் பொருளாக யான் கருதுவதில்லை யென்றற்கு "உடற்கும் தாய்தந்தை யாதியரை மதித்தேனே" எனவும், "விரும்பினேனே" எனவும் உரைக்கின்ருர். அவர்களது பொய்ம்மை நிலையை யறிந்த பின் நினது ஆணையாகச் சொல்லுகிறேன்; அவர்களை உயிர்த் தந்தை தாயராக அறிந்தேனில்லை என்பாராய், "நின் ஆணையொன்றும் அறியேன்" எனச் சொல்லுகின்ருர். இந்த நிலையில் எனக்கு அருளுவது நினக்குக் கடன் என்றற்கு "இரங்கிடாயே" என இசைக்கின்ருர்.

இதனுல் உயிர்க்குத் தாயும் தந்தையும் உறவும் சிவமே; உடற்குத் தாயும் தந்தையும் உறவுமாயினு ரல்லர் என விளம்பியவாரும். (13)

2742. **மாற்றரிய பசும்பொன்னே மணியேஎன்**
கண்ணேகண் மணியே யார்க்குந்
தோற்றரிய சுயஞ்சுடரே ஆனந்தச்
செழுந்தேனே சோதி யேநீ
போற்றரிய சிறியேனைப் புறம்விடினும்
வேற்றவர்பாற் போகேன் வேதம்
தேற்றரிய திருவடிக்கண் பழிவிளைப்பேன்
நின்ஆணைச் சிறிய னேனே.

உரை: மாற்று இல்லாத பசும்பொன் போன்றவனே, மாணிக்க மணியே, என்னுடைய கண்ணும் கண்ணினுள் மணியாயும் உள்ளவனே, எத்தகைய ஞானவான்களுக்கும் காண முடியாத சுயஞ் சுடராகியவனே, இன்பம் தரும் செழுமையான தேனே, அருட் சோதியே, பேணப்படுதற் கில்லாத அற்பனுகிய என்னைக் கைவிட்டாலும் நின்னின் வேருகிய தேவர்களில் எவரிடமும் துணை வேண்டிச் செல்லாமல், வேதங்களால் தெளிய முடியாத உனது திருவடியில் வீழ்ந்து மடிந்து உனக்குப் பழி யுண்டாக்குவேன்; நின் மேல் ஆணையாகச் சொல்லு கிறேன்; சிறியவனுதலால் என்னை யாரும் பழிக்க மாட்டார்கள். எ.று.

பொன்னின் ஓட்டம் காண்பவர் இத்தனை மாற்றுடையது இப்பொன் என்பர்; அது போற் காணக் கூடாத உயர்வுடையது நினது திருமேனிப் பொன்னிறம் என்றற்கு, "மாற்றரிய பசும் பொன்னே" எனவும், ஈனச் செம்பு முதலியவற்றின் கலப்பில்லாத பொன்னைப் "பசும் பொன்" எனவும் கூறுவர். மணி - ஈண்டு மாணிக்க மணி மேற்று. ஒளியுற்று உணர்வு பெறுவித்தலால் "கண்ணே" எனவும், "கண்மணி" எனவும் புகழ்கின்ருர். சிவத்தின்கண் விளங்கும் ஞான வொளிச் சுடர் ஞானிகளாகிய தவச் செல்வர்க்கும் காண்பரிதாதல் பற்றி, "யார்க்கும் தோற்றரிய சுயஞ்சுடரே" என்றும், ஞான நாட்டம் கொண்டு காண்பார்க்குப் பேரின்பம் உண்டாதலால் "ஆனந்தச் செழுந்தேனே" என்றும், பொதுவாய் நினைவார்க்கு அருட் சோதியாய்த் திகழ்வது

பற்றிச் "சோதியே" என்றும் இயம்புகிருர். நல்லறிவும் நற்செயலும் உடையவரே பேணிக் காக்கப் படுவராதலால், தனக்கு அச்சிறப் பில்லாமை விளங்க, "நீ போற்றரிய சிறியேன்" எனக் கூறுகின்ருர். இவ் வாறு சிறியனுகிய எனது சிறுமை நோக்கிப் புறக்கணித்து விலக்குவாயின், அறிவாற்றல் துணை வேண்டி வேறு தெய்வங்களை நாடிப் போகமாட் டேன் எனத் தனது உட்கோளை யுரைப்பாராய், "புறம் விடினும் வேற்ற வர்பாற் போகேன்" என்றும், செய்யப் போவது இது வென்றற்கு "வேதம் தேற்றரிய திருவடிக்கண் பழி விளைப்பேன்" என்றும், இதனுல் சிறுமைப் பண்பும் சிறு தொழிலுமுடைய சிறியவனுதலால் என்னையெவரும் இகழ் வாரில்லை என்பாராய்ச் 'சிறியனேனே" என்றும் இயம்புகின்ருர். வேத ஞானம் இறைவனைக் காண மாட்டாமை பற்றி, "வேதம் தேற்றரிய திருவடி" எனச் சிறப்பிக்கின்ருர். பழி விளைத்தல் - தற்கொலை முதலியன செய்து கொளல்.

இதனுல், அருளாது கைவிடின் பழி விளைப்பே னென உட்கோள் தெரிவித்தவாறும். (14)

2743. உள்உணர்வோர் உளத்துநிறைந் தூற்றெழுந்த
தெள்ளமுதே உடையாய் வஞ்ச
நள்உணர்வேன் சிறிதேனும் நலமறியேன்
வெறித்துழலும் நாயிற் பொல்லேன்
வெள்உணர்வேன் எனினும்என்னை விடுதியோ
விடுதியேல் வேறென் செய்கேன்
தள்உணர்வோன் எனினும்மகன் தனைஈன்ருேர்
புறம்பாகத் தள்ளார் அன்றே.

உரை : உள்ளத்தே வைத்து மெய்ம்மை யுணரும் சிவஞானிகளின் திருவுள்ளத்தில் சிறந்து சுரக்கின்ற தெள்ளமுதமே, என்னையுடையவனே, வஞ்ச நினைவுகளையே மனத்திற் கொண்டவனுய் நலமொன்றும் தெரியாமல் வெறி கொண்டலையும் நாயினும் பொல்லாதவனுய், பயனில்லாதவற்றை நினைந்து திரிவேனுயினும், என்னைக் கைவிட லாகாது; விடுவாயேல், மேற் சொன்னவற்றின் வேருக யான் யாது செய்ய இயலும்; அறிஞர்களால் வெறுத்துத் தள்ளப்படும் தீய கருத்துக்களை யுடையவனுயினும், மகன் என்ற தொடர்பால் அவனைப் பெற்றேர்கள் புறக்கணித்து விலக்க மாட்டார்களன்ருே. எ.று.

மனத்தைப் பொறி வழிச்செல்ல விடாமல் அக நோக்கிற் செலுத்தி மெய்ப் பொருளாகிய சிவத்தின் மெய்ம்மை காணும் தவ ஞானிகளை "உள்ளுணர்வோர்" என்றும், உள்ளு தோறும் அவர் உள்ளத்தில் ஞான வின்பம் ஊற நிற்பதால், சிவனை, "உளத்து நிறைந்து ஊற்றெழுந்த தெள்ளமுதே" என்று சிறப்பிக்கின்ருர். "உளத்து ஊற்றெழுந்து நிறைந்த தெள்ளமுதே" என இயைத்துக் கொள்க. "சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று, பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" (சிவபு) என்பது திருவாசகம். தூய ஞானவுள்ளத்தில் ஊறி நிறைதலால்

சிவபோகத்தைத் "தெள்ளமுது" எனத் தெரிவிக்கின்றார். உயர்ந்தோர் உள்ளத் துயர்வைக் கண்ட வள்ளற் பெருமான் தமது உள்ளத்தை நோக்குகிறார்; அதன்கண் வஞ்ச நினைவுகளும் நலம் பயவாத கொள்கைகளும் வெறிது திரியும் செயற் பண்புகளும் பிறவும் காணப்படுவதால், "வஞ்ச நள்ளுணர்வேன் சிறிதேனும் நலமறியேன் வெறித் துழலும் நாயிற் பொல்லேன்" என்று உரைக்கின்றார். நள் - நடுவிடம். வெறி பிடித்த நாயை "வெறித் துழலும் நாய்" என வெறுத்து மொழிகின்றார். வெள்ளுணர்வு - வெள்ளை யுணர்வு; அஃதாவது வீண் நினைவு. உணர்வேன் - உணர்வுகளை யுடையவன். மகன் நல்லறி வில்லாதவனாதல் கண்டும் தாய் தந்தையர் அன்பாற் கைவிடுவதில்லை. இதனைக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பு.

இதனால், என்பால் நல்லுணர்வு இல்லாமை, பற்றிக் கைவிடலாகாது என முறையிட்டவாறும். (15)

2744. கலைபயின்று நெறிஒழுகும் கருத்துடையேன்
அலன்நின்னைக் கனவி லேனும்
மலைபயின்ற பெருங்குணத்தெம் வள்ளலே
எனத் துதியேன் வஞ்ச மில்லா
நிலைபயின்ற நல்லோர்தம் நேசமிலேன்
கைதவமே நினைப்பேன் அந்தோ
உலைபயின்ற அரக்கெனநெஞ் சுருகேன்நான்
ஏன்பிறந்தேன் ஒதிய னேனே.

உரை: ஒதி மரம் போன்ற யான், நல்ல பல கலைகளைப் பயின்று நன்னெறிக்கண் நின்றொழுகும் எண்ண முடையவனல்ல; மலை போன்ற பெருங் குணங்களே நிறைந்த எமது அருள் வள்ளலே என்று உன்னைப் பன்முறையும் போற்றித் துதித் தறியேன்; வஞ்சமேயில்லாத நெஞ்சை நிலையாக வுடைய நன்மக்களின் நட்பைப் பெற்றறியாதவன்; வஞ்சக் கருத்துக்களையே நினைப்பவன்; ஐயோ, உருக்குலையிற் பெய்த அரக்குப் போல உருகுதல் இல்லா நெஞ்சுடையனாகிய யான் ஏன் பிறந்தேனோ, தெரியேன். எ.று.

பருத் துயர வளர்வதாயினும் உள்வலி யில்லாதது ஒதி மரம்; அது போல் வீணே வளர்ந்துள்ளேன் என்பாராய், "ஒதியனேன்" எனத் தம்மைக் குறித்துரைக்கின்றார். கலைப் பயிற்சி பயிலும் மனத்தைச் செந்நெறிக்கண் செலுத்தும் சிறப்புடைய தாகலின், "கலை பயின்று நெறியொழுகும் கருத்துடையேனலன்" எனக் கூறுகின்றார். "வைத்த தொரு கல்வி மனப் பழக்கம்" என்பர் ஔவையார். சலித்தலின்றி நிலைத்த பெருங் குணமுடைய பெருமக்களைக் குணப் பெருங் குன்றே எனப் போற்றும் மரபு பற்றி, சிவபெருமானை, "மலை பயின்ற பெருங்குணத்து எம் வள்ளலே" என்று புகழ்கின்றார். நினது இச் சிறப்பியல்பை நான் கனவிலும் சொல்லித் துதித்ததில்லை என்பார், "கனவிலேனும் துதியேன்" என்று கூறுகின்றார். நெஞ்சினை வஞ்ச நினைவுகட் கிடம் கொடாதபடி நன்னிலையில் வைத் தொழுகும் நன்மக்களை, "வஞ்சமில்லா நிலை பயின்ற

நல்லோர்" எனவும், அவரது நட்பு தன்னொடு பயில்பவருள்ளத்தை நன்னெறியிற் பிறழாவாறு காக்கும் இயல்பினதாக, அதனைக் கொண்டிலேன் என்றற்கு, "நல்லோர்தம் நேசமிலேன்" எனவும் சொல்லுகின்றார். கைதவம் - வஞ்ச நினைவுகள். உருகும் பண்பில்லாத நெஞ்சின்கண் இக் கைதவ நினைவுகள் இருக்குமென்பவாகலின், "உலை பயின்ற அரக்கென நெஞ்சுருகேன்" என்று உரைக்கின்றார். உலை, இரும்பு முதலிய வன்பொருள்களை யுருக்கும் உருக்குலை. உருக்குலையிற் பட்ட அரக்கு நீராய் உருகியோடுவது இங்கே உவமமாயிற்று. உருக்க மில்லாத நெஞ்சினனாய்ப் பிறந்ததனால் தனக்கோ உலகுக்கோ பயனின்மையின், "ஏன் பிறந்தேன்" என வருந்துகின்றார்.

இதனால், நெஞ்சுருகாமையும் அதனால் பிறவி பயன்படாமையும் எடுத்தோதியவாறும். (16)

2745. இரும்புன்னை மலர்ச்சடையாய் இவ்வுலகில்
சிலர்தங்கட் கென்று வாய்த்த
அரும்பின்னை மார்பகத்தோன் அயனாதி
சிறுதெய்வ மரபென் றோதும்
கரும்பொன்னைச் செம்பொன்னில் கைவிடா
திருக்கின்றார் கடைய னேற்கே
தரும்பொன்னை மாற்றழிக்கும் அரும்பொன்நீ
கிடைத்தும் உனைத் தழுவிலேனே.

உரை: பெரிய புன்னை மலர்களை யணிந்த சடையையுடைய பெருமானே, இவ்வுலக மக்களிற் சிலர் தங்கட் கென்று அமைந்த, அரிய பின்னைப் பிராட்டியை மார்பின்கட் கொண்ட திருமாலும் பிரமன் முதலிய தெய்வங்களாகிய இரும்பைச் செம்பொன்னாகக் கொண்டு இறுகப் பற்றி யொழுகுகின்றார்கள்; கடையவனாகிய எனக்கு யாரும் வழங்குகின்ற பொன்னை மாற்றின்மையால் வெல்லும் பெறற்கரும் பொன்னாக நீ கிடைத் திருக்கவும் யான் உளங் கொள்ளா திருக்கின்றேன்; என் கீழ்மை இருந்த வாறு என்னே; எ.று.

புன்னை - ஒருவகை மரம்; இது கடற்கரைக் கானற் பகுதியில் வளர்வது; "பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்கும் கானல்" (சிலப். கானல்) என இளங்கோவடிகள் கூறுவது காண்க. இதன் பூவைக் "கடிமலர்", "திகழ்மலர்" (கலி. 135) என்று சங்கச் சான்றோர் பாராட்டுகின்றனர். "புன்னை ஞாழற் புறணியருகெலாம், மன்னினார் வலங்கொள் மறைக்காடர்" (மறைக்) என்று நாவுக்கரசர் பாடுவர். பின்னை - திருமகள். "பின்னை மணாளனைப் பேரிற் கிடந்தானை" (முதலாயி. 5:1) எனப் பெரியாழ்வார் குறிப்பது காண்க. "தங்கட்கென்று வாய்த்த கரும்பென்னை" என இயையும். திருமால் முதலியதெய்வங்களைச் சிறு தெய்வங்கள் எனச் செப்புகின்றார்; சிறுமை, பிறப் பிறப்புக்களை யுடையராம் தன்மை. "நூறு கோடி பிரமர்கள் நொந்தினார், ஆறுகோடி நாராயண ரங்ஙனே, ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர், ஈறிலாதவ னீச னொருவனே" (ஆதிபுராணத்) என நாவுக்கரசர் நவில்வது காண்க.

கரும்பொன் - இரும்பு. சிறு தெய்வங்களை முழு முதற் பெருந் தெய்வமாக எண்ணிவிடாப் பிடியாய் வழிபடுதலைக் கண்டு இரங்குகின்றாராகலின், "செம்பொன்னிற் கைவிடா திருக்கின்றார்" என வுரைக்கின்றார். மூவகைத் தெய்வத் தொருவன் முதல் உரு, வாயது வேறும்" (திருமந்.) எனத் திருமூலரும் தெரிந்துரைக்கின்றார். சிவத்தொண்டரைத் தலையாயவர் எனப் பெரியோர் மொழிதலால், தம்மைக் கடையவன் என்கின்றார். "அனுசயப்பட்டு அதுவிது என்னாதே, கனிமனத்தொடு கண்களும் நீர் மல்கிப், புனிதனைப் பூவானூரனைப் போற்றுவார் மனிதரிற் றலையாய மனிதரே" (பூவனூர்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. தூய பொன்னாதல் பற்றிச் சிவனை, "பொன்னை மாற்றழிக்கும் அரும் பொன் நீ" என மொழிக்கின்றார். தரும் பொன் - உயர்வு தரும் பொன். தழுவுதல் - மேற் கொண்டு வழிபட் டொழுகுதல்.

இதனால், சிலர்க்குச் சிறு தெய்வங்கள் பொன்னாக, எனக்கு நீ பொன்னாவாய் எனப் புகன்றவாறும். (17)

2746. கஞ்சமலர்த் தவிசிருந்த நான்முகனும்
நெமாலுடும் கருதிப் போற்ற
அஞ்சநடை அம்மைகண்டு களிக்கப்பொன்
அம்பலத்தில் ஆடு கின்ற
எஞ்சல்இலாப் பரம்பொருளே என்குருவே
ஏழையினே னிடத்து நீயும்
வஞ்சம்நினைத் தனையாயில் என்செய்வேன்
என்செய்வேன் மதியி லேனே.

உரை: தாமரைப் பூவை இருக்கையாகக் கொண்ட பிரமனும் நெடிய திருமாலும் நினைந்து வழிபட்டு நிற்க, அன்னத்தின் நடையையுடைய உமாதேவி கண்டு மகிழ, பொன்னம்பலத்தில் திருநடம் புரிகின்ற ஈறில்லாத பரம்பொருளே, என்னுடைய குருவே, ஏழையாகிய என்பால் வஞ்சம் புரிய நினைந்தருள்வாயாயின், அறிவில்லாத யான் ஏமாந்து வருந்துவதல்லது வேறே யாது செய்வேன். எ.று.

கஞ்சம் - தாமரை. நெடிதுயர்ந்து நின்று தன் திருவுருவைக் காட்டிய பெருமானாதலால், திருமாலை "நெடுமால்" எனக் கூறுகின்றார். பரம் பொருள் என நினைந்து துதித்தல் விளங்கக் "கருதிப் போற்றி" என்று உரைக்கின்றார். அம்சம் என்ற வடசொல் அஞ்சம் என்றும், அன்னம் என்றும் பொருள்பட வந்தது. அன்னத்தின் நடையை நன்மகளிர் நடைக் கொப்புக் கூறுவது மரபாதலால், "அஞ்ச நடை அம்மை" என அறிவிக்கின்றார். உமையம்மையாகிய அருட் சத்தி நோக்கினாலன்றி ஞானமூர்த்தியாகிய கூத்தப் பெருமான் திருநடம் நிகழா தென்னும் அறிவு நூற் கருத்துக்கேற்ப, "அஞ்சடை அம்மை கண்டு களிக்க" என இயம்புகின்றார். "குயிலாலும் மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக் கூத்தாட வல்ல குழகன் போலும்" (வீழி) என்று நாவரசரும், "கூடிய விலயம் சதி பிழையாமைக் கொடியிடை யுமையவள் காண, ஆடிய அழகா" (வடமுல்லை) என நம்பியாரூரரும் நவின்றுரைப்பது காண்க.

பொன்னம்பலத்தில் திருநடம் புரியும் பெருமானைக் காட்சி யளிப்பதனால், பரம் பொருளாம் தன்மை மாறுவதிலன் என்பாராய், "அம்பலத்தில் ஆடுகின்ற எஞ்சலிலாப் பரம்பொருளே" எனக் கூறுகின்றார். எஞ்சல் - குறைதல். திருவருள் ஞானத்தைக் குருவாய்ப் போந்து உணர்த்தும் முறைமையுடையனாதல் பற்றி, "என் குருவே" என இயம்புகின்றார். அருளுவது போலத் தோன்றி அருளாமையை எண்ணி, "ஏழையேனிடத்து நீயும் வஞ்சம் நினைத்தனையாயின்" எனவும், அற்றாயின் அறிவில்லாதவனாகலின், வேறே செய்வகை யொன்றும் தெரியேன் என்பார், "என்செய்வேன் என்செய்வேன் மதியிலேனே" எனவும் கையறவு படுகின்றார்.

இதனால், திருவருள் எய்தாமைக்கு வருந்துகின்றமை தெரிவித்தவாறும். (18)

கட்டளைக் கலித்துறை

2747. வேம்புக்கும் தண்ணிய நீர் விடுகின்றனர் வெவ்விடஞ்சேர்
பாம்புக்கும் பாலுண வீகின் றனர்இப் படிமிசையான்
வீம்புக்கும் தீம்புக்கும் ஆனேன் எனினும் விடேல்எனைநீ
தேம்புக்கும் வார்சடைத் தேவே கருணைச் சிவக்கொழுந்தே.

உரை : தேன் துளிக்கும் நீண்ட சடையையுடைய தேவனும், அருளுருவாகிய சிவக்கொழுந்துமாகிய பெருமானே, கைக்கும் காய்களையுடைய வேப்ப மரத்துக்கு நன்னீரையும், விடம் பொருந்திய பாம்புக்குப் பாலுணவையும் தருகின்றனர்; இந்த நாட்டில் நான் வீண் செயல்கட்கும் தீய செயல்கட்கும் உரியவனாயினேன்; என்றாலும் நீ என்னைக் கைவிடலாகாது. எ.று.

வீம்பு - பயனில்லாத செயல்; தீம்பு - தீமை விளைவிக்கும் செயல். செயல் வேண்டு மென்பது பற்றிவேண்டா வெறுப்புடன் செய்தலை வீம்பென்றலுமுண்டு. தீது - தீம்பெனவும் வழங்கும். வீம்பும் தீம்பு முடையனாதல் பற்றி, எனக்கருள் செய்கின்றாய் இல்லை போலும் என்பாராய், "வீம்புக்கும் தீம்புக்கும் ஆனேன் எனினும் விடேலெனை நீ" என்று கூறுகின்றார். இவ்வுலகவர் கொடுமை விளைப்பவர்க்கும் அன்புடன் இனியது செய்கின்றனர் என்பார் "வேம்புக்கும் தண்ணிய நீர்விடுகின்றனர், வெவ்விடஞ் சேர் பாம்புக்கும்பாலுணவு ஈகின்றனர்" என வுரைக்கின்றார். விடஞ்சேர் பாம்பு என்றதனால் கைக்கும் காய்களை யுடைமை பெய்துரைக்கப்பட்டது. படித் நிலவுலகம். பாம்புக்குப் பாலுணவு தருவதை ஈழ நாட்டு யாழ்ப்பணத்து திருக்கேதீச்சரத்தில் இந் நாளில் காணலாம். நீ வாழ்விக்க வாழும் இவ்வுலகத்தவர் அல்லது செய்யும் வேம்பு பாம்புக்கும் நல்லது செய்வாராக, உலக நாதனாகிய நீ எனக்கு அருளாமை தக்கதன்று என்றற்கு, "நீ எனை விடேல்" என இயம்புகிறார். சிவபிரான் உலகுயிர்கட்கு வாழ்வு தருபவன் என்பதைத் திருஞானசம்பந்தர், "பல்லுலகினில் உயிர் வாழ்க்கை கண்ட நாதனார்" (கேதீச்) என்பது காண்க. சிவ தத்துவத்தின் உச்சியில் விளங்குதலால் சிவனைச் "சிவக் கொழுந்து" என்று கூறுகின்றனர்.

"கடற்சூர் தடிந்திட்ட சேந்தன் ருதையைத் திருத்தினை நகருட் சிவக் கொழுந்தினை சென்றடை மனனே" (தினைநகர்) எனச் சுந்தரர் பாடுவது காண்க.

இதனுல் திருவருள் செய்யாமை உலகியற்கு மாறெனத் தெரிவித்த வாறும். (19)

2748. அடமுடி யாதுபல் ஆற்ருலும் ஏழைக் கடுத்ததுன்பம்
படமுடி யாதென்னை செய்கேன்என் தன்முமம் பார்த்திரங்காய்
திடமுடி யால்அயன் மால்வணங் குந்துணைச் சேவடியாய்
தடமுடி யாய்செஞ் சடைமுடி யாய்நந் தயாநிதியே.

உரை : திடமான பொன்முடி சூடிய தலையால் பிரமனும் திருமாலும் வணங்கி வழிபடும் இரண்டாகிய சிவந்த திருவடிகளையும், பெரிய தலையில் சிவந்த சடை முடியையும் உடையவனே, எங்கள் திருவருட் செல்வமே, ஏழையாகிய என்னைச் சார்ந்து வருத்தும் துன்பத்தை என்னுற் போக்கவும் முடியாது; இனிப் படவும் முடியாது; யான் யாது செய்வேன்? துன்பத்தாற் கரிந்த என் முகம் பார்த்து மனமிரங்கி அருள் புரிவாயாக. எ.று.

திடம் - வன்மை. வலிய மணி குயின்ற பொன்னுற் செய்யப்பட்ட தென்றற்குத் "திட முடி" என்று குறிக்கின்ருர். "விண்ணோர் முடியின் மணித்தொகை" (எம்பாவை) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. "வணங்குதல்" கூறுதலால் தலையால் என்பது வருவிக்கப்பட்டது. துணை - இரண்டு. சேவடி - சிவந்த திருவடி. தட முடி - பெரிய தலை; சென்னி யெனினுமமையும். முடியிற் சடை முடித்திருத்தலின் "சடை முடியாய்" எனக் கூறுகிருர். தயாநிதி - அருட் செல்வம். போதிய அறிவில்லாமை யாலும் எவ்வகையாலும் நீக்க முடியாச் செய்வினையாற் போந்து தாக்கு தலால், "அட முடியாது பல்லாற்ருலும் ஏழைக்கு அடுத்த துன்பம்" எனவும், தொடர்ந்து நோய் செய்தலாற் "பட முடியா" தெனவும் பகர்கின்ருர். ஆற்ருமை பற்றி, "என்னை செய்கேன்" என்றும், துன்பத் தீயாற் கரிந்து சோர்ந்த முகம் கண்ட விடத்துக் காண்பார்க்கு அருளுணர்வு தானே போதரும் என்பார், "என்றன் முகம் பார்த்து இரங்காய்" என்றும் இசைக்கின்ருர். முகத்தைப் பார்த் தருள்வாயாயின், நின் திருவுள்ளத்தில் திருவருள் பெருகும் என்பது கருத்து.

இதனுல், ஏழையாகிய என் முகம் பார்த்து இரங்குக என வேண்டிய வாறும். (20)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2749. பொல்லா வாழ்க்கைத் துயரம்எனும்
புணரிப் பெருக்கில் வீல்ந்தழுந்திப்
பல்லார் நகைக்கப் பாவிபடும்
பாட்டை முழுதும் பார்த்திருந்தும்

கல்லால் அமர்ந்தீர் என்னிரண்டு
கண்கள் அனையீர் கறைமிடற்றீர்
எல்லாம் உடையீர் மால்விடையீர்
என்னே இரங்கி அருளீரே.

உரை : கல்லாலின் கீழ் எழுந்தருளிய பெருமானே, என்னுடைய இரண்டு கண்களும் போன்றவரே, விடக்கறை படிந்த கழுத்தையுடையவரே, எல்லாமுடைய இறைவனே, பெரிய விடையை ஊர்தியாக வுடைய சிவனே, பொல்லாங்கு நிறைந்த உலகியல் வாழ்க்கை தரும் துன்பமாகிய கடலின்கண் வீழ்ந்து மூழ்கிக் கண்டோர் பலரும் கண்டு இகழ்ந்து சிரிக்கப் பாவியாகிய யான் படும் துன்பத்தைப் பார்த்திருந்தும் இரக்கம் கொண்டு அருள் செய்யா திருக்கின்றீரே, இதனை என்னென்பது. எ.று.

கல்லால மரத்தின் கீழே ஞான குருவாய் எழுந்தருளி நால்வர்க்கு அறமுரைத் தருளிய வரலாற்றை நினைந்து, "கல்லால் அமர்ந்தீர்" என வுரைக்கின்றார். "அளப்பரிதாயவர் ஆலின் கீழ் ஆலின் நீழல் அறம் பகர்ந்தார்" (பாசூர்) எனச் சான்றோர் கூறுதல் காண்க. "கல்லால் நிழல் மலை வில்லார்" என்பது சிவஞான போதம். ஞான நாட்டம் நல்குவது பற்றி, என்னிரண்டு கண்களனையீர்" என்றும், விட முண்டு கண்டம் கறுத்தமை யெண்ணிக் "கறை மிடற்றீர்" என்றும், உயிர் உடல் பொருள் ஆகிய அனைத்தும் உடைமையாகக் கொண்டுள்ளமை புலப்பட, "எல்லாமுடையீர்" என்றும், அறத்தையே எருதாக்கி யூர்பவராதல் தோன்ற "மால் விடையீர்" என்றும் இசைக்கின்றார். உலகியல் வாழ்வில் உயிர்கள் எய்தும் இன்பத்தினும் துன்பம் பெரிதாதலால், "பொல்லா வாழ்க்கைத் துயர மெனும் புணரிப் பெருக்கு" எனக் குறிக்கின்றார். புணரிப் பெருக்கு- அலைகளையுடைய கடல். துன்பப் படுவோரைக் கண்டு இரங்குவோரினும் எள்ளி இகழ்பவர் உலகிற் பலராதலால், "பல்லார் நகைக்கப் பாவி படும் பாடு" என வுரைக்கின்றார். பாடு - துன்பம். தாம் படும் துன்பமனைத்தையும் இறைவன் அறிவனாதலின், "பார்த்திருந்தும்" எனக் கூறுகிறார். பார்த்த வழி எத்திறத்தோரும் இரங்குவர்; நீ இரக்கம் கொண்டிலை என்பது கருத்து; ஆயினும் பெருமானாகிய நீ நின் திருவருளைச் செய்கின்றாய்; அருளுருவாகிய நீ இரங்கா திருப்பது வியப்பைத் தருகிறது என்றற்கு, "என்னே இரங்கி யருளீரே" என இயம்புகிறார்.

இதனால், துயரங்களைப் பார்த்தும் இரக்கம் கொள்ளாமை வியப்பாகு மெனவுரைத்தவாறும். (21)

2750. பொன்னை உடையார் மிகுங்கல்விப்
பொருளை உடையர் இவர்முன்னே
இன்னல் எனும்ஓர் கடல்வீழ்ந்திவ்
வேழை படும்பா டறிந்திருந்தும்
மின்னை நிகரும் சடைமுடியீர்
விடங்கொள் மிடற்றீர் வினைதவிர்ப்பீர்
என்னை உடையீர் வெள்விடையீர்
என்னே இரங்கி அருளீரே.

உரை : மின்னற் கொடி போல் ஒளிரும் சடையை முடியிற் கொண்ட பெருமானே, விட முண்ட கழுத்தை யுடையவரே, உயிர்களைப் பிணிக்கும் வினைத் தொடர்பை யறுத்துதவும் தேவனே, என்னை அடிமை யாக வுடைய ஆண்டவனே, வெள்ளை நிற எருதேறும் தலைவனே, மிக்க பொன்னும் பொருளும் உடைய செல்வர்களும், கல்வியாகிய பொருளை மிக வுடைய அறிஞர்களும் ஆகிய இப் பெருமக்கள் கண்டிருக்கத் துன்ப மென்னும் கடலின்கண் வீழ்ந்து வருந்தும் ஏழையாகிய என் துயரங் களைப் பார்த்திருந்தும் என் மேல் இரக்கங் கொள்ளாதது என்னையோ, அருளுக. எ.று.

"பொலிந்திலங்கும் மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை" (பொன்வண்) என்று சான்றோர் புகழ்வது கொண்டு, "மின்னை நிகரும் சடை முடியீர்" எனவும், நீலகண்டன் எனப் போற்று தலால், "விடங்கொள் மிடற்றீர்" எனவும், செய்வினையிரண்டும் சேரா வாறு தொடர்பறுத்து இன்பத் துய்க்கும் "பால்வரை தெய்வமாதல்" பற்றி "வினை தவிர்ப்பீர்" எனவும், உடல் கருவி கரணங்களையும் உலகு போகங்களையும் தந்து ஆள்வதனுல், "என்னை யுடையீர்" எனவும், வெள்ளை யேற்றை யூரும் வித்தக னெனப் பரவப்படுவதால், "வெள் விடையீர்" எனவும் உடுத்தோதுகின்ருர். முன்னைத் தவத்தின் விளைவாகப் பொன்னும் பொருளும் மிக வுடையவராயின செல்வர்களும், உயர்ந்த கல்வியால் மிக்க அறிஞர்களும் என் தவமின்மை கண்டு இகழ்ந்து நோக்குமாறு, துயர் உழக்கின்றேன் என்பாராய், "பொன்னை யுடையார் மிகும் கல்விப் பொருளை யுடையார் இவர் முன்னே இன்னல் எனும் மோர் கடல் வீழ்ந்து" என்று உரைக்கின்ருர். இன்னல் - துன்பம்; இதற்கு எதிர்மொழி நன்னர் என்பது. தவமின்மை புலப்பட, "இவ்வேழை படும்பாடு" என்று கூறுகிருர். யான் துன்புறுவதையும், பொன்னும் கல்வியு முடையார் இகழ்ந்து நோக்குவதையும் திருவருட் கண்களாற் பார்த்தும் நீ இரங்கா திருப்பது வருத்தம் தருகிறது என்பார், "ஏழைபடும்பாடு அறிந்திருந்தும் என்னே இரங்கி யருளீரே" என முறையிடுகின்ருர். பாடு- துன்பம்.

இதனுல், உயர்ந்தோர் எனது தவமின்மை கண்டு இகழுமாறு துன்புறும் என் மேல் இரங்காமை நன்றன் றென்று விண்ணப்பித்த வாறும். (22)

கலித்துறை

2751. ஆயும் வஞ்சக நெஞ்சன்இவ் அடியனேன் ஐயா
நீயும் வஞ்சக நெஞ்சன்என் ருல்இந்த நிலத்தே
ஏயும் இங்கிதற் கென்செய்வேன் என்செய்வேன் எவைக்கும்
தாயும் தந்தையும் ஆகிஉள் நிற்கின்ருேய் சாற்ருய்.

உரை : எல்லா வுயிர்க்கும் தாயும் தந்தையுமாய் உள்ளத்தே எழுந்தருளும் சிவபெருமானே, இந்த நிலவுலகத்தில் அடியவனுகிய யான் நுணுகிக் காணத் தக்க வஞ்ச நினைவுகளைக் கொண்ட நெஞ்சினை யுடையவன்; என்னைப் போல் நீயும் வஞ்சனை பொருந்திய நெஞ்சினை

யுடையவ னென்பதாயின், யான் வாழ்தற்குப் பொருந்திய இவ்விடத்தில் யான் யாது செய்வேன்; நீயே சொல்லுக. எ.று.

எவற்றிற்கும் எனற்பாலது செய்யுளாதலின் சாரியை பெருது எவைக்கும் என நிற்கிறது. எல்லா வுயிர்கட்கும் தாயும் தந்தையுமாய் அவை ஒவ்வொன்றினுள்ளும் இருக்கின்ருன் என்று சான்ருேர் உணர்ந்து உரைத்தலால், "எவைக்கும் தாயும் தந்தையுமாகியுள் நிற்கின்ருேய்" என வுரைக்கின்ருர். வஞ்ச நினைவுகள் உள்ளத்திற் புதைந்து உணர்வாலன்றிப் புறக்கருவியாகிய கண் முதலியவற்ருற் காணப்படுவ தின்மையால், "ஆயும் வஞ்சக நெஞ்சன் இவ்வடியனேன்" என்று கூறுகின்ருர். ஆய்தல் - நுணுகுதல். மாய வுலகில் மாயா காரிய வுடம்பினுள் இருந்து மாய வாழ்வு நடத்துபவனுதலால், எனக்கு சவஞ் நெஞ்சம் பொருந்துவதாம்; தூய திருவருள் மேனியனுய உனது நெஞ்சம் வஞ்ச வியல்பினதாதல் கூடாதாகலின், "நீயு வஞ்சக நெஞ்ச னென்ருல்" என மொழிகின்ருர். இது குறித்து ஒருவரிடம் சொல்லவோ ஒன்று செய்யவோ மாட்டாமை பற்றி, "இதற் கென்செய்வேன்" என் செய்வேன் என வருந்துகிருர்.

இதனுல் நேஞ்சம் வஞ்ச முடையதவாதற்கு வருந்தியவாறும். (23)

2752. நானும் பொய்யன்நின் அடியனேன் தண்ணருள் நிதிநீ
தானும் பொய்யன்என் ருல்இதற் கென்செய்வேன் தலைவா
தேனும் பாலுந்தீங் கட்டியும் ஆகிநிற் றெளிந்தோர்
ஊனும் உள்ளமும் உயிரும்அண் ணிக்கின்ற உரவோய்.

உரை : தேனும் பாலும் இனிய கருப்புக் கட்டியும் போன்று நினது மெய்ம்மை யுணர்ந்த பெருமக்களின் உடம்பும் உள்ளமும் உயிரும் கலந்து இனிக்கின்ற திண்ணிய ஞானப் பொருளாகியவனே, நான் மனத்தாலும் மெய்யாலும் பொய்யனுவேன்; என்னைப் போல் நீயும் பொய்ய னெனப் படுவதாயின் இந்நிலைமைக்கு யாது செய்வேன்; தலைவனுகிய நீதான் அருள வேண்டும். எ.று.

மன மொழி மெய்களால் நான் நிலையின்றி மாறும் இயல்பினுல் பொய்ய னென்பது உலகறிந்த உண்மையாதலால், "நானும் பொய்யன்" என வுரைக்கின்ருர். எனக்குத் தலைவன் நீ; உனக்கு அடிமை நான் எனத் தொடர்பு காட்டற்குத் "தலைவா" என்றும், "அடியனேன்" என்றும் கூறுகின்ருர். மெய்ம்மையே யுருவாகிய நீயும் அருளாமற் பொய் செய்து பொய் படுவனுயின், எது கொண்டு உண்மை தெளிவேன் என்பாராய், "இதற்கு என்செய்வேன்" என்று இயம்புகின்ருர். தீங்கட்டி - கரும்பிற் சாற்றைக் காய்ச்சி யெடுக்கும் இனிய கட்டி. அண்ணித்தல் - இனித்தல். சடையர் கபாலியார், "எண்ணித் தம்மை நினைத்திருந்தேனுக்கு அண்ணித்திட் டமுதூறும் என் நாவுக்கே" (வெண்ணி) எனத் திருநாவுக்கரசர் கூறி யருளுவ தறிக. உரவோன் - திண்ணியவன்; அறிவாற்றல்களில் மெலிவுருத் தன்மையன் என்பது கருத்து. "வான் கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண் கெடினும் தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையன்" (தெள்ளே) என வரும் திருவாசகம் காண்க.

இதனால், மெய்ம்மையும் திண்மையும் உருவாகிய நீ பொய்யனுதல் கூடாதென இறைவன்பால் முறையிட்டவாறும். (24)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

2753. நேசனும் நீ சுற்றமும்நீ நேர்நின் றளித்துவரும்
ஈசனும்நீ ஈன்றாளும் எந்தையும்நீ என்றேநின்
தேசுறுசீர் ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை
ஆசகலும் வண்ணம் அருள்புரிந்தால் ஆகாதோ.

உரை: ஆண்டவனே, எனக்கு நண்பனும் சுற்றத்தானும், நேர் நின்றறிவறிவித் தருளும் அறிவுச் செல்வனும், பெற்ற தாயும் தந்தையும் நீயே யாவாய் என்ற கருத்தை யுட்கொண்டு, விளக்கமான நினது அருட் புகழை யுணர்த்தும் திருவைந் தெழுத்தை நாளும் ஓதுவேனாக, நாயினேனுடைய மலக் குற்றங்கள் நீங்கி யோடுமாறு அருள் செய் வாயாயின் நின் பெருமைக்கு ஒத்த தாகாதோ, சொல்லுக. எ.று.

நேசன் - நல்லன தெரிவித்து நன்னெறிக்கண் நிறுத்தும் அன்பன். சுற்றம் - துன்பக் காலத்து நீங்காதிருந்து துணை செய்பவன். ஈசன் - செல்வன்; பொருளேயன்றி அருட் செல்வமும் மிக வுடையவன் என அறிக. தேசு - ஒளி. ஈசன் புகழ் எவ்வுலகத்தும் பரந்து நின்று ஒளிர்வ தாகலின், "தேசுசீர்" எனவும், அவனுடைய பெரும் புகழனைத்தும் சிவாயநம என்ற எழுத்து ஐந்தனுள் அடங்குதல் தோன்ற, "தேசுறுசீர் ஐந்தெழுத்" தெனவும் உரைக்கின்றார். நாளும் ஓதி யுணர்வின்கண் நினைதல் கடனாதலால், "செப்புகின்ற நாயேன்" எனத் தெரிவிக்கின்றார். ஆசு - ஈண்டு மலமாயை கன்மத் தொடர்பால் உளவாகும் குற்றங்கள், இக் குற்றம் அனைத்தும் நீங்கினாலன்றித் திருவருள் ஞான வின்பம் எய்தாமை யால், "ஆசு அகலும்வண்ணம் அருள் புரிந்தாலாகாதோ" எனக் கேட் கின்றார். ஆகாதோ - பெருமைக்கு ஒத்த செயலாகாதோ. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது" (நமச்சி) என்பர் ஞானசம்பந்தர்.

இதனால், திருவைந் தெழுத்தை யோதி யொழுகும் என் குற்றங்களைப் போக்கி யருளுக என முறையிட்டவாறும். (25)

கட்டளைக் கலித்துறை

2754. ஆற்றால் விளங்கும் சடையோய்இவ் வேழை அடியனும்பல்
அற்றால் வருந்தும் வருந்தும்எல் லாம்முற் றறிந்தும்இன்னம்
ஆற்றா திருத்தல்நின் பேரருள் ஆற்றுக்கழகுகொலோ
ஆற்றாமை மேற்கொண் டழுதால் எவர்எனை ஆற்றுவரே.

உரை: கங்கையாற்றால் விளக்க மிகும் சடையையுடைய பெருமானே, அடியனாகிய யானும் பலவேறு வகையால் வருந்துகிற வருத்தங்களெல்லாவற்றையும் முழுதும் கண்டறிந்தும் இனியும் அவற்றைப் போக்காமல் இருப்பது உன்னுடைய பேரரு ளெறிக்கு

அழகாகாது; வருத்தங்களைத் தாங்க மாட்டாமல் மிக வருந்தி நான் அழுவேனாயின், ஆறுதல் கூறி என்னை ஆற்றுவிக்கக் கூடியவர் யாவர்? சொல்லியருள்க. எ.று.

சடை முடியில் தங்குகிற கங்கைப் பேரியாறு சிறு சடையொன்றின் வழியாக நிலத்திற் பாய்வது கண்டு நாடு பயனடைந்து மேன்மை யுற்றுப் பாராட்டுவது பற்றி, "ஆற்றுல் விளங்கும் சடையோய்" என விளம்புகிறார். நிலவுலகத்தையே அழிப்பது போற் பெருகி வந்த கங்கை யாற்றைச் சடையிற்றுங்கியதன் செருக்கடக்கிய செயல் மக்களுலகில் பெரிதும் பாராட்டப் படுவது கண்டு இவ்வாறு கூறுகின்றா ரெனினு மமையும். "வெள்ளந் தாழ்விரி சடையாய்" (சதகம்) எனத் திருவாசகம் ஓதுவது இதற்கு ஆதரவு தருவது காண்க. தன்னைக் குறித்தற்கு இகரச் சுட்டு நிற்கிறது. ஏழை யடியன், நல்லறிவில்லாத அடிமையாகிய யான். அகக் கரணம் புறக் கரணங்களாலும், வினை வகைகளாலும், பிறவித் துன்பங்கள் மூன்றாலும் துன்பங்கள் மேவுதலால், "பல்லாற்றால் வருந்தும் வருத்தம்" என்று கூறுகின்றார். இவை யாவும் முற்றறி வினனாகிய இறைவன் அறிய நிகழ்வதால், "வருத்த மெல்லாம் முற்றறிந்தும்" என மொழிகின்றார். முற்றவறிந்தும் எனற்பாலது "முற்றறிந்தும்" என வந்தது. இனியும் - என்பது இன்னும், இன்னமும் என வழங்கும். ஆற்றாது இருத்தல், துன்பத்தைப் போக்காமலிருப்பது. நீ மேற்கொண்டிருக்கும் பெருமை சான்ற திருவருள் நெறிக்குப் பொருந்தாது என்பாராய், "நின் பேரருள் ஆற்றுக்கு அழகு கொலோ" என்று புகல்கின்றார். துன்பங்களால் ஆற்றாமை மிக்க போது அரற்றி அழுவது தவிர வேறு செயலில்லை; அது கண்டு ஆற்றத் தக்கவரும் நின்னையன்றிப் பிறரில்லை என்பார், "ஆற்றாமை மேற்கொண் டழுதால் எவர் எனை ஆற்றுவரே" என்கின்றார்.

இதனால், துன்பங்களால் ஆற்றாமை யுற்றுத் தாம் அழுதரற்றும் திறம் எடுத்தோதியவாறும். (26)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2755. அருளார் அமுதே அரசேநின்
அடியேன் கொடியேன் முறையேயோ
இருள்சேர் மனனோ டிடர்உழந்தேன்
எந்தாய் இதுதான் முறையேயோ
மருள்சேர் மடவார் மயலாலே
மாழ்கின் றேன்நான் முறையேயோ
தெருளோர் சிறிதும் அறியாதே
திகையா நின்றேன் முறையேயோ.

2756. ஒழியாக் கவலை உறுகின்றேன்
உடையாய் முறையோ முறையேயோ
அழியாக் கருணைக் கடலேஎன்
அரசே முறையோ முறையேயோ

பொழியாப் புயலே அனையார்பால்
புகுவித் தனையே முறையேயோ
இழியாத் திரிதந் துழல்கின்றேன்
இறைவா முறையோ முறையேயோ.

உரை : என்னையுடைய பெருமானே, குன்றாத அருட் கடலே, அருளரசே, இறைவனே, நீங்காத மனக்கவலை யுற்று, பெய்யாத மேகம் போன்ற கன்னெஞ்சரான செல்வரிடம் சென்று வருந்தச் செய்ததுடன், இகழ்ச்சி யுற்று எங்கும் திரிய விட்டாய், இது முறையாகாது. எ.று.

உடல் பொருள் உயிர் மூன்றையும் பெற்றுக்கொண்டமை விளங்க "உடையாய்" என்றும், மேகங்களால் குறையுறும் நீர்க்கடல் போலாது ஈயக் குறை படாத அருட் கடல் எனச் சிறப்பித்தற்கு, "அழியாக் கருணைக் கடலே" என்றும், வாழ்வித்தலால் "அரசே" என்றும் கூறுகின்றார். மழை பொழியாத மேகம் போற் கொடைத் தன்மையில்லாத செல்வர்பாற் சென்று கொடாமையால் வருந்தச் செய்தது முறையாகா தென்பார், "பொழியாப் புயலே யனையார்பால் புகுவித்தனையே" எனவும், கொடாமையுடன் இகழ்ந்து புறம் போகச் செய்ததனால் ஊரூராய்ச் சென்று தாம் திரிந்தமை தோன்ற, "இழியாத் திரிதந் துழல்கின்றேன்" எனவும், இச் செயல்கள் துன்பம் விளைவித்தமைக்கு வருந்தினமை "விளங்க முறையோ முறையோ" எனவும் முறையிடுகின்றார்.

இவ்விரண்டு பாட்டுக்களால் இருண்ட மனத்தில் மயக்கமுற்றதும் ஈயாத செல்வரிடம் சென்று வருந்தியதும் முறையிடுகின்றார். (27), (28)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2757. மதிஒளிர் கங்கைச் சடைப்பெருங் கருணை
வள்ளலே தெள்ளிய அமுதே
நிதிஒளிர் வாழ்க்கை இந்திரன் முதலோர்
நிலைத்தவான் செல்வமும் மண்ணில்
பதிஒளிர் வாழ்க்கை மணிமுடி அரசர்
படைத்திடும் செல்வமும் வேண்டேன்
கதிஒளிர் நினது திருவருட் செல்வக்
களிப்பையே கருதுகின் றனனே.

உரை : பிறைச்சந்திரன் இருந்து விளங்கும் சடையையுடைய அருள் வள்ளலாய்த் தெள்ளிய அமுதம் போன்றவனே, செல்வப் பெருக்கையுடைய இந்திரன் முதலிய தேவர்களின் நிலையான செல்வ வாழ்வையும், தலைநகர்க்கண் வாழும் சிறப்புடைய மணி யிழைத்த முடியையணிந்து செல்வம் படைத்தவர்களாகிய வேந்தர்களின் செல்வ வாழ்வையும் யான் விரும்புவதில்லை; மேற் கதியாக விளங்கும் நின் திருவருட் செல்வப் பெருவாழ்வையே விரும்புகின்றேன். எ.று.

மதியென்றது - ஈண்டுப் பிறைச்சந்திரனை யென அறிக. தேய்ந்து சிறுகிய பிறைமதிக்குத் தேயா நிலை தந்த வளம் நினைந்து, "மதியொளிர் கங்கைச் சடைப் பெருங் கருணை வள்ளலே" என விதந்து பேசுகின்றார். "பின்னிய சடைமிசைப் பிறை நிறைவித்த பேரருளாளனார்" (கழுமலம்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. யாவராயினும் வழிபடுவார்க்கு வரம் தரும் வள்ளன்மை பற்றி, "பெருங் கருணை வள்ளலே" என்று புகழ்கின்றார். நினையும் நெஞ்சிற்குப் பெரிய இன்பத் தேன் சொரிதலின், "தெள்ளிய அமுதே" என்கிறார். சங்கநிதி, பதுமநிதி யெனப்படும் செல்வம் பலவுமுடையனாய், போக நுகர்ச்சியே வாழ்வாக வுடைய னென்பது பற்றி, இந்திரனைச் சிறந்தெடுத்து "நிதி வளர் வாழ்க்கை இந்திரன்" எனச் செப்புகின்றார். மண்ணவர் செல்வத்தை நோக்கத் தேவர்கள் செல்வம் நிலைபே றுடையதாகலின் "நிலைத்த வான் செல்வம்" எனக் கூறுகின்றார். இந்திரர்கள் மாயினும் பன்முறையும் பிறர்பால் தோல்வியடையினும் இந்திர னுலகமோ, இந்திர போகமோ மாறுவ தில்லையாகலின் இவ்வாறு உரைக்கின்றா ரெனினும் பொருந்தும். நிலைபேறுடையதாயினும் வேண்டப் படாமை விளங்க, "நிலைத்த வான் செல்வமும் வேண்டேன்" என விலக்குகின்றார். பதி - தலைநகர். தலைநகர் நலம் பலவும் குறைவறவுடையதாகலின், வேந்தர் வாழ்க்கையைப் "பதியொளிர் வாழ்க்கை" எனச் சிறப்பிக்கின்றார். திரட்டப்படும் இயல் பினதாகலின், "படைத்திடும் செல்வம்" எனப் புகல்கின்றார். படைத்து இடும் எனப் பிரித்து, திரட்டப் பெற்று வேண்டினார்க்கு உதவப்படும் செல்வ மென இயைத்தலும் ஒன்று. கதிகளிற் சிறந்து உயர்ந்து விளங்குவது பற்றி, சிவகதியைக் "கதி" எனக் குறிக்கின்றார். கதியால் எய்தப்படும் திருவருள் இன்பம் என்றற்குக் "கதியொளிர் திருவருட் செல்வக் களிப்பு" எனப் புகழ்கின்றார்.

இதனால் மண்ணக அரச போகத்தினும் விண்ணக இந்திர போகத் தினும் திருவருட் போகம் வேண்டப் பட்டமை தெரிவித்தவாறும். (29)

கட்டளைக் கலித்துறை

2758. வெள்ளங்கொண் டோங்கும் விரிசடை
யாய்மிகு மேட்டினின்றும்
பள்ளங்கொண் டோங்கும் புனல்போல்நின்
தண்ணருட் பண்புநல்லோர்
உள்ளங்கொண் டோங்கும் அவமே
பருத்த ஒதிஅனையேன்
கள்ளங்கொண் டோங்கும் மனத்துறு
மோஉறிற் காண்குவனே.

உரை: கங்கை நீரைத் தன்கண் கொண்டு தாங்கி விளங்கும் விரிந்த சடையையுடைய சிவபெருமானே, உயர்வு மிக்க மேட்டி னின்றும் பள்ளம் நோக்கி யோடும் தண்ணீரின் இயல்பையுடைய நினது தண்ணிய திருவருட் பண்பு, நற்பண்புடைய நல்லவர் உள்ளத்தில் தங்கி

மேம்படும் நலத்ததாகும்; வீணே பருத்த ஒதி மரம் போன்ற எனது கள்ள நினைவுகளே மிக்குற் றுயரும் மனத்தின்கண் வந்தெய்துமோ? எய்துமாயின் யானும் அதனைக் கண்டு மகிழ்வேன். எ.று.

வெள்ளம் - கங்கையாற்றின் பெருக்கு. நீர்ப் பெருக்கைத் தாங்கற்கு விரிந்த சடை யென்றற்கு "விரிசடை'' எனச் சிறப்பிக்கின்றார். ''வெள்ளம் தாழ் விரிசடையாய்'' (சதக) எனத் திருவாதவூரர் தெரியக் கூறுவது காண்க. பள்ளத்தை நோக்கி ஓடுவது நீர்க்கு இயல்பென அறிக; அதனால் நாளடைவில் பள்ளம் உயர்வது குறிக்கப் "பள்ளம் கொண்டு ஓங்கும் புனல்" எனப் பகர்கின்றார். அதுபோல் நினது திருவருட் பெருக்கும் "தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்'' (சிவ. சித்தி.) பெற்ற நல்லோர் உள்ளத்திற் பாய்ந்துயரும் பாங்கினை யுடைய தென்பார், "நின் திருவருட் பண்பு நல்லோர் உள்ளம் கொண்டு ஓங்கும்'' என உரைக்கின்றார். அவப் பண்பும் கள்ள நினைவு களும் நிறைந்து உள்வலி யில்லாத ஒதி மரம் போன்றுள்ளேனாதலின், மேடிட்ட என் மனத்தின்கண் பாய்தற் கில்லை என்பாராய், "அவமே பருத்த ஒதி யனையேன் கள்ளங் கொண்டோங்கும் மனத்துறுமோ'' என வினவுகின்றார். மேடு பள்ள மென்பதில்லை, திருவருள் எங்கும் சென்று பாயும் வன்மையுடைய தெனின், என் மனத்திற் பாயுமாயின் காண்பேன் என்பார், "உறிற் காண்குவனே'' என வுரைக்கின்றார்.

இதனால், திருவருள் என் மனத்தின்கண் எய்துமாயின் காண்பேன் எனத் தெரிவித்தவாறும். (30)

2759. ஐயாமுக் கண்கொண்ட ஆரமு தேஅரு ளார்பவள
மெய்யாமெய்ஞ் ஞான விளக்கே கருணை விளங்கவைத்த
மையார் மிடற்று மணியேஅன் றென்னை மகிழ்ந்ததந்தோ
பொய்யாஎன் செய்வல் அருளா யெனில்எங்குப் போதுவனே.

உரை: ஐயனே, கண்கள் மூன்றுடைய அரிய அமுதம் போன்றவனே, பவளம் போன்ற திருமேனியை யுடையவனே, உண்மை ஞான விளக்கமே, அருளுடைமை யாவரும் விளங்கக் காட்டாமை போன்ற கழுத்தையுடைய மாணிக்க மணியே, ஐயோ, அன்று, ஆட்கொண்ட போது என்னை விரும்பியது பொய்யாய் விட்டதோ? நீ இப்போது அருளா யின் யான் யாது செய்வேன்; எங்கே போவேன். எ.று.

சிந்திப்பார் சிந்தையின்கண் தேனூற விளங்குதலால் "ஆரமுதே'' என்று கூறுகிறார். பவளம் போற் சிவந்த மேனியும் அருளே யுருவாகவும் இருப்பதனால், "அருளார் பவள மெய்யா'' எனவும், உண்மை ஞானி கட்குச் சிவஞான விளக்கம் நல்குவது கொண்டு, "மெய்ஞ்ஞான விளக்கமே'' எனவும் இசைக்கின்றார். "திகழும் சோதி மெய் கிளரும் ஞான விளக்குக் கண்டாய்'' (மறைக்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. தேவர்கள்பாற் கொண்ட கருணையால் அவர்கள் அமுதுண் டற்கு, இடையூறாகப் போந்த நஞ்சை யுண்டு கழுத்திற் கறைபடச் செய்து கொண்டமை பற்றி, "கருணை விளங்க வைத்த மையார் மிடற்று மணியே'' எனக் கூறுகின்றார். "விண்ணவருக்கா வேலையுண் ணஞ்சம்

விருப்பாக வுண்ணவனைத் தேவர்க் கமுதீந் தெவ்வுலகிற்கும் கண்ணவனை" (கண்ணார் கோ.) என ஞானசம்பந்தர் கூறுகின்றமை யறிக. தமக்குச் சிவபரம் பொருளிடத்துப் பேராக்காத லுண்டாயதற்குக் காரணம் அவனருளாலாய தெனக் கருதுகின்றாராதலால், அதனை நினைந்து, "அன்றென்னை மகிழ்ந்தது" எனவும், அத் திருவருளால் உளதாகற்பாலதாகிய இன்பம் உள்ளத்தில் எழாமை யுணர்ந்து, "அந்தோ பொய்யா" எனவும் புகல்கின்றார். அவ்வருள் நலம் இல்லாவிடத்து எப்பணியையும் ஆர்வமுடன் செய்யலாகாமைக் கிரங்கி, "அருளா யெனில் என் செய்வல்" என்றும், அது பெறற்கு வேறெவர் பாலும் சேறற் காகாமையால், "எங்குப் போதுவனே" என்றும் வருந்து கின்றார்.

இதனால், அருளில்லையாயில் எச்செயலும் செய்ய மாட்டாமையும், எவரிடமும் போக மாட்டாமையும் தெரிவித்தவாறும். (31)

2760. நாரா யணன்திசை நான்முகன் ஆதியர் நண்ணிநின்று
பாரா யணஞ்செயப் பட்டநின் சேவடிப் பங்கயமேல்
சீரா யணம்பெறப் பாடுந் திறம்ஓர் சிறிதும்இலேன்
ஆரா யணங்குற நின்றேன்பொன் மன்றத் தமர்ந்தவனே.

உரை : பொற் சபையில் மேவுகின்ற பெருமானே, திருமால் பிரமன் முதலியோர் சென்று திருமுன் படைந்து நின்னுடைய திருவடிகளாகிய தாமரை பொருள் சீரும் சிறப்பும் அமையுமாறு பாடுகின்ற வகையை, ஒரு சிறிதும் இல்லாதவனாகிய யான், அயலவனாய் வருத்தம் மிக நின்றொழிந் தேன். எ.று.

திசை நான்காதல் பற்றி, நான்முகப் பிரமனைத் திசைமுகன் என்னும் வழக்குப் பற்றித் "திசை நான்முகன்" என்று குறிக்கின்றார்; திசைக் கொன்றாக நாற்றிசையும் நான்முகன் எனினும் பொருந்தும். நாராயணன்- திருமால். ஆதியர் - முதலிய தேவர்கள். நண்ணி நிற்றல் - சென்றடைதல். பாராயணம் - புகழ்களை ஒழுங்காக ஓதுவது. திருமால் பிரமன் முதலிய தேவர்கள் சிவபிரான் திருவடி புகழ்களை ஒழுங்காக ஓது கின்றார்கள் என்பது கருத்து. சேவடி- சிவந்த திருவடி. பங்கயம்-தாமரை. ஆயணம் - செல்லுதல்; வடசொல். உத்தராயணம்- தட்சிணாயணம் என்றாற் போல். பாட்டில் சீர்கள் யாப்பியல் மாறாமல் ஒழுங்காகப் பொருந்துவதைச் "சீராயணம் பெறப் பாடும் திறம்" என்று கூறுகின்றார். சீரும் தளையும் எதுகை மோனைகளும் பிறவும் வழுவாமற் பாடுவதை இங்ஙனம் கூறுகின்றார். ஆராய் அணங்குற நிற்பது, அயலார் போல வருத்தம் மிக நின்றொழிதல்.

இதனால், யாப்பிலக்கண நெறி வழுவாமற் பாடும் திறமை இல்லாதவன் எனத் தம்மைக் கூறுகின்றவாறும். (32)

2761 பேய்கொண்ட நெஞ்சகப் பாழால் வரும்என் பெருந்துயரை
வாய்கொண் டனந்தர் அனந்தர்க்கும் சொல்ல வராதெனில்இந்
நாய்கொண் டுரைக்க வருமோஎன் செய்குவன் நச்சுமரக்
காய்கொண்டு வாழைக் கனியைக்கை விட்ட கடையவனே.

உரை : பேய் கொண்டாற் போல் என் நெஞ்சமாகிய பாழ்த்த பொருளால் எனக்கு வருகிற பெரிய துன்பங்களை, எண்ணிறந்த ஆதிசேடர்களாலும் வாய் திறந்து உரைக்க முடியாதெனில், நச்சுத் தன்மையுடைய காயைப் பற்றிக் கொண்டு இனிமை மிக்க வாழைப் பழத்தைக் கைவிட் டொழியும் கடையவனான நாய் போன்ற யான் வாயால் சொல்ல முடியாது. எ.று.

கணப் பொழுதும் ஒடுங்காது பலவற்றைப் பலவாறு நினைந்து அலைவது பற்றி, நெஞ்சினை, "பேய் கொண்ட நெஞ்சகம்" என்றும், பயனில்லாமை குறிக்கப் "பாழ்" என்றும் இயம்புகின்றார். பாழ் - பாழான பொருள். வருந்தும் பெருந்துயர் - வருந்துதற் கேதுவாகிய பெருந்துயர். அனந்தர், அனந்தர் - எண்ணிறந்த ஆதிசேடர். ஆயிரம் நாவுடையவன் ஆதிசேடன் என்பர். சொல்லி முடியாத மிகுதியான தென்றற்குச் "சொல்லவாராது" எனக் கூறுகிறார். இகரச் சுட்டுத் தன்னைக் குறித்தது. நாய் போன்ற யான் குறிக் கொண்டுரைக்க முடியாது என்பார், "நாய் கொண்டுரைக்க வருமோ" என்று சொல்லுகிறார். நச்சு மரக்காய் உண்டாரை வருத்தும் நஞ்சினை யுடைய காய்; நோய் விளைவிக்கும் காய் என்பது கருத்து. கனியிருக்கக் காயை விரும்புதல் கயமையாதலின், "நச்சு மரக்காய் கொண்டு வாழைக் கனியைக் கைவிட்ட கடையவனே" என்று இசைக்கின்றார். கடையவன் - கீழானவன்; கயவன்.

இதனால் பாழ்த்த நெஞ்சாற் படும் துயரம் பகர வொண்ணாத பான்மைய தென்று பகர்ந்தவாறும். (33)

2762. வன்மாங் கரத்தேந்தும் மாமணியே
மணிகண்ட மணியே அன்பர்
நன்மானங் காத்தருளும் அருட்கடலே
ஆனந்த நடஞ்செய் வாழ்வே
பொன்மானம் பிணைப்பொருந்துப் அம்பினைவைத்
தாண்டருளும் பொருளே நீஇங்
கென்மானங் காத்தருள வேண்டுதியோ
வேண்டாயேல் என்செய்வேனே.

உரை : வன்மை மிக்க மானை அழகிய கையில் ஏந்துகிற பெரிய மாணிக்க மணியே, நீலமணி போன்ற கழுத்தையுடைய சிவமணியே, தொண்டர்களின் நல்ல பெருமை காத்தோம்பும் திருவருட் கடலாகிய பெருமானே, அம்பலத்தில் இன்ப நடம் புரியும் வாழ்முதலே, பொன் மானாய்த் தோன்றிய மாரீசனைக் கடனீருட் புகுவித்த இராமனாகிய அம்பினை மேரு வில்லிற் பொருத்தி யாண்ட பரம்பொருளே, நீ இங்கே என் மானத்தைக் காக்க விரும்புகின்றாயோ? விரும்பாயாயின் யான் யாது செய்வேன். எ.று.

வன்மான் - தாருக முனிவர் வேள்வியி லெழுப்பி விட்ட வலிய மான். அங்கரம் - அழகிய கை. மாமணி - பெரிய மாணிக்க மணி. மணிகண்டன் என்பதிலுள்ள மணி, நீலமணி; கண்டன் - கழுத்தை யுடையவன். மணி - சிவமணி. அன்பர் - சிவத்தொண்டர்; திருநீலகண்டர் முதலிய சிவத் தொண்டர். திருத்தொண்டர் புராணம் முழுதும் திருத்தொண்டரது மானத்தைச் சிவபெருமான் காத்த குறிப்பே நிலவும் பெருமை சான்ற தென்பது அறிஞர் அறிந்த செய்தியாகும். அது பற்றியே, "அன்பர் நன் மானம் காத்தருளும் அருட்கடலே" என இயம்புகின்றார். மலவிருளின் நீங்கி ஞான வொளியிற் புகுந்து இன்புறுவது கருத்தாக இறைவன் திருநடம் புரிகின்றான் என்பது அறிவு நூற் கருத்தாகலின், "ஆனந்த நடஞ் செய் வாழ்வே" என வுரைக்கின்றார். பொன் மான், சீதையினின்றும் இராமனைப் பிரிப்பது கருதித் தாடகை மகனாகிய மாரீசன் என்பான் இராமன் முன்பு தோன்றின வரலாற்றை நினைவிற் கொண்டு, "பொன் மான்" என்றும், தாடகையான தன் தாய் கொலை யுண்டமைக்குச் சினந்து போருடற்றிய போது இராமன் விடுத்த அம்பு அவனைக் கடலிற் புகுத்திய செய்தியை, "அம்பினைப் பொருந்தும்" என்றும் கூறுகின்றார். அம்பு - கடல். ஐயுருபு கண்ணுருபின் பொருளில் வந்தது. கொல்லாமல் கடலில் வீழ்ந்து மறையச் செய்த செய்தியை, "அம்பினைப் பொருந்தும்" என்று கூறுகிறார். பின்னர் நின்ற அம்பு - திருமாலாகிய அம்பு. திருமாலை அம்பாகக் கொண்டு திரிபுரப் போர்க்குச் சென்ற குறிப்பு விளங்க, "அம்பினை வைத்தாண்டருளும் பொருளே" என வுரைக்கின்றார். இனி - அழகிய மான் போன்ற நம் பிள்ளையைக் கூடி மகிழும் திருமாலாகிய அம்பு என்று கூறலும் ஒன்று. வடலூர்ப் பார்வதி புரத்தில் ஞான சபையைக் கட்டியபோது பொருள் முட்டுப்பட்ட காலத் தில் எதிர்பாரா வகையிற் சமீன்றார் பொருள் விடுப்பப்பெற்று வள்ளற் பெருமான் பாடியதாகச் சொல்லப்படும் வரலாற்றுக் குறிப்பு விளங்க, "இங்கு என் மானம் காத்தருள வேண்டுதியோ" என்று குறிக்கின்றார் என்பர். "மானம் படவரின் வாழாமை முன்னினிதே" (இனியவை) என்ற படிச் சாதலைத் தவிர்த்தமையின், "வேண்டாயேல் என்செய்வேனே" எனக் கூறுகின்றார்.

இதனாற் பொருள் பெற்று மானம் காக்கப்பட்ட திருவருட் குறிப்பு விதந்தோதப் பட்டவாறும். (34)

கலிநிலைத் துறை

2763. வைவ மென்றெழு கின்றவர் தமக்கும்நல் வாழ்வு
செய்வம் என்றெழு கின்றமெய்த் திருவருட் செயலும்
சைவ மென்பதும் சைவத்திற் சாற்றிடுந் தலைமைத்
தெய்வம் என்பதும் என்னள வில்லைஎன் செய்வேன்.

உரை: வசை கூறலாம் என நினைந்து முன் வருகின்றவர்கட்கும் இன்ப வாழ்வையே யளிக்கும் நினது திருவருட் செய்கையும், சைவம் என்பதும், சைவ மென்ற சமய நெறிக்குத் தலையாய தெய்வம் சிவம் என்று சைவ நூல்கள் உரைப்பதும் எளியேனாகிய என்னளவில் மெய் யல்ல வெனில் யான் என்ன செய்குவேன். எ.று.

வைதல் - இழித் துரைத்தல்; நிந்தித்தல் என்றுமாம். வைவம் - வசை கூறிப் பழிக்கலாம். சிவபரம்பொருளை வைதுரைக்க எல்லார்க்கும் இயலுவ தன்மை புலப்படுத்தற்கு "வைவமென்று எழுகின்றவர் தமக்கும்'! என வுரைக்கின்றார். உலகியல் வைதாரை வாழ விடுவதில்லை யாதலால், தெய்வ நிந்தனை தீது என்பது அறநூற் கருத்தென அறிக. நல்வாழ்வு - இன்ப வாழ்வு; செல்வக் குறைவில்லாத வாழ்வென்பது முண்டு. சைவம் - சிவ சம்பந்தம்; "சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்" (திருமந்) என்பர் திருமூலர். சைவ சமயத்துக்குரிய சிவாகமங்களையும் சைவம் என்பர்; "இது சைவம் நிகழ்த்து மாறே" (சிவப்) எனப் பெரியோர் வழங்குவதறிக. "சைவத்தின் மேற் சமயம் வேறிலை யதிற் சார்சிவமாம் தெய்வத்தின் மேற் றெய்வம் வேறிலை" என்று சான்றோர் கூறுவதை இப் பாட்டு வற்புறுத்துகின்றது. பிறர் எல்லாம் இனிது வாழக் காண்பதால், "என்னளவில்லை" என்றும், இக்குறை நீக்குவது சிவத்தின் செயலாதலின் என் செய்வேன்" என்றும் கூறுகின்றார்.

இதனால், என்னை நல்வாழ்வு பெற வருளாமை சைவ நெறிக்கு ஒத்த தன்றென உரைத்தவாறும். (35)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2764. ஐயரே உம தடியன்நான் ஆகில் அடிகள்
நீர்என தாண்டவர் ஆகில்
பொய்ய னேன்உளத் தவலமும் பயமும்
புன்கணும் தவிர்த் தருளுதல் வேண்டும்
தைய லோர்புறம் நின்றுளங் களிப்பச்
சச்சி தானந்தத் தனிநடம் புரியும்
மெய்ய ரேமிகு துய்யரே தருமவிடைய
ரேஎன்றன் விழிஅமர்ந் தவரே.

உரை : மங்கையாகிய உமாதேவியார் ஒரு புறம் நின்று கண்டு மகிழச் சச்சிதானந்தத் திருக்கூத்தாடும் திருமேனியையுடைய பெருமானே, மிக்க தூயவரே, அறவுருவாகிய எருதை யூர்தியாக வுடைய வரே, என்னுடைய இரு கண்களில் விரும்பி யெழுந் தருள்பவரே தலைவரே, யான் உமக்கு அடியவனாயின், அடிகளாகிய நீவிரே என்னை யாண்டருள்பவராயின், பொய்யனாகிய என்னுடைய மனக்கவலையும், அச்சமும் துன்பமும் போக்கி யருளல் வேண்டும். எ.று.

தில்லையம்பலத்தில் இறைவன் ஆடி யருளும் திருக்கூத்தை எதிரே ஒருபுறம் நின்று கண்டு மகிழ்கின்றாளாதலின், "தையலோர் புறம் நின்று உள்ளம் களிப்ப" என்று கூறுகின்றார். "கொடியிடை யுமையவள் காண ஆடிய குழகா" (வடமுல்லை) எனச் சுந்தரர் உரைப்பது காண்க. சத்தாயும் சித்தாயும் இன்பமாயும் நின்றாடும் திருக்கூத்தாதல் விளங்கச் "சச்சிதானந்த நடம்" எனவும், பிற தேவ ரெவரும் ஆடாத ஒப்புயர்வற்ற ஞான நடனம் என்றற்குத் "தனி நடம்" எனவும் புகழ்கின்றார். உருவ மில்லாத பரம்பொருள் சிவ வுருக்கொண்டு ஆடுவது பற்றித் "தனி நடம்

புரியும் மெய்யரே" என பராவுகின்றார். தூயரென்பது துய்யரென வந்தது. விழியாற் காணப்படுவன அனைத்தும் சிவமாய்த் தோன்றுதலால், "என்றன் விழி யமர்ந்தவரே" என விளம்புகின்றார். நான் அடிமை யென்பதும் நீ ஆண்டவ னென்பதும் உலகறிந்த செய்தியாகவும், நான் துன்பமும் கவலையும் உற்று வருந்துவது பொருத்தமன்று என்பார், "உமது அடியன் நானாகில் அடிகள் நீர் என தாண்டவராகில் பொய்யனேன் உளத்து அவலமும் பயமும் புன்கணும் தவிர்த் தருளுதல் வேண்டும்" என்று சொல்லுகிறார். தவிர்த்தலென்று ஒழியாமல், அருளுதல் வேண்டும் என்றது மீண்டு அவை உண்டாகாமை குறித்தென அறிக.

இதனால் ஆண்டவனாகிய நீ அடிமைக்குளவாகும் அவலமும் பயமும் பிறவும் போக்கி யருளுக என வேண்டியவாறும். (36)

2765. எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினுஞ் சிறியேன் பொய்விழைந் துழல்வேன்
புன்மையேன் புலைத்தொழிற் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : கற்றூணினும் வன்மை மிக்க மனமுடையனாய், மலத்தை மொய்த்துக் கிடக்கும் ஈயினும் நாயினும் இழிந்தவனாய், புழுவினும் சிறியனாய், பொய்ம்மையையே விரும்பி யுழல்பவனாய், புன்மையும் புலைத்தொழிலும் புரியும் கடையனாய், குற்றங்களை மிகச் செய்பவனாய், மடமைத் தன்மையினும், மிக்கவனாய், மாட்சிமை யில்லாத வஞ்சம் நிறைந்த நெஞ்சினையுடைய கீழ் மக்கள் கூட்டத்தில் பெரியவனாய் உள்ளவனாதலால் தில்லையம்பலத்துக் கூத்தப் பெருமான் திருவருட் குறிப்புப் பெறுதற்கு யாது செய்வேன். எ.று.

எழு - தூண்; ஈண்டுச் சிறப்புடைய வலிய கற்றூண் மேற்று; கணைய மரம் எனினு மமையும். வன்மை குறித்து, "எழுவினும் உயர்ந்த தோளாய்" என்பர் கம்பர். மல வகையைச் சூழ்ந்து மொய்த்துக்கிடப்பது பற்றி "மலஞ்சார் ஈயினும்" என்றும், அம்மலத்தை விரும்பி யுண்பது பற்றி "நாயினும்" என்றும் இயம்புகின்றார். விழைவுகளாலும் செயல்களாலும் உயர் பொருட்களுக்கு ஒப்பாக வேண்டிய யான் கீழ்மைப் பொருள்கட்கு ஒப்பாகும் இழிநிலையை யடைந்தேன் என்பார், "இழிந்தேன்" என வுரைக்கின்றார். மலத்திடைக் கிடந்து நெளியும் புழுப் போல் சிறுமை யுற்றேன் என்றற்குப் "புழுவினும் சிறியேன்" என்று கூறுகின்றார். மேன்மை தரும் மெய்ம்மையை விரும்பாமல், பொய்ம்மையை விரும்புவதால், யான் புன்மையும் புலைத்தொழிலும் உடையவனாயினேன் என்றற்குப் "பொய் விழைந் துழல்வேன் புன்மையேன் புலைத் தொழிற் கடையேன்" என்று புகல்கின்றார். வழு - குற்றம். நிறுத்தும் நலமின்றி - தன்பால் இயங்குவோரை வீழ்த்தி வருத்தும் இயல்பினதாத

லால், குற்றம் வழு எனப்படுகிறது. மிகப் பல குற்றம் செய்துள்ளமை விளங்க, ''வழுவினும் பெரியேன்'' என்றும், குற்றம் மிகுதற்கேது மடமை மிகுதியாதலால், ''மடத்தினும் பெரியேன்'' என்றும் கூறுகின்றார். வஞ்சம் பொருந்திய நெஞ்சுடையவர் கூட்டம் மாண்புறுதல் இல்லையாத லால், ''மாண்பிலா வஞ்சக நெஞ்சக் குழு'' எனப் பழிக்கின்றார். வஞ்சகர் கூட்டத்தில் வஞ்சத்தால் தாம் உயர்ந்தவ ரென்பார், ''வஞ்சக நெஞ்சக் குழுவினும் பெரியேன்'' எனவும், இவ்வாற்றால், அம்பலவாணன் திருவருட் பேற்றுக்கு வேண்டும் உரிமையை இழந்தேனாதலால், ''அம்பலக் கூத்தன் குறிப்பினுக்கு என் கடவேன்'' எனவும் இயம்பு கின்றார்.

இதனால், கூத்தப் பெருமான் திருவருட் பேற்றுக்கு உரிமை யிழந்தமை யுரைத்து வருந்தியவாறும். (37)

கலி விருத்தம்

2766. பொன்அ ளிக்கும்நற் புத்தியுந் தந்துநின்
தன்ன ருட்டுணைத் தாண்மலர்த் தியானமே
மன்ன வைத்திட வேண்டும்எம் வள்ளலே
என்னை நான்பல கால்இங்கி யம்பலே.

உரை : வள்ளலாகிய பெருமானே, பொன்னுலக வாழ்வைத் தருகின்ற நன்ஞானம் தந்து நின்னுடைய திருவடிகளாகிய தாமரை களைச் சிந்திக்கும் தியானமே என் மனத்தில் நிலைபெறச் செய்தருள வேண்டுகிறேன்; இவ்வாழ்வில் எனக்கு வேண்டுவது ஈது என்று பலகாலும் இயம்புதல் வேண்டுமோ?

வேண்டுவார் வேண்டுவ தீயும் தண்ணிய வள்ளன்மை யுடையவன் என்று சான்றோர் எடுத்தோதுவது பற்றி, சிவபிரானை ''வள்ளலே'' என்று போற்றுகின்றார். பொன்னளிக்கும் நற்புத்தி யென்றது, இறவாப் பேரின்ப மளிக்கும் சிவ ஞானத்தை என்க; மண்ணியற் பொன்னும் பொருளும் போகமும் விரும்பும் உள்ளம் வடலூர் வள்ளல் யாண்டும் வேண்டிற்றிலர். சிவபிரான் திருவடியைச் சிந்தித்திருக்கும் சிவத் தியானமே சிந்தைக் கண் நின்று நிலவ வேண்டுமென்பது அவரது நிலையாய கருத்தாதல் தோன்ற, ''நின் தன்னருட் டுணைத் தாண்மலர்த் தியானமே மன்ன வைத்திட வேண்டும்'' என்று பராவுகின்றார். ஒருமுறை வேண்டு வோர்க்குப் பன்முறையும் அருள் புரிபவனாக நான் பன்முறையும் உன்னை வேண்டுதல் பொருந்துமோ என்பாராய், ''என்னை நான் பலகால் இங்கு இயம்பலே'' என மொழிகின்றார்.

இதனால், திருவடித் தியானமே மனத்தின்கண் நிலைபெற அருள வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (38)

2767. தாயும் தந்தையும் சற்குரு நாதனும்
ஆயும் தெய்வமும் நீஎன் றறிந்தனன்
பாயும் மால்விடை ஏறும் பரமனே
நீயும் கைவிட என்னை நினைத்தியோ.

உரை : பாய்ந்து செல்லும் பெரிய எருதை இவரும் பரம்பொருளே, எனக்குத் தாயும் தந்தையும் ஞானசிரியனும் நுட்பமாய் எண்ணி வழிபடும் தெய்வமும் நீயேயாவாய் என அறிந்துகொண்டேனாதலால் என்னை இனிக் கைவிடத் திருவுளம் கொள்ளலாகாது. எ.று.

சின்னாள் வாழ்ந்து மறையும் உலகியல் தாய் தந்தையர் போலின்றி, என்றும் எப்பிறப்பினும் தாயும் தந்தையு மாகுபவன் சிவபரம் பொருள் எனத் தெளிய வுணர்ந் தொழுகுதல் அரிய செயலாதலால், "தந்தையும் சற்குரு நாதனும், ஆயும் தெய்வமும் நீ என்றறிந்தனன்" என வுரைக்கின்றார். கற்பன கற்று வல்ல அறிஞர்க்கும் இறைவனே தாயும் தந்தையுமாவான் என்பதைப் பலகாற் படித்துப் பயின்றிருப்பினும் உள்ளத்தின் கண் உள்ளவாறு அறிந்தொழுகுவது அரிதாக இருப்பது பற்றி, "அறிந்தனன்" என எடுத்து மொழிகின்றார். சற்குரு - ஞானசிரியன். கற்கப்படும் வேதங்களும் இதிகாசங்களும் புராணங்களும் யாவும் பலவேறு தெய்வங்களை எடுத்தோதி அறிவார் அறிவை மயக்குதலால், உண்மைப் பரம்பொருளாகிய தெய்வம் ஒன்றே என உணர்தல், ஒள்ளிய நுண்ணுணர்வு உடையவர்க்கே கைவருதலால், "ஆயும் தெய்வம்" என அறிவிக்கின்றார். பாய்ந் தோடுவது எருதிற் கியல்பாதலால் "பாயும் மால் விடை" என்று சிறப்பிக்கின்றார். தன்னை நினைந்தாரைக் கைவிடல் சிவனுக்கு இயல்பன்று என்பதை எதிர்மறை வாய்பாட்டால் வற்புறுத்தற்கு "நீயும் கைவிட என்னை நினைத்தியோ" என்று கூறுகின்றார். உம்மை - சிறப்பு.

இதனால், தாய் தந்தை முதலிய யாவும் சிவனே என அறிந்தொழுகுகின்றமை எடுத்தோதியவாறும். *(39)*

வேறு

2768. ஒழியா மயல்கொண் டுழல்வேன் அவமே
அழியா வகையே அருள்வாய் அருள்வாய்
பொழியா மறையின் முதலே நுதல்ஏய்
விழியாய் விழியாய் வினைதூள் படவே.

உரை : உன் சிறப்பை ஓதுகின்ற வேதங்களின் முதற் பொருளே, பொருந்திய கண்ணை யுடையவனே, நீங்காத உலகியல் மயக்கமுற்று வருந்துகின்ற யான் வீணே அழிந்துபடாதபடி எனது திருவருளை நல்குக; என்னைச் சூழ்ந்துள்ள வினைத் திரள் வெந்து பொடியாகுமாறு திருவருட் கண்ணோக்கம் செய்தருள்க. எ.று.

முடிந்த முடிபாக வேதங்கள் ஓதுவது பரமாகிய முதற் பொருளை யாதலால், "மறையின் முதலே" என்று மொழிகின்றார். நெற்றியிற் கண்ணையுடையனாதலால் சிவனை "நுதலேய் விழியாய்" என்று குறிக்

கின்றார். பிறவித் தொடர்பு முற்றக் கெடும்வரை மலமயக்கம் நீங்காமை பற்றி, "ஒழியா மயல் கொண்டு உழல்வேன்" என மொழிகின்றார். திருவருள் ஞான வொளி எய்தினாலல்லது மலவிருள் நீங்காதாதலால், "அவமே அழியாவகை அருள்வாய் அருள்வாய்" என அடுக்கி யுரைக்கின்றார்; வலியுறுத்தற் பொருட்டு. தன்னைச் செய்த வுயிரைச் சூழ்ந்து பிணித்துக்கொள்வது வினைத்திரட்கு இயல்பு; ஞானத் தீயால் வினைக்கட்டுடைந்து வெந்து பொடியாகும் என்பராகலின் "வினை தூள்பட விழியாய்" என விளம்புகின்றார். "வெய்ய வினை யிரண்டும் வெந்தகல மெய்யுருகிப், பொய்யும் பொடி யாகா தென் செய்கேன்" (திருவெண்பா) என மணிவாசகப் பெருமான் உரைப்பது காண்க.

இதனால், மய லகல அருளொளியும் வினை தூள்பட அருள் நாட்டமும் செய்தருளுக என வேண்டியவாறும். (40)

வெண்துறை

2769. உலகெ லாம்நிறைந் தோங்கு பேரருள்
உருவ மாகிஎவ் உயிரும் உய்ந்திட
இலகு வானொளி யாம்மணி
மன்றிடை என்றும்நின்றே
அலகில் ஆனந்த நாடகஞ் செய்யும்
அப்பொற் சேவடிக் கபயம் என்னையும்
திலக நீவிழை வாய்நட
ராசசி காமணியே.

உரை: நடராச சிகாமணியே, உலகங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்து உயர்ந்து ஓங்குகின்ற பேரருளே திருவுருவாய் அமைந்து உயிர் வகை யாவும் உய்திபெறும்பொருட்டு ஒளி செய்யும் மணிகள் இழைத்த பொற் சபையின்கண் எக்காலத்தும் நின்று திகழ்கின்ற பெருமானாகிய சிவனே, அளவில்லாத இன்ப நடனம் புரிகின்ற சிவந்த திருவடிக்கண் அபயம் புக்கிருக்கும் என்னையும் எப்பொருட்கும் திலகமாகிய நீ விருப்புடன் ஏற்று அருள் செய்க. எ.று.

நடராசன் - கூத்தியலுக்குத் தலைவன். கூத்தியல் வல்லார் அனைவர்க்கும் முடிமணியாய்த் திகழ்வது புலப்பட, கூத்தாடும் பெருமானை "நடராச சிகாமணி" யென்று சிறப்பிக்கின்றார். உலகங்கள் எண்ணிறந்தனவாய் அளப்பரும் பெருமை யுடையவாய் இருந்தலால் "உலகெல்லாம்" என்றும், அவற்றுள் அகம் புறமென்பதின்றி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது பற்றி, "நிறைந்து" என்றும், நிறைந்திருப்பதோ டமையாது அவை யாவும் தன்னுள் அடங்க ஓங்கி யுயர்ந்திருக்குமாறு தோன்ற "ஓங்கு பேரருள் உருவமாகி" என்றும் இயம்புகின்றார். இப் பெற்றியனாகிய பரம்பொருள் தில்லையம்பலத்தின்கண் ஞான நாடகம் புரிபவனாய் நின்றாடும் பெருமானாய் விளங்குகின்றான் என்பாராய், "ஒளியாம் மணி மன்றிடை என்றும் நின்று இலகுவான்" என்றும் இசைக்கின்றார். இதற்குக் காரணம் மலவிருளில் புதைந்து

கிடக்கும் உயிர்கள் உய்தி பெறல் வேண்டும் என்னும் பேரருளுடைமை என விளக்குதற்கு "எவ்வுயிரும் உய்ந்திட" எனவும், மக்களுயிரேயன்றிப் பிற எல்லா வுயிரும் உய்தி பெறற்கு என வலியுறுத்தற்கு "எவ்வுயிரும்" எனவும் இசைக்கின்ருர். உலகில் மக்களுயிர் ஆடியும் ஆடுவித்தும் பெறும் இன்பம் கால விட எல்லைக் குட்பட்டுச் சிறுமையுறுதல் போலின்றி எல்லையிறந்து வற்ருத பேரின்பம் நல்குதலால், சிவனது நடன வின்பத்தை, "அலகில் ஆனந்த நாடகம்" எனப் புகல்கின்ருர். திலகம் - உயர்ந்தது. "இன்னிசைக் கூத்து நோக்கி யிருந்தனன் திலக மன்ஞன்" (*சீவக. 1170*) என்ருற் போல.

இதனுல் சிவன் புரியும் திருக்கூத்தின் கருத்தை விளக்கியவாறும். (*41*)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2770. என்னிருகண் காள்உமது பெருந்தவம்எப்
புவனத்தில் யார்தான் செய்வர்
முன்னிருவர் காணுமல் அலேந்தனரால்
இனுங்காண முயலா நின்ருர்
நன்னிருபர் தொழுதேத்தும் அம்பலத்தே
ஓரிடத்தோர் நாள்ஆ தித்தர்
பன்னிருவர் ஒளிமாற்றும் பரஒளியைப்
பார்த்துயர்ந்தீர் பண்பி னீரே.

உரை : என்னுடைய இரு கண்களே, நீவிர் உயர்ந்த பண்பின் பயனுடையவரா யிருக்கின்றீர்கள், உம்மைப் போல் பெரிய் தவத்தை இப் பெரிய வுலகில் யாவரால் செய்ய முடியும்? முற்காலத்தில் பிரமன் திருமால் என்ற இருவரும் காணுதற் கின்றி வருந்தியதோடு இப் பொழுதும் மாட்டாமையால் காண்பது கருதி முயன்றவண்ண முள்ளனர்; நற்றவமுடைய நில மன்னர் கண்டு கைகளால் தொழுது போற்றும் தில்லையம்பலத்தில் ஒரு நாள் ஓரிடத்திருந்து சூரியர் பன்னிருவரது ஒளித் திரளைக் குறை படுத்தி ஒளிரும் மேலான பரசிவ வொளியை இனிது கண்டு உயர்ந்தீர்கள் அன்ருே? எ.று.

முன்னெருகால் பிரமனும் திருமாலும் கொண்ட பிணக்கம் தீரும் பொருட்டுச் சிவபிரான் ஒளிப் பிழம்பாய்த் தூணுருவாய் நின்றுயர்ந்த போது அதன் முடியும் அடியும் காணமாட்டாது வருந்திய வரலாற்றை நினைப்பிப்பாராய், "முன்னிருவர் காணுமல் அலேந்தனரால் இனுங்காண முயலா நின்ருர்" என்று கூறுகின்ருர். இரணியவன்ம னென்ற பல்லவ வேந்தனும் தமிழ்நாட்டு முடிவேந்தரும் தில்லையம்பலம் கண்டு வழிபட்டு உய்ந்த வரலாறு நினைந்து, "நன்னிருபர் தொழு தேத்தும் அம்பலம்" என்று பாராட்டுகின்ருர். அன்று அவனி வேந்தர் கண்டு மகிழ்வுற்ற அம்பலத்தில் நீவிர் கண்டு மகிழ்ந்தீர்கள் என்பது கருத்து. ஆதித்தர் பன்னிருவர் என்று புராணிகர் கூறுவர். பன்னிரண்டு சூரியர்கள் ஒருங்கே கூடிய வழி யுண்டாகும் ஒளியினும் மிக்கது பரசிவ வொளி என்றற்கு "ஆதித்தர் பன்னிருவர் ஒளி மாற்றும் பரவொளியைப் பார்த்

துயர்ந்தீர்'' என்று பகர்கின்ருர். சிவவொளியைப் பார்க்கும் பண்பினுல் மிகவுயர்ந்தன தம்முடைய கண்கள் என்பாராய், "பார்த்துயர்ந்தீர் பண்பினீரே'' என்று பாராட்டுகின்ருர்.

இதனுல் தில்லையம்பலத்தில் சிவ பரவொளியைத் தரிசித்தமை எடுத்தோதியவாரும். (42)

2771. சேணுடர் முனிவர்உயர் திசைமுகன்மால்
உருத்திரன்அத் திரளோர் சற்றும்
காணுத காட்சியைநான் கண்டேன்சிற்
றம்பலத்தின் கண்ணே பன்னுள்
ஆணுகப் பிறந்தடியேன் அருந்தவம்என்
புரிந்தேனே அறிகி லேன்முன்
பேணுத பிறப்பெல்லாம் பிறப்பலஇப்
பிறப்பேஎன் பிறப்பாம் அந்தோ.

உரை: வேந்தர்களும் முனிவர்களும் தேவரில் உயர்ந்த பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரும் பிறரும் சிறிது போதும் கண்டிராத காட்சியை நான் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் பன்னுள் கண்டு மகிழ்ந்தேன்; மண்ணில் அடியேன் ஆண் மகனுகப் பிறந்து என்ன உயரிய தவம் செய்தேனே, அறிகிலேன்; முன்னே பிறந் தொழித்த பிறப்புக்கள் பலவும் பிறவிகளாகா; இப்போது எடுத்துள்ள பிறப்பே எனக்குப் பயன் படும் பிறப்பாம். எ.று.

சேணுடர் - மேலுலகத்துத் தேவர். தேவர் முனிவர் முதலிய பலரினும் உயர்ந்த தேவர்களாதலின், "உயர் திசைமுகன் மால் உருத்திரன்'' என்றும், ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர், எண் வசுக்கள், பதினெண் கணங்கள், அசுவினி தேவர் எனப் பலர் கூடிய கூட்டத்தை "அத் திரளோர்'' என்றும் சுட்டுகின்ருர். அகரம் - உலகறி சுட்டு. தேவ தேவர்களான மூவராலும் காணப்படாத சிவபர ஒளியை, உருத்திரர், ஆதித்தர் முதலியோர் காண்பதென்பது இயலாத தொன்ருதலின், "அத்திரளோர் சற்றும் காணுத காட்சியை'' என்கின்ருர். தான் கண்ணுற் கண்டு இன்புற்றதைத் தெற்றென விளக்குதற்கு, "நான் கண்டேன் சிற்றம்பலத்தின் கண்ணே'' என்றும், அதனைத் தானும் பலநாள், பன்முறை கண்டின்புற்றமை தோன்ற, "பன்னுள்'' என்றும் பகர்கின்ருர். பெண் பிறப்பு உயர் தரத்துக் குரியதன்று என்னும் கொள்கை பற்றி, "ஆணுகப் பிறந்து'' எனவும், காட்சியின் பெருமை புலப்பட "அருந்தவம் என் புரிந்தேனே'' எனவும், முன்னைப் பிறப்பின் வினைப் பயனுதலால், "அறிகிலேன்'' எனவும் கூறுகின்ருர். முன்னைப் பிறப்புக்கள் இவ்வருட் காட்சியை நல்காமையின் அவற்றைப் "பேணுத பிறப்புக்கள்'' என்றும், "பிறப்பல்ல'' என்றும் பேசுகின்ருர். பிறப்பின் பயன் கைகூடுதலால், "இப்பிறப்பே என் பிறப்பாம்'' என இயம்புகின்ருர். அந்தோ - அசை.

இதனுல், அருட் காட்சி எய்துதற்கு வாய்ப்புடைத்தாகிய இப் பிறப்பை வியந்துரைத்தவாரும். (43)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2772. இருளற ஓங்கும் பொதுவிலே நடஞ்செய்
எங்குரு நாதன்எம் பெருமான்
அருளெனும் வடிவங் காட்டிஒண் முகத்தே
அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற அருமைத் திருக்கையால் தடவித்
திருமணி வாய்மலர்ந் தருகில்
பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள்
புகுந்தனன் புதுமைஈ தந்தோ.

உரை: காண்பவர் மனவிருள் நீங்குமாறு உயர்ந்து விளங்கும் தில்லையம்பலத்தில் திருக் கூத்து இயற்றும் எங்கள் ஞானசிரியனாகிய சிவபெருமான், அருளுருவாகிய தன் வடிவத்தைக் காட்டித் தனது ஒள்ளிய முகத்தின்கண் அழகு மிகும் புன்சிரிப்போடு, எனது அறிவு தெளிவுறுமாறு தனது அருமையான கையால் என் தலையைத் தடவித் தனது பவழ மணி போன்ற திருவாய் திறந்து, எனது அருகில் மெய்ம்மை விளங்க இருந்து இனிய சொல் ஒன்றை யோதி, என் உள்ளத்தே புகுந்துகொண்டான்; ஈதொரு புதுமை யிருந்தவாறு! எ.று.

தில்லைப் பொன்னம்பலத்தில் எழுகின்ற நல்லொளி உலகிற் பரவும் புற விருளையேயன்றி, தன்னைக் கண்டு பரவும் அன்பரது அகவிருளையும் போக்கும் மாண்பால் உயர்ந்தது என்றற்கு, "இருளற ஓங்கும் பொது" என்று புகழ்கின்றார்; பொது சபை - மன்று என்றுமாம். மன்றின்கண் நின்று ஆட வியற்றும் பெருமான் கூத்தாலும் பெருமானாதலே யன்றிச் சிவஞானம் வழங்குதலாலும் ஞானசிரியப் பெருமானாகத் திகழ்வது பற்றி, "பொதுவிலே நடஞ்செய் எங்குருநாதன் எம்பெருமான்" என்று பாராட்டுகின்றார். அருளே அப்பெருமானுக்குத் திருமேனியாதலால் அவனது தோற்றம், "அருளெனும் வடிவம்" எனக் குறிக்கப் பெறுகின்றது. தனது அருளுருவை வடலூர் வள்ளல் கண்ணிற் காணக் காட்டுவது போலக் காட்சி தந்து, கூத்தப் பெருமான் எதிரே தோன்றித் தனது திருமுகத்தில் புன்னகை தவழ நின்றமையின், "வடிவங்காட்டி ஒண்முகத்தே அழகுறும் புன்னகை காட்டி" என வனைந்துரைக்கின்றார். தன் அடி பணிந்து வணங்கியவரைத் தலைமேற் கை வைத்தருளுதல் அருளறச் சான்றோர் மரபாதலின், சிவபெருமான் "அருமைத் திருக்கையால் தடவி"னார் எனக் குறிக்கின்றார். அவ்வாறு தடவியதால் மனத்தின்கண் தடுமாற்றம் நீங்கித் தாம் ஞானத் தெளிவு பெற்றமை தோன்ற, "தெருளுறத் திருக்கையால் தடவி" என மொழிகின்றார். எல்லாரும் பெறலரிய பேறுதலின், அதனை வழங்கிய கையை "அருமைத் திருக்கை" என வுரைக்கின்றார். பவழ மணி போற் சிவந்த வாய் என்றற்குத் "திருமணிவாய்" என்று பராவுகின்றார். காட்சி தந்து, மனங் கனிந்து, வணங்கிய வடலூர் வள்ளலின் தலைமேற் கை வைத்துத், தடவித் தெளி வெய்துவித்துத் தெருட்டிய சிவபெருமான், தமது திருவாய் திறந்து அருளுரை யொன்று இருந்து வழங்கினான் என்பார், "வாய் மலர்ந்தருகிருந்து ஓர் வாக்களித்து என்னுட் புகுந்தனன்" எனப்

புகன்றுரைக்கின்ருர். கனவுக் காட்சி யாகாது நனவின்கண் நிகழ்ந்தமை விளங்கப் "பொருளுற இருந்து" எனப் புகல்கின்ருர். அருகிலிருந்து, மணிவாய் மலர்ந்து, வாக்களித்து என்னுட் புகுந்தனன் என இயைத்துக் கொள்க. அருளுரை கேட்டுக் கண்களை மூடித் திறந்த வடலூர் வள்ளலுக்குப் புறத்தோற்றம் மறைந்து மனக்கண் காண நின்றமையின், "என்னுட் புகுந்தனன்" என உரைக்கின்ருர். ஏனை ஞானச் சார்புடைய பெருமக்களுக்கு, மக்கள் உருவில் போந்து, அருண் ஞானம் வழங்கியது போலாது, கண் காணப் போந்து, அருள் வழங்கிக் கருத்துட் புகுந்து கொண்டது வடலூர் வள்ளற் பெருமானுக்கு வியப்பு மிகுவித்தமை தோன்ற, "புதுமை ஈதந்தோ" என்று இசைக்கின்ருர்.

இதனல், இறைவன் அருளுருக் கொண்டு போந்து அறிவருளிய திறம் வியந்து விளம்பியவாரும். (44)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2773. பொன்என்கோ மணிஎன்கோ புனிதஒளித்
திரள்என்கோ பொற்பின் ஓங்கும்
மின்என்கோ விளக்கென்கோ விரிசுடர்க்கோர்
சுடர்என்கோ வினைய னேன்யான்
என்என்கோ என்என்கோ எம்பெருமான்
திருமேனி இருந்த வண்ணம்
முன்என்கோ தறுதவத்தால் கண்டுகளித்
திடப்பெற்றேன் முக்கண்மூர்த்தி.

உரை: எங்கள் பெருமானுகிய சிவனது திருமேனி யிருக்கும் திறத்தைப் பொன் னென்று சொல்வேனு, மாணிக்க மணி என்பேனு, தூய ஒளி யெல்லாம் திரண்டதென்று சொல்வேனு, அழகு மிக்குச் சிறக்கும் மின்னென்று உரைப்பேனு, விளக் கென்பேனு, வினையை யுடையனுகிய யான் வானத்தில் சுடர் விரிந்து தோன்றும் ஞாயிறு முதலிய சுடர்க் கெல்லாம் ஒளி மிக்க சுடர் எனக் கூறுவேனு, என்ன என்னென்ன எடுத்தோதுவேன்; முற்பிறவிகளில் யான் செய்த குற்ற மற்ற தவப்பயனுக இப்பொது கண் மூன்றுடைய திருமூர்ந்தியாகிய சிவபிரானைக் கண்களாற் கண்டு மிக்க மகிழ்ச்சி பெற்றேன், காண். எ.று.

பொன்போல் ஒளிர்தலால் சிவன் திருமேனியைப் பொன்னென்னலாம் என்பார், "பொன் னென்கோ" எனப் புகல்கின்ருர். "பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி" (பொன்வண்) என்பர் சேரமான் பெருமாள். ஒளியோடு கூடிய நிறத்தால் மாணிக்க மணி போறலின் "மணி யென்கோ" எனக் கூறுகின்ருர். மரகத மணியின் நிறம் கொண்த் உமையம்மையின் ஒளியும் கலந்து விளங்குவதால், "புனித வொளிட திரள் என்கோ" என இயம்புகின்ருர். திருமுடியினின்றும் விரிந்து பரந்து மின்னற் கொடிகள் போன்ற சடைகளின் ஒளி திகழ்தலால் "பொற்பின் ஓங்கும் மின்னென்கோ" என விளம்புகின்ருர். நின்ற கோலம் சுடர் விட்டெரியும் விளக்குப் போறலின், "விளக்கு என்கோ"

என வுரைக்கின்ருர். சிவனை விளக்கோடு உவமித்துச் "சூழொளி விளக்கே" எனவும், "ஒளி வளர் விளக்கே" எனவும், "நெய்ந் நின்றெரியும் விளக்கொத்த நீலமணி மிடற்ருன்" (கோயில்) எனவும் சான்ருேர் பெரிதும் உரைத்துப் பரவுதல் காண்க. "உலகெலாம் சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுட் சோதியான்" (ஐயாறு) என ஞானசம்பந்தர் முதலியோர் உரைப்பதால், "விரிசுடர்க்கோர் சுடர் என்கோ" எனக் கூறுகின்ருர். இன்னதுதான் என அறுதியிட் டுரைக்க லாகாமைக்கு வினை காரணமாக வுளதாகிய மறைப்பென நினைக்கின்ருரா கலின், வடலூர்வள்ளல் "வினையனேன் நான்" என்றும், "என்னென்கோ என்னென்கோ" என்றும் வருந்துகின்ருர். இன்ன நிற மெனச் சொல்லி யின் புற மாட்டா தொழியினும் திருமேனி இருந்த வண்ணத்தைக் கண்களாற் கண்ட இன்பப் பேறு உள்ளத்தை உவகைக் கடலில் மூழ்குவித்தலால் "கண்டு களித்திடப் பெற்றேன் முக்கண் மூர்த்தி" என மொழிகின்ருர். இவ்வின்பப் பேறு தமக்கு எய்தியதற்குக் காரணம் காணும் வடலூர் வள்ளல் முன்னைப் பிறவிகளில் செய்த தவமாதல் வேண்டு மெனவும், அது தானும் தூய தவமாதல் வேண்டு மெனவும் தெளிந்தமை புலப்பட, "முன் என் கோதறு தவத்தால்" என்று கூறுகின்ருர்.

இதனுல், முக்கட் பகவனுன சிவமூர்த்தத்தைக் கண்களாற் கண்டு இன்புற்றது முன்னைத் தவம் என நினைந்து வியந்தவாறும். (45)

2774. வஞ்சகர்க்கெல் லாம்முதலாய் அறக்கடையாய்
மறத்தொழிலே வலிக்கும் பாவி
நெஞ்சகத்துன் மார்க்கனமா பாதகனைக்
கொடியேனை நீச னேனை
அஞ்சல்எனக் கருணைபுரிந் தாண்டுகொண்ட
அருட்கடலை அமுதைத் தெய்வக்
கஞ்சமல ரவன்நெடுமாற் கரும்பொருளைப்
பொது வினில்யான் கண்டுய்ந் தேனே.

உரை : வஞ்சம் செய்யும் தீயவர்க் கெல்லாம் தலைவனும், அறம் புரி யாதவனும், கொடுஞ்செயல்களையே வலியுறுத்துபவனும், பாவமே நிறைந்த மனத்தையுடைய துன்மார்க்கனும், பெரிய பாதகங்களைச் செய்பவனும், கொடியவனும், கீழ்மகனுமாகிய என்னை இனி அஞ்சுதல் ஒழிக என அருள் செய்து அடியவனுய் ஆட்கொண்ட அருட் பெருங்கடலா கியவனும், அமுது போல்பவனும், தெய்வத் தன்மை பொருந்திய தாமரை மலரில் இருக்கின்ற பிரமனும் திருமாலும் பெறுதற்கரிய பரம் பொருளாய வனுமாகிய சிவபெருமானைத் தில்லையம்பலத்தில் யான் கண்ணுரக் கண்டு உய்திபெற்றேன். எ.று.

பொது - தில்லையில் உள்ள பொன்னம்பலத்துக்கு வழங்கும் பெயர். தில்லையம்பலத்தில் திருக்கூத்தியற்றும் சிவபெருமான் திருமுன்னின்று கண்களாற் கண்டு இன்புறும் வடலூர் வள்ளல் காணும் தம்மை நோக்கு கின்ருர். சிவனது திருவருட் பெருமையும் தமது சிறுமையும் நினைவில் தோன்றுகின்றன. தம்மைச் சிறுமைப் படுத்தும் குறைகள்

பலவும் புலப்படுகின்றன. அவற்றை யோதலுற்றுத் தமது நெஞ்சின்கண் வஞ்ச நினைவுகள் உலாவுவதாகக் கண்டு, அவை ஏனை வஞ்சகர் பலரினும் தம்பால் மிக்குளவாக எண்ணி, "வஞ்சகர்க்கெல்லாம் முதலாய் இருக்கின்றேன்" என வுரைக்கின்றார். முதன்மை - மிகுதி பற்றி உளதாவது. அறவுணர்வுகளை எண்ணுகிற போது, அவை அறவே இல்லையெனக் கருதி, தம்மை "அறக்கடை" யாயினேன் என்கின்றார். அறக்கடை - அறத்தின் மறுதலையாய பாவம்; பாவம் செய்பவரை "அறன் கடை நின்றார்" (குறள். 142) எனத் திருவள்ளுவர் கூறுவது காண்க. மறத்தொழில் - பிறர்க்கும் பிற வுயிர்கட்கும் தீங்கு செய்யும் தீய தொழில். தாமே யன்றித் தம்மைச் சார்ந்தாரையும் அம்மறத் தொழிலே செய்யுமாறு வற்புறுத்தி யியக்கும் தன்மையுடைமை பற்றி, "மறத்தொழிலே வலிக்கும் பாவி" என வுரைக்கின்றார். வலித்தல் - வற்புறுத்தல். உலகியல் நெறியில் தீநெறிக்கு வேண்டும் நினைவுகளையே நிறைய நினைந் தொழுகுதலை எண்ணி, "நெஞ்சகத் துன்மார்க்கன்" என்றும், அந் நினைவு செயல்களால் நிகழ்வன யாவும் பெரிய தீவினையாதல் பற்றி, "மாபாதகன்" என்றும், இவ்வாற்றால் மனம் கொடுமையின் உருவாதலால், "கொடியனேன்" என்றும், கொடுமை தன்னையுடையவனைக் கீழ்மகனுக்குதலால் "நீசன்" என்றும் வெறுப்புத் தோன்ற விளம்புகிறார். பாதகம் - குடி, கொலை, களவு முதலிய பெரிய தீவினை. நீசன் - இழிந்தவன். இன்ன பல குற்றங்களாற் கடையனாய தன்னை இறைவன் அருளால் ஆண்டு கொண்ட திறத்தைக் கூறுவாராய், முதற்கண் இக் குற்றங்களையெண்ணி அருட் பேறு கைகூடுமோ என வருந்தி அஞ்சுதல் வேண்டா என்பார் போலச் சிவன் அருளினான் என்பாராய், "அஞ்சலெனக் கருணை புரிந்து" எனவும், இன்னுரை வழங்கி என் திறமே நிற்பாயாக என்றது புலப்பட, "ஆண்டு கொண்ட அருட்கடலே" எனவும் எடுத்தோதுகின்றார். நன்னீர் வரினும் முடை நாறும் கடை நீர் பெருகி வரினும் மருது ஏற்றுத் தெண்ணீராக்கிக் கொள்ளும் கடல் போல், தனது திருவருளை நயந்து விரும்புவோர் யாவராயினும் அதனை வரைவின்றி வழங்கி யாட்கொள்ளுவது பற்றிச் சிவனை "அருட் கடல்" எனப் புகழ்கின்றார். "நல்லவர் தீய ரெனாது நச்சினர், செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ" (பஞ்சாக்கரம்) என ஞானசம்பந்தப் பெருமான் நவின்றோருது வது காண்க. நினையுந் தோறும் இனிமை சுரத்தலால், "அமுது" என்று கூறுகின்றார். மண்ணகத் தாமரை போலின்றிப் பிரமன் இருப்பது தெய்வத் தாமரை என்றற்குத் "தெய்வக் கஞ்ச மலர்" எனச் சிறப்பிக்கின்றார். கஞ்சம் - தாமரை. பிரமனும் திருமாலும் சிவனுடைய திருமுடியையும் திருவடியையும் முறையே முயன்றும் காணா தயர்ந்தமையால், அயன் நெடுமாற்கு, "அரும் பொருள்" எனப் போற்றுகின்றார். தில்லையம்பலத்திற்கண் குளிரக் கண்டு இன்பத்தால் ஏற்றம் பெற்றமை விளங்க, "பொதுவினில் யான் கண்டு உய்ந்தேன்" என்று உரைக்கின்றார்.

இதனால், சிவபெருமானைத் தில்லையம்பலத்திற் கண்டு உய்தி பெற்ற திறம் கூறியவாறும்.

(46)

கட்டளைக் கலித்துறை

2775. நாதாபொன் அம்பலத் தேஅறி வானந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்ருத என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதா துணர உணர்த்திஉள் ளேநின் றுளவுசொன்ன
நீதா நினைமறந் தென்நினைக் கேன்இந்த நீணிலத்தே.

உரை: தலைவனே, தில்லைப் பொன்னம்பலத்தின்கண் ஞான வின்பத் திருக்கூத்தாடும் திருவடியை யுடையவனே, சிறு துரும்புக்கும் ஒவ்வாத எளிய என்னை ஆட்கொண்டு, நன்னூல் பலவும் ஒருவரை யடைந்து கற்காமலே உணரச் செய்து என்னுடைய உள்ளத்திலே நின்று மேலும் பலவற்றை யுணர்தற்கு வேண்டும் நெறியை யறிவித்த நீதிமானே உன்னை மறந்து இவ்வுலகில் எதனை நினைப்பேன். எ.று.

நாதன் - தலைவன்; நாத தத்துவத்தில் புலப்படுவோன் எனினும் பொருந்தும். தில்லையம்பலம் பொன் வேய்ந்திருப்பது பற்றிப் பொன்னம் பலம் எனப்படுகிறது. தூய செம்பொன்னினல் எழுதி மேய்ந்த சிற்றம்பலம்'' (கோயில்) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க. அம்பலத்தே நிகழும் திருக்கூத்து ஞான நாடகம் என்றற்கு "அறிவானந்த நாடகம்'' எனக் கூறுகின்ருர். திருக்கூத்துக்குச் சிறப்புத் தருவது தாளவறுதி காட்டும் திருவடி யாதலின், அதனை விதந்து "நாடகஞ்செய் பாதா'' எனப் பகர்கின்ருர். சிறு துரும்பும் பற் குத்த வுதவுவதாக யான் யாதும் பயனில்லாதவன் என்பாராய், ''துரும்பினும் பற்ருத என்னை'' என இசைக் கின்ருர். பற்றுதல் - ஈண்டு ஒத்தல் மேற்று. பணி கொள்ளுதல் - செயற் கருவியாக்கிக் கொள்ளுதல்; பணித்தது செய்யும் அடிமையாக்கிக் கொள்ளுதல் எனினும் பொருந்தும். ஒருவர்பாற் சென்று எடுத்த நூலை ஓதி, அவர் உணர்த்த உணர்தல் ஓதி யுணர்தல் எனப்படும்; எடுத்த நூலைப் பலகாற் படித்துணர்தலும் ஓதி யுணர்தலாம். அவ்வாறின்றி நூற் பொருளை யுணர்விற் கொள்ளுதல் ஓதா துணர்தலாகும். உணர்த்த வுணர்தல் ஆன்மாவுக் கியல்பாதலால், "ஓதா துணர வுணர்த்தி'' என வுரைக்கின்ருர். உணர்வுடையோர் உள்ளத்தைத் தனக் கிடமாகக் கொள்பவனுதலால், ''உணர்த்தி உள்ளே நின்று'' என்றும், நின்று செய்தது கூறுவார், நூலறிவாலும் இயற்கை யறிவாலும் எய்தாத அறிவு செயல்களை உள்ளுற வுணர்த்தினுன் என்பார், ''உளவு சொன்ன நீதா'' என்றும் இயம்புகின்ருர். உணர்வில் வழி உணர்வு கொளுத்தல் நீதியாத லால், ''நீதா'' என நினைந்து கூறுகின்ருர். ஓதாதே யுணர்வு பெறும் உளவு சொன்ன நன்றியை மறத்தல் உய்தி பயவாதாதலால், ''நினை மறந்து என் நினைக்கேன்'' எனவும், நினைந்து செயல் படுதற்கு இந் நிலவுலகம் இடமாதலின், ''இந் நீணிலத்தே'' எனவும் இயம்புகின்ருர்.

இதனல், ஓதா துணர உணர்வும் உளவும் நல்கிய நன்றியை வியந் துரைத்தவாரும்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2776. கந்த நாண்மலர்க் கழலிணை யுளத்துறக்
கருதுகின் றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை அவிழ்த்தருள் சிதம்பரை
பரம்பரை யுடன்ஆடும்
அந்த நாள்மகிழ் வடைபவர் உளர்சிலர்
அவர்எவர் எனில்இங்கே
இந்த நாள்முறை திறம்பல ராய்உயிர்க்
கிதம்செயும் அவர்அன்றே.

உரை : மணங் கமழும் புது மலர் போன்ற திருவடிகளை மனத்தின் கண் நினைந்து வழிபடுகின்றவர் எல்லார்க்கும் உலகியற் பிணிப்பாகிய பாசக் கயிற்று வலையை அவிழ்த்தொழித்து அருள் ஞானம் வழங்குகின்ற சிதம்பரநாதன், மேலான பரையாகிய உமா தேவி காண ஆடுகின்ற அந்த நாளில் அவனது ஆட்டங் கண்டு, மனம் மகிழ்கின்றவர் சிலர் உண்டு. அவர் யாவரெனில், இவ்வுலகில், இந்நாளில் அறமுறை பிறழாமல் உயிர்கட்கெல்லாம் நன்மையே செய்பவராம். எ.று.

கந்தம் - நறுமணம். நாண்மலர் - நாட் காலையில் மலரும் தாமரைப் புதுமலர். கழலணிந்த திருவடி யிரண்டையும் 'கழலிணை' என்கின்றார். கழல் - ஆகு பெயர். சிவனுடைய திருவடி யிரண்டையும் கழலால் சிறப்பித்தது உயிர்களைப் பற்றி விடாது நிற்கும் வினைப் பிணிப்பைக் கழற்றும் நலமுடையன என்பது அறிவித்தற்கு. திருநாவுக்கரசர், "கழலா வினைகள் கழற்றுவ கால வனங் கடந்த, அழலார் ஒளியன காண்க ஐயாறன் அடித்தலமே" என இந்த நயம் தோன்ற உரைப்பது காணலாம். திருவடியைச் சிந்தையில் வைத்துச் சிந்திப்பவர்க்குப் பிறவிப் பிணிப்பு நீங்கி இன்ப வீடு எய்தும் என இயம்புவாராய் "கழலிணை உளத்துறக் கருதுகின்றவர்க் கெல்லாம் பந்த நாண்வலை அவிழ்த்து அருள் சிதம்பரன்" என்று கூறுகின்றார். உறக் கருதுதலாவது - இடையறுது சிந்தித்தல். பந்தநாண்வலை - பிணிப்பாகிய பாசவலை. பந்தமாகிய பற்றறுத்தா லொழிய வீடு பேறெய்தாமை நோக்கி, "பந்த வலையவிழ்த்து" என்றும், அதற் கேதுவாவது திருவருள் ஞானமாதலின், "அருள்" என்றும் அறிவிக்கின்றார். சிதம்பரன் - சிதம்பர மென்னும் திருப்பதியை யுடையவன். சிதம்பரம் - சிற்றம்பலம் என்பதன் மரூஉ. சிலர், சித் அம்பரம் எனப் பிரித்து, ஞான ஆகாசம் என இதற்குப் பொருள் கூறினர். பரம்பரை - மேலான பரையென்னும் சத்தியாகிய உமாதேவி. தில்லையம்பலத்தில் உமாதேவி கண்டு மகிழத் திருகூத்து இயற்றினன் என்பது பற்றிச் "சிதம்பரன் பரம்பரையுடன் ஆடு"கின்றான் எனக் குறிக்கின்றார். "மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க நீலமணி மிடற்றான் கைஞ்ஞின்ற ஆடல் கண்டால் பின்னைக் கண் கொண்டு காண்ப தென்னே"(கோயில்) என்று திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. இனிப் பரையைக் காளிக் காக்கி அவளுடன் வாத நடனம் புரிந்த வரலாற்றை நினைப்பவரு முண்டு. "ஆடினார் பெருங்கூத்துக் காளிகாண" (பாசுர்) என நாவரசர் நவில்கின்றார். அம்மை காண ஆடிய கூத்தை அந்நாளில் உடனிருந்து கண்டு மகிழ்ந்தவர் வியாக்கிரபாதர், பதஞ்சலி

முதலியோர் எனப் புராணம் கூறுதலின், "அந்த நாள் மகிழ் வடைபவர் உளர் சிலர்" என்கின்றார். அப்பொழுது அம் முனிபுங்கவ ரிருவரோடு மிருந்த அடியார்களை நினைவிற் கொண்டு, அவர்களது சிறப்பியல்பை எடுத்துரைக்கின்றாராதலின், "அவர் எவர் எனில் இங்கே இந்த நாள் முறை திறம் பலராய் உயிர்க்கு இதஞ்செயும் அவரன்றே" என அறிவுறுத்து கின்றார். இந்த நாள் என்பதனால் அவர்கள் இன்றும் உளர் என்பது பெற்றாம். அவர்களை எங்ஙனம் அறிவது எனில், எவர் எவ்வுயிர்க்கும் இனியவே செய்தொழுகுகின்றார்களோ அவர்கள் என விளக்குதற்கு, "முறை திறம் பலராய் உயிர்க்கு இதம் செயும் அவர்" என, விடையிறுக் கின்றார். முறை - அறநெறி. இதம் - இனியவை செய்தல். அன்றே என்பதில் ஏகாரம் எதிர்மறைப் பொருட்டாய் ஆம் எனும் பொருள்பட நின்றது.

இதனால், எவ்வுயிர்க்கும் இனியவே புரிந்தொழுகும் நன்மக்கள் முன்னுளில் இறைவன் திருக்கூத்துக் கண்டு மகிழ்ந்தவர் எனத் தெரிவித்தவாறும். (48)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2777. வெட்டை மாட்டி விடாப்பெருந் துன்பநோய்
விளைவ தெண்ணிலர் வேண்டிச்சென் றேதொழுக்
கட்டை மாட்டிக் கொள்வார்என வேண்டிப்பெண்
கட்டை மாட்டிக் கொள்வார்தங் கழுத்திலே
துட்டை மாட்டின் கழுத்தடிக் கட்டையோ
துணிக்கும் கட்டைய தாம்இந்தக் கட்டைதான்
எட்டை மாட்டி உயிர்விடக் கட்டைமேல்
ஏறும் போதும் இழுக்கின்ற கட்டையே.

உரை : வெட்டை யென்னும் நோய் பற்றப்பட்டு நீங்காத பெருந் துன்பம் தரும் நோய் பல விளைவதை எண்ணாராய், வேண்டு மென்றே சென்று தொழுக் கட்டையை மாட்டிக் கொள்பவர் போல வேண்டு மெனவே பெண்கள் தொடர்பைச் செய்து கொள்கின்றனர்; அது துட்டத் தன்மையுடைய மாட்டின் கழுத்திற் கால்களிற்படுமாறு கட்டும் கட்டை என்பதா? அன்று; துண்டாக வெட்டப் பயன்படும் கட்டை யென்னலாம்; இஃது இந்தக் கட்டைகள் எட்டினை மாட்டிக் கொண்டு உயிர் விடினும், பாடைக் கட்டைமேல் ஏறும் போதும் ஏற விடாது இழுக்கின்ற, கட்டையாம். எ.று.

வெட்டை - ஒழுக்கமற்ற பெண்கள் தொடர்பால் உண்டாகும் நோய். ஒவ்வாத வெப்பத்தால் உண்டாகும் நோய் என்று சித்த மருந்துவம் கூறும். வெட்டை நோயால் வருகிற துன்பம் எளிதில் நீங்காமல் நெடிது நின்று வருத்தும் என்பாராய், "விடாப்பெருந் துன்ப நோய் விளைவ தெண்ணிலர்" என விளம்புகின்றார். தொழுக்கட்டை - குற்றம் புரிந்தவர் எளிதில் தப்பி யோடாவாறு கழுத்திலும் காலிலும் மாட்டப் படும் கட்டை. தொடக்கத்தில் இது அடங்கா மாடுகள் அடங்குமாறு மாட்டுத் தொழுவங்களில் காணப்பட்டதாகலின், இது தொழுக் கட்டை

யெனப்படுகிறது. தொழுக் கட்டையை மாட்டிக் கொள்வது இழிவாகக் கருதப்படுவது பற்றி யாரும் இதனை மாட்டிக் கொள்ள விரும்புவ திலர். பெண் கட்டு - பெண்ணின் தொடர்பு. துட்ட மாடு என்பது துட்டை மாடு என வந்தது. கழுத் தடிக்கட்டை - கழுத்தில் மாட்டப்பட்டுக் கால்களில் அடிபடுமாறு கட்டும் கட்டை. துணிக்கும் கட்டையாவது - கட்டைகளைத் துணிப்பதற்காக அடி மணையாக வைக்கப்படும் கட்டை யாம். கட்டை - ஈமக் கட்டை; பாடையுமாம்.

இதனால், ஒழுக்கமற்ற பெண் தொடர்பாகாமை விளக்கியவாறும்.

2778. புண்ணைக் கட்டிக்கொண் டேஅதன் மேல்ஒரு
புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்
பெண்ணைக் கட்டிக்கொள் வார்இவர் கொள்ளிவாய்ப்
பேயைக் கட்டிக்கொண் டாலும் பிழைப்பர்காண்
மண்ணைக் கட்டிக்கொண் டேஅழு கின்றஇம்
மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக்கொண் டூர்வழி போம்கிழக்
கழுதை வாழ்வில் கடைஎனல் ஆகுமே.

உரை : இடையில் புண்ணாகிய குறியை மறைத்தற் கென மேலே ஒரு சேலையை யுடுத்து, புதுப் புது வனப்புகள் காட்டி மயக்கும் பெண்களை மணந்து கொள்பவர்கள் அம்மகளிரை விலக்கி விட்டு, ஒரு கொள்ளிவாய்ப் பேயை மணந்து கொள்வாராயின் உய்தி பெறுவர்; மண்ணக வாழ்வைக் காதலித் தொழுகும் இம்மட மக்கள் வாழ்வை எண்ணுமிடத்துக் கண்ணைக் கட்டிக் கொண்டு ஊர்களில் திரியும் முதுகழுதையின் வாழ்வினும் கடைப்பட்டதாகும். எ.று.

குருதியும் வழுவும் சொரிதலின், பெண்களின் பாற் குறியைப் புண் என்கிறார். புடைவை - புடவை என வழங்குகின்றது. காலந் தோறும் தம்மைப் புனைந்து அழகு பொலிவித்தலின், "புதுமைகள் காட்டிடும் பெண்" என்கின்றார். புதுப் புதுப் புனைவுகளால் தமது வனப்பைப் பேணுதலின், மகளிரைப் "பெண்" எனக் குறிக்கின்றார் எனினுமாம். செய்து கொள்ளுதலைக் கட்டிக் கொள்வதென்பது உலக வழக்கு. கொள்ளிவாய்ப் பேய் - பேய் இனத்துள் ஒன்று. பிழைத்தல் - உய்தல். மண்ணக வாழ்வை மதித்துப் பேராசை கொண்டுழல்வாரை இகழ்தற் பொருட்டு. "மண்ணைக் கட்டிக் கொண்டே யழுகின்ற இம் மடையப் பிள்ளைகள்" என்கின்றார். மடவப் பிள்ளைகள் என்பது மடையப் பிள்ளைகள் என வருவது வழக்கில் காணப்படுவது; அறிவிலாத இளைஞர் என்பது கருத்து. மடவன் எனற்பாலது மடையன் என வருதல் போல. ஊர் வழிப் போதல் - ஊர்த் தெருவில் திரிதல்.

இதனால், பெண் காதலித்து வாழும் நெறி இகழப்பட்டவாறும்.

கட்டளைக் கலிப்பா

2779. உடுக்க வோஒரு கந்தைக்கு மேலிலை
உண்ண வோஉண வுக்கும் வழியிலை
படுக்க வோபழம் பாய்க்கும் கதியிலை
பாரில் நல்லவர் பால்சென்று பிச்சைதான்
எடுக்க வோதிடம் இல்லைஎன் பால்உனக்
கிரக்கம் என்பதும் இல்லை உயிரைத்தான்
விடுக்க வோமனம் இல்லைஎன் செய்குவேன்
வெண்பி றைச்சடை வித்தக வள்ளலே.

உரை : வெண்மையான பிறை யணிந்த வித்தகனாகிய வள்ளற் பெருமானே, இடையில் உடுப்பதற் கென என்னிடம் கந்தை ஒன்றுக்கு மேல் இல்லை. உண்பதற்கு உணவும் கிடைப்பதில்லை. இரவிற் படுப்ப தற்கு ஒரு பழம் பாயும் கிட்டுவதில்லை. உலகில் நல்ல உள்ள முடையவர் களைத் தேர்ந்து சென்று பிச்சை எடுப்பதற்கும் உடம்பில் வன்மையில்லை. என்னிடம் நீ இரக்கமும் காட்டுகின்றாய் இல்லை. இத்துன்பங்களைப் பொறுக்காமல் உயிரை விடவும் மனத்தில் துணிவு பிறப்பதில்லை. இந்நிலையில் நான் யாது செய்வேன்? எ.று.

பிறைத் திங்களைச் சடையிற் றரித்து வேண்டுவார்க்கு ஞானப் பொருளை வரையாது வழங்குவது தோன்றச் சிவனை, "வெண்பிறைச் சடை வித்தக வள்ளலே" என்று வியந்துரைக்கின்றார். சிவனை நினைந்த மனத்தால் தமது நிலையைக் கண்டு வருந்துமாறு விளங்கத் தாம் உடுத்தி யிருக்கும் கிழிந்த உடையை நோக்கி, "உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலிலை" என்றும், போதிய உணவில்லாமையை நினைந்து "உண்ணவோ உணவுக்கும் வழியில்லை" யென்றும் உரைக்கின்றார். வெறுந் தரை மேல் கிடந்து உறங்க வேண்டி நேர்ந்த போது, படுக்கவோ பழம் பாய்க்கும் வழியில்லை" என்று பரிதவிக்கின்றார். நல்லவர்கள்பாற் சென்றால் பிச்சை கிடைக்கும் என்றாலும், அவர்களது இடங் கண்டு செல்லுதற்கு உடலில் வலி குறைந்தமைக்கு வருந்துவாராய், "பாரில் நல்லவர்பாற் சென்று பிச்சை தான் எடுக்கவோ திடமில்லை" என்று வருந்துகின்றார். பன்முறை இறைவனை வேண்டியும் வறுமைத் துன்பமே நீடிக்கின்றதை யெண்ணி, "என்பால் உனக்கிரக்கம் என்பதும் இல்லை" என இரங்கு கின்றார். இதற்கு முடிவு காண்ப தென்றால் சாதல் வேண்டும்; அதற்கு மனத்தின்கண் துணிவில்லை யென்றற்கு, "உயிரைத்தான் விடுக்கவோ மனம் இல்லை" என்று சொல்லித் தான் வேறு ஒன்றும் செய்ய மாட்டாமை யால் "என் செய்குவேன்" என்று தெரிவிக்கின்றார்.

இதனால், அருளும் பொருளும் இல்லாதார் கொள்ளும் துயர நினைவுகளை எடுத்துரைத்தவாறும்.

2780. தொடுக்க வோநல்ல சொன்மலர் இல்லைநான்
துதிக்கவோ பத்தி சுத்தமும் இல்லைஉள்
ஒடுக்க வோமனம் என்வசம் இல்லைஊ
டுற்ற ஆணவ மாதிம லங்களைத்

தடுக்க வோதிடம் இல்லைஎன் மட்டிலே
தயவு தான்நினக் கில்லை உயிரையும்
விடுக்க வோமனம் இல்லைஎன் செய்குவேன்
விளங்கு மன்றில் விளங்கிய வள்ளலே.

உரை : அருளொளி விரியும் தில்லையம்பலத்தில் விளங்குகின்ற வள்ளற் பெருமானே, உன்னைச் சொன் மலர்களாற் பாமாலைத் தொடுக்கலா மென்றாலோ, என்பால் தூய சொற்கள் இல்லை; உள்ளத்தால் நினைந்து நின்னைத் துதிக்கலாம் என்றாலோ என் உள்ளத்தில் பக்தி முற்றிலும் இல்லை; என் உள்ளத்தை ஒடுக்கலாம் என்றாலோ, என் மனம் என் வசமில்லை; என் உயிரிடையே ஊடுருவும் ஆணவ முதலிய மலங்களைக் களையவோ ஞான வன்மையும் இல்லை. இவை யெல்லா வற்றிற்கும் தீர்வு காண உன் அருள் வேண்டும்; அதுவும் என்பால் நீ காட்டுவதா யில்லை; எல்லாத் துயர்கட்கும் முடிவு காண உயிரை விட்டு விடலாம் என்றாலோ, என் மனத்தில் வன்மையில்லை; நான் என் செய்குவேன்? எ.று.

தில்லையம்பலம் ஞான சபை யெனப்படுவதால், அதன்கண் திருவருள் ஞானவொளி நிலவுகிற தென்பாராய், "விளங்கும் மன்று" என விளம்புகின்றார். படைப்பு முதலிய ஐவகைத் தொழிலையும் விளக்கும் திருக்கூத்தினை யியற்றுவதால் சிவபரம் பொருளை "மன்றில் விளங்கும் வள்ளலே" என்று மகிழ்கின்றார். நறிய மலர் மாலைகளைத் தொடுத்து அணிவது போலச் சொற் செல்வர்கள் சொல்லும் பொருளும் நனிசிறக்கும் பாமாலை தொடுத்து அருள் பெறுவது நெறியாதலை நினைந்து, சொன் மாலை தொடுக்கலாம் எனின், தூய சொற்கள் தம்மிடம் இல்லையென வருந்துவாராய், "தொடுக்கவோ நல்ல சொன்மலர் இல்லை" எனத் துயருறுகின்றார். "பண் ஒன்ற இசை பாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன்" (புள்ளிருக்கு) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. உன்னுடைய பேராயிரம் சொல்லித் துதிக்கலாம் எனிலோ, உள்ளம் ஒன்றுதற்கேற்ற பக்தியும் என்னிடம் இல்லை யென்பாராய், "நான் துதிக்கவோ பக்தி சுத்தமும் இல்லை" என்கின்றார். பொறிபுலன்களின் வழியாகப் பரந்தோடும் மனத்தை ஒடுக்கி உன்னை உள்ளத்திற் கண்டு பராவலாம் எனில், மனம் என் வயப்படுகிறதில்லை யென்பார், "உள் ஒடுக்கவோ மனம் என் வசம் இல்லை" என்று உருகுகின்றார். "உள்ளொன்றி நினைந்தவர் தம்பால் உண்ணின்று மகிழ்ந்தவன்" (பனையூ) என்பர் ஞானசம்பந்தர். உயிரோடு கலந்து நிற்கும் மலவிருளும் அது காரணமாகத் தோன்றியுள்ள மாயை, கன்மவிருளும் நினது திருவருள் ஞானத்தாலன்றி நீங்காவாகலின், அதற் கின்றியமையாத ஞான வன்மையும் எனக்கில்லை யென்பார், "ஊடுற்ற ஆணவ மாதி மலங்களைத் தடுக்கவோ திடமில்லை" என்று தெரிவிக்கின்றார். துன்பம் தொடர்ந்து வந்து தாக்குதலின் தமக்கு அருள் நலம் இல்லை போலும் என்றெண்ணுகின்றமை புலப்பட, "என் மட்டிலே தயவுதான் நினக்கில்லை" என்று வருந்துகின்றார்.

இதனால், திருவருட் டுணை எய்தாமைக்கு வருந்தியவாறு. (52)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2781. இறகெடுத்த அமணர்குலம் வேரறுத்த
சொக்கேஈ தென்ன ஞாயம்
அறுகடுத்த சடைமுடிமேல் மண்ணெடுக்க
மாட்டாமல் அடிபட் டையோ
பிறகெடுத்தீர் வளை யல்விற்றீர் சொற்கேளாப்
பிள்ளைகளைப் பெற்ற தோஷம்
விறகெடுத்தீர் என்செய்வீர் விதிவசந்தான்
யாவரையும் விடாது தானே.

உரை : மயிற் பீலியைக் கையிற் சுமந்தேகும் அமணர் கூட்டத்தை அடியோடு மாய்த்த சொக்கேசனே, இஃது என்ன முறையாம்; அறுகை மாலையை யணிந்த சடை பொருந்திய முடியின்கண் மண்ணைச் சுமக்க மாட்டாமல் பாண்டி வேந்தனல் அடிபட்டுப் பிறகு எடுத்தீர்; மதுரை வீதியில் வளையல் விற்றீர்; சொன்ன சொற்களைச் செவியிற் கொள்ளாத பிள்ளைகளை பெற்றதனல் உண்டாகிய குற்றத்தால் விறகு கொண்டு விற்றீர்; இனி என்ன செய்வீர்; விதிப் பயன் யாவரையும் சும்மா விடாது, காண். எ.று.

சொக்கநாதனைச் "சொக்கு" என்றும், தேவியைச் "சொக்கி" என்றும் சொல்லும் வழக்குப் பற்றிச் "சொக்கே" என்று அழைக்கின்ருர். கையில் மயிற் பீலிக்கற்றையை ஏந்திச் செல்வது சமண முனிவர் இயல் பாதலால், "இறகெடுத்த அமணர் குலம்" என இசைக்கின்ருர். இறகு - மயிற் பீலி. குலம் - கூட்டம். அமணரொடு வாது புரிந்து போக்கியது சிவத் தொண்டர் செயலாயினும், தலைவராதலால் சொக்கேசன் மேல் ஏற்றி, "அமணர் குலம் வேரறுத்த சொக்கே" என மொழிகின்ருர். அறுகு மாலையை "அறுகு" என்கிருர். மண் சுமக்க மாட்டாமல் அடிபட்டதை, "மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால்" மொத்துண்டான் எனத் திருவாசகம் ஓதுவது காண்க. முருகப் பெருமான் சிவன் சொல்லக் கேளாமல், தான் சொல்ல அவரை ஆசிரியன்பால் கேட்பது போலக் கேட்க வைத்த வரலாறு புலப்படச் "சொற் கேளாப் பிள்ளை" என்று உரைக்கின்ருர். தோடம் - குற்றம். வளையல் விற்றதும், விற கெடுத்ததும் மதுரையில் நடந்த திருவிளையாடல்கள். வேடிக்கையாகப் பாடுதலால், "விதி வசம் தான் யாவரையும் விடாது தானே" என்று கூறுகின்ருர்.

இதனல், பழிப்பது போலச் சிவனைப் புகழ்ந்தவாறும். (53)

கலி விருத்தம்

2782. சச்சிதா நந்தசிற் சபையில் நாடகம்
பச்சிதாந் திருவுருப் பாவை நோக்கிட
மெச்சிதா காரமா விளைப்பர் மெல்லடி
உச்சிதாழ் குவர்நமக் குடையர் நெஞ்சமே.

உரை : நெஞ்சமே, சிற்சபையில் நடக்கும் சச்சிதானத் திருக் கூத்தைப் பச்சைத் திருமேனியையுடைய பாவையாகிய உமாதேவி

கண்டு களிக்க, மெய்ம்மை சான்ற சிதாகாசமாக நின்று ஆடுவர். அவ்வண்ணம் ஆடுகின்ற மென்மையான திருவடியை முடி தாழ்த்தி வணங்குபவர் நம்மை யாளாக வுடையராவர். எ.று.

சிற்சபை - ஞான சபை; தில்லையிலுள்ள பொன்னம்பலம். சச்சிதானந்த நாடகம் - சத்தும் சித்தும் ஆனந்தமும் கொண்ட ஞானத் திருக்கூத்து. பச்சை மேனியையுடையது பச்சிது என வந்தது. உமா தேவி காண நிகழ்ந்தமையின், "பாவை நோக்கிட" என்று கூறுகிருர். "கூடிய விலயம் சதி பிழையாமைக் கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகா" (வடமுல்லை) என்று சுந்தரர் பாடுவது காண்க. மெய்ச் சிதாகாரம் எதுகை நயம்பற்றி "மெச்சிதாகாரம்" என வந்தது. சிதாகாரம் - ஞானத் திருவுரு. ஞானத் திருவுருக் கொண்டு நடிப்பர் என்பதாம். நமக்குடையர் என்பதில் இரண்டாவதன் கண் நான்கா முருபு மயங்கிற்று.

இதனுல், சிற்சபையில் நிகழும் ஞானத் திருக்கூத்தை வணங்குபவர் நம்மையுடைய பெரியோராவர் என உரைத்தவாறும். (54)

கட்டளைக் கலித்துறை

2783. தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனஞ்சொல்லுமே.

உரை : தத்தா தன தைத்தா என்று - தத்தா தன தைத்தா என வரும் சதி வாய்பாட்டுக்கு ஒப்ப ஆடும்; அரங்கன் - சபைத் தலைவனே; தனி நடிப்பா தத்தா - ஒப்பற்ற கூத்தையுடைய பாதத்தையுடைய அத்தனே; தன் அத்தத் தைத் தா - அதன் பொருளைத் தெரிவித் தருள்க; என - என்றும்; அரங்கன் - திருவரங்கச் செல்வனை திருமால்; தனி நடிப் பாதம் தா - தனிக் கூத்தாடும் திருவடியைத் தருக; தனத்தத் தைத்தா என்று - திருவருள் நெறியைத் தருக என்றும் வேண்ட; அரங்கன் தனி நடிப் பாதத்து - சபாபதியின் ஒப்பற்ற திருவடிக் கீழ்; ஆதனத்தைத் தா - இருக்கை தருக என்று; அரங்கு அன்று அனம் சொல்லும் - அவனை நினைந்து வருந்தும் அப்போது அன்னம் போன்ற என் மகள் சொல்லு கிருள். எ.று.

இஃது ஏகபாதம் என்னும் மிறைக் கவி. பெருந்திணை நங்கையின் வாய் வெருவலைக் கேட்டுத் தாய் இரங்கும் பொருளது. தத்தா தன தத் தைத்தா என்பது கூத்துக்குரிய சதி எனப்படுவது. சிறு குழவிகள் நடை கற்கும்போது இச் சதி தோன்றும் என்பார் போல அருணகிரி நாதர், "மடி:மீதிற் றவழ்ந்து அடி தாத்தா தனத்த வென இட்டே தெருத் தலையில் ஓடி" (இத்தாரணி) என உரைப்பர். பாத அத்தா - பாதத் தா என வருகிறது. தன் அத்தத்தைத் தா எனக் கொண்டு அத்தம் பொருளைக் கூறுக என நின்றது. அத்தம் - நெறியுமாம். திருக்கூத்தின் கருத்தைத் தெரிவித் தருள்க என்பது. அரங்கன் சீரங்கத்தை யுடைய

திருமால். அரங்கு அன்று - வருந்தும் காலை. அன்னம் போன்ற நடையை யுடையவளை அன்னம் எனக் கூறுகின்றாள். ஆதனம்- இருக்கை. திருவடிக் கீழ் இருக்கை வேண்டுதல் மரபு. "இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி, அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்' காரைக்காலம்மையார் எனச் சேக்கிழார் (காரைக்கால். 60) கூறுவது காண்க.

இதனால் திருமால் திருவருளும் கூத்தின் பொருளும் வேண்ட, என் மகள் திருவடிக் கீழ் இருக்கை வேண்டுகிறாள் என்று தாய் இரங்கிய வாறும். (55)

நேரிசை வெண்பா

2784. இம்மை யறையனைய வேசூர மாதருமா
இம்மையுமை யிம்மையையோ என்செய்த—தம்மைமதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா.

உரை : இம்மை - இந்தக் கரிய; அறையனைய - கற் போன்ற; ஏசுஊர - பழிமொழி பரவ; மாதருமா - உங்களைப் போன்ற மகளிருமா; இம்மை யுமை - இவ்விடத்தே உங்களை; இம்மை - இவ்வலர்க்கு உள்ளாக்குகின்றனர்; தம்மை - அவர்களை; மதன் மாமாமா மாமாமா - மன்மதனது தொடர்பு அறுமா; மாமாமா மாமாமா - துயர் நீங்குமா; அவர்கள் உள்ளத்தில் இன்பம் எழுமா; வருந்துத லொழிக. எ.று.

மை - கருமை; குற்றமுமாம். அறை - கல். ஏசு - பழி மொழி. உண்டாகும் பழி தீவினையாய் செய்தவரை விரைவில் நீங்காமை பற்றி "மையறை" யை உவமம் செய்கின்றாள் தோழி. "கற் போற் பிரியலம் என்ற சொல்" (அகம். 1) என்பது காண்க. சிவபெருமானைக் கண்டு வேட்கை மீதூர்ந்து மேனி வேறுபடுதல் எல்லா மகளிர்க்கும் ஒத்ததாக, இங்குள்ள மகளிர் கூடிக் குற்றம் கூறல் தவறு என்பாள், "மாதருமா இம்மை யுமை இம்மை" மொழிகின்றனர் என வினவுகிறாள். இதனை "ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்" என்பர் தொல்காப்பியர். இக்கூற்றுத் தவறுதற்கு இரங்குதல் தோன்ற, "ஐயோ" என்று உரைக் கின்றாள். "எம்மை யிகழ்ந்த வினைப் பயத்தால் உம்மை எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் என்று பரிவதூஉம் சான்றோர் கடன்" (நாலடி) என்று பண்டையோர் மொழிவது காண்க. காமம் முற்றிலும் கடியப் படாததாகலின், "தம்மை மதன் மாமாமா மாமாமா" எனக் கூறுகிறாள். ஆறு மா - அறுமா எனவும், ஏழு மா - எழுமா எனவும் வந்தன. துன்பமும் இன்பமும் உணர்வுருவினவாகலின், "உள்ளத்து எழுமா" என உரை கூறப்பட்டது.

இதனால், அலர்க் கஞ்சி வேறுபட்டு வருந்தின நங்கையைத் தோழி ஆற்றுவித்தவாறும். இனி, இதற்கு, இந்தக் கரிய கற் போன்ற பழி மொழி பரவ, இக் குற்றத்திற்கு மாதருமா இசைக்கின்றார்கள்? இந்த ஆடுகள் உங்கட்கு என் செய்தன? இதனால் மன்மதன் செய்த புண்கள் ஆறுமா? இதனால் விளையும் கொலைப்பாவம் அறுமா? உள்ளத்தில் இன்பம்

எழுமா? என்று தோழி வெறி விலக்கும் துறையில் உரைக்கின்ருள் எனப் பொருள் உரைப்பினு மமையும். (56)

2785. ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம்—ஆவியீர்
ஐந்துறலா மாவியீ ரைந்தறலா மாவியீ
ரைந்திடலா மோரிரண்டோ டாய்ந்து.

உரை: ஆவி ஈரைந்தை - உயிர்க்குரிய ய என்னும் எழுத்தை; அபரத்தே வைத்து ஓதில் - மேலுள்ள சிவ என்ற எழுத்துக்கட்கு பின்னுக வைத்துச் சிவய என ஓதுவோமாயின்; ஆ ஈரைந்து - ஆபத்தையும்; வி ஈரைந்து விபத்தையும்; அகற்றலாம்-போக்கிக் கொள்ளலாம்; ஆவிஈர் ஐந்து அறலாம் - ஆன்மா பிறவிக் கடற்கு இழுக்கும் மலங்கள் ஐந்தின் தொடர்பும் அறுத்துக் கொள்ளலாம்; ஆவி ஈரைந்து உறலாம் - ஆன்மா பத்தினை எய்துமாம்; இரண்டோடு ஆய்ந்து - முத்தி நெறி இரண்டையும் ஆராய்ந்து; ஆவி ஈரைந்திடலாம் - ஆன்மா தொண்டு வகை பத்தையும் இனிது செய்யலாம்; ஓர் - இதனை உணர்ந்து கொள்க. எ.று.

ஆவி - உயிர்; ஆன்மா என்றும் வழங்குவர். தமிழ் எண்களில் பத்து, ய என்ற எழுத்தாகும். திருவைந் தெழுத்துள் ய என்பது ஆன்மாவைக் குறிக்கும். திருவைந் தெழுத்து, சி, வ, ய, ந, ம என்பன. சி வ ய ந ம என்னும் போது சிவ என்பதன் பின் ய வருதலால், "அபரத்தே வைத்தோதில்" என்று கூறுகின்ருர். பரம் - மேல்; இடம் நோக்கி, முன்னென்றும் மொழிவர். ஆவி ஈரைந்து, ஆ ஈரைந்து, வி ஈரைந்து எனப் பிரிந்து, ஆபத்து, விபத்து என வருவது காண்க. "சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்று உரைப்பர் சான்ருேர். அதனல் "ஆவி ஈரைந்தை அகற்றலாம்" எனக் கூறுகின்ருர். ஆபத்து - தன்னுலும் பிற வுயிர்களாலும் உண்டாகும் இன்னல்; விபத்து - தெய்வத்தால் வருவன. ஐந்தறலாம் என்னுமிடத்து, ஐந்து உயிரைப் பிணிக்கும் மலம் ஐந்து; அவை, மூலமலம், திரோதான மலம், மாயா மலம், கன்ம மலம், மாமாயை என்பர். "மோக மிக வுயிர்கள் தொறும் உடனுய் நிற்கும் மூல வாணவ மொன்று, முயங்கி நின்று, பாக மிக வுதவு திரோதாயி யொன்று, பகர் மாயை ஒன்று, படர் கன்ம மொன்று, தேக முறு கரணமொடு புவன போகச் செயலாரும் மாமாயைத் திரட்சி யொன்று, என்று ஆக மலம் ஐந்தென்பர்" (சிலப். 32) எனப் பெரியோர் கூறுகின்றனர். ஈரைந் துறலாவது, பத்து எய்துவது; பத்து - பத்தி. பக்தியைப் பத் தென்பது முண்டு. "பத்துடையீர் ஈசன் பழ வடியீர்" (திருவெம்) எனவும், "பத்துடை யடியவர்க் கெளியவன்" (திருவாய். 1.3.1) எனவும் வருதல் காண்க. இரண்டு - பதமுத்தி பரமுத்தி என்பன. தொண்டு வகை பத்து. வல்வினையும் மெல்வினை யுமாகத் தொண்டர் செய்த செயல்·வகை. "பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே" (விடம் தீர்த்த) என்று திருநாவுக்கரசர் உரைப்பது காண்க.

இதனல் திருவைந் தெழுத்தை ஓது முறையும் அதனல் வினையும் பயனும் தெரிவித்தவாரும். (57)

திருச்சிற்றம்பலம்

16. திருக்குறிப்பு நாட்டம்

அஃதாவது, இறைவனது திருவருட் குறிப்பை அறிதற்குத் தம்பால் உள்ள குறைகளைச் சொல்லி முயலுதல். குறையை எடுத்துரைத்தாலன்றிக் கேட்டருளும் இறைவனது திருவுள்ளம் தெரிய வாராதாகலின், திருக் குறிப்பு நாட்டம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

ஆசிரியத் துறை

2786. ஆற்றுக் கேபிறைக் கீற்றுக் கேசடை
ஆக்கிச் சேவடி. தூக்கி ஆருயிர்ப்
பேற்றுக்கே நடிப்பாய் மணிமன்றில் பெருந்தகையே
சோற்றுக் கேஇதஞ் சொல்லிப் பேதையர்
சூழல் வாய்த்துயர் சூழ்ந்து மேற்றிசைக்
காற்றுக்கே கறங்காய்ச் சுழன்றேனைக் கருதுதியோ.

உரை : மணிகள் இழைத்த அம்பலத்தில் ஆடுகின்ற பெருந்தகைப் பெருமானே, கங்கையாற்றுக்கும் பிறைத் திங்களுக்கும் சடையை இடமாக்கி, சிவந்த திருவடியை யெடுத்து அரிய உயிர்கள் உய்தி பெறும் பொருட்டு நீ நடிக்கின்றாய். உண்ணும் சோற்றுக்காக இச்சை பேசிப் பேதைகள் கூட்டத்திற் கலந்து, மேலைக் காற்றாற் சுழலுகின்ற காற்றாடி போல் அலைகின்ற என்னையும் கடைத் தேற்றத் திருவுள்ளம் கொள்வா யாக. எ.று.

பல்வகை மணிகள் இழைத்த அரங்கமாகலின், தில்லையம்பலத்தை, "மணி மன்று" என்று சிறப்பிக்கின்றார். மலத்தாற் பிணிப்புண்டு செயலற்றுக் கிடக்கும் ஆருயிர்களை உடல் கருவி கரணங்களைப் பெற்று, உய்தி பெறற் பொருட்டு, மன்றில் நடிக்கின்றாதலின், "பெருந்தகை" என்று பரவுகின்றார். கங்கையாற்றைத் தாங்குதற்கும் பிறைத்திங்களைச் சூடுதற்கும் சடையை இடமாக்கியது அருள் காரணமாகலின், "ஆற்றுக்கே பிறைக் கீற்றுக்கே சடையாக்கி" என்று போற்றுகின்றார். பெருகி வந்த கங்கையின் செருக்கை யொடுக்குதற்கும், கலை தேய்ந்து வந்த சந்திரனைத் தாங்கி வாழ்வித்தற்கும் சடை இடமாயினமையின் இவ்வாறு கூறுகின்றார். "சலமுகத்தால் அவன் சடையிற் பாய்ந்திலளேல், பிலமுகத்தே புகப் பாய்ந்து பெருங் கேடாம் சாழலோ" (சாழ.) என்று மணிவாசகரும், "பின்னிய சடைமிசைப் பிறை நிறைவித்த பேரருளாளனார்" (கழுமலர்) என ஞானசம்பந்தரும் கூறுதல் காண்க. உயிர்கட்கு வேண்டுவன அருளி உய்தி பெறுவித்தற் பொருட்டு ஆடிய திருக்கூத்தில் திருவடியைத் தூக்கி யாடியது என்பது கருத்தாதலால்,

"சேவடி தூக்கி நடிப்பாய்" எனக் கூறுகின்றார். பேதையரிடத்து அறிவு பெறலாகாமையின், "சோற்றுக்கே இதஞ் சொல்லிச் சூழல்வாய்ச் சென்றேன்" என்றும், இனிய சொல்லியும் அவர் மறுத்தமையால் துன் புற்றதும் புலப்படப் "பேதையர் சூழல்வாய்த் துயர் சூழ்ந்து வருந்தி னேன்" என்றும் உரைக்கின்றார். அலைந்த திறத்தை, "மேற்றிசைக் காற்றுக்கே கறங்காய்ச் சுழன்றேன்" எனக் கவன்றுரைக்கின்றார். மேற்றிசைக் காற்று - கோடைக் காற்று. அதற்குச் சுழற்சி மிகுதியாதலின் அதனைச் சுழற் காற்று என்பதும் வழக்கம்.

இதனால், இறைவன் திருக்கூத்தின் குறிப்பு விளக்கப்பட்டவாறும். (1)

2787. ஞாலத் தார்தமைப் போலத் தாம்இங்கு
நண்ணு வார்நின்னை எண்ணு வார்மிகு
சீலத்தார் சிவமே எவையும்எனத் தேர்ந்தனரால்
சாலத் தான்கொடுஞ் சாலத் தாலத்தைத்
தாவி நான்பெரும் பாவி ஆயினன்
ஏலத்தார் குழலா ளிடத்தாய்எனை எண்ணுதியோ.

உரை: ஏலங் கமழும் கூந்தலையுடைய உமையம்மையை இடப் பாகத்தே கொண்டவனே, உலகத்தவர் நின்னையும், தம்மைப் போல எண்ணுவாராய் நின் திருக்கோயில் அடைகின்றார்கள். ஞானவொழுக்க முடையவர்கள் நின் திருக்கோயிலையும் பிற எல்லாவற்றையும் சிவமே எனத் தேர்ந்து வழிபடுகின்றனர். நான் மிகவும் கொடிய வஞ்ச நெஞ்சத்தால் ஞாலத்தார் கொள்கையை மேற்கொண்டு பெரும் பாவியா யினேன்; எனக்கும் அருள் புரியத் திருவுள்ளம் கொள்வாயாக. எ.று.

ஞாலம் - நிலவுலகம். நினது திருவுருவைக் கண்டு நின்னையும் தம்மைப் போல எண்ணுகின்ற மடமையுடையவர் இவ்வுலகத்தார் என்றற்கு, "ஞாலத்தார் தமைப்போலத் தாம் இங்கு நண்ணுவார் நினை எண்ணுவார்" எனக் கூறுகின்றார். எண்ணுவாராய் நண்ணுவார் என இயையும். சீலத்தார் - ஞானவொழுக்க முடையவர். எவ்வுருவும் தம் முருவாகக் கொள்ளும் இயல்பு சிவன்பால் இருத்தலின், ஞானிகள் யாவற் றையும் சிவமேயெனத் தேர்கின்றனர் என்பாராய், "மிகுசீலத்தார் சிவமே எவையும் எனத் தேர்ந்தனரால்" எனச் செப்புகின்றார். தேர்தல் ஈண்டுத் தெளிதல் மேற்று. "பிறருருவும் தம்முருவும் தாமேயாகி நெரு நலையாய் இன்றாகி நாளையாகிய நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே" (நின்ற) என்று அப்பர் கூறுவது காண்க. சாலம் - வஞ்சனை; ஏமாற்றுதலுமாம். அத்தை என்பது உலகோ ரியல்பை. பாவி - பாவச் செயல்களை யுடையவன்.

இதனால், சீலத்தார் போலாது ஞாலத்தாரைப் பின்பற்றிப் பாவி யாயினேன் எனத் தெரிவித்தவாறும். (2)

2788. அண்ண லேநின்னை எண்ண லேன்என்னை
ஆண்டு கொண்டனை மீண்டும் விண்டனன்
நண்ணலே அறியேன் கடையேன்சிறு நாயனையேன்
பெண்ண லேன்இயல் ஆண லேன்அலிப்
பேய னேன்கொடும் பேதை யேன்பிழை
கண்ணலே புரியா தினும்மீட்கக் கருதுதியோ.

உரை: தலைவனே, பன்னாள் உன்னை எண்ணா திருந்தேன்; எனினும் நீ என்னை ஆண்டருளினாய்; சின்னாட்குப் பின் யான் மறுபடியும் நீங்கி உன்னை யடைதற்கு எண்ணமில்லா திருந்தேன். கீழ்ப்பட்ட தன்மையனாய்ச் சிறுமையுற்ற நாய்போல் திரிந்தேன்; பெண்ணுமாகாமல் ஆணுமாகாமல் அலியாய்ப் பேய் கொண்டவனாய் அறியாப் பேதையாய் அலைந்தேன்; என்பிழைகளை நினையாமல் என்னை யருளி இந்நெறியி னின்றும் மீட்டுக் கொள்ளுதற்குத் திருவுள்ளம் கொள்ளவேண்டும். எ.று.

அண்ணல் - தலைவன். அறிவறியா இளையவருடன் கூடிச் சிவனது திருவருளுண்மையும் அதன் நலத்தையும் அறியாதிருந்தமையை நினைந்து, "நின்னை எண்ணலேன்" எனவும், பின்பு அப்பெருமையையும் நலங்களையும் அறிந்து ஒழுகலானேன்; எனினும் அறிவிலும் நினைவிலும் திண்மை யில்லாமையால் மீளவும் பழைய சூழலை யடைந்து சிறுநினைவும் சிறுசெயலும் உடையனானேன் என்பாராய், "என்னை ஆண்டு கொண்டனை மீண்டும் விண்டனன்" எனவும் இயம்புகின்றார். விண்டது நீங்கிய தென்னும் பொருளதாம். அறிந்தொழுகியது திருவருளால் என்றும், "விண்டது" தன் தன்மையால் என்றும் வடலூர் வள்ளல் நினைக்கின்றார். திருவருள் ஒளி யில்லாமையால் புதன்னியல்பு கெட்ட திறத்தை விளம்புவாராய், "நண்ணலேயறியேன் கடையேன் சிறுநாயனையேன்" எனவும், "பெண்ணலேன் இயல் ஆணலேன் அலிப் பேயனேன் கொடும் பேதையேன்" எனவும் உரைக்கின்றார். திருவரு ளறிவையும் செயலையும் மறந் தொழிந்தமையும், குணஞ் செயல்களில் தவறிக் கீழ்மை யுற்றதையும், குறிக்கோளின்றித் திரிந்தலைந்தமையையும், மகளிரும் ஆடவருமாகிய மக்கள் கூட்டத்திலும் ஒன்றுமல் பேயாய் அலைந்து அறிவறியாது வருந்தினமையையும் இவ்வாற்றால் தெரிவிக்கின்றார். மீளத் திருவருள் நெறியில் மனம் சொல்லுதலால், தன்பால் நிகழ்ந்த குற்றங்களை நினையாமல் ஆட்கொண்டு மீண்டும் சிதறி யோடாவண்ணம் திருவருள் துணை புரிய வேண்டும் என்பாராய், "பிழை கண்ணலே புரியாது இன்னும் மீட்கக் கருதுதியோ" என வேண்டுகின்றார்.

இதனால், வாழ்வில் உண்டான மாற்றங்களையும் பிழைகளையும் நினைந்து வருந்தி மீட்டும் அவற்றைச் செய்யாதொழுக அருள் புரிய வேண்டிக் கொண்டவாறும். (3)

2789. வல்லி ஆனந்த வல்லி சேர்மண
வாள னேஅரு ளாள னேமலை
வில்லியாய் நகைத்தே புரம்வீழ்த்த விடையவனே

புல்லி யான்புலைப் போகம் வேட்டுநின்
பொன்ன டித்துணைப் போகம் போக்கினேன்
இல்லிஆர் கடம்போ லிருந்தேன்எனை எண்ணுதியோ.

உரை : கொடி போன்றவளும், சிவானந்தம் நல்க வல்லவளுமாகிய உமாதேவிக்கு மணவாளனே, யாவர்க்கும், அருள் புரிபவனே, மலையை வில்லாகக் கொண்டவனே, புன்னகை செய்தே முப்புரத்தை எரித்தவனே, விடை யேறுபவனே, புலைத் தன்மையை யுடைய உலகியற் போகத்தைக் கண்டு விரும்பி நினது அழகிய திருவடிப் பேற்றின்கண் உண்டாகும் இன்பத்தை யிழந்தேன்; ஆதலால் யான் ஓர் ஓட்டைக் குடமாயினேன்; என்னை திருவருட் குரியனுக்கத் திருவுள்ளம் கொள்ளுவாயோ. எ.று.

வல்லி - பூங்கொடி; உமையம்மை - பசுமை நிறக் கொடி போன்றவளாதலின், "வல்லி" எனச் சிறப்பிக்கின்றார். திருவருள் ஞானமுடையார்க்குச் சிவானந்தத்தைப் பெருகத் தரவல்லவளாதலின் "ஆனந்த வல்லி" எனப் பரவுகின்றார். அப் பெருமாட்டிக்குத் கணவனென்பதால், "ஆனந்த வல்லிசேர் மணவாளனே" என்றும், அடியார்க்குத் திருவருள் ஞானத்தை நல்குதலால், "அருளாளனே" என்றும் கூறுகின்றார். உயிர் தோறும் கலந்து அருளொளி செய்தலால், இவ்வாறு கூறுகிறாரென்றுமாம். மலைவில்லி - மேரு மலையை வளைத்து வில்லாகக் கொண்டவன். "எண்ணிலார் முப்புரம் எரியுண நகை செய்தார்" (மழபாடி) என்று ஞானசம்பந்தர் முதலியோர் போற்றுதலால், "நகைத்தே புரம் வீழ்த்த விடையவனே" என்று புகழ்கின்றார். புரம் வீழ்த்தவனே விடையவனே எனப் பிரித்து இயைக்க. உலகியல் போகம் நிலையின்றிக் கெடுதலால், "புலைப் போகம்" என இழித் துரைக்கின்றார். புலைப் போகமாயினும் அதனை விரும்பினேன் என்றற்குப் "புல்லி" யெனப் புகல்கின்றார். போகத்தில் வேட்கையுற்றுத் திருவடிக்கண் பெறலாகும் சிவ போகத்தைக் கைவிட்டேன் என வருந்துவாராய், "புலைப் போகம் வேட்டு நின் பொன்னடித் துணைப் போகம் போக்கினேன்" எனக் கூறுகின்றார். வேட்டல் - விரும்புதல். புல்லுதல் - மேற்கொள்ளுதல். அடித் துணை- இரண்டாகிய திருவடி. இல்லி - துளை; துவாரம் எனவும் வழங்கும். இல்லிக் கடம் - ஓட்டைக் குடம். பொறி புலன்கள் மேற் சிந்தையைப் பரக்க விட்டு வாழ்தலால், "இல்லியார் கடமாயினேன்" என வுரைக்கின்றார். கடம் - குடம். திருவருட் பேற்றுக் குரியவன் என்று எண்ணி யருள வேண்டும் எனற்கு "எண்ணுதியோ" என இசைக்கின்றார்.

இதனாற் பொறி வாயில் ஐந்தும் அவியாது புன்மை யுற்ற திறம் புகன்றவாறும். (4)

திருச்சிற்றம்பலம்

17. தனித் திருப்புலம்பல்

அஃதாவது, சிவபெருமானைச் சின்னாள் நினையாமல் இருந்தமைக்கு வருந்தினமை கூறுவதாம். இது திருவாசகத்துள் வரும் திருப்புலம்பலை நினைப்பிக்கின்றதாயினும் கருத்து வகையில் அதனின் சிறிது வேறு படுவது காணலாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2790. திங்கள் விளங்கும் சடைத்தருவைத்
தீம்பாற் சுவையைச் செந்தேனைச்
செங்கை மருவும் செழுங்கனியைச்
சீரார் முக்கட் செங்கரும்பை
மங்கை மலையாள் மணந்தபெரு
வாழ்வைப் பவள மலைதன்னை
எங்கள் பெருமான் தனைஅந்தோ
என்னே எண்ணு திருந்தேனே.

உரை : பிறைத் திங்கள் இருந்து திகழும் சடையையுடைய தெய்வ மரம் போல்பவனும், இனிய பாலின் சுவையாகுபவனும், சிவந்த தேனின் இனிமை யாகியவனும், சீரிய கண்கள் மூன்றுடைய செங்கரும்பை யொப்பவனும், மங்கை பருவத்து மலைமகளான உமாதேவியை மணந்து சிவ போகப் பெருவாழ்வை நல்குபவனும், பவள மலை போல் விளங்கும் திருமேனியை யுடையவனும், எங்கட்குப் பெரிய தலைவனுமாகிய சிவ பெருமானை இதுகாறும் நினையாமல் இருந் தொழிந்தேனே, எனது புன்மையை என்னென்பது. எ.று.

திங்களெனப் பொதுப்பட மொழியினும் சடைமேல் இருந்து திகழ்வது "பிறைத் திங்கள்" என அறிக. சடைத்தரு சடையை முடியிலே யுடைய தெய்வ மரம்; சடைக் கொன்றை யெனக் கூறினும் பொருந்தும். இதனைச் சரக் கொன்றை என இந்நாளில் கூறுவர். பாலும் தேனும் கரும்பு மாகியவற்றின் இனிமைச் சுவை சிவ வடிவமாதலால், "தீம்பாற் சுவையை முக்கட் செந்தேனை" என்று செப்புகின்றார். செங்கை - மாசு மறுவின்றித் தூயதாகிய கை; சிவந்த அகங்கையுமாம். "செங்கையி விருப்பினும் சேயன் சேயனே" (பிரபு) என்பர் துறைமங்கலம் சிவப் பிரகாசர். செழுங்கனி - சுவை முதிர்ந்த பழம். சீர் - செம்மை. கண்கட்கு அமைய வேண்டிய நலமனைத்தும் பொருந்தியன என்றற்குச் "சீரார் முக்கண்" எனக் குறிக்கின்றார். முக்கட் கரும்பு - மூன்று கண்களை யுடைய கரும்பு. கரும்புக்கு ஆகும்போது கணுவையும். சிவனுக்கு ஆகும் போது கண்களையும் குறிக்கும் என அறிக. கரும்பு வகையுள்

செங்கரும்பும் உண்மையின் "செங்கரும்பே" என வுரைக்கின்றார். மகளிரை அறிவறியும் பருவத்தில் மங்கையர் எனப் பண்டையோர் வழங்கினர். மலையாள் - மலையை யுடையவள்; ஈண்டு மலையரையன் மகள் என்னும் பொருளது. உலகிற் பெருவாழ்வு இனிதமைய இறைவன் உமை நங்கையை மணந்தான் என்றல் பற்றி, "மலையாள் மணந்த பெருவாழ்வு" எனச் சிவனைப் புகழ்கின்றார். பெருவாழ்வு தருபவனைப் பெரு வாழ்வு எனப் பரவுகின்றார். சிவனது திருமேனியிற் கிடந்தொளிரும் திருநீற்றை, "பவள மால் வரையிற் பனி படர்ந் தனையதோர் படரொளிதரு திருநீறு" (திருவிசைப்பா) எனத் திருவாலியமுதனார் உரைப்பது காண்க. இறைவனை எண்ணா தொழில் குற்றமாதலால் "அந்தோ என்னே எண்ணா திருத்தேனே" என வருந்துகிறார்.

இதனால், இறைவன் திருமேனி நலம் நினைந்து எண்ணா தொழிந்த குற்றத்துக்கு வருந்தியவாறும். (1)

2791. அன்பர் இதய மலர்க்கோயில்
அமர்ந்த பரமா னந்தத்தைத்
துன்பம் அகலச் சுகமளிக்கும்
தூய துணையைச் சுயஞ்சுடரை
வன்ப ரிடத்தின் மருவாத
மணியை மணியார் மிடற்றானை
இன்ப நிறைவை இறையோனை
என்னே எண்ணா திருந்தேனே.

உரை: மெய் யன்பர்களின் மனமாகிய மலரைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளும் இன்ப வடிவினனாகிய பரமனும், துன்ப மில்லையா மாறு இன்ப மளிக்கும் தூய துணைவனும் சுயஞ் சுடராயவனும், வன்மன முடைய அருள் உள்ளத்தில் நில்லாத மாணிக்க மணி போன்றவனும், நீலமணி போன்ற கழுத்தை யுடையவனும், நிறைந்த இன்பமானவனும் இறைவனுமாகிய சிவபெருமானை இதுவரையும் எண்ணேனாயினேன்; நான் இருந்தவாறு என்னே. எ.று.

உள்ளத்தைத் தாமரையாகவும், அதன்கண் இறைவன் எழுந்தருளு வதாகவும் சான்றோர் உணர்ந்தோதி வருதலால், "அன்பரிதய மலர்க் கோயில் அமர்ந்த பரமானந்தம்" எனக் கூறுகின்றார். "அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானம் புகலுடை யோர் தம்முள்ளப் புண்டரிகத்து உள்ளிருக்கும் புராணர்" (வீழி மிழலை) என்று ஞானசம்பந்தர் எடுத்தோதுவது காண்க. மேலாய தூய இன்பமே யுருவாக அமைந்தவன் என்பதனால், "பரமானந்தம்" என்பாராயினர்; பரம ஆனந்தம், பரமானந்த மாயிற்று. இருள் நீங்க ஒளி தோன்று மென்றாற் போலத் "துன்ப மகலச் சுக மளிக்கும் தூய துணை" எனச் சொல்லுகின்றார். வாழ்வார் மனத்தில் இருள் படரும்போது அறிவொளி நல்குவதால் இறைவனைத் "தூய துணை" என்று சொல்லுகிறார். தூய்மை - பயனோக்காமை. சுயஞ் சுடர் - தானே யொளிரும் தனி ஞான விளக்கு. வன்பர் - அன்புக்கு மறுதலையான குணஞ் செயலுடையவர். எல்லா ருள்ளத்தும் எழுந்தருளுபவனாயினும் இறைவன் வன்பருள்ளத்தில்

அன்பின்மையால் நிலவும் இருளடர்ந்து அவனைக் காண மாட்டாது அறிவை மறைப்பதனால் "வன்பரிடத்தில் மருவாத மணி" எனக் கூறுகின்றார். மேனி மாணிக்க மணியையும், கழுத்து மாணிக்க மணியையும் போல்வதால் "மணி" என்றும், "மணியார் மிடறு" என்றும் அடுத்து உரைக்கின்றார். இன்பமே திருமேனி எனற்கு "இன்ப நிறைவு" என்கின்றார். இன்ப நிறைவாகிய இறைவனை மறத்தல் தீதாதலால், "என்னே எண்ணு திருந்தேனே" என வருந்துகிறார்.

இதனால், இறைவனை மறந்த குற்றத்துக்காக வருந்தியவாறும். (2)

2792. ஒருமைப் பயனை ஒருமைநெறி
உணர்ந்தார் உணர்வின் உள்ளுணர்வைப்
பெருமைக் கதியைப் பசுபதியைப்
பெரியோர் எவர்க்கும் பெரியோனை
அருமைக் களத்தில் கருமைஅணி
அம்மான் தன்னை எம்மானை
இருமைப் பயனுந் தருவானை
என்னே எண்ண திருந்தேனே.

உரை : ஒருமை நெறியால் எய்தும் பயனும், அந்த ஒருமை நெறியில் நின்று மெய்யுணர்வு பெற்ற பெருமக்கள் உணர்வின் உள்ளே இலங்கும் மெய்ப்பொருளும், பெருமையுடையார் எய்தும் உயர் கதியும், பசுபதியும், பெருமையுடையோர் எல்லோர்க்கும் மேலாய பெருமை யுடையவனும், தன் அரிய கழுத்தில் கரிய நஞ்சம் அணிந்த தலைவனும், எங்கட்கு நாயகனு யுள்ளவனும், இம்மை, மறுமை யிரண்டின் பயனும் எய்துவிப்பானுமாகிய சிவபரம் பொருளை, இத்துணை நாளும் எண்ணாமல், இருந்து அவப்பொழுது போக்கினேனே! என்னே என் அறிவிருந்த வாறு! எ.று.

ஒருமை நெறியாவது - பலதலையாக ஓடும் மனத்தையொடுக்கி ஒரு நெறியின்கண் செலுத்துவது. "அறுபகை செற்று, ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர்" என்று ஞானசம்பந்தர் ஒருமை நெறியையும், அந்நெறிக்கண் நிற்பாரையும் சிறப்பித்துரைக்கின்றார். ஒருமை நெறியின் இயல்பறிந்து அதன்வழி நிற்கும் பெருமக்களின் உணர்வுக் குணர்வாய் விளங்குவது பற்றிப் பரம்பொருளை, "ஒருமை நெறி யுணர்ந்தார் உணர் வின் உள்ளுணர்வை" என ஓதுகின்றார். உணர்ந்தார் உணர்வுக்கு உள்ளுணர்வாய் இருத்தல் பற்றியே, "உணர்ந்தார்க்கு உணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன் (9) என்று திருக்கோவையாருட கூறுகின்றது. சிவஞானத்தாற் பெறுஞ் சிவகதி, பிறப் பெல்லாவற்றுள்ளும் பெருமை வாய்ந்ததாகலின், "பெருமைக் கதி" எனப் பேசுகின்றார். பெரியராயினர் அனைவரும் பிறப்பிறப்புக்களை யுடையோராதலின், அவரின் நீக்குதற்கு, "பெரியோர் எவர்க்கும் பெரியோனை" என உரைக் கின்றார். "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று இளங்கோவடிகளும் எடுத்துரைப்பது காண்க. அருமை - அழகு.

இதனால், இருமைப் பயனுந் தரும் இறைவனை எண்ணா திருந்தமைக்கு வருந்தியவாறும். (3)

2793. கறையோர் கண்டத் தணிந்தருளும்
கருணை நிதியைக் கண்ணுதலை
மறையோன் நெடுமாற் கரியசிவ
மலையை அலையில் வாரிதியைப்
பொறையோர் உள்ளம் புகுந்தொளிரும்
புனித ஒளியைப் பூரணனும்
இறையோன் தன்னை அந்தோநான்
என்னே எண்ணா திருந்தேனே.

உரை : நஞ்சின் கறை படிந்த கழுத்தினையுடைய அருட் செல்வனும், கண் பொருந்திய நெற்றியை யுடையவனும் நான்முகனும் திருமாலும் நாட அரியனான சிவமாகிய மலையும், அலையில்லாத கடலும், பொறுமை பூண்டோர் உள்ளத்துட் புகுந்திருந்து ஒளிர்கின்ற தூய ஒளியும், குறைவிலா நிறைவுடைய இறைவனுமாகிய சிவபரம் பொருளை இத்துணை நாளும் நினையா திருந்து, அந்தோ! அவப்பொழுது போக்கினனே! என்னே என் அறிவிருந்தவாறு! எ.று.

தூய பொன் வண்ணங்கொண்ட திருமேனியில் அமுதமுண்ண விழைந்தார் பொருட்டுத் தடையாய் நின்ற கடல் விடத்தை யுண்டு அருள் புரிந்த அருட் செயலை நினைக்கின்றாராதலின், "கறையோர் கண்டத் தணிந்தருளும் கருணைநிதியை" எனப் புகல்கின்றார். இவ்வருள் நிலையை வியந்து, "என் பெரிய வானவர்கள் நின்று துதி செய்ய இறையே கருணையாய் உண்பரிய நஞ்சதனை உண்டு உலகம் உய்ய அருள் உத்தமன்" (மாணிகுழி) என ஞானசம்பந்தரும் நவின்றார். கருணைநிதி - அருட் செல்வம். பிணங்கிய மனத்தால், வேறுபட்டு நின்று முயன்றமையின் அயனும் மாலும் சிவனைக் காணாராயினர் என்றற்கு, ''மறையோன் நெடுமாற்கு அரிய சிவமலையை'' என்கின்றார். நாளும் மறை யோதுபவனாயினும் பிரமனாலும், நெடிய பண்புடையவனாயினும் திருமாலாலும் காண்பது இயலா தொழிந்தமை குறிப்பாய் விளங்க நிற்றல் காண்க. நில வுலகத்து அலை கடலின் வேறுபடுத்தற்கு, "அலையில் வாரிதி" என இயம்புகின்றார். வாரிதி - கடல். செம்மைப் பண்பும், திண்ணிய அறிவும் கொண்டு யாவர் எவ்வாற்றால் தீது செய்யினும் பொறுத்தாளும் அன்புடையார் மனமே ஞான நிலைய மாதலின், அதன்கண் இறைவன் எழுந்தருள்வது இயல்பாதல் புலப்படுத்தற்கு, ''பொறையோர் உள்ளம் புகுந்தொளிரும் புனித ஒளியை'' எனப் புகல்கின்றார். ஒளி பெற்றார் உள்ளம் தூய்மையுற இலங்குவது பற்றிச் சிவஒளியைப் ''புனித ஒளி'' என்று புகழ்கின்றார். எல்லாவற்றாலும் குறைவற நிறைந்த பரம்பொருள் என்பது பற்றிப் ''பூரணனும் இறையோன்'' எனப் போற்றி யுரைக்கின்றார்.

இதனால், எங்கும் எல்லாவற்றாலும் குறைவற நிறைந்தருளும் சிவத்தின் முழுமையை நினையாதொழிந்தமைக்கு வருந்தியவாறும். (4)

திருச்சிற்றம்பலம்

18. பரம ராசியம்

அஃதாவது, உண்மை ஞானிகளிடையே மிக்க இரகசியமாகப் பேசப் படும் சிவபரம் பொருளின்பால் தம்பால் உள்ள குறைகளை யாராய்ந்து கண்டு எடுத்தோதித் திருவருள் இன்பந் தருமாறு வேண்டுவதாம். பரம ரகசியத்தைப் பரம ராசியம் என வழங்குவது தென்பாண்டி நாட்டு வழக்கு. பரம ராஜ்யம் என்பது பரம ராசியம் என வந்ததாகக் கொள்ளலும் உண்டு. மண்ணக அரசுகளில் விண்ணகங் கடந்த திருவருள் அரசு, தனக்கு மேலில்லாத பேரரசாகலின் அதனைப் பரம ராசியம் எனக் கூறுவதும் பொருந்தும் என அறிஞர் கூறுகின்றனர்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2794. விதிஎ லாம்விலக் கெனவிலக் கிடுவேன்
விலக்கெ லாங்கொண்டு விதிஎன விதிப்பேன்
நிதிஎ லாம்பெற நினைத்தெழு கின்றேன்
நிலமெ லாங்கொளும் நினைப்புறு கின்றேன்
எதிஎ லாம்வெறுத் திட்டசிற் றூழை
இன்பெ லாங்கொள எண்ணிநின் றயர்வேன்
பதிஎ லாங்கடந் தெவ்வணம் உய்வேன்
பரம ராசியப் பரம்பரப் பொருளே.

உரை: பரம ராசியப் பரம்பரப் பொருளே, விதித்தனவற்றைத் தவிர்வன என எண்ணி மறுப்பேன்; தவிர்வனவற்றை மேற்கொண்டு விதித்தவற்றைச் செய்யா தொழிவேன்; செல்வ வகை யெல்லா வற்றையும் பெற ஆசைப் படுவேன்; நிலம் பலவற்றையும் எனக் குரியவாக வேண்டுமென விழைகின்றேன்; துறவிகள் அனைவராலும் வெறுத் தொதுக்கச் செய்யும் சிறுமையையுடைய ஊழ்வினையால் எய்தும் இன்பங்களைக் கைக் கொள்ளக் கருதி வருந்துவேன்; நிலையாகத் தங்கும் இடங்களை யிழந்து எவ்வாறு உய்வேன். எ.று.

பரம ராசியம் - இரகசியம்; மிக்க ரகசியம் என்றுமாம். இரகசியம். இராசியம் எனப்படுகிறது. "அவிர் சடைய ரிடைப் பரம ராசியம் யாது பயந்ததோ" (குற்றலத் தல) என வருதல் காண்க. மிக அந்தரங்கமாகக் கருதப்படும் பொருள்; இதனைச் சிவ ரகசியம் என்பர் ஒப்பிலா மணித் தேசிகர். மிக மேலான பொருள் என்றற்குப் பரம்பரப் பொருள் எனப் பகர்கின்றார். ஈண்டுப் பரம்பரப் பொருள் என்பது சிவபரம் பொருள். பரம ரகசிய நுண் பொருளாக ஞானிகளால் உபதேசிக்கப்படுவது பற்றிப்

"பரம ராசியப் பரம்பரப் பொருளே" என்று வடலூர் வள்ளல் எடுத்துரைக்கின்றார். அற நூல்கள் வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைச் செய்க எனவும், வேண்டாதவற்றைச் செய்யற்க எனவும் கூறும் இயல்பின; செய்க என்பதும் செய்யற்க என்பதும் விதி விலக்குகள் எனப்படும். இவற்றை ஆய்ந்த சான்றோர், "விதி யெல்லாம் எய்தாததனை எய்துவிப்பதும், ஒருகால் எய்தி ஒருகா லெய்தாதற் பாலதனை எய்துவிப்பதும், அவ்வழியும் இகழ்ந்து படாமற் காத்து நியமமாக எய்துவிப்பதும், ஈரிடத்தெய்தற் பாலதனை ஒரு மருங்கு மறுப்பதும் என மூவகைப்படும்" எனவும், "இம்மூன்றனையும் வடநூலார் முறையே அபூர்வ விதி, நியமவிதி, பரிசங்கியா விதி எனக் கூறுப" (சிவ. பாடி. 1:3) என்று உரைப்பதால், விதி வகை பலவாதல் கண்டு "விதி யெலாம்" என எஞ்சாதடங்கக் கூறுகின்றார். விதிமுறைகட்கு ஒப்ப வொழுகுவது அறமாகவும், மாறுபட நடக்கும் செயலுடையேன் எனத் தெரிவிப்பாராய், "விதி யெலாம் விலக்கென விலக்கிடுவேன்" என்றும், "விலக்கெலாம் கொண்டு விதியென விதிப்பே" னென்றும் விரித்துரைக்கின்றார். விதியை விலக்கென்றும், விலக்கை விதி யென்றும் சொல்லுவ தன்றிச் செயலிலும் செய்து காட்டுவேன் என முரணும் செயலை, "விலக்கென விலக்கிடுவேன், விதியென விதிப்பேன்" என விளம்புகின்றார். நிதி - செல்வம்; இம்மையிற் பெறலாகும் பொன்னும் பொருளுமாகிய செல்வங்களும், மறுமையிற் பெறப்படும் சங்கநிதி, பதுமநிதி என்ற செல்வங்களும் குறிக்க "நிதி யெலாம்" என வுரைக்கின்றார். சிறிதும் விடாது பெற விழைந்து முயல்வது தோன்ற, "நிதி யெலாம் பெற நினைத்து எழுகின்றேன்" என்றும், விதைத்த ஒன்று ஆயிரமாக விளையும் வளவிய நிலங்களத்தனையும் தனக்கே யுரிய உடைமையாகக் கொளற்கு விரும்புவது கூறுவாராய், "நிலமெலாம் கொளும் நினைப்புறுகின்றேன்" என்றும் இயம்புகின்றார். எதி - துறவி. சிற்றறிவும் சிறுதொழிலு முடைய மக்களால் செய்யப்படும் சிறுமை யுறுதலின், "எதி யெலாம் வெறுத்திட்ட சிற்றாழ்" என்று கூறுகின்றார். ஊழ்வகையுள் போகூழால் துன்பம் விளைவது பற்றிச் சிற்றாழ் எனப்படுகிற தெனினுமாம். ஊழ் வினையால் இன்பப் பேறு கெடுவதால், "சிற்றாழால் இன்ப மெலாம் கொள எண்ணி அயர்வேன்" என மொழிகின்றார். "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" (குறள்) என்பது காண்க. உலகியல் வாழ்வு நிலையான ஓர் இடம் பற்றி நிகழ்வதாகலின், அதனை யிழந்து வாழ்தல் இயலா தென்பாராய், "பதி யெலாம் கடந்து எவ்வணம் உய்வேன்" என வுரைக்கின்றார்; தலைவரது தலைமையைக் கடந்து எவ்வாறு உய்தி பெறுவேன் எனினும் அமையும்.

இதனால், உலகியலில் மாறுபட் டொழுகும் தம்முடைய குறைகளை எடுத்தோதியவாறும். (1)

2795. **செடிய னேன்கடுந் தீமையே புரிவேன்**
தெளிவி லேன்மனச் செறிவென்ப தறியேன்
கொடிய னேன்கொடுங் கொலைபயில் இனத்தேன்
கோள னேன்நெடு நீளவஞ் சகனேன்

அடிய னேன்பிழை அனைத்தையும் பொறுத்துன்
அன்பர் தங்களோ டின்புற அருள்வாய்
படிஅ னேகமுங் கடந்தசிற் சபையில்
பரம ராசியப் பரம்பரப் பொருளே.

உரை : படிகள் பலவற்றால் உயர்ந்த ஞான சபையில் விளங்கும் பரம ராசியப் பரம்பரப் பொருளே, குற்ற மிக்கவனாகிய யான் மிக்க தீமைகளையே செய்பவன்; தெளிவின்மையும் மனவடக்க மின்மையும் உடையவன்; கொடுமைப் பண்பு கொண்டுள்ளதன்றிக் கொடுமையான கொலைச் செயலும் புரிவார் கூட்டத்தைச் சேர்ந்தவன்; புறங் கூறுதலும் நெடிது நீண்ட வஞ்சனை செய்தலு முடையவன்; இப் பெற்றியனாயினும் உனக்கு அடியவனாதலால் என் பிழைகள் அத்தனையும் பொறுத்து, உன்னுடைய மெய்யடியார் கூட்டத்திலிருந்து இன்பமுற அருள் செய்வாயாக. எ.று.

தில்லையம்பலத்திலுள்ள ஞானசபை உயர்ந்த மேடையாய்ப் படிக் கட்டுகள் பல வுடையதாதலால், "படி யனேகமும் கடந்த சிற்சபை" என்று உரைக்கின்றார். அனேகம் - பல. சிற்சபை - ஞானசபை. அங்கே காட்சி வழங்கும் கூத்தப் பெருமான் ஞானிகளிடையே பரம ரகசியப் பரம்பொருளாய் விளங்குவது புலப்பட, "பரம ராசியப் பரம்பரப் பொருளே" என்று பகர்கின்றார். செடி - குற்றம். "செடிசே ருடலமிது நீக்க மாட்டேன்" (சதகம்) என்று திருவாசகம் இயம்புவது காண்க. கடுந்தீமை - மிக்கதீமை. கடி தீமை என மிகுதிப் பொருளில் வரும் உரிச் சொல் கடுந் தீமை யென வந்தது. மனச் செறிவு - மன வடக்கம். கொடுங் கோலை - கொடுமை செய்து புரியும் கொலைச் செயல். கொலை வினை புரிந்தொழுகும் கூட்டம் - கொலை பயில் இனம்; கொலை வினையே செய்தொழுகும் மறவரினம். கோளன் - கோட் சொல்லுபவன்; புறங் கூறுவோன். நெடுநாள் மனத்துட் கொண்டு தீமை புரிபவனை, "நெடு நீள வஞ்சகன்" என்று சொல்லுகிறார். நீள வஞ்சகன் - பெரிய வஞ்சகன். அதனால் விளையும் துன்பம் பன்னாள் இருந்து வருத்துவது என்றற்கு "நீள வஞ்சகன்" எனக் கூறுகின்றார். அன்பர் - மெய்யன்புடைய சிவனடியார்கள். இக் கூட்டத்தில் சிவானந்தமே நிலவுதலால் "அன்பர் தங்களோடு இன்புற அருள்வாய்" என வேண்டுகிறார்.

இதனால் சிவனடியாரது திருக்கூட்டத்து இன்ப மருள வேண்டிய வாறும். (2)

திருச்சிற்றம்பலம்

19. திருப் புகழ்ச்சி

அஃதாவது, சிவபரம் பொருளின் அருள் நலங்களைப் பல சொற்களால் பாரித்துரைத்தலாம். இதனை, இலக்கண அறிஞர் "ஆர்வ மொழி" என்பர்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2796. திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்
சிறியரிற் சிறியனேன் வஞ்சக்
கருவுளக் கடையேன் பாவியேன் கொடி
கன்மனக் குரங்கனேன் அந்தோ
வெருவுறு கின்றேன் அஞ்சல்என் றின்னே
விரும்பி ஆட்கொள்ளுதல் வேண்டும்
மருவுமா கருணைப் பெருங்கடல் அமுதே
வள்ளலே என்பெரு வாழ்வே.

உரை: உலகுயிரனைத்திலும் கலந்திருக்கும் அருளாகிய பெருங் கடலிடத்தே பிறந்த அமுதமே, வரைவின்றி அருளை வழங்கும் வள்ளலே, எனக்குப் பெருவாழ் வளிக்கும் பெருமானே, அடியேன் உனது திருவுள்ளத்துக் குறிப்பை அறிகிலேன்; அறிவு மயங்குகின்றேன்; சிறுமை யுடையவர் யாவரினும் சிறியவனுவேன்; வஞ்ச நினைவுகட்குக் கருவூல மான மனமுடையவனய்க் கடையவனுகின்றேன்; பாவம் பல வுடை யவன்; கொடிய கற் போன்ற மனமாகிய குரங்கினையுடையேன்; ஐயோ, அஞ்சுகின்றேனுதலால், இப்பொழுதே அஞ்சுதல் ஒழிக என்று என்பால் அன்பு கொண்டு ஆட்கொள்ள வேண்டும். எ.று.

இறைவன் திருவருள் தோய்வின்றி எவ்வுயிரும் எத்தகைய அணுப் பொருளும் இயங்குவ தில்லையாதலால், "மருவும் கருணைப் பெருங்கடல் அமுதே" என்று பரவுகின்றார். மக்களினத்தும் பேரருளாளர் உளராயினும், எல்லாரினும் மேம்பட்டுத் திருவருட் சாரத்தின் திருவுருவாய் விளங்குதலை நினைந்து "கருணைப் பெருங்கட லமுதே" எனக் கூறுகின்றார். வாழ் வளிக்கும் பெருமானைப் "பெருவாழ்வே" என்கின்றார். சிவபிரான் காட்டக் காணினன்றித் தாமே காண மாட்டாமை பற்றித் "திருவுளம் தெரியேன்" எனவும், அதனால் செயத் தகுவது விளங்காமையால் மருளுகின்றேன் என்பாராய், "திகைப்புறுகின்றேன்" எனவும் இசைக்கின்றார். தம்மையே நோக்குமிடத்து அறிவிலும் செயலிலும் சிறுமையைக் காண்பதால், "சிறியரிற் சிறியனேன்" என்றும், சிறுமையுறுதற்குக் காரண மாவது மனத்தின்கண் வஞ்ச நினைவுகள் அவ்வப்போது எழுதலையுணர்ந்து

"வஞ்சக் கருவுளக் கடையேன்" என்றும் இயம்புகிருர். கருவுளம் - கருவூலமாகிய மனம். "கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு" (ஆரூர்) என ஞானசம்பந்தர் மக்களுள்ளத்தின் இயல்பைக் குறிப்பிடுவது காண்க. கள்ளம் நிறைந்த உள்ளம் ஒருவரைக் கடையவனுக்குவது உண்மையாதலால், "கடையேன்" எனவும், அந்நெஞ்சம் பாவம் செய்வித்தலால் "பாவியேன்" எனவும், பாவ வினைகள் தம்மைச் செய்பவன் மனத்தை ஒன்றிலும் நிலையுதலின்றி அலைவித்தல் தோன்றக் "கொடிய கன்மனக் குரங்கனேன்" எனவும் சொல்லி வருந்துகிருர். கன்மனக் குரங்கனேன் - கற்போன்ற மனத்தையுடைய குரங்கு போன்றவன் எனினும் பொருந்தும். எங்கும் எப்பொருளிலும் ஆசையைச் செலுத்திக் குரங்கு போன்றலையும் உள்ளம், அச்செயற்கண்ணே நின்று கன்றுமாயின் கல்லினும் வலிதாய் இரக்க வியல்புக்கிடமாகா தொழிவது பற்றி, "கன்மனக் குரங்கனேன்" என விளக்குகின்ருர். இப் பண்புகளையும் செயல்களையும் காணும்போது இவற்ருல் விளையும் துன்பம் தோன்றி அச்சுறுத்துவதால், "வெருவுறுகின்றேன்" என்றும், அச்சம் கீழ்மையிற் செலுத்தும் இயல்பினதாகலின், "அஞ்ச லென்று இன்னே விரும்பி ஆட்கொள்ளுதல் வேண்டும்" என்றும் விண்ணப்பிக்கின்ருர். காலம் தாழ்க்கின் கீழ்மையுற்றுக் கெடுவேன் என்பாராய், "இன்னே" என இயம்புகிருர்.

இதனல், அச்சத்தாற் கடைப்படுவது கூறி ஆட்கொள்ள வேண்டுமாறும். (1)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2797. தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும்மெய் அறிவும்
அனைத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்
ஏயும் என்னள விரக்கம்ஒன் றிலையேல்
என்செய் வேன்இதையார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசைஉறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே.

உரை : தில்லையம்பலத்தின்கண் எழுந்தருளி விளக்கமுறும் ஞான வொளி விளக்கமே, எனக்குத் தாயும் தந்தையும் குருவும் தெய்வமும் ஆகின்றவன் நீயே யாவாய்; என்னைக் காத்தளிக்கின்ற ஒரு தலைவனும், வாழ்தற்கு வேண்டிய பொருளும், நுகர்தற் பொருட்டு ஆய்ந்துணரும் இன்பமும் அதற் கின்றியமையாத அன்பும் மெய்யுணர்வும் நீயே யாவாய் என நின்பால் அன்புற்று இன்று வரையிருந்தேன்; அங்ஙனமிருக்கும் என்பால் நீ சிறிதும் இரங்குகின்ருயில்லையாயின் யான் என்ன செய்வேன்; இதனை யாவரிடம் எடுத்துச் சொல்லுவேன்; சிறு குழவியும் நினதருளின்பால் ஆசை கொள்ளும் என்பதை அறிவாயாக. எ.று.

செய்யுளாகலின், "தெய்வமும் குருவும்" மாறி நிற்கின்றன. முறை செய்யும் தலைவனுதலின், அரசனை, "தங்குகின்ற - தோர் தலைவன்" என

வுரைக்கின்றார். தாங்குதல் - ஈண்டுக் காத்தலும் அளித்தலும் குறித்து நிற்கின்றது. பொருளிலார்க்கு வாழ்வில்லையாதலால், வாழ்விற்குரிய பொருளும் இறைவனென எண்ணுகிறார். இறைவனருள் வழியது பொருள் என்பது பற்றி இவ்வாறு கூறுகிறார் எனினும் அமையும். பொருளாலும் அதனைச் செய்யும் நெறியாலும் முடிவிற் பெறுவது இன்பமாகலின், "ஆயும் இன்பம்" எனவும், அது நிலையுறுவது அன்பு நெறியாகலின், "அன்பு" எனவும், இன்பமும் அன்பும் சிறப்புறுவது மெய்யுணர்வுக் கென்பது பற்றி, "மெய்யறிவு" எனவும் உரைக்கின்றார். தாய் தந்தை முதலாகவும் மெய்யறிவு ஈறாகவும் தனித்தனி நிறுத்திக் கூறினாராயினும், எல்லாம் சிவத்தின் விரிவு என வற்புறுத்தற்கு "அனைத்தும் நீயே என ஆதரித்திருந்தேன்" என்று கூறுகின்றார். என்பால் இரக்கம் கொண்டு நீ நின் திருவருளை நல்குதல் வேண்டும்; இன்று வரை நீ செய்திலை; இவ்வாறாயின், யான் எங்ஙனம் நற் பேற்றுக்குரிய வாழ்வு பெறுவேன் என்பாராய், "ஏயும் என்னளவு இரக்க மொன்றிலையேல் என் செய்வேன்" எனவும், நின்னை ஒப்பாரும் மிக்காரும் ஒருவரு மில்லையாதலால் யாவரிடம் சொல்லி நின்னுடைய இரக்கத்தைப் பெறுவேன் என்றற்கு "யார்க் கெடுத்துரைப்பேன்" எனவும் இயம்புகிறார். நீ மன மிரங்கினையாயின், யான் பெறும் திருவருள் என்னை வாழ்விப்பதாம் என்பது கருத்து. திருவருள் ஞான வொளியும் இன்ப வுருவ முடையதாகலின், கள்ளமில்லாத உள்ளம் கொண்ட சிறு குழந்தையும் அதனைப் பெற ஆசைப்படுகின்றன என்பாராய், "சேயும் நின்னருள் நசையுறும்" என நவில்கின்றார். நசை - விருப்பம்.

இதனால் சிறு குழந்தைக்கும் திருவருள் மேல் ஆசை யுண்டென அறிவித்தவாறும். (2)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2798. அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருள்எனும் அமுதந் தரும்ஒரு கடலே
அருட்கிர ணங்கொளும் சுடரே
அருள்ஒளி வீசும் அரும்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருள்மணம் வீசும் ஒருதனி மலரே
அருண்மய மாம்பர சிவமே.

உரை : அருளாகிய பழம் பழுத்து உயர்ந்த கற்பக மரமே, அருளாகிய மருந்தை நல்கும் ஒளி தரும் குணக் குன்றமே, அருளாகிய அமுதத்தை வழங்கும் ஒப்பற்ற கடல் போன்றவனே, அருளாகிய கதிர்களைக் கொண்ட ஞானச் சுடரே, அருளாகிய ஒளியை வீசும் பெறற்கரிய மணி போன்றவனே, அருளாகிய சுவையையுடைய செம்பாகமாக அமைந்த பாகு போன்றவனே, அருளாகிய நறுமணம் கமழும் ஒப்பற்ற தனி மலரே, அருள் மயமாகிய பரசிவமே. எ.று.

கற்பகத் தரு, இந்திர னுலகத்திற்கு கனி பழுத்தளிக்கும் மரம். இதன் சிறப்புப்பற்றி, இந்திரன் நாட்டைக் கற்பக நாடு என்று கூறுகின்றனர். கற்பகத்தரு கனி தருவது போலத் திருவருளை நல்குவதால் சிவபரம் பொருளை "அருள் பழுத்தோங்கும் கற்பகத் தருவே" என்று கூறுகின்றார். மலைகளிலும் குன்றங்களிலும் உள்ள செடி கொடிகளில் மருந்தாவன பல வுண்மை பற்றி, "அருள் மருந்து ஒளிர் குணக் குன்றே" எனவும், சலியாமை கண்டு குணங்களைக் குன்று எனவும் உரைக்கின்றார். திருவள்ளுவரும் "குண மென்னும் குன்று" என்பது காண்க. கடலிடத்தே தேவர்கட்கு அமுதம் கிடைத்தது போலச் சிவத்தின்பால் திருவருள் கிடைப்பது உணர்த்த "அருள் எனும் அமுதம் தரு பெருங் கடலே" எனப் புகழ்கின்றார். விளக்கொளியினின்று பரவும் கதிர்களைப் போலச் சிவத்தினிடம் ஞான வொளிக் கதிர் எழுந்து பரவுவது புலப்பட, "அருட்கிரணம் கொளும் சுடரே" என இயம்புகிறார். மணிகட்கு ஒளி யுண்மையால், "அருளொளி வீசும் அரும் பெறல் மணியே" என அறிவிக்கின்றார். கரும்பின் பாகு, தேன் பாகு ஆகியவற்றிற் பெறப்படும் சுவை போலச் சிவஞானம் திருவருட் சுவையை நல்குவதால், "அருட் சுவை கனிந்த செம்பாகே" எனப் போற்றுகின்றார். நன்கமைந்த செந்நிறமாக இருத்தலால் "செம்பாகு" என்று உரைக்கின்றார். அழகிய மலர்களில் இனிய மணம் நிலவுதல் போலச் சிவத்தின்பால் அருள் மணம் நிலவுகிற தென்பார், "அருள் மணம் வீசும் ஒரு தனி மலரே" எனக் கூறுகின்றார். அருவாகிய பரசிவன் உருக் கொள்ளுமிடத்து அருளே தனக்குத் திருவுருவாகக் கொள்ளுகிற தென்பாராய், "அருள் மயமாம் பரசிவமே" எனப் பகர்கின்றார்.

இதனாற் பரசிவத்தின் நலம் பலவும் எடுத்துரைத்தவாறும். (3)

திருச்சிற்றம்பலம்

20. திருமருந் தருள்நிலை

அஃதாவது, தில்லைச் சிற்றம்பலத்தே நின்று திருக்கூத்தாடும் நடராசப் பெருமான் உயிர்கட் குளதாகும் பிறவி நோயைத் தீர்த்தருளும் நன்மருந்தாம் என உலகறிய வியந்துரைப்பதாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2799. பனகஅணைத் திருநெடுமால் அயன்போற்றப்
புலவரெலாம் பரவ ஓங்கும்
கனகமணி அம்பலத்தே பெரியமருந்
தொன்றிருக்கக் கண்டேன் கண்டேன்
அனகநடத் ததுசச்சி தானந்த
வடிவதுபே ரருள்வாய்ந் துள்ள
தெனகமமர்ந் திருப்பதெல்லாம் வல்லதுபேர்
நடராசன் என்ப தம்மா.

உரை: பாம்பணையுடைய திருமாலும் பிரமனும் போற்றி வணங்கவும், தேவரெல்லாம் பரவித் துதிக்கவும், உயர்ந்த பொன்னாலும் மணிகளாலும் ஆகிய அம்பலத்தின்கண் பிறவி நோய் தீர்க்கும் பெரிய மருந்தைக் கண்களால் பார்த்து மகிழ்ந்தேன்; அஃது யாது என்னில், அம்மம்ம, புண்ணியக் கூத்தை யுடையது; சத்தும் சித்தும் இன்ப முமாகிய வடிவுடையது; பெரிய அருளே உருவாகியது; என் மனத்தின் கண் எழுந்தருளுவது; எல்லாம் செய்ய வல்லது; நடராசன் எனப் பெயர் கூறப்படுவது, காண். எ.று.

பன்னகம் - நஞ்சு பொருந்திய பல்லையுடைய பாம்பு; இங்கே அது ஆதிசேடனாகிய பாம்பைக் குறிக்கிறது. பாம்பினைப் படுக்கையாகக் கொண்டவன் என்பது பற்றித் திருமாலைப் "பனகவணைத் திருநெடுமால்" என்று சிறப்பிக்கின்றார். பன்னகம் - பனகமென வந்தது. திருநெடுமால் - திருவொடு கூடிய நெடுமால். புலவர் - தேவர்கள். விண்ணுலகமாகிய உயர் புலத்தில் உறைவதால் தேவர்கள் "புலவர்" எனப்படுகின்றனர். திருமாலும் பிரமனும் ஒருபால் நின்று போற்ற, தேவர்கள் ஒரு பக்கம் நின்று பராவுகின்றார்கள் என்பாராய், "நெடுமால் அயன் போற்றப் புலவரெலாம் பரவ" என்று கூறுகின்றார். அவர்கள் துதிக்க, "பெரிய மருந்து ஒன்று இருக்கக் கண்டேன்" என வுரைப்பவர், அப் பெரிய மருந்தைக் கண்ட இடம் இஃது என்றற்கு "ஓங்கும் கனகமணியம்பலம்" எனக் குறிக்கின்றார். கனகம் - பொன். மாற்றுயர்ந்த பொன்னென்பது புலப்பட, "ஓங்கும் கனகம்" என்று கூறுகின்றார். பெருமை சான்ற

மருந்து எனினும், அதன் இயல்புகள் இவை என்பாராய், "அனக நடத்தது, சச்சிதானந்த வடிவது, பேரருள் வாய்ந்துள்ளது என் அகம மர்ந்திருப்பது" என விளக்குகின்றார். அகமில்லது - அனகம்; அகம் - பாவம். திருக்கூத்தால் பாவம் துடைப்பது பற்றி, "அனக நடத்தது" என்கிறார். சத்து - என்றும் உள்ளது; சித்து - அறிவுருவாயது; வழங்கக் குறைபடாத பெருமையுடைய தென்றற்குப் பேரருள் வாய்ந்துள்ளது என்கின்றார். வாய்த்தல் - வேண்டுவார் வேண்டுங்கால் வேண்டி யாங்கு அருளுதல். நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்பவனாதலால், "என் அகம் அமர்ந்திருப்பது" என்று சொல்லுகிறார். ஆக்கல் - அழித்தல் முதலிய யாவற்றையும் செய்தலால், "எல்லாம் வல்லது" என்று மொழி கின்றார். கூத்தப் பெருமானாதலால், "பேர் நடராசன் என்பது" என இசைக்கின்றார்.

இதனாற் சிவமாகிய கூத்தப் பெருமானை மருந்தென் றுரைத்து நடராசன் எனப் பேர் கூறப்படும் நலம் பலவும் காட்டியவாறும். *(1)*

2800. திருநெடுமால் அயன்தேடத் துரியநடு
ஒளித்ததெனத் தெளிந்தோர்சொல்லும்
ஒருகருணை மருந்துதிரு அம்பலத்தே
இருந்திடக்கண் டுவந்தேன் அந்தோ
அருவுருவங் கடந்ததுபேர் ஆனந்த
வடிவதுநல் அருள்வாய்ந் துள்ள
திருமையும்நன் களிப்பதெல்லாம் வல்லதுபேர்
நடராசன் என்ப தம்மா.

உரை: திருவொடு கூடிய திருமாலும் பிரமனும் அடியையும் முடியையும் காண முயலா நிற்க, துரியத்தின் நடுவின்கண் மறைந் திருந்தது என மெய்ப்பொருள் தெளிந்தோர் சொல்லுகின்ற ஒப்பற்ற திருவருள் மருந்து திருச்சிற்றம்பலத்தே இருக்கக் கண்டு உவகை யுற்றேன்; அஃது எவ்வியல்பை யுடையது எனின், அருவுருவ மென்னும் நிலைக்கு அப்பாற்பட்டது; பேரானந்த வடிவமானது; நல்லருள் வாய்க்கப் பெற்றது; உயிர்கட்கு இம்மை மறுமை என்ற இருமைக்கும் நலம் செய்வது; எல்லாம் செயல் வல்லது; திருப்பெயர் நடராசன் எனப்படுவதாம். எ.று.

நெடுமால் திருமகளோடு கூடி யிருப்பவனாதல் விளங்கத் "திருநெடு மால்" எனக் கூறுகின்றார். தாணுவாய் நின்ற சிவத்தின் அடி முடிகளை முறையே காணும் பொருட்டு மாலும் பிரமனும் முயன்றனர் எனப் புராணம் கூறுவதன் பொருள் யாதென ஆராய்ந்த அறிஞர்களிற் சிலர், அவர்கள் தேடியபோது துரிய நடுவே நின்றமையின் அவ்விருவரும் காணாராயினர் எனக் கூறினர்; அதனால், "நெடுமால் அயன் தேடத் துரிய நடு ஒளித்ததெனத் தெளிந்தோர் சொல்லும் ஒரு கருணை மருந்து" என உரைக்கின்றார். துரிய நடு - உந்தியின் நடுநிலை; கீழாலவத்தையில் ஆன்மா சுழுத்தித் தானமாகிய இதயத்தின் நீங்கி உந்தியிற் சென்றணைவது துரியாவத்தை; அங்குப் பிராண வாயுவும் புருடத்துவமு மாகிய இரு கருவிகளோடே கூடியிருத்தலால் அங்கு ஆன்மாவுள் ஒடுங்கி

யிருக்கும் சிவம் உணரப்படாது என்பது பற்றி, "துரிய நடு ஒளித்த தெனத் தெளிந்தோர்" சொல்வதைக் கொண் டுரைக்கின்றார். புருடத்துவம் - பும்ஸ்துவ மலம் எனவும் கூறப்படும். உணர்வுருவாகிய, ஆன்மாவுக்கு அங்கே உணர்த்தும் கருவியில்லாமையால் "ஒளித்தது" எனச் சொல்லுகின்றார்கள். இறைவனை "மருந்து" என்று உரைப்பதால் அருளே அவற்குத் திருமேனியாதல் பற்றிக் "கருணை மருந்து" என்று கூறுகின்றார். தில்லையம்பலத்தில் கூத்தப் பிரான் உருவிற் கண்டு இன்புற்றது கூறுவாராய், "அம்பலத்தே யிருந்திடக் கண்டு உவந்தேன்" என வுரைக்கின்றார். பொருள்கட்குரிய உருவம், அருவம், அருவுருவம் என்ற மூவகைக்கும் அப்பாற் பட்ட தென்றற்கு "அருவுருவம் கடந்தது" என்றும், ஆனந்தமும் அருளும் திருமேனியாகக் கூறப்படுவது பற்றி, "பேரானந்த வடிவாய் அருள் வாய்ந்தது" என்றும் இசைக்கின்றார். நன்கு - நன்மை. இருமை - இம்மை மறுமை என்பன.

இதனால், அம்பலத்தாடும் பெருமானது இயல் நலம் உரைத்து நடராசன் எனப் பெயர் கூறப்படும் திறம் கூறியவாறும். (2)

திருச்சிற்றம்பலம்

21. திருவருள் விலாசம்

அஃதாவது, இறைவனின் திருவருள் விளையாட்டுத் திறத்தைக் கூறுவது. விலாசம் - விளையாட்டு.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2801. ஆண்டவன்நீ ஆகில்உனக் கடியனும்நான் ஆகில்
அருளுடையாய் இன்றிரவில் அருள்இறையாய் வந்து
நீண்டவனே முதலியரும் தீண்டரிதாம் பொருளின்
நிலைகாட்டி அடிமுடியின் நெறிமுழுதும் காட்டி
வீண்டவனே காலையில்நீ விழித்தவுடன் எழுந்து
விதிமுடித்துப் புரிதிஇது விளங்கும்எனப் புகல்வாய்
தாண்டவனே அருட்பொதுவில் தனிமுதலே கருணைத்
தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே.

உரை : கூத்தப் பெருமானே, அருட் சபையிற் காட்சிதரும் தனி முதல்வனே, பெரிய அருட் கடலே, மிக்க தகுதி கொண்டவனே, சங்கரனே, சிவனே, என்னை ஆண்டவன் நீயாயின், உனக்கு நான் அடியவனாயின், அருளுடையவனாகிய நீ இன்றிரவு எனக்கு அருள் ஞானம் நல்கும் குருவாய் வந்து, திருமால் முதலிய தேவர்களாலும் காண்பதற்கரிய பரம்பொருளாகிய உனது உண்மை நிலையையும் அடிமுடியறியும் நெறியையும் உணர்த்தி, வீண் தவம் புரிவோய், காலையில் கண் விழித்தவுடன் எழுந்திருந்து கடன்களை முறைப்படி முடித்துக் கொண்டு இதனைச் சிந்தித்தலைச் செய்க; யாவும் இனிது விளங்கும் என அறிவித்தருள்வாயாக. எ.று.

தாண்டவம் - கூத்து; திருக்கூத்தாடும் பெருமானைத் "தாண்டவனே" எனப் புகழ்கின்றார். அருட்பொது, அருள் ஞானசபை. சபையைப் பொது வென்பது வழக்கு. "தில்லையுட் கோலமார் தரு பொது" (கீர்த்தி) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. ஒப்பு வேறு கூறலாகாத முதல்வனாதல் விளங்கத் "தனி முதல்" என்கிறார். தடங் கடல் - பெரிய கடல். நெடுந்தகை - மிக்க தகுதி கொண்டவன். "நெடுந்தகை நீ என்னை யாட்கொள்ள யான் ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேன்" (நீத்தல்) என மணிவாசகனார் உரைப்பது காண்க. சங்கரன் - சுகத்தைச் செய்பவன். உனக்கும் எனக்குமுள்ள உறவு ஆண்டானுக்கும் அடிமைக்குமுள்ளதாமாயின், யான் வேண்டுவதை அருளுக என்பாராய், "ஆண்டவன் நீ யாகில் அடியனும் நானாகில் அருளுடையாய்" எனக் குறித்து மொழிகின்றார். இறை - ஞானாசிரியன். நீண்டவன் - திருமால்.

வாமனனுய்த் தோன்றித் திரு விக்கிரமனுய் உயர்ந்தமையின், திருமாலுக் கது பெயராயிற்று. மனத்தாலும் நினைத்தற்கு அரிதாம் என்பதுணர்த்தத் "தீண்டரிதாம் பொருளின் நிலை" என்று உரைக்கின்றுர். "மனத்தினும் தீண்டேன்" (திருநீலகண்டர்) எனச் சேக்கிழார் கூறுவர். பொருளின் நிலை - சிவபரம் பொருளின் பரமாம் தன்மை. அடி முடியின் நெறியாவது, சிவப்பேற்றுக்குரிய ஞான நெறி. நிலை யுணர்ந்து அடையும் நெறியை முற்றவும் கண்டு சிந்திப்பாயாக என்றும், அதுதான் திருவருள் ஞானத்தை உனக்கு விளங்கச் செய்யும் என்றும் சொல்லுவாராய், "தீண்டரிதாம் பொருளின் நிலை காட்டி அடி முடியின் நெறி முழுதும் காட்டிக் காலையில் எழுந்து புரிதி, இது விளங்கும் எனப் புகல்வாய்" என்று கூறுகின்றுர். பயனில்லாத முயற்சி செய்பவன் வீண் தவன். ஞான முயற்சிக்குரிய காலத்தை விளக்குதல் வேண்டிக் "காலையில் நீ விழித்தவுடன் எழுந்து விதி முடித்துப் புரிதி" எனவும், புரிந்தால் தவப் பயன் என்பார், "இது விளங்கும்" எனவும் இயம்புகின்றுர். "தானக் கமலத் திருந்த சதுமுகன் தானக் கருங்கடலூழித் தலைவனும், ஊனத்தினுள்ளே உயிர்போலுணர்கின்ற, தானப் பெரும்பொருள் தன்மைய தாமே" (377) எனத் திருமந்திரக் கருத்தையுட்கொண்டது.

இதனுல், சிவஞானப் பேற்றுக்குரிய பொருளும் நெறியும் காலமும் பயனும் உரைத்தவாறும். (1)

2802. திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனுல்
திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன்இச் சிறியேன்
பெருநெறிஎன் உளத்திருந்து காட்டியநாள் அறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத உளவைஎலாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருணெறிதந் தருளும்மறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே.

உரை : ஞானத் தெளிவை நல்கும் மறையாகிய சிலம்பணிந்த திருவடியை யுடையவளான சிவகாமியம்மை காணப் புரியும் திருக்கூத் தாடும் தெளிந்த அமுது போல்பவனே, திருநெறியாவதைத் தமிழ் மறையாகிய திருக்கடைக் காப்பினுல் உணரலாம் என அறிவித்த நாளில் நான் அறியேனுயினேன்; அதற் கெனது அறிவின் சிறுமை காரணம்; என்னுடைய மனத்தின்கண் இருந்து காட்டியபோதுதான் பெருநெறியாவது இஃது என்றும், இதுவே தவறில்லாத தெய்வ மறையாம் என்றும் பின்பே உணர்ந்து தெளிவுற்றேன். எ.று.

ஆன்மாக்களுக்கு ஞானம் தருவது சிவமும், அதனை யெண்ணித் தெளிவது சத்தியு மாதலால், "தெருணெறி தந்தருளும் மறைச் சிலம் பணிந்த பதத்தாள் சிவகாம வல்லி" எனத் தெரிவிக்கின்றுர். சிவ காமவல்லி - சிவத்தின்பால் காதலுற்றுக் கொடி போல் பிரியாது பெண்ணுருவில் விளங்கும் சிவ சத்தியாகிய உமாதேவி. அவள் திருவடியில் அணிந்த சிலம்பின் ஒலி வேத வொலி என்றற்கு "மறைச்

சிலம்பணிந்த பதத்தாள்'' என்றும், அவளுடைய திருவடியே சிவஞானப் பொருளைத் தெளிந்து கொள்ளற்கு வேண்டும் ஒளி யருளுவ தென்பார், "தெருள் நெறி தந்தருளும் மறைச் சிலம்பணிந்த பதம்'' என்றும் அறிவுறுத்துகின்ருர். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டுக்களைப் பெரியோர் ''திருக்கடைக் காப்பு'' என வழங்கினராதலால், "மெய்த் தமிழ் மறையாம் திருக்கடைக் காப்பு'' எனத் தெரிவிக்கின்ருர். இவ்வாறே திருநாவுக்கரசர் பாடியவற்றைத் திருப்பாட்டு எனவும், சுந்தரர் பாடிய வற்றைத் தேவார மெனவும் வழங்கினர். சிவத்தைப் பாடும் பாட்டுக் களைத் திருநெறித் தமிழ் என ஞானசம்பந்தர் உரைத்தலால், ''திருநெறி மெய்த் தமிழ்மறை'' என்று மேற்கொண்டுரைக்கின்ருர். நான்மறை காட்டும் வைதிக நெறியை, ''அருநெறி'' என்றும், தமிழ்மறை யுணர்த்தும் நெறியைத் "திருநெறி'' என்றும் விளங்க, ''அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர் மேய, பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை, ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த, திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே'' (பிரம) என்பது காண்க. மேலோட்டமாகப் படிப்பவரும் கேட்பவரும் "திருநெறிய தமிழ்'' என்பதன் கருத்தை ஊன்றி யெண்ணுவ தில்லை யாகலின், "திருக்கடைக் காப்பதனுல் திருவுளம் காட்டிய நாளில் தெரிந்திலன்'' என்று கூறுகிருர். திருவுளம் - உள்ளத்திற் கிடக்கும் ஞானக் கருத்து. "சைவ மெய்த் திருவின் சார்வே பொருள்'' (நீலகண்ட) எனச் சேக்கிழார் பெருமான் திருவை விளக்கம் செய்வது காண்க. தலம், தீர்த்தம், மூர்த்தம் என்ற மூன்றையும் முறையே சென்றும் மூழ்கியும் கண்டும் தொழுது வணங்கும் நெறி ''பெருநெறி'' என்றும், சைவ மெய்ப்பொருளான சிவத்தை ஓதியும் உணர்ந்தும் ஒழுகும் நெறி "திருநெறி'' யென்றும் சான்ருேர் கூறுப. பெருநெறி தெரிந்து பாடலுற்ற போது ஞானசம்பந்தர் முதலாய பெருமக்கள் பாட்டுக்கள் "தெய்வமறையெனப் பின்பு உணர்ந்தேன்'' என வுரைக் கின்ருர். ஒருநெறி, ஒன்றுகிய சிவபரம் பொருளை ஒன்றென் றுணர்ந்து உள்ளமொன்றி நினைந்தும் சொல்லியும் வழிபட்டும் ஒழுகுதல். இவ்வொரு நெறிக்கண் நின்ற எனக்கு அதன் தன்மையைத் தெளிவுற உரைத்த போது, இதுவரை யுணரப்படாமல் இருந்த ஒள்ளிய கருத்துக்களை ஒருங்கே நான் தெளிந்து கொண்டேன் என்பாராய், ''ஒரு நெறியில் எனது கரத்து உவந்தளித்த நாளில் உணராத உளவை யெலாம் ஒருங்கு உணர்ந்து தெளிந்தேன்'' என்று இசைக்கின்ருர். கரத்தளித்தல் - கைம் மேற் கொடுத்தல்; அஃதாவது தெள்ளிதாக வுணர வுரைத்தலைக் குறிப்பதாம். உணர்வு வடிவிலோ உரை யுருவிலோ உள்ளத்துள் மறைந்து கிடக்கும் நெறி முறைகள் உளவு எனப்படுகின்றன; துப்பறிதல், துப்புரைத்தல் என வழங்கும்; துப்பு என்ருலும் பொருந்தும். சிவத்தின் திருவருள் ஞானப் பேற்றுக் கமைந்த நுண்ணிய வழி வகைகளை யுணர்ந்து தெளிவுற்றேன் என்பது கருத்து.

இதனுல், தெய்வமறை இது வென்று உணர்ந்தபோது பல வுண்மைகள் தெளிவாயின என வெளிப்படுத்தவாரும். (2)

திருச்சிற்றம்பலம்

22. சிவ சிதம்பர சங்கீர்த்தனம்

அஃதாவது சிவபெருமான் எழுந்தருளும் சிதம்பரத்தின் பெருமையைச் சொல்லுவதாம். சங்கீர்த்தனம் - சொல்லுதல்; புகழ்ந் தோதுதலுமாம். இதன்கண் பாட்டுத் தோறும் சிவ சிதம்பரம் என்பது மகுடமாதல் காண்க. சிற்றம்பலம் என்ற பழந்தமிழ்ச் சொல் சிதம்பலமாகிச் சிதம்பரமாகித் திரிய, வட மொழியாளர் அதனை வட சொல்லாகக் கொண்டு சிதாகாசம் ஞானகாசம் என உரைக்க லுற்றனர். வடமொழி செல்வாக்குப் பெருகவும் சிற்றம்பலம் மறைந்தது; சிதம்பரம் மேனின்று வழங்கி வருவதாயிற்று.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2803. உலக முஞ்சரா சரமும் நின்றுநின்
றுலவு கின்றபேர் உலகம் என்பதும்
கலகம் இன்றிஎங் கணுநி றைந்தசிற்
கனம்வி ளங்குசிற் ககனம் என்பதும்
இலக ஒன்றிரண் டெனல்அ கன்றதோர்
இணையில் இன்பமாம் இதயம் என்பதும்
திலகம் என்றநங் குருசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.

உரை : உலகங்களும் அவற்றிலுள்ள சரமும் அசரமுமாகிய பொருள்களும் தோன்றி நின்று உலவும் பேருலகம் எனப்படுவதும், கலக்கமின்றி எங்கும் நிறைந்த அறிவுப் பெருமையால் விளக்கமுறும் ஞானகாசம் எனப்படுவதும், விளக்கத்தால் ஒன்றென்றும் இரண்டென்றும் கூறுதற் காகாத ஒப்பற்ற இன்ப நிலையமாகிய இதயத்தானம் எனப்படுவதும் இவற்றிற் கெல்லாம் திலகமாவ தென்று பேசப்பட்ட குரு முதல் சிவ சிதம்பரம் சிவ சிதம்பரம் என்று புகழ்ந் தோதப்படுவதாம். எ.று.

உலகங்கள் பலவாயினும் ஒருமை வாய்பாட்டால் "உலகம்" எனத் தொகுத்துரைக்கின்றார். சரம் - இயங்கும் பொருள். அசரம் - நிலையாய பொருள்; இவ்விரண்டையும் இயங்குதிணை நிலைத்திணை என்பதுமுண்டு. தோன்றுதலும் ஒடுங்குதலுமுடைய இயல்பினவாயினும், எப்போதும் பிரவாக அனாதியாய்க் காணப்படுதலால், "நின்று நின்று உலவுகின்ற பேருலகம்" எனப்படுவது சிதம்பரம் என்பதாம். கலகம்- நிலையின்மையால் உண்டாகும் கலக்கம். நிறைவின்மையும் கலக்கத்துக்கு ஏதுவாம் என அறிக. கலங்கியது கலக்கமாகிக் கலக மெனவும் வழங்கும்; ஈண்டு நிறைவின்மை தோற்றுவிக்கும் கலகத்தின் மேல் நின்றது. சிற்கனம் -

அறிவுப் பெருமை. சித்கனம் - சிற்கனமாவது வடநூற்புணர்ப்பு; வருமிடங்களிலும் இதனையே கூறிக் கொள்க. ககனம், ஆகாயம் வானமுமாம். சிதம்பரம் என்பது சித் அம்பரம் எனப் பிரிகிற போது' அம்பரம் ஆகாயத்தைக் குறித்தலால், சிற்ககனம் சிதாகாயம், சிதம்பரம் என்று பொருள்படுகிறது. ஞானநந்தம், ஒன்றெனவும் இரண்டெனவும் எண்ணற் காகாததாகலின், "இலக வொன்றிரண்டு எனல் அகன்றதோர் இணையில் இன்பம்" எனக் கூறுகின்றார். இலகும் எனற்பாலது எதுகை நோக்கி "இலக" என வந்தது. இணை - ஒப்பு. ஞான வின்பத்துக்கு நடு நாயகம் என்பாராய், "இன்பமாம் இதயம்" என வுரைக்கின்றார். திலகம் - மேலாய பொருள். துன்பவிருளைப்போக்கி இன்ப ஞான வொளி நல்குவதால் சிதம்பரம் நமக்குக் குருவாதல் விளங்க, "நம் குரு சிதம்பரம்" எனச் சொல்லுகின்றார். சிவ சிதம்பரம் - சிவஞான ஆகாயம். ஞானகாயத் தலைவனாதலாற் சிவனைச் சிவ சிதம்பரம் எனப் புகழ்கின்றார் எனினும் அமையும்.

இதனாற் சிதம்பரத்தின் நலம் பாராட்டியவாறும். (1)

2804. வரமு றுஞ்சுதந் தரசு கந்தரும்
மனம டங்குசிற் கனந டந்தரும்
உரமு றும்பதம் பெறவ ழங்குபேர்
ஒளிந டந்தரும் வெளிவி டந்தரும்
பரமு றுங்குணங் குறிக டந்தசிற்
பரம மாகியே பரவு மாமறைச்
சிரமு றும்பரம் பரசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.

உரை: மேன்மையுடைய குணம் குறிகளைக் கடந்த பரம ஞானமாகித் துதிக்கின்ற மறைகளின் முடியில் நிலவும் பரம்பர சிதம்பரம் சிவ சிதம்பரமாகும்; அதனை உணர்ந்தோதுவார்க்கு வேண்டும் வரங்களெல்லாம் எய்தும்; சுதந்திரமான சுகவாழ்வு உண்டாகும்; மனம் ஒடுங்குதற் கேதுவாகிய ஞானப் பெருமை கொண்ட திருக்கூத்தாடும் வன்மை சான்ற சிவ பதத்தைப் பெற ஒளி வழங்கும் ஞானக் கூத்தைக் காண்பிக்கும்; சிதாகாசப் பெருவெளியையும் எய்துவிக்கும். எ.று.

பரம் - மேன்மை. குறி - பெயர். பொறி புலன்கட்குக் காட்சிப்படும் குணங் குறிகளையுடைய பொருளன்று பரம்பொருள் என்றலின், "குறி குணங் கடந்த பரமம்" என எடுத்தோதுகின்றார். பரம்பொருள் எனின் மேலாய பொருள் என்றொழிதலின், ஞானமேயாய பரம்பொருள் எனச் சிறப்பித்தற்குச் "சிற்பரமமாகி" எனத் தெளிவிக்கின்றார். எல்லோராலும் போற்றப்படுகின்ற இயல்பு பற்றி மறைகளை, "பரவு மாமறை" எனப் பகர்கின்றார். மாமறைச் சிகரம் - வேதங்களின் உச்சி. வேதங்களால் அறியப் படாது மேலோங்கி நிற்பது விளங்க, "மாமறைச் சிரமுறும் பரம்பரம்" எனத் தெரிவிக்கின்றார். பரம்பர சிதம்பரம் - மேன் மேலாகிய சிதம்பரம். "வேதங்கள் ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (சிவபு) எனத் திருவாசகம் முதலிய அருண் மறைகள் ஓதுவதும் இக் கருத்தை விளக்குவது காண்க. சிவ சிதம்பரம் என்று ஓதுவார் பெறும்

பயனைக் கூறலுற்றவர் விரும்பும் வரங்களெல்லாம் பெறுவர் என்றற்கு, "வரமுறும்" எனவும், பிறர்க் கடிமையாகாது தனி நின்று நடத்தும் வாழ்வின் பயனுகிய சுமத்தைச் "சுதந்தர சுகம்" எனவும் இயம்புகின்ருர். பிறர் உவப்பனவற்றை அவர் குறிப்பறிந்து செய்து வாழ்வது சுதந்தர வாழ்வாகாது என்க. துன்பத்திற் கேதுவாகிய மன வடக்கம் இல்வழிப் பேரின்ப ஏதுவாகிய ஞானக் காட்சி எய்தாமை யுணர்த்துவாராய், "மன மடங்கு சிற்கன நடந்தரும் பதம்" என்று சிறப்பிக்கின்ருர். ஞான நடனம் ஊன நடனத்திலும் பெருமை யுடையதாகலின், "கன நடந்தரும்" என்கின்ருர். உரம் - வன்மை. திருவடிப் பேறு எய்துதற்கு இன்றியமை யாது வேண்டுவது ஞான வொளியாதல் யாவரும் அறிந்ததாகலான், "பதம் பெற வழங்கும் பேரொளி நடம்" என்கின்ருர். திருவடியைக் காண்டற்கு வேண்டப்படுவது, ஞானக்காட்சி நலமாதலான், அது தானும், அவன் அருளாலேயே பெறலாவ தென்று பெரியோர் உரைப்பது கொண்டு, "பதம் பெற வழங்கு பேரொளி" யென்று பேசுகின்ருர். வெளியிட மென்பது தத்துவாதீதப் பெருவெளி. இதனைச் சிதாகாசப் பெருவெளி யென்றலும் உண்டு. சேக்கிழார் பெருமான், "சிற்பர வியோமம்" எனச் செப்புவர். (2)

2805. நித்தி யம்பரா பரநி ராதரம்
நிர்க்கு ணஞ்சதா நிலய நிட்களம்
சத்தி யம்கணு கனமி குந்ததோர்
தற்ப ரம்சிவம் சமர சத்துவம்
வித்தி யஞ்சுகோ தயநி கேதனம்
விமலம் என்றுநால் வேத முந்தொழும்
சித்தி யங்குசீற் கனசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.

உரை : சிவ சிதம்பரம் என்றும் உள்ளது; எல்லாவற்றிலும் மேலுங் கீழுமாயது; யாதோர் ஆதாரமு மில்லாதது; எப்பொழுதும் நிலையா யிருப்பது; உருவ மில்லாதது; உண்மையானது; பெரியதிற் பெரியதும் சிறியதிற் சிறியது மாவதொரு தற்பரம்; சிவம்; சமரசத் தன்மையுடையது; வித்தை வடிவமானது; எல்லாச் சுகங்களும் தோன்றும் இடமாவது; மலமில்லாதது என்று நான்மறைகளும் தொழுகின்ற, ஆன்மாக்களாற் சூழப் பெற்ற பெரிய ஞான நிலையமாம் சிதாகாசமாகும். எ.று.

மேன்மைக்கும் கீழ்மைக்கும் எல்லையாவது சிவம் என்றற்குப் "பராபரம்" எனப்படுகிறது. உலகிலுள்ள உயிர்கட்கு உலகம் போலவும், ஆன்மாக்கட்குச் சக்தி போலவும் ஆதார முடையதன்று என்றற்கு, "நிராதரம்" எனப்படுகிறது. குண தத்துவத்தைக் கடந்ததாகலின், "நிர்க்குணம்" எனப்படுகிறது. நிட்களம் - உருவமில்லாதது. கணுகனம் - கனம் அகனம் எனப் பிரியும். பெருமையும் சிறுமையும் எனப் பொருள் படும். தற்பரம் - தனக்குத் தானே மேலாவது. சமரசத்துவம் - எல்லாவற்றையும் ஒப்ப நோக்குந் தன்மை. வித்தியம் -வித்தை வடிவானது. நிகேதனம் - இடம். நிலயம் என்றுமாம், சித்து - ஆன்மாக்கள். சித்தியங்கு சிதம்பரம் என்பதற்கு எல்லாச் சித்துக்களை யும் இயக்கும் முதல்வன் இருக்கும் சிதம்பரம் என்று கூறுவதுண்டு. (3)

2306. அருள்அ ளித்துமெய் அன்பர் தம்மைஉள்
அங்கை நெல்லிபோல் ஆக்கு கின்றதும்
பொருள்அ ளித்துநான் மறையின் அந்தமே
புகலு கின்றதோர் புகழ்அ ளிப்பதும்
வெருள்அ ளித்திடா விமல ஞானவான்
வெளியி லேவெளி விரவி நிற்பதாம்
தெருள்அ ளிப்பதும் இருள்கெ டுப்பதும்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.

உரை : சிவ சிதம்பரம் மெய்யன்பர்களுக்கு அருள் ஞானம் தந்து, அங்கையின் நெல்லிக் கனி போல் அவர்களைச் சிவமாக்கிக் காட்டுவதும், வேதங்களின் முடிந்த பொருளை யறிவித்து, அறிந்துரைப்பார்க்குப் புகழினை யுண்டாக்குவதும், மயக்கத்தைத் தராத தூய ஞான வான வெளியில் வெளியாய் நிற்பதும், ஆன்மாக்கட்கு மல விருளை நீக்கி, ஞான வின்பத் தெளிவை யருளுவதுமாகும். எ.று.

மெய்யன்பர்கள் திருவருளாகிய சிவஞானம் பெற்றுத் தாம் சிவமாகிய தன்மையைத் தாமே இனிது காணச் செய்தலின், "தம்மை உள்ளங்கை நெல்லிக் கனி போல் ஆக்குகின்றதும்" என நவில்கின்றார். ஞானத்தாற் சிவ மாக்காவழி, அங்கை நெல்லிக் கனி போற் சிவத்தைக் காணலாகாது என்பது கருத்து. "சிவ மாக்கி யெனை யாண்ட அத்தன்" (அச்சோ) என மணிவாசகரும் கூறுவது காண்க. வேதத்தின் முடிபொருளை, இறைவன் உணர்த்தினாலன்றி, யாவராலும் உணர லாகாமையின், "பொருள் அளித்து" எனப் புகல்கின்றார். விமல வானவெளி, மல மறைப்பில்லாத தெளிந்த ஞானாகாசமாதலால், மயக்கத்துக்கு இடமில்லாமை பற்றி, "வெருள் அளித்திடா விமல ஞான வான்வெளி" என விளம்புகின்றார். தெருள் - தெளிவு, விளக்கம். ஒளி விளக்கமும் இருள் நீக்கமும் உடன் நிகழ்ச்சியாதலால், "தெருள் அளிப்பதும் இருள் கெடுப்பதும்" என இரண்டையும் சேரக் கூறுகின்றார். (4)

2307. பெத்த முஞ்சதா முத்தி யும்பெரும்
பேத மாயதோர் போத வாதமும்
சுத்த முந்தெரு வித்த முந்தரும்
சொருப இன்பமே துய்க்கும் வாழ்க்கையும்
நித்த முந்தெரிந் துற்ற யோகர்தம்
நிமல மாகிமெய்ந் நிறைவு கொண்டசிற்
சித்த முஞ்செலாப் பரம ராசியம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.

உரை : பெத்தம் முத்தி என்பனவும் மிக்க வேறுபாடுடையதாகிய ஞான வாதமும் சுத்த நிலையு மாகியவற்றை மறுக்காமல் ஏற்றுப் போற்றும் ஞானவான்களாகிய சீவன் முத்தர்களின் சொரூப இன்பம் நுகரும் வாழ்க்கையும், நாளும் கண்டின்புறும் யோகிகளின் தூயதாய் உண்மை ஞானமே நிறைந்த ஞான சித்தமும் காண வொண்ணாத பரம ரகசிய மாவது சிவ சிதம்பரம். எ.று.

பெத்த நிலை - உலகில் உடம்பொடு கூடி பெறுவன பெற்று நுகர்வன நுகர்ந்து வாழும் நிலை. சதாமுத்தி- சீவன் முத்தராய்ச் சிவஞான வின்பம் துய்த்திருக்கும் நிலை. இவற்றின் வேறுபட்டுப் பலவேறு நிலையில் நின்றோர் கூறும் முத்தி வாதம் "பேதமாயதோர் போத வாதம்" எனப்படு கிறது. சுத்த நிலை - வாத பேதமற்ற தூய சிவஞானிகள் நிலை. தெறுதல், ஈண்டு மறுத்தல் மேற்று. வித்த முத்தர் - சீவன் முத்த நிலையில் உயர்ந்தவர். முத்தி ஞான பேதங்களைத் தழுவிக் கொண்டு சிவத்தின் உண்மைச் சொரூப நிலையிற் பெறலாகும் இன்பத்தில் இருந்து வரும் வாழ்வு "சொரூப வின்ப மொன்றே துய்க்கும் வாழ்க்கை" யாம். இம்முத்தி யின்ப வகைகளை நாளும் ஓதி யுணர்ந்து சிவ யோகத்தில் இருப்பவர் "நித்தமும் தெரிந்துற்ற யோகர்". இவர்களைச் சொரூபானந்தர் என்பது முண்டு. அவர்பால் மலங்களெல்லாம் கழன்ற தூய்மையும் உண்மை ஞான நிறைவும் பொருந்திய சித்தம் உள தென்றாலும், அதனாலும் எட்ட முடியாத பெருமை யுடையது சிவ சிதம்பரம் என்பார், "யோகர்தம் நிறைவு கொண்ட சிற்சித்தமும் செலாச் சிவ சிதம்பரம்" என்று தெரிவிக்கின்றார். பரம ரகசியப் பொருள் பரம ராசியம்.

இவ்வாற்றால் சிவ சிதம்பரத்தின் பொரு ணலமும் மாண்பும் கூறியவாறும். (5)

திருச்சிற்றம்பலம்

23. சிவகாமவல்லி துதி

அஃதாவது, தில்லைச் சிவகாமி யம்மையைத் துதித்துப் பாடும் சொன்மாலையாம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2808. அரங்காய மனமாயை அளக்கர் ஆழம்
அறியாமல் காலிட்டிங் கழுந்து கின்றேன்
இரங்காயோ சிறிதும்உயிர் இரக்கம் இல்லா
என்மனமோ நின்மனமும் இறைவி உன்றன்
உரங்காணும் அரசியற்கோல் கொடுங்கோல் ஆனால்
ஓடிஎங்கே புகுந்தெவருக் குரைப்ப தம்மா
திரங்காணப் பிள்ளைஎனத் தாய்வி டாளே
சிவகாம வல்லி எனும் தெய்வத்தாயே.

உரை: சிவகாமி என்று புகழப்படும் தெய்வத் தாயே, தீவு போன்ற மனத்தைச் சூழ்ந்துள்ள மாயை யென்னும் கடலின் ஆழம் தெரியாமல் இறங்கி அதனுள் அழுந்துகின்றேனாதலால், என்பால் இரங்கியருள மாட்டாயோ? பிற வுயிர்களின்பால் சிறிதும் இரக்கமில்லாத என்னுடைய மனம் போல்வதா நினது திருவுள்ளம்? இறைவியாகிய திண்மை பொருந்திய உனது அருளரசை நடத்தும் செங்கோல் கொடுங் கோலாயின் யான் எங்கே போய் எவரிடம் என் குறையை யுரைப்பேன்; நிலையறியாப் பிள்ளை யென்பது கொண்டு பிள்ளையைத் தாயர் கைவிடுவ தில்லை - காண். எ.று.

சிவகாம வல்லி, சிவத்தின்பால் பெருங் காதலுற்றுப் பிரியா துறையும் கொடிபோன்ற உமையாகிய நங்கை. காமர் வல்லி என்பது காமவல்லி என வந்ததாகக் கொள்வதுமுண்டு. வல்லி - பசுமையான கொடி; இக்கொடி போல்வதால், சிவகாமவல்லி என்று கூறுகின்றார். இதனையே சுருக்கிச் சிவகாமி என்று நாட்டவர் வழங்குவர்; சிவத்தைக் காமுற்றிருப்பவள் என்பது இதன் பொருள். உலக மக்களினத்துத் தாயின் வேறுபடுத் தற்குத் "தெய்வத் தாயே" எனக் கூறுகின்றார். இதற்கே, மக்களுயிர்க்கே யன்றித் தெய்வங் - கட்கும் தாயாகியவள் என்றும் பொருள் காண்பர். அரங்கம் - நாற்புறமும் நீர் சூழ்ந்த நிலம்; ஆற்றிடையும் கடலிடத்தும் காணப்படும் இதனைத் தீவு எனவும், தீவ மெனவும் சான்றோர் வழங்குவர். அளப்பரிய மாயையினிடையே மனம் இருத்தலால், மாயையைக் கட லென்றும், மனத்தை அரங்கமென்றும் உருவகம் செய்கின்றார். அளக்கர் - கடல். அளப்பரிய ஆழமும் அகலமும் உடைமைபற்றி கடல், அளக்கரெனப்

படுகிறது. நீர் நிலைக்கண் இறங்குவோர் ஆழம் காணுமல் இறங்குதல் கூடாது; இறங்கின் அழுந்தித் துன்புறுவர் என்பது குறிப்பு; யானும் அவர்களைப் போல் ஆழ மறியாமல் இறங்கி அழுந்தி வருந்துகிறேன் என்பாராய், "ஆழ மறியாமற் காலிட்டு இரங்கி அழுந்துகின்றேன்" என வுரைக்கின்ருர். "கரை நின்றவர் கண்டு கொளென்று சொலி நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்" (அதிகை) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. எனது துன்ப நிலை கண்டும் மன மிரங்காம லிருக்கின்ருயே என வருந்துகின்ருராதலால், "இரங்காயோ" என்று கூறுகின்ருர். பிறர் துயர் கண்டு சிறிதும் இரங்காத பண்பு எனக்குத்தான் உண்டு; உனக்குமா மனம் இரங்குவ தில்லை என முறையிடுபவர், "சிறிதும் உயிர் இரக்கமில்லா என் மனமோ நின் மனமும்" எனக் கேட்கின்ருர். இறைவி, எங்கும் பரந்து இருப்பவள். எங்கும் இருந்து எவ்வுயிர்க்கும் இரங்கி அருட் செங்கோல் நடத்துபவளாகிய நீ என்பால் இரக்கம் கொள்ளாமை கொடுமை என்பாராய், "உன்றன் அரசியற் கோல் கொடுங்கோ லானுல்" என்றும், உன்னுடைய செங்கோல் கோடுமானுல், எங்கோடி யுயிர் பிழைப்பேன் என்பாராய், "ஓடி எங்கே புகுந்து எவர்க்கும் உரைப்பதம்மா" என முறையிடுகின்ருர்.

இதனுல், நினது அருணிழ லொழிய எமக்கு உறுதி தரும் புகலிடம் இல்லை யென்பதாம். *(1)*

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2309\. தனத்தால் இயன்ற தனிச்சபையில்
நடிக்கும் பெருமான் தனக்கன்றே
இனத்தால் உயர்ந்த மணமாலை
இட்டுக் களித்த துரைப்பெண்ணே
மனத்தான் விளங்கும் சிவகாம
வல்லிக் கனியே மாலொடும்ஓர்
அனத்தான் புகழும் அம்மேஇவ்
வடியேன் உனக்கே அடைக்கலமே.

உரை : பொன்னுல் வேயப்பட்டுள்ள ஒப்பற்ற சபையின்கண் கூத்தாடும் சிவபெருமானுக்கு அந்நாளில் மாலையினங்களில் உயர்வுடைய மணமாலையை யணிந்து மகிழ்ந்த துரை மகளே, மனச் செம்மையால், விளக்கமுறும் சிவகாம வல்லியாகிய - கனியே, திருமாலும் பிரமனும் புகழ்ந்து போற்றும் அம்மையே, இந்த அடியவனுகிய யான் உனக்கு அடைக்கலம், காண். எ. று.

பொன்னேடு வேய்ந்தமையால், தில்லையம்பலம், "தனத்தால் இயன்ற தனிச்-சபை" என வுரைக்கப்படுகிறது. தனம் - பொன். இதனைப் பொற் சபை யென்பதும் இது பற்றியே என்க. பொன்மாலை, மலர்மாலை, சொன்மாலையென மாலையினம் பலவாயினும் மகளிர் திருமணத்தில் கணவற்கு அணியும் மாலையின் உயர்வுடைய தில்லையாதலால்,

"இனத்தால் உயர்ந்த மணமாலே" என்று சிறப்பிக்கின்ருர். தனக் கணிவதிலும் தன் கணவற்குத் தானணிவது மிக்க உவகை தருவதால், "மணமாலே இட்டுக் களித்த துரைப் பெண்ணே" எனத் துதிக்கின்ருர். துரைப் பெண்- மேன்மை தங்கிய பெண். துரை- மேன்மை. "துரை மாண்டவா பாடித் தோணேக்க மாடாமோ" எனத் திருவாசகம் வழங்குவது காண்க. "சொர்க்க முற்றிருக்கும் துரைப் பெண்" எனப் பெரியோர் புகழ்வர். செம்மைப் பண்பால் மனத்துக்கு மாண்பு பெருகுவது கொண்டு "மனத்தால் விளங்கும் சிவகாம வல்லி" என்கிருர். அன்னத்தை யூர்தியாக வுடையனுதலால், பிரமனே "அனத்தான்" என்று கூறுகிருர். அன்னம் - அனம் என வந்தது, இடைக் குறை. அடியேன் அடைக்கலம், இட வழுவமைதி. "அடியேன் உன்னடைக்கலமே" (அடைக்) எனத் திருவாசகத் துள்ளும் வருவது காண்க.

இதனல் சிவகாம வல்லிக்கு அடைக்கலமாவ துரைத்தவாரும். (2)

2810, திருவே திகழுங் கலேமகளே
திருவே மலேயான் திருமகளே
உருவே இச்சை மயமேமெய்
உணர்வின் வணமே உயர்இன்பக்
குருவே ஆதித் தனித்தாயே
குலவும் பரையாம் பெருந்தாயே
மருவே மலரே சிவகாம
வல்லி மணியே வந்தருளே.

உரை: திருவருள் ஒளி நிலவும் கலேமகளே, திருமகளே, மலேயரையன் பெற்ற தலேமகளே, அழகின் உருவமே, இச்சை மயமானவளே, மெய்ஞ்ஞானத்தின் வடிவமே, உயிர்கட்கு இன்ப முணர்த்தும் குருமூர்த்தமே, ஆதி முதல்வியாகிய தாயே, சிவத்தின்கண் நிலவும் பராசத்தியாகிய பெரிய தாயே, நறுமணம் கமழும் தெய்வமலர் போன்றவளே, சிவகாம வல்லியே, மரகத மணியே, எளியேன் முன் எழுந்தருள்வாயாக. எ. று.

திருவே என்பது திருவருளேக் குறிப்பது. அருளொளி செய்யும் திருமேனியை யுடையவ ளென்றற்குத் "திருவே திகழும் கலேமகளே" எனச் சிறப்பிக்கின்ருர். திருவைத் திருவருள் ஞான மெனினும் பொருந்தும். பின்வரும் திருவென்பது செல்வம். திருமகள் என்றவிடத்துத் திரு தலேமை மேற்று. படைத்தல் முதலிய முத்தொழிற்குரிய மூர்த்தங்களாகிய பிரமன் திருமால் உருத்திரன் மூவர்க்கும் சத்தியாதலால் கலேமகள் முதலிய மூவரையும் எடுத்து மொழிகின்ருர். மகளிரினத்தில் தலேயாய அழகுடையவள் உமையம்மையாதலால், "உருவே" என்று உரைக்கின்ருர். இறைவனுக்கு இச்சா சத்தியாதல் பற்றி "இச்சை மயமே" என்று இயம்புகின்ருர். ஞான சத்தி யென்றற்கு "மெய்யுணர்வின் வணமே" என வுரைக்கின்ருர். வண்ணம் வணமென வந்தது. மெய்ஞ்ஞான இன்பப் பேற்றுக்கு நெறி காட்டி இயக்கும் தேவியாதலால், "உயரின்பக் குருவே" என்று உரைக்கின்ருர். இறைவனெடு கூடி உலகு

படைத்த முதலன்னை யாவது விளங்க, "ஆதித் தனித் தாயே" எனவும், பரம்பொருட்குச் சக்தி யெனப்படுதலாற் "பரை" எனவும் பகர்கின்றார். பராசத்தி இச்சை ஞானக் கிரியா சத்தியாய்ப் பிரிந்து இறைவனைத் தொழிற் படுத்தும் திறம் புலப்பட, "பரையாம் பெருந்தாயே" எனவும் இசைக்கின்றார். "பரந்த பராபரை ஆதி பரனது இச்சை பரஞானம் கிரியை பரபோக ரூபம் தரும் கருணை யுருவாகி" (சிவப்) இலங்குபவள் என உமாபதி சிவனார் உரைப்பது காண்க. திருமேனி ஞான மணம் கமழ்வது பற்றி, "மருவே மலரே" என்கின்றார். பார்வதியின் மேனி வண்ணம் மரகத மணி போல்வதால், "மணியே" என ஓதி மகிழ்கின்றார்.

இதனாற் சிவகாம வல்லியின் உருநலம் வியந்து கூறியுவாறும். (3)

2811. அருளே அறிவே அன்பேதெள்
அமுதே மாதர் அரசேமெய்ப்
பொருளே தெருளே மாற்றறியாப்
பொன்னே மின்னே பூங்கிளியே
இருளேய் மனத்தில் எய்தாத
இன்பப் பெருக்மே இவ்வடியேன்
மருளே தவிர்த்த சிவகாம
வல்லி நினக்கே வந்தனமே.

உரை: அருளும் அறிவும் தெளிந்த அமுதமும் ஆகியவளே, மகளிர்க்கு அரசியே, உண்மைப் பொருளே, தெளிவே யுருவானவளே, மாற்றுக் காண மாட்டாத பொன் போன்றவளே, மின்னற் கொடி போன்றவளே, அழகிய கிளி யொப்பவளே, மலவிருள் நிறைந்த மனத்தின்கண் பொருந்தாத இன்ப வெள்ளமே, அடியவனாகிய எனக்குள்ள மயக்கத்தைப் போக்கிய சிவகாம வல்லியே, நினகரு என் வணக்கம். எ.று.

அருள் அறிவு அன்பு முதலியன உருவ மில்லாத பண்புகளாதலால் அவற்றை உருவுடைய பண்பிகளாகக் கூறிக் காட்டும் மரபு பற்றி "அருளே அறிவே" என வுரைக்கின்றார். பெண்ணுலகுக்கே பெருந்தேவி யாதலின் "மாதர் அரசே" என்று கூறுகிறார். சத்தாகிய வுண்மைப் பொருளாகலின், "மெய்ப்பொருள்" எனவும், ஆர்வ மிகுதியால் மின்னே "பூங்கிளியே" எனவும் புகல்கின்றார். இயல்பாகவே உயிரின்கண் மலவிருள் படிந்திருத்தலால், "இருளேய் மனத்தில் எய்தாத இன்பப் பெருக்கே" எனப் போற்றுகிறார். மாயா மலச் சேர்க்கையால் மயக்க முண்டாதல் பற்றி, "மருள் தவிர்த்த சிவகாம வல்லி" எனத் துதிக்கின்றார். வந்தனம், வணக்கம்.

இதனால் ஆர்வ மொழிகளால் அம்மை சிவகாமியைப் பரவியவாறும். (4)

கட்டளைக் கலித்துறை

2812. தருவாய் இதுநல் தருணங்கண்
டாய்என்னைத் தாங்கிச்கொண்ட
குருவாய் விளங்கு மணிமன்ற
வாணனைக் கூடிஇன்ப
உருவாய்என் உள்ளத்தின் உள்ளே
அமர்ந்துள்ள உண்மைஎலாம்
திருவாய் மலர்ந்த சிவகாம
வல்லிநின் சீர்அருளே.

உரை: தளர்ந்த என்னைத் தாங்கி யருளும் குருபரனாகிய மணி யிழைத்த அம்பலவாணனைச் சேர்ந்து இன்ப வுருவாய் என் மனத்தின் கண் எழுந்தருளி, உண்மை ஞானப் பொருள் பலவும் எடுத்துரைக்கும் சிவகாம வல்லியே, நினது சிறப்புடைய திருவருளொளியை, இது நல்ல சமயமாவது கண்டு தந்தருளுவாயாக. எ.று.

இடர் வரினும் மெய் தளரினும், நோய் உறினும் வேண்டுவன தந்து உதவுபவன் குரு முதல்வன் என்பதனால், "என்னைத் தாங்கிக் கொண்ட குருவாய் விளங்கும் மணிமன்ற வாணன்" என்று புகழ்கின்றார். தாங்குதல் கூறவே, இடர் முதலிய ஏதுக்கள் பெய்துரைக்கப்படுகின்றன. மணி மன்றம் - மணிகள் இழைத்த பொற் சபை. சத்தியொடு சேர்ந்தாலன்றிச் சிவம் செயல்படாமை புலப்பட, "மன்ற வாணனைக் கூடி இன்பவுருவாய் என் உள்ளத்தினுள்ளே யமர்ந்து" என வுரைக்கின்றார். உள்ளம் - மனம். உயிர்க் குயிராதலின், உயிரை யுள்ள மென்கிறார் எனினும் பொருந்தும். உண்மையெல்லாம் எனப் பன்மையிற் கூறுதலால், உண்மை ஞானப் பொருள்கள் பலவாதல் அறியலாம். திருவாய் மலர்தல் - சொல்லுதல். சீர் அருள் - சிறப்புடைய திருவருள் ஞானம். உயிர் உடலொடு கூடி உணர்வு தெளிவுற நிற்கும் காலம் அரிதென்பது தோன்ற "இது நல்தருணம் கண்டாய்" என எடுத்தோதுகின்றார்.

இதனால், திருவருள் ஞானம் வழங்குதற்கு இது காலம் எனத் தெரிவித்தவாறும். (5)

திருச்சிற்றம்பலம்

24. சிவ பரம்பொருள்

அஃதாவது, சிவத்தின் பரமான் தன்மையை ஞானசிரியன் அறிவுறுத்தியதைத் தெரிவிப்பதாம். குணாதீதன், குணரகிதன், விசுவ வியாபி பரம்பரன் என வரும் திருவுருத்திரம், வீராகமம் முதலிய ஆகம வுரைகளை விளக்கிச் சிவ பரத்துவம் இதன்கண் வலியுறுத்தப்படுகிறது.

கலிநிலைத்துறை

2813. உருத்தி ரன்திரு மால்அயன் ஒப்பமுக் குணமாய்
இருத்தல் இன்றிஅக் குணங்களை என்றும்ஆண் டருளுங்
கருத்தன் ஆகையிற் குணேசன்அக் குணவிகா ரத்திற்
பொருத்த மின்மையன் ஆகையால் புகல்குண ரகிதன்.

உரை: பிரமன் திருமால் உருத்திரன் என்ற மூர்த்தம் ஒவ்வொன்றிற்கும் ஒப்பச் சத்துவம், தாமதம், இராசதம் என்ற மூன்று வகைக் குணமா யிருத்தலன்றி அந்தக் குணங்களை எப்போதும் இயக்கி யாளும் தலைவனுதலால், சிவன், குணேசன் என்றும், முக்குணமாய்ப் பிரிதலும் வேறுபடுதலும் சிவனுக்குப் பொருந்தாமையால் குணரகிதன் என்றும் கூறுவர். எ.று.

சத்துவ குணம், சுக வுருவும், தாமத குணம், மோக வுருவும், இராசதம் துக்கவுருவம் கொள்ளும் என்பர். இவற்றுட் சத்துவம் பிரமமூர்த்த மெனவும், தாமதம் திருமால் மூர்ந்த மெனவும், இராசதம் உருத்திர மூர்த்தம் எனவும் உரைப்பர். மூர்த்தி மூன்றுதலால், அவற்றிற்கு முறையே குணமும் மூன்றுகின்றன. "உருத்திரன் திருமால் அயன் ஒப்பக் குணமாய்" என்று கூறுகிறுர். "படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை" (எழுகூற்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. இக் கருத்தையே மாணிக்கவாசகர். "செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை மூவர் கோனுய் நின்ற முதல்வன் மூர்த்தி" (சதக) என மொழிகின்றுர். இவ்வாறு முக்குண மூர்த்தமாய்த் தொழிற் படுதலால் சிவனைக் குணமாகிய செல்வத்தை யுடைய தலைவன் என்று கூறுவ ரென்றற்கு "முக்குணமா யிருத்தலின்றிக் குணங்களை என்றும் ஆண்டருளும் கருத்தன்" என்றும், "ஆகையிற் குணேசன்" என்றும் இயம்புகின்றுர். இங்ஙனம் குணேசனுயினும், பல்வகைக் குணமாய் விரிந்து விகாரப் படுவதில்லை; "நிர்க்குணன்" எனப் புகன்றுரைக்கப்படு வது பற்றி, "அக்குண விகாரத்திற் பொருத்த மின்மையனுகையாற் குணரகிதன்" என விளம்புகிறுர். குணரகிதன் - குண மில்லாதவன். குணசகிதன் - குணங்களையுடையவன். குணங்களாய் விரிந்து விகாரப்

படுவது "நிர்விகாரி" என்ற வுண்மைக்கு மாறுபடுவதால் "குண விகாரத்திற் பொருத்த மின்மையன்" என விளக்குகின்ருர்.

இதனுல், சிவன் குணேசனுயினும் குணரகிதன் என விளக்கிய வாரும், (1)

2814. களங்க அக்குணம் கடந்திருத் தலில்குண தீதன்
வளங்கொ ளத்தகும் உலகெலாம் மருவிநிற் றலினுல்
விளங்கு விச்சுவ வியாபிஇவ் விசுவத்தை யாண்டு
துளங்கு ருநலந் தோற்றலின் விச்சுவ கருத்தன்.

உரை: களங்கம் பொருந்திய அக்குண வெல்லையைக் கடந்த வனுதலால் சிவன் குணுதீதனும்; வளம் பெற விளங்கும் உலகங்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் விளக்க முடைய விசுவ வியாபி யாவான்; இவை யனைத்தையும் ஆண்டருளி நலம் செய்வதால் விசுவ கருத்தனும். எ.று.

மிகுதலும் குறைதலும் ஏறுதலும் இறங்குதலுமாகிய குறை யுடைய வையாதலால், குணங்களை "களங்க வக்குணம்" என வுரைக்கின்ருர். பிரகிருதி மாயையின் காரியமாதல் பற்றி, "களங்கமுடைய குணம்" என மொழிகின்ருர் எனினும் பொருந்தும். குண தத்துவ எல்லைக்கு அப்பாலும் இருத்தலால் "குணுதீதன்" என்று குறிக்கின்ருர். உலகில் வளம் பலநாளும் பெருகா நிற்பதுபற்றி, "வளங் கொளத்தகும் உலகு" என ஓதுகின்ருர். உலகனைத்தினும் அணுப் புதைக்கவும் இடமின்றிக் குறைவறக் கலந்து நிற்பதால், சிவத்தை "விசுவ வியாபி" என்று விளம்பு கின்ருர். சிந்திப்பார் சிந்தனையில் இனிது தெரிவது கொண்டு "விளங்கு விசுவ வியாபி" என விசேடிக்கின்ருர். உலகனைத்தையும் முறை திறம் பாத படி இயக்கி வாழும் உயிர்கட்கு நலம் எய்த அருளுவதால், பரமனை "விசுவகருத்தன்" எனக் குறிக்கின்ருர். கர்த்தா என்னும் வடசொல் கருத்தன்" எனத் தமிழலாயிற்று.

இதனுற் குணுதீதனுகிய பரசிவன், விசுவ வியாபியும் விசுவ கர்த்தாவு மாவன் என விளம்பியவாரும். (2)

2815. வெய்ய னுய்உல கழித்தலின் விசுவசங் காரி
பைய மேலெனப் படுவன பலவற்றின் மேலாம்
ஐயன் ஆதலிற் பராபர னும்எனப் பட்ட
செய்ய னுகிய சிவபிரான் ஒருவனுண் டமரீர்.

உரை: தேவர்களே, வெம்மை யுடையனுய் உலகனைத்தையும் அழித் தொடுக்குவது கண்டு சிவனை, விசுவ சங்காரி என்பர்; மேலா யுள்ளவற்றிற் கெல்லாம் மேற் பொருளாதலால் பராபரனும் என்று பெரியோரால் புகழ்ந் தோதப்படும் அப் பரமன், செம்மைத் திருமேனியை யுடைய சிவபிரான்; அவன்என்றும் உள்ள ஒருவன் எனவுணர்ந்து அன்பு செய்வீர்களாக. எ.று.

உருத்திர மூர்த்தம், வெம்மையே உருவாயதாகலின், "வெய்யனுய்" எனவும், மாயையினின்றும் படைத் தளிக்கப்பட்ட உலகத்தை உயிர்கள் இளைப்பாறும் பொருட்டு மீள அம்மாயையில் ஒடுக்குதலால், அவனைச் சங்கார மூர்த்தி என்பது புலப்பட, "உலகழித்தலின் விசுவ சங்காரி" எனவும் விளம்புகின்ருர். காத்தலிற் போலத் தண்ணியனுயின், அழித்தற் ஞெழில் நடவாதென அறிக. மேன் மேலாகிய தலைவ னென்றற்கு "மேலா மையனுதலிற் பராபரன்" என்று கூறுகின்றனர். செய்யன்- சிவந்த மேனியை யுடையவன். செய்ய மேனியனே பட வரவக் கச்சையனே" (நீத்தல்) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. அமரர்- தேவர்கள். அமரீர் என விளியேற்றது. சாகாமை வேண்டிப் பல தெய்வங்களைப் பரவும் பண்பினராகலின் தேவர்களை நோக்கிக் கூறுகின்ருர்.

இதனுற் சிவபிரான் விசுவ சங்காரியும் பராபரனுமாகும் ஒருவன் என்பது உணர்த்தியவாறும். (3)

2816. உய்வ தாம்இது நம்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றிஆங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர்.

உரை: நாம் உய்தி பெற அமைந்த இவ்வுண்மை நமது குரு முதல்வன் அருளியதென்று சொல்லுகிறேன்; சைவசித்தாந்தம் வேதாந்தம் என்ற இரு முடிவிலும் ஐயமின்றித் தெரிவிக்கப்படும் பொருள் யாதோ, அதுவதுவாய் நிற்பது தெய்வமாகிய சிவ பரம்பொருள் எனத் தெளிய வுணர்வீர்களாக. எ.று.

உய்தி நல்குவது உய்வதாவது எனவந்தது. ஞானசிரியன் அறிவிப்பது "குருஆணை" யெனக் குறிக்கப்படுகிறது. வேதாந்தம் சித்தாந்தம் என்ற இரண்டினும் முடிந்த பொருளாகக் காண்பது முறையே பிரமப் பொருள் என்றும், பரசிவம் என்றும் கூறும் ஒன்றே என்றற்கு "அதுவது வாயது நமது தெய்வமாகிய சிவபரம் பொருள்" எனத் தெளிவு படுத்துகின்ருர். நைவது, வருந்துவது; ஐயத்தால் உளதாகும் வருத்தத்தின் மேற்று.

இதனுல், சித்தாந்த வேதாந்தமென்ற இருவகை நெறிகளின் முடிந்த பொருள் சிவமே எனத் தெரிவித்தவாறும். (4)

திருச்சிற்றம்பலம்

25. நடராச அலங்காரம்

அஃதாவது, தில்லைப்பெருமானின் திருக்கூத் தெழிலைச் செப்புவது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2817. இரண்டே காற்கை முகந்தந்தீர்
இன்ப நடஞ்செய் பெருமானீர்
இரண்டே காற்கை முகங்கொண்டீர்
என்னே அடிகள் என்றுரைத்தேன்
இரண்டே காற்கை முகம்புடைக்க
இருந்தாய் எனைக்கென் றிங்கேநீ
இரண்டே காற்கை முகங்கொண்டாய்
என்றார் மன்றில் நின்றாரே.

உரை : தோழி, பிச்சைத் தேவர் வந்த போது, மன்றில் நின்றார் - தில்லைச் சபையின்கண் நின்று; இன்ப நடஞ்செய் பெருமான் - உயிர்கட்கு ஞான வின்பம் நல்கும் நடனத்தைச் செய்கின்ற பெருமானாயினீர்; இரண்டே காற் கை முகம் தந்தீர் - இரண்டே கால்களையுடைய மக்களினத்துக்கு ஒரு முகமே தந்திருக்க; அடிகள் - அடிகளே. இரண்டே காற்கு ஐம்முகம் கொண்டீர் - இரண்டு கால்களும்ஐந்து முகங்களும் கொண் டிருக்கின்றீரே; என்னே என்றுரைத்தேன் - இஃது என்ன விபரீதம் என்று சொன்னேனாக; இரண்டே கால் - இரு காலும் ஊன்றி நின்று; கை முகம்புடைக்க - கையில் முகம் அழுந்திப் புடைக்கச் சாய்ந்திருந்தாய்; எனைக்கு என்று - எதற்காக என்று அவர் கேட்க; இரண்டே கால் கைமுகம் கொண்டாய் - அரையிற் கையூன்றிக் கொண்டு மலர்ந்த முகத்துடன் என்னை நோக்கினாய் என மொழிந்தார், காண். எ.று.

அம்பலத்தில் இறைவன் நின்றாடும் திருக்கூத்து மக்களுக்கு இன்ப வாழ்வு உண்டாகும் பொருட்டு டென்பது பற்றி, "மன்றில் நின்றார்" எனவும், "இன்ப நடஞ்செய் பெருமான்" எனவும் உரைக்கின்றாள். ஐம்முகன் - ஐந்து முகம்; ஈசானம், தற்புருடம், சத்தியோசாதம், அகோரம், வாமம் என ஐந்தாம் என்க. இரு காலில் நின்று கொண்டு ஒரு கையில் முகத்தை வைத்துக் கொண்டிருப்பதால் முகத்தசை கையில் அழுந்திப் புடைத்துத் தோன்றுவது கண்டு, "இரண்டே காற்கை முகம் புடைக்க இருந்தாய்" என்றும், அது வியப்பைத் தந்தமையின் "எனைக்கு" என்றும் கேட்கின்றார். என்னை எனற்பாலது "எனைக்கு" எனக்குச் சாரியை பெற்றது. கேட்க என ஒரு சொல் வருவிக்க.

இரண்டு கால் - அரை; அஃதாவது இடை. இடையிற் கையை யூன்றி முகம் மலர்ந்து நோக்கினமை விளங்க, "முகம் கொண்டாய்" என்று மொழிகின்ருர். இதற்கு வேறு பொருள் கூறுவாரு முண்டு.

இதனுல், பெருந்திணை நங்கையின் மனைக்குப் போந்த பிச்சைத் தேவரோடு அவள் முகம் புரிந்து இன்னுரை யாடியதாம். (1)

2818. இரண்டே காற்கை முகங்கொண்டீர்
என்னை உடையீர் அம்பலத்தீர்
இரண்டே காற்கை முகந் தந்தீர்
என்னை இதுதான் என்றுரைத்தேன்
இரண்டே காற்கை முகங்கொண்டிங்
கிருந்த நீயும் எனைக்கண்டே
இரண்டே காற்கை முகங்கொண்டாய்
என்ருர் தோழி இவர்வாழி

உரை : அம்பலத்தீர் - தில்லையம்பலத்தில் உள்ளவரே; என்னை யுடையீர் - என்னை அடிமையாக வுடையவரே; இரண்டே காற்கு - பிராணுயாமத்துக் குரிய பூரக இரேசகத்தின் பொருட்டு; ஐமுகம் கொண்டீர் - தலையாய யோக மவுன முகம் கொண்ட நீர்; இரண்டு கால் கை முகம் தந்தீர் - இரண்டே கால்களையுடைய விநாயக மூர்த்தத்துக்குக் கைபொருந்திய யானை முகத்தைத் தந்திருக்கின்றீர்; இதுதான் என்னை - இதற்குக் காரணம் என்னையோ என்று பிச்சைத் தேவரைக் கேட்டேனுக, இரண்டே கால் கை - இரண்டு கால்களும் இரண்டு கைகளும்; முகம் கொண்டு - ஒரு முகமும் கொண்டு; இங்கே இருந்த நீயும் - இவ்விடத்தே இனிதிருக்கின்ற நீ தானும்; எனைக் கண்டு - என்னைக் கண்டதும்; இரண்டு - உ; கால் - வ; கை - ; முகம் கொண்டாய் - பூத்த முகமுடைய வளாயினுய் இஃது என்னை; என்று - எனச் சொல்லுகின்ருர்; தோழி - ; இவர் வாழி - இவர் வாழ்வாராக. எ.று.

பூரகம் - யோக நெறியில் மூச்சுக் காற்றை யுள்ளிழுக்கும் முறை; இரேசகம் - மூச்சுக் காற்றை வெளி விடும் முறை. வாங்கிய காற்றை அடக்குவது கும்பகம் எனப்படும். பூரக ரேசகங்களின்றிக் கும்பகத்துக்குச் சிறப்பின்மையால் பூரக இ ரே ச க மே எடுத்துரைக்கப்படுகின்றன. யோகத்துக்கு மௌனம் தலையாயதாகலின், "ஐமுகம் கொண்டீர்" எனக் கூறுகிருள். ஐ - தலையாய யோகத்தின் மேற்று. அம்பலம் - தில்லைச் சிற்றம்பலம். உயிரினத்தை அடிமையாக வுடையனுதலால் "என் உடையீர்" என வுரைக்கின்ருள். "திருவின் மிக்கார் யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான்" (தடுத்) எனச் சேக்கிழார் கூறுவர். இரு கால்களே யுடைய விநாயக மூர்த்திக்கு நான்கு கால்களையுடைய யானையின் முகத்தைக் கொடுத்தது ஏன் என வினவுகின்ருளாகலின், ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. எம்மை வலம் வருதற்கு இரு காலும் தொழுதற்கு இரு கையும், போற்றிப் பரவுவதற்கு ஒரு முகம் கொண்டிருந்தும் நீ இங்கே இருந்தாய் என்பாராய், "இரண்டே காற் கை முகம் கொண்டு இங்கு இருந்தாய்" எனவும், எம்மைக் கண்ட

பின்னரே முகத்தில் உவகை கொண்டாய், இஃது என்னை என்பாராய், "இரண்டே காற்கை முகம் கொண்டாய்" எனவும் உரைக்கின்ருர். என்னை இங்ஙனம் திருத்தி நெறிப் படுத்தும் இவர் வாழ்க என்பாள் "இவர் வாழி" என வாழ்த்துகிருள். திருத்திப் பணி கொள்ளுதல் இறைவற்கு இயல்பு; "திருத்தித் திருத்தி வந்து என் சிந்தை யிடங்கொள் கயிலாயா" (ஊர்த்) என நம்பியாரூரர் கூறுவது காண்க. இதற்கு வேறு பொருள் கூறுவாரும் உண்டு.

இதனுல் இறைவன் இனிய உரையாட்டால் நங்கையைத் திருத்திப் பணி கொண்டவாரும். (2)

2819. ஆடுங் கருணைத் திருநடத்தீர்
ஆடும் இடந்தான் யாதென்றேன்
பாடுந் திருவுஞ் சவுந்தரமும்
பழமுங் காட்டும் இடமென்ருர்
நாடும் படிநன் கருளுமென்றேன்
நங்காய் முன்பின் ஒன்றேயாம்
ஈடுந் தியபன் னடுவுளதால்
என்ருர் தோழி இவர் வாழி.

உரை: திருவருள் ஞான நடம் புரியும் பிச்சைத் தேவரே, நீவிர் ஆடுமிடம் யாது என்று கேட்ட எனக்கு, நங்கையே, பாடுகிற புலவர் பெறும் திருவும் அழகும் பழமும் சேர்ந்து காட்டும் இடம் காண் என்று சொன்னுர்; நன்ருகத் தெரியுமாறு உரைத்தருளுக என வேண்டினேன்; முதலிலும் இறுதியிலும் ஒரு சொல்லே நிற்க இடையே பல் நிற்கும் சொல்லெனக் கூறினுர்; தோழி இவர் வாழ்க. எ.று.

அருள் ஞானத் திருமேனி கொண்டு திருக்கூத்தாடும் பெருமானு தலின், "ஆடும் கருணைத் திருநடத்தீர்" என்று சிறப்பிக்கின்ருள். பாடும் திரு - பாடும் புலவர்கள் பெறும் செல்வம்; அஃதாவது பொன், சவுந்தரம், அழகு - அம் என்பது. பழம் - வடமொழியிற் பலம் என வரும். பொன்னும் அம்மும் பலமும் சேரப் பொன்னம் பலமாம். யாம் ஆடுமிடம் பொன்னம் பலம் என்றதாம். நாடும்படி - தெரியுமாறு. முன்பின் ஒன்றேயாய் - முதலிலும் இறுதியும் அம் என்ற ஒரு சொல்லே நிற்க. ஈடு உந்திய பல் - முன்னும் பின்னும் நிற்கும் அம் மென்ற சொற்கு ஒப்பாக இரண்டெழுத்தே யுடைய பல் என்னும் சொல்; அஃதாவது அம் பல் அம் - அம்பலம் என்பதாம்.

இதனுல், ஆடுமிடம் யாது என்று வினுவிய நங்கைக்குப் புலவர் பாடும் புகழ் பெற்ற பொன்னம்பலம் என்றும் அம்பலம் என்றும் விடை கூறியவாரும். (3)

திருச்சிற்றம்பலம்

26. பாங்கிமார் கண்ணி

அஃதாவது, நங்கை தான் காதலித்த தலைவனாகிய நடராசப் பெருமானுடைய இயலிடம் எடுத்துத் தன்னுடைய ஆய மகளிர்க்கு உரைப்பதாம். சிந்து - முதலடி முச்சீரும் ஒரு தனிச் சீரும் பெற, இரண்டாமடி நீண்டு வருவது. அடியிரண்டிரண்டாகத் தொடுக்கப்படுவது கண்ணி. கண்ணி - பக்கத்துக்கொன்றும் இரண்டுமாக வைத்துக் கட்டும் பூ மாலைத் தொகுப்பு. பல கண்ணிகளையுடையது ஒரு மாலை; அது போல வரும் இச் சொல் மாலையும் கண்ணியெனப்படுகிறது. இனி வருமிடங்களிலும் இதனையே கூறிக் கொள்க. முச்சீருடையது சிந்தடி யாகலின், இம்மாலை சிந்து எனக் குறிக்கப்படுகிறது. மகுடமாக வரும் சொல்லும் பொருளும் கொண்டு இக்கண்ணி பெயர் பெறும். பாங்கிமார், பக்கத்தே சூழ நிற்கும் ஆய மகளிர்; தோழியர் என்றுமாம். பாங்கியர்க் - குரைக்கப்படுதலின் பாங்கிமார் கண்ணி எனப்படுகிறது. தம்பியர் தம்பிமார் என்பது போலப் பாங்கியர் பாங்கிமார் என்று வழங்கும்.

சிந்து

2820. அம்பலத்தில் ஆடுகின்றூர் பாங்கிமா ரே—அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமா ரே.

2821. ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமா ரே—மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமா ரே.

2822. இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமா ரே—நட
மிட்டவர்மே லிட்டம்வைத்தேன் பாங்கிமா ரே.

உரை : தோழியர்களே, தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுகின்றூர் என் தலைவராகிய சிவபெருமான்; அவருடைய கூத்தைக் கண்டு அவரை யடைய விருப்பம் கொண்டேன்; ஆடுகின்ற திருவடியைக் கண்டு உற்ற ஆசையால் மனம் வாடுகின்றேன்; மேலும் இன்ப வுருவினராய்ச் சபையில்நின்று கூத்தாடுவதால் அவர்பால் நான் காதல் கொண்டேன். எ.று.

ஆட்டம் - கூத்து. நாட்டம் - கருத்து. சேவடி - சிவந்த திருவடி. ஆசையுற்றதால் மனம் வாடி மேனி வேறுபடுகிற தென்பாராய் "வாடு கின்றேன்" என்று சொல்லுகிறுள். சபையின்கண் அவர் இன்பமே வடிவாய் நின்றமையால் நான் 'அவர்மேல் அன்பு கொண்டேன் என்றற்கு "இட்டம் வைத்தேன்" என்று கூறுகிறுள். இட்டம் - இஷ்ட மென்ற வடசொல்லின் திரிபு.

(1, 2, 3)

2823. ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமா ரே—நட
னேசர்தமை யெய்தும்வண்ணம் பாங்கிமா ரே.

2824. உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமா ரே—இன்ப
உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமா ரே

2825. ஊனவுல கைக்கருதேன் பாங்கிமா ரே—மன்றில்
உத்தமருக் குறவாவேன் பாங்கிமா ரே.

உரை : பாங்கியரே, இழிந்த இவ்வுடல் வாழ்வின் மேற்கொண்ட ஆசையா லன்று; ஆடும் பெருமானாகிய அவரை யடைய வெய்தும் அருள் வாழ்வு பெறற்குற்ற ஆர்வம் காண், நான் காத லுற்றதற்குக் காரணம்; அவர் பொன்னம்பலத்தில் இன்ப வுருவுடன் மேன் மேலும் ஓங்குகின்றார்; குற்ற மிகும் உலக வாழ்வை நான் நினைக்காமல் உயர்ந்த உறவினராகிய அவருக்கு உறவினளாதல் வேண்டும். எ.று.

ஈன வுடல் - தாழ்ந்த வுடல். புலால் நாறும் தோல் தசை முதலியவற்றாலாகிய இவ்வுடம்பு தரும் இன்பம் நிலையின்றிக் கெடும் சிறுமை யுடையதாதல் புலப்பட, "ஈனவுடற் கிச்சை வையேன்" எனவுரைக்கின்றாள். ஈன என்ற சுட்டாகக் கொண்டு இவ்வுலகத்து இவ்வுடம்பு என்றலுமாம். அகர முதலிய சுட்டு மூன்றும் ஆன், ஈன், ஊன் என வரும். நடன ஈசர்- நடனேசர் என வந்தது. அப் பெருமானை எய்த வரும் உடம்பு இன்ப வடிவினதாம் என்றற்கு அவர் "இன்ப வுருவாகி ஓங்குகின்றார்" என வுரைக்கின்றாள். "ஓங்குகின்றார்" என்பதனால் ஈன வுடல் நாளடைவில் முதிர்ந்து தேயும் என்பது பெறப்படும். உத்தமர் - உயர்ந்த உறவினர். நேர்மையில்லாதனவே பலவாய் நிலவுவது இவ்வுலகியல் என்பாளாய், "ஊன் வுலகைக் கருதேன்" எனவுரைக் கின்றாள். உத்தமர் - இருளைக் கடந்தவர். உயிருலகை மலவிருள் சூழ்ந்திருத்தலால், இதற்கப்பாலுள்ள இறைவனை "உத்தமர்" எனக் கூறுகின்றாள். "மாயிருள் ஞாலம்" (முருகு) என நக்கீரர் விளம்புவது காண்க. உத்தமர்க்கு உறவாகிய வழி, இருளுலகைக் கடந்து இன்பவுலக வாழ்வு பெறலாம் என்பாளாய், "உத்தமருக் குறவாவேன்" என வுரைக்கின்றாள். (4, 5, 6)

2826. கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமா ரே—என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமா ரே.

2827. கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமா ரே—மூன்று
கண்ணுடையா ரென்பாரையோ பாங்கிமா ரே.

2828. கன்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமா—ரே—மனங்
கரையாரென் னளவிலே பாங்கிமா ரே.

உரை : தோழியர்களே, அறிஞர்களால் எண்ணி யுரைக்கப்படும் பாவனை யனைத்தையும் கடந்தவராதலால், யான் கற்பிக்கும் பாவகங் களுக்கு அகப்படுவாரோ? என்னுடைய கற்பனைகளால் நான் எய்தும்

துன்பங்களை மூன்று கண்களை யுடையவராகியும் பார்க்கின்றாரில்லை; கல் போன்ற மனமுடையவரையும் கரைந்துருகச் செய்பவராயினும் எனது மனம் கரையச் செய்கிலர்; காண். எ. று.

கற்பனை - இல்லது புனைவதும், உள்ளதை மிகுத்தலுமாம்; இது கற்ற கல்வி காரணமாக வுளதாவதாகலின், கற்பனை எனப்படுகிறது. இதனைப் பாவனை எனவும், கற்பனைகளைப் பாவகம் எனவும் கூறுவர். இக் கற்பனை களும் பாவகங்களும் அசத்தாதலால், சத்தாகிய சிவத்தின் முன் நில்லா தொழிதல் பற்றி, "கற்பனை யெல்லாம் கடந்தார்" எனவும், என் கற்பனைக்குள் அடங்கார் என்பாராய், "என்றன் கற்பனைக் குட்படுவாரே" எனவும் இயம்புகிறாள். எதனையும் மிக நினைந்து கற்பனையால் பாரித்தலால் எவர்க்கும் துன்பமுண்டாம் என்பது பற்றி, "நான் படும்பாடு கண்டிலர்" என்று கூறுகிறாள். முக்கண் உடையராகியும் எனது இடுக்கணைக் காண்கின்றாரில்லை என வருந்துதல் தோன்ற இறைவன் மூன்று கண்கள் உடையனாதலை எடுத்துக் கூறுகின்றாள். உலகியல் துன்பங்களுக்கு உடையாத கல் போன்ற மனத்தையுடைய மெய்யன்பர்களின் மனம் கரைத்துருகி நீராக்குவது கொண்டு, "கன்மன மெல்லாம் கரைப்பார்" என்று இசைக்கின்றாள். "மனக் கருங்கற் பாறையுமுட் கசிந்துருக்கும் வடிவத் தோய்" (2070) எனப் பிறாண்டுக் கூறுவ தறிக. மணிவாசகப் பெருமான், "கல்லைப் பிசைந்து மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின் கழற்கு அன்பனாக்கினாய்" (சதக) என்றும், "கல்லாம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை......கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியன்" (அம்மா) என்றும் ஓதுவது காண்க. என் மனம் துன்பத்தால் உறைப்புண்டு கல்லாகி யிருக்கிற தென்று வருந்துமாறு புலப்பட, "என்னளவிலே மனம் கரையார்" எனக் கூறுகின்றாள். என்னளவில் மனம் கரையார் என்றதற்கு என் பொருட்டு மனம் கரைந்து அருளுகின்றாரில்லை என வுரைப்பினும் அமையும். (7, 8, 9)

2829. கள்ளமொன்று மறியேனுன் பாங்கிமா ரே—என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமா ரே.

2830. கற்பழித்துக் கலந்தாரே பாங்கிமா ரே—இன்று
கைநழுவ விடுவாரோ பாங்கிமா ரே.

2831. கண்டவரெல் லாம்பழிக்கப் பாங்கிமா ரே—என்றன்
கன்னியழித் தேயொளித்தார் பாங்கிமா ரே.

2832. காமனைக்கண் ணாலெரித்தார் பாங்கிமா ரே—என்றன்
காதலைக்கண் டறிவாரோ பாங்கிமா ரே.

உரை: பாங்கியரே, என்னுள் அவர் அறியாத கள்ள நினைவு ஒன்றும் இல்லையாகவும் என்னைக் கைவிடக் கருதுவாரே; அன்று என் கற்பனை யாவும் போக்கி என்னுட் கலந்தாராயினும் இன்று என்னைக் கையகன்று நீங்குவாரோ; என் கன்னித் தன்மையைக் கெடுத்துக் காதலராகிய அவர், காண்பவ ரெல்லாம் என் வேறுபாடு நோக்கிப்

பழித்துரைக்கச் செய்வாரோ; அன்று காமவேளை நெற்றிக் கண்ணுல் எரித்தாராதலால், இன்று என் அருட் காதலைக் கண்டு நீக்குவாரோ, அறிந்து சொல்லுமின். எ.று.

கள்ளம் - பிறர் அறியாதவாறு மனத்திற் கொள்ளும் நினைவு. கள்ள மில்லாத உள்ளத்துடன் அவரை வழிபடல் வேண்டுமெனப் பெரியோர் உரைத்தலின், "நான் கள்ளமொன்றும் அறியேன்" எனவும், ஆகவே என்னைக் கைவிடலாகா தென்பாளாய், "என்னைக் கைவிடத் துணி வாரோ" எனவும் இயம்புகிருள். "கள்ள நெஞ்சவஞ்சகக் கருத்தைவிட் டருத்தி யோடு, உள்ள மொன்றி யுள்குவார் உளத்துளான்" (ஆரூர்) என ஞானசம்பந்தர் ஓதுவர். திருமூலரும், "கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ வென்று, உள்ளத்துள்ளே ஒளித்திருந் தாளுமே" (திருமந் என என வுரைக்கின்ருர். கற்பனை - கற்பு என வந்ததுளது. காதலன்பால் என் மனத்திற் கற்பித்துக் கொண்டிருந்த நினைவுகள் பலவும் கெடுமாறு என்னுட் கூடி மகிழ்வித்தாராகலின்' இனி நீங்கி விடுவாரோ என எண்ணி அஞ்சுகின்றமை தோன்ற, "இன்று கைந் நழுவ விடுவாரே" எனக் கலங்குகின்ருள். கன்னி - கன்னித் தன்மை; இது கன்னிமை எனவும் வரும்; "கன்னிமை கனிந்த காலத்தார்" (பரிபா .19) என்பது காண்க. காம நினைவில்லாத தூய பருவம் கன்னிப் பருவம். அத்தூய நிலை காதல் நினைவுறின் கெடுமாதலால் தன்னைக் காதலிக்கச் செய்த சிவனை, "கன்னி யழித்தே யொளித்தார்" எனவும், காதற் கூட்டம் எய்தா, வழிக் காதல் வேட்கை மகளிர் மேனி நலத்தை வேறுபடுத்திக் கண்டார் அவர் தூற்றச் செய்வது பற்றி, "கண்டவ ரெல்லாம் பழிக்க" எனவும் இயம்புகிருள். அந்நாளில் மனத்திற் காம நினைவு எழுப்ப முயன்ற காமதேவனை எரித் தழித்தவராகலின், இந்நாளில் என் காதல் நினைவை ஆதரிக்க மாட்டா ரன்ருே என்பாளாய் "காமனைக் கண்ணு லெரித்தார் என்றன் காதலைக் கண்டறிவாரோ" என மொழிகின்ருர். (10, 11, 12, 13)

2833. காவலையெல் லாங்கடந்து பாங்கிமா ரே—என்னைக்
கைகலந்த கள்ளரவர் பாங்கிமா ரே.

2834. காணவிழைந் தேனவரைப் பாங்கிமா ரே—கொண்டு
காட்டுவாரை யறிந்திலேன் பாங்கிமா ரே.

2835. கிட்டவர வேண்டுமென்ருர் பாங்கிமா ரே—நான்
கிட்டுமுன்னே யெட்டநின்ருர் பாங்கிமா ரே.

2836. கின்னரங்கே ளென்றிசைத்தார் பாங்கிமா ரே—நான்
கேட்பதன்முன் சேட்படுத்தார் பாங்கிமா ரே.

உரை : எனக்குரிய காவல்கள் அனைத்தையும் கடந்து என்னிற் புகுந்து என்னை யறியாமலே என்னுட் கலந்து கள்வராகிய அவரை யான் காண விரும்பினேன்; ஆனு லவரைக் கண்டு எனக்குக் காட்டு வாரைத்தான் யான் இன்னும் அறிகிலேன்; என் விருப்பத்தை யறிந்த அவர் என்னைத் தனக்கு அருகில் வர வேண்டும் என்று சொல்லுகிருர்;

யான் அவரை நெருங்குவேனுயின், அவர் தூரத்தே சென்று விடுகின்ருர். கின்னரம் இசைக்கும் கேள் என்று பணித்தார்; யான் அதனைக் கேட்பதற்குள் கின்னர வோசையை நெடுந்தொலைக்குக் கொண்டுய்த் தார். எ.று.

காவல் - பெண்மைக் குரிய நாணம் அச்சம் முதலியன; ஆன்மாவுக் குரிய கருவி கரணங்கள். புறக் கருவிகளின் எல்லையையும், அகக் கருவிகளான மனம் சித்தம் முதலியவற்றின் எல்லையையும் கடந்து உள்ளமாகிய ஆன்ம வுணர் வெல்லைக்குட் புகுந்து இறைவன் கலந்து நின்றமை புலப்பட, "என்னைக் கை கலந்த கள்வரவர்" என்று கூறுகிருள். "உள்ளம் கவர் கள்வன்" என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. என்னை யறியாமல் என்னுட் கலந்த கள்வரைக் கண்ணுற் காண வேண்டு மென்ற விழைவு என்னுள் எழுந்தது; ஆயினும் நெறி காட்டிக் காணச் செய்பவர் எனக்குத் தெரியவில்லை யென வருந்துவாள், "கொண்டு காட்டுவாரை அறிந்திலேன்" என்று கூறுகிருள். கிட்ட வருதல் - அண்மையில் நெருங்குதல். சிவயோக மானலன்றி ஆன்மாவுக்குச் சிவபோகம் எய்தாமையின், "கிட்ட வர வேண்டும்" எனவும், தத்துவ எல்லைக்குள் இருந்து உரையாடுகின்ருளாகலின், தத்துவ சுத்தியும் ஆன்ம சுத்தியும் பெற்றுச் சிவ ரூப சிவதரிசனங்களைப் பெறுதலின் அருமை விளங்க, "கிட்டு முன்னே எட்ட நின்ருர்" எனவும் கிளந்து கூறுகின்ருள். கின்னரம் என்பது கின்னர இசை; அஃது ஈண்டுப் பிரணவ ஒலி; உள்ளத்துள் நிலவுவது; சிவயோகத்திற் கேட்பது. கழறிற் றறிவார் கேட்ட சிலம்பொலியும் அதுவேயாகும்; அது நாத தத்துவமாகலின், அதனை எய்துங்கால் சிவம் நாதாந்தத்தை யடைதலால், "நான் கேட்பதன் முன் சேட்படுத்தார்" என இயம்புகிருள். சேட்படுத்தல்- செய்மையுற நிற்றல். இது அகப்பொரு ணூல்களில் சேட்படை எனப்படும். (14, 15, 16, 17)

2837. கிள்ளைவிடைத்தூ தாவிடுத்தேன் பாங்கிமா ரே—அது
கேட்டுவரக் காணேனையோ பாங்கிமா ரே.

2838. கீதவகை பாடிநின்ருர் பாங்கிமா ரே—அது
கேட்டுமதி மயங்கினேன் பாங்கிமா ரே.

உரை: தோழியர்களே, என் நாயகரான சிவபிரான்பால் கிளியை என் பொருட்டுத் தூது விடுத்தேன்; அஃது இன்னமும் அவர் சொற் கேட்டுத் திரும்பி வரக் காணவில்லை; என்னுயிற்றே, அறியேன்; ஒருகால் அவர் என் செவிப்பட வேத கீதங்களைப் பாடினர்; அது கேட்டு அறிவு மருண்டு மயங்கிவிட்டேன். எ.று.

செல்வ மகளிர் கிளி வளர்த்தலும் அதற்கு சொல் கற்பித்தலும் மரபு. அவ்வாறு யான் வளர்த்த கிளியை அவர்க்கு என் வேட்கையை விளம்பி வரச்செலுத்தினேன்; சென்ற கிளி இன்னும் திரும்பி வரவில்லை யெனபாள், "கிள்ளையை தூதா விடுத்தேன், அது கேட்டு வரக் காணேன்" என வுரைத்து, அது வாராமையால் அவர் மறுக்கின்ருரோ என வருந்தும் நிலை விளங்க "ஐயோ" எனக் கூறுகின்ருள். அம்பலத்தில் அவரது

ஆட்டம் கண்டு ஆசையுற்ற எனக்கு அவர் பாடிய இசை என்னுடைய அறிவை மயக்கி விட்டதென்பாளாய் "கீத வகை பாடி நின்ருர் அது கேட்டு மதி மயங்கினேன்" என மொழிகின்ருள். இறைவனுடைய ஆடலும் பாடலும் உயிர்கட்கு மலபாகம் வருவித்தற் பொருட்டாகலின், "கேட்டு மதி மயங்கினேன்" என வுரைக்கின்ருள். (18, 19)

2839. கீழ்மைகுறி யாமலென்னைப் பாங்கிமா ரே—மனக்
கேண்மைகுறித் தாரேயன்று பாங்கிமா ரே.

2840. கீடமனே யேனென்னையும் பாங்கிமா ரே—அடிக்
கேயடிமை கொண்டாரன்று பாங்கிமா ரே.

உரை : மலம் கலந்த கீழ்மக ளென்று கருதாமல் எனது நட்பையும் அந்நாளில் ஏற்றுக் கொண்டார்; புழுப் போன்ற என்னையும் தன் திருவடிக் கடிமையாக அந்நாளிற் கொண்டார். எ.று.

மலப் பிணிப்பால் கீழ்மை நிலையுற்ற என்னையும் அருளி யான் தன் திருவடிக் கன்பு செய்யக் கருணை புரிந்தார். கீடம் - புழு. வெயில் வெம்மைக் காற்ருது கெடும் புழுப் போல வினை வெம்மைக் காற்ருது வருத்துவேன் என்பாளாய், "கீட மனையேன்" என்றும், உலகுடல் கருவி கரணங்களைப் படைத்தளித்த அந்நாளே என்னைத் தன் திருவடிமை யாக்கினர் என்பது புலப்பட, "அடிக்கே யடிமை கொண்டார் அன்று" என்றும் கூறுகிருள். (20, 21)

2841. குற்றமெல்லாங் குணமாகப் பாங்கிமா ரே—கொள்ளுங்
கொற்றவரென் கொழுநர்காண் பாங்கிமா ரே.

2842. குற்றமொன்றுஞ் செய்தறியேன் பாங்கிமா ரே—என்னைக்
கொண்டுகுலம் பேசுவாரோ பாங்கிமா ரே.

2843. குஞ்சிதப்பொற் பாதங்கண்டாற் பாங்கிமா ரே—உள்ள
குறையெல்லாந் திருடிகண்டீர் பாங்கிமா ரே.

உரை : அன்பராயினர் குற்றம் செய்தாலும் அதனைக் குணமாகக் கொள்ளும் வேந்தராவர் என் கணவராகிய சிவபிரான்; யானும் அவருக்குக் குற்றம் யாதும் என் அறிவறியச் செய்ததில்லை; என்னை அடிமையாகக் கொண்ட பின் குலக் குறைவு கண்டு இகழமாட்டா ரன்ரே. எ.று.

மக்கள்பால் குணமும் குற்றமும் கண்டு, குணம் பற்றிப் பாராட்டலும், குற்றம் பற்றி ஒறுத்தலும் வேந்தன் தொழிலாதலால், சிவனைக் "கொற்றவர்" என்று குறிக்கின்ருள். உயிர்கள் அன்பு நெறியிற் செய்யும் குற்ற மனத்தையும் குணமாகக் கொண்டருளும் கொள்கையனுதலால் "குற்ற மெல்லாம் குணமாகக் கொள்ளும் கொற்றவர் என் கொழுநர் காண்" என்று கூறுகின்ருள். "குற்றமே செயினும் குணமெனக் கருதும் கொள்கை கண்டு நின் குரைகழ லடைந்தேன்" (புன்கூர்) என நம்பியாரூரர்

உரைப்பது காண்க. யாவர்க்கும் மேலாம் பரமனுதலால், அவன் பெருமைக்கு அன்பர் செய்யும் குற்றத்தின் சிறுமை பொருளாகாதாகலின், "குற்ற மெல்லாம் குணமாகக் கொள்ளும் கொற்றவர்" என்கின்ருர். கொழுநன் - கொழுகொம்பாகும் தலைவன். அறிவறிந்து ஒழுகுமாறு புலப் பட, "குற்றமொன்றும் செய்தறியேன்" எனவும், கோடற்கு முன் காண வேண்டிய குல நலத்தைக் கொண்ட பின் காண்டல் அறிவறியாமை யாகிய குற்றமாதல் பற்றி, "என்னைக் கொண்டு குலம் பேசுவாரோ" எனவும் இசைக்கின்ருள். கூத்தப் பெருமானுடைய எடுத்த பாதம் வளைந்திருத்தலால் "குஞ்சிதபாதம்" எனப்படுகிறது. குஞ்சிதம் - வளைவு. எடுத்த திருவடி உயிர்களை ஆண்டருளுவதாதலால், "குஞ்சிதப் பொற் பாதம் கண்டாற் குறையெல்லாம் தீரும்" என்று கூறுகின்ருள். "ஆட எடுத்திட்ட பாதமன்ருே நம்மை ஆட்கொண்டதே" எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. பொற்பாதம் - அழகிய திருவடி. இதனை "எடுத்த பொற்பாதம்" எனப் பண்டையோர் பகர்வர். (22, 23, 24)

2844. கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமா ரே—நங்கள்
குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமா ரே.

2845. கூறரிய பதங்கண்டு பாங்கிமா ரே—களி
கொண்டுநிற்க விழைந்தேனுன் பாங்கிமா ரே.

2846. கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமா ரே—அது
கூடும்வண்ணம் கூட்டிடுவீர் பாங்கிமா ரே.

உரை: தோழியர்களே, நமனை உதைத்தருளி மார்க்கண்டனை அளித்தருளிய திருவடியையுடைய சிவபெருமான் நமக்குக் குலதெய்வ மாவார் காண்; சொல்லுதற் கரிய அழகமைந்த திருவடியை மகிழ்வுடன் கண்டு கொண்டே யிருக்க ஆசைப்படுகிறேன்; அத் திருவடி நீழலைக் கூடி மகிழ்வுற விரும்புகிறேன்; என் வேட்கை கைகூடுமாறு உதவுமின். எ.று.

இறப்பு இன்றியமையாதாயினும் சிவபுண்ணியத்துக்கு இடையூறுதல் கூடாமையின், அதனைச் செய்தமை காரணமாகக் கூற்றுவனை உதைத்து ஒறுத்தாராகலின், "கூற்றுதைத்த பாதம் நம் குடிக்கெல்லாம் குலதெய்வம் என்று கூறுகின்ருள். அதனுல் திருவடியின் பெருநலம் கூறரிதாதலால், "கூறரிய பதம் கண்டும் களிகொண்டு நிற்க விழைந்தேன்" என்கின்ருள். திருவடி நீழல் இறவாப் பேரின்ப நிலையமாதல் பற்றி "கூடல் விழைந் தேன் அவரை" என்றும்; அது சிவஞான யோகத்தால் எய்துவதாகலின், "கூடும்வண்ணம் கூட்டிடுவீர்" என்றும் கூறுகின்ருள். சிவஞானம் தந்து சிவயோக நெறியிற் செலுத்திச் சிவபோகத்திற் கூட்டுவோர் சிவஞானச் செல்வராதலால் "கூட்டிடுவீர் பாங்கிமாரே" என இயம்பு கின்ருள்.

இதனுல், ஆன்மாவைச் சிவபோகப் பேற்றிற்கு உரியதாக்கித் துணை புரியுமாறு மெய்யன்பர்களை வேண்டியவாரும். (25, 26, 27)

திருச்சிற்றம்பலம்

27. வெண்ணிலாக் கண்ணி

சிந்து

2847. தன்னையறிந் தின்பமுற வெண்ணிலா வே—ஒரு
தந்திரநீ சொல்லவேண்டும் வெண் ணிலா வே.

உரை: வெண்மையான நிலாவே, தனக்குத் தலைவனாகிய முதல்வனை யுணர்ந்து இன்பம் எய்துதற்கு நீயோர் உபாயத்தை எனக்குச் சொல்லுக. எ.று.

உயிராகிய தன்னையும் தான் வாழும் உலகத்தையும் கண்டு இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பையும், இத் தொடர்பை யுண்டாக்கிய இறைவனாகிய முதல்வனுக்கும் உலகுயிர்கள்பால் அவனுக்குள்ள தொடர்பையும் எண்ணியறிதல் தன்னை யறிதலாகும். "தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் எம்மை யுடைமை எமை இகழார்" (சிவ. போ) என மெய்கண்டார் கூறுவது காண்க. தன்னையறிந்த வழி உண்மை ஞானமும், எல்லா வுயிர்களையும் ஒக்க நோக்கும் சமரச வுணர்வும் தோன்றி இன்பம் விளைத்தலால், "இன்பமுற" எனக் குறிக்கின்றார். உலகியல் வாழ்க்கைத் தொடர்பு தன்னை யறிதற்குத் துணை புரியாது ஆன்ம வுணர்வை அலைப்பதால் "தந்திரம் நீ சொல்ல வேண்டும்" என வேண்டுகிறாள் நங்கை.

இதனால் தன்னை யுணரும் ஆன்ம ஞானம் நல்க வேண்டியவாறும். (1)

2848. நாதமுடி மேலிருந்த வெண்ணிலா வே—அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலா வே.

உரை: சிவ தத்துவத்துக்கு மேலே யுள்ள நிலவே, அவ் விடத்துக்கு வந்தடைய நானும் விரும்புகிறேன். எ.று.

சுத்த தத்துவத்தின் உச்சியிலிருப்பது சிவ தத்துவம்; இதனை நாதம் என்றும் நாத தத்துவ மென்றும் கூறுவர். இதற்கு மேல் உள்ளது நாதாந்தம்; முத்தி பெற்ற ஆன்மாக்கள் ஞான வுருவாகி அடையுமிடம். அது சிவபோகப் பெருவெளியாதலால் "அங்கே நானும் வரவேண்டு கின்றேன்" என உரைக்கின்றார்.

இதனால் சிவபோகப் பேற்றின்கண் தனக்குள்ள விழைவைத் தெரிவித்தவாறும். (2)

2849. சச்சிதா னந் தக்கடலில் வெண்ணிலா வே—நானுத்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேள் வெண்ணிலா வே.

உரை : சத்தும் சித்தும் ஆனந்தமுமாகிய சிவபோகக் கடலில் மூழ்கி யின்புற வேண்டுகிறேன். எ.று.

சத்து - என்றும் உள்ளது; சித்து - ஞானம்; ஆனந்தக் கடல் - இன்பக் கடல். அது சிவபோகப் பெருங்கடல் என்க.

இதனால், நாதாந்தம் சச்சிதானந்தம் எனத் தெரிவித்தவாறும். (3)

2850. இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலா வே—நானும்
இருக்கவெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலாவே, இரவு பகல் என்ற காலப் பாகுபாடு இல்லாத பரவெளியை அடைந்து அங்கேயே இருக்க விரும்புகிறேன். எ.று.

மாயா மண்டலத் தத்துவக் கூறுகளி லொன்றுன கால தத்துவம், மாயா தீதமாகிய பரசிவ வெளியில் இல்லையாகலின், அதனை "இராப்பகல் இல்லா விடம்" என்று கூறுகின்றுள்.

இதனற் சச்சிதானந்தக் கடலாவது இராப்பகல் இல்லாத இடம் எனத் தெரிவித்தவாறும். (4)

2851. தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலா வே—நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, சூரியன் ஒளி நிறமாய் எங்கும் நிறைந்த சிவத்தின் ஒளி மயமாக விரும்புகின்றேன், காண். எ.று.

சிவவொளியைச் சிவ சூரிய வொளி என்று பெரியோர் வழங்கும் மரபு பற்றித் "தேசு நிறமாய் நிறைந்த சிவமயம்" எனத் தெரிவிக்கின்றுர். தேசு - சூரியன்; ஒளிப் பொருள் என்றுமாம்.

இதனல், சிவம் சூரிய வொளி மயம் என்பதாம். (5)

2852. போதநடு வூடிருந்த வெண்ணிலா வே—மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலா வே.

உரை : ஞான வானின் நடுவே திகழும் வெண்ணிலவே, என்னை மறைக்கும் மல ஞானங்கள் கெட வேண்டுகிறேன். எ.று.

மலப் போதம்- மலப்பிணிப்போடு கூடிய பசுபாச ஞானங்கள். பசு ஞானம் - உயிரறிவு. பாச ஞானம் - நூலறிவு. பசு - மலப் பிணிப்புடைய உயிர். பாசம் - இயற்கையும் செயற்கையுமாகிய மலப் பிணிப்பு. பசுபாச

ஞான மற்றுலன்றிச் சிவஞானம் எய்தாமையால், "மலப் போதமற வேண்டுகின்றேன்" என விழைகின்ருள்.

இதனுல், சிவஞானப் பேற்றுக்குப் பசுபாச ஞானம் நீங்க வேண்டும் என்பதாம். (6)

2853. ஆருமறி யாமலிங்கே வெண்ணிலா வே—அரு
ளாளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலாவே, யாரும் அறியாத நிலையில் திருவருள் ஞானத்தை எனக்குச் சிவபிரான் வந்து அருள் செய்வாரோ, கூறுக. எ.று.

பசுபாச ஞானிகள் அறியின் சிவஞானம் அஞ்ஞான விகற்பமாக எண்ணப்படுமாகலின், சிவஞானம் பிறர் எவரும் அறியாவண்ணம் நல்கப் படுவது பற்றி, "ஆரும் அறியாமல் இங்கே அருளாளர் வருவாரோ" என வினவுகின்ருள். அருளாள ரென்பது சிவஞானத்தை நல்கும் சிவபிரான் மேற்று. "பர ஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க வருஞானம் பல ஞானம் அஞ்ஞான விகற்பம்" (சிவ. சித்தி.) என அருணந்தி சிவனுர் கூறுவது காண்க.

இதனுல், சிவஞானம் எப்போது எய்துமென விரும்பியவாரும். (7)

2854. அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலா வே—யெங்கள்
ஐயர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, அகக் கண்ணிற் கண்டு வழிபடுதற்குத் தலைவராகிய சிவபெருமான் காட்சி தருவாரோ சொல்லுக. எ.று.

அந்தர் அங்கம் - உட்கருவியாகிய மனம்; மனக்கண்ணிற் கண்டு செய்யும் வழிபாடு "அந்தரங்க சேவை". அது சிவஞான வின்பத்துக் கேது என்பதைத் திருமூலர், "அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" (திருமந்) என்று இயம்புவர். அந்தரங்க வழிபாடு பொறி புலன்களின் போக்கினுல் சிதைவுறுதல் இயல்பாகலின் "ஐயர் வருவாரோ சொல்லாய்" எனக் கேட்கின்ருள். "பொறிப் புலன்களின் போக்கறுத் துள்ளத்தை, நெறிப்படுத்து நினைப்பவர் நெஞ்சினுள் அறிப்புறும் அமுதாயவன்" (குறுந்) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க.

இதனுல், அந்தரங்க சேவைக்குச் சிவதரிசனம் கிடைக்குமோ என வினவியவாரும். (8)

2855. வேதமுடி மேலிருந்த வெண்ணிலா வே—மல
வேதையுள வேதுசொல்லாய் வெண்ணிலா வே.

உரை : வேதங்களின் முடி மேல் இருக்கும் வெண்ணிலவே, மலப்பிணிப்பால் உண்டாகும் வேதனைகளைப் போக்குதற்கு உபாய மொன்றை எனக்குச் சொல்லுக. எ.று.

வேத வேதாந்தங்களுக் கெட்டாமல் அப்பாலிருக்கும் சிவபிரான் திருமுடியில் இருந்து விளங்குவதால், பிறைத் திங்களை "வேத முடிமே லிருந்த வெண்ணிலாவே" என அழைக்கின்றார். மலங்கள் செய்யும் அறியாமையால் வேதனைகள் தோன்றி உயிரை வருத்துவதால் அதற்குத் தீர்வு காண்டற்கு ஞானோபாயம் உரைப்பாயாக என்பார், "மல வேதை உளவு ஏது சொல்லாய்" என்று கூறுகிறாள். வேதனை - வேதை என வந்தது. உளவு - உபாயம்.

இதனால் மலவாதனைத் தீர்வுக்கு ஞான நெறி அறிய விரும்பிய வாறும். (9)

**2856. குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலா வே—அந்தக்
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலா வே.**

உரை : குண்டலியால் தூண்டப்பட்டுத் துவாத சாந்தத்தில் நின் றொளிரும் அமுத சந்திரனே, குண்டலினி சத்தி முடிவில் எய்தப்பெறும் ஞான வமுதத்தைப் பெற விரும்புகிறேன். எ.று.

குண்டலி - மக்கள் உடம்பில் மூலாதாரத்தில் கிளம்பும் ஒருவகைச் சக்தி. இது சுவாதிட்டானம் மணிபூரகம் முதலிய நிலைகளினூடே துவாத சாந்தம் வரையிற் சென்று யோகிகட்கு அமுதபானம் செய்விப்பதாகும். சிவயோகிகள் துவாத சாந்தத்தில் சிவரூப சிவதரிசனம் செய்து சிவானந்தத்தைப் பெறுவர். குண்டலி சக்தியால் துவாத சாந்தத்தில் காணப்படும் அமுத சந்திரனை ஈண்டுக் "குண்டலிப்பால்" என்றும், சிவதரிசனம் பெற்ற ஆன்மா சிவயோகத்தால் சிவபோகம் பெறும் எனப் பெரியோர் உரைப்பதால் சிவபோகானந்தத்தைக் "குண்டலிப்பால் வேண்டுகின்றேன்" என்றும் கூறுகின்றாள். இது குண்டலினி எனவும் வழங்கும்.

இதனால், குண்டலினி சக்தியாற் பெறலாகும் சிவானந்தத்தை எய்த விரும்பியவாறும். *(10)*

**2857. ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலா வே—அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலா வே.**

உரை : வெண்ணிலவே, ஆதியாகிய பரம்பொருளே பிற அனைத்துக்கும் ஒடுங்குமிடமாம் எனச் சான்றோர் உரைக்கின்றனர் ஆதியாகும் அஃது அந்தமாவ தென்னையோ, சொல்லுக. எ.று.

ஆதி - முதல்; அந்தம் -முடிவு. தன்னை யொழிந்த பிற யாவற்றையும் தோற்றுவிக்கும் முதற்பொருளாகும் சிவம் அவற்றை யொடுக்குவதாம் எனச் சிவஞானச் செல்வர்கள் உரைப்பதால், "ஆதி யந்தம் என்றுரைத் தார்" எனவும், தோற்றுவித்தற் கேதுவாகிய திருவருள் ஒடுக்குதற் கேதுவாவது யாங்ஙனம் என ஆசங்கிப்பாளாய், "அந்த ஆதி அந்தமாவ தென்ன" எனவும் வினவுகின்றாள். அந்தம் - முடிவு; ஒடுக்குதலுமாம். "அந்தம் ஆதி என்மனார் புலவர்" (சிவ.போ.) என மெய்கண்டார் கூறுவதுகாண்க.

இதனுல், ஆதியாய் உலகனைத்தையும் தோற்றுவிக்கும் முதற் பொருளே அந்தத்தைச் செய்வதாம் என்னும் உண்மையை வலியுறுத்த வாரும். (11)

2858. **வித்திலாம லேவிளைந்த வெண்ணிலா வே—நீ தான்**
விளைந்தவண்ண மேதுசொல்லாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, யாவும் வித்தாகிய காரண மில்லாமலே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பர்; அவை தோன்றிய இயல்பை எனக்குச் சொல்லுக. எ.று.

காரணமின்றிக் காரியம் பிறவாது என்பதற்கு மாருக உலகுகள் பலவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பாளாய், "வித்திலாமலே விளைந்த" என்று கூறுகிருள். "விச்சதின்றியே விளைவு செய்குவாய் விண்ணும் மண்ணக முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" (சதக) என மாணிக்கவாசகர் உரைப்பது காண்க. அசத்தும் அசித்துமாகிய உலகம் சத்தும் சித்துமாகிய சிவத்தினின்றும் தோன்றற்கு முதலின்மை யின் "வித்திலாமலே விளைந்த" என வுரைக்கின்ருள். விளைந்த - அன்பெருத அகர வீற்றிப் பலவறிசொல். சிவசத்தியில் ஒடுங்கிக் கிடக்கும் மாயையாகிய பரிக்கிரக சத்தியைக் கலக்கி அதனினின்றும் உலகுகள் தோற்றுவிக்கப்பட்ட இயல்பை, "விளைந்த வண்ணம்" என்று குறிக்கின்ருள். (12)

2859. **முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலா வே—அந்த**
மூன்றுமொன்ருய் முடிந்ததென்ன வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, உலகு உயிர் இறை யென்ற மூன்றும் பிரமப் பொருளொன்றே என்பர்; அம்மூன்றும் ஒன்ருயவாறு என்னே. எ.று.

பிரமம் ஒன்றே மூன்ருய் விரிந்ததெனப் பிரமவாதிகள் கூறுவதால், "முப்பொருளும் ஒன்ற தென்பார்" என வுரைக்கின்ருள். உலகுகள் மாயையிலும், மாயை சத்தியிலும், சத்தி சிவத்திலும் ஒடுங்கி ஒன்றுதல் கண்டு "மூன்றும் ஒன்ருய் முடிந்த தென்ன" என வினவுகின்ருள். (13)

2860. **நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலா வே—ஒரு**
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, நான் அந்தச் சிவமாய் நிற்குமாறு அமைந்த ஞான நெறியை அறிவிப்பாயாக. எ.று.

நான் அதுவாதலாவது - நான் என்னும் ஆன்மா சிவமாந் தன்மை யடைதல். அதற்குரிய நெறி சிவஞானச் செந்நெறி என்பது பற்றி, "ஞான நெறி சொல்லு" என வேண்டுகின்ருள். (14)

2861. **ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலா வே—என்னை**
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, உணர்வுருவாகிய என்னை என்னுடைய இயல்புகள் அனைத்தையும் நானே அறியுமாறு உரைப்பாயாக. எ.று.

என் இயல்புகளையும் எனக்கும் சிவத்துக்குமுள்ள தொடர்பையும் இனிதறிந்து உய்தி பெறச் சொல்லுக என்பாளாய், "என்னை நானறியச் சொல்லு கண்டாய்" என வேண்டுகின்றாள். "நாணுர் என்னுள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார் வானோர் பிரான் என்னை யாண்டிலனே" (கோத்தும்) என்பது திருவாசகம். (15)

2862. வாசிவாசி யென்றுரைத்தார் வெண்ணிலா வே—அந்த
வாசியென்ன பேசுகண்டாய் வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, வாசி வாசி என யோகிகளும் சிவஞானி களும் சொல்லுகின்றார்கள். வாசி என்பது யாது? உரைப்பாயாக. எ.று.

யோகிகள் இரேசக பூரகங்களால் அடக்கி வசப்படுத்தப்படும் மூச்சுக் காற்றினை வாசி என்பர்; அதனால் யோகம் கைவரும் என்பது கருத்து. சிவஞானிகள் சிவா என நிற்கும் இரண்டெழுத்துக்களையும் ஓதுவதும் சிந்திப்பதும் செய்தால் சிவயோக போகங்கள் எய்தப் பெறலாம் என்பர்; அவர்கள் வகரம் திருவருளையும், சிகரம் சிவத்தையும் குறிக்கும். இது பற்றியே, "வாசி யென்ன பேசு கண்டாய்" என வேண்டுகிறாள். (16)

2863. ஐந்தலைப்பாம் பாட்டுகின்றார் வெண்ணிலா வே—அவர்
அம்பலத்தில் நின்றதென்ன வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, சிவபெருமான் ஐந்து தலைகளையுடைய பாம்பை யாட்டுகின்றார் என்று கூறுவர்; அவர் அம்பலத்தில் நின்றருளு வதன் கருத்தென்ன? சொல்லுக. எ.று.

ஐந்தலைப் - பாம்பு, ஆயிரம் தலைப் பாம்பு என புராணங்கள் கூறுவது மரபு. ஐவகைப் புலனறிவையும் ஐந்து தலையாகவும் அவற்றின் வழி நின்றுலவும் உயிரைப் பாம்பாகவும் நிறுத்தி, உயிர்களை ஆட்டி வைப்பது பற்றி, இறைவனை ஐந்தலைப்பாம்பை ஆட்டுபவ னென்றும் இதற்குக் கருத்துரைப்பர். அம்பலம் - சபை. (17)

2864. ஓரெழுத்தி லைந்துண்டென்பார் வெண்ணிலா வே—அது
ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலா வே.

உரை : ஓமென்னும் எழுத்தின்கண் திருவைந் தெழுத்தும் ஒடுங்கும் என்று பெரியோர் சிலர் இயம்புவர்; அதுவே ஊமை யெழுத்து எனப்படுவது ஏனோ? கூறுக. எ.று.

ஓம் என்பது பிரணவம் என்னும் ஓரெழுத்தாம்; அதன் உட்பொரு ளாயவன் சிவ பெருமான்; சிவ வுருவாகிய எழுத்தைந்தும் அப் பிரணவப் பொருளாதலால், "ஓரெழுத்தில் ஐந்துண்டென்பர்" எனக் கூறுகின்றாள். அப்பிரணவம் ஒலிக்கப் படாமல் உள்ளத்துள் ஒடுங்கித் தியானப் பொருளாகும் போது ஊமை எழுத்து எனப்படுவதால்

"ஊமை யெழுத்தாவதென்ன" என வினவுகிருள். "உய்ய என்னுள்ளத் துள் ஓங்காரமாய் நின்றமெய்யா" (சிவபு) எனத் திருவாதவூரர் உரைப்பது காண்க. ஓரெழுத்தில் ஐந்தெழுத் துளவாதல் போலக் குமாராயநம என்ற ஆறெழுத்தும் கண்ட அருணகிரிநாதர், "ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே" (திருப்புகழ்) என்பர். (18)

2865. அம்பலத்தில் ஆடுகின்ருர் வெண்ணிலா வே—அவர்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே.

உரை: வெண்ணிலவே, தில்லையம்பலத்தில் சிவபெருமான் திருக் கூத்தாடுகின்ரு ரென்ருே; அவர் அங்ஙனம் ஆடுவதன் கருத்து என்னையோ, இயம்புக. எ.று.

தில்லையம்பலத்தில் சிவன் கூத்தாடுவது படைத்தல் முதலிய ஐவகைத் தொழிலும் நடத்தற் கெனவும், உயிர்கள் மலமாயை கன்மங் களின் நீங்கிச் சிவப் பேறெய்தற் கெனவும் சான்ருேர் கூறுவர். ஐந்தொழிற் கூத்து ஊன நாடகம் எனவும், சிவப் பேற்றுக்குரிய கூத்து ஞான நாடகம் எனவும் வழங்கும். "ஊனை நாடக மாடு வித்தவா உருகி நானுனைப் பருக வைத்தவா ஞான நாடகமாடு வித்தவா நைய வையகத் துடைய விச்சையே" (சதக.) என்று திருவாசகம் உரைப்பது காண்க. (19)

2866. அந்தரத்தில் ஆடுகின்ருர் வெண்ணிலா வே—அவர்
ஆடும்வகை எப்படியோ வெண்ணிலா வே.

உரை: வெண்ணிலவே, நம் பரமன் நிராதார மூர்த்தியாய்த் திருநடம் புரிகின்ருர்; அவர் ஆடும் வகை ஒன்றும் தெரியவில்லை, காண், எ.று.

எல்லா வுலகுகட்கும் உயிர்கட்கும் தான் ஆதாரமாக அவை யனைத்தையும் தனக்கு ஆதேயமாகக் கொண்டு இலகுவிக்கின்ருனுயினும் அவன் தனக்குத் தானே ஆதாரமாய் ஆடல் புரிகின்ருன் என்பாள், "அந்தரத்தில் ஆடுகின்ருர்" எனவும், அதனை யுணர்ந்து கொள்ளுதல் அரிதாகலின் "ஆடும் வகை எப்படியோ" எனவும் இயம்புகிருள். (20)

2867. அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலா வே—எங்கும்
ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே.

உரை: வெண்ணிலவே, அணுவின் அணுவாயிருக்கும் பெருமானுர் எங்கும் பரந்து நிற்கும் திறம் என்னையோ. எ.று.

நிலவணு நீரணுவென நிலவும் அணுத் திரளில் ஒவ்வோ ரணுவிலும் உயிர்ப்பணுவாய் அவற்றின் ஆற்றல் முறை திறம்பாமல் இயலுதற் கேதுவாதல் தோன்ற, "அணுவில் அணுவாய் இருந்தார்" என வுரைக்கின்ருள். இருந்தார் என இறந்த காலத்தால் உரைப்பது, அவரது இருப்பின் துணிவு வற்புறுத்தற் கென அறிக. அணுவா யிருக்கும்

ஒன்று எங்குமாகி யிருப்பது வியத்தற் குரியதாகலின், "எங்குமாகி நின்ற வண்ணம் என்ன" என வினவுகின்றாள். (21)

2868. அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலா வே—ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, காணப்படும் அண்டங்களும் அப்பாலுள்ள அண்டங்களும் ஆகியவை யெல்லாம் தலைவராகிய அப்பரமனது திருக்கூத்து நிகழுமிடம் என்று சொல்வதன் கருத்து என்னையோ. எ.று.

அண்டம் - வானத்தால் சூழப்பட்டு நம்மாற் காணப்படுவது. இதனைப் புராணிகர் பிரமனிட்ட முட்டை யென்றமையின், அதனைக் குறிக்கும் அண்டம் என்ற சொல்லாற் பெயர் கூறலாயினர். இந்த அண்ட முகட்டுக்கு அப்பால் பல அண்டங்கள் உண்டென்றலின் அவற்றைப் பகிரண்டம் என உரைக்கின்றார்கள். பகிரண்டங்கள் ஆயிரத்தெட் டென்பாரும் உளர். திருவாதவூரர் "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும் அளப்பருந் தன்மை" (அண்டத்) என்பர். இவ் வண்டங்களின் அளப்பருந் தன்மையும் வளப் பெருங்காட்சியும் சிவ பரம்பொருளின் திருக்கூத்தின் விளைவா மென அறிஞர் கூறுவது கொண்டு, "ஐயர் ஆட்டமென்று சொல்வ தென்ன" எனக் கேட்கின்றாள். இவற்றைப் படைத்தலும் ஒடுக்குதலும் சிவபரம் பொருட்கு விளையாட் டென்பதாம். (22)

2869. அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலா வே—என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தே வெண்ணிலா வே.

உரை : வெண்ணிலவே, தில்லையம்பலத்தில் ஆடுகின்ற சிவபெருமான் இவ்வுலகில் என்னை ஆட்டுகின்றார். எ.று.

தில்லையம்பலத்தில் உருவ நடனமும் ஞான வம்பலத்தில் அருவ நடனமும் செய்கின்றாராதலின், பொதுவகையில் "அம்பலத்தில் ஆடுகின்றார்" எனக் கூறுகின்றார். அவருடைய இருவகைக் கூத்தும் உயிர்த் திரளை இயக்குதலால் "என்னை இம்பரத்தே ஆட்டுகின்றார்" என மொழிகின்றாள். இம்பர் இம்பரம் என வந்தது. (23)

திருச்சிற்றம்பலம்

28. முறையீட்டுக் கண்ணி

அஃதாவது, தாழிசைக் கண்ணிகள் வாயிலாக வடலூர் வள்ளற் பிரான் தமது வாழ்வில் மன மொழி மெய்களாற் செய்த குற்றங்களை எடுத்தோதித் தமக்கு இன்னருள் வழங்குமாறு குறிப்பாக வேண்டி முறையிடுகின்றார்.

தாழிசை

2870. பற்று நினைத்தெழுமிப் பாவிமனத் தீமையெலாம்
உற்று நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : பற்றுக் காரணமாகப் பலவற்றை நினைத்தெழும் பாவியாகிய மனத்தினுடைய தீமைகளை உற்று நினைக்கும்போது வருத்தம் தோன்றி உடம்பெல்லாம் ஊடுருவிப் போகிறது. எ.று.

அடா - தோழனை யழைக்கும் அன்மை விளி. பற்று - யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்கள். யான் என்னும் பற்று, தற்போதத்தைத் தூண்டி, நான் செய்தேன், செய்வேன் என்னும் மமதை நினைவை மனத்தில் எழுப்புதலால், "பற்று நினைத்தெழும் பாவி மனம்" எனப் பகர்கின்றார். பாவி மனம் - பாவியாகிய மனம். மன நினைவு சொல்லுக்கும் செயலுக்கும் ஏதுவாய் தீங்கு விளைவிப்பது பற்றி, "பாவிமனத் தீமையெலாம்" என வுரைக்கின்றார். மன நினைவுகளால் விளையும் தீங்குகளையே ஊன்றி நினைக்குங்கால் அவற்றால் உளவாகும் துன்பங்கள் நினைவில் காட்சிதந்து அச்சுறுத்துவதால் "உற்று நினைக்கில் எனக்கு ஊடுருவிப் போகுது" என விளம்புகிறார். (1)

2871. எள்ளேத நின்னிடத்தே எண்ணுகின்ற தோறுமதை
உள்ளே நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : தோழனே, நினக்கு மாறாக எள்ளத்தனைத் தீங்கு மனம் நினைக்கினும் நினையுந் தோறும் எய்தக் கடவ துன்பத்தை உள்ளத்தில் எண்ணினால், அது நெஞ்சிற் பாய்ந்து உடம்பெங்கும் ஊடுருவி நின்று வருத்துகிறது. எ.று.

எள்ளேதம் - எள்ளளவான தீமை. எண்ணுதலும் தீவினையாய்த் துன்பம் விளைவிப்பதாகலின், "அதை உள்ளே நினைக்கில் எனக்கு ஊடுருவிப் போகுது" என உரைக்கின்றார். (2)

2872. துன்னுகின்ற தீமைநின்பாற் சூழ்ந்துரைக்குந் தோறுமதை
உன்னுகின்ற போதிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : செய்தாரை விடாது நெருங்குகின்ற தீவினையை நினைந்து ஆய்ந்து வாயால் சொல்லுந் தோறும், சொல்லியதை மீள நினைக்கும் போது, எய்தக் கடவ துன்பம் என்னுள் ஊடுருவுகின்றது, காண்க. எ.று.

தன்னைச் செய்தவரை விடாது பற்றிக் கொள்வது வினைக்கு இயல் பாகலின், தீவினையை, "துன்னுகின்ற தீமை" எனத் தெரிவிக்கின்றார். தீது சொல்லுவோர் தீர வெண்ணிச் சொல்வதும், எண்ணமலே பேசுவதும் செய்வர். எண்ணுங்கால் நற்பண்புடையோர் தீது செய்தற்கும் எழும் தீ நினைவை மாற்றிப் போக்கி விடுவர்; தீய பண்புடையோர் தீமை மிகுதற் குரியவற்றை எண்ணிச் சொல்லுவராதலின், "சூழ்ந்து உரைக்குந் தோறும்" எனவும், சொல்லிய பின் மனத்தின் வெம்மை தணியுமிடத்து நல்லுணர்வு தோன்றிச் சொல்லின் தீமையைக் காட்டும் போது வருத்தம் விளங்க, "உன்னுகின்ற போதில் எனக்கு ஊடுருவிப் போகுது" எனவும் இசைக்கின்றார். (3)

2873. எள்ளுகின்ற தீமைநின்பா லெண்ணுகின்ற தோறுமதை
உள்ளுகின்ற போதிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : இகழ்ந்து விலக்குதற்குரிய தீவினையை நின்னோடு கலந்து சிந்திக்கும்தோறும், அத் தீவினையின் தீமையை உள்ளத்தில் எண்ணும் போது அதன் குற்றம் நெஞ்சில் ஊடுருவி வருத்துகிறது, காண். எ.று.

எள்ளல் - இகழ்தல். செய்த குற்றத்தைத் தோழனுக்குச் சொல்லி அளவளாவுவது சிலர்க்கு இயல்பாதலால், "எள்ளுகின்ற தீமை நின் பால் எண்ணுகின்ற தோறும்" எனவும், தனித்திருந்து நினைத்த லுண்மையின், "உள்ளுகின்ற போதில்" எனவும் உரைகின்றார். உள்ளுதல்- நினைவிற் கொணர்தல். (4)

2874. மிக்க நிலைநிற்க விரும்பேன் பிழைகளெலாம்
ஒக்க நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : சொற்செயல்களில் மிகைபடும் அளவு செய்ய விரும்புவ தில்லேனாயினும், செய் பிழைகளை நிரல்பட நிறுத்தி எண்ணுமிடத்து வருத்தம் தோன்றி என்னுள் ஊடுருவுகின்றது, காண். எ.று.

செய்வ தொன்று அறமாயினும் அளவின் மிக்க விடத்து வெறுக்கப் படுதலின், அதனை விரும்புவதில்லை என்பார், "மிக்க நிலை நிற்க விரும் பேன்" எனத் தமது உட்கோளை விரும்புகின்றார். மிக்கநிலை பிழைகட்குக் காரணமாதலின், அதனால் உண்டாகும் பிழைகளைக் குறையாக எண்ணிப் பார்க்கையில் நெஞ்சம் வருந்துகிற தென்பாராய், "ஒக்க நினைக்கி லெனக்கு ஊடுருவிப் போகுது" என்று கூறுகிறார். (5)

2875. கோகோ வெனுங்கொடியேன் கூறியகுற் றங்களெலாம்
ஓகோ நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : மிகப் பெரிய கொடியவன் என்று பலரால் பேசப்படும் கொடுமையையுடைய யான் மேலே சொன்ன குற்றங்களை நினைத்தால் ஓ, என் நெஞ்சினுள் வருத்தம் ஊடுருவிச் செல்கிறது, காண். எ.று.

கொடுமை மிகுதி விளங்கக் "கோகோ எனும் கொடியேன்" எனக் கூறுகிறார். செய்த குற்றங்களை நினைவு கூர்ந்து எண்ணுவோமாயின் குற்றத்தின் கொடுமையும், வினையின் மிகுதியும் நெஞ்சை வருத்துமா தலின், "ஓகோ நினைக்கி லெனக் கூடுருவிப் போகுதடா" எனவுரைக் கின்றார். (6)

2876. பித்து மனக்கொடியேன் பேசியவன் சொல்லையெலாம்
ஒத்து நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : பித்தேறிய மனத்தையுடைய கொடியவனாகிய யான் பேசிய வன்சொற்களை எல்லாம் ஒத்து நினைக்கும்போது எய்தும் வருத்தம் உள்ளத்தில் ஊடுருவி நிற்கிறது, காண். எ.று.

பித்து - ஆசை மிகுதியால் உளதாகும் மயக்கம்; மண், பெண், பொன் என்ற மூன்றன் மேல் உண்டாகும் ஆசை மிகுதி பித்தெனப்படும். ஆசை மிகுதி பற்றி மேற்கொள்ளும் செயல்கட்கு இடையூறு தோன்றின், மனம் கொடுமை நினைவுற்றுச் சினம் மிகுந்து வன்சொற்களை வழங்குவித்தலால் "பேசிய வன்சொல்லை யெலாம்" எனவும், அச்சொற்களைக் கேட்டவர்கள் எய்திய துன்பமும், அவற்றால் விளைந்த தீமையும் நெஞ்சை வருத்துவ தால், "ஒத்து நினைக்கில் எனக்கு ஊடுருவிப் போகுதடா" எனவும் கூறு கின்றார். ஒத்து நினைத்தலாவது - மனமும் அறிவும் சமநிலையினின்று நினைப்பது. (7)

2877. தேர்ந்து தெளியாச் சிறியவனேன் தீமையெலாம்
ஓர்ந்து நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : நன்மை தீமைகளைக் கண்டு, செய்வதும் தவிர்வதும் அறிய மாட்டாத சிறியவனாகிய யான் செய்த தீமைகளனைத்தையும் நன்குணர்ந்து நினைக்குங்கால் உள்ளமெல்லாம் ஊடுருவுகின்றது, காண். எ.று.

செயற் குரியவற்றின் நலம் தீங்குகளை யறிதலும், அறிந்து இது செய் தற்குரியது இது தகாதது என்று துணிதலும் தேர்ந்து தெளிதலாம். போதிய அறிவுடையார்க் கன்றி இப்பண்பு அமைவ தில்லையாதலால், "சிறியவனேன்" என்றும், அதனா லுண்டாகிய குற்றங்களைத் "தீமை யெலாம்" என்றும், அவை மனநோயைத் தந்து வருத்துவது விளங்க, "ஊடுருவிப் போகுது" என்றும் உரைக்கின்றார். ஓர்ந்து நினைத்தல் - எய்திய மனநோய்க்குரிய காரண காரியங்களை எண்ணுதல். (8)

2878. நிறுத்தி யறியே நிகழ்த்தியவன் சொல்லை
உறுத்தி நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : நிகழ்ந்தவற்றை முறைப்பட நிறுத்தி எண்ணி யறியாமையால் யான் பேசிய வன் சொற்களனைத்தையும் உறுத்தி நினைக்குங்கால் உள்ள முழுதும் அவை யூடுருவி வருத்துகின்றன, காண். எ.று.

நிறுத்தி யறிதற்குரியன வருவிக்கப்பட்டன. தூயவறிவுடைய பெரியவர்க்கே அஃது செயல் படுமாதலால், அது செய்யாது சிறுமை யுற்றமை பற்றி, "நிறுத்தி யறியேன்" என்கின்றார். அறியேன் - அறிவதைச் செய்யேன். உறுத்துதல் - மீள வருவித்து நினைத்தல்; நினைவு கூர்தலுமாம். (9)

2879. தோன்றி விரியுமனத் துட்டனேன் வன்பிழையை
ஊன்றி நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா.

உரை : தோன்றுகிற பிழை மிகச் சிறிதாயினும் பெரிதாக விரித்துக் காணும் மனமுடைமையால் துட்டனாகிய யான் செய்துள்ள பெரிய குற்றங்களை ஆழ்ந்து சிந்திக்கின் அங்க முழுதும் ஊடுருவுகின்றது, காண். எ.று.

காணப்பட்ட பிழை எளிதிற் பொறுத்தாற்றும் சிறுமையுடையதாக இருப்பினும் அதனைப் பெரிதாக்கிக் காட்டுவது மனப் பண்பாதலால், "தோன்றி விரியும் மனத்துட்டனேன்" என்று கூறுகிறார். மனம் காட்டிய வழி நின்று பிழை செய்பவன் துட்டன். துஷ்டன் துட்டன் - என வந்தது. துட்டன் செய்வன யாவும் பெரும் பிழையாய் முடிவனவாதலின், "வன்பிழை" எனக் கூறுகின்றார். (10)

2880. எண்ணினைப்ப தின்றிநினை யெள்ளி யுரைத்ததனை
உண்ணினைக்குந் தோறுமெனக் குள்ள முருகுதடா.

உரை : நலம் பலவற்றையும் எண்ணி மனத்தால் நினைப்பதை விடுத்து நின்னைப் பழித்துரைத்த செய்தியை உள்ளே நினைக்குந் தோறும் எனக்கு உள்ளமெல்லாம் உருகுகிறது, காண். எ.று.

சிவனுடைய நலங்கள் எண்ணிறந்தனவாகலின் சில பலவற்றையேனும் நினைந்து புகழ்வதை விட்டுப் பழித்துப் பாடிய துண்டு (2780 காண்க). அதனை யுள்ளத்தில் நினைவு கூரும்போது என் மனம் உருகுகின்றது என்பார், "எள்ளி யுரைத்ததனை உண்ணி நினைக்குந்தோறும் எனக்கு உள்ளம் உருகுதடா" என வுரைக்கின்றார். இனி வருவனவற்றுட் காணப்படும் "அடா" என்பது இரக்கக் குறிப்புணர்த்துவதாகக் கொள்க. (11)

2881. கடையவனேன் வைதகடுஞ் சொன்னினைக்குந் தோறும்
உடையவனே யென்னுடைய வுள்ள முருகுதடா.

உரை : என்னை ஆளாக வுடைய பெருமானே, கடைப்பட்ட வனாகிய யான் உன்னை வைது பாடிய சொற்களை நினைக்கும்போதெல்லாம் எனது உள்ளம் உருகுகிறது, காண். எ.று.

கீழ்மக்கள் பேசும் போதெல்லாம் பிறரை வைது பேசுவதே இயல் பாக இருப்பது கொண்டு, "கடையவனேன் வைத கடுஞ்சொல்" எனவும், கடுமை பின்னர் நினைவிற் றோன்றி வருத்துதலால், "உள்ளம் உருகுதடா" எனவும் இசைக்கின்றார். (12)

2882. பித்தனெனத் தீமை பிதற்றியதெண் ணுந்தோறும்
உத்தமனே யென்னுடைய வுள்ள முருகுதடா.

உரை : உத்தமப் பொருளாகிய சிவனே, உன்னைப் பித்தனென்று குற்றப்பட நான் வாய் வதறியதை நினைக்கும் போதெல்லாம் என்னுடைய நெஞ்சம் உருகுகிறது, காண். எ.று.

"நமலம் அறுப்பார் பித்தரெனும் நாமம் உடையார்" (1703) எனப் பாடினமையின், "பித்தனெனத் தீமை பிதற்றியது" எனக் கூறுகின்றார். மக்களைப் போல வாத பித்த சிலேத்துமங்களையுடைய திருமேனியனல்ல னாதலின், சிவனைப் பித்தனெனல் குற்றம்; அன்றியும் பித்தனெனப் படுபவன் மக்களினத்தில் உயர்ந்தவனாகக் கருதப்படானாகலின், பித்த னென வுரைப்பதை, "பித்தனெனத் தீமை பிதற்றியது" எனச் சொல்லி வருந்துகிறார். (13)

2883. மன்றுடையாய் நின்னருளை வைதகொடுஞ் சொற்பொருளில்
ஒன்றை நினைக்கிலெனக் குள்ள முருகுதடா.

உரை : தில்லையம்பலத்தையுடைய சிவபெருமானே, நின்னுடைய அருட் செயல்களைப் பழித்துப் பேசிய என் சொற்களின் பொருளில் ஒன்றை நினைத்தாலும் என் மனம் இப்போது உருகுகின்றது, காண். எ.று.

மன்று - தில்லையம்பலம். பிறை சூடியதும், கங்கையைச் சடையிற் கொண்டதும், மங்கை பங்கனானதும், என்பு மாலையணிந்ததும், விட முண்டதும், புரமெரித்ததும், மதுரையிற் பல திருவிளையாடல் புரிந்ததும், முனி மகளிர்பால் பலி திரிந்ததும், பிறவும் ஆகிய அகத்துறைக்கண் செவிலி முதலிய தாயர் தோழியர் கழறிக் கூறிய கூற்றுக்களில் இங்கித மாகப் பழித்துரைகள் உரைக்கப்பட்டதை நினைந்து வருந்துமாறு புலப்பட "வைத கொடுஞ் சொற் பொருளில் ஒன்றை நினைக்கின் உள்ளம் உருகுதடா" என ஓதுகின்றார். (14)

2884. வெருவாம லையோ விளம்பியசொல் லெல்லாம்
ஒருவா நினைக்கிலெனக் குள்ள முருகுதடா.

உரை : சிவபெருமானே, அச்சமில்லாமல் நான் பேசிய சொற்களை யெல்லாம் ஒன்றும் விடாமல் நினைத்தால் ஐயோ என் மனம் உருகுகிறது காண். எ.று.

நெஞ்சில் அச்சமிருந்தால் ஒருவரை இகழ்ந்துரைக்க எண்ண முண்டாகாது; நாவும் எழாது; ஆதலால் "வெருவாமல் விளம்பிய சொல் லெல்லாம்" என்று கூறுகிருர். ஒருவாமல் என்ற எதிர்மறை வினை யெச்சம் ஈறு கெட்டது. (15)

2885. புலைக்கொடியேன் புன்சொற் புகன்றதெண் ணுந்தோறும்
உலைக்கண்மெழு காகவென்ற னுள்ள முருகுதடா.

உரை: புலைத் தன்மையும் கொடுமைப் பண்புமுடைய யான் பேசிய புன்மொழிகளை எண்ணும் போதெல்லாம் உலைத் தீயிலிட்ட மெழுகு போல என் நெஞ்சம் உருகுகிறது, காண். எ.று.

புலைத் தன்மை - புலால் உண்ணும் இயல்பு. புன்சொல் - தெளி வில்லாத சொற்கள். "தேற்ருப் புன்சொல் நோற்றிசின்" (புறம்) எனச் சான்ருேர் வழங்குவதறிக. உயர்ந்தோர் திருமுன் புன்சொற்களைப் பேசுதல் குற்றமாதலின், அதனுல் மன முருகுதலைக் கூறுகின்ருர். (16)

2886. ஈடில்பெருந் தாயி லினியாய்நின் றண்ணருட்பால்
ஊடியசொல் லுன்னிலெனக் குள்ள முருகுதடா.

உரை: ஒப்பில்லாத பெருமை கொண்ட தாயினும் இனிய பெருமானே, உன்னுடைய தண்ணிய அருட்டிருமுன்பு யான் பிணங்கிப் பேசிய சொற்களை நினைக்கின் எனது மனம் உருகிறது, காண். எ.று.

உலகுயிர்கட்குத் தாயினும் சிறந்த அன்புருவாய உறவு வேறின்மை யின், "ஈடில் தாய்" எனவும், அன்பாற் பெருமை மிக்கமையின், "பெருந் தாய்" எனவும் இயம்புகின்ருர். தாயிற் சிறந்த தயா வுடையனுதலால், "தாயில் இனியாய்" என்கின்ருர். பிறவி வெம்மையால் வருந்துவோர்க்குத் தண்ணிய திருவருள் திருமுன் இன்பமும் சாந்தமும் தழைத்து நிலவுதல் இயல்பாக மாறுற்றுப் பிணங்குவது குற்றமாதலை நினைக்கையில் நெஞ்சம் மிகவும் வருந்துவது புலப்படுத்தற்கு "உள்ளம் உருகுதடா" என்று இசைக் கின்ருர். (17)

2887. புரைத்தமன வஞ்சப் புலையேன் றிருவருளை
உரைத்தபிழை யெண்ணிலெனக் குள்ள முருகுதடா.

உரை: குற்றம் நிறைந்த நெஞ்சமும் வஞ்சனையும் புலைத் தன்மை யும் உடைய யான் நினது திருவருளின் நலத்தை எண்ணுமற் பேசிய குற்றங்களை நினைத்தால் எனது மனம் நீரா யுருகுகிறது, காண். எ.று.

புரை - குற்றம். புரைத்த மனம் - உள்ளொன்று மில்லாத ஓட்டை நெஞ்சம் என்றுமாம். வஞ்சக் கருத்தும் புலை யுணர்வும் என விலக்கப் பட்டவை தன்பால் உடைமை கூறுவார், "வஞ்சப் புலையேன்" என்று கூறுகின்ருர். நலம் பயக்கும் திருவருளைத் தீது செய்வது போலப் பழித்தல் பிழையாதலால் "திருவருளை யுரைத்த பிழையை யெண்ணில் உள்ளம் உருகுதடா" என வுரைக்கின்ருர். (18)

2888. நாடி நினையா நவையுடையேன் புன்சொலெலாம்
ஓடி நினைக்கிலெனக் குள்ள முருகுதடா.

உரை : நலம் தீங்குகளை ஆராய்ந்து காணாத குற்றமுடைய யான் உரைத்த புன்சொற்களனைத்தையும் மீள நினைக்கும்போது எனக்கு மனம் உருகுகிறது, காண். எ.று.

நாடுதல் - நலம் தீமைகளை ஆராய்தல். நலந் தீங்குகளைக் காணாது பேசுதல் குற்றமாதலால், "நாடி நினையா நவை யுடையேன்" என்று இசைக்கின்றார். நவை - குற்றம். நவை யுடையார் பேசுவன குற்ற முடையவாதல் கண்டு, அவற்றைப் "புன்சொல்" என்று புகல்கின்றார். ஓடி நினைத்தல் - நெடிது நினைத்தல். (19)

2889. வெப்பில் கருணை விளக்கனையா யென்பிழையை
ஒப்பி நினைக்கிலென குள்ள முருகுதடா.

உரை : தண்ணிய கருணையொளி செய்யும் விளக்குப் போன்றவனே, யான் செய்துள்ள குற்றங்களை மன மொத்து நினைக்கும்போது என் மனம் உருகுகிறது, காண். எ.று.

வெம்மை யொளி செய்யும் விளக்குப் போலாது குளிர்ந்த ஞான வொளி நல்குவது பற்றி, இறைவனை, "வெப்பில் கருணை விளக்கனையாய்" என்கின்றார். வேறு வேறு நினைவுற் றலையும் மனம் ஒன்றி நினைப்பது ஒப்பி நினைத்தலாம். (20)

2890. அஞ்சலென்றாய் நின்பால் அடாதமொழி பேசியதை
அஞ்சி நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : அஞ்சாதே என அருளுரை வழங்குகின்ற பெருமானே, நின் திருமுன் ஒவ்வாதவற்றை யான் உரைத்ததை அச்சத்தோடு நினைக்கும்போது என்னுடைய ஐம்பொறிகளும் நிலை கலங்குகின்றன, காண். எ.று.

திருவருள் நெறி யறிந்து அதன் அருமை கண்டு யான் அஞ்சின போது அச்சம் தவிர்த்து நெறி காட்டினமை பற்றி, "அஞ்சலென்றாய்" என வுரைக்கின்றார். அஞ்சலெனக் குறிக்கும் கையை "அபய கரம்" என்பர்; அதனால் அஞ்ச லென்றாய் என்றலும் உண்டு. அடாத மொழி - இறைவன் பெருமைக்கு ஒவ்வாதவற்றை உரைப்பது; அடுக்கும் மொழி, யாவரும் தக்கதெனப் போற்றும் மொழி. பேசு முன்னரும், பேசும் போதும் தோன்றாத அச்சம், பேசிய பின்பு தெளிவு நிலையில் தோன்று தலால், "அஞ்சி நினைக்கில்" என்றும், நினைக்கையில் வரக் கடவ துன்பங்கள் பொறி புலன்களைந்தையும் கலக்கி விடுதலால், "அஞ்சும் கலங்குதடா" என்றும் எடுத்துரைக்கின்றார். (21)

2891. மெய்யோர் சிறிதுமிலேன் வீண்மொழியா லூடியதை
ஐயோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : மெய் பேசும் செயல் சிறிதும் இல்லாத யான் வீண் பேச்சுக்களைச் சொல்லிப் பிணங்கியதை இப்போது நினைத்தால், ஐயோ, என் பொறி புலன் ஐந்தும் நிலை கலங்குகின்றன. எ.று.

மெய் பேசுவது நற்பண்பாகவும், அது சிறிதும் தன்பால் இல்லையென்பார், "மெய்யோர் சிறிது மில்லேன்" என்று கூறுகின்றார். மெய்யே மொழியுமிடத்து வீண்பேச்சுக்கு இடமில்லை. பொய் புகலுமிடத்துத்தான் வீணுரையும் பூசலும் கலகமும் தோன்றும்; அதனால் வீணுரையாடிக் குற்றப் பட்டேன்; அதனால் உளவாகும் துன்பங்களை நினைக்கின் அச்சம் மிகுந்து பொறியைந்தும் கலங்குவது விளங்க, "அஞ்சும் கலங்குதடா" என வருந்துகின்றார். (22)

2892. இத்தா ரணிக்குளெங்கு மில்லாத தீமைசெய்தேன்
அத்தா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : இவ்வுலகில் எவ்விடத்து இல்லாத தீங்கினைச் செய்துள்ளேன்; அத்தனே, அதனை நினைக்கும்போது என் பொறி புலனைந்தும் கலங்குகின்றன, காண் எ.று.

தாரணி - உலகு; மக்களுலகின் மேற்று. மக்களினத்தில் எத்தகைய தீயவரும் செய்திராத தீங்குகளை யான் செய்துள்ளேன் என்பாராய், "இத்தாரணிக்குள் எங்கும் இல்லாத தீமை செய்தேன்" என்று கூறுகின்றார். (23)

2893. பொய்யால் விரிந்த புலைமனத்தேன் செய்பிழையை
ஐயா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : பொய்ந் நினைவுகளால் மிக்குற்று புலைத் தன்மையையுடைய மனத்தை யுடையனாதலால் செய்பிழைகளை நினைக்கும்போது, ஐயனே, என் பொறி புலன்களைந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

பொய்ந் நினைவும், பொய் யுரையும் பொய்ச் செய்கையும் மிக்குற்றமையும், அதற்கு மனம் ஏதுவாதலையும் காட்டற்குப் "பொய்யால் விரிந்த புலை மனத்தேன்" என்று புகல்கின்றார். பொய், கொலை, களவு, காம முதலிய பெருங் குற்றங்கட்குக் காரணமும் கருவியுமாதலின், மனத்தைப் "புலை மனம்" என்று கூறுகின்றார். (24)

2894. இப்பாவி நெஞ்சா லிழுக்குரைத்தே னுங்கதனை
அப்பா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : பாவியாகிய என்னுடைய நெஞ்சினால் தவறான சொற்களைப் பேசினேன்; அதனை இவ்விடத்தே நினைப்பேனாயின், என் பொறி புலன்கள் நிலைகலங்குகின்றன, காண். எ.று.

தவறான சொற்களை வழங்குதற்கு நெஞ்சின் தூண்டுதல் காரணமாதல் தோன்ற, "நெஞ்சினால்" என்றும், தவறு கூறும் செயலால் பாவியாதல் பற்றி, "பாவி நெஞ்சால்" என்றும் இயம்புகின்றார். (25)

2895. எண்ணுக் கொடுமையெலா மெண்ணியுரைத் தேனதனை
அண்ணு நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : யாரும் செய்யக் கருதாத கொடுமைகள் அனைத்தையும் யான் கருதிச் சொல்லியுள்ளேன்; அதனை இப்போது நினைத்தால், அண்ணலே, என் பொறி புலன்கள் நிலைகலங்குகின்றன. எ.று.

எண்ணுக் கொடுமை - இதுகாறும் யாரும் எண்ணுத கொடுமை. நினைவின் வழியது செயலாதலின், "எண்ணி யுரைத்தேன்" என இயம்புகின்ருர். (26)

2896. வெம்மான் மனத்து வினையேன் புகன்றதெலாம்
அம்மா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : வெவிய மயக்குற்ற மனத்தினல் வினையேனுகிய யான் சொன்னதெல்லாம், இப்போது நினைத்தால், அம்மவோ, என்னுடைய பொறி புலனைந்தும் உருகுகின்றன, காண். எ.று.

மனத்திற் படிந்த மயக்கத்தின் மிகுதி குறித்தற்கு, "வெம்மான் மனம்" எனவும், ஊழ்வினை சூழ்ந்திருப்பது விளங்க, "வினையேன்" எனவும் விளம்புகின்ருர். (27)

2897. எச்சோடு மில்லா திழிந்தேன் பிழைகளெலாம்
அச்சோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : யாதும் நிகராதபடிக் கீழ்ப்பட்ட என் பிழைகளை இப்போது நினைக்குங்கால் பொறி புலன்கள் ஐந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

சோடு - ஒப்பு. இது பெரும்பாலும் இணை என்ற பொருளில் வழங்கும். குற்றம் செய்து கீழ்மை யுறுபவரில் எனக்கு நிகராவார் ஒருவரும் இல்லை யென்னும் அளவு தாழ்வுற்றேன் என்றற்கு "எச்சோடும் இல்லா திழிந் தேன்" என்று இயம்புகின்ருர். அச்சோ - இரக்கக் குறிப்பு. (28)

2898. வந்தோடி நைமனத்து வஞ்சகனேன் வஞ்சமெலாம்
அந்தோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : இங்கு மங்கும் வந்தும் ஓடியும் வருந்தி மெலிகின்ற மனத்தையுடைய வஞ்சகனுகையால், இப்போது அவ்வஞ்சனைகளை நினைக்கும்போது பொறி புலன் ஐந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும், தன்மை முன்னிலையா யீரிடத்த" (சொல்.29) என்ற தொல்காப்பியத்தின் உரையில் ஈங்கு ஆங்கு என்பவற்றைச் சான்ருேர் தன்மைக்கண் காட்டுதல் நோக்குக. நைமனம், வினைத்தொகையால் நைகின்ற மனம் எனப் பொருள் கொண்டு

நிற்கிறது. நைதல் - வருந்தி மெலிதல். வருத்தத்தின் நீங்கற்கு வஞ்ச நினைவுற்று மீளவும் வருத்தத்தி லாழ்தல் நெஞ்சின் இயல்பாதலால், "வஞ்சகனேன் வஞ்சமெலாம்" என வுரைக்கின்றார். அந்தோ - இரக்கக் குறிப்பு. (29)

2899. ஓவாக் கொடியே னுரைத்த பிழைகளெலாம்
ஆவா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : நீங்காத கொடுமை யுடையவனுகையால் நான் பேசிய குற்றங்களை யெல்லாம் நினைக்கும்போது, ஆ! ஆ! என் பொறி புலன் ஐந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

ஓவுதல் - நீங்குதல். கொடியேன், நெறி கோடித் தீமை செய்பவன். உரைத்தன யாவும் குற்றமாய்த் துன்பம் விளைவித்தலால் "பிழைகளெலாம் நினைக்கில் எனக்கு அஞ்சும் கலங்குதடா" எனக் கூறுகின்றார். ஆ ஆ - ஆவா என வந்தது. "ஆவா இருவர் அறியாவடி" (திருக்கோ. 72) என வருதல் காண்க. (30)

2900. கரைசேர வெண்ணுக் கடையேன் பிழையை
அரைசே நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : அம்பலத்தரசே, நற்கதி யடைய மாட்டாத கீழ்மகனுகிய எனது பிழைகளை இப்போது நினைக்கும் போது பொறி புலனைந்தும் நிலை கலங்குகின்றன, காண். எ.று.

வாழ்க்கை துன்பக் கடல் போலுவதால், இன்ப நிலையமாகிய நற்கதியைக் "கரை" எனக் கூறுகின்றார். கரை சேர எண்ணிய வழிக் கடையனுகும் செயல்களை ஒருவன் நினைக்க மாட்டானென்றற்குக் "கரை சேர எண்ணுக் கடையேன்" என்று வருந்துகிறார். அம்பலத்தில் விளங்கும் ஆடலரசனை நினைந்து மொழிதல் பற்றி, "அரைசே" என்கின்றார். அரசு - எதுகை நயம் பற்றி "அரசே" என வருகிறது. "சீருடைச் சிவபுரத்தரைசே" (கோயிற்) என்பது திருவாசகம். (31)

2901. மருளுடையேன் வஞ்ச மனத்தீமை யெல்லாம்
அருளுடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : அருளே செல்வமாக வுடைய பெருமானே, மருள் நிறைந்த எனது வஞ்ச மிக்க மனத்தால் உண்டாகிய தீங்குகளனைத்தையும் எண்ணும்போது பொறி புலனைந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

மருள் - மயக்கம்; தெளிவின்மையுமாம். மருண்ட மனத்தினுல் வஞ்ச நினைவும் தீய செயலும் புரிபவன் என்றற்கு "மருளுடையேன் வஞ்ச மனத் தீமை" என விளம்புகின்றார். (32)

2902. ஈண்டவனேன் வன்சொல் இயம்பியதை யென்னுடைய
ஆண்டவனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : என்னை ஆண்டு கொண்ட பெருமானே, குற்றம் பலவும் நிறைந்தவனுகிய யான் இயம்பிய வன்சொற்களை நினைக்கும்போது என் பொறி புலனைந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

ஆண்டவன் - வேண்டுவன தந்து வாழச் செய்தவன்; இறைவன் எனினும் அமையும். ஈண்டு அவன் - குற்றங்கள், நிறைந்தவன். ஈண்டுதல் - நிறைதல். "இழைத்துணர்ந்து ஈண்டிய கேள்வி யவர்" (குறள்) என்பது காண்க. செயப்படு பொருளாகிய குற்றம் வருவிக்கப் பட்டது. (33)

2903. வற்புதனேன் வஞ்ச மனப்பிழையை மன்ருடும்
அற்புதனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : அம்பலத்தில் ஆடுகின்ற அற்புதப் பெருமானே, கீழ்மகனுகிய என்னுடைய வஞ்சனை நிறைந்த மனத்தால் விளைந்த குற்றங்களை நினைத்தால் என் பொறி புலனைந்தும் கலங்குகின்றன, காண். எ.று.

தில்லையம்பலத்தில் அற்புதத் திருக்கூத்தாடுவதால், சிவபெருமானை "மன்ருடும் அற்புதனே" எனப் புகழ்கின்ருர். அரிய உயரி தோற்றமும் செயலு முடையவன், அற்புதன். அற்புதனுக்கு மறுதலை, வன்புதன் என்பது; எளிய் இழிந்த தோற்றமும் செயலு முடையவன் என்பது பொருள். வஞ்ச நினைவுகளை யுடைய மனம், வஞ்சமனம் எனப்படுகிறது. எல்லாக் குற்றங்களுக்கும் மனம் காரணமாதலால், "வஞ்ச மனம்" எனப் பழிக்கின்ருர். (34)

2904. துன்புடையேன் புன்மொழிகள் தூற்றியதை யெவ்வுயிர்க்கும்
அன்புடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா.

உரை : எல்லா வுயிரிடத்தும் அன்பு செய்யும் பெருமானே, துன்பம் மிக வுடையவனுகிய யான் புன்சொற்களால் உன்னையும் பிறரையும் தூற்றிப் பேசிய சொற்களை இப்போது எண்ணும்போது என் பொறி புலன்கள் ஐந்தும் நிலை கலங்குகின்றன. காண். எ.று.

எல்லா வுயிர்களிடத்தும் உணர்வாய் எழுந்தருளுவ தொன்றே எவ்வுயிர்பாலும் அன்புடைய தென்பதை வற்புறுத்துதலால், "எவ்வுயிர்க்கும் அன்புடையாய்" என மொழிகின்ருர். துன்பங்கள் தோன்றி வருத்தும்போது எவரையும் தூற்றிப் பேசும் நிலை மக்களிடையே யுண்டாதலும், தெளிவு நிலையில் அதனுல் உளதாகும் துன்பத்தை நினைத்தலும் நிகழ்தலால், "புன் மொழிகள் தூற்றியதை எண்ணில்" எனக் கூறுகின்ருர். தூற்றுதல்- இன்னுச் சொற்களால் ஏசிப் பேசுதல். (35)

2905. கொதிக்கின்ற வன்மொழியாற் கூறியதை யையோ
மதிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : ஐயோ, கேட்டார் செவி சுடப் பேசிய பொல்லாச் சொற்களை நினைக்குந்தோறும் வாளால் அறுப்பது போல நினைவு என்னை வருத்துகிறது, காண்க. எ.று.

செவியிற் கேட்ட மாத்திரமே நெஞ்சமும் உடம்பும் வெதும்பச் செய்வது பற்றி, "கொதிக்கின்ற வன்மொழி" என்று கூறுகின்றார். வன்மொழி - தீய சொற்கள். மதித்தல் - நினைத்தல். (36)

2906. சினங்கொண்ட போதெல்லாஞ் செப்பிய வன்சொல்லை
மனங்கொள்ளுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : கோப முண்டான போதுகளில் நான் பேசிய கொடிய சொற்களை இப்போது எண்ணும் போதெல்லாம் என் உள்ளத்தை அக் குற்றம் வாளால் அறுப்பது போன்ற துயரத்தைச் செய்கின்றன, காண். எ.று.

சினம் - கோபம். சின முண்டாகிற போது நல்லறிவு மழுங்கி விடுதலால், சொல்லும் செயலும் துன்பம் விளைவிப்பதால், "செப்பிய வன் சொல்லை மனம் கொள்ளும் தோறும் வாளிட் டறுக்குதடா" எனக் கூறுகின்றார். மனம் கொள்ளுதல் - நினைவு கூர்தல். (37)

2907. செய்தநன்றி யெண்ணாச் சிறியவனே னின்னருளை
வைத்தெண்ணுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : சிறுமை யுடையவனாய்ப் பிறர் செய்த நன்றியை மறந்து ஒழுகிய யான் நினது திருவருளை வைது ஏசியதை நினைக்கும்போது நன்றி கொன்ற குற்றம் என்னுடைய உள்ளத்தை வாளால் அறுப்பது போலத் துன்புறுத்துகிறது, காண். எ.று.

செய்ந்நன்றி மறத்தற்கு ஏது அறிவின் சிறுமையாதலால், "செய்த நன்றி யெண்ணாச் சிறியவனேன்" எனத் தெரிவிக்கின்றார். இறைவன் திருவருளை நினைக்கும்போது சிறுமையும், நன்றி மறந்த குற்றமும் தோன்றி வருத்துவதால், "நின்னருளை வைத தெண்ணுந் தோறும்" என வுரைக்கின்றார். (38)

2908. பொய்த்த மனத்தேன் புகன்றகொடுஞ் சொற்களெலாம்
வைத்துநினைக் குந்தோறும் வாளிட் டறுக்குதடா.

உரை : பொய் நிறைந்த மனத்தை யுடையவனாதலால், யான் உரைத்த கொடிய பொய்ச் சொற்களையெல்லாம் நெஞ்சில் நினைவுற்று எண்ணுந் தோறும் விளைவுகள் தோன்றி வாளால் அறுப்பது போலத் துன்புறுத்துகின்றன, காண். எ.று.

பொய்யை யுடைய மனம், பொய்த்த மனம் எனப்படுகிறது. மனம் அத்தன்மையுடைய தாயினமையின், கொடுஞ் சொற்களையே புகன்றேன் என வுரைக்கின்றார். கொடுஞ் சொல் - நேர்மையில்லாத சொல். (39)

2909. பொங்குகின்ற தீமை புகன்றதெலா மெண்ணியெண்ணி
மங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : மேன் மேற் பெருகுகின்ற துன்பத்தைச் செய்யும் தீய சொற்களை முன்பு யான் பேசியதை இப்போது பலகாலும் நினைந்து நினைந்து அறிவு மழுங்கும்போது உள்ளால் வாளால் அறுப்புண்பது போல வருந்துகிறது, காண். எ.று.

பொங்குதல் - மிகுதல். தீமை - தீது செய்யும் சொற்கள். சொல்லும் தமக்கும் கேட்கும் பிறர்க்கும் துயரம் செய்தலின், அவற்றின் நினைவு அறிவயரச் செய்தல் பற்றி, "எண்ணி மங்குகின்ற தோறும்" எனக் கூறுகின்றார். (40)

2910. ஊடுகின்ற சொல்லா லுரைத்ததனை யெண்ணியெண்ணி
வாடுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : மக்களோடு உரையாடும் போது கேட்பவர் பிணங்கி நீங்கத் தக்க சொற்களைச் சொல்லியதை இப்போது நினைந்து மனம் வருந்தும் போதெல்லாம் வாளால் அறுக்கப்பட்டது போலத் துன்புறுத்து கின்றது, காண். எ.று.

ஊடுதல் - பிணங்குதல். பிணக்கம் கருத்து வேறு பட்டால் உளதாவது; கருத்து வேறுபாடு பற்றிப் பிணங்கி வன்சொல் வழங்குவது குற்றமாத லால், பிணங்கிய சொற்களைப் பேசியது நினைந்து வருந்துகின்றார். (41)

2911. உயங்குகின்றேன் வன்சொல் லுரைத்ததனை யெண்ணி
மயங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : வன்சொற்கள் பேசியதற்கு வருந்துவேனாயினும், பேசியதை மீளவும் நினைந்து அறிவு அயர்கின்றது; அயருந் தோறும் மனம் வாள் கொண்டறுப்பது போல நோயுறுகின்றது, காண். எ.று.

முற்றவும் கடியும் குற்றமன்மையின், சினத்தால் செப்பியதை நல்லறி வுடையோர் மீள மீள நினைந்து வருந்துவராதலால், "உயங்கு கின்றேன்" என வுரைக்கின்றார். வெகுண்ட போது அறிவு மழுங்கு வதால், அதனால் பிறந்த வன்சொற்களை நினைக்கையில் அறிவு சோர்ந்தமைக்கு வருந்துமாறு புலப்பட, "எண்ணி மயங்குகின்ற தோறும்" எனக் கூறுகின்றார். (42

2912. சொல்வினைவு நோக்காதே சொன்னதெலா மெண்ணுதொறும்
வல்வினையே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா.

உரை : சொல்லும் சொல்லால் உண்டாகும் நலம் தீங்குகளை எண்ணமல் சொல்லிய சொற்களை நினைக்கும்போது, கொடிய வினையை யுடைய மனத்தை அவை வாள் கொண்டு அறுப்பது போல வருத்தம் செய்கின்றன, காண். எ.று.

இன்சொல் இனிதீன்றலும் வன்சொல் தீது பயத்தலும் இயல்பாகலின், "சொல் வினைவு நோக்காதே சொன்னதெலாம் எண்ணுதொறும்" என்று சொல்லுகின்ருர். (43)

2913. மேல்வினைவு நோக்காதே வேறுசொன்ன தெண்ணுதொறும்
மால்வினையே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா.

உரை : எதிர்காலத்தில் இன்னது பயக்கும் என்று நினையாமல் வேறுபடப் பேசிய சொற்களை நினக்கும் போதெல்லாம் வினையேனுகிய என் மனத்தை அந்நினைவு வாளால் அறுப்பது போலும் துன்பம் செய்கிறது, காண். எ.று.

மேல் வினைவு - நாளை நிகழ்வது, வேறு சொன்னது, நண்பரும் வெறுத்து வேறுபட நினைக்குமாறு பேசியது. மால்வினை - தனக்குரிய பயனை நுகர்வித்தல்லது நீங்காத பெரிய வன்மையையுடைய வினை; மயக்க வுணர்வை நல்கும் வினை யெனினும் பொருந்தும். (44)

2914. விஞ்சகத்தா லந்தோ விளம்பியதை யெண்ணுதொறும்
வஞ்சகத்தே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா.

உரை : தருக்கினுல் பலர் முன் பேசியதை நினையும் போதெல்லாம், அந்தோ, வஞ்சகனுகிய என் மனத்தை அப்பேச்சு வாளால் அறுப்பது போல் வருத்துகிறது, காண். எ.று.

விஞ்சகம் - தருக்கு; செருக்கினுல் உளதாகும் பெருமிதமுமாம். தருக்கினுல் மனம் தடிப்புற்று அடாதன பேசுவிக்குமாதலால், "விஞ்சகத்தால் விளம்பியது" என்கின்ருர். வஞ்சகம், வஞ்சனை, சூது முதலிய தீச்செயலை நினைக்கும் மனம். (45)

2915. விலங்குகின்ற நெஞ்ச வினைவையெண் ணுந்தோறும்
மலங்குகின்றே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா.

உரை : நன்னெறியின் நீங்கியொழுகுகின்ற நெஞ்சினுல் வினையக் கூடிய தீமைகளை நினைவு கூரும் போதெல்லாம், கலங்குகின்ற என் மனத்தை அந்நினைவு வாளாலறுப்பது போன்ற நோயைச் செய்கிறது, காண். எ.று.

விலங்குதல் - குறுக்கிடுதல்; ஈண்டு நெறியினின்றும் நீங்குதல், நெஞ்சம் நீங்குதலாவது, நெறி பிறழ்ந்த எண்ணங்களை மேற்கொள்ளுதல். மலங்குதல் - கலக்கமுறுதல். (46)

2916. தூய்மையிலா வன்மொழியாற் சொன்னவெலா
மெண்ணுதொறும்
வாய்மையிலே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா.

உரை : வாய்மைப் பண்பில்லாத யான் சில சமயங்களில் மாசு படிந்த வன்மையாகப் பேசிய சொற்களை நினையும்போது என் மனம் வாளால் அறுப்புண்பது போல வருந்துகிறது, காண். எ.று.

யாதும் தீங்கு பயவாத சொற்களைப் பேசுவது வாய்மை. அஃது இல்லாமையால் கேட்போர் மனம் புண்படச் சொல்வது "தூய்மையிலா வன்மொழி" எனப்படுகிறது. தூய்மை வாய்மையால் உண்டாவதாதலால் வாய்மையிலேன் எனக் கூறுகின்றார். "தூய்மை யென்பது அவாவின்மை மற்றது, வாய்மை வேண்ட வரும்" (குறள்) எனச் சான்றோர் கூறுவது காண்க. (47)

2917. கலிக்கின்ற வஞ்சகக் கருத்தைக் கருதி
வலிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : வஞ்சனையான எண்ணங்கள் மனத்தில் தழைத்தோங்குவதை யெண்ணி அவற்றின்கண் ஈர்த்துச் செல்கின்ற போதெல்லாம் என் உள்ளம் வாளால் அறுப்பது போன்ற துன்பத்தை எய்துகிறது. காண். எ.று.

கலித்தல் - தழைத்தல்; ஒன்று பலவாய் விரிதல். வலித்தல் - ஈர்த்தல். நினையா திருக்கினும் நினைக்கச் செய்வது பற்றி "வலிக்கின்ற தோறும்" என வுரைக்கின்றார். (48)

2918. நீட்டுகின்ற வஞ்ச நெடுஞ்சொலெலா நெஞ்சகத்தே
மாட்டுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : வஞ்சனையால் நீட்டிப் பேசுகின்ற நெடுமொழிகளை மனம் நினைந்து பேசுந்தோறும் உள்ளம் வாளால் அறுப்பது போன்ற துன்பம் அடைகின்றது, காண். எ.று.

நீட்டுதல் - நீளப் பேசுதல். நெடுமொழி - வஞ்சின முதலியன போன்ற தருக்கிப் பேசும் சொற்கள். (49)

2919. பொருந்துகின்ற வஞ்சப் புதுமையெண்ணி யையோ
வருந்துகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : வஞ்சனையாக இடத்துக்கும் காலத்துக்கும் பொருந்தப் பேசும் போது கலக்கும் புதுக் கற்பனைகளை நினைக்கும்போது, உள்ளம் வருந்துவது வாளிட் டறுப்பது போல்கிறது, காண். எ.று.

பொய்யை மெய் போலப் பேசுவதும், இடத்துக்கும் காலத்துக்கும் ஒப்பக் கற்பனை யமைத்துப் பேசுவதும் வஞ்சனை வகையாகலின், "பொருந்துகின்ற வஞ்சப் புதுமை" எனப் புகல்கின்றார். அது நல்லோர் மனத்தில் மிக்க வருத்தத்தை உறுவிப்பதால், "உள்ளே வாளிட் டறுக்குதடா" என வுரைக்கின்றார். (50)

2920. வெருவிக்கும் வஞ்ச வெறுஞ்சொலெலலாம் நெஞ்சில்
வருவிக்குந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

உரை : கேட்போரை அச்சுறுத்தும் வஞ்சனையாகப் பேசிய வெறுஞ் சொற்களை மனதில் நினைவு கூரும் போதெல்லாம், அவை என். உள்ளத்தில் வாள் கொண்டறுப்பது போன்ற வேதனையைத் தருகின்றன, காண். எ.று.

வெருவித்தல். அஞ்சுவித்தல்.வெறுஞ் சொல்-பயனில்லாத சொற்கள்' வருவித்தல் - நினைவுக்குக் கொண்டு வருதல். வெறுஞ் சொற்களால் பிறரை அச்சமுறச் செய்தமை நினைந்து வருந்தியவாறும். (51)

2921. ஊடும்போ துன்னை யுரைத்தவெலா நாயடியேன்
நாடும்போ தெல்லாமென் னாடி நடுங்குதடா.

உரை : உன்னோடு அன்பாற் பிணங்கியபோது நாயினும் கடையேனாகிய நான் கூறிய சொற்களை யெல்லாம் மீள நினைக்கிறபோது என் தேகத்திலுள்ள நாடிகள் யாவும் அடங்கி யொழிகின்றன, காண். எ.று.

ஊடுதல் - அன்பினாற் பிணங்குதல். காதலர் கூட்டத்தில் அன்பு மிகுதியால் ஊடலும் பின்னர்க் கூடலும் உண்டாகுமாயினும் ஊடற் காலத்தில் பிணங்கும் சொற்கள் தோன்றுத லுண்டு. அவற்றுள் வெவ்விய சொற்கள் பிறத்தற்கு இடமுண்டு. அதனால் "ஊடும் போதுன்னை யுரைத்த வெலாம்" என வுரைக்கின்றார். நாடுதல் - எண்ணுதல்; நினைத்தலுமாம். தேகத்தில் உள்ள குருதி பாயும் நரம்புகள், நாடி எனப்படும். குருதி யோட்டம் நாடித் துடிப்பாம். அச்சம், அவலம் முதலியன தோன்றும்போது நாடித் துடிப்பு விரைந்து இயங்கும். விரைந்த துடிப்பு மிக்க சோர்வு பயக்குமாதலால், "நாடி நடுங்குதடா"ல் எனக் கூறுகின்றார். நடுங்குதல்-ஈண்டு மிக்க துடிப்பின் மேற்று. (52)

2922. வாய்க்கடையா வன்சொல் வழங்கியவென் வன்மனத்தை
நாய்க்கடையே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

உரை : வாயாற் சொல்லலாகாத வன்சொற்களைப் பேசிய நாயிற் கடையனாகிய யான் என் மனத்தின்கண் அதனை நினைக்கும் போதெல்லாம், என் தேகத்து நாடிகள்யாவும் துடிக்கின்றன, காண். எ.று.

ஒழுக்க முடையோர் வாயாற் சொல்லுதலில்லாத இழிசொல், இங்கே "வாய்க் கடையா வன்சொல்" எனப்படுகிறது. நாடிகள் - தொகையா)

மூன்றும், வகையால் பத்தும், விரிவால் எழுபத் தீராயிரமுமாம் என்று சிலப்பதிகார வுரை கூறுகிறது. இடை, பிங்கலை, சுழுமுனை எனத் தொகை மூன்று; பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், கூர்மன், நாகன், கிருகரன், தேவ தத்தன், தனஞ்சயன் என வகையாற் பத்து; இவை எழுபத் தீராயிரமாய் விரியும். "நாடிகள் எழுபத் தீராயிரத்தினும் தச நாடிகள் பிரதான மெனக் கொள்க" என்பர். (53)

2923. கன்றி யுரைத்த கடுஞ்சொற் கடுவையெலாம்
நன்றியிலே னெண்ணுதொறு நாடி நடுங்குதடா.

உரை : மிகவும் பயின்று மொழிந்த கடுஞ் சொற்களின் கடுமை முழுதையும் நன்றி யுணர்வில்லாத யான் நினைக்குந் தோறும் என் தேக நாடிகள் யாவும் துடிக்கின்றன, காண். எ.று.

கன்றுதல் - பழகுதல். பன்னாள் உரைத்துப் பழகி நாத் தடித்த கடுஞ் சொற்கள் என்றற்குக் "கன்றி யுரைத்த கடுஞ்சொல்" எனவும், அச் சொல்லின் கடுமை கேட்போர் செவியில் நஞ்சுபோல் வருத்துதல் தோன்றக் கடுமையெனவும் கூறுகின்றார். கடுஞ்சொற் கடுவெனக் கொண்டு கடுஞ் சொல்லின் நச்சுத் தன்மை யென்பாரும் உண்டு. நன்றி யிலேன் - நன்றி யுணர்வில்லாத யான்; நன்மைப் பண்பு இல்லாதேன் எனலுமாம். (54)

2924. புன்மையினால் வன்சொற் புகன்றபுலைத் தன்மையெலாம்
நன்மையிலேன் எண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

உரை : நற்பண்பு இல்லாமையால் என்பால் உள்ள புன்மைக் குணத்தால் வன்சொற்களே மொழிந்து புலைத்தன்மை கொண்டதை எண்ணும்போது என் தேக நாடி யனைத்தும் துடிக்கின்றன, காண். எ.று.

நற்பண்பு இல்லாமையால் என்பால் புன்மைச் செயலும் புலைத் தன்மையும் உளவாயின; அதனால் யான் மொழிந்த வன்சொற்களை நினைக்கையில் உடம்பெல்லாம் நடுங்குகிறது என வுரைக்கின்றார். (55)

2925. ஊனெண்ணும் வஞ்ச வுளத்தா லுரைத்தவெலாம்
நானெண்ணுந் தோறுமென்ற னாடி நடுங்குதடா.

உரை : ஊனாலாகிய உடம்பை ஓம்புதலே பொருளாகக் கொண்ட வஞ்சம் நிறைந்த மனத்தினால் நான் பேசிய சொற்களை இப்போது நான் எண்ணும்போது என் நாடியனைத்தும் துடிக்கின்றன, காண். எ.று.

ஊன் எண்ணும் மனம் - ஊனுடம்பைப் பேணுதற்கே நினைக்கின்ற மனம்; ஊனுணவே விரும்பும் மனம் என்றுமாம். ஊனுடம்பு ஓம்புதலே நினைப்பது இழிவாகலின், அதனை மறைத் தொழுகுவது பற்றி, "வஞ்ச மனம்" என்கிறார் என்று கூறுவதும் பொருந்தும். (56)

2926. வஞ்சனையா லஞ்சாது வன்சொல் புகன்றவெலாம்
நஞ்சனையே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

உரை : வஞ்ச மனத்தால் சிறிதும் அச்சமடையாமை கொண்டு வன்சொற்களே தொடர்ந்து மொழிந்ததனுல் நஞ்சின் மறுதோற்றமான நான் எண்ணும் போதெல்லாம் என் தேகநாடி அனைத்தும் துடிக்கின்றன காண் எ.று.

வஞ்சனைப் பழக்க மிகுதியால் அச்சாமை தோன்றியது என்பார் வஞ்சனையாலஞ்சாது என்றுர். வஞ்சனையே கொள்வார் உள்ளம் முடிவில் நஞ்சாதல் உறுதியாதலால் நச்சனையேன் என்கிறுர். நஞ்சனை யேன் ஆயினும் உன்னை நினைக்கையில் வன்சொற்கள் கூறியவாற்ருல் உடம்பெல்லாம் நடுங்குகின்றது என உரைக்கின்றுர். (57)

2927. கோணநெடு நெஞ்சக் குரங்காற் குதித்தவெலாம்
நாணமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

உரை : கோணல் நினைவுகளையுடைய நெடிய மனமாகிய குரங்கினுல் பொருள்களின்மேல் தாவித் தாவி ஆசையுற்றதை நாண மில்லாத யான் இப்போது நினைக்கின், என் தேக நாடிகள் யாவும் துடிக்கின்றன, காண். எ.று.

கோணல் - வளைவு; நன்னெறியினின்றும் நீங்கி ஒழுகுதலுமாம் நெஞ்சத்துக்குப் பெரிய குரங்கை உவமம் கூறுதலால் "வஞ்ச நெடுங் குரங்கு" என்று கூறுகின்றுர். கோணல் நினைவுகளை மறைத்தல் தோன்ற "வஞ்ச மனக்குரங்கு" என வுரைக்கின்றுர். கோணிய சொல்லும் செயலும் காண்போரால் இழிக்கப்படுதலால், "நாணமிலேன்" என்று நவில்கின்றுர். (58)

2928. ஊனமிலா நின்னை யுரைத்தகொடுஞ் சொல்லையெலாம்
ஞானமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

உரை : சிவபெருமானே, குற்றமே யில்லாத வுன்னைக் குற்ற முடையவனுகக் கருதி, ஞான மில்லாமையால் சொல்லிய குற்ற மொழிகளின் கொடுமை யாவும் இப்போது எண்ணுங்கால் என் தேக நாடிகள் யாவும் நடுங்கித் துடிக்கின்றன, காண். எ.று.

ஊனம் - குற்றம். குற்ற முடைய உயிர்கட்கு வேருய் மேலானவனு கலின், சிவனை "ஊனமிலா நின்னை" என வுரைக்கின்றுர். கொடுஞ் சொல், குற்ற முடையனுக எண்ணியேசும் கொடுமையை யுடைய சொற்கள். ஞானத்தாலன்றி இறைவனுடைய நலங்களையறிதல் கூடாதாகலின், "ஞானமிலேன்" எனக் கூறுகின்றுர். "ஊனத்திருள் நீங்கிட வேண்டின் ஞானப் பொருள் கொண்டடி பேணும்" (மயிலாடு) என ஞானசம்பந்தர் உரைப்பதறிக. (59)

2929. எற்றே மதியிலியே னெண்ணு துரைத்ததனைச்
சற்றே நினைத்திடினுந் தாது கலங்குதடா.

உரை : என்னே, நல்லறி வில்லாமையால் இறைவன் நற் பண்புகளை மனத்தால் நினைக்காமல் உரைத்தொழுகிய சொற்களை யெல்லாம் இப்போது சிறிது நினைத்தாலும் என் தாதுக்கள் நிலைகலங்கு கின்றன, காண். எ.று.

எற்று - இரக்கக் குறிப்பு மொழி. "எற்றென் றிரங்குவ செய்யற்க" (குறள்) எனச் சான்றோர் கூறுவது காண்க. மதி - இயற்கை நல்லறிவு. எண்ணுதற் குரியன இறைவன் இறைமைக் குணங்கள். சற்று - சிறி தென்னும் பொருளது. தாது - உடம்பின் தோல், தசை, நரம்பு, எலும்பு முதலியன. மேலே கூறிய நாடிகளும் இத் தாது வகையுள் ஒன்றுமென அறிக. (60)

2930. இனியேது செய்வே னிகழ்ந்துரைத்த சொல்லைத்
தனியே நினைத்திடினுந் தாது கலங்குதடா.

உரை : இதுகாறும் சிவனை யான் இகழ்ந்து பேசிய சொற்களைத் தனியே யிருந்து ஒன்றென்றாக நினைத்தாலும் என் தாது கலங்குகிறது, இனி யான் என்ன செய்வேன். எ.று.

இதுவரையில் நான் சிவனை இகழ்ந்து பேசிய துண்டு; அப் பேச்சுக்களை ஒருசேர வைத்து எண்ணாமல் தனித்தனியாக வைத்து நினைப்பேனாயின், என் உடம்பின் ஒவ்வொரு கூறும் நிலை கலங்குகிறது; ஒருங்கே தொகுத்து நோக்கின் உயிரே நீங்குவது போல்கிறது; இனிச் செய்வ தொன்றும் தெரிகிலேன் என்பாராய், "இனி யேது செய்வேன்" என வருந்துகிறார். (61)

2931. நாயனையே னெண்ணும னலங்கியவன் சொல்லையெலாம்
தாயனையா யெண்ணுதொறுந் தாது கலங்குதடா.

உரை : தாய் போன்ற பெருமானே, நாய் போன்ற யான் நின்னுடைய நலங்களைக் கருதாமல் சொல்லிய வன்சொற்களை நினைக்கும் போது என் உடம்பின் தாதுக்கள் அத்தனையும் நிலை கலங்குகின்றன, காண். எ.று.

எண்ணுதற்குரிய நலங்கள் என்பது வருவிக்கப்பட்டது. நலங்குதல் - மனம் நொந்து பேசுதல். (62)

2932. நிற்குருகா வஞ்ச நினைவால் நினைத்தவெலாஞ்
சற்குருவே யெண்ணுதொறுந் தாது கலங்குதடா.

உரை : சற்குருவாகிய சிவனே, நின்னையே நினைந்து உருகுதல் இன்றி வஞ்சனை நினைவே கொண்டு எண்ணியவற்றை யெல்லாம் எண்ணியபோது என் தாது கலங்குகிறது, காண். எ.று.

குருவாய் எழுந்தருளி உண்மை யுணர்வு தருபவனுதலின், "சற்குருவே" என்று கூறுகின்ருர். "சற்குரு, மெய்ம்மை யுருவாய குரு முதல்வன். (63)

2933. வெந்நரகில் வீழும் விளைவால் விளம்பியதை
என்னரசே யெண்ணுதொறு மென்னை விழுங்குதடா.

உரை : வெம்மை மிக்க நரகத்தில் வீழ்தற் கேதுவாகிய சொற்களைச் சொல்லியதை நினைக்கும் போதெல்லாம். எனக்கு அருளரசாகிய பெருமானே, அச்சம் தோன்றி என்னை விழுங்குகிறது, காண். எ.று.

வெம்மை நரகு - வெந்நரகு என வந்தது. நரகத் துன்பத்தை விளைவிக்கும் சொற்களைப் பேசியதை, "விளைவால் விளம்பியது" எனக் கூறுகின்ருர். நரக வேதனை பற்றிய நினைவு விளைவிக்கும் அச்சம் கருவி கரணங்களைச் செயலற்றயரச் செய்தலால், "என்னை விழுங்குதடா" என வுரைக்கின்ருர். (64)

2934. நன்கறியேன் வாளா நவின்ற நவையனைத்தும்
என்குருவே யெண்ணுதொறும் என்னை விழுங்குதடா.

உரை : என்னுடைய குரு முதல்வனே, நலம் தருவனவற்றைக் கண்டறியாமல் வீணே யுரைத்த குற்றங்களை இப்போது எண்ணும்போது, அச்சம் மிகுந்து என்னை விழுங்குகிறது, காண். எ.று.

குரு - அறிவுக்குத் தெளிவு தருபவன். "தெளிவு குருவின் திரு வார்த்தை கேட்டல்" (திருமந்.) எனத் திருமூலர் உரைப்பர். நன்கு, நலம் தருவன. பயனில்லன மொழிதல் குற்றமாதலால், "வாளா நவின்ற நவை" என்று கூறுகின்ருர். நவை - குற்றம். (65)

2935. ஆவ தறியா தடியே னிகழ்ந்தகொடும்
பாவ நினைக்கிற் பகீரென் றலைக்குதடா.

உரை : விளைவு நினையாமல் அடியவனுகிய யான் செய்த கொடிய பாவங்களை நினைக்கும்போது நெஞ்சம் பகீரென்று என்னை வருத்துகிறது, காண். எ.று.

பாவம் - தீவினை. இத் தீவினையைச் செய்தால் இத்தகைய துன்பம் வருமென முன்கூட்டி யறிதல் முறையாகவும், அதனை யறியாமை பற்றி "ஆவ தறியாது" எனவும், அதனுல் உண்டான பாவ மிகுதி புலப்பட, "நிகழ்ந்த கொடும் பாவம்" எனவும் இயம்புகின்ருர். நெஞ்சில் தோன்றி வருத்தும் அச்சத்தின் மிகுதி விளங்க, "பகீரென்று அலைக்குதடா" என்று கூறுகின்ருர். பகீரென்று - குறிப்பு மொழி; திடீரென்றுத் தோன்றும் என்ருற் போல. (66)

2936. வந்திப் பறியேன் வழங்கியவன் சொல்லேயெலாம்
சிந்திக்கி லுள்ளே திடுக்கிட் டழுங்குதடா.

உரை : வணங்கி வழிபடுதலை யறியாமல் வாய் தவறிய வன் சொற்களை யெல்லாம் இப்போது நினைக்குமிடத்து மனம் திடுக்கிட்டு வருந்துகிறது, காண். எ.று.

வந்திப்பு - வந்தனை வழிபாடுகள். வழங்கிய வன்சொல் - தடையின்றிப் பேசுதல்; வாய்க்கு வந்தபடி பேசுதலாம். உள் - மனம். அழுங்குதல் - வருந்துதல். (67)

2937. குற்ற நினைத்த கொடுஞ்சொலெல்லா மென்னுளத்தே
பற்ற நினைக்கிற் பயமா யிருக்குதடா.

உரை : குற்றமெனக் கருதியவுடன் சினமுற்றுப் பேசிய கடுஞ் சொற்களனைத்தையும் என் மனத்தின்கண் பொருந்த நினைக்கும்போது இதன் விளைவு என்னாகுமோ என அச்சமெழுந்து வருத்துகிறது, காண். எ.று.

பிறர் செய்வன குற்றமெனத் தெரிந்தவுடன், காணும் தமது மனத் தெழுந்த சினத்தால் கடுமையான சொகற்ளைப் பேசினமை நினைக்கப் படுதலின், "குற்றம் நினைத்த கொடுஞ் சொலெலாம்" என்று கூறுகின்றார். குற்றமெனக் கண்டவிடத்துப் பொறுத்து இன்சொல்லால் திருத்துவது அறமாகலின், அது செய்யாமை இப்போது நினைவில் தோன்றி வருத்துவதை எடுத்துரைக்கின்றார். (68)

2938. எள்ளுகின்ற தீமை யெடுத்துரைத்தே னுங்கதனை
விள்ளுகின்ற தோறுமுள்ளம் வெந்து வெதும்புதடா.

உரை : இகழத் தக்க தீமைகளை அவ்வப்போது யான் எடுத்துப் பேசுவேன்; அப்போது பேசியவதனை இப்போது சொல்லும் போதெல் லாம் என் மனம் வெம்மையுற்று என் தேக முழுதும் படர்ந்து வெதுப்புகின்றது, காண். எ.று.

எள்ளப்படும் தீமை - எள்ளுகின்ற தீமை என வந்தது. "செயப்படு பொருளைச் செய்தது போல" உரைக்கும் மரபு. தீய சொற்களைத் "தீமை" என்கின்றார். விள்ளுதல்.சொல்லுதல். வெந்து தணியாமல் வெம்மையைச் செய்யா நிற்பது விளங்க "வெந்து வெதுப்புதடா" என வுரைக்கின்றார். (69)

திருச்சிற்றம்பலம்

29. திருவடிக் கண்ணி

இஃது ஒரு பொருள்மேல் வந்த பஃறாழிசைக் கண்ணி. தாழிசைக் கண்ணி- தாழிசையாகிய கண்ணி யெனக் கொள்க.

தாழிசை

2939. மின்னிடையாள் காண விளங்குமன்றி லாடுகின்றாய்
என்னுடையா யுன்ற னிணையடிதான் நோவாதா.

உரை : மின்னற் கொடி போன்ற இடையையுடைய உமையவள் காண ஒளி விளங்கும் அம்பலத்தில் ஆடுகின்ற பெருமானே, என்னை அடிமையாக வுடையவனே, நெடுங்காலமாக ஆடுகின்ற உன்னுடைய இரண்டாகிய திருவடிகள், நோதல் இல்லையோ, கூறுக. எ.று.

தில்லையம்பலத்தில் உமாதேவி காணச் சிவபெருமான் திருக்கூத்தாடு கின்றான் என்று, சான்றோர் புகழ்வதால், "மின்னிடையாள் காண விளங்கு மன்றில் ஆடுகின்றாய்" என்று விளம்புகிறார். "கண்டங் கரியாள் கருணை திருவுருக் கொண்டங்கு உமை காணக் கூத்துகந்தானே" (திருமந்.2732) எனத் திருமூலரும், 'குயிலாலும் மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக் கூத்தாட வல்ல குழகர்" (வீழி) எனத் திருநாவுக் கரசரும் பிறரும் குறித் தோதுகின்றார்கள். பொன்னம்பலமாதலால் "விளங்கும் மன்று" எனக் கூறுகின்றார். திருவுருக் கொண்டு மன்றின் கண் நின்றாடுகின்றானாதலால், "உன்றன் இணையடிதான் நோவாதோ" என்று இயம்புகின்றார். இவ்வாறே மதுரையிற் பாண்டி வேந்தனொருவன் திருவடி நோமென்று வருந்தினமைக்கு இரங்கி கூத்தப்பிரான் கால் மாறி யாடினான் என்று திருவிளையாடற் புராணம் உரைப்பது காண்க. (1)

2940. வன்னமுதே யின்ப மலியமன்றி லாடுகின்றாய்
என்னமுதே யுன்ற னிணையடிதான் நோவாதா.

உரை : அழகிய அமுதாகிய பெருமானே, உயிர்கட் கெல்லாம் இன்பம் பெருகுமாறு அம்பலத்தில் இடையற வின்றி ஆடல் புரிகின்றா யாதலால், எனக்கு அமுது போன்றவனே, உன்னுடைய இரண்டாகிய திருவடிகள் நோதல் இல்லையோ. எ.று.

வண்ண அமுது - வன்னமுது என வந்தது. வண்ணம் - அழகு மலிதல் - மிகுதல் - உலகுயிர்கட்கு ஞானப் பேரின்பம் உண்டாதற் பொருட் டாடுதல். பற்றி, "இன்பம் மலியமன்றில் ஆடுகின்றாய்" என வுரைக்கின்றார். "நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத்

தானமுத்தல் தான் எந்தையார் பரதம் தான்'' (உண்மை விளக்.) எனப் பெரியோர் உரைப்பது அறிக. "வன்னமுதே" எனப் பொதுப்படக் கூறியவர், தனக்குள்ள உரிமை புலப்பட, "என்னமுதே" என வுரைக் கின்றார். (2)

2941. நண்ணியமெய் யன்பர் நயக்கமன்றி லாடுகின்றாய்
புண்ணியனே யுன்றனது பொன்னடிதான் நோவாதா.

உரை : தன் திருமுன் போந்த மெய்யன்பர்களுக்கு அன்புறவு மீதூருமாறு அம்பலத்தில் ஆடல் புரிகின்றாயாயினும், புண்ணியப் பொருளாகிய பெருமானே, உன்னுடைய அழகிய திருவடி நோவதில்லையோ. எ.று.

திருமுன் என்பது அவாய் நிலையால் வந்தது. மெய்யன்பர் - மெய்ம்மை சான்ற அன்பர்கள். மெய் யன்பு காரணமாக நண்ணின வர்க்குத் தனது ஆடற் காட்சி அந்த அன்பு மேன்மேலும் மிகச் செய்கிற தென்பார், "நயக்க மன்றில் ஆடுகின்றாய்'' என நவில்கின்றார். நயத்தல் - காதலித்தல். புண்ணியம், புண்ணியன் - விளைவிக்கும் பொருளாயவன்; புண்ணியவுருவினன் என்றுமாம். (3)

2942. அன்பரின்பங் கொள்ளநட மம்பலத்தே யாடுகின்றாய்
இன்புருவா முன்ற னிணையடிதான் நோவாதா.

உரை : அன்பராயினார் சிவப் பேரின்பம் எய்துதல் வேண்டி அம்பலத் தில் ஆடல் புரிகின்ற பெருமானே, இன்பவுருவாக வுள்ள உனது இரண்டாகிய திருவடி நோதல் இல்லையோ. எ.று.

அன்பரானவர்க்கு அந்த அன்பே சிவஞானமாதலின், அவர் பெறக் கடவது பேரின்பமாதலால், "அன்பர் இன்பம் கொள்ள அம்பலத்தேயாடு கின்றாய்'' என அறிவிக்கின்றார். இறைவனுக்கு இன்பமே யுருவமாதலால் "இன்புருவா முன்றன் இணையடி" என இயம்புகின்றார். "சாற்றுங்கால் - சர்க்கரைக் கின்றிப் புருவ மன்றி எழிலுருவம் வேறுண்டோ, இன்புருவமே இறைக்கும் என்'' (துகளறு) எனச் சீர்காழிச் சிற்றம் பல நாடிகள் கூறுவது காண்க. (4)

2943. நூலுணர்வா நுண்ணுணர்வி னோக்கநட மாடுகின்றாய்
மாலறியா வுன்றன் மலர்ப்பாதம் நோவாதா.

உரை : நூலறிவின் பயனாக எய்தும் நுண்ணுணர்வுடைய ஞானிகள் நோக்கி மகிழத் திருநடம் புரிகின்றாயாயினும், திருமாலும் காண்பதரி தாகிய உனது மலர் போன்ற திருவடி நோதல் இல்லையோ. எ.று.

பல நல்ல நூல்களைக் கற்பதும் கேட்பதும் இயற்கை யறிவை நுண்ணி தாக்குவதாகலின், "நூலறிவாம் நுண்ணுணர்வு'' எனவும், அந்த நுண்ணறிவு உண்மை ஞானமாய், சில வழிபாட்டுக் கேற்புடையதாதல் பற்றி, "நுண்ணுணர்வின் நோக்க நடமாடுகின்றாய்'' எனவும் இசைக் கின்றார். நுண்ணுணர்வு நல்காத நூலறிவு பயன்படா தென்றற்கு, "அரங்

கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து'' (அதிகை) எனத் திருநாவுக்கரசரும், "இமையோர் பெருமான் நுண்ணுணர்வால் வழிபாடு செய்யும் காலுடையாள்'' (கீழைத் திருக்காட்டு) என ஞானசம்பந்தரும் கூறுவர். திருமால் காண மாட்டா தொழிந்த திருவடி என்றற்கு "மாலறியா வுன்றன் மலர்ப்பாதம்'' என வழுத்துகின்றார். "மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே, நூலே நுழைவரியான்'' (தெள்ளேணம்) என மணிவாசகர் மொழிவது காண்க. (5)

2944. எள்ளலற வம்பலத்தே யின்பநட மாடுகின்றாய்
வள்ளலே யுன்றன் மலரடிதான் நோவாதா.

உரை : இகழ்பவர் இகழ்ச்சி கெடுமாறு அம்பலத்தின்கண் இன்ப நடனம் புரிகின்றாயாயினும், அருள் வள்ளலாகிய உனது பூப்போன்ற திருவடி நோதல் இல்லையோ. எ.று.

கூத்தும் இசையும் காமநோய் விளைவிப்பன என இகழ்பவருண்மை பற்றி, "எள்ளலற அம்பலத்தே இன்ப நடம் ஆடுகின்றாய்'' என வுரைக்கின்றார். "கிளை நரம்பிசையும் கூத்தும் கேழ்த்தெழுந்தீன்ற காம விளை பயன்'' (சீவக. 2598) எனப் பிறரும் கூறுவதனாலறிக. இன்ப நடம்-ஞானப் பேரின்பம் நல்கும் திருக்கூத்து. பழிப்பவர் புகழ்பவர் யாவர்க்கும் அருள் செய்தலால் "வள்ளலே'' எனத் துதிக்கின்றார். மலர் அடி-தாமரை மலர் போலும் திருவடி. (6)

2945. சைவ நிலைத்துத் தழைத்தோங்க வாடுகின்றாய்
தெய்வ மணியே திருவடிதான் நோவாதா.

உரை : சைவ நெறி நிலைகொண்டு மேலும் தழைத்து வளரத் திருக்கூத்து ஆடுகின்றாயாயினும், தெய்வங்கட் கெல்லாம் முடிமணியாய்த் திகழும் திருவடிகள் நோதல் இல்லையோ. எ.று.

சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்ட சமய நெறி சைவம். "சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல், சைவம்தனை யறிந்தே சிவம் சாருதல்'' (திருமந். 1512) என்பர் திருமூலர். நிலைபேறு கொண்டாலன்றித் தழைத்தலும் ஓங்குதலும் இன்மையின், "சைவம் நிலைத்துத் தழைத்தோங்க ஆடுகின்றாய்'' எனக் கூறுகின்றார். தேவ தேவனாய்த் தேவர் முடி சாய்த்து வணங்கப்படுதலின், "தெய்வ மணி'' எனச் சிறப்பிக்கின்றார். மணி போல்வதால் மணி என்கின்றார். "தொழப்படுந் தேவர் தொழப்படுவான்'' (தனி) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. (7)

2946. எல்லாரு மின்புற் றிருக்கநட மாடுகின்றாய்
வல்லாரின் வல்லாய் மலர்ப்பாதம் நோவாதா.

உரை : எல்லா மக்களும் இன்பத்திலே திளைக்குமாறு திருக்கூத்தாடுகின்றாயாயினும், வல்லவர் அனைவருக்கும் வல்லவனாகிய உனக்கு உன் மலர் போன்ற திருவடிகள் நோவதில்லையோ. எ.று.

தனது திருக்கூத்தால் மக்கள் மலவிருளின் நீங்கிப் பேரின்பம் பெறுவிக்கின்ருனுதலால், ''எல்லாரும் இன்புற்றிருக்க நடம் ஆடுகின்ருய்'' என்று கூறுகின்ருர். வரம்பில் ஆற்றலுடையவன் என மெய்ந்நூல்கள் உரைத்தலால், ''வல்லாரின் வல்லாய்'' எனப் புகழ்கின்ருர்.. (8)

2947. அவமே கழிந்தின்ப மன்பர்கொள வாடுகின்ருய்
சிவமே நினது திருவடிதான் நோவாதா.

உரை: உலகியலின்பங்கள் வீணுற்றழிய மெய்யான சிவானந்தத்தை அன்பராயினுர் பெற்று மகிழுமாறு திருக்கூத்தாடுகின்ற பெருமானுகிய சிவபரம் பொருளே, இத் திருக்கூத்தால் உன் திருவடி நோவதில்லையோ. எ.று.

சிவஞானத்தால் அன்பர்கள் பொய்யாய உலகியல் இன்பங்களை வெறுத்துத் துறத்தலால், அவை நுகர்வாரின்மையின் வீணே கெட்டழிவது பற்றி, ''அவமே கழிந்து'' எனக் கூறுகின்ருர். கழிய வென்பது கழிந்தெனத் திரிந்தது. இன்பம் எனப் பொதுப்பட மொழியினும் சிறப்புடைய மெய்ம்மையுற்ற சிவானந்தம் கொள்ளப்பட்டது. சிவப் பேரின்பம் கொள்ளப்படுகிற தென்பதால், அவமே கழிவது பொய்யான உலகியலின்பமாயிற்று. அருவ நிலையிற் சிவமெனவும் உருவ நிலையிற் சிவன் எனவும் பரம்பொருள் குறிக்கப்படுவதால், ''சிவமே'' என்கின்ருர். (9)

2948. தற்பரமா மன்றிற் றனிநடன மாடுகின்ருய்
சிற்பரமே யுன்றன் திருமேனி நோவாதா.

உரை: தனக்குத் தானே மேலாகிய அம்பலத்தில் தனிக் கூத்தியற்றும் பெருமானே, மேலான சிவஞானமே, உன் திருமேனி நோதல் இல்லையோ. எ.று.

தற்பரம் - தனக்குத் தானே பரமாவது. பரம் - மேல். மன்று - அம்பலம். பிறரெவரொடும் கூடாது, தன்னிற் கூருகிய உமைநங்கையும் வேருய் நின்று காண ஆடுதலின் சிவனது திருக்கூத்து, ''தனி நடனம்'' எனப்படுகிறது. சிற்பரம் - ஞானப் பரம்பொருள்; பரஞானத்தாற் காணத் தக்க பரம்பொருள் என்றுமாம். (10)

2949. வில்வவேர் மாலை மிளர்ந்தசைய வாடுகின்ருய்
செல்வமே யுன்றன் திருமேனி நோவாதா.

உரை: வில்வத்தால் தொடுக்கப்பட்ட அழகிய மாலை பச்சொளி விளங்கி அசைந்தாட திருக்கூத்தாடுகின்ற அருட் செல்வமே, உனது திருமேனி நோவதில்லையோ. எ.று.

இவ் விரண்டு கண்ணிகளிலும் கூத்தின்கண் ஆடற்கேற்ப உருவத் திருமேனி வளைந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும் சதி பிழையாமல் இயங்குவதால் வருந்துமே என மனம் கசிந்துருகுகின்றமை தோன்றத் ''திருமேனி நோவாதோ'' எனக் கூறுகின்ருர். (11)

திருச்சிற்றம்பலம்

30. பேரன்புக் கண்ணி

அஃதாவது உள்ளத்தில் மிக்கிருக்கும் ஆசைகளை எடுத்துரைப்பது. இதன்கண் சிற்றம்பலம், திருநடனம், திருவடி, சிவம், அதன் திருவருள் ஆகியவற்றின் மேற் பொங்கி நிற்கும் மிக்க ஆசையை வடலூர் வள்ளல் எடுத்துரைக்கின்றார்.

தாழிசை

2950. கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன்
அற்புதச்சிற் றம்பலத்தி லன்புவைத்தேன் ஐயாவே.

உரை : ஐயனே, நான் கற்ற கல்வி எக்காலத்தும் சாவாத கல்வியாம் என்று கண்டு தெளிந்து நின்னுடைய அற்புதமான சிற்றம்பலத்தில் அன்பு கொண்டேன், காண். எ.று.

கற்றுப் பெற்ற கல்வி உயிரின்கட் கிடந்து 'அது புகுமிடந்தோறு'' புகுந்து தன் பயனை நல்கியவண்ணம் இருத்தலால், "என்றும் சாகாத கல்வியென்று கண்டு கொண்டு'' எனவும், கல்விப் பயன் இறைவன் நற்றாளை மறவாமையாதலால், நற்றாள் நின்று நடனமிடும் சிற்றம்பலத்தின் மேல் அன்பு கொள்வேனாயினேன் என்பாராய், "உன் அற்புதச் சிற்றம்பலத்தில் அன்பு வைத்தேன்'' எனவும் இயம்புகின்றார்; "ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற் கெழுமையும் ஏமாப் புடைத்து'' (குறள்) எனத் திருவள்ளுவர் கூறுவர்; இதனால், கல்வி சாகா நிலையது என்பது பெறப்படுதல் காண்க. உடம்பிற்கே யன்றி உயிர்க்குச் சாவில்லை என மெய்ந்நூல்கள் கூறுவது பற்றி, அதனோடு ஒட்டி நின்று ஒழியாது தொடர்தலின் கல்வியும் சாகாக் கல்வியாயிற் றென வுணர்க. (1)

2951. ஈடணைகள் நீக்கிநமக் கின்பளிக்கு மென்றுமன்றில்
ஆடுந் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே.

உரை : ஐயனே, ஆசைகளை நீக்கி நமக்கு இன்பத்தை யளிக்கு மென்று கருதி அம்பலத்தில் ஆடுகின்ற நின் திருவடிக் கண்ணே ஆசை கொள்வேனாயினேன். எ.று.

ஈடணை - மனைவி மக்கள் பொருள் என்ற மூன்றின்மேல் உண்டாகும் ஆசை. இவற்றை ஈஷணத் திரையம் என்பர். கைவல்ய நவநீத முடையாரும், "மனைவி மக்கள் அர்த்த வீடணைகள் மூன்று'' (தத்துவ. 13) என்பர். இம்மூன்றும் துன்பத்துக் கேதுவாகலின், "ஈடணைகள் நீக்கி'' என்று கூறுகிறார். "ஆசையும்அன்பும் அறுமின்அறுத்த பின், ஈசன் இருந்த

இடம் எளிதாமே'' (திருமந். 2613) எனப் பெரியோர் கூறுவர். "ஆசை வைத்தேன்'' என்பதில் ஆசை யென்பது மெய்யன்பு என அறிக. ஆசை துன்பத்துக் கேது; அன்பு இன்பத்துக் கேது எனப் பகுத்துணர்க. (2)

2952. நானந்த மெய்தா நலம்பெறவே யெண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே.

உரை: உடம்பு போல் அறிவடையாத நன்மையைப் பெறற்கு எண்ணியே நான், அம்பலத்தில் நிகழும் ஆனந்த நடனத்தின்கண் அன்பு கொள்வேனாயினேன். எ.று.

அந்தம் - முடிவு; ஈண்டு உடம்பு எய்தும் முடிவின் மேல் நின்றது. தோற்றமும் மறைவும் உடையது உடம்பு; உயிராகிய எனக்கு அஃது இல்லை. உடம்பொடு கூடித் தோற்றக் கேடு எய்தும் நிலைமையின்றி, என்றும் பிறப்பிறப் பில்லாத நிலை ஈண்டு "அந்தமில்லா நலம்'' எனப்படுகிறது. நாடகம், நடனம். தோற்றக் கேடுகளின்றி என்றும் நடைபெறுவ தாகலின், நான் அதன்மேல் அன்பு கொண்டேன் என்பாராய், "ஆனந்த நாடகத்துக் கன்பு வைத்தேன்'' என இசைக்கின்றார். ஆனந்த நாடகம் - இன்பமே நல்கும் திருக்கூத்து. (3)

2953. வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்று மன்றில்
ஆனந்த நாடகத்துக் அன்புவைத்தேன் ஐயாவே.

உரை: ஐயனே, உடம்பு வாடுதலும் சாதலும் இல்லாத வரத்தைக் கொடுக்கு மென்ற கருத்தால், அம்பலத்தில் ஆடுதலையுடைய திருவடி யாகிய அழகிய தாமரைக்கண் அன்பு செய்வேனாயினேன். எ.று.

சாகும் நாளில் உயிர் நின்ற உடம்பு சுருங்கி வாடுத லுண்மையின், "வாடலறச் சாகா வரம் கொடுக்கும்'' என்று கூறுகிறார். வாடுதலாவது தோலும் தசையும் சுருங்கிப் பசையின்றிப் புலர்தல். ஆடல் அடி - ஆடுதலையுடைய திருவடி. அழகிய தாமரை போல்வ தென்றற்கு "அடிப் பொன்மலர்'' என்று குறிக்கின்றார். (4)

2954. பொற்புறவே பொன்றாப் பொருளளிக்கு மென்றுமன்றில்
அற்புதப்பொற் சேவடிக்கே அன்புறைத்தேன் ஐயாவே.

உரை: ஐயனே, அழகு மிக அழியாத இன்ப ஞானப் பொருளை நல்குமென்று எண்ணியே அம்பலத்தில் விளங்கும் அற்புதமான அழகிய சிவந்த திருவடிக்கண் அன்பு கொண்டேன். எ.று.

பொற்பு - சிவப் பொலிவு. பொன்றாப் பொருள் - சிவஞானம் நல்கும் மெய்ப்பொருள். மெய் எக்காலத்தும் அழிவதில்லாமையால் "பொன்றாப் பொருள்'' எனப் புகல்கின்றார். அம்பலவாணன் திருவடி ஞானம் சிவஞானமாய்ச் சிவபோகம் தருவதாகலின், "மன்றில் அற்புதப் பொற் சேவடி'' எனச் சிறப்பிக்கின்றார். (5)

2955. ஈனமறுத் தென்டும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே.

உரை : இறப்பதற் கேதுவாகிய குற்றங்களைப் போக்கி என்றும் சாவாமையாகிய நித்திய நிலையை நல்குமெனக் கருதியே ஞானவொளி பரப்பும் மணி யிழைத்த அம்பலத்தின்கண் நேசமுற்றேன். எ.று.

உண்டியும் உழைப்பும் மிகுதி குறைவுகளால் இறப்பை யுண்டு பண்ணுதலால், அவற்றை "ஈனம்" எனக் கூறுகின்றார். ஈனம் அற்ற விடத்து இறவாமை எளிதில் எய்தும் என்பாராய், "ஈனம் அறுத்தென்றும் இறவாமை நல்கும்" என இயம்புகின்றார்; "அற்றால் அளவறிந் துண்க அஃது உடம்பு பெற்றான் நெடிதுய்க்குமாறு" (குறள்) எனச் சான்றோர் அறிவுறுத்துவது காண்க. ஞான மன்று என்று இயைந்து ஞான சபை என்றும் பொருள்படும். நண்பு - நட்பு; நேசம் என்று வழங்கும் அன்புக் காயிற்று. (6)

2956. ஓர் துணைநின் பொன்னடியென் றுன்னுகின்றே னுன்னையன்றி
ஆர் துணையும் வேண்டேனென் அன்புடைய ஐயாவே.

உரை : என் அன்புடைய ஐயனே, எனக்கு ஒப்பற்ற துணையாவது நினது திருவடி யென எண்ணி யுள்ளேனுதலால், உன்னை யொழிய வேறே யாவர் துணையும் விரும்ப மாட்டேன். எ.று.

எனது சிறந்த பொருளாகிய அன்பைத் தனக்கே யுடைய தலைவனே என்றற்கு, "என் அன்புடைய ஐயா" என உரைக்கின்றார். உயிர்க் குயிராயும் உடனிருந்தும் உதவுகிற துணை இறைவனை யன்றி வேறொன்றும் இல்லாமை யறிந்துரைத்தலால், "ஓர் துணை நின் பொன்னடி யென்று உன்னுகின்றேன்" என இயம்புகின்றார். உன்னுதல்- ஆழ நினைத்தல். வேறு துணையாவார் யாவரும் உயிரின் வேறாய் நின்று துணை செய்து உயிர் நீங்குங் காலத்துக் கையொழிதலால், "உன்னையன்றி ஆர் துணையும் வேண்டேன்" என்று விளம்புகின்றார். (7)

2957. பூசைசெய்து பெற்றவுன்றன் பொன்னடிமே லன்றியயல்
ஆசையொன்று மில்லையெனக் கன்புடைய ஐயாவே.

உரை : ஐயனே, என்பால் அன்புடைய ஐயனே, வழிபாடு செய்து உறுபொருளாகப் பெறப்பட்ட உனது அழகிய திருவடியல்லது வேறு எப்பொருள் மேலும் எனக்கு ஆசையே கிடையாது, காண்க. எ.று.

நறுமலர் கொண்டு வழிபடப் படுவது சிவன் திருவடியாகும்; அதனை நினைவிற்கொண்டு நினைந்தவண்ணம் இருப்பது விளங்க, "பூசை செய்து பெற்ற வுன்றன் பொன்னடி" எனப் புகல்கின்றார். அதுவே ஆசை யறுத்து அயரா இன்பத்தை யளித்தலால், "அயல் - ஆசை யொன்றும் எனக்கு இல்லை" என இசைக்கின்றார். அயல், திருவடிக்கு அயலான பொருள்கள். (8)

2958. இச்சைநின்மே லன்றியெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலே நின்னுணை யென்னருமை ஐயாவே.

உரை : என் அருமையான ஐயனே, என் விருப்பமெல்லாம் நின்பாலன்றி வேறு எதன் மேலும் எள்ளளவும் இல்லை; இதனை நின்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். எ.று.

இச்சை - விருப்பம்; ஆசையுமாம். உலகில் வாழ்வார்க்கு ஆசைகள் பலவுண்டு; எனினும் எனக்குச் சிவபிரானுகிய உன்மேல்தான் என்பார், "இச்சை நின்மேலன்றி" என்றும், பிற எப்பொருள் மேலும் இல்லை யென்றற்கு "வேறும் ஒன்றில் எள்ளளவும் இச்சையிலை" என்றும் கூறுகின்றுர். இதனை மேலும் வற்புறுத்தற்கு "நின் ஆணை" யென வுரைக்கின்றுர். கூறிய தொன்றை வற்புறுத்தற்கு உயர் பொருளாகிய தாய், தந்தையர், மக்கள், குரு, தெய்வம் முதலாயினுர் மேல் தாய் ஆணை, தந்தையாணை என்பன முதலாகக் கூறுவது உலகியல்பாதலால் "நின் ஆணை" என்று இயம்புகின்றுர். (9)

2959. எப்படிநின் னுள்ள மிருக்கின்ற தென்னளவில்
அப்படிநீ செய்கவெனக் கன்புடைய ஐயாவே.

உரை : எனக்கு அன்புடைய ஐயனே, என்பால் நின் திருவுள்ளம் எப்படி யிருக்கிறதோ அப்படியே செய்தருள்க; நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். எ.று.

நான் கேளாதன கேட்பித்தும், காணுதன காட்டியும் அருள் செய்யும் நின் திருவுள்ளத்துக்கு எனக்கு வேண்டுவனவும் வேண்டாதனவும் நன்கு தெரியுமாதலால், "எப்படி நின் உள்ளம் இருக்கின்றது அப்படி நீ செய்க" என வுரைக்கின்றுர். நான் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்பது குறிப்பெச்சம். கூறுவது மிகையென்னும் குற்றமாம். (10)

2960. எவ்வண்ணம் நின்கருத்திங் கென்னளவி லெண்ணியதோ
அவ்வண்ணஞ் செய்கவெனக் கன்புடைய ஐயாவே.

உரை : எனக்கு அன்புடைய ஐயனே, என்பால் நின் கருத்து யாது நினைக்கிறதோ அதனையே கருதியவாறு செய்தருள்க. எ.று.

கருதுவோர் கருத்தறிந்து முடிக்கும் முதல்வனுதலால், நின் கருத்திங் கென்னளவில் எண்ணியதோ அவ்வண்ணம் செய்க" என வுரைக்கின்றுர். "மனத்துள் நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை" (ஆலவாய்) எனப் பெரியோர் கூறுவது காண்க. (11)

2961. தேசுறுநின் றண்ணருளாந் தெள்ளமுதங் கொள்ளவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே.

உரை : எனக்கு அன்புடைய ஐயனே, ஒளி திகழும் நின்னுடைய தண்ணிய திருவருளாகிய தெளிவுடைய அமுதத்தைப் பருகுதற்கு என் உள்ளத்தில் ஆசை பெருகுகிறது, காண். எ.று.

இறைவன் திருவருள் ஒளி யுருவாகிய சத்தியாதலால், "தேசுறும் தண்ணருள்" எனச் சிறப்பிக்கின்றார். தேசு - ஒளி. அருளொளி வெம்மையின்றித் தண்ணியதாதல் பற்றி, "தண்ணருள்" எனப்படு கிறது. அருட்கு அமுதத்தை ஒப்புக் கூறுவது கொண்டு, பருகுதற் பொருளில் "கொள்ள" என்கின்றார். பொங்குதல் - மிகுதல். திருவருள் ஞான மயமாதலால் சிவஞானியாகிய வடலூர் வள்ளற்கு ஆசை பெரி தாயிற் றென அறிக. (12)

2962. மாசறுநின் பொன்னருளா மாமணிபெற் றுடவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்படைய ஐயாவே.

உரை : அன்புடைய ஐயனே, மாசற்ற பொன் போன்ற நினது திருவருளாகிய பெரிய மணியை முடிமேற் கொண்டு கூத்தாடுதற்கு எனக்குள் ஆசை மிகுகின்றது, காண். எ.று.

மாசு - குற்றம்; பொன்னுக்கு மாற்று ஓடுதல் குற்றம் என்பர்; அதனுல் "மாசறு பொன்" என்று சிறப்பிக்கின்றார். மாசற்ற பொன் கண்ணுக்கு இனிதாம் என்பர், அடியார்க்கு நல்லார். திருவருளின் அருமையும் பெருமையும் புலப்பட, "பொன்னருள்" என்று புகல்கின்றார். மணியை முடி மேற் கொண்டு களித்தாடல் தோன்றல், "மாமணி பெற்று ஆட" என்கின்றார். (13)

2963. நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே.

உரை : எனக்கு அன்புடைய ஐயனே, கேடு விளைவியாத நினது திருவருளாகிய சிவஞான மருந்துண்டு மகிழ்தற்கு என்னுடைய உள்ளத் தில் ஆசை மேன் மேல் மிகுகின்றது, காண். எ.று.

மருந்து - தேவர்கள் உண்ட சாவா மருந்து. சாவா மருந்துண்டும் தேவர்கள் செத்து மடிதலால், திருவருளாகிய மருந்தை, "நாசமிலா நின்னருளாம் ஞான மருந்து" என்று நவில்கின்றார். ஞான வுருவின தாகலின், "ஞான மருந்து" என்றும், அது தானும் உண்ணப்படுவது பற்றி, "உண்ண" என்றும் உரைக்கின்றார். (14)

திருச்சிற்றம்பலம்

31. நடேசர் கொம்மி

அஃதாவது பெதும்மைப் பருவ முதலாக வுள்ள இளம் பெண்கள் கைகளை, அடுக்கக்ளைக் கொம்மை போலக் குவித்துச் சிலரும் பலருமாய்க் கூடி வட்டமாய் நின்று கைகளைத் தட்டியும் குவித்தும் வாயாற் பாடிக் கொண்டு சுழன்று ஆடுதல். கொம்மைபோல் கைகளைக் குவித்தாடுவது கொம்மியாயிற்று. கொம்மை யுடையது கொம்மி. நாட்டுப் புறங்களில் விழாக் காலங்களில் நிலவு விளங்கும் முன்னிரவில் மகளிரது இக் கும்மியை இந் நாளிலும் காணலாம். இது மூச்சீரடிகளாலாகிய பாட்டுக்களை யுடைமையால் சிந்து எனப்படுகிறது. பல்லவி - முன்னுற எடுத்துப் பாடும் பாடற் பகுதி. மலர்ச் செடிகளின் தலையில் தோன்றும் தளிர் போல மகளிரின் தலைமேல் கை மலர நின்று பாட்டை எடுத்தலால், முதலெடுப்புப் பல்லவி எனப்படுகிறது. பல்லவம் - தளிர். பல்லவம் போல்வது பல்லவி. தலைத் தளிரின் கீழ் இருக்கும் தளிர் அனுபல்லவி யாகும். அதற்குக் கீழிருக்கும் கண்ணிகளைக் கருநாடகச் சங்கீதம், சரணம் (அடி) என வழங்கும். கருநாடகத்தவர், பாட்டுக்களை இவ்வாறு பல்லவி, அனுபல்லவி, சரணம் என வகுத்துப் பாடினராதலால், இந் நாளில் அப்பிரிவே வழக்கில் வந்துள்ளது. இக் கொம்மியும் அவ்வியல்பே கொண்டு கூத்தப் பிரானுடைய குணஞ் செயல் நலங்களைக் கூறுகின்றது.

சிந்து

பல்லவி

2964. கொம்மிய டிப்பெண்கள் கொம்மி யடி—இரு
கொங்கைகு லுங்கவே கொம்மி யடி.

உரை : பெண்களே, கொம்மி யடித் தாடலாம்; வாருங்கள்; ஆடு மிடத்து மார்பு குலுங்கக் குதித்தாடி மகிழலாம். எ.று.

மகளிரைத் தனித் தனியாகக் குறிப்பது தோன்ற, "கொம்மியடி" என்று பாடுகிறார் பெதும்மைப் பருவத்தரும் அதற்கு மேலுள்ள மடத்தை மங்கையாகிய பருவத்தரும் கூடியிருப்பது விளங்க, "இரு கொங்கை குலுங்கக் கொம்மியடி" என்று கூறுகின்றார்கள். (1)

பல்லவி யெடுப்பு (அனுபல்லவி)

2965. நம்மை யாளும்பொன் னம்பல வாணனை
நாடிக் கொம்மிய டியுங்க டி—பதம்
பாடிக் கொம்மிய டியுங்க டி. கொம்மி

உரை : பொன்னம்பலவாணன் - தில்லைப் பொன்னம்பலத்தில் எழுந்தருளும் சிவபெருமான். நாடுதல் - நினைதல். பதம் - திருவடி. பதம் பாடுதல் எனக் கொண்டு அகப் பொருள் நெறியிற் பாட்டுக்களை யமைத்துப் பாடுதல் என்றும் கொள்ளப்படும். (2)

கண்ணிகள் (சரணம்)

2966. காம மகற்றிய தூய னடி—சிவ
காம சவுந்தரி நேய னடி
மாமறை யோதுசெவ் வாய னடி—மணி
மன்றெனு ஞானவா காய னடி. கொம்மி

உரை : காமம் அகற்றிய தூயன் - காம இச்சைக் கிடமாகாத தூயவன். தில்லையில் உமாதேவிக்குச் சிவகாமசுந்தரி என்பது பெயரா கலின், "சிவகாம சவுந்தரி" என்றும், அவளுடைய அன்பனுதலால் "நேயன்" என்றும் கூறுகிருள். நேயம் அன்பு. சுந்தரம் சௌந்தரம் என வருமாதலின், "சவுந்தரி" என்று பாடுகிருர்கள். மறை - வேதம். "சந்தோக சாமம் ஓதும் வாயான்" (வீழி) எனத் திருநாவுக்கரசர் கூறுவது காண்க. மணி மன்று - அழகிய சபை. ஞானவாகாயன் - ஞான ஆகாசத்தை யுடையன். தில்லையம்பலத்தைச் சித் அம்பரம் எனவும். சிதாகாசம் எனவும் கூறுவது பற்றி, "மன்றெனும் ஞான வாகாயனடி" என்று பாடுகிருர்கள். (1)

2967. ஆனந்தத் தாண்டவ ராஜ னடி—நமை
ஆட்கொண் டருளிய தேஜ னடி
வானந்த மாமலை மங்கை மகிழ்—வடி
வாளன டிமண வாள வடி. கொம்மி

உரை : ஆனந்த தாண்டவன் - உயிக்கட்கு இன்பம் விளைவிக்கும் கூத்தன். தாண்டவம் - கூத்து. தேசன் - ஒளி யுடையவன். வான் அந்த மாமலை - வானத்தை யளாவிள பெரிய இமயமலை. மலை மங்கை - உமாதேவி. வடிவாளன் - அழகு மிக்க வுருவினன்; கூரிய வாளேந்து பவன் எனினும் பொருந்தும். மணவாளன் - மணம் செய்து கொண்ட கணவன். (2)

2968. கல்லைக் கனிவிக்குஞ் சுத்த னடி—முடி
கங்கைக் கருளிய கர்த்த னடி
தில்லைச்சி தம்பர சித்த னடி—தேவ
சிங்கம டியுயர் தங்க மடி கொம்மி

உரை : கல்லைக் கனிவிக்கும் சுத்தன் - கல்லையும் கனிந்த பழம் போல மெலிவிக்கும் தூயவன். "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியன்" (அம்மானை) என்பது திருவாசகம். சிதம்பர சித்தன் - சிதம்பரத்தைச் சித்திப்பவர் சித்தத்தில் இருப்பவன். (3)

2969. பெண்ணொரு பால்வைத்த மத்த னடி—சிறு
பிள்ளைக் கறிகொண்ட பித்த னடி
நண்ணி நமக்கரு ளத்த னடி—மிக
நல்லன டியெல்லாம் வல்ல னடி. கொம்மி

உரை : பெண் - உமாதேவி. மத்தன் - உன்மத்தன்போலும் நீரும் எலும்பும் தோலும் அணிபவன். சிறு பிள்ளை - சிறுமையனாகிய சீராளன்; சிறுத்தொண்டருடைய மகன். சிறு பிள்ளையைக் கொன்று சமைத்த கறியை விரும்பினமை பற்றிப் ''பித்தன்'' என்று பேசுகிறார்கள். அத்தன் - தந்தை. வல்லன் - வல்லவன். (4)

2970. அம்பலத் தாடல்செய் ஐய னடி—அன்பர்
அன்புக் கெளிதரு மெய்ய னடி
தும்பை முடிக்கணி தூய னடி—சுயஞ்
சோதிய டிபரஞ் சோதி யடி. கொம்மி

உரை : ஆடல் செய் ஐயன் - ஆடுகின்ற தலைவன். எளி தரும் மெய்யன்-எளியனாய் வந்தருளும் மெய்ம்மைப் பண்புடையவன். தும்பை-தும்பை மலர் மாலையைத் தலையிற் சூடிக் கொள்பவன். சுயஞ்சோதி - தன்னியல்பில் அமைந்த சோதி. பரஞ்சோதி - மேலாய சோதி. (5)

திருச்சிற்றம்பலம்

32. தோழியர் உரையாடல்

அஃதாவது, இளமகளிர் வரிசைக்கு அறுவரும் எழுவருமாக எதிர் முகமாக நின்று, ஒரு வரிசையினர் வினவலும், எதிர் வரிசையினர் விடை கூறலுமாகப் பாடுவது, மகளிர் விளையாட்டினுள் ஒன்று. மணந்த கணவனுடைய இயலும் இடமும் கூறுவது குறிப்பு.

தாழிசை

2971. தண்மதி யொண்முகப் பெண்மணி யே—உன்னைத்
தான்கொண்ட நாயக ராரே டி
அண்மையிற் பொன்னணி யம்பலத் தாடல்செய்
ஐய ரமுத ரழக ரடி.

உரை : தண்மதி ஒண்முகப் பெண்மணி - தண்ணிய முழுச் சந்திரன் போன்ற ஒள்ளிய முகத்தை யுடைய பெண்களில் மணியாகியவள். கொண்ட நாயகர் - மணந்து கொண்ட கணவர். அண்மை - பக்கம். பொன்னணியம் பலம், பொன் வேய்ந்த சிற்றம்பலம். அமுதர் - அமுதம் போல்பவர். தோழியை ஏடி என்றலும் தோழனை ஏட என்றலும் விளி மரபு. ஆரேடி என்பது வினவும் வரிசையினர் கூற்று. அழகரடி என்பது விடை வழங்கு வோர் கூற்று. இனி வரும் பாட்டுக்களிலும் இதுவே கூறிக் கொள்க. (1)

2972. செங்கயற் கண்மட மங்கைநல் லாய்—உன்றன்
செங்கை பிடித்தவ ராரே டி
அங்கய லாரன்று பொன்னம்ப லத்தெங்கள்
ஆனந்தத் தாண்டவ ராஜ னடி.

உரை : செங்கயற் கண் - சிவந்த கயல் மீன் போன்ற கண்கள். மட மங்கை - இளம் பெண். அயலார் அன்று - வேற்றுவ ரல்லர். பிடித்தவர் ஆர் என்றது அயன்மைபட ஒலித்தலின், "அயலாரன்று" எனக் கூறுகின்றார்கள். (2)

2973. கன்னற் சுவைமொழி மின்னிடை யாய்—உன்னைக்
கன்னி யழித்தவ ராரே டி
உன்னற் கரியபொன் னம்பலத் தாடல்செய்
உத்தம ரானந்த சித்த ரடி.

உரை : கன்னற் சுவை மொழி மின்னிடையாய் - கரும்பின் சுவை பொருந்திய சொற்களையும் மின்னற் கொடி போன்ற இடையையுமுடைய பெண்ணே. கன்னி - கன்னித் தன்மை; இது கன்னிமை எனவும் வழங்கும். உன்னற் கரிய பொன்னம்பலம் - நினைத்தற் கரிய பொன்னம்பலம். உத்தமர் - உயர்ந்தவர். (3)

2974. தீமையி லாதபெண் மாமயி லே— உன்னைச்
சேர்ந்து கலந்தவ ராரே டி
தாமமு டிக்கணிந் தம்பலத் தேயின்பத்
தாண்டவஞ் செய்யுஞ் சதுர ரடி.

உரை : தீமை - குற்றம். பெண் மயில் - பெண்களில் பெரிய மயில் போன்ற சாயலை யுடையவளே. தாமம் - மாலை. இன்பத் தாண்டவம் - இன்பம் விளைவிக்கும் நடனம். (4)

2975. அன்னந டைப்பெண்க ளாரமுதே—உன்னை
அன்பிற் புணர்ந்தவ ராரே டி
துன்ன லுடையின ரம்பலத் தேநின்ற
தூய திருநட ராய ரடி.

உரை : அன்ன நடைப் பெண்கள் - அன்னம் போன்ற நடையை யுடைய பெண்கள். ஆரமுது - அருமையான அமுதம். துன்னலுடையினர் - தைக்கப்பட்ட உடை; ஈண்டுத் தோலாடை மேற்று. (5)

2976. காரள கப்பெண் சிகாமணி யே—உன்றன்
கற்பை யருத்தவ ராரே டி
பேரள வைக்கடந் தம்பலத் தேநின்ற
பித்தர் பரானந்த நித்த ரடி

உரை : காரளகப் பெண் - கரிய கூந்தலையுடைய பெண். பெண் சிகாமணி - பெண்கட்கு முடிமணி போன்றவள். கற்பு - பெண்மையின் திண்மை நலம். பேரளவு - மாயா மண்டலம். தத்துவங்களால் அளந்து காணப்படுதல் பற்றி, "பேரளவு" எனப்படுகிறது. பரானந்தம் - கருவி கரணங்கட்கு அப்பால் மேலான திருவருள் ஞானத்தால் நுகரப் படும் சிவானந்தம், "பரானந்தம்" என்று சிறப்பிக்கப்படுகிறது. (6)

திருச்சிற்றம்பலம்

33. தெண்டனிட்டேன்

சிந்து

பல்லவி

2977. தெண்டனிட்டே னென்று சொல்லடி—சுவாமிக்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி.

உரை : தோழி, தலைவரிடம் சென்று நான் அவரை வணங்கி வழி பட்டேன் என்று சொல்வாயாக. தெண்டன், வணக்கம்; அடியற்றமரம் போல் வீழ்ந்து வணங்குதல்.

இது தோழியைத் தலைவனிடம் தூதனுப்பும் தலைவி சொல்லுவதாம். (1)

பல்லவி யெடுப்பு

2978. வண்டலை விளக்குந் தில்லைத் தலத்திற்பொன் னம்பலத்தே
கண்டவர் மயங்கவேடங் கட்டியாடு கின்றவர்க்கு
(தெண்ட)

உரை : தண்டலை - சோலை. தில்லைத் தலம் - தில்லைப் பெருங் கோயில். வேடம் கட்டியாடுதல் - சிவ வேடம் பூண்டு ஆடுவது. அகள நிலையில் சிவத்துக்கு உருவமில்லை; சகளத்தில் சடை முடியும் திருமுகமும் எண் தோளும் கொண்ட சிவனுருக் கொண்டு பாம்பு மாலையும் தோலாடையும் பூண்டு கால்களிற் கழலணிந்து ஆடுகின்றாராதலின், "வேடம் கட்டி யாடுகின்றவர்" என விளம்புகிறாள். (1)

கண்ணிகள்

2979 கற்பூர வாசம்வீசும் பொற்பாந்தி ருமுகத்தே
கனிந்தபுன் னகையாடக் கருணைக்க டைக்கண்ட
அற்பார்பொன் னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிக்கொண் டேயென்னை ஆட்டங்கண் டாருக்கு
(தெண்ட)

உரை : கற்பூர வாசம் பொற்பு - கற்பூரத்தின் நறுமணம் கமழும் அழகு. புன்னகை - புன்சிரிப்பு. அற்பார் பொன்னம்பலம் - அன்பு நிறைந்த பொன்னம்பலம்; அன்பரது நிறைந்த அன்பால் பொன் வேயப்பட்டமை பற்றி இவ்வாறு கூறப்படுகிறது. தான் ஆடுவதோடு உயிர் வகைகள் அத்தனையும் ஆடுவது பற்றி, "ஆடிக் கொண்டே என்னை ஆட்டம் கண்டார்" என நங்கை நவில்கின்றாள். (1)

2980. இழிந்தாலு நம்மையிங்கே யேற்றுவா ரென்றடைந்தால்
ஏற்றுவார் போலேபின்னு மிழியவைப் பாருக்குப்
பழந்தான் நழுவிமெல்லப் பாலில் விழுந்ததென்னப்
பசப்பிப் பசப்பியன்பர் பண்டம் பறிப்பவர்க்கு
(தெண்ட)

உரை : இழிந்தால் - பிறப்பால் தாழ்வுற்றாலும். ஏற்றுவார்-உயர்த்துவார். இழிய வைப்பார் - இளையான்குடி மாறனாரைப் போல வறுமையில் ஆழப் புதைய வைப்பார். பசப்புதல் - ஈண்டு மயக்குதல் மேற்று. பண்டம் பறித்தல் - பொருள்களை இழக்கச் செய்தல். (2)

2981. சுட்டதிரு நீறுபூசித் தொங்தோமென் றாடுவார்க்குத்
தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப்
பிட்டுக்காசைப் பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவ வேடவருக்கு
(தெண்ட)

உரை : சுட்ட திருநீறு - வெந்த சாம்பலாகிய வெண்ணீறு. தலைமாலை - செத்த தேவர்களின் தலைகளைக்கோத்த மாலை. பிட்டு - மதுரையில் வந்தி யென்பவள் சுட்டு விற்ற பிட்டு. மாறன் - பாண்டியன். கள்ளத் தவ வேடம் - வடபுலத்துப் பயிரவர் கொண்ட வேடம். தவ வேடம் - துறவுக்கோலம். (3)

2982. வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச்செய் பவருக்கு
மாசுபறித் தளர்கையிற் காசுபறிக் கின்றவர்க்குத்
தாழ்ந்தாரை யடிக்கடி தாழக்காண் பவருக்குத்
தானாகி நானாகித் தனியேநின் றவருக்கு
(தெண்ட)

உரை : வாழ்ந்தார், ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய திருவருட் செல்வர்கள். மாசுபறித்தவர் - குற்றம் நீங்கிய திருத்தொண்டர். காசு பறித்தல் - சுந்தரர் சேரமன்னரிடம் பெற்ற காசுகளை வழிப்பறி செய்தது. தாழ்ந்தார் - தாழ்ந்தாரைத் தாழக் காண்டல். அன்பால் தாழ்ந்த மனமுடைய கலிக்கம்பர் போல்பவர், அடிமையாய் இருந்து போலித் தொண்டராய்ப் போதரக் கண்டு தாழ்ந்து வணங்கச் செய்தல். தானாதல் - உயிர்த் துணையாய் உடனாதல். நானாதல் - உயிர்க் குயிராய் ஒன்றுதல். தனியே நிற்றல் - உயிரின் வேறாய சிவமாய் நிற்றல். "பரம் பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (கழுமல) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. (4)

2983. ஆதியந்த நடுவில்லா ஆனந்த நாடருக்கு
அண்டருயிர் காத்தமணி கண்டசசி கண்டருக்குச்
சோதிமய மாய்விளங்கும் தூயவடி வாளருக்குத்
தொண்டர்குடி கெடுக்கவே துஜங்கட்டிக் கொண்டவர்க்கு
(தெண்ட)

உரை : ஆனந்த நாடர் - இன்ப மயமான பரசிவ நாடு. ஏனை நாடுகளைப் போலத் தோற்றமும் முடிவு மில்லாத நாடாகலின் "ஆதியந்த நடுவில்லா ஆனந்த நாடு" என்று கூறுகின்ருர். அண்டர் - தேவர்கள். மணிகண்டர் - நீலமணி போன்ற கழுத்தை யுடையவர். சசிகண்டர் - பிறைத் துண்டத்தை முடிச்சடையில் உடையவர். சோதி மயமாய் விளங்குவதை "பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதி" (சித்தக்) என நாவுக்கரசர் உரைப்பது காண்க. வடிவாளர் - வடிவுடைய வர். துசம் - கொடி. தொண்டர் குடி கெடுத்தல் - தொண்டர்களை மீள மண்ணிற் பிறந்து குடியாகாதவாறு செய்தல். (5)

2984. பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிலிற்போய்ம்
பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்கட்டிக்
கொண்டவர்கு
வீட்டுக்காரைப் படுவாரை வீட்டைவிட்டுத் துரத்தியே
வேட்டாண்டி யாயுலகில் ஓட்டடாண்டி யாக்குவார்க்கு
(தெண்ட)

உரை : பாட்டு - சுந்தரர் பாடிய தேவாரப் பாட்டு. பரவை - திருவாரூர்ப் பரவை நாச்சியார். பண்பு - நற்பண்புகள். பட்டம்கட்டிக் கொண்டவர். பெயரைப் பெற்றவர். வீடு - முன்னது முத்தி வீடு; பின்னது மண்ணுலகில் குடி செய்து வாழும் வீடு. வேட்டாண்டி - மன்மத வேளின் காமவேளியைக் கடந்தவர். வேள்தாண்டி - வேட்டாண்டியென வந்தது. ஓட்டாண்டி - கையில் ஓடு ஏந்தித் திரியும்; பிச்சைக்காரன் சந்நியாசியுமாம். (6)

2985. தாய்வயிறிற் பிறவாது தானே முளைத்தவர்க்குச்
சாதிகுல மறியாது தாண்டவஞ்செய் கின்றவர்க்கு
ஏய தொழிலருளு மென்பிராண நாயகர்க்கு
ஏமாந்த வரையெல்லாம் ஏமாத்து மீசருக்கு

தெண்டனிட்டே னென்று சொல்ல டி—சுவாமிக்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்ல டி.

உரை : உலகுயிர்கட்குத் தான் தாயாவ தல்லது தனக்குத் தாய் இல்லாதவனுதலின், சிவனை, "தாய் வயிற்றிற் பிறவாது தானே முளைத்த வர்" என வுரைக்கின்ருள். சாதி - குலம் முதலியன மக்கள் வகுத்த பிரிவுகளாதலால், மக்களைத் தோற்றுவித்த அவனுக்கில்லை என்றற்கு "சாதி குல மறியாது தாண்டவம் செய்கின்றவர்" என இயம்புகிருள். தாண்டவம் - கூத்து. ஏய தொழில் - அவரவர்க் கேற்ற தொழில். பிராண நாயகன் - உயிர்த் தலைவன். ஏமாந்தவர் - ஏமமாகிய தவத்தை யுடையவர். ஏமம் - ஏம் என ஈறு குறைந்தது. ஏமாத்தும் ஈசன் - ஏம் ஆர்த்தும் ஈசன் என வரும்; முத்திச் செல்வம் அருளும் ஈசன் என்பது பொருள். (7)

திருச்சிற்றம்பலம்

34. இன்னம் தயவு வரவில்லையா

சிந்து

பல்லவி

2986. இன்னந் தயவுரை விலேயா—உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலேயா.

உரை : தயவு - அருள். வர்மம் - மாறுபாடு. சொல் ஐயா என்பது சொலேயா என வந்தது.

கண்ணிகள்

2987. அன்னம் பாலிக்குத்தில்லேப் பொன்னம் பலத்திலாடும்
அரசே—அரசே—அரசேயென் றலறவும் (இன்னந்)

உரை : அன்னம் பாலித்தல் - பசித்தவர்க்குச் சோறளித்தல். அன்னம் - சோறு. (1)

2988. சின்னஞ் சிறுவயதி லென்னே யடிமைகொண்ட
சிவமே—சிவமே—சிவமேயென் றலறவும் (இன்னங்)

உரை : சின்னஞ் சிறு வயது - அறிவறியாதஇளமைப் பருவம். (2)

2989. முன்னம் பிழைபொறுத்தா யின்னம் பொருதுவிட்டால்
முறையோ—முறையோ—முறையோவென் றலறவும்
(இன்னங்)

உரை : அறிவறியாப் பருவத்திற் செய்த குற்றத்தைப் பொறுத் தருளினுய் என்பாராய், "முன்னம் பிழை பொறுத்தாய்" எனக் கூறுகிருர். முன்பு பொறுத்தது போல இப்போதும் பொறுப்பது முறையாம் என்பது கருத்து. (3)

2990. தன்னே யறியாவென்னே யின்ன லுறச்செய்தாயே
தகுமோ—தகுமோ—தகுமோவென் றலறவும் (இன்னங்)

உரை : தன்னே யறிதல் - உயிராகிய தன்னேயும் தலேவனுகிய இறைவனேயும் அறிதல். இன்னல் - துன்பம். (4)

2991. பண்டு மகிழ்ந்தெனையாட் கொண்டு கருணைசெய்த
பரமேப—பரமே—பரமேயென் றலறவும் (இன்னங்)

உரை : பண்டு - முன்பு; அறிவறியாப் பருவம். பரம் - பரம் பொருள். (8)

2992. கொண்டு குலம்பேசுவ ருண்டோ வுலகிலெங்கள்
குருவே—குருவே—குருவேயென் றலறவும் (இன்னங்)

இன்னங் தயவுவர விலையா—உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலையா.

உரை : கொள்வதற்கு முன்பு குலமும் குணமும் பேசுவது உலகியல்பு. "குணம் பேசிக் குலம் பேசிப் பைந்தொடியை மணம் நேர்ந்தார்" (திருநாவுக். 24) எனச் சேக்கிழார் உரைப்பது காண்க. (6)

திருச்சிற்றம்பலம்

35. வினுவிடை

அஃதாவது, நங்கையும் தோழியும் ஒருபால் நங்கையும் நற்ருயும் ஒரு பாலாகி நடராசர் திருமேனி பொருளாக உரையாடுவது.

கொச்சகக் கலிப்பா

2993. ஆகமமு மாரணமு மரும்பொருளென் றெருங்குரைத்த
ஏகவுரு வாகிநின்று ரிவரார்சொல் தோழி
மாகநதி முடிக்கணிந்து மணிமன்று ளனவரத
நாகமணி மிளிரநட நவில்வார்காண் பெண்ணே

உரை: தோழி, ஆகமங்களும் வேதங்களும் அரிய பொருள் என்று ஒரு முகமாக உரைக்கின்ற ஒருருவாகி நிற்கும் இவர் யாவர், சொல்லுக என்று தலைவி கேட்க - வானத்துக் கங்கை யாற்றை முடியிலுள்ள சடையில் கொண்டு மணிகள் இழைத்த சபையின்கண் எப்போதும் பாம்பின் மணிகள் ஒளி செய்யத் திருக்கூத்தாடுபவர், காண் எனத் தோழி கூறுகின்ருள். எ.று.

ஆகமம் - சிவாகமங்கள். ஆரணம் - வேதம். வேதங்கள் பொது வெனவும் ஆகமங்கள் சிறப்பெனவும் கருதப்படுவன; "வேதம் பசு அதன் பால் மெய்யாகமம்" எனப் பெரியோர் கூறுபவர். வேதம் பல தெய்வங் களையும் வேதாந்தம் பரம்பொரு ளொன்றையும் குறிக்கும். ஆகமம் சிவ மொன்றே பரம்பொருள் எனச் சித்தாந்தம் செய்யும். இவற்ருல் துணியப் படுவது ஒருருவாகிய சிவபரம் பொருளாதலால், "ஆகமும் ஆரணமும் அரும்பொருள் என்றெருங் குரைத்த ஏக வுரு" எனத் தலைவி தோழிக் குரைத்து, இவரது பெயர் எனக் கேட்கலுற்று, "இவர் ஆர், சொல், தோழி" என வினவுகின்ருள். ஏகம் - ஒன்று. மாக நதி - ஆகாயக் கங்கை. முடியில் தங்குகிற தெனினும் முடிக்கு அணி செய்தல் தோன்ற "அணிந்து" எனத் தோழி கூறுகிருள். அனவரதம். எப்போதும் அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி" (சரசு அந்) எனக் கம்பர் உரைப்பது காண்க. நாகமணி - நாகப் பாம்பின் தலையில் இருக்கும் மாணிக்க மணி. நவிலுதல் - ஈண்டு ஆடுதற் பொருளில் வந்தது. இது தோழியொடு உரையாடல்.

இதனுல் கங்கை தங்கிய சடை முடியுடன் திருவுருக் கொண்டு மணி மன்றில் கூத்தாடும் சிவ பெருமான் சித்தாந்த வேதாந்தங்கள் தெரி விக்கும் பரம்பொருள் என்பதாம்.

தாழிசை

2994. அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்
திருநட இன்பம்என் றறியோ மகளே

உரை : தாயே, திருவருள் உருவாகிய இறைவன் தனது அருளால் அருள் ஞானம் வழங்குகிறபோது அவ்விடத்து அப்போது சிவானுபவம் உண்டாம் என்பது என்னேயோ என்று தலைவி கேட்கின்றாள்; மகளே, பசுபாச ஞானமாகிய மருட்சி யுணர்வுக்குப் புலப்படாமல், திருவருள் நல்கும் சிவஞானக் காட்சியாற் காணப்படும் திருக்கூத்து, இன்பம் அவ்வனுபவம் என்பது அறிவாயாக எனத் தாய் உரைக்கின்றாள். எ.று.

கூத்தப்பிரான் திருவுரு அருளுரு என்றற்கு "அருளிறை" எனவும், அவ்வுருக்கொள்வது உயிர்கட்கு அருளறிவு நல்குதற் பொருட்டே என்பாளாய் "அருளாலே அருள்கின்ற பொழுது" எனவும், அந்த அருள் நிலையில் ஆன்மாக்கள் பெறுவது அருளனுபவம் என்பாளாய், "அங்கு அனுபவமாகின்றது" எனவும் நங்கை கூறுகின்றாள். அந்த அனுபூதி எத்தகையது என வினவுவாள், "என்னடி தாயே" என்று உரைக்கின்றாள். மருளாலே தெரியாது தெருளாலே தெரியும் என இயைத்துக் கொள்க. பசுபாச அறிவுகள் மயக்க முடையனவாதலால், "மருள்" எனவும், தெளிவுருவாவது பதிஞானமாகிய சிவஞானம் என்றற்குத் "தெருள்" எனவும் செப்புகின்றாள். இதனைப் பரஞான மென்றும் மருளறிவை அபர ஞான மென்றும் கூறுவர். "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க, வருஞானம் அஞ்ஞான விகற்பம்" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனார் உரைப்பதறிக.

இதனால், திருவருள் ஞானத்தால் சிவத்தின் திருக்கூத்திற் பெறப்படும் இன்பமே திருவருள் ஞான அனுபவம் என்பதாயிற்று. (2)

2995. அறிவாலே அறிவினை அறிகின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
செறிவாலே பிறிவாலே தெரியாது தெரியும்
திருவருள் உருவம்என் றறியாயோ மகளே.

உரை : தாயே, அறிபொருளை அறிவு கொண்டு அறிகிறபோது அங்கே பெறலாகும் அனுபவம் யாது? என நங்கை கேட்க, மகளே, திருவருளுருவமாகிய சிவமூர்த்தம் ஒடுங்காது காண்பவர்க்குத் தெரியப் படாமல், ஒன்றி யொடுங்கிக் காண்பவர்க்குத் தெரியப்படும் என்பதை நீ அறிய வில்லையோ என விளம்புகிறாள். எ.று.

அறிவு - பொறி புலன்களாலும் மனத்தாலும் பெறப்படுவது. பொறி புலனுணர்வுகளை காண வறிவு என்றும், மனவுணர்வை நூலறிவு என்றும் கூறுவர். இவற்றையே பாச ஞானமெனவும் பசு ஞான மெனவும் உரைப்

பர். அளவை நூல் கூறும் காட்சி. நூல், கருத்து என்ற மூன்றனுள் கருத்தறிவு பசு ஞானமாகவும், காண்டலும் நூலுரையும் பாச ஞான மாகவும் குறிப்பர். அறிபொருளை இவ்விரு வகை அறிவுகளால் அறிகிற போது உண்டாகும் அறிவனுபவத்தை, "அறிவாலே அறிவினை யறிகின்ற பொழுது அங்கு அனுபவமாகின்றது" என்றும், அதன் இயல்பு யாது என்பாள், "என்னடி தாயே" என்றும் வினவுகின்றாள். சுகதுக்க மோகவுருவான முக்குண வயத்தால் அறியப்படும் பொருளின்கண் அழுந்தி யறியாது பிரிந்து நின்று மயங்குவ துண்மையின், "பிறிவாலே தெரியாது" எனவும், ஓரொருகால் சத்துவ குண மேம்பாட்டின்கண் அறியப்படும் பொருளினை ஒன்றி யழுந்தி யறிவது உண்மையின், "செறிவாலே தெரியும்" எனவும் தாய் இயம்புகிறாள். இந்த அறிவால் தெரிய விளங்குவது கூத்தப் பிரானது மூர்த்தமாகிய திருவருளுருவம் என்பாளாய்' "திருவருளுருவம் என்று அறியாயோ மகளே" என்று உரைக்கின்றாள். திருவருளுருவம் - அருட் சத்தி தர அதனைச் சிவம் மேவி நிற்கும் உருவம். இதனை, உமாபதி சிவனார், "நீடு பராசத்தி நிகழ் இச்சா ஞானம் நிறை கிரியை தர அதனை நிமலன்மேவி நாடரிய கருணை திருவுருவமாகி" (சிவப்) என்பது காண்க. இவ்வுரையாடலின் உட்கருத்து, "அருளாலே பரரென்றன் தோழி—அத்தை, அறியாமல் யானென்றன் அறிவாலே கண்டேன், இருளான பொருள் கண்டதல்லால் கண்ட என்னையும் கண்டிலன் என்னடி தோழி" எனத் தாயுமானார் உரைப்பது காண்க.

இதனால், சிவனுண்மைத் தரிசனம் பெறுதற்குத் திருவருள் ஞானமே வேண்டுவதென விளக்கியவாறும். *(3)*

திருச்சிற்றம்பலம்

36. நன்றுய் கவன்றது

அஃதாவது, தான் பெற்ற மகளின் நினைவும் சொல்லும் செயலும் வேறுபட்டமை கண்டு கவலையுற்ற தாய் செவிலியிடம் சொல்லுவது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2996. திருஅருட் புனிதை மகிழநின் ருடும்
தில்லைமன் றழகனே என்பாள்
மருவருட் கடலே மாணிக்க மலையே
மதிச்சடை வள்ளலே என்பாள்
இருவருக் கரிய ஒருவனே எனக்கிங்
கியார்துணை நின்னலா தென்பாள்
வெருவிஉட் குழைவாள் விழிகணீர் துளிப்பாள்
வெய்துயிர்ப் பாள்என்றன் மின்னே

உரை: திருவருளுருவின் புனித மங்கையாகிய உமாதேவி கண்டு மகிழ நின்று திருக்கூத்தாடும் தில்லையம்பலத்து அழகனே என்றும், தெய்வ மணம் பொருந்திய அருட் கடலே என்றும், மாணிக்க மலையே என்றும், பிறைமதி தங்கும் சடையையுடைய வள்ளலே என்றும், பிரமனும் திருமாலுமாகிய இருவர்க்கும் காண்பரிய ஒருவனே உன்னையன்றி எனக்குத் துணையாவார் யாருமில்லை என்றும், என் மின் போலும் இடையை மகள் வாய்வெருவி மனம் கரைந்து கண்ணீர் சொரிந்து பெருமூச் செறிகின்ருள்; நான் என் செய்வேன். எ.று.

திருவருளே திருமேனியாக வுடையவளாதலால், உமாதேவியைத் "திருவருட் புனிதை" எனம் புகழ்கின்ருள். புனிதம் - தூய்மை; தூயனைப் புனிதன் என்பதுபோலத் தூயவளைப் புனிதை எனப் பெயர் குறிக்கின்ருர். சிவபெருமானைக் கூத்தாடக் கண்டு இன்புறுகின்ருள் எனச் சான்ருேர் உரைப்பதால், "புனிதை மகிழ நின்ருடும் அழகன்" என்று புகல்கின்ருள். "கூடிய இலயம் சதி பிழையாமைக் கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகா" (வட திருமுல்லை) என்று நம்பியாரூரர் பாடுவர். கூத்தாடுமிடம் தில்லையம்பலம் என்றற்குத் "தில்லை மன்று அழகனே" என நங்கை கூறுகிருள். திருக்கூத்து உலகுயிர்கட்கு நல முண்டாதல் குறித்த தென்பாராய்க் கொற்றவன் குடி உமாபதி சிவஞர், "ஞாலத்து அரந்தை கெட மணி மன்றுள் ஆடல் காணும் அன்னை" (சிவப்) என்பது காண்க. சிவனுக்குச் சொக்கன் என்ற பெயர் வழங்குதலால், "அழகன்" என்று குறிக்கின்ருள். குறையா நிறைவுடைமை பற்றி "அருட் கடலே" எனவும், செம்மை

நிறத்தாலும் சிவஞான ஒளியாலும் சிவபெருமானை, "மாணிக்க மலையே" எனவும் போற்றுகின்றாள். "மருவார் கொன்றை மதி சூடி மாணிக்கத் தின் மலை போல வருவார் விடையேறி" (கடவூர்) என நம்பியாரூரர் போற்றுவது காண்க. மதி - பிறைமதி. வரையாத வண்மை விளங்க "வள்ளல்" என்கிறாள். இருவர், திருமாலும் பிரமனுமாகிய இருவர் ஒருவன் - சிவனுக்குரிய பெயர்களில் ஒன்று. "ஒருவனென்னும் ஒருவன் காண்க" (அண்டப்) எனத் திருவாதவூரர் கூறுவர். உயிரோடு ஒன்றாயும் உடனாயும் நின்று துணை புரிதலின், "எனக்கு இங்கு யார் துணை நின்னலாது" என வுரைக்கின்றாள். வெருவுதல் - உறக்கத்திற் பேசுதல். "வெருவாதாள் வாய் வெருவி வேங்கடமே வேங்கடமே என்கின்றாளால்" (பெரிய—5:5) எனத் திருமங்கை மன்னர் உரைப்பது காண்க. நீர் துளித்தல் - நீரைத்துளித் துளியாகச் சொரிதல். வெய்துயிர்த்தல் - பெருமூச் செறிதல்; இம் மூச்சு வெம்மையாக இருத்தலால், வெய்துயிர்த் தலாகிறது. மின்னற்கொடி போன்ற இடையையுடையவளை "மின்" என மொழிகின்றாள்.

இதனால், மகள் படும் வருத்தங் கண்டு நற்றாய் ஆற்றாமல் செவிலிக்கு உரைத்து அயா வுயிர்த்தவாறும். இதனைப் பிறாண்டும் கூறிக் கொள்க. (1)

2997. ஓடுவாள் தில்லைத் திருச்சிற்றம் பலம்என்
றுருகுவாள் உணர்விலள் ஆகித்
தேடுவாள் திகைப்பாள் தியங்குவாள் ஐயோ
தெய்வமே தெய்வமே என்பாள்
பாடுவாள் பதைப்பாள் பதறுவாள் நான்பெண்
பாவிகாண் பாவிகாண் என்பாள்
வாடுவாள் மயங்கி வருந்துவாள் இருந்து
வல்வினை யேன்பெற்ற மகளே.

உரை: கொடிய வினையை யுடையவளாகிற நான் பெற்ற மகள், தெரு வழியே ஓடித் தில்லைச் சிற்றம்பலம் என்று சொல்லி, மனம் உருகு கிறாள்; தனது உணர்வையிழந்து அம்பலவாணனைத் தேடித் திகைப் புற்று மயங்கி நிற்பாள்; ஐயோ தெய்வமே தெய்வமே என்று வாய்வெருவு வாள்; அப்பெருமான் புகழைப் பாடுவாள்; உடல் பதைக்கத் துடித்துப் பெண்களில் நானொரு பாவி காண் என்று பன்முறையும் சொல்லுகிறாள்; பின்பு அறிவு மயங்கி மெய்வாடி ஒருபால் இருந்து வருந்துகின்றாள்; இதற்கு யான் என்ன செய்வேன். எ.று.

மகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாகிய நற்றாய், தன்னை நொந்து கொள்வாளாய், "வல்வினையேன் பெற்ற மகள்" என்று சொல்லுகின்றாள். தான் செய்த வினை காரணமாகத் தன் மகட்கு இம் மனநிலை யுண்டாயிற் றென்பது அவள் கருத்து. மனையின்கட் செறித்து வைப்பினும் இராது பெண்மைக்குரிய நாணத்தைக் கைவிட்டுத் தெருவில் ஓடுகிறாள். என்பாள், "ஓடுவாள்" என்றும், பிடித்துக் கொணர்ந்து மனைக்குட் புகுந் தால், தில்லையம்பலத்தை நினைந்து உருகுகின்றாள்என்பாளாய், "தில்லைத்

திருச்சிற்றம்பலம் என்று உருகுவாள்'' என்றும் உரைக்கின்ருள். தன் நல்லுணர்வை யிழந்து அம்பலத் தண்ணல் தன்பால் வந்து சென்றதாக எண்ணித் தேடிக் காணுமல் திகைத்து நின்ருங்கு மருண்டு நிற்கிருள் என்பாளாய், "உணர்விலளாகித் தேடுவாள் திகைப்பாள் தியங்குவாள்'' என்று கூறுகின்ருள். பெரிதும் நோயுற்றவள் போலம் புலம்புகிருள் என்பாளாய், "ஐயோ தெய்வமே தெய்வமே என்பாள்'' என்றும், சிறிது போதில் புலம்புவதை விடுத்து, உவகையுடன் அம்பலவாணன் புகழைப் பாடுகிருள் என்றற்குப் "பாடுவாள்'' என்றும் நற்ருய் சொல்லுகிருள், பின்பு உவகையின் நீங்கி, இழவாதன இழந்தவள் போல உடல்பதைக்கப் பதறி "நான் பெண் பாவி காண் பாவி காண், என்பாள்'' எனவும். ஊணும் உறக்கமும் இன்மையின் உடம்பு நனி சுருங்கி வாடி வருந்து கிருள் என்பாளாய், "வாடுவாள் மயங்கி இருந்து வருந்துவாள்" எனவும் எடுத்துரைக்கின்ருள். (2)

2998. உலகெலாந் தழைப்பப் பொதுவினில் ஓங்கும்
ஒருதனித் தெய்வம்என் கின்ருள்
இலகுபே ரின்ப வாரிஎன் கின்ருள்
என்னுயிர்க் கிறைவன்என் கின்ருள்
அலகிலாக் கருணை அமுதன்என் கின்ருள்
அன்பர்கட் கன்பன்என் கின்ருள்
திலகவா ணுதலாள் இவ்வணம் புலம்பித்
தியக்கமுற் றழுங்குகின் ருளே.

உரை : திலகமணிந்து ஒளி திகழும் நெற்றியையுடைய என் மகள், தன்னுடைய தெய்வம் உலக முற்றும் வளமிக்குத் தழைத்தோங்கும் வண்ணம் அம்பலத்தில் உயர்ந்திருக்கும் ஒப்பற்றதொரு தெய்வம் என்றும், விளங்குகின்ற பேரின்பக் கடலென்றும், என்னுடைய உயிரின் கண் தங்கும் இறைவன் என்றும், அளவில்லாத கருணையுருவாய அமுதமாவான் என்றும், அன்பருக் கன்பன் என்றும் மொழிந்து இவ்வாறே நாளும் புலம்பி அறிவு மழுங்கி வருந்துகின்ருள்; இதற்கு நான் என்ன செய்வேன். எ.று.

உலகுயிர்கட்கு நலம் பெருகுதல் வேண்டிச் சிவபிரான் தில்லையம் பலத்தில் திருக்கூத்தாடுகின்ருன் என்பது பற்றி, "உலகெலாம்தழைப்பப் பொதுவினி லோங்கும் ஒரு தனித் தெய்வம் என்கின்ருள்''. "ஞாலத்து அரந்தை கெட மணி மன்றுள் ஆடல் நிகழ்கிற'' தென உமாபதி சிவம் கூறுவதறிக. பொது, அம்பலம். ஒன்ருய் ஒப்பற்றது சிவம் என்றற்கு "ஒரு தனித் தெய்வம்'' என உரைக்கின்ருள். வாரி, கடல். உயிர்க் குயிராய் ஒன்றுவது கொண்டு சிவனை "என்னுயிர்க் கிறைவன் என்கின்ருள்''. இறைவன் - தங்குபவன். அருளுருவினனுதலால், "கருணை யமுதன்'' என்றும், அன்பர்கட்கு வேண்டுவன நல்கி அன்பு செய்வது விளங்க "அன்பர்கட் கன்பன்'' என்றும் இயம்புகின்ருள். தியக்கம் - அறிவு மழுங்குதல். அழுங்குதல் - வருந்துதல்; செயல் படாமையுமாம். (3)

2999. திருஎலாம் அளிக்கும் தெய்வம்என் கின்றுள்
திருச்சிற்றம் பலவன்என் கின்றுள்
உருஎலாம் உடைய ஒருவன்என் கின்றுள்
உச்சிமேல் கரங்குவிக் கின்றுள்
கருஎலாங் கடந்தாங் கவன்திரு மேனி
காண்பதெந் நாள்கொல்என் கின்றுள்
மருஎலாம் மயங்கும் மலர்க்குழல் முடியாள்
வருந்துகின் றுள்என்றன் மகளே.

உரை : என்னுடைய மகள், நறுமணம் கமழும் பூக்களணிந்த கூந்தலை யவிழ விட்டு வருத்தமுடன் வாய் வெருவலுற்று, என் தெய்வம், செல்வ வகை யாவையும் அளித்தருளும்; திருச்சிற்றம்பலத்தை யுடையவன்; உருவவகை பலவும் உடைய ஒருவன் எனவும், தன் தலைமேற் கைகுவித்துத் தொழுது பிறப்பு வகை பலவும் நீங்கி அப்பெரு மானது திருமேனியைக் காண்பது எக்காலம் எனவும் உரைக்கின்றுள் இவட்கு என்ன செய்வேன். எ.று.

மரு - நறுமணம். மலர்வகை பலவும் வேறு வேறு மணம் உடையவை யாதலின் "மருவெலாம்" எனக் கூறுகின்றுள். கூந்தலை முடியிடாமல் அவிழ்ந்து அலைய விடுதல் சிறப்பன்மையால், "மலர்க்குழல் முடியாள்" என்றும், வருந்துதற் கேதுவாகும் குறை யாதும் இல்லையாகவும் "வருந்து கின்றுள்" என்றும் தாய் உரைக்கின்றுள். திரு. செல்வம். திருவெலாம் அளிக்கும் தெய்வம் இன்ன தென விளக்குதற்குத் "திருச்சிற்றம்பலவன் என்கின்றுள்". அருவம் நான்கும் உருவம் நான்கும் அருவுருவ மொன்று மாக ஒன்பது கூறுபவாகலின், "உருவெலாம் கடந்த ஒருவன்" என் கின்றுள்; மங்கல மகளிர் தலைமேற் கைகூப்பித் தொழுதல் நன்றன்றுகவும், "உச்சி மேற் கரங் குவிக்கின்றுள்" எனத் தாய் வருந்துகிறுள். பிறவிக்குக் காரணமாகிய குற்ற மெல்லாம் நீங்கினுலன்றிச் சிவத்தின் திருமேனி காண்டற் கரிதாதல் பற்றிக் "கருவெலாம் கடந்து ஆங்கு அவன் திருமேனி காண்பது எந்நாள் கொல் என்கின்றுள்" என்று சொல்லுகிறுள். இவளுடைய வேறுபாடு நீங்குதற்குரிய செய்ல் யாதெனத் தெரியவில்லை என்பது குறிப்பு. (4)

3000. மின்இணைச் சடில விடங்கன்என் கின்றுள்
விடைக்கொடி விமலன்என் கின்றுன்
பொன்இணை மலர்த்தாள் புனிதன்என் கின்றுள்
பொதுவிலே நடிப்பன்என் கின்றுள்
என்இணை விழிகள் அவன்திரு அழகை
என்றுகொள் காண்பதென் கின்றுள்
துன்இணை முலைகள விம்முற இடைபோல்
துவள்கின்றுள் பசியபொற் றெடியே.

உரை : பசுமையான பொன்னிறப் பூங்கொடி போன்ற என் மகள் தன்னுடைய நெருங்கிய இரண்டாகிய கொங்கைகள் பருத்துவிம்முதலால் நொசியும் இடை போல் நுடங்குகின்றவள் வாய் வெருவலுற்று மின்போல்

ஒளிரும் சடையையுடைய அழகன் எனவும், எருதெழுதிய கொடியை யுயர்த்த விமலன் எனவும், அழகிய மலர் போன்ற திருவடிகளை யுடைய புனிதன் எனவும், சபையிலே கூத்தாடுபவ னெனவும், என்னுடைய இரண்டாகிய கண்கள் அவனது திருவிளங்கும் அழகை எப்பொழுது காணுமோ எனவும் மொழிகின்றாள்; இவட்கு நான் செய்வது? யாது என நற்றாய் வருந்துகிறாள். எ.று.

துன்னுதல் - நெருங்குதல். கொங்கைகள் இடையில் ஈர்க்கும் போகாதவாறு நெருங்குதல் சிறப்பெனக் கருதுவர் சான்றோர். "இடையீர் போகா - இளமுலையாளை யோர்புடையீரே" (ஒத்தூர்) எனத் திருஞான சம்பந்தர் உரைப்பதறிக. விம்முதல் - பெருத்தல். கொங்கைகளின் சுமைக் காற்றாது நுணுகுமிடை நொசிவது பற்றி, "இடைபோல் துவள் கின்றாள்" என நற்றாய் வருந்திக் கூறுகின்றாள். மின்னிணைச் சடிலம் - மின்னற் கொடி போலும் நிறமும் ஒளியும் பொருந்திய சடை. "மின்னியல் செஞ்சடை மேல் விளங்கும் மதி மத்தமொடு பொன்னியல் கொன்றை யினான்" (பாதாளீச்) என ஞானசம்பந்தர் எடுத்துப் பாடுவது காண்க. சடிலம் - சடை. விடைக் கொடி - எருதின் உருவெழுதிய கொடி. விமலன் - மலமில்லாதவன். பொன்னிணை மலர்த்தாள் - பொன்னின் நிறமும் அழகும் கொண்ட தாமரை போன்ற திருவடி. புனிதன் தூயவன். பொது, தில்லையம்பலம்; இன்றும் பொது என்னும் பெயர் வழக்கிலுள்ளது. நடித்தல் - கூத்தாடுதல். திரு வென்பதே அழகைக் குறிக்குமாயினும், கண்டார் விரும்பும் சிறப்பு விளங்க, "திருவழகு" எனக் கூறுகின்றாள். காட்சி வேட்கை மிகுவது தோன்ற "என்று கொல் காண்பது" என வாய் வெருவுகிறாள். (5)

3001. கருங்களிற் றுரிபோர்த் தம்பலத் தாடும்
கருணைஎங் கடவுள்என் கின்றாள்
பெருங்களி துளும்ப வடவனத் தோங்கும்
பித்தரில் பித்தன்என் கின்றாள்
ஒருங்களி மிழற்றும் குழலினார் என்போல்
உறுவரோ அவனைஎன் கின்றாள்
தருங்களி உண்டாள் போல்கின்றாள் நாணும்
தவிர்க்கின்றாள் என்அருந் தவளே.

உரை : தரப்படுகின்ற கள்ளை யுண்டவள் போன்று, நாணத்தை ஒழித்தவளாகிய என்னுடைய அரிய தவமகள், கரிய யானையின் தோலைப் போர்த்துக் கொண்டு அம்பலத்தில் ஆடுகின்ற கருணை யுருவாகிய கடவுள் எனவும், பெருமகிழ்ச்சி மிக்குறத் திருவாலங் காட்டில் உயர்ந்தோங்கும் பித்தர்களிற் பெரும் பித்தனுவான் எனவும், வண்டினம் திரண்டு மொய்த்து ஒலிக்கும் கூந்தலையுடைய மகளிருள் அப்பெருமானை என்னைப் போல் எய்துபவ ருண்டோ எனவுமுரைக் கின்றாள். எ.று.

களிப்புடைய கள், களி எனப்படுகிறது. களிப்பு மிகு மளவும் வைத்திருந்து தரப்படும் கள்ளைத் தருங்களி எனக்

கூறுகிருள். கள்ளுண்டவரைப் போல் மெய்யில் அசைவும், சொல்லிற் சோர்வும் கொண்டுள்ளாள் என்றற்குத் "தரும் களி யுண்டாள் போல் கின்ருள்" என்றும், பெண்மைக் குயிரினும் சிறந்த நாணத்தையும் கைவிடுகின்ருள் என்பாளாய், "நாணும் தவிர்க்கின்ருள்" என்றும், தவம் புரியும் பெண் போல் கோலமும் ஒழுக்கமும் கொண்டிருப்பது விளங்க "அருந்தவள்" என்றும் உரைக்கின்ருள். பொன் போன்ற மேனிக்குக் கரிய யானைத் தோற் போர்வை அழகு செய்தலின், "கருங்களிற்றுரி போர்த்து அம்பலத்தாடும் கடவுள்" எனவும், கடவுளாயினும் கருணையே யுருவாயவன் என்பாள், "கருணையங் கடவுள்" எனவும் இயம்புகிருள். பெருங்களி, பெருமகிழ்ச்சி. வடவனம் - ஆலங்காடு. திருவாலங்காடு சிவன் கோயில் கொண்டுள்ள திருப்பதிகளில் ஒன்று. இது பழையனூர் ஆலங்காடு என்றும் சிறப்பிக்கப்படும். "புகலும் வழிபாடு வல்லார்க்கு என்றும் தீய போல் அகலும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே" (ஆலங்) என ஞானசம்பந்தர் பாடியருளுவது காண்க. காரைக்காலம் மையார், "எடுத்த பாதம் அண்டமுற அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பனிடம் திருவாலங்காடே" (மூத்த) என்று சிறப்பிக்கின்ருர். பெரும் பித்தன் என்றற்குப் "பித்தரிற் பித்தன்" என்கின்ருள். "பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி" (சாழல்) எனத் திருவாசகம் ஓதுவது காண்க. அளி - வண்டு, ஒருங்கு மிழற்றுதல், திரண்டு மொய்த்து ஒலித்தல். "ஒருங்களி யார்ப்ப உமிழ் மும்மதத்தது. யானை" (திருக்கோவை. 52) என வருதல் காண்க - குழலினர். கூந்தலை யுடைய மகளிர். என் போல் அவனை யுறுவரோ என்பதற்கு, என்னைப் போல் அவன்பாற் காதலன்புறுவரோ எனினும் அமையும். பெண்மை நலங்களே யன்றி உயிரிற் சிறந்த நாணையும் தவிர்ந்தா ளென நிற்றலின், உம்மை எச்சப் பொருள தென அறிக. (6)

3002. மன்றிடை நடிக்கும் மணளனை அல்லால்
மதிப்பனே பிறரைஎன் கின்ருள்
வன்துயர் நீக்கும் அவன்திரு வடிவை
மறப்பனே கணமும்என் கின்ருள்
ஒன்றுமில் லவன்என் றுரைக்கினும் எல்லாம்
உடையவன் ஆகும்என் கின்ருள்
பொன்றுதல் பிறழ்தல் இனியுறேன் என்றே
பொற்றெடி பொங்குகின் ருளே.

உரை : தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் என் மணவாளனை யன்றிப் பிறர் எவரையும் மனத்தில் நினையேன் என்றும், கொடிய துன்பங்களைப் போக்கும் அப்பெருமானுடைய திருவடியைக் கணப் பொழுதும் மறவேன் என்றும், ஒரு சிறு பொருளும் தனக்கென வுடையனல்லன் எனப் பிறர் உரைத்தாலும், அவன் உலகமெல்லாம் உடையவனுவா னென்றும், யான் இனிப் பிறப்பும் இறப்பும் அடையேன் என்றும் பொன்வளை யணிந்த என் மகள் மகிழ்ச்சி மிகுந்து உரைக்கின்ருள். எ.று.

மன்று - தில்லைத் திருச்சிற்றம்பலம். மணாளன் - மணத்தாற் புணரும் கணவன். மதித்தல், நினைத்தல். வன் துயர் - நீக்குதற் கரிய வலி யுடைய துன்பம். உயிர்கள் எய்தும் பிணிகட்கு நன்மருந்தாகலின், "வன்துயர் நீக்கும் திருவடி" என்று புகழ்கின்றாள் - கணம் - சிறு கால அளவு. பொன்னும் மணியும் பிறவுமாகிய பொருள் ஒன்றும் தனக்கென இல்லாதவன் என்று சொல்லி இகழ்ந்த லுண்மையின், "ஒன்று மில்லவ னென்றுரைக்கினும்" எனக் கூறுகின்றாள். எல்லாம் என்பது "எஞ்சாப் பொருட்டாய் வருவதோர் உரிச்சொல் லென்பாரு முளர்" (சொல். 186) என்பர் சேனாவரையர். பொன்றுதல் - சாதல். பிறழ்தல் என்பது பாடமாயின், மாறிப் பிறவேன் என்று பொருள் செய்க. (7)

3003. திருத்தகு தில்லைச் திருச்சிற்றம் பலத்தே
தெய்வம்ஒன் றுண்டெமக் கென்பாள்
பெருத்தகுங் குமப்பொற் கலசவாண் முலையார்
பேசுக பலபல என்பாள்
மருத்தகு குழலாள் மனமொழி உடலம்
மற்றவும் அவன்கழற் கென்பாள்
குருத்தகு குவளைக் கண்ணின்நீர் கொழிப்பாள்
குதுகுலிப் பாள்பசுங் கொடியே.

உரை: என்னுடைய பொன்னிறப் பூங்கொடி போன்ற மகள், எனக்குரிய தெய்வம், திருவீற்றிருக்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தே உளது என்பாள்; அதனை நினையாது பெரிய குங்குமக் குழம்பு பூசிய பொன்னாற் செய்த கலசம் போன்ற கொங்கைகளையுடைய அயற் பெண்டிர், என்னை நோக்கித் தத்தம் மனத்தன பேசுக எனக் கூறுவதோடு, மணந் தங்கும் கூந்தலையுடைய என் மகள் மனம், மொழி, மெய் மூன்றையும், தன் பிற பொருள்களையும் அவன் திருவடிக்கே உரியவை என்கின்றாள். நிறந் தங்கும் குவளை மலர் போன்ற கண்களிலிருந்து கண்ணீர் வடிக்கின்றாள்; அதே நிலையில் தன்னை யறியாதே அகமகிழ்ச்சி யடைகின்றாள். எ.று.

செல்வ வகை பலவும் நிறைந்துள்ள தில்லை நகரைத் "திருத்தகு தில்லை" எனச் சிறப்பிக்கின்றார். இப் பொருண்மையே கருதி, மதுரை நகர்ச் செல்வ வீதியைத் "திருவீற்றிருக்கும் தீது தீர் நியமம்" (முருகு) என நக்கீரனாரும் நவில்கின்றார். தில்லைப் பெருங் கோயிலில் உள்ளது திருச்சிற்றம்பலமாகலின், "தில்லைச் சிற்றம்பலத்தே எமக்குத் தெய்வம் ஒன்றுண்டு" என்றுரைக்கின்றாள். குங்குமம் ஈண்டுக் குங்குமக் குழம்பின் மேற்று. இதை இளமகளிர் மார்பில் அணிந்து கொள்வது பண்டை நாளைய மரபு. "சேலுங் கயலுந் திளைக்கும் கண்ணார் இவை கொங்கையின் செங்குங் குமம் போலும்" (பல்லாண்டு) எனப் பெரியோர் கூறுவது காண்க. கொங்கை பருத்தவிடத்துப் பொன்னிறமும் ஒளியும் திகழ்தலின், "வாண் முலையார்" என்கின்றார். நங்கையின் மேனி வேறுபாடு கண்டு தத்தம் மனத்தில் எழுகின்ற எண்ணங்களை வாய் காவாது சிலரும் பலருமாய்க் கூடி, அவர் கூறுவதை அறிகின்றாளாதலின், அதனுக் கஞ்சாது, "முலையார் பேசுக பல பல என்பாள்" என்கின்றாள். மருமலர்க் குழலாள்" என்றது, "மருத்தகு குழாலள் என்றது இயற்கையாகவே மணங் கமழும்

கூந்தலே யுடையவள் என்றற்கு. உடம்பின் வேருய், பெற்ருேர் தனக்கென அளித்த அணி வகைகளையும் பிறவற்றையும் குறித்தற்கு, "மற்றவும்" எனச் சுட்டி மொழிகின்ருள். குரு - நிறம். "குருவுங் கெழுவும் நிறனுகுமே" என்பது தொல்காப்பியம். கொழித்தல் - ஈண்டு நிறைந்து சொரிதல். குதுகுலித்தல் - உள்ளத்தே மகிழ்தல். இது குதுகலித்தல், குதூ கலித்தல் எனவும் வழங்கும். (8)

3004. அம்பலத் தாடும் அழகனைக் காணு
தருந்தவும் பொருந்துமோ என்பாள்
கம்பமுற் றிடுவாள் கண்கள்நீர் உகுப்பாள்
கைகுவிப் பாள்உளங் கனிவாள்
வம்பணி முலேகள் இரண்டும்நோக் கிடுவாள்
வள்ளலைப் பரிகிலீர் என்பாள்
உம்பரன் தவஞ்செய் திடுமினீர் என்பாள்
உயங்குவாள் மயங்குவாள் உணர்வே.

உரை : அம்பலத்தில் ஆடல் புரிகின்ற சொக்கனைக் கண்களாற் காணுமல் உணவருந்துதற்கு மனம் பொருந்துமோ எனவும், கச்சணிந்த கொங்கைகளைப் பார்த்து வள்ளலாகிய அப்பெருமானை அன்புடன் கூடுகிறீரில்லை; உங்கட்கு மேலோனுகிய அவனைப் பெறுதற் கெனத் தவம் செய்வீர்களாக எனவும் சொல்லி, என் மகள், மெய் நடுக்குற்றுக் கண்கள் நீர் சொரியக் கைகளைக் குவித்து, மனம் குழைந்து, சோர்ந்து உணர்வு மயங்குகின்ருள்; நான் என்ன செய்வேன். எ.று.

மகளே, பசி மிக்கு வருந்துகின்ருய்: இந்தப் பாலை யுண்க என்று சொன்னுல், சிவபரன்மேலுள்ள காதல் மிகுதியால், தில்லையம்பலத்தில் ஆடல் புரியும் பேரழகனுகிய அவனைக் கண்களாற் கண்டு, தெளியாமல் பாலும் உண்ணஎன்மனம் விரும்பாது என்பாளாய், அம்பலத்தாடும் அழ கனைக் காணுது அருந்தவும் பொருந்துமோ என்பாள்" என்றும், தன்னு டைய கொங்கைகள் இரண்டினையும் தானேபார்த்து வள்ளற்பெருமானுகிய அவன் மார்பைப் பொருந்திப் புணர்ந்து இன்பம் பெறுகின்றீரில்லையே; உங்களது பரமனைக் கூடுதல் வேண்டி நல்ல தவம் செய்மின்; அவனைப் பெறலாம் என்பாளாய், "வம்பணி முலேகள் இரண்டுநோக்கிடுவாள் வள்ளலைப்பரிகிலீர்" என்றும்."உம்பரன் தவம் செய்திடுமின் நீர்" என்றும் இயம்புகின்ருள்."இளைக்கலாத கொங்கைகள்! எழுந்து விம்மி என்செய்தீர்; முளைக்கலாத மதிக் கொழுந்து போலும் வாண் முகத்தினுன்; வளைக் கலாத விற்கையணி வள்ளல் மார்பின் உள்ளுறத் திளைக்கலா லாகுமாயின் செம்தவங்கள் செய்ம்மினே" எனச் சீதை தன் கொங்கை களைப் பார்த்துக் கூறியதாகக் கம்பர் கூறுவது காண்க. கம்பம் - மெய் நடுக்கம். வம்பு - கச்சு. பரிதல் - அன்புடன் கூடுதல். உயங்குதல், சோர்தல். வேட்கை மீதூர்ந்த பெண்மை தலைவனைக் கூடப் பெறுமைக்கு வருந்தித் தன் கொங்கைகளை நோக்கி, "பொங்கிய பாற்கடற் பள்ளி கொள்வானைப் புணர்வதோ ராசையினுல் என் கொங்கை கிளர்ந்து

குமைத்துக் குதுகலித்து ஆவியை யாகுலம் செய்யும்'' (நாச்சி.5:7) என்று சொல்லி, "கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந் தென்னழலைத் தீர்வேனே'' (நாச்சி.13:8) என்றும், "கொம்மை முலைகள் இடர் தீரக் கோவிந்தற் கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவம்தான் என்'' (நாச்சி.13:9) என்றும் ஓதி வருந்துவது காண்க. (9)

திருச்சிற்றம்பலம்

37. சல்லாப லகரி

அஃதாவது, வலர் பொருள்பட இன்னுரை யாடி மகிழ்தல்.

கலிநிலைத் துறை

3005. சுந்தர நீறணி சுந்தரர் நடனத் தொழில்வல்லார்
வந்தனர் இங்கே வந்தனம் என்றேன் மாதேநீ
மந்தணம் இதுகேள் அந்தனம் இலநம் வாழ்வெல்லாம்
அந்தரம் என்றார் என்னடி அம்மா அவர்சூதே.

உரை: அம்மா, அழகிய திருநீற்றை மேனியில் அணிந்து கொள்ளும் அழகரும், கூத்தாடும் தொழிலில் வல்லவருமாகிய அவர் இங்கே என் முன் வந்தருளினராக, வணக்கம் என்று அன்பு தோன்றச் சொன்னேன்; பெண்ணே, நான் சொல்வது ஒரு மறைபொருள்; இதனைக் கேள்; நம்முடைய வாழ்வு நிலைத்த செல்வ மன்று; வாழ்வெல்லாம் நிலையின்றிக் கெடுவன, காண் என்று மொழிந்தார்; அவருடைய சூதினை என்னென்பது. எ.று.

சுந்தரம் - அழகு. சுந்தரர் - அழகர். தமது நடனக் கலையைத் தமக்கொரு தொழிலாகக் கொண்டு உலகுகளைப் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என ஐந்து தொழில்களையும் செய்கின்றார் என்பாளாய், "நடனத் தொழில் வல்லார்" என்று சொல்லுகிறாள். என் மனைக்கண் என் முன்பு வந்தார் என்றற்கு "இங்கே வந்தனர்" எனக் கூறுகின்றாள். அவரைக் கண்டதும் காதலன்பு மிகக்குறவே, வணக்கம் என்பேனாய், "வந்தனம் என்றேன்" என விளம்புகிறாள். நான் வந்தனம் என்றதை, இம் மண்ணுலக வாழ்வை வேண்டி வந்துள்ளோம்; அதனை நன்குகூடி இன்புற்று வாழலாம் என்றதாகக் கொண்டு நான் ஒரு மறைபொருள் கூறுகிறேன் கேள் என்பாராய், "மந்தணம் இது கேள்" என்று தொடங்கி, இவ்வுலக, வாழ்வுகள் நிலைத்த இன்ப மில்லாதவை என்றற்கு "அந்தனம் இல வாழ்வு" எனவும், இம்மை மறுமை எனப்படுகின்ற வாழ்வுகளெல்லாம் நிலைபேறின்றிப் பொய்யாம் என அறிக என வுரைப்பாராய், "எல்லாம் அந்தரம் என்றார்" எனவும் மொழிகின்றாள். மந்தணம் - மறைபொருள்; இரகசியம். அந்தனம், அழகிய செல்வம்; அழகாவது நிலைத்த தன்மை. என்றும் நிலைத்திருக்கும் தன்மை இவ் வாழ்வுகட்கு இல்லை என்றற்கு "அந்தனம் இல" எனப்படுகிறது. அந்தரம் - பொய்யாக் கெடுவது. சூது, உள்ளொன்றும் புறமொன்றுமாக மறைத்துப் பேசுவது. வந்தனம் என்பதை வம்மின்; யான் தனமுடையேன் எனப் பொருளுரைத்தலும் உண்டு. வம் - வருக. "மனிதர்காள் இங்கேவம்" (தனிக்) எனத் திருநாவுக்கரசர் வழங்குதல்

காண்க. தனம் உளதாயினும் அதனைச் சொல்லலாகாது என்றற்கு. "மந்தணம் இது" என்றூர் எனினுமாம். "உடையது விளம்பேல்" என்பர் ஔவையார்.

இதனுல், மண்ணக வாழ்வின் நிலையாமை தெரிவித்தவாறும். (1)

3006. நம்பல மாம்என நன்மனை புக்கர் நடராஜர்
எம்பல மாவீர் எம்பெரு மானீ ரேஎன்றேன்
வம்பல மடவாய் எம்முடை இன்ப வாழ்வெல்லாம்
அம்பலம் என்றூர் என்னடி அம்மா அவர்சூதே.

உரை : அம்மா, நாம் செய்யும் பொருட் பயனென்னுமாறு என்னுடைய நல்லமனைக்குப் போந்தருளிய கூத்தப் பெருமானை, நான் வணங்கி, எங்கள் பெருமானே, நீர் எங்கட்கு வன்மையான துணையாயினீர் என்று உரைத்தேனுக, இளமகளே' நாம் சொல்வது புதுமையன்று; எம்முடைய வாழ்வெல்லாம் அம்பலமாகும் என மொழிகின்றூர்; அவர்சூதை என்னென்பது. எ.று.

நம்பலம். நாம் பொருளீட்டி வாழும் வாழ்வின் பயன்; பலம் என்பது இந்நாளிற் பலன் என வழங்குகிறது. வாழ்வார் வாழ்வின் பயன் திருவட் பேறுதல் பற்றி, "நம் பலமாம் என நன்மனை புக்கார் நடராசர்" என நவில்கின்றுள். நன்மனை என்கிறுள், திருவருட் செல்வ வாழ்வு நிகழ்கின்றமை புலப்படுத்தற்கு. எம்பலம் - எமக்கு வலிய துணை; பலமான துணை என்பதாம். வம்பு - புதுமை. எம்முடை வாழ்வு என்பது நங்கையை யுளப்படுத்தி மண்ணுலகில் நம்முடைய யாக்கை, செல்வம் முதலியவற்றுல் உளதாகும் வாழ்வு எனக் கொண்டு, நிலையாய பயனில்லாதன என்பது யாவர்க்கும் வெளிப்படையாய்த் தெரிந்தது என்பதற்கு, "அம்பலம்" எனக் கூறுகின்றூர் என்பது கருத்து. கூத்தப் பிரானைக் குறிக்கும் போது, அம்பலம், தில்லைத் திருச்சிற்றம்பலமாகும்:

இதனுலும் மண்ணக வாழ்வின் நிலையாமையே வற்புறுத்தியவாறும். (2)

திருச்சிற்றம்பலம்

38. தலைமகளின் முன்ன முடிபு

அஃதாவது, பெருந்திணை நங்கையின் முடிவான உட்கருத்தை யுரைத்தல். இதன்கண் நங்கை தன்னுடைய நினைவு செயல் சொற்களில் உண்டான குற்றங்களை நினைந்து; அவற்றுக்குரிய காரணங்களை எண்ணி யுரைத்துப் பொறுத் தருளுமாறு இறைவனை வேண்டுகின்றாள்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3007. வெறுத்துரைத்தேன் பிழைகள்எலாம் பொறுத்தருளல் வேண்டும்
விளங்கறிவுக் கறிவாகி மெய்ப்பொதுவில் நடிப்போய்
கருத்துரைத்தார் தமக்கும்அருள் கனிந்துரைக்கும் பெரிய
கருணைநெடுங் கடலேமுக் கண்ணோங்கு கரும்பே
மறுத்துரைப்ப தெவன்அருள்நீ வழங்குகினும் அன்றி
மறுத்திடினும் உன்னைஅலால் மற்றொருசார் பறியேன்
செறுத்துரைத்த உரைகளெலாம் திருவருளே என்று
சிந்திப்ப தல்லாமல் செய்வகைஒன் றிலனே.

உரை: என்பால் விளங்குகின்ற அறிவுக் கறிவாய், மெய் யுணர் வாகிய தில்லையம்பலத்தில் நின்று கூத்தாடும் பெருமானே, வெகுண்டு பல பேசுபவர்க்கும் அருள் செய்து மொழியும் பெரிய கருணை நிறைந்த நெடிய கடலாகியவனே, மூன்று கண் கொண்டு உயர்ந்தோங்கும் கரும்பு போல்பவனே, உன்னை மறுத்துப் பேசுவ தென்னை? நீ திருவருளை நல்கினும் நல்காது மறுப்பினும் உன்னை யொழிய எனக்குச் சார்வாவார் வேறொருவரும் இல்லை; உனக்கு மாறாய் நின்று பேசிய சொற்களை யெல்லாம் திருவருளால் நிகழ்ந்தன என நினைத்துக் கொள்வதன்றிச் செயல் யாதும் வேறில்லேனாதலால், நின்னை வெறுத்துப் பேசிய என் குற்றங்களனைத்தையும் பொருத்தருள வேண்டுகிறேன். எ.று.

ஒளி யுருவினதாதலால், "அறிவை", "விளங்கறிவு" என்றும் இறைவன் அதனுட் கலந்து நின்று அறிவருளுகிறான் என்பது பற்றி, "அறிவாகி" என்றும், மெய்யுணர்வின் எல்லைக்கண் நின்று விளங்குதல் புலப்பட, "மெய்ப்பொதுவில் நடிப்போய்" என்றும் நங்கை நவில்கின்றாள். "அறிவினுள் அருளால் மன்னிச் செறி வொழியாது நின்ற சிவன்" (சிவ. சித்தி) என அருணந்தி சிவமும், "அகர வுயிர் போல் அறிவாகி யெங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" (திருவருட்) என உமாபதி சிவனாரும் தெரிவிப்பது காண்க. திருநாவுக்கரசர், "ஆதியும் அறிவுமாகி அறிவினுட் செறிவுமாகி" (ஆப்பாடி) எனக் கூறுவர். மெய்யுணர்வின் எல்லை ஞானகாயமாதலால், அதுவே சிதாகாசம், சிதம்பரம் என்ற

பெயரால் தில்லையம்பலத்துக்காதலால், ''மெய்ப் பொதுவில் நடிப்போய்'' என வுரைக்கின்றாள். கறுத்தல், வெகுளுதல். தம்மைத் திருமணத்தின் போது தடுத்தாட் கொண்ட காலையில் வேதியனாய் வந்த சிவனை வெகுண்டு பல பேசியது கேட்டும் ஆண்டருளிய திறத்தை நினைவிற் கொணர்தலின், ''கறுத்துரைத்தார் தமக்கும் அருள் கனிந் துரைக்கும் பெரிய கருணை நெடுங்கடலே'' என வுரைக்கின்றாள். "தன்மையினு லடியேனைத் தாம் ஆட்கொண்ட நாட் சபை முன், வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வு தந்தார்'' (நாவலூர்) என நம்பியாரூரர் எடுத்துரைப்பது காண்க. பெரிய கருணை, பெருமை பொருந்திய கருணை. குறையாமை பற்றி "நெடுங் கடல்'' எனச் சிறப்பிக்கின்றாள். கண் பலவுடைய மண்ணுலகக் கரும்பின் வேறுபடுத் தற்கு "முக்கண் ஓங்கு கரும்பே'' என்று கூறுகிறாள். அருள் வழங்கப் பெறும் போது மகிழ்ந்துரைத்தலும், இல்லாத போது மறுத்துரைத்தலும் மக்கள் இயல்பாதலால், ''மறுத்துரைப்பது எவன்'' என்றும், அருள் பெறினும் பெறுவிடினும் முடிவில் அருள் செய்பவன் சிவனேயாதலால், ''அருள் நீ வழங்கினும் மறுத்திடினும் உன்னையல்லால் மற்றொரு சார்பு அறியேன்'' என்றும் இயம்புகிறாள். அருள் எய்தாக் காலத்து உளதாகும் மனக் கசப்பால் உரைப்பன பலவும் எய்தும் காலத் துண்டாகும் மனத் தெளிவால் அதுவும் திருவருட் குறிப்பே என உணரபபடுதலின், '‚செறுத்துரைத்த உரைகளெலாம் திருவருளே என்று சிந்திப்ப தல்லாமல் செய்வகை ஒன்றிலனே'' எனத் தெரிவித்து, நின்னுடைய இனிய திருவருளைப் பெருமையால் மனத்தின்கண் வெறுப்புற்று யான் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க என்று புகல்வாளாய், ''வெறுத்துரைத் தேன் பிழைகளெலாம் பொறுத்தருளல் வேண்டும்'' என்று நங்கை முறையிடுகின்றாள்.

இதனால், திருவருளே என நினையாமல் வெறுத் துரைத்த குற்றங் களைப் பொறுத்தருள வேண்டுமென முறையிட்டவாறும். (1)

3003. மிகுத்துரைத்தேன் பிழைகள்எலாம் சகித்தருளல் வேண்டும்
மெய்யறிவின் புருவாகி வியன்பொதுவில் நடிப்போய்
தொகுத்துரைத்த மறைகளும்பின் விரித்துரைத்தும் காணத்
துரியநடு வேஇருந்த பெரியபரம் பொருளே
பகுத்துரைத்த பயன்உரைக்கோர் பொருளாகி விளங்கும்
பரஞ்சுடரே பரம்பரனே பசுபதியே அடியேன்
வகுத்துரைப்ப தெவன்அருள்நீ வழங்குகினும் அன்றி
மறுத்திடினும் உன்னையலால் மற்றொருசார் பிலனே.

உரை: மெய்ம்மையும், இன்பமும், அறிவுமாகிய உருவு கொண்டு, அகன்ற தில்லையம்பலத்தில் நடிக்கின்ற பெருமானே, மறை வல்லவர் முதலில் தொடுத்தும், பின்னர் விரித்தும் உரைத்தும் தெளிவு காணப் படாத துரியாவத்தைக்கண் நடுவே தோன்றும் பெருமைக்குரிய பரம் பொருளே, சான்றோர்கள் பல வகையாகப் பகுத்துரைத்த உரைகளுக் கெல்லாம் ஒன்றாகிய பொருளாய் ஒளிர்கின்ற பரஞ்சுடரே, பரம்பரனே,

பசுபதியே, அடியவளாகிய யான், வேறு வகுத்துரைப்பதற்கு யாது உளது நீ, உனது திருவருளை நல்கினும் நல்கா தொழியினும் உன்னையன்றி வேறு எனக்குத் துணையில்லை. இந்நிலையில் நான் மிகைபடப் பேசிய குற்றங்களைப் பொறுத்து அருள வேண்டுகிறேன். எ.று.

மெய்ம்மை, அறிவு, இன்பம் என்ற மூன்றையும் முறையே சத்து, சித்து, ஆனந்தம் என நிறுத்தி, "சச்சிதானந்தம்" எனக் கூட்டி யுரைப்பர் வட நூலார். இதனைத் "தேடரிய சத்தாகி என் சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே, தேசோமயானந்தமே" எனத் தாயுமானவர் உரைக்கின்றார். தில்லையம்பலத்தில் ஆடும் கூத்தப்பிரான் சச்சிதானந்த உருவினன் என்பாராய், "மெய்யறிவின் புருவாகி வியன் பொதுவில் நடிப்போய்" என விளம்புகின்றாள். கூத்தனைச் சச்சிதானந்த வுருவினன் எனவே, அவனது அம்பலம் பராகாசம் எனப்படுகிறது. அது பற்றியே அதனை, "வியன் பொது" என விளம்புகின்றாள். மாயா காரியமாகிய அண்டங்களுக்குரிய ஆகாசங்கள் அவற்றுக்குக்கப்பாலுள்ள சிவாகாசத்து அபரமாதலின், அச்சிவாகாசம் பராகாசமாய் எல்லாவற்றிற் கும் பொதுவாதல் அறியப்படுதலின், வியன் பொது எனல் வேண்டிற்று. அது ஞான மயமாதலின் சிதாகாசம் எனவும் கூறப்படுகிறது. இருக்கு முதலாக வேதங்கள் நான்கும் தொகையெனவும், அவற்றின் நுண் பொருளை விரித்துரைக்கும் உபநிடதங்கள் பலவற்றையும் வேதாந்த விரி யெனவும் அறிந்தோர் உரைப்பதால், "தொகுத்துரைத்த மறைகளும் பின் விரித்துரைத்தும்" என்றும், இவற்றாலும் தெளியப் படாமை தோன்றக் "காணா" என்றும், துரிய நடுவென்று சித்தாந்தத்தால் துணியப்படுதலின்" "துரிய நடுவேயிருந்த பெரிய பரம்பொருளே" என்றும் உரைக்கின்றார். "ஓரும் வேதாந்தம் என்றுச்சியிற் பழுத்த சாரங் கொண்ட சைவ சித்தாந்தம்" (பண்டார) என்று குமரகுருபரரும், "வேதாந்தத் தெளி வாம் சைவ சித்தாந்தம்" (சிவப்) என உமாபதி சிவனாரும் உரைப்பது அறிக. பரம்பொருளினும் பெரிய தொன்று இல்லையாயினும் அதன் பெருமையைப் புலப்படுத்தற்குப் "பெரிய பரம்பொருள்" என்று கூறுகிறார். இது பற்றியே வேதாந்த நூல்கள் பிரமப்பொருள் என்கின்றன. துரியம் என்பது உந்தியிடம். அகக்கண் கொண்டு புருவ நடுமுதலாக கண்டம், இதயம் முதலிய வாயில்களிற் செலுத்தித் துரியத்தை நாடுவார்க்கு அங்கே உந்தி நடுவே சிவவொளியைத் தரிசிப்பவர்க்கு அது தோன்றும் என்பாராய், "துரிய நடுவே இருந்த பெரிய பரம்பொருள்" எனச் சுட்டு கின்றார். அக்காட்சியின்பத்தை "அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" (திருமந்தி) என்று திருமூலர் அறிவிக்கின்றார். இதனை யோகக் காட்சி என்பதும் உண்டு. பொருள்களைக் காரண காரிய முறை யிலும், பகுதி விகுதி முறையிலும் பகுத்து ஆராய்ந்து உண்மை காண்பது அறிவுநெறி. அந்த அறிவு நெறிக்கண் கண்டுரைத்த பொருள் என்றற்குப் "பகுத்துரைத்த பயன் உரைக்கோர் பொருளாக விளங்கும் பரஞ்சுடர்" எனப் பகர்கின்றார். பொருள்களைப் பகுத்துணரும் நெறியில் அணுவாய், அணுவுக் கணுவாய், முடிவில் ஒளியாய் ஒளிர்வது பற்றிப் "பரஞ்சுடர்" என்கின்றார். "பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதி" (மனத்) என நாவுக்கரசர் விளக்குதல் காண்க. மேலான பொருள் எல்லாவற்றிற் கும் மேலாய்த் தனக்கு மேல் ஒன்றும் இல்லாதவன் என்றற்குப் "பரம் பரன்" என்கின்றார். உலகுயிர்கட்குத் தலைவன் என்பது படப் "பசுபதி"

என்கின்றார். அருளுருவாய இறைவன் அருளாமை இல்லையெனினும், காலமும் இடமும் காரணமாகத் தனது அருளை வழங்குகின்றானாதலின், அல்லாக் காலத்து அவ்வருட் பேறு எய்தாமைபற்றி, "அருள் நீ வழங்கு கினும் அன்றி மறுத்திடினும்" என்றும், அவனையன்றி அருள் வழங்குவார் பிறர் இல்லாமையான், "உன்னையலால் மற்றொரு சார்பிலனே" என்றும் உரைக்கின்றார். நல்லதன் நலத்தையோ தீயதன் தீமையையோ மிகை பட மொழிந்தவழிக் குற்றம் விளைதலின், "மிகுத்துரைத்தேன் பிழைகள் எலாம் பொறுத்தருளல் வேண்டும்" என விளம்பிகின்றார். பொறுத்தல் என்பது "காரணம் பற்றியாதல், மடமையானாதல், மிகை செய்த வழிப் பொறுத்தல்" என்று பெரியோர் கூறுவராதலின், "பிழைகள் எலாம் சகித்தருளல் வேண்டும்" எனச் சாற்றுகின்றார். சகித்தல் - பொறுத்தல்.

இதனால், மிகைபடச் செய்தும், மொழிந்தும் இழைத்த குற்றங்களைப் பொறுத்தருளுமாறு முறையிட்டவாறும். (2)

3009. முன்னவனே சிறியேன்நான் சிறிதும்அறி யாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்
என்னவனே என்துணையே என்உறவே என்னை
ஈன்றவனே என்தாயே என்குருவே எனது
மன்னவனே என்னுடைய வாழ்முதலே என்கண்
மாமணியே மணிமிடற்றோர் மாணிக்க மலையே
அன்னவனே அம்பலத்துள் ஆடுகின்ற அமுதே
ஆறணித்த சடையாய்யான் வேறுதுணை இலனே.

உரை : என்னைப் போல் சித்துப் பொருளானவனே, எனக்குத் துணையும் நெருங்கிய உறவும் ஆனவனே, என்னை ஈன்ற அன்னை போன்றவனே, எனக்குத் தாயும் குருவும் அரசனுமானவனே, என் வாழ்வின் முதற்பொருளே, என் கண்ணின் மணி போன்றவனே, நீலமணி போன்ற கழுத்தையுடைய மாணிக்கமலை போன்றவனே, தில்லைச் சிற்றம்பலத்துள் ஆடுகின்ற அமுதமே, கங்கை யாற்றை முடியிலே தரித்த சடையையுடைய பெருமானே. எவ்வுயிர்க்கும் முன்னுள்ளவனே, உன்னையன்றி வேறுதுணை எனக்கு இல்லையாகையால், அறிவாற் சிறியவனாகிய நான் செய்வகை யறியாமல் வெறுப்பாற் பேசியிழைத்த பிழைகளையெல்லாம் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

பொருட் பாகுபாட்டில், உணர்வுடைய பொருள் வகையுள் இறைவனும் அடங்குதலின், "என்னவனே" என்கின்றாள். "சிவன் சீவன் என்றிரண்டும் ஒன்றாம்" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனார் கூறுவது காண்க; இனி இதற்கு என்னை யடிமையாகவுடையவனே எனினும் பொருந்தும். உயிரோடு ஒன்றியிருந்து நெறி காட்டுதல் பற்றி "என் துணையே" என்றும், உறவாயிருந்து துயர் போக்குதலால், "என் உறவே" என்றும், உடல் கருவிகரணங்களைப் புணர்த்து உலகில் தோற்றுவித்தலால் "என்னையீன்றவனே" என்றும் இயம்புகின்றாள். "நான் ஏதும் அறியாமே என்னுள் நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்" (ஆனைக்) எனத் திருநாவுக்கரசர் கூறுவதறிக. அன்பு செய்தலால்

தாயே'' எனவும், அறிவு நெறி காட்டுதலின் "குருவே" எனவும், "மன்னவனே'' எனவும் உரைக்கின்ருள். வாழ்வுக்கு இன்றியமையாத புவன போகங்களை யருளுதலால் வாழ் முதலே'' என்றும், காணுதன காணச் செய்தலால், "என் கண் மாமணியே'' என்றும் கூறுகின்ருள். "அடியேற்குக் காணு காட்டும் கண்ணும்'' (கருகா) எனப் பெரியோர் விளம்புவர். செம்மேனியும் ஒளியும் உடைமையால் சிவனை "மாணிக்க மலையன்னவனே'' எனப் புகழ்கின்ருள். "மாணிக்கத்தின் மலைபோல வருவார்'' (கடவூர்) என்று சுந்தரர் குறிப்பது அறிக. பிறவா இறவாப் பேறு நல்குதலால் "அமுதே'' என இசைக்கின்ருள். உயிர்க்குயிராய் ஒன்றி நின்று துணை செய்வார் சிவனையன்றி வேறு யாவரும் இல்லாமை தெளிந்து கூறுதலால், "யான் வேறு துணையிலன்'' எனவும், எனவே, வருவதறியும் நல்லறிவு சிறிதும் என்பால் இல்லாமையால் வெறுத்துப் பேசிய குற்றத்தைப் பொறுத்தருள்க என்பாள், "சிறியேனுன் முனிந் துரைத்த பிழையனைத்தும் பொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்'' என உரைக்கின்ருள். முனிவு - வெறுப்பு. பொறுத்தாலன்றி உள்ளத்திற் கனிவு பிறவாமை வாழ்விற் கண்டிருக்கின்ருளாதலால், "பொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்'' என்பாளாயினுள். முன்னவன் - முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருள்.

இதனுல், சினந்து பேசிய குற்றம் பொறுக்க வேண்டுமென முறை யிட்டவாறும். (3)

3010. சினந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம்பொறுத்தல் வேண்டும்
தீனதயா நிதியேமெய்ஞ் ஞானசபா பதியே
புனைந்துரைப்பார் அகத்தொன்றும் புறத்தொன்றும் நினைத்தே
பொய்யுலகர் ஆங்கவர்போல் புனைந்துரைத்தேன் அலன்நான்
இனந்திருத்தி எனையாட்கொண் டென்னுள்அமர்ந் தெனைத்தான்
எவ்வுலகும் தொழநிலைமேல் ஏற்றியசற் குருவே
கனந்தருசிற் சுகஅமுதம் களிந்தளித்த நிறைவே
கருணை நடத் தரசேஎன் கண்ணிலங்கு மணியே.

உரை: ஏழை யெளியவர்க் கிரங்கும் அருட் பெருஞ் செல்வமே, மெய்ம்மை சான்ற ஞானசபைத் தலைவனே, பெருமை தரும் ஞான வின்ப வமுதத்தை மகிழ்ந்தளிக்கும் பூரணனே, அருள் நடம் புரியும் அரசே, என் கண்ணில் விளங்கும் மணி போல்பவனே, பொய் யொழுக்கமுடைய உலகத்தவர், உள்ளத்தி லொன்றும் புறத்தி லொன்றுமாகப் புனைந் துரைப்பர்; அவர்களைப் போல் நான் உன் திருமுன்பு புனைந்துரைக் கின்றேனில்லை; என் இனத்தவரையும் என்னையும் திருத்தி ஆட்கொண்டு என்னுடைய உள்ளத்திலும் எழுந்தருளி எவ்வுலகத்தவரும் கண்டு தொழுமாறு மேனிலைக்கண் உயர்த்தியசற்குருவே; ஒரொருகால் அருள் விளக்கமின்றிச் சினம் கொண்டு பேசிய பிழைகளை யுடையவனுதலால் அவற்றைப் பொறுத்து அருள்புரிய வேண்டுகிறேன். எ. று.

தீனர் - ஏழை யெளியவர்; வறியவருமாம். அறிவாலும் பொருளாலும் வறுமை யுற்ற தீனருக்கு, அன்புடன் வேண்டுவன உதவுவதால் "தீன தயாநிதியே" என்றும், மெய் யுணர்வின் நன்னிலையமாகிய திருச்சிற்றம் பலத்தில் ஞான நடனம் புரியும் தலைவனுதல் விளங்க, "மெய்ஞ்ஞான சபாபதியே" என்றும் நங்கை எடுத்துரைக்கின்ருள். தயாநிதி - தயவாகிய செல்வம். ஞான சபாபதித் தலைவன். ஞானத்தால் உளதாகும் சுகத்திற் பெரியது வேறின்மையால், "கனந் தரும் சிற்சுகம்" என்றும், அஃது அமுதும் போல் அனுபவிக்கப் படுதல் தோன்றச் "சுக "வமுதம் என்றும், அதனைப் பிறர்க்கு வழக்குவதாற் குறைவு படாமை பற்றி, "அமுதம் களித் தளித்த நிறைவே" என்றும், ஞான சபையில் நிகழ்த்தும் திருக்கூத்தும் உலகுயிர்கள்பால் கொண்ட பேரருளால் நடப்ப தென்றற்குக் "கருணை நடத்தரசே" என்றும், கண்ணிற் கருமணி போல் காண்பன காணச் செய்தலின், "என் கண்ணிலங்கு மணியே" என்றும் இயம்புகின்ருள். ஒருவரது ஒழுக்கம் கண்டு திருத்திய வழி, அவர் அதன் கண்நின்று நலம் பெறுதற்கு நல்லினம் காப்பாதலின், அதனையும் திருத்தி யமைப்பது இன்றியமையாதலால் "இனம் திருத்தி எனை யாட்கொண்டு" எனவும், தானும் உடனிருந்து பேணுவது புலப்பட, "என்னுள் அமர்ந்து" எனவும், இவ்வண்ணம் செம்மை நிலை பெற்ற யான் சிவமாய் எவரும் கண்டு தொழும் உயர் வாழ்வு பெறுதற்குரிய சிவ ஞானத்தை நல்கிச் சிவாசாரியனுயினுய் என்பளாய்' "எனைத்தான் எவ்வுலகும் தொழ நிலை மேல் ஏற்றிய சற்குருவே" என்றும், இனிதுரைக்கின்ருள். "இருளாய வுள்ளத்தின் இருளை நீக்கி இடர் பாவம் கொடுத் தேழையேனை யுய்யத் தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன் போற் சிவயோக நெறியறியச் சிந்தை தந்த அருளான்" (புள்ளிருக்கு) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. "நல்லினத்தி னூங்கும் துணையில்லை" (குறள்) என அறநூல் உரைப்பதால், "இனம் திருத்தி" என முற்பட மொழிகின்ருள். மக்கள், தேவர் அனைவரும் புகழ்வது கொண்டு "எவ்வுலகும் தொழ" என்கிருள். மேல் நிலை என மாறுக. நிலையா வியல்பும் பொய்யாய் மறையும் தன்மையும் உடையதாகலின், உலகு தன்கண் வாழ்வார்கண் பொய்ம்மை பொருந்துவித்தல் விளங்கப் "பொய் யுலகர்" எனவும், பொய்ந் நினைவும் பொய் யுரையும், பொய்ச் செய்கையும் அவர்கள்பால் அமைதலால், உள்ளத்தி லொன்றும் புறத்தி லொன்றும் கொண்டு, உரைக்கு மிடத்து இல்லது புனைந்து பேசுதல் அவர் கட்கு மரபாகிறது என்பாளாய், "அகத் தொன்றும் புறத் தொன்றும் நினைத்தே பொய் யுலகர் புனைந்துரைப்பார்" என்றும், அவர்கள் வாழும் உலகில் அவரி டையே வாழ்வேனுயினும், யான் அது செய்கிலேன் என்பாள், "ஆங்கவர் போல் புனைந்துரைத்தேனலள் நான்" என்றும் புகல்கின்ருள். இனம் தூயதாதற் பொருட்டுச் சற்குருவாய் மேனிலையேற்றியதும் சிற்சுக அமுதம் அளித்தமையும் காரணம் என்று, குறிப்பாய் உரைக்கின்ருள். இங்ஙனம் தூய்மை செய்து இனம் திருத்திச் சிற்சுகானுபவம் பெற்றேனுயினும் முற்றக் கடியும் குற்ற மின்மையின், பிறரைச் சினந்துரைத்துப் பிழை பல செய்துளேனுதலால் அதனை நீதான் பொறுத்தல் வேண்டும் என்பாளாய், "சினந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம் பொறுத்தல் வேண்டும்" என மொழிகின்ருள்.

இதனுற் சினம் காரணமாகச் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க என முறையிட்டவாரும். (4)

3011. ஊடுதற்கோர் இடங்காணேன் உவக்கும்இடம் உளதோ
உன்னிடமும் என்னிடமும் ஓர்இடம்ஆ தலினல்
வாடுதற்கு நேர்ந்திடிலோ மாட்டாமை யாலும்
மனம்பிடியா மையினலும் சினந்துரைத்தேன் சிலவே
கூடுதற்கு வல்லவன்நீ கூட்டிஎனைக் கொண்டே
குலம்பேச வேண்டாம்என் குறிப்பனைத்தும் அறிந்தாய்
நாடுதற்கிங் கென்னலே முடியாது நீயே
நாடுவித்துக் கொண்டருள்வாய் ஞானசபா பதியே.

உரை : ஞான சபைத் தலைவனே, உனக்கும் எனக்கும், இடம் ஒன்றுதலால் இருவரும் பிணங்கி யூடுவதற்கோ கூடிமகிழ்தற்கோ தனியிடம் ஏது? இல்லையன்றே; பிரிவின்றிக் கூடுதற்குரிய வல்லமை உனக்குண்டு;என்னை நின்பாற் கூட்டிக் கொண்டு,பின்பு என் குணமும் குலமும் நாடி என்னைப்பேச வேண்டா; என்கருத்தனைத்தையும் நீ நன்கறிவாய் வாழ்க்கையில் இடருற்று வருந்தி வாடும்போது, என்னுடைய வலியின்மையாலும் என்மனம் விரும்பாமையாலும், ஒரொருகால் சினமுறியும் கொண்டு சில சொற்களைப் பேசுவேன்; குண நலங்களை முற்றவும் நாடிதிறம் எனக்குஇல்லை; நாடி யறிதற்கு வேண்டும் நல்லறிவு தந்து நாடியறியுமாறுசெய்து என்னைக் கொண்டருள்க. எ.று.

அன்பர்கள் தம்மிற் பிரிந்து,வேறு வேறிடத்தில் இருப்பின், காண்டற்கின்மையின் ஒருவ ரொருவரின் தவறு நினைந்து,பிணங்குதலும் பின்னர்க் கூடும் போது உணர்ந்து மகிழ்தலும் நிகழ்தலால், உன்னிடமும் என்னிடமும் ஓரிடமாதலினல், ஊடுதற்கோர் இடம் காணேன் உவக்கும் இடம் உளதோ'' என வுரைக்கின்ருள். ஓரிடமாயின் ஒருவரையொருவர் கண்டு கொண்டே யிருத்தலால், ஊடுதற்கு ஏது தோன்ருமையின்,''உன்ளிடமும் என்னிடமும் ஓரிடமாதலினல்'' என்று கூறுகிருள். கொணகண் பழி காணேன் கண்டவிடத்து'' எனவும், ''காணுங்காற் காணேன் தவருய'' எனவும் (குறள்) தலைமைப் பண்புடைய நங்கை மொழிவது காண்க. இரு பொருட்கு இடம் ஒன்றுதல் இல்லையாயினும் ஒன்றினுள் ஒன்றும் போது ஆம் எனும் உண்மை பற்றி, இறைவன் உயிர்க்குள் உயிராதல் கண்டு, ''உன்னிடமும் என்னிடமும் ஓரிடமாதலினல்'' என வுரைக்கின்ருளென்று அறிக. ''உரை சேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதம், நிரை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன்'' (வீழி) எனத் திருஞானசம்பந்தர் கூறுவ தறிக. உணர்தலும் மறத்தலும், புணர்தலும்,பிரிதலும் தளிர்தலும், தளர்தலும் தெளிதலும் மயங்கலும், மகிழ்தலும் வருந்துதலும் வாழ்க்கையுள் ''நண்பகல் அமையமும் இரவும் போல, வேறு வேறியலவாகி மாறெதிர்ந்துள'' (அகம்.327) வாதலால், ''வாடுதற்கு நேர்ந்திடிலோ'' என்கின்ருள். பொருளும் செய்கையும் பலவாகிய வுலகில் அவரவர் வன்மை மென்மைக் கேற்பச்சில சிலர்க்குப் பெறப்படுதலும், பெற மாட்டா தொழிதலும், சில சிலர் மனத்துக்குப் பிடித்தலும் பிடிக்கா தொழிதலும் இயல்பாதலால், ''மாட்டாமையாலும் மனம் பிடியாமையினலும்'' மனத்திற் சின மெழுந்து வருத்துதலால், ''சினந்துரைத்தேன்'' எனவும், அப்போது அறிவு அறை போகாமையின் ''சிலவே'' எனவும் தெரிவிக்கின்ருள். அகப் புறத் தோற்றமும் குணமும்

செயலும் வேறுபடுமாற்றல், மக்களினம் தம்மிற் பிரிந்து சிதறிக் கிடப்பது போலாது ஒன்றினும் விடாது கூடி நிற்கும் திறம் எல்லாம் வல்ல இறைவனுகிய உனக்கே யுள்ள வன்மை யென்றற்குக் "கூடுதற்கு வல்லவன் நீ" என்றும், யான் கூடேனுயினும், நீ என்னைக் கூட்டிக் கொள்ளல் வேண்டும்: கொண்ட பின் என் குணம் குலம் முதலியன கண்டு கைவிடலாகாது என்பாளாய், "கூட்டி எனைக் கொண்டே குலம் பேச வேண்டா" என்றும், கைவிடின் தேர்ந்து செய்யும் திறமிலன் என்றும் குற்ற முண்டோ மென்பாளாய், "என் குறிப்பனைத்தும் அறிந்தாய்" என்றும் கூறுகின்றுள். குணம் குற்றங்களை முற்றிலும் நாடி யறிவது சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய மக்களினத்துப் பேதையாகிய எனக்கு இயலா தென்பாளாய், "நாடுதற் கிங் கென்னுலே முடியாது" எனவும், நாடுதற்குரிய முற்றறிவு தந்து என்னை நாடச் செய்க என வேண்டுவாளாய் "நாடுவித்துக் கொண்டருள்வாய்" எனவும் இயம்பு கிருள். "தன்னையும் தன் திறத்தறியாப் பொறியிலேனைத் தன் திறமும் அறிவித்து நெறியும் காட்டி, அன்னையையும் அத்தனையும் போல அன்பாய் அடைந்தேனைத் தொடர்ந் தென்னை யாளாக் கொண்ட தென்னெறும் பிரூரான்" (எறும்பி) எனத் திருநாவுக்கரசரும், "அறிவிலாத எனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளி, மேல் நெறி யெலாம் புலமாக்கிய எந்தை" (சதக) என மணிவாசகரும் கூறுவது காண்க.

இதன்கண் சினத்தாற் பிழை செய்தே னுயினும் என்னை ஆட் கொண்டு குலம் பேசவேண்டாமென முறையிட்டவாறும். (5)

3012. என்னுளம்நீ கலந்துகொண்டாய் உன்னுளம்நான் கலந்தேன்
என்செயல்உன் செயல்உன்றன் இருஞ்செயல்என் செயலே
பின்னுளநான் பிதற்றல்எலாம் வேறுகுறித் தெனைநீ
பிழைஏற்ற நினைத்திடிலோ பெருவழக்கிட் டிடுவேன்
அன்னையினும் தயவுடையாய் அப்பன்எனக் கானுய்
அன்றியும்என் ஆருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ்செய் மன்னவனே கருணை
மாநிதியே எனக்கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே.

உரை : என்னைப் பெற்ற தாயினும் அருளுடையவனே, எனக்குத் தந்தையானவனே, அது வல்லாமலும் எனது அரிய வுயிர்க்கு உயிராய் என்னுள் நிறைந்த பெருமானே, மணிமன்றின்கண் திருக்கூத்தாடும் அரசே, திருவருட் பெருஞ் செல்வமே, என் சிந்தைக்கண் நீ கலந்து கொண்டோய்; அது போல் நானும் உனது திருவுள்ளத்தில் கலந்து கொண்டேன்; ஆகவே என் செயலனைத்தும் உன்னுடைய செயலாம்; இவ்வியைபினல் உனது பெருஞ் செயல் யாவும் என் செயல்களாம்; நினக்குப் பின்னிருக்கின்ற யான் பேசுவனவெல்லாம் வேருகக் கொண்டு என் மேற் குற்ற மேற்றி விலக்கக் கருதுவாயாகில் யான் பெருவழக் கிடுவேன்; அதனல் என் மனக்கலக்கம் தீர எளியேனுக்கு அருள்செய்தல் வேண்டும். எ.று.

தாயிற் சிறந்த தயவுடைய னென்பது பற்றி, "அன்னையினும் தயவுடையாய்" எனவும், உணர்வு தருதலால் "அப்பன் எனக்கு ஆனாய்" எனவும் இயம்புகிருள். இது பற்றியே சான்றேர், "அப்பனீ அம்மை நீ" (தனித்) எனத் திருநாவுக்கரசர் உரைக்கின்றார். வேருகாமல் கலந்திருப்பது விளங்க, "என் ஆருயிருக் காருயிராய் நிறைந்தாய்" என வுரைக்கின்ருர். திருவம்பலத் திருக்கூத்து எக்காலத்தும் இடையறவின்றி நிகழ்வதனால், "மன்று மணிப் பொதுநடம் செய் மன்னவனே" என வழுத்துகின்ருர். அவன் திருமேனி அருளுருவாதலின், "கருணை மாநிதியே" என விளம்புகின்ருர். என் உயிர்க் குயிராதலன்றி, என் மனத்திற் கலந்திருக்கின்றது போல நானும் உன் திருவுள்ளத்திற் கலந்துள்ளேனுதலால், "என் செயல் உன் செயல், உன்றன் இருஞ் செயல் என் செயலே" எனத் தனக்கும் சிவனுக்கு முள்ள ஒற்றுமை நலத்தை எடுத்துரைக்கின்ருர். திருவருள் வழி நிற்றலின் தன்னைப் "பின்னுள நான்" என்றும், ஓரொருகால் தான் மனத்தின் வழி நின்று பேசுவன பலவும் பொருளாகிய திருவருளை நினையாது பேசுவனவாதலின் அவற்றைப் "பிதற்றல்" என்றும், அது கருதித் தன்னை விலக்குதல் கூடா தென்றற்கு "வேறு குறித்து எனை நீ பிழையேற்ற நினைத்திடிலோ" என்றும், வழக்கிட்டாராயலுறின், என் பிழைகளிலும் நினக்குக் கலப்புண்டிருத்தல் வெளியாம் என்பாராய், "பெருவழக் கிட்டிடுவேன்" என்றும் பேசுகின்ருர். நன்று நினைந்து செய்தற்கண், உளக்கிருக்கும் கலப்புப் பிழை செய்யுமிடத்தும் உளதாகுமோ என ஐயுற்று வருந்தும் என் மனக்கலக்கத்தைப் போக்கி, யருள்க என வேண்டலுற்று, "எனக் கருள்வாய் மனக்கலக்கம் தவிர்த்தே" என வுரைக்கின்ருர். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே" என்பது திருவாசகம்.

இதனுல், என்னுடைய நினைவு செயல்களில் பிழை கண்டு விலக்குவையோ எனவுண்டாகும் மனக்கலக்கத்தைப் போக்கி யருள்க என வேண்டியவாரும். (6)

3013. எணங்குறியேன் இயல்குறியேன் ஏதுநினை யாதே
என்பாட்டுக் கிருந்தேன்இங் கெனைவலிந்து நீயே
மணங்குறித்துக் கொண்டாய்நீ கொண்டதுதொட் டெனது
மனம்வேறு பட்டதிலை மாட்டாமை யாலே
கணங்குறித்துச் சிலபுகன்றேன் புகன்றமொழி எனது
கருத்திலிலை உன்னுடைய கருத்தில்உண்டோ உண்டேல்
குணங்குறிப்பான் குற்றம்ஒன்றுங் குறியான்என் றறவோர்
கூறிடும்அவ் வார்த்தைஇன்று மாறிடுமே அரசே.

உரை : அருளரசே, நான் மனத்திலும் நினைத்ததில்லை; செயல் வகையிலும் கருதுவதின்றி என் போக்கிலே யான் இருந்தேனுக, இவ்வுலகில் என்னை வலிய மணந்து நீ ஆட்கொண்டருளிய அப்பொழுது முதல் என்னுடைய மனம் நின்னின் நீங்கியதில்லை; ஓரொருகால் எனது, வலி யின்மையால், சூழ வுள்ள இனத்தின் நிலைமையால், வேண்டாதன சில சொல்லிய துண்டு; அது தானும் இப்போது என் மனநினைவில் இல்லை; உன்னுடைய திருவுள்ளத்தில் மறவாமல் இருக்குமோ? இருக்கு

மாயின் குணமே நோக்குவ தன்றிக் குற்றங்களைப் பாரான் நம் பரமன் என்று அறநெறியாளர் சொல்லுகின்ற அச் சொல் இப்போது பொய் யாகுமோ, சொல்லுக. எ.று.

குணத்தாலும் செயலாலும் விரிந்து பரந்த பண்புடையவனல்லனுய் இயல்பாய் அமைந்த போக்கிலே இருந்தேன் எனத் தமது பழமை நிலையைக் கூறுகின்ற வள்ளற் பெருமான், "குணம் குறியேன் இயல் குறியேன் ஏதும் நினையாதே என் பாட்டுக்கிருந்தேன்'' என வுரைக் கின்ருர். நினைவு செயல்களிற் படிந்திருக்கும் குறுகிய தன்மையையும் அதன் விளைவையும் சிறிதும் எண்ணிற்றிலேன் என்பார், "ஏதும் நினையாதே என்பாட்டுக் கிருந்தேன்'' என்கின்ருர். பாடு, போக்கு. நீ தானே வலிய வந்து எனக்கு உன்னினைவை யுண்டு பண்ணி உன்பால் அன்பனுய் ஒழுகுமாறு செய்தாய் என்றற்கு, "இங்கு எனை வலிந்து நீயே மணம் குறித்துக் கொண்டாய்'' எனவும், அப்பொழுது முதல் நான் சிறு வேறுபாடுமின்றி, உன் வசமேயிருந்து வருகின்றேன் என்பாராய், "அது தொட்டு எனது மனம் வேறுபட்டதில்லை'' எனவும், மனத்தில்வலிமையும் அறிவில் திண்மையும் இல்லாமையால், சில காலங்களில் ஒரு சில மாருன சொற்களை நான் சொல்லிக் குற்றப்பட்டதுண்டு என்பாளாய், "மாட்டா மையாலே கணம் குறித்துச் சில புகன்றேன்'' எனவும் இசைக்கின்ருள். கணம் - கூட்டம் எனக் கொண்டு இனமாய்க் கூடினேருடைய சூழ்நிலை காரணமாக, நின் பெருமைக்கு மாருய சிலவற்றைப் பேசியதுண் டென்றற்கு இவ்வாறு கூறுகின்ருள், எனினு மமையும். இப்போது அவற்றையும் மறந்தொழிந்தேன் என்பாள், "எனது கருத்தில் இலை'' என்றும், ஒருகால் உன் மனத்தின்கண் என் சொற்கள் நிலை பெற்றுள்ளனவோ என அஞ்சுகிறேன் என்றற்கு, "உன்னுடைய கருத்தி லுண்டோ'' என்றும், உளதாயின் மறந்தொழிக; அன்பர் குணம்கொண்டு கோதாட்டுவது நினக்குப் பெரும் பண்பென அறவோர் கூறுகின்றனர்; என் சொற்களை நீ மறவாயெனின், அப் பெருமக்களின் சொல் பொய்யாய் முடியும் என்றும் புகல்வாளாய், "உண்டேல், குணம் குறிப்பான் குற்ற மொன்றும் குறியான் என்று அறவோர் கூறிடும், அவ்வார்த்தை இன்று மாறிடுமே'' எனவுரைக்கின்ருள். "மற்று நான் பெற்றதார் பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக் குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால், மிகை பல செய்தேன்'' (வடதிருமுல்லை) என நம்பியாரூரரும், "குற்றங்கள் நீக்கிக் குணங் கொண்டு கோதாட்டிச் சுற்றிய சுற்றத் தொடர் வறுப்பான்'' (திருவம்) என மணிவாசகரும் கூறுதல் காண்க. மாறுதல் - உண்மைத் தன்மை கெடுதல்.

இதனல், என்னை விரும்பி யாட்கொண்ட பின் குற்றம் கண்டு விலக்குதல் கூடாதென முறையிட்டவாரும். (7)

3014. மனம்பிடியா மையினலோ மாட்டாமை யாலோ
மறதியினு லோஎனது வருத்தமத ஞலோ
தினம்பிடியா மயக்காலோ திகைப்பாலோ பிறர்வேல்
சினத்தாலோ எதனுலோ சிலபுகன்றேன் இதனைச்

சினம்பிடியாத் தேவர்திரு உளம்பிடியா தெனவே
சிந்தைகளித் திருக்கின்றேன் திருவுளத்தை அறியேன்
இனம் பிடியா மையும் உண்டோ உண்டெனில்அன் புடையார்
ஏசல்புகழ் பேசல்என இயம்புதல்என் உலகே.

உரை: மனத்துக்குப் பிடித்த மில்லாமையாலும், வலியின்மையாலும், மறதியினலும், வருத்தத்தாலும், நாளும் வந்து தாக்கும் மயக்கத்தாலும், திரிபு நோக்காலும், வெகுளியினலும், வேறு பிறவற்ருலும் சில தவறுகளைப் பேசியுள்ளேனுதலால், சினம் என்பதைச் சிறிதும்கொள்ளாத தேவனுகிய நின்னுடைய திருவுள்ளம் குற்றமாகக் கருதா தென்று மனமகிழ்ச்சியுடனிருக்கின்றேனே யன்றி நின் மனக்கருத்தைச் சிந்திக்கின்றேனில்லை; தன் இனத்தவர் மேல் அன்பில்லாதவர் உலகில் இல்லை; அன்பில்லாமையும் உண்டென்பதாயின், அன்பால் இகழ்வதும் புகழ்ச்சியேயாம் என உலகவர் உரைப்பது என்னையோ? எ.று.

உள்ளத்தே உண்மையன்பு உறைந்திருப்பினும், குண வயப்பட்ட மனம் சில சமயங்களில் பிடித்தமின்றி இயங்குவதாகலின், "மனம் பிடியாமையாலோ" என எடுத்து மொழிகின்ருள். பிடித்தம் - விரும்புதல். வலியின்மையாலும் சில சமயங்களில் வெறுப்புணர்ச்சி தலை தூக்குமாகலின், "மாட்டாமையாலோ" எனவும், நினைப்பும் மறதியும் கடலும் அலையும் போல எழுந்தெழுந் தடங்குவ தியல்பாகலின், "மறதியினலோ" எனவும் கூறுகிருள். "உணர்ந்தன மறக்கும் மறந்தன வுணரும்" (அகவல்) என்று பட்டினத்தடிகள் உரைப்பது காண்க. மனத்தின்கண் நோயும் வருத்தமும் தோன்றும்போது விருப்பும் வெறுப்பாய் மாறுதலின், "வருத்தத்தினலோ" எனக் கூறுகிருள். "பாலு முண்ணுள்பழங்கண் கொண்டு" (அகம். 48) என வுரைப்பதறிக. தினம் பிடியா மயக்கம்; நாளும் வந்து தாக்கும் மயக்கம். முக்குணங்களும் மாறி மாறி இயல்வனவாதலின், தெளிவும் மயக்கமும் யாவர்க்கும் எந்நாளும் உளவாதல் பற்றித் "தினம் பிடியா மயக்கம்" எனச் சிறப்பிக்கின்ருள். பிடித்தல் - பற்றுதல்; பிடியா - செய்யாவென்னும் வினையெச்சம். முக்குண மயக்கத்தால் தெளிவும் கலக்கமும் உண்டாதலை, உடல் விஞ்ஞானிகள், என்று கூறுகின்ருர்கள். வியப்புணர்வு மேலீட்டால் உளதாவது திகைப்பு. பிறர் மேல் உண்டாகும் சினத்தால் அறிவு ஒளி குன்றியொடுங்குதலின், "பிறர் மேற் சினத்தாலோ" எனவும், வேறு காரணம் காண மாட்டாமை பற்றி, "எதனலோ சில புகன்றேன்" எனவும், இயம்புகிருர். சினம் காமம் மயக்கமாகிய குற்றங்களில்லாதவனுதலால், சிவபிரானைச் "சினம் பிடியாத் தேவர்" என்றும், தாம் செய்த குற்றங்களைப் பொருளாகக் கொள்வதிலர் என்பது பற்றி, "திருவுளம் பிடியாதெனவே சிந்தை களித் திருக்கின்றேன்" என்றும், களிப்பு என் உணர்வை மறைத்தலால், "திருவுளத்தை யறியேன்" என்றும் இசைக்கின்ருர். தனக் கன்பராய் இளமாகியவர்களை எக்காலத்தும் எவ்விடத்தும் விலக்குதலின்றி, விரும்பித் தழுவிக் கொள்வது உலகிய லறமாதலால், "இனம் பிடியாமையு முண்டோ" எனவும், இனமாகிய அன்பர்களின் அன்பு வலைக்குள் பிணிப்புண்டு கிடத்தலின், அவர்களது இகழ்ந்துரையும் புகழுரையாகக் கருதி

மகிழ்வது உலகியல் வாழ்க்கையின் இயற்கை என வற்புறுத்தற்கு "உண்டெனில் அன்புடையார் ஏசல் புகழ் பேசலென உலகு இயம்புதல் என்" எனவும் இயம்புகின்றார்.

இதனுல், யான் நின் தொண்ட ரினத்தவனுதலால், என், குற்ற மொழிகளைப் பொறுத்து என்னையேற்றருள்க என முறையிட்டவாறும். (8)

3015. நாயகரே உமதுவசம் நான்இருக்கின் றதுபோல்
நாடியதத் துவத்தோழி நங்கையர்என் வசத்தே
மேயவர்ஆ காமையினுல் அவர்மேல்அங் கெழுந்த
வெகுளியினுல் சிலபுகன்றேன் வேறுநினைத் தறியேன்
தூயவரே வெறுப்புவரில் விதிவெறுக்க என்றார்
சூழவிதித் தாரைவெறுத் திடுதல்அவர் துணிவே
தீயவர்ஆ யினும்குற்றம் குறியாது புகன்றல்
தீமொழிஅன் றெனத்தேவர் செப்பியதும் உளதே.

உரை : தலைவரே, ஆன்மாவாகிய யான் உமது வயப்பட்டிருப்பது போல், வேருய்க் காணப்படும் தத்துவமாகிய தோழியும் தாத்துவிகங் களாகிய ஆய மகளிரும் என் வயமாய் இருப்பதில்லையாதலால், அவர் மேற் சினங்கொண்டு, சில பேசியதுண்டு; வேறு தீது நினைத்ததில்லை; தூய மெய்யன்பர்களும் மனத்தே வெறுப்புண்டாயின் குறுக்கிடும் விதிவகை களையும் புறக்கணிப்பீர்களாக என வுரைக்கின்றார்கள்; எண்ணுமாறு விதிகளை வகுத்தவரையும் வெறுத்துரைப்பது அவர்கள் துணிந்த கருத்தா கிறது; தீயவ ரெனினும் குற்றம் உண்டாகாதவாறு சொல்வார்களாயின் தீச்சொல்லாகாது என்பர்; திருவள்ளுவதேவரும் அதுவே செப்புகின்றார். எ.று.

நாயகன் - தலைவனுகிய சிவன். சிவனது திருவருள் நெறியி னிற்பது பற்றி, "உமது வசம் நான் இருக்கின்றது போல்" என்றும், ஆன்மாவாகிய உயிரின் உணர்வின் வழி உடல் கருவி கரணங்களாகிய தத்துவங்கள் முப்பத்தாறும், அவற்றின் வழியவாகிய தாத்துவிகங்கள் அறுபதும் தோழியும் ஆயமகளிருமாகக் குறிக்கப்படுவது தோன்ற, "நாடிய தத்துவத் தோழி நங்கையர்" என்றும் கூறுகின்ருள். தத்துவத் தொகுதிகள் தத்தமக் கேற்ற நெறியிற் சொல்லுவ தன்றி ஆன்மாவின் இச்சை வழி நிற்ப தில்லையாகலின், "என் வசத்தே மேயவ ராகாமை யினுல்" எனவும், அதனுல் வெய்ய சொற்கள் சிலவற்றைப் பேசு கின்றேன் என்பாளாய், "அவர் மேல் அங்கெழுந்த வெகுளியினுல் சில புகன்றேன்" எனவும், திருவருளைக் குறை கூறும் கருத்து எனக்கில்லை என்பாளாய், "வேறு நினைத்தறியேன்" எனவும் இயம்புகின்ருள். வெகுளியால் உள்ளத்தில் தோன்றும் வெறுப்பு தூயமெய் யுணர்ந்தோரை யும் விடுவதில்லை; மெய்ம்மைச் செயல் புரியுமிடத்து விதி வகைகள் தடை செய்யினும் அவற்றை மதியார் என்றற்குத் "தூயவரே வெறுப்புவரில் விதி வெறுக்க என்றார்" என்றும், செய்க என விதித்த மேலோரையும் விலக்குவது அவர் கருத்தாகிறது என்பாள், "சூழ விதித்தாரை வெறுத்

திடுத லவர் துணிவே'' என்றும் கூறுகின்ருள். விதியை விலக்குவது விதித்தாரைப் புறக்கணிப்பது போலாம் என வுணர்க. குணமாவன மொழிபவர் தீயவராயினும் பயன் கருதி மேற்கோடல் தக்கதென்னும் அறநெறியாதல் பற்றி, ''தீயவராயினும் குற்றம் குறியாது புகன்ருல் தீ மொழியன்று'' எனவும், அறநூல் ஆசிரியராதலால், திருவள்ளுவரைத் ''தேவர் செப்பியதும் அஃதே'' எனவும் இசைக்கின்ருள்.

இதனல், தீங்கு நினையாது மொழிவன யாவர் கூற்ருயினும் கொள்ளற் பாலன எனத் தெரிவித்துக் கொண்டவாரும். (9)

3016. குற்றம்ஒரு சிறிதெனினும் குறித்தறியேன் லேருேர்
குறைஅதனல் சிலபுகன்றேன் குறித்தறியேன் மீட்டும்
சற்றுமனம் வேறுபட்ட தில்லேகண்டீர் எனது
சாமிஉம்மேல் ஆணைஒரு சதுரும்நினைத் தறியேன்
பெற்றவளும் உற்றவரும் சுற்றமும்நீர் என்றே
பிடித்திருக்கின் றேன்பிறிதோர் வெடிப்பும்உரைத் தறியேன்
இற்றைதொடுத் தென்அளவில் வேறுநினை யாதீர்
என்னுடைய நாயகரே என்ஆசை இதுவே.

உரை: என்னுடைய தலைவரே, குற்றமாவனவற்றை ஒரு சிறிதும் கருதுவதில்லேன்; வேருெரு காரணத்தாலுற்ற குறை காரணமாகச் சில சொற்களைச் சொன்னேன்; அதனை மீளவும் நினைக்கவில்லை; அதனல் மனம் சிறிதளவும் வேறுபடவில்லை; எனக்குச் சாமியாகிய நும் மேல் ஆணையாக வுரைக்கின்றேன்; ஒரு சூழ்ச்சியும் நினைத்தேனில்லை; என்னைப் பெற்ற தாயும் தந்தையும் உற்ருரும் சுற்றத்தாரும் எல்லாம் நீரேயென்று என் மனத்திற் கொண்டுள்ளேன்; வேருெரு கடுஞ்சொல்லும் பேசியறியேன்; இன்று முதல் என்னைப் பொறுத்தவரை வேருக நினைத் தல் வேண்டா; என்னுடைய ஆசையும் இதுவேயாகும். எ.று.

நாயகர், தலைவர். குற்றமான எண்ணங்களை நினைவிற் கொண்ட தில்லையென்பாளாய் ''குற்றம் ஒருசிறி தெனினும் குறித்தறியே'' னெனவும், வேறே செய்வினைக்கண் ஏற்பட்ட குறை காரணமாகக் கடுஞ் சொற்கள் சிலவற்றைப் பேசியதுண்டு என்பாள், ''வேருேர் குறையதனல் சில புகன்றேன்'' எனவும், அதனையும் உடனே மறந் தொழிந்தேன் என்றற்கு ''மீட்டும் குறித்தறியேன்'' எனவும் எடுத்துரைக்கின்ருள். குறித்தல், ஈண்டு நினைத்தல் மேற்று. நினைவு சொற்களுக்கு வேருன செயல்வகைக் குறையை ''வேருேர் குறை'' எனக் கூறுகின்ருர். அது தானும் ஒரு பொருளாகக் கருதக் கூடாத தொன்ருதலால் ''மீட்டும் குறித் தறியேன்'' என மொழிகின்ருள். இச்செயலால் என் மனப் பண்பும் வேறுபட வில்லை என்று வற்புறுத்தற்கு ''சற்றும் மனம் வேறுபட்டதில்லை கண்டீர்'' என்றும், அது பிறரறியத் தோன்றுவ தன்ருய், உள்ளத்துறை யும் இறைவன் ஒருவனே அறியற்பாலதாகலின், ''சாமி நும் மேல் ஆணை'' என்றும் இயம்புகிருள். சாமி, தலைவனைக் குறிக்கு மொழி; வழக்கு மொழி. ''மீனேறுயர்த்த கொடி வேந்தனை வென்ற பொற்பின், தான் ஏறனை

யானுளன் சீவக சாமி என்பான்'' (சீவக) எனத் திருத்தக்க தேவர் உரைப்பது காண்க. ஆணை வன்புறைக் குறிப்பு மொழி. சதுர். சதுரப் பாடு எனவும் வழங்கும்; நுண்ணிய சூழ்ச்சியென்பது பொருள். பெற்றவள் - தாய் தந்தையென்பதுவருவிக்கப்பட்டது. உற்றவர் - பிறப் பால் தொடர்புடையவர். சுற்றம், அன்பாற் சூழ இருப்பவர். பிடித்திருத் தல் - கடைப் பிடித்தல். வெடிப்பு, சினத்தால் கடுஞ் சொற்களை உரத்த குரலில் உரைத்தல். இற்றை - இன்று; இதனை ஐயீற்றுக் குற்றுகர மென்பது முண்டு. வேறு நினைத்தல். நொதுமலாகக் கருதுதல். அன்பால் ஒன்றியவளாகக் கொள்ளல் வேண்டு மென்பாள், ''என்னுசை இதுவே'' என்று இசைக்கின்ருள்.

இதனுல், இறைவனே தனக்குப் பெற்ரேரும் உற்ரேரும் சுற்றமு மாகக்கருதி ஒழுகினமை தெரிவித்தவாரும். (10)

திருச்சிற்றம்பலம்

39. வேட்கைக் கொத்து

தலைமகள் பாங்கியொடு கூறல்

அஃதாவது, பெருந்திணை நங்கையின் விழைவுகளையும் விருப்பத்தையும் எடுத்துத் தன் தோழிக் குரைப்பனவற்றின் தொகுதி என்பதாம். தொகையைக் கொத்து என்பதும் உண்டு. கட்டுரைத் தொகுதியைக் கட்டுரைக் கொத்து என வழங்குவது போல். இதன்கண் இறைவன் திருவருட் டொடர்பு பெற்றவள் துன்பக் குழியில் வீழாமையும், திருவருளின்பத்தைத் தொடர்ந்து பெறும் விருப்பமும், அவனைக் கூடல் வேட்கையும், அருள் பெறத் தாழ்க்கினும் அவனை விட மாட்டாமையும், அவன் தன்னைக் கைவிடல் முறையாகா தென்பதும் இன்னோரன்ன பிறவும் உரைக்கப்படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம்

3017. விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான் எவர்க்கும்
மேலானன் அன்பருளம மேவுநட ராஜன்
பண்படைத்த எனைஅறியா இளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெல்லாம் அவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சிஎனல் ஆனேன்
கண்படைத்தும் குழியில்விழக் கணக்கும்உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ

உரை: தோழி, வானளாவிய சாலைகளையுடைய தில்லையம்பலத்தையுடையவனும், தேவர்களனைவர்க்கும் மேலானவனும் மெய்யன்பர் திருவுளத்தில் எழுந்தருள்பவனுமாகிய நடராசப் பெருமான், நற்பண்புடைய என்னை அறிவறியாத இளமைப் பருவத்திலே அன்புடன் என்னிடம் வந்து மணமாலை சூட்டி என்னை ஆட் கொண்டவன், மீள என்னை யடைந்து என் முகம் பார்த்திலன்; பெண்மை நலம் கொண்ட ஏனைப் பெண்களெல்லாரும் என்னை அவ மதிப்பதுடன், தமது வாயில் வந்தது பேசுகின்றார்கள்; நானும் அவர்களைக் காண மாட்டாமல் நாணுகின்றேன்; பிச்சி யென்று பிறரால் ஏசப்படுகிறேன்; பார்க்கும் கண்ணுடையராவும் பாராது குழியில் விழுவது முறையாமோ? அவனது அருட் குறிப்புணர்ந்தேனாகலின் அவனைவிட மாட்டேன், காண். எ.று.

தில்லைப் பதியிலுள்ள சோலைகளின் உயர்வும் வளமும் விளங்க, "விண் படைத்த பொழில் தில்லை" என்றும், அவனுடைய சபையினை

வேறு தேவ ரெவரும் ஆடரங்காக் கொள்வ தின்மையால், "அம்பலத் தான்" என்றும், "முன்னைப் பழம்பொருட் கெல்லாம் முன்னைப் பழம் பொருளா"தல் பற்றி, "எவர்க்கும் மேலானுன்" என்றும், தன்னைத் தூய அன்புடன் நினைந்து வழிபடும் பெருமக்கள் மனமே தனக்குக் கோயி லாகக் கொள்பவ னென்பதனுல், "அன்பர் உளம் மேவும் நடராசன்" என்றும் புகழ்கின்ருள். பண்பாவது பொருள் தோன்றும் போதே உடன் தோன்றுவ தெனத் தருக்க நூல்கள் கூறுதலால், "பண் படைத்த எனை" எனவும், அறியத் தகுவன இவை யென்று அறிந்து கொள்ளலாகாத பருவம் இளமையாதல் பற்றி, "எனை யறியா இளம் பருவம் தனிலே" எனவும் இசைக்கின்ருள். அறிவறியும் மெய்யறிவு பெற்ருேர் வழி முறையாலும், நற்கல்வியாலும், சூழ்நிலையாலும் உளதாவதென அறிஞர் உரைப்பர். அறிவறியேனுகவும் எனது இளமை வளம் கண்டு என்பால் அன்பு கொண்டு யான் அவனையே விரும்பி நினைந்து ஒழுகுமாறு செய் தொழிந்தான் என்பாளாய், "பரிந்து வந்து மாலை யிட்டான்" என்று கூறு கின்ருள். இது தனக்கும் தலைவனுகிய கூத்தப் பெருமானுக்கும் காதல் ருெடர்பு உண்டாகிய வரலாற்றினைத் தலைவி கூறியதாம். இத் தொடர்பு கெடாமை வேண்டி மீள மீளப் போந்து கண்டும் உரையாடியும் கூடியும் உறுதி பெற்றிலதாயினும், என்னுடையஅன்பு மெலிவுற்றதில்லைஎன்பாள், "பார்த்தறியான் மீட்டும்" என விளம்புகிருள். பெண்படைத்த பெண் என்பது பெண்மைக்குரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற நாற் குணமும் உடைய தன்மை. தொல்காப்பியர் முதலிய பண்டைச் சான்ருேர், பயிர்ப் பொழிந்த மூன்றையுமே எடுத்துரைத்தனர்; பிற்காலத் திற்ருன் பயிர்ப்புச் சிறப்பாகப் பேசப் படுவதாயிற்று. பயிர்ப்பாவது காமக் கூட்டத்துக் கின்றியமையாத இனிய பெண்மைத் தன்மை; உண்மை நோக்காதுஇதற்கு வேறு வேறு கூறுவாரும் உண்டு. பயிர்ப் பின்மையை ஆங்லேயர் (Frigidity) என்பர். குணக் குறை யுடையவர் நன் மதிப்புப் பெருராகலின், "அவமதித்தே வலது பேசுகின்ருர்" என்றும், பித்தேறியவள் என இகழ்வது புலப்பட, "பிச்சி யெனலானேன்" என்றும் உரைக்கின்ருள். "பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானுள்" (ஆரூர்) எனத் திருநாவுக்கரசர் கூறுவ தறிக. வரும் துன்பத்தை விலக்குதற் குரிய அறிவும் செயல் வகையும் கொண்டிருந்தும் அதற்கு இரையாகுபவர் இல்லை யென்றற்குக் "கண் படைத்தும் குழியில் விழக் கணக்கு முண்டோ" எனவும், வழி வகையும் செயற் றிறமும் பெற்றுள்ள யான் துன்புறேன் என்பாளாய்க் "கணக்கறிந்தும் விடுவேனே" எனவும் இயம்புகின்ருள்.

இதனுல், தில்லையம்பலத்துக் கூத்தப் பிரானுடைய தொடர்பு பெற்றுள்ளமையால் யான் இனித் துன்பக் குழியில் வீழ்ந்து வருந்தேன் என விளம்பியவாரும். (1)

3018. சீத்தமணி அம்பலத்தான் எம்பிராண நாதன்
சிவபெருமான் எம்பெருமான் செல்வநட ராஜன்
வாய்த்தஎன்னை அறியாத இளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்து மாலையிட்டான் மறித்தும்முகம் பாரான்

**ஆய்த்தகலை கற்றுணர்ந்த அணங்கனையார் தமக்குள்
ஆர்செய்த போதனையோ ஆனாலும் இதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்கும்உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ.**

உரை : தோழி, தூய மணிகள் இழைத்த அழகிய சபையையுடைய வனும், என்னுயிர்க்குத் தலைவனும், சிவபெருமானும், எமக்குப் பெருமானு மாகிய செல்வ நடராச மூர்த்தி, பெண்ணியல்பு கொண்ட என்னலத்தை நானே அறிய மாட்டாத இளமைக் காலத்திலே, என்னை விரும்பி என்பாற் போந்து எனக்கு மாலையிட்டுக் கணவனானன்; ஆயினும், பின்பு ஒரு நாளும் என் முகத்தைப் பார்த்திலன்; நுண்ணிய கலை பலவும் கற்றுணர்ந்த தெய்வ மகளிரைப் போன்ற பெண்களில் யாருடைய துர்ப் போதனையோ, தெரியேன்; ஆயினும், நான் சொல்லும் இதனைக் கேள்; காய்த்த மரம் தலை வளையாமை யில்லை; அவனது அருணிறைவை அறிந்து கொண்டேனாதலால் இனி அவனை விட மாட்டேன், காண். எ.று.

சீர்த்தல் - தூய்மை செய்தல்; அல்லது நீக்குதல்; சீர்த்த மணியென் பது சீத்த மணியென வந்தது எனினும் பொருந்தும். பிராண நாதன் - உயிருணர்வுக்குத் தலைவன். சிவபெருமானாயினும் எம்பால் துன்னிய தொடர்புடையவ னென்பாள், "சிவ பெருமான் எம்பெருமான்" என்றும், வாழ்தல் வேண்டிப் பொன்னுக்கும் பொருட்கும் ஆசையுற்றுக் கூத்தாடும் உலகியற் கூத்தரைப் போலாது உலகுயிர்களை வாழ்வித்தல் வேண்டித் திருவருட் கூத்தாடுபவன் "என்றற்குச் செல்வ நடராசன்" என்றும் சிறப்பிக்கின்றாள். செல்வம் - திருவருட் செல்வம். "செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய செல்வன்" (கோயில்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. பெண்மை நலக் கூறுகள் அனைத்தும் நிறைந்துள்ளமை தோன்ற "வாய்த்த" என உரைக்கின்றாள். நலம் யாவும் வாயாத காலத்தே வந்து மாலையிட்ட பெருமான் வாய்த்த இக்காலத்தே வந்திலன் என்பது தோன்ற, "மறித்தும் முகம் பாரான்" எனவும், ஆய்வாற் கலையறிவு நுண்ணியதாதல் பற்றி. நுண்ணறிவுடைய மங்கையரை, "ஆய்த்த கலை கற்றுணர்ந்த அணங்கனையார்" எனவும், எத்துணை அறிவும் நலமும் உடையராயினும், பிற மகளிர் நலம்காணின் அழுக் கறுவர் என்பது புலப்பட, 'அணங்கனையார் தமக்குள் ஆர் செய்த போதனையோ'' எனவும் இயம்புகிறாள். போதனை, ஈண்டு அழுக்காற் றுரை மேனின்றது. அதனல் மனம் பேதுறுமை விளங்க, "ஆனாலும் இது கேள்" என வுரைக்கலுற்று, அருளால் நிறைவுடைய பெருமானாத லால், இப்போது என்னிடம் வாரா தொழியான் எனத் தன்கோள் உரைப் பாளாய், "காய்த்த மரம் வளையாத கணக்கு முண்டோ" எனப் பிறிது மொழிதலாற் கூறுகிறாள். அரும்பிப் பூத்திருக்கும் காலத்தில் நிமிர்ந்து தலைதூக்கி நிற்கும் மரக்கொம்பு காய்த்த காலத்தில் காய்களின் கனத்தால் தலை வளைந்து தாழ்வது இயல்பாதலால், "காய்த்த மரம் வளையாத கணக்கு முண்டோ" என்றும், காய்த்துத் தலைவணங்கித் தொங்கும் போது வேண்டுவோர் எட்டிப் பற்றிக் கொள்வது போல யானும் அப் பெருமான் திருவருள் நலத்தைப் பெற்று இன்புறுவேன் என்பாளாய்,

"கணக் கறிந்தும் விடுவேனே கண்டாய்" என்றும் எடுத்துக் கூறுகின்றாள் இதனை "வேட்கை ஒருதலை யுள்ளுதல்" (தொல்.கள) என்பர்.

இதனால், வேட்கை மிகுதியால் தலைவன் திருவருளைப் பெறு தொழி யேன் எனத் தன் கோள் கூறியவாறும். (2)

3019. என்னுயிரில் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்
என்இறைவன் பொதுவில்நடம் இயற்றும்நட ராஜன்
தன்னை அறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்
தனை அறிந்த பருவத்தே எனை அறிய விரும்பான்
பின்னை அன்றி முன்னும்ஒரு பிழைபுரிந்தேன் இல்லை
பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கும் அழகோ
கன்னல்என்றால் கைக்கின்ற கணக்கும்உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனே கண்டாய்என் தோழீ.

உரை: என் உயிர்க்குயிராய்க் கலந்து இன்பம் செய்கின்ற பெருமானும், எனக்கு இறைவனும், ஞான சபையில் நடிப்பவனுமாகிய நடராச மூர்த்தி, அவனை இத் தன்மையனென்று அறிய மாட்டாத இளம் பருவத்தில் என்னை மணந்து கொண்டவன், அறிவறிந்த எனது இப் பருவத்தில் எனது விருப்பறியாமல் இருக்கின்றான்; மணத்தற்கு முன்போ, அதற்குப் பின்போ, ஒரு குற்றமும் யான் செய்யவில்லை; பெண் படும் அவலம் கண்டு மனமிரங்குதல் ஆடவர் பெருந்தகைமைக்கு அழகாகும்; கரும்பென்றால் அதற்குக் கைப்புச் சுவை அமைவது முறையன்றே; முறையும் நெறியு மறிந்துள்ள நான் இனி அவரை விட மாட்டேன், காண். எ:று.

உயிர்க்குயிராய்க் கலந்து அறிவின்பம் நல்குவது இறைவன் செய்கையாதலால், "என்னுயிரிற் கலந்து கலந்து இனிக்கின்ற பெருமான்" எனவும், அவனுக்கும் தனக்குமுள்ள தொடர்பு காட்டற்கு "என் இறைவன்" எனவும், அவனது அருட் செயலை விளக்குதற்குப் "பொதுவில் நடம் இயற்றும் நடராசன்" எனவும் இயம்புகின்றாள். நடராசன் என்பதைச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் "ஆட வல்லான்" எனக் கூறுகின்றன. அவனை இறைவனென்றும், உயிராகிய தன்னை அவற்கு அடிமை யென்றும் அறிவது பருவ நிலை; மணப்பருவத்துக்கு முன்னையதாகிய பேதைப் பருவ வியல்பு தெரிவித்தற்குத் "தன்னையறியாப் பருவ" மென்றும், மணத்துக்குப் பின்னதாகிய பெதும்பைப் பருவத்தைத் "தனை யறிந்த பருவ" மென்றும் உரைக்கின்றாள். "காப்புப் பூண்டிசின்கடையும் போகலை பேதையல்லை மேதையங் குறுமகள், பெதும்பைப் பருவத் தொதுங்கினை" (அகம். 7) எனச் சான்றோர் கூறுவது அறிக. எனையறிய விரும்பான் என்றது எனது காதற் காமச் செவ்வியைக் கருது கின்றானில்லை எனக் குறித்தற்கு. காதலின்பத்தை நல்க விழையாமைக்குக் காரணம் யாதாகலாம் என ஆராய்ந் துணர்கின்றமை தோன்ற, "பின்னையன்றி முன்னுமொரு பிழை புரிந்தேனில்லை" என உரைக்கின்றாள். பெண்ணுயிர்க்குற்ற அவலத்தைப் போக்குவது ஆடவர்க்குப் பெருந்தகையா மென்பது சால்புடைய பெரியோர் கண்ட

முறை. "பெண்ணுயிர் அவல நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல் எண்ணினன்" (சீவக) எனத் திருத்தக்க தேவரும், "பெண்ணென மனத் திடைப் பெருந்தகை நினைத்தான்" (தாடகை) எனக் கம்பரும் உரைப் பது காண்க. பெருந்தகை - பெருந் தகைமை; பெருந்தகையாகிய அவனுக்கு அழகாகாது எனினும் அமையும். கன்னல் - கரும்பு. கன்னல் இனிக்கும் இயல்பினதேயன்றிக் கைப்பது இயல்பன்று. உலகறிந்த உண்மையாதலால், "கன்ன லென்றால் கைக்கின்ற கணக்கும் உண்டோ என எடுத்து மொழிகின்றாள். கணக்கு - இயல்பு.

இதனால், அவனைக் கூடியல்லது வேட்கை தீரேன் என வற்புறுத்திய வாறும்.

3020. தெருளமுதத் தனியோகர் சிந்தையிலும் ஞானச்
செல்வர்அறி விடத்தும்நடஞ் செய்யும்நட ராஜன்
அருளமுதம் அளிப்பன்என்றே அன்றுமணம் புணர்ந்தான்
அளித்தறியான் அணுத்துணையும் அனுபவித்தும் அறியேன்
மருளுடையான் அல்லன்ஒரு வஞ்சகனும் அல்லன்
மனம்இரக்கம் மிகஉடையான் வல்வினையேன் அளவில்
இருளுடையார் போலிருக்கும் இயல்பென்னை அவன்றன்
இயல்பறிந்தும் விடுவேனோ இனித்தான்என் தோழீ.

உரை: தெளிந்த ஞான வமுதத்தைப் பருகும் ஒப்பற்ற யோகியர் மனத்திலும் பக்தி யோகம் புரியும் சிவஞானச் செல்வர்களின் அறிவின் கண்ணும் நின்று ஞான நடம் புரியும் நடராசப் பெருமான் திருவருளாகிய அமுதத்தை நல்குவே னென்று என்னை அந்நாளில் திருமணம் செய்து கொண்டானாயினும் எனக்கு இன்றுவரை அதனை யளித்தானில்லை; யானும் அதனைச் சிறிதளவும் அனுபவித்ததில்லை; அவன் மனத்தின்கண் மருட்கை யுடையவ னென்றற்கோ, ஒரு வஞ்சனை யுடையவ னென்றற் கோ, சிறிதும் இடமில்லை; திருவுள்ளத்தில் மிக்க அருணிறைந்தவன்; வலிய வினை யுடையவளாகிய என்னைப் பொறுத்த அளவில் இருள் கொண்ட மனமுடையவர் போல அவன் இருக்கும் இயல்புதான் என்னையோ? அவனுடைய இயல்புகளை யான் அறிந்துளேனாதலால் நான் இனி அவனை ஒருபோதும் விடேன், காண். எ.று.

தெளிவும் துவாத சாந்தத்தில் எய்தப் பெறுவதுமாகிய ஞான வமுதத்தை யோக நெறியாளர் பெற்று மகிழ்வது தோன்றத் "தெருள முதத் தனி யோகர்" எனவும், அவரது தூய ஞானத் திருவுள்ளம் சின்மயமாதலால் அதன்கண் சிவஞானத் திருநடம் நிகழ்வது பற்றி "யோகர் சிந்தையிலும்" எனவும், அன்பு செய்தொழுகும் மெய்யுணர்ந்த பக்தி ஞானிகளின் அறிவின் கண்ணும் சிவன் திருக்கூத்து நிகழ்தலின் "ஞானச் செல்வர் அறிவிடத்தும் நடம் செய்யும் நடராசன்" எனவும், இயம்புகின்றாள். திருவருள் ஞானமே சிவஞானச் சீரமுதமாம் என்பது பற்றி, அதனைப் பெறுதற் கென்றே யான் அவனை மணந்து ஆட்பட்டே னென்பாளாய், "அருளமுதம் அளிப்ப னென்றே அன்று மணம் புணர்ந் தான்" என வுரைக்கின்றாள். அவனுக்கு நான் அடிமை யென்றும்,

அவன் என்னை யாண்டவ னென்றும் தொடர்புற்றது இங்கே மணம் புணர்தல் எனக் குறிக்கப்படுகிறது. இங்ஙனம் அப்பெருமானும் யானும் முறையே ஆண்டானு மடிமையுமாகியும், ஆண்ட அவனது அருள் ஞான போகத்தை இன்று காறும் தந்திலன் என்பாளாய் "அளித்தறி யான்" என்றும், எனக்கு அறியாமலே அளித்திருப்பானுயின், யான் என் அறிவால் அனுபவித் தறிந்திருப்பேன்; அது தானும் ஒரு சிறிதும் இல்லை யென்பாளாய், "அணுத்துணையும் அனுபவித்தும் அறியேன்" என்றும் இசைக்கின்ருள். அருளுருவாகிய அப்பரமன் அருளாமைக்குக் காரணம் ஆராயின், அருட்கு மறுதலையாய மருளுணர்வு அவன்பால் இல்லை யென்றற்கு "மருளுடையா னல்லன்" என்றும், தனது அருணலத்தை மறைத் தொழுகுகின்றது அவற்கில்லை என்றற்கு, "ஒரு வஞ்சகனு மல்லன்" என்றும் தெளிந்தமை புலப்படப் புகல்கின்ருள். இரக்கமில்லாத உள்ளத்து மறக்கண்ணுடையனுமல்ல னென்பாள், "மனமிரக்கம் மிக வுடையன்" எனக் கூறுகின்ருள். இப் பெற்றியனுகிய பெருமான் எனக் கருளாமைக் கேது எனது தீவினை என்பாளாய், "வல்வினையேன்" எனவும், அறியாதார் போல அவன் இருக்கும் தன்மையை என்னுல் அறிய முடியவில்லை என்பாளாய், "இருளுடையார் போலிருக்கும் இயல்பு என்னை" எனவும், எவ்வகையிலும் எவர்க்கும் அருளாது ஒழியாத அவனது மாண்பை நன்கறிவேனுகலின், அருள் பெறுமளவும் யான் அவனது பற்றைக் கையொழிவேன் என்பாளாய், "அவன்றன் இயல் பறிந்தும் விடுவேனே இனித்தான்" எனவும் இயம்புகின்ருள். இருள்-அறியாமை.

இதனுல், இறைவன் அறியாதான் போன்ற அருள் புரியத் தாழ்க் கினும் யான் விடேன் என விளம்பியவாறும். (4)

3021. சின்மயமாம் பொதுவினிலே தன்மயமாய் நின்று
திருநடஞ்செய் பெருங்கருணைச் செல்லவநட ராஜன்
என்மயம்நான் அறியாத இளம்பருவந் தனிலே
என்னைமணம் புரிந்தனன்ஈ தெல்லாரும் அறிவார்
இன்மயம்இல் லாதவர்போல் இன்றுமணந் தருளான்
இறைஅளவும் பிழைபுரிந்தேன் இல்லைஅவன் இதயம்
கன்மயமோ அன்றுசுவைக் கனிமயமே என்னும்
கணக்கறிந்தும் விடுவேனே கண்டாய்என் தோழீ.

உரை : ஞானகாசமாகிய அம்பலத்திலே தற்சிவமாய் நின்று திருவருள் நடனம் செய்கின்ற பெரிய கருணை யுருவாகிய செல்வ நடராசப் பெருமான், எனது உண்மைத் தன்மையே அறியும் அறிவெய் தாத இளமைப் பருவத்திலே எல்லா அறிஞர்களும் காண என்னை மணம் செய்து கொண்டான்; ஆயினும் இன்ப வுணர்வே இல்லாதவர் போல இப்போது என்பாற் போந்து கூடி மகிழ்விக்கின்ருனில்லை; யானும் அவர் கூடுதற்கு விரும்பாமைக் கேதுவாக ஒரு சிறு குற்றமும் செய்ததில்லை; மேலும் அப் பெருமானுடைய திருவுளம் தானும் கல்லின் தன்மையுடைய தன்று; சுவை மிகுந்து கனிந்த கனி போல்வதாகும்; அத் தன்மையை

யான் சான்றோர்களால் நன்கறிவேனுதலால் அவன்மேல் அன்பு செய்வதை நான் விட மாட்டேன், காண். எ.று.

சித் மயம் - சின்மயம் என வருவது வட மொழிப் புணர்ப்பு; சத் மார்க்கம், சன்மார்க்கம் என வருதல் போல. சிதம்பரம் என்று வழங்குவது ஞான ஆகாசம் எனப் பொருள் படுவதாகலின், சிதம்பரத்தில் விளங்கும் அம்பலத்தைச் ''சின்மயமாம் பொது'' எனவும், அதன்கண் சத்தியாகிய உமாதேவி வேருய்த் தனி நின்று காணச் சிவபரம் பொருளே தனி நின்று திருக்கூத்தாடலால் "தன்மயமாய் நின்று திருநடஞ்செய் செல்வ நடராசன்" என்றும், பேரருளே உருவாகிய மூர்த்தமாதல் விளங்க, ''பெருங் கருணைச் செல்வ நடராசன்'' என்றும் இயம்புகின்ருள். மலம் காரணமாக வந்த உடல், கருவி கரணங்களோடு கூடி யிருப்பினும், அறிவிச்சை செயல்களையுடைய சத்தாகிய சித்துப் பொருளாம் தன்மை ஆன்மாவாகிய தனது தன்மை என்பதை, இளம் பருவத்தில் உடல் வழி நிற்கும் உயிர் உணராமை பற்றி "என்மயம் நான் அறியாத இளம் பருவம் தனிலே" எனவும், அப் பருவத்திலே என் அறிவிற் கலந்து எனக்குத் திருவருள் வேட்கையை யுறுவித் தான் என்பாளாய், "இளம் பருவம் தனிலே என்னை மணம் புரிந்தான்" எனவும், இஃது ஆன்ம ஞானிகள் அனைவரும் அறிந்த வுண்மை என்றற்கு "ஈது எல்லாரும் அறிவர்" எனவும் எடுத்துரைக்கின்ருள். இக்கருத்துப் புலப்பட, "பருவத்தில் வந்து பயனுற்றபண்பன் அயனைப் படைத்த பரமன்''(தென்முல்லை)வாயில் என ஞானசம்பந்தர் குறிப்பது காண்க. ஆன்ம ஞானிகளாவார், ஆகம வறிவு கொண்டு ஆன்மாவின் பொதுவும் சிறப்புமாகிய ஞான மெய்தியவர். "ஆகம சீலர்க் கருள் நல்கும் பெம்மான்'' (ஆரூர்ப் பரவையுள்) என நம்பியாரூரர் நவில்வது காண்க. இன்மயம், இன்ப வுணர்வு. இன்று - பருவ முற்ற இந் நாளில். அறிவிற் கூடி யின்ப மருளாமைக்குக் காரணம் காண்பவள், தன்பாற் பிழை சிறிதும் காணமையின், ''இறை யளவும் பிழை புரிந்தேனில்லை'' என்றும், அது கேட்கும் தோழி அப் பெருமான் கன்மனத்தானுகலாம் எனத் தடை கூறினளாக, அவனை மறுப்பாளாய், ''அவன் இதயம் கன்மயமோ அன்று'' என்றும், அளித்த இன்சுவைக் கனி போல்வது என அறிந்தோர் சொல்லக் கேட்டுள்ளேன் என்பாள், "சுவைக் கனி மயமே என்னும் கணக்கறிந்தும்'' என்றும், அறிவ தறிந்தும் செயல் படாமைக் குற்றமாத லால், "விடுவேனு கண்டாய்'' என்றும் கிளந்துரைக்கின்ருள்.

இதனுல், இறைவன் மென்மைப் பண்பறிந்து பற்று விடுதல் முறை யாகா தென மொழிந்தவாரும்.

3022. எண்குணத்தான்] எல்லார்க்கும் இறைவன்எல்லாம் வல்லான்
என்அகத்தும் புறத்தும்உளான் இன்பநட ராஜன்
பெண்குணத்தை அறியாத இளம்பருவந் தனிலே
பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரிதுகளித் திருந்தேன்
வண்குணத்தால் அனுபவம்நான் அறியநின்ற பொழுதில்
வந்தறியான் இன்பம்ஒன்றும் தந்தறியான் அவனும்
வெண்குணத்தான் அல்லன்மிகு நல்லன்எனப் பலகால்
விழித்தறிந்தும் விடுவேனே விளம்பாய்என் தோழி.

உரை : தோழி, எட்டாகிய குணங்களை யுடையவனும், எல்லார்க்கும் இறைவனும், எல்லாம் செய்ய வல்லவனும், எனக்கு அகத்திலும் புறத்திலும் இருப்பவனுமாகிய இன்ப நடராசப் பெருமான், எனது பெண்மைக் குணத்தை அறியாத என்னுடைய இளம் பருவத்திலே வேட்கையை யுறுவித்து மணம் செய்து கொண்டானாக நானும் மன மிகவும் மகிழ்ந்திருந்தேன்; வளவிய அவனது குணநலத்தால் பெறுதற்கமைந்த திருவருள் அனுபவத்தை அறிதற்குச் சமைந்த இக்காலத்தில் அவன் என்பால் வருகின்றானில்லை; தனது சிவானந்தத்தைத் தருகின்றானுமில்லை; ஆயினும் அவன் வெண்மைக் குணமின்றி, மிக்க நற்குணம் சான்றவன் எனப் பன்முறையும் கண்டிருக்கின்றேனாதலால், அவன்பால் உளதாகிய என் காதலன்பைக் கைவொழிய முடியுமா? நீ சொல் . எறு.

என் குணங்களாவன, தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பனவாம். "இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்ட" தென்பர் பரிமேலழகர். எந்நாட்டு எவ்வெவர்க்கும் இறைவனாதலால், "எல்லோர்க்கும் இறைவன்" என்கின்றாள். மண்ணக மக்கட்கே யன்றி விண்ணகத் தேவர்கட்கும் இரண்டுலகத்திலும் இயங்கும் முனிவர்க்கும் பிறர் யாவர்க்கும் என்பது புலப்பட, "எல்லார்க்கும்" என வுரைக்கின்றாளுமாம். இந்தியர்க்கே யன்றி ஐரோப்பியர், ஐபீரியர், ஆப்பிரிக்கர், ஆஸ்திரேலியர், ஐசுலாந்தியர், சீனர், சைபீரியர், சப்பானியர் முதலிய பலர்க்கும் இறைவன் என்கிறாள் என்றுமாம். பழையன கழித்தலும் புதியன தோற்றுவித்தலும் எல்லாம் செய்ய வல்லவன் என்றற்கு "எல்லாம் வல்லான்" எனக் கூறுகின்றாள். எவ்வுலகத்தும் உயிர்ப் பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றிலும் அகத்தும் புறத்தும் அணுப்புதைக்கவும் இடமின்றிக் குறைவற நிறைந்து எனது அகத்திலும் புறத்திலும் கலந்துள்ளான் என்பது தோன்ற, "என் அகத்தும் புறத்தும் உளான்" என வுரைக்கின்றாள். "புறத்தினர் அகத்துளர் போற்றி நின்றழு தெழும் அன்பர் சிந்தைத் திறத்தினர்" (அம்பர். மாகா) என ஞானசம்பந்தர் நவில்வ தறிக. எவ்வுயிர்க்கும் இன்பம் விளைவிக்கும் அருட்டிருக்கூத்தாதல் பற்றி, "இன்ப நடராசன்" என இயம்புகின்றாள். பெண்ணியல்பாகிய நாணம் அச்சம் முதலியவற்றைக் கொள்ளாத, சிறுமியாகிய பருவத்தைப் "பெண் குணத்தையறியாத இளம் பருவம்" என வுரைக்கின்றாள். மார்பிற் கொங்கையரும்பும்போதே நாணமும் பயிர்ப்பும் தோன்றுதலின், "பிச்சேற்றி" எனக் கூறுகிறாள். பித்து- பிச்சு என மருவும்; ஈண்டு அருட் காதல் வேட்கை என அறிக. திருவருள் ஞான வின்பம் துய்த்தமை யுணர்த்தற்குப் "பெரிது களித்திருந்தேன்" என்று பேசுகின்றாள். வண் குணம்; தனது திருவருளை வரையாது வழங்கும் வண்மை நலம். குணமில் வழிச் செயலின்மையின், வண்குணத்தால் நல்கும் திருவருள் இன்பப் பேற்றால் உளதாகும் இன்பானுபவம், திருவருளனுபவம் என விளக்குதற்கு "வண்குணத்தால் அனுபவம் நான் அறிய நின்ற பொழுதில்" என்று புகல்கின்றாள். அனுபவம், அழுந்தி யறிதல் என்பர் மாதவச் சிவஞான முனிவர். ஈங்குச் சிவனருளில் அழுந்தி யறிதலாயிற்று. அறிய நிற்கும் பொருளாதலால், "அனுபவம் அறிய நின்ற பொழுது" எனல் மிகவும் பொருத்தமாதல் காணலாம். ஞான முதல்வனுய்

எழுந்தருளுவதோ, ஞான வின்பானுபவமோ பெறுவித்திலன் என்பாளாய், "வந்தறியான் இன்ப மொன்றும் தந்தறியான்" எனவும், தக்கார் தகவறிந்து தருவது செய்யும் சால்புடையனல்லன் போலும் என ஐயுறுமைப் பொருட்டு, அவனும் "வெண்குணத்தா னல்லன்", "மிக நல்லன்" என மிகுத்தும் புகழ்கின்ருள். மிக நல்லன் என்பது மிகுத்துரை. வெண்குணம்- புன்மைக் குணம். "வெண்மை யெனப்படுவது யாதெனின், ஒண்மை யுடையம யான் என்னும் செருக்கு" (குறள்) என்பர் திருவள்ளுவர். அவனது திருவருள் எய்துங் காலம் நோக்கி யிருக்கும் திறத்தைப் "பலகால் விழித்திருந்தும்" என்பதனுல் வெளிப்படுக்கின்ருள்.

இதனுல், திருவருட் பேறு எய்தும் திறம் நோக்கி யிருப்பது விளம்பியவாறும்.

3023. பொய்யாத புகழுடையான் பொதுவில்நடம் புரிவான்
புண்ணியர்பால் நண்ணியநற் புனிதநட ராஜன்
கொய்யாத அரும்பனைய இளம்பருவந் தனிலே
குறித்துமணம் புரிந்தனன்நான் மறித்தும்வரக் காணேன்
செய்யாத செய்கைஒன்றும் செய்தறியேன் சிறிதும்
திருவுளமே அறியும்மற்றென் ஒருஉளத்தின் செயல்கள்
நையாத என்றன்உயிர் நாதன்அருட் பெருமை
நானறிந்தும் விடுவேனே நவிலாய்என் தோழீ.

உரை: தோழி, நிலைத்த புகழை யுடையவனும், அம்பலத்தில் நடிப்பவனும், சிவபுண்ணியச் சீலர் திருவுள்ளத்தைச் சேர்பவனுமாகிய தூய நடராசப் பெருமான், பறிக்கப்படா அரும்பு போன்ற இளம் பருவத்திலே என்னை விரும்பி மணந்து கொண்டவன் மீளஎன்பால் வரக் காணேன்; அவற்கு அன்பராயினர் செய்யாத குற்றச் செய்கை யொன்றும் நான் சிறிதளவும் செய்ததில்லை; என் ஒருத்தியின் உள்ள நினைவுகள் யாவற்றையும் அவனது திருவுள்ளமே நன்கறியும்; கொடாத என் உயிர்த் தலைவனுகிய அப்பெருமானுடைய திருவருட் பெருமையை நான் அறிவேனுதலால் அவனை ஒருகாலும், விடேன்; அறிக. எ. று

பொய்த்தல்- நிலையின்றிக் கெடுதல். பொது—தில்லையின்கண் உள்ள திருச்சிற்றம்பலம். நடம், திருக்கூத்து. புண்ணியர்- புண்ணியப் பொருளாகிய சிவனைப் பூசிக்கும் புண்ணியர். அவர்களின் திருவுளத்தைக் கோயிலாகக் கொள்வது பற்றி, "புண்ணியர்பால் நண்ணிய நற்புனித நடராசன்" என்று புகல்கின்ருள். ஏனை மக்களும் பிறரும் ஆடும் கூத்து வகைகள் காம வேட்கையை விளைக்கும் குற்ற முடையவாதலால், "புனித நடராசன்" எனச் சிறப்பிக்கின்ருள். புதிது தோன்றி மலராப் பருவத்து நல்லரும்பு என்றற்குக் "கொய்யாத அரும்பைக்" குறிக்கின்ருள்; நலம் புதிதாய இளமைச் செவ்வியை "அரும்பனைய இளம் பருவம்" என நயம்பட வுரைக்கின்ருள். குறித்தல்- குறிக் கொண்டு விரும்புதல். மிக்க ஆர்வத்துடன் மணந்து கொண்ட பெருமான், பன்முறையும் வரற்பாலனுகியும் மீள ஒருமுறையும் வந்திலனென்பாள், "மறித்தும் வரக் காணேன்" என வருந்துகின்ருள். குற்றமேதேனும் செய்தேனுயின்,

அவன் வாரா தொழிதல் ஒக்கும்; இளமகளிர் செய்யலாகாத குற்ற மொன்றும் செய்திலேன் என்பாளாய், "செய்யாத செய்கை யொன்றும் செய்தறியே" னெனச் செப்புகின்றாள். "செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்" (திருப்பாவை) என நாச்சியாரும் நவில்வர். உள்குவார் உள்ளுவ தெல்லாம் உடனிருந்தறியும் பரம்பொருளாதலின், "திருவுளமே யறியும் மற்றென் ஒரு வுளத்தின் செயல்கள்" என உரைக்கின்றாள். "உள்குவார். உள்கிற்றெல்லாம் உடனிருந்தறிதி யென்றே வெள்கினேன்" (தனி நேரிசை) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. மறவாமல் வந்தருளுவன்; வாரா தொழியா னென்ற ஆசையால் வாழ்கின்றமை தோன்ற, நையாத என்றன் உயிர் நாதன்" என மொழிகின்றாள். காணுமாசையால் நையாத மனம் என்பது கருத்து. "நையாத மனத்தினனை, நைவிப்பான் இத்தெருவே ஐயா நீ உலாப் போந்த அன்று முதல்" (திருவிசைப்) எனப் பெரியோர் உரைப்ப தறிக. அருளாமை இயல்பன்மை இறைவன் திருவருட் பெருமை. அதனை யறிந்தவிடத்து அச்சமின்மை பற்றி, "அருட் பெருமை நான் அறிந்தும் விடுவேனோ" என இயம்புகின்றாள்.

இதனால், இறைவன் அருட் பெருமை யறிந்தமை நினைந்து விளம்பியவாறும்.

3024. கண்ணனையான் என்னுயிரில் கலந்துநின்ற கணவன்
கணக்கறிவான் பிணக்கறியான் கருணைநட ராஜன்
தண்ணனையாம் இளம்பருவந் தன்னில்எனைத் தனித்துத்
தானேவந் தருள்புரிந்து தனிமாலை புனைந்தான்
பெண்ணனையார் கண்டபடி பேசவும்நான் கூசாப்
பெருமையொடும் இருந்தேன்என் அருமைஎலாம் அறிந்தான்
உண்ணனையா வகைவரவு தாழ்த்தனன்இன் றவன்றன்
உளம்அறிந்தும் விடுவேனோ உரையாய்என் தோழீ.

உரை: தோழி, எனக்குக் கண் போன்றவனும், என்னுடைய உயிர்க்குயிராய்க் கலந்து நிற்கின்ற கணவனும், முறை யறிவதையன்றிப் பிணங்கி வேறுபடுதலை யறியாதவனுமாகிய, கருணையுருவாகிய நடராசப் பெருமான், தண்ணிய தளிர்க்கொழுந்து போன்ற எனது இளம்பருவத்தில் என்னைத் தனிப்ப விருத்தித் தானே, வலிய வந்து அருள் செய்து தனியாக மாலை யணிந்தான்; என்னைப்போன்ற மகளிர் என்னைத் தாம் நினைந்தவாறு ஏசிப் பேசினராயினும், நான் சிறிதும் நாணுதலின்றிப் பெருமிதத்தோடே இருந்தேனாக, அவனும் என்னுடைய பெருமை முற்றும் கண்டு கொண்டான்; ஆயினும் என் மனம் அவனது அருள் நீரால் நனைந்து தணியாவாறு தன் வருகை தாழ்க்கின்றான்; இப்பொழுது அவனுடைய திருவுள்ளத்தை நன்கறிந்தேனாகலின், இனி அவனை விடுவேனோ, சொல்லுக. எ.று.

உண்மையுணரும் ஞானக் காட்சி தந்தமை புலப்படக் "கண்ணனை யான்" என்றும், உயிர்க்குயிராய் நிற்றலின், "என்னுயிரிற் கலந்து நின்ற கணவன்" என்றும் இயம்புகின்றாள். கணக்கு, உயிரினத்தை

அருளும் முறை குறித்து நிற்கிறது. எவ்வுயிர்பாலும் இணங்கி யருள் செய்வதன்றிப் பிணங்கி வேறுபடுதல் இறைவனியல்பன்மை பற்றிக் "கணக்கறிவான் பிணக்கறியான்" எனப் பேசுகின்றாள். கருணை யுருவினனாதல் விளங்கக் "கருணை நடராசன்" என்கின்றாள். நனை, இளந்தளிர்; கொழுந்துமாம். இயல்பாகவே குளிர்ந்திருப்பது பற்றித் தண்ணனை யெனப்படுகிறது. இளம் பருவமும் தண்ணிய நனை போல்வ தால் "தண் நனையாம் இளம் பருவம்" எனச் சாற்றுகின்றாள். திருவருட் பேறு தனி நிலையில் எய்துவதாகலின், "எனைத் தனித்துத் தானே வந்து அருள் புரிந்து" என்றும், திருவருள் ஞானம் பெற்றார் அதனையே நினைந்து அதற்குரிய பணியே செய்தும் மொழிந்தும் ஒழுகுபவாதலின், "தனிமாலை புனைந்தான்" என்றும் இயம்புகின்றாள். திருவருள் ஞானமில்லாத பேதை மாக்களைப் "பெண்ணணையார்" எனவும், அவர் பேசுவன பொருளில் வறுங் கூற்றுக்க ளென்றற்குக் "கண்டபடி பேசவும்" எனவும், திருவருளின்பத்தில் இறுமாந்திருந்தமை விளங்க, "நான் கூசாப் பெருமையொடும் இருந்தேன்" எனவும் கூறுகின்றாள். "பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கிற், பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடு நீ" (சிவ.சித்தி.122) எனப் பெரியோர் கூறுவது நினைக. பெருமை - பெருமிதம். அருமை, திருவருளின்பப் பேற்றுக்குரிய தகைமை. உலகியல் வெம்மையால் திருவருள் வேட்கை தணியாமை பற்றி, "உள் நனையா வகை வரவு தாழ்ந்தனன்" என்றும் உலகியற் பற்றற்ற விடத்து வீடு பேறு அளிப்பது அப்பெருமான் திருவுள்ளமாதலை யறிந்து கொண்ட வீறு விளங்க, "இன்று அவன்றன் உளம் அறிந்தும் விடுவேனோ உரையாய்" என்றும் இனிதுரைக்கின்றாள்.

இதனால், வீடு பேறெய்தும் இயைபுணர்ந்த பெருமிதத்தைப் பேசிய வாறும். (8)

3025. ஊன்மறந்த உயிரகத்தே ஒளிநிறைந்த ஒருவன்
உலகமெலாம் உடையவன்என் னுடையநட ராஜன்
பான்மறந்த சிறியஇளம் பருவமதின் மாலைப்
பரிந்தணிந்தான் தெரிந்ததனிப் பருவமிதிற் பரியான்
தான்மறந்தான் எனினும்இங்கு நான்மறக்க மாட்டேன்
தவத்தேறி அவத்திழியச் சம்மதமும் வருமோ
கோன்மறந்த குடியேபோல் மிடியேன்நான் அவன்றன்
குணம்அறிந்தும் விடுவேனோ கூறுய்என் தோழீ.

உரை : தோழி ஊனுடம்பின் வேறாகிய உயிர், முற்றும் ஒளியாய் நிறைந்துறையும் ஒருவனாகிய இறைவனும், உலகனைத்தையும் தனக்கு உடைமையாகவுடையவனுமாகிய என்னுடைய நடராசப் பெருமான், தாய்ப்பாலை யுண்ணுதலை நீங்கிய இளமை மிக்க பருவத்திலே, என்னை விரும்பி எனக்கு மாலையணிந்து அறிவறிந்த இப் பருவத்தில் என்னை நினையா தொழுகுகின்றான்; அவன் தான் என்னை மறந்தானாயினும், இங்கே இப்பொழுதில் நான் அவனை மறக்க மாட்டேனாயினேன்; தவநெறி கொண்டுயர்ந்தோர் அவநெறியில் வீழ்ந்து கெட விரும்

பாரன்றோ? அரசனுல் மறந்து கைவிடப்பட்ட குடிகளைப் போலத் துன்புறுவேனுகிய யான், அவனுடைய குணநலங்களை யறிந்தும் மறந் தொழிவேனே? நீயே கூறுக. எ.று.

உடம்பின் நீங்கும் காலத்தில் உயிர் அதனை மறவாது, உடன் கொண்டு செல்வதில்லையாகலின், "ஊன் மறந்த உயிர்'' எனவும், உயிரின்கண் உணர்வொளியாய்க் கலந்து நிறைந்திருக்கும் இறைவனது தன்மை விளங்க, "உயிரகத்தே ஒளி நிறைந்த ஒருவன்'' எனவும் இசைக்கின்ருள். கடவுளாகிய பரம்பொருள் ஒன்றேயாதலின், "ஒருவன்'' எனச் சிறப்பிக்கின்ருள். இதிகாச புராணங்களும் வேதங்களும் கடவுளர் பலரைக் கூறினும், அவர்கட் கெல்லாம் மேலாகிய பரம்பொருள் ஒன்றே; இரண்டும் பலவுமல்ல என்று இதனுலும் அறிக. ஒருமைச் சமுதாயத்தைப் பல்லாயிரம் சாதியும் இனமுமாகப் பிரித்து, ஒன்றொ டொன்று ஒட்டி உறவு கொள்ளாவாறு பிரித்தழித்த சூழ்நிலை, மொழி சமயம் முதலியவற்றின் பெயரால் ஒன்ருகிய பரம்பொருளையும் பல்லாயிரம் தெய்வங்களாகப் பிரித்துப் போரும் பூசலும் விளைவித்துக் கெடுத்த கொடுமையை, மக்களின வரலாறு கூறுவது காண்க. பரம்பொருளாகிய ஒருவனுக்கும் உலகுக்குமுள்ள தொடர்புணர்த்தற்கு அவனை உடையவ னென்றும், உலகை அவனது உடைமை யென்றும், கூறுவாளாய், "உலக மெல்லாம் உடையவன்'' என வுரைத்துத் தனக்கும் அவனுக்கு முள்ள உறவை, "என்னுடைய நடராசன்'' என்று கூறுகின்ருள். தாய்ப் பாலை யுண்டு வளரும் குழவிப் பருவம் நீங்கிப் பேதைப் பருவம் எய்திய காலத்தேயே, தூயதாகிய என் மனத்தில் தனது திருவருளுறவை யுணர்த்தி விட்டானென்றற்குப் "பால் மறந்த சிறிய இளம் பருவத்தில் மாலை பரிந்தளித்தான்'' எனவும், அறிவு, உரு, அகவையாகிய மூன்ருலும் சிறுமையுற்ற பருவமாதல் விளங்கச் "சிறிய இளம் பருவ'' மெனவும் இசைக்கின்ருள். அறிவதறிந் தடங்கி வாழும் பெதும்பைப் பருவம் எய்தியபோது அன்புற்று வருதற் குரியவன் வாராஞயினன் என்பாளாய் "பருவ மிதிற் பரியான்'' எனப் பகர்கின்ருள். பரிதல் - அன்பு செய்தல். நினைப்பு மறப்பில்லாத நீர்மையனுகிய இப் பெருமான், என்னை மறந்து விட்டான்; இரண்டுமுடைய நான் மறவாமல் அவனை நினைக்கின்றேன் என்பாள், "தான் மறந்தானெனினும் இங்கு நான் மறக்க மாட்டேன்'' எனவுரைக்கின்ருள். இங்கு, நினைப்பு மறப்புக்களை விளைவிக்கும் இவ் வுலக வாழ்வு, தவத்தை மலைக்கும் அவத்தைப் பள்ளத்துக்கும் ஒப்புமை கூறுவது மரபாதலால், தவம் செய்வார் அவம் நினையார் என்னும்முறைமை பற்றி, "தவத்தேறி அவத் திழியச் சம்மதமும் வருமோ'' என இசைக் கின்ருள். சம்மதம் - மன விசைவு. அரசன் கோல் நோக்கி வாழ்வது குடி; அவனுல் மறக்கப்பட்ட குடிகள் காப்பும் காவலும் முறையும் இழந்து, துன் புறுவரென்பது பற்றி, "கோன் மறந்த குடியேபோல் மிடியேன்'' எனமொழி கிருள். மிடி, துன்பம். இந்நாளைய அரசு, குடிகளை நினையா தொழிந்தமை யால், மக்களிடையே சமுதாயத் துரோகிகள் மலிந்து ஆட்சி, தொழில், வாணிகம் முதலிய வாழ்க்கைக் கூறுகளைக் கைப்பற்றிக் கொண்டன ராதலின், குடிமை மிடிமைக் கிரையாய் மெலிவது கண்கூடாக வுளது. எனினும், யான் அப்பெருமானுடைய அருணலங்களை அறிந்து ளேனுதலால், நான் அவன் திருவடிகளை விட மாட்டேன் என்பாளாய்,

"அவன்றன் குண மறிந்தும் விடுவேனு கூருய்" என்று எடுத்துரைக்கின்ருள்.

இதனுல், இறைவன் குணநலம் அறிந்தமையால், அவன் மறக்கினும் தான் மறவாமல் விடாப் பிடியுடன் இருக்கின்றமை தலைவி தோழிக் குரைத்தவாரும். (9)

3026. தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன்நட ராசன்
இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே
என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை
அனித்தம்இலா இச்சரிதம் யார்க்குரைப்பேன் அந்தோ
அவன் அறிவான் நான்அறிவேன் அயலறிவார் உளரோ
துனித்தநிலை விடுத்தொருகால் சுத்தநிலை அதனில்
சுகங்கண்டும் விடுவேனே சொல்லாய்என் தோழீ.

உரை: தோழி, தனிப்பட்ட பரநாத மண்டலத்தின், முடி மேலுள்ள தாகிய நாதாந்தத்துக்கப்பால், தலைவர்கள் வணங்க விளங்குகின்ற தலைவனுன நடராசப் பெருமான், இனிமை சான்ற திருவருட் சுகத்தை யறிய மாட்டாத எனது இளம் பருவத்தில், எனது இலாட நடுவில் எழுந் தருளியது கண்டுள்ளேனன்றிப் பின்பு நான் கண்டதில்லை; மெய்ம்மை யான இவ்வரலாற்றை யார்க்கு எடுத்துரைப்பேன்; ஐயோ, அதனை அவனொருவனே யறிவான்; யான் அறிவேன்; எம்மின் அயலார் ஒரு வரும்அறியார்; வெறுத்தற் கிடமில்லாதவாறு ஒருகால் சுத்த சிவபோக நிலையைப் பெறும் இன்பத்தைக் கண்டேனுதலால் இனிமேல் அதனைவிட மாட்டே னன்றே. எ.று.

சுத்த தத்துவங்களின் மத்தகத் திலங்குவது நாத தத்துவமாயினும், தூலமாகிய பிரகிருதி மாயைக்கும் சூக்குமமாகிய அசுத்த மாயைக்கும் பரமாகிய சுத்த மாயையின், உச்சியின் கண்ணதாதலால், "தனித்த பரநாத முடித்தலம்" எனவும், மாயா தீதமான பராகாயத்தை "மிசைத் தலம்" எனவும் எடுத்தோதுகின்ருள். ஆங்கு அதனைத் தரிசித்து வணங்குவோர் தேவ தேவரிற் றலையாயவராதல் பற்றித் "தலைவ" ரென லாம் எனச் சாற்றுகின்ருள். அது பற்றியே நடராசப் பெருமான் நடித்தருளு மிடத்தை நாதாந்தப் பொதுவென அறிந்தோர் புகல் கின்றனர். அதனுல் நாதாந்த நடன நாயக னென்றற்குத் "தலைவ ரெலாம் வணங்க நின்ற தலைவன் நடராசன்" எனப் புகழ்கின்ருள். தேக சுகம், பிராண சுகம் இரண்டினும் ஞான சுகம் இளமைப் பருவத்தில் அறியப்படுவ தின்மையின், "இனித்த சுகம் அறிந்துகொளா இளம்பருவம் எனவும், இளமைச் செல்வி மாசு மறுவற்ற உள்ளக் காட்சியுடைய தாகலின், அது கண்ணுகப் புருவ நடுவே காண நிற்கும் சிவக் காட்சி யைப் பெற்றமை புலப்பட "என் புருவ நடு இருந்தான்" எனவும் இயம்பு கிருள். உலகியற் சுகபோக நுகர்ச்சி எய்தியபோது உள்ளம் உலகியற் பசுபாசவுணர்வுகளால் மாசுபட்டுப் புருவ நடுவினும் சிவத்தைக் காணலாகா தொழிந்தமை விளங்க, "பின்பு கண்டேனில்லை" என்று

புகல்கின்றாள். புருவ நடு இலாடம் எனப்படும். இளமைக் கண் காண நின்ற சிவக்காட்சி, பருவ மெய்தியபோது காணப் பெறுதாயின செய்தி உண்மையாதல் பற்றி, "அனித்தமிலா இச்சரிதம்" என்றும், இத் தகைய காட்சியனுபவம் பெறுவோர் அரியராகலின், "யார்க் குரைப்பேன் என்றும் இயம்புகிறாள். பிறர் அறிய நிகழாமல் உள்ளத்தே நிகழ்வது விளங்க, "அவன் அறிவான் நான் அறிவேன்" எனவும், அயலார் அறிய லாகாமை பற்றி, "அயல் அறிவார் உளரோ" எனவும் உரைக்கின்றாள். உலகியற் சுகங்கள் மிக்க வழி வெறுப்பளிக்கும் நிலையினவாதலால், "துனித்த நிலை விடுத்து" என்றும், சுத்த சிவபோகம் ஒருகாலைக் கொரு கால் பெருகி வற்று முற்று இன்ப நிலையாதல் கண்டு, "சுத்த நிலையதனிற் சுகம் கண்டும் விடுவேனே" என்றும் உரைக்கின்றாள். சுத்த நிலை- சுத்தவத்தை; நின்மலாவத்தை யெனவும் வழங்கும்.

இதனால், நின்மலாவத்தைக்கண், சிவபோகம் பெற்ற திறம் தெரிவித்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

40. அறநிலை விளக்கம்

அஃதாவது கொல்லாமையாகிய அறத்தின் சிறப்பியல்பை விளக்குவதாம். "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்ற அறநூல் கூறல் பற்றி, புலாலுண்போர் எத்துணை வன்மையை யுடைய சித்தராயினும், அவரை ஞானவானெனக் கூறுதல் கூடா தென்பதாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3027. மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில்
கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை
எழுப்புகின்ற உறுவ னேனும்
கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை
ஞானிஎனக் கூறொ ணாதே.

உரை: ஆண் தன்மை பொருந்திய பனை மரத்தைப் பெண் பனையாக்கி, ஒரு கொடியில் என்புருவைக் கண்ணால் நோக்கி, அழகு திகழும் பெண்ணாக ஆணை வழித் தோன்றிய உருவமாக்கி, இவ்வாறே இறந்து போனவர்களை எழுப்புகின்ற பெரியோனாகிய திருஞானசம்பந்தரைப் போல்பவனாயினும், பிறப்பிறப்புக்கு ஏழுந்த இரக்கமின்றி உயிர் நின்ற உடம்புகளைக் கொன்று தின்கின்ற கருத்துடையனாயின், அவனை ஞானி என்று சொல்லலாகாது; இது எமது குரு ஆணை; சிவத்தின் மேல் ஆணை என அறிக. எ.று.

திருஞானசம்பந்தர் திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண் பனையாக்கிய அற்புதச் செயலை நினைப்பிக்கும் வகையில், "மருவாணைப் பெண்ணாக்கி" என்றும், திருமயிலாப்பூரில் இறந்து போன பூம்பாவையின் என்புகளைக் கண்ணாற் சிறிது போது நோக்கிப் பெண்ணுருந் திகழ எழுப்பிய அற்புதத்தை, "ஒரு கணத்தில் கண் விழித்து வயகும்மப் பெண்ணுருவாக்கி" என்றும், திருமருகலில் அரவு கடித்து இறந்துபட்ட வணிகனை உயிர் பெற்று எழச் செய்த அற்புதத்தை "இறந்தவரை எழுப்புகின்ற உறுவனேனும்" என்றும் இயம்புகின்றார். ஆண் பெண்ணுருவுகள் திருவருளாணை வழித் தோன்றுவனவாகலின், "ஆணை யுருவாக்கி" எனக் கூறுகின்றார். இனி ஆணாய்த் தோன்றியதைப் பெண்ணாகவும். ஒரு கண நேரம் விழித்து நோக்கிப் பெண்ணுருவை ஆணுருவாகவும் இறந்தவரை எழுப்பவும் வல்ல சித்துடையனாயினும்

என உரைத்தலும் ஒன்று. உறுவன் - மிக்கவன்; பெரியவனுமாம். கருவாணை யுறுதல் - பி ற ப் பி ற ப் பு க் குள்ளாதல். கருவாள் நையுற எனப் பிரித்து வலிய வாளால் வருந்தும்படி, உயிர்தின்ற உடம்பினைக் கடிந்துண்ணும் கருத்தனேல் எனப் பொருளுரைத்தலுமாம். உயிர் நின்ற உடம்பைக் கொன்றுண்ணும் கொடிய கருத்துடையவனை, "கருவாணை யுற இரங்காது கடித்துண்ணும் கருத்தன்" என இசைக்கின்றார். பிறப்பும் இறப்பும் திருவருளாணை வழி நிற்பன. "போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்கும்" என்பது சிவஞான போதம். தன்னாணையினும் பெற்றோ ராணையினும் குருவாணையும் சிவத்தின் ஆணையும் வலி மிக வுடையது என்பது கொண்டு, "குருவாணை எமது சிவக் கொழுந்தாணை" என வற்புறுத்துகின்றார் ஞானி, ஞானவான்.

இதனால், புலாலுண்போன் எத்துணை யாற்றலும் ஞானமும் உடையனாயினும், ஞானி யெனப்படல் பொருந்தாது என வற்புறுத்தவாறும். (1)

திருச்சிற்றம்பலம்

41. அருள்நிலை விளக்கம்

அஃதாவது, திருவருளின் நல்விளக்கத்துக்குச் சான்று பகர்தலாம். இதன்கண் கருங்குழியில் இறைவன் திருமுன் நீர் பெய்த விளக்கு எரிந்தமை தெரிவிக்கிறது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3028. மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்
கில்லைஎன்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனஉட் பொங்கிவழி
கின்றேனோர் புதுமை அன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்
நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கும்
எரிந்ததுசந்நிதியின் முன்னே.

உரை : நன்செய்கள் சூழ்ந்து, அழகு திகழும் சென்னப்பட்டினத்து நண்பர்களே, நான் சொல்வது கேண்மின்; மெய்ம்மை மொழியும் விளக்கமே விளக்காவது; வேறு விளக்குகளல்ல என்று சொல்லினர் திருவள்ளுவர் முதலிய மேலோர்கள்; நான் பொய் புகல்வதே விளக்கா மென்று கருதி மகிழ்ச்சி மிகுகின்றேன்; அது ஒரு புதுமையாகாது; இறைவன் திருமுன்பு நெய் பெய்தெரிக்கும் விளக்குப் போலவே நீர் பெய்த விளக்கும் எரிந்தது, காண். எ.று.

வள்ளற் பெருமான் காலத்தில், சென்னை நகரிற் கோட்டை யிருக்கும் பகுதி சென்னப்பட்டினமும் அதற்கு வடக்கில் திருவொற்றியூர், மேற்கில் எழுமூர், தெற்கில் திருமயிலாப்பூர், திருவான்மியூர் ஆகிய வூர்களும் பழம் பெருமையுடன் விளங்கின. இவ்வூர்கள் யாவும் நன்செய் வயல்கள் மிக்கு நெல் விளையும் நீர்மையுடன் புகழ் விளங்கியிருந்தன வாகலின், "செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்" என்று சிறப்பிக் கின்றார். மருத வளமுடைய குடி யிருப்புகளையே தமிழர் ஊர் என்பர். இப்பகுதி அந்நாளில் சென்னப்பனென்ற நாயக்கர் தலைவன் காவலிலிருந் தமையால் ஆட்சியாளர் சென்னப்பட்டினம் என்றனர்; பட்டினம் - கடற்கரையிலுள்ள ஊர். கோட்டை யிருக்கும் பகுதி மதுரேசன் என்ற மீனவனுக்கு உரியதா யிருந்தமையின், ஆங்கிலேயர், அதனை மதுரேசு பட்டினம் என்று மொழிந்தனர்; அது நாளடைவில் மதராசு என மருவி விட்டது; தமிழர் சென்னை என்பாராயினர். "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" (குறள்) எனத்

திருவள்ளுவர் உரைத்ததைக் கொண்டு, "மெய் விளக்கே விளக்கல்லால் வேறு விளக்கில்லை என்றார் மேலோர்" என மொழிகின்றார். தாம் பொய் பெரிது பேசி யொழுகியதாக உலக நெறி பற்றி யுரைக்கின்றாராகலின், "நானும் பொய் விளக்கே விளக்கென உட்பொங்கி வழிகின்றேன்" எனக் கூறுகிறார். உலகில் எவரும் தாம் பேசுவது பொய்யே யாயினும் பொய் யென்று கூறுவ தின்றித் தூய மெய் யென்றே சொல்லுவது உலகியல். அதனை யறிந்தே, "பொய் விளக்கே விளக்கென வுட்பொங்கி வழி கின்றேன்" என்று புகல்கின்றாரெனத் தெளிக. நெய் பெய்து விளக் கெரிவித்தல் நாட்டவர் செயல்; வடலூர்க் கருகிலுள்ள கருங்குழி யென்ற வூரில் இருந்த போது, வள்ளற் பெருமான் ஒருநாள் இரவு ஓரறையில் இறை வழிபாடு புரிகையில் ஆங்கெரிந்த நெய் விளக்கிற்கு, எண்ணெய் குறைந்ததாக அருகே ஒரு செம்பிலிருந்த தண்ணீரை நெய்யென எண்ணி அவ்விளக்கிற் பெய்யவும், விளக்கு இனிது எரிய லுற்றது. பூசை யறை இறைவன் எழுந்தருளும் திருமுன்பாகலின், அப்பெருமான் திருவருளால் நீரும் நெய்யாய் எரிந்தது என்று மகிழ்ந்தாராகலின், "நெய் விளக்கே போன்றொரு தண்ணீர் விளக்கும் எரிந்தது சன்னிதியின் முன்னே" என எழுதுகின்றார். இது போல் ஆயிரத்து முந்நூறுண்டுகட்கு முன் திருவாரூரில் நமி நந்தி என்ற சிவத்தொண்டர், இறைவன் திருமுன் நீர் பெய்து விளக்கெரித்தார் என்பாராய், "ஆரூர் நறுமலர் நாதன் அடித் தொண்டன் நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணுடறியு மன்றே" (ஆரூர்.விருத்) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க.

இவ் வருட்பாட்டுச் சென்னையில் இருந்த இறுக்கம்இரத்தின முதலி யார்க்கு வள்ளற் பெருமான் எழுதி விடுத்த தென்று வரலாறு கூறுகிறது.

(1)

வரலாற்று முறை நான்காம் திருமுறைக்கு உரைவேந்தர் உரை முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்பிரகாச வள்ளலார்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிய

திருவருட்பா-வரலாற்றுமுறை

ஐந்தாவது திருமுறை

உரைவேந்தர் உரை

---

1. அன்பு மாலை

அஃதாவது, இறைவன்பால் உண்டாகிய அன்புப் பொருளாகப் பாடிய சொன்மாலை யென்பது. இதன்கண், தமக்கு உண்டாகும் விருப்பு வெறுப்புக்கள் இறைவன் திருவருளால் உண்டாவன என்பதும், துன்பத்தால் துயருற்று மனம் தூயனாகிய நிலையில் அன்புகூர்ந்து மெய்யுணர்வு நல்க வேண்டுமென முறையிடுவதும், துக்க நிவர்த்திக்குரிய திருவருளை நல்குக என முறையிடுவதும், மனத்தின் பெருமை சிறுமை பாராமல் அடியவனாக ஏற்றருள்க என வேண்டுவதும். திருநெறியும் பெருநெறியும் மேற்கொள்ளும் பெற்றிமை தமக்கு இல்லையாதலால், திருவருள் நெறியைத் தந்தருள்க என வேண்டுவதும், அம்மையில் தோன்றிய பத்திமை இம்மை மறுமைகளில் தொடரும் என்றறிந்து மகிழ்வதும், திருவருள் ஞானத்துக்கு பக்குவா பக்குவம் காண்டல் வேண்டா என்று கேட்டுக் கொள்வதும், பலவகையால் அருள் செய்யும் இறைவனுக்கும் அவ்வருளைப் பெறும் தமக்குமுள்ள உறவு முறையை ஆராய்வதும், திருவருள் யோகானுபவம் தெரிவிப்பதும் பொருட் செல்வத்தோடு அருட் செல்வமும் அளித்தல் வேண்டுமென முறையிடுவதும், இளமைப் பருவத்திலேயே தாம் திருவருள் நெறி நின்று பாடுதற்கு அமைந்த தவம் யாதாமென ஆராய்வதும் பிறவும் ஓதப்படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3029. அற்புதப்பொன் அம்பலத்தே ஆடுகின்ற அரசே
ஆரமுதே அடியேன்றன் அன்பேஎன் அறிவே
கற்புதவு பெருங்கருணைக் கடலேஎன் கண்ணே
கண்ணுதலே ஆனந்தக் களிப்பேமெய்க் கதியே

வெற்புதவு பசுங்கொடியை மருவுபெருந் தருவே
வேதஆ கமமுடியின் விளங்கும்ஒளி விளக்கே
பொற்புறவே இவ்வுலகில் பொருந்துசித்தன் ஆனேன்
பொருத்தமும் நின்திருவருளின் பொருத்தமது தானே.

உரை : அற்புதமான பொன்னம்பலத்திலே ஆடல் புரிகின்ற அருளரசே, பெறற்கரிய அமுதமே, திருவடியைப் நினைந்தொழுகும் என்னுடைய அன்புருவே, என்னுடைய அறிவுக் கறிவே, ஞானக் கல்வி வழங்கும் பெரிய கருணைக் கடலே, எனக்குக் கண்ணாகியவனே, கண் பொருந்திய நெற்றியை யுடைய கடவுளே, இன்பத்தால் உள்ளத்தில் உண்டாகும் மகிழ்ச்சியே, உண்மைக் கதியானவனே, மலையரையன் பெற்ற பசிய கொடி போல்கின்ற உமாதேவி பொருந்தி யுள்ள பெரிய மரம் போல்பவனே, வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் முடிவாய் ஞான வொளி செய்யும் விளக்காகியவனே, அழகமைய இந்த உலகில் இருக்கின்ற சித்தனாகிய எனக்குள்ள பொருத்தம் நின் திருவருளாகிய பொருத்தம், காண் எ. று.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் அற்புதக் கூத்தாடு மிடமாகலின், "அற்புதப் பொன்னம்பலத்தே ஆடுகின்ற அரசே" என்றும், அரியணைக்கண் அமர்ந்து ஆளு மரசர் போலாது, அம்பலத்தில் நின்று ஆடுமாற்றால் உயிர்கட்கு அருள் புரிகின்றமை பற்றி, "அம்பலத்தில் ஆடுகின்ற அரசே" என்றும் கூறுகின்றார். கடல் கடைந்து அரிதிற் பெற்றுண்ணும் தேவரமுதம் போலின்றி, ஞானத்தாற் கண்டு பரவி, இன்புறும் அமுதமாதல் விளங்க "ஆரமுதே" என்கின்றார். அடியேன், திருவடியையே பற்றுகக் கொண்டு அதனையே அன்புடன் நினைத் தொழுகுபவன். தான் செய்யும் அன்பு உருவில்லதாயினும், அது தானே உருக் கொண்டாற் போல்பவ னென்றற்கு "அடியேன் தன் அன்பே" என உரைக்கின்றார். அறிவுக் கறிவாய் நின்று அறியாதன அறியச் செய்தல் தோன்ற, "என் அறிவே" எனச் சொல்லுகின்றார். "அறி நீர்மையி லெய்தும் அவர்க் கறியும் அறிவருளும் குறிநீர்மையர்" (இடும்பா) என்று ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. கற்பு, கற்றற் குரியன் கற்க எய்தும் மனத் தெளிவு கற்பெனப்படுகிறது; அதனைப் பெறுதற் குதவும் திருவருள் நலத்தைக் "கற்புதவு பெருங் கருணைக் கடலே" எனப் பரவுகின்றார். "கல்லாதன வெல்லாம் கற்பித்தானைக் காணாதன வெல்லாம் காட்டினானைச் சொல்லாத வெல்லாம் சொல்லி யென்னைத் தொடர்ந்திங்கு அடியேனை யாளாக் கொண்டான்" (பூந்துருத்தி) எனத் திருநாவுக்கரசர் கூறுவ தறிக. காணாதன காட்டுவது பற்றி, "என் கண்ணானே" எனவுரைக்கின்றார். "காட்டாதன வெல்லாம் காட்டி" (அம்மா) என்பது திருவாசகம். ஆனந்தம் காட்சியாகவும் அதன் பயனாகும் மகிழ்ச்சி அனுபவமாகவும் அமைதலால், ஆனந்த மென் றொழியாது, "ஆனந்தக் களிப்பே" என அறிவிக்கின்றார். மெய்க் கதி, மெய்ம்மை சான்ற சிவகதி. ஏனைக் கதிகள் பலவற்றிலும் சிவகதி நிலைபேறுடையதாகலின், "மெய்க் கதி" என விளம்புகிறார். வெற்பு, இமயமலை. பசுமை நிறமும் கொடி போல் உருவும் கொண்டமையால் உமாதேவியை "வெற்புதவு பசுங்கொடி" என்றும், பொன் மரத்திற்

பச்சைக் கொடி படர்ந்திருத்தல் போல உமை தழுவிய சிவபெருமான் திருமேனி திகழ்வது விளங்க, "பசுங் கொடியை மருவு பெருந் தருவே" எனப் புனைந்துரைக்கின்றார். தரு—மரம் தேவ முடிவிலும், சிவாகம முடிவிலும் பரஞான வொளி செய்தல் தோன்ற, "வேதவாகம முடிவில் விளங்கு மொளி விளக்கே" எனக் கூறுகின்றார். சித்தன். சித்தத்தை யுடையவன்; பல்வகைச் சித்துக்களை யுடையவன் என்றுமாம். எவ்வுலகிலும் சென்று திரியும் சித்தனுக்கு வேறாக நான் இவ்வுலகிலே திரியும் சித்தனாயினேன் என்பாராய், "பொற்புறவே இவ்வுலகிற் பொருந்து சித்தனானேன்" எனவும், இது நின் திருவுளத்துக்கு ஒத்ததாமோ என்பாராய், "நின் திருவருளின் பொருத்தம் அதுதானே" எனவும் இயம்புகின்றார்.

இதனால், பல்வகைச் சித்துடையனாதல் திருவருட்குப் பொருத்தந் தானே என வினவியவாறும். (1)

3030. நிறைஅணிந்த சிவகாமி நேயநிறை ஒளியே
நித்தபரி பூரணமாம் சுத்தசிவ வெளியே
கறைஅணிந்த களத்தரசே கண்ணுடைய கரும்பே
கற்கண்டே கனியேஎன் கண்ணேகண் மணியே
பிறைஅணிந்த முடிமலையே பெருங்கருணைக் கடலே
பெரியவரெல் லாம்வணங்கும் பெரியபரம் பொருளே
குறைஅணிந்து திரிகின்றேன் குறைகளெலாந் தவிர்த்தே
குற்றமெலாங் குணமாகக் கொள்வதுநின் குணமே.

உரை : நிறை கொண்ட சிவகாமி யம்மையின், அன்பு நிறைந்த ஒளிப் பொருளும், என்றும் குறைவிலா நிறைவாகும் சுத்த சிவாகாயமே, விடக் கறை பொருந்திய கழுத்தையுடைய அருளரசனும், முக்கண்களை யுடைய கரும்பு போல்பவனும், கற்கண்டும் கனியும் போல் இனிப்பவனும் எனக்குக் கண்ணும் கண்ணினுள் மணியும் ஒப்பவனும், பிறைத் திங்களைத் திருமுடியிற் கொண்ட மலை யொப்பவனும், பெரிய கருணைக் கடலானவனும், பெரியவராயினர் எல்லாரும் வணங்கி வழிபடும் பெரிய பரம்பொருளாயவனும் ஆகிய சிவபெருமானே, குறைகள் மிகப்பல வுற்று உலகில் திரிகின்ற என்னுடைய குறைகள் அனைத்தையும் போக்கிக் குற்றங்களை நீக்கி, என் பிறவிக் குணமாகக் கொண்டருளுவது நினது பெருங் குணமன்றோ. எ. று.

நிறை - பொறி புலன்களின் போக்கிற் போக விடாது நெஞ்சினை நிறுத்தும் உரனுடைமை; திண்மையுமாம். நிறைவே சிவகாமிக்கு உயரிய அணிகல னென்றற்கு "நிறை யணிந்த சிவகாமி" எனத் தெரிவிக்கின்றார். நேயம் - அன்பு. சோதியுருவினனாதலால் "சோதி" என்று கூறுகிறார் "சோதி யந்தமாயினாய் சோதி யுள்ளோர் சோதியாய்" (ஆலவாய்) என்று பெரியோர் உரைப்பது காண்க. பரிபூரணம் - முழு நிறைவு. நிறைவு குறைதலும் குறைவு நிறைதலும் உலகியலில் நாளும் நிகழ்தலின், பரம்பொருட்கு அஃது இல்லை யென வற்புறுத்தற்கு, "நித்த

பரிபூரணம்'' என்கின்றார். சுத்தமாகிய சிவம் சுத்த சிவமெனப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர் இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர் என்பர். சிவம் விளங்கும் பரவெளியைச் "சுத்த சிவவெளி" எனப் புகழ்கின்றார். கறை - கடல் விடத்தை யுண்டதனால் கழுத்திற் படிந்த கருமை நிறம். பொன்னிறத் திருமேனியில் கழுத்திற் கறை ஓராற்றால் அழகு செய்தலால் "கறை யணிந்த களத்தரசே'' எனப் போற்றுகிறார். "கறை மிடறு அணியலும் அணிந்தன்று'' (புறம்) எனச் சான்றோர் கூறுவ தறிக. கரும்புக்குக் கண் (கணு) உண்மையின், கண்ணுடைய சிவனைக் "கண்ணுடைய கரும்பே'' என்கின்றார். நினைவார்க்கு நினைக்குந் தோறும் இனிமை நல்குதலால், "கற்கண்டே கனியே" என மொழிகின்றார். உலகுக்குக் கண்ணும், கண்ணுடையார் கண்ணுள் மணியாயும் இருந்து காண்பன காணவும் காட்டவும் உதவுதல் பற்றி, "என் கண்ணே கண்மணியே'' என்று புகழ்கின்றார். பொன்மலை போல் மேனியும் திருமுடியிற் பிறையும் கொண்டு விளங்குதலால், ''பிறை யணிந்த முடி மலையே'' எனப் போற்றுகிறார். சிவனை மலை யென்று சொல்லுகிறார், நிலையிற் சலியாமை பற்றி. கொள்ளக் குறை படாமையால் "கடல்'' லென்றும், வழங்கத் தவறுமையால் "பெருங் கருணை'' யென்றும் சிறப்பிக் கின்றார். பெரியவர் - செயற் கரிய செய்து பெருமை பெற்றவர். அறிவானவர்க்கும் அறியாமை நின்ற பரமனாதலின், "பெரியவரெலாம் வணங்கும் பெரிய பரம்பொருளே'' எனப் பகர்கின்றார். "அன்றின்றே டென்றும் அறிவானவர்க்கும் அறியாமை நின்ற அரன்'' (தென் திரு முல்லை) என ஞானசம்பந்தப் பெருமான் இனி தெடுத்துரைப்பது காண்க. உயிர்ப்பொருள் உயிரில் பொருள்கள் அனைத்துக்கும் மேலா யதால், ''பரம்பொருள்'' என்றும், எல்லாப் பொருள்களையும் தனக்குள் ஒடுக்கியும், மீளத் தோற்றுவித்துத் தன் வியாபகத்துள் நிலவச் செய் தலும் உடைமையால் "பெரிய பரம்பொருளே'' என்றும் இயம்புகிறார். வேதங்களில் மந்திரங்களாலும் பிராமணங்களாலும் கூறப்படும், தெய்வப் பொருள்கள் அனைத்திற்கும் பெரிதாக உபநிடதங்கள் உரைக்கும், பிரமப் பொருள் என்பதை விளக்கப் "பெரிய பரம்பொருள்'' எனக் குறிக்கின்றார். பிரமத்தைப் பெரிய பொருளெனவும். தத்துவமசி என்னும், உபதேச மந்திரத்தை மகாவாக்கிய மென்றும் உரைப்பது தமிழ் மரபு. இவ்வாறே அகம்பிரமாஸ்மின் என்னும் பாவனை மந்திரம் சிவோகம் பாவனை என்று வழங்கும் என அறிக. மலப்பிணிப்பால் உளதாகிய குறைபாட்டால் உலகிற், பிறந்து உழலுமாறு புலப்பட, "குறையணிந்து திரிகின்றேன்'' எனவும், குறைகள் குற்றத்துக் கேதுவாதலின் அக்குறைகளை நிறைவு செய்து போக்கி, குற்றங்கள் பிறவிக் குணமாம் எனக் கொண்ட விடத்து, வெகுளியும் ஒறுக்கும் உள்ளமும் உளவாகா வாதலின், குறைகளெலாம் தவிர்த்தே குற்ற மெலாம் குணமாகக் கொள்வது நின் குணமே" என உரைக்கின்றார். குணமே என்ற ஏகாரம், குணமன்றோ என்ற பொருள் பட வந்தது.

இதனால், குறைகளைத் தவிர்த்துக் குற்றங்களைக் குணமாகக் கொண்டு, அருள் புரிக என வேண்டிக் கொண்டவாறும். (2)

3031. ஆண்பனைபெண் பனையாக்கி அங்கமதங் கனையாய்
ஆக்கிஅருண் மணத்தில்ஒளி அனைவரையும் ஆக்கும்
மாண்பனைமிக் குவந்தளித்த மாகருணை மலையே
வருத்தமெலாந் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த வாழ்வே
நாண்பனையுந் தந்தையும்என் நற்குருவும் ஆகி
நாயடியேன் உள்ளகத்து நண்ணியநா யகனே
வீண்பனைபோன் மிகநீண்டு விழற்கிறைப்பேன் எனினும்
விருப்பமெலாம் நின்அருளின் விருப்பம்அன்றி இலையே.

உரை: ஆண் பனை மரத்தைப் பெண் பனையாக்கியும், எலும்புக் கூட்டை அழகிய பெண்ணாக்கியும், அருளாற் கூடிய திருமணத்துக்கு வந்தாரனைவரையும், சிவவொளி யுடையராக்கியும் சிறப்பித்த, மாண் புடைய திருஞானசம்பந்தருக்கு, மனமுவந்து அருள் புரிந்த பெரிய கருணைமலையே, எனக்குற்ற வருத்தங்களைப் போக்கி, எனக்குநல்வாழ்வை யளித்த வாழ்முதலாவனே, அன்புடைய தாயும் தந்தையும் சற்குருவு மாய், நாயனைய அடிமையாகிய என்னுடைய மனத்தில் எழுந்தருளும் நாயகனே. பயனின்றிப் பனை போல் உயர வளர்ந்து வீணுக் குழைக் கின்றேனாயினும் என்னுடைய விருப்பம் யாவும், நின் திருவருட் பேற்றின்கண்ணன்றி இல்லை. காண். எ.று.

திருவோத்தூரில் ஆண்பனையைக் குலையீனும் பெண்பனையாக்கியும் திருமயிலாப்பூரில் குடத்திற் பெய்து வைத்த எலும்புக் கூட்டை, அழகிய பெண்ணாக்கியும், திருவருளாற் கூடிய தன் திருமணத்துக்கு வந்தவர் களைச் சிவவொளியிற் கலப்பித்தவருமாகிய திருஞானசம்பந்தரை, "மாண்பன்" என்று சிறப்பிகின்றார். ஆண் பனையைப் பெண் பனை யாக்கிய திறத்தைக் "குரும்பை ஆண்பனை யீன் குலை யோத்தூர் அரும்பு கொன்றை யடிகள்" (ஓத்தூர்) என ஞானசம்பந்தரே கூறுகின்றார். என்பு பெண்ணாகிய செய்தியை, "மதி சூடும் அண்ணலார் அடியார் தமை யமுது செய்வித்தல் கண்ணினாலவர் திருவிழாப் பொலிவு கண்டார் தல் உண்மையா மெனில் உலகர் முன் வருகென வுரைப்பார்" எனவும், "குடம் உடைந்தெழுவாள் போல் போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்றாள்" (ஞானசம்) எனவும், சேக்கிழார் உரைப்பது காண்க. அங்கம் - என்பு. அங்கனை, பெண். அருள் மணம், சிவத்தின் திருவருள் எய்துறும் திருமணம். திருமணத்துக்கு வந்திருந்தோர் அனைவரும் சிவப் பேறு எய்தினமையின், "அனைவரையும் ஒளியாக் கும் மாண்பன்" எனத் திருஞானசம்பந்தரைப் புகழ்கின்றார். மாண்பு - சிவப் பேறு அருளும் நலம். மண்ணில் வாழப் பிறந்தார்க்கு வருத்தங்கள் தடையாதலின், அவர்தம் அறிவின்கண் தங்கிப் போக்கிச் சிறப்புறு தற்கு வேண்டும் உதவி நல்கும் ஒட்பத்தை வியந்து "வருத்த மெலாம் தவிர்த்து வாழ்வளித்த வாழ்வே" என்று போற்றுகின்றார். நாண்பு - நண்பு; மிக்க அன்பு. நண்பு எதுகை பற்றி நாண்பென நீண்டது. அனை, அன்னை, அன்புக்குத் தாயாகவும், அறிவுக்குத் தந்தையாகவும். ஞானந்துக்குக் குரு முதல்வனாகவும் உள்ளத்தில் உணர்வுருவாய் யுதவுதலால், "அனையும் தந்தையும் நற்குருவுமாகிய நாயடியேன் உள்ளகத்து நண்ணிய நாயகனே" என நவில்கின்றார்.

உள்வலி யில்லாமை பற்றிப் பணியை "வீண்பணி" எனவும், பயனில் செயல் புரிவது தோன்ற, "விழற்கிறைப்பேன்" எனவும், வாழ்வார் வாழ்தற்கு நினைவு மொழி மெய்யாகிய கரணங்களை இயக்குவது கொண்டு, "விருப்பமெலாம் நின் அருளின் விருப்பமன்றி யிலையே" எனவும் கூறுகிறார்.

இதனால், தமக்குள்ள விருப்பங்கள் திருவருள் இயக்கத்தால் உளவாவன எனத் தெரிவித்தவாறும். (3)

3032. சித்தமனே கம்புரிந்து திரிந்துழலுஞ் சிறியேன்
செய்வகைஒன் றறியாது திகைக்கின்றேன் அந்தோ
உத்தமனே உன்னையலால் ஒருதுணைமற் றறியேன்
உன்னாணை உன்னாணை உண்மைஇது கண்டாய்
இத்தமனே யச்சலனம் இனிப்பொறுக்க மாட்டேன்
இரங்கிஅருள் செயல்வேண்டும் இதுதருணம் எந்தாய்
சுத்தமனே யத்தவர்க்கும் எனைப்போலு மவர்க்கும்
துயர் தவிப்பான் மணிமன்றில் துலங்குநடத் தரசே.

உரை: தூய நிலையாய அன்பர்களுக்கும், என்னைப் போன்ற எளியவர்க்கும் எய்தும் துன்பங்களைப் போக்கும் பொருட்டு அழகிய அம்பலத்தின்கண் விளங்கும் திருக்கூத்தை யாடும் அருளரசே, மனத்தின்கண் மிகப்பல எண்ணங்களை யுற்று எங்கும் திரிந்து வருந்தும் சிறுமைப் பண்பால் செய்யும் செயல் வகைகளை யறியாமல் மருளுகின்றேன்; தேளிவு நல்கத்தக்க துணை வரும் உத்தமனாகிய உன்னை யன்றி வேறு ஒருவரும் எனக்கு இல்லை; உனது ஆணையாகக் கூறுகிறேன்; இது உண்மை; இத் துக்கங்களையும் இவற்றால் உண்டாகும் கலக்கங்களையும் இனி என்னால் தாங்க வொண்ணாது; என்பால் இரக்க முற்று இப்பொழுதில் அருளொளி நல்குதல் வேண்டும். எ.று.

சுத்தமன் நேயத்தவர் - தூய நிலை பெற்ற அன்பர். சுத்த மின்மையும் பொய் யன்பும் உடைய எளியேன் என்பாராய், "எனைப் போலும் அவர்க்கும்" என வுரைக்கின்றார். மன்றில் நின்றாடும் கருத்து, தூய்மை யால் உயர்ந்தவர்க்கும் அஃது இல்லாமையால் எளிமை யுற்றவர்க்கும் அருள் செய்வதாம் என்பது விளங்க, "துயர் தவிர்ப்பான் மணி மன்றில் துலங்கும் நடத்தரசே" என்று சொல்லுகின்றார். சிந்தனை மிகப் பல செய்து செயலில் திடமின்றி அலையும் சிறுமை பற்றி, "சித்தம் அநேகம் புரிந்து திரிந்து உழலும் சிறியேன்" என்றும், அதனால் தெளிவாகப் பயன் தரத் தக்க செயல்களைச் செய்ய மாட்டாது திகைப்பது புலப்பட, "செய் வகை யொன்றறியாது திகைக்கின்றேன்" என மொழிந்தும், "அந்தோ" என இரங்கியும் வருந்துகின்றார். இந் நிலையில் திட சித்தமும் செய்வினைத் திறமும் தந்து உதவுபவர் துணை யில்லாமை கண்டு, "உத்தமனே உன்னை யல்லால் ஒரு துணை மற்றறியேன்" எனவும், தாம் உரைப்பது பொய்யு மன்று புனைந்துரையுமென்று என்றற்கு "உன்னாணை உன்னாணை உண்மை யிது கண்டாய்" எனவும் இசைக்கின்றார். தமனேயச் சலனம், தமன் நேயம சலனம் என்று பிரிந்து தேமா குணம் காரணமாக வுளவாகும் துக்கங்கள்

விளைவிக்கும் கலக்கம் எனப் பொருள் படுகிறது. தமம், தமன் என வந்தது. நிர்க்குணனும் நின்மலனுமாதலால், சிவபெருமான் பால் முறையிடுகின்ருராதல் பற்றி, "இத் தமனேயச் சலனம் இனிப் பொறுக்க மாட்டேன்" என்றும், திருவருள் ஞான விளக்கம் தந்து என்னை யுய்வித்தல் வேண்டும்" என்பார், "இரங்கி யருள் செயல் வேண்டும்" என்றும், நன்கு காய்ச்சப்பட்ட பொன் போல துன்பத்தால் சுடப்பட்டுப் பக்குவ முற்றிருக்கின்றேன் என்பாராய், "இதுதருணம் எந்தாய்" என்றும் இயம்புகின்ருர்.

இதனல், துன்பத்தால் துயருற்று மனம் தூயனுகிய இந்நிலையில் எனக்கு மெய் யுணர்வு நல்குவது நேரிது எனத் தெரிவித்துக் கொண்ட வாரும். (4)

3033. துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே
துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே
அப்பாடு சடைமுடிஎம் ஆனந்த மலையே
அருட்கடலே குருவேஎன் ஆண்டவனே அரசே
இப்பாடு படஎனக்கு முடியாது துரையே
இரங்கிஅருள் செயல்வேண்டும் இதுதருணங் கண்டாய்
தப்பாடு வேன்எனினும் என்னைவிடத் துணியேல்
தனிமன்றுள் நடம்புரியுந் தாண்மலர்எந் தாயே.

உரை: ஒப்பற்ற அம்பலத்தின் கண் திருநடம் செய்யும் திருவடி யாகிய தாமரையையுடைய எந்தையே, பவளம் போலும் செம்மை நிறம் பொருந்திய திருமேனியுடன் ஒளி செய்கின்ற மணிச்சுடர் போன்ற வனே. துரியத்தில் காணப்படும் வெளியின்கண் விளக்க மிகும் சுத்த சிவவெளியே, கங்கை தங்கிய சடையையுடைய முடி கொண்ட எங்கள் இன்ப மலையே, திருவருளாற் கடல் போன்றவனே, எனக்குக் குருவே, என்னை யாண்டருளும் தலைவனே, அருளரசே, இத் துன்பங்களை நுகர என்னல் முடியாது; எனக்குத் துரையே, என்பால் இரக்க முற்று அருள் செய்க; யான் தவறுகள் செய்பவனுயினும் என்னைக் கைவிட நினைத்தலின்றி அருளாதரவு செய்தற்கு இஃது ஏற்ற காலமாகும் காண். ஒ.று.

துப்பு - பவளம். சிவன் திருமேனி பவள நிற முடையதாகலின், "துப்பாடு திருமேனி" எனச் சிறப்பிக்கின்ருர். "பவள மேனியர் திகழும் நீற்றினர்" (பல்லவனீச்) என்று பெரியோர் குறிப்பது காண்க. மணிச் சுடர் - மாணிக்க மணியின் ஒளிக் கதிர். அதுவும் செம்மை நிறமுடைய தாகலின், பவள மேனிக்கண் எழும் ஒளிச் சுடரை, "மணிச்சுடர்" என வழங்குகிருர்; மணி - அழகுமாம். துரிய வெளி - உந்தியிடத்தே மனம் கருவியாக ஞானக் கண்ணுற் காணுமிடம். வானமும் - ஆண்டு ஒளிரும் சூரியனும் போலத் துரியவெளியும் சிவமும் நோக்கப் படுவது பற்றி, "துரிய வெளிக்குள்ளிருந்த சிவவெளியே" எனக் கூறுகின்ருர். சிவ சூரியன் திகழும் ஞானுகாயம், "சுத்த சிவவெளி" எனப்படுகிறது. சுத்த சிவம் - சுத்த மாயா தத்துவத்தின் மத்தகத்தில் ஞானுகாரமாய் நிலவும் சிவாகாசம். "அத்துவித மென்ற அந்நியச் சொற்கண்டுணர்ந்து

சுத்த சிவத்தைத் தொடரும் நாள் எந்நாளோ'' (எந்நாட்) எனத் தாயுமானுர் காட்டுவது நோக்குக. அப்பு - கங்கை நீர். உலகியலின்பம் போல் நிலையின்றி மறைவது போலாது நிலையிற் சலியாமை புலப்பட, "ஆனந்த மலை'' என்று இயம்புகின்ருர். அருள் ஞான வொளி நல்கி மலம் செய்யும் இருளைப் போக்குதலால், "குருவே'' எனக் கூறுகிருர். உலகுடல் நுகர்வுகளைத் தந்தருளுதலால் ''என் ஆண்டனே'' என்றும், முறை செய்து காத்தலின் "அரசே'' என்றும் பரவுகின்ருர். பாடு - துன்பம். முடியாமை, தாங்க மாட்டாமை. துரை, காப்பாற்றும் கடமை மேற்கொண்ட தலைவன். அரசாட்சியை மக்கள் "துரைத் தனம்'' என வழங்குவது காண்க. இடைக்காலத்தவர், அதிகாரியைத் துரையென்னும், அதிகாரத்தைத் துரைத்தனம் என்றும் வழங்கினர், தப்பாடுதல், தவறு செய்தல். விடல், கைவிடுதல். துணிதல் - கருதுதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்'' என்பது தொல்காப்பியம். நடம் புரியுமிடத்து, திருவடிகளே தாள வறுதி செய்து பொலிவுறுத் தவ தால் "நடம் புரியும் தாள் மலர் எந்தாய்'' எனச் சாற்றுகின்ருர். தாள்மலர் திருவடியாகிய தாமரை மலர். துரியத்தில் அமர்ந்து சிவாகாசத்திற் சிவனைக் கண்டு மகிழும் பக்குவம் தமக்கு எய்தினமை தோன்ற, ''இது தருணம் கண்டாய்'' என்று சொல்லுகின்ருர்.

இதனுல், துக்க நிவர்த்திக்குரிய திருவருள் நல்குக என முறையிட்ட வாறும். (5)

3034. கண்ணேங்கு நுதற்கரும்பே கரும்பினிறை அமுதே
கற்கண்டே சர்க்கரையே கதலிநறுங் கனியே
விண்ணேங்கு வியன்சுடரே வியன்சுடர்க்குட் சுடரே
விடையவனே சடையவனே வேதமுடிப் பொருளே
பெண்ணேங்கும் ஒருபாகம் பிறங்குபெருந் தகையே
பெருமானை ஒருகரங்கொள் பெரியபெரு மானே
எண்ணேங்கு சிறியவனேன் என்னினும்நின் னடியேன்
என்னைவிடத் துணியேல்நின் இன்னருள்தந் தருளே.

உரை: கண் பொருந்திய நெற்றியையுடைய கரும்பும், அக் கரும் பின்கண் நிறைந்து இனிக்கும் சாறு போல்பவனே, அச் சாற்றிற் பெறப்படும் கற்கண்டும் சர்க்கரையும் ஒப்பவனே, வானத்தின் கண் உயர்ந்து விளங்கும் ஞாயிருகிய ஒளிப் பொருளே, அவ்வொளிக்குள் ஒளிரும் சுடரே, எருதை யூர்தியாக வுடையவனே, சடையை யுடைய வனே, வேதங்களின் முடிபொருளாகியவனே, பெண்ணுகிய உமை யமர்ந்த ஒருபாகத்தாற் பெருமையுறும் பெருந்தகையே, பெரிய மானை ஒரு கையிற் ஏந்துகின்ற பெருமை சான்ற பெருமானே, எண்ணத்தால் மிக்க சிறியவனுயினும் நினக்கு அடியவனுதலால் என்னைக் கைவிட நினைக்காமல் நினது திருவருளைத் தந்தருள்க. எ.று.

கரும்புக்கும் கண் (கணு) ணுண்டாதலால் அதனிற் சிறப்பித்தற்குக் "கண்ணேங்கு நுதற் கரும்பே'' என்று கூறுகின்ருர். இனிமை பற்றிக் கரும்பின் சாற்றை "அமுது'' எனவும். அச்சாற்றைத் தூய்மையுறக் காய்ச்சி யாவன செய்வதால் கற்கண்டும் சர்க்கரையும் பெறப்படுவது

பற்றி, "கற்கண்டே சர்க்கரையே" எனவும் இயம்புகின்றார். விண் - வானம். வானத் துச்சியில் நின்று திகழ்வதனால், ஞாயிற்றை "விண்ணோங்குவியன் சுடரே' என்றும், அச்சுடர்க்குச் சுடரொளி தரும் சுடர்ப் பொருளாதலால் சிவத்தை "வியன் சுடர்க்குட் சுடரே" என்றும் குறிக்கின்றார். விண்ணில் விளங்கும் ஞாயிறு நாண்மீன் முதலியன வெம்மை மிக்க ஒளிப் பொருள் என விஞ்ஞானப் புலமை விளம்புகின்றதெனினும், அதன் ஒளி வகைக்கு ஒளி நல்கும் மூல வொளியாகிய சிவத்தைத் தனக்குரிய நெறியில் இன்னும் கண்டிலாமை வருந்தத் தக்கது. "ஓதியாரும் அறிவாரில்லை ஓதியுலகெலாம் சோதியாய் நிறைந் தான் சுடர்ச் சோதியுட் சோதியான்" (ஐயாறு) என ஞானசம்பந்தர் உரைக்கின்றார். ஒளியை ஒலியாகவும், ஒலியை ஒளியாகவும் மாற்ற வல்ல இந்நாளைய விஞ்ஞானம், ஒளிக் கற்றையைத் தனித் தனிப் பிரித்து ஒவ்வொன்றையும் வெவ்வேறாக வகுக்கின்றதாயினும், மூல வொளியைக் காணாமை ஈண்டு நினைக்கத் தக்கதாகிறது. விடை - எருது. சிவனுக்கு ஊர்தியும் கொடியுமாதலால் "விடையவன்" எனப் பொதுவாகக் கூறுகின்றார். வேத நூல்களில் ஆழ்ந்து அகன்று நுண்ணிதாய் முடிபொருளாய் மொழியப்படுவது கொண்டு, "வேத முடிப் பொருள்" என்றும், பழம் பொருளதாகிய வேதத்தினும் நுண்பொருளதாகிய உபநிடதம் சிறந்து நிற்பது பற்றி, அது வேதமுடி—வேதாந்தம் எனவுரைக்கப்படும். அவ்வேதாந்தம் சிவபரம்பொருளைப் பிரமம் என்றலின், "வேத முடிப்பொருளே" எனப் புகல்கின்றார். "ஏகமேவாத்விதீயம் பிரமம்" என்று சாந்தோகியம் உரைப்பது காண்க. உமையொரு கூறனாதலால், "பெண்ணோங்கும் ஒருபாகம் பிறங்கு பெருந்தகையே" எனவும், ஆணுக்குப் போலப் பெண்ணுக்கும் ஒத்தவுரிமையுற்ற வாழ் வளித்தலால் "பெருந்தகை" எனவும் இயம்புகின்றார். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருணல்கிச் சேணின்றவர்க்கின்னம் சிந்தை செயவல்லான்" (நாகைக்கா) எனச் சான்றோர் கூறுவர். முனிவர்கள் தம்முடைய வேள்வியில் எழுப்பி விடுத்த பெருமையுடைய தென்றற்குப் "பெருமான்" என்றும், அப் பெருமையெல்லாம் கெட அடக்கியொடுக்கி ஒருகையில் ஏந்தி வைதிகத் தீ வேள்வியின் பயனின்மையை வெளிப் படுத்தினமை இனிது விளங்க, "பெருமானை ஒருகரங் கொள் பெரிய பெருமான்" என இசைக்கின்றார். ஒருவர்க்குண்டாகும் பெருமை சிறுமைகட்கு அவருடைய மன நினைவுகள் காரணமாதலால், "எண்ணோங்கு சிறியவனேன்" என்றும், இறைவன் திருவடியை நினைவிற் கொண்டு அடியவனாய பின், பெருமை சிறுமை முதலிய வேறுபாடு காண்டல் வேண்டாவாதலால், "நின்னடியேன் என்னைவிடத் துணியேல் நின்னின்னருள் தந்தருளே" என்றும் இயம்புகின்றார்.

இதனால், மனத்தின் பெருமை சிறுமை பாராமல் அடியவனெனக் கொண்டு அருள் புரிக என விண்ணப்பித்தவாறும். (6)

3035. திருநெறிசேர் மெய்அடியார் திறன்ஒன்றும் அறியேன்
செறிவறியேன் அறிவறியேன் செய்வகையை அறியேன்
கருநெறிசேர்ந் துழல்கின்ற கடையரினுங் கடையேன்
கற்கின்றேன் சாகாத கல்வியிலை காணேன்

பெருநெறிசேர் மெய்ஞ்ஞான சித்திநிலை பெறுவான்
பிதற்றுகின்றேன் அதற்குரிய பெற்றியிலேன் அந்தோ
வருநெறியில் என்னைவலிந் தாட்கொண்ட மணியே
மன்றுடைய பெருவாழ்வே வழங்குகநின் அருளே.

உரை : அம்பலத்தை யுரிமையாகவுடைய பெருமானே, திரு நெறியை மேற்கொண்டொழுகும் மெய்யடியார்களின் தகுதி யொன்றை யும் அறிந்து மேற்கொண்டில்லேன்; செறிவும் அறிவும் என்பால் இல்லை; அதனாற் செய்தற்குரிய செயல் வகையும் அறிகிலேன்; பிறவிக் கேதுவாகிய நெறியிற் கிடந்து வருந்துகின்ற, கீழ்மக்களிற் கீழான வனாயினேன்; கற்பன கற்கின்றேனாயினும் சாகாமைக் கேதுவாகிய கல்வியின் இயல்பைக் காண்கின்றேனில்லை; பெருமை சான்ற நெறியின் பயனாகிய மெய்ஞ்ஞான சித்தி பெற்று, அதன்கண் நிலைபேறு வேண்டிப் பல பல பிதற்றுகின்றேனாயினும், அப் பேற்றுக்குரிய தன்மை என்னிடம் இல்லை; அற்றாக, நினது திருவருள் எய்தும் நெறியில் என்னை வலிய ஆட்கொண்டனையாதலால் நினது அருள் ஞானத்தை எனக்கு வழங்குக. எ.று.

மன்று, ஆடரங்கு; அதற்குரியவன் கூத்தப் பெருமானாதல் பற்றி, "மன்னுடைய பெருவாழ்வே'' என்று பேசுகின்றார். பெருவாழ் வளிக்கும் முதல்வனைப் பெருவாழ்வு என்று கூறுகின்றார். திருநெறி - சிவனை முழு முதற் பொருளாகக் கொண்டு பாடியும் பணிந்தும் வழிபடும் செம்மை நெறி. மெய்யன்பர், திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள். அவர்கள் திறமாவது மெய்ம்மையான அன்புற்றொழுகுதல். அத்திறம் தம்பால் இல்லை யென்பாராய், ''திறமொன்றும் அறியேன்'' என்று இயம்புகிறார். சிவனை ''வாயாரப் பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமது புண்ணியம்'' (வலஞ்சுழி) என ஞானசம்பந்தரும், சிவத்தொண்டர்க்குத் தொண்டு செய்தலும் புண்ணியமாம் என்பாராய், ''எங்கள் புண்ணியன் தன்னடித் தொண்டராம் புண்ணியம்'' (ஆரூர்) என்று திருநாவுக் கரசரும் விளங்க விளம்புவது காண்க. செறிவு - அடக்கம்; அறிவு, திருவருள் ஞானம். இரண்டும் காரிய காரணமாய் இயைவனவாதலின், 'செறிவறியேன் அறிவறியேன் செயல்வகையை அறியேன்'' எனவுரைக் கின்றார். ''*சீலமின்றி* நோன்பின்றி செறிவேயின்றி அறிவின்றித் தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேன்'' (ஆனந்த) எனத் திருவாதவூரர் கூறுவது காண்க. கருசேர் நெறி, பிறந்திறந் துழலும் பிறவி நெறி. *சீலமும்* செறிவும் அறிவுமின்றிப் பல்வகைப் பிறப்புக் களில் பிறந்திறந்து, வருந்துவோரைக் கடையரென்றும், அவர்களிற் கீழ்ப்பட்டமை புலப்படக் ''கருநெறி சேர்ந்து உழல்கின்ற கடையரினும் கடையானேன்'' என்றும் கலங்கிய மனத்துடன் உரைக்கின்றார். கற்பவை யாவும் காட்சி, கருத்து, இவ்விரண்டானும் முன்னோர் கண் டுரைத்த உரை என்ற மூன்றாகும். இம் மூன்றும் பிறந்தோர் இறப்பதை ஒழிவின்றியுரைக்கின்றன; காட்டுகின்றன; நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும், பெருமையே உலகு கொண்டு பிறங்குகின்றது; என்றும் எங்கும் சாகாமை இல்லை. சாதலென்பது நின்றபினிவுடம்ன்றும் உயிர் நீங்குவது. இரண்டும் வேறு வேறு இனமாதலின் என்றேனும் ஒன்றினொன்று பிரிந்தே தீரும்; சாகாமையில்லை; அறிவும் ஆராய்ச்சியும்

முயன்ருல் சாதலை ஓரளவு தள்ளி வைக்கலாம். காலத்தால் மெலிவுறு வது உடலியல்பு; அறிவு அனுபவங்களால் வலியுறுவது உயிரியல்பு. உயிர் தனது வலிமையால் உடம்பின் மெலிவை மருந்துண்டு போக்கிச் சில காலம் சாவா திருக்கச் செய்யலாம். மருந்துக்கு ஆக்கமாகும் பொருள்கள் உலகில் நெடிதிருக்கும் பொருட் கூறுக ளாவதே அதற்குக் காரணம்; இந் நாளிற் புதிய புதிய மருந்தியல் வகையால் மக்களின் உயிர் வாழ்வு நீடித்திருப்பது இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. இம் மருந்தியலின் வேருக மந்திரங்களும் யோக நெறிகளும் உள வென முன்னோர் கூறுவர்; இவற்றைக் கற்றுணர்ந்து அவ்வுணர்வுக்குத் தக நிற்பது சாகாக் கல்வியாகும்; இதனைச் சாகாக் கலை எனவும், காய சித்தி எனவும் வழங்குவர். பல்லாயிர மாண்டுகட்கு முன்னிருந்த திருமூலர் முதலியோர் இந்தச் சாகாக்கலை வல்லுநர் என நூல்கள் கூறு கின்றன; சாகாமை பொருளாகப் பல பெரியோர்கள் எண்ணி முயன்றிருப்பதை வரலாறுகள் உரைக்கின்றன. சாவைத் தடுக்க விண்ணகத் தேவர்களும் முயன்றுள்ளதைப் புராணங்களும் புகல்கின்றன. 1936ஆம் ஆண்டு முடிவுற்ற மித்ரா சக்கரவர்த்தி—போவால் வழக்கு வலிய சான்று பகருகிறது. அது வருமாறு :

டக்கா நாட்டுப் போவால் சமீன்ருரான இராசராசேந்திர நாராயண ராவ் பகதூர்க்கு இரண்டாம் மகனுன குமார் இராசேந்திர நாராயணராவ் 1909ல் டார்ஜிலிங்கில் இறந்து போனுர்; பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் 1921ல் ஒரு சாது வடிவில் அவர் தோன்றித் தாம் டார்ஜிலிங்கில் பகைவர்களால் நஞ்சூட்டப்பட்டு உணர்விழந்ததாகவும், தம்மை இறந்து விட்டதாகக் கருதிச் சுடு காட்டுக்குக் கொண்டு சென்று ஈமப் படுக்கையிற் கிடத்தி, இடி மின்னலொடு கூடிய புயல் மழை வரக் கண்டு அப்படியே கைவிடப் பட்டதாகவும், அங்கே நாகரினத்துத் தவ முனிவர் கள் தம்மைக் கண்டு தாம் உறையுமிடத்துக்குக் கொண்டு போய்ச் சாவா மருந்தளித்து உய்வித்துத் தமக்கு மாணவராய்ப் பன்னீராண்டு வைத் திருந்து சமய வுணர்வு நல்கி 1921ல் தம்முடைய செல்வப் பெருமனைக்குச் செல்ல விடுத்ததாகவும் உரைக்கலாயினர். பின்பு, அவர் தம்முடைய அங்க அடையாளங்களையும், பிற செயல் வகைகளையும் நிகழ்ந்தாங்கு மொழிந்து தமக்குரிய சொத்தான மூன்றி லொரு பங்கைத் தருமாறு நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கு 1930ல் பதிவாகி டக்காவிலுள்ள மாவட்டத் தலைமை நீதி மன்றத்தில் ஆராயப்பட்டது; அவருடைய மனைவியான பீபாபதி தேவியார் எதிரியாக நின்று வழக் காடும் சாது, பஞ்சாப் நாட்டைச் சேர்ந்தசுந்தர்தாச நாகர் என்றும், இரா மேந்திரரல்ல ரென்றும், டார்ஜிலிங்கில் இறந்துவிட்ட அவரைச்சுடுகாட்டில் வைத்துக் கொளுத்தி விட்டதாகவும் எடுத்தோதி வாதம் புரிந்தார்; போவால் சந்நியாசி வழக்கு என்ற பெயரால் இரண்டு ஆண்டு நடந்தது; வாதியாகிய இராமேந்திரர் பக்கம் 1069 பேர்களும் எதிரியான பீபாபதி தேவி பக்கம் 470 பேர்களும் ஆராயப்பட்டனர்; நிழற் படங்களும் எழுத்துச் சான்றுகளுமாக 2000க்கு மேற்பட்ட பதிவேடுகள் சான்று களாகக் காட்டப்பட்டன; வழக்கு முடிவு இராமேந்திர நாராயண ராவுக்குச் சாதகமாய்த் தீர்ப்பாயிற்று. பின்பு இவ்வழக்கு கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும் பிரிவி கவுன்சி லென்ற மேனீதிமன்றின் மன்றின் கண்ணும் மறு வாராய்ச்சி செய்யப் பெற்றுச் சாது இராமேந்திர

நாராயணராய்க்கே வெற்றி தந்தது. (மித்ரா சக்கரவர்த்தி—போாவால் வழக்கு-1936) வழக்கு முடிந்த அந்த ஆண்டிலேயே சாது இராமேந்திர ரும் மண்ணக வாழ்வைத் துறந்து விண்ணக வாழ் வெய்தினர்! செத்தாரை வாழ்விக்கும் இந்தச் சாகாக் கலை நாக நாட்டுத் துறவோரிடம் இன்னமும் உளது என்று அறிந்தோர் பலர் கூறுகின்றனர். இத்தகைய சாகாக் கலையை இதுகாறும் கற்ற நூல்களிலோ கற்கின்ற வற்றிலோ என்னுற் காண முடியவில்லை என்பாராய்க் "கற்கின்றேன் சாகாத கல்வி நிலை காணேன்" என வருந்துகிருர். சாதலால் உண்டாகும் துன்ப நீக்கத்தினும் இன்பக் கேடு பெரிதாகலாலும், மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் செத்து மறைவதால் அரசியற் சமுதாயப் பொருளா தாரங்கள் கெடச் செய்யும் துரோகங்கள் பெருகுவதாலும் சாகாக் கல்வி நிலை வடலூர் வள்ளற் பெருமானல் நாடப்படுகிறது; இது கருதுமிடத்துச் "சாதலின் இன்னுத தில்லை" (குறள்) எனத் திருவள்ளுவர் கூறியது எத்துணை மெய்ம்மை யுரையாகிறது காண்மின். செயல் வகைகளின் புன்மையைக் காண வுதவும் விஞ்ஞானத்தினும், உண்மை கண்டு உய்யு நெறி காட்டும் மெய்ஞ்ஞானம் மேன்மை யுடைய தென்றற்குப் "பெரு நெறிசேர் மெய்ஞ்ஞான சித்தநிலை பெறுவன் பிதற்றுகிறேன்" என வுரைக்கின்ருர். மெய்ந்நூலறிவினும், செயல் வகையால் அதன் பொருண்மை கைவரப் பெற்று அதன் கண் நிலையாக நிற்றல் வேண்டும்; அதற்குரிய ஞான வாய்மையும் மனத்திண்மையும் எய்திற்றிலேன் என்பாராய், "அதற்குரிய பெற்றியிலேன்" என வருந்துகிருர். பெற்றி - தன்மை. கரு நெறியில் வந்த எனக்குத் திருநெறியும் பெருநெறியுமாகப் பல வுளவாதவும், இனி வருவது திருவரு ணெறியாதலின் அதன்கண் நிற்பாயாக என்பார் போல, "வருநெறியில் என்னை வலித்து ஆட் கொண்ட மணியே" எனவும், அதற்கு வேண்டுவது திருவருள் ஞான மென்பாராய், "வழங்குக நின் அருளே" எனவும் இயம்புகின்ருர். மணி - மாணிக்க மணி.

இதனுல், திருநெறியும் பெருநெறியும் மேற்கொள்ளும் பெற்றிமை யில்லையாதலால் எனக்குத் திருவருள் நெறியைத் தந்தருள்க என வேண்டியவாறும். (7)

3036. குன்ருத குணக்குன்றே கோவாத மணியே
குருவேஎன் குடிமுழுதாட் கொண்டசிவக் கொழுந்தே
என்ருதை யாகிஎனக் கன்னையுமாய் நின்றே
எழுமையும்என் றனைஆண்ட என்உயிரின் துணையே
பொன்ருத பொருளேமெய்ப் புண்ணியத்தின் பயனே
பொய்யடியேன் பிழைகளெலாம் பொறுத்தபெருந் தகையே
அன்ருல நிழல்அமர்ந்த அருள்இறையே எளியேன்
ஆசையெலாம் நின்னடிமேல் அன்றிஒன்றும் இலையே.

உரை: குறைதல் இல்லாத நற்குணமாகிய மலையாகியவனே, கோக்கப்படாத மணியே, என்னுடைய குருவே, எனது குடி முழுது மாட் கொண்ட சிவ குமரனே, எனக்குத் தந்தையும் தாயுமாய் நின்று

எழுமையும் என்னை ஆட்கொள்ளும் என்னுயிர்க்குத் துணையானவனே அறிவுறாத நித்தப் பொருளே, மெய்ம்மை நிறைந்த புண்ணியச் செயல் விளைவிக்கும் பயனாகியவனே, பொய்ம்மை யுற்ற அடியவனாகிய என்னுடைய குற்றங்களைப் பொறுத்தருளிய பெருந்தகையே, அந்நாளில் முனிவர் பொருட்டுக் கல்லாலின் நிழலின்கண் வீற்றிருந்து ஞான மருளிய பெருமானே, எளியவனாகிய என்னுடைய ஆசை யனைத்தும் நினது திருவடிப் பேறன்றி வேறு யாதும் இல்லை. எ.று.

சலித்தலின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி நற்குண மலையாகிய சிவபெருமானைக் குணக்குன்று என்கின்றாராகலின், "குன்றாத குணக்குன்றே" என வுரைக்கின்றார். குன்றுதல் - குறை படல், கோத்தல் - துளையிட்டு நூலிடைப் பெய்து சேர்த்தல். துளை படல் குற்றமாதல் கண்டு "கோவாத மணியே" என்று கூறுகிறார். "கோவா முத்தும் சுரும் பேருக் கொழுமென் முகையும் அனையார்" (ஏயர்.227) எனச் சேக்கிழார் பெருமான் வழங்குவது காண்க. மணி, மாணிக்க மணி. மலவிருளை விலக்கிப் புறக்கண்கள் காணாதவற்றைக் காணக் கண்டு காட்டலால், "குருவே" என்று குறிக்கின்றார். தாம் பிறந்த குடியிலுள்ளா ரனைவரும் சிவனடியே சிந்திக்கும் சீர்த்த அடியவராதல் கண்டு மகிழ்தல் விளங்க, வடலூர் வள்ளல் "என் குடிமுழு தாட் கொண்ட சிவக்கொழுந்தே" எனச் சிறப்பிக்கின்றார். சிவ நெறியின் முடி பொருளாதல் பற்றி, சிவனைச் சிவக் கொழுந்து என்பர். "திருச்சத்தி முற்றத் துறையும் சிவக் கொழுந்தே" (சத்தி) எனப் பெரியோர் உரைப்ப தறிக. தாதை,தந்தை - உயிரையும் உடம்பையும் அருளாற் பேணுதலால் "என் தாதையாய் எனக்கு அன்னையுமாய் நின்று" எனவும், பிறவி தோறும் இத் திருவருளைச் செய்தொழுகுதலின், "எழுமையும் என்றனை யாண்ட என் உயிரின் துணையே" எனவும் இயம்புகின்றார். "என்னுயிரின் துணையே" என்பதை என் உயிர், இன் துணை எனப் பிரித்துக் கோடலும் பொருந்துவதாம். ஒருகால் தோன்றி மறையும் பொருளன்மையால், "பொன்றாத பொருளே" என்கின்றார். தற்பயன் கருதாமல் மன்னுயிர் நலமும் திருவருள் விழைவும் கொண்டு செய்யும் புண்ணியம், "மெய்ப் புண்ணியம்" எனச் சிறப்பிக்கப்படுகிறது. இது சிவ புண்ணியம் எனவும் வழங்கும். இதன் விளைவு சிவப் பேறுதலால், "புண்ணியத்தின் பயனே" எனப் புகல்கின்றார். நினைவு சொற் செயல்களில் பொய்ம்மை கலத்தலுண்மையின், "பொய் யடியேன்" என்றும், அடியாராயினார் பிழைகளைப் பொறுத்து அருள் புரிவது பெரிய ஆண்டகைமை எனப் பெரியோர் கருதுதலால், "பொய்யடியேன் பிழைகளெலாம் பொறுத்த பெருந்தகை" என்றும் இசைக்கின்றார். மெய்ப்பொருள் சிந்தனையில் ஐயுறவு தோன்றி அலைத்த போது, சனகர் முதலிய நால்வர் பொருட்டுக் கயிலைப் பகுதியில் கல்லாலநிழலில் தென்முகநோக்கியதேசிகனாய்ப்போந்தருளிய வரலாற்றை நினைந்து போற்றுதலால், "அன்றால நிழலமர்ந்த அருள் இறையே" என ஏத்துகின்றார். இவ்வாறு நெடிது புகழ்ந்தோதியவண்ணம் இருத்தற் குற்ற காரணம் இது வென்பார், "எளியேன் ஆசை யெல்லாம் நின் அடி மேல் அன்றி ஒன்றும் இலை" என வுரைக்கின்றார். இஃது" ஆசை யெலாம் அடியார் அடியோம்" என்ற திருவாசகத்தை நினைப்பிப்பது காண்க. (8)

இதனால், உள்ளத்து ஆசை மிகுதி அறிவித்தவாறும்.

3037. பூணாத பூண்களெலாம் பூண்டபரம் பொருளே
பொய்யடியேன் பிழைமுழுதும் பொறுத்தருளி என்றும்
காணாத காட்சியெலாங் காட்டிஎனக் குள்ளே
கருணைநடம் புரிகின்ற கருணையைஎன் புகல்வேன்
மாணாத குணக்கொடியேன் இதைநினைக்குந் தோறும்
மனமுருகி இருகண்ணீர் வடிக்கின்றேன் கண்டாய்
ஏணாதன் என்னினும்யான் அம்மையின்நின் அடியேன்
என அறிந்தேன் அறிந்தபின்னர் இதயமலர்ந் தேனே.

உரை: அணியாதற் கொண்ணாத பாம்புகளைப் பூணாரமாக அணிந்துள்ள பரம் பொருளே, பொய் நிறைந்த அடியவனாகிய எனது பிழையைப் பொறுத்து, அருள் செய்து எப்போதும் கண்டறியாத காட்சிகள் பலவற்றையும் எனக்குக் காட்டி, எனக்குள்ளே நின்று திருக்கூத்தாடும் நின்னுடைய திருவருட் பெருமையை என்னென்பேன்' சிறப்புறாத தீய குணங்களையுடைய கொடியவனாகிய யான் இதனை நினைக்கும் போதெல்லாம் மனம் உருகி இரு கண்களிலும் நீரைச் சொரிகின்றேன; காண்; மிக்க அறிவில்லாதவனாயினும் யான் முற்பிறவிகளில் நினக்கு அடியனாயினே னெனத் தெரிந்து கொண்டேனாக, என் மனம் மகிழ்ச்சி யுற்றேன், காண். எ.று.

பூவும் பொன்னும் முத்தும் மணியுமாகியவற்றாலாகும் மாலைகளை நோக்க, நீண்டிருப்பது பற்றிப் பாம்பையும் பிறவற்றையும் மாலையாக எவரும் விரும்பி யணியாராகலின், "பூணாத பூண்கள் என்று கூறுகிறார். பிறவாவன என்பு மாலையும் தலை மாலையும் எருக்கு மாலையுமாகிய விருப்பம் தராத பிறவற்றையுமாம் எனக் கொள்க. சிவ மூர்த்தத்தில் பாம்பு முதலாயவற்றைப் பூணாகப் பூண்டா ரெனினும் உண்மை நிலையிற் பரம் பொருளாதல் தோன்றப் "பரம் பொருளே" என்று பகர்கின்றார். பகர்கின்ற தன்னை நோக்கும் வடலூர் வள்ளல், தன்பால் நிறைந்திருக்கும் பொய்ம்மைகளை நோக்குதலால், "பொய் யடியேன்" எனவும், தாம் செய்வன பலவும் குற்றங்களாதலை யுணர்கின்றமையால், "பிழை யனைத்தும் பொறுத்து" எனவும், தன்னுடைய குணம் செயல்களைக் காணும் நல்லறிவு விளங்கச் செய்தமை புலப்பட, "அருளி" எனவும் எடுத்தோதுகின்றார். "நானேது மறியாமை என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்" (ஆனைக்கா) எனச் சான்றோர் கூறுவ தறிக. அருளளிவு, இது காறும் காணாது செய்த பிழைகளைக் காணக் காட்டினமையின், "என்றும் காணாத காட்சி யெலாம் காட்டி" எனக் கூறுகிறார். "காணாதன வெல்லாம் காட்டினான்" (பூந்துருத்தி) என நாவரசரும், "அறிவிலாத எனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளி மேல் நெறி யெலாம் புலமாக்கிய எந்தை" (சதகம்) என மணிவாசகரும் தெரிவிப்பது காண்க. உடற் குள்ளிருக்கும் கருவி கரணங்கள் பலவும் முறை பிறழாமல் நடத்தற் கேதுவாவது இறைவன் திருக்கூத்தாகலின், "எனக்குள்ளே கருணை நடம் புரிகின்ற கருணையே என்னென்பேன்" என்று கூறுகிறார். உடம்பொடு கூடி வாழும் உயிர்கள் இனிது வாழ்தல் வேண்டிச் செய்யப்படுவது பற்றி, "கருணை நடம் புரிகின்ற கருணை" என வுரைக்கின்றார். கருணை, திருவருள். அருட்

கூத்தின் அருமை புலனுவதால், "என் புகல்வேன்'' என வியக்கின்ருர். மாண்பு பயவாத நினைவுகளைக் கொள்ளுதலால் ''மாணுத மனம்'' என்றும், அவற்ருல் கொடுமையே விளைவது பற்றி ''மனக் கொடியேன்'' என்றும், இதனை நினைப்பவர் நன்மனம் நொந்து நீராய் உருகிக் கண்ணீராய் ஒழுகும் திறம் கூறலுற்று, "மனமுருகி இருகண்ணீர் வடிக்கின்றேன்'' என்றும் இயம்புகின்ருர். ஏண் - வலி மிகுதி. ஆதன் - அறிவில்லாதவன். இம்மையில் இறைவன் திருவடியை நினைந்தொழுகும் பேறு, முன்னைப் பிறவியில் உளதாய காரணம் பற்றிய தென வுணர்தலின், "ஏணுத னெனினும் யான் அம்மையின் நின் அடியேன் என அறிந்தேன்'' எனவும், அது மேலும் தொடர்ந்து இன்பம் செய்யுமென்ற பெருமகிழ்ச்சி யால், மனம் மலர்கின்றேன் என்பாரால், ''அறிந்த பின்னர் இதய மலர்ந் தேன்'' எனவும் இயம்புகின்ருர்.

இதனுல், அம்மையிற் கொண்ட பத்திமை இம்மை மறுமைகளில் தொடரும், என்பதறிந்து மகிழ்கின்றமை தெரிவித்தவாரும். (9)

3038. அந்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியுங் காட்டி
இதுகாட்டி அதுகாட்டி என்நிலையுங் காட்டிச்
சந்தோட சித்தர்கள்தந் தனிச்சூதுங் காட்டிச்
சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்தஇடங் காட்டி
மகிழ்வித்தாய் நின் அருளின் வண்மைஎவர்க் குளதே.

உரை: அறிதற்குரிய திருவருளை யறியாத சிறுமை யுடையவனு கிய என்னை அத்திருவருள் ஞானத்தை அறியச் செய்து, பிறைத் திங்கள் இருந்தொளிரும் சடையாகிய மணிமுடியையும், திருவடியையும் காட்டி, இப்பிறப்பின் இயல்பையும், வீட்டின் இயல்பையும், அதனைப் பெறற் கமைந்த என்னுடைய நிலையையும் அறிவித்து, இதற்கிடையே இன்ப முறும் சித்தர்களின் சூதான செயல்களையும், வீட்டின்கண் பெறலாகும் சாகா வாழ்வையும், இயற்கையான நிட்டை நிலையையும் உணர்த்திப் பொறி புலன்களோடு கூடியும் பிரிந்தும் இயங்கும் மனமாகிய பொருள், மறைந்தொழியும் யோக நிலையையும் விளக்கி என்னை மகிழ்வித்தாயாக லின், நின் திருவருள் ஞான வளமை நின்னின் வேறே எவர்க்குண்டு; இது மிகவும் அதிசயம்; அந்தோ, இதனை யான் எவ்வாறு கூறுவேன். எ.று

உலகிய லறிவுக்கும் உயிரறிவிற்கும் வேருய் மேலாயுள்ள திருவரு ளறிவு ஈண்டு அறிவு எனப்படுகிறது. அதனை யறியாமையால் உளதாவது சிறுமை; அறிய வருவது பெருமை யாகலின், ''அறிவறியாச் சிறியேன்'' எனக் கூறுகிருர். அறிவறியாமையை எண்ணி, "உன்னை வந்திப்பதோர் நெறி யறியேன், நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறி யேன்'' (அடைக) என மணிவாசகர் வருந்துவது காண்க. அறிவறிய விரும்புவார்க்கு இறைவன் அறிவருளும் திறத்தை "அறிநீர்மையில் எய்துமவர்க்கு அறியும் அறிவருளும் குறிநீர்மையர்'' (இடும்பா.) என

ஞானசம்பந்தர் நவில்கின்றார். இதனையே மணிவாசகர், "அறிவிலாத எனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளி மேல் நெறி யெலாம் புலமாக்கிய எந்தை" (சதகம்) எனக் கூறுகின்றார். இங்ஙனம் அறிவருளிய முதல்வன் சகள வுருவில் சீகண்ட பரமனாய்ச் சடைமுடி விளங்கத் தோன்றிக் காட்சி தந்த செய்தியை, "இந்தோங்கு சடைமணி நின் அடி முடியும் காட்டி" யருளினாய் என வுரைக்கின்றார், இது என்றது உலகியல் வாழ்வு; அது என்பது வீட்டின்ப வாழ்வு. உலகிற் றோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து வீடு பெறற் கமைந்து ஆன்ம வுரிமை "மண்ணகத் தே வந்து வாழச் செய்தானே" (பள்ளி) என மணிவாசகர் தெளிய வுரைப்பது காண்க. மகிமா, லகிமா முதலாகிய எண்வகைச் சித்தி களைப் பெற்றுச் சித்தி யின்ப மொன்றே பெற்றுலவும் சித்தர்களைச் "சந்தோட சித்தர்கள்" எனவும், அவர் தாமும் உலகில் நிலை நில்லாது மறைந்தமையால், அவருடைய சித்திகளும் சூதா யொழிந்தமை பற்றி, "சித்தர்கள் தம் தனிச் சூதும் காட்டி" எனவும் இயம்புகிறார். நிலை யுளது போலத் தோன்றி நில்லாது மறைந்தமையால் சித்தர்களின் சித்திகளைத் "தனிச் சூது" என்று குறிக்கின்றார். சாகாத நிலை - என்றும் உளதாகும் பெருநிலை. "பண்டும் இன்றும் என்றுமுள் ளானுக்குப் பல்லாண்டு கூறுதுமே" (திருப்பல்) எனச் சேந்தனார் "சாகாத நிலை"யை விளக்குவது நோக்குக; பிறவாப் பெரு வாழ்வு எனவுமாம். கேட்பன கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து உண்மை யுணர்வில் ஒன்றுதல் இயற்கைச் சகச நிட்டையாம்; "இறையருள் ஞானம் நண்ணித் தேசுறுமதனால் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து, நேசமோ டுயர்பரத்து நிற்பது ஞான நிட்டை" (சிவப்.84) என உமாபதி சிவம் கூறும் நிலை மனம் கரைந்து கெடும் ஆகந்துக நிலை; ஆகந்துகம், செயற்கை.

இதனால், உண்மை ஞானம் எய்தப் பெற்றமைக்கு, இறையருளை வியந் துரைத்தவாறும். (10)

3039. அன்பர்உளக் கோயிலிலே அமர்ந்தருளும் பதியே
அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்த நிதியே
வன்பர்உளத் தேமறைந்து வழங்கும்ஒளி மணியே
மறைமுடிஆ கமமுடியின் வயங்குநிறை மதியே
என்பருவங் குறியாமல் என்னைவலிந் தாட்கொண்
டின்பநிலை தனைஅளித்த என்னறிவுக் கறிவே
முன்பருவம் பின்பருவங் கண்டருளிச் செய்யும்
முறைமைநின தருள்நெறிக்கு மொழிதல்அறிந் திலனே.

உரை : மெய்யன்பர்களின் மனமாகிய கோயிலிலே அன்புடன் எழுந்தருளும் தலைவனே, அம்பலத்திலே ஆடலைப் புரிகின்ற இன்பச் செல்வமே, வன்மனம் உடையவர்களின் நெஞ்சில் மறைந்து நின்றொளிரும் மணி போல்பவனே, வேதாந்தம் ஆகமாந்தம் ஆகிய வற்றின் உச்சியில் திகழும் முழுத் திங்களாவனே, என் பக்குவத்தை நோக்காமல் வலிய வந்து ஆட்கொண்டு, இன்ப ஞான நிலை நல்கிய அறிவுக் கறிவே, ஆன்மாக்களின் முன்னைய, நிலை, பின்னருள்ள பக்குவ நிலைகளை அறிந்து அருள் செய்யும் முறைமை உன்னுடைய திருவருள்

ஞான நெறிக்கு நோக்கப்படுவதில்லை யெனத் தெரிந்து கொண்டேன்- எ.று.

அன்புடையார் யாவராயினும் அவர் மனத்தின்கண் எழுந்தருளி இன்ப வொளி செய்து இருள் நீக்கி யாளுவது பற்றிச் சிவபெருமானை, "அன்பர் உளக்கோயிலிலே அமர்ந்தருளும் பதி" எனவும், இறைவ னென்றற் கொப்ப, அன்பின்மையால் வலிதாகிய கன்மனத்தார் நெஞ்சினும் நீக்கமின்றி ஒளித்திருந்து அது மென்மையுறும் போது மென்மை துகுவித்து இன்புறுவிக்கும் மணி போல்வது விளங்க, "வன்மனத்தே மறைந்து வழங்கும் ஒளி மணியே" எனவும் இயம்பு கின்றார். ஒளி மிக்க மணி இருளிற் புதையுண்டு கிடக்கினும் இருள் திணிப்புச் சிறிது விலகினும் ஒளிர்வது போல இறைவன் இறைமை யிலகுவது புலப்பட, "மறைந்து வழங்கும் ஒளி மணியே" எனக் குறிக் கின்றார். உயிர்கட்கு இன்பம் விளைவித்தல் வேண்டியே இறைவன் கூத்தனாகு தல் பற்றி, "அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்த நிதியே" என மொழிகின்றார். இதனால் மணிவாசகர் "அம்பலஞ்சேர் ஆனந்த வெள்ளத் தறை கடலோன்" (கோவை.307) எனப் புகழ்கின்றார்; "ஆனந்த அருள்கள் செய்தார் அவளிவ ணல்லூராரே" என நாவுக்கரசர் பாரவுகின்றார். வேதாந்த ஆகமாந் தங்கள் வானளாவிய மலை போன் றுயர்ந்தவையாகலின், "மறைமுடி ஆகமமுடியின் வயங்கும் நிறைமதி யே" எனக் கூறுகின்றார். அருளொளி நிறைந்த ஞான முழுமதி என்றற்கு "நிறைமதியே" எனப் புகல்கின்றார். ஞான முரைக்கும் பெருமக்கள் அதற் கெனக் காலம் நோக்குவது போலின்றி, நினைந் தாங்கு நேர்ந்து அருள் ஞானம் நல்கும் எளிமை வியந்து "என் பருவம் குறியாமல் என்னை வலிந் தாட்கொண்டு இன்ப நிலை தனையளித்த என் அறிவுக் கறிவே" என இசைக்கின்றார். "மையிலங்கு நற்கண்ணி பங்கனே, வந்தெனைப் பண்கொண்ட பின் மழக்கை யிலங்கு பொற் கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்" (சதகம்) என்ற திருவாசகத்தை நினைவுறுத்துவது காண்க. உயர் பொருளைப் பக்குவர்க் களிக்க வென்னும் உலகியற் பொருட் கொடை மரபு அருட் கொடைக்கில்லை என்ற தம் கருத்தை வலியுறுத்தும் வடலூர் வள்ளல் மேலும் யாப்புறுத்தல் கருதி, "முன் பருவம் பின் பருவம் கண்டருளிச் செய்யும் முறை நினதருள் நெறிக்கு மொழிதல் அறிந்திலனே" என வுரைக்கின்றார். திருவருள் ஞானோப தேசத்துக்குப் பெண்களும் இளையரும் உரியரல்லர் என்ற முறை சில சமயத்தவரிடையே உண்மையை வடுலூர் வள்ளல் உடன்படாமை யறியலாம்.

இதனால், திருவருள் ஞானத்துக்குப் பக்குவா பக்குவம் காண்டல் வேண்டாமை வெளிப்படுத்தியவாறும். (11)

3040. பால்காட்டும் ஒளிவண்ணப் படிகமணிமலையே
பத்திக்கு நிலைதனிலே தித்திக்கும் பழமே
சேல்காட்டும் விழிக்கடையால் திருவருளைக் காட்டும்
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகனே

மால்காட்டி மறையாதென் மதிக்குமதி யாகி
வழிகாட்டி வழங்குகின்ற வகையதனைக் காட்டிக்
கால்காட்டிக் காலாலே காண்பதுவும் எனக்கே
காட்டியநின் கருணைக்குக் கைம்மாறென் றிலனே.

உரை: இருபாலாகப் பகுத்துக் காட்டும் ஒளியும் நிறமுமுடைய படிகத்தாலும் மாணிக்கத்தாலுமாகிய மணி போல்பவனே, பத்தி நெறிக் கண் நிற்பார்க்கு, இனிமை தரும் பழமாகியவனே, சேல் மீன் போன்ற தனது கடைக் கண்ணால் திருவருளைச் செய்யும் சிவகாமக் கொடியாகிய உமாதேவி, கண்டு களிக்கக் கூத்தாடும் தலைவனே, மயக்கத்தைத் தந்து மறையாமல் என் அறிவுக் கறிவாய் நின்று நன்னெறி காட்டி நலம் தரும் கூறுகளைத் தெரிவித்துத் திருவடி காட்டி, அத்திருவடி ஞானத்தால் காணப்படுவதையும் காணச் செய்த நின் திருவருட்கு யான் செய்யக் கடவ கைம்மாறு ஒன்றும் காண்கிலேன். எ.று.

ஒருபால் நீலமும் ஒருபாற் செம்மையும் பொருந்திய ஒளியும் நிறமும் உடைய திருமேனி கொண்டு விளங்குதலின், சிவனைப் "பால் காட்டும் ஒளி வண்ண மலையே" எனவும், திருநீற்றொளியும் உடன் தோன்றுதலின் "படிக மலையே" எனவும் இயம்புகின்றார். பத்தி - பக்தி நெறி; இதனை அன்பு நெறி என்பர். பந்திக்கும் நிலையெனக் கொண்டு - இறைவன் திருவடியோடு அன்பால் தம்மைப் பிணிக்கும் நிலை யென வுரைத்தலும் ஆம்; அப்போது பந்திக்கும் என வலித்தது எனக்கொள்க. தித்தித்தல் - இனித்தல் விழிக்கடை - கடைக்கண், அம்மையின் கண்கள் அருண் ஞானப்பார்வை யுடையனவாதலால் "விழிக் கடையால் திருவருளைக் காட்டும் சிவகாமவல்லி" எனத் தெரிவிக்கின்றார். கயிலையை யடைந்த காரைக்காலம்மைக்குத் திருவருள் ஞான வொளியால் இறைவன் திருவடிப் பேறு எய்துதல் கருதி அம்மை அருள் நோக்கம் செய்தசிறப்பை "கண்ணுதல் ஒருபாகத்துச் சிலைநுதல் இமயவல்லி திருக்கண்ணோக் குற்ற தன்றே" (காரைக்) எனச் சேக்கிழார் பெருமான், தெளிய வுரைப்பது காண்க. உமை கண்டு மகிழுமாறு சிவன் திருக்கூத் தாடிய நலத்தை, மந்த முழவ மியம்ப மலைமகள் காண நின்றாடி" (வேட்க) என ஞானசம்பந்தர் கூறுவதால், வள்ளற் பெருமான், "சிவகாம வல்லி மகிழ் திருநட நாயகனே" எனச் சிறப்பிக்கின்றார். முக்குண வியக்கத் தால் அனுபவம் பெறுதல் வேண்டி உயிரறிவை மறைத்தலும், அருளலும் இறையருட் செயல்களாதலின், "மால் காட்டி மறையாது என் மதிக்கு மதியாகி" எனவும், மதியாதலோடு அருள் பெறற்குரிய வழியையும், அதனை அவன் வழங்கும் திறத்தையும், அறிவிக்கின்றானு தலால், "வழி காட்டி வழங்குகின்ற வகையதனைக் காட்டி" எனவும், திருவடி ஞானத்தாலன்றி உயிர்கட்குக் காணும் திறம் எய்தாமையின், "காலாலே காண்பதுவும் எனக்கே காட்டிய நின் கருணைக்கு" எனவும் விரியக் கூறுகின்றார். இக்கருத்தை அருணந்தி சிவனார், "கண்ட சிவன் தனைக் காட்டி யுயிரும் காட்டிக் கண்ணாகிக் காரணங்கள் காணாமல் நிற்பன்; கொண்டரனை யுளத்திற் கண்டு அடி கூடின் பாசம் கூடாது" (சிவ. சித்தி : 296) என அறிவிக்கின்றார். கைம்மாறு வழங்கும் மக்கட் பண்பு பற்றி, இறைவனருட்குக் கைம்மாறு கண்டிலேன் என்பாராய், "நின் கருணைக்குக் கைம்மா றென்றிலனே" எனக் கனிந்து மொழி

கின்றார். இறைவன் திருவருட்குக் கைம்மாறும் பொருள் அகிலவுலகத்தும் இல்லாமை தோன்ற, "கைம்மாறென்றிலனே" என்கின்றாரென்றுமாம். "அருளிற் பெரிய தகிலத்து வேண்டும் பொருளிற்றலையிலது போல்" (திருவருட்.31) என உமாபதி சிவனார் உரைப்ப தறிக.

இதனால் இறைவன் கருணைக்குக் கைம்மாறின்மை கூறியவாறும். (12)

3041 என்னைஒன்றும் அறியாத இளம்பருவந் தனிலே
என்உளத்தே அமர்ந்தருளி யான்மயங்குந் தோறும்
அன்னை எனப் பரிந்தருளி அப்போதைக் கப்போ
தப்பன்எனத் தெளிவித்தே அறிவுறுத்தி நின்றாய்
நின்னைஎனக் கென்என்பேன் என்உயிர் என்பேனோ
நீடியஎன் உயிர்த்துணையாம் நேயமதென் பேனோ
இன்னல்அறுத் தருள்கின்ற என்குருவென் பேனோ.
என்என்பேன் என்னுடைய இன்பமதென் பேனே.

உரை: என்னுடைய இயல்பை யானே அறிய மாட்டாத பேதைப் பருவத்தில் என் மனத்தின்கண் இருந்து யான் மயங்கும் போதெல்லாம் தாய் போலத் தலையாளி செய்தும், அவ்வப்போது தந்தை போல அறிவின்கண் தெளிவுறுத்தும் நின்றருளினையாகலின், நினக்கும் எனக்கும் உள்ள தொடர்பை என்னென மொழிகுவேன்? உன்னை எனக்கு உயிர் என்று சொல்லுவேனா? நெடுங்காலமாக என்னுயிர்க்குத் துணையாகிய நேயப் பொருள் என்பனோ? எனக்குண்டாகும் துன்பங்களைத் துடைத் தருளும் அருட் குரு என வுரைப்பேனா? என்னென்று இயம்புவேன்? என்னை மகிழ்விக்கும் எனது இன்பம் என மொழிகுவேன். எ.று.

பருவ மெய்தும் பெண் தனது பெண்மையை யுணர்தல் போல யான் ஓர் உயிர்ப்பொருளென்றும், தனக்கு உணர்வே வடிவமென்றும் அறிந்தொழுக மாட்டாத பேதைமை நிலையை "என்னை யொன்றும் அறியாத இளம் பருவம் தன்னில்" என்றும், உயிர் தோறும் உயிர்க்குயிராய் இறைவன் இருந்தருளுபவனாதல் பற்றி, 'என்னுளத்தே அமர்ந்தருளி" என்றும் இசைக்கின்றார். உடலொடு கூடி வாழும் உயிர்க்குக் காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்றும் ஓரளவு இன்றியமையாமை பற்றி "யான் மயங்குந்தோறும்" என்கின்றார். காம வெகுளிகளால் உளதாவது மயக்கம் செம்பிற் களிம்பு போல் உயிரின்கண் தோய்ந்திருக்கும் மலம்காரணமாகப் பகலும் இரவும் போல மாறி மாறி வேறு வேறு இயல்புடடன் உணர்வை மயக்குவதும் தெளிவுறுத்துவதும் செய்வது. உழைப்பால் எய்தும் உறக்கத்தால் தெளிவுறுவது கண்டு ஈதுணரப்படும் மயக்கம். கலப்பு; "தேன் மயங்கு பாலினும் இனிய" (ஐங்.) என்றாற் போல. இருட்குள் ஒளியும் ஒளிக்குள் இருளும் தோய்ந்திருப்பது போலும் மறைப்பும் ஒளிவும் கலந்த கலப்பு. இதனை "ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம்; ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்;" (கொடிக்) என்பர் உமாபதி சிவம். மயங்கியது மயங்கியே யொழியாமையும், தெளிந்தது தெளிந்தே நில்லாமையும் இயல்பாதலின், "மயங்குந் தோறும்" எனக் கூறுகிறார். தெளிவுறுங்கால் இனிமை உடனிகழ்ச்சியாகலின் அதற் கெடுத்துக் காட்டாகத் தாய்மையை விதந்து "அன்னையெனப் பரிந்தருளி" எனவும்,

அன்புமொழிந்து அறிவு தரும் தந்தையை விதந்து, "அப்போதைக் கப்போது அப்பனெனத் தெளிவித்தே அறிவுறுத்தி நின்றாய்" எனவும், உரைக்கின்றார். "இருளடராது உள்ளுயிர்க் குயிராய்த் தெளிக்கு மறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே குளிக்கும் உயிர்; அருள் கூடும்படிக் கொடி கட்டினனே" (கொடிக்) என்று உமாபதி சிவனார் உரைப்பது காண்க. இறைவன் தாய் போல் அருளும் திறத்தைப் "பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த - தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே" (பிடித்த) எனத் திருவாசகம் விளக்குவது காண்க. இவ்வருட் செயற்குக் காரணமாவது நினக்கும் எனக்குமுள்ள உறவாமென வுணர்கின்றேனாயினும். அவ்வுறவு முறைமையை ஆராயும் போது, உயிர்க் குயிராகும் முறைமை கண்டு, "என் உயிர் என்பேனோ" எனவும், உயிர்த்துணையாதற்குக் காரணமாகிய அன்பு என்பார், நீடிய என்னுயிர்த் துணையாம் நேயமது என்பேனோ" எனவும் கூறுகின்றார். நீடிய துணை - பிறவி தோறும் தொடரும் பழைய நட்பு. "பழைமையெனப் படுவது யாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு" (குறள்) என்பர் திருவள்ளுவர். இதனைக் கெழுதகைமை எனவும் கூறுப. நேயம், அன்பு. இன்னல், அறியாமையால் உண்டாகும் துன்பம்; குருவாய் அறிவருளிய விடத்து இது நீங்குதலின், "இன்னலறுத் தருள்கின்ற என் குரு என்பனோ" எனக் கூறுகின்றார். "இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி, குருவென வந்து குணம் பல நீக்கித் தரும்" (திருமந்.1527) என்பர் திருமூலர். எக்காலத்தும் எவ்வுயிராலும் விரும்பப்படும் முறைமை பற்றி, "என்னுடைய இன்பமது என்பேன்" என்றும், வேறு கூற மாட்டாமையால், என்னென்பேன்" என்றும் இசைக்கின்றார். அது, பகுதிப் பொருட்டு. "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடைய அன்பே" (கோயில்) என்றும், "இன்பமே யுன்னைச் சிக்கென பிடித்தேன்" (பிடித்த) என்றும் மணிவாசகர் மொழிவது காண்க.

இதனால், பல்வகையால் அருள் செய்யும் இறைவற்கும் தமக்குமுள்ள உறவு முறை ஆராய்ந்தவாறும். (13)

3042. பாடும்வகை அணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய
பருவத்தே அணிந்தணிந்து பாடும்வகை புரிந்து
நாடும்வகை உடையோர்கள் நன்குமதித் திடவே
நல்லறிவு சிறிதளித்துப் புல்லறிவு போக்கி
நீடும்வகை சன்மார்க்க சுத்தசிவ நெறியில்
நிறுத்தினைஇச் சிறியேனை நின் அருள்என் என்பேன்
கூடும்வகை உடையரெலாங் குறிப்பெதிர் பார்க் கின்றார்
குற்றமெலாங் குணமாகக் கொண்டகுணக் குன்றே

உரை: குற்றம் புரிவதை உயிர்க் குணமாகக் கொண்டு பொறுத் தருளும் நற்குணக்குன்ற மாகியவனே, பாட்டுக்களைப் புனைந்து பாடும் திறத்தைச் சிறிதும் விரும்பி யறியாத இளமைக் காலத்தே அணிவகை பலவுப் பொருந்துமாறு பாடும் கூறுபாட்டை அன்புடன் எய்துவித்து, பாடும் பாட்டுக்களின் நலம் தெரியும் நன்புலவர் கண்டு நன்கு மதிக்க நன்ஞானத்தை எனக்கு நல்கி, என்னுடைய புன்மையைப் போக்கி

எய்திய ஞானம் நெடிது பெருகுதல் வேண்டிச் சுத்த சன்மார்க்கச் சிவ நெறியில் என் சிறுமை கண்டும் நிற்கச் செய்துள்ளாய்; நின் திருவருளிற் கூடத்தக்க நல்லோரெல்லாம் நின்னுடைய திருக்குறிப்பை எதிர்நோக்கி எனக்கருளிய நின் அருட் பண்பை என்னென்பேன். எ. று.

ஒருவர்க்குக் குணம் இயற்கையும் குற்றம் செயற்கையுமாயினும், குற்றத்தைக் காணுமிடத்துக் காண்பார்க்கு வெறுப்பும், குணம் காணுமிடத்து விருப்புமுண்டாதல் இயல்பு. வல்லவர் பிறர் குற்றத்தையும் குணமாகக் கொண்டு வெறுப்பதிலராவர்; எல்லாம் வல்ல பெருமானுக்குக் குற்றத்தைக் குணமாகக் கோடல் எளிதாவது கொண்டு "குற்றமெலாம் குணமாகக் கொண்ட குணக்குன்றே" என்று கூறுகின்றார். பாட்டையிசைத்தற்கும் புனைதற்கும் இயலும் முறையும் உண்மையின், இசை முறையும் யாப்பு முறையும் உரிய பருவத்தில் பயில்வது நெறியாதலால் சிறு பருவத்தின் நிலைமையை விளக்கப் "பாடும் வகை அணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய பருவத்து" எனப் பகர்கின்றார். அணுத்துணை-சிறிதளவு. செவி வழியாகப் பன்முறையும் கேட்டலால் இசை யாப்புகளில் பரிவும், பின்பு அவற்றின் இயலறிதற்கண் விருப்பும் உண்டாதலால், இரண்டு மில்லாத இளம் பருவத்தைப் "பரிந்தறியாச் சிறிய பருவம்" எனச் சிறப்பிக்கின்றார். அப்பருவத்தேயே இசையைச் சுருதியும் தாளமும் கெடாமலும், பாட்டைச் சீரும் தளையும் பிழையாமலும் பல்வகை யணி நலங்களும் பொருந்தப் பாடும் திறமுடையரானது தோன்ற "அணிந்தணிந்து பாடும்வகை புரிந்து" என வுரைக்கின்றார். இசைப் புலமையும் யாப்பியலறிவும் கொண்டு பாடவும் பாட்டை யாராயவும் வல்லவர் பாடியும் தேர்ந்தும் மகிழத் தக்க வகையில் எனக்கு இரண்டையும் சிறக்க அருளினாய் என்பாராய், "நாடும் வகை யுடையோர்கள் நன்கு மதித்திடவே நல்லறிவு சிறிதளித்து" என்றும், இரண்டின் குறை யறிவு குற்றம் பலவற்றிற் கேதுவாதலால், அதனைப் போக்கினமை புலப்பட, "புல்லறிவு போக்கி" என்றும், இப் புலமை நலம் மறதியாற் கெடாமல் நெடிது பெருகுதற்குத் தம்மைச் சிவநெறிச் சுத்த சன்மார்க்கத்தில் நிறுத்தினமை விளங்க, "நீடும் வகைச் சன்மார்க்கச் சுத்த சிவநெறியில் நிறுத்தினை இச்சிறியேனை" என்றும் இயம்புகின்றார். நாடுதல் - ஆராய்தல். நன்கு மதித்தல் - நலம் பாராட்டல். நல்லறிவு - மிக்க அறிவு; திருவருள் அறிவுமாம்; இதனைப் பிறர் இயற்கை யறிவென்றும், உண்மை யறிவென்றும், நுண்ணறி வென்றும் கூறுவர். சிறிதளித்தல் - சிறு தீக் கொண்டு நெருப்பெழுப்புவது போலும் செயல் வகை; இது பற்றியே அறிவு தருதலை, அறிவு கொளுத்துதல் என அறிஞர் வழங்குகின்றனர். சிறு பருவத்தில் உடலுணர்வும் உயிருணர்வும் குறைவாக இருப்பதால் "சிறியேன்" என்கிறார்; இகரச் சுட்டு, தன்னைச் சுட்டும் தன்மைக்கண் வந்தது. இப்புலமை எய்துதற்கு வேறு வாயில் இல்லையாதலின், "நின் அருள்" எனக் காட்டி, அதனை வியந்து பராவுவாராய், "என்னென்பேன்" என இயம்புகின்றார். கூடும் வகை, ஞானமும் செய்கையும் கொண்டு சிவானந்தத்திற் கூடும் சிறப்பு. அவரெல்லாம் எதிர் நோக்கும் திருவருளை எனக்கருளினாய்; நின் திருவுள்ளம் இருந்தவாறு என்பராய், "கூடும் வகை யுடையோர்கள் குறிப்பெதிர் பார்க்கின்றார்" என உரைக்கின்றார்

இதனால், இசையும் யாப்பு வன்மையும் திருவருள் ஞானமும் உடையோர் எதிர்பார்த்து நிற்கச் சிறு பருவத்தே எனக்கருளினை என வியந்து அன்பு செய்தவாறும். (14)

3043. சற்றும்அறி வில்லாத எனையும்வலிந் தாண்டு
தமியேன்செய் குற்றமெலாஞ் சம்மதமாக் கொண்டு
கற்றுமறிந் துங்கேட்டுந் தெளிந்தபெரி யவருங்
கண்டுமகி ழப்புரிந்து பண்டைவினை அகற்றி
மற்றும்அறி வனவெல்லாம் அறிவித்தென் உளத்தே
மன்னுகின்ற மெய்இன்ப வாழ்க்கைமுதற் பொருளே
பெற்றுமறி வில்லாத பேதைஎன்மேல் உனக்குப்
பெருங்கருணை வந்தவகை எந்தவகை பேசே.

உரை: சிறிதும் அறிவில்லாத என்னை வலிய ஆண்டருளித் தனியனாகிய என் குற்றங்களையும் குணமாக ஏற்றுக்கொண்டு, கற்பன கற்றறிந்தும் சான்றோர்பாற் கேட்டும் தெளிவுடையராகிய பெருமக்களும் என்னைக் கண்டு மகிழுமாறு செய்து, என் பழைய வினைகளையும் போக்கி மேலும் அறிய வேண்டிய எல்லாவற்றையும் யானே அறியச் செய்து, என்னுடைய மனத்தின்கண் நிலை பெறுகின்ற மெய்யின்ப வாழ்வருளும் முதல்வனே, அறிவு பெற்றும் பேதையாகிய என் மேல் உனக்குப் பேரருள் செய்ய வேண்டுமெனத் திருவுள்ளம் வந்தது எவ்வாறு, கூறுக. எ.று.

சற்று - சிறிதென்னும் பொருளில் நிலவும் வழக்குச் சொல். அறிவில்லாத எனையும் என்றவிடத்து அறிவென்றது, திருவருட் பேற்றுக்குரிய உண்மை யறிவு. வலித்தாளுதல் - தானே வலிய வந்து ஆளுதல். தமியேன்-தனித் திருப்பவன். தம்மை யுடைய இறைவனைத் தமி என்பதுபற்றித் தமியான இறைவனைத் தனக்குள் உணர்ந்துடையவன், தமியேன் என நயம் காண்பவரும் உண்டு. மெய் கண்ட தேவர் சிவபரம்பொருளைத் தமி எனக் கூறுவர். குற்றத்தைக் குணமாகக்கொண்டு, ஏற்பது சம்மதம்; இசைவுமாம். கற்பன கற்றுணர்வதும், உணர்ந்தோர்பாற் கேட்டறிவதும் அறிவுப் பேற்றுக்கு வாயிலாதலால்,அறிவுடையோரை,"கற்று மறிந்தும் கேட்டும் தெளிந்த பெரியவர்" எனச் சிறப்பிக்கின்றார். "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" (பிரமா) என ஞானசம்பந்தர் பாடி யருளுவது நோக்குக. என் செயலும், தெளிவுடையார் செய்யும் செம்மைப் பணியாதல் கண்டு, என்னையும் தெளிவுடைய பெருமக்கள் உவக்கின்றனர் என்றற்குக் "கற்று மறிந்தும் கேட்டும் தெளிந்த பெரியவரும் கண்டு மகிழப் புரிந்து" என்று கூறுகின்றார். கற்றுணர்ந்தார் இறைவன் நற்றாளை யுணர்ந்து பரவுவது அவரது நற்செயல்; "உற்றாரிலாதார்க் குறுதுணையாவன ஓதி நன்னூல் கற்றார் பரவப் பெருமை யுடையன" (ஐயா) எனத் திருநாவுக்கரசர் கூறுவது காண்க. தம்மைச் செய்த உயிரைப் பற்றித் தன் பயனை நுகரும் பொருட்டு உணர்வைச் சோர்வித்து, மயக்கும் இயல்பு முன்னை வினை செய்யும் தீமையாதலின், அதனை விலக்குவது ஞானப் பேற்றுக்கு இன்றியமையாமையாலும், அதனை விலக்க வல்லவன் இறைவனல்லது வேறெவரும் இல்லாமை பற்றி, "பண்டை வினை யகற்றி" என்கின்றார்.

"வினையால் அசத்து விளைதலால் ஞானம் வினை தீரினன்றி விளையாவாம்" (சிவ.போ.) என மெய்கண்டார் விளம்புவது காண்க. வினை யிருள் நீங்க விளங்கிய ஞானத்தால் அறிய வேண்டுவன பலவும் அறிதற்குரிய வன்மை யுளதாக, அக்காலை இறைவன் திருவருள் ஞான மெய்து விக்கும் திறத்தை, "மற்றும் அறிவன வெல்லாம் அறிவித்து" எனவும், அந்த ஞானம் நிறைந்து தூயதாய மனத்தின்கண் இறைவன் எழுந்தருளும் நலம் புலப்பட, "என்னுளத்தே மன்னுகின்ற மெய்யின்ப வாழ்க்கை முதற்பொருளே" எனவும் கூறுகின்றார். ஞானத்தால் உளதாகும் இன்ப நிலைபேறுடையதாகலின், "மன்னுகின்ற மெய்யின்பம்" என்றும், அதனை நுகர்ந்து வாழும் வாழ்க்கையை, "மெய்யின்ப வாழ்க்கை" யென்றும், அதற்கெல்லாம் இறைவன் முதல்வனாதலால் "முதற்பொருளே" என்றும் இசைக்கின்றார். பெறுவன பெற்றும், பேணி நுகரும் அறிவில்லாமை கண்டு, வெறுத்துக் கையொழியாது அருளறிவு தந்து, இறைவன் நுகர்விக்கும் செயற்குக் காரண மொன்றிருத்தல் வேண்டு மென்ற எண்ணம் இயல்பாய் எழுதலால், "பெற்றும் அறிவில்லாத பேதை என்மேல் உனக்குப் பெருங்கருணை வந்தவகை பேசு" என வேண்டுகின்றார். மெய்யறிஞர் மயங்கக் கண்டு இரங்குதலினும், பேதையின் பேதைமை கண்டு இரங்குதல் பெரிதாகலின், "பெருங் கருணை வந்த வகை" என வினவுகின்றார்.

இதனாற் பெருமானது பெருங் கருணைத் திறம் அறிய விழைந்தவாறும். (15)

3044. சுற்றதுமற் றவ்வழிமா சூததுஎன் றெண்ணத்
 தொண்டரெலாங் கற்கின்றார் பண்டுமின்றுங் காணார்
 எற்றதும்பு மணிமன்றில் இன்பநடம் புரியும்
 என்னுடைய துரையேநான் நின்னுடைய அருளால்
 கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே
 கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டதுநின் னிடத்தே
 பெற்றதுநின் னிடத்தேஇன் புற்றதுநின் னிடத்தே
 பெரியதவம் புரிந்தேன்என் பெற்றிஅதி சயமே.

உரை: ஒளி மிக்க மணிகள், வேய்ந்த அம்பலத்தில் திருக்கூத்தி யற்றும் என் தலைவனே, சுற்றிச் செல்வது இவ்வழி; பெரிய சூது நிறைந்தது அவ்வழி என்பது நினைந்து, தொண்டுள்ளம் கொண்ட நன்மக்கள் பலரும், முற்காலத்தும் இக்காலத்தும் ஆராய்கின்றார் களாயினும், உண்மை நெறி இதுகாறும் கண்டிலர்; நின்னுடைய திருவருளால் நான் கற்பதும் கேட்பதும், கண்டதும் உள்ளத்தே யுணர்ந்து கொண்டதும், நன்ஞானம் பெற்றதும், அதனின்பத்தை நுகர்வதும் நின்னிடத்தேயாகும்; பெரிய தவமே புரிந்துள்ளேன்; என் தன்மை அதிசயமாக இருக்கிறது, காண். எ.று.

ஞானப் பேறு விழையும் நன்மக்களைத் தொண்டர் என்றும், ஞான வேட்கையைத் தொண்டுள்ளம் என்றும் பெரியோர் கூறுவர். இந்த நூல் கூறும் வழி தெளிவின்றிச் சுற்றிச் சுற்றிச் சென்று காலத்தைப் போக்கும் என்றும், அந்த நூல் கூறும் நெறி வஞ்சனையும் பொய்யும் நிறைந்தது

என்றும் சமயவாதிகளான நூலோர் கூறுவதால் மேற் கூறிய தொண்டர் பலரும் கலக்கமுற்று உண்மை காணலுற்று அவர்தம் நூல்களைப் படித்த வண்ணமுள்ளனர் என்பாராய், "கற்றது, மற்று அவ்வழி மாசூது என்று எண்ணுத் தொண்டரெலாம் கற்கின்ருர்'' என்றும், இது முற்காலத்தன்றி இக்காலத்தும் நிகழ்கின்ற தென்றற்கு, "பண்டும் இன்றும்'' என்றும், இவ்வாறு கற்றும் உண்மை நெறி இன்னதென இதுவரையும் தெளிந்திலர் என்பாராய், "காணுர்'' என்றும் கூறுகின்ருர். எல் ததும்பல் - ஒளி மிகுதல். துரை - தலைவன். வள்ளற் பெருமான் காலத்தில் சென்னை நகர், சைவ வைணவச் சமயப் பூசலுக்கும், வேதாந்த சித்தாந்தப் பூசலுக்கும் பெருங் களரியாய் இருந்தமையின், உண்மை நெறி காணும் தொண்டர் கூட்டத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்ருர். ஒருவன் கற்றற்குரிய உடற் கருவிகளும், கேட்டற்குரிய கரணங்களும் இறைவனது திருவருள் இயக்கம் காரணமாக நிகழ்வன எனச் சைவ ஞான நூல்கள் உரைப்பது கண்டு, "நின்னுடைய அருளால் கற்றதும் நின்னிடத்தே பின் கேட்டதும் நின்னிடத்தே" எனவும், உயிர்கள் உலகியற் பொருணிகழ்ச்சிகளைக் காண்பதும், உண்மை யுணர்வதும் திருவருளாலன்றி யில்லை எனப் பெரியோர்கள் கூறுவது கொண்டு, "கண்டதும் நின்னிடத்தே உட் கொண்டதும் நின்னிடத்தே'' எனவும், கல்வி கேள்விகளாலும், காட்சி கருத்தாகிய அளவைகளாலும் பெற்ற அறிவும், நுகர்ந்த இன்பமும் திருவருட் பயனென அறிந்தமை புலப்பட, "பெற்றதும் நின்னிடத்தே இன்புற்றதும் நின்னிடத்தே'' எனவும் விரித்துரைக்கின்ருர். இதனை, "அவனருளே கண்ணுகக் காணினல்லால்...இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணுதே'' (வினவிடை) எனவும், "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே'' (தனி) எனவும், குற்றம் நீ குணங்கள் நீ கூடலால வாயிலாய், சுற்ற நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ' கற்ற நூற் கருத்து நீ அருத்தம் இன்பம் என்றிவை முற்றும் நீ', (ஆலவாய்) எனவும்,"கூறு நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ, தேறும் வகை நீ, திகைப்பு நீ, தீமை நன்மை முழுதும் நீ'' (குழைத்) எனவும் சான்ருேர் கூறுவன காண்க. ஏனைத் தொண்டரினம் பெருத திருவருட் சார்பு தமக்குண்டானதைத் தாம் செய்த தவப் பயனுகக் கருதுகின்ருராதலின், "பெரிய தவம் புரிந்தேன்'' என்றும், இக்கருத்து அதிசயம் விளைவித்தமையால், "என் பெற்றி அதிசயமே'' என்றும் இயம் புகின்ருர்.

இதனுல், தாம் பெற்ற கல்வி கேள்வி, முதலிய நலம் பலவற்றிற்கும் முதல் திருவருட் சார்பென்பது உணர்த்தியவாரும். (16)

3045. ஏறியநான் ஒருநிலையில் ஏறஅறி யாதே
இளைக்கின்ற காலத்தென் இளைப்பெல்லாம் ஒழிய
வீறியஓர் பருவசத்தி கைகொடுத்துத் தூக்கி
மேலேற்றச் செய்தவளை மேவுறவுஞ் செய்து
தேறியநீர் போல்எனது சித்தமிகத் தேறித்
தெளிந்திடவுஞ் செய்தனைஇச் செய்கைஎவர் செய்வார்
ஊறியமெய் அன்புடையார் உள்ளம்எனும் பொதுவில்
உவந்துநடம் புரிகின்ற ஒருபெரிய பொருளே.

உரை : மிக்குற்ற மெய்யன்புடைய சான்றோர்களின் மன மென்கிற அம்பலத்தில், மகிழ்வுடன் திருக்கூத்தாடுகின்ற, ஒப்பற்ற பரம்பொருளே, திருவருள் நெறியில் மேன் மேற் சென்ற பொழுதில் ஒரு நிலையில் மேற் செல்ல மாட்டாமல், இளைத்தேனாக, அக் காலத்தே என் மன நினைவு அனைத்தும் கெடுமாறு, சிறப்புடைய கால சத்தியொன்று எனக்குள் கை கொடுத்து ஊக்கி மேனோக்கிச் செல்லவுதவிற்றாக, நானும் மேற்சென்று அச்சத்தியை அடைந்து தெளிந்த நீர் போல என் மனம் தெளிவு மிகுந்து இன்புறச் செய்தாய்; இவ்வுதவியை வேறு எவர் செய்வர். எ.று.

ஊறுதல், -சுரத்தல். நீரூற்றுப் போலச் சான்றோர் உள்ளத்தில் உண்மையன்பு சுரந்தவண்ணமிருத்தல் தோன்ற "ஊறிய மெய்யன் புடையார்" என்றும், அவருடைய அன்புள்ளத்தில் சிவத்தின் திருநடனம் நிகழ்வது விளங்க, "உள்ளமெனும் பொதுவில் உவந்து நடம் புரிகின்ற ஒரு பெரிய பொருள்" என்றும் உரைக்கின்றார். சிவமெனவும், சிவபரம்பொருள் எனவும், பரம்பொருள் எனவும் கூறப்படும் அதுவே பெரிய பொருள் என்ற கருத்தில் பிரமப் பொருள் எனவும், பிரமம் எனவும் நூல் களில் வழங்குமென அறிக. திருவருள் யோகத்தில் தோய்ந்திருந்த வள்ளற் பெருமான், ஒருகால் சோர்வுற்றுத் தடுமாறிய அனுபவத்தை இங்கே குறிக்கின்றார். திருவருள் நினைவில் தோய்ந்து ஒன்றியிருந்த நிலையில் உடற் சோர்வினாலோ, உள்ளச் சோர்வினாலோ ஒன்றும் யோகம் கலந்து மேலே தொடர மாட்டாராயினமை புலப்பட, "ஏறிய நான் ஒரு நிலையில் ஏறவறியாதே இளைக்கின்ற காலத்து" எனவும், அப்போதில் திருவருட் காலசத்தி உள்ளூறத் தோன்றி ஊக்கிய நலத்தை, "இளைப் பெலாம் ஒழிய வீறிய ஓர் பருவ சத்தி கைகொடுத்துத் தூக்கி மேலேற்றச் செய்து" எனவும், ஊக்கியதோடு நீங்காமல் உடனிருந்து ஞானத் தெளிவு மேவ வுதவிய திறத்தை "அவளை மேவுறவும் செய்து தேறிய நீர்போல் எனது சித்த மிகத் தேறித் தெளிந்திடவும் செய்தனை" எனவும், இவ் வாறு தோன்றாத் துணையாகுமவர் நின்னின் வேறிலர் என்பாராய், "இச்செய்கை எவர் செய்வார்" எனவும் உரைக்கின்றார். தேறுதல், தெளிதல். யோக முயற்சிக்கும் போக நுகர்ச்சிக்கும் பொதுவாய் நின்று துணை புரியும் திருவருட் சத்தி காலத்தினாற் செய்யும் உதவி நோக்கிக் கால சத்தி எனவும், பருவசத்தி எனவும் வழங்கும். ஞானவொளி நல்கும் காலத்துச் சிவசத்தி எனப்படும் அத் திருவருள் மலத்தினூடு கலந்து உயிரறிவை மறைக்குமிடத்துத் திரோத சத்தி எனப்படுவது போல, என அறிக. சத்தியைப் பெண் எனக் கூறும் மரபு பற்றிப் பருவ சத்தியை, அவள் எனச் சுட்டுகின்றார். (17)

இதனால், திருவருள் யோகானுபவம் தெரிவித்தவாறும்.

3046. தருநிதியக் குருவியற்றச் சஞ்சலிக்கு மனத்தால்
தளர்ந்தசிறி யேன்தனது தளர்வெல்லாந் தவிர்த்து
இருநிதியத் திருமகளிர் இருவர்எனை வணங்கி
இசைந்திடுவந் தனம்அப்பா என்றுமகிழ்ந் திசைத்துப்

பெருநிதிவாய்த் திடஎனது முன்பாடி ஆடும்
பெற்றி அளித் தனைஇந்தப் பேதமையேன் தனக்கே
ஒருநிதிநின் அருள் நிதியும் உவந்தளித்தல் வேண்டும்
உயர்பொதுவில் இன்பநடம் உடையபரம் பொருளே.

உரை : உயர்ந்த ஞான சபையில், இன்ப நடம் புரியும் பரம் பொருளே, ஈட்டப்படும் செல்வத்தைக் குன்றுபோற் குவித்தற் பொருட்டு வருந்துகின்ற மனம் உடைமையால் சோர்ந்த சிறியவனுகிய எனது தளர்ச்சி யாவையும் போக்கி இருவகை நிதிகளையும் பெற வளிக்கும் செல்வ மகளிர் இருவரும் என் பால் வந்து வணங்கி, அப்பனே, இரு வகைச் செல்வங்களையும் ஏற்றுக் கொள்க; அவற்றைத் தருதற்கே இவண் வந்துள்ளோம் என மகிழ்வோடு சொல்லிப் பெருஞ் செல்வம் எனக்கு வாய்க்கச் செய்து, பின்பு அது வேண்டி என்முன் பாடுவோர் பாட ஆடுவோர் ஆட விளங்கும் தன்மையை எனக்கு அருள் செய்தாய்; பேதையாகிய எனக்கு ஒப்பற்ற நிதியமாகிய நினது திருவருளாகிய நிதியையும் உவப்புடன் அருள வேண்டுகிறேன். எ.று.

நிதியக் குரு-செல்வக் குன்றுகள்; பல்வேறு இடங்களிலிருந்து கொணர்ந்து குவிக்கப்படுவது பற்றித் "தருநிதியக் குரு" எனச் சிறப்பிக் கின்றார். குரு-மண் மலை. மண் குன்று மிக்க நாட்டைக் குருநாடு என்றும், குரு க்ஷேத்திரம் என்றும் வழங்குவர். உலகியல் இன்ப வாழ்வுக்கு மலை போற் செல்வம் வேண்டுதலையறிந்து பல்வேறு நினைவுகளால் மனம் வேதனை யுறுதல் பற்றி, "நிதியக் குருவியற்றச் சஞ்சலிக்கும் மனத்தால்" என்றும், மனத்தைத் தன்வழிப் படுத்தாமல் அதன் வழி நிற்கும் சிறுமை புலப்பட, "மனத்தால் தளர்ந்த சிறியேன்" என்றும், இயம்புகின்றார். இருநிதியத் திருமகளிர் இருவர், சங்க நிதி பதும நிதி என்ற இரண்டிற்கு முரிய தெய்வ மகளிர் இருவர்; இவ்விருவரும் சங்க லட்சுமி, பதுமலட்சுமி, எனப்படுவர். அவர் தரும் செல்வத்தை மறுப்பே னென ஐயுற்று, என் முன் போந்து வணங்கி, என் மனச் சோர்வை நீக்கி, அப்பனே, உன் பொருட்டே யாங்கள் வந்துள்ளோம்; மறுக்காமல் இவ்விருவகை நிதி களையும் ஏற்றுக் கொள்க, என மனமகிழ்ச்சியோடு இப்பெருஞ் செல்வத் தைக் கொடுக்கவும் என்பாராய், "தளர்வெலாம் தவிர்த்து இருநிதியத் திருமகளிர் இருவர் எனை வணங்கி, இசைந்திடு வந்தனம் அப்பா என்று மகிழ்ந்திசைத்துப் பெருநிதி வாய்த்திட" எனவும், செல்வர்பாற் செல்வம் பெறல் வேண்டிப் பாடுவோரும் ஆடுவோரும் வருவதும், அவர்கட்கு வேண்டுவன அளித்தலும் செல்வர்கட்குப் புகழ்பயத்தலின், "எனது முன் பாடியாடும் பெற்றியளித்தனை" எனவும் இயம்புகின்றார். இஃது ஒன்றே எய்தின் நல்லறிவில்லாத யான் கெடுவேன்; இச் செல்வத்தோடு நினது திருவருட் செல்வமும் எனக்கு எய்துமாறு நீ அருள் புரிதல் வேண்டு மென்பாராய், "இந்தப் பேதைமையேன் தனக்கு ஒருநிதி நின் அருள் நிதியும் உவந்தளித்தல்வேண்டும்" என வேண்டுகின்றார். பொருட் செல்வத்தினும் அருட் செல்வம் சிறப்புடைத்தாதலால், "ஒருநிதி நின் அருள் நிதி" என உரைக்கின்றார். நிதியும் என்புழி, உம்மை இறந்தது தழீஇயது. வாய்ப்ப நல்க என்பது "வாய்த்திட" என வந்தது. பெற்றி - பெருமை. பாடி யாடும் பெற்றி, பாடியும் ஆடியும் வேண்டும் பரிசிலை நல்கும் பெருந்தன்மை.

இதனால், பொருட் செல்வத்தோடு அருட் செல்வம் அளித்தல் வேண்டுமென முறையிட்டவாறும். (18)

3047. அஞ்சாதே என்மகனே அனுக்கிரகம் புரிந்தாம்
ஆடுகநீ வேண்டியவா றுடுகஇவ் வுலகில்
செஞ்சாலி வயலோங்கு தில்லைமன்றில் ஆடுந்
திருநடங்கண் டன்புருவாய்ச் சித்தசுத்த னாகி
எஞ்சாத நெடுங்காலம் இன்பவெள்ளந் திளைத்தே
இனிதுமிக வாழியவென் றெனக்கருளிச் செய்தாய்
துஞ்சாதி யந்தமிலாச் சுத்தநடத் தரசே
துரியநடு வேஇருந்த சுயஞ்சோதி மணியே.

உரை : துஞ்சும் பொருள்கட் குரிய ஆதியும் முடிவுமில்லாத தூய நடம் புரிகின்ற அருளரசே, துரிய நிலைக்கண் நடுவிடத்தே விளங்குகின்ற சுயஞ் சோதியையுடைய மாணிக்க மணியே; என் மகனே என என்னை யழைத்து அஞ்ச வேண்டா; உனக்கு அருள் செய்துள்ளோம்; இவ்வுலகில் விரும்பியவாறு வாழ்க; செஞ்சாலி யென்னும் நெல்விளையும் வயல்கள் நிறைந்த தில்லையில், உள்ள சிற்றம்பலத்தில் நிகழ்கின்ற திருக்கூத்தைத் தரிசித்து அன்புருவும் சித்த சுத்தனுமாய், குறையாத இன்பம் நெடுங்காலம் நுகர்ந்து,இனிது வாழ்க எனத் திருவாய் மொழிந்தருளினாய், நினது அன்பை என்னென்பேன். எ.று.

தோற்றக் கேடுகளையுடைய எப்பொருளும் எச்செயலும் நிலையின்றிக் கெடுவது உண்மையாகலின், என்றும் உள்ள சிவத்தின் திருக்கூத்து, "துஞ்சு ஆதியந்தம் இல்லாச் சுத்த நடத்து அரசே" என்றும், உந்தித் தானமாகிய துரியத்தின் நடுவிலிருந்து நோக்குவோர்க்கு அருட் சோதியுடன் காட்சி தருதல் விளங்கத் "துரிய நடுவே இருந்த சுயஞ் சோதி மணியே" என்றும் சொல்லிப் பரவுகின்றார். தனக்குச் சிவபரம் பொருளின் திருவருட் காட்சி எய்திய அனுபவத்தை எடுத்தோதுவாராய், அருள் நலம் விளங்க என் மகனே நீ அஞ்சுதல் வேண்டா; நீ வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலகில் இன்புறுக என வுரைத்தருளினர் என்பாராய், "அஞ்சாதே என் மகனே அனுக்கிரகம் புரிந்தாம் ஆடுக நீ வேண்டியவா றுடுக இவ்வுலகில்" என வுரைக்கின்றார். செஞ்சாலி - நெல்லில் உயர்ந்த வகை. தில்லைப்பதி நெல் வளமிக்க மருதப் பணையாகலின், "செஞ்சாலி வளமோங்கு தில்லை" என்று சிறப்பிக்கின்றார். திருநடக் காட்சி உன்னை மெய்யன்புடையனாக்கி அதனால் விளக்கமுறும் தூய சிவ ஞானத்தால் நீயும் சித்தை தூயனாவாய் என்பார், "திருநடங் கண்டு அன்புருவாய்ச் சித்த சுத்தனாகி"என்றும், சுத்த சித்தமுடையவர்களின் விழைவும் செயல்களும் தூயவாய் நலம் பயப்பனவாதல் பற்றி "எஞ்சாத நெடுங்காலம் இன்ப வெள்ளம் திளைத்தே இனிது மிக வாழி" என்றும், இத்தகைய வாழ்வு தானும் இறைவன் அருளாலன்றி எய்துவ தன்றென்பது புலப்பட, "எனக்கருளிச் செய்தாய்" என்றும் உரைக்கின்றார். சிந்திக்கும் செயலால் மனம் சித்தம் எனப்படுகிறது. வாழ்க்கை விளையாட்டாக மதிக்கப்படுவது பற்றி, "ஆடுக நீ வேண்டியவாறுக ஆடுக இவ்வுலகில்" என இயம்புகிறார். நம்பியாரூரரைத் தடுத்தாட்

கொண்டு வாழ்வித்த சிவபெருமான், "நின் வேட்கை தீர, வாழி மண் மேல் விளையாடுவாய் என்று ஆரூர் கேட்க எழுந்தது" (தடுத்தாட்) எனச் சேக்கிழார் தெரிவிப்பது காண்க. வேண்டியவாறுவது, மெய்யன்புக்கும் தூய சிந்தைக்கும் ஒத்தபடி, விழைவன விழைந்து செய்வன செய் தொழுகல்.

இதனால் திருவருட் காட்சி யனுபவம் கூறியவாறும். (19)

3048. **நான்கேட்கின் றவையெல்லாம் அளிக்கின்றாய் எனக்கு**
நல்லவனே எல்லாமும் வல்லசிவ சித்தா
தான்கேட்கின் றவையின்றி முழுதொருங்கே உணர்ந்தாய்
தத்துவனே மதி அணிந்த சடைமுடிஎம் இறைவா
தேன்கேட்கும் மொழிமங்கை ஒருபங்கில் உடையாய்
சிவனேஎம் பெருமானே தேவர்பெரு மானே
வான்கேட்கும் புகழ்த்தில்லை மன்றில் நடம் புரிவாய்
மணிமிடற்றுப் பெருங்கருணை வள்ளல்என்கண் மணியே.

உரை : வானுலகத்துத் தேவர்களும் விரும்பிக் கேட்கும் புகழ் கொண்ட தில்லையிலுள்ள,அம்பலத்தில் நடம்புரியும் பெருமானே: நீலமணி போலும் கழுத்தையுடைய பெரிய கருணை யுருவாக விளங்கும் வள்ளலே, என் கண்ணின் மணி போன்றவனே, தேன் போன்ற சொற்களையுடைய உமாதேவியை ஒருபாகத்தே யுடையவனே, சிவனே, எம்பெருமானே, தேவர்கட் கெல்லாம் பெரிய தேவனே, எல்லாம் வல்ல சித்தருட் சிவ சித்தனே, பிறர்பாற் கேட்கத் தக்க தொன்றுமின்றாக எல்லாவற்றையும் ஒருங்கே முற்றவும் உணர்ந்த முதல்வனே, தத்துவப் பொருளாயவனே, பிறைச்சந்திரனை யணிந்த சடை பொருந்திய முடியையுடைய இறைவனே, எனக்கு நல்லவனாய், நான் விரும்பிக் கேட்பன அனைத்தை யும், எனக்கு நல்கி யருளுகின்றாயாதலால் இனி எனக்கு ஒரு குறையும் இல்லையாம். எ.று.

சிவனது திருப்புகழைத் தேவரும் மக்களும் ஓதக் கேட்டு, உவகை மிகுகின்றார்கள் வானுலகத்துத் தேவர்கள் என்றற்கு, "வான் கேட்கும் புகழ்த் தில்லை மன்றில் நடம் புரிவோய்" எனப் புகழ்கின்றார். மணி - நீல மணி. மிடற்றின் மணி நிறம்- தேவர்கள் உய்தல் வேண்டிக் கடல் விடமுண் டருளிய, கருணையை நினைவில் மிகுவித்தல் பற்றி, "பெருங் கருணை வள்ளல்" என்றும், அந்நினைவே சிவஞானமாய் யாவையும் அறியச் செய்தலால், "என் கண்மணியே" என்றும் இசைக்கின்றார். தேன் கேட்கும் மொழி, தேனைப் போல் இனிமைச் சுவை பொருந்திய சொல்; கேட்கும், உவம வாய்பாடு. எம் பெருமானே என்றவிடத்து, எம்மென்ற தன்மைப் பன்மை மக்களினத்தை யுளப்படுத்தலின், தேவர்களிடையே நிலவும் சிறப்புரைக்க வேண்டித் "தேவர் பெருமானே" எனக் கூறுகின்றார். முற்று முணரும் முழு ஞான முதல்வனாதல் விளங்கச் சிவபிரானை, "தான் கேட்கின்றவையின்றி முழு தொருங்கே யுணர்ந்தாய்" எனவும், தத்துவ தாத்துவிகக் கூறுகள் அனைத்தும் தன்னுருவாகக் கொண்டவ னென்பார், "தத்துவனே" எனவும் கூறுகின்றார். பிறை

தங்கிச் சடை முடியின் வழகைப் பெறுதல் தோன்ற, "பிறை யணிந்த சடைமுடியெம் இறைவா" என்கின்ருர். கேட்பவற்றை மறுமல் கொடுப்பவரை, நல்லவரென்னும் உலகியல் மரபு நோக்கி, "எனக்கு நல்லவனே என்றும், எல்லாம் வல்ல சித்தர்கட்கு அவ்வல்லமையை அருளும் தலைவனுதல் பற்றி, "எல்லாமும் வல்ல சிவசித்தா" என்றும் இசைக்கின்ருர். கேட்பன அனைத்தையும் கேட்டவாறே நல்கப் பெறுவதால் குறைவின்மை குறிப்பெச்சத்தால் கூறப்பட்டது.

இதனுல் வேண்டியன வேண்டியாங்குப் பெற்ற அனுபவம் கூறியவாறும். (20)

3049. ஆனந்த வெளியினிடை ஆனந்த வடிவாய்
ஆனந்த நடம்புரியும் ஆனந்த அமுதே
வானந்த முதல்எல்லா அந்தமுங்கண் டறிந்தோர்
மதிக்கின்ற பொருளேவெண் மதிமுடிச்செங் கனியே
ஊனந்தங் கியமாயை உடலினிடத் திருந்தும்
ஊனமிலா திருக்கின்ற உளவருளிச் செய்தாய்
நானந்த உளவுகண்டு நடத்துகின்ற வகையும்
நல்லவனே நீமகிழ்ந்து சொல்லவரு வாயே.

உரை: இன்பம் நிலவும் ஞான வெளியில் இன்ப வுருவாய், இன்ப நடனத்தைச் செய்தருளும் இன்பச் சுவை மிக்க அமுதமே, அண்டங்கட்கு முடிவிடமாகிய அந்த முதற் கொண்டு நாதாந்த மீருக நிலவும் எல்லா அந்தங்களையும் கண்டுணர்ந்த பெருமக்கள் அறிந்து வியக்கும் சிவபரம்பொருளே, வெண்ணிறப் பிறைத் திங்களை முடியிற் கொண்ட சிவந்த கனி போன்றவனே, இருள் தங்கிய மாயையாலாகிய உடலிடத் திருந்தேனுயினும், இருளடராத வகையில் இருக்கும் உபாயத்தை எனக்கு அளித்தருளினுய் நல்லவனே; நான் அந்த உபாயத்தைத் தெளிந்து கொண்டு, செய்யத் தகுவனவற்றை எனக்கு உவந்து உரைக்க என்பால் வந்தருள்க. எ.று.

ஆனந்தம், இன்பம். இன்பம் ஞானமயமாதலின், ஞானுகாசமாகிய சிற்றம் பலத்தை "ஆனந்த வெளி" என்றும், அங்கே நின்ருடும் கூத்தப் பிரான் இன்ப வடிவினனுதலால், "ஆனந்த வடிவாய்" என்றும், அப் பெருமான் கூத்து, எவ்வுயிர்க்கும் இன்ப அன்பினை வழங்குவது கொண்டு, "ஆனந்த நடம் புரியும் ஆனந்த அமுதே" என்றும் பராவுகின்ருர். இது சொற் பொருட் பின் வருநிலை. ஏனை வருமிடங்களிலும் இதுவே கூறிக் கொள்க. வான் என்றது, வானத்துப் பலவாகிய அண்டங்கள்; அவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும் வானமுகடு வானந்தம் எனப்படுகிறது. நில முதல் சிவ மீருகக் கூறப்படும் தத்துவங்கட்கு அந்தமாவது நாதாந்தம். இவற்றிடையே யோகாந்தம் போதாந்தம் எனப் பல அந்தங்கள் உண்மையின், அவை யெல்லாம் அடங்கவே, "எல்லா அந்தமும் கண்டறிந்தோர்" என மொழிகின்ருர். இவை பலவும் கண்டறிந்த நுண்ணறிவோர் நுண்ணிதின் உணரும் பொருளாதலின் சிவனை,

"அறிந்தோர் மதிக்கின்ற பொருள்" என அறிவிக்கின்றார். செம்மேனியனாதலால், சிவனைச் "செங்கனி" எனச் சிறப்பிக்கின்றார். ஊனம் தங்கிய மாயை, ஊனமாகிய இருள் செய்யும் மயக்கம் தரும் மாயை. "ஊனத்திருள் நீங்கிட வேண்டின்" (மயிலாடு) எனவும், மாயா காரியமாகிய வுடம்பை, "ஊனமாம் உடம்பு" (கானப்பேர்) எனவும் ஞானசம்பந்தர் கூறுகிறார். உடற்கு முதலாகிய மாயை விளைவிக்கும் மயக்கமாகிய இருள் தாக்காதவாறு திருவருணினைவாற் காத்துக் கொள்ளும் உபாயத்தை, "ஊனமிலா திருக்கின்ற உளவு" என்கிறார். நல்லவன் - நன்மையே உருவாகியவன். திருவருள் ஞான வுணர்வும், அதனைத் தாக்குவன வற்றினின்றும் காத்துக் கொள்ளும் உபாயமும் சிவத்தின் திருவருளாலன்றிக் கைவராமையின், "நீ மகிழ்ந்து சொல்ல வருவாயே" என வேண்டுகின்றார்.

இதனால், அறியாமை யிருள் தாக்காமற் காத்துக் கொள்ளும் உளவினை யுரைக்க வேண்டியவாறும். (21)

3050. ஆரணமும் ஆகமமும் எதுதுணிந்த ததுவே
அம்பலத்தில் ஆடுகின்ற ஆட்டமென எனக்குக்
காரணமுங் காரியமும் புலப்படவே தெரித்தாய்
கண்ணுதலே இங்கிதற்குக் கைம்மாறென் றறியேன்
பூரணநின் அடித்தொண்டு புரிகின்ற சிறியேன்
போற்றிசிவ போற்றிஎனப் போற்றிமகிழ் கின்றேன்
நாரணநான் முகன்முதலோர் காண்பரும்அந் நடத்தை
நாயடியேன் இதயத்தில் நவிற்றியருள் வாயே.

உரை : கண்ணுதற் கடவுளே, வேதமும் ஆகமமும் எதனை முதற் பொருள் எனத் துணிந்தனவோ அதுவே அம்பலத்தில் நிகழ்கின்ற திருக்கூத் தென்று எனக்குக் காரண காரியத்தோடு விளங்கக்காட்டி யருளினாய்; இங்கே இதற்கு என்ன கைம்மாறு செய்வேன்; பூரணப் பொருளாகிய நினக்கு அடித்தொண்டு செய்தொழுகும் சிறியவனாகிய யான், சிவனே போற்றி; சிவனே போற்றி என்று போற்றி செய்து மகிழ்கிறேன்; திருமால் பிரமன் முதலிய தேவர்களாற் காண்டற் கரிதாகிய அந்தத் திருக்கூத்தை, நாயிற் கடையாய அடியவனாகிய எனது இதய கமலத்தில் ஆடியருள்க. எ.று.

ஆரணம் - வேதம். வேதாந்தமும் ஆகமாந்தமும் ஆய்ந்துரைக்கும் முடிவான உண்மை திருச்சிற்றம்பலத்தில் சிவன் நடிக்கும் திருநடனம் என்று திருவருட் சிந்தனையால் தமக்கு எய்தினமை விளங்க, "ஆரணமும் ஆகமமும் துணிந்தது எது அதுவே அம்பலத்தில் ஆடுகின்ற ஆட்டம் எனத் தெரித்தாய்" எனவும், உண்மை யறிவோர், அதனை ஏது எடுத்துக் காட்டுக்களால் விளக்குவது மரபாகலின், "காரணமும் காரியமும் புலப் படவே தெரித்தாய்" எனவும் இயம்புகின்றார். ஆட்டம் - திருக்கூத்து, காரியத்துள் எடுத்துக் காட்டும் அடங்குதலின், காரண காரியம் என இரண்டுமே ஈண்டுக் குறிக்கப் படுகின்றன. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள்

சோதி'' (பாச) எனத் திருஞானசம்பந்தர் உரைப்பது காண்க. தெரித்தல் - தெரிவித்தல். கண்ணுதல் - கண் பொருந்திய நெற்றி. பெறற் கருமை விளங்கக் "கைம்மா றென்றறியேன்'' என்று இசைக்கின்ருர். பூரணனே என்பது பூரண என அண்மை விளியேற்றது. இதனைத் தமிழ் நூலோர் குறைவிலா நிறைவு என்பர். அடித்தொண்டு - திருவடி வழிபாடு. செய்வது திருவருட் பெருந் தொண்டாயினும் பணி வுடைமை பற்றி, "அடித் தொண்டு புரிகின்ற சிறியேன்'' என்றும், திருவடியை மலரிட்டு வணங்கித் திருப்பெயரை வாயாற் போற்றுதல் திருத் தொண்டாதலின், "போற்றி சிவ போற்றி எனப் போற்றி மகிழ்கின்றேன்'' என்றும் இயம்புகின்ருர். திருநடனத்தின் உண்மைப் பொருளை யுரைத் தருளிய நீ என் மனத்தின் கண்ணும் சேரமான் பெருமாளுக்குப் பூசை முடிவிற் காட்டியது போல எளியனுகிய யான் அறிய ஆடி யருள்க என்று வேண்டுவாராய், "அந்நடத்தை நாயடியேன் இதயத்தில் நவிற்றி யருள்வாயே'' என முறையிடுகின்ருர். பசு பாச ஞான மூர்த்தங்களா தலால், "நாரண நான்முகன் முதலோர் காண்பரும் அந்நடம்'' என்கின்ருர். காண்பு - காண்டல்.

இதனுல் திருவம்பல நடன வுண்மை தெரிந்தமை அறிவித்தவாரும். (22)

3051. இறைவநின தருளாலே எனைக்கண்டு கொண்டேன்
எனக்குள்உனைக் கண்டேன்பின் இருவரும்ஒன் ருக
உறைவதுகண் டதிசயித்தேன் அதிசயத்தை ஒழிக்கும்
உளவறியேன் அவ்வுளவொன் றுரைத்தருளல் வேண்டும்
மறைவதிலா மணிமன்றுள் நடம்புரியும் வாழ்வே
வாழ்முதலே பரமசுக வாரிஎண்கண் மணியே
குறைவதிலாக் குளிர்மதியே சிவகாமவல்லிக்
கொழுந்துபடர்ந் தோங்குகின்ற குணநிமலக் குன்றே.

உரை: நிலை பெற்ற மணி வேய்த அம்பலத்தின்கண் திருநடம் புரிகின்ற வாழ்வும் வாழ்முதலுமானவனே, மேலான சுகத்தைத் தருகிற கடல் போன்றவனே, எனக்குக் கண்ணின் மணியானவனே, தேய்வ தில்லாத குளிர்ந்த சந்திரன் போன்றவனே, சிவகாமி யென்றும் கொடி பற்றிப் படர்ந்து ஓங்குகின்ற குண வுருவாய்க் குற்றமில்லாத குன்றமாகியவனே, இறைவனுகிய உனது திருவருள் ஞானத்தால் என்னைக் கண்டறிந்து எனக்குள் ஒளிரும் உன்னைக் கண்டறிந்தேன்; பின்பு நாம் இருவரும் பொருந்தி யிருப்பது கண்டு அதிசய மடைந்தேன்; ஆயினும் அந்த அதிசயத்தைப் போக்கி அனுபவத்தைப் பெறலாகும் உபாயத்தை இன்னும் அறிகின்றிலேன்; அவ்வுபாயத்தை அடியேனுக்கு உரைக்க வேண்டுகிறேன். எ.று.

மறைவது இலா நடம் என இயையும். மணி மன்று - மணிகள் இழைத்த பொன்னம்பலம். நடம் புரியும் அருட் செயலால் உலகுயிர் கட்கு வாழ்வளிப்பதால் "நடம் புரியும் வாழ்வே" எனவும், வாழ்வுக்கு வேண்டிய நிலம் பொருள் கருவி கரணங்களுக்குரிய முதலுக்கும் இறைவனே காரணமாதலால் "வாழ்முதலே" எனவும் இயம்புகின்ருர்.

"போற்றி யென் வாழ்முதலாகிய பொருளே" (திருப்பள்ளி) என மணிவாசகர் குறிப்பது காண்க. பரமசுகம் - சிவானந்தம். இன்ப மனைத்துக்கும் மேலானது பற்றிப் பரமசுகம் - எனப்படுகிறது. கடல் போல் அளப்பரிதாகலின், "பரம சுகவாரி" எனக் கூறுகின்ருர். சுகவாரி - சுகக் கடல். இன்ப சுகத்தால் அறிவு மயக்க முருது ஞானவொளி மிக்கு விளங்குதலால் "என் இரு கண்மணியே" என இசைக்கின்ருர். சுகவாரி என்பது தாயுமானுர் கையாண்ட வழக்கு. உலகவர் காண விளங்கும் நிலவு குறைவதும் வளர்வது முடையதாகலின், சிவமாகிய ஞானத் திங்கள் அவ்வாறில்லை என்பாராய்க் "குறைவதிலாக் குளிர் மதியே" எனச் சிறப்பிக்கின்ருர். தில்லையிற் சிவகாமி என்பது அம்மைக்குப் பெயராதலின், அவளைப் பசுங்கொடியாகவும், சிவபெருமானை அக்கொடி பற்றிப் படர்ந்து விளங்கும் குன்றமாகவும் புனைந்து, "சிவகாம வல்லிக் கொழுந்து படர்த்தோங்குகின்ற குண நிமலக் குன்றே" எனப் போற்று கின்ருர். இளமை நலமும் பசுமை நிறமும் புலப்பட, "வல்லிக் கொழுந்து; என்றும், தூய குமண யுருவாகிய குன்ற மென்றற்குக் "குண நிமலக் குன்று" என்றும் கூறுகின்ருர். தம்மை யுணர்ந்த பின்பே தலைவனை யுணர்தல் சான்ருேர் இயல்பாதலால், "எனைக் கண்டு கொண்டேன்" எனவும், உயிராகிய தன்னைக் காணுமிடத்துத் தனக்குள் உயிர்க் குயிராகும் தலைவனைக் காணுதலின், "எனக்குள் உனைக் கண்டேன்" எனவும் இயம்புகிருர். இக்காட்சி தானும் திருவருளறிவாலன்றி நிகழ்வ தின்மை புலப்பட, "இறைவன் நினதருளாலே" எனக் கூறுகிருர். மெய்கண்டாரும், "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" (சிவ.போ.) என்பது காண்க. "தன்னாலே தனை யறிந்தால், தன்னையும் தானே காணும்" (சிவப்) என உமாபதி சிவனாரும் கூறுதல் காண்க. உயிரியல்பை யுணருமிடத்து உயிர்க்குள் உணர்வுருவாய் இறைவன் உறைவ துணரப்படுவது பற்றி, "பின் இருவரும் ஒன்ருக உறைவது கண்டு அதிசயித்தேன்" என வுரைக்கின்ருர். உயிர்க்குயிராய் ஒன்ருதலும், உயிரும் உயிருமாய் உடனாதலும் காணப்படுதலின், காண்பார்க்கு வியப்புத் தோன்றுதலால் "அதிசயித்தேன்" என இசைக் கின்ருர். "ஒன்ருய் வேருய் உடனானன் இடம் வீழிம் மிழலையே" (வீழி) என்று ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. அருமை பெருமைகளால் வேருயவன் எளியனாய் ஒன்ருய் உடனாதல் வியப்பைத் தருவது உலகியல் மரபு; அதற்கு எனது சிற்றறிவு காரணமாகலாம்; அதனைப் போக்கிய வழி வியப்புணர்வு நீங்கும்; அதற்குரிய உபாயம் அருளுக, என வேண்டுவாராய், "அதிசயத்தை ஒழிக்கும் உளவறியேன்; அவ்வளவு ஒன்று உரைத்தருளல் வேண்டும்" என விண்ணப்பிக்கின்ருர். அதிசயம் - வியப்பு; மருட்கையுமாம். அரியதில் அரிதாகிய பரம்பொருள் எப் பொருளிலும் கலந்து எளிதாதல் கண்டு மணிவாசகப் பெருமான், "அரியதில் அரிய அரியோன் காண்க; மருவி யெப்பொருளும் வளர்ப் போன் காண்க." (அடைப்) என வியப்பது நோக்குக.

இதனால், தன்னையும் தலைவனையும் கண்டு எய்திய, அதிசயத்துக் கேதுவாய மருட்கையைப் போக்க விண்ணப்பித்தவாறும். (23)

3052. சத்தியமெய் அறிவின்ப வடிவாகிப் பொதுவில்
தனிநடஞ்செய் தருளுகின்ற சற்குருவே எனக்குப்
புத்தியொடு சித்தியும்நல் லறிவும்அளித் தழியாப்
புனிதநிலை தனிலிருக்கப் புரிந்தபரம் பொருளே
பத்திஅறி யாச்சிறியேன் மயக்கம்இன்னுந் தவிர்த்துப்
பரமசுக மயமாக்கிப் படிற்றுளத்தைப் போக்கித்
தத்துவநீ நான்என்னும் போதமது நீக்கித்
தனித்தசுகா தீதமும்நீ தந்தருள்க மகிழ்ந்தே.

உரை : மெய்ம்மையாகிய சச்சிதானந்த வடிவுடன் அம்பலத்தின் கண் ஒப்பற்ற திருநடனம் புரிந்தருளும் சற்குருவே, எளியனுகிய எனக்கு அறிவும் சித்தியும் நல்லுணர்வையும் நல்கிக் கெடாத தூய ஞான நிலையில் இருக்குமாறு திருவுள்ளம் செய்த பரம்பொருளே, பத்தி நெறியை அறியாத சிறியவனுகிய என்பால் உளதாகிய மயக்கத்தை மேலும் போக்கி, மேலாய ஞான வின்பத்தை எனக்கு உண்டாகப் பண்ணி, என்னுள்ளத் திற் படிந்துள்ள குற்றத்தை யொழித்துத் தத்துவப் பொருளாகிய நீ வேறு நான் வேறு என்னும் வேறுபாட்டைக் கெடுத்து, ஒப்பற்றதாகிய சுகாதீத நிலையையும் உவப்புடன் தந்தருள்க என வேண்டுகிறேன். எ.று.

மெய் சத்தெனவும், அறிவு சித்தெனவும், இன்பம் ஆனந்தம் எனவும் சமய ஞான நூல்கள் வழங்குதலால், அம்மூன்றையும் சேர்த்துச் சச்சிதானந்தம் என ஒரு சொற் படுத்திக் கூறுவர். சச்சிதானந்தத் திருவுருவை, "மெய்யறிவு இன்ப வடிவாகி" என்றும், இவ்வடிவம் என்றுமுள்ள மெய்ப் பொருளாதல் விளங்க, "சத்திய மெய்யறி வின்ப வடிவாகி" என்றும் இயம்புகின்ருர். உலகுயிர்கட்கு உய்தி விளைவிக்கும் திருக்கூத்தாதலால், "தனி நடம்" என்றும், நடம் புரியுமாற்றுல் கண்டு மகிழ்பவர்க்கு நன்ஞானம் எய்துவித்தலால் கூத்தனே என்னுமல் "சற்குருவே" என்றும் புகழ்கின்ருர். கண் காது முதலிய கருவிகளாற் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை மனமாகிய கரணத்தால் தெளிந்து பெறும் உண்மை யுணர்வு புத்தி என்பது. புத்தியின் நன்மையும் தீமையும் அருள் வழி யியங்கும் உயிருணர்வின் பயனுதலால், நற்புத்தி உளதாயதற்குத் திருவருள் முதலாவதைப் புலப்படுத்தற்கு "அளித்து" என இறைவன் செயலாகத் தெரிவிக்கின்ருர். வருகின்ற சித்திக்கும் நல்ல அறிவுக்கும் இதுவே நிலைமையாகக் கொள்க. சிந்தித்தவை சிந்தித்தவாறே கைவரபெறுவது சித்தி; நலம் தருவதை நாடிக் காண்பது நல்லறிவு. தூய வாழ்க்கைக்கு இவை வேண்டப்படுதலால் இவற்றை இனிதளிக்குமாறு வேண்டுகிருர். இயற்கையிலேயே இவை யாவர் பாலும் உள்ளன வாயினும் மறவாமல் நினைவின்கண் நிலவுமாறு காத்தலை வேண்டி இறைவன்பால் முறையிடுகிருர். இடரினும் தளரினும் நோயுறினும் நினைவும் சொல்லும் செயலும் தீய நெறியிற் செல்லாத தூய நிலையைப் "புனித நிலை" யென்றும், குண மயக்கத்தால் தவறுண்டாதல் இயல் பாதலால், "அழியாப் புனித நிலை" என்றும், அந்நிலையில் தம்முடைய கருவி கரணங்கள் செயற்பட்டிருத்தல் விளங்க, "புனித நிலைதனிலிருக்க புரிந்த பரம்பொருளே" என்றும் இயம்புகின்ருர். பொருள்களில் தோற்றமும் செயலும் இயலும் காண்பார் குணங்களை மாற்றுவனவாக,

மாறுமல் செந்நிலையில் நிற்கப் பண்ணும் நீர்மை கண்டு சிவனை, "பரம் பொருளே" எனப் பகர்கின்றார். குடி வரவாலும் பெரியோர் செயலாலும், இறை யுணர்வாலும் தூய்மை பெருமைகளையுடைய தெய்வத்தின்பாலும், பெற்றோர் பெரியவர்பாலும் உளதாகும் நன்மதிப்பு உள்ளம் பத்தியாகும். நலமும் பெருமையும் தெரிந்தாலன்றி நல்ல பத்தி யுணர்வு எய்தா தாகலின், "பத்தியறியாச் சிறியேன்" எனத் தம்மை யுரைக்கின்றார். மயக்கம் காம வெகுளிகள் போல முற்றவும் கடியப் படாத வியல் பிற்றுதலால், "மயக்கம் இன்னும் தவிர்த்து" என்றும், மயக்கத்துக்கு இடமில்லாத இன்ப நிலையே மேலான இன்ப நிலையாதலால், "பரம சுக மயமாக்கி" என்றும், சுக மயமாயினும் அதனை யனுபவிக்கச் செய்யும் உள்ளம் உடனில்லாது பெயர்ந்து படிற்றுணர்வுகட்கு இடமாதலுண்மை யின், "படிற்றுளத்தைப் போக்கி" என்றும் இயம்புகின்றார். உள்ளத்துப் படிற்றைப் போக்கி என மாற்றுக. பொருட்டன்மையால் உயிர் வேறு இறைவன் வேறு என நிற்றல் பற்றிப் பேதம் காணப்படுவதுண்மையின், அனுபவ நிலையில் அது பொருந்தாமையால் "நீ நான் என்னும் பேதமது நீக்கி" எனவும், உலகியற் பொருளின்பங்கள் நல்கும் சுகம் போலாது மேலாதல் விளங்க, "தனித்த சுகாதீதம் நீ தந்தருள்க" எனவும் இசைக்கின்றார். அதீதம் - மேல் - தத்துவன், உண்மைப் பொருளாகியவன். "தாயான தத்துவன்" எனத் திருவாசகம் கூறுவ தறிக. பரம்பொருள்பால் வேண்டத் தக்கது இதுவே யாதலால், "பரம் பொருளே தனித்த சுகாதீதம் நீ மகிழ்ந்து தந்தருள்" என்று கூறுகின்றார். சுகானுபவத்துக் குரிய கருவி கரணங்கள் கழன்று நுகர்வதாதலால், "தனித்த சுகாதீதம்" எனினும் பொருந்தும்.

இதனால் தனித்த சுகாதீதம் வேண்டுமென விண்ணப்பித்தவாறும், (24)

3053. ஏதும்அறி யாதிருளில் இருந்தசிறி யேனை
எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து
ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர
உணர்விலிருந் துணர்த்திஅருள் உண்மைநிலை காட்டித்
தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்
திருஅருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும்
நான்மருளும்
போதுமயங் கேல்மகனே என்றுமயக் கெல்லாம்
போக்கிஎனக் குள்ளிருந்த புனிதபரம் பொருளே.

உரை: எதுவும் அறியாமல் அறியாமை யிருளில் கிடந்து, சிறுமைப் பட்டுக் கிடந்த என்னை, எனது நிலையினின்றும் எடுத்து நிறுத்தி அறிவும் சிறிது பொருந்தச் செய்து, நாளும் வேதியரால் ஓதப்படுகிற வேத முதலாக வுள்ள நூற் கருத்துக்களைப் படிக்காமலே உணருமாறு, என் உணர்வின்கண் இருந்து உணர்த்தியதுடன் திருவருளின் உண்மை நிலையையும் இதுவெனக் காட்டிக் குற்றம் மிக்க சமயங்களின் போக்கிற் செல்லுகிற என்னைத்தடுத்துத் திருவருள் நெறியாகிய மெய்ம்மையமைந்த, பொது நெறியிற் செல்வித்து, அதன்கண் நான் மயங்கும் காலத்தில் மகனே மயங்குதல் ஒழிக எனவுரைத்து, எனக்கு எய்திய மயக்க வுணர்வுகளை

யறவே நீக்கி எனக்குள்ளேயே எழுந்தருளும் தூய பரம்பொருளே, என் மயக்க மெல்லாம் தவிர்த்து என்னை அடிமை கொள்ளல் வேண்டும். எ.று.

வள்ளலாருடைய அறிவு வரலாறு குறிக்கும் இப்பாட்டு "முன்னறியேன்" (3054) எனத் தொடங்கும் பாட்டிற் குளகமாய் வினை முடிபு பெறுதலால் "எனையடிமை கொள்ளல்" என்ற முடிபு உரையிற் பெய்து கூறப்படுகிறது. இளமைப் பருவத் தொடக்க நிலையில், சிறிதும் அறிவறியா திருந்தமையை, "ஏதும் அறியாது இருளில் இருந்த சிறியே" னெனவும், அச் சிறுமை நீங்குதல் வேண்டிப் பள்ளியை யடைந்து ஓரளவு கல்வி பெற்ற திறத்தை, "எடுத்து விடுத்து அறிவு சிறிது ஏய்ந்திடவும் புரிந்து" எனவும் எடுத்துரைக்கின்றார்." அதனோடு பள்ளிக் கல்வி நின் றொழிந்த தாக, திருவருள், வள்ளற் பெருமான் திருவுள்ளத்தில் தங்கி, மெய் யுணர்வுக்குப் படி முறையாக இருக்கும் மறை முதலிய ஞான நூற் கருத்துக்களை நல்கின செய்தியை, "ஓது மறை முதற் கலைகள் ஓதாமல் உணர உணர்விலிருந்து உணர்த்தி" எனக் கூறுகிறார். தந்தை யோதக் கேட்டு மைந்தன், ஓதுவதும், அவன் ஓதக் கேட்டு அவன் மகன் ஒதுவதுமாக ஓதப்படுவது பற்றி, மறை நூல்களை "ஓதும் மறை" எனவும், பிற உபநிடதங்களும், இதிகாச புராணங்களும் அடங்கக் "கலைகள்" எனவும், இவற்றை ஒருவர்பால் ஓதிக் கேட்கா தொழிந்தமை விளங்க, "ஓதாமல்" எனவும், மேல் உணரக் கடவதாகிய திருவருளுணர்வுக்கும் படி முறையாகவுள்ள கலைகளின் அறிவு தமக்கு எய்தினமை கூறுவாராய், "உணர வுணர்விலிருந்து உணர்த்தி" எனவும் உரைக்கின்றார். தானும் கல்லாது, பிறர்பால் கேட்டலும் செய்யாதிருக்க, கலைஞான நுட்பம் பலவும் தமக்கு வந்தவாறு நினைப் பார்க்கு இது பரம்பொருளின் அருட் செயல் எனத் தெரிந்தமையின் அதனை வியந்து பேசுகின்றார். நூலறிவு காட்டிய அப்பொருள் உண்ணின்றுணர்த்து முகத்தால் திருவருள் உண்மையை யுணர்த்திற் றென்பார், "அருள் உண்மை நிலை காட்டி" என்றும், பின்பு, அக்காட்சி வழித் தனித்தேக விடாமல், தீச் சமய நெறியிற் செல்லா வகை நீக்கிற் றென்றற்கு, "தீது செறி சமய நெறி செல்லுதலைத் தவிர்த்து" என்றும் இயம்புகின்றார். தீது செறி சமயம் - சூதும் வாதும் உடையதாய், பொய்யும் புனைந்துரையும் நிறைந்ததாகிய சமயம். பரம்பொருள் காட்டிய நெறி யாதாம் என்னில், திருவருளை முதலாகக் கொண்டொழு கும் உண்மைப் பொது நெறி என்பாராய், திருவருள் மெய்ப் பொது நெறியிற் செலுத்தி" நீறு என்று கூறுகின்றார். இதுவே பின்னர், சுத்த சமரச சன்மார்க்க மென இயங்குவதாயிற்று. சுத்தம் - மெய்ம்மை. சமரசம் - பொது. சன்மார்க்கம் - மெய்ந்நெறி; நன்னெறியுமாம். மயக்க முறுவது உயிர்க்கு இயல்பாகலின், திருவருள் செலுத்திய நெறியிற் சென்றபோதும் மயக்கம் புகுந்து அலைத்தமை விளங்க, "நான் மருளும் போது மயங்கேல் மகனே என்று மயக்கெல்லாம் போக்கி" என்றும், செலுத்தியும் மயக்கம் போக்கியும் அருள் புரிந்த பொருள் எங்கிருந்து செய்தது என வினவுவார்க்கு விடை கூறுவாராய், "எனக்கு உள்ளிருந்த பரம்பொருள்" என்றும் புகன்றுரைக்கின்றார். எனக்குள் தூய்மை யில்லாதன இருப்பினும், அவற்றால் தூய்மை கெடாதது பரம்பொருள்

என்றற்குப் "புனித பரம்பொருள்" என வுரைக்கின்றார். அது காட்ட வந்த புனிதப் பொது நெறி சுத்த சமரச நன்னெறியாதல் காண்க.

இதனால், சுத்த சமரச நெறி தோன்றிய வரலாறு ஒருவாறு குறிக்கப் பட்டவாறும். (25)

3054. முன்னறியேன் பின்னறியேன் முடிபதொன்று மறியேன்
முன்னியுமுன் னாதும்இங்கே மொழிந்தமொழி முழுதும்
பன்னிலையில் செறிகின்றோர் பலரும்மனம் உவப்பப்
பழுதுபடா வண்ணம்அருள் பரிந்தளித்த பதியே
தன்னிலையில் குறைவுபடாத் தத்துவப்பேர் ஒளியே
தனிமன்றுள் நடம்புரியுஞ் சத்தியதற் பரமே
இந்நிலையில் இன்னும்என்றன் மயக்கமெலாந் தவிர்த்தே
எனைஅடிமை கொளல்வேண்டும் இதுசமயங் காணே.

உரை: பரமாகிய தனது நிலையில் இழுக்குறாத தத்துவப் பேரொளி யாகியவனே, ஒப்பற்ற அம்பலத்தில் ஆடுகின்ற மெய்ம்மை சான்ற தற்பரனே, நான் முன்னுமறியேன், பின்னுமறியேன், எதிர்காலத்தில் முடிவாய் நிற்பதையும் அறியேன்; இவற்றை எண்ணியும் எண்ணாமலும் இங்கே நான் சொன்ன சொல் முழுதும் பல்வேறு நிலைகளிலிருந்து ஒழுகு கின்ற பலரும் மனம் உவகையுற்றுக் குற்றப்படாதபடி எனக்கு அருள் புரிந்தருளிய தலைவனே, இந்நிலையில் மேலுறும் என்னுடைய மயக்கங் களைப் போக்கி என்னை உனக்கு அடிமையாக்கிக் கொள்ளற்கு இது தக்க காலமாகும். எ.று.

தன் நிலை - பரம்பொருள் என்னும் தனது நிலைமை. இதனைப் பூரணப் பொருள் எனவும், குறைவிலா நிறைவே கோதிலா வமுதே ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே" (கோயில்) எனவும் சான்றோர் கூறுவதன்றிக் குறைவுடையதாகக் கூறுவதின்மை பற்றி, "தன்னிலையிற் குறைவு படாத் தத்துவப் பேரொளியே" எனக் கூறுகின்றார். "தனி மன்றுள் நடம் புரியும்" என்றாராயினும் மன்றுள் தனி நடம் புரியும் என மாறிக் கொள்க - தனி நடம் - ஒப்பற்ற ஞான நடனம். தற்பரம் - தனக்குத் தானே பரமானது. பரம் - மேன்மை, முன்னென்றது காரணம், பின்னென்றது காரியம்; முடிபு - பயன். முன்னுதல் - முற்பட எண்ணுதல். பேசுவோர் பேசும் பொருளை முன்னுற எண்ணி மொழிவதும், அவ்வாறு எண்ணாமல் மொழிவதும் உலகியலில் உண்டாகலின், "முன்னியும் முன்னாமலும் மொழிந்த மொழி" எனவும், முன்னாமல் மொழிவன பிழை படுவதுண்டாதலால் அதனையும் உளப்படுத்தற்கு, "மொழிந்த மொழி முழுதும்" எனவும், பல திறத்து மக்கள் மனமார ஏற்று மகிழ்கின்றார் கள் என்பார், "பன்னிலையிற் செறிகின்றோர் பலரும் மனமுவப்ப" எனவும் எடுத்துரைக்கின்றார். பன்னிலை - செல்வ வறுமை நிலை; கற்றவர் கல்லா தவர் நிலை; ஆடவர் பெண்டிர் நிலை என வரும் நிலைகள். அவ்வந் நிலைகளில் அழுந்தி யிருப்போரை, "செறிகின்றோர்" என்றும், அவரனை வரும் தமது மொழியைக் கேட்டு மனம் உவந்து ஏற்கின்றமை தோன்ற,

''பலரும் மனமுவப்ப'' என்றும், தாம் மொழிவது பழுது படின், பலரும் ஏமாற்றத்தால் வருந்துவராதலின், ''பழுது படாவண்ணம் அருள் பரிந்தளித்த பதியே'' என்றும் இசைக்கின்றார். இஃது என்னுடைய நிலை; இந்நிலையிலும் எனக்குப் பலவகையில் மயக்கவுணர்வு தோன்றி உள்ளத்தை அலைப்பதால் அவற்றைப் போக்கித் தெளிவருள்க என வேண்டலுற்று, ''இந்நிலையில் இன்னும் என்றன் மயக்கமெலாம் தவிர்த்தே'' எனவும், அடியார் செய்வனவற்றைத் தம்முடையவாகக் கருதிப் பழுது படாவண்ணம் ஏன்றருளுவது பற்றி, ''எனை யடிமை கொளல் வேண்டும்'' எனவும், அதற்கு இதுவே ஏற்ற தருணம் என்பார், ''இது சமயம் காண்'' எனவும் விண்ணப்பிக்கின்றார். ''அடியார் செய்த அனுசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும் சீருத பெருமான்'' (மாற்பேறு) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க. காண் - முன்னிலை யசை.

இதனால், முன்பின் நோக்காது, மொழிந்தவை பழுது படாவாறு என்னை அடிமை கொள்க என வேண்டியவாறும். (26)

3055. ஐயறிவிற் சிறிதும்அறிந் தனுபவிக்கத் தெரியா
தழுதுகளித் தாடுகின்ற அப்பருவத் தெளியேன்
மெய்யறிவிற் சிறந்தவருங் களிக்கஉனைப் பாடி
விரும்பிஅருள் நெறிநடக்க விடுத்தனை நீ யன்றோ
பொய்யறிவிற் புலைமனத்துக் கொடியேன்முன் பிறப்பில்
புரிந்ததவம் யாததனைப் புகன்றருள வேண்டும்
துய்யறிவுக் கறிவாகி மணிமன்றில் நடஞ்செய்
சுத்தபரி பூரணமாஞ் சுகரூபப் பொருளே.

உரை: மெய்யுணர்வுக்கு உணர்வாகி அழகிய அம்பலத்தில் நடம் புரிகின்ற சுத்த பரிபூரணமாயுள்ள இன்ப வடிவாகிய பரம்பொருளே, கண் முதலிய ஐந்து வகைப் பொறிகளாலும் சிறிதளவும் தெளிவாக அறிந்து அனுபவிக்கத் தெரியாமல் புலம்பியும் மகிழ்ந்தும் விளையாடிப் பொழுது கழிக்கின்ற அந்த இளம் பருவத்தில் எளியனாகிய யான், உண்மையறிவால் உயர்ந்தவரும் உவக்கும்படி உன்னைப் பாடி, அருள் நெறிக்கண் அன்புடன் ஒழுகும்படி என்னைச் செலுத்துவாயாயினை யன்றோ? பொய் யுணர்வும் புலைத்தன்மை பொருந்திய மனமுமுடைய கொடியவனாகிய யான், முன்பிறப்பிற் செய்த தவம் யாதோ? அதனை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். எ.று.

ஐயறிவு - கண் முதலிய பொறிகள் ஐந்தாலும் பெறும் அறிவு. இளம் பருவத்தில் இந்த அறிவு ஐந்தாலும் பெரிதும் அறிவு வளர்தல் இயல் பாகலின், ஐயறிவை எடுத்தோதுகின்றார். பொறியுணர்வு வளர வளர மன வுணர்வு வளர்ச்சி பெறுதலின் இரண்டாலும் உளதாகும் உண்மை யறிவு இளமைக்கண் சிறிதாதலால், ''சிறிது அறிந்து அனுபவிக்கத் தெரியாது'' என்றும், தெரியாத வழி அழுதலும் தெரிந்த வழி மகிழ்தலும் இளமைக் காலத்து இயல் நெறியாதலால், ''அழுது களித்தாடுகின்ற அப்பருவம்'' என்றும், அக்காலத்தேயே கற்றவர் கண்டு பொருணலம்

தேர்ந்து இன்புற்றுப் பாராட்டு மளவில் பாடும் திறமை எய்தியிருந்த தாக உரைக்கின்றவர், அதனைத் தமது செயலாக்காமல் திருவருட் செயலாக எண்ணியிருந்தமை விளங்க, "அப்பருவத்து எளியேன் மெய்யறிவிற் சிறந்தவரும் களிக்க" என்றும், "உனை விரும்பிப் பாடி அருணெறி நடக்க நீ என்னை விடுத்தனை யன்றோ" என்றும் இசைக்கின்றார். மெய்யறிவிற் சிறந்தோர், பொறி வாயிற் காட்சிகளாலும் மானதக் காட்சிகளாலும் பெற்ற அறிவுடன் உண்மையறிவும் கொண்டு மேம்படும் அறிஞர்கள், வள்ளற் பெருமான் பாடிய பாட்டுக்களை நயந்து சிறந்தோர் பாராட்டியது இங்கே தெரிவிக்கப்படுகிறது. தமது சிறுமையையும் பாடும் பாட்டின் பெருமையும் நோக்கி, இதற்குக் காரணம் திருவருளறிவன்றி வேறில்லையென்று முதுமையுற்ற காலத் தெண்ணித் தெளிகின்றாராகலின், "அருள் நெறி நடக்க விடுத்தனை நீ யன்றோ" என வோதுகின்றார். திருவருளறிவு மிக்க இளமைக் கண்ணே தமக்கு உண்டானதற்குக் காரணம் காண்பவர், "தவத் தளவேயாகும் நான் பெற்ற செல்வம்" என்றும், "தவமும் தவமுடையார்க்காகும்" என்றும் முன்னோர் கூறுதலால் தவமே காரணமாதலறிந்து அத்தவம் யாதாகலாம் என அறியும் வேட்கையால் "முன் பிறப்பில் புரிந்த தவம் யாது அதனைப் புகன்றருள வேண்டும்" என வேண்டுகின்றார். உயிர்களின் வினை வகைகளைக் கண்டு உரிய பயனை அறிவு வழி யூட்டுவிக்கும் முதல்வனாதல் பற்றி, "துய்யறிவுக் கறிவாகி மணி மன்றில் நடஞ்செய் சுத்த பரிபூரணமாம் சுக ரூபப் பொருளே" எனப் பராவுகின்றார். தூய அறிவு - துய்யறிவு என வந்தது. உயிரறிவின்கண் அதன்பாலுள்ள பேரருளால் அறிவுருவில் அமர்பவனாதலால், "துய்யறிவுக் கறிவாகி" என்று சொல்லுகின்றார். சிவ பரம்பொருள் தூய்மையும் குறைவிலா நிறைவு முடையதாதல் தோன்றச் "சுத்த பரிபூரணம்" என்றும், இன்பவடிவின தென்றற்குச் "சுக ரூபப் பொருள்" என்றும் ஏத்துகின்றார். தன்னை யொழியப் பிற பொருள்களில் தான் கலப்பினும் ஒன்றும் தன்னைக் கலத்தலின்மையின் தூயதாதல் விளங்கச் "சுத்த பரிபூரணம்" எனச் சிறப்பிக்கின்றார்.

இதனால், இளமைப் பருவத்திலே தான் திருவருள் நெறி நின்று பாடற் கேதுவாகிய, தவம் யாதாம் என விண்ணப்பித்தவாறும். (27)

3056. அருள்நிறைந்த பெருந்தகையே ஆனந்த அமுதே
அற்புதப்பொன் அம்பலத்தே ஆடுகின்ற அரசே
தெருள்நிறைந்தசிந்தையிலே தித்திக்குந் தேனே
செங்கனியே மதிஅணிந்த செஞ்சடைஎம் பெருமான்
மருள் நிறைந்த மனக்கொடியேன் வஞ்சமெலாங் கண்டு
மகிழ்ந்தினிய வாழ்வளித்த மாகருணைக் கடலே
இருள்நிறைந்த மயக்கம்இன்னுந் தீர்த்தருளல் வேண்டும்
என்னுடைய நாயகனே இதுதருணங் காணே.

உரை : திருவருட் பண்பே நிறைந்த, பெரிய தகைமையையுடைய பெருமானே, இன்பம் பெருக்கும் அமுதாகியவனே, அற்புதமான தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடல் புரிகின்ற அருளரசே, தெளிவு மிக்க மனமுடைய பெரியோர் உள்ளத்தில் ஊறியினிக்கும் தேன் போன்றவனே,

சிவந்த கனி போன்றவனே, பிறைச் சந்திரனை யணிந்த சிவந்த சடை யையுடைய எம்பெருமானே, மயக்கம் நிறைந்த மனத்தையுடைய கொடியவனுகிய என்னுடைய வஞ்ச நினைவனைத்தையும் கண்டும் மனம்வந்து, எனக்கு இனிய வாழ்வளித்த பெரிய கருணைக் கடலாகிய வனே, இருளைப் புரிகின்ற அந்த மயக்கமனைத்தையும் இப்பொழுதேனும் ஒழித்தருள வேண்டுகிறேன் என்னையுடைய தலைவனே, இது தக்க சமயமாகும், காண். எ.று.

என்னுடைய நாயகன் என்றது, என்னை ஆளாக வுடைய தலைவன் என்ற பொருள்பட வந்துளது. நிறைந்த அருளொளியே திருமேனியாக அமைந்தவனுதல் விளங்க, ''அருணிறைந்த பெருந்த கையே'' என வுரைக்கின்ருர். ஒருவர்க்குத் தகைமை நல்குவது அவரது அருட் பண்பா அருளே யுருவாகியது பற்றி, இறைவனைப் ''பெருந்தகை'' எனல் தலால்வேண்டிற்று. இன்பம் தருவது அதனின்வேருய அமுதம்; இறைவன் இன்பமே அமுத வடிவு கொண்டவன் என்றற்கு ''ஆனந்த அமுதே'' என்கிருர். பொன்னம்பலத்தில் ஆடுகின்ற அற்புத அரசே என மாறுக. பொன்னம்பலத் தில்லையிற் சிறப்பாக உண்மையின், தில்லைப் பொன்னம் பலம் என உரை கூறுவதாயிற்று. சிந்தைக்கண் தெளிந்த அறிவொளி திகழ்ந்தாலன்றி, சிந்திக்கப்படும் பொருளின் நலமும் இன்பமும் நுகரலாகாது என்பது பற்றித் ''தெருள் நிறைந்த சிந்தையிலே தித்திக்கும் தேனே'' எனச் செப்புகின்ருர். அகள வுருவைச் சிந்திப்பார் சிந்தையிலும், சிவந்த சகள வுருவைக் காண்பார் கருத்திலும் இன்ப முறுவித்தலால், ''செங்கனியே'' எனக் கூறுகிருர். மதி - பிறைச் சந்திரன், செஞ்சடை - சிவந்த நிறம் கொண்ட சடை. தெருளுக்கு மறுதலை மருள்; பொருளல்லாதவற்றைப் பொருளாகக் காண்பது அதன் இயல்பு. மருளுணர்வு நிறைந்த மனம் கொடுமைக்குரிய நினைவுகளைத் தூண்டித் துன்பம் விளைவிப்பது பற்றி, ''மருணிறைந்த ''மனக் கொடியேன்'' என வுரைக்கின்ருர். மனத்தாற் கொடியனுகிய எனக்குப் பிறர் உதவியின்றி வாழ மாட்டாத துன்பப் பிறவியே உரியதாகவும், குறை யொன்றுமில்லா நிறை வாழ்வளித்து அருள் செய்தாய் என்பாராய், ''என் வஞ்ச மெலாம் கண்டும் மகிழ்ந்து இனிய வாழ்வளித்த மாகருணைக் கடலே'' எனப் போற்றுகின்ருர். அறிவை இருட் படுத்துவது பற்றி மயக்கத்தை ''இருள் நிறைந்த மயக்கம்'' எனவும், அதனை முற்றவும் போக்கினுலன்றிப் பிறவித் தொடர்பு நீங்காதாகலின், ''இன்னும் - தீர்த்தருள வேண்டும்'' எனவும் விண்ணப்பிக்கின்ருர். இன்னும் - இப்பொழுதேனும். முன்பெல்லாம் இருந்ததைவிட, இப்போது தெளிவு ஓரளவு பெற்றுளேனுதலின், இது மறைதற்குள்ளே ''தீர்த்தருள வேண்டும்'' என்றும், தெளிவு மிகுதியால் மயக்கம் தனது வன்மை குன்றி யிருக்கும் இக்காலம் ஏற்றதென வலி யுறுத்தற்கு ''இது தருணம் காண்'' என்றும் எடுத்துரைக்கின்ருர்.

இதனுல், பிறவிக் கேதுவாகிய மயக்க வுணர்வைப் போக்கி, யருள்க என முறையிட்டவாரும். (28)

3057. மன்னியபொன் னம்பலத்தே ஆனந்த நடஞ்செய்
மாமணியே என்னிருகண் வயங்கும்ஒளி மணியே
தன்னியல்பின் நிறைந்தருளுஞ் சத்துவபூ ரணமே
தற்பரமே சிற்பரமே தத்துவப்பே ரொளியே

அன்னியமில் லாதசுத்த அத்துவித நிலையே
ஆதியந்த மேதுமின்றி அமர்ந்தபரம் பொருளே
என்னியல்பின் எனக்கருளி மயக்கம்இன்னுந் தவிர்த்தே
எனைஆண்டு கொளல்வேண்டும் இதுதருணங் காணே.

உரை : நிலைபெற்ற தில்லைப் பொன்னம்பலத்தின்கண் ஆனந்த நடனம் புரிகின்ற பெருமையுற்ற மாணிக்க மணி போன்றவனே, என்னுடைய இரண்டு கண்களிலும் விளங்கும் ஒளியுடைய மணி போல்பவனே, தன்னியல்பில் நிறைந்த சத்துவ குண நிறைவானவனே, தற்பரமே சிற்பரமே, தத்துவக் கூட்டத்துப் பேரொளியே, வேறில்லாத தூய அத்துவித நிலையமே, ஆதியும் அந்தமுமின்றி இருந்தருளுகிற பரம் பொருளே, என்னுடைய இயல்புக்கேற்பத் திருவருள் புரிந்து எனது மயக்கவிருளை இப்பொழுதேனும் போக்கி என்னை யாண்டருள்க; அதற்கு இஃது ஏற்ற காலமாகும். எ-று.

எக்காலத்தும் இருந்தருள்வது பற்றித் தில்லைப் பொன்னம்பலம் ''மன்னிய பொன்னம்பலம்'' எனப்படுகிறது. உயிர்த் தொகைகட்கு வாழ்க்கை யின்பம் தருகின்ற திருக்கூத் தென்பது விளங்க, ''ஆனந்த மாநடஞ்செய் மாமணியே'' எனக் கூறுகிறார். செம்மை நிறங் கொண்டு திகழ்தலால் ''மாமணியே'' என்கின்றார். மணி - மாணிக்க மணி. கண்களிலிருந்து பார்வை நல்கும் மணியை ''என்னிரு கண் வயங்கும் ஒளி மணி'' என இயம்புகின்றார். நல்ல கல்வி கேள்விகளாலும் நல்லினச் சூழலாலும் உளதாகும் சத்துவ குண நிறைவை இயல்பாக வுடையனாதல் விளங்க, ''தன்னியல்பில் நிறைந்தருளும் சத்துவ பூரணமே'' என இசைக்கின்றார். தற்பரம் - தனக்குத் தானே மேலாய் உறுவது; சிற்பரம் - அறிவுக்கு வரம்பாய் விளங்குவது. தத்துவ ஞானத் தனிப் பொருளாதலால், ''தத்துவப் பேரொளி'' என்று கூறுகிறார். அன்னியப் பொருள் அன்னியத் தன்மை கெட்டு முதலொடு ஒன்றி உடனாதல் அத்துவிதம். அன்னியத் தன்மை கெடுதல் சுத்தம். பசுத் தன்மையால் அன்னியமாகிய ஆன்மா, அத் தன்மை கெட்டுச் சிவமாந் தன்மை யெய்திச் சிவத்தோடு ஒன்றி யுடனாதல் முத்தி நிலையாதலின், ''சுத்த அத்துவித நிலை'' என இறைவனைக் குறிக்கின்றார். அத்துவித நிலையில் ஆன்மா அன்னியமாதலை விளக்க ''அன்னியமிலாத'' என விளக்குகிறார். ''அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே'' (சிவ. போ) என மெய்கண்ட தேவர் விளம்புவது காண்க. ஆதியும் அந்தமுமில்லது சிவ பரம்பொருளாதல் விளங்க ''ஆதி யந்தம் ஏதுமின்றி அமர்ந்த பரம்பொருளே'' என வுரைக்கின்றார். இடம் கால எல்லைகட்கு அப்பாற் பட்டதாகலின், தேடிச் சென்று பெற மாட்டாமை பற்றி, என்னிலையில் யான் இருக்கத் திருவருள் தான் வந்து, என்னைக் கலக்கச் செய்தல் வேண்டும் என்பாராய், ''என் இயல்பின் எனக்கருளி'' என்கின்றார். என் சிறுமை நோக்கி அதற்குத் தக அருள்க என வுரைக்கின்றா ரென்றுமாம். ஆண்டு கொளல் - அருள் செய்து ஏற்றுக் கொளல்.

இதனால், தன்னை ஆண்டருளி மயக்கம் தீர்த்தருள் என விண்ணப்பித்தவாறும்.

3058. பூதநிலை முதற்பரம நாதநிலை அளவும்
போந்தவற்றின் இயற்கைமுதற் புணர்ப்பெல்லாம் விளங்க
வேதநிலை ஆகமத்தின் நிலைகளெலாம் விளங்க
வினையேன்றன் உளத்திருந்து விளக்கியமெய் விளக்கே
போதநிலை யாய்அதுவுங் கடந்தஇன்ப நிலையாய்ப்
பொதுவினின்மெய் அறிவின்ப நடம்புரியும் பொருளே
ஏதநிலை யாவகைஎன் மயக்கம்இன்னுந் தவிர்த்தே
எனைக்காத்தல் வேண்டுகின்றேன் இதுதருணங் காணே.

உரை: நில முதலிய பூதங்களின் இயல்பு முதல் மேலதாகிய நாத தத்துவம் வரையில் அமைந்த தத்துவங்களின் இயல்புகளும் சேர்க்கைகளும் பிற தன்மைகளும் இனிது விளங்கவும், வேதங்கள் ஆகமங்கள் ஆகிய ஒவ்வொன்றின் பண்பும் செயலும் நன்கு விளங்கவும் வினையையுடையனாகிய எனக்கு என் உள்ளத்திலிருந்து, உணர்த்திய மெய்ம்மை சான்ற தீபமாகியவனே, ஞான நிலையமாய், அதனைக் கடந்து சிறக்கும் இன்ப நிலையமாய் அம்பலத்தின்கண் சச்சிதானந்தத் திருக்கூத்தை இயற்றும் சிவ பரம்பொருளே, குற்றங்கள் உண்டாகாவாறு மேலும் எனது மயக்கத்தைப்போக்கி, என்னைக் காத்தருளுதற்கு இது தக்க பருவம் காண். எ.று.

பூத நிலை - தன் மாத்திரைகளோடு கூடிய நிலம் நீர் நெருப்பு காற்று வான் என வரும், தத்துவம் பத்து. முதல் என்றதனுல் ஞானேந்திரிய கன்மேந்திரியம் பத்தும், மன முதலிய காரணம் நான்குமாகச் சேரும் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், கலை முதலாக நிற்கும் வித்தியா தத்துவம் ஏழும், சுத்த வித்தை முதல் நாத மீருக நிற்கும் சுத்த தத்துவம் ஐந்தும் கொள்ளப்படும். படவே, தத்துவம் முப்பத்தாறின் இயல்புகளையும் அவற்றினுள்ளே விரித்துக் காணப்படும் தாத்துவிகங்கள் அறுபதின் இயல்புகளையும் அவற்றின் சார்பாகக் காணப்படும் செயல் முறைகளையும் தமக்கு உள்ளிருந்து திருவருள் விளக்கமாகத் தெரிய உணர்த்தியது கூறுகிருர். இத் தத்துவங்கட்கு மேலாகவுள்ள ஞானநூல் நெறிகளை அறிவித்தமை புலப்பட "வேத நிலை ஆகமத்தின் நிலைகளெலாம் விளங்க" என விளம்புகிருர். வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு; ஆகமம், காமிக முதல் வாதுள மீருகக் கூறப்படும் இருபத்தெட்டு; இவற்றின் சார்பாக நிற்கும் மிருகேந்திரம், பவுட்கரம், ரவரவம் முதலாகிய உபாகமங்களும், வேதாந்த மெனப்படும் பிரகதாரணியம், சாந்தோக்கியம், முண்டகம் முதலாக பேசப்படும் உபநிடதங்களும் கொள்ளப்படும். அடிக்கடி நினைப்பு மறப்புக்களும், அறிவு அறியாமைகளும் மனத்தின்கண் உளவாதற்குக் காரணம் வினையுடைமை எனப் பெரியோர் கூறுதலால் "வினையேன்" எனத் தம்மைக் குறிக்கின்ருர். உடம்பின் உணர்வு நிலையமாகிய நெஞ்சின் உள்ளகத்தில் நின்றியங்கும் உணர்வு வடிவாகிய உள்ளத்தில் இருந்தே ஞான வொளியாய் உணர்வாய்த் திருவருள் உண்மைப் பொருள்களைக் காட்டுவது பற்றி, "உளத்திருந்து விளக்கிய மெய்விளக்கே" என உரைக்கின்ருர். உள்ளத்துக் கிடமாவது நெஞ்சம் என்பதைத் திருநாவுக்கரசர், "என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என் உள்ளமே" (தனிக்) எனக் கூறுவது காண்க. போத நிலை, நூலறிவும் உலகியலறிவும் உண்மையறிவும் கலந்து

நிலை; சுத்தாத்துவித இன்ப நிலையைப் பெற்ற ஞானசம்பந்தரைப் "போதநிலை முடிந்த வழிப் புக்கொன்றியுடனுனர்" (ஞானசம். 1253) என்று சேக்கிழார் பெருமான் உரைப்பது காண்க. இக் கருத்துக்கள் பொருந்தவே, "போத நிலையாய் அதுவும் கடந்த இன்ப நிலையாய்" என வடலூர் வள்ளலார் உணர்த்துகின்றார். அம்பலத்துத் திருநடனம், சச்சிதானந்த நடனமாதல் உரைப்பாராய், "பொதுவினில் மெய்யறி வின்ப நடம் புரியும் பொருளே" எனப் புகல்கின்றார். ஏதம் - குற்றம். மயக்கம் காரணமாக ஏதங்கள் உளவாதலால், "ஏதம் நிலையா வகை என் மயக்கம் இன்னும் தவிர்த்து எனைக் காத்தல் வேண்டுகிறேன்" எனவும் மயக்கம் கெடுதற்குரிய பக்குவம் எனக்கு எய்தியுளது என்பார், "இது தருணம்" எனவும் இயம்புகிறார்.

இதனாலும் மயக்கம் தீர்தற்குரிய பக்குவ மெய்தினமை எடுத்தோதி வேண்டியவாறும். (30)

3059. செவ்வண்ணத் திருமேனி கொண்டொருபாற் பசந்து
திகழ்படிக வண்ணமொடு தித்திக்குங் கனியே
இவ்வண்ணம் எனமறைக்கும் எட்டாமெய்ப் பொருளே
என்னுயிரே என்னுயிர்க்குள் இருந்தருளும் பதியே
அவ்வண்ணப் பெருந்தகையே அம்பலத்தே நடஞ்செய்
ஆரமுதே அடியேனிங் ககமகிழ்ந்து புரிதல்
எவ்வண்ணம் அதுவண்ணம் இசைத்தருளல் வேண்டும்
என்னுடைய நாயகனே இதுதருணங் காணே.

உரை: சிவந்த நிறத்தையுடைய திருமேனி வலப்பால் விளங்க, இடப்பாகம் பச்சை நிறம் விளங்கப் படிகம் நிறம் பெற்றுக் காண்பாரை இன்புறுத்தும் கனி போன்றவனே, இத்தன்மையது என்று வேதங்களுக்கும் எட்டி யறிய முடியாத மெய்ம்மைப் பொருளே, எனக்கு உயிராயும் உயிர்க்குயிராயும் இருக்கின்ற தலைவனே, அகர வெழுத்தின் தன்மையை யுடைய பெருந்தகையே, அம்பலத்தில் நடம் புரிகின்ற அரிய அமுதாகியவனே, அடியவனாகிய யான் மன மகிழ எவ்வாறு விரும்புகின்றேனோ அவ்வாறே எனக்கு உணர்த்தலை வேண்டுகின்றேனாதலால், என் தலைவனே, அதற்கு இஃது ஏற்ற சமயம், காண். எ.று.

செம்மைப் பண்பால் திருவிளங்கும் மேனி சிவன் திருமேனியாதல் இனிது புலப்பட "செவ்வண்ணத் திருமேனி கொண்டு" எனவும், இடப்பால் பச்சை நிற உமா தேவியின் பசுமை நிறம் படர்ந் தொளிர்தலால் "ஒருபாற் பசந்து" எனவும் செம்மையும் பசுமையும் காட்டித் தன்னைத் தன்னொளியாற் காட்டும் படிகம் போல் ஒளி விளங்குவது தோன்ற, "திகழ் படிக வண்ணமொடு" எனவும், புறக் கண்ணிற் காணும் போதும் அகக்கண்ணிற் காணும் போதும் இனிக்கும் கனி போல் இன்பம் செய்வது பற்றித் "தித்திக்கும் கனியே" என்றும் இயம்புகின்றார். வேத ஞானம் பாச ஞானமாதலால் அதனால் இறைவனைக் காண மாட்டாமை பற்றி, "இவ்வண்ணம் என மறைக்கும் எட்டா மெய்ப்பொருளே" என இசைக்கின்றார். "வேத சாத்திர

மிருதி புராண கலைஞானம், விரும்ப சபை வைகாரியாதித் திறங்கள் மேலாம் நாத முடி வான வெல்லாம் பாச ஞானம்" (சிவ. சித்தி.) என அருணந்தி சிவனார் யாவரும் அறிய வுரைப்பது காண்க. இவ்வுண்மை விளங்கவே "மன்னும் மறைகள் தம்மிற் பிணங்கி நின்று இன்னன வென்றறியாதன" (இன்னம்பர்) எனத் திருநாவுக்கரசரும், "மானேர் நோக்கி யுமையாள் பங்கா மறை யீறறியா மறையோனே" (சதகம்) என மணிவாசகரும் கூறுவது காண்க. வேத காலத்தவர்க்கு வட புலத்தில் சிவநெறி தெரியாமையே இக் கூற்றுக்கள் பிறத்தற்குக் காரணம் என அறிக. உயிராய்ப் பரந்து உடலுணர்வை இயக்குவதும், உயிர்க் குயிராய் உண்மை யுணர்வு கொளுத்துவதும் செய்வது பற்றிச் சிவனை, "என்னுயிரே" எனவும், "என் உயிர்க்குள் இருந்தருளும் பதியே" எனவும் இயம்புகின்றார். அவ்வண்ணம், அகர வுயிரெழுத்தின் வண்ணம் எழுத் தெல்லாவற்றிற்கும் முதலாதலும், எல்லாவற்றிலும் நிறைதலுமாம். "அகர முதலின் எழுத்தாகி நின்றாய்" (நெல். அரத்த) என நம்பியாரூரரும் கூறுகின்றார். "அகர வுயிர் போல் அறிவாகி யெங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து" (திருவருட்) என உமாபதி சிவனார் உரைப்ப தறிக. அம்பலத் திருக்கூத்துக் காணும் போதே யன்றிக் கருத்தில் நினைக்கும் போதும் அமுத முண்ட இன்ப வுணர்ச்சி யுண்டாதலால், "அம்பலத்தே நடஞ் செய் ஆரமுதே" என வுரைக்கின்றார். இந்த உணர்ச்சியிற் றோன்னும் இனிமைக்கு ஒத்த அரிய இன்பம் வேறொன்றிலும் காண முடியாமை யால் "ஆரமுதே" என்று கூறுகிறார். புரிதல் - விரும்புதல். அதுவண்ணம் - அவ்வண்ணம்: இதனைப் "பொருளொடு புணராச் சுட்டு" என்பர். காலத்திற் செய்வது கருதிய பயனைச் செய்யா தொழிவதில்லை என்பது பற்றி, "இது தருணங் காண்" என விண்ணப்பிக்கின்றார்.

இதனால், கருதியது கருதி யாங்குப் பெற நின் திருவருளைக் காலத்திற் செய்க என வேண்டிக் கொண்டவாறும். (31)

திருச்சிற்றம்பலம்

2. அருட் பிரகாச மாலை

அஃதாவது, இறைவன் திருவருள் நலத்தை நூறு பாட்டுக்கள் கொண்ட பாமாலையால் விளங்க வுரைப்பதாம். இதன்கண், திருவருளை யுடைய சிவன் சிறப்பியல்புகளும், திருவருளின் பெருமைகளும், அதனைப் பெறுகின்ற ஆன்மாவின் இயல்புகளும் விளக்கப்படுகின்றன. இவற்றைக் கூறுமிடத்துச் சைவ நூல்கள் குறிக்கும் நுண்ணிய கருத்துக்கள் பலவற்றை வடலூர் வள்ளலார் எடுத்துரைக்கின்றார். ஒருநாள் இரவு, திருவருள் முதல்வன் மனித உருவில் வள்ளற் பெருமான் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டித் திறக்கச் செய்து, அருள் ஞானம் வழங்கிய நலம் வரலாற்றுக் குறிப்பாகப் பாட்டுத் தோறும் கூறப்படுகிறது. அவர்களது உரையாட்டின்கண் மேற்கூறிய பொருள்கள் அனைத்தும் பேசப்படு கின்றன. இவற்றோடு, திருவருள் ஞானத்தின் பெறலருமை, கருணை வாழ்வு, ஞான மோனச் சிறப்பு, அதுவதுவாதல், தானுக்கி யருளுதல், யோகானுபவம், துரியக் காட்சி, ஆகமாந்தக் கூறுகள், இருவினை யொப்பு, சுத்தாவத்தை, தத்துவ ஞானம், உண்மை ஞானங்கள், துவாதசகலாப் பிரசாதம், யோகாந்தம், கலாந்தம், நவந்தரு பேதம், வைந்தவம், மாயா வெளி, திருவருள் வெளி, சிவபர வெளி, அத்துவாக் கள் ஆகிய பொருள்கள் இடம் பெறுகின்றன. திருவருளே உயிர்கட்குப் புகலாவ தென்பதும், தில்லைத் திருநடனப் பொருளும், பிறவும் ஆங்காங்கு உணர்த்தப்படுகின்றன.

எண்சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

3060. உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலைமெய் யின்பம்
உறுகின்ற வெளிநிலையென் றுபயநிலை யாகி
இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே
இரவில்எளி யேன்இருக்கும் இடந்தேடி அடைந்து
கலகமிலாத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து
களித்தெனைஅங் கழைத்தெனது கையில்ஒன்று
கொடுத்தாய்
அலகில்அருட் கடலாம்உன் பெருமையைஎன் என்பேன்
ஆனந்த வல்லிமகிழ் அருள்நடநா யகனே.

உரை: இன்பக் கொடி போன்ற உமாதேவியார் கண்டு களிக்கத் திருவருள் நடம் புரியும் தலைவனே, உலகெலாம் தோன்றுதற்கு முதற் காரணமாகிய ஒளி நிலையென ஒரு திருவடியும், நிலையான இன்பமு சுரக்கின்ற வெளி நிலையென ஒரு திருவடியும் என விளங்குகிம் இரண்டாகிய திருவடிகள் வருந்துமாறு இரவுப் போதில் எளிய

னுகிய யான் இருக்கும் இடத்தை நாடி நடந்து வந்தடைந்து திடுக்கிடாதபடித் தெருக் கதவைத் தாழ் நீக்கித் திறக்கச் செய்து விருப்புடன் என்னைத் தன்பால் அழைத்து என் கையில் யாதோ ஒன்றைக் கொடுத் தருளினுய்; அருளளக்கலாகாத அருட் கடலாகிய உன்னுடைய பெருமையை என்னென்று புகல்வேன். எ.று.

பொருளே நிறைந்த வுலகில் உயிர்கள்பால் இயலுவது வினையாகும். "வினையே ஆடவர்க்கு உயிர்" (குறுந்.) என்பர் சான்றேர். வினையும் பொருளுமாகிய உலகம் முற்றும், உள்ளத்தில் உணர்வுருவாய் அரும்புதலும், பின்னரது பொருளாய் மலர்தலும் காணலாம்; உணர்வு ஒளியாகவும், மலரும் பொருள் ஒளி நிலவும் வெளியாகவுமாகும். இவ்விரண்டையும் வடலூர் வள்ளல் தனித் தனியாக நிறுத்தி, "உலகமெலாம் உதிக்கின்ற ஒளி நிலை" என்றும், "இன்பம் உறுகின்ற வெளி நிலை" என்றும் உரைக்கின்ருர். உள்ளும்போது உணர்வுருவாக இருக்கும் பொருள் செய்வினையால் உருவாகும் போது இன்பமாய் மகிழ்விப்பதால், "மெய்யின்பம் உறுகின்ற வெளி நிலை" என விளம்புகின்ருர். காதலியின் காதலின்பத்தைக் கருதுபவன், "உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்" (நற்.3) என்பதனுல் மேற்கண்ட கருத்தின் உண்மை விளக்கமுறும். இவ்விரண்டாலும் உலகியல் நடைபெறுதலால், இரண்டையும் இறைவன் திருவடிகளாக்கி, "உபய நிலையாகி இலகிய நின் சேவடிகள்" எனக் குறிக்கின்ருர். உபயம் - இரண்டு. உலகியலை நடத்தும், திருவருள் முதல்வனுகிய பரமன், மக்களுருவிற் போந்தமை கூறலுற்று, "சேவடிகள் வருந்தியிட நடந்து" என்கிருர். வருந்த என்பது வருந்தியிட என வந்தது; போக்க வென்பது போக்கியிட என வழங்குவது போல. சொல்லிட என்பது சொல்லிப் போட என வருவதும் அத்தகைய வழக்கேயாம். இரவுப் போதில் செய்வினையில் வழித் தெருக் கதவை மூடித் தாழிட்டுக் காப்புச் செய்தல் உலகியல் வினை மரபாதலின், "கலகமிலாத் தெருக் கதவம் காப்பவிழ்க்கப் புரிந்து" எனக் கூறுகிருர். இரவில் இருள் பரவுவதால் வீடு தேடியடைதல் வேண்டிற்று. தெருவில் விளக்கின்மையும் மக்கள் வழங்குதலின்மையும் தேடியடைதற்குக் காரணமாயின. தெருவிற் கலக முளதாயின் கதவம் காப்புப் பெறுதல் அமையுமாயினும், இரவிருளில் கதவம் காப்பிடல் முறையாம் என்பது கொண்டு, "கலகமிலாத் தெருக் கதவம் காப்பவிழ்த்து" என உரைக்கின்ருர். தாழ் நீக்கிக் கதவம் திறக்கச் செய்தமை விளங்கக் "காப்பவிழ்க்கப். புரிந்து" எனப் புகல்கின்ருர். திறக்கப் பெற்றமையால் உட்புகுவார்க்கு உவகை மலர்வதால், "களித்து" எனவும், உட்புகுந்த பெருமான் திறந்து வரவேற்றவர் பக்கம் தான் செல்லாமல் அவரைத் தன்பால் அழைத்து அவரது கையில் ஒன்று கொடுப்ப, பெற்ற வள்ளலார், கொடுத்தது இன்னதெனத் தெளிதற்குள் கனவு கலைந்தமையால் "எனது கையி லொன்று கொடுத்தாய்" என்று உரைக்கின்ருர். இன்னதென விளங்கக் கூறுகின்றிலராயினும், "அருட் கடலாம் உன் பெருமையை என்னென்பேன்" என நயந்து வியந்து பாராட்டுதலால் கொடுக்கப் பெற்றது உயர்வுடைய ஒன்று என்பது தெளிவாகிறது.

இதனால் இறைவனை இரவிற் கனவிற் கண்டு அவன் தானே வலியப் போந்து உயர்வுடைய பொருள் ஒன்று நல்கப் பெற்றது கொண்டு மகிழ்ந்து பாராட்டியவாறும். (1)

3061. ஒளிவண்ணம் வெளிவண்ணம் என்றனந்த வேத
உச்சியெலாம் மெச்சுகின்ற உச்சமல ரடிகள்
அளிவண்ணம் வருந்தியிட நடந்தருளி அடியேன்
அடைந்தவிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
களிவண்ணம் எனைஅழைத்தென் கையில்வண்ணம் அளித்த
கருணைவண்ணந் தனைவியந்து கருதும்வண்ணம் அறியேன்
தெளிவண்ண முடையர்அன்பு செய்யும்வண்ணம் பொதுவில்
தெய்வநடம் புரிகின்ற சைவபரம் பொருளே.

உரை: தெளிந்த ஞானமுடைய பெரியவர் மிக்க அன்பு கொள்ளும் படி, அம்பலத்தில்தெய்வத் திருக்கூத்தாடுகின்ற சிவநெறிச்செம்பொருளே, ஒளித் திருவடி, வெளித் திருவடி என இரண்டாக வகுக்கப்பட்டனவும், வேதாந்த மென நிற்கும் உயர் நூல்கள் பாராட்டுவனவுமாகிய திருவடி யிரண்டும் கனிந்து வருந்தும்படி நடந்து அடியவனுகிய யான் அடைப் பட்டிருந்த வீட்டினை யடைந்து கதவைத் திறக்கச் செய்து, எனக்கு மகிழ்ச்சி யுண்டாகுமாறு என்னைத் தன் பக்கல் அழைத்து என் கை யிடத்தே அரியதொன்றைக் கொடுத்தருளிய கருணைச் செயலின் தன்மை யை மறவாது நினைவிலிருத்தும் முறை யாது அறிகிலேன். எ. று.

ஒளியும் அது பரவி நிற்கும் வெளியும் எனப் பிரிந்துள்ள இரண்டை யும் இறைவன் திருவடியாக நிறுத்திப் பாராட்டுதலால், "ஒளிவண்ணம் வெளிவண்ணம்" எனவும், வேத நூல்களின் மேன் முடியாகக் கூறப்படும் உபநிடதங்கள் தம்முடைய முடிமேற் கொண்டு பராவுதல் விளங்க, "அனந்த வேத உச்சி யெலாம் மெச்சுகின்ற உச்ச மலரடிகள்" எனவும் இயம்புகிறுர். வேத வுச்சி-வேதாந்தமாகிய உபநிடதம். "ஓரும் வேதாந்த மென்ற உச்சி" எனக் குமரகுருபரர் கூறுவது காண்க. முற்றக் கனிந்த பழத்தை 'அளிந்த பழம்' என வழங்கும் முறை பற்றி நடையாற் கன்றிய திருவடியை "அளிவண்ணம் வருந்தியிட" என வுரைக்கின்றுர். களிக்கும் வண்ணம் - களி வண்ணம் என வந்தது. கையில் வண்ணமளித்த - கையில் தவறி வீழாதபடி அழகுற அளித்த கருதும்வண்ணம், - என்றும் மறவாதபடி மனத்திற் கொள்ளும் திறம். ஞானத்தால் தெளிவுற்ற சிந்தையை யுடைய பெருமக்களைத் "தெளிவண்ண முடையர்" எனச் சிறப்பிக்கின்றுர். அகளமாகிய சிவ பரம் பொருள் கூத்தப் பிரானுய்ச் சகளீகரித்து நடிப்பது விளங்க, "பொதுவில் நடம் புரிகின்ற சைவ பரம் பொருள்" என வுரைக்கின்றுர், சிவாகமங்களால் துணிந்துரைக்கப்படும், பரம்பொருள் என்றற்குச் "சைவ பரம் பொருளே" எனக் கூறுகின்றுர். சிவாகமங்களைச் சைவ நூல் என்பது வழக்கம். "வேத நூல் சைவ நூல் என்றிரண்டே நூல்கள்" எனச் சிவஞான சித்தியும் குறிப்பது காண்க. (2)

3062. திருமாலும் உருமாறிச் சிரஞ்சீவி யாகித்
தேடியுங்கண் டறியாத சேவடிகள் வருந்த
வருமாலை மண்ணுறுத்தப் பெயர்த்துநடந் தருளி
வஞ்சகனேன் இருக்குமிடம் வலிந்திரவில் தேடித்
தெருமாலைக் கதவுதனைத் திறப்பித்து நின்று
செவ்வண்ணத் திடைப்பசந்த திருமேனி காட்டிக்
குருமாலைப் பெருவண்ணக் கொழுந்தொன்று கொடுத்தாய்
குருமணிநின் திருவருளைக் குறித்துமகிழ்ந் தனனே.

உரை: திருமால் பன்றி யுருக் கொண்டு சிரஞ்சீவியாய் மண்ணுலகு முற்றும் தேடிச் சென்றும் காண அரியவாகிய சிவந்த திருவடிகள் கன்று மாறு மன்னும் கல்லும் உறுத்த மாலையாற் குளிர்ந்த இடம் பெயர்ந்து, நடந்து வஞ்ச நினைவுகளையுடைய எளியனாகிய யான், இருக்குமிடத்துக்கு இரவில் வலிய வந்து வீட்டின் தெருக் கதவைத் திறக்கச் செய்து புகுந்து எதிரே நின்று சிவந்த ஒளி பரந்த தமது பசுமை கலந்த திருமேனியைக் காட்டிக் குருவாம் தன்மையுடன் பெருமை பிறங்குவதாகிய ஒன்றைக் கொடுத்து மறைந்தருளினாய்; அதனால் குருமணியாகிய நினது திருவருட் பண்பை நினைந்து மகிழ்வேனாயினேன். எ. று.

நலமனைத்தும் தருகின்ற சத்தியாகிய திருமகளோடு கூடிய திருமாலாகிய மூர்த்தி என்றற்கு "திருமாலும்" எனச் சிறப்பிக்கின்றார். பன்றி யுருக்கொண்டமை தோன்ற, "உருமாறி" எனவும், மேற் கொண்ட வினை முடிவதற்குள் இறந்து படாவண்ணம் சாகாத் தன்மை கொண்டான் என்றற்குச் "சிரஞ்சீவியாகிய" எனவும், சிவன் திருவடியைக் காண்பதற்கு முயன்ற வரலாற்றைத் "தேடியுங் கண்டறியாத சேவடிகள்" எனவும் கூறுகின்றார். "அம்மால் திணி நிலம் பிளந்தும் காணாச் சேவடி" (அச்சப்) எனத் திருவாசகம் ஓதுவதறிக. செந்நிறத் தழல் திகழும் தாணுவாய் நின்றமை பற்றித் "தேடியும் கண்டறியாத சேவடிகள்" என்று கூறுகிறார். பகற் போதினால் வெம்மையுறும் மண் பிற்பகலில் வரும் மாலைப் போதில் தணிந்து குளிர்ந்து நடத்தற் கினிதாதலால், "வருமாலைப் பெயர்த்து நடந்தருளி" எனவும், நடந்த போது மணலிற் கிடக்கும் நுண்ணிய கற்பொடிகள் இயல்பாகவே சிவந்த, திருவடியில் உறுத்திச் சிவக்கச் செய்தமை விளங்க "மண்ணுறுத்தப் பெயர்த்து நடந்தருளி" எனவும் இயம்புகிறார். பிறர் எளிதின் அறியாதபடி உள்ளமும் உடம்பும் மறைத் தொழுகினமை புலப்பட, "வஞ்சகனேன் இருக்குமிடம் தேடி" எனக் குறிக்கின்றார். தெருக் கதவைத் தட்டித் திறப்பித்தமையும் பின்பு இறைவன் மனைக்குட் புகுந்து எதிரே நின்றமையும் தோன்ற, "தெரு மாலைக் கதவுதனைக் திறப்பித்து நின்று" என்றும், சிவந்த தமது திருமேனியைக் காட்டிய செயலை, "செவ்வண்ணத் திடைப் பசந்த திருமேனி காட்டி" என்றும், இச் செயலைத் தாமே வலியப் போந்து செய் தமை விளங்க "வலித் திரவில் தேடி" என்றும் எடுத்துரைக்கின்றார். திருமேனி பசந்து காட்டியது உமைபாகன் என்பது உணர்த்தற்கு. குரு, ஞான வொளி தருபவன். குரு வுருவில் இளையனாய்த் தோன்றின மையால், "குரு மாலைப் பெருவண்ணக் கொழுந்து" என்று கூறுகின்றார். கொடுத்தது இன்னது என விளங்காமையால் "ஒன்று" எனப் பொது

வாகக் கூறுகிறார். குருமணி, குருவாகிய மணி; சிவந்த நிறமுடைய மணி என்றுமாம். கொடுத்த ஒன்று நன்பொருள் என்று விளங்க, "திருவருளைக் குறித்து மகிழ்ந்தனன்" என்று கூறுகிறார். (3)

3063. அன்றொருநாள் இரவிடைவந் தணிக்கதவந் திறப்பித்
தருண்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்தும் அகத்தும்
மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து மகனே
வருந்தாதே இங்கிதனை வாங்கிக்கொள் ளென்ன
ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
ஒருகைதனிற் கொடுத்திங்கே உறைதிஎன்று மறைந்தாய்
இன்றதுதான் அனுபவத்துக் கிசைந்ததுநா யடியேன்
என்னதவம் புரிந்தேனோ இனித்துயரொன் றிலனே.

உரை: அன்றொரு நாள் இரவுப் போதில் என் மனைக்கு வந்து கதவைத் திறக்கச் செய்து, மலர் போன்ற திருவடிகள் வாயிற் படியில் முன்புறம் உள்ளும் குதிப்புறம் புறத்தும் பொருந்த வைத்து, என்னைத் தமக்கு முன்னே வருவித்து நிறுத்திக் கொண்டு 'மகனே, வருந்தாமல் இதனைவாங்கிக்கொள் எனவாயாற் சொல்லி, கையால் ஒன்றுதர, சிறியவனாகிய யான் அதனை வாங்க மறுத்தேனாகவும் மறுபடியும் வற்புறுத்தி எனது ஒரு கையில் கொடுத்து, "நீ இங்கே யிரு;" என்று சொல்லி விட்டு மறைந்தாய் இப்பொழுது அதுதான் அனுபவத்துக்கு ஒத்துளது. நாயடியேனாகிய யான் என்ன தவம் செய்தேனோ அறிகிலேன். இனி எனக்குத் துயரமொன்றும் இல்லை. எ. று.

முன்பொருநாள் என்பது அன்றொரு நாள் என வந்துளது. அணிக் கதவம்-நன்கு காப்பமைந்த கதவம். அருள் புரியவந்த திருவடியென்றற்கு "அருட்சேவடி" என்றும், மென்மையும் அழகும் உடைமை புலப்பட, "மலர் சேவடி" யென்றும் புகழ்ந்துரைக்கின்றார். வாயிற்படி- வாயிலின் குறுக்கே கிடக்கும் கட்டை; வாயிலிற் புகுவோரும் வருவோரும் அதனை மிதித்தும் தாண்டியும் செல்வர். இதனை வாயில் மிதிக்கட்டை யென்னுமல், வாயிற் படி என்பது உலக வழக்கு; வாசற்படி என்பதே பெருவழக்கு. படி- தரை; படி மேலிருத்தலால் படியாயிற்று. வாயிற்படிக்கு உள்ளேயோ வெளியிலோ பொருந்தாமல், படியின் மேல் காலடியின் ஒரு பாகம் உள்ளும் குதிப்பாகம் புறத்தும் அமைய நின்றமையின், "வாயிற் படிப் புறத்தும் அகத்தும் மன்ற வைத்துக் கொண்டு" என வுரைக்கின்றார். வாயிற் படி சிறிதாயிருந்தமையின் அவ்வாறு அடியை வைத்துக் கொண்டு நிற்பது எளிதாயிற்றென அறிக. ஏற்க மறுப்பதுடன் மனம் இசையாமையை முகம் காட்டினமையின், "வருந்தாதே இங்கு இதனை வாங்கிக் கொள்" எனவுரைக் கின்றார். இங்கிதனை என்றவிடத்து, இங்கு இப்பொழுதென்னும் பொருளது இங்கே உறைதி என்றவிடத்து இங்கு என்றது இவ்விடத்தே என்னும் பொருளதாம். முதற்கண் ஏற்க மறுத்தமையால் மீள வற்புறுத்தியது; விளங்க, "மறித்தும் வலித்து" என மொழிகின்றார். உறைதல்-தங்குதல்; இருத்தலுமாம். இவ்வாறு அருளுவதுதான் வெறுங் கற்பனையாகாமல் உலகிய லுண்மைகளுப் பொருத்தமாக இருக்கிறது என்பார், "அதுதான் அனுபவத்துக்கு இசைந்தது" என வுரைத்து, அருட் பேற்றை வியந்து

பாராட்டுவாராய், "என்ன தவம் புரிந்தேனே" என்றும், "இனித் துய ரொன்றிலனே" என்றும் இயம்புகின்ருர். (4)

3064. இரவில்அடி வருந்தநடந் தெழிற்கதவந் திறப்பித்
தெனைஅழைத்து மகனேநீ இவ்வுலகிற் சிறிதும்
கரவிடைநெஞ் சயர்ந்திளைத்துக் கலங்காதே இதனைக்
களிப்பொடுவாங் கெனஎனது கைதனிலே கொடுத்து
உரவிடைஇங் குறைகமகிழ்ந் தெனத்திருவாய் மலர்ந்த
உன்னுடைய பெருங்கருணைக் கொப்பிலைஎன் புகல்வேன்
அரவிடையில் அசைந்தாட அம்பலத்தி னடுவே
ஆனந்தத் திருநடஞ்செய் தாட்டுகின்ற அரசே.

உரை: இடையிற் கச்சாக அணிந்த பாம்பு படம் விரிந்து அசைந் தாடப் பொன்னம்பலத்தின் நடுவே நின்று ஆனந்த நடனம் செய்து உலகுயிர்களை வாழ்விக்கின்ற அருளரசே, இரவுப் போதில் திருவடி வருந்த நடந்து போந்து அழகிய கதவைத் திறப்பித்து உள்ளிருந்த என்னை யழைத்து, 'மகனே, இவ்வுலகிற் காணப்படும் வஞ்சச் செயல்களுக்காக உனது நெஞ்சு சிறிதும் கலங்குதல் வேண்டா; இதனை மனமகிழ்ச்சியுடன் வாங்கிக் கொள்க, என்று என் கையிலே ஒன்று கொண்டு மனவுறுதியுடன் இவ்வுலகில் வாழ்க என்று வாயாற் சொல்லி யருளிய பெரிய கருணைக்கு ஒப்பாக ஏதுமில்லை; என்னென்று சொல்வேன். எ.று.

உடுக்கும் தோலாடை நெகிழாமைப் பொருட்டுப் பாம்பைக் கச்சாக அணிதலால், "அரவு இடையில் ஆட" எனவும், திருக் கூத்தாடுதலாற் பாம்பு அசைந்தாடுவது விளங்க, "அசைந்தாட அம்பலத்தி னடுவே நடம் செய்து ஆட்டுகின்ற அரசே" எனவும் கூறுகிருர். உயிர்கள் இன்புறல் வேண்டியும் வாழ்தல் வேண்டியும் இன்ப நடம் புரியும் கருத்துப் புலனுதல் வேண்டி, "ஆனந்தத் திருநடஞ் செய்து ஆட்டுகின்ற அருளரசே" என விளக்குகின்ருர். இரவில் மண் மேல் நடப்பது பற்றி, "வருந்த நடந்து" என்றும், வந்த போது, கதவு மூடப்பட்டிருந்தமையின், "திறப்பித்து" என்றும் இயம்புகின்ருர். உலகியல் வாழ்வில் மக்களிடையே பொய்யும் வஞ்சனையும் நிறைந்திருப்பது குறித்து, "இவ்வுலகிற் கரவிடை நெஞ்சயர்ந்து இளைத்துக் கலங்காதே" என்கிருர். மக்களிடை என்னுமல், "கரவிடை" என்பது மக்கள் பலரும் பொய், கொடுமை, வஞ்சனை ஆகியவற்றின் உருவாய் உலவுதலைக் காட்டற்கு. கொடுப்பது சிதருமல் இருப்பதற்காக, "கைதனிலே கொடுத்து" என்று கூறுகின்ருர். உரவு-மனத்தின்மை. மனத்திட்பம் குன்றுமல் உறைக என அன்போடு உரைப்பது ஊக்கத்தை யுண்டு பண்ணுவது பற்றி, "திருவாய் மலர்ந்த பெருங்கருணை" எனச் சிறப்பிக்கின்ருர். கருணைக்கு ஒப்பாவது வேறு யாது மில்லையாதலால் "பெருங் கருணைக்கு ஒப்பிலை" எனவும், "என் புகல்வேன்" எனவும் இசைக்கின்ருர். (5)

3065. இயங்காத இரவிடைஅன் றெருநாள்வந் தெளியேன்
இருக்குமிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்துக்
கயங்காத மலரடிகள் கவின்வாயிற் படியின்
கடைப்புறத்தும்அகத்தும்வைத்துக்களித் தெனைஅங் கழைத்து

மயங்காதே இங்கிதனை வாங்கிக்கொண் டுலகில்
மகனேநீ விளையாடி வாழ்கஎன உரைத்தாய்
புயங்காநின் அருளருமை அறியாது திரிந்தேன
பொய்யடியேன் அறிந்தின்று பூரித்தேன் உளமே.

உரை : புயங்கனே, ஒருநாள் மக்கள் உலவாத இராப் பொழுதின் கண் எளியனாகிய யான் இருக்குமிடத்தைத் தேடி வந்து கதவைத் திறக்கச் செய்து கன்றுத பூப் போன்ற திருவடிகள் அழகிய வாயிற் படியின் உள்ளும் புறமும் பொருந்த வைத்து, நின்று மகிழ்வுடன் என்னை யழைத்து, மனத்தில் மருட்சியின்றி இவ்விடத்தே இதனைப் பெற்றுக் கொண்டு, 'மகனே, நீ இவ்வுலகில் வாழ்க' எனச் சொல்லி யருளினையாக, நினது திருவருளின் அருமையைத் தெரிந்து கொள்ள மாட்டாது பொய் நெறி பற்றித் திரிந்தேன்; இப்பொழுதே அதன் பெருமை யறிந்து உள்ளம் பூரிக்கின்றேன். எ.று.

இயங்காத இரவு இருட் செறிவால் மக்களோ மாக்களோ உலவாத இரவுக் காலம். ஒருநாள் இரவிடை இருக்குமிடம் தேடி வந்து கதவு திறப் பித்து என இயைக்க. கயங்குதல் - கசங்குதல் என வழங்கும்; புயம் - புசமென வருதல்போல. அகம் என்றவிடத்து அத்துச் சாரியை தொக்கது. வாங்குதற்கு மயங்கினமை புலப்பட, "மயங்காதே இங்கு இதனை வாங்கிக் கொண்டு" என்றும், திரும்பத் தர வேண்டா, நீயே வைத்துக் கொண்டு உலகியற்கொப்ப வாழ்க என்பார், "உலகில் மகனே நீ விளையாடி வாழ்க' எனவுரைத்தாய்" என்றும் இயம்புகின்றார். புயங்கம் - பாம்பு. பாம்பா பரணனாதலின், "புயங்கா" எனப் புகல்கின்றார். அறியாது திரிந்த நெறி இது வென விளக்குதற்கு, "பொய்யடியேன்" என விளம்புகின்றார். மகிழ்ச்சியால் மனம் தடிப்புறும் நிலையை "உளம் பூரித்தேன்" என வுரைக் கின்றார். (6)

3066. ஒருநாளென் றிரவில்அடி வருந்தநடந் தடியேன்
உற்றஇடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து
மருநாள் மலரடிஒன் றுள்ளகத்தே பெயர்த்து
வைத்துமகிழ்ந் தெனைஅழைத்து வாங்கிதனை என்று
தருநாளில் யான்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
தடங்கைதனிற் கொடுத்திங்கே சார்கஎன உரைத்தாய்
வருநாளில் அதனருமை அறிந்துமகிழ் கின்றேன்
மணிமன்றுள் நடம்புரியும் மாணிக்க மணியே.

உரை : மணிகள் பதித்திழைத்த அம்பலத்தில் திருக்கூத்தாடும் மாணிக்க மணி போன்ற பெருமானே, அன்றொருநாள் இராப் போதில் மெல்லடிகள் வருந்தும்படி நடந்து போந்து அடியவனாகிய யான் இருந்த இடத்தைத் தேடிக் கொண்டு கதவைத் திறக்கச் செய்து மணம் பொருந்திய தண்டினையுடைய தாமரைப் பூப் போன்ற திருவடியை வீட்டி னுட்புறத்தே மாறி வைத்து மனம் மகிழ்ந்து, என்னை அருகே யழைத்து இதனை வாங்கிக் கொள்க என்று வாயாற் சொல்லி கையில்

தந்த நாளில் யான் வாங்க மறுத்தேனாக, வற்புறுத்தி என் பெரிய கையில் தந்து இவ்வுலகத்தே பொருந்தி வாழ்க என உரைத்தருளினாய். பின் வந்த நாட்களில் அதனுடைய அருமையை அறிந்து உவப்பு உறுவேனாயினேன். எ.று.

மாணிக்க மணி போன்ற நிறமும் ஒளியுமுடைய திருமேனி கொண்டவனாதலால், சிவபெருமானை "மாணிக்க மணியே" எனக் கிளந்து கூறுகின்றார். நடக்கின்ற போது உயர்ந்தோரது உயர்ந்த திருவடி நிலத்தின் வன்மையால் கன்றி வருந்துவதை நினைந்து, "அடி வருந்த நடந்து" என்று கூறுகின்றார். மருநாளம் மணம் கமழும் தாமரைத் தண்டு. மலர் - தாமரைப் பூ. ஓரடி யுள்ளும் ஓரடி புறத்துமாக நின்றமை விளங்க, "ஒன்று உள்ளகத்தே பெயர்த்து" என உரைக்கின்றார். முதற்கண் இரண்டடிகளையும் புறத்தே வைத்துப் பின்பு ஓரடியை உள்ளே வைத்தமை தோன்ற, "மலரடி ஒன்று உள்ளகத்தே பெயர்த்து வைத்து" எனவும், வாங்கியே தீர்க என வற்புறுத்தினமையின், "மறித்தும் வலித்து எனது தடங்கைதனிற் கொடுத்து" என்று புகல்கின்றார். பெற்ற பின்னர் வந்த நாட்களை, "வருநாள்" என மொழிகின்றார். (7)

3067. நெடுமாலும் பன்றிஎன நெடுங்காலம் விரைந்து
நேடியுங்கண் டறியாது நீடியபூம் பதங்கள்
தொடுமாலை யெனவருபூ மகள்முடியிற் சூட்டித்
தொல்வினையேன் இருக்குமிடந் தனைத்தேடித் தொடர்ந்து
கடுமாலை நடுஇரவிற் கதவுதிறப் பித்துக்
கடையேனை அழைத்தெனது கையில்ஒன்று கொடுத்துக்
கொடுமாலை விடுத்துமகிழ் எனத்திருவாய் மலர்ந்தாய்
குணக்குன்றே இந்நாள்நின் கொடையையறிந் தனனே.

உரை: குணக் குன்றாக விளங்கும் பெருமானே, நெடிய திருமால் பன்றியுருக்கொண்டு மிக்க விரைவுடன் நெடுநாள் முயன்று தேடியும் கண்டறியமாட்டாவாறு நீண்ட தாமரைபோன்ற திருவடிகளைத் தொடுக்கப்பட்ட மாலை போல நிலமகளின் முடியிற் சூட்டிப் பழ வினையாற் பிணிப்புண்டிருக்கும் அடியேன் இருக்குமிடத்தைத் தேடி யடைந்து மிக்க மயக்கவிருளைச் செய்யும் நள்ளிரவில் மனையின் கதவைத் திறக்கச் செய்து அங்கே கடையவனாய்க் கிடந்த என்னைத் தன்பால் வருவித்து என் கையில் ஒன்றைத் தந்து, கொடிய மயக்கத்தைப் போக்கி மகிழ்வுடன் இருப்பாயாக என உரைத்தருளினாய்; இப்போதுதான் உனது கொடையின் நலத்தை உணர்ந்து கொண்டேன். எ.று.

நெடுமால் - திருமால். திருவடியைக் காண்டற் பொருட்டுப் பன்றியுருக்கொண்டு பன்னெடுங் காலம் தேடிச் சென்றும் காணாராயினார் என்பது புராண வரலாறாகலின், "நெடுமால் நெடுங்காலம் விரைந்து நேடியும் கண்டறியாது நீடிய பூம்பதம்" எனக் கூறுகின்றார். நேடுதல் - தேடுதல். பன்றி யுருக் கொண்டு நிலத்தைக் குடைந்து கொண்டு செல்லச் செல்லத் திருவடி முடிவின்றி நீண்டு கொண்டே யிருந்தமை பற்றி, "நேடியும் கண்டறியாது நீடிய பூம்பதம்" என வுரைக்கின்றார்.

பூம்பதம் - தாமரையின் பூவைப் போன்ற திருவடி திருவடி நிலத்திற் பொருந்த நடந்ததைத் திருவடி மலரை நிலமகள் தன்தலையில் தொடுக்கப் பட்ட பூமாலையாகச் சூடிக்கொள்ள என அணி நலம் திகழ உரைக்கின்றார்; சேர மன்னன் தான் ஊர்ந்து போந்த யானையினின்றும் நிலத்தின் மேல் இறங்கின செய்தியைக் கூறும் இளங்கோவடிகள், "இருநில மடந்தைக்குத் திருவடி யளித்தாங்கு அருந்திறல் மாக்கள் அடியீ டேந்தப் பெரும் பேரமளி யேறினன்" (சிலப். 26 : 89 - 91) என்று கூறுவது காண்க. மாலையிற் றோன்றிக் கணந்தோறும் பெருகி இராக் காலத்தைச் செய்யும் இருட் போதினைக் "கடுமாலை நடுஇரவு" எனச் சிறப்பிக்கின்றார். கடையேன் - குணஞ் செயல்களாற் கீழ்மைப் பட்டவன். நேரிய நெறியில் ஒழுகுபவரைத் தீநெறியிற் செலுத்தும் மயக்கவுணர்வைக் "கொடுமாலை" எனக் கூறுகின்றார். எக்காலும் மாறுத குண மாண்புடைமை பற்றி இறைவனைக் "குணக்குன்றே" எனப் புகழ்கின்றார். கொடை - கொடுத்த பொருளின் நலம். (8)

3068. மறைமுடிக்கு மணியாகி வயங்கியசே வடிகள்
மண்மீது படநடந்து வந்தருளி அடியேன்
குறைமுடிக்கும் படிக்கதவந் திறப்பித்து நின்று
கூவிஎனை அழைத்தொன்று கொடுத்தருளிச் செய்தாய்
கறைமுடிக்குங் களத்தரசே கருணைநெடுங் கடலே
கண்ணோங்கும் ஒளியேசிற் கனவெளிக்குள் வெளியே
பிறைமுடிக்குஞ் சடைக்கடவுட் பெருந்தருவே குருவே
பெரியமன்றுள் நடம்புரியும் பெரியபரம் பொருளே.

உரை : விடம் பொருந்திய கழுத்தையுடைய அருளரசே, கருணையே நிறைந்த பெரிய கடல் போன்றவனே, கண்ணிடத்து ஒளிரும் ஒளியாகியவனே, ஞானமாகிய பெருமை மிக்க வெளிக்குள் விளங்கும் ஒளியே, பிறைத் திங்களை முடிக்கண்ணுள்ள சடையிற் கொண்ட தெய்வத் தருவை நிகர்ப்பவனே, எனக்குக் குருவானவனே, பெரிய சபையின்கண் கூத்தியற்றும் பிரமப் பெரும் பொருளே, வேதங் களின் உச்சியில் விளங்கும் ஞான மணியாய் விளங்குகிற சேவடிகள் மண்ணிற் பட்டுப் பொடி யாகுமாறு, நடந்து வந்து அடியனாகிய என்னுடைய குறைகள் நிறைவேறுமாறு என் மனையின் கதவைத் திறக்கச் செய்து எதிரே நின்று என்னைக் கூவி யழைத்து, ஒன்றை என் கையிற் கொடுத்தருளினாய் எ.று.

கறை - கடல் விடத்தின் நீல நிறக் கறை. களம் - கழுத்து. கடலின் நீளமும் அகலமும் ஆழமுமாகிய பெருமை யெல்லாம் அடங்க, "நெடுங் கடல்" எனக் கூறுகிறார். கண்ணில் நிறைந்தொளிரும் ஒளி சிவத்தின் திருவருளொளி என்று நினைவுறுத்தற்குக் "கண்ணோங்கும் ஒளியே" என்று உரைக்கின்றார். கனம் - பெருமை. சித்கன வெளி - ஞானமாகிய பெருவெளி; இதனைச் சிதாகாயம் என்பர். சிதாகாயத்துக் குள்ளிருப்பது பரசிவப் பெருவெளியாதல் தோன்றச் "சிற்கன வெளிக்குள் வெளியே" என்று குறிக்கின்றார். கடவுட் பெருந்தரு - கடவுளாகிய பெரிய கற்பகத் தரு என்றும் கூறப்படும். மறைமுடி - வேதாந்தம்; வேதாந்தத்தில்

விளங்கும் திருவடி ஞானம் மணி யென்று சொல்லப்படுகிறது; அதனால், "மணியாகி வயங்கிய சேவடிகள்" எனக் கூறுகிறார். குறை - இன்றியமையாத பொருள். கொடுத்தது இன்னதென விளங்காமை பற்றி, "ஒன்று" எனவே இப்பகுதி முற்றும் கூறுவர். (9)

3069. அன்றகத்தே அடிவருந்த நடந்தென்னை அழைத்திங்
கஞ்சாதே மகனேஎன் றளித்ததனைஒன் றதனைத்
துன்றகத்துச் சிறியேன்நான் அறியாது வறிதே
சுழன்றதுகண் டிரங்கிமிகத் துணிந்துமகிழ் விப்பான்
இன்றகத்தே புகுந்தருளி எனக்கதனைத் தெரிவித்
தின்புறச்செய் தருளியநின் இரக்கம்எவர்க் குளதோ
மன்றகத்து நடம்புரிந்து வயங்கும்ஒரு குருவே
வல்லவரெல் லாம்வணங்கும் நல்லபரம் பொருளே.

உரை : அம்பலத்தின்கண் திருக்கூத்தாடி விளக்கமுறுகின்ற ஒப்பற்ற குருபரனே, வல்லுந ரெல்லாரும் தலை வணங்கும் நல்லதாகிய பரம்பொருளே, அன்றொரு நாள் திருவடி வருந்த நடந்து வந்து என் மனைக்கு வந்து என்னை யழைத்து இவ்விடத்தே, என் மகனே, நீ அஞ்சுதல் வேண்டா என வுரைத்து ஒன்றை என் கையில் தந்தருளினாய்; வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் சிறுமை யுடையவனாகிய யான் அதனை யறியாமல் வீணே மனக் கலக்க மெய்தி வருந்துவது கண்டு திருவுளம் இரங்கி மிகவும் தெளிவுற்று மகிழ்வது கருதி, இந்நாள் என் மனைக்குட் புகுந்து, அதனுண்மையை எனக்கு அறிவித்து, இன்புறச் செய்தற்கு ஏதுவாகிய நின் கருணை வேறு எவரிடத்துளதாம். எ.று.

மன்றகம் - தில்லையம்பலம். அம்பலத்தின்கண் செய்தருளும் திருக்கூத்தால் சிவனது திருவருள் விளக்கம் பெரிதும் புலப்படுதலின், "நடம் புரிந்து வயங்கும் ஒரு குருவே" எனவும், திருக்கூத்தே ஞானோபதேசமாக இருத்தல் தோன்ற, "குருவே" எனவும் இயம்புகின்றார். அறிவு, ஆண்மை, பொருள் ஆகியவற்றைப் பெறுதற்கண் வல்லவர் பலரையும் அகப்படுத்தற்கு "வல்லவ ரெல்லாம்" என்றும், பிறர் தம்மை வணங்கத் தக்க பெருமை யுடையராயினும், சிவ பரம்பொருளின் வன்மை வரம்பிகந்து விளங்குதலால், தலை வணங்குகின்றன ரென்பாராய், "வணங்கும் பரம்பொருளே" என்றும், பரமான பொருளாவதோடு நன்மை செய்வதாதல் பற்றி "நல்ல பரம்பொருளே" என்றும் இசைக்கின்றார். அன்று - முன்பொருநாள். அகம் - தங்கும் மனை, வீடுமாம். வந்தவரைக் கண்டும் அழைத்த குரலைக் கேட்டும் நெஞ்சில் அச்ச முற்றமையின், "அஞ்சாதே" எனப் பெருமான் கூறுகின்றார். துன்றகம் - கதவுகளாற் காப்பமைந்த வீடு. புதிது கண்டமை விளங்க "அறியாது" எனவும், மருட்கையுற்று அலமந்தமை புலப்பட, "அறியாது வறிதே சுழன்று" எனவும், அந்த நிலைமை கண்டு யான் மனம் தெளிவுற்று மகிழுமாறு அருள் விளக்கம் தரத் திருவுள்ளம் கொண்டமை புலப்படுத்தற்கு, "அது கண்டு இரங்கி மிகத் துணிந்து அகம் மகிழ்விப்பான்" எனவும் கூறுகின்றார். மருண்ட நிலையிலே வள்ளலார் பன்னாளிருந்தமையின் "இன்று அகத்தே எழுந்தருளி எனக்கு அதனைத் தெரிவித்து

இன்புறச் செய்தருளினாய்'' என்பவர், யான் எய்திய மயக்கத்தைத் தீர்த்தல் வேண்டும் என நினைந்தருளிய இறைவனுடைய அருளுள்ளத்தை வியக்கின்றமை இனிது தோன்ற, "நின் இரக்கம் எவர்க்கு உளதோ' என உரைக்கின்றார். இவ்வாறு நினைப்பவர் உலகில் அரியராதலால், "எவர்க்குளது'' என இயம்புகின்றார். (10)

3070. அன்பர்மனக் கோயிலிலே அமர்ந்தருளி விளங்கும்
அரும்பொருளாம் உனதுமல ரடிவருந்த நடந்து
வன்பர்களில் தலைநின்ற வஞ்சகனேன் இருந்த
மனைக்கதவு திறப்பித்து மகிழ்ந்தெனைஅங் கழைத்துத்
துன்பமெலாம் நீங்குகஇங் கிதுதனைவாங் குகநீ
தொழும்பன்என்ற என்னுடைய துரையேநின் னருளை
என்பகர்வேன் என்வியப்பேன் எங்ஙனம்நான் மறப்பேன்
என்உயிருக் குயிராகி இலங்கியசற் குருவே.

உரை: என்னுடைய உயிர்க்குயிராக இலங்கிய சற்குருவே, மெய்யன்பர்களின் மனமாகிய கோயிலில் எழுந்தருளி விளங்கும் அரிய பரம்பொருளாகிய உன்னுடைய மலர் போன்ற திருவடிகள் வருந்தும்படி நடந்து, வன்மன முடையவர்களில் முதல்வனாக நிற்கின்ற வஞ்சகனாகிய யான், இருந்த வீட்டின் கதவைத் திறக்கச் செய்து உள்ளே புகுந்து என்னைத் தன்னிடம் வருவித்து, உன் துன்பமெலாம் போகுமாறு இவ் விடத்தே யான் தரும் இதனை வாங்கிக் கொள்க; நீ என்னுடைய தொண்டனாவாய் என வுரைத்தருளிய எனது துரையே, நின்னுடைய திருவருளை என்னென் றுரைப்பேன்; நான் அதனை எவ்வாறு மறப்பேன், காண், எ.று.

உணர்வுருவாகிய உயிர்க்குள்ளிருந்து உணர்வு நல்குதலால், சிவபிரானை, "என் உயிருக் குயிராகி இலங்கிய சற்குருவே'' எனக் கூறுகின்றார். சற்குரு - மெய்யுணர்வு நல்கும் ஆசிரியன். மெய்யன்பர்கள் தூய மனம் சிவனுறையும் கோயிலாதல் பற்றி, "அன்பர் மனக்கோயி லிலே அமர்ந்தருளி'' எனவும், அகள நிலையிற் சிவம் பரம்பொருளாய் நிலவுதல் பற்றி, "விளங்கும் அரும்பொருள்'' எனவும் இயம்புகின்றார். பரமாம் தன்மைத்தாயினும் அரிய தவம் முயல்பவர்க்குப் பெறற்குரிய தாகலின், "அரும்பொருளே'' என்று புகல்கின்றார். மெய்யன்பர் மனம் ஞான நிலையமாதலின், அதுவே சிவபெருமான் எழுந்தருளும் கோயிலா மென ஞானசம்பந்தர் முதலியோர், "ஞானம் புகலுடையோர்தம் முள்ளப் புண்டரிகத்துள்ளுறையும் புராணர்'' (திருவீழி) எனக் கூறுதல் காண்க. அன்பில்லாதவரை, "வன்பர்'' என்பர். அன்பில்லாத மூர்க்கர்களில் யான் தலையாயினே னென்பார், "வன்பர்களில் தலைநின்ற வஞ்சகனேன்'' எனக் கூறுகிறார். வஞ்சகனேன் என்றது, தனது அன்பின்மையைப் புறத்தே வெளிப்படாதபடி மறைத் தொழுகினமை புலப்படுத்தியவாறும். தமக்கு முன்னே என்னைக் கூவி யழைத்து, யான் ஒன்று தருகின்றேன்; அதனைப் பெற்றுக் கொண்டு துன்பமெல்லாம் நீங்குக என்பாராய், "துன்பமெலாம் நீங்குக இங்கு இதுதனை வாங்குக'' என்றும், இறைவன் தருதற்கும், வடலூர் வள்ளல்

வாங்குதற்குமுள்ள தொடர்பு காட்டற்கு "நீ தொழும்பன் என்ற துரையே" என்றும் சொல்லுகிருர். துரை - கொடுத்தலும் வாங்குதலும் செய்தற் குரிமையுடைய தலைவன். செல்வர் ஒருவர் தாமே வலிய வந்து துன்பம் போக்கற்குத் துணை புரிவது பேரருளாதல் கண்டு, "என்னென் பேன் என்னென்பேன் எங்ஙனம் நான் மறப்பேன்" எனவுரைக்கின்ருர். (11)

3071. ஞாலநிலை அடிவருந்த நடந்தருளி அடியேன்
நண்ணும்இடந் தனிற்கதவம் நன்றுதிறப் பித்துக்
காலநிலை கருதிமனங் கலங்குகின்ற மகனே
கலங்காதே என்றெனது கையில் ஒன்று கொடுத்துச்
சீலநிலை உறவாழ்க எனத்திருவாய் மலர்ந்த
சிவபெருமான் நின்பெருமைத் திருவருள்என் னென்பேன்
ஆலநிலை மணிகண்டத் தரும்பெருஞ்சீர் ஒளியே
அம்பலத்தில் திருநடஞ்செய் தாட்டுகின்ற அரசே.

உரை: விடக்கறை நிலை பெற்ற நீலமணியின் நிறம் பொருந்திய கழுத்தையுடைய பெறற்கரிய சிறப்பமைந்த ஞான வொளியானவனே, அம்பலத்தில் நடம் புரியுமுகத்தால், உலகில் உயிர்களைப் பிறந்திருந்து இறந் துலவ வாழ்விக்கும் அருளரசே, நிலத்தின் மேல் திருவடி வருந்த நடந்து போந்து அடியவனுகிய யான் இருக்கும் இடத்தை யடைந்து, கதவைத் திறக்கச் செய்து காலநிலைமையை எண்ணி, மகனே, நீ மனம் கலக்கம் கொள்ளுகின்ருய்; அது வேண்டா என்று சொல்லி, என் கையில் ஒன்று தந்தருளி, நல்லொழுக்கம் நிலைபெறப் பொருந்தி வாழ்க என்று உரைத் தருளிய சிவபெருமானுகிய உனது திருவருட் பெருமையை என்னென்று புகழ்வேன். எ. று.

ஆலம் - விடம். கடல் விடமுண்டதனுல் மாணிக்க மணி போன்ற கழுத்து நீலமணியின் நிறம் பெற்று நின்று திகழ்தல் விளங்க, "ஆலநிலை மணிகண்டத் தரும் பெருஞ் சீரொளியே" என்று போற்றுகின்ருர். உலகில் எவராலும் பெறற் கரிதாம் பேரொளியாதலால் சிவ வொளியை, "அரும் பெருஞ் சீரொளி" என்று சிறப்பிக்கின்ருர். உலகுயிர்களைத் தாம் படைத்துக் காத்தல் முதலிய ஐந்தொழில் செய்வது போலப் பொருள்களைப் படைத்துக் காத்து ஒழுகி வாழச் செய்தல் பற்றித் "திருநடஞ் செய்து ஆட்டுகின்ற அரசே" எனப் பரவுகின்ருர். ஞால நிலை என்னுமிடத்து, நிலை ஏழனுருபின் பொருட்டு. நண்ணுமிடம், பொருந்தி யுறையு - மிடம். முதல்வன் வந்தருளிய போது உறைவிடத்தின் கதவு மூடிக் கிடந்தமை யின், "கதவம் நன்று திறப்பித்து" என்கிருர். சிறிது திறவாமல் அகல மாகத் திறந்தமை புலப்பட, "நன்று திறப்பித்து" எனக் கூறுகிருர். நன்று - பெரிது. காலத்திற் பெறற் குரியவற்றைப் பெற மாட்டாது மன வருத்தம் உண்டு பண்ணும் நிலைமையைக் "கால நிலை" எனக் குறிக்கின் ருர். "கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர்" (திருநாவுக். 257) எனச் சேக்கிழார் உரைப்பது காண்க. வாய்ச் சொல்லோடு அமை யாது கையில் ஒன்று கொடுத்துதவியதும், கலக்கமறப் பொருள் எய்தப் பெற்றவரில் நல்லொழுக்கம் கெட நின்றவர் பலராதலின், "சீலம் நிலையுற

வாழ்க" என்றதும் வடலூர் வள்ளலின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மையின், "சிவபெருமான் நின் பெருமைத் திருவருள் என்னெனன்பேன்" எனக் கூறுகின்றார். சீலம், நல்லொழுக்கம். (12)

3072. இருள்நிறைந்த இரவில்அடி வருந்தநடந் தடியேன்
இருக்குமிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து
மருள்நிறைந்த மனத்தாலே மயங்குகின்ற மகனே
மயங்காதே என்றென்னை வரவழைத்துப் புகன்று
தெருள் நிறைந்த தொன்றெனது செங்கைதனிற் கொடுத்துத்
திகழ்ந்துநின்ற பரம்பொருள்நின்
திருவருள்என் னென்பேன்
அருள்நிறைந்த மெய்ப்பொருளே அடிமுடிஒன் றில்லா
ஆனந்த மன்றில்நடம் ஆடுகின்ற அரசே.

உரை: திருவருளே திருவுருவாய் அமைந்த மெய்ம்மைப் பொருளே தோற்றக் கேடுகளில்லாத இன்ப அம்பலத்தின்கண் ஆடுதலைப் புரிகின்ற அருளரசே, இருள் செறிந்த இராப் பொழுதில் திருவடி வருந்து மாறு நடந்து அடியவனாகிய யான் இருக்கின்ற இடத்தை நாடி வந்து, கதவைத் திறக்கச் செய்து,என்னைத் தன்பால் வருவித்து மருட்சி நிறைந்த மனம் உடைமையால், நினைவு மயங்குகின்ற மகனே, இனி மயங்கல் வேண்டா என்று சொல்லி, விளக்கம் மிக்க தொன்றை என் கையில் அளித்து அறிவொளி திகழ நின்ற மேலாப் பொருளாகிய உனது திருவருளை என்னவென்று'இயம்புவேன். எ. று.

பொய் யொழுக்கமுடைய பொய்யர்பால் திருவருளுணர்வு நில்லா தாகலின், "அருணிறைந்த மெய்ப் பொருளே" எனவும், ஆதியந்த மின்றி எப்போதும் நடக்கின்ற இன்பத் திருக்கூத்து இறைவன் கூத்து என்றற்கு "ஆனந்த மன்றில் நடம் ஆடுகின்ற அரசே" எனவும் இயம்பு கின்றார்; ஆடுவார்க்கு ஆடரங்கு அம்பலம் எனற்கு "மன்றில்" என்கிறார். ஆடுதற்குக் காரணம் திருவருளாதலின், அதனை முறை பிறழா வண்ணம், இயக்குவது பற்றி "அரசே" எனக் குறிக்கின்றார். நிலவொளியில்லாத அமாவாசை யிருள் படிந்த இராப் பொழுதை, "இருணிறைந்த இரவு" என்றும் நடத்தல் இல்லாத செல்வர்க்கு நடை வருத்தம் தருமென நினைந்து, "அடி வருந்த நடந்து"என்றும், வீடுகள் பல நிறைந்த இடத்தில் தம்மைத் தேட நேர்ந்தமை புலப்பட, "அடியேன் இருக்குமிடம் தனைத் தேடி" என்றும் இயம்புகிறார். தேடியது, நடை வருத்தத்தை மிகுதிப் படுத்தியதென அறிக. வீடடைந்தார்க்குக் கதவு மூடியிருந்தமையின், அதனைக் கையாற்றட்டித் திறப்பித்தமை தோன்ற, "கதவு திறப்பித்து" எனவும், வந்தவர் யாவரோ, யாது கருதி வந்தாரோ என்பன போன்ற எண்ணங்களால் மருண்டிருந் மை திறந்தவர் நடையாலும் சொற் குறிப்பாலும் உணர்ந்தமையின். "மருணிறைந்த மனத்தாலே மயங்கு கின்ற மகனே மயங்காதே" எனவும் உரைக்கின்றார். உட்புகுந்த பெருமானைக் கண்டதும் மருட்கையாற் சிறிது பின்னெடுங்கின்மை விளங்க "வர அழைத்து" என்கின்றார். மனத்துட் கிடந்த மருட்சி யிருளைத் தெளிவு தரும் சொல்லாலும் பொருளாலும் நீக்கி மனத்தில் தெளிவும்

ஒளியும் நிலவக் கையில் ஒரு பொருளைக் கொடுத்தமை தோன்ற, "தெருணிறைந்த தொன்று எனது செங்கைதனிற் கொடுத்து" என்கிருர். செங்கை-வேறு யாது மில்லாத வெறுங் கை. மோனைக்குரிய கிளை யெழுத்துக்கள் இல்லாததைச் "செந்தொடை" என்பது போல. பரம்பொருண்மை மாத்திரையாய் நின்றது மிக்க பேரருளாலன்றி இங்ஙனம் வலியப் போந்து ஆட்கொள்ளும் தன்மையுண்டாகாதாகலின், "திருவருள் என்னென்பேன்" என வுரைக்கின்ருர். (13)

3073. கன்மயமுங் கனிவிக்குந் திருவடிகள் வருந்தக்
கடைப்புலையேன் இருக்குமிடந் தனைத்தேடி நடந்து
தொன்மயமாம் இரவினிடைக் கதவுதிறப் பித்துத்
துணிந்தழைத்தென் கைதனிலே தூயஒன்றை யளித்து
வன்மயமில் லாமனத்தால் வாழ்கஎன உரைத்த
மாமணிநின் திருவருளின் வண்மையைஎன் என்பேன்
தன்மயமே சின்மயப்பொன் அம்பலத்தே இன்பத்
தனிநடஞ்செய் தருளுகின்ற தத்துவப்பே ரொளியே.

உரை: தானே தனிமயமும் சின்மயமுமாகிய பொன்னம்பலத்தில் இன்பத் தனிக் கூத்தாடும் தத்துவப் பேரொளியாகிய சிவபெருமானே, கல்லின் தன்மையைக் கெடுத்து உருகுவிக்கும் திருவடிகள் வருந்தும்படி, கடைப்பட்ட புலைத் தன்மையை யுடைய யான், இருக்குமிடத்தைத் தேடி நடந்து வந்து பழமையான இருள் செறிந்த இரவுப் பொழுதில் கதவைத் திறக்கச் செய்து மனத் துணிவுடன் என்னைத் தன்பால் அழைத்து என் கையில் தூய தொன்றை நல்கி வன்மைப் பண்பில்லா மனத்துடன் வாழ்க என உரைத்தருளிய பெரிய மாணிக்க மணியாகிய நின்னுடைய திருவருளின் வளமை நலத்தை என்னென்று புகழ்ந்துரைப்பேன். எ. று.

சிவ பரம் பொருளின் தனிச் சிவமாம் தன்மை ஈண்டுத் "தன்மயம்" என்றும், அது இத்தன்மைய தென விளக்குதற்குச் "சின்மயம்" என்றும் உரைக்கின்ருர். சித்து மயம், சின் மயம்; அஃதாவது தூய ஞான மயம் என்பதாம். அம்பலத்தின்கண் நிகழும் ஆனந்தத் திருநடனம் "இன்பத் தனிநடம்" எனப்படுகிறது. நில முதல் நாத மீருகவுள்ள தத்துவக் கூறுகள் யாவும் உணர்வொளிகளாதலின், எல்லாமா யிருக்கின்றமை பற்றித் "தத்துவப் பேரொளி" என்று கூறுகின்ருர். கல்லைக் கனிவிக்கும் உருவும் ஒளியு முடையனுதலால், "கன்மயமும் கனிவிக்கும் திருவடிகள்" என்று இயம்புகின்ருர். "கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின் கழற்கு அன்பனுக்கினுய்" (சதக) என மணிவாசகரும் கூறுவது காண்க. புலைத் தன்மையாற் கடைப் பட்டேன் என்றற்கு, "கடைப் புலையேன்" என்று கூறுகின்ருர். எல்லா வுலகங்களும் பொருள்களும் ஒளித்திரள்களும் ஒடுங்குமிடத்து இருளே பரந்து திணிதலால், "தொன்மயமாம் இருள்" என உரைக்கின்ருர். ஞாயிறு முதலியவற்றின் தோற்றத்துக்கு முன்னையதாதலால், இருளிரவைத் "தொன்மயமாம் இரவிடை" எனக் கூறுகின்ருர். ஒளியும் ஒளிப் பொருளும் கலந்திருப்பினும் இருளே மிக்கிருத்தலைப் புலப்படுத்தற்கு, "மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல் கதிர் விரிந்தன்று ஒரு முகம்" (முருகு) என நக்கீர தேவ நாயனுர் நவில்வது காண்க. மணி

யினுள்ளார் பிறரிருக்கத் தன்னைத் தெளிந்து அவரிற் பிரித்தழைத்தமை விளங்க, "துணிந்தழைத்து" என்றும், இறைவன் நல்கியது இன்ன தெனத் தெளிவு படாத ஒன்றெனினும் தூய தொன்று என்பாராய், "தூய வொன்று" என்றும் சொல்லுகின்றார். அன்பால் மனம் மென்மை யுற்றாலன்றி உலக வாழ்வு இனிதாகா தென்ற உண்மை புலப்பட, "வன்மையில்லா மனத்தால் வாழ்க" என அறிவுறுத்தமை கூறுகின்றார். மாமணி - மாணிக்க மணி; மாணிக்க மணி போலும் மேனி யுடையனு தலால், "மாமணி" எனக் குறிக்கின்றார். இரவிரு ளெனக் கருதாமல் தானே தேடி வலிய வந்து அருளுவதை வியந்து கூறுகின்றமையின், "திருவருளின் வன்மையை என்னென்பேன்" என இயம்புகின்றார். *(14)*

3074. பிரணவத்தின் அடிமுடியின் நடுவினும்நின் றோங்கும்
பெருங்கருணைத் திருவடிகள் பெயர்ந்துவருந் திடவே
கரணமுற்று நடந்தடியேன் இருக்குமிடந் தேடிக்
கதவுதிறப் பித்தருளிக் கடையேனை அழைத்துச்
சரணமுற்று வருந்தியஎன் மகனேஇங் கிதனைத்
தாங்குகஎன் றென்றெனது தடங்கைதனிற் கொடுத்து
மரணமற்று வாழ்கஎனத் திருவார்த்தை அளித்தாய்
மன்றுடையாய் நின்அருளின் வன்மைஎவர்க் குளதே.

உரை : தில்லையம்பலத்தை ஆடரங்காக வுடைய பெருமானே, பிரணவமாகிய ஓங்காரத்தின் தொடக்கம், நடு, இறுதியாகிய மூன்றிடங் களிலும் நிலைநின் றோங்குகின்ற பெரிய திருவருளுருவாகிய நின்னுடைய திருவடிகள் முன்னும் பின்னுமாக வருந்த நடத்தற் றொழிலை மேற்கொண்டு அடியனாகிய யான் இருக்குமிடத்தைத் தேடி நடந்து வந்து கதவைத் திறக்கச் செய்து மனைக்கடைப் புறத்தில் இருந்த என்னை அழைத்து, அடி வணங்கி வருந்திய என் மகனே, இங்கே நான் தரும் இதனைக் கையிற் கொள்க என வாயாற் சொல்லி என் பெரிய கைகளில் கொடுத்தருளி, இறப்பின்றி வாழ்க என்ற திருமொழியை வழங்கி யருளினாய்; உன்னுடைய திருவருட் கொடை நலம் வேறே எவரிடத்தும் இல்லை காண். எ று.

ஓம் என எழுதியும் ஓதியும் வரும் ஒரு மொழியை ஓங்காரம் என்று காரச் சாரியைப் புணர்த்துக் கூறுவர். வடமொழியில் இதனைப் பிரணவம் என்பர். இதன் உருவமே இறை என்பாராய், "ஊனங்கத் துயிர்ப்பாய் உலகெல்லாம் ஓங்காரத் துருவாகி நின்றான்" (வலிவலம்) என்றும் இதன் உட்பொருளும் மெய்ப்பொருளும் இறைவனே என்றற்கு, "ஓங்காரத் துட்பொருளை" (ஆனைக்கா) எனவும், "ஓங்கார மெய்ப்பொருளை" (ஆலம் பொழில்) எனவும் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க. இவ்வாறே மணிவாசகரும் "ஓங்காரமாய் நின்ற மெய்யா" (சிவபு) எனவும், "ஓங்காரத் துட்பொருளை" (அச்சோ) எனவும் எடுத்தோதுகின்றார். "ஓம் எனும் ஓங்காரத்துள்ளே ஒருமொழி" (2676) எனக் காட்டி இதனை உள்ளொளி (1556) எனத் திருமந்திரம் விளக்குகிறது. இவ்வுண்மை களைத் தெளிவுறக் கண்டே, "பிரணவத்தின் அடிமுடியின் நடுவினும் நின்றோங்கும் பெருங்கருணைத் திருவடிகள்" என வுரைக்கின்றார். அடி

பெயர்ந்து நடத்தலும் வருந்துதலும் இறைவற்கு இல்லையாயினும், அவரது சகள வுருவை நினைவிற் கொண்டு அன்பு மிகுதியால் அவை உள்ளன போல உவந்து கூறுகின்றார். கரணம் - ஈண்டுச் செயல் குறித்து நின்றது. கடையேன் - புறக்கடையில் இருந்தேன். சரண முறல் - அடி வீழ்ந்து வணங்குதல். இதனை ஏற்றுப் போற்றுக என்றற்குத் ''தாங்குக'' என்கின்றார். தடக்கை தடங்கை எனவும் வரும். பயனின்றி இறத்தலை மரணம் எனக் கருதுகின்றாராகலின், இம்மையிற் புகழும் அம்மையில் முத்தி யின்பமும் பெறவமைந்த வாழ்வை, மரணமிலா வாழ்வு என மதிக்கின்றமை புலப்பட, ''மரண மற்று வாழ்க எனத் திருவார்த்தை யளித்தாய்'' என்று கூறுகின்றார். (15)

3075. ஓங்காரத் துள்ளொளியாய் அவ்வொளிக்குள் ஒளியாய்
உபயவடி வாகிய நின் அபயபதம் வருந்த
ஈங்கார நடந்திரவில் யானிருக்கும் இடம்போந்
தெழிற்கதவந் திறப்பித்தங் கென்னைவலிந் தழைத்துப்
பாங்காரும் வண்ணம்ஒன் றென் கைதனிலே அளித்துப்
பண்பொடுவாழ்ந் திடுகஎனப் பணித்தபரம் பொருளே
ஆங்கார வண்ணம்அகன் றதைஅறிந்து மகிழ்ந்தே
அனுபவிக்கின் றேன்பொதுவில் ஆடுகின்ற அரசே.

உரை : அம்பலத்தில் ஆடல் புரிகின்ற திருவருளரசே, ஓங்காரப் பிரணவத்தின் உள்ளொளியாயும் அவ்வொளிக்குள் நுண்ணொளியாயும் இருக்கின்ற பெருமானே, இரண்டுருவாகிய நின் அபயத் திருவடிகள் வருந்துமாறு இவ்விடத்தே மண்ணிற் பொருந்த நடந்து, இராப் பொழுதில் யான் இருக்குமிடம் அடைந்து உயர்ந்த கதவைத் திறக்கச் செய்து அவ் விடத்தே என்னை வற்புறுத்தி யழைத்துப் பாங்காக அமையுமாறு ஒன்றை என் கையில் தந்து பண்புடன் வாழ்க என வாழ்த்துக் கூறிய பரம் பொருளே, நினது அருளுரையால் அகங்காரமான செருக்குணர்வு என்னினின்றும் நீங்கியதை நானே அறிந்து மகிழ்ந்து தூய வாழ்வை அனுபவிக்கின்றேன், காண். எ.று.

ஒலி ஒளியாதலும், ஒளி ஒலியாதலும் இன்றைய விஞ்ஞானச் செயல் வகைகள் இயல்பாகக் காட்டுவது காண்பது போல ஓங்காரத் துருவாகிய பிரணவம், ஓம் என உருவாய் ஒலித்தல் போல, ஒளியாகவும் தோன்றக் கண்ட வள்ளற் பெருமான், ''ஓங்காரத்துள் ஒளியாய்'' என்றும், அவ் வொளிக்குள் நுண்ணிய ஒளியாய்ப் பரசிவம் தோன்றக் கண்டு ''அவ் வொளிக்குள் ஒளியாய்'' என்று உரைக்கின்றார். ''சோதியுட் சோதி'' என்பதுவே 'ஒளிக்குள் ஒளி' எனப்படுகிறது. அதனையே, ''ஓங்காரத்துள் ளொளியாய் அவ்வொளிக்கு உள்ளொளியாய்'' என வுரைக்கின்றார். ஓங்காரத்தின் உள்ளொளி கண்டார் ஆங்காரமான அகந்தை யிருள் நீங்கி இன்பானுபவம் பெறுவரெனத் திருமூலர் கூறுவதால் ''ஆங்கார வண்ணம் அகன்றதை யறிந்து மகிழ்ந்தனுபவிக்கின்றேன்'' என வள்ளற் பெருமான் விளக்குகின்றார். ''ஓங்காரத்துள் ளொளி உள்ளே உதயமுற்று, ஆங்காரமற்ற அனுபவம் கைகூடார்'' (1556) என்று திருமந்திரம் கூறுவ தறிக. உபய வடிவு - இரண்டாகிய திருவடி. அபய பதம் - அடைந்

தார்க்குப் புகலளிக்கும் திருவடி. ஆர்தல் - பொருந்துதல். அகன்றுயர்ந்த வாயிற் கமைந்த கதவு என்றற்கு "எழிற் கதவு" எனப்படுகிறது. எழில் - உயர்ச்சி. பாங்காரும்வண்ணம், தவறிக் கீழே வீழாவாறு, தக்கார் தகவு கண்டு அதற்கொப்ப வொழுகுவது பண்பு; "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்" (கலித்) என்பர் சான்றோர். பரம்பொருளாகிய சிவனை நினைவாரும் நினையாரும் வேறறத் தோன்றுவராயினும் உணர்வும் ஒழுக்கமுமாகிய பண்பு அறிந்தொழுகுபவரே, இன்பானுபவம் பெறுவர்; பெறுதவர் ஏங்கி வருந்துவர் என்பாராய், திருமூலர், "பாங்கமர் கொன்றைப் படர் சடையானடி, தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்; நீங்கிய வண்ண நினைவு செய்யாதவர், ஏங்கி யுலகில் இருந்தழுவாரே" (திருமந். 1551) என வுரைப்பது காண்க. திருமந்திரத்திற் காணப்படும் வண்ணமும் நினைவும் பண்பறிந் தொழுகுதலை யுணர்த்துவ தறிக. (16)

3076. அரிபிரமா தியரெல்லாம் அறிந்தணுக ஒண்ணு
அரும்பெருஞ்சீர் அடிமலர்கள் அன்றொருநாள் வருந்தக்
கரிஇரவில் நடந்தருளி யானிருக்கு மிடத்தே
கதவுதிறப் பித்தெனது கையில்ஒன்று கொடுத்து
உரிமையொடு வாழ்கஎன உரைத்ததுவும் அன்றி
உவந்தின்றை இரவினும்வந் துணர்த்தினைஎன் மீது
பிரியமுனக் கிருந்தவண்ணம் என்புகல்வேன் பொதுவில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிழைபொறுத்த குருவே.

உரை; அம்பலத்தின்கண் பெருமை பொருந்திய திருக்கூத் தியற்றும் அருளரசே, என்னுடைய குற்றங்களைப் பொறுத்தாண்ட குருபரனே, திருமால் பிரமன் முதலிய தேவர்கள் எல்லாராலும் அறிந்து அடைய முடியாத அருமையும் பெருமையு முடைய சீர்த்தி கொண்ட தாமரை போன்ற திருவடிகள் வருந்த முன்பொருநாள் கரிய இருள் பரவிய இராக் காலத்தில் யான் இருக்கு மிடத்துக்கு நடந்து வந்து கதவைத் திறக்கச் செய்து, என்னுடைய கையில் ஒன்றைத் தந்து உரிமையொடு வாழ்க எனச் சொல்லியதொடு நின்றொழியாது மனமகிழ்வுடன் இன்றிரவும் போந்து எனக்கு அறிவுறுத்தினாய்; இதனால் என்பால் உனக்குள்ள அன்பிருந்த திறத்தை யான் என்னென்று சொல்லு வேன். எ.று.

பொது - தில்லையம்பலத்துக்குள்ள பெயர்களில் ஒன்று. உலகுகளைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும், உயிர்களை அருளல், மறைத்தல் என்ற இரு தொழில்களும் இனிது நடைபெறச் செய்யும் பெருமை யுடைமையால் சிவனது கூத்தைப் பெருநடம் என்று சிறப்பிக்கின்றார். அரி பிரமர் ஆதியர், திருமால் பிரமன் முதலாய தேவர் கள். திருமால் காத்தற் றொழிலிலும், பிரமன் படைத்தற் றொழிலிலும் எய்தும் இன்பமும் தேவர்கள் முன்னை வினைப் போக நுகர்ச்சியில் எய்தும் இன்பமுமே நோக்குவ தல்லது, சிவஞானப் பேற்றின்கண் நுகரும் இன்பத்தில் ஈடு படாமை பற்றி, "அரி பிரமாதிய ரெல்லாம் அறிந்தணுக வொண்ணு அரும்பெருஞ் சீரடி மலர்கள்" எனக் கூறுகின்றார். அறிய மாட்டாமையால் அருமையும், அணுக வொண்ணுமையாற் பெருமையும்

உடைமை விளங்க, "அரும்பெருஞ் சீர் அடி மலர்கள்" என அறிவிக்கின்றார். கரிய இருள் - திணிந்த இரவு கரியிருள் எனப்படுகிறது. பசுபாச மலங்களாற் பிணிப்புண்டு உலகியல் அறிவிச்சை செயல்களுக் கடிமைப்பட்டுக் கிடக்கும் கட்டினின்றும் நீங்கி ஆன்ம வுரிமையுடன் வாழ்க என வற்புறுத்துவாராய், "உரிமையொடு வாழ்க என வுரைத்து" எனவும், தொடுவழி நீங்கி விடுவழிப் படரும் பாசி போல உணர்த்திய பொழுது நீங்கி மீட்டும் படரும் இயல்பு உலகியற் சூழலுக் குண்மையால், "இன்றை யிரவினும் வந்து உணர்த்தினை" எனவும், மறித்தும் உணர்த்த வேண்டிய நிலைமைக்கு வெறுப்புறாமல் உவப்புடன் உணர்த்தியது பற்றி, "உவத்து" எனவும் இயம்புகின்றார். இன்றை, ஐயீற்றுடைக் குற்றுகரம். ஒருமுறைக்குப் பன்முறை யுரைத்தற்குக் காரணம் என்பால் உனக்குள்ள அன்பு என்பாராய், "என் மீது பிரியமுனக் கிருந்தவண்ணம் என் புகல்வேன்" என்று கூறுகின்றார். பிழை, மறதி, மறவிக் குற்றத்தைப் பொறுவிடின் இன்றை யிரவும் நீ வந்திராய் என்பது குறிப்பு.

3077. காரணன்என் றுரைக்கின்ற நாரணனும் அயனும்
கனவிடத்துங் காண்பரிய கழலடிகள் வருந்த
ஊரணவி நடந்தெளியேன் உறையும்இடந் தேடி
உவந்தெனது கைதனிலே ஒன்றுகொடுத் திங்கே
ஏரணவி உறைகமகிழ்ந் தெனஉரைத்தாய் நின்சீர்
யாதறிந்து புகன்றேன்முன் யாதுதவம் புரிந்தேன்
பாரணவி அன்பரெலாம் பரிந்துபுகழ்ந் தேத்தப்
பணிஅணிந்து மணிமன்றுள் அணிநடஞ்செய் பதியே.

உரை: மெய்யன்புடையவ ரெல்லாரும் நிலவுலகையுற்று அன்பு கொண்டு புகழ்ந்து துதிக்குமாறு, பாம்பாபரணம் பூண்டு அழகிய தில்லையம்பலத்தில் அழகு நடம் செய்தருளும் முதல்வனே, உலக காரணன் எனச் சிறப்பிக்கப்படுகின்ற திருமாலும் நான் முகனும் கனவிலும் காண்டற் காகாத நின் கழலணிந்த திருவடிகள் நோவுமாறு எனது ஊரை யடைந்து, எளியனாகிய யான் இருக்கும் வீடு தேடி வந்து மன மகிழ்ச்சியுடன் என் கையகத்தில் ஒன்றைத் தந்து, இவ்வுலகில் சிறப்புற்று மகிழ்வுடன் வாழ்க என உரைத்தருளினையாயினும் நின்னுடைய புகழ்களில் எதனைத் தேர்ந்து முற்பிறப்பில் ஓதி யுயர்ந்தேனோ; எத்தகைய தவம் செய்தேனோ, அறிகிலேன், எ. று.

பக்திக்கும் தவத்துக்கும் உரிய விடம் பூவுலகமே என்பது பற்றித் தேவரும் மக்களும் நிலவுலகை யடைந்து சிவ பெருமானாகிய உன்னைப் பணிந்து பரவுகின்றார்கள் என்பாராய், "பாரணவி அன்பரெலாம் பரிந்து புகழ்ந்தேத்த" என்றும் அவர்கள் பொருட்டு உடல் கருவி கரண முதலாயினவற்றைப் படைத்தளிப்பது காரணமாக நீ பாம்புகளை அணியாகக் கொண்டு தில்லை மன்றில் திருநடம் புரிகின்றாய் என்பாராய், "பதம் பணிந்து மணிமன்றுள் அணி நடம் செய் பதியே" என்றும் எடுத்துரைக்கின்றார். "புவனியிற் போய்ப் பிறவாமையின் நாணும் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி சிவனுய்யக்கொள்கின்ற வாறென்று நோக்கித் திருப்பெருந்துறை யுறைவாய் திருமாலாம் அவன் விருப் பெய்தவும் மலரவன்

ஆசைப்படவும்'' (பள்ளி) என மணிவாசகர் உரைப்பது காண்க. அயன் படைத்தவற்றைக் காக்கும் தலைவனுதல் கொண்டு திருமாலை, "காரணன் என்று உரைக்கின்ற நாரணன்" எனக் கூறுகின்றார். அயன் ஆக்கிய வுலகைக் "காக்குமாறு செங்கண்ணிறை கருணையங் கடலாம்" (பாரதம்) என்று வில்லிப்புத்தூரர் விளம்புவது காண்க. பசு போத வுருவினனாதலால் சிவ பரம் பொருளை அறிதுயிலில் ஆழ்ந்து கிடப்பினும் காணானாயின் என்பாராய், "கனவிடத்தும் காண்பரிய கழலடிகள்" எனவும், நோயும் பிணியும் தர்க்குதற் கமைந்த மக்களது வாத, பித்த, சிலேத்துமங்களாகிய தேகம் போல் வதன்றாயின் சிவனதுடம்பை அன்பால் தனது போல எண்ணுகின்றமை விளங்க, கழலடிகள் வருந்த" எனவும், இயம்புகின்றார். அணவுதல், சேர்தல், உறையுமிடம். இருக்குமிடம் ஏர், சிறப்பு; மேன்மையுமாம். மண்ணுலகில் வாழ்பவர்க்கு ஏற்றம் தருவது சிவஞானமாதலால், அது நிறைந்து வாழ்க என் பாராய், "ஏரணவி" என்றும், சிவஞானத்தால் உளதாவது இன்பமல்ல தில்லையாதலால் "மகிழ்ந்துறைக என வுரைத்தாய்" என்றும் கூறுகின்றார். தமக்குண்டாகிய பத்தியும் சிவனே எழுந்தருளி அருள் கொடுக்கும் நலமும் காரணமின்றி யுளவாகாமை யெண்ணி, இம்மையிற் பத்தி பூண்டு இறைவன் புகழ் பாடலுற்றதோ, முன்னைப் பிறவித் தவப் பயனோ என எண்ணுமாறு புலப்பட, "நின் சீர் யாதறிந்து புகன்றேன்" எனவும், "முன் யாது தவம் புரிந்தேன்" எனவும் மொழிகின்றார். சீரறிந்து புகழ்தல் 'பத்தி நெறி' என அறிக. (18)

3078. துரியவெளி தனிற்பரம நாதஅணை நடுவே
சுயஞ்சுடரில் துலங்குகின்ற துணையடிகள்வதப்
பிரியமொடு நடந்தெளியேன் இருக்குமிடந் தேடிப்
பெருங்கதவந் திறப்பித்துப் பேயன்எனை அழைத்து
உரியபொருள் ஒன்றெனது கையில்அளித் திங்கே
உறைகமகிழ்ந் தெனஉரைத்த உத்தம நின் னருளைப்
பெரியபொரு ளெவற்றினுக்கும் பெரியபொரு ளென்றே
பின்னர்அறிந் தேன்இவற்கு முன்னர்அறி யேனே.

உரை: உத்தமனே, உந்தித்தானமாகிய துரிய வெளியின் தோன்றும் பரம நாத மாகிய அணையின் நடுவே தனிச் சுடரொளியாக விளங்குகின்ற நின்னுடைய திருவடிகள் இரண்டும் வருந்த, அன்புடன் நடந்து போந்து, எளியவனாகிய யான் இருக்குமிடத்தைத் தேடிப் பற்றி அங்கே மூடியிருந்த பெரிய கதவைத் திறக்கச் செய்து, பேயனாகிய என்னை வர வழைத்துத் தனக்குரிய பொருள் ஒன்றை என்னுடைய கையில் தந்து இங்கே மகிழ்ந்து உறைக என்று சொல்லி யருளிய நினது திருவருளைப் பெரிய பொருளெனப் பேசப்படும் பெரும் பொருள் எல்லாவற்றிற்கும் பெரிய பொருள் எனப் பின்பு அறிந்து கொண்டேனேயன்றி முன்பு அறிந்திலேன் எ. று.

உத்தமன், உயர்ந்த உறவினன். நமது உடம்பின் புருவ நடு வெளியைச் சாக்கிரதுக்கும் (நனவு நிலைக்கும்), கழுத்து வெளியைச் சொப்பனத் துக்கும் (கனவு நிலைக்கும்), இதய வெளியைச் சுழுத்திக்கும் (துயிலுறு

நிலைக்கும்), உந்தி வெளியைத் துரியத்துக்கும் (உறக்க நிலைக்கும்), மூலாதார வெளியைத் துரியா தீதத்துக்கும் (பேருறக்க நிலைக்கும்) இட மெனச் சிவாகமங்கள் உரைக்கின்றன. புருவ நடு வெளியிலிருந்து தேகத்தின் அகத்தும் புறத்தும் பரந்து நிலவும் உயிரது உணர்வியக்கம் ஒடுங்கி உள்ளுறச் சென்று துரியமாகிய உந்தியை யடையும். அங்கே சுத்த சிவ தத்துவமாகிய நாதம் ஒளி யுருவில் காணப்படுதலின், இங்கே அணையும் நிலை 'அணை' எனப்படுகிற. துநீரணை போல் தடை செய்வதன்று. அந்த அணையின் (சத்தியின்) ஊடே உயிருணர்வு மூலாதாரத்தைக் கண்டே மேலான ஞான மயமாகிய சிவமெனக் கூறப்படும் நாதத்தைத் தரிசிக்கிறது. இக் கருத்தை, தூரிய வெளிதனிற் பரம நாத அணை நடுவே சுயஞ் சுடரில் துலங்குகின்ற துணையடிகள்'' எனச் சொல்லுகின்றார். பர நாதத்தின் வேறுபடுத்தற்கு மாயா மண்டலச் சுத்த தத்துவ மத்தகத்தில் விளங்கும் நாதத்தைப் 'பரம நாதம்' எனவும், அது ஞானவொளி மயமாதலின் 'சுயஞ் சுடர்' எனவும் சொல்லுகின்றார். பிரியம், அன்பு. தத்துவ நாட்டத்தைத் தடுத்து நின்ற உலகிய லறிவைப் ''பெரிய கதவம்'' என்றும், தன் முகம் நோக்கச் செய்ததை ''அழைத்து'' என்றும், சிவத்துக்கே யுரிய சிவஞானத்தை 'உரிய பொருள்' என்றும் குறிக்கின்றார், இச் சிவஞானம் திருவருள் ஞானம் எனவும் படுமாதலின், ''திருவருளை'' என்றும், அதனிற் பெரியது வேறொன்றிமை பற்றிக், ''பெரிய பொருள் எவற்றினுக்கும் பெரிய பொருள்'' என்றும், ஞான நாட்டம் பெற்ற பின் எய்தப் படுதல் தோன்ற, ''பின்னர் அறிந்தேன் இதற்கு முன்னர் அறியேன்'' என்றும் இயம்புகின்றார். (19)

3079. நீளாதி மூலமென நின்றவனும் நெடுநாள்
நேடியுங்கண் டறியாத நின்னடிகள் வருந்த
ஆளாநான் இருக்குமிடம் அதுதேடி நடந்தே
அணிக்கதவந் திறப்பித்துள் ளன்பொடெனை அழைத்து
வாளாநீ மயங்காதே மகனேஇங் கிதனை
வாங்கிக்கொள் என்றெனது மலர்க்கைதனிற் கொடுத்தாய்
கேளாய்என் உயிர்த்துணையாய்க் கிளர்மன்றில் வேத
கீதநடம் புரிகின்ற நாதமுடிப் பொருளே.

உரை: எனக்கு உறவாய், என்னுயிர்க்குத் துணைவனாய், விளக்கமுறும் தில்லையம்பலத்தில் வேதியர் வேத கீதம் பாடத் திருநடம் புரிகின்ற நாதாந்தப் பரம் பொருளே, நெடிய ஆதி மூல மெனப்படும் நாரணனும் பன்னாள் தேடியும் கண்டறிய மாட்டாத நின்னுடைய திருவடிகள் வருந்த நான் உனக்கு ஆளாகும் பொருட்டு, நான் இருக்குமிடத்தைத் தேடி நடந்து வந்து அழகிய கதவைத் திறக்கச் செய்து உள்ளே புகுந்து என்னை அன்பொடு அருகழைத்து, மகனே, நீ வீணே மயங்குதலொழிக; நான் தரும் இதனை வாங்கிக் கொள்க என்று சொல்லி மலர் போன்ற என் கையிற் கொடுத்தருளினாய். எ. று.

தந்தை தாயாரைப் போல நெருங்கிய உறவினனாய்த் தலையளி செய்வது பற்றி' ''கேளாய்'' எனவும், உண்மை யுணர்வு நல்குதலால் ''உயிர்த் துணையாய்'' எனவும் இயம்புகிறார். நாதமுடிப் பொருள், நாத

தத்துவத்துக்கு உச்சி மேலதாகிய பரசிவப் பொருளாதலின் "நாதமுடிப் பொருளே" என் நவில்கின்றார். திருமாலுக்கு ஆதிமூலம் என்பது ஒரு பெயர். உலகனைத்துக்கும் மூலமாகிய மாயையைத் தனக்கு திருமேனி யாக வுடைமையால், திருமாலுக்கு அஃதொரு பெயராயிற்றென அறிக. சிவத்தின் திருவடி காண்டற் பொருட்டு உருமாறிப் பன்னெடுங் காலம் முயன்றான் என்று வரலாறு கூறுவதால் "நெடுநாள் தேடியும்" என்றும் காண மாட்டா தொழிந்த குறிப்புத் தோன்ற, கண்டறியாத நின்னடிகள்" என்றும் கூறுகின்றார். சிவனடியானைகத் தாம் மனப் பக்குவ முற்றிருந்தமை புலப்பட, 'ஆளாக இருக்குமிடம்' என்று இயம்புகிறார். அணிக்கதவம், வன்மையா லழகு பெற்ற கதவு. கதவு, ஈற்றில் அம்முச் சாரியைச் பெற்றுக் கதவம் என வழங்குவதுண்டு. "இரவுக் கதவறம் முயறல்" (குறுங். 244) என வருவது காண்க. மலர்க்கை, மலர் போன்ற அகங்கை. (20)

3080. சத்தஉரு வாமறைப்பொற் சிலம்பணிந்தம் பலத்தே
தனிநடஞ்செய் தருளும்அடித்தாமரைகள் வருந்த
சித்தஉரு வாகிஇங்கே எனைத்தேடி நடந்து
தெருக்கதவந் திறப்பித்தென் செங்கையில்ஒன் றளித்து
மத்தஉரு வாமனத்தால் மயக்கமுறேல் மகனே
மகிழ்ந்துறைக எனத்திருவாய் மலர்ந்தகுண மலையே
சுத்தஉரு வாய்ச்சுத்த அருவாகி அழியாச்
சுத்தஅரு உருவான சுத்தபரம் பொருளே.

உரை: சுத்த வுருவாகவும், சுத்த அருவாகவும், சுத்த வருவுருவாக வும் விளங்குகிற சுத்த பரம்பொருளே, ஒலியாக இருக்கும் வேதங்களைப் பொற் சிலம்பாகத் திருவடியில் அணிந்து அம்பலத்தில் ஒப்பற்ற நடம் புரி கின்ற திருவடித் தாமரைகள் கன்றுமாறு, சித்தர் உருக்கொண்டு இவ் விடத்தே என்னைத் தேடி நடந்து, தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து எனது சிவந்த கையில் ஒன்றைக் கொடுத்து மயக்க வுருவாகிய மனத்தின் கண், மகனே, மயங்குதல் வேண்டா என அறிவுறுத்தருளிய குணக் குன்றமே. எ.று.

திருவருளினும் தூயது வேறு யாதும் இன்மையின், அருளே உவரும், அருவம், அருவுருவம் என உருவம் கொள்வது கொண்டு, "சுத்த வுருவாய்ச் சுத்த அருவாகி அழியாச் சுத்த வருவுருவான சுத்த பரம் பொருளே" என வுரைக்கின்றார். அருவம் நான்கும், உருவம் நான்கும், அருவுருவ மொன்றுமாக நூலோர் கூறுதலால் அருவ முதல் மூன்றையும் மொழிகின்றார். பரம்பொரு ளொன்றே இவ்வொன்பது வகையாக நடிப்ப தால் "சுத்த பரம்பொருளே" என வுரைக்கின்றார். மறைகள் ஒலி யுருவாய் ஓதப்படுவதால் "எழுதாக் கிளவி" எனப் பெயர் பெறும்; அதனால் "சத்த வுருவாம் மறை என்கின்றார். அம்பலத்தாடும் பரமன்" திருவடிச் சிலம் போசை வேத வோசையாக இசைத்தல் பற்றி, "மறைப் பொற் சிலம்பணிந்து அம்பலத்தே தனிநடம் செய்தருளும் அடித் தாமரை கள்" என்று கூறுகின்றார். சித்த வுரு, பலவும் வல்ல பெரியோர்களின் திருவுரு. மத்த வுருவாம் மனம், உன்மத்தம் கொண்டாற் போன்ற மனம்.

உன்மத்தம், மத்தம் என வந்தது. "மத்த மனத்தொடு மாலிவன் என்ன" (சதகம்) எனத் திருவாசகம் உரைப்பது காண்க (21)

3081. பலகோடி மறைகளெலாம் உலகோடி மயங்கப்
பரநாத முடிநடிக்கும் பாதமலர் வருந்தச்
சிலகோடி நடந்தெளியேன் இருக்குமிடத் தணைந்து
தெருக்கதவந் திறப்பித்தென் செங்கையில்ஒன் றளித்தே
அலகோடி வருந்தேல்இங் கமர்கஎனத் திருவாய்
அலர்ந்தஅருட் குருவேபொன் னம்பலத்தெம் அரசே
விலகோடி எனத்துயர்கள் ஒன்றொடொன்று புகன்று
விரைந்தோடச்செய்தனைஇவ் வினைவறியேன் வியப்பே.

உரை: பல கோடிக் கணக்கிலுள்ள மறை யிருக்குகள் யாவும் உலகெங்கும் திரிந்து ஓதி மயங்க, நாத தத்துவத்தின் முடி விடத்தே நின்று நடிக்கும் மலர் போன்ற திருவடிகள் வருந்தும்படி, சில தெருக் கோடிகளை நடந்து, கடந்து அடியேன் இருக்குமிடத்தை அடைந்து தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து உள்ளே போந்து, எனது செவ்விய கையில் ஒன்றைக் கொடுத்தருளிக் கோடிக்கு மேலும் பல நினைந்து வருந்துதல் வேண்டா; இவ்விடத்தே அமர்க எனச் சொல்லிய அருட் குருவே, பொன்னம்பலத்தின்கண் நின்றாடுகின்ற அருளரசே, விலகுக ஓடுக எனத் துயர்கள் ஒன்றோ டொன்று தம்மிற் பேசிக்கொண்டு என்னை நீங்கி விரைந் தோடச் செய்தனை; இவ்வாறாயதன் தன்மையை அறிய மாட்டாது வியப்படைகிறேன். எ.று.

வேத மந்திரங்களின் ஒவ்வொரு வாக்கியமும் இருக்கு என்று வழங்குதலின், அவற்றின் தொகையைப் "பலகோடி மறைகள்" எனப் பகர்கின்றார். உலகனைத்துக் கண்டும் பரசிவத்தைக் காணாமல் மயங்கி யலமர நாத தத்துவத்துக் காப்பாலான் சித்பர வெளியில் திருநடம் புரிவது புலப்பட, "பரநாதமுடி நடக்கும் பாதமலர்" என்று புகழ்கின்றார். தெருவின் முடிவிடத்தைத் தெருக் கோடி என்னும் வழக்குப் பற்றிச் "சில கோடி நடந்து" என்கிறார். அல கோடி வருந்தேல், ஒரு கோடியல்ல பல கோடி நினைவுகளை யுற்று வருந்துதல் ஒழிக; "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியுமல்ல பல" (குறள்) எனச் சான்றோர் கூறுவ தறிக. விலகுக ஓடுக என்ற தொடர், விலகோடி என வந்துள்ளது. ஓடி, இகர வீற்று ஏவல் கண்ணிய வியங்கோள்; "நன்று மன்னது நாடாய் கூறி" (அகம். 268) என்றாற் போல. துயரத்தின் மிகுதி கண்டு மயங்கி வருந்தினேனாக, என்னை யறியாமலே அவை தாமே நீங்கின; இவ்வாறாயது எனக்கு வியப்புத் தருகிறது என்பது விளங்க, "இவ்வினை வறியேன், வியப்பே" என வுரைக்கின்றார். (22)

3032. செய்வகைஒன் றறியாது திகைப்பினொடே இருந்தேன்
திடுக்கெனஇங் கெழுந்திருப்பத் தெருக்கதவந் திறப்பித்
துய்வகைஒன் றெனதுகரத் துவந்தளித்து மகனே
உய்கமகிழ்ந் தின்றுமுதல் ஒன்றும் அஞ்சேல் என்று

மெய்வகையில் புகன்றபின்னும் அஞ்சியிருந் தேனே
மீட்டும்இன்றை இரவில்உணர் வூட்டிஅச்சந் தவிர்த்தாய்
ஐவகையாய் நின்றுமன்றில் ஆடுகின்ற அரசே
அற்புதத்தாள் மலர்வருத்தம் அடைந்தனஎன் பொருட்டே.

உரை: எய்திய இடர்ப்பாட்டினுல் செய்வது தெரியாமல் திகைப்புற் றிருந்தேனுக, திடீரென இருக்கைவிட் டெழுந்திருப்ப, தெருக் கதவைத் திறக்கச் செய்து, தெளி வுண்டாகும் வகையில் உட்புகுந்து ஒன்றை என் கையில் மகிழ்ச்சியுடன் தந்து, மகனே, மனம் தெளிக; இன்று முதல் யாதொன்றினுக்கும் அஞ்ச வேண்டா என மெய்ம்மையாகச் சொல்லித் தேற்றிய பின்னரும் நான் அஞ்சியே கிடந்தேன்; மீட்டும் இன்றிரவு என் முற் போந்து நல்லுணர்வு தந்து என்னுடைய அச்சத்தைப் போக்கினய். ஐவகைத் திருக்கூத்தையும் அம்பலத்தில் ஆடுகின்ற அருளரசே, அடியவனுகிய என் பொருட்டு உன்னுடைய அற்புதமான திருவடிகள் நடந்து வருந்தின, காண். எ.று.

மன்றில் நின்று ஐவகையாய் ஆடுகின்ற அரசே என இயைக்க. ஆடல் ஐவகைகளே, உமாதேவி காண ஆடும் போக நடனம், காளியொடு அண்டமுற நிமிர்ந்தாடும் வாத நடனம், பூத கணம் சூழ நின்றுடும் பூத நடனம், முனிவர் காண ஆடும் போத நடனம், ஆன்மாக்கள் சிவபோகம் பெற ஆடும் ஞான நடனம் என்பர். "பஞ்சாக்கர நடனம் (நாதாந்த நடனம்), ஊன நாடகம், ஞான நாடகம், பஞ்ச கிருத்திய நடனம் கருணை நடனம்" என வேருகவும் கூறுவர். இடரும் தளர்வும் அறிவை மயக்குவனாவாதல் உலகறிந்த வுண்மையாதலால், அவற்றை விதந்தோதாமல், எய்திய வினைவைவிதந்து, "செய்வகை யொன்றறியாது திகைப்பினெடே யிருந்தேன்" எனவும், அக்காலத்தே பக்கத்தே யாது நிகழினும் மனம் திடுக்கிடும் இயல்பிற்றுதலால், "திடுக்கென இங்கு எழுந்திருப்ப" எனவும் கூறுகிருர். வந்தவரது உவந்தவருகை திடுக்குற்ற மனத்தை அமைதியிற் கிடத்தித் தெளிவு எய்து விக்குமாதலால், அந் நிலையிற் போந்த பெருமான் கொடுத்த வொன்று மனநிறைவு தந்தமை புலப்பட, "உய்வகை யொன்று எனது கரத்து உவந்தளித்து" எனவும், இனிய ஆதரவும் உறுதியு முண்டாக வுரையாடினமையின், "மகனே மகிழ்ந்து உய்க" எனவும், இன்று முதல் ஒன்றும் அஞ்ச வேண்டா; நான் சொல்வது ஏற்று நெஞ்சு திடம் பெறுக என்பாராய், "இன்று முதல் ஒன்றும் அஞ்சல் என்று மெய்வகையிற் புகன்ரு" ரெனவும் உரைக்கின்ருர். எய்திய இடர்ப்பாட்டின் வன்மையால் குழைந்து நிலை கலங்கிய நெஞ்சம் ஓரளவு திண்மையும் தெளிவும் எய்திற் ருயினும், கலக்கம் முற்றவும் நீங்கப் பெருமையின், ஐய வுணர்வுகளால் அலைப்புண்டமை தோன்றப் "பின்னும் அஞ்சி யிருந்தேன்" என்றும், இது தானும் தீயெச்சம் போலப் பின்னர்ப் பெருகி மனநோயை மிகுவிக்குமாதலை யுணர்ந்த பெருமான் மீண்டும் ஒருநாளிரவு போந்து அச்சத்தைப் போக்கி ஆண்மை சான்ற நல்லுணர்வு நல்கியதை நினைந்து மகிழ்கின்ருராய், "மீட்டும் இன்றை யிரவில் உணர்வூட்டி அச்சம் தவிர்த் தாய்" என்றும் இயம்புகின்ருய்.

இதனல், இறைவன் ஒருமுறையன்றி மீளவும் போந்து அருள் செய்தமை கூறியவாறும். (23)

3083. உள்ளிரவி மதியாய்நின் றுலகமெலாம் நடத்தும்
உபயவகை யாகியநின் அபயபதம் வருந்த
நள்ளிரவின் மிகநடந்து நான்இருக்கும் இடத்தே
நடைக்கதவந் திறப்பித்து நடைக்கடையில் அழைத்து
எள்ளிரவு நினைந்துமயக் கெய்தியிடேல் மகனே
என்றென்கை தனில்ஒன்றை ஈந்துமகிழ் வித்தாய்
அள்ளிரவு போல்மிடற்றில் அழகுகிளர்ந் தாட
அம்பலத்தில் ஆடுகின்ற செம்பவளக் குன்றே.

உரை: அள்ளிக் கொள்ளக் கூடிய அளவில் இருள் நிறைந்த இரவு போன்ற கரிய நிறக் கழுத்தின் அழகு ஓங்கி அசைய, அம்பலத்தில் ஆடுகின்ற சிவந்த பவளமலை போன்ற பெருமானே, எல்லாராலும் விரும்பப்படுகின்ற சூரியனாகவும் சந்திரனாகவும் நின்று, உலகம் எல்லாவற்றையும் நடத்துகின்ற இருவகையாகிய நின்னுடைய இரண்டாகிய அபயத் திருவடிகள் வருந்த நள்ளிரவில் நெடிது நடந்து, நான் இருக்குமிடத்தை அடைந்து, தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து, நடைப் பக்கத்தில் என்னை அழைத்து, இகழப்படுகின்ற இரவுக் காலம் என நினைந்து, நீ மனமயக்கம் அடைய வேண்டா என்று சொல்லி என் கையில் ஒன்றைக் கொடுத்து என்னை மகிழ்வித்தாய். எ.று.

அள்ளிரவு, அள்ளிக் கொள்ளத்தக்க இருள் செறிந்த இரவுப் பொழுது: இருட் கருமையின் மிகுதி உணர்த்துதற்கு இவ்வாறு கூறுகின்றார். இருவிருள் போன்ற கரிய நிறத்தையுடைய கருத்தை உடையவன் சிவபிரான் என்பதாயிற்று. அவனது பொன் மேனியில் கழுத்தின் கழுமை நிறம் அப்பெருமான் ஆடும் போது காண்பார் கண்டு வியக்க ஓங்கித் தோன்றுதலால், "அழகு சேர்ந்தாட" என அறிவிக்கின்றார். அம்பலத்தின் பொன் நிறம் பெழமானுடைய சிவந்த பவளம் போன்ற மேனியை இனிது யர்த்திக் காட்டுதலால் "அம்பலத்தில் ஆடுகின்ற செம்பவளக் குன்றே" என்று செப்புகின்றார். உழைத்துப் பயன் பெறும் உலக மக்கட்குப் பெரிதும் வேண்டப் படுவது பகற் போதாகலின், அதனைச் செய்யும் சூரியனை "உள்ளிரவி" என உவந்துரைக்கின்றார். இச்சிறப்புப் பற்றியே பண்டையோர் உதய காலத்தில் அதனை வணங்கி வாழ்த்தினர் என்பது "உள்ளிரவி" என்பதனால் குறிப்பாய் உணர்த்தப் படுவது காண்க. பகலில் ஒளி செய்யும் சூரியனையும், இரவில் ஒளி நல்கும் சந்திரனையும் இறைவனுடைய இரண்டு திருவடிகளாம் எனக் கருதுகின்றாராதலால், "உலகமெலாம் நடத்தும் உபய வகையாகிய நின் அபய பதம்" எனவும், அடைந்தாரைத் தாங்கி ஆதரிக்கின்ற பெருமை உடையவையாதலால் இறைவன் திருவடியை "அபய பதம்" எனவும் போற்றுகின்றார். "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (முருகு) என்று நக்கீரனாரும் கூறுதல் காண்க. பகல் இரவுகளால் உலக வாழ்வு இனிது நடைபெறுதலால், "உலகமெலாம் நடத்தும் உபயவகை" என எண்ணிக் கூறுகின்றார். நள்ளிரவு, நடு இரவு. நெடிது நடந்து வந்தார் என்பதை "மிக நடந்து" என விதந்து உரைக்கின்றார். தெருவாயிற் கதவைத் திறந்தவுடன் உள்ளிருக்கும் அகன்ற அறை "நடை" என்றும், நடைக்கடை என்றும் வழங்குவர். பண்டை நாளையோர் அதனையே

"இடைகழி" எனக் கூறினர். பார்ப்பனர் வீடுகள் அதனை "இரேழி" எனத் திரித்துரைக்கும். இராக் காலத்தையும் அக்காலச் செயல்களையும் உயர்ந்தோர் நன்றென மதிப்பதில்லையாதலின், "எள்ளிரவு" என இயல்பெடுத்து இயம்புகின்றார். இருள் பரந்த பொழுது யார்க்கும் கண்ணும் கருத்தும் கலக்க முறுவ தியற்கையாதல் பற்றி, "இரவு நினைந்து மயக்கெய்தி விடேல்" எனத் தேற்றுகின்றார்.

இதனால், இரவுப் போது கண்டு மயங்காவாறு அருளுரை வழங்கிய வாறும். (24)

3084 விளங்கறிவுக் கறிவாகி மெய்த்துரிய நிலத்தே
விளையும்அனு பவமயமாம் மெல்லடிகள் வருந்தத்
துளங் குசிறி யேன் இருக்கும் இடந்தேடி நடந்து
தொடர்க்கதவந் திறப்பித்துத் தொழும்பன்எனை அழைத்துக்
களங்கமிலா ஒன்றெனது கைதனிலே கொடுத்துக்
களித்துறைக எனத்திருவாக் களித்தஅருட் கடலே
குளங்கொள்விழிப் பெருந்தகையே மணிமன்றில் நடஞ்செய்
குருமணியே அன்பர்மனக் கோயிலில்வாழ் குருவே.

உரை : நெற்றியிற் கண் பொருந்திய பெருந்தகையே, அழகிய தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் குருமணியே, மெய்யன்பர்களின் மனமாகிய கோயிலில் எழுந்தருளும் குருபரனே, உயிரறிவுக்கு விளக்கம் தரும் நுண்ணறிவாய் மெய்ம்மை சான்ற துரிய நிலத்தில் பெறப்படுகின்ற அனுபவப் பொருளாகும் நின்னுடைய மெல்லிய திருவடிகள் வருந்தும்படி, திட்பமில்லாத சிறியவனாகிய யான் இருக்கும் இடத்தைத் தேடி நடந்து அடைந்து வாயிலோடு தொடர்புற்றிருக்கும் கதவைத் திறக்கச் செய்து, அடியவனாகிய என்னை அருகழைத்துக் குற்றமில்லாத ஒன்றை எனது கையிற் கொடுத்து மகிழ்வோடு இருப்பாயாக என அருளுரை சொல்லிய திருவருட் கடலாகியவனே, இதற்கு என்னென்பேன். எ.று.

குளம், நெற்றி தகுதியாற் பெருமை மிக்கவனாதலால் சிவனைப் "பெருந்தகை" என்றும், நிறத்தாற் சிவந்த மாணிக்க மணி போறலின், "குருமணியே" என்றும், மெய்யன்பே சிவ ஞானமாதலின் அவர் மனத்தின் கண் இருந்தருளி மயங்கும் போது தெளிவு நல்குதலால் "குருவே" என்றும் கூறுகிறார். உணர்வு வடிவாகிய உயிர்க்கு உயிராதல், உள்ளுணர்வாய் ஆவன தெரிய வுணர்த்துதல். இதனை அறிந்தோர் திருவருள் ஞானம் எனத் தெரிவிக்கின்றார். அதீதமாகிய மூலாதாரத்தில் ஆகாசமாய்த் தோன்றி அனுபவத் துக்குப் பக்குவமாகும் நிலைபம் துரியமாதலால், "மெய்த்துரிய நிலத்தே விளையும் அனுபவ மயமாய்" என வுரைக்கின்றார். அதீதம் ஒடுங்குமிடமா தலின், சிலர், துரியாதீதத்தைக் கொள்ளாமல் துரியத்தோடே நின்றொழிவர். துரியாதீதத்தின் இருப்பைக் கண்டுணர்ந்த சிறப்புச் சிவாகமங்கட் குரியதாகலின், சிவாகம சீலர்களான சித்தாந்திகள் துரியாதீதத்தைக் கொண்டார்களாகப் பிறரெல்லாம் துரியத்தோடே நிற்கின்றனர். அதீதத்தே ஞானகாசமாக இருக்கும் பரம்பொருள் துரிய

நிலத்தே உருவாய அனுபவ மயமாய் விளங்குதலால், அதனைத் ''துரிய முதலே'' என்றும், ''துரியப் பொருளே'' என்றும் புகழ்கின்றார்கள். உடம்பொடுறையும் உயிர்க்கு மயக்கம் இயல்பாதலின், ''துளங்கு சிறியேன்'' எனவும், களங்கமுடைய தொன்றைத் ''தாயினும் நல்லனுகிய'' சிவபிரான் நல்காணுதலால் ''களங்கமிலா ஒன்றெனது கைதனிலே கொடுத்து'' எனவும், கவலையிருள் நீங்குதலால் ''களித்துறைக எனத் திருவாக்களித்தான்'' எனவும் இயம்புகின்றார்.

இதனாற் களங்கமிலா வொன்றளித்துக் களித்துறைக என அறிவுறுத் தியவாறும். (25)

3085. வேதமுடி மேற்சுடராய் ஆகமத்தின் முடிமேல்
விளங்கும்ஒளி யாகியநின் மெல்லடிகள் வருந்தப்
பூதமுடி மேல்நடந்து நானிருக்கு மிடத்தே
போந்திரவிற் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
நாதமுடி மேல்விளங்குந் திருமேனி காட்டி
நற்பொருள்என் கைதனிலே நல்கியநின் பெருமை
ஓதமுடி யாதெனில்என் புகல்வேன்அம் பலத்தே
உயிர்க்கின்பந் தரநடனம் உடையபரம் பொருளே.

உரை: பொன்னம்பலத்தின்கண் உலகுயிர்கட்கு இன்பம் விளைய வேண்டித் திருக்கூத்தியற்றும், பரம்பொருளாகிய சிவனே, வேத ஞானிகட்கு மேலுறும் சுடராகவும், ஆகம ஞானிகட்கு விளக்கம் தரும் ஒளியாகவும் திகழ்கின்ற நின்னுடைய மெல்லிய திருவடிகள் கன்றும்படி பூதமாகிய நிலத்தின் மேல் நடந்து, நான் இருக்குமிடத்துக்கு வந்து, இரவாதலின் கதவைத் திறக்கச் செய்து அன்புடன் நாத தத்துவத்துக்கு மேனிலையில் விளங்கும் ஞானத் திருமேனியைக் காட்டி நல்ல பொருளொன்றை என் கையில் தந்தருளிய நின்னுடைய பெருந்தன்மையை வாயாற் சொல்ல முடியாதெனப் பெரியோர் கூறுவராயின் யான் யாது கூறுவேன். எ.று.

வேத முடி - வேதாந்த ஞானம். ஆகம முடி - ஆகமாந்தமாகிய சித்தாந்த ஞானம். வேதாந்தக் காட்சிக்குப் பிரமச் சுடராகவும், சித்தாந்தக் காட்சிக்குச் சுடர்க் கொழுந்தாகிய ஒளியாகவும் சிவம் விளங்குதலின், ''வேத முடிமேற் சுடராய் ஆகமத்தின் முடிமேல் விளங்கும் ஒளி'' என விளம்புகின்றார். ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்'' (சிவப்) என உமாபதி சிவனாரும், ''ஓரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த, சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்'' (பண்டா) எனக் குமரகுருபரனாரும் கூறுவன கண்டு தெளிக. நிலம் ஐம்பெரும் பூதங்களி லொன்றுதலால், பூதம் எனப் பொதுப்படப் புகல் கின்றார். தாழ் நீக்கிக் கதவைத் திறப்பதை, ''கதவுதனைக் காப்பவிழ்க்க'' என வுரைக்கின்றார். புரிதல் - விரும்புதல். நாத முடி - நாதாந்தம். நாத தத்துவத்துக்கு மேலது, மாயா மண்டலத்துக்கு அப்பாலதாகிய பரசிவ வெளி; ஆங்கே சிவஞானமாய்த் திகழும் சிவ சூரியன் உணரப்படுதலின், ''நாத முடிமேல் விளங்கும் திருமேனி'' என்றும், அது நல்கும் பொருள்

நன்பொருளன்றி வேருவ தில்லையாதலால், ''நற்பொருள்'' என்றும் இசைக்கின்ருர். ''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்'' எனச் சேக்கிழார் முதலியோர் பலரும் கூறுதலால், ''நின் பெருமை ஓத முடியா தெளின்'' என்கின்ருர். எனின் - என்று கூறுவராயின், ஆனந்த வடிவினனுகிய இறைவன், ஆனந்தக் கூத்தாடுகிருன் என்பதற்குத் தான் ஆனந்தம் வேண்டி ஆடுகிருன் என்று பொருளன்று; உலகுயிர்கள் இன்பம் பெறல் வேண்டி ஆடுகிருன் என்பதாகலின், ''உயிர்க் கின்பம் தர நடனம் உடைய பரம்பொருளே'' என வுரைக்கின்ருர். ''நேயத்தால், ஆனந்த வாரிதியில் ஆன்மா வைத்தா னழுத்தல் தான் எந்தையார் பரதம் தான்'' (உண். விளக். 37) என்று திருவதிகை மனவாசகம் கடந்தார் தெரிவிப்பது காண்க.

இதனுல், இறைவன் ஞான மேனி காட்டி நன்பொருள் நல்கிய திறம் தெரிவித்தவாறும். (26)

3086. தங்குசரா சரமுழுதும் அளித்தருளி நடத்துங்
தாள்மலர்கள் மிகவருந்தத் தனித்துநடங் தொருநாள்
கங்குலில்யான் இருக்குமனைக் கதவுதிறப் பித்துக்
கையில்ஒன்று கொடுத்தஉன்றன் கருணையைஎன் என்பேன்
இங்குசிறி யேன்பிழைகள் எத்தனையும் பொறுத்த
என்குருவே என்உயிருக் கின்பருளும் பொருளே
திங்களணி சடைப்பவளச் செழுஞ்சோதி மலையே
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகனே.

உரை: இவ்வுலகிற் சிறியவனுகிய யான் செய்த பிழைகள் அனைத்தையும் பொறுத்தருளிய எனது குருவே, என்னுடைய உயிர்க்கு இன்பத்தை நல்கும் பரம் பொருளே, பிறைச் சந்திரனைச் சடையில் கொண்டு பவள நிறச் செழுஞ் சோதியைப் பரப்பு மலையாகியவனே, சிவகாமியாகிய கொடி போன்ற அம்மை கண்டு மகிழும் தில்லைக் கூத்தப் பெருமானே, இவ்வுலகில் உள்ள சரம், அசரம் என்ற இருவகைப் பொருள்களையும் படைத்துக் காத்து வாழ்விக்கின்ற திருவடிகளாகிய மலர்கள் மிகவும் வருந்துமாறு தனியாக ஒரு நாள் இரவில் நடந்து போந்து யான் இருக்கும் வீட்டின் கதவைத் திறக்கச் செய்து, என்னுடைய கையிலொன்றைக் கொடுத்தருளிய உனது கருணையை என்னென்று சொல்லுவேன். எ. று.

உணர்த்திரு லன்றி உணர மாட்டாமை பற்றி, வடலூர் வள்ளல் தம்மைச் ''சிறியேன்'' என்று கூறுகிருர். சிறியேன் - சிறுமையையுடைய நான். என்னுடைய பிழைகட் கெல்லாம் காரணம் எனது சிறுமை என்பது கருத்து. சிறுமை எனதியல்பாதலால் பொறுத்தல் முறையாதல் கண்டு என்னைப் பொறுத்தாண்டனை யென்பார், ''சிறியேன் பிழைகள் எத்தனையும் பொறுத்த என் குருவே'' எனவும், அறிவு பொருளாக உரை நிகழ்த்தலின், ''குருவே'' எனவும் இசைக்கின்ருர். உயிர்கள் விழைவ தெல்லாம் இன்பமேயாகலின், ''உயிர்க்கு இன்பருளும் பொருளே'' எனப் புகல்கின்

ருர். "எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது தானமர்ந்து வரூஉம் மேவற்ருகும்" (பொருள்; 29) என்பது தொல்காப்பியம். பரம் பொருள் இன்ப வடிவிற்றெனச் சிவாகமங்கள் உரைப்பதால் "பொருளே" எனக் கிளந்து மொழிகின்ருர். திங்கள் - பிறைச் சந்திரன். பவள நிற மேனியராதலால், "பவளச் செழுஞ் சோதி மலையே" எனப் பகர்கின்ருர். "நீறணி பவளக் குன்றமே" (கோயில்) எனத் திருமாளிகைத் தேவர் போற்றுவது காண்க. சிவத்தை விரும்புகின்றவள் என்பதனுல் தில்லையில் அம்பிகையைச் சிவகாமி என்கின்றனர் வல்லி - ஈண்டுக் கொடி போன்றவள் எனப் பொருள் பட நிற்கிறது. உமை கண்டு மகிழ மன்றில் நின்று ஆடுவதால் "சிவகாம வல்லி மகிழ் திருநட நாயகனே" என்று சிறப்பிக்கின்ருர். இயங்கு திணை, நிலைத்திணை எனத் தமிழ் கூறும் பொருட் பாகுபாட்டை, வட மொழி சரமென்றும் அசரமென்றும் உரைக்கிறது. உலகியற் பொருள் களைப் படைத்தளித் தழிக்கும் முதல்வன் சிவனுதலால், "சராசர முழுதும் அளித்தருளி நடத்தும்" எனக் கூறுகிருர். மக்களுருவில் தனியனுய் வந்தமை பற்றி, "தனித்து" என்றும், நெடிது நடந்தமை புலப்பட "மிக நடந்தும்" என்றும் இயம்புகின்ருர்.

இதனுல், சிறுமையாற் செய்பிழையைப் பொறுத்து நல்ல தொன்று நல்கியது தெரிவித்தவாரும். (27)

3087. மாமாயை அசைந்திடச்சிற் றம்பலத்தே நடித்தும்
வருந்தாத மலரடிகள் வருந்தநடந் தருளி
ஆமாறன் றிரவினிடை அணிக்கதவந் திறப்பித்
தங்கையில்ஒன் றளித்தினிநீ அஞ்சேல்என் றுவந்து
தேமாவின் பழம்பிழிந்து வடித்துநறு நெய்யுந்
தேனும்ஒக்கக் கலந்ததெனத் திருவார்த்தை அளித்தாய்
கோமான்நின் அருட்பெருமை என்உரைப்பேன் பொதுவில்
கூத்தாடி எங்களைஆட் கொண்டபரம் பொருளே.

உரை: தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுமாற்ருல் உயிர்களாகிய எங்களை ஆண்டருளுகிற பரம்பொருளே, மாமாயை கலங்கி உலகுடல் கருவிகளும் தோன்றும்வண்ணம் ஞான வம்பலத்தில் நடித்தருளியும் வருத்தமுருத திருவடிகள் வருந்துமாறு என் மனை நோக்கி யான் உய்தி பெற அன்ருெருநாள் இரவின்கண் நடந்து போந்து அழகிய கதவைத் திறப்பித்து என் கையில் ஒன்றைத் தந்து இனி அஞ்சுதல் ஒழிக என்று இனிய மாம்பழத்தின் சாற்றைப் பிழிந்து வடி கட்டி மணமிக்க நெய்யையும் அதனளவான தேனையும் பெய்து கலந்தது போன்ற இனிய சொற்களைச் சொல்லி யருளினுய்; கோமானுகிய உன்னருட் பெருமையை என்னென்று புகழ்வேன். எ.று.

உலகுயிர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து இறவா இன்பம் எய்துதற் பொருட்டே தில்லையம்பலத்தில் இறைவன் திருக்கூத்து நடைபெறுகிறது என்பது கொண்டு, "பொதுவில் கூத்தாடி எங்களை ஆட்கொண்ட பரம்பொருளே" என்று கூறுகின்ருர். மாமாயை - இறைவன் சத்தியில் ஒடுங்கி யிருக்கும் மாயையாகிய நித்தப் பொருள்; இதனைப் பரிக்கிரக

மாயாசத்தி என்பதும் உண்டு. இறைவன் அருட்சத்தியைக் கலக்கி, அது மாமாயையைக் கலக்க, அதன்கண் உலகுகளும் உடல் கருவி கரணங்களும் பிறவும் தோன்றுகின்றன என்பதனால், "மாமாயை அசைந்திடச் சிற்றம்பலத்தே நடித்தும்" எனவும், இவ்வருட் செயல் சங்கற்பத்தாலே நிகழ்தலின் வருத்தம் சிறிதும் இன்மை பற்றி, "வருந்தாத மலரடிகள்" எனவும் இயம்புகின்றார். மலரடிகள் திருவருட் சத்தியைக் குறிக்கும் என அறிக. ஆமாறு - நலம் பெறும் பொருட்டு. சிற்றம்பலம் - ஈண்டு ஞானகாயப் பொருளது. அங்கே அகளமாய் நின்று ஐந்தொழில் நடத்துவது பரசிவம்; தொழிலைந்தும் திருவிளையாட்டாதலால், "நடித்தும்" என்று குறிக்கின்றார். ஒன்றை அளித்ததினும் "அஞ்சேல்" என உரைத்தருளிய சொல்லின் சுவையும் இன்பமும் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டமையின், "தேமாவின் பழம் பிழிந்து வடித்து நறுநெய்யும் தேனும் ஒக்கக் கலந்ததெனத் திருவார்த்தை அளித்தாய்" என்று கூறுகின்றார். தேமா - இனிக்கும் மாம்பழம். கோது போக்குதற்கு வடித்தல் வேண்டிற்று. ஒத்த அளவு நறுநெய் சேர்ப்பது உண்பார் உடம்பின் சூடு மிகாமைப் பொருட்டு. கோமான் - தலைவன். பொது - தில்லையம்பலம்.

இதனால், அஞ்சேலென்ற அருளுரையின் இனிமை காட்டியவாறும். (28)

3088. படைப்பவனுங் காப்பவனும் பற்பலநாள் முயன்று
பார்க்கவிரும் பினுங்கிடையாப் பாதமலர் வருந்த
நடைப்புலையேன் பொருட்டாக நடந்திரவிற் கதவம்
நன்குதிறப் பித்தொன்று நல்கியதும் அன்றி
இடைப்படுநா ளினும்வந்தென் இதயமயக் கெல்லாம்
இரிந்திடச்செய் தனைஉன்றன் இன்னருள்என் என்பேன்
தடைப்படுமா றில்லாத பேரின்பப் பெருக்கே
தனிமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே.

உரை: யாவராலும் தடுக்க வொண்ணாத பேரின்ப வெள்ளமாகிய பெருமானே, ஒப்பற்ற திருவம்பலத்தில் இன்பக் கூத்தாடும் அருளரசே, பிரமனும் திருமாலும் பன்னெடுநாள் முயன்று பார்க்க விரும்பிய போதும் காணக் கிடையா தொழிந்த திருவடித் தாமரைகள் வருந்துமாறு புலையொழுக்க முடையவனாகிய என் பொருட்டு இரவுக் காலத்தில் நடந்து போந்து என் வீட்டுக் கதவைப் பரக்கத் திறந்து ஒன்றைக் கொடுத்ததுமன்றி, சிலநாள் இடையே கழிந்த பின்னும் என்பால் வந்து என் மனத்திற் படிந்திருந்த மயக்க மெல்லாம் நீங்கத் தெளிவுறுத்தினாய்; உனது இனிய திருவருளை என்னென்று புகல்வேன்; கூறுக. எ.று.

எல்லாம் வல்லவனாதலின் இறைவன் திருவருள் வெள்ளம் பாயத் தொடங்கின் அதனைத் தடுப்பாரும் கெடுப்பாரும் வேறின்மை புலப்பட, "தடைப்படுமா றில்லாத பேரின்பப் பெருக்கே" எனப் பேசுகின்றார். தில்லையம்பலத்துக்கு ஒப்பு வேறு இன்மையின், அதனைத் "தனிமன்று" என்றும், அத் திருக்கூத்து உயிர்கட்கு இன்பம் அருளுவது விளங்க, "ஆனந்தத் தாண்டவம்செய் அரசே" என்றும் எடுத்தோதுகின்றார். தாண்டவம் - கூத்து. படைப்பவன் - பிரமன், காப்பவன் - திருமால். நடை.

ஒழுக்கம். புலே நடை யுடையேன் என்பது நடைப் புலேயேன் என வந்தது; இதற்கு நடையாற் புலேயேன் எனினும் பொருந்தும். நன்கு திறப்பித்தல் - பரக்கத் திறந்து வைத்தல். இடைப்பட்ட நாள் - சிலநாள் இடையிட்டு வந்தமை குறிக்கிறது. இதயம் - மனம். மக்கள் வாழ்வில் கணந்தோறும் கறங்கு போற் சுழலும் முக்குண வியக்கத்தால் மயக்க விருள் படிதல் பற்றி, "இதய மயக்கெல்லாம்" என இயம்புகிருர். இரிதல், நீங்குதல். நாளும் மனம் தெளிந்த நிலேயில் நிலவச் செய்தமை புலப்பட, "உன்றன் இன்னருள் என்னென்பேன்" என்று உரைக்கின்ருர்.

இதனுல், நாளும் மனம் சத்துவ குணமே கொண்டுறையச் செய்த திருவருளே வியந்தவாறு. (29)

3089. முன்னேமறை முடிமணியாம் அடிமலர்கள் வருந்த
முழுதிரவில் நடந்தெளியேன் முயங்குமிடத் தடைந்து
அன்னேயினும் பரிந்தருளி அணிக்கதவந் திறப்பித்
தங்கையில்ஒன் றளித்தெனேயும் அன்பினெடு நோக்கி
என்னே இனி மயங்காதே என்மகனே மகிழ்வோ
டிருத்திஎன உரைத்தாய்நின் இன்னருள்என் என்பேன்
மின்னேநிகர் செஞ்சடைமேன் மதியம்அசைந் தாட
வியன்பொதுவில் திருநடஞ்செய் விமலபரம் பொருளே.

உரை : மின்னற் கொடி போற் சிவந்த சடை மேற் றங்கும் பிறைச் சந்திரன் அசைந்தாட அகன்ற அம்பலத்தில் திருக்கூத் தியற்றும் விமல பரம்பொருளாகிய சிவபெருமானே, பழையவாகிய வேதங்கட்கு முடி மணியாகும் திருவடியாகிய தாமரைகள் வருந்தும்படி நள்ளிரவில் எளியனுகிய யான் உறையுமிடத்துக்கு நடந்து வந்து தாயினும் சாலவும் பரிந்து அழகிய கதவைத் திறக்கச் செய்து என் அகங்கையில் ஒன்றைத் தந்து அதனே ஏற்று நோக்கிய என்னே அன்புடன் பார்த்து, என் மகனே, இனி யுனக்குக் குறை என்னே யுளது? மயங்குதலின்றி மகிழ்வோடு இருப் பாயாக, என உரைத்தருளினுய்; இந்த நினது இனிய திருவருளே என்னென்று புகல்வேன். எ.று.

"மின்னியலும் வார்சடை யெம்பெருமான் கண்டாய்" (மழபா) எனப் பெரியோர் புகழ்தலின், "மன்னே நிகர் செஞ்சடை" என விளம்புகின்ருர். வியன் பொது - அகன்ற அம்பலம். உயிரும் உடம்பை நோக்கப் பரம் பொருளாயினும் அது மலமுடையதாகலின், பரசிவத்தை, "விமல பரம் பொருள்" என்கின்ருர். பரம் - மேல். மிகவும் பழமையான தென எல்லாரும் ஒப்ப மொழிதலால் "முன்னே மறை" எனவும், மறை ஞான முடிவு சிவத்தின் திருவடியி லடங்குதலால், "மறைமுடி மணியாம் அடிமலர்கள்" என அறிவிக்கின்ருர். முழுதிரவு - நள்ளிரவு. ஒளியின் சிறு கலப்புமின்றி இருளே செறிந்த இரவு என்றற்கு இவ்வாறு இசைக்கின்ருர். முயங்கு மிடம் - உறங்குமிடம்; வீடு என்பதாம். அங்கை - அகங்கை; உள்ளங்கை யென்றுமாம். இனி ஒரு குறையும் உண்டாகாது என்பதுபட, "என்னே இனி" என்று கூறுகிருர். இனி என்னே நின்னின் வேருகக் கருதாதே

என்று இத்தொடர்க்குப் பொருள் கூறினும் பொருந்தும். இருத்தி - வியங்கோட் பொருளில் வந்த இகர வீறு.

இதனால், மயக்கமின்றி யுறைக என அருளியவாறும். (30)

3090. மீதானத் தருள்ஒளியாய் விளங்கியநின் அடிகள்
மிகவருந்த நடந்திரவில் வினையேன்றன் பொருட்டாச்
சீதானக் கதவுதனைத் திறப்பித்துச் சிறியேன்
செங்கையில்ஒன் றளித்தினிநீ சிறிதுமஞ்சேல் இங்கு
மாதானத் தவர்சூழ வாழ்கஎன உரைத்தாய்
மாமணிநின் திருவருளின் வண்மைஎவர்க் குளதே
ஓதானத் தவர்தமக்கும் உணர்வரிதாம் பொருளே
ஓங்கியசிற் றம்பலத்தே ஒளிநடஞ்செய் பதியே.

உரை : வேத வேள்விகட்குரிய மந்திரக் கிரியைகளில் உயர்ந்தவர்க்கும் உணர்தற்கரிய பரம்பொருளே, மேலான சிற்றம்பலத்தில் ஒளிமயமான நடம் புரியும் தலைவனே, தத்துவ மண்டலங்கட்கு மேலான இடத்தே அருளொளியாய் விளங்குகிற நின்னுடைய திருவடிகள் மிகவும் வருந்தும் வண்ணம், வினையை யுடையவனாகிய என் பொருட்டு இரவில் என் மனைக்கு நடந்து போந்து, தலைவாயிற் கதவைத் திறக்கச் செய்து சிறியவனாகிய என் கையில் ஒன்றைக் கொடுத்தருளி, இனி நீ சிறிதும் அஞ்சாமல் இவ்வுலகில் உயர்நிலையில் இருக்கின்ற மேன்மக்கள் சூழ்வர வாழ்க என்று உரைத்தருளினாய்; பெரிய மாணிக்க மணி போன்ற நினது திருவருளின் வளமை வேறே யாவரிடத்தும் இல்லை. எ.று.

ஓதா - தானத்தவர் வேத வேள்விக்குரிய மந்திரங்களிலும் கிரியைகளிலும் சிறந்தவர். ஓதாதானம் - ஓதானம் என வந்தது; ஓதானிகளை ஓதா என்றும் வேத நெறியினர் (மீமாஞ்சகர்) வழங்குவர். வைதிக வுணர்வுடைய ஓதாக்களாலும் உணர வொண்ணாததாகிய பரம்பொருள் என்பது கருத்து. பரசிவத்தைப் பரவஸ்து என்பவாகலின், "பொருளே" எனப் புகல்கின்றார். சிற்றம்பலம் எனப்படினும் பொருளுணர்வார்க்குச் சிவ மோங்கி யுயர்ந்த பேரம்பலமாதல் விளங்க, "ஓங்கிய சிற்றம்பலம்" எனவும், சிவஞானிகட்குத் திருவரு ளொளியாய்த் திகழ்வது பற்றி, "ஒளி நடம்செய் பதியே" எனவும் உரைக்கின்றார். மீதானம் - சுத்த மாயா தத்துவத்தின் மத்தகத் தொளிரும் நாத தத்துவத்தின் அந்தம்; அங்கே சிவம் ஒளியாய்த் திகழ்தலின், "மீதானத் தருளொளியாய் விளங்கிய நின் திருவடிகள்" எனத் தெரிவிக்கின்றார். சீதானம் - சிற்ப வேலைகள் செய்யப்பட்டிருக்கும் மனையின் தலைவாயில். பெரும்பாலும் திருவிளங்கும் தெய்வ வுருக்களே வாயிலின் பொறிக்கப் படுதலின், "சீதானம்" எனப்படுகிறது. மாதானத்தார் - செல்வம், கல்வி, பதவி முதலியவற்றால் உயர்நிலையில் உள்ள பெருமக்கள்.

இதனால், திருவருட் செல்வத்தால் உலகில் மிக்க மேன்மக்களோ டொப்ப வாழ்தல் கூடும் எனத் தெரிவித்தவாறும். (31)

3091. வேதாந்த சித்தாந்தம் என்னும்அந்தம் இரண்டும்
விளங்கஅமர்ந் தருளியநின் மெல்லடிகள் வருந்த
நாதாந்த வெளிதனிலே நடந்தருளும் அதுபோல்
நடந்தருளிக் கடைநாயேன் நண்ணும்இடத் தடைந்து
போதாந்த மிசைவிளங்குந் திருமேனி காட்டிப்
புலையேன்கை யிடத்தொன்று பொருந்தவைத்த பொருளே
சூதாந்த மனத்தினுக்கும் அப்பாற்பட் டிருந்த
துரியவெளிக் கேவிளங்கும் பெரியஅருட் குருவே.

உரை : சூதும் பொய்யும் நிறைந்த சூழ்நிலைகள் அனைத்துக்கும் அப்பாலாயுள்ள துரிய வெளியில் மெய்யாய்க் காண விளங்கும் பெரிய அருட் குருவானவனே, வேதாந்த ஞானம், ஆகம ஞானம், என்ற இரண்டும் இனிது விளங்குமாறு அமைந்த இரண்டும் மென்மையான திருவடிகள் நாதாந்த பரவெளியில் நடந்தருளுவது போல, மண்ணின் மேல் வருந்த நடந்தருள நாயிற்கடைப்பட்ட யான் இருக்கும் இடத்தை யடைந்து நூலறிவின் எல்லையில் விளங்கும் திருமிக்க கலைஞான மேனியைக் காட்டிப் புலையொழுக்கமுடையனாகிய என் கையில் ஒன்றை மெய்யுறத் தந்த மெய்ப்பொருளாயவனே, உன் திருவருளை என்னென்று வியப்பேன். எ.று.

சூதாந்தம் - சூதும் பொய்யும் புனைந்துரைகளும் நிறைந்து தன்னலமும் இனநலமும் நண்ணிய பொய்ந் நூலறிவு. இதனால் மக்களினம் ஒருமை சிதைந்து உண்மை யுணர்விழந்து, வேற்றுமைச் சூழலிற் பட்டுப் புறநோக்கால் கீழ்மை யெல்லையடைந்தமையின், அதற்கு வேறாய் அப்பாலாய் அகநோக்கால் காணத்தக்க துரியக் காட்சிக்கு விளக்கமுறும் சமரச வித்தக ஞானத் திருவருட் பரமபெருமானை, "துரிய வெளிக்கே விளங்கும் பெரிய அருட் குருவே'' என்று போற்றுகின்றார். வெளிக்கென்ற விடத்து நான்கனுருபு ஏழாவதன் பொருட்டு. சூது - பொய்ந் நூலறிவு, வேதாந்தம் - வேதம் உபநிடதம் மிருதி முதலிய நூலறிவு. சித்தாந்தம் - காமிக முதல் வாதுளம் ஈறாக நிற்கும் ஆகம வறிவு. இரண்டையும் இரு திருவடிகளாக உருவகம் செய்து, "இரண்டும் விளங்க அமர்ந்த மெல்லடிகள்'' என விளம்புகிறார். நாதாந்த வெளி - நாத தத்துவத்துக்கு அப்பாலதாகிய பரவெளி. நாத தத்துவத்தின் வாயிலாக உணரப்படுதலின், "நாதாந்தவெளி'' என்று கூறுகிறார் அறிந்ததைக் கொண்டு அறியாததைக் காட்டுவது உவமமாகலின் அந்நெறியை மேற் கொண்டு, மண்ணுலகில் கால்களால் நடப்பது போல நாதாந்தப் பரவெளியில் இறைவனாகிய பரசிவம் இயங்குவதாக வுரைக்கின்றார். இங்கே கூறுவது தாமரை போன்ற முகத்தை, முகம் போன்ற தாமரை என்பது போலும் உவம வாய்ப்பாடு. போதாந்தம் - ஈண்டுச் சிற்பம், இசை முதலிய கலை நூலறிவு. புலையேன் - பொய், களவு முதலிய புலையொழுக்கத்தை யுடையேன்.

இதனால், திருமேனி காட்டித் திருவருள் செய்த திறம் கூறியவாறும். (82)

3092. ஒருமையிலே இருமைஎன உருக்காட்டிப் பொதுவில்
ஒளிநடஞ்செய் தருளுகின்ற உபயபதம் வருந்த
அருமையிலே நடந்தெளியேன் இருக்குமிடத் தடைந்தே
அணிக்கதவந் திறப்பித்தென் அங்கையில்ஒன் றளித்துப்
பெருமையிலே பிறங்குகநீ எனத்திருவாய் மலர்ந்த
பெருங்கருணைக் கடலேநின் பெற்றியைஎன் என்பேன்
கருமையிலே நெடுங்காலங் கலந்துகலக் குற்ற
கலக்கமெலாந் தவிர்த்தெம்மைக் காத்தருளும் பதியே.

உரை: கருப்பையின் காரிருளில் நெடுங் காலம் கலந்து கிடந்து எய்திய கலக்க மெல்லாம் நீக்கி உயிர்களாகிய எங்களைக் காத்தருளுகின்ற தலைவனே, ஒரு திருமேனியில் ஆண், பெண் என்ற இரண்டு திருவுருவைக் காட்டித் தில்லையம்பலத்தில் ஒளி மயமான திருநடனம் புரிகின்ற நின் இரண்டு திருவடிகளும் வருந்த அருமையாக நடந்து எளியவனாகிய யான் இருக்குமிடம் போந்து, அழகிய கதவைத் திறக்கச் செய்து, உள்ளே வந்து, என் கையில் ஒன்றைக் கொடுத்து, ஆதரவு செய்து நீ பெருமை நிலையில் உயர்வுறுக எனச் சொல்லி யருளிய நின் தன்மையைப் பெரியகருணைக் கடலாகிய பெருமானே, யான் என்னென்று உரைப்பேன். எ.று.

கருமை - கருப்பையில் நிலவும் மையிருள். "காரிட்ட ஆணவக் கருவறை" என்பர் தாயுமானார்; "ஈரிரு திங்களிற் பேரிருள்" (போற்றி) என மணிவாசகப் பெருமானும் குறித்தல் காண்க. கருவிற் கலந்து திங்கள் தோறும் இன்னல் பலவற்றில் தோய்ந்து கலக்கமுறுதலைப் பெரியோர் எடுத்தோதுதலால் "கலந்து கலக்குற்ற கலக்கம்" எனக் கூறுகின்றார். பிறக்கும் உயிர்கள் செம்மை நிலையெய்துங்காறும் தெய்வம் காக்கிறது என எல்லா நாட்டு எல்லா மக்களும் கூறுதலால், "எம்மைக் காத்தருளும் பதியே" எனக் கட்டுரைக்கின்றார். ஒரு திருமேனியில் உமையும் தானுமாய் ஈருருக் காட்டி உயிர்களை மகிழ்விக்கின்றமை தோன்ற, "ஒருமையிலே இருமையென வுருக்காட்டி" என வுரைக்கின்றார். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருணல்கிச் சேணின்றவர்க் கின்னும் சிந்தைசெய வல்லான்" (நாகைக்காரோ) எனத் திருஞானசம்பந்தர் கூறுவர். ஞான நடனத்தைக் குறித்தற்கு "ஒளி நடம் செய்தருளுகின்ற உபய பதம்" எனப் புகல்கின்றார். ஞானவான்களாகிய பெரியோரது ஞானச் சூழலில் உயர்க என்றமையின், "பெருமையிலே பிறங்குக நீ எனத் திருவாய் மலர்ந்த" எனப் பேசுகின்றார்.

இதனால் பெருமையிற் பிறங்குக என்ற அருளுரையை நினைந்து வியந்தவாறும். (33)

3093. விந்துநிலை நாதநிலை இருநிலைக்கும் அரசாய்
விளங்கியநின் சேவடிகள் மிகவருந்த நடந்து
வந்துநிலை பெறச்சிறியேன் இருக்குமிடத் தடைந்து
மணிக்கதவந் திறப்பித்து மகனேஎன் றழைத்து

இந்துநிலை முடிமுதலாந் திருஉருவங் காட்டி
என்கையொன் றளித்தின்பம் எய்துகஎன் றுரைத்தாய்
முந்துநிலைச் சிறியேன்செய் தவமறியேன் பொதுவில்
முத்தர்மனந் தித்திக்க நிருத்தமிடும் பொருளே.

உரை: ஞான சபையின்கண் முத்தான்மாக்கள் கண்டு மகிழும்படி, நடனம் புரிகின்ற சிவ பரம்பொருளே, விந்து தத்துவம், நாத தத்துவம் என்ற தத்துவ மிரண்டிற்கும் தலைமையாய் விளக்க மருளுவனவாகிய நின்னுடைய சிவந்த திருவடிகள் மிக வருந்துமாறு நடந்து போந்து நிற்றற் பொருட்டுச் சிறுமையையுடைய யான் இருக்கு மிடத்தை யடைந்து, அழகிய வாயிற் கதவைத் திறக்கச் செய்து, உட்புகுந்து, மகனே! என என்னை யழைத்தருளிப் பிறை தங்கிய திருவடி முதல் திருவடி யீருக அமைந்த முழு வுருவத்தையும் காட்டி என்னுடைய கையில் ஒன்றைத் தந்து இன்பம் எய்துக எனவுரைத்தருளினுய் முற்படும் மனநிலையையுடைய சிறியனுகிய யான் இதற்கேதுவாகச் செய்துள்ள தவத்தை அறிகிலேன், காண். எ.று.

நாதம் மேலதும் விந்து அதன் கீழதுமாயினும் செய்யுளாகலின் மாறி நின்றது. நாதத்தைச் சிவ தத்துவ மென்றும், விந்துவைச் சத்தி தத்துவ மென்றும் நூலோர் கூறுவர். சிவ தத்துவம் ஞானம் என்றும், சத்தி தத்துவம் தொழிலென்றும் அறிக. இவ்விரண்டிற்கும் மேலாய் நின்று இயக்குவது பரசிவமாதலின், அதனை "அரசாய்" என்று குறிக்கின்றுர். சிவம் சத்தி என்ற இரு தத்துவங்களையும், திருவடியாகக் கொண்டு "இரு நிலைக்கும் அரசாய் விளங்கிய நின் சேவடிகள்" என வுரைக்கின்றுர் எனினும் அமையும். வந்ததன் பயன் வள்ளற் பெருமான் சிந்தைக்கண் நிலைபெறுவது கருதினமை விளங்க "நிலைபெற" என்கின்றுர். மணிக் கதவம் - அழகிய கதவு. வருவார் வந்தமை தெரிவிக்கும் மணி கட்டிய கதவு என்று உரைப்பதுமுண்டு. பிறை தங்கிய சடைமுடியை "இந்துநிலை முடி" எனக் குறிக்கின்றுர். இந்து - பிறைச்சந்திரன். இது கொண்டு நிலைத்த இன்பம் பெறுக என்பாராய், "என் கையில் ஒன்றளித்து இன்பம் எய்துக என்று உரைத்தாய்" என மொழிகின்றுர். உரை கேட்டவிடத்து உளதாகிய உள்ளத் துடிப்புப் புலப்பட, "முந்துநிலைச் சிறியேன்" என்றும், இத்துணை நலம் உளதாதற்குக் காரணம் முன்னைத் தவமெனத் தெளிந்தமை தோன்ற, "செய்தவம் அறியேன்" என்றும் இயம்புகின்றுர்.

இதனுல், திருவருட் பேற்றுக்குரிய முன்னைத் தவத்தை நினைவு கூர்ந்தவாறும். (34)

3094. நவநிலைக்கும் அதிகாரம் நடத்துகின்ற அரசாய்
நண்ணியநின் பொன்னடிகள் நடந்துவருந் திடவே
அவநிலைக்குங் கடைப்புலையேன் இருக்கும்இடத் திரவில்
அணைத்தருளிக் கதவுதிறந் தடியேனை அழைத்தே
சிவநிலைக்கும் படிஎனது செங்கையில்ஒன் றளித்துச்
சித்தமகிழ்ந் துறைகஎனத் திருப்பவளந் திறந்தாய்
பவநிலைக்குங் கடைநாயேன் பயின்றதவம் அறியேன்
பரம்பரமா மன்றில்நடப் பயின்றபசு பதியே.

உரை : மேன்மேலாக வுயர்ந்த பொன்னம்பலத்தில் திருநடம் புரிகின்ற பசுபதியே, சிவ முதலிய நிலைகள் ஒன்பதிற்கும் அதிகாரம் செய்கின்ற பேரரசாகப் பொருந்திய நின்னுடைய அழகிய திருவடிகள் வருந்த நடந்து கீழ்நிலையிற் கீழாய புலையொழுக்கமுடைய யான் இருக்குமிடத்துக்கு இரவிற் போந்து, கதவைத் திறக்கச் செய்து, என்பால் வந்து என்னை அருகழைத்து என்னுள் சிவமாம் தன்மை நிலைபெறுமாறு என்னுடைய செவ்விய கையில் ஒன்றைக் கொடுத்துச், சிந்தை மகிழ்வுடன் இருப்பாயாக என்று பவளம் போற் சிவந்த வாயைத் திறந்து உரைத்தருளினாய்; பிறப்பு நிலையிற் கடையவனாகிய யான் இதற்கு என்ன தவம் செய்தேனோ, அறியேன். எ.று.

பரம் - மேன்மை; அடுக்கு மிகுதி குறித்தது. மாமன்று - பொன்னம்பலம். பசுபதி - ஆன்மாவாகிய பசுக்களுக்குத் தலைவன். சிவ முதலிய நிலைகள் ஒன்பதும்; சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன் உருத்திரன், மால், அயன் என வரும். இப்பதங்களிலிருந்து அருளரசு செலுத்துவது பரசிவவமாதலால், "நவநிலைக்கும் அதிகாரம் நடத்துகின்ற அரசாய்" எனக் கூறுகின்றார். "சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழுமீசன், உவந்தரு ளுருத்திரன் தான் மால் அயன்" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனார் அறிவிக்கின்றார். இவை அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்றென ஒன்பதாய் விளங்கும். பொன்னடிகள் - அழகிய திருவடிகள். அவநிலை - கீழாய நிலை. பொய் களவு முதலியன புலையொழுக்கமாகும். சிவம் - சிவம் பெறுதற்குரிய நற்பண்பு. சித்தம் - மனம். இன்பமாக வாழ்க என்பாராய், "சித்தம் மகிழ்ந்துறைக" எனச் செப்புகின்றார். பவளம் - பவளம் போற் சிவந்த வாய்; ஆகு பெயர். பவம் - பிறப்பு.

இதனால், அவலக் கவலையின்றி இனிது வாழ்க என அருளியவாறும். (35)

3095. புண்ணியர்தம் மனக்கோயில் புகுந்தமர்ந்து விளங்கும்
பொன்மலர்ச்சே வடிவருத்தம் பொருந்தநடந் தெளியேன்
நண்ணியஓர் இடத்தடைந்து கதவுதிறப் பித்து
நற்பொருள்ஒன் றென்கைதனில் நல்கியநின் பெருமை
எண்ணியபோ தெல்லாம்என் மனமுருக்கும் என்றால்
எம்பெருமான் நின் அருளை என்னெனயான் புகல்வேன்
தண்ணியவெண் மதிஅணிந்த செஞ்சடைநின் றாடத்
தனித்தமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே

உரை : குளிர்ந்த வெள்ளைப் பிறைத் திங்கள் தங்கிய செஞ்சடை எங்கும் பரந்து நின்று ஆட, ஒப்பற்ற அம்பலத்தில் எழுந்தருளி இன்பத் திருக்கூத்தாடும் அருளரசே, சிலபுண்ணியம் செய்த மேலோர் திருவுள்ளமாகிய கோயிலில் விரும்பி யெழுந்தருளும் பொன் மலர் போன்ற திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த நடந்து, எளியனாகிய யான் இருந்த மனையை யடைந்து, கதவைத் திறக்கச் செய்து எதிர் கொண்ட என் கையில் நன்பொருள் ஒன்றைத் தந்தருளிய நினது அருட்

பெருமையை நான் மனத்தின்கண் நினைத்த போதெல்லாம் அஃது என் நெஞ்சினை யுருக்குகின்றது; எனின், எம்பெருமானாகிய உனது பேரருளை என்னென்று புகல்வேன். எ.று.

வெண்மதி யென்றது பிறைச் சந்திரனை. திருக்கூத்து ஆடுகையில் சிவந்த சடை எண்டிசையும் விரிந்து பரந்து ஆடுவது விளங்க, சூடிய பிறையும் நழுவி விழாமல் நிற்பது புலப்பட, "நின்றாட" என வுரைக்கின்றார். புண்ணியர், சிவ புண்ணியத்தால் மேம்பட்டவர். நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொள்பவனாயினும் புண்ணியர் மனத்தின்கண் சிறப்புற மேவுதலால் "புகுந்து அமர்ந்து விளங்கும் சேவடிகள்" என்று புகல்கின்றார், பொன்னிற மேனியனாகலின், திருவடிகள் பொற்றாமரை போல்கின்றன என்றற்கு, "பொன் மலர்ச் சேவடி" எனப் புகழ்கின்றார். எளியனாகிய எனக்கென ஓர் இடம் இன்மையின் யான் எங்கே செல்கின்றேனோ அங்கே போந்தருளினை என்பாராய், "எளியேன் நண்ணிய இடத்தடைந்து" எனவும், இடத்தின் சிறுமையும் புன்மையும் நோக்காமல் என்னைப் பொருளாக நோக்கி நன்பொருள் ஒன்றை வழங்கினாய் என்பாராய், "நற்பொருள் ஒன்றென் கைதனில் நல்கிய நின் பெருமை" எனவும் இயம்புகிறார். பொருணலமும் அளித்த அருணலமும் நினைக்கும் நெஞ்சினை நீராய் உருக்குதல் தோன்ற, "என் மனமுருக்கும் என்றால்" எனக் கூறுகின்றார்.

இதனால், நன்பொருளின் நலம் நினைந்து மனம் உருகுமாறு உரைத்தவாறும். (36)

3096. மூவருக்கும் எட்டாது மூத்ததிரு அடிகள்
முழுதிரவில் வருந்தியிட முயங்கிநடந் தருளி
யாவருக்கும் இழிந்தேன்இங் கிருக்கும்இடத் தடைந்தே
எழிற்கதவந் திறப்பித்துள் எனைஅழைத்து மகனே
தேவருக்கும் அரிதிதனை வாங்கெனஎன் கரத்தே
சித்தமகிழ்ந் தளித்தனைநின் திருவருள்என் என்பேன்
பூவருக்கும் பொழிற்றில்லை அம்பலத்தே நடனம்
புரிந்துயிருக் கின்பருளும் பூரணவான் பொருளே

உரை; மலர் வகைகள் நிறைந்திருக்கும் சோலைகளையுடைய தில்லை நகர் அம்பலத்தின் கண் திருநடம் செய்து உயிரினங்கட்கு இன்பத்தை நல்கும் பூரணமான பெரிய பொருளாகிய பெருமானே, திருமால் முதலிய மூவருக்கும் பெறற்கரியனவாகிய நின்னுடைய திருவடிகள் நள்ளிரவில் மண் பொருந்தி வருந்த நடந்து போந்து, யாவரினும் தாழ்ந்தவனாகிய யான் தங்கும் மனையை யடைந்து, உயர்ந்த கதவைத் திறக்கச் செய்து, என்னை யுட் புறத்தே அழைத்துச் சென்று, மகனே, இது தேவர்களுக்கும் பெறலரியது; இதனை வாங்கிக் கொள்க என்று என் கையில் மன மகிழ்ச்சியுடன் தந்தருளினாய்; உன் திருவருளை என்னென்று புகழ்வேன். எ. று.

பூவிருக்கம். பூ வகைகள். வர்க்கம் என்ற வட சொல் வருக்கம் எனச் சிதைந்தது. "சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" என்பது தொல்

காப்பியம். திருக்கூத்து, உயிர்கட்கு இன்பம் விளைவிக்கும் அருட் குறிப்புடையது. "நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல் தானெந்தை யார் பரதம் தான்'' (உண். விளக்) எனப் பெரியோர் கூறுவதறிக. பூரணம், குறைவிலா நிறைவு. வான் பொருள். பெரிய பொருள்- வடநூலார், இதனைப் 'பிரமம்' என்பர். மூவர், திருமால் பிரமன் உருத்திரன் எனப்படுவர். மூத்த திருவடி, உயர்ந்த திருவடி. இருள் திணிந்த நள்ளிரவு இரவு எனக் குறிக்கப்படுகிறது. முயங்குதல்- சேர்தல். நிலத்தில் அடி பொருந்த வைத்து நடத்தலை முயங்கி நடத்தல் என மொழிகின்றார். மிகவும் தாழ்ந்தவன் எனத் தம்மைக் குறிப்பது வேண்டி, "யாவருக்கும் இழிந்தேன்'' என இயம்புகின்றார். எழில்- உயர்ச்சி. சிவஞானத் திருவருளை நல்குகின்றாராகலின், அதன் அருமை யுணர்த்தற்குத் "தேவருக்கும் அரிது இதனை வாங்கு'' என இறைவன் மொழிகின்றார். மனம் சிதைந்த உவப்புடன் தந்தமை கண்டு கூறுதலால் "சிந்தை மகிழ்ந் தளித்தனை'' எனச் செப்புகின்றார். நன்றி பெருக வியத்தல் விளங்க "திருவருள் என்னென்பேன்'' என்கின்றார்.

இதனால், இறைவன் அளித்த ஒன்று தேவருக்கும் பெறலரிய தெனப் புகழ்ந்தவாரும். (37)

3097. சுற்றவர்தம் கருத்தினின்முக் கனிரசம்போல் இனிக்கும்
கழலடிகள் வருந்தியிடக் கடிதுநடந் திரவில்
மற்றவர்கா ணுதெளியேன் இருக்கும் இடத் தடைந்து
மனைக்கதவு திறப்பித்து வலிந்தெனைஅங் கழைத்து
நற்றவர்க்கும் அரிதிதனை வாங்கெனஎன் கரத்தே
நல்கியநின் பெருங்கணை நட்பினைஎன் என்பேன்
அற்றவர்க்கும் பற்றவர்க்கும் பொதுவினிலே நடஞ்செய்
அருட்குருவே சச்சிதா னந்தபரம் பொருளே.

உரை: பற்றுக்கள் அற்றவர்க்கும், அருதவர்க்கும் பொதுவாக நின்று அம்பலத்தில் திருநடனம் புரிகின்ற அருட்குருவே, சச்சிதானந்தமான பரம் பொருளே, கற்றவர்களின் கருத்தில் முக்கனிகளின் இரசம் போல இனிக்கின்ற கழலணிந்த திருவடிகள், வருந்த விரைவாக நடந்து இரவுக் காலத்தில் மற்றவர்கள் கண்ணுக்குத் தோன்றுமல் எளியவனுகிய யான் இருக்கின்ற இடத்தை யடைந்து, வீட்டின் கதவைத் திறக்கச் செய்து வலிய அழைத்து, நல்ல தவமுடையோர்க்கும் பெறலரியதாகிய நினது பெரிய கருணை மிக்க அன்பை என்னென்று சொல்லுவேன். எ. று.

பற்றவர்- யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் உடைய உலகவர். அற்றவர். அவ்விரண்டினையும் அற்ற துறவோர். இரு திறத்தார்க்கும் ஒப்ப நிற்பது தோன்ற "பொதுவினில்'' என்ற சொல் நிற்கிறது. பொது தில்லை யம்பலத்தையும் குறிப்பது அறிக. அருள் ஞானம் தருதலால், "அருட் குருவே'' எனவும், சத்தாயும் சித்தாயும் ஆனந்தமாயும் உள்ள பரம் பொருளே என்றற்குச் "சச்சி தானந்த பரம் பொருளே'' எனவும் இயம்புகின்றார். "கற்றவர் களுண்ணும் கனியே போற்றி'' (ஆரூர்) எனப் பெரியோர்கள் கூறுதலால்

கனியை விளக்குவார் போல், "கற்றவர் தம் கருத்தினில் முக்கனி ரசம் போய் இனிக்கும் கழலடிகள்" என்று மொழிகின்ருர். முக் கனிகள், மா பலா வாழை என்ற மூவகைக் கனிகள். இசரம், சாறு. கழலடி, வீர தண்டை யணிந்த திருவடிகள். மற்றவர் காணுதபடி வருதலின், "கடிது நடந்து" எனக் கூறுகிருர். அச்சத்தால் ஒரு பால் ஒடுங்கின என்னை வலி திற் பிடித்து இழுத்து முன்னிறுத்தினமை புலப்பட, "வலிந்தெனை அங் கழைத்து" என உரைக்கின்ருர். நல்ல தவம் புரிந்த பெரு மக்கட்கும் பெறற்கரியதாகலின், இதனைப் பெற்றுக் கொள்க எனச் சொல்லித் தந்த மையின், "நற்றவர்க்கும் அரிதிதனை வாங்கென வென்கரத்தே நல்கிய நின் பெருங்கருணை" என மொழிகின்ருர். வேண்டிய வேண்டியாங் கெய்த உதவுவது தவமாயினும், இஃது அத்தவத்தார்க்கும் பெறலரிதென விளக் குதற்கு "நற்றவர்க்கும் அரிது" என்று கூறுகிருர். "வேண்டிய வேண்டி யாங் கெய்தலாற் செய்தவம் ஈண்டும் முயலப்படும்" (குறள்) எனத் திருவள்ளுவர் உரைப்பது காண்க. பெறற்கரிய தொன்றை வலிதிற்றருவது பேரருட் செயலாதலால் "பெருங்கருணை" என்று போற்றுகின்ருர். கருணை காரணமாக வுளதாகும் நட்பு, "கருணை நட்பு" எனப்படுகிறது.

இதனல், கருணை காரணமாக நட்புற்று அரிது வலியத் தந்ததை வியந்து கூறியவாரும். (38)

3098. கருணைவடி வாய்அடியார் உள்ளகத்தே அமர்ந்த
கழலடிகள் வருந்தியிடக் கங்குலிலே நடந்து
மருணிறையுஞ் சிறியேன்நான் இருக்குமிடத் தடைந்து
மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தழைத்து மகனே
பொருணிறையும் இதனைஇங்கே வாங்கெனஎன் கரத்தே
பொருந்தஅளித் தருளியநின் பொன்னருள்என் என்பேன்
அருணிறையும் பெருங்கடலே அம்பலத்தில் பரமா
னந்தவுரு வாதிநடம் ஆடுகின்ற அரசே.

உரை: அருளே நிறைந்த பெரிய கடல் போன்றவனே, தில்லையம் பலத்தில் மேலான ஆனந்த வுருவு கொண்டு நடனம் புரிகின்ற அருளரசே, கருணைத் திருமேனியுடன் அடியார்களின் உள்ளக் கோயிலில் எழுந்தருள்கின்ற கழலணிந்த திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்தும் படி இரவிலே நடந்து மருட்சி நிறைந்த சிறியவனுகிய யான் இருக்கு மிடத்தை அடைந்து அழகிய கதவைத் திறந்து விருப்புடன் என்னை அழைத்து, "மகனே, பொருள் நிறைந்த நான் தரும் இதனை வாங்குக என்று சொல்லி என் கையில் நன்கு பொருந்தக் கொடுத்தருளிய நின்னுடைய பொன்னன திருவருளை யான் என்னென்று பாராட்டுவேன். எ.று.

அளவிறந்த அருட்பெருக்கின் திருவுருவாய் விளங்குதல் தோன்ற 'அருள் நிறையும் பெங்கடலே" எனவும், தில்லைப் பொன்னம்பலத்தில் இன்ப வடிவாய் நின்று திருக்கூத்து ஏற்றுதலால், "அம்பலத்தில் பரமானந்த உருவாகி நடம் ஆடுகின்ற அரசே" எனவும் போற்றுகின்ருர். மெய்யடியார்களின் திருவுள்ளத்தில் எழுந்தருளும் இறைவன் திரு

வுருவமும் அருளே ஆகி யிருத்தலால், "கருணை வடியாய் அடியார் உள்ளகத்தே அமர்ந்த கழலடிகள்" என்று உரைக்கின்றார். நிலத்தில் படாத திருவடி பட்டுப் பொருந்திய வழிக் கன்றுதல் நிறைந்து "வருந்தியிட" என்றும், இரவில் நடப்பதற்கு ஆற்றுமை பற்றிக் "கங்குலிலே நடந்து" என்றும் வருந்துகின்றார். மருள், மருளுணர்ச்சி. மருளாவது பொருளல்லவற்றை பொருள் என்று உணரும். பிறழ் வுணர்ச்சி அது தன்னை யுடையவரைச் சிறுமைப் படுப்பது பற்றித் தன்னை வள்ளற் பெருமான், "சிறியேன்" என்று செப்புகின்றார். மணிக்கதவம், அழகிய கதவு. மணி கட்டிய கதவுமாம். அஞ்சி ஓடாதபடி பிடிப்பதற்கு இன்சொல் உதவுதலின் 'மகிழ்ந்தழைத்து' எனக் கூறுகிறார். பொருள் நிறையும் இது, மெய்ம்மைப் பொருளாய்ப் பயன்படும் இது, பெற்றுக் கொள்க என ஏவுகின்றாராதலின், இங்கே வாங்கு எனக் கூறுகிறார். பொருந்தளித்தலாவது தவறிக் கீழே வீழ்ந்து ஒழியாதபடி அமையக் கரத்தே பொருந்தளித்தருளிய எனவும், அருமை பற்றிப் 'பொன்னருள்' எனவும் புகழ்கின்றார்.

இதனால் திருவருளின் அருமையும், அதனைக் கொடுத்தருளியசிறப்பும் விளங்க வுரைத்தவாறும். (39)

3099. அருளுருவாய் ஐந்தொழிலும் நடத்துகின்ற அடிகள்
அசைந்துவருந் திடஇரவில் யானிருக்கும் இடத்தே
தெருளுருவின் நடந்துதெருக் கதவுதிறப் பித்துச்
சிறியேனை அழைத்தெனது செங்கையில்ஒன் றளித்து
மருளுருவின் மற்றவர்போல் மயங்கேல்என் மகனே
மகிழ்ந்துதிரு அருள்வழிவே வாழ்கஎன உரைத்தாய்
இருளுருவின் மனக்கொடியேன் யாதுதவம் புரிந்தேன்
எல்லாம்வல் லவனுகி இருந்தபசு பதியே.

உரை: எல்லாம் செயல் வல்லவனாய் எழுந்தருள்கின்ற, பசுபதியே, அருளுருக் கொண்டு படைத்தல் முதலிய ஐந்து தொழில்களையும் செய்கின்ற திருவடிகள் அசைந்து வருந்த, இரவுக் காலத்தில் யான் இருக்கின்ற இடத்திற்குத் தெளிவின் உருவாய் நடந்து வந்து, தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து, சிறியவனாகிய என்னை அழைத்து, என்னுடைய செம்மையான கையில் ஒன்றைக் கொடுத்து, மருட்கையுடைய மற்ற மக்களைப் போல் மனம் மயங்காமல் மகிழ்ச்சியுடன் என் மகனே, திருவருளின் வழி நின்று வாழ்வாயாக எனச் சொல்லி யருளினாய்; அறியாமையால் இருண்ட மனத்தையுடைய கொடியவனாகிய யான் இதனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தேனோ, அறியேன். எ.று.

எல்லா வல்லமையும் உடையவனாதலால் சிவபெருமானை, "எல்லாம் வல்லவனாகி இருந்த பசுபதியே" என ஏத்துகின்றார். திருவருளே உருவாய் அமைந்து படைத்தல், காத்தல், அழித்தல், அளித்தல், மறைத்தல் என்ற தொழில்கள் ஐந்தினையும் செய்தருளுவது பற்றி, "அருளுருவாய் ஐந் தொழிலும் நடத்துகின்ற அடிகள்" என்று சிறப்பிக்கின்றார். அசைதல், சோர்தல். இரவுக் காலத்தில் நெடிது நடந்து வருவது பற்றி, "அசைந்து வருந்திட இரவில் நடந்து" எனவும்" இருள் இரவாயினும் தெளிவுற

வந்தமை விளங்க தெருளுருவின் "நடந்து" எனவும் உரைக்கின்றார். செங்கை, செம்மையான கை, வெறுங் கை என்றுமாம். மருளுரு மயங்கிய தோற்றம், மயக்க வுணர்வுடையவர்களை "மருளுருவின் மற்றவர்" எனக் கூறுகின்றார். திருவருள் காட்டுகின்ற நெறியிலேயே நீயும் வாழ்வாயாக, அதனை உனக்குக் காட்டுவது உனக்கு யான் கொடுக்கின்ற ஒன்று எனக் கூறுவாராய், "மகனே மகிழ்ந்து திருவருள் வழியே வாழ்க என உரைத்தாய்" என்று வியந்து பேசுகிறார். அறியாமையால் இருண்ட மனமுடையவர் தவறான வழிகளில் சென்று துன்புறுதல் போல யானும் வருந்துபவனாக என்னையும் ஆட்கொண்டு இதனை அருளினையாதலால் இதற்கு யான் முற்பிறப்பில் என்ன தவம் செய்தேனோ என்று நன்றி நவில்கின்றாராதலால், "இருளுருவின் மனக்கொடியேன் யாது தவம் புரிந்தேன்" என்று மொழிகின்றார்.

இதனால், தனக்கு அளித்த திருவருள் எனது தவப் பயனேயாம் என இயம்பியவாறும். (40)

3100. முழுதும்உணர்ந் தவர்முடிமேல் முடிக்குமணி யாகி
முப்பொருளு மாகியநின் ஒப்பில்அடி மலர்கள்
கழுதும்உணர் வரியநடுக் கங்குலிலே வருந்தக்
கடிதுநடந் தடிநாயேன் கருதுமிடத் தடைந்து
பழுதுபடா வண்ணம்எனைப் பரிந்தழைத்து மகனே
பணிந்திதனை வாங்கெனஎன் பாணியுறக் கொடுத்துத்
தொழுதெனைப்பா டுகஎன்று சொன்னபசு பதிநின்
தூயஅருட் பெருமையைஎன் சொல்லிவியக் கேனே.

உரை: எல்லாம் முற்றும் உணர்ந்த பெருமக்களின் சென்னியில் விளங்கும் முடிக்கு அழகுசெய்யும் மணியாய் படைப்பு முதலிய முப்பொருளுமாய் விளங்குகின்ற உன்னுடைய ஒப்பில்லாத திருவடித் தாமரைகள், பேய்களும் வழி யறிந்து இயங்குதற்கு வியலாத நள்ளிரவிலே வருந்தும்படி விரைந்து நடந்து நாயேன் இருக்குமிடத்தை அறிந்து அடைந்து குற்றமுண்டாகதபடி, என்னை அன்போடு அருகில் அழைத்து, மகனே, இதனைப் பணிவோடு வாங்கிக் கொள்க என்று சொல்லிக்கையில் பொருந்தக் கொடுத்து இனி என்னைத் தொழுது பாடுவாயாக என்று சொல்லி யருளிய பசுபதியாகிய உன்னுடைய தூய திருவருட் பெருமையை யான்யாது சொல்லி வியப்புறுவேன். எ. று.

கற்பவை யனைத்தும் கசடறக் கற்று அதற்குத் தக நின்று சிறக்கும் பெரியோர்களை ஈண்டு "முழுதும் உணர்ந்தவர்" என்று மொழிகின்றார். முடி மேல் முடி அணிதலின்மையின் முதலில் நிற்கும் முடி சென்னிக்காயிற்று. இப் பெருமக்களை விண்ணவர் என்பதும் உண்டு. விண்ணோர்க்குத் தலையில் மணிமுடி இருத்தலின், அந்த முடியின் மணியாய் இறைவன் திருவடி திகழ்கிறது என்பதற்கு "முடிக்கு மணியாகி" எனக் கூறுகின்றார். முப்பொருளாவன — படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களுக்கும் பொருளாகிய பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூன்று பதிப் பொருள்களைக் குறிக்கும். இறைவன் திருவடிக்கு "ஒப்பு

வேறில்லாமை பற்றி, "ஒப்பில் அடிமலர்கள் என வுரைக்கின்றார். கழுது, பேய். பேய்களும் இயங்க முடியாத நல்லிரவு என்றற்கு, "கழுதும் உணர்வரிய நடுக் கங்குல்" என உரைத்கின்றார். "கழுது கண்படுக்கும் பாணாள் கங்குல்" (திருவிளை) என்று பரஞ்சோதியாரும் கூறுவது காண்க. கருதுமிடம், தக்கதென எண்ணித் தங்கும் மனை. எழுப்புகின்ற தனது குரல் ஓசையில் இனிது உறங்கும் பிறர் விழிப்புற்று வருத்த முருதபடி என்றற்கு, "பழுதுபடா வண்ணம்" எனப் பகர்கின்றார். விழித் தெழுந்தவர் தெளிவின்றி அஞ்சி வெருவாமைப் பொருட்டுப் "பரிந் தழைத்து" என்று கூறுகின்றார். கொடுக்கப்படும் பொருளின் பெருமையை உணர்த்தற் பொருட்டு, "இதனைப் பணிந்து வாங்குக" என்றும், பின்னர் செய்வது இது வென்பாராய் "தொழுதெனைப் பாடுக" என்றும், இவ்வாறு அருளிய நலத்தின் நன்மையைத் "தூய அருட்பெருமை" என்றும் சொல்லி இன்புறுகின்றார். பாணி - கை.

இதனால், திருவருட் பெருமையை வியந்தவாறும். (41)

3101. மானினைத்த அளவெல்லாங் கடந்தப்பால் வயங்கும்
மலரடிகள் வருந்தியிட மகிழ்ந்துநடந் தருளிப்
பானினைத்த சிறியேன்நான் இருக்குமிடத் தடைந்து
பணைக்கதவந் திறப்பித்துப் பருந்தழைத்து மகனே
நீநினைத்த வண்ணமெலாங் கைகூடும் இதுஓர்
தின்மலம்என் றென்கைதனில் நேர்ந்தனித்தாய் நினக்கு
நானினைத்த நன்றிஒன்றும் இலையேநின் அருளை
நாயடியேன் என்புகல்வேன் நடராஜ மணியே.

உரை: கூத்துக்கு அரசாய் மாணிக்க மாணியாய்த் திகழ்கின்ற பெருமானே, நெடுமால் அன்று திரிவிக்கிரமனாய் உயர்ந்தளந்த அண்டங்களுக்கு அப்பாலும் விளங்குகிற தாமரை போன்ற திருவடிகள் வருந்த மகிழ்ச்சியுடன் நடந்து மண்பால் வாழ்வையே நினைக்கின்ற சிறுமை யுடையவனாகிய யான் இருக்கும் இடத்துக்குப் போந்தருளி, பெருத்தகதவைத் திறக்கச் செய்து அன்புடன் என்னைத் தன் முன்னே அழைத்து, "மகனே, நீ நினைத்தபடி யாவும் உனக்குக் கைவரும்; யான் தரும் இது தூயதாம் ஒன்று" எனச் சொல்லி என் கையில் கொடுத் தருளினாய்; இதற்கு நான் நினைத்த நன்றி யொன்றும் என்பால் இல்லை; நின்னுடைய திருவருளின் நலத்தை நாயினும் கடையனாகிய அடியேன் யாது நவில்வேன். எ. று.

திருமால் உலகளந்த காலத்தில் அண்டமுற நிமிர்ந்து நின்று அயந்தானெனப் புராணம் கூறுதலால், "மால் நினைத்த அளவெல்லாம்" என்று கூறுகின்றார். மால் அளந்த அண்டமும் கீழ்ப்பட அதற்கு மேலும் சிவபெருமான் திருவடி யோங்கி யிருப்பது உணர்த்தக் "கடந்து அப்பாலும் வயங்கும் மலரடிகள்" என உரைக்கின்றார். நடப்பது வருத்தம் தருவதாயினும் மிக்க உவகையுடன் நடந்தது தோன்ற "மகிழ்ந்து நடந்தது தோன்ற "மகிழ்ந்து நடந்தருளி" என இசைக்கின்றார். மண்ணுலகுக்கு அப்பாற் செல்லுதல் இல்லாத சிறுமை நினைவே

யுடையவன் என்று தம்மைக் குறித்தற்கும் "பால் நினைத்த சிறியேன்" எனப் பகர்கின்றார். பணைக் கதவு, பெரிய கதவு. வீடுகளில் தலைவாயிற் கதவுகள் பெருத்துயர்ந்து இருப்பது இயல்பாதலால், "பணைக்கதவம் திறப்பித்து" எனவும், அழைப்பவர்பால் அச்ச முண்டாகாதபடி இன்முகமும் அன்பு மொழியும் கொண்டு அழைத்தமை புலப்பட, "பரிந்தழைத்து" எனவும், தாம் தருவதை மறுக்காமல் ஏற்பது வேண்டி, தருமிது உனக்கு நீ நினைத்த நலம் அனைத்தும் இனிது கைகூடச் செய்வதுடன் தூய்மையானது என்பாராய், "மகனே, நீ நினைத்த வண்ணம் எல்லாம் கைகூடும் இது ஒரு நின்மலம்" எனவும் இசைக்கின்றார். நினைத்தது முடித்தளிக்கும் நின்மலப் பொருளை வலிய வந்து தந்தவர்க்கு எத்தகைய நன்றி செலுத்த வேண்டுமென நினைத்தாரோ அது வாயாமைக்கு வருந்துகின்றமை தோன்ற, "நினக்கு நான் நினைத்த நன்றி யொன்றும் இலையே; இன்னருளை நாயடியேன் என்புகல்வேன்" என்புகல்வேன்" என்று கண் கலுழ்கின்றார்.

இதனால், நினைத்த நன்றி யொன்றும் செய்ய மாட்டாமைக்கு வருந்தியவாறும். (42)

3102. சூரியசந் திரரெல்லாந் தோன்றுமைவிளங்கும்
சுயஞ்சோதி யாகும்அடித் துணைவருந்த நடந்து
கூரியமெய் அறிவென்ப தொருசிறிதுங் குறியாக்
கொடியேன்நான் இருக்குமிடங் குறித்திரவில் நடந்து
காரியம்உண் டெனக்கூவிக் கதவுதிறப் பித்துக்
கையில் ஒன்றை அளித்தனைஉன் கருணையைஎன்
என்பேன்
ஆரியர்தம் அளவுகடந் தப்பாலுங் கடந்த
ஆனந்த மன்றில்நடம் ஆடுகின்ற அரசே.

உரை: அரிய ஞானிகளின் அளவெல்லை கடந்து, அப்பாலும் கடந்து விளங்கும் ஆனந்த மயமான அம்பலத்தில் திருக்கூத்தியற்றும் அருளரசே, சூரியன் சந்திரன் என்ற ஒளிப் பொருள்கள் தமது ஒளி மழுங்கி மறைந்தொழியும் தனிப் பேரொளிப் பொருளாகும் திருவடியிரண்டும் வருந்துமாறு மண் மீது நடந்து, கூர்த்த மெய்ஞ்ஞானம் என்பது ஒரு சிறிதும் இல்லாத கொடியவனாகிய யான் இருக்கும் இடத்தைக் குறிக்கொண்டு, இராக் காலத்தில் போந்து ஒரு காரியம் உளது எனச் சொல்லிக் கூவிக் கதவைத் திறக்கச் செய்து என் கையில் ஒன்றைக் தந்துதவிய உனது கருணை நலத்தை என்னென்று சொல்லுவேன். எ.று.

ஆரியர் - அரிய விஞ்ஞானிகள். அவர்கள் கண்டுணர்ந்த அளவனைத்துக்கும் அப்பாலான அளவுகளுக்கு அப்பாற் பட்டது. அம்பலவாணனுடைய அம்பலத்தின் பெருமை என்றற்கு "ஆரியர்தம் அளவு கடந்து அப்பாலும் கடந்த ஆனந்த மன்று" என்று வள்ளலார் எடுத்துரைக்கின்றார். "அண்ட பாரிருளூடு கடந்தும்பர் உண்டு போலுமோர் ஒண்சுடர் அச்சுடர், கண்டிங் காரறிவார்" (சித்த) என நாவுக்கரசர் கூறுவர்.

தனிப் பெருஞ் சோதியாகிய சிவத்தின் இயல்பைச் "சூரிய சந்திரரெல்லாம் தோன்ருமை விளங்கும் சுயஞ் சோதியாகும்" என்று சொல்லுகிருர். திருமாளிகைத் தேவர், "இரவி நூருயிரத் திரள் ஒப்பாம் தில்லைச் சொக்கர் அம்பவர்" (திருவிசைப்) என்பது காண்க. அடித்துணை, திருவடியிரண்டு. கூரிய மெய்யறி வென்பதை மணிவாசகப் பெருமான், "கூர்த்த மெய்ஞ் ஞானம்" (சிவபு) எனக் கூறுகின்ருர். உண்மை காண மாட்டாத தடித்த சிற்றறிவேயுடையவன் என்றற்குக் "கூரிய மெய்யறி வென்பது ஒருசிறிதும் குறியாக் கொடியேன்" எனத் தம்மையே பழிக்கின்ருர். குறித்தல், ஈண்டு நினைத்தல் மேற்று. கூரிய அறிவு இல்வழிக் கொடிய நெறி தவறிய நினைவும் செயலும் உளவாமாகலின், "குறியாக் கொடியேன் என்று கூறுகின்ருர். கதவு திறக்க மருமை கருதி, "காரியம் உண்டு" எனக் கூவுதல் வேண்டப்படுகிறது. உறக்கத்தில் இருப்பார்க்கு மெல்லக் கூறின் செவிப் படாமை கருதிக் "கூ" என்ருகின்ர் "கூவுதல்," உரத்த ஒலி செய்தழைத்தல், கூவி வற்புறுத்தி நல்குவது பேரன்பர் செய்தல் இனிது விளங்குவதால், "உன் கருணையை என்னென்பேன்" என வுரைக்கிருர்.

இதனல் இறைவன் தனிப் பேரருளை விதந்தோதிப் புகழ்ந்தவாரும். **(43)**

3103. தற்போதந் தோன்ருத தலந்தனிலே தோன்றும்
தாள்மலர்கள் வருந்தியிடத் தனித்துநடந் தருளி
எற்போதங் ககன்றிரவில் யானிருக்கு மிடம்போந்
தெழிற்கதவந் திறப்பித்திவ் வெளியேனை அழைத்துப்
பொற்போத வண்ணம்ஒன்றென் கைதனிலே அளித்துப்
புலையொழிந்த நிலைதனிலே பொங்குகஎன் றுரைத்தாய்
சிற்போத மயமான திமிமணிமன் றிடத்தே
சிவமயமாம் அனுபோகத் திருநடஞ்செய் அரசே.

உரை: ஞான வுரை மயமான அழகிய மணி யொளி திகழும் தில்லையம்பலத்தின்கண் சிவானுபவ மயமாகத் திருக்கூத்தாடும் அருளரசே, தற்போதம் தலைதூக்காமல் ஒடுங்கும் மனநிலையின்கண் விளங்கித் தோன்றுகிற நின் திருவடித் தாமரைகள் வருந்துமாறு தன்னந் தனியாகப் பகற் போது கழிந்த இராக் காலத்தில் மண்மேல் நடந்து யான் இருக்குமிடம் போந்து, உயர்ந்த வாயிற் கதவைத் திறக்கச் செய்து எளியவனுகிய என்னை யழைத்துப் பொன் போன்றதென அழகு ஓதும் வண்ணம் ஒன்றை என் கையில் கொடுத்துப் புலையொழுக்க மில்லாமல் பொருந்தி வாழ்க என அறிவுறுத்தருளினுய்; இதற்கு யான் யாது சொல்வேன். எ.று.

சிற்போதம் - ஞான வுரை. வந்து காண்பார்க்கு வேண்டும் நன் ஞானம் வழங்குவது போலும் தோற்ற முடைமை பற்றித் தில்லையம் பலத்தைச் "சிற்போத மயமான திருமணி மன்று" எனச் சிறப்பிக்கின்ருர். சிவ மயமாம் அனுபோகம் - சிவஞானத்தாற் பெறலாகும் சிவானந்தானுபவம். திருக்கூத்துக் காண்பதாற் பெற வருவதாகலின், "அனுபோகத் திருநடம்செய் யரசே" என எடுத்தோதுகிருர். தற்போதம் - யான் என

தென்னும் தன் முனைப்பு. "யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இக்கோணை" (சிவ. சித்தி :10:2) என அருணந்தி சிவனுர் விளக்குவர். தன் முனைப் பற்றுக் கருவி கரணங்கள் செந்நெறியில் நிற்க அமையும் செவ்வியில் சிவத்தின் திருவடிக் காட்சி பெறலாம் என்னும் ஞான நெறியை வள்ளற் பெருமான் உரைத்தருளு கின்றுராகலின், "தற்போதம் தோன்ருத தலந்தனிலே தோன்றும் தாள் மலர்கள்" என எடுத்தோதுகின்ருர். தோன்ருத் தனித்துணை செய்பவ ராகலின், "தனித்து நடந்தரு"ளினுர் என்று கூறுகின்ருர். எற்போது - பகற் காலம். இறைவனது திருவருட் பெருமையை நோக்கித் தமது சிறுமையை எண்ணுகின்ருராதலால், வள்ளலார் தம்மை 'எளியேன்' எனக் குறிக்கின்ருர். பொற்பு ஓது அவ்வண்ணம் என்பது பொற்போத வண்ணம் என வந்தது. பொருளுருவி லன்றி அழகுறச்சொல்லு மளவாய் உளதாகும் ஒன்று என்று கொள்க. புலை யொழிந்த நிலை - புலை யொழுக்க மில்லா நிலை. பொய், களவு, காமம் முதலியன புலை யொழுக்கமாகும்.

இதனுற் புலையொழுக்க மின்றி நன்னெறியில் வாழ்க என அறிவுறுத்தியவாரும். (44)

3104. கற்பனைகள் எல்லாம்போய்க் கரைந்ததலந் தனிலே
கரையாது நிறைந்ததிருக் கழலடிகள் வருந்த
வெற்பனையும் இன்றிஒரு தனியாக நடந்து
விரைந்திரவிற் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
அற்பனைஓர் பொருளாக அழைத்தருளி அடியேன்
அங்கையில்ஒன் றளித்தனைநின் அருளினைஎன் புகல்வேன்
நற்பனவர் துதிக்கமணி மன்றகத்தே இன்ப
நடம்புரியும் பெருங்கருணை மணியே

உரை: நல்ல வேதியர் நின்று துதிக்க மணி யிழைத்த அம்பலத்தின் கண் இன்பத் திருக்கூத் தியற்றும் பெரிய கருணைக்கு நாயகமாக விளங்கும் பெரிய மாணிக்கமணியே; கற்பனைகள் அனைத்தும்போய் மறைந்தொழிந்த நிலையில்மறைந்தொழியாமல் நின்று திகழும் கழலணிந்த திருவடிகள் மண் ணிற்பொருந்திவருந்துமாறுமலைமகளின் துணையுமின்றி, ஒப்பற்ற தனி முதல் வனுய் இரவின்கண் விரைவுடன் நடந்து போந்து தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து, அற்பனுகிய என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு திருமுன்பு அழைத்து, அடியேனுடைய கையில் ஒன்றைக்கொடுத் தாண்டாய்; அதற் கேதுவாகிய நின்னுடைய திருவருளை என்னவென்று புகழ்ந்துரைப்பேன். எ. று.

வேதங்களைப் பயின்று நல்லொழுக்கத்தை மேற்கொண்டிருக்கும் வேதியர்களை "நற்பனவர்" என்று சிறப்பிக்கின்ருர். அம்பலத்தின் நடுவே நின்று ஆடுமாறு தோன்ற "மன்றகத்தே நடம் புரியும்" எனக் கூறுகிருர். அருளே திருமேனியாதலால் நடராசப் பெருமானை, "பெருங்கருணை நாயக மாமணியே" யென்று போற்றுகின்ருர். இல்லது புனைதல் கற்பனை; சிறியதைப் பெரியதாகவும், பெரியதைச் சிறியதாகவும், இல்லாததை

உள்ளதாகவும், உள்ளதை,இல்லதாகவும் புனைந்து, நினைத்தலும் உரைத்தலும் செய்தலுமாகும். இத்தகைய கற்பனைக்கண் பொய்ம்மை புனைவு வாயிலாகக் கலத்தலால் அது விலக்கப்படுகிறது என வுணர்க. புனைதல் கலையாகும்; அது பொய் கலந்த வழி, பயனில் கற்பனையாகும்; மெய்ம்மை கலந்த வழிப் பயனுள்ள கற்பனையாய் யாவர்க்கும் இன்பம் செய்யும். பொய்ந்நெறிக் கற்பனைகள் உலகியலில் தலைமையும் பெருமையும் பெறுவதால், கற்பனையை உண்மைச் சமயநெறி விலக்குகிறது. அதனால், "கற்பனைகள் எல்லாம் போய்க்கரைந்த தலம்" வேண்டுகிறார். கற்பனை சிறிதும் கலவாது உள்ளதன் உன்மையுள்ளவாறு விளங்கும் தூய நிலையத்தில் சிவம் பிரகாசிப்பது. இயல்பாகலின், "கற்பனைகள் எல்லாம் போய்க் கரைந்த தலந்தனிலே கரையாது நிறைந்த திருக்கழலடிகள்" என்று இயம்புகின்றார். கரைதல், உருவாய்த் தோன்றி அருவமாய் மறைதல் மலைமகளாதலின், உமாதேவியை "வெற்பன்னை" என்கிறார். வெற்பன்னை. வெற்பனை என வந்துளது. பிரியாப் பெருமடந்தையாகலின், அவளை யின்றி வந்ததை "வெற்பனையுமின்றி ஒருதனியாக நடந்து" என விளம்புகின்றார். தாழிட்டடைக்கப்பட்டிருந்த கதவைத் தாழ் நீக்கித் திறந்த செயலைக் "காப்பவிழ்க்கப் புரிந்து" என்கிறார். அற்பன், புல்லியவன்.

இதனால், கற்பனை கடந்த பெருமான் தன்பாற் போந்து அருளிய திறம் கூறியவாறும். (45)

6105. ஒன்றாகி இரண்டாகி ஒன்றிரண்டின் நடுவே
உற்றஅனு பவமயமாய் ஒளிர்அடிகள் வருந்த
அன்றோர நடந்திரவில் யானுறையும் இடத்தே
அடைந்துகத வந்திறப்பித் தன்பொடெனை அழைத்து
நன்றார எனதுகரத் தொன்றருளி இங்கே
நண்ணிநீ எண்ணியவா நடத்துகஎன் றுரைத்தாய்
இன்றோர வந்ததனை உணர்த்தினைநின் அருளை
என்புகல்வேன் மணிமனறில் இலங்கியசற் குருவே.

உரை: மணி யிழைத்த அம்பலத்தின்கண் விளங்குகிற சற்குருவே, சிவமென ஒன்றாகியும், சிவமும் சத்தியுமென இரண்டாகியும், இரண்டும் ஒன்றிய சிவசத்தி யென்ற நடுநிலையிற் பெறற் பாலதாகிய அனுபவ மயமாய் விளங்கும் திருவடிகள் வருந்தும்படி அன்றொருநாள் இரவில் மண்ணிற் பொருந்த நடந்து, யான் இருக்கும் இடத்தையடைந்து, தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து என்னை அன்புடன் அருகழைத்து, என் கையில் மிகவும் பொருந்துமாறு ஒன்றைக் கொடுத்து, இங்கேயே இருந்து நீ எண்ணிய படியே வாழ்வை நடத்துகஎன்று உரைத்தருளினாய்; அது போல இந்நாளிலும் வந்து அதனையே சொல்லி யருளிய உன்னுடைய திருவருளை என்னென்று சொல்லுவேன். எ. று.

ஞானமாகிய சிவமென ஒன்றாய், கிரியையாகிய சத்தியென ஒன்றாய், ஞானமும் சத்தியும் எனச் சமநிலைக்கண் இரண்டாய் இரண்டின் கலப்பாயுள்ள சதாசிவத்தின் ஞானக் கிரியைகளின் அனுபவத்தை இரண்டு திருவடிகளாக நிறுத்திக் கூறுகின்றாராகலின், "ஒன்றாகி இரண்டாகி

ஒன்றிரண்டின் நடுவே உற்ற அனுபவமாய் ஒளிர் அடிகள்'' என்று எடுத்தோதுகின்றார். இதனால் சதாசிவ தத்துவானு பவம் காட்டப்படுகிறது. சிவ தத்துவமும் சத்தி தத்துவமும் ஒன்றாயினும் அனுபவ வெல்லைக்கண் வாராமை பற்றி, இரண்டாகிய சதாசிவ தத்துவம், ஞானக் கிரியா வுருவமாய் அனுபவ மயமாய்க் கருதப்படுதலின், இரண்டையும் இரு திருவடிகளாக உருவகம் செய்யப்பட்டுள்ளன என அறிக. அன்று, முன்பொருநாள். இராப் பொழுதில் கதவு காப்பிட்டு அடைக்கப்பட்டிருப்பது கொண்டு, "கதவம் திறப்பித்து" எனவும், கிடந் துறங்கின என்னை யெழுப்பித் தன்பால் வருவித்து அன்பு செய்தமை புலப்பட "அன்போடு எனை யழைத்து" எனவும் இயம்புகின்றார். நன்று ஆர, நன்கு பொருந்த. இவ்விடத்தே யிருந்து கொண்டு நீ கருதிய சிவஞானச் செயல்களைச் செய்து கொண்டு உறைக என்று அறிவுறுத்தியது கூறலுறுபவர், "இங்கே நண்ணி நீ எண்ணியவா நடத்துக என்றுரைத்தாய்" என்று கூறுகின்றார். மறுவலும் ஒருநாள் போந்து முன்னாள் மொழிந்ததை நினைவு படுத்தி வற்புறுத்தினமை விளங்க "இன்று ஆர வந்து அதனை உணர்த்தினை" என வுரைக்கின்றார்.

இதனால் வடலூர்க் கண்ணிருந்துகொண்டு சிவஞானச் செயல்களைச் செய்யத் திருவருள் பெற்றமை உரைத்தவாறும். (46)

3106. எங்கும்விளங் குவதாகி இன்பமய மாகி
என்னுணர்வுக் குணர்வுதரும் இணையடிகள் வருந்த
பொங்குமிர விடைநடந்து நானுறையும் இடத்தே
போந்துமணிக் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
தங்குமடி யேனைஅழைத் தங்கையில்ஒன் றளித்தே
தயவினொடு வாழ்களனத் தனித்திருவாங் மலர்ந்தாய்
இங்குநின தருட்பெருமை என்னுரைப்பேன், பொதுவில்
இன்பநடம் புரிகின்ற என்னுடைநா யகனே

உரை: தில்லையம்பலத்தின்கண் இன்பத் திருக்கூத்து ஆடுகின்ற என்னுடைய தலைவனே, எவ்விடத்தும் விளங்குவதாய், இன்ப மயமாய் எனது உணர்வுக்கு உணர்வு தருவனவாகவுள்ள திருவடிகள் இரண்டும் வருந்துமாறு, இருள் மிகும் இரவின் கண் மண் மேல் நடந்து, நான் இருக்கும் இடத்துக்கே வந்து, அழகிய தெருவாயிற் கதவைத் தாழ் நீக்கித் திறக்கச் செய்து, அவ்விடத்தே தங்கிய அடியவனாகிய என்னைத் தன்பால் அழைத்துக் கையில் ஒன்றைக் கொடுத்து, எல்லாரிடத்து அன்புற்று வாழ்வாயாக என ஒப்பற்ற தன் வாயைத் திறந்து உரைத்தருளினாய்; இவ்விடத்தே உனது திருவருட் பெருமையை என்னென்று சொல்லுவேன். எ.று.

உலகுயிர்கள் இன்பம் பெறல் வேண்டி ஆடும் திருக்கூத்தாகலின், "பொதுவில் இன்ப நடம் புரிகின்ற என்னுடை நாயகனே" எனக் கூறுகின்றார். பொது - தில்லையம்பலம். இறைவனது விளக்க மில்லாத இடமே யில்லையாதலால், "எங்கும் விளங்குவதாகி" என்றும், இன்ப நாட்டமே எவ்வுயிரிடத்தும் காணப்படுதலின், "இன்ப மயமாகி" என்றும், உயிர்க்கு

யிராய் உண்மையுணர்வு தந்த வண்ணம் இருத்தல்பற்றி "என்னுணர்வுக் குணர்வு தரும் இணையடிகள்" என்றும் விளம்புகின்றார். இருள் மிக்க இரவுக் காலம், "பொங்கும் இரவு" எனப்படுகிறது. பொங்குவது இருளா கலின், அது வருவிக்கப்பட்டது. மணிக் கதவு - அழகிய கதவு. காப்பிடுதல். தாழிட்டிருக்குதல் - தயவு - அன்பு. சொல்லின் இனிமை பற்றித் "தனித் திருவாய்" எனப் புகழ்கின்றார். திருவாய் மலர்தல் - வாய் திறந்து உரைத்தல். உயர்ந்தோர் பேசுவதை இவ்வாறு வழங்குவது மரபு.

இதனால், யாவரிடத்தும் தயை புரிந்து வாழ்க என அறுவுறுத்தப் பட்டமை தெரிவித்தவாறும். (47)

3107. சித்தெவைபும் வியத்தியுறுஞ் சுத்தசிவ சித்தாய்ச்
சித்தமதில் தித்திக்குந் திருவடிஎள் வருந்த
மத்தஇர விடை நடந்து வந்தருளி அடியேன்
வாழுமனைத் தெருக்கதவு திறப்பித்தங் கடைந்து
அத்தகவின் எனைஅழைத்தென் அங்கையில்ஒன் றளித்தாய்
அன்னையினும் அன்புடையாய் நின்னருள்என் என்பேன்
முத்தர்குழுக் காணமன்றில் இன்பநடம் புரியும்.
முக்கணுடை ஆனந்தச் செக்கர்மணி மலையே

உரை: முத்தான்மாக்களின் கூட்டம் இருந்து காணத் தில்லையம் பலத்தில் இன்ப நடனத்தைச் செய்கின்ற மூன்றாகிய கண்களையுடைய இன்பமான, சிவந்த மாணிக்க மலையாகிய பெருமானே, அணிமா முதலிய சித்துக்களின் நுட்பம் யாவும் விளக்க முறுகின்ற சுத்த சிவஞானமாய்ச் சித்தத்தில் இனிக்கும் திருவடிகள் மண் பொருந்தி வருந்துமாறு மிக்க இருளிரவில் நடந்து போந்து, அடியவனாகிய யான் உறைகின்ற வீட்டில் கதவைத் திறக்கச் செய்து உள்ளே புகுந்து, தமக்குரிய அத்தகுதி குன்றாமல் என்னை முன்னுற அழைத்து. என் கையில் ஒன்றைத் தந்தருளினாய்; தாயினும் சிறந்த அன்பு கொண்ட ஐயனே, உன்னுடைய திருவருளை என்னென்று புகழ்வேன். எ.று.

முத்தி பெறுதற்குச் சமைந்த ஞானவான்களைச் சீவன் முத்தர் களெனவும் வழங்குவர். உடலோடு கூடியிருந்தே சிவஞான வொழுக்கங்களால் முதிர்ந்து சிவம் பெறுதற்கு அமைந்தவர்கள் என்பது கருத்து. இப்பெருமக்கள் கூடியிருந்து திருக்கூத்துக் கண்டு இன்புறுகின்றவர்களாதலால், "முத்தர் குழுக் காண் மன்றில் இன்ப நடம் புரியும் மணிமலையே" என்று மொழிகின்றார். இன்ப வடிவில் மூன்று கண்களுடன் சிவந்த மாணிக்க மணியொளிரும் மலைபோல் தோன்றுதல் விளங்க, "முக்கணுடை யானந்தச் செக்கர் மணிமலையே" எனப் போற்றுகின்றார். சித்து, அணிமா, மகிமா முதலாக வுரைக்கப்படும் எண் வகைச் செயல்களில் வல்லவராம் நுண்ணறிவும் ஆற்றலும் உடைமை. இந்த நுண் கலையும் சிவஞானம் கைவருமிடத்து இனிது விளங்குவதாம் என்றற்குச் "சித்தெவையும் வியத்தியுறும் சுத்த சிவ சித்தாய்" எனக் கூறுகின்றார். வியத்தி - விளக்கம். சிவ சித்து - சிவஞானம். இன்பத்துக்கேதுவாதலால்

சுத்த சிவஞானம் என்று சொல்லுகின்றார். சிந்திக்கும் சிந்தைக்கண் தேனூற நிற்பது பற்றி, "சித்தமதில் தித்திக்கும் திருவடிகள்" என்று இயம்புகிறார். "சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன... ஐயாறன் அடித்தலமே" (ஐயாறு) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க. மத்த இரவு - மயக்கத்தை யுண்டு பண்ணும் இருள் திணிந்த இரவுக் காலம். வாழும் மனை, உறையும் வீடு. தகவு - ஒன்று கொடுத்தற் குரிய தகுதி. கொடுப்பார் - கொடுக்கப் பெறுவார் பெற இருபாலும் நிறைந்து விளங்கும் தகுதி சிதையாமல் கொடுக்கும் திறம் புலப்பட, "அத்தகவின்" என்று குறிக்கின்றார். கொடுக்குங்கால் முகத்தின்கண் மிக்கு நின்ற அன்பைக் கண்டு வியந்து கூறுதலால் "அன்னையினும் அன்புடையாய்" எனவுரைக்கின்றார்.

இதனால் அருட் கொடையின் நலம் பாராட்டியவாறும். (48)

3108. சகலமொடு கேவலமுந் தாக்காத இடத்தே
தற்பரமாய் விளங்குகின்ற தாள்மலர்கள் வருந்தப்
பகலொழிய நடுவிரவில் நடந்தருளி அடியேன்
பரியுமிடத் தடைந்துமணிக் கதவுதிறப் பித்துப்
புகலுறுக வருகஎன அழைத்தெனது கரத்தே
பொருந்தஒன்று கொடுத்தனைநின் பொன்னருள்என் என்பேன்
உகல்ஒழியப் பெருந்தவர்கள் உற்றுமகிழ்ந் தேத்த
உயர்பொதுவில் இன்பநடம் உடையபரம் பொருளே.

உரை : கெடுவது நீங்குமாறு பெரிய தவத்தையுடைய நல்லவர்கள் அடைந்து மனம் மகிழ்வுடன் போற்ற உயர்ந்த அம்பலத்தின்கண் இன்பத் திருக்கூத்தாடுதலையுடைய பரம்பொருளாகிய சிவபெருமானே, சகல நிலையும் கேவல நிலையும் போந்து மீளவும் தாக்காத இடமாகிய சுத்த நிலைக்கண் தற்பரமாய் விளங்குகின்ற நின் திருவடித் தாமரைகள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு பகற் போது கழிந்த நள்ளிரவுக் காலத்தில், அடியேனாகிய யான் இருக்குமிடத்துக்கு நடந்து வந்து அழகிய வாயிற் கதவைத் திறக்கச்செய்து உட்புகுந்து, "புகலிடம் பெற எம்பால் வருக" என அழைத்து என்னுடைய கைக்கண் நன்றாகப் பொருந்துமாறு ஒன்றைக் கொடுத்தருளினாய்; இந்த அழகிய திருவருட் பெருமையை என்னென்று புகழ்வேன். எ.று.

உகுதல், வீணே கெடுதல்; ஈண்டு மீளாப் பிறவிக் கடலில் வீழ்ந் தழுந்துதல். சிவப் பேற்றுக்குரிய பெரிய தவத்தைச் செய்த ஞானவான்களைப் "பெருந்தவர்" என்று சிறப்பிக்கின்றார். தில்லையம்பலத்தை யடைந்து திருநடம் கண்டு கும்பிட்டுப் பரவுவது இயல்பாதலால் "உற்று மகிழ்ந்தேத்த" எனவும், அதனால் திருச்சிற்றம்பலம் உயர்வு மிக்க தென்றற்கு "உயர் பொது" எனவும் உரைக்கின்றார். மலம் மாயை கன்மம் என்ற மூன்றும் கலந்தது சகலம்; மலம் மாத்திரம் கலந்தது கேவலம்; மல முதலிய யாதுமில்லாதது சுத்தம். சுத்த நிலையை எய்திய ஆன்மா சிவத்தைத் தனிப் பரமாய்க் கண்டு இன்புறுவதும், சிவம்

சுத்தான்மாவுக்குத் தற்பரமாய் நின்று சிவபோகம் அருளுவதும் பற்றி, "சகலமொடு கேவலமும் தாக்காத இடத்தே தற்பரமாய் விளங்குகின்ற தாள்மலர்கள்" என்று விளக்குகின்றார். தற்பரம் - தானே தனக்குப் பரமாவது. தாள் மலர், திருவடிகளாகிய தாமரை மலர்கள். நள்ளிரவை வற்புறுத்தற்குப் "பகலொழிய நடுவிரவில்" என்கிறார். பரியுமிடம், விரும்பி யுறையுமிடம். மணிக்கதவு - அழகிய கதவு; மணி கட்டிய கதவு எனினும் பொருந்தும். பெருமனைத் தலைவாயிற் கதவுகளில் வருவோர் வரவு தெரிவிக்க மணியமைப்பது பண்டையோர் மரபு. புகல் - காப்பிடம். வலிய வந்து நன்பொருளை நல்குவது பற்றி, "பொன்னருள்" என்று பாராட்டுகின்றார். மாற்றில்லாத உதவியாதல் பற்றி, "என்னென்பேன்" எனவுரைக்கின்றார்.

இதனால், புகலாகும் நல்ல தொன்றை அருளியது தெரிவித்தவாறும். (49)

3109. உள்ளுருகுந் தருணத்தே ஒளிகாட்டி விளங்கும்
உயர்மலர்ச்சே வடிவருந்த உவந்துநடந் தருளிக்
கள்ளமனத் தேனிருக்கும் இடந்தேடி அடைந்து
கதவுதிறப் பித்தருளிக் களித்தெனைஅங் கழைத்து
நள்ளுலகில் உனக்கிதுநாம் நல்கினம்நீ மகிழ்ந்து
நாளும்உயிர்க் கிதம்புரிந்து நடத்திஎன உரைத்தாய்
தெள்ளும்அமு தாய்அன்பர் சித்தம்எலாம் இனிக்கும்
செழுங்கனியே மணிமன்றில் திருநடநா யகனே.

உரை : மெய்யன்பர்கள் தம் உள்ளத்தில் தெள்ளிய அமுதம் போல் இனிக்கின்ற செழுமை வாய்ந்த கனி போன்றவனே, அழகிய அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற தலைவனே, உன்னை நினைந்து உள்ளம் உருகுங் காலத்தே ஞானவொளி காட்டி விளங்குகின்ற சிறந்த தாமரை மலர் போலும் சிவந்த நின் திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்து மாறு, உவகையுடன் வந்தருளி, கள்ளம் பொருந்திய உள்ளமுடைய நான் இருக்குமிடந் தேடியடைந்து, வாயிற் கதவைத் திறக்கச் செய்து, என்னை யருகழைத்து, உலகினிடையே உனக்கு இதனை நாம் நல்கியுள்ளோம்; நீ மனம் களிப்புற்று நாளும் உயிர்கட்கு நலம் புரிந்து வாழ்வாயாக என உரைத்தருளினாய்; நின் திருவருளை என்னென்பேன். எ.று.

நினைந்த விடத்து அள்ளூறும் இனிய கனிகள் போலச் சிந்திக்கும் சிந்தனையில் இன்பந் தருதல் பற்றி, "தெள்ளும் அமுதாய் அன்பர் சித்தமெலாம் இனிக்கும் செழுங் கனியே" என்கின்றார், "நினைவார் நினைய இனியான்" (கானூர்) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. உள்ளத்துள் உள்கி யுருகும் பொழுது, கள்ள நினைவுகள் நீங்க, ஒள்ளிய ஞானமாய்ப் பரம்பொருள் உணர்வு விளங்குதலால், "உள்ளுருக்கும் தருணத்தே ஒளி காட்டி" என உரைக்கின்றார். "உருகுவார் உள்ளத்து ஒண்சுடர்" (கோட்டூர்) என ஞானசம்பந்தர் உரைப்பார். உயர்வு, சிறப்புக் குறித்து நின்றது. மண் மீது அடி பொருந்தினாலன்றிச் செம்மலர்ச் சேவடி வருந்துதல் உறுதாதலால், 'மண்ணிற்

பொருந்தி' என்பது வருவிக்கப்பட்டது. சேவடி வருந்தினும் அன்பரைக் காண வரும் உள்ளத்தில் உவகை மிக்கிருந்தது என்பது புலப்பட ''உவந்து நடந்தருளி'' என்கிறார். பல்வகை நினைவுகள் புதையுண் டிருந்தமை பற்றித் தம்மைக் ''கள்ள மனத்தேன்'' எனப் பழிக்கின்றார். தாம் இருக்கு மிடத்திற்கு முகத்தில் மகிழ்ச்சி தோன்ற அழைத்தமையைக் ''களித்தெனை அழைத்து'' என்கின்றார். உலகிடை என்பது ''நள்ளுலகு'' என வந்தது. பிற வுயிர்க்கு நலஞ் செய்தற் பொருட்டே வாழ்க்கை உளதாயிற்று என்பது பட, ''நாளும் உயிர்க் கிதம் புரிந்து நடத்தி என உரைத்தாய்'' என்கின்றார்.

இதனால், பிற உயிர்கட்கு நலம் புரிந்து வாழ்க என அறிவுறுத்தமை தெரிவித்தவாறாயிற்று. (50)

3110. தன்னுருவங் காட்டாத மலஇரவு விடியுந்
தருணத்தே உதயஞ்செய் தாள்மலர்கள் வருந்தப்
பொன்னுருவத் திருமேனி கொண்டுநடந் தடியேன்
பொருந்துமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
தன்னுருவம் போன்றதொன் றங் கெனை அழைத்தென் கரத்தே
தந்தருளி மகிழ்ந்திங்கே தங்குகஎன் றுரைத்தாய்
என்னுருவம் எனக்குணர்த்தி அருளியநின் பெருமை
என்னுரைப்பேன் மணிமன்றில் இன்பநடத் தரசே.

உரை : அழகிய அம்பலத்தில் ஆடல் புரியும் தலைவனே, தன் உருவம் இன்னதெனக் காட்டாத மலவிருள் புலரும் காலத்தே தோன்றுகின்ற ஒளி பொருந்திய பொற்றாமரை போன்ற நின் திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு பொன்னொளி திகழும் திருமேனி கொண்டு, நடந்தருளி, அடியவனாகிய நான் இருக்குமிடம் எய்தி, கதவினைத் திறக்கச் செய்து, என்னை உன்னருகழைத் தருளி, பொன் போன்ற ஒன்றை என் கையிலே கொடுத்து, இங்கு மகிழ்வுடன் தங்குக என்று உரைத்தருளினாய்! இதனால் என் உருவம் இத்தன்மைத் தென எனக் குணர்த்தி யருளிய நின் திருவருட் பெருமையை என்னென்பேன்! எ.று.

மலவிருள் எனச் சித்தாந்தம் கூறுவதை ''மல இரவு'' என வடலூர் வள்ளல் குறிக்கின்றார். தனது உருவம் இத்தன்மைத் தெனக் காட்டாமை யின், மல இருளைத் ''தன்னுருவங் காட்டாதமல இரவு'' என்கின்றார் ''ஒரு பொருளுங் காட்டாது இருளுருவங் காட்டும் இருபொருளும் காட்டாது இது' (திருவருட். 231) என்று உமாபதி சிவனார் கூறுவது காண்க. பிற பொருள் களைக் காண விடாதாயினும் தனது உருவத்தைக் காட்டுகின்ற பூத இருள் போலாது, தன்னுருவத்தையும் காட்டா தொழிவது மலவிருளின் இயல்பு என்பதாம். மலம் நீங்குதற்குரிய பக்குவம் எய்திய விடத்து ஞானசிரி யனாய்த் தோன்றி இறைவன் ஞான மருளுவன் என நூல்கள் கூறுவது பற்றி, ''மல இரவு விடியுந் தருணத்தே'' எனவும், ''பொன்னுருவத் திருமேனி கொண்டு'' வந்தாய் என்றும் உரைக்கின்றார். அவனது திருவருள் ஞாலம் இருந்த வண்ணம் இதுவென விளங்கத் ''தன்னுருவம் போன்ற தொன்றங் கெனை யழைத்தென் கரத்தே தந்தருளி'' என்றும்,

அதனால் ஆன்மாவாகிய தனது உண்மை நிலை தமக்கினிது விளங்கிற் றென்பார், "என்னுருவம் எனக்குணர்த்தி" எனவும் இயம்புகின்றார்.

இதனால், ஆன்மாவாகிய தன் உண்மைநிலை யுணர்த்திய திறம் கூறியவாறும். (51)

3111. அண்டவகை பிண்டவகை அனைத்தும்உதித் தொடுங்கும்
அணிமலர்ச்சே வடிவருத்தம் அடையநடந் தருளிக்
கண்டவருங் காணாத நடுஇரவு தனில்யான்
கருதுமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
தொண்டனென எனையும் அழைத் தென்கையில்ஒன் றளித்தாய்
துரையேநின் அருட்பெருமைத் தொன்மையையென்
என்பேன்
உண்டவர்கள் உணுந்தோறும் உவட்டாத அமுதே
உயர்பொதுவில் இன்பநடம் உடையபரம் பொருளே.

உரை: உண்டு சுவைத்தவர்கள் உண்ணுந் தோறும் வெறுப்பு அடையாமல் மேலும் உண்பதற்கு ஆசை மிகும் தெவிட்டாத அமுது போன்றவனே; உயர்வுடைய அம்பலத்தின்கண் இன்பக் கூத்து ஆடு தலையுடைய பரம்பொருளே, அண்டங்களும் பிண்டங்களும் யாவும் தோன்றி யொடுங்கும் அழகிய மலர் போன்ற சிவந்த திருவடிகள் மண் பொருந்தி வருந்துமாறு பொருள்களை நன்கு கண்டவர்களும் காண முடியாதபடி இருள் திணிந்த இராக் காலத்தில் யான் எண்ணி யிருக்கு மிடத்துக்கு நடந்து போந்து தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து என்னையும் ஒரு தொண்டனெனக் குறித்து எதிரே வரவழைத்து என் கைகளில் ஒன்றினை யளித்தாயாதலால், தலைவனே, உன்னுடைய அருட் செயலின் பெருமையையும் தொன்மையையும் என்ன வென்று சொல்லுவேன். எ.று.

சிறிது மிக வுண்ட வழித் தெவிட்டி விலக்கப்படும் இயல்புடைய உலகியற் சுவைப் பொருள் போலாமல் உண்ணுந்தோறும் பேராசையைத் தோற்றுவிக்கும் தெய்வத் தெள்ளமு தென்றற்கு "உண்டவர்கள் உணுந் தோறும் உவட்டாத அமுதே" எனவும், உயர்வுடைய எல்லாவற்றினும் உயர்ந்ததாகலின், தில்லையம்பலத்தை "உயர் பொது" எனவும் உரைக் கின்றார். பரம்பொருள் - சிவமாகிய பரம்பொருள். மிகு பொருளும் அதிகார முறைமையும் உடையவர் "துரை" எனக் குறிக்கப்படுவர். பெரியதிற் பெரியது அண்ட மென்றும், சிறியதிற் சிறியது பிண்ட மென்றும், வழங்கும். நில வுலகைப் போன்ற பெரும் பொருள் அண்டமாகும். அண்டங்கள் ஒன்றி னொன்று வேறாய் அளவிறந்தனவாதலைக் குறிக்க, "அண்ட வகை" என்றும், அவற்றைப் போலப் பிண்டங்களும் பலவாதல் தோன்றப் "பிண்ட வகை" என்றும் கூறுகின்றார். இவை யாவும் இறைவனால் தோற்றுவித்துப் பின்பு அவனது பரிக்கிரக சத்தியாகிய மாயையின்கண் ஒடுக்கப் படுவதால் "அனைத்தும் உதித்தொடுங்கும் அணிமலர்ச் சேவடி" என ஓதுகின்றார். ஒரு மலர்ச் செடிக்கு, விதையும் நிலமும் போல உலகிற்கு மாயையும் இறைவன் அருட் சேவடியும்

இயைந்துள்ளன எனக் கொள்க. கண்டு பயின்றவரும் உருக் காணாத படித் திணிந்த இருள் நிலவும் நள்ளிரவு எனச் சிறப்பித்தற்குக் "கண்ட வரும் காணாத நடுவிரவு" என்கின்றார். தக்க தென வெண்ணித் தங்கு மிடம், "கருதுமிடம்" எனப்படுகிறது. தொண்டுள்ளம் உடையவரே தொண்டராம் தகுதி யுடையராதலின் "தொண்டனென எனையும் அழைத்து" என்றும், என்னையும் பொருளாக மதித்து "என் கையில் ஒன்று அளித்தாய்" என்றும் இயம்புகிறார்.

இதனால் தம்மையும் தொண்டனாக இறைவன் மதித்தமை தெரிவித்த வாறும். (52)

3112. அறிவுடையார் உள்ளகப்போ தலருகின்ற தருணத்
தருள்மணத்தே னாகிஉற்ற அடிஇணைகள் வருந்தப்
பிறவுடையேன் இருக்குமிடந் தேடிநடந் தடைந்து
பெருங்கதவந் திறப்பித்துப் பேயன் எனை அழைத்துச்
செறிவுடையாய் இதுவாங்கென் றுதவவும் நான் மறுப்பத்
திரும்பவும்என் கைதனிலே சேர அளித் தனையே
பொறிவறியேன் அளவினில்உன் கருணையைஎன் என்பேன்
பொற்பொதுவில் நடம்புரியும் பூரணவான் பொருளே.

உரை: தில்லையிலுள்ள பொற் சபையில் திருக்கூத் தியற்றும் பூரணப் பெரும் பொருளாகிய சிவனே, நல்லறி வுடையவர்களின் மனத் தாமரை மலரும் போது திருவருள் மணம் கமழும் தேனாய் ஊறி விளங்கும் நின் இரண்டாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு கூட்டத்திற் சேராது பிரிந்துறையும் இயல்பினனாகிய யான் இருக்குமிடம் தேடி நடந்து வந்தடைந்து பெரிய கதவைத் திறக்கச் செய்து பேயனாகிய என்னை முன் வருவித்து "அடக்க முடையவனே, இதனை வாங்கிக் கொள்க" என்று கொடுப்பவும் யான் அதனை யேலாமல் மறுக்கவும், திரும்பவும் வற்புறுத்தி என் கையில் ஒன்றை நன்கு தந்தருளினாய்; நல்லூழ் இல்லாதவனாகிய யான் அளப்பரிய திருவருட் பண்பை என்னென்று புகல்வேன். எ.று.

தில்லைச் சபை, பொன் வேய்ந்த பெருமை யுடையதாகலின், "பொற் பொது" என்றும், குறைவிலா நிறை வுடைமை பற்றி, "பூரண வான் பொருளே" என்றும் புகழ்கின்றார். அறிவுடையோர், மெய்யுணர்வுடைய மேலோர். மேலோர் அறிவு மலர்தலும் கூம்பலும் இல்லதாயினும், முக்குண வியக்கத்தால் ஒரோரு போது சுருங்குத லுண்மை பற்றி, "அறிவுடையார் உள்ளகப் போது அலருகின்ற தருணத்து" எனக் கூறுகின்றார். அகப் போது - மனத் தாமரை. அலர்தல் - இகழ் விரிதல். அப்பெருமக்களின் மனத்தாமரை சிவமணம் கமழும் திருவருளாகிய தேன் நிறைந்தது என்றற்கு, "அருள் மனத்தேனாகி யுற்ற அடி யிணைகள்" எனச் சிறப்பிக் கின்றார். பிரிவு, எதுகை நோக்கிப் பிறிவாயிற்று. தனித்திருக்கும் இயல் பினராதலின் வடலூர் வள்ளல் "பிறிவுடையேன்" எனத் தம்மைக் குறிக் கின்றார். தலைவாயிற் கதவைப் "பெருங் கதவம்" என்கின்றார். பேயன் - பய்போல் திரிபவன்; பேய்த் தன்மை யுடையவன் என்றுமாம். ஆற்ற

லின்மையால் அடங்குவது போலின்றி அறிவால் அறிந்தொடுங்குவது செறிவு என்க. செறிவுடையார் வேண்டாமை மிக வுடையவராதலால், மறுத்தமை விளங்க, "நான் மறுப்ப" எனவும், தக்கது தக்கார் கையுறுவது தகவாம் என்பது பற்றி, இறைவன் வாங்கென வற்புறுத்தினமை புலப்பட, "திரும்பவும் என் கைதனிலே சேர அளித்தனை" எனவும் உரைக்கின்றார். பொறி, நல்லூழ்; நல்லறிவு என்றுமாம். வறியன் - இல்லாதவன். நற்பொறியின்மையால் மறுத்த குற்ற முடையனாயினேன் என்பதாம். பொறியின்மை பழியின்றாதலால் வற்புறுத்தினமையை நினைந்து வியக்கின்றாராகலின், "அளவினிலுன் கருணையை என்னென்பேன்" என இசைக்கின்றார். அளவினில் என்றவிடத்து இன் சாரியை வேண்டா வழி வந்தது (தொல். எழுத். 132).

இதனால், செறிவு கண்டு அருளிய திறம் உரைத்தவாறும். (53)

3113. விடையமொன்றுங் காணாத வெளிநடுவே ஒளியாய்
விளங்குகின்ற சேவடிகள் மிகவருந்த நடந்து
கடையனையுங் குறிக்கொண்டு கருதுமிடத் தடைந்து
கதவுதிறப் பித்தெனது கையில்ஒன்று கொடுக்க
இடையின் அது நான்மறுப்ப மறுக்கேல்என் மகனே
என்றுபின்னுங் கொடுத்தாய்நின் இன்னருள்என் என்பேன்
உடையபரம் பொருளேஎன் உயிர்த்துணையே பொதுவில்
உய்யும்வகை அருள்நடனஞ் செய்யும்ஒளி மணியே.

உரை: எல்லாம் உடைய பரம்பொருளே, என் உயிர்க்கு உயிர்த் துணையாகுபவனே, தில்லையம்பலத்தின்கண் உயிர்கள்யாவும் உய்தி பெறும்பொருட்டு, அருள் நடனம் செய்கின்ற ஒளிமிக்கமாணிக்க மணியாகத் திகழ்பவனே, கண்முதலிய பொறிவாயிலாக விடயங்களைக்காண்பதில்லாத மோன வெளியின்கண் ஒளியாய் விளங்குகின்ற நின்னுடைய சேவடிகள், மண் பொருந்தி வருத்தமுற நடந்து கடையவனாகிய என்னையும்கருத்திற் கொண்டு யான் உறையுமிடத்தை யடைந்து கதவைத் திறக்கச் செய்து என்னுடைய கையில் ஒன்று கொடுத்தாயாக, இடையே தடுத்து நான் அதனை மறுத்த போது, மகனே இதனை மறுக்காதே என்று பின்னரும் வற் புறுத்தித் தந்தருளினாய்! இந்த நின்னுடைய திருவருளை என்னென்று வியப்பேன். எ. று.

உலகுகள் உயிர்கள் அத்தனையும் தனக்கு முறையே உடைமையும் அடிமையுமாக வுடையவனாதலால் "உடைய பரம்பொருளே" எனவும் உயிர்கள் உய்தி பெறற்கு என்றே தில்லையம்பலத்தில் திருநடனம் நிகழ்கிற தென்ற கருத்து இனிது தோன்ற, "பொதுவில் உய்யும் வகை அருள் நடனம் செய்யும் ஒளி மணியே" என்றும் இயம்புகின்றார். ஒளிமணி ஒளிமிக்க மாணிக்க மணி. கண் காது முதலிய பொறிகளாற் காண்பது கேட்பது முதலிய ஐவகையும் விடயம் எனப்படும். விடயம், விடைய மெனவும் வழங்கும். விடயங்களை நோக்காத மனநிலை மோன நிலையாகும். மோனத்திற் காட்சிப் படுவது திருவருள் ஒளியாதலால், "விடைய மொன்றும் காணாத வெளி நடுவே ஒளியாய் விளங்குகின்ற சேவடிகள்"

என்று தெரிவிக்கின்றார். இது ஞான மோனத் தவநிலையாகும். 'ஞானிகளாயுள்ளார்கள் நான்மறையைமுழுதுணர்ந்துஐம்புலன்கள்செற்று மோனிகளாய் முனிச்செல்வர் தனித் திருந்து தவம் புரியும் முதுகுன்றமே" (முதுகு) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க. கடையன், குணம் செயல் களாற்கீழானவன். கருதுமிடம், தக்கதென எண்ணி உறையுமிடம், கொடுத்ததைக் கொள்ளே னென மறுத்தல் நன்னெறி யென்பவாகலின். "இடையில் நான் மறுப்ப" என்கின்றார். கொடுப்போர்க்கும் கொடைப் பொருட்கும் இடையே யுறுவது தடையாகலின், "இடையின்" என எடுத்துரைக்கின்றார். ஏற்பது நலம் பயக்கும் என்பது குறிப்பாதலால்' "என்மகனே, மறுக்கேல்" என்று சொல்லுகின்றார். வற்புறுத்தித் தருவது பேரன்புவிளங்க நிகழ்கின்றமையின், "நின் இன்னருள் என்னென்பேன்" என இசைக்கின்றார்.

இதனால், ஞான மோனத் தவத்தின்கண் திருவடி காட்சிப் படுவது தெரிவித்தவாறும். (54)

3114. நான் தனிக்குந் தருணத்தே தோன்றுகின்ற துணையாய்
நான்தனியா இடத்தெனக்குத் தோன்றாத துணையாய்
ஏன்றருளுந் திருவடிகள் வருந்தநடந் தருளி
யானுறையும் இடத்தடைந்து கதவுதிறப் பித்து
ஆன்றஎனை அழைத்தெனது கையில்ஒன்று கொடுத்தாய்க்
கறிவவியேன் செய்யும்வகை அறியேன்நின் கருணை
ஈன்றவட்கும் இல்லைஎன நன்கறிந்தேன் பொதுவில்
இன்பநடம் புரிகின்ற என்னுயிர்நா யகனே.

உரை: தில்லையம்பலத்தில் இன்பத் திருக்கூத்தாடும் எனக்கு உயிர்த் தலைவனே, நான் தனித்திருக்கும் காலத்தில் என்கண் காணத் தோன்றும் துணைவனாய், தனித் தில்லாத விடத்தில் எனக்குத் தோன்றாத் துணைவனாய் என்னைக் காத்தருளும் நின்னுடைய திருவடிகள் மண் பொருந்தி வருந்த நடந்துநான் தங்கியிருக்கின்ற இடத்துக்கு வந்து கதவைத்திறக்கச்செய்து,ஆங்கே அமைதியுடன் இருந்த என்னைத் தனக்கு முன்னே வரவழைத்து என் கையில் ஒன்றைக் கொடுத் தருளினாய்; நலம் காணும் அறிவில்லாத யான் நன்றியாக யாதும் செய்வது அறியேனா யினும் நின்னுடைய இனிய கருணைப் பண்பு என்னை இவ்வுலகிற் பெற்றெடுத்த தாய்க்கும் இல்லை என நன்றாக அறிந்து கொண்டேன் எ. று.

உயிர்கட்கு உயிராயிருந்து உண்மை யுணர்வு நல்கி யாள்வது பற்றி இறைவனை "என்னுயிர் நாயகனே" என்று கூறுகின்றார். தனித்திருக்கும் காலத்தில் துணைவர் உருவிற் போந்து அறிவருளுதலால், "தோன்று கின்ற துணையாய் என்றும், பிற நண்பர் கூட்டத்திலிருக்கும் போது உள்ளுணர்வாய் வேண்டுவ துணர்த்துதலால், "தோன்றாத்துணையாய்" என்றும்சொல்லுகின்றார். திருவருட் பேற்றுக்குச்சமைந்திருக்கும் நிலைமை விளங்க "ஆன்ற எனை" எனக் குறிக்கின்றார். நல்லதன் நலங் காணும் அறிவு தமக்கு இல்லை யெனத் தம்மை இழித்தற்கு, "அறிவிலி பேன்" என்கிறார்.

இதனல், இறைவன் தோன்றியும் தோன்றுமலும் துணை புரியும் திறம் கூறியவாறும். (55)

3115. அருள்விளங்கும் உள்ளகத்தே அதுஅதுவாய் விளங்கும்
அணிமலர்ச்சே வடிவருத்தம் அடையநடந் தருளிப்
பொருள் விளங்கா நடுஇரவில் நானுறையும் இடத்தே
போந்துதெருக் காப்பவிழ்க்கப் புரிந்தெனை அங் கழைத்துத்
தெருள்விளங்கும் ஒருபொருள்என் செங்கைதனில் அளித்தாய்
சிவபெருமான்கருணைத் திறத்தினைஎன் என்பேன்
மருள்விளங்கி உணர்ச்சியுறத் திருமணிமன் றிடத்தே
மன்னுயிர்க் கின்பருள வயங்குநடத் தரசே.

உரை: மன்னுயிர்கள் மருள் உணர்ச்சி நீங்கி நல்லுணர்வு பெறுமாறு, அழகிய சிற்றம்பலத்தே ஆனந்தத் திருக்கூத்தியற்றும் தலைவனே, அருள் ஞானம் நிலவுகின்ற திருவுள்ளத்தில் அதுவதுவாய்க் காட்சி தருகின்ற அழகிய சிவந்த நின் திருவடி மலர்கள் மண்ணிற் பொருந்தி வருத்தமுற, எப்பொருளும் கண்ணுக்குத் தெரியாத நள்ளிரவில் நானிருக்குமிடம் வந்து, தெருக் கதவினைத் திறக்கச் செய்து, என்னையுன் னருகழைத்து, பொருள் ஒன்றை என் செங்கையில் அளித்தருளினுய்; சிவபெருமாளுகிய நினது பெருங் கருணைத் திறத்தினை என்னென்று பேசுவேன். எ.று.

மருளாவது - பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்வது. மலப் பிணிப்புக் காரணமாக வுளதாய், உயிர்கள் துன்புறுதற் கேதுவாகலின், அதன் நீக்கங் குறித்துத் தில்லையம்பலத்தே திருக்கூத்து நிகழ்வது விளங்க, "மருள் விளங்கி உணர்ச்சியுறத் திருமணி மன்றிடத்தே மன்னுயிருக் கின்பருள வயங்கு நடம்" என்கின்ருர். மருட் கண்ணுக்கு விளக்கமின்றி யிருப்பன அருள் நாட்டங் கொண்டு நோக்குமிடத்துத் தெளியப் புலப்படுதல் பற்றி, "மருள் விளங்கி உணர்ச்சியுற" என்று பேசுகின்ருர். மருள் நீக்கமும் அருள் விளக்கமும், இருள் நீக்கமும் ஒளி விளக்கமும் போல உடன் நிகழ்ச்சி யென உணர்க. "மலஞ் சாய அமுக்கி அருள்தான் எடுத்து நேயத்தால், ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல் தான் எந்தையார் பரதந் தான்" (உண்மை. 37) எனத் திருவதிகை மனவாசகங் கடந்தார் உரைப்பது காண்க. திருவருள் ஞானவொளி நிலவும் சான்ருேர் உள்ளத்தில் பொருள் வேறு, சிவம் வேறு எனப் பிரித்துணராதவாறு சிவமே ஒன்றித் தோன்றுதலின், "அருள் விளங்கும் உள்ளகத்தே அதுவதுவாய் விளங்கும் அணிமலர்ச் சேவடி" எனச் செப்புகின்ருர். இது பற்றியே திருவருள் ஞானமே திருவடி ஞான மெனச் சிவஞானச் செல்வர்கள் தெரிவிக்கின்றனர். இருள் திணிந்த இரவின்கண், எப்பொருளும் புலனுகாமை உலகறிந்த உண்மையாதலின், "பொருள் விளங்கா நடுவிரவில்" எனப் புகல்கின்ருர். இன்னதென உணரப் படாதாயினும் ஒரு பொருளுண்மை விளங்க, "தெருள் விளங்கும் ஒருபொருள்" எனத் தெரிவிக்கின்ருர்.

இதனுல், திருவருள் ஞான முடையார்க்குச் சிவமும் பொருளும் அதுவதுவாய்த் தோன்றும் திறம் தெரிவித்தவாறும். (56)

3116. பருவமுறு தருணத்தே சர்க்கரையுந் தேனும்
பாலுநெய்யும் அளிந்தநறும் பழரசமும் போல
மருவும்உளம் உயிர்உணர்வோ டெல்லாந்தித் திக்க
வயங்கும் அடி யிணைகள்மிக வருந்தநடந் தருளித்
தெருவடைந்து நானிருக்கு மனைக்காப்புத் திறக்கச்
செய்தருளிப் பொருள்ஒன்றென் செங்கைதனில் அளித்தாய்
திருமணிமன் றிடைநடிக்கும் பெருமான் நின் கருணைத்
திறத்தினை இச் சிறியேன்நான் செப்புதல் எங்ஙனமே.

உரை : அழகிய மணிகள் பதித்த தில்லையம்பலத்தின்கண் ஆனந்த நடம் புரியும் தலைவனே, வேட்கை யுளதாய காலத்தில், சர்க்கரையும் தேனும் நெய்யும் இனிமை மிகக் கனிந்த பழச்சாறும் போல, உள்ளமும் உயிரும் உண்ர்வும் ஒருங்கினிக்க விளங்குகின்ற திருவடிகள் இரண்டும் மண்ணிற் பதிந்து வருந்தத் தெருவில் நடந்தருளி, நானிருக்கும் வீட்டின் கதவினைத் திறக்கச் செய்து பொருளொன்றை என் செங்கையில் அளித்தருளினாய்; சிவபெருமானே, நின் கருணைத் திறத்தினை இச்சிறியேன் எவ்வாறு செப்புவேன். எ.று.

சிந்திக்கும் அடியார்களில் திருவுள்ளத்தில் செந்தேன் சுரப்பன திருவடிகள் எனப் பெரியோர்கள் கூறுதலால், அதனை நம்மனோர் தெளிய உரைப்பார் போல, "சர்க்கரையும் தேனும் பாலும் நெய்யும் அளிந்த நறும் பழரசமும் போல" என உவமம் செய்கின்றார். இனிய சுவைப் பொருளும் வேண்டாக் காலத்துச் சுவை மாறு படுதலால், சுவை நுகர்ச்சிக்கும் உரிய காலம் வேண்டும் என்பார், "பருவ முறுந் தருணத்தே" என்று விதந்துரைக்கின்றார். திருவடியின்பத்தை யனுபவிக்கும் நலத்தை, "மருவும் உளம், உயிர் உணர்வோ டெல்லாம் தித்திக்க" என வனைந்துரைக்கின்றார். உள்ளமும் உணர்வும் உயிரும் வேறு வேறு பிரிக்கலாகாதபடி கலந்து அனுபவிப்பனவாதலின், "மருவும்" எனச் சிறப்பிக்கின்றார். இன்பமேஇத்தன்மைத் தென எடுத்துணர்த்த லாகாததாக, அதனை அனுபவிக்கும் அருட் டிறம் கூறலரிதாகலின், "செப்புதல் எங்ஙனமே" எனச்செப்புகின்றார்.

இதனால், சிந்திப்பார் சிந்தனைக்குள் தேனூறநுகருந் திறம் தெரிவித்த வாறும். (57)

3117. என் அறிவை உண்டருளி என்னுடனே கூடி
என் இன்பம் எனக்கருளி என்னையுந்தா னாக்கித்
தன் அறிவாய் எனங்குகின்ற பொன்னடிகள் வருந்தத்
தனி நடந்து தெருக்கதவந் தாள்திறப்பித் தருளி
முன்னிறிவில் எனை அழைத்தென் கையில்ஒன்று கொடுத்த
முன்னவநின் இன்னருளை என்எனயான் மொழிவேன்
மன் அறிவுக் கறிவாம்பொன் னம்பலத்தே இன்ப
வடிவாகி நடிக்கின்ற மாகருணை மலையே.

உரை : உயிரிடத்தே நிலைபெற்ற அறிவுக் கறிவாகிப் பொன்னம் பலத்தே இன்பத் திருக்கூத்தியற்றும் பெரிய கருணை மலையே, என் அறிவை விழுங்கி, என்னுயிர்க்கு உயிராகி, யான் நுகரும் இன்பத்தைத் தான் நுகர்வதாக்கி, என்னையும் தானாக்கித் தனிப் பேரறிவாய்த் திகழ்கின்ற நின் பொன்னடிகள் மண்ணிற் பதிந்து வருந்தத் தனியே நடந்து வந்து, தெருக் கதவின் தாழைத் திறக்கச் செய்து எதிரதாக் காக்கும் அறிவில்லாத என்னை யுன்னருகழைத்து, என் கையில் ஒன்றைக் கொடுத்தருளிய முதல்வனே, நின் இனிய அருளை நான் என்னென்று மொழிவேன். எ. று.

அறிவு வடிவாய் அனாதி நித்தமாயுள்ளதாகலின் உயிரிடத் தறிவை "மன்னறிவு" எனக் கூறுகிறார். உயிர்க் குயிராயவனாதலால் சிவ பரம் பொருளை, "அறிவுக் கறிவாம் வடிவாகி" என்றும், அவனது சகள வடிவம் இன்ப மயமாவது விளங்க "இன்ப வடிவாகி" என்றும், தில்லைப் பொன்னம்பலத்தே எழுந்தருளிக் காட்சி தருதல் பற்றி, "பொன்னம் பலத்தே" என்றும் கூறுகின்றார். அறிவின்கண் தங்கி அதன் பசுத் தன்மையைக் கெடுத்துச் சிவகரணமாக்குதலால், "என்னறிவை யுண்டருளி" எனவும், அறிவோட றிவாய்க் கலத்தல் பற்றி, "என்னுடனே கூடி" எனவும், அறிவால் நுகரப்படும் இன்பத்தைச் சிவானந்தமாக்கி உயிரையும் மலம் நீங்கிய சுத்த சிவமாக்குதலால், "என்னின்பம் எனக் கருளி என்னையும் தானாக்கி" எனவும், என்னைத் தானாக்கிய வழியும் தனது தன்மை திரியாது ஒளிருமாறு புலப்பட, "தன்னறிவாய் விளங்கு கின்ற பொன்னடிகள்" எனவும் எடுத்துரைக்கின்றார். "நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச் சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம் பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (கழுமலம்) எனத் திருஞானசம்பந்தர் தெரிவிப்பது காண்க. இது சிவம் நம்மை யாளும் திற மென்பாராய், மணிவாசகர், "சித்த மலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" (அச்சோ) என வுரைப்பது அறிக. தான் பிற வுயிர்கட்குத் துணையாவதன்றித் தனக்கொரு துணை வேண்டாதவனாதல், "தனி நடந்து" வந்தான் என்கிறார். முன்னின் றறிநிலையாதலால் முன்னிலையை "முன்னறிவு" எனவும், முன்னைப் பழம் பொருட்கு முன்னவ னென்பது பற்றி, "முன்னவ" எனவும் இசைக்கின்றார்.

இதனால் சிவன் உயிரைத் தானாக்கி யருளும் திறம் தெரிவித்தவாறும். (58)

3118. பரயோகஅனுபவத்தே அகம்புறந்தோன் றுத
பரஞ்சோதி யாகும் இணைப் பாதமலர் வருந்த
வரயோகர் வியப்ப அடியேன் இருக்கும் இடத்தே
வந்துதெருக் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
திரயோகர்க் கரிதிதனை வாங்குகஎன் றெனது
செங்கைதனில் அளித்தாய்நின் திருவருள்என் என்பேன்
உரயோகர் உளம்போல விளங்குமணி மன்றில்
உயிர்க்கின்பந் தரநடனம் உடையபரம் பொருளே.

உரை: வன்மை மிக்க யோகியர் திருவுள்ளம் போன்ற மணி யிழைத்த பொன்னம்பலத்தில் உயிர்கட்கு இன்ப முண்டாதல் வேண்டித் திருக்கூத்தினை ஆடுகின்ற பரம்பொருளே, மேலான சிவயோகானுபவம் பெறுமிடத்து, அகம் எனவும் புற மெனவும் விளங்கித் தோன்றுதவாறு எங்கும் பரந்த பரவொளியாகும் உன்னுடைய திருவடித் தாமரைகள் மண்ணிற் பொருந்தி வருந்தவும், மேலான யோகியர் கண்டு வியக்கவும், அடியவனுகிய யான் இருக்கு மிடத்தை யடைந்து,தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து உள்ளே போந்து, நிலைத்த யோக ஞானிகட்கும் பெறலரி தாகிய இதனை வாங்கிக் கொள்க என என்னுடைய செவ்விய கைகளில் ஒன்றினைத்தந்தாயாகலின், உனது திருவருளை என்னென்று சொல்வேன். எ.று.

உரயோகர் - எவ்வாற்ருலும் கலையாத நிலைபெற்ற சிவ யோகியர். அவர்களது திருவுள்ளம் சிவன் விரும்பும் பேரம்பலமாதலின், "உரயோகர் உளம் போல விளங்கும் மணிமன்று" என விளம்புகிருர். கை செய்து அழகுறுத்தப்பட்ட தில்லையம்பலத்தினும், சிவயோகியரின் திருவுள்ள மாகிய அம்பலம் உயர்ந்ததாதலால், அதனை யுவமம் செய்கின்ருர். உயிர் கள் பேரின்பம் பெறுவது குறித்தே இறைவனது திருக்கூத்து நிகழ்கிற தென்பதற்கே பன்முறையும் "உயிர்க் கின்பம் தர நடனம்" உளதாயது என வற்புறுத்துகின்ருர். பரயோக அனுபவம் - வீடு பேற்றின் பேரின் பத்தையும் விழையாத யோக அனுபவம். "வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" (திருக்கூட்) எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதறிக. இங்கே கூறப்படும் "அகம் புறம் தோன்ருத பரஞ்சோதி" வியோம சோதி என வழங்கும். வரயோகர் - மேன்மை பொருந்திய யோகியர்; உயர்ந்த வரங்களை விழைந்து யோகம் புரிபவர் எனினும் பொருந்தும். யோகத் தாற் பெறலாவதாகிய திருவருளை இறைவன் தானே வலியப் போந்து நல்குவது காண வியப்பு மேலிடுவது பற்றி, "வரயோகர் வியப்ப" என்று கூறுகின்ருர். ஓரொரு காலத்தன்றி எக்காலத்தும் யோகானந்தத்தையே விரும்பி யோகக் காட்சியில் உறைபவரைத் "திரயோகர்" என்றும், அவர்க்கும்பெறலரிது என அருமை யுணர்த்த வேண்டி, "திரயோகர்க்கு அரிது இதனை வாங்குக" என்று சொல்லுகின்ருர்.

இதனல், பரயோகானுபவத்தின் பண்பும் திரயோகானுபவத்தின் சிறப்பும் உரைத்தவாறும். (59)

3119. சொன்னிறைந்த பொருளும் அதன் இலக்கியமும் ஆகித்
துரியநடு விருந்தஅடித் துணைவருந்த நடந்து
கொன்னிறைந்த இரவினிடை எழுந்தருளிக் கதவம்
கொழுங்காப்பை அவிழ்வித்துக் கொடியேனை அழைத்து
என்னிறைந்த ஒருபொருள்என் கையில் அளித் தருளி
என்மகனே வாழ்கஎன எழில்திருவாய் மலர்ந்தாய்
தன்னிறைந்த நின்கருணைத் தன்மையைஎன் புகல்வேன்
தனிமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே.

உரை : தில்லையிலுள்ள ஒப்பற்ற அம்பலத்தின்கண் ஆனந்த நடனத்தைப் புரிகின்ற அருளரசே, சொல்லுள் நிறைந்த பொருளும், சொல்லால் அமையும் இலக்கியமுமாய், துரிய நிலையில் நடுநாயகமாய் எழுந்தருளும் நின் திருவடியிரண்டும் மண்ணிற் பொருந்தி, வருந்த நடந்து அச்சம் மிக்க இரவுக் காலத்தில் யான் இருக்கும் வீட்டுக்குப் போந்து, வாயிற் கதவைக் காப்பு நீக்கித் திறக்கச் செய்து கொடு நெறியில் செல்லும், அடியனாகிய என்னை முன்பழைத்து, எனது உணர்வு முழுதும் நிறைந்திருந்த தொருபொருளை என் கையிற் கொடுத்து, "என் மகனே, நீ வாழ்க" என அழகாகச் சொல்லியருளினாய்; நின்னல முழுதும் நிறைந்த நின் கருணையின் தன்மையை என்னென்று சொல்லுவேன். எ.று.

போந்து கண்டு வணங்குவார்க்கே யன்றிப் போதராது நினைவார்க்கும் ஒத்த இன்பம் அருளுவது பற்றி, அம்பலத் திருக்கூத்தை "ஆனந்தத் தாண்டவம்" என்று சிறப்பிக்கின்றார். சொல்லும் பொருளுமாகிய இரண்டனுள் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாம் என்பது இலக்கண மரபு. இங்கே பொருட்குச் சொல்லையிடமாக்கிச் "சொன்னிறைந்த பொருள்" என்று வள்ளற் பெருமான் உரைக்கின்றார். பொருளாய் உணர்வினும் உரையிலும் உணர்த்த வாராத பரம் பொருளை வழங்கும் சொற்களில் நிறைத்துப் பேச வேண்டியிருத்தலின் இவ்வாறு உரைக்கின்றாரென அறிக. இலக்கணம் காண்டற்கு இடமாய் சொல்லாலும் பொருளாலும் ஆவதாய் விளங்குவது இலக்கியமாகலின், "இலக்கியமுமாகி" என இசைக்கின்றார். துரிய நடு, கீழாலவத்தையில் அகநாட்டம் கொள்வர்க்கு உந்தி நடுவாகிய துரியத்தில் காட்சிப்படுவதால், "துரிய நடுவிருந்த அடித்துணை" என்கின்றார். என்றாலும், உதயகிரிக்கு அப்பாலுள்ள சூரியனை அக்கிரிக்கண் காண்பது போல, அதீதத்தே இருந்தருளும் திருவடி துரிய நடுவிற் காணப்படுகிற தெனக் கொள்க. கொன் - அச்சம். மண்ணில் உள்ள ஏற்றிழிவுகள் இரவிருளால் மறைக்கப் படுதலின், இரவு அச்சம் பயத்தலின் "கொன்னிறைந்த இரவு" எனக் கூறுகின்றார். வன்மை மிக்க தாழ் என்பதற்குக் "கொழுங் காப்பு" எனக் குறிக்கின்றார். கொடியேன் - நேரிய நெறி மேற் கொள்ளாதவன். யாவரும் காணவுள்ள இடத்தில் உறங்காமல் கோடிய மூலையிற் கிடந்தமையின் தம்மைக் "கொடியேன்" என்று கூறுகிறார். எழில் - அழகு. இனிய மொழிகளைப் பேசுதலால் "எழில் திருவாய்" என்கின்றார்.

இதனாற் சொற் பொருள் நிலையும் துரியக் காட்சியும் உரைத்தவாறும் (60)

3120. முத்திஒன்று வியத்திஒன்று காண்மின் என்று கமதத்தின்
முடிகள் முடித் துரைக்கின்ற அடிகள்மிக வருந்தப்
பத்திஒன்று இல்லாத கடைப்புலையேன் பொருட்டாப்
படிற்றுளத்தேன் இருக்கும்இடந் தனைத்தேடி நடந்து
சித்திஒன்று திருமேனி காட்டிமனைக் கதவம்
திறப்பித்தங் கெனை அழைத்தென் செங்கையிலே மகிழ்ந்து
சத்திஒன்று கொடுத்தாய்நின் தண்ணருள்என் என்பேன்
தனிமன்றுள் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே.

உரை : ஒப்பற்ற அம்பலத்தின்கண் ஆனந்த நடம் புரிகின்ற அருளரசே, முத்தியொன்று, அதன் உண்மைநிலையொன்று, எனக் காண்பீர்களாக என ஆகமாந்தங்கள் முடிவாக உரைக்கின்ற உன்னுடைய பாதங்கள் இரண்டும் மண்ணிற் பொருந்தி வருந்தப் பத்தியென்பது சிறிது மில்லாத கடைப்பட்ட புலையொழுக்கத்தையுடைய என் பொருட்டாக, வஞ்ச நினைவுகளையுடைய யான் இருக்குமிடத்தைத் தேடி வந்து, யான் இருந்த மனையின் கதவைத் திறக்கச் செய்து உட்புகுந்து என்னை யழைத்துச் சித்திகள் பொருந்திய திருமேனியைக் காட்டி என் செவ்விய கையில் சத்தியுடைய ஒன்றை மகிழ்வுடன் அளித்த உனது திருவருளை என்ன வென்று சொல்லுவேன். எ.று.

சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு கூறுகளாகப் பிரிந்து சைவப் பொருளை விளக்குவன; இவையொவ் வொன்றையும் பாதம் என்பது மரபு; இவற்றுள் ஞான பாதத்தை சிவாகம முடிபென்றும், ஆகமாந்தம் என்றும் கூறுவர். அதன் பொருள் முத்தி ஞான மென்றும், முத்தி நெறி என்றும் இரண்டாய் இயலுதலால், இரண்டையும் இறைவனுடைய இரண்டு திருவடிகளாக உருவகம் செய்து "ஆகமத்தின் முடிகள் முடித்துரைக்கின்ற அடிகள்" எனவுரைக் கின்றார். இரண்டையும் இன்னவையெனக் குறித்தற்கு, "முத்தி ஒன்று வியத்தியொன்று காண்மின்" என மொழிகின்றார். முத்தி ஞானத்தைத் தடத்த நிலையாகவும் முத்தி நெறியைச் சொரூப நிலையாகவும் சிவாகம ஞான பாதம் தெரிவிக்கிறது. தடத்தம் பிரமாணம் இலக்கணம் என விரண்டாகவும், சொரூபமாகிய வியத்தி சாதனம் பயன் என இரண் டாகவும் பிரித்து ஓதப்படுகின்றன. சிவ பத்திக்கு இவை ஏதுவும் பயனுமாய் இயைவது கொண்டு, இவற்றின் அறிவு சிறிதுமின்றிக் கீழ்மை நிலையுற்றுத் தாழ்ந் தொழித்தேன் என்பாராய், "பத்தியொன்றும் இல்லாத கடைப் புலையேன்" என்று கூறுகின்றார். நிலையிற் "கடைப் புலைய" னனதோடு பொய் வஞ்சனை முதலியன நிறைந்த நினைவு, சொற் செயல்களை யுடையனுயினேன் என்றற்குப் "படிற்றுளத்தேன்" என்று பகர்கின்றார். எல்லாம் வல்ல சித்தராய்த் தோன்றிய பெருமானுதலின், தம்முன் தோன்றி சிவத் திருமேனியை, "சித்தியொன்று திருமேனி" எனச் சிறப்பிக்கின்றார். தம் கையில் தரப்பட்ட தொன்றினுல் சிறந்த ஆற்றலொன்று தமக்குண்டான தெனத் தாமே யுணர்கின்றமை விளங்க "சத்தி யொன்று கொடுத்தாய்" என வுரைக்கின்றார்.

இதன்கண் ஆகமாந்தக் கூறுகள் எடுத்தோதப்பட்டவாறும். (61)

3121. எனக்குநன்மை தீமையென்ப திரண்டுமொத்த இடத்தே
இரண்டும்ஒத்துத் தோன்றுகின்ற எழிற்பதங்கள் வருந்தத்
தனக்கு நல்ல வண்ணம்ஒன்று தாடங்கிடடந் தருளித்
தனித்திரவில் கடைப்புலையேன் தங்குமிடத் தடைந்து
கனக்குமனைத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து
களிப்பொடெனை அழைத்தெனது கையில்ஒன்று கொடுத்து
உனக்கினிய வண்ணம் இதென் றுரைத்தருளிச் சென்றாய்
உடையவதின் அருட்பெருமை உரைக்க முடியாதே.

உரை : என்னையடிமையாகவுடைய பெருமானே, நலம் தீங்கு என்ற இரண்டும் ஒத்த நிலையினவாக, உணரப்படுமிடத்து ஒப்பத் தோன்றலால் இரண்டா யமைகின்ற அழகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்தத் தனக்கு நலம் தரும் மேனியொன்று கொண்டு தனியாக ஒரு நாளிரவில் நடந்து, கடைப் புலையனுகிய யான் இருக்கு மிடத்தை யடைந்து அதன் கனத்த தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து, உவகையுடன் என்னைத் தன் முன்பு வருவித்து எனது கையில் ஒன்று கொடுத்து, உனக்கு ஏற்றது இஃது என உரைத்தருளிச் சென்றாய்; உனது திருவருளின் பெருமையை என்னென்று சொல்வேன். எ.று.

ஒருவர் ஒன்று கொடுக்கப் பெறுபவர் அன்பால் அவர்க்கு அடிமை யாதல் போல இறைவன் திருவருட் பேற்றால் தாம் அவற்கு அடிமையா யினமை புலப்பட, "உடையவ" என வள்ளற் பெருமான் வழங்குகின்றார் நன்மை கண்டு மகிழ்தலும் தீமை கண்டு வருந்துதலும் இன்றி இரண்டும் நுகரத் தகுவன என உணரும் உணர்வு சிவாகமங்களில் இருவினையொப்பு எனப்படும்; "ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவம் இரண்டினும் அவற்றின் பயன்களிலும் ஒப்ப, உவர்ப்பு நிகழ்ந்து, விடுவோனது அறிவின்கண் அவ்விரு வினையும் அவ்வாறு ஒப்பநிகழ்தலே ஈண்டு இருவினை யொப்பு என்பதற்குப் பொருள் என நுண்ணுணர்வாற் கண்டு கொள்க" (சிவ.பாடியம் : அதி.1) என மாதவச் சிவஞான முனிவர் இரண்டு நூற்றாண்டுகட்கு முன்பே விளக்கி யிருத்தலையறிக. இங்கே ஒரொப்பமதிக்கத் தகுவனவாகிய நன்மை தீமைகள் இரண்டும் திருவடிகளாக உருவகம் செய்தலின், "இரண்டும் ஒத்துத் தோன்று கின்ற எழிற் பதங்கள்" என வடலூர் வள்ளல் விளக்கம் செய்கின்றார். ஒப்ப என்பது ஒத்தெனத் திரிந்தது. காண்பவர் வெறுத்துப் புறக்கணிக் காத, திருமேனி கொண்டு வந்தமையின், "தனக்கு நல்லவண்ணம் தாங்கி" என்று கூறுகின்றார். நல்ல வண்ணம் - நல்ல அழகிய திருமேனி வண்ணம், ஆகு பெயர். புலையொழுக்கத்தாற் கடைனயினேன் என்பார் "கடைப் புலையேன்" என்கிறார். களிப்பு - உவகை. உள்மனத்துக்கு ஒத்து இன்பம் தருவது, "உனக்கு இனிய வண்ணம் இது" எனக் கூறப் படுகிறது.

இதனால், இருவினை யொப்புணர்வு விளக்கப்பட்டவாறும். (62)

3122. இம்மையினோ டம்மையினும் எய்துகின்ற இன்பம்
எனைத்தொன்றும் வேண்டாத இயற்கைவருந் தருணம்
எம்மையினும் நிறைசொருப சுத்தசுகா ரம்பம்
இயற்சொருப சுத்தசுக அனுபவம்என் றிரண்டாய்ச்
செம்மையிலே விளங்குகின்ற திருவடிகள் வருந்தச்
சிறியேன்பால் அடைந்தெனது செங்கையில்ஒன் றளித்தாய்
உம்மையிலே யான்செய்தவம் யாதெனவும் அறியேன்
உயர்பொதுவில் இன்பநடம் உடையபரம் பொருளே.

உரை : உயர்ந்த அம்பலத்தின்கண் இன்பத் திருக்கூத் தியற்றும் பரம்பொருளாகிய சிவனே, இம்மை மறுமைகளாகிற இரண்டின் இன்பங் களையும் சிறிதும் விரும்பாத பான்மை யுளதாகும் போது, எக்காலத்தும் நிறைந்துள்ள சிவ சொரூபத்தில் பெறப்படும் சுகாரம்பமும், தன்னின்

இயன்ற சுத்த சுகானுபவமும் ஆகிய இரண்டாய்ச் செம்மை நிலையில் விளங்குகின்ற நின் திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்தச் சிறியேன் பால் வந்து என் கையில் ஒன்று கொடுத்தருளினாய்; பெருமானே, இதற்கு நான், முன்னைப் பிறவியில் செய்த தவந் தானும் என்னவோ! எ.று.

இயற்கை யென்றது ஈண்டுப் பான்மையின் மேலதாகிய இயல்பு குறித்து நின்றது. தசகாரிய நெறியில் தத்துவ சுத்தியும் ஆன்ம சுத்தியும் எய்திய ஆன்மா, சுத்தாவத்தையில் சிவயோக முற்றுச் சிவத்தின் உறுவுண்மை யுணர்ந்து, சிவக்காட்சி பெறுகையில், இன்ப ஒளி தோன்றுதலின் அதனைச் "சுத்த சொரூப சுகாரம்பம்" என்றும், இன்ப ஞானவொளியிற் கலந்து நுகரும் அனுபவ நிலை, "சுத்த சொரூப சுகானுபவம்" என்றும் ஞான நூல்கள் கூறுதலால், இவை யிரண்டையும் இறைவன் திருவடிகளாக உருவகஞ் செய்து, "செம்மையிலே விளங்குகின்ற திருவடிகள்" எனச் செப்புகின்றார். சுத்தம் என்றது சுத்தாவத்தையை. சிவயோகத்தில் காட்சிப் படும் சுகாரம்பத்தைச் "சுகோதயம்" என்றும், "சுகப்பிரயை" என்றும் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. எம்மை ஈண்டுக் காலத்தின் மேற்று. இம்மை, மறுமை, அம்மை நிலை மூன்றிலும் தேய்தலும் வளர்தலுமின்றி, எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் இருப்பதாதலால், சிவானந்தத்தை, "எம்மையிலும் நிறை சொருப சுகம்" என இயம்புகின்றார். சிவயோக நிலையில் காணப்படுவதாயும், சிவ போக நிலையில் நுகரப்படுவதாயும் இருப்பதால், "சுகாரம்பம்" எனவும், "சுகானுபவம்" எனவும் விளக்குகிறார். செம்மையேயாய சிவபதங்களாதலின், "செம்மையிலே விளங்குகின்ற திருவடிகள்" எனச் சிறப்பிக்கின்றார். உம்மை முன்னைப் பிறப்பு.

இதனால், சுத்தாவத்தையில் ஆன்ம சுகோதயத்தைக் கண்டு சுகானுபவம் பெறுந்திறம் கூறியவாறும். (63)

3123. அன்பளிப்ப தொன்றுபின்னர் இன்பளிப்ப தொன்றென்
றறிஞரெலாம் மதிக்கின்ற அடிமலர்கள் வருந்த
என்பளித்த உடல்கள்தொறும் உயிர்க்குயிராய் இருக்கும்
எம்பெருமான் நடந்தருளிக் கதவுதிறப் பித்துத்
துன்பளிக்கும் நெஞ்சகத்தென் றனைக்கூவி அழைத்துத்
தூயஇள நகைமுகத்தே துளும்பஎனை நோக்கி
முன்பளித்த தென்றனது கையில்ஒன்றை அளித்தாய்
முன்னவநின் அருட்பெருமை முன்னஅறி யேனே.

உரை: முதல்வனே, ஒன்று அன்பு நல்குவ தென்றும், மற்றொன்று இன்பம் நல்குவ தென்றும் அறிஞர்கள் எல்லோரும் போற்றுகின்ற நின் அடியிணை மலர்கள், மண்ணிற் பதிந்து வருந்துமாறு, எலும்பாலாகிய உடல்கள் தோறும் உயிருக்குள் உயிராய் மேவி யுள்ள எம்பெருமானாகிய நீ, நடந்து வந்து கதவினைத் திறக்கச் செய்து, துன்பம் தருகின்ற நெஞ்சுடைய என்னைக் கூப்பிட்டு, உன்னருகழைத்து நின் தூய முகத்தே இளநகை துளும்புமாறு என்னை நோக்கி, முன்பே எனக்கு நீ தந்தருளிய என் கையில் ஒன்றைக் கொடுத்தருளினாய்; பெருமானே, நின் திருவருளின் பெருமையை நினைக்கவும் இயலாதவனா யுள்ளேன். எ.று.

முன்னேரில்லா முதல்வனுதலால், "முன்னவ" என்று மொழிகின்ருர். மனைவி, மக்கள், பெற்ருேர் முதலாயினேர்பால் செய்கின்ற அன்பும், இறைவன்பாற் செய்கின்ற அன்பும் இன்பம் பயப்பனவாயினும், முன்னது நிலையாது கெடுதலும், பின்னது என்றும் நிலைத்து நிற்றலும் இயல்பாக உடையன. அவற்றுள் இறைவன்பாலுளதாகும் அன்பு என்றும் உள்ள தாய், அதன் வழிப் பிறக்கும் இன்பமும் இறவா நிலையதாயிருத்தலின், இரண்டையும் நோக்கி, அறிஞர்கள் இறைவனுடைய அன்பும் இன்பமும் அழியா வளமுடையவாதல் கண்டு, அவற்றை இறைவன் திருவடிக்கு உருவகஞ் செய்தனர் என்பாராய், "அன்பளிப்ப தொன்று பின்னர் இன்பளிப்ப தொன்று என்று அறிஞரெலாம் மதிக்கின்ற அடிமலர்கள்" என்று போற்றுகின்ருர். பொருள் மேல் நிற்கும் அன்பும் இன்பமும் இறவா அன்பும் இறவா இன்பமும் என இவ்விரு திறத்தன என்பது புலப்பட, "இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்ருர்" (காரைக் கால்) எனச் சேக்கிழார் கூறுவதனுலும் உணரலாம். என்பு - எலும்பு. நெஞ்சளிப்பவை துன்பமும் இன்பமுமாகிய இரண்டுமாயினும் துன்பம் நெடிது நின்று வருத்துதலால், "துன்பளிக்கும் நெஞ்சு" என எடுத்து மொழிகின்ருர். இளநகை - புன்னகை. உடல் படைத்த போதே உடன் படைக்கப்பட்டமையின், "முன்பளித்த தென்றெனது கை" என மொழி கின்ருர்.

இதனுல், இறவன் இன்ப அன்பின் திறங் கூறியவாறும். (64)

3124. மோகஇருட் கடல்கடத்தும் புணைஒன்று நிறைந்த
மோனசுகம் அளிப்பிக்கும் துணைஒன்றென் றுரைக்கும்
யோகமலர்த் திருவடிகள் வருந்தநடந் தருளி
உணர்விலியேன் பொருட்டாக இருட்டிரவில் நடந்து
போகமனைப் பெருங்கதவந் திறப்பித்துப் புகுந்து
புலையேனை அழைத்தொன்று பொருந்தஎன்கை கொடுத்தாய்
நாகமணிப் பணிமிளிர அம்பலத்தே நடஞ்செய்
நாயகநின் பெருங்கருணை நவிற்றமுடி யாதே

உரை: மணியையுடைய பாம்பாகிய ஆபரணம் ஒளி செய்ய அம்பலத்தின்கண் திருக்கூத்தாடுகின்ற நாயகனே, மோகமாகிய இருட் கடலைக்கடந்தற்குத் துணை புரிவதொன்றும், ஞானம் நிறைந்த மோன யோகத் தின்பம் நல்குவதொன்று மெனவுரைக்கப்படும் சிவயோகத் திருவடித் தாமரைகள் மண் பொருந்தி வருந்த நல்லுணர்வில்லாத என் பொருட்டு இருள் மிக்க இரவின்கண் நடந்து போந்து, உலகியற்போக நுகர்ச்சிக்குரிய மனையின் பெரிய வாயிற் கதவைத் திறக்கச் செய்து, உள்ளே புகுந்து புலைத்தன்மையுடைய என்னை முன்பழைத்து என் கையிற் பொருந்த ஒன்றைத் தந்தருளிய நினது அருட் பெருமையை என்னுல் எங்ஙனம் புகழ முடியும், காண். எ.று.

பாம்பின் தலையில் மணியுண்டென்பது நூல் மரபாகலின் சிவன் மார்பிற் கிடக்கும் பாம்பை, "நாகமணிப் பணி" எனச்சிறப்பிக்கின்ருர். நாகமணிப் பணியென்பதை மணி நாகப் பணியென மாறுக. உலகியல்

வாழ்க்கை மயக்கத்தை "மோக இருட் கடல்" என்று கூறுகிறார். எத்துணைத் துன்பங்கள் தொடர்ந்து தாக்கினும் துறக்க மாட்டாத மன மயக்கத்தைத் தந்து உயிரறிவை அழுத்துதலால் உலகியல் வாழ்வை, "மோக இருட் கடல்" எனக் குறிக்கின்றார். எதிர்காலத்தை மறைப்பாலும் இறந்த காலத்தை மறப்பாலும் தெரியா வகை இருள் செய்தலின், "இருட் கடல்" எனவும், கரையேற விடாது ஆசைப் பெருக்கால் மயக்குதலின் "மோகக் கடல்" எனவும் மொழிகின்றார். எவ்வாறேனும் வாழ்க்கைக் கடலை நீந்துதற்குத் துணை புரிவது ஒரு திருவடி என்று கொள்க. அதன் உண்மைத் தன்மையையுணர்ந்து ஞானிகளாய் மோனமாகிய தவயோகத்தை மேற்கொண்ட பெருமக்கட்கு இன்பம் தந்து ஊக்குவது ஒரு திருவடி யென்பாராய், "நிறைந்த மோன சுகம் அளிப்பிக்கும் துணையொன்று" என்று இயம்புகிறார். இரு திறத்தும் நின்று உயிர்களைச் செலுத்தி ஊக்கும் இறைவன் திருவடிகளை "யோக மலர்த் திருவடிகள்" என்று பரவுகின்றார். யோகம், ஒன்றி யூக்குதல். இல்லிருந்து வாழ்வாரையும், துறவு பூண்டொழுகுவாரையும் அவரவர் நெறியில் நிறுத்தி ஊக்குவன திருவடிகள் என்பதாம். இவ்வுண்மையை யுணராமல் துன்புறுவது பற்றித் தம்மை "உணர்விலியேன்" என இசைக்கின்றார். உணர்விலி - உணர்வில்லாதவன். உணர்விலியேன், உணர்வின்மையை யுடைய யான்; உணர்வில்லாதவனாகிய யான் எனினும் பொருந்தும். இருட்டிரவு - இருணிறைந்த இராப் பொழுது. புறத்தே இருந்து உழைத்துப் பொருள் செய்வார் தம் உழைப்பின் பயனை நுகருமிடம் மனை மக்களோடுறையும் இல்லமாதலின் அதனைப் "போக மனை" என்று புகல்கின்றார். மனையின் தெருவாயிற் கதவு ஏனையவற்றிற் பெரிதாதல் பற்றி, "பெருங் கதவம்" என்கின்றார். புலையொழுக்கம் - பொய்யும் வழுவும் பொருந்திய ஒழுக்கம்; அதனால் "புலையேன்" எனப் புகல்கின்றார். நீ கொடுத்த ஒன்றினால் இரண்டாகிய திருவடிகளின் கருத்தைத் தெரிந்து கொண்டேனாதலால் இதற்குக் கைம்மாறு யாது செய்வேன் என்பாராய், "நின் பெருங் கருணை நவிற்ற முடியாதே" எனக் கூறுகின்றார்.

இதனால், இறைவனுடைய இரண்டாகிய திருவடிகளின் பொருள் நலம் புகன்றவாறும். (65)

3125. காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற ஒளியாய்க்
காட்டுகின்ற ஒளிதனக்குக் காட்டுவிக்கும் ஒளியாய்ப்
பூணுகின்ற திருவடிகள் வருந்தநடந் தடியேன்
பொருந்துமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
கோணுகின்ற மனத்தாலே நாணுவதேன் மகனே
குறைவறவாழ் கெனமகிழ்ந்து கொடுத்தனைஒன் றெனக்கு
மாணுகின்ற நின்னருளின் பெருமையைஎன் என்பேன்
மணிமன்றில் ஆனந்த மாநடஞ்செய் அரசே.

உரை: மணியிழைத்த அம்பலத்தின் கண்ணே இன்பத் திருக்கூத்தையாடுகின்ற அருளரசே, காண்பதற்குரிய கண்கள் காண்பதற்குதவும் பூத வொளியாய், அதுதானும் காட்டுதற் கமைந்த நுண்ணொளியாய் அன்பர்தம் சென்னியிற் சூடிக் கொள்ள நின்ற நின் திருவடிகள்

மண்ணிற் பொருந்தி வருந்த அடியேன் இருக்கும் இடத்தை நாடிநடந்து போந்து வாயிற் கதவைத் திறக்கச் செய்து, "மகனே, கோணலுற்றலையும் மனத்தினல் கலக்குண்டு நாணுவதேன்? என் முன் வருக" என அழைத்து அருளுருவாய ஒன்றினை என் கையிற் கொடுத்ததாய்; அதனால் மாண்பு மிகுகின்ற உன்னுடைய திருவருளை என்னென்று புகழ்வேன். எ.று.

முன்னாள் தமிழகத்தையாண்ட வேந்தர்களால் மணிகள் பதித்திழைத்த பொற்சபையாதலால், தில்லையம்பலத்தை "மணிமன்று" என்றும், அதன்கண் நின்று சிவபெருமான் ஆன்மாக்கள் மலப்பிணிப்பின் நீங்கி இன்பமுறும் பொருட்டுத் திருக்கூத்தாடுவதால், "ஆனந்த மாநடம் செய்யரசே" என்றும் ஏத்திப் பராவுகின்றார். காணும் இயல்புடையவாயினும் கண்கள் காண்பதற்குச் சூரிய சந்திரர்களின் பூதவொளியும், அவ்வொளிகள் தாமும் அசேதனமாதலின் காட்டற் றொழிலைச் செய்விக்கும் நுண்ணொளியும் வேண்டப் படுதலின், காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற வொளியாய்க் காட்டுகின்ற ஒளி தனக்குக் காட்டுவிக்கும் ஒளியாய்ப் "பூணுகின்ற திருவடிகள்" என்று புகன்று மொழிகின்றார். "காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே, காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தனித்தாண்) என நாவரசர் நவின்ற பொருளுரையும், "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்" (சிவ. போ) என மெய்கண்டார் வழங்கிய மெய்யுரையும் ஈண்டு நினைந்துணர்தற் குரியனவாகும். பொருளொருமை விரிக்கிற் பெருகும். மெய்யன்பர்கள் தலையுற வணங்கிச் சூடிக் கொள்வனவாதலின், இறைவன் நற்றுளைப் "பூணுகின்ற திருவடிகள்" எனப் புகழ்கின்றார். திறக்கப் புரிதல் - திறக்கச் செய்தல். கண நேரமும் ஒன்றின்கண் ஒன்றியிராது பல தலையான நினைவுகளையுற்றுப் பன்னெறியில் ஓடுதலால், "கோணுகின்ற மனத்தாலே" என்றும், அதனை அறிஞர் எடுத்துக் காட்டும் போது நாணமுறுவது இயல்பாகலின், "நாணுவதேன்" என்றும் இசைக்கின்றார். மனத்தால் விளையும் இக்குறைக்கு இடமின்றி நேர்பட நிறுத்தி வாழ்க என அறிவுறுத்தினமை இனிது விளங்க, "குறைவற வாழ்க என மகிழ்ந்து ஒன்று எனக்குக் கொடுத்தனை" என வுரைக்கின்றார்.

இதனால், மனத்தால் விளையும் குறைக்கு இடமின்றி நேர்படவாழ்க என அறிவுறுத்தியவாறும். (66)

3126. ஆறாறு தத்துவத்தின் சொருபமுதல் அனைத்தும்
அறிவுக்கும் ஒன்றவற்றின் அப்பாலே இருந்த
வீறாய தற்சொருப முதலனைத்தும் அறிவில்
விளக்குவிக்கும் ஒன்றென்று விளைவறிந்தோர் விளம்பும்
பேறாய திருவடிகள் வருந்தநடந் திரவில்
பேயடியேன் இருக்குமிடத் தடைந்தென்னை அழைத்துச்
சோறாய பொருள்ஒன்றென் கரத்தளித்தாய் பொதுவில்
சோதிநின தருட்பெருமை ஓதிமுடி யாதே.

உரை : தில்லையம்பலத்தின்கண் அருட் சோதியாய் விளங்குபவனே, தத்துவங்கள் முப்பத்தாறின் உருவ முதலிய இயல்புகளை அறியச் செய்வது ஒன்றாகவும், அவற்றிற்கு அப்பாலாய்ச் சிறப்புற்ற பரசிவ நிலையனைத்தையும் விளங்கத் தெரிவிப்ப தொன்றாகவும் தத்துவ ஞானப் பயன் கண்டோர் சொல்லுகின்ற செல்வமாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த இரவுக் காலத்தில் பேய்த் தன்மை கொண்ட அடியனாகிய யான் இருக்குமிடத்தை நடந்து வந்து என்னை யழைத்துச் சிறந்ததொரு பொருளாக என் கையிலொன்றை யளித்தருளினாய்; உனது திருவருளின் பெருமையை என்னாற் சொல்லுதல் முடியாது, காண் எ.று.

தில்லையம்பலத்தின்கண் காட்சி தரும் கூத்தப் பெருமான் திருவுருவம் சிந்திப்பார் சிந்தையில் அரும்பெரும் ஞானவொளிப் பொருளாய்த் திகழ்வது பற்றி, "பொதுவிற் சோதி" எனப் புகன்றுரைக்கின்றார். சேக்கிழாரும் அதனை, "ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச் சோதியாய் உணர்வு" (தில்லைவாழ்) மாவது என்று சொல்லுவதறிக. "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" (பாசுரம்) எனத் திருஞானசம்பந்தரும் கூறுவர். தத்துவம் முப்பத்தாறு - ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தந்துவம் என வகையால் மூன்றாகி ஒவ்வொன்றும் முறையே இருபந்து நான்கும் ஏழும் ஐந்துமாய் விரியும். தத்துவ ரூபம் - தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி; ஆன்ம ரூபம் - ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி; சிவ ரூபம் - சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் எனப் பத்தாதலின், "சொருப முதல் அனைத்தும்" என்று இயம்புகின்றார். சிவ தத்துவங்கட்கு அப்பால் விளங்குவது பராகாசப் பரவெளியில் தோன்றும் பரசிவமாதலின், "அப்பாலே யிருந்த வீறாய தற்சொருப முதல் அனைத்தும்" என்று கூறுகிறார். இங்கே "அனைத்தும்" என்பது, மாயப் பாழ், வியோமப் பாழ், உபசாந்தப் பாழ் எனத் திருமூலர் கூறுவனவற்றைக் குறிக்கின்றது. தத்துவ அறிவும் பாழறிவும் திருவடி ஞானத்தால் உணகப்படுதலின், இரண்டையும் இறைவன் திருவடிகளாக உருவகம் செய்தலால், "விளைவறிந்தோர் விளம்பும் பேறாய திருவடிகள்" என வுரைக்கின்றார். தத்துவ ஞானப் பயன் கண்ட பெரியோர் இதனை விளங்க வுரைக்கின்றமையின், அவர்களை "விளைவறிந்தோர்" எனச் சிறப்பிக்கின்றார். சிவ வழிபாட்டாற் பெறப்படுவனவாதலால், "பேறாய திருவடிகள்" என்று கூறுகின்றார். அலைகின்ற மனமுடைமை பற்றித் தம்மைப் "பேயடியேன்" என்று சொல்லுகின்றார். பேயடியேன் - பேய்த் தன்மையாற் கீழாயவன்.

இதனால், தத்துவ ஞானம் உண்மை ஞான மிரண்டும் திருவடி ஞானமென அறிவுறுத்தவாறும். (67)

3127. கருவிகளை நம்முடனே கலந்துளத்தே இயக்கிக்
காட்டுவதொன் றக்கருவி கரணங்கள் அனைத்தும்
ஒருவிஅப்பாற் படுத்திநமை ஒருதனியாக் குவதொன்
றுபயம்எனப் பெரியசொலும் அபயபதம் வருந்தத்

துருவிஅடி யேன்இருக்கும் இடத்திரவில் அடைந்து
துணிந்தெனது கையில்ஒன்று சோதியுறக் கொடுத்து
வெருவியிடேல் இன்றுமுதல் மிகமகிழ்க என்றாய்
வித்தகநின் திருவருளை வியக்கமுடி யாதே.

உரை : ஞான மூர்த்தியே, அறிகருவி செயற்கருவி கரணங்களாகிய வற்றை உடன் கலந்திருந்து இயங்க இயக்கி யுதவுவ தொன்றும், அவற்றினின்றும் ஆன்மாவை நீக்கித் தனித்து நிற்கச் செய்வ தொன்று மென இரண்டாம் எனப் பெரியோர்கள் சொல்லும் எவ்வுயிர்க்கும் புகலிடமாகும் திருவடிகள் இரண்டும் மண்ணிற் பொருந்தி நடந்து வருந்த, இருக்குமிடம் நாடி அடியேன் இருக்குமிடத்துக்கு இரவுப் போதில் அடைந்து என் தன்மை கண்டு துணிந்து என்னுடைய கையில் யான் இனிது கண்டறியத் தந்து, ''அஞ்சாதே இன்று முதல் மிகவும் மகிழ்வுடன் இருப்பாயாக'' என்று உரைத்தருளினாய்; உனது திருவருளை வியந்து போற்றுவது இயலாத தொன்று. எ.று.

கருவிகளென்பவை கண் முதலிய அறிகருவி யைந்தும், வாய் முதலிய செயற் கருவி யைந்தும், மன முதலிய நான்குமாம். அறிகருவிகளை ஞானேந்திரிய மென்றும், செயற்கருவிகளைக் கன்மேந்திரிய மென்றும், மன முதலிய நான்கையும் கரணம் என்றும் வழங்குவர். கண் முதலிய கருவிகளோடு கலந்துடனின்று காண்பது முதலாயின செய்வதும், வாய் முதலியவற்றோடு கலந்து பேசுவது முதலாயின செய்வதும், மன முதலியவற்றுடன் கலந்து நினைப்பது முதலாயின செய்வதும் ஒரு திருவடி என்றும், இக்கருவி கரணங்களின்றும் வேறு பிரிந்து உயிரைத் தனித்து நிற்கச் செய்வது ஒரு திருவடி என்றும் உரைப்பாராய், ''கருவிகளை நம்முடனே கலந்துளத்தே இயக்கிக் காட்டுவது ஒன்று; அக்கருவி கரணங்களனைத்தும் ஒருவி அப்பாற் படுத்தி நம்மை ஒரு தனி யாக்குவ தொன்று'' என மொழிகின்றார். இதனை யுணர்ந்த பெரியோர் இவ்விரண்டு அருட் செயலும் இறைவன் திருவடி இரண்டுமாம் எனக் கூறிகின்றனர் என்பாராய், ''உபயமெனப் பெரியர் சொலும் அபய பதம்'' என அறிவுறுத்துகின்றார். உபயம் - இரண்டு. அபயம் - புகலிடம். துருவுதல் - தேடுதல். தருவதைப் பயன் கொள்ளானோ கொள்வானோ என எண்ணிப் பயன் கொள்வன் என்று தெளிந்து கொண்டமை விளங்கத் ''துணிந்து'' என்றும், கொடுப்பவரும் ஏற்பவரும் கொடைப் பொருளும் இனிதறியத் தந்த செய்கையைச் ''சோதியுறக் கொடுத்து'' என்றும் இயம்புகிறார். வெருவுதல், அஞ்சுதல், கொடுப்பக் கொண்டு மருண்டு நோக்கினமையின் - ''வெருவியிடேல்'' எனத் தெளிவிக்கின்றார்.

இதனால், கருவி கரணங்களோடு கலந்தும் தனித்தும் ஆன்மா உடற்குள் இயங்கும் திறம் கூறியவாறும். (68)

3128. ஆதியிலே கலப்பொழிய ஆன்மசுத்தி அளித்தாங்
கதுஅதுஆக் குவதொன்றும் அதுஅதுவாய் ஆக்கும்
சோதியிலே தானாகிச் சூழ்வதொன்றும் என்று
சூழ்ச்சிஅறிந் தோர்புகலும் துணையடிகள் வருந்த

வீதியிலே நடந்தடியேன் இருக்கும்இடந் தேடி
விரும்பிஅடைந் தெனைக்கூவி வினைவொன்றும் கொடுத்தாய்
பாதியிலே ஒன்றான பசுபதிநின் கருணைப்
பண்பைஅறிந் தேன்ஒழியா நண்பைஅடைந் தேனே.

உரை: அனாதி மலக் கலப்பு நீங்கும் பொருட்டு ஆன்ம சுத்தி தந்தும் அவ்விடத்தே ஆன்மாவும் தானும் அதுவாதல் ஒன்றும், அவ்வாறு அது வதுவாக்கும் அருளொளி தானாகி நிற்கும் தனி நிலை யொன்றுமாகச் சிவாத்துவித நிலையை யுணர்ந்தோர் உரைக்கும் இரண்டாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த வீதியிலே நான் இருக்குமிடந் தேடி நடந்து விருப்புடன் என் மனையை யடைந்து என் பெயரைக் கூவி முன்பு வரவழைத்து நன்மை யுண்டாக ஒன்றினை என் கையில் உவப்புடன் தந் தருளினாய்; உமையொரு பாதியும் தானொரு பாதியுமாய்க் கூடி ஒன்றாகிய பசுபதியான நினது கருணை நலத்தை அறிந்தது கொண்டு நின்பாற் பெயராத பெரு நட்புக் கொள்வேனாயினேன். எ. று.

அனாதி மலப்பிணிப்பிலே ஆன்மா இருந்தே யொழியாமல் ஒரு கால் நீங்கிச் சுத்தி பெற்றுச் சிவமாமாறு செய்வதொரு திருவடி என்பாராய், "ஆதியிலே கலப்பு ஒழிய ஆன்ம சித்தி அளித்து ஆங்கி அதுவாக்குவ தொன்றும்" என வுரைக்கின்றார். கேவலத்தில் அனாதி மலப்பிணிப்பிலே செயலற்றுக் கிடக்கும் ஆன்மாவுக்குத் தனது பேரருளால் தனுகரண முதலியவற்றை யளித்து மெய்யுணர்வுற்று ஆன்ம சுத்தி பெறச் செய்த துடன் அந்நிலையிற் சிவமாம் தன்மை யுற வருளுவது சிவத்தின் திருவருட் பெருஞ் செயலாதலின் இவ்வாறு கூறுகின்றார். ஆன்ம சுத்தி என்பது, "இவன் தன் தன்மை கெட்டுப் பொருளிற் போய் அங்குத் தோன்று தாயிடின் ஆன்ம சுத்தி" (உண். நெறி. விளக்) என உமாபதி சிவனார் உரைப்பது காண்க. இங்கே தன்மை கெடுதலாவது பசுவாம் தன்மை நீங்குவ தென அறிக. ஆன்மா சிவமாவது அதுவதுவாதல். இது சிவயோகம் என்பர். "தன்னைக் கண்ட என் வண்ணம் எவ் வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசன்" (பொன்வண்) என்பர் சேரமான் பெருமாள். தனது சிவத் திருவருட் சோதியில் தன்னில் தோய்ந்த இரும்பைத் தானாக்கும் நெருப்பைப் போல் சிவமாக்கும் செயலை "அது வதுவாய் ஆக்கும் சோதியிலே தானாகிச் சூழ்வது ஒன்றும்" எனக் கூறுகிறார். தன்னைச் சார்ந்த ஆன்மாவைத் தானாக்கிய போதும் தான் விகாரமின்றித் தானேயாய் நிற்கும் திறம் விளங்க, "ஆக்கும் சோதியிலே தானாகிச் சூழ்வது" என்று இயம்புகின்றார். சூழ்ச்சி- அத்துவிதக் கலப்பு. இதன் விளக்கங்களை மோட்ச காரிகை முதலிய நூல்களிற் காண்க. துணையடிகள்- இரண்டாகிய திருவடிகள். ஆகவே, சிவமாக்குவ தொன்று, சிவமாய் நிற்ற லொன்று; இரு திறமும் இரண்டு திருவடிகளாக உருவகம் செய்யப் பட்டமை காண்க. தேடிக் காண்டலில் விருப்பருமை விளங்க, "விரும்பி யடைந்து" எனவும், பயன் தரு தொன்று என்றற்கு "வினை வொன்று" எனவும் கூறுகின்றார்.

இதனால், ஆன்ம லாபம் விளைவிக்கும் சிவத்தின் அருட் பண்புணர்த் தியவாறும். (69)

3129\. இருட்டயா மலச்சிறையில் இருக்கும்நமை எல்லாம்
எடுப்பதொன்றும் இன்பநிலை கொடுப்பதொன்றும் எனவே
பொருட்டாயா போற்றுகின்ற பொன்னடிகள் வருந்தப்
பொறையிரவில் யானிருக்கும் இடந்தேடிப் புகுந்து
மருட்டாயத் திருந்தேனைக் கூவிவர வழைத்து
வண்ணம்ஒன்றென் கைதனிலே மகிழ்ந்தளித்தாய் நின்றன்
அருட்டாயப் பெருமைதனை என்னுரைப்பேன் பொதுவில்
ஆனந்தத் திருநடஞ்செய் தருளுகின்ற அரசே.

உரை: தில்லையம்பலத்தின்கண் இன்பத் திருக் கூத்தாடி யருள் கின்ற அருளரசே, மலப்பிணிப்பால் உளதாகின்ற இருள் நிறைந்த கேவலத்தில் இருக்கின்ற உயிர்களாகிய நம்மை யெல்லாம் சகலத்திற் செலுத்துவ தொன்றாகவும், சுத்த மெய்துவித்து இன்ப நிலையிற் செலுத் துவ தொன்றாகவும், சிவ ஞானப் பொருளாகிய தாயர் போற்றிப் புகழ் கின்ற அழகிய திருவடிகள் இரண்டும் மண்ணிற் பொருந்தி வருந்த இருள் மிக்க இரவில் யான் இருக்கும் இடம் தேடி நடந்து மனைக்குட் புகுந்து மயங்குகின்ற உலகியல் வாழ்க்கைச் சூழலிற் கிடந்த என்னைக் கூவி யழைத்து அழகிய தொன்றை என் கையில் மகிழ்ச்சியுடன் தந் தருளினாய்; நினது அருள் நிறைந்த பெருமைகளை என்ன வென்று சொல்லுவேன். எ. று.

கேவலம், சகலம், சுத்தம் ஆன்மாவின் நிலை மூன்றனுள் மலம் ஒன்றே கொண்டு அதனாற் பிணிப்புண்டு அது செய்யும் இருளிற் கிடக் கும் கேவலத்தை "இருட்டாய மலச் சிறை" என இயம்புகின்றார். அதனினின்றும் நீங்கி உடல் கருவி கரணங்களோடு கூடி யுலகில் வாழ்க்கை யுறுவது சகலம்; இரண்டின் நீங்கியது சுத்த நிலை யென்னும் பேரின்ப வாழ்வு. கேவலத்தினின்றும் ஆன்மாவை நீக்கிச் சகலத்தில் உய்த்துச் சுத்த நிலையடைய முயலும்வண்ணம் திருவருள் உதவுதலை, "மலச் சிறையில் இருக்கும் நமையெல்லாம் எடுப்ப தொன்றும்" எனவும்,இன்ப நிலை கொடுப்ப தொன்றும் அனவும் உரைக் கின்றார். சிவ ஞான நூற்பொருளை யறிந்துடையவர் உணர்ந்து சிவத்தின் திருவருளாகிய திருவடிகளைப் போற்றிப் பராவுகின்றார்களா கையால், "பொருட்டாயர் போற்றுகின்ற பொன்னடிகள்" என்று புகழ் கின்றார். திருவருள் ஞானமே பொருளாகக் கொண்டவர்களாதலால், சிவ ஞானிகளைப் "பொருள் தயார்" என உருவகம் செய்கின்றார். இராப் பொழுது இருளைக் கனத்த பொருளாக் கொள்ளுதலால், "பொறை யிரவு" எனப் புகல்கின்றார். உலகியல் நினைவுகளாற் சூழப்சட்டுக் கிடத்தல் விளங்க, அவற்றைத் தோழர் கூட்டமாக வருவகித்து, "மருட்டு ஆயத் திருந்தேன்" என வுரைக்கின்றார். மருட்டுதல், மருளச் செய்தல். வண்ணம், அழகு; ஈண்டு ஆகு பெயராய்ப் பொருள் மேலதாயிற்று. அருள் தாயப் பெருமை, அருளொளி பரந்த பெருமை, தாய பெருமை எனற் பாலது எதுகை நோக்கி வலித்தது.

இதனால், ஆன்ம வுய்தி குறித்துத் திருவருள் உதவும் திறம் கூறிய வாறும்:

(70)

3130. உன்மனியின் உள்ளகத்தே ஒளிருவதொன் ருகி
உற்றஅதன் வெளிப்புறத்தே ஓங்குவதொன் ருகிச்
சின்மயமாய் விளங்குகின்ற திருவடிகள் வருந்தச்
சிறுநாயேன் பொருட்டாகத் தெருவில்நடந் தருளிப்
பொன்மயமாந் திருமேனி விளங்கஎன்பால் அடைந்து
பொருள்ஒன்றென் கைதனிலே பொருந்தஅளித் தனையே
நின்மலனே நின்னருளை என்புகல்வேன் பொதுவில்
நிறைந்தஇன்ப வடிவாகி நிருத்தம்இடும் பதியே

உரை: நின்மலப் பெருமானே, தில்லையம்பலத்தின்கண் திருக்கூத் தியற்றும் தலைவனே உம்மனு சத்தியின் உள்ளே யொளிரும் ஒளியாகவும், அதன் புறத்தே யுள்ள சத்திகளின் வெளியே ஒளிரும் ஒளியாகவும் இரண்டாய் ஞானமயமாய் விளங்குகின்ற திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருத்தமுறச்சிறியவனுகிய என் பொருட்டுத் தெருவில் நடந்து, பொன் மயமான திருமேனி இனிது விளங்க, என்னிடம் போந்து, அரிய பொருளொன்றை என் கையில் நன்கு பொருந்தக் கொடுத்தருளினுய்; நின்னுடைய பேரருளை என்னென்று புகல்வேன். எ.று.

நிர்மலன் - நின்மலனென்று தமிழில் வழங்கும்; மலமே யில்லாதவன் என்பது இதன் பொருளாகும். மலமுடையவாதலும் இல்லாமல் நீங்குவதும் உயிர்கட்கே யன்றி இறைவற்கு இல்லையாதலால், "நின்மலனே" எனக் கூறுகின்ருர். குறைதலும நிறைதலும் உலகியல் இன்பங்களின் இயல்பு; இறையருள் இன்பம், குறைவிலா நிறைவாதலின், "நிறைந்த இன்பவடிவாகி" என்று உரைக்கின்ருர். உன்மனி - உன்மனு சத்தி; இஃது உன்மனை யெனவும் சிவாகமங்களில் வழங்கும். துவாத சகலைப் பிராசாத யோகத்தில் முதன்மை யுற்று விளங்குவது உன்மனி; இதற்கு இடம் விந்து தத்துவம்; செய்கைக்குரிய இதன்கண் உள்ளே சிவவொளி திகழ்வதால், "உன்மனியின் உள்ளகத்தே ஒளிருவதொன்ருகி" என இயம்புகின்ருர். "உன்மனிக்குள் ஒளிர் பரஞ்சோதியாம்" (பொன்னை) எனத் தாயுமானவர் கூறுவது காண்க. அதன் பிறத்தே யுள்ள சமனை, வியாபினி முதலிய கலைகளிலும் அவ்வொளி பரந்து விளங்குவதால் "உற்றவதன் வெளிப் புறத்தே ஓங்குவதொன்ருகி" எனக் கூறுகின்ருர். சித்து - ஞானம். சித் மயம் - சின்மயமாயிற்று; சத் மார்க்கம், சன்மார்க்க மாவது போல. சிவம் ஞான மயமாதலால் அதன் திருவடிகளைச் "சின்மயமாய் விளங்குகின்ற திருவடிகள்" எனத் தெரிவிக்கின்ருர். தமதுஎளிமையைப் புலப்படுத்தற்குச் "சிறு நாயேன்" எனக் கூறுகிருர். வள்ளலார் முன் போந்தபெரியவர் திருமேனி, இரவில் விளக்கொளியில் பொன்னிறத்தோடு பொலிந்தமை புலப்பட, "பொன் மயமாம் திருமேனி விளங்க" என்று புகல்கின்ருர். தவறி வீழ்ந்து மறையாத வாறு கொடுத்தது தோன்றப் "பொருந்த அளித்தனை" என்றும், அப்போது அவர் முகத்தில் விளங்கிய அன்பு சிறந்து தோன்றினமையின், "நின்னருளை என் புகல்வேன்" என்றும் இயம்புகின்ருர். நிருத்தம் - நடனம்.

இதனல், துவாத சகலாப் பிராசாதயோகத்தில் உன்மனு கலையின் உள்ளும் புறமும் மிளிரும் சிவவொளியின் சிறப்புணர்த்தியவாறும். (71)

3131. ஐவர்களுக் கைந்தொழிலும் அளித்திடுவ தொன்றும்
அத்தொழிற்கா ரணம்புரிந்து களித்திடுவ தொன்றும்
தெய்வநெறி நிஎன்றறிஞர் புகழ்ந்துபுகழ்ந் தேத்துந்
திருவடிகள் மிகவருந்தத் தெருவினிடை நடந்து
கைவரயான் இருக்குமனைக் கதவுதிறப் பித்துக்
களித்தெனைஅங் கழைத்தெனது கையில்ஒன்று கொடுத்தாய்
சைவமணி மன்றிடத்தே தனிநடனம் புரியும்
தற்பரநின் அருட்பெருமை சாற்றமுடி யாதே.

உரை : சிவ சம்பந்தமுடைய அழகிய அம்பலத்தின்கண் ஒப்பற்ற நடம் புரிகின்ற தற்பரனே, பிரமன் முதலிய ஐவருக்கும் முறையே படைத்தல் முதலிய தொழிலைந்தும் தருவது ஒன்றாகவும், அத்தொழில்கட்கு வேண்டும் நிமித்த காரணத்தை விரும்பி யளிப்ப தொன்றாகவும் அமைந்து, இது தெய்வ நெறி யென்று எனச் சிவநெறிச் செல்வர்கள் மிகவும் புகழ்ந்து போற்றும் திருவடிகள் இரண்டும் மண் பொருந்தி மிகவும் வருந்தத் தெருவின்கண் நடந்து, யான் இருக்கும் மனையின் கதவைத் திறக்கச் செய்து மகிழ்வுடன் என்னை யழைத்து, யான் நினைத்தது கைகூடும்படி என் கைகளில் திருவரு ளொன்றினை நல்கினாய்; அதற்கேதுவாகிய திருவருட் பெருமையை என்னென்று சொல்வேன். எ.று.

சைவ மன்று - சிவ சம்பந்தமுடைய தில்லையம்பலம். சிவசம்பந்தம், சைவமாகும். "சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்" (1512) என்பர் திருமூலர். தற்பரன், தானே தனக்குப் பரமாகியவன். ஐவர், பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன்; இவர்கள் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களையும் செய்பவர். இத் தொழிற் காரண சத்திகள் முறையே வாணி, திரு, உமை, மகேசை, மனோன்மணி. பரசிவம் இவர்கட்கு இவ் வகைத் தொழிலைத் தருவதும், அதற்கு வேண்டும் காரண சத்திகளையும் நல்குவதால் "ஐவர்களுக் கைந்தொழிலும் அளித்திடுவ தொன்றும்; அத் தொழிற் காரணம் புரிந்து களித்திடுவ தொன்றும்" என்று கூறுகின்றார். இது தெய்வங்களால் கூறப்படும் சிறப்புப் பற்றிச் சிவஞானச் செல்வர்கள் "தெய்வ நெறி என்று அறிஞர் புகழ்ந்து புகழ்ந்து" ஏத்துவர் என இயம்புகிறார். அடுக்கு மிகுதி குறித்து வந்தது. "கைவரக் கொடுத்தாய்" என இயையும்.

இதனால், தெய்வ நெறி பற்றிப் படைத்தல் முதலிய தொழில் நிகழும் திறம் கூறியவாறும். (72)

3132. அருளுதிக்குந் தருணத்தே அமுதவடி வாகி
ஆனந்த மயமாகி அமர்ந்ததிரு வடிகள்
இருளுதிக்கும் இரவினிடை வருந்தநடந் தருளி
யானிருக்கும் மனைக்கதவந் திறப்பித்தங் கடைந்து

மருளுதிக்கும் மனத்தேனை வரவழைத்து நோக்கி
மகிழ்ந்தெனது கரத்தொன்று வழங்கியசற் குருவே
தெருளுதிக்கும் மணிமன்றில் திருநடஞ்செய் அரசே
சிவபெருமான் நின்கருணைத் திறத்தைவியக் கேனே.

உரை: தெளிந்த ஞானம் விளங்கும் தில்லையிலுள்ள அழகிய அம்பலத்தின்கண் திருக் கூத்தியற்றும் அருளரசே. சிவபெருமானே, நின்னுடைய திருவருள் தோன்றும் காலத்தே அமிழ்த வடிவாகவும், அனுபவிக்குமிடத்தே ஆனந்த மயமாகவும் அமைந்துள்ள நின் திருவடிகள் இருள் பரவும் இராக்காலத்தில் மண் பொருந்தி வருந்த நடந்து வந்து, யான் இருக்கும் வீட்டின் கதவைத் திறக்கச் செய்து உள்ளே போந்து, உறக்கத்தால் மருண்ட மனமுடையவனுகிய என்னைத் தன் முன்பு வரவழைத்து முகநோக்கி மனமகிழ்ந்து எனது கையில் ஒன்று கொடுத்தருளினுய்; சற்குருவே, நின் கருணைத் திறத்தை என்னென்றுவியப்பேன். எ.று.

தெருள் - தெளிவு; ஈண்டுத் தெளிந்த ஞானத்தின் மேற்று. அம்பலக் காட்சி அறிவின்கண் தெளிவு தருமென்பது கருத்து. அருள் - திருவருள் ஞானம். ஞானம் அமுதமாகவும், ஞானுனுபவம் ஆனந்தமாகவும் விளங்குதலை யுணர்த்துதற்கு, "அருளுதிக்கும் தருணத்தே அமுத வடிவாகி ஆனந்த மயமாகி அமர்ந்த திருவடிகள்" எனத் தெரிவிக்கின்ருர். உறக்கத்தால் மனத்தின்கண் மயக்க முண்டாதல் இயல்பாதலின், "மருள் உதிக்கும் மனத்தேன்" என வுரைக்கின்ருர். சற்குரு - மெய்ம்மை கூறும் ஆசிரியன். உறங்கும் போது வலியப் போந்து எழுப்பித் தன்பால் அழைத்துத் தகுவன சொல்லித் தருவது பேரருளுடைய பெருமக்கட் கமைவதாகலின், "நின் கருணைத் திறத்தை வியக்கேன்" என விளம்புகின்ருர். வியக்கேன் - வியந்து புகழும் திறமுடைய னல்லேன் என்பதுபட நிற்கின்றது.

இதனல், திருவருட் பேற்றின் இயல்பும் அனுபவமும் கூறியவாறும். (73)

3133. நான்கண்ட போதுசுயஞ் சோதிமய மாகி
நான்பிடித்த போதுமதி நளினவண்ண மாகித்
தேன்கொண்ட பாலெனநான் சிந்திக்குந் தோறுந்
தித்திப்ப தாகிஎன்றன் சென்னிமிசை மகிழ்ந்து
தான்கொண்டு வைத்தஅந்நாள் சில்லென்றென் உடம்பும்
தகவுயிருங் குளிர்வித்த தாண்மலர்கள் வருந்த
வான்கொண்டு நடந்திங்கு வந்தெனக்கும் அளித்தாய்
மன்றில்நடத் தரசேநின் மாகருணை வியப்பே.

உரை அம்பலத்தாடும் ஆனந்தக் கூத்தனே, நான் முதலில் கண்ட போது, தன்னியல்பாய சோதியாகி, நான் பற்றிக் கொண்ட போது தேனையுடைய தாமரையின் தன்மை யுடையதாகி, நான் சிந்திக்கும் போது தேனிற் கலந்த பால் போலத் தித்திப்பதாகி, அன்றொரு

நாள் என் சென்னியின் மேல் வைத்த போது உடலும் உயிரும் ஒருங்கே குளிரப் பண்ணிய நின் திருவடி மலர்கள் இரண்டும் மண்ணிற் பதிந்து வருந்துமாறு பெருமையுடன் நடந்து வந்து எனக்கும் ஒன்று நல்கி யருளினுய்; பெருமானே, நின் பெருங் கருணைத் திறம் எனக்குப் பெரு வியப்பைத் தருகின்றன. எ.று.

மதி நளினம் - தேனையுடைய தாமரை. மது - தேன்; மதுவை யுடையது மதி, காட்சிக்கு ஒளி மயமாய், கையால் தீண்டுதற்குத் தாமரையாய், சிந்தைக்குத் தேன் கலந்த பாலாய்த் திருவடிகள் தோன்றத் தாம் அனுபவித்த நலத்தை இங்கே எடுத்துரைக்கின்ருர். திருவடி சென்னியிற் பட்டதாகத் தம்மில் தாமே உணர்ந்த உணர்ச்சியை, "சென்னி மிசை மகிழ்ந்து தான் கொண்டு வைத்த அந்நாள் சில்லென்றென் உடம்பும் தகவுயிரும் குளிர்வித்த தாள் மலர்கள்" என் கின்ருர். உடம்பிற் கண்ட குளிர்பபை உணர்வு வாயிலாக உயிர் உணர்ந்த தன் வேதனைக் காட்சியை, "சில்லென்றென் உடம்பும் உயிரும் குளிர் வித்த" என வோதுகின்ருர். "அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் காக மாதி தருந் தன் வேதனையாங் காட்சி" (சிவ. சித்தி. அளவை) என அருணந்தி சிவனுர் கூறுவது காண்க. அருள் புரிய வந்த பெரியவரின் பெருமித நடையைப் புலப்படுத்தற்கு, "வான் கொண்டு நடந்து" என்று குறிக்கின்ருர்.

இதனுல், திருவடி ஞான அனுபவம் கூறியவாரும். (74)

3134. யோகாந்த மிசைஇருப்ப தொன்றுகலாந் தத்தே
உவந்திருப்ப தொன்றெனமெய் யுணர்வுடையோர் உணர்வால்
ஏகாந்தத் திருந்துணரும் இணையடிகள் வருந்த
என்பொருட்டாய் யானிருக்கும் இடந்தேடி நடந்து
வாகாந்தச் சணிக்கதவந் திறப்பித்தங் கென்னை
வரவழைத்தென் கைதனிலே மகிழ்ந்தொன்று கொடுத்தாய்
மோகாந்த காரம்அறுத் தவர்ஏத்தப் பொதுவில்
முயங்கிநடம் புரிகின்ற முக்கணுடை அரசே.

உரை: மயக்கமாகிய இருளைப் போக்கிய பெருமக்கள் போற்றுமாறு அம்பலத்தில் நின்று திருக்கூத் தியற்றுகின்ற முக்கண் மூர்த்தியாகிய தலைவனே, யோக முடிவில் இருப்பது ஒன்று எனவும், கலையின் முடிவாகிய அதீதையில் மகிழ்வுடன் இருப்பது ஒன்று எனவும், மெய்யுணர்வுடை யோர் தம் உணர்வால் தனித்திருந்து உணரவல்ல நின் அடியிணை மலர் கள், மண்ணிற் பதிந்து வருந்த என் பொருட்டாய், நான் இருக்குமிடந் தேடி வந்து, வாகாக அமைத்த தச்சு வேலைப்பாட்டால் அழகுற்ற கதவினைத் திறக்கச் செய்து, என்னை யுன்னருகழைத்து என் கையிலே மகிழ்வோடு ஒன்று கொடுத்தருளினுய்; பெருமானே, உன் 'அருட் டிறத்தை என்னென்பேன்! எ.று.

மோகாந்த காரம்-மோகமாகிய இருள். மோகத்தை மயக்க மென்றும் கூறுவர். முயங்குதல் - பொருந்துதல்; கூடுதலுமாம். யோகாந்தம்- யோகக் காட்சியின் முடிவு. நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்ற கலைகட்கு அப்பாற்பட்ட அதீத கலையின் முடிவு நிலை, "கலாந்தம்" எனப்படுகிறது. அதனைச் சாந்தியதீதை என்பது பெருவழக்கு. இவ் வீறந்தங்களின் முடிவாய் விளங்குவன இறைவனுடைய இரண்டாகிய திருவடிகள் என்றற்கு, "யோகாந்த மிசை இருப்ப தொன்று; கலாந்தத்தே உவந்திருப்பது ஒன்று என இரண்டாம் இணையடிகள்" என்று இசைக்கின்றார். இவை தாமும், மெய்யுணர்வுடைய சிவஞானிகள் தனித்திருந்து அகத்தே காணத் தோன்றுவன என விளக்குதற்கு, "மெய்யுணர்வுடையோர் உணர்வால் ஏகாந்தத் திருந்துணரும் இணையடி கள்" என இயம்புகின்றார். வாகு - திறமை. தச்சுத் தொழிற் றிறத்தால் அழகுறுத்தப்பட்ட கதவு என்றற்கு, "தச்சணிக் கதவம்" எனச் சிறப்பிக் கின்றார்.

இதனால், யோகாந்தம், கலாந்தமாகிய இரண்டிடத்தும் இறைவன் திருவடிகள் விளங்கிச் சிவ ஞானிகளின் ஏகாந்தக் காட்சிக்குப் புலனாவன எனத் தெரிவித்தவாறும். (75)

3135. மகமதிக்கு மறையும்மறை யான்மதிக்கும் அயனும்
மகிழ்ந்தயனுன் மதிக்கும்நெடு மாலும்நெடு மாலான்
மிகமதிக்கும் உருத்திரனும் உருத்திரனால் மதிக்கும்
மேலவனும் அவன்மதிக்க விளங்குசதா சிவனும்
தகமதிக்குந் தோறும்அவர் அவர்உளத்தின் மேலும்
தலைமேலும் மறைந்துறையுந் தாள்மலர்கள் வருந்த
அகமதிக்க நடந்தென்பால் அடைந்தொன்று கொடுத்தாய்
அம்பலத்தில் ஆடுகின்றாய் அருட்பெருமை வியப்பே.

உரை: தில்லையம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற பெருமானே வேத வேள்விகளால் நன்கு மதிக்கப்படும் வேதங்களும், வேதங்களால் போற்றப்படும் பிரமனும், பிரமனால் பெரிதும் மதிக்கப்படுகின்ற திருமாலும், திருமாலால் மிகவும் மதிக்கப்படும் உருத்திரனும், அவ்வுருத்திரனுக்கு மேலாகிய மகேசனும், அவன் மதித்துப் பாராட்ட விளங்கும் சதாசிவனும், தத்தம் மனத்தால் உயர்த்திப் பராவுந் தோறும் அவர்களின் மனத்திலும் தலையிலும் மறைந்து தங்குகின்ற திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த எனது வீடு உயர்வு பெறுமாறு நடந்து வந்து என் முன்னிருந்து எனக் கொன்று கொடுத் தருளினாய்; வியப்பு நல்கும் உனது திருவருளை என் னென்று புகழ்வேன். எ. று.

வேள்விகட்கு வேதமும் வேதங்கட்கு வேதியனான பிரமனும் இன்றி யமையாச் சிறப்புடையவர்கள் என்றற்கு, "மறை மதிக்கும் மறையும் மறையான் மதிக்கும் அயனும்" என வுரைக்கின்றார். பிரமனால் வணங் கப்படும் பெருமை யுடையவன் திருமாலாதல் விளங்க, "மகிழ்ந்து அயனால் மதிக்கும் நெடுமால்" எனக் கூறுகின்றார். திருமாலுக்கும் மேலா யவன் உருத்திர னென்றும், அவ் வுருத்திரனில் உயர்ந்தவன் மகேசன் என்றும், அவனிலும் சிறந்தவன் சதாசிவ மூர்த்தி என்றற்கு, "மாலால்

மிக மதிக்கும் உருத்திரனும் உருத்திரனால் மதிக்கும் மேலவனும் அவன் மதிக்க விளங்க சதாசிவனும்'' என்றும் கூறுகிறார். வேத புருடன் முதல் சதாசிவன் ஈறாகவுள்ள இம் மூர்த்திகள் தத்தம் தகுதிக் கொப்ப மேலுள்ள மூர்த்திகளை வணங்கிப் போற்றுபவாதலால், "தகமதிக்குந் தோறும்'' எனக் குறிக்கின்றார். செயப்பாட்டு வினை செய் வினை வாய்பாட்டில் வந்தது. இவர்களின் மேலாயுள்ள சிவ பரம் பொருளின் திருவடிகள் யாவருடைய சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருப்பனவாதலால் "அவர் உளத்தின் மேலும் மறைந்துறையும் தாள் மலர்கள்'' எனச் சிறப்பிக்கின்றார். பெருமை மிக்கவர் வரவால் வீடு பெருமை பெறும் என்னும் உலகியல் கருதி "அகம் மதிக்க நடந்து என் பால் அடைந்து'' என வுரைக்கின்றார். பெறலரிய தொன்றை வலியத் தாமே போந்து ஒருவர் கொடுப்பாராயின் அவரது உள்ளத்தின் அருட் பண்பு உயர்ந்து விளங்குதலால், "அருட் பெருமை வியப்பே'' எனப் புகல் கின்றார்.

இதனால், உயர்ந்த மூர்த்திகளின் உயர்வு காட்டித் திருவருட் பெருமையைச் சிறப்பித்தவாறும். (76)

3136. இருவினைஒப் பாகிமல பரிபாகம் பொருந்தல்
எத்தருணம் அத்தருணத் தியல்ஞான ஒளியாம்
உருவினையுற் றுள்ளகத்தும் பிரணவமே வடிவாய்
உற்றுவெளிப் புறத்தும்எழுந் துணர்த்திஉரைத் தருளும்
திருவடிகள் மிகவருந்த நடந்தெளியேன் பொருட்டாத்
தெருக்கதவந் திறப்பித்துச் சிறியேனை அழைத்துக்
குருவடிவங் காட்டிஒன்று கொடுத்தாய் என்கரத்தே
குணக்குன்றே நின்னருட்கென் குற்றமெலாங் குணமே.

உரை: குணக் குன்றாகிய பெருமானே, இருவினை யொப்புணர்வு பெற்று, மலவிருள் நீங்கும் செவ்வி யெய்துவது எப்பொழுதோ அப் பொழுதில் உண்மை ஞான வொளியாகிய உருவத்துடன் உள்ளத்தின் அகமும் புறமும் பிரணவா காரமாய்ப் பிறக்கும் ஞானப் பொருளை, உணர்த்துவனவாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த, எளிய என் பொருட்டுத் தெருவில் நடந்து போந்து வாயிற் கதவைத் திறக்கச் செய்து, சிறியவனாகிய என்னைத் தமது முன்பழைத்து ஆசிரிய வுருவில் இருந்து என் கையில் ஒன்று கொடுத்தருளினாய்; இந்த நின் அருட் செயலால் யான் செய்த குற்றமெல்லாம் குணமாகக் கொள்ளப் பட்டமை தெரிகிறது. எ.று.

சலியாப் பெருங் குணங்களின் திரட்சியாய்த் தோன்றுதலால், "குணக்குன்றே'' என்று கூறுகிறார். இருவினை யொப்புணர்வாவது நல்ல தன் நலத்தையும் தீயதன் தீமையையும் ஒப்பாக உணர்தல். "நன்றாங்கால் நல்லவாக் காண்பவன் அன்றாங்கால் அல்லற் படுவது எவன்'' (குறள்) எனத் திருவள்ளுவரும் கூறுவர். இரண்டையும் ஒப்ப நோக்கும் தன்மையால் மனத்தின்கண் திண்மையும் உணர்வின்கண் தெளிவும் உண்டாதலால் தடுமாற்றமும் மயக்கமும் இல்லாகிக் கெடுதலால் அப்

பொழுது நிலவும் அறிவு இருள் நீங்கி இன்ப முறுவது கண்டு அதனை அறிஞர் மலபரிபாகம் எனக் கூறுகின்றனர். மல பரி பாகம் மலவிருள் நீங்கும் பக்குவம். இருவினை யுணர்வொப்பும் மலபரி பாகமும் தெளிந்த ஞான நிகழ்ச்சிக்கு இனிய வாய்ப்பளித்தலால் உள்ள முற்றும் ஞான வொளி கொண்டு பிரணவமான சிவஞான வடிவமுறும் என்பாராய், "இருவினை யொப்பாகி மலபரிபாகம் பொருந்தல் எத்தருணம் அத் தருணத்து இயல் ஞான வொளியா முருவினை யுற்று உள்ளகத்தும் பிரணவமே வடிவாய்" என்று இயம்புகின்றார். உயிரின் உணர்வு இயங்கும் இடமாகிய உள்ளத்தின் அகம் புறம் இரண்டும் பிரணவாகாரமாம் என்பது கருத்து. முன்னைத் தவம் உடையார்க்கு இறைவன் குருவாய்த் தோன்றி ஞான மருளுவன் என்பது பற்றிக் "குரு வடிவம் காட்டி யொன்று கொடுத் தாய்" என்கிறார். ஞானப் பொருள் விரும்பும் கருத்துடையனதலை முகக் குறிப்பாற் கண்டு குரு வடிவம் கொண்டார் எனினும் பொருந்தும்.

இதனால், இறைவன் குரு வடிவம் காட்டி அருள் புரிந்தமை தெரிவித்தவாறும். (77)

3137. தம்மடியார் வருந்திலது சகியாதக் கணத்தே
சார்ந்துவருத் தங்களெலாந் தயவினொடு தவிர்த்தே
எம்மடியார் என்றுகொளும் இணையடிகள் வருந்த
இரவினிடை நடந்தெளியேன் இருக்கும்இடத் தடைந்து
கம்மடியாக் கதவுபெருங் காப்பவிழப் புரிந்து
கடையேனை அழைத்தெனது கையில்ஒன்று கொடுத்து
நம்மடியான் என்றெனையுந் திருவுளத்தே அடைத்தாய்
நடம்புரியும் நாயகநின் நற்கருணை வியப்பே.

உரை: அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற தலைவனே, தமக்கு அடியராயினார் வருத்த மெய்துவராயின், அதனைக் காணப் பொறாமல் அப்பொழுதே அவர்பால் அடைந்து, வருத்தங்களை அருள்கூர்ந்து போக்கி, இவர் எமக்கு அடியராவர் என்று ஏற்று, ஆதரவு செய்யும் இரண்டாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த இராப் பொழுதின் கண், நடந்து எளியனாகிய யான் உறையும் வீட்டை யடைந்து, மனை வளம் குன்றாத பெரிய கதவைத் திறக்கச் செய்து, கடையனாகிய என்னை முன்பழைத்து, என்னுடைய கையில் ஒன்றைக் கொடுத்து நமக்கு அடியவனென்று வாயாற் சொல்லி என்னையும் திருவுள்ளத்தில் கொண்டருளினாய், உனது நல்லருள் இருந்தவாறு என்னே. எ.று.

சகித்தல் - பொறுத்தல். வருத்தம் கண்டதும் அடியார் பக்கல் சென் றணைந்த விரைவு புலப்பட, "அக்கணத்தே சார்ந்து" என கூறுகின்றார். தயவு - அருள். இடம் என்றது இருக்கும் வீட்டை. கம், மனையின்கண் இருந்து பெறலாகும் போகம். மடிதல் - குன்றுதல். பெருங் காப்பு - பெரிய தாழ்-காப்பவிழ்த்தலாவது தாழ் நீக்கித் திறத்தல். கடையேன் - கீழவன். மனத்திற் கொண்டருளினாய் என்ற உலகியல் வழக்கு திருவுளத் தடைத்தல் எனச் சமயச் சான்றோர் வழக்கில் நிலவும் என அறிக.

இதனால், நம்மடியான் என ஏன்றருளும் பெருங் கருணையை வியந்தவாறும். (78)

3138. உம்பருக்குங் கிடைப்பரிதாம் மணிமன்றில் பூத
உருவடிவங் கடந்தாடுந் திருவடிக ளிடத்தே
செம்பருக்கைக் கல்லுறுத்தத் தெருவில்நடந் திரவில்
தெருக்கதவந் திறப்பித்துச் சிறியேனை அழைத்து
வபவருக்குப் பெறலரிதாம் ஒருபொருள்என் கரத்தே
மகிழ்ந்தளித்துத் துயர்தீர்ந்து வாழ்கஎன உரைத்தாய்
இம்பருக்கோ அம்பருக்கும் இதுவியப்பாம் எங்கள்
இறைவநின தருட்பெருமை இசைப்பதெவன் அணிந்தே.

உரை: இறைவனே, தேவருலகத்துத் தேவர்கட்கும் பெறுதற்கரிதாகிய மணியிழைத்த அம்பலத்தின் பூத வடிவங்கட் கெல்லாம் அப்பால் நின்று ஆடுகின்ற திருவடிகளில் சிவந்த பருக்கைக் கற்கள் உறுத்தி வருத்த, இரவில் தெருவில் நடந்து வாயிற் கதவைத் திறக்கச் செய்து உட்புகுந்து சிறியனாகிய என்னை அழைத்துப் புதியவர்கள் பெற மாட்டாத ஒருபொருளை என் கையில் அன்புடன் கொடுத்து "இனித் துன்பமின்றி வாழ்வாயாக" என்று சொல்லி யருளினாய்; இங்கு உள்ளவர்க்கும் அப்பாலுள்ளவர்க்கும் இது வியப்பாக வுளதாகலின், நினது திருவருளின் பெருமையை எவ்வாறு புகழ்ந்து உரைப்பேன். எ.று.

உம்பர் - மேலாகிய தேவருலகத்தில் வாழ்கிற தேவர்கள். நில முதலிய ஐம்பூதங்கள் கலந்த இவ்வுலகிற்கு மேலதாதலால் 'உம்பர் எனப்படுகிறது. மணி மன்று, தேவருலகுகட்கு அப்பாலதாகலின், "உம்பருக்கும் கிடைப்பரிதாம் மணிமன்று" என்க் குறிக்கின்றார். பொறி புலன்கள் காணத் தோன்றும் பூத வுருவ வகைகட்கு அப்பால் அருவமாய் நின்றாடும் திருக்கூத்து என்றற்கு, "பூத வுருவம் கடந்தாடும் திருவடிகள்" எனப் புகல்கின்றார். உத்தர ஞான சிதம்பரமாகிய பார்வதிபுரம் செம்மண்ணும் பருக்கைக் கற்களும் நிறைந்த நிலமாதலின், "செம்பருக்கைக் கல்லுறுத்த" எனவும், அவை முட்களைப் போலக் காலடியிற் பொத்து வருத்தும் இயல்பினவாகலின், அவற்றை விதந்தும் உரைக்கின்றார். குணஞ் செயல்களாற் சிறுமையுடையன் என்றற்குச் சிறியேன் என்கின்றார். வம்பர் - புதியவர். பழ வடியார்க்கே திருவருள் உரிய தென வெளிப்படுத்தற்கு, "வம்பருக்குப் பெறலரிதாம் ஒருபொருள்" என இயம்புகின்றார். மனமகிழ்ச்சியுடன் தரப் பெற்ற தாம் மலர்ந்த முகத்தினராகக் கண்டமையின், கொடுப்பவரும் "இனித் துன்பமின்றி வாழ்க" எனச் சொல்லியது பெயர்த்தும் தாம் கொண்டுரைப்பாராய், "துயர் தீர்ந்து வாழ்கவென வுரைத்தாய்" என்றும், கொடுத்ததை உடனிருந்து கண்டவரும், அவர்களால் பிறரும் அறிந்து வியந்து பேசிக் கொண்டமையின்," இம்பருக்கும் அம்பருக்கும் இது வியப்பாம்" என்றும், எனவே இந்நிகழ்ச்சியை விரிவாகப் புகழ்ந்து பேசுவது மிகை என்பாராய், "நின்னருட் பெருமை அணிந்திசைப்பது எவன்" என்றும் இசைக்கின்றார். அணிந்துரைத்தல் - அணி நலம் கலந்து பாரித்துரைத்தல்.

இதனால், தில்லையம்பலத் திருநடனம் பூத வுருவம் கடந்தது எனப் புகன்றவாறும். (79)

3139. உருவம்ஒரு நான்காகி அருவமும்அவ் வளவாய்
உருஅருஒன் றாகிஇவை ஒன்பானுங் கடந்து
துருவமுடி யாப்பரம துரியநடு விருந்த
சொருபஅனு பவமயமாந் துணையடிகள் வருந்தத்
தெருவமிசை நடந்துசிறு செம்பரற்கல் உறுத்தச்
சிறியேன்பால் அடைந்தெனது செங்கையில்ஒன் றளித்தாய்
மருவஇனி யாய்மன்றில் நடம்புரிவாய் கருணை
மாகடலே நின்பெருமை வழுத்தமுடி யாதே.

உரை: கூடுதற் கினியவனும், அம்பலத்தில் திருநடம் புரிபவனுமாகிய கருணையே நிறைந்த பெரிய கடல் போன்ற பெருமானே, அருவம் நான்காகவும் உருவம் ஒரு நான்காகவும் அருவுருவம் ஒன்றாகவும் கூடிய ஒன்பது வகையும் கடந்து, மேலும் துருவிக் காண முடியாத மேனிற்கும் துரியத்தின் நடுவே எழுந்தருளுகிற உண்மையுருவாய் அனுபவ மயமாய் விளங்குகிற திருவடிகள் இரண்டும் மண்ணிற் பொருந்தி, சிறு சிறு செந்நிறப் பருக்கைக் கற்கள் கிடந்து வருத்த நடந்து சிறியனாகிய என்பாற் போந்து என்னுடைய அங்கையில் ஒன்றைத் தந்தருளினாய்; நின் பெருமையை என்னாற் புகழ்ந்துரைக்க இயலாவகை விரிந்தது காண். எ.று.

"மருவினார்க் கெளியர் போலும்" (நாகேச்) என நாவுக்கரசர் கூறுதலையனுபவித்துக் காண்கின்றமையின், "மருவ வினியாய்" எனவும், மன்றில் நின்றாடும் பெருமானாதலால், "மன்றில் நடம் புரிவாய்" எனவும் உரைக்கின்றார். உருவம் நான்காவன:- பிரமன், திருமால், உருத்திரன் மகேசன் என்பன; அருவம் நான்காவன:- சிவம், சத்தி, நாதம், விந்து என்பன; அருவுருவம் ஒன்றென்பது சதாசிவ மூர்த்தத்தை. அருவம் நான்காதல் பற்றி, "அவ்வளவாய்" என்று கூறுகிறார். இவ்வொன்பதற்குப் பரமாவதும் பரசிவம்; அது தானும் அகநாட்டமுடைய பெருமக்கட்குத் துரியத்தானத்தே காணப்படுவது பற்றி, "ஒன்பானும் கடந்து பரமதுரிய நடுவிருந்த சொருப" என்றும், அது உணர்வால் உணர்ந்து அனுபவிக்கப் படுவதன்றி வாயால் உரைக்க வொண்ணாதது என்பது விளங்க "அனுபவ மயமாம் துணையடிகள்" என்றும் சொல்லுகின்றார். இதனை, "அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம், மகட்குத் தாய் தன் மணாளனோடாடிய சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே" (திருமந்) எனத் திருமூலர் உரைப்பது காண்க. தெரு - தெருவமென வந்தது. "உருவச் செங்கொடி தெருவத்துப் பரப்பி" (1 : 38 : 351) எனப் பெருங்கதை வழங்குத லறிக. பரற்கல் - சிறு கற்கள். செங்கை - சிவந்த உள்ளங்கை. "செங்கையிலிருப்பினும் சேயன் சேயனே" (பிறை) எனச் சிவப்பிரகாசர் கூறுவது காண்க. பெருமை மிகவும் பரந்த அளவிற்றாதலால் சிறுமையுடையவனாகிய எனக்கு இயலுவதன்று என்பாராய், "பெருமை வழுத்த முடியாது" என மொழிகின்றார்.

இதனால், யோகக் காட்சியிற் ருேன்றும் அனுபவ பரசிவம் உருவ வகை ஒன்பதும் கடந்த தென விளக்கியவாறும். (80)

3140. பக்குவத்தால் உயர்வாழைப் பழங்கனிந்தாற் போலும்
பரங்கருணை யாற்கனிந்த பத்தர்சித்தந் தனிலே
பொக்கமில அப் பழந்தனிலே தெள்ளமுதங் கந்தாற்
போற்கலந்து தித்திக்கும் பொன்னடிகள் வருந்த
மிக்கஇருள் இரவினிடை நடந்தெளியேன் இருக்கும்
வியன்மனையில் அடைந்துகத வந்திறக்கப் புரிந்து
ஒக்கஎனை அழைத்தொன்று கொடுத்திங்கே இருஎன்
றுரைத்தனைஎம் பெருமான்நின் உயர்கருணை வியப்பே.

உரை: எம்பெருமானே, உயர்ந்த இனத்து வாழைப்பழம் பக்குவத்திற் கனிந்தது போல, மேலான கருணை நிறைந்து அன்பர்களின் சிந்தையில் கனிந்து, குற்றமில்லாத அப்பழத்தில் தெளிந்த அமுதம் கலந்தது போலக் கலந்து தித்திக்கும் அழகிய திருவடிகள் வருந்துமாறு இரவுக் காலத்தில் மண் பொருந்தி நடந்து, எளியனுகிய யான் இருக்கின்ற பெரிய வீட்டுக்குப் போந்து கதவைத் திறக்கச் செய்து மனம் உவக்குமாறு என்னை முன்புற அழைத்து, ஒன்றை என்னிடம் தந்து, "இங்கே இருப்பாயாக" என உரைத்தருளினுய்; உனது திருவருள் எனக்கு வியப்பையே தருகிறது, காண். எ.று.

உயர்ந்த இனத்து வாழை தானே பழுக்கினும் உண்ணும் பக்குவத்துக்கு ஒப்பக் கனிதல் சிறப்பாதலால், "பக்குவத்தாற் பழம் கனிந்தாற் போலும்" என்று புகல்கின்ருர். வாழையில்" உயர்ந்தது தாழ்ந்தது மென வேறுபாடுண்மை பற்றி, "உயர் வாழை" எனச் சிறப்பிக்கின்ருர். உயர் வாழையின் கனியில் தேன் கலப்பது போல, அன்பர்களின் சிந்தையில் கருணை நிறைந்து சிவஞானம் கலந்து, கனியுடன் அமுதம் கலந்தது போல இனிக்கும் திறம் புலப்படுத்தற்கு, "கருணையாற் கனிந்த பத்தர் சித்தந் தனிலே கலந்து தித்திக்கும் பொன்னடிகள்" எனப் புகல்கின்ருர். திருவடிக் கலப்பு, தெள்ளமுதக் கலப்புப், போல்கிற தென்பதாம். யாரும் இனிது வழங்கலாகாத நள்ளிரவில் பரவும் பேரிருளை, "மிக்க இருளிரவு" என்று விளம்புகின்ருர். வியன் மனை, பெரிய வீடு. ஒத்த அன்புடன் மனம் அழைப்புக்கு இனிது இசைய அழைத்தமை விளங்க, "ஒக்க எனையழைத்து" எனவுரைக்கின்ருர். இவ்விடத்தினின்று நீங்குதலின்றி இருப்பாயாக என்பாராய், "இங்கே இரு என்றுரைத்தனை" என மொழிகின்ருர்.

இதனல், இறைவன் திருவடிகள் பத்தர் சித்தத்தில் இனிக்கின்ற திறம் விளக்கியவாறும். (81)

3141. உளவறிந்தோர் தமக்கெல்லாம் உபநிடதப் பொருளாய்
உளவறியார்க் கிகபரமும் உறுவிக்கும் பொருளாய்
அளவறிந்த அறிவாலே அறிந்திடநின் ருேடும்
அடிமலர்கள் வருந்தியிட நடந்திரவில் அடைந்து

களவறிந்தேன் தனைக்கூவிக் கதவுதிறப் பித்துக்
கையில்ஒன்று கொடுத்தாய்நின் கருணையைஎன் என்பேன்
விளவெறிந்தோன் அயன்முதலோர் பணிந்தேத்தப் பொதுவில்
விளங்குநடம் புரிகின்ற துளங்கொளிமா மணியே.

உரை : கன்றால் விளா மரத்தினை யெறிந்த திருமால், நான்முகன் முதலோர் வணங்கி வழிபடத் தில்லையம்பலத்தில் திருக்கூத் தியற்றும் விளங்குகின்ற ஒளி பொருந்திய பெரிய மாணிக்கமே, வீட்டு நெறி யறிந்தார்க்கு உபநிடதங்கள் ஓதும் பிரமப் பொருளாய், அந்நெறி யறியாது உலகியல் வாழ்வையே கருதுவார்க்கு, இம்மை மறுமைகளை யெய்துவிக்கும் பொருளாய், அளவை யறிவால் அறிய அம்பலத்தில் நின்றாடும் நின் அடியிணை மலர்கள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு நடந்து, இரவில் வந்து, கள்ள முடைய என்னை நின்னருகேயழைத்துக் கதவினைத் திறக்கச் செய்து, என் கையில் ஒன்று கொடுத் தருளினாய்; பெருமானே, நின் பெருங் கருணைத் திறத்தை என்னென்பேன்! எ.று.

தான் கண்ணனாய், ஆயர் சேரியில் வளர்ந்த பொழுது, கஞ்சன் விடுப்பப் போந்த அசுரன் ஒருவன், விளா மரத்தின் உருவில் நின்றானாக, வேறு சில துணை யசுரர்கள் கன்றுருவில் தோன்றி, உண்மைக் கன்றுகளோடு கூடியிருந்தார்களாக, அக்கன்றுகளாகிய அசுரர்களைக் கொண்டு, விளா மரவடிவில் நின்ற அசுரனைத் தாக்கி இருதிறத்தாரையும் ஒருங்கு கொன்றழித்த திருமாலின் அருட் செயலை நினைக்கின்றாராதலின், "விளவெறிந்தோன்" எனக் குறிக்கின்றார். பொது - தில்லையம்பலம். ஒளியினிடத்தே இடையறு இமைப்புண்மை பற்றித் "துளங்கொளி" எனச் சொல்லுகின்றார். உளவு - நெறி உபாயம் என்றும் கூறுவர். உபநிடதங்கள் பிரமப் பொருளை முடிபாகக் கூறுதலால், "உபநிடதப் பொருளாய்" என வுரைக்கின்றார். அந்த உளவைக் கருதாமல், உலகியல் வாழ்வையே பொருளாக எண்ணி, அதனை அறநெறியிற் கடை போக ஆற்றுபவர், தெய்வ வாழ்வு பெறலாம் என்ற குறிக்கோளுடையராதலின், அவர்கள் கருத்தும் விளங்க, "உளவறியார்க்கு இகபரமும் உறுவிக்கும் பொருளாய்" என ஓதுகின்றார். இவர்களை வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் (குறள்) எனத் திருவள்ளுவர் குறிக்கின்றார். அளவறிதல் என்பது, காண்டல், கருதல், உரை யென்ற அளவைகளால் பொருளுண்மை தெளிதல். காண்டல் முதலிய மூன்றையும் காட்சி, அனுமானம், ஆகமம் எனவும், அனுபவம், யுக்தி, சுருதி எனவும் வழங்குவர். களவு, பொய் வஞ்சனை முதலிய குற்றங்களையுடையவன் எனத் தம்மை இழித்தற்குக் "களவறிந்தேன்" என்கின்றார். களவறிவு உடைமையைத் திருவள்ளுவர், "களவென்னும் காரறிவாண்மை" யெனப் பழிப்பர்.

இதனால், உபநிடதப் பொருளாயும், உலகியல் உறுதிப் பொருளாயும் இறைவன் விளங்குவது உரைத்தவாறும். (82)

3142. எவ்வுலகும் எவ்வுயிரும் எச்செயலும் தோன்றி
இயங்கும்இட மாகிஎல்லாம் முயங்கும்இட மாகித்
தெல்வுலகும் நண்புலகுஞ் சமனாகக் கண்ட
சித்தர்கள்தம் சித்தத்தே தித்திக்கும் பதங்கள்

இவ்வுலகில் வருந்தநடந் தென்பொருட்டால் இரவில்
எழிற்கதவந் திறப்பித்தங் கென்கையில்ஒன் றளித்தாய்
அவ்வுலக முதல்உலகம் அனைத்துமகிழ்ந் தேத்த
அம்பலத்தே நடம்புரியும் செம்பவளக் குன்றே.

உரை: துறக்க உலகம் முதலாகவுள்ள எல்லா வுலகங்களில் உள்ளவர்களும் விரும்பிப் போற்றத் தில்லையம்பலத்தே திருக்கூத் தியற்றும் சிவந்த பவளமலை போன்றவனே, எவ்வுலகங்களும், அவ்வுலகங்களில் வாழும் எல்லாவுயிர்களும், அவற்றின் செயல்கள் அத்தனையும் தோன்றி நின்று இயங்கும் இடமும், அவை யாவும் ஒடுங்கும் இடமுமாய், பகை வருலகம் நண்பருலகம் என வேறுபாடு காணது ஒப்பக் கண்டு ஓம்புகின்ற சிந்தனையாளர்களின் சிந்தனைக்கண் நின்று தித்திக்கும் நின் திருவடி மலர்கள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு, என் பொருட்டாக இரவில் நடந்து வந்து, கதவினைத் திறக்கச் செய்து, என் கையில் ஒன்று தந்தருளினய்; சிவபரம் பொருளே, உன் கருணைத் திறத்தை என்னென்பேன்! எ.று.

துறக்க உலகம், மண்ணுலகம், பாதல உலகம் என மூன்றாக வகுக்கப்படும் மூவகை யுலகமும் அகப்பட, "அவ்வுலக முதல் உலகம் அனைத்தும்" என்கின்றார். அவரவர் வினைக்கேற்ப உலகம் மூன்றாயினும், எங்கிருப்பவரும் தத்தம் பிறப்புயர்தல் வேண்டி வழிபாடு ஒழியாராதலின், "அனைத்துலகும் மகிழ்ந்தேத்த அம்பலத்தே நடம் புரியும் செம்பவளக் குன்று" எனப் போற்றுகின்றார். "மருவார் கொன்றை மதி சூடி மாணிக்கத்தின் மலை போல வருவார் விடை மேல்" (கட. மயா) எனச் சுந்தரரும் ஓதுவது காண்க. எல்லா வுலகங்களும் உயிர்களும் தோன்றி நிலவு மிடமும், எல்லாம் ஒடுங்கு மிடமும் ஆகிய இரண்டுக்கும் வைப்பாகிய திருவருள், திருவடிகளாக உருவகஞ் செய்யப்படுதலின், "எவ்வுலகும் எவ்வுயிரும் எச்செயலும் தோன்றி இயங்கு மிடமாகித் தித்திக்கும் பதங்கள்" எனவும், "திந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன" (ஐயாறு) எனத் திருநாவுக்கரசர் செப்புதலின், "சித்தர்கள்தம் சித்தத்தே தித்திக்கும் பதங்கள்" எனவும் செப்புகின்றார். முயங்குமிடம் - ஒடுங்குமிடம். சித்தர்கள் - சிந்திக்கும் சிந்தனையாளர்கள். சிந்திப்பது சித்தமாகலின், சிந்தனை சித்தம் எனப்படுகிறது. சிந்திக்கும் சிந்தனையைத் தெளிய விளங்குவாராய், "தெவ்வுலகும் நண்புலகும் சமனுகக் கண்ட சித்தர்" என மொழிகின்றார். தெவ்வுலகு - பகைவர் உலகு.

இதனல், பகை நட்பிரண்டையும் ஒப்பக் கருதும் சித்தர்களின் சித்தத் தியல்பு தெரிவித்தவாறும். (83)

3143. மானிநெடு மோகினியும் மாமாயை யுடனே
வைந்துவமும் ஒன்றிநின்று வதிந்தசைய அசைத்தே
ஊனிநெடும் உயிருணர்வங் கலந்துகலப் புறுமா
றுறுவித்துப் பின்கரும ஒப்புவருந் தருணம்

தேனினொடு கலந்தஅமு தெனருசிக்க இருந்த
திருவடிகள் வருந்தநடந் தடியேன்பால் அடைந்து
வானினொடு விளங்குபொருள் ஒன்றெனக்கும் அளித்தாய்
மன்றில்நடத் தரசேநின் மாகருணை வியப்பே.

உரை : தில்லையம்பலத்தில் ஆடுகின்ற அருளரசே, பிரகிருதி மாயையும், அசுத்த மாயையும், சுத்த மாயையும், மூல மாயையும் ஒன்றொன்றின் அடங்கித் திருவருட் சத்தி கலக்கக் கலங்கி உடம்பின் கண்ணும் உயிரின் கண்ணும் கலந்து கலப்பாய் அமைவித்து பின்பு இருவினை யொப்புணர்வு எய்துங் காலத்து, தேன் கலந்த பால் போல சிந்தையில் இனிக்க விளங்கும் திருவடிகள் மண் பொருந்தி வருந்த நடந்து அடியேனை இரவின்கண் அடைந்து ஞான வானத்தின்கண் விளங்கு வதாகிய ஒரு பொருளை எனக்குத் தந்தருளினாய்; நினது பெரிய கருணை வியக்கத் தக்கதாம். எ. று.

பிரகிருதி மாயையை மான் என்றும், அசுத்த மாயையை மோகினி யென்றும், சுத்த மாயையை மாமாயை யென்றும், மூல மாயையை வைந்தவ மென்றும் கூறுவது சிவாகம மரபு. சிவாகமத்தைச் சித்தாந்தம் என்பது கொண்டு இதனைச் சித்தாந்த மரபு என்றும் கூறுவர். பரவிந்து வாகிய திருவருட் பாராசத்தியின்கண் ஒடுங்கியிருந்து, அது தனது சங்கற்பத்தால் கலக்க வெளிப்படும் மாயை, வைந்தவம் எனப்படும்; இதுவே மூலமாயையாகும். இவ்வைந்தவத்தின்கண் நிலவும் உலகுகளை உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கத்தின்கண் சிவாகம சாரமாகக் கூறியவற்றுள், வைந்த வோற்பவ சுத்த மூர்த்தி விகற்ப சாமானிய தூயதன்மலட்சி யானுபவ சரியைச் சரியா முத்தி யுலகு முதலாகப் பல கூறப்படுவது காண்க. வைந்தவமாகிய மூலமாயை மேலும் கலக்குண்டு, சுத்த தத்துவங்களாகிய சிவ முதலியன தோன்றுதற்கும், சுத்தா சுத்த தத்துவமாகிய கலை வித்தை முதலாய தத்துவங்கள் உளவாதற்கும், அசுத்த தத்துவமான ஆன்ம தத்துவங்கள் தோன்றுதற் கும் முறையே மாமாயையும் மோகினியும் மானும் முதற் காரணமாதலால், "மானினொடு மோகினியும் மாமாயை யுடனே வைத்துவமும் ஒன்றி னொன்று வதித்து அசைய அசைந்து" எனக் கூறுகின்றார். சுத்த மாயையாகிய மாமாயையின் காரியம் சிவ தத்துவ மைந்தும், சுத்தா சுத்த மாகிய மோகினியின் காரியம் வித்தியா தத்துவ மேழும், அசுத்த மாயை யாகிய மானின் காரியம் ஆன்ம தத்துவம் இருபத்து நான்குமாகும். இந்த அசுத்த மாயை சில ஆகமங்களில் மூலப்பகுதி என வழங்கும். சிலர் வித்தியா தத்துவம் ஏழையுமே அசுத்த மாயா காரியமென உரைப் பதுண்டு. திருவருட் சத்தியாற் கலக்குண்பதை "அசைய அசைந்து" என வள்ளற் பெருமான் விளக்குகிறார். மாயையின் மயக்கம் உடம்பிலும் உயிருணர்விலும் கலப்பதால், "ஊனினொடு உயிருணர்வும் கலந்து கலப்புறுமாறுறுவித்து" என விளம்புகிறார். கரும வொப்பு - இருவினை யொப்புணர்வு. சிலர் கன்ம வொப்பினை நல்வினை தீவினைகள் சமநிலை யவாதல் என்பர்; மாதவச் சிவஞான முனிவர், அதனை மறுத்து, இரண் டையும் ஒப்பக் கொண்டுவர்த்தல் என்பர். வானினொடு விளங்கு பொருள்; ஞானகாசமாகிய சிவாகமப் பெரும்பொருள். இது கண்டுதான்

ஆதமங்கலம் சந்திரசேகரப் பிள்ளை வடலூர் வள்ளலாரைச் 'சித்தாந்த சாகர அமிர்த போனக யோகாசனர்' என்று சிறப்பிக்கின்ருர் போலும்.

இதனல், திருவருட் சத்தி வைந்தவம் கலக்குண்டு உடலுயிர்களை மயக்கும் திறம் கூறியவாறும். (84)

3144. பசுபாச பந்தம்அறும் பாங்குதனைக் காட்டிப்
பரமாகி உள்ளிருந்து பற்றறவும் புரிந்தே
அசமான மானசிவா னந்தஅனு பவமும்
அடைவித்தவ் வனுபவந்தாம் ஆகியசே வடிகள்
வசுமீது வருந்தியிட நடந்தடியேன் இருக்கும்
மனையைஅடைந் தணிக்கதவந் திறப்பித்து நின்று
விசுவாச முறஎனைஅங் கழைத்தொன்று கொடுத்தாய்
விடையவநின் அருட்பெருமை என்புகல்கேன் வியந்தே.

உரை: எருதேறும் பெருமானே, பசுபாசத் தொடர்பறுதற்குரிய நெறியைக் காட்டி, அவற்றிற் கெல்லாம் மேலாய் உள்ளேயிருந்து பற்று விடற்குத் திண்மையுதவி, அது வாயிலாக உயர்ந்த சிவானந்த அனுபவம் பெறுவித்து அந்த அனுபவமேயாகிய திருவடிகள் இரண்டும் நிலத்தின் மீது பொருந்தி வருந்த நடந்து அடியவனுகிய யான் இருக்கும் வீட்டுக்கு வந்து வாயிற் கதவைத் திறக்கச் செய்து, உட்புகுந்து, நின்று அன்புடன் என்னைத் தான் நிற்குமிடத்துக்கு அழைத்து ஒன்று கொடுத் தருளினு யாகலின், நினது திருவருட் பெருமையை எவ்வாறு புகழ்ந்துரைப்பேன். எ.று.

விடை - எருது; விடையவ எனப் பொதுப்படக் கூறுதலால் எருதை ஊர்தியாகவும் கொடியாகவும் கூறலாம். பசு பாசம், யான் என்னும் உயிர்ப்பற்றும், எனதென்னும் உடைமைப் பற்றும் ஆகிய இரண்டையும் குறிக்கும். இருவகைப் பற்றுக்களையும் அறுக்கும் நெறி யறிவுறுத்த திறத்தை, "பசுபாச பந்தமறும் பாங்குதனைக் காட்டி" எனக் கூறுகிருர். பந்தம் - தொடர்பு. பாங்கு, நெறி, உயிர்க்கு வேருகிய இருவகைப் பற்றுக்களையும் உயிரின் வேருய் இருந்து உணர்வு வாயிலாக உடற் குள்ளிருந்து அறுக்க வுதவிய நலத்தைப் "பரமாகியுள்ளிருந்து பற்றறவும் புரிந்து" என மொழிகின்ருர். "விளையாததொர் பரிசில்வரு பசுபாசவேதனை யொண்தளையாயின தவிரவ் வருள் தலைவன் "(முதுகுன்) என ஞான சம்பந்தர் உரைப்பது காண்க. அசமானம்-ஒப்பற்றது; உயர்ந்த தென்பது கருத்து. சிவபோகம் வேறு, சிவ போகானுபவம் வேருதலின், "அசமான-மானசிவானந்தானுபவம் அடைவித்து அவ்வனுபவம் தாம் ஆகிய சேவடிகள்" என வுரைக் கின்ருர். வசு- நிலம்; இது வசுதா என்றும் வசுதை என்றும் வழங்கும். வாயிற் கதவு வேலைப்பாட்டால் அழகுற அமைந்திருப்பது கொண்டு அதனை "அணிக்கதவம்" என இயம்புகிருர்.

இதனற் பற்றைக் காட்டி அதனையறுக்கும் திறம் காட்டிச் சிவானந்தானுபவத்தைக் காட்டிச் சிவானந்தானுபவமும் ஆகிய திறம் கூறியவாறும். (85)

3145. ஆதியுமாய் அந்தமுமாய் நடுவாகி ஆதி
அந்தநடு வில்லாத மந்தணவான் பொருளாய்ச்
சோதியுமாய்ச் சோதியெலாந் தோன்றுபர மாகித்
துரியமுமாய் விளங்குகின்ற துணையடிகள் வருந்த
பாதியிர விடைநடந்து நான்இருக்கும் இடத்தே
படர்ந்துதெருக் கதவங்காப் பவிழ்த்திடவும் புரிந்து
ஓதியிலங் கெனையழைத்தென் கரத்தொன்று கொடுத்தாய்
உடையவநின் அருட்பெருமை என்னுரைப்பேன் உவந்தே.

உரை : என்னையுடைய பெருமானே, தொடக்கமும் இடையும் ஈறு மாய், தொடக்கமும் இடையும் ஈறும் தனக்கு இல்லாத நுண்பொருளாய், சோதியாகியும், ஒளிப் பொருள் யாவும் தோன்றும் பரஞ்சோதியாகியும் துரியமாகியும் விளங்குகிற இரண்டாகிய திருவடிகள் வருந்துமாறு, நள்ளிரவில் நான் இருக்குமிடத்துக்கு நடந்து வந்து தெருக்கதவைத் திறக்கவும் செய்து ஒதுக்கிடத்தே யிருந்த என்னை யழைத்து என் கையிலொன்று கொடுத்தாய்; நினது திருவருளின் பெருமை என்னென்று மகிழ்ந்துரைப்பேன். எ.று.

உலகுகட் கெல்லாம் தோற்றமும் இடையும் நடுவுமாய் உள்ள தனது இருப்பு விளங்க, "ஆதியுமா யந்தமுமாய் நடுவுமாகி" எனவும், அதே நிலையில் தமக்குத் தோற்றமும் இடையும் கேடும் இல்லாமையுணர்த்தற்கு "ஆதியந்தம் இல்லாத மந்தணவான்பொருளாய்"எனவும் இயம்புகின்றார். மந்தணம் - இரகசியப் பொருள். நுண்மைத் தன்மை பற்றி, "மந்தண" மென்றும், பயன் விளைப்பதில் உயர்வறவுயர்ந்த பெருமையுடைய தென்றற்கு "வான்பொருள்" என்றும் கூறுகின்றார். தான் ஆதியந்த மில்லாததாயினும் பிற பொருளனைத்துக்கும் தான் ஆதியு மந்தமுமாவது ஒன்று; தான் சோதியாயினும் பிறசோதிப் பொருள் யாவும் தோன்று தற்குத் தான் இடமாவது ஒன்று; இவ்விரண்டியல்புகளையும் இரண்டாகிய திருவடியாக உருவகம் செய்கின்றார். பரம்பொருளாதலையும் பரஞ்சோதி யாதலையும் உணருமிடமாதல் பற்றித் "துரியமுமாய்" என்று சொல்லுகிறார். "துஞ்சு நாள் துறந்து தோற்றமுமில்லாச் சுடர்விடு சோதியெம்பெருமான்" (பாம்புரம்) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. பாதியிரவு, நள்ளிரவு. படர்தல் - வருதல். கதவைத் திறக்கச் செய்து உள்ளேயும் புகுந்தமை புலப்பட, "அவிழ்த்திடவும் புரிந்து" எனப் புகல்கின்றார். ஓதி யில் - ஒதுக்கிடம். மூலையிற் கிடந்த என்னையழைத்துக் கொடுத்தற்கு ஏதுவாகியிருந்த நின் திருவருள் நினைவுக்கு இன்பம் தருகிற தென்பார், "நின்னருட் பெருமை உவந்து என்னுரைப்பேன்" என வுரைக்கின்றார்.

இதனால், ஆதியந்தமில்லாததாய்ச் சோதிக் கெல்லாம் சோதியாய்ப் பரம்பொருள் இருக்கும் திறம் கூறியவாறும். (86)

3146. பாடுகின்ற மறைகளெலாம் ஒருபுறஞ்சூழ்ந் தாடப்
பத்தரொடு முத்தரெலாம் பார்த்தாடப் பொதுவில்
ஆடுகின்ற திருவடிகள் வருந்தநடந் தடியேன்
அடையும்இடத் தடைத்திரவிற் காப்பவிழ்க்கப் புரிந்து

நாடுகின்ற சிறியேனை அழைத்தருளி நோக்கி
நகைமுகஞ்செய் தென்கரத்தே நல்கினைஒன் றிதனால்
வாடுகின்ற வாட்டமெலாந் தவிர்ந்துமகிழ் கின்றேன்
மன்னவநின் பொன்னருளை என்னெனவாழ்த் துவனே.

உரை: அருளரசே, பாடுகின்ற வேதங்கள் எல்லாம் ஒருபால் சூழ்ந்து ஆட பத்தான்மாக்களும் முத்தான்மாக்களும் ஒருபால் நின்று ஆடலைப் பார்த்து மகிழ்ந்தாட, அம்பலத்தில் ஆடுகின்ற நின் திருவடி மலர்கள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு நடந்து வந்து அடியேன் தங்கியுள்ள இடத்தடைந்து, இரவில் கதவினைத் திறக்கச் செய்து, உன்னருளை நாடுகின்ற சிறியேனாகிய என்னை நின்னருகே அழைத்து, அருளோடு நோக்கி, முகத்தே அன்பு நகை செய்து, என் கையிலே ஒன்று கொடுத் தருளினாய்; இதனால், நான் வாடுகின்ற வாட்டமெல்லாம் நீங்கி மகிழ்வுறுகின்றேன். பெருமானே, நின் அழகிய திருவருளை என்னென்று போற்றுவேன். எ.று.

வேதம் ஓதுகின்ற வேதியர்கள் அம்பலத்தில் சூழ்ந்து நின்று, வேத கீதங்களைப் பாடுகின்றார்கள் என்றற்கு, "பாடுகின்ற மறைகளெலாம் ஒருபுறஞ் சூழ்ந்தாட" என்றும், பத்தி பண்ணுகின்ற பெருமக்களும், முத்தி பெறச் சமைந்த முத்தான்மாக்களும் ஒருபால் நின்று ஆடல் நலங் கண்டு பாராட்டி மகிழ்கின்றார்கள் என்பாராய், "பத்தரொடு முத்தரெலாம் பார்த்துமகிழ்ந்தாட" என்றும் மொழிகின்றார். அடையுமிடம்-உறையுமிடம். காப்பவிழ்த்தல், தாழ் நீக்கல். கொடுத்தது பெற்றதன் பயனாகத் தம்பால் நிகழ்ந்தது கூறுவாராய், "வாடுகின்ற வாட்டமெலாம் தவிர்ந்து மகிழ்கின்றேன்" என்று உரைக்கின்றார்.

இதனால், திருவருள் நல்கப் பெற்று மகிழ்ந்தமை தெரிவித்தவாறும். (87)

3147. எம்மதத்தில் எவரெவர்க்கும் இயைந்தஅனு பவமாய்
எல்லாமாய் அல்லவுமாய் இருந்தபடி இருந்தே
அம்மதப்பொன் னம்பலத்தில் ஆனந்த நடஞ்செய்
அரும்பெருஞ்சே வடியிணைகள் அசைந்துமிக வருந்த
இம்மதத்தில் என் பொருட்டாய் இரவில்நடந் தருளி
எழிற்கதவந் திறப்பித்தங் கெனைஅழைத்தென் கரத்தே
சம்மதத்தால் ஒன்றளித்த தயவினைஎன் புகல்வேன்
தம்மைஅறிந் தவர்அறிவின் மன்னும்ஒளி மணியே.

உரை: தம் தன்மையையும், தம் தலைவன் தன்மையையும் அறிந்தவர் அறிவின்கண் நிலைபெறுகின்ற ஒளி பொருந்திய மாணிக்கமே! எவ்வெச் சமயத்தவர்க்கும் அவரவர்க்கும் பொருந்துகின்ற அனுபவப் பொருளாய், எல்லாமாகி, அல்லவுமாகி, இருந்தபடியே விகாரமின்றி யிருந்து, அழகிய பொன்னம்பலத்தில் ஆனந்தக் கூத்தியற்றும் அருமையும் பெருமையும் பொருந்திய சேவடியாகிய தாமரை மலர்கள் மண்ணிற் பொருந்தித் தளர்ந்து வருத்தமுற, இந்நிலையில் எளியேன் என்

பொருட்டாக இரவில் நடந்து வந்து அழகிய கதவினைத் திறக்கச் செய்து, என்னை யுன்னருகழைத்து, என் கையிலே இசைவோடு ஒன்று கொடுத் தருளிய நின் அருட் டிறத்தைப் பெருமானே, நான் என்னென்று கூறுவேன்; எ.று.

தம்மை யறிந்தவர் - தம் தன்மையையும், தம்மையுடைய தலைவன் தன்மையையும் அறிந்த சான்றோர்கள். தம்மை யறிந்த பெரியோர் களுடைய அறிவே தமக்கு இடமாக உறைபவனாதலின், "தம்மை யறிந்தவர் அறிவின் மன்னும் ஒளிமணியே" என்கின்றார். "அறிவினுள் அருளால் மன்னி" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனாரும் கூறுவர், எம்மதத்தில் என்றவிடத்து மதம், சமயத்தின் மேற்று. இருந்தபடி யிருத்தல், விகாரமின்றி யிருத்தல். அசைதல், தளர்தல். அம்மதம் என்றவிடத்து மதம் அழகு, அகரம், உலகறி சுட்டு. இம்மதத்தில் என்றவிடத்து மதம், நிலைமை குறித்தது. சம்மதம், இசைவு.

இதனால், எவ்வகைச் சமயத்தார்க்கும் அவ்வவர் ஞானானுபவமாய்த் திரிபின்றியிருக்கும் திறம் கூறியவாறும். (88)

3148. பூதவெளி கரணவெளி பகுதிவெளி மாயா
போகவெளி மாமாயா யோகவெளி புகலும்
வேதவெளி அபரவிந்து வெளிஅபர நாத
வெளிஏக வெளிபரம வெளிஞான வெளிமா
நாதவெளி சுத்தவெறு வெளிவெட்ட வெளியா
நவில்கின்ற வெளிகளெலாம் நடிக்கும்அடி வருந்த
ஏதளியேன் பொருட்டா நடந்தென்பால் அடைந்தே
என்கையின்ஒன் றளித்தனைநின் இரக்கம்எவர்க் குளதே.

உரை : சிவ பரம்பொருளே, பூத வெளி, கரணவொளி, பகுதி வெளி, மாயா போக வெளி, மாமாயா யோக வெளி, அருள் நூல்கள் கூறுகின்ற வேத வெளி, அபர விந்து வெளி, அபர நாத வெளி, ஏக வெளி, பரம வெளி, ஞான வெளி, மாநாத வெளி, சுத்த வெறு வெளி, வெட்ட வெளி யாக ஞானாசிரியர்களால் உரைக்கப்படுகின்ற வெளிகளில் எல்லாம் நடந் தருள்கின்ற நின் திருவடிகள் வருந்தக் குற்றங்களையுடைய எளியவனாகிய என் பொருட்டு நடந்து என்னிடம் எய்தி, என் கையில் ஒன்றைக் கொடுத் தருளினாய்; பெருமானே, நின் அருட் பண்பு யாவர்க்குளது? ஒருவரிடத்தும் இல்லை. எ.று.

பூத வெளி, நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களும் நின்று நிலவுமிடம். வெளியை ஆகாச மெனவும் ஞான நூலோர் வழங்குவர். கரண வெளி, மனம் முதலிய கரணங்கள் நின்றுலாவும் மனவெளி. பகுதியாவது மூலப் பிரகிருதி. இதனை ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் இருந்து தொழிற் படும் ஆன்ம தத்துவாகாசம் எனவும் கூறுவர். மாயா போக வெளி, மாயா காரியமான வித்தியா தத்துவங்களின் போகம் நுகருமிடம். மாமாயா யோக வெளி, சிவதத்துவம் ஐந்தும் ஒன்றியிருந்து செயற்படும் சுத்த மாயாகாசம். இதனையே சுத்த மாயா புவனம் என்றும் கூறுவர். வேத வெளி, வேதமும் வேத புருடனும் இருந்து செயற்படுமிடம். இதனை,

வேத புவனம் என்பர். அபர விந்து வெளி, சிவ தத்துவத்திற் கூறப்படும் சத்தி யுலகு. அபர நாத வெளி, சிவ தத்துவத்திற் கூறப்படும் ஞான வுலகு. ஏக வெளி, மேற்கூறிய வெளிகள் அத்தனையும் தனக்குள்ளே யடங்கி யிருக்கும் வைந்தவாகாசம். பரம வெளி யென்பது வைந்தவத் திற்கும் அப்பாற்பட்ட பரசிவாகாசம். ஞான வெளி, ஞானமேயான புவனம். மாநாதா வெளியைப் பரநாத வெளி யென்றும் கூறுவர். சுத்த வெறு வெளி, வைந்தவமாயையும் திருவருட் சத்தியும் தன்னுள் ஒடுங்க நிற்கும் பர சிவாகார வெளி. வெட்ட வெளி, எப்பொருளுமின்றி எல்லாம் தன்னுள் ஒடுங்கச் சிவம் ஒன்றே நிற்பது. வெற்ற வெளியென்ற சொல் வெட்ட வெளியென மருவிற்று. ஏதம்- குற்றம். குணங் குற்றங்களை யியல் பாக வுடைமையால், குற்றங்களால் எளிமை யெய்தியது பற்றி, வள்ளற் பெருமான் தம்மை "ஏத எளியேன்" என்கின்றார்.

இதனல், மாயை, திருவருள், சிவம் ஆகிய மூன்றும் நிலவும் வெளி வகைகளை விளம்பியவாறும். (89)

3149. வானதுவாய்ப் பசுமலம்போய்த் தனித்துநிற்குந் தருணம்
வயங்குபரா னந்தசுகம் வளைந்துகொள்ளுந் தருணம்
தானதுவாய் அதுதானுய்ச் சகசமுறுந் தருணம்
தடையற்ற அனுபவமாந் தன்மையடி வருந்த
மானதுவாய் நடந்தெளியேன் இருக்குமிடத் தடைந்து
மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தெனை அங் கழைத்து
ஆனதொரு பொருளளித்தாய் நின்னருள்என் என்பேன்
அம்பலத்தே நடம்புரியும் எம்பெருஞ்சோ தியனே.

உரை : தில்லையம்பலத்தின்கண் திருக்கூத்தியற்றும் எங்கட்குப் பெருஞ் சோதியாய் விளங்குபவனே, பசுத் தன்மை யுண்டு பண்ணும் மலம் கெட்டு வானத்தே படிய, ஆன்மா சுத்தமாய்த் தனிமையுறும் காலத்தில், விளக்கமுறும் மேலான இன்ப சுகப்பிரபை என்னை வளைத்துக் கொள்ளும் காலத்தில், தான் அதுவதுவாய் இயல்பாய்க் கூடும் தருணத்தில் நடையின்றி யெய்தும் தன்மை யுருவாகிய திருவடிகள் பிரகிருதியாகிய மண்ணிற் பொருந்தி நடந்து எளியனுகிய யான் இருக்கு மிடத்துக்கு வந்து, அழகிய கதவு திறக்கச் செய்து, மகிழ்ச்சியுடன் அவ்விடத்துக்கு என்னை வருவித்து எனக்கு இனிமை தருவ தொன்றைத் தந்தருளினுய்; உனது திருவருளை என்னென்று பாராட்டுவேன். எ.று.

உயிரை அனுதியே பிணித்திருந்த மலம் கெட்ட விடத்து என்னும் என்பார்க்கு விடை கூறுவார் போல, மலம் மறைக்கும் தன்மை கெடின் தூய ஞானகாச வெளியாம் என்றற்கு "வானதுவாய்" என்றும், உயிரைப் பிணித்து இருள் செய்தமை பற்றிப் "பசு மலம்" என்றும் கூறுகின்றார். ஏனை மாயா மலம், கன்ம மலங்களை விலக்கி மூல மலத்தைக் காட்டற்கு இவ்வாறு கூறுகின்றார் எனினும் அமையும். தனித்து நிற்கும் தருணம், மலம் கழிந்த சுத்தாவத்தை எனப்படும். ஆன்மா எப்போதும் சுகானு-பவத்தையே நுகரும் இயல்பிற்றுகலின், சுத்த நிலையில் அது பெறுவது இதுவென்பார், "வயங்கு பரானந்த சுகம்" என வுரைக்கின்றார். ஆங்கு

நுகரப்படும் பேரின்பம் பிறிது யாதும் நோக்காமல் தன்னையே நோக்கித் தன்னிலே கிடந்து தன்னையே நுகர்ந் துறைவித்தலின், "வளைத்துக் கொள்ளும் தருணம்" என்றும், அந்தக் காலத்தில் பேரின்பம் நுகரும் ஆன்ம நிலைமை "தானதுவாய் அது தானுய்ச் சகசம் உறும் தருணம்" என்றும் இயம்புகின்றார். சுகானுபவத்தின்கண் சகலானுபவத்தில் தடையேதும் அறவே இல்லாமை வற்புறுத்தற்குத் "தடையற்ற அனுபவமாம்" என வுரைக்கின்றார். மான், முதலாகு பெயராய், நிலத்துக்காயிற்று. மானென்னும் முலப் பகுதியிலிருந்து நில முதலியன தோன்றுவன என அறிக. மண்ணின் மேல் மக்களுருவில் நடந்து போந்தமை யுணர்த்தற்கு "மானதுவாய் நடந்து" எனக் கூறுகின்றார். மணிக் கதவம்- அழகிய தலைவாயிற் கதவு.

இதனால், சுத்தாவத்தையின்கண் ஆன்மா பெறும் சுகானுபவம் தெரிவித்தவாறும். (90)

3150. புன்றலைஎன் தலையெனநான் அறியாமல் ஒருநாள்
பொருத்தியபோ தினிற்சிவந்து பொருந்தியபொன் னடிகள்
இன்றலைவின் மிகச்சிவந்து வருந்தநடந் தெளியேன்
இருக்குமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
மன்றலின்அங் கெனைஅழைத்தென் கையில்ஒன்று கொடுத்தாய்
மன்னவநின் பெருங்கருணை வண்மையைஎன் என்பேன்
பொன்றலிலாச் சித்தர்முத்தர் போற்றமணி மன்றில்
புயங்கநடம் புரிகின்ற வயங்கொளிமா மணியே.

உரை: இறத்த லில்லாத சித்தர்களும் முத்தான்மாக்களும் எதிர் நின்று போற்றித் துதிக்க, அழகிய அம்பலத்தின்கண் பாம்பாட ஆடல் புரிகிற ஒளி திகழும் பெரிய மாணிக்க மணியாகிய பெருமானே, அன்றொரு நாள் என் தலையை யொரு புன்றலையெனக் கருதாமல் பொருத்தியபோது மிகச் சிவப்புற்ற நின்னுடைய, அழகிய திருவடிகள் இன்று தெருவில் மிகவும் வருந்திச் சிவக்க நடந்து எளியனாகிய யான் இருக்குமிடத்தை அடைந்து கதவைத் திறக்கச் செய்து, தாம் இருக்குமிடத்துக்கு என்னை வருவித்து என் கையில் ஒன்றைக் கொடுத்தருளினாய்; அதற்கேதுவாகிய நினது பெரிய கருணையை என்னென்று பாராட்டுவேன். எ.று.

இறப்பின் எல்லையைக் கடந்த பெருமக்களாதலின், "பொன்றவிலாச் சித்தர் முத்தர்" எனப் புகழ்கின்றார். புயங்கம், பாம்பு; பாம்பலங்காரப் பரமனாதலால், "புயங்க" என வுரைப்பினும் பொருந்தும். புன்றலை- ஞானச் சிறப்பில்லாத தலை. தீக்கைகளாற் சிறப்புறாத தலையென்றலும் உண்டு. பொருத்துதல் - திருவடியிற் பட வணங்குதல். சிவந்த நிலையை யுணர்த்தற்குச் "சிவந்து பொருந்திய பொன்னடி" என்று புகல்கின்றார். அலைவு - தெருத்தெருவாக நடந்து திரிதல். மன்றல் - மேடையுமாம். தெளிவு குறிக்கும் மன்றவென்னும் சொல் மன்றலில் என வந்தது என்றுமாம். மன்னவன் - என்றுமுள்ள அப் பரம்பொருள்.

இதனால், பரமன் தானே தன் திருவடியைத் தலைமேல் வையாத போது நாமே பொருந்த வைப்பது பொருந்தாது எனத் தெரிவித்தவாறும். (91)

3151. தஞ்சமுறும் உயிர்க்குணர்வாய் இன்பமுமாய் நிறைந்த
தம்பெருமை தாமறியாத் தன்மையவாய் ஒருநாள்
வஞ்சகனேன் புன்றலையில் வைத்திடவுஞ் சிவந்து
வருந்தியசே வடிபின்னும் வருந்தநடந் தருளி
எஞ்சலிலா இரவினிடை யானிருக்கும் இடஞ்சேர்ந்
தெழிற்கதவந் திறப்பித்தங் கெனைஅழைத்தொன் றளித்தாய்
விஞ்சுபரா னந்தநடம் வியன்பொதுவிற் புரியும்
மேலவநின் அருட்பெருமை விளம்பலெவன் வியந்தே.

உரை: மேம்படுகின்ற பரானந்தத் திருக்கூத்தைப் பெரிய அம்பலத்தின்கண் புரிகின்ற மேலவனே, எளிமையுற்ற உயிர்கட்கு உணர்வாயும் இன்பமாயும் நிறைந்து விளங்கும் தம்முடைய பெருமையைத் தாமே யறியாத தன்மை யுடையவாயும் உள்ள திருவடிகள், ஒருநாள் வஞ்ச நினைவுகளையுடைய எளியேனுடைய புல்லிய தலையிற் பொருந்த வைத்த போது வருந்திச் சிவந்தனவாக, பின்பு மிக வருந்தும்படி இரவின்கண் யான் இருக்குமிடத்துக்கு நடந்து வந்து உயர்ந்த கதவைத் திறக்கச் செய்து என்னையழைத்து எனக்கொன்று தந்தருளினாய்; அதற்கேதுவாகிய நினது திருவருளின் பெருமையை என்னென்று விளம்புவது. எ.று.

பரானந்தம் - மேலான இன்பம்; சிவ ஞானத்தால் உண்டாகும் இன்பம். கண்டு பரவும் அன்பர்களுக்குப் பரானந்தம் பெருகுவது பற்றி, "விஞ்சு பரானந்தம்" என விளம்புகிறார். வியன் பொது, அகன்ற அம்பலம். மலவிருள் மறைப்பால் எளிமை யுறுவது பற்றி, "தஞ்சமுறும் உயிர்" என்று கூறுகிறார். உயிர்கட்கு உணர்வாயும் இன்பமாயும் இருந்து இரண்டையும் பெறுவித்தல் இறைவனது அருட் செயலாகும். அவனுடைய ஆணையின்றியே தாமாக நிகழ்தலின், "தம் பெருமை தாமறியாத் தன்மையவாய்" எனக் கூறுகிறார். "தம் பெருமை தானறியாத் தத்துவன்காண்" (சாழல்) என மணிவாசகரும் மொழிவது காண்க. எஞ்சல் - குறைபடல்.

இதனால், இறைவன் உயிர்கட்கு அறிவும் இன்பமும் நல்குதல் கூறியவாறும். (92)

3152 எழுத்தினொடு பதமாகி மந்திரமாய்ப் புவனம்
எல்லாமாய்த் தத்துவமாய் இயம்புகலை யாகி
வழுத்துமிவைக் குள்ளாகிப் புறமாகி நடத்தும்
வழியாகி நடத்துவிக்கும் மன்னிறையு மாகி
அழுத்துறுமிங் கிவையெல்லாம் அல்லனவாய் அப்பால்
ஆகியதற் கப்பாலும் ஆனபதம் வருந்த
இழைத்துநடந் திரவில்என்பால் அடைந்தொன்று கொடுத்தாய்
எம்பெருமான் நின்பெருமை என்னுரைப்பேன் வியந்தே.

உரை: எங்கள் பெருமானே, வன்னம், பதம், மந்திரம், புவனம், கலை, தத்துவம் எனச் சொல்லப்படும் இவை ஆறினுக்கும் அகமும்

புறமுமாய் நடத்தும் அத்துவாவாகி எல்லாவற்றையும் நடத்துகின்ற பெரிய இறைவனாகி, ஒன்றினொன்றாக விருக்கும் இவை யாவு மல்லவாய் அவற்றிற்கு அப்பாலும் அதற்கப்பாலுமாய் நின்ற திருவடிகள் வருந்துமாறு இராப் பொழுதில் என்பால் நடந்து போந்து ஒன்றினைக் கொடுத் தருளினாய்; அதற் கேதுவாகிய நினது திருவருட் பெருமையை வியந்து யாதனை உரைப்பேன். எ.று.

எழுத்து, பதம், மந்திரம் என்ற மூன்றையும் சொற் பிரபஞ்ச அத்துவாக்கள் என்றும், புவனம், கலை, தத்துவம் என்ற மூன்றையும் பொருட் பிரபஞ்ச அத்துவாக்கள் என்றும் கூறுவர். பிரபஞ்சம் - உலகு. பொருளுலகில் கலையென்பது உடம்பும், தத்துவம் அதன் கண்ணுள்ள கருவி கரணங்களைக் குறிக்கும். புவனம் - நிலம். இரண்டுலகுகளிலும் செய்யப்படும் வினைகள் நல்வினை தீவினை என இரண்டாகலின், வினைகட்கு எழுத்து முதலிய ஆறும் வழியாதல் பற்றி, அத்துவா என நூல்களில் வழங்குகின்றன. இந்த அத்துவாக்களாகவும், அவற்றின் அகம் புறம் இரண்டிலும் கலந்திருப்பது பற்றி, "இவைக்கு உள்ளாகிப் புறமாகி நடத்தும் வழியாகி" என வுரைக்கின்றார். இவ்வத்துவாக்களில் உலகுகட்கு அப்பாலும் அப்பாலுக் கப்பாலும் இறைவன் இயங்குதலால் "அப்பாலாகி அதற்கப்பாலும் ஆன பதம்" என அறிவிக்கின்றார்.

இதனால், அத்துவாக்களின் அகமாயும் புறமாயும் அப்பாலுக் கப்பாலாயும் இறைவன் இருக்கும் திறம் கூறியவாறாம். (93)

3153. மாவின்மணப் போர்விடைமேல் நந்திவிடை மேலும்
வயங்கிஅன்பர் குறைதவிர்த்து வாழ்வளிப்ப தன்றிப்
பூவின்மணம் போல்உயிருக் குயிராகி நிறைந்து
போகம்அளித் தருள்கின்ற பொன்னடிகள் வருந்தத்
தாவிநடந் திரவின்மனைக் கதவுதிறப் பித்தே
தயவுடன்அங் கெனைஅழைத்துத் தக்கதொன்று
கொடுத்தாய்
நாவின்மணந் துறப்புலவர் வியந்தேத்தும் பொதுவில்
நடம்புரியும் நாயகநின் நற்கருணை இதுவே.

உரை: நாநலம் கலந்து மிகப் புலவர்கள் வியந்து போற்றும் தில்லையம்பலத்தின்கண் திருநடம் செய்கின்ற தலைவனே, திருமகளை மணந்திருக்கும் திருமாலாகிய விடையின் மேலும், நந்தியாகிய விடையின் மேலும் எழுந்தருளி மெய்யன்பர்களின் குறையைப் போக்கி நல்வாழ் வளிப்பதுடன் பூவின்கண் நறுமணம் போல் உயிர்க்குயிராய்க் கலந்து நிறைந்து இன்பது அளிக்கின்ற திருவடிகள் வருந்தும்படி இரவின்கண் தாவி நடந்து போந்து யான் இருந்த வீட்டின் கதவைத் திறக்கச் செய்து உட்புகுந்து நின்று அவ்விடத்தே என்னை வருவித்துத் தகுவ தொன்றைக் கொடுத்தருளினாய்; அதற்கு ஏதுவாகி நின்னுடைய கருணை இத்தன்மைத் தாகும். எ.று.

தாம் பாடும் பாட்டுக்கள் இனிமையும் பொருணலமும் சிறக்குமாறு தில்லையம்பலத்தைப் புலவர் பெருமக்கள் பாடும் சிறப்பு விளங்க, "நாவின் மனந்துறப் புலவர்

வியந்தேத்தும் பொதுவில்'' எனப் புகல்கின்றார். ம-திருமகள். போர் செய்து தீயன விலக்கி உலகம் காக்கும் பொருமானுதலால் திருமாலாகிய விடையைப் "போர் விடை" யென்று சிறப்பிக்கின்றார். சிவபிரான் இவர்ந்து போதரும் விடையும் "நந்தி" எனப்படுதலின், "நந்தி விடை" என்று கூறுகின்றார். வினையால் விளையும் அசத்தினைப் போக்கி ஞானத்தால் இன்ப வாழ்வு பெறுவித்தல் விளங்க, "குறை தவிர்த்து வாழ்வளிப்ப'' தென வுரைக்கின்றார். "வினையால் அசத்து விளைதலால் ஞானம் வினை தீரினன்றி விளையாவாம்'' (சிவ. போ) என மெய்கண்டார் கூறுவது காண்க. உயிர்க்குயிராய் விளங்குதலை "பூவின் மணம் போல்" என விளக்குகின்றார். உற்ற யாக்கையின் உறுபொருள் நறுமலர் நாற்றம் போற்பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'' (அதிசயப்) என மணிவாசகரும், "பூவாகிப் பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குள்ளால் வாசமாய் நின்றான்'' (நின்றதாண்டகம்) என நாவுக்கரசரும் உரைப்ப தறிக. போகம் - செய்வினைகள் விளைவிக்கும் பயன். தாவி நடத்தல் விரைவுக் குறிப்பு. தகுதிக் கேற்ப அளித்தமை புலப்பட, "தக்க தொன்று கொடுத்தாய்'' என வுரைக்கின்றார்.

இதனால், இறைவனுடைய இருப்பும் அருட் செயலும் விளக்கிய வாறும். (94)

3154. மணப்போது வீற்றிருந்தான் மாலவன்மற் றவரும்
மனஅழுக்கா றுறச்சிறியேன் வருந்தியநாள் அந்தோ
கணப்போதுந் தரியாமற் கருணைஅடி வருந்தக்
கங்குலிலே நடந்தென்னைக் கருதிஒன்று கொடுத்தாய்
உணப்போது போக்கினன்முன் உளவறியா மையினால்
உளவறிந்தேன் இந்நாள்என் உள்ளமகிழ் வுற்றேன்
தணப்போது மறைகளெலாந் தனித்தனிநின் றேத்தத்
தனிமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே.

உரை: வேறாக வைத்து ஓதுகின்ற வேதங்கள் எல்லாம் தனித்தனி யாக நின்று போற்ற ஒப்பற்ற அம்பலத்தின்கண் நின்று ஆனந்தக் கூத் தாடுகின்ற தலைவனே, மணங்கமழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் நான் முகனும், திருமாலும், மற்றைத் தேவர்களும் பிறரும் அழுக்காறு கொள்ளு மாறு, சிறியவனாகிய யான் வருத்தமுற்ற அன்று, அந்தோ! ஒரு நொடிப் பொழுதும் அது காணப் பொறாமல் நின் அருளுருவாய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு, இரவில் நடந்து, என்னையும் மதித்து, என் கையில் ஒன்று கொடுத்தருளினாய்; முன்பு, உன் திருவருளைப் பெறும் உபாயம் அறியாமையால், உண்பதிலேயே காலத்தைப் போக்கி னேன்; பெருமானே! இவ்வுபாயத்தை இன்று அறிந்து கொண்டேனா தலால், என் உள்ளமெல்லாம் மகிழ்ந்து நிறைகின்றேன். எ.று.

இருக்கு முதலிய வேதங்கள், மந்திரங்களும் அவற்றின் இயல், இடங் களும் பிராமணங்களுமாய் நின்று, ஓதுபவர்களையும் ஓதப்படும் தெய்வங் களையும் வேறு வைத்து ஓதுகின்றனவாதலால், அவற்றைத் "தணப்போது மறைகள்'' என்றும், வேதங்கள் எல்லாவற்றிலும் இச்சிறப்பே காணப்படு

வதால் "எல்லாம்" என்றும் இயம்புகின்றார். தணப்பு - வேருதல். இருக்கு சாமம் முதலிய வேதங்களை ஓதுபவர் தனித்தனிக் குழுவாக நின்று ஓது வராதலின், "தனித்தனி நின்றேத்த" என்கின்றார். "மணப்போது" என்பது ஈண்டு மணங் கமழும் தாமரை மலரின் மேற்று. கம்பரும் "கந்த மலரிற் கடவுள்" (பாலகா) என்பர். மாலவன் - திருமால். உயிர் வருத்தங் கண்டு தரியாது கடிது போந்தருளுதல் இறைவன் இயல்பாதல் கண்டு வியந்து மகிழ்வதே யன்றிப் பிரமன் முதலிய தேவர்கள் அழுக்காறு கொள்ளாராயினும், மக்கள் நிலையில் வைத்து எண்ணுகின்றாராதலின், "மன அழுக்காறுற" என உரைக்கின்றார். பிறராக்கங் காணப்பொறுது அழுக்காறுறுவது மக்கள் இயல்பு. கணப் பொழுது - நொடிப்பொழுது. கங்குல் - இரவு. உளவு - உபாயம். திருவருட் பேற்றுக்குரிய நெறி, நெறி பிறழாது நின்று பெற்ற பேருதலின், "உள்ளம் மகிழ்வுற்றேன்" என்கின்றார். "உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்" (நற்.3) எனப் பிறரும் கூறுவர்.

இதனால், நாம் திருவருள் நலம் பெற்றது வியந்து கூறியவாறும். (95)

3155. நடுங்கமலக் கண்குறுகி நெடுங்கமலக் கண்விளங்கும்
நல்லதிரு வடிவருந்த வல்இரவில் நடந்து
தொடுங்கதவந் திறப்பித்துத் துணிந்தெனையங் கழைத்துத்
துயரமெலாம் விடுகஇது தொடுகஎனக் கொடுத்தாய்
கொடுங்குணத்தேன் அளவினில்என் குற்றமெலாங் குணமாக்
கொண்டகுணக் குன்றேநின் குறிப்பினைஎன் புகல்வேன்
இடுங்கடுக என்றுணர்த்தி ஏற்றுகின்ற அறிவோர்
ஏத்தமணிப் பொதுவில்அருட் கூத்துடைய பொருளே.

உரை: திருவருள் விரைந்து நல்குவான் என்று ஊக்குகின்ற அறிவுடையோர் போற்ற அழகிய அம்பலத்தே அருட் கூத்தியற்றுகின்ற பரம்பொருளே, மலவிருளால் மறைக்கப்பட்ட அறிவு சுருங்கிக் கெடும் வண்ணம் நீண்ட இதழ்களையுடைய தாமரை மலர் போலப் பொலிகின்ற அழகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்துமாறு, செறிந்த இருள் இரவில் நடந்து வந்து வாயிலிற் பொருத்தப்பட்ட கதவினைத் திறக்கச் செய்து, "துன்ப மெல்லாம் தவிர்க; இது பெறுக" என என் கையில் ஒன்று கொடுத்தருளினாய்; கொடுமைக் குணமுடைய என்னளவில், என் குற்றமெலாம் குணமாகக் கொண்டருளிய குணக் குன்றமே! நின் திருவருட் குறிப்பின் திறத்தை என்னென்று கூறுவேன். எ.று.

திருவருட் செல்வத்தை நினைந்து பரவுவார்க்கு விரைந்து நல்கும் இயல்பினனென்று சொல்லி இறைவன் வழிபாட்டில் ஊக்குகின்ற சான்றோர்களை "இடுங் கடுக என்றுணர்த்தி யேற்றுகின்ற அறிவோர்" என்றியம்புகின்றார். மலக்கண் குறுகி நடுங்க என இயைக்க. அறிவை மறைக்கும் மலவிருள் சுருங்கிக் கெட அருள் ஒளி நல்கும் திருவடி என்றற்கு, "நடுங்க மலக்கண் குறுகி விளங்கும் நல்ல திருவடி" என்கின்றார். நீண்ட இதழ்களையுடைமை பற்றித் தாமரையை, "நெடு மகலம்" என்கின்றார். வல்லிரவு - ஒளி புகாவாறு செறிந்த

இருளுடைய இரவு. வாயிலோடு நன்கு தொடுக்கப்பட்ட கதவாகலின், "தொடுங் கதவம்" என்கின்றார். தகுதிப்பாடு அறிந்து அழைத்தமை தோன்றத் "துணிந்து" என்கின்றார். கொடுங் குணம் - கொடுமைக் குணம். குற்றத்தைக் குணமாகக் கருதிய வழி வெறுப்புத் தோன்றற்கு இடமில்லையாதலின், "குற்றமெலாங் குணமாகக் கொண்ட குணக்குன்றே என்கின்றார். குறிப்பு - திருவருட் குறிப்பு.

இதனால், குற்றத்தைக் குணமாகக் கொண்டு அருள் புரியும் இறைவனது அருளியல் திறம் கூறியவாறும். (96)

3156. வெய்யபவக் கோடையிலே மிகஇளைத்து மெலிந்த
மெய்யடியர் தமக்கெல்லாம் விரும்புகுளிர் சோலைத்
துய்யநிழ லாய்அமுதாய் மெலிவனைத்துந் தவிர்க்கும்
துணையடிகள் மிகவருந்தத் துணிந்துநடந் தடியேன்
உய்யநடு இரவினில்யான் இருக்குமிடத் தடைந்தே
உயர்கதவந் திறப்பித்தங் குவந்தழைத்தொன் றளித்தாய்
வையகமும் வானகமும் வாழமணிப் பொதுவில்
மாநடஞ்செய் அரசேநின் வண்மைஎவர்க் குளதே.

உரை: மண்ணுலக மக்களும் விண்ணுலகத் தேவர்களும் இனிது வாழும் வண்ணம் அழகிய அம்பலத்தின்கண் பெரிய திருக்கூத்தை யாடுகின்ற அருளரசே, வெவ்விதாகிய பிறவி வெப்பத்தால் மேனி மிகவும் இளைத்து மெலிவுற்ற மெய்ம்மை அடியார்க்கெல்லாம் விரும்பத்தக்க குளிர்ந்த சோலை நல்கும் தூய நீழலாய், அமுதமாய், தளர்ச்சி யனைத்தும் போக்கி யருளும் இரண்டாகிய திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த, அடியேன் உய்யுமாறு இரவுப் போதில் யான் இருக்குமிடத்துக்கு நடந்து வந்து வாயிலில் உயர்ந்து நிற்கும் கதவைத் திறக்கச் செய்து மனமகிழ்ச்சி யுடன் என்னைத் தன் பக்கல் வருவித்து ஒன்றைத் தந்தருளினாய்; இவ்வாறு வலிய வந்து நல்கும் அருள் வளமை வேறே யாவரிடத்து உளதாம். எ.று.

எல்லாவுலகங்களிலுமுள்ள உயிர்த்தொகை யனைத்தும் ஞானத்தால் வீடு பெறல் வேண்டு மென்ற பேரருளால் இறைவன் நடுவுமாகிய மண்ணுலகில் தில்லையம்பலத்தின்கண் திருக்கூத்தாடுகின்றான் என்ற கருத்து இனிது விளங்குதல் வேண்டி, "வையகமும் வானகமும் வாழ மணிப் பொதுவில் மாநடம்செய் அரசே" எனவுரைக்கின்றார். பிறந்திருந் திறந்துழலும் வாழ்வில் செய்வினைகளால் கோடை வெப்பம் போல் சுடப்பட்டு மக்கள் வருந்துவது பற்றி, உலகியல் வாழ்வைக் கோடைப் பருவமாகக் கூறும் முறைமை கொண்டு, "வெய்ய பவக்கோடை" என்று விளம்புகின்றார். உண்மை யன்பு நெறியிலே வாழ்கின்ற நன்மக்கட்கு அதுவே நல்ல தவமாகலின், அது கெடாமைப் பொருட்டுப் பிறவி வெம்மையால் உடல் மெலிந்து கருகி உள்ளம் சோர்ந்து இளைக்காமை கருதி, கோடை வெப்பம் தணிக்கும் சோலை நிழலும், நிழலிடத்தே இருந்து பெறலாகும் அமுதமும் போல இறைவனுடைய திருவடிகள் இரண்டும் உள்ளன என்பாராய், "மிக இளைத்து மெலிந்த மெய்யடியர் தமக்கெல்லாம்

விரும்பு குளிர் சோலைத் துய்ய நிழலாய் அமுதாய் மெலிவனைத்தும் தவிர்க்கும் துணையடிகள்" என்று துதிக்கின்றார். வெம்மையை ஆற்றாமை புலப்படுத்தற்கு "மிக இளைத்து மெலிந்த மெய்யடியர்" என்றும், "குளிர் சோலை" என்றவழி, அதன் நிழலின் குளிர்ச்சி நாடிச் சென்று தங்குதற்கும், தங்கியுடல் குளிரினும் உள்ளுறு பசித் தீயடங்கற்கு உணவு கொள்ளுதற்கும் வாய்ப்புடைய தென மொழிவாராய், "சோலைத் துய்ய நிழலாய் அமுதாய் மெலிவனைத்தும் தவிர்க்கும் துணையடிகள்'' என்றும், தங்குதற்கு விருப்ப முண்டாதல் வேண்டித் "துய்ய நிழல்" என்றும் சொல்லுகின்றார். திருவடிகளையே நினைந்து கிடப்பவன் எனத் தம்மை, "அடியேன்'' எனக் குறிக்கின்றார். யான் உய்தி பெறல் வேண்டுமென்ற திருவுள்ளத்தால் நடந்துவந்தார் எனற்கு, "அடியேன் உய்ய" எனக் கூறுகின்றார்.

இதனால், அடியேன் உய்திபெறல் வேண்டுமென்ற அருள் உள்ளமே இரவில் தம்பால் நடந்து வந்ததற்குக் காரணம் எனத் தெரிவித்தவாறும். (97)

3157. சிறியவனேன் சிறுமையெலாம் திருவுளங்கொள் ளாதென்
சென்னிமிசை அமர்ந்தருளும் திருவடிகள் வருந்தச்
செறியிரவில் நடந்தணைந்து நானிருக்கு மிடத்தே
தெருக்கதவந் திறப்பித்துச் சிறப்பின்எனை அழைத்துப்
பிறிவிலதிங் கிதுதனை நீ பெறுகவெனப் பரிந்து
பேசிஒன்று கொடுத்தாய்நின் பெருமையைஎன் என்பேன்
பொறியின்ற வோர்துதிக்கப் பொதுவில் நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தேர்ந் தனனே.

உரை: நன்ஞானமுடைய அறவோர் தொழுது பரவத் தில்லையம்பலத்தின்கண் திருக் கூத்தாடும் சிவ பரம்பொருளே, சிறியவனாகிய என்னுடைய சிறுமைகள் எல்லாவற்றையும் மனத்திற் கொள்ளாமல் என் தலைமேல் பொருந்துகின்ற நின் திருவடிகள் மண்ணிற் பொருந்தி வருந்த இருள் செறிந்த இரவின்கண் நான் இருக்குமிடத்துக்கு நடந்து போந்து தெருவாயிற் கதவைத் திறக்கச்செய்து உட்புகுந்து என்னைத் தனிப்பட அழைத்து, "இது வேறன்று; இங்கே இதனைப் பெற்றுக் கொள்க" என அன்பு மொழி பேசி ஒன்றினைக் கொடுத்தருளினாய்! நினது பெருமையை என்னென்று கூறுவேன்; நினது திருவருளொன்றே மெய்ம்மையான பொருள் என்று உணர்ந்து கொண்டேன். எ.று.

பொறி - ஈண்டுச் சிறந்த ஞானத்தின் மேற்று. சிவஞானச் செல்வர்களை இங்கே "பொறியின் அறவோர்" எனப் புகல்கின்றார். சிறுமை - அறிவாற்றலிற் சிறுத்தல். சிறிதாய வழிக் குற்றம் பெருகுதலின், சிறியனேன் என்பது குற்ற முடையேன் என்பதுபட வழங்குகிறது.

அடியார் தலைகள் திருவடியிற் பட வணங்குவது சமய நெறியில் திருவடி தீக்கை எனப்படும். சென்னி மிசை யமர்ந்தருளும் திருவடிகள் - தலைமேற் படுமாறு தீண்ட வணங்கத்தக்க திருவடிகள். தலைவர் திருவடிகள் தலைமேற் படுவதைத் திருவருட் பேறு எனப் பண்டைப்

பெரியோர் கருதினர். "எம்மான் தன் அடிக் கொண்டென் முடிமேல், வைத்திடுமென்னும் ஆசையால் வாழ்கின்றேன் நான்" அறிவிலா (அதிகை) என நம்பியாரூரர் உரைப்பது காண்க. இருள் செறிந்த நள்ளிரவு, செறி யிரவு எனபபடுகிறது. தனிப்பட அழைத்தமை புலப்பட, "சிறபபில் எனை யழைத்து" எனக் கூறுகின்ருர். தனிப்பட அழைத்தற் குரிய சிறபபில்லாத எனனை என்றறகு இவ்வாறு கூறுகிருர் என்பதும் உண்டு. பிறிவிலது - தொடர்பில்லாத தன்று; வேறன்று என்பதாம். பரிதல் - அன்பு செய்தல். சிறபபில்லாத சிறியனுகிய எனனைத் தனித் தழைத் தாண்டருளியது பெருமைச் செயலாதலை வியந்து, "நின் பெருமையை என்னென்பன்" என வுரைக்கின்ருர்.

இதனுல், திருவருட் பெருமையை எடுத்தோதி வியந்தவாறும். (98)

3158. அடிநாளில் அடியேனை அறிவுகுறிக் கொள்ளா
தாட்கொணடென் சென்னிமிசை அமர்ந்தபதம் வருந்தப்
படிநாளில் நடந்திரவில் அடைந்தருளித் தெருவில
படாகதவந திறப்பித்துப் பாரெதனைஅங் கழைத்துப்
பிடிநாளு மகிழ்ந்துனது மனங்கொண்ட படியே
பேரறஞ்செய துறுகெனப் பேசிஒன்று கொடுத்தாய்
பொடிநாளும் அணிநதுமணிப் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தோந தனனே.

உரை: நாளும் திருநீறணிந்து மணி பதித்த அம்பலத்தில் திருக்கூத்தாடும சிவபரம பொருளே, இளம வயதில எனது அறிவு நிலையைக் கருதாமல் ஆட்கொணடு என் தலையில் தோய்ந்து அருளிய திருவடிகள் மணணிற் தோய்ந்து வருத்தமுற, நிலத்தில் நாட காலையே நடக்க லுற்று இரவுப போதில் யான் இருக்கும் வீட்டை யடைந்து தெருவாயிற் கதவைத் திறக்கச் செய்து அன்புடன் என்னை யழைத்து, "நான் தரும் இதனைக் கையிற் பிடி; நாளும் மகிழ்ச்சியுடன் உனது மனம விருமபுகிறபடி பெரிய அறஙகளைச செயக" என்று சொல்லி ஒன்றை எனது கையிற் கொடுத்தாய்; இதனுல் உனது திருவருளே மெய்ம்மை யமைந்த பொருளாம் எனத் தெளியக் கொண்டேன். எ.று.

அடி நாள் - இளமைப் பருவம். இளமைக்காலத்தில் அறிவு குறைவாக இருககுமாகையால் அதனைக் கருதிற்றிலர் என்றற்கு, "அறிவு குறிக் கொள்ளாது ஆட்கொண்டு" என்றும், அப்பொழுதே திருவடி ஞானம் அருளினமை புலப்படுத்தற்குச் "சென்னி மிசை யமர்ந்த பதம்" என்றும் இயம்புகின்ருர். படி - நிலம். தெருவிற் படர் கதவம்- தெருவுக்குப் போகும் வாயிற கதவு. இதனை வாங்கு என்பது இதனைப் பிடி எனவும வழங்கும். பொடி - திருநீறு. "பொடி தனைப் பூசு மார்பிற் புரிநூல் ஒருபாற் பொருந்த" (சாத்த மங்கை) எனத் திருஞானசம்பந்தர் கூறுவது காண்க.

இதனுல் இளம் பருவத்தே திருவடி ஞானம் பெற்றமை கூறியவாறும். (99)

3159. உலகியலோ டருளியலும் ஒருங்கறியச் சிறியேன்
உணர்விலிருந் துணர்த்திஎன துயிர்க்குயிராய் விளங்கித்
திலகமெனத் திகழ்ந்தெனது சென்னிமிசை அமர்ந்த
திருவடிகள் வருந்தநடை செய்தருளி அடியேன்
இலகுமனைக் கதவிரவில் திறப்பித்தங் கென்னை
இனிதழைத்தொன் றளித்துமகிழ்ந் தின்னும்நெடுங் காலம்
புலவர்தொழ வாழ்கஎன்றாய் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தேர்ந்தனனே.

உரை: தில்லையம்பலத்தின்கண் திருக்கூத்தியற்றும் சிவ பரம் பொருளே, சிறியவனாகிய என்னுடைய உணர்வின்கண் எழுந்தருளி, உலகியலையும் அருளியலையும் ஒருங்கே யான் அறிந்து கொள்ள உணர்வு தந்து, என் உயிர்க்குயிராய் விளங்கித் திலகம் போன்று என் தலையின் கண் பொருந்திய திருவடிகள், மண்ணிற் பொருந்தி வருந்த நடந்து அடியவனாகிய யான் தங்குகின்ற மனைக்கு இரவில் வந்து கதவைத் திறக்கச் செய்து, என்னை இனிதழைத்து என் கையில் ஒன்றை மகிழ்ச்சியுடன் தந்து, "இன்னும் பன்னெடு நாட்கள் புலவர்கள் போற்ற வாழ்வாயாக" என்று உரைத்தருளினாய்; ஆதலால், உனது திருவருளே மெய்ப்பொருள் என்று தெரிந்து கொண்டேன். எ.று.

உலகிய லறிவும் சிவநெறித் திருவருட் சமய வாழ்வியலும் இளமைக் காலத்தே தமக்கு இறைவன் திருவடி ஞானத்தால் உண்டாயின எனத் தெரிவிப்பாராய், "உலகியலோடு அருளியலும் சிறியேன் உணர்விலிருந்து உணர்த்தி" என வுரைக்கின்றார். முன்னே நின்று உணர்த்தாமல் உணர்வின்கண் உள்ளுணர்வாய்த் தங்கி இறைவன் திருவடி யுணர்த்திய செய்தி இனிது தோன்ற, "உணர்விலிருந்து உணர்த்தி" எனவும், உணர்வு உயிர்க்கு உருவாதலால் "உயிர்க்குயிராய் விளங்கி" எனவும் இயம்புகிறார். தலையின்கண் விளங்கும் திருவடி திலகமணி யிழைத்த முடி போல்கிறதென்பார், "திலகமெனத் திகழ்ந்து எனது சென்னிமிசை யமர்ந்த திருவடிகள்" என்று இசைக்கின்றார். "திலக நீண்முடித் தேவர்" (சீவக. 246) எனப் பிறரும் கூறுவது காண்க. தாம் தங்குதற் கமைந்த மனை திருவருட் பேற்றுக்கு வாய்ந்த இடமாதலால் "இலகு மனை" எனவும், அன்பால் இன்ப முண்டாக அழைத்தமை விளங்க "இனிதழைத்து" எனவும் சிறப்பிக்கின்றார். புலவர் - கற்று வல்ல அறிஞர்; தேவர்களுமாம்.

இதனால், திருவருள் ஞானப் பேற்றால் நீடு வாழ்க என வாழ்த்த பெற்றமை எடுத்தோதியவாறும். (100)

பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண்—பக்க எண்)

மூன்றும் திருமுறை

அ-ஆ

அசையும் 40
அஞ்சுமுகத்தான் 55
அடியார் உள்ளம் 90
அணிவா 37
அம்பொன்று 92
அயன் தவ 72
அருட்பெருங் 24
அருள் பழுத்தோங்கும் 21
அருளுருங்கய 96
அலகின் மறை 31
அற்புதக்கணபதி 96
அன்பர்தம் 19
ஆதி நடுவு 9
ஆதி மலே 10
ஆணிலே அன்றி 84
ஆறு விளங்க 12

இ

இலகுபரி 33
இளேத்த 4

உ-ஒ

உம்பர் துயர் 47
உரிய நாயகி 13
உலகந்தழைக்க 14
உலகம் பரவும் 89
உலகியலின் 29
உலகுயர் 23
உலகெலாம் 56
உள்ளமும் 57
ஒன்றல்ல 60

எ-ஏ-ஐ

என்னுர் 7
என்னே வேண்டி 79
ஏது செய்திடினும் 26
ஐயங்கரன் 94

க-கு-கே

கருணே அங்கடலே 25
கருணேக்கடலே 6
கமல மலர் 90
கலக மனம் 35
கலேநிறை 97
கள்ள நெஞ்சகன் 82
கானல் நீர் 64
கும்பமா முனியின் 71
கேவல சகல 63

ச-சீ

சச்சிதானந்த 59
சத்லசத் 61
சாக்கியனுர் 11
சீத நாள் மலர் 78
சீராரு மறை 46
சீர் உருத்திர 68

ந-நி-நீ

நல்ல 8
நளினமாமலர் 67
நாதமும் 58
நாரையூர் 70
நாவினுல் 86
நின்பால் 39
நீண்ட மால் 80

த-தா-தி-து-தே

தஞ்சம் என்றுனே 81
தடக்கை 74
தவள நிறுத்து 3
தன்னேர் 15
தாவாத 49
திங்கள் அம் 88
திருமல் அறியா 94
திருமால், கமல 2
திருமால் வணங்க 93
திருவும் கல்வியும் 77
திரு நெடுமால் 66
திருத்தகு சீர் 43
திருவிளங்க 27
துதிபெறும் 73
துதி பெறு 95
துனியும் 6
தேடுவார் 22

ப-பு-பூ-பெ-பொ

பண்டுறு 48
புங்கவர் 99
புங்கமிகுஞ் 100
புண்ணியராகி 100
பூசைசெய் 99
பூத்திடும் 20
பூமிபுகழ் 100
பெரும் பொருட் 65
பெருவயல் 75
போதந்திகழ் 99
பொல்லாத 47
பொன்மகள் 45

வ-வா-வீ

வளங்கிளர் 18
வாதாகா 56
வானநடுவே 8
வானவர் கோன் 50
வானிலே விழி 85
விண்ணவர் கோன் 52
விண்ணவர் புகழும் 69

நான்காம் திருமுறை

அ-ஆ

அஞ்சலென்றுய் 397
அடமுடியாது 306
அடியான் இன்பம் 240
அடியனேன் 128
அடியேன் முடுக்கி 238
அடுத்தவர்க்கெல்லாம் 171
அணுவிலணுவாய் 389
அண்டபகிரண்ட 390
அண்ணலே 341
அந்தரங்க 385
அந்தரத்தில் 389
அப்பா நின் 184
அம்பரத்தில் 390
அம்பலத்தில் 376
அம்பலத்தாடல் 423
அம்பலத்தாடும் 441
அம்பலத்தில் 389
அரங்காய மன 365
அருளாலே 432
அருளே அறிவே 368
அருளார் அமுதே 311
அருள் அளித்து 363
அருள் தரல் 121
அருள்பழுத் தோங்கும் 352
அவமே கழித்து 415
அறிவாலே 432
அறியாப் பருவ 212
அன்பர் இதய 344
அன்னநடை 425
அன்பரின்ப 413
அன்பர்கள் வேண்டும் 175
அன்னம்பாலிக்கும் 429
அன்னே 283
அன்னோர் 224
ஆகமும் 431
ஆசும்படியில் 191
ஆடுகின்ற 376
ஆடுங்கருணை 375
ஆண்டவன் நீ 357
ஆண்டாய் எனை 273
ஆதியந்த 427
ஆதியந்த மென்று 3·6
ஆயாது நான் 252
ஆள் வினையால் 256
ஆருமறியா 385
ஆவதறியா 410
ஆவா என எனை 254
ஆவித் துணையே 281
ஆவியீரைந்தை 338
ஆயிரங்கள் 289
ஆயும்வஞ்சக 308
ஆற்றல் விளங்கும் 310
ஆற்றுக்கே 339
ஆனந்தக் கூத்தனை 170
ஆனந்தத் தாண்டவ 422
ஆனேறிவந்தன் 276

இ-ஈ

இக்கணம் 135
இச்சைநின்மேல் 419
இட்டவகை 264
இத் தாரணிக்கு 398
இப் பாவி 398
இம்மை 337
இரண்டே 374
இரண்டே காற்கை 373
இராப்பகலில் 384

இரும்புன்னை	303
இருளற ஓங்கும்	325
இழை பொருத்த	220
இவ் வழியில்	286
இறகெடுத்த	335
இனியேது	409
இன்பவடிவாய்	376
இழித்தாலும்	427
இன்னந் தயவு	429
ஈடணைகள்	416
ஈண்டவனேன்	401
ஈன மறுத்து	418
ஈனவுடற்கிச்சை	377

உ-ஊ

உடுக்கவோ ஒரு	333
உத்தமர் பொன்	377
உயங்குகின்றேன்	403
உய்வதாம் இது	372
உருத்திரன்	370
உரைத்தார்	227
உலகம் பரவும்	223
உலகமும் சராசரமும்	360
உலகின் உயிர்	131
உலகெலாம்	322
உலகெலாம்	436
உள் உணர் வோர்	301
உள்ளமறிந்து	262
உள் உள்ளம்	189
உன்னை நாடும்	219
உன்னை நினை	282
ஊடுகின்ற	403
ஊடுதற்கோர்	451
ஊடும்போதுன்னை	406
ஊன உலகை	377
ஊனமிலா நின்னை	408
ஊனெனும்	407
ஊன் செய்தி	251
ஊன் மறந்த	469

எ

எச் சோடுமில்லா	399
எணங்குறியேன்	453
எண்ணி நலிவேன்	229
எண் கடந்த	296
எண்ணுக் கொடுமை	399
எண்ணுமல்	187
எண்குணத்தன்	465
எண்ணினைப்	394
எண்ணூறு	105
எப்படிநின்	419
எல்லாம் தெரிந்த	248
எல்லாரு	414
எவ்வண்ணம்	419
எழுவகை	112
எழுவினும்	319
எளியனேன்	116
எளியேன்	233
எள்ளே	391
எள்ளலற	414
எள்ளுகின்ற	411
எள்ளுகின்ற தீமை	392
எற்றே மதியிலியே	409
என் ஆருயிர்குயிள்	243
என் செய்திடுவேன்	231
என்னரசே	283
என்னுயிரில்	462
என்னே இனும்	273
என் நாணை	261
என்னிருகண்	323
என்னையறிய	259
என்னுரிமை	210
என்னுளம் நீ	452

ஐ

ஐத் தலை	388
ஐத்தட்டிடும்	192
ஐயாமுக்கண்	314
ஐயரே உமதடியன்	318

ஒ-ஓ

ஒருமைப் பயனை	345
ஒழியாக்கவலை	311
ஒழியாமல்	321
ஒன்றுந் தெரிந்திட	253
ஒளி மருவும்	144
ஓடுவாள் தில்லை	435
ஓரெழுத்தில்	388
ஓர் துணைநின்	418
ஓவாக் கொடியேன்	400

க-கா

கடந்தாழ் காயம்	239
கடையவனேன்	394
கண்டவரெல்லாம்	378
கண்டிலர்	377
கண்ணுதலானை	176
கண்ணனையான்	68
கந்தநாண்	330
கருங்களிற்றுரி	438
கலிக்கின்ற	405
கலைபயின்று	302
கல்லாரொடும்	206
கல்லாநடையேன்	201
கல்மன	377
கரைசேர	400
கல்லைக் கனிவிக்கும்	422

களங்க அக்குணம் 371
கள் உருகும் 298
கள்ள நெஞ்சகனேனும் 214
கள்ள நெறி 206
கள்ள மனத்து 195
கள்ளமொன்று 378
கறையோர் 346
கற்பனை 377
கற்பழித்து 378
கற்றே அறியா 204
கற்பவை எலாம் 133
கற்பூர வாசம் 426
கற்றதென்று 416
கன்றியுரைத்த 407
கன்னற் சுவை 424
கணவிழைந்தே 379
கணேன் நினது 235
காம மகற்றிய 422
காமனை 378
காரகைப் பெண் 425
கால்வாங்கிய 287
காவலை 379

கி-கீ

கிட்டவர 379
கிள்ளை 380
கின்னரங்கேளென் 379
கீடமனை 381
கீதவகை 380
கீழ்மைக்குறி 381

கு-கூ

குஞ்சிதப் பொற் 381
குண்டள 386
குற்றம் ஒரு 457
குற்றமெல்லாம் 181
குற்றம் எல்லாம் 211
குற்றமெல்லாம் 381
குற்ற மொன்று 381
குற்ற நினைத்த 411
குன்று நிலை 242
கூடல் விழைந்தே 382
கூர் கொண்ட 109
கூறரிய 382
கூற்றுதைத்த 382

கே-கொ-கோ

கேட்டிலாய் 252
கேளனந்தான் 183
கொதிக்கின்ற 402
கொண்டு குலம் 430
கொம்மியடி பெண்கள் 421
கோடாமே 200
கோ கோவெனுங் 393
கோண நெடு 408

ச-சி-சீ

சங்கரா 279
சஞ்சமலர் 304
சச்சிதானந்த 384
சச்சிதானந்த 335
சந்ததம் 117
சந்ததமும் 162
சிந்தை 219
சிறியேன் பிழையை 234
சினங்கொண்ட 402
சினந்துரைத்தேன் 449
சின்மயமாம் 464
சின்னஞ்சிறு 429
சீத்த மணி 460
சீர் துணையார் 207

சு-சூ-செ-சே-சை-சோ

சுட்டதிரு நீறு 427
சுந்தரர்க்காக 137
சுந்தர நீரணி 443
சூரிட்ட நடையில் 140
சூழ்வேன் நினது 236
செங்கயற்கண் 424
செடியனேன் 348
செம்பவள 290
செய்த நன்றி 402
செய்வகை 293
செய்வேன் 271
செய்வேன் தீமை 228
செறியாத 246
சேணுடர் 324
சைவ நிலை 414
சொல் வினைவு 404
ஜோதி மணியே 150

ஞா

ஞாலத்தார் 340
ஞானமாய் 387

த-தா

தண்மதி 424
தத்தா 336
தருவாய் இது 369
தற்பரமா 415
தனத்தால் இயன்ற 366
தனித்தபர 471
தன்னை அறிந்தின்ப 383
தன்னையறியா 429
தாதாதா 284

தாயும் தந்தையும் 351
தாயும் தந்தையும் 321
தாய்தடை 295
தாய்வயிற்றில் 478
தாழாதுன்ப 250

தி-தீ

திருஅருட் புனிதை 434
திருஎலாம் 437
திருத்தகுதில்லை 440
தீமையிலாத 425
திங்கள் விளங்கும் 343
திருநெடுமால் 355
திருநெறிமெய் 358
திரு உளந்தெரியேன் 350
திருவண்ண 103
திருவும் சீரும் 213
திருவே 367
தீதொன்று 247
தீது முற்றும் 199
தீது செய் தேற்கருள் 185

து-தூ-தெ-தே-தொ-தோ

துணை முலை 127
துன்புடைய 401
துன்றிய 199
துன்னுகின்ற 392
துன்னுடைய 196
தூய்மையிலா 405
தெண்ணனிட்டே 426
தெரியாமையால் 186
தெள்ளமுதே 463
தேசுநின்ற 419
தேசு நிறமாய் 384
தேர்ந்து தெளியா 393
தேனமர் 152
தொடுக்கவோ நல்ல 333
தோன்றி விரியும் 394
தோன்றுவதும் 198

ந-நா

நண்ணியமெய் 413
நம்பலமாம் 444
நம்மையாளும் 421
நன்கறியேன் 410
நாசமிலா 420
நாடிநினையா 397
நாட்டார் நகை 274
நாதமுடி 384
நாதாபொன் 329
நாயகரே 456
நாயனையேன் 409
நாய்குங்கடையேன் 225
நாராயணன் 315
நானது வாய் 387
நானந்த 417
நான் செய்யும் 129
நானும் பொய்யன் 309
நான் சிறியேன் 281
நான்முகனும் 119

நி-நீ-நூ-நே

நிதிதரு 124
நிதியை 294
நித்தியம் பராபர 362
நிறுத்தி 394
நிற்குருமா 409
நின்பதம் 123
நின்பால் அடைந்தார் 244
நீடுவாழ்க்கை 218
நீடுகின்ற 291
நீட்டுகின்ற 405
நீர் பூத்த 288
நீலக்கள 280
நீலை அறியேன் 267
நீறணிந் தொளிர் 164
நீறணிந் தொளிர் 146
நூலுணர்வா 413
நேசனும் நீ 310

ப-பா

படமெடுத்தாடு 111
படிமேல் 270
பண்டுமகிழ்ந்தென்னை 430
பண்ணுறுமூவர் 159
பரசிவானந்த 148
பரியும் மனத்தால் 230
பகுதி தகுதி 284
பள்ளத்திலே 254
பற்று நெஞ்சக 216
பவமான எழுவகை 160
பவமான எழுகடல் 138
பற்று நினை 391
பற்றுவது 114
பனக அணை 354
பாட்டுக்காசை 428

பு-பூ-பி

புண்ணுகும் 271
புண்ணைக்கட்டி 332
புரைத்த மன 396
புலைக்கொடியேன் 396
புலையே புரியும் 238
புன்மையினுல் 407
பூசை செய்து 418
பூதநெறி 107

பித்தனென 395
பித்து மனக் கொடியேன் 393

பெ-பே

பெண்ணமர் பாகனே 178
பெண்ணொரு 423
பெத்தமுஞ்சதா 363
பேதைப் பருவ 226
பேய் அனையா 208
பேய் கொண்ட 316

பொ-போ

பொங்குகின்ற 403
போதாரு 156
பொய் கண்டாய் 285
பொய்யாத 467
பொய்யான 154
பொய்யான 188
பொய்த்த மனத்தேன் 402
பொய்யனேன் 214
பொய்யாத மொழியும் 137
பொய்யால் 398
பொருந்துகின்ற 405
பொல்லா 306
பொற்புறவே 417
பொன் கள்ளிக்கும் 320
பொன் என்கோ 326
பொன்னே 307
பொன்னே வளர் 195
போத ஆனந்த 126
போத நடு 384
போற்றுவார் உள்ளம் 126
போற்றி என் 125

ம-மா

மணிகொண்ட 166
மணிமிடற்றமுதே 122
மண்ணுடை 249
மதி ஒளிர் 312
மதியும் கல்வியும் 217
மாலயன் தேடியும் 172
மாற்றரிய 300
மருளுடையேன் 400
மருவாணை 473
மறவாதுனே 272
மறை முடி 292
மனம் பிடியா 454
மன உயிர்க்கும் 299
மன்ருடிய 275
மன்றிடை நடிக்கும் 439
மன்றுடையாய் 395
மாசறுநின் 420
மதிவார் 269

மாயை எனும் 141
மாருமன மாயை 276

மி

மிக்கநிலை நிற்க 392
மிகுத்துரைத்தேன் 446
மின் இனே 437
மின்னிடையாள் 412
மின்னைப் போல் 297
மின்னொப்பாகி 222

மு-மூ

முத்தோகை 190
முப்பொருளு 387
முன்னம் பிழை 429
முன்னவனே 448
மூடனேன் 221

மெ-

மெய்யோர் 397
மெய் விளக்கே 425
மேல் விளைவு 404

வ-வா

வகை அறியேன் 263
வஞ்சர்க்கெல்லாம் 327
வஞ்சகத்தால் 404
வஞ்சமாதர் 215
வஞ்சனை 408
வண்டலை 426
வந்திக்கும் 278
வந்திப் பறியேன் 411
வந்தோடி 399
வரமுறுஞ்சு 361
வல்லி ஆனந்த 341
வளங் கொளும் 180
வற்புறுத்தினேன் 401
வன் கண்ணர் 197
வன்மாங்கரத்து 316
வன்னமுதே 412
வாசி வாசி 838
வாடலற 417
வாய்க் கடையர் 406
வீழா மனத்தின் 237
வாழ்ந்தாரை 427

வி

விடை ஆர்க்கும் 203
விண் படைத்த 457
விதி எலாம் 349
விதிலா மேலே 387

விளங்குகின்ற 404
வில்வ வேர் 415
விழற் கிறைத்த 226
வினையே பெருக்கி 237
வீழாத 288

வெ-வே-வை

வெட்டை மாட்டி 331
வெந்நகரில் 410
வெப்பில் கருணை 397
வெம்மான் 399
வெய்யனுய் 371
வெருவா மலை 395
வெருவிக்கும் 406
வெள்ளங்கொண்டு 313
வெள்ளமருவும் 209
வெள்விடை 177
வெறுத் துரைத்தேன் 445
வேகமுறு 194
வேண்டாமை 258
வேதமுடி 385
வேம்புக்கும் 307
வைவமென்றெமு 315

ஐந்தாம் திருமுறை

அ-ஆ

அஞ்சாதே என்மகனே 503
அடிநாளில் 614
அண்டவகை 570
அந்தோ ஈததிசயம் 491
அரிபிரமா 536
அருளுருவாய் 558
அருள் நிறைந்த 514
அருளுதிக்கும் 590
அருள் விளங்கும் 574
அறிவுடையார் 571
அற்புதப் பொன் 476
அன்பர் மன 530
அன்பளிப்ப 581
அன்ருெரு நாள் 524
அன்பர் உளக் கோயிலிலே 492
அன்றகத்தே 529
ஆண்பனை 481
ஆதியிலே 586
ஆதியுமாய் 603
ஆரணமும் 506
ஆருறுதத்துவத்தின் 584
ஆனந்த 505

இ

இம்மை 580
இயங்காத 525
இருட்ட 588
இரவில் அடி 525
இருவினை ஒப்பாசி 594
இருள் நிறைந்த 532
இறைவ 507

உ-எ-ஏ

உலகமெலாம் 520
உம்பருக்கும் 596
உருவம் ஒரு 597
உலகியலோடு 615
உளவறிந் தோர் 598
உள்ளுருகு 568
உள்ளிரவு பதியாய் 543
உன்மனியின் 589
எங்கும் 565
எம் மதத்தில 604
எழுத்திஞெடு 608
எவ்வுலகும் 599
எனக்கு நன்மை 579
என் அறிவை 575
என்னை ஒன்றும் 495
ஏதும் அறியா 510
ஏறிய நான் 500

ஐ-ஒ-ஓ

ஐயறிவிற் சிறிதும் 513
ஐவர்களுக் கைந்தொழிலும் 590
ஒருமையிலே 552
ஒருநாளன்றிரவில் 526
ஒளிவண்ணம் 522
ஒன்ருகி 564
ஓங்கார 535

க-கா-கு

கண்ணேங்கு 484
கருணைவடிவாய் 557

கருவிகளை	585
கற்பனைகள்	563
கற்றது	499
கன்மயங்கும்	533
காணுகின்ற	583
காரணன்	484
குன்ருத குணக்குன்றே	488

ஞா-ச

ஞான நிலை	531
சகலமொடு	567
சத்த வரு	540
சத்தியமெய்	509
சற்றும் அறிவில்லாத	498

சி-சு-சூ-செ-சொ

சித்த மனேகம்	420
சித்தவையும்	566
சிறியவனேன்	613
சுற்றவர் தம்	556
சூரியசந்திர	561
செய்வகை	541
செவ்வண்ண	518
சொன்னிறைந்த	577

த-தி

தங்குசரா சரம்	546
தஞ்சமுறும்	608
தருநிதி	501
தற்போத	562
தம்மடியார்	595
தன்னுருவ	569
திருமாலும்	523
திரு நெறி சேர்	485

து-ந-நா

துப்பாடு திருமேனி	425
துரிய வெளி	538
நடுங்கமல	611
நவநிலைக்கும்	553
நான் கேட்கின்றவை	504
நான் தனிக்கும்	573
நான்கண்ட	591

நி-நீ-நெ

நிறை அணிந்த	479
நீனாதி மூல மென	539
நெடுமாலும்	527

ப-பா

படைப்பவனும்	548
பக்குவத்தால்	598
பசுபாச	602
பரயோக	576
பருவமுறு	575
பலகோடி	541
பாடும் வகை	496
பாடுகின்ற	603
பால்காட்டும்	493

பி-பு

பிரணவத்தின்	534
புண்ணியர் தம்	554
புற்றலைஎன்	607
பூணுத பூண்	490
பூத நிலை	517
பூதவெளி	605

ம-மா

மகமதிக்கு	593
மணப்போது	610
மறை முடிக்கு	528
மன்னிய பொன்	515
மாமாயை	547
மாயின்மண	609
மானிறெடு	600
மானினைத்த	560

மீ-மு-மூ-மோ

மீதானத்தருள்	550
முத்தி ஒன்று	578
முழுதும்	559
முன்னறியேன்	512
முன்னை மறை	549
மூவருக்கும்	555
மோக இருட் கடல்	582

யோ-வா-வி-வெ-வே

யோகாந்த மிசை	592
வானதுவாய்	606
விந்து நிலை	552
விளங்கறிவு	544
விடைய	572
வெய்பவ	612
வேதமுடி	545
வேதாந்த	551